
இலக்கிய மலர்
2023


தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

07.01.2023

வாழ்த்துச் செய்தி

தமிழாட்சியின் மகுடம்
இலக்கிய மலர்!

ஞாயிறு போற்றுதும்;
ஞாயிறு போற்றுதும்!
சிலம்பொலி கேட்குது;
சிந்தையில் இனிக்குது!

ஆயிரம் நிலவுகள் ஆயிரம் மாதர்கள்;
ஆயிரம் கதிர்கள் ஆயிரம் ஆடவர்;
ஞாயிறு போற்றினர்!
ஞாயிறு போற்றினர்!

ஆயிரம் கோடியாய் ஆயினர் தமிழர்!
பாயிரம் பலப்பல பாடினர் தமிழர்!
ஞாயிறு போற்றியே கூடினர் பொங்கலில்!
ஞாயிறு போற்றியே ஆடினர் பொங்கலில்!

மாவிலை தோரணம் மஞ்சள் வாழை
கோவிலின் முரசம் கோலம் கண்டனர்!
பொங்கலோ, பொங்கல்
பொங்கலோ பொங்கல்

குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை நிலமெனப்
பிரிந்து வாழினும் தமிழர் பண்பைப்
புரிந்து வாழ்ந்தனர்!

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து
முன்தோன்றி மூத்தகுடி எனினும்
காடு கொன்று நாடாக்கக்
குளம் தொட்டு வளம் பெருக்கக் கற்றனர் அன்னார்!

வில் தோன்றும், தோள்களிலே – அது
வீரம் காட்டும்.
நெல் தோன்றும், வயல்களிலே – அது
வேளாண் திறத்தைக் காட்டும். சொல் தோன்றும் புதிது புதிதாக – அது
மொழியின் வளத்தைக் காட்டும்.

எழுத்து, சொல், இரண்டேயன்றிப்
பழுத்த நல் தொல்காப்பியன் – தமிழர்தம்
செழிப்பு மிகு வாழ்வுக்கும்
தொகுத்தளித்தான் இலக்கண நூல்!

கொய்யாக் கனித் தமிழால் – குறள்
நெய்தான் உலகுக்கு வள்ளுவனும்!
பெய்யா மழை பெய்தது போல் மகிழ்ச்சி கொள்வோம் – அவன்
பொய்யாமொழிக் கவி கேட்டு!

சிலம்பு வளையும் சீர் மேகலையும்
சிந்தாமணியுடைக் குண்டலகேசியும்
அன்னைத் தமிழின் அணிகளாய் ஆயின;
அந்தாள் புலவர் கம்பரும் கூத்தரும் ஆற்றிய பணிகளால்,
எத்துணை நூல்கள் எத்துணைப் புலவர்
கற்றுணர் மக்கள் உற்றுணர் பெட்டகம்
பெற்றுதம் தமிழர் வாழ்ந்தனர் அந்நாள்!
பல் முளைத்திடா மழலையருடன் பருவக் கிள்ளைகளுடன்
பண்பார் பிள்ளைகளுடன் பொங்கலோ பொங்கலெனப்
பொங்கும் மகிழ்வுடன் ஆடிப்பாடிடும் அழகுத் திருநாள்!

– என்று ஒற்றைக் கவிதையில் தமிழின் பெருமையையும் தமிழனின் சிறப்பையும், தமிழ்நாட்டின் பண்பாட்டு வளத்தையும் வடித்துத் தந்தார் நம் முத்தமிழறிஞர் – தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.

அவர் வழிவந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியானது தமிழாட்சியாக நடந்து வருகிறது.

- தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை
- எழுத்தாளர்கள் பிறந்தநாளில் கூட்டங்கள்
- குறைந்த விலையில் சங்க இலக்கிய நூல்கள் வெளியீடு
- திராவிடக் களஞ்சியம் உருவாக்கம்
- இதழியலாளர்க்கு கலைஞர் எழுதுகோல் விருது
- உலகப் பல்கலைக் கழகங்களில் செம்மொழித் தமிழ் இருக்கைகள்
- நூலகங்களுக்கு சிற்றிதழ்கள்
- இலக்கியமாமணி விருதுகள்
- உயரிய விருது பெற்ற எழுத்தாளர்க்கு கனவு இல்லம்
- திசைதோறும் திராவிடம்
- முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம் – என ஏராளமான தமிழ் காக்கும் திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. அதற்கு மகுடம் வைப்பதைப் போலத் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளன்று செய்தித் துறையின் 'தமிழரசு' இதழின் சார்பில் இலக்கிய மலர் உருவாக்கி இருப்பதை அறிந்து அகமகிழ்கிறேன்.

அரசின் சாதனைகளைச் சொல்லும் இதழாக மட்டும் இல்லாமல், தமிழ்நாட்டின் இலக்கியம், பண்பாட்டு, சமூக வளத்தைச் சொல்லும் இதழாகவும் 'தமிழரசு' திகழ்வதை அறிந்து பாராட்டுகிறேன். எந்த நோக்கத்துக்காக இத்தகைய ஒரு இதழை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உருவாக்கினார்களோ, அத்தகைய நோக்கத்தை நிறைவேற்றும் விதமாக இந்த மலர் அமைந்துள்ளது.

'தமிழரசு இலக்கிய மலர் –2023' என்ற இந்தத் தொகுப்பு பல்லாயிரமாண்டுகாலத் தமிழின் செழுமையை ஏந்தி நிற்கிறது. இந்தத் தொகுப்பு ஏழு பிரிவுகளை உள்ளடக்கியிருக்கிறது.

'தமிழுக்கும் அமுதென்று பேர், தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல், தமிழ் எங்கள் இளமைக்குப் பால், தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர், தமிழுக்கு மணமென்று பேர், தமிழ் எங்கள் உயர்வுக்கு வான், தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்' என ஏழு பிரிவுகளில் நூற்றுக்கணக்கான படைப்பாளிகள், அரசியல் சிந்தனையாளர்கள், வரலாற்று அறிஞர்கள், மானுடவியல் ஆய்வாளர்கள், தங்கள் அறிவுப் பங்களிப்பை அளித்திருக்கிறார்கள். மலருக்கு சிறப்பு சேர்த்த ஆய்வறிஞர்கள், படைப்பாளிகள், கவிஞர்கள், விமர்சகர்கள், ஓவியர்கள் ஆகிய அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

இத்தொகுப்பில் மூத்த படைப்பாளிகள், இளம் படைப்பாளிகள் என அனைத்துச் சிந்தனை வகைப்பட்டவர்களும் பங்கெடுத்திருப்பது மகிழ்ச்சி தருகிறது. இதனைச் சிறப்புறத் தயாரித்து வழங்கி இருக்கும் செய்தித் துறை இயக்குநர் ஜெயசீலன் இ.ஆ.ப. அவர்களுக்கும், 'தமிழரசு' ஆசிரியர் குழுவினருக்கும், இந்த இலக்கிய மலர் தயாரிப்புக் குழுவினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓர் இனத்தின் உயிர் – மொழி!

இனத்தின் இதயம் என்பது இலக்கியம். அத்தகைய இலக்கியத்தை பேரியக்கமாக மாற்றுவதே மொழியைக் காப்பது ஆகும். எழுத்தும், இலக்கியமும் மொழியை வளர்க்கின்றன. வளர்ப்பது மட்டுமல்ல, காக்கின்றன. மொழி சிதைந்தால் இனம் சிதையும். இனம் சிதைந்தால் நம்முடைய பண்பாடு சிதைந்துவிடும். பண்பாடு சிதைந்தால் நம்முடைய அடையாளம் போய்விடும். அடையாளம் போய்விட்டால் தமிழன் என்று சொல்லிக் கொள்ளும் தகுதியை இழந்து விடுவோம். தமிழன் என்ற தகுதியை இழந்தால் வாழ்ந்தும் பயனில்லை.

எனவே மொழியைக் காப்பதற்கான கடமையை இலக்கியம் வளர்ப்பதன் மூலமாக, படைப்புகளை அதிகரிப்பதன் மூலமாக, படைப்பாளிகளை ஊக்கப்படுத்துவதன் மூலமாகத் தொடர்ந்து செய்ய தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது.

இந்த மலர், இளைய தலைமுறைக்கு இலக்கிய ஆர்வம் ஊட்டட்டும்.
இலக்கியம் படிப்போம்.
இலக்கியம் படைப்போம்!

அன்புடன்,

(மு.க.ஸ்டாலின்)

மு.பெ. சாமிநாதன்
செய்தித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

03.01.2023
நாள்.....

நுழைவாயில்

'என்னுடைய வாரிசுகள் என்பது என்னுடைய புத்தகங்கள் தான்' என்றுரைத்தார் தந்தை பெரியார் அவர்கள்.

'வீட்டுக்கு ஒரு நூலகம் அமையுங்கள்' என்றுரைத்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

'புத்தகத்தின் மூலமாக உலகைப் படியுங்கள்' என்று கட்டளையிட்டார் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அந்த வழித்தடத்தில் செயல்படும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு குழந்தைகளின் அறிவுக் கண்களை திறப்பது, வாசிப்பு பழக்கம், ஏட்டுக்கல்வி மட்டுமின்றி இவ்வுலகை அறிந்து கொள்ளவும் சமூகம் குறித்த புரிதலை மாணவர்களிடையே உருவாக்கவும் பல முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது.

இலக்கியம், ஓவியம், கவிதை, சிறுகதைகள் என இன்று சிலவற்றை அக்காலத்திலிருந்து, இக்காலத்திற்கு ஏற்றார் போல எழுதி, நாட்டு மக்கள் இதயங்களில் பதிவு செய்திட, செய்தி மக்கள் தொடர்பு துறையால் 'இலக்கிய மலர்' என்ற சிறப்பு மலரை உருவாக்கி இருக்கிறது.

இணையற்றதாக மலர்ந்த இந்த 'இலக்கிய மலரினை' அனைவரும் படித்து பயன்பெற வேண்டுகிறேன்.

இம்மலரால் மக்களின் இதயங்களில் தமிழ் இலக்கிய உணர்வு படரட்டும்.

நன்றி! வணக்கம்!

அன்புடன்

3.1.2023

(மு.பெ.சாமிநாதன்)

வெ. இறையன்பு
தலைமைச் செயலாளர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009

வாழ்த்துச் செய்தி

அரசுக்கு நல்ல இலக்கியங்களை அடையாளம் காட்டும் பெரும் பொறுப்பும் உண்டு என்கிற அடிப்படையில் 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு சார்பில் இலக்கிய மலர் ஒன்று முதன்முறையாகக் கொண்டுவரப்பட்டது. அப்போது நான் செய்தித்துறை இயக்குநராக இருந்தேன். ஜெயகாந்தன் முதல் ஜெயமோகன் வரை அனைத்துவிதமான படைப்பாளிகளையும் உள்ளடக்கிய அந்த இலக்கிய மலர் பெரும் வரவேற்பைப் பெற்றது. முகப்பு, ஆதிமூலத்தின் ஓவியத்தோடும் உள்ளே பலவிதமான தலைசிறந்த ஓவியர்களின் கைவண்ணத்தோடும் கறுப்பு வெள்ளையில் உருவாகியது அந்த மலர்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இலக்கிய மலர் தமிழரசின் மூலம் வெளிவருவது பெருமிதத்தை அளிக்கிறது. இலக்கியத்தின் பல்வேறு பரிமாணங்களை அறிமுகப்படுத்தி வாசிப்பில் ஆர்வத்தைத் தூண்டி விடுவதும் அரசுக்கு முக்கியமான கடமை என்று நான் கருதுகிறேன். காத்திரத்துடன் உருவாக்கப்பட்டுள்ள இந்த மலரில் பல்வேறு விதமான படைப்புகள் பளபளவென மின்னி ஒளிர்கின்றன.

இலக்கியம் மௌனமாக சவ்வூடு பரவுவதைப்போல நல்ல எண்ணங்களை நாளடைவில் பரவச்செய்து, மனிதனை மென்மையாக்கி, அவன் மனத்தை மேன்மையாக்கி, உன்னத நிலைக்கு உயர்த்தும் ஆற்றல் கொண்டது. இந்த இலக்கிய மலர் ஒவ்வோர் ஆண்டும் தைத்திங்கள் அன்று கொண்டுவரப்பட வேண்டும் என்கிற என் அவாவைத் தெரிவித்துக் கொள்வதோடு இதற்காக முயற்சிகள் மேற்கொண்டு செங்கற்களை ஒன்றின்மேல் ஒன்று அடுக்குவதைப்போல உயர் கோபுரமாக எழுப்பியிருக்கிற செய்தித் துறைக்கும் அதன் இயக்குநருக்கும் என் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழ்த்துகள்.

அன்புடன்,

(வெ. இறையன்பு)

தொலைபேசி: 044-25671555 ஃபேக்ஸ்: 044-25672304 மின்அஞ்சல்: cs@tn.gov.in

மரு. இரா. செல்வராஜ், இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்.



தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

அணிந்துரை

உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு, தமிழ் பண்பாடு, கலாச்சாரம், இலக்கணம், இலக்கியம் முதலியவற்றை நூல் வழியாகக் கொண்டு சேர்க்கும் பணியினை தமிழ்நாடு அரசு மிகச் சிறப்பாக செய்து வருகிறது.

அத்தகைய இலக்கியத்தைப் போற்றி வளர்க்கும் நோக்கத்தில் மிகச்சிறந்த தமிழ் இலக்கிய ஆய்வாளர்கள், படைப்பாளர்களின் இலக்கியங்கள், கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் என பல்வேறு தலைப்புகளில் ஒரு புத்தகமாக வெளிக்கொணரும் நோக்கத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையால் இலக்கிய மலர் ஒன்றினை தொகுத்து தைத் திங்களில் வெளியிட்டுள்ளது.

தமிழ் இலக்கியத்தின் தொன்மையையும், செழுமையையும் மாறாமல் புதிய வகையில் நமது கண் முன்னே மிகவும் அழகுற காட்டி இருக்கின்றது இம்மலர்.

இச்சிறப்பு மலரினை, தமிழ்நாடு அரசின், செய்தி மக்கள் தொடர்புத் துறை சீரோடும், சிறப்போடும் வெளியிடுவது பாராட்டுக்குரியதாகும்.

இச்சிறப்பு மலர் உருவாக எழுதிய தமிழறிஞர்கள், படைப்பாளிகள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், கவிஞர்கள், கட்டுரையாளர்கள் என மலர் வெளியிட பாடுபட்ட அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இம்மலரில் கதைகள், சிறுகதைகள், இலக்கியங்கள், கவிதைகள் அனைத்தும் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

(இரா. செல்வராஜ்)

தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009. மின்னஞ்சல்: tdirfosec@tn.gov.in
தொலைபேசி (அலுவலகம்) : 044-25672887, நகரி : 044-25672021

முனைவர் **வீ.ப. ஜெயசீலன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,
நாமக்கல் கவிஞர் மாளிகை (9-வது தளம்)
தலைமைச் செயலகம், சென்னை-600 009.
தொலைபேசி : 044-25671300
நிகரி : 044-25677777
மின்னஞ்சல் : dipr@tn.gov.in

ஆசிரியர் உரை

இந்த பூமிப்பந்தில் ஆளுமை செலுத்தும் உயிரினங்களில் சிந்தனை திறன் மிக்க மனித இனம் மற்ற உயிரினங்களைச் சற்றே அழுத்தி ஆளுமை செலுத்தி வந்திருப்பது தான் மனித குல வரலாறு. ஆனால் மனித ஆற்றலில் எவ்வளவு சிறப்புகள் இருந்தாலும், ஒரு மனிதன் தான் பெற்ற அனுபவங்களைத் தன் சந்ததியினருக்கு மரபு வழியாக கடத்த முடியாது என்ற புள்ளியில் அவன் பல உயிரினங்களை விட பின்னோக்கி இருக்கிறான்.

மனிதன் அடையும் வெற்றிகள் அவன் அனுபவங்களால் விளைவிக்கப்படுகின்றன. இறந்தவுடன் அவன் பெற்ற அனுபவங்களும் சேர்த்தே புதைக்கப்படுகின்றன.

இத்தனை மில்லியன் ஆண்டுகளில் மனிதன் எத்தனை கோடி அனுபவங்களை பெற்றிருக்கக்கூடும். ஆனால் அவை அடுத்தடுத்த தலைமுறையினருக்கு கடத்தப்பட்டு இருக்கின்றனவா என்ற கேள்விக்கான விடையைத் தேடினால், கடந்த ஈராயிரம் மூவாயிரம் ஆண்டுகளில் மட்டும்தான் அது ஆவணப்படுத்தப்பட்டு சாத்தியமாகி இருக்கிறது. மற்றவை கால வெள்ளத்தில் கரைந்தும் நினைவுகளின் அடுக்குகளில் இருந்து நீங்கியும் மறைந்தும் விட்டது .

தனிமனிதன் மற்றும் நிறுவனங்களின் வரலாற்றுக் கடமையென ஒன்று இருக்குமானால், அது அதன் அனுபவங்களையும் கண்டறிந்த ரகசியங்களையும் ஆவணப்படுத்தி அடுத்த தலைமுறைக்கு தந்து விட்டு செல்வது தான்.

இவ்வாழ்வியல் தத்துவச் சிந்தனை மரபின் தொடர்ச்சிதான் தமிழ்நாடு அரசு செய்தித் துறையின் தமிழரசு பதிப்பகத்தால் உருவாக்கப்படும் இந்த "**இலக்கிய மலர்**".

ஈராயிரம் ஆண்டு இலக்கிய வரலாற்றில் தமிழ் இலக்கியம் அடைந்த பரிணாம வளர்ச்சியும் பன்முகத்தன்மையும் அந்தந்த காலகட்டத்தின் சமூகப் பண்பாட்டு வாழ்வை இலக்கிய வடிவில் ஆவணப்படுத்தி அக்கால மக்களுக்கு வாழ்வியல் விழுமியங்களை வகுத்தளித்தும் எதிர்கால சந்ததியினருக்கு வழிகாட்டியும் நிலைத்திருக்கிறது நம் இலக்கிய செல்வங்கள்.

இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டின் இரண்டு பத்தாண்டுகளைக் கடந்து, தகவல் தொழில்நுட்ப யுகத்தில் பெரும் பாய்ச்சலை உலகம் சந்தித்து வரும் இவ்வேளையில் செயற்கை நுண்ணறிவு, தொகுப்புச் சங்கிலி தொழில்நுட்பம், ஆதாரசெல் புரட்சி போன்றவை எல்லாம் மனிதனின் உடலும் உயிரும் தேயும் வேகத்தை கட்டுப்படுத்தும் ஆற்றலோடு அடுத்தடுத்த நூற்றாண்டுகளில் பயணப்படக்கூடும். அப்போதும் வாழ்வியல் விழுமியங்களுக்கு வழிகாட்டும் இலக்கியங்களின் தேவை அதிகமாக இருக்குமே தவிர குறைந்திருக்காது.

எனவே, இந்தக் காலகட்டத்தில் நாம் வாழும் தமிழ்ச் சமூகத்தின் ஆளுமை மிக்க எழுத்தாளர்கள், படைப்பாளிகளால் சமகாலத்தின் வசந்தங்கள், துக்கங்கள், ஆற்றாமைகள் என எல்லாவற்றையும் தங்கள் படைப்பின் வழியாக இதோ பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இதை நிகழ்காலத்தில் இருப்பவர்கள் படித்து ரசிக்கலாம்; விமர்சிக்கலாம். எதிர்காலத்தில் படிப்பவர்கள் எங்களைப் பாராட்டலாம், இக்காலகட்ட சமூகத்தின் அறிவை எண்ணி பிரமிக்கலாம், ஒன்றாய் கூடிச் சிந்திக்கலாம், சிரிக்கலாம், வணங்கலாம், புகழலாம், நகைக்கலாம். அதை காலம் தீர்மானிக்கட்டும்.

இந்த இலக்கிய மலரை உருவாக்க, சிறந்த இலக்கியப் பூக்களின் மகரந்தங்களைத் தேடிச் சேகரித்ததில் செய்தித்துறை பெருமை கொள்கிறது. இம்மலரின் ஆசிரியராக மகிழ்ச்சி கொள்கிறேன், கடமையாற்றியதில் களிப்படைகிறேன்.

மனங்கொளத்தக்க வண்ணம் வாழ்த்துச் செய்தி வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு செய்தித் துறையின் சார்பில் என்னுடைய பணிவான வணக்கங்களும், நன்றிகளும்.

இம்மலர் ஆக்கத்தில் துணை நின்ற துறை அலுவலர்கள், ஊக்கமளித்த மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர், தூண்டு கோலாய் விளங்கிய மதிப்புமிகு தலைமைச் செயலாளர், முதலமைச்சரின் செயலாளர்கள், துறைச் செயலாளர் மற்றும் பணியாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் என் பணிவான நன்றிகள்.

உயிரணைய தமிழே

உன் புகழ் வாழ்க !

24.01.2023

(வீ.ப. ஜெயசீலன்)

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது வருடம் : மார்கழி – தை
ஜனவரி 2023

இலக்கிய மலர் 2023

சிறப்பு வெளியீடு

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **வீ.ப. ஜெயசீலன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
க.அ. முகம்மது ரசூல்
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
கு. சுபாஷ்
இரா. பாலாஜி

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in



"எழுத்தும், இலக்கியமும் மொழியை வளர்க்கின்றன, வளர்ப்பது மட்டுமல்ல, காக்கின்றன. எனவே மொழியை காப்பதற்கான கடமையை இலக்கியம் வளர்ப்பதன் மூலமாக, படைப்புகளை அதிகரிப்பதன் மூலமாக, படைப்பாளிகளை ஊக்கப்படுத்துவதன் மூலமாக, தொடர்ந்து செய்ய தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது."

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

பொருளடக்கம்

தமிழுக்கும் அமுதென்று பேர்

ஒரு நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் 48
– க.பஞ்சாங்கம்

நூற்றாண்டு கண்ட தமிழ்ச்சிறுகதை இலக்கியம் 56
– ச.தமிழ்ச்செல்வன்

ஒரு நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை 62
– சிற்பி பாலசுப்பிரமணியம்

இறையியலும் மெய்யியலும் 68
– வே.மு.பொதியவெற்பன்

தமிழ் நல்ல புகழ் மிக்க புலவர்க்கு வேல்

கட்டுரைகள்

உரையும் பாட்டும்... 82
– முனைவர் ம.இராசேந்திரன்

மதம் மறுத்து, மனிதம் போற்றிய தமிழ்! 86
– சா.பீட்டர் அல்போன்ஸ்

சமயம் வளர்த்தத் தமிழ் 90
– குன்றக்குடி பொன்னம்பல தேசிக அடிகளார்

என்றைக்கும் படித்து முடிக்க முடியாத புத்தகம் 93
– பாரதி கிருஷ்ணகுமார்

தமிழிலக்கியங்களில் தமிழர் வாழ்வியல் 97
– ப.சரவணன்

தமிழ் இலக்கியமும் போட்டித் தேர்வுகளும் 100
– டாக்டர். சங்கர சரவணன்

சங்கத் தமிழில் பெண்பாற் புலவர்கள் 103
– சக்தி ஜோதி

தமிழ் இலக்கிய ஆய்வுகளின் போக்கு 107
– கல்யாணராமன்

சிலப்பதிகாரம் காட்டும் அறவாழ்வு 110
– ந.முருகேசபாண்டியன்

முதுமொழியும் பொருண்மொழியும் 117
– தி.பரமேசுவரி

புதுச்சேரி வளர்த்த தமிழ் 120
– முனைவர் சிவ இளங்கோ

சிறுகதைகள்

பொய்த்தேவு 126
– இந்திரா பார்த்தசாரதி

பெயரில் என்ன இருக்கிறது? 132
– தமிழ்மகன்

பெரியகாரியம் 138
– கவியோவியத் தமிழன்

ரசவாதி 144
– அசோகன் நாகமுத்து

உயிர்த் துடிப்பு 150
– பாரதி வசந்தன்

கவிதைகள்

சிறுமியும் தேவதையும் 156
– கவிஞர் வைரமுத்து

அதுவரை கொஞ்சம் பொறுத்திருக்க வேண்டும் 160
– ஈரோடு தமிழன்பன்

தமிழரசு வாழ்க 162
– கவிஞர் மு.மேத்தா
ஏற்கனவே நாம் பார்த்திருக்கிறோம் 164
– கல்யாண்ஜி
தைமகளைக் கொண்டாடும் தமிழர் திருவிழா 168
– தமிழச்சி தங்கபாண்டியன்
வாசலுக்கு வந்தவர் 172
– ரவி சுப்பிரமணியன்
அதுவாக மட்டும்.... 174
– தமிழ்நதி
தூசுத்தோட்டம் 176
– கபிலன் வைரமுத்து
அரைநொடியில்... 180
– ராஜா சந்திரசேகர்
காதல் பயத்தவோ கண்!... 182
– கவிஞர் பழநிப்பாண்டியன்

தமிழ் எங்கள் இளமைக்குப் பால்

கட்டுரைகள்

கதையில் மறைந்திருக்கும் சரித்திரம் 186
– எஸ்.ராமகிருஷ்ணன்
கொலை புரிவது எப்படி? 189
– ஜெயமோகன்
நுண்ணியல் வாழ்வும் பேரியல் இலக்குகளும் 194
– ஜோ டி குரூஸ்
மொழிபெயர்ப்பு இலக்கியங்களும் தமிழும் 197
– சா.தேவதாஸ்
கனவாய்க் கரைந்த கருப்புக்கன்னி 199
– பழ அதியமான்
தற்காலத் தமிழ்க் குழந்தை இலக்கியமும் புனைவுக்கதையாடலும் 204
– உதயசங்கர்

நவீன இலக்கியத்தின் முகங்கள் 209
- பாரதிபாலன்
இலக்கியவாதிகளின் நேர்காணல்கள் 213
- பவுத்த அய்யனார்
நவீன இலக்கிய ஆளுமைகள் 216
- பா.இரவிக்குமார்
நவீன இலக்கியத்தில் சிற்றிதழ்களின் பங்கு 219
- சுதீர்செந்தில்

சிறுகதைகள்

நத்தைக்கூடெனும் கேலக்ஸி 222
- கோணங்கி
வெண்புரவி 231
- சாரு நிவேதிதா
விலை 235
- யுவன் சந்திரசேகர்
பொம்மைமடி 239
- ஆத்மார்த்தி
வெளிச்சம் 245
- கணேசகுமாரன்
மருதாணி 250
- கவிதா சொர்ணவல்லி

கவிதைகள்

விக்கி பங்குக்கு விக்கியும் எழுதுகிறான்... 256
- விக்ரமாதித்தியன்
நிழற்கடிகாரம் 258
- கலாப்ரியா
பனைகளின் பிள்ளை 262
- கவிஞர் வெய்யில்
உயிர்ப்பின் கடைசி நொடி 264
- எஸ்.சண்முகம்

அப்பாவின் காயம் 268
– சுகிர்தராணி
பெயரற்ற விலங்குகள் 270
– பா.தேவேந்திர பூபதி
அரிவாள் மூக்கு இருவாட்சி 272
– மாலதி மைத்ரி
மீன்வேட்டை 274
– ரமேஷ் பிரேதன்
தமிழ் நாடனே 276
– குட்டி ரேவதி
மழையின் மறுபெயர் 280
– கவின் மலர்

தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்

கட்டுரைகள்

விடுதலைப் போரில் தமிழ் நாவல்கள் 286
– வல்லிக்கண்ணன்
திராவிட இயக்கமும் தமிழ் இலக்கிய உருவாக்கமும் 291
– வீ.அரசு
பொதுவுடமைத் தமிழ் 294
– சி.மகேந்திரன்
அறிஞர் அண்ணாவின் தமிழ்க் கொடை 298
– ப.ஆறுமுகம்
கலைஞரின் எழுத்துகளில் இலக்கியம் 305
– இரா.குமார்
இயக்கங்கள் வளர்த்த தமிழ் 309
– மூ.அப்பணசாமி
தமிழும் தலித் இலக்கியமும் 314
– ஸ்டாலின் ராஜாங்கம்
நவீன தமிழ் இலக்கியத்தில் தேசிய, திராவிட, இடதுசாரி மரபுகள் 319
– ஜமாலன்

இஸ்லாமிய யதார்த்தவாதம் 322
– எச்.முஜீப் ரஹ்மான்
திராவிட இயக்க எழுத்தாளர்களும் தமிழ் இலக்கிய எழுச்சியும் 325
– பி.என்.எஸ்.பாண்டியன்

சிறுகதைகள்

அம்மா 330
– இமையம்
வரைகின்றவன் கை 336
– அழகிய பெரியவன்
கையெழுத்து 341
– இரா.நாறும்பூநாதன்
பொய்யோட்டம் 347
– எம்.எம்.தீன்.
பால்அம்மா 353
– போப்பு
காணாமல் போனவன்! 358
– யுவகிருஷ்ணா
கத்தரிப்பூ நிற கைக்குட்டை 363
– கீரனூர் ஜாகிர்ராஜா
தனிப்பாறை 369
– க.முத்துக்கிருஷ்ணன்

கவிதைகள்

நிசப்தமான பிரபஞ்சம் மனுஷ்ய புத்திரன் 376
– மனுஷ்ய புத்திரன்
நான் இன்னும் உள்ளேயே இருக்கிறேன் 378
– ஆதவன் தீட்சண்யா
வீடு 380
– கவிஞர் சல்மா

ஆறு வித்யாசத்தில் அலையுறும் வாழ்வு 382
- அமிர்தம் சூர்யா

சாத்தான்களுக்காக ஒரு சாத்தனால் எழுதப்பட்டது 384
- கவிதா பாரதி

பாரதியின் முற்றத்திலிருந்து... 386
- பழநிபாரதி

பறவை என்பது வினைச்சொல்! 390
- மானா பாஸ்கரன்

குழந்தைகளும் மூன்று கவிதைகளும்... 392
- மு.முருகேஷ்

மீனிசை 396
- யாழன் ஆதி

தமிழுக்கு மணமென்று பேர்

கட்டுரைகள்

நாட்டார் பாடல்களில் உவமை 402
- ஆ,சிவசுப்பிரமணியன்

ஏறு தழுவுதல்: இன்னொரு சான்று 404
- பெருமாள்முருகன்

சடங்கில் கரைந்த கலைகள் 408
- அ.கா.பெருமாள்

நந்தன்: தீச்சுவாலையிலிருந்து மீண்டெழுந்த சீர்திருத்தவாதி 416
- கோ.ரகுபதி

நடுநாட்டு வட்டாரச் சொலவடைகள் 420
- கண்மணி குணசேகரன்

நாகரத்தினமும் முத்துபழநியும் 424
- யுகபாரதி

சிறுகதைகள்

தகனம் 434
- பூமணி

பரிகாரம் 444
- பாஸ்கர்சக்தி
பூக்குழி 454
- தேனி சீருடையான்
மிதிவண்டிகள் உருண்ட சாலைகள் 459
- ஏக்நாத்
களத்துவூட்டம்மாவும் அயிரை மீன் குழம்பும் 466
- புலியூர் முருகேசன்
சுலாப் இன்டர்நேஷனல் 472
- பாக்கியம் சங்கர்
கடல் நண்டு 478
- கரன் கார்க்கி

கவிதைகள்

காட்டிக் கொடுத்தது மின்னல் 488
- லிங்குசாமி
இன்று முதல் தாய் என்று பெயர்! 490
- பாஸ்கரன்
சரண் 492
- பிருந்தா சாரதி
ஒரு கப் தேனீர் 494
- புதுவை இளவேனில்
உள் உரையாடல் 496
- பொன்.வாசுதேவன்
பூக்கும் அஹிம்சைப்பூ 498
- வீரசோழன் க.சோ.திருமாவளவன்
ஆனால் மரமல்ல 500
- சீனு ராமசாமி

தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்

கட்டுரைகள்

தமிழ்வெளியில் நவீனக்கலை: சரித்திரமும் சாதனைகளும் 506
- சி.மோகன்

தமிழிலக்கியமும் நவீன நாடகமும் 511
- அரியநாச்சி

தமிழ் திரைப்படங்களில் இலக்கியத் தாக்கம் 516
- நிழல் திருநாவுக்கரசு

இசைத்தமிழ் 519
- முனைவர் மு.இளங்கோவன்

நவீன நாடகத்தில் தமிழிலக்கியத் தாக்கம் 523
- முனைவர் கி.பார்த்திபராஜா

தமிழ் ஆவணப் படங்களின் போக்கு 527
- அஜயன் பாலா

சாதனைகள் புரிந்துவரும் சிறப்புமிகு செய்தித்துறை 532
- முனைவர் சு.கிருஷ்ணசாமி

இணையகால பதிப்புலகம் 535
- சந்தியா நடராஜன்

மாமல்லபுரம்: பகீரதன் தவச் சிற்பத் தொகுதி 539
- பாலுசாமி

சிறுகதைகள்

கரும்புலி 542
- ஷைலஜா

வெள்ளை வெய்யில் 546
- ம.காமுத்துரை

நான் முதலாளி ஆகணும்! 551
- வா.மு.கோமு

கொடும்பாவி 556
- கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா

கிட்டி 562
– லஷ்மி சரவணகுமார்
வேட்டைப் பூதம் 568
– என்.ஸ்ரீராம்

கவிதைகள்

அநாதைத்தனத்தின் உறக்க முறை 580
– இசை
உன்னைப்பற்றிப் பேசுதல் 584
– உமா மோகன்
பயணம் 586
– கே.ஸ்டாலின்
நிலத்தின் விளிம்பில் நிற்கும் மனிதன் 588
– கனிமொழி.ஜி
நாற்புறமும் இழுக்கப்படும் பெண்டுலம் 590
– ஸ்டாலின் சரவணன்
வசந்த காலத்திற்கு 592
– ப.கல்பனா
பொங்கி எழும் மாதிகாப் பறை 594
– புதுவை சீனு தமிழ்மணி

தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்

கல்லறை சாட்சியம் 600
– தமிழில்: கார்த்திகைப் பாண்டியன்
சொர்க்கத்துக்கு தப்பிச் செல்வதற்கான குழாய்கள் 604
– தமிழில்: ஜி.குப்புசாமி
ஞாயிற்றுக்கிழமை 609
– தமிழில்: கே.வி.ஜெயஸ்ரீ
பசி 612
– தமிழில் வின்சென்ட்
சிறு குடி 616
– தமிழில்: சு.ஆ.வெங்கடசுப்புராய நாயகர்

பங்களித்த ஓவியர்கள்

மருது
அரஸ்
ஷ்யாம்
பாரதிராஜா
ஜமால்
தமிழ்
வேலு
கோபி ஓவியன்
பிரேம் டாவின்ஸி
ரமணன்
ரவி பேலட்
சே.பாரதிராஜா
தொல்காப்பியன்
ஆதிரை
தெய்வா
கலைமணி
அஞ்சலி
மகேந்திரன் பாரதி
தன்மையா
குழலி
பாரதி
ராகேஷ்
பூவிழி
மகிழினி
ஜீவா
மணிவண்ணன்
அமுதன்.வெ
அருள்
சந்தோஷ்
நற்றமிழ்
ஆதி
பாவேந்தன்
திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்






உலகத் தமிழ்ச் செ

கோலை

ஜூன் 6, 2004...!
தமிழ் மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்ட தினம்



உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின்
மைய நோக்க விளக்கப் பாடல்
(முதலமைச்சர் கலைஞர் இயற்றியது)

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் –
பிறந்த பின்னர், யாதும் ஊரே, யாவரும் கேளிர்!

உண்பது நாழி உடுப்பது இரண்டே
உறைவிடம் என்பது ஒன்றேயென
உரைத்து வாழ்ந்தோம் –
உழைத்து வாழ்வோம்.
தீதும் நன்றும் பிறர் தர வாரா எனும்
நன் மொழியே நம் பொன் மொழியாம்!

போரைப் புறம் தள்ளி
பொருளைப் பொதுவாக்கவே
அமைதி வழி காட்டும்
அன்பு மொழி
அய்யன் வள்ளுவரின் வாய்மொழியாம்!

ஓரறிவு முதல் ஆறறிவு உயிரினம் வரையிலே
உணர்ந்திடும் உடலமைப்பை பகுத்துக் கூறும்
ஒல்காப் புகழ் தொல்காப்பியமும்
ஒப்பற்ற குறள் கூறும் உயர் பண்பாடு
ஒலிக்கின்ற சிலம்பும், மேகலையும்
சிந்தாமணியுடனே வளையாபதி குண்டலகேசியும்
செம்மொழியான நம் தமிழ் மொழியாம்!

அகமென்றும் புறமென்றும் வாழ்வை
அழகாக வகுத்தளித்து
ஆதி அந்தமிலாது இருக்கின்ற இனிய மொழி –
ஓதி வளரும் உயிரான உலக மொழி –

கம்ப நாட்டாழ்வாரும்
கவியரசி அவ்வை நல்லாரும்
எம்மதமும் ஏற்றுப் புகழ்கின்ற
எத்தனையோ ஆயிரம் கவிதை நெய்வோர் – தரும்,
புத்தாடை அனைத்துக்கும்
வித்தாக விளங்கும் மொழி!

நம் மொழி – நம் மொழி – அதுவே
செம்மொழி – செம்மொழி – நம் தமிழ் மொழியாம்!
வாழிய வாழியவே! வாழிய வாழியவே! வாழிய வாழியவே!


உலகத் தமிழ்ச் செம்மொழி மாநா



செம்மொழித் தமிழ் விருது பெற்றவர்கள்:

ஆண்டு	விருது பெற்றவர்கள்	நாடு
2009	அஸ்கோ பார்ப்போலா	பின்லாந்து
2010	வீ.எஸ்.ராஜம்	பென்சில்வேனியா
2011	பொன்.கோதண்டராமன்	தமிழ்நாடு, இந்தியா
2012	இ.சுந்தரமூர்த்தி	தமிழ்நாடு, இந்தியா.
2013	ப.மருதநாயகம்	புதுச்சேரி, இந்தியா.
2014	கு.மோகனராசு	தமிழ்நாடு, இந்தியா.
2015	மறைமலை இலக்குவனார்	தமிழ்நாடு, இந்தியா.
2016	கா.ராஜன்	புதுச்சேரி, இந்தியா.
2017	உல்ரிக் நிக்லாஸ்	ஜெர்மனி
2018	ஈரோடு தமிழன்பன்	தமிழ்நாடு, இந்தியா.
2019	கு.சிவமணி	தமிழ்நாடு, இந்தியா.
2020	ம.இராசேந்திரன்	தமிழ்நாடு, இந்தியா.
2021	க.நெடுஞ்செழியன்	தமிழ்நாடு, இந்தியா.
2022	ழான் லூயிக் செவ்வியார்	பிரான்சு





அஸ்கோ பார்ப்போலா
2009 (பின்லாந்து)



வீ.எஸ்.ராஜம்
2010 (பென்சில்வேனியா)



பொன்.கோதண்டராமன்
2011 (தமிழ்நாடு)



இ.சுந்தரமூர்த்தி
2012 (தமிழ்நாடு)



ப.மருதநாயகம்
2013 (புதுச்சேரி)



கு.மோகனராசு
2014 (தமிழ்நாடு)



மறைமலை இலக்குவனார்
2015 (தமிழ்நாடு)



கா.ராஜன்
2016 (புதுச்சேரி)



உல்ரிக் நிக்லாஸ்
2017 (ஜெர்மனி)



ஈரோடு தமிழன்பன்
2018 (தமிழ்நாடு)



கு.சிவமணி
2019 (தமிழ்நாடு)



ம.இராசேந்திரன்
2020 (தமிழ்நாடு)



க.நெடுஞ்செழியன்
2021 (தமிழ்நாடு)



ழான் லூயிக் செவ்வியார்
2022 (பிரான்சு)

‘ஞானபீடம்’ விருது பெறும் அகிலன்



பி.வி.அகிலாண்டம் என்ற இயற்பெயரைக் கொண்ட அகிலன் தனது 16வது வயதில் பள்ளியின் காலாண்டு இதழுக்காக ‘அவன் ஏழை’ என்ற கதையை எழுதினார். ஆரம்பகாலங்களில் புதுக்கோட்டையில் இருந்து வெளிவந்த இந்திரா, தாய்நாடு, அணிகலன், இன்பம் போன்ற இதழ்களில் பி.வி.அகிலாண்டம் என்ற பெயரில் கதைகள் எழுதி வந்தார். 1922 ஆம் ஆண்டு பிறந்த அகிலாண்டம் தனது 20வது வயதில் முதன் முதலாக தன் பெயரை அகிலன் என மாற்றி ‘காசு மரம்’ என்ற சிறுகதையை கலைமகள் இலக்கிய இதழில் எழுதினார்.

திருச்சி ரயில்வே ஆர்.எம்.எஸில் 14 ஆண்டுகள் பணியாற்றிய அகிலன் முழு நேர இலக்கியவாதியாக ஆகும் பொருட்டு 1958ஆம் ஆண்டு சென்னைக்கு குடிபெயர்ந்தார். 19 நாவல்கள், 200 சிறுகதைகள், கட்டுரைகள், நாடகம், சிறுவர் கதைகள், மொழிபெயர்ப்புகளை எழுதியிருக்கிறார்.



சோழர் கால வரலாற்றை புனைவாக எழுதி வேங்கையின் மைந்தன் என கல்கியில் எழுதி புகழ் பெற்ற அகிலனுக்கு 1963 ஆம் ஆண்டு சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டது. அகிலனின் மூன்று நாவல்கள் திரைப்படங்கள் ஆனது. சித்திரப்பாவை வரலாற்று நாவலுக்காக 1975ஆம் ஆண்டு ‘ஞானபீட’ விருது வென்றார். சித்திரப்பாவை அனைத்து இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது.

தமிழுக்கு ஞானபீட விருது





'ஞானபீடம்' விருது பெறும் ஜெயகாந்தன்

"முதலில் எழுதுகிறவன் என்ற முறையில், எதை எழுதுவது என்று தீர்மானிப்பவன் நானே" 40 நாவல்கள், 200 சிறுகதைகள், வாழ்க்கை வரலாறு, குறுநாவல்கள் என தன் எழுத்தின் மூலம் தன்னை சுற்றி ஒரு வாசகர் பரப்பை சமூகமாக உருவாக்கிக் கொண்டவர்.ராஜராஜன் விருது, பாரதிய பாஷா பரிஷத் விருது, சாகித்ய அகாதமி, ஞானபீடம், நேரு விருது (சோவியத் ஒன்றியம் கொடுத்தது) பத்மபூஷன், திரைத்துறை விருதுகள் என இத்தனை விருதுகள் வென்ற தமிழ் எழுத்தாளர் வேறு எவரும் இல்லை.

கடலூர் மஞ்சக்குப்பத்தில் 1934ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் நாள் பிறந்தவர். 1950 முதல் சரஸ்வதி, தாமரை, கிராம ஊழியன், ஆனந்த விகடன் என எழுதி வந்த ஜெயகாந்தன் 1966ல் எழுதிய அக்னிப் பிரேவேசம் சிறுகதை மூலமே உச்சம் தொட்டார்.

இசை, மேடைப் பேச்சு என பன்முக ஆற்றலோடு விளங்கிய ஜெயகாந்தனுக்கு நன்கு வீணை வாசிக்கவும் தெரியும். இந்திய இலக்கியத்துக்கு அவர் ஆற்றிய பணிகளுக்காக 2002ஆம் ஆண்டு ஒன்றிய அரசு ஞானபீட விருதை அறிவித்த போது "ஞானத்தையே பீடமாகக் கொண்டவனுக்கு பீடம் எதற்கு?" என்று கேட்டவர்.



ஜெயகாந்தன்



தமிழுக்கான சாகித்திய அகாதமி விருது பெற்ற எழுத்தாளர்கள்





ரா.பி.சேதுப்பிள்ளை
1955 - தமிழ் இன்பம்
(கட்டுரைத்தொகுப்பு)



கல்கி கிருஷ்ணமூர்த்தி
1956 - அலை ஓசை
(நாவல்)



சி.ராஜகோபாலச்சாரி
1958 - சக்கரவர்த்தித் திருமகன்
(இராமாயணத்தின் உரைநடை)



மு.வரதராசனார்
1961 - அகல் விளக்கு
(நாவல்)



மீ.ப.சோமசுந்தரம்
1962 - அக்கரைச்சீமை
(பயண நூல்)



அகிலன்
1963 - வேங்கையின் மைந்தன்



பி.ஸ்ரீ.ஆச்சார்யா

1965 - ஸ்ரீ ராமானுஜர்

(வாழ்க்கை வரலாறு)



ம.பொ.சிவஞானம்

1966 - வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு

(வாழ்க்கை வரலாறு)



கி.வா.ஜகன்னாதன்

1967 - வீரர் உலகம்

(இலக்கிய விமர்சனம்)



அ.சீனிவாச ராகவன்

1968 - வெள்ளைப் பறவை

(கவிதை)



பாரதிதாசன்

1969 - பிசிராந்தையார்

(நாடகம்)



கு.அழகிரிசாமி

1970 - அன்பளிப்பு

(சிறுகதைகள்)



நா.பார்த்தசாரதி
1971 - சமுதாய வீதி
(நாவல்)



ஜெயகாந்தன்
1972 - சில நேரங்களில் சில மனிதர்கள்
(நாவல்)



ராஜம் கிருஷ்ணன்
1973 - வேருக்கு நீர்
(நாவல்)



கே.டி.திருநாவுக்கரசு
1974 - திருக்குறள் நீதி இலக்கியம்
(இலக்கிய விமர்சனம்)



ஆர்.தண்டாயுதம்
1975 - தற்கால தமிழ் இலக்கியம்
(இலக்கிய விமர்சனம்)



இந்திரா பார்த்தசாரதி
1977 - குருதிப்புனல்
(நாவல்)



வல்லிக்கண்ணன்
1978 - புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்
(விமர்சனம்)



தி.ஜானகிராமன்
1979 - சக்தி வைத்தியம்
(சிறுகதைத் தொகுப்பு)



கவிஞர் கண்ணதாசன்
1980 - சேரமான் காதலி
(நாவல்)



மா.ராமலிங்கம்
1981 - புதிய உரைநடை
(விமர்சனம்)



பி.எஸ்.ராமையா
1982 - மணிக்கொடி காலம்
(இலக்கிய வரலாறு)



தொ.மு.சிதம்பர ரகுநாதன்
1983 - பாரதி: காலமும் கருத்தும்
(இலக்கிய விமர்சனம்)



லட்சுமி திரிபுரசுந்தரி
1984 - ஒரு காவிரியைப் போல



அ.ச.ஞானசம்பந்தன்
1985 - கம்பன்: புதிய பார்வை
(இலக்கிய விமர்சனம்)



க.நா.சுப்பிரமணியம்
1986 - இலக்கியத்துகாக ஒரு இயக்கம்
(இலக்கிய விமர்சனம்)



ஆதவன்
1987 - முதலில் இரவு வரும்
(சிறுகதைத் தொகுப்பு)



வ.செ.குழந்தைசாமி
1988 - வாழும் வள்ளுவம்
(இலக்கிய விமர்சனம்)



லா.ச.ராமாமிர்தம்
1989 - சிந்தாநதி
(சுயசரிதக் கட்டுரைகள்)



சு.சமுத்திரம்

1990 - வேரில் பழுத்த பலா

(நாவல்)



கி.ராஜநாராயணன்

1991 - கோபல்ல கிராமத்து மக்கள்

(நாவல்)



கோவி.மணிசேகரன்

1992 - குற்றாலக் குறிஞ்சி

(வரலாற்று நாவல்)



எம்.வி.வெங்கட்ராம்

1993 - காதுகள்

(நாவல்)



பொன்னீலன்

1994 - புதிய தரிசனங்கள்

(நாவல்)



பிரபஞ்சன்

1995 - வானம் வசப்படும்

(நாவல்)



அசோகமித்ரன்
1996 - அப்பாவின் சிநேகிதர்
(சிறுகதைத் தொகுப்பு)



தோப்பில் முகமது மீரான்
1997 - சாய்வு நாற்காலி
(நாவல்)



சா.கந்தசாமி
1998 - விசாரணைக் கமிஷன்
(நாவல்)



கவிக்கோ அப்துல் ரகுமான்
1999 - ஆலாபனை
(கவிதைகள்)



தி.க.சிவசங்கரன்
2000 - விமர்சனங்கள். மதிப்புரைகள். பேட்டிகள்
(விமர்சனம்)



சி.சு.செல்லப்பா
2001 - சுதந்திர தாகம்
(நாவல்)



சிற்பி பாலசுப்ரமணியம்

2002 - ஒரு கிராமத்து நதி

(கவிதைகள்)



வைரமுத்து

2003 - கள்ளிக்காட்டு இதிகாசம்

(நாவல்)



ஈரோடு தமிழன்பன்

2004 - வணக்கம் வள்ளுவ

(கவிதைகள்)



ஜி.திலகவதி

2005 - கல்மரம்

(நாவல்)



மு.மேத்தா

2006 -ஆகாயத்துக்கு அடுத்த வீடு

(கவிதைகள்)



நீல.பத்மநாபன்

2007 - இலையுதிர் காலம்

(நாவல்)



மேலாண்மை பொன்னுசாமி
2008 - மின்சாரப்பூ
(சிறுகதைகள்)



புவியரசு
2009 - கையொப்பம்
(கவிதைகள் மொழிபெயர்ப்பு)



நாஞ்சில் நாடன்
2010 - சூடிய பூ சூடற்க
(சிறுகதைகள்)



சு.வெங்கடேசன்
2011 - காவல் கோட்டம்
(புதினம்)



டேனியல் செல்வராஜ்
2012 - தோல்
(புதினம்)



ஜோ டி குரூஸ்
2013 - கொற்கை
(புதினம்)



பூமணி
2014 - அஞ்ஞாடி



ஆ.மாதவன்
2015 - இலக்கிய சுவடுகள்
(திறனாய்வு நூல்)



வண்ணதாசன்
2016 - ஒரு சிறு இசை
(சிறுகதைகள்)



இன்குலாப்
2017 - காந்தள் நாட்கள்
(கவிதைகள்)



எஸ்.ராமகிருஷ்ணன்
2018 - சஞ்சாரம்
(புதினம்)



சோ.தர்மன்
2019 - சூல்
(புதினம்)



இமையம்
2020 - செல்லாத பணம்
(நாவல்)



அம்பை
2021-சிவப்புக் கழுத்துடன்
ஒரு பச்சைப் பறவை
(சிறுகதைகள்)

நாடு ஆகுமதி

தமிழுக்கும் அமுதென்று பேர்


ஒரு நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்

க.பஞ்சாங்கம்
மேனாள் இணைப்பேராசிரியர்
புதுச்சேரி அரசு பட்டமேற்படிப்பு ஆராய்ச்சி நிறுவனம்

ஐரோப்பியக் காலனித்துவத்தின் தோற்றத்தினால் உலக மனித சமூகத்தின் அடிப்படை அலகுகளாக நின்று இயக்கும் குடும்பம், மதம், கல்வி, அரசு, நீதி, கலை, இலக்கியம் ஆகிய அனைத்திலும் கடந்த நூறு ஆண்டுகளில் மனித வரலாறு காணாத முறையில் கணக்கில் அடங்காத பல்வேறு மாற்றங்கள் நடந்தேறி உள்ளன. இவற்றுள் ஒரு சமூகத்தின் ஆன்மாவாகச் செயல்படும் மொழியினாலான இலக்கிய உற்பத்திச் செயல்பாட்டில், தமிழ்ச் சமூகத்தில் நிகழ்ந்துள்ள இன்றியமையாத புதிய போக்குகளைச் சுருக்கமாக இந்தக் கட்டுரையில் காணலாம்.



புதிய காலனித்துவ ஆட்சி இங்கே அறிமுகப்படுத்திய மெக்காலே கல்வித் திட்டம் (1835) மூலமாக அமைந்த கட்டாய ஆங்கிலம் வழியிலான கல்வி, சாதி, மதம், பாலின வேறுபாடு கடந்த பொதுக் கல்விமுறை, அறிவியல் சார்ந்த புதிய கல்வித் திட்டம், கூடவே ஆங்கில அரசின் நிர்வாக முறையினால் தோன்றிய நடுத்தர வர்க்கம் என்கிற புதிய மக்கள் தொகுப்பு, அதனால் உருவான புதிய வாசகர் தொகைப் பெருக்கம், தொடர்ந்து செய்திகளைத் திரட்டி வெளியிட்டுக் காசாக்கக் கற்றுக் கொண்ட புதிய பத்திரிக்கைத் தொழில், அதை ஒட்டிப் புத்தகப் பதிப்புத் தொழில், தொழிற்சாலைப் பெருக்கம், இதனால் புதிய தொழிலாளருக்கான அமைப்புகள், பேருந்து, தொடர்வண்டி முதலிய நவீனப் போக்குவரத்துக் கருவிகளால் உண்டான மக்களின் இடப்பெயர்வு, நகரங்களின் பெருக்கம், புதிய மதமான கிருத்துவத்தின் விவிலிய மொழிபெயர்ப்பு, பனை ஓலை ஏடுகளில் பரணில் மறைந்து கிடந்த அரும்பெரும் தமிழ் இலக்கியங்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, தொல்காப்பியம் முதலிய படைப்புகள் அச்சடிக்கப்பட்டு நூலாக வெளிவந்தது.



இவற்றின் ஊடே சமூகத்தில் தோன்றிய இந்தியத் தேசிய விடுதலை இயக்கம், தமிழ்நாட்டில் தோன்றிய திராவிட இயக்கங்கள், தமிழ் மறுமலர்ச்சி இயக்கம், சைவ சமய எழுச்சி, தமிழ்த் தேசிய இயக்கம், தமிழிசை இயக்கம், பொதுவுடமை இயக்கம், எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டாண்டு காலமாக ஒடுக்கப்பட்டுக் கிடந்த சாதிகளின் விழிப்புணர்வினால் வெடித்துக் கிளம்பிய பல்வேறு சாதிச் சங்கங்கள், பாலின அடிப்படையில் அமுக்கப்பட்ட பெண்களின் எழுச்சி இத்தகைய பல்வேறு புதிய எழுச்சிகளின் பின்புலத்தில்தான் கடந்த ஒரு நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்கள் தோற்றம் கொண்டு செழித்து வளர்ந்துள்ளன.

காலனித்துவ ஆட்சிக் காலத்தில் ஏறத்தாழ கால் நூற்றாண்டுக் காலம் தென்னாப்பிரிக்காவில் போராட்ட வாழ்வு வாழ்ந்து விட்டு 1915 வாக்கில் இந்தியாவிற்குத் திரும்பி விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுக்க அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்பைக் காந்தியடிகள் ஏற்றுக் கொண்ட பிறகு வெள்ளையருக்கு எதிரான விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்ததாலும், தொடர்ந்து விடுதலைக்குப் பிறகு 1948இல் காந்தியடிகள் படுகொலை செய்யப்பட்டதாலும் இந்தியா முழுவதும் காந்தியடிகள் வடிவமைத்துப் பரப்பிய பல்வேறு கருத்தாக்கங்கள் பெரிதும் செல்வாக்குச் செலுத்தின.

காந்தியடிகள் அரசியல் விடுதலை என்பதையும் தாண்டி மத ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, கொல்லாமை, கிராமப் பஞ்சாயத்து, கதர் இயக்கம், சத்தியம், தியாகம், தனிமனித ஒழுங்கு, பெண்ணுரிமை முதலிய பல்வேறு கருத்தாக்கங்களைச் சமூகத்தின் மனப்பரப்பில் தன் எழுத்தாலும் பேச்சாலும் செயலாலும் ஒருங்கே விதைத்த வண்ணம் இருந்தார். இந்தக் கருத்தாக்கங்களின் செல்வாக்குதான் அன்றைய புதிய தமிழ் இலக்கியத்தின் ஆணிவேராக இருந்து செயல்பட்டு உள்ளது என்பதைப் பார்க்கிறோம்.

அதே நேரத்தில் மற்றொரு தளத்தில் மேற்கண்ட காந்தியப் புனிதக் கருத்தாக்கங்கள், விடுதலை இந்தியாவில் பின்னுக்குத் தள்ளப்பட்டு ஊழலும் ஏமாற்றும் பொய்யும் புரட்டும் அரசியல் மோசடியும் அறியாமையும் வறுமையும் பெருகுவதைக் கண்டு மனம் கொதித்துப் புலம்புகிற அல்லது சாடுகிற எழுத்துக்களும் பெருவாரியாகத் தோன்றின.

இத்தகைய எழுத்துக்களைத் தமிழ்ப் புனைகதை எழுத்தின் மூலவர்களாகக் கருதப்படும் பாரதியார், வ.வே.சு ஐயர், மாதவய்யா ஆகியோர் தொடங்கி வைத்தனர். தொடர்ந்து, கல்கி கிருஷ்ணமூர்த்தி (அலை ஓசை – 1953), அகிலன் (இன்ப நினைவு1949), நெஞ்சின் அலைகள் (1953) வாழ்வு எங்கே (1957) பாவை விளக்கு (1958) புது வெள்ளம் (1964)பொன்மலர் (1965), நா.பார்த்தசாரதி கோபுர தீபம் (1959) குறிஞ்சி மலர் (1962) நெற்றிக்கண் (1966) இந்திரா பார்த்தசாரதி (கால வெள்ளம் 1968), சங்கரராம் (இன்ப உலகம் 1959), மண்ணாசை (1954) சண்முகசுந்தரம், (நாகம்மாள் 1961) நாரண துரைக் கண்ணன், (தியாகத் தழும்பு – 1962) விந்தன் (கண் திறக்குமா–1956) ரா.சு.நல்லபெருமாள் (கல்லுக்குள் ஈரம்) முதலியோர் காந்தியம் சார்ந்த எழுத்துக்களை உருவாக்கியவர்கள் ஆவர்.

மற்றொரு கோணத்தில் தன் காலத்தில் பெரிதும் மாற்றத்திற்கு உட்பட்ட பண்பாட்டு அசைவுகளை, நம்பிக்கைகளை, பழக்க வழக்கங்களை மிகவும் கலை நேர்த்தியுடன் படைத்தளித்துள்ள படைப்பாளிகளையும் தமிழ்ச் சமூகம் கண்டு கொண்டது. புதுமைப்பித்தன், கு.பா.ரா,நா.பிச்சமூர்த்தி, வ.ரா, தி.ஜானகிராமன், கரிச்சான் குஞ்சு, எம்.வி.வெங்கட்ராம், தஞ்சை பிரகாஷ் என்று பலரும் பங்களிப்புச் செய்துள்ளனர்.

கவிதைகளில் காந்தியத்தை உரக்க உரையாடியவர்களாகப் பாரதியார், தேசிய விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர், சி.சு.செல்லப்பா, சுத்தானந்த பாரதியார், கொத்தமங்கலம் சுப்பு முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இதே போல் காந்தியத்தால் தூண்டப்பட்ட பல பெண்களும் தங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த குடும்ப வெளியிலிருந்து சமூக வெளிக்குள் வினையாற்றத் தொடங்கினர். வை.மு.ம கோதைநாயகி அம்மாள், மூவலூர் ராமாமிர்தம் அம்மையார், கமலா விருத்தாசலம், சேது அம்மாள், குமுதினி எனப் பலரும் புனைகதைகளை எழுதிக்குவித்தனர்.பெண்கள் மேல் புனையப்பட்டுள்ள பொய்மைகளை உடைத்துக் காட்டினர். அன்றைக்கே இவற்றையெல்லாம் கவிஞர் மீனாட்சி தனது கூர்மை தீட்டிய கவித்துவச்சொற்களால் வரைந்து காட்டினார்.

★★★

விடுதலைப் போராட்ட காலகட்டத்தில் அன்றைய சென்னை மாகாணத்தில் மட்டும் தனிச்சிறப்போடு வெடித்துக் கிளம்பிய சமூக விடுதலை இயக்கங்கள் நவீனத் தமிழ் இலக்கியத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்தி உள்ளன.

1916 இல் தோன்றிய நீதிக்கட்சி, அதைத்தொடர்ந்து தோன்றிய பெரியாரின் தன்மான இயக்கம் (1925), பிறகு இரண்டையும் இணைத்துப் பெரியார் தோற்றுவித்த திராவிடர் கழகம் (1944) அவரிடம் இருந்து பிரிந்து 1949 இல் தோன்றிய அண்ணாவின் திராவிட முன்னேற்றக் கழகம், மேலும் ஆதித்தனார் தொடங்கிய நாம் தமிழர் இயக்கம், ம.பொ.சி.யால் தொடங்கப்பட்ட தமிழரசுக் கட்சி (1946), மறைமலை அடிகள் தொடங்கிய தனித்தமிழ் இயக்கம், சைவ சமய எழுச்சி முதலிய பல்வேறு இயக்கங்கள் இந்தியத் தேசிய நீரோட்டத்தில் இருந்து விலகி நின்று தமிழகத்தில் தீவிரமான கருத்தாக்கங்களை உருவாக்கி உரையாடின.

இக்கருத்தாக்கங்களின் சாராம்சமாக அமைந்தது சமூக விடுதலை இல்லாமல் சாதியத்தால் பாதிக்கப்பட்டுக் கிடக்கும் பெருவாரியான விளிம்பு நிலை மக்களுக்கு இந்த அரசியல் விடுதலையால் எந்தப் பயனும் பெரிதாகக் கிடைத்துவிடப் போவதில்லை என்பதுதான். தந்தை பெரியார் சமூக விடுதலைக்கான தன் போராட்டத்தை ஆதிக்கச் சாதிகளுக்கு எதிரான போராட்டமாக முன்னெடுத்தார். ஆதிக்கச் சாதிகளின் கவசமாக நின்று செயல்படும் மதம், கோயில், கடவுள் நம்பிக்கை, புராணம், சமஸ்கிருதம் பெண்ணடிமை முதலிய பலவற்றுக்கும் எதிராகத் தனது ஓங்கிய குரலில் ஒலித்தார். இப்புதிய குரல் புதிய இளைஞர்களிடம் புதிய எழுச்சியை உண்டாக்கியது.

தொடர்ந்து 49 இல் தொடங்கிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் முன்னெடுத்த தமிழ்த் தேசியம் சார்ந்த பார்வைகளும் சொல்லாடல்களும் வேகம் பெற்றன. புரட்சிக் கவிஞராக அறியப்படும் பாரதிதாசனார், தமிழ் மொழி ஒன்றுதான் அனைத்திற்கும் தீர்வாகும் என்று ஒரு கருத்தினை முன்வைத்துப் புயல் போலப் பாடினார்; 50களில் மொழிவாரி மாநிலம் பிரிந்த போது தமிழ்நாட்டில் எல்லைப் போராட்டங்களை முன்னின்று நடத்திய ம.பொ.சிவஞானம், நேசமணி முதலியோராலும் தமிழ் உணர்வும் இன உணர்வும் சாதியத்திற்கு எதிரான உணர்வும் வேகமாக வடிவம் பெற்றன.

இவைகள் எல்லாம் அன்றைய தமிழ் இலக்கியத்திற்கான பாடுபொருள் ஆயின. சமூக நிகழ்வுகளை உடனுக்குடன் எதிரொலிக்கும் உணர்ச்சிகரமான வடிவம் கவிதை என்பதால் பாரதிதாசனைத் தொடர்ந்து வாணிதாசன், சுரதா, முடியரசன், கண்ணதாசன், சாலை இளந்திரையன், வேழவேந்தன், பொன்னிவளவன், புலவர் குழந்தை, பெருஞ்சித்திரனார் என்று பெரிய பட்டியலே போட வேண்டிய அளவிற்குக் கவிஞர்கள் பெருகினர். மேலும் இக்கால கட்டங்களில் புதிய ஊடகங்களாக அறிமுகமான வானொலி, கவியரங்கம், திரைப்படம், புதுக்கவிதை என்று படைப்புக் சூழல் பன்முகமாகப் பெருகியது.

புனைகதை இலக்கியத்திலும் சமூக விடுதலை இயக்கக் கருத்தாக்கங்கள் வெள்ளம் போல் பாய்ந்தன. சி.என்.அண்ணாதுரை, மு.வரதராசனார், மு.கருணாநிதி, ஆசைத்தம்பி, தென்னரசு, அரங்கண்ணல், டி.கே.சீனிவாசன் முதலிய எழுத்தாளர்கள் பங்களிப்புச் செய்துள்ளனர். நாடக இலக்கியம் மக்களிடையே செல்வாக்குப் பெற்றதால் பல நாடகங்கள் புதுமையான உள்ளடக்கத்தோடு தோன்றின. வரலாற்று நாடகங்களும் சமூக நாடகங்களும் எழுதப்பட்டன.

பேகன், கண்ணகி கதை (வ.சுப.மாணிக்கம்), ஆதி அத்தி (பெரியசாமி தூரன்), சேரதாண்டவம், (பாரதிதாசன்) தெள்ளாறெறிந்த நந்தி வர்மன் (சு.மகாதேவன்), இமயத்தில் நாம் (இரா.வெங்கடாசலம்) முதலிய வரலாற்று நாடகங்கள் சுட்டத் தக்கவைகள் ஆகும். சமூக நாடகங்களாக அறிஞர் அண்ணாவின் வேலைக்காரி, ஓர் இரவு, நீதி தேவன் மயக்கம், சந்திரமோகன் முதலியனவும், கலைஞர் கருணாநிதியின் போர்வாள், தூக்கு மேடை, வெள்ளிக்கிழமை, காகிதப் பூ முதலியனவும் பெரிதும் பேசப்பட்ட நாடகங்களாகும். மேற்கண்டவாறு காந்தியம் மற்றும் இந்தியத்தேசியம் சார்ந்தும், சமூக விடுதலை மற்றும் தமிழ்த் தேசியம் சார்ந்தும் எழுதப்பட்ட தமிழ் எழுத்துக்கள் எந்த அளவிற்குக் கலை மேன்மையோடு படைக்கப்பட்டுள்ளன என்பது இன்றளவும் விவாதத்திற்குரிய ஒன்றாகவே விளங்குகிறது.

மனித நடவடிக்கைகள் எதுவும் அரசியல் இல்லாமல், பிரச்சாரம் கலக்காமல் இல்லை என்பது எந்த அளவிற்கு உண்மையோ அதேபோல் எந்த ஒரு மனிதச் செயல்பாடும் அதற்குரிய அழகியல் உணர்வோடும் சுவையோடும் வெளிப்படும் போதுதான் அதனுடைய ஆற்றலும் பன்மடங்கு பெருகிச் சமூகத்திற்குள் பரவி வினை புரியும் என்பதும் உண்மைதானே. அதே நேரத்தில் சமூகத்தின் மேல் அடுக்கில் அதிகார பலத்தோடு இருந்து கொண்டவர்கள்தான் அழகியல் உணர்வு உட்பட அனைத்தையும் வடிவமைத்துச் சமூகத்தின் மேல் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள், ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் உண்மை என்பதை நாம் மறந்து விடக்கூடாது. மேலும் அழகியல் என்பதும் என்றுமே மாறாத நிரந்தரமானது அல்ல என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

★★★

விடுதலை இந்தியாவில் சமூகத்தை இயக்கிய ஒரு பெரும் சக்தியாக விளங்கியது பொதுவுடமை இயக்கம். 1924–லேயே இந்தியாவில் முறையான ஒரு அமைப்பாக இந்த இயக்கம் திரண்டது. இங்குள்ள சாதிக்கட்டுமானத்திற்கு ஏற்ப இந்த இயக்கத்தின் தலைமையும் உயர் சாதிக்காரர்களின் கைக்குள்தான் போய்ச் சேர்ந்தது. பாதிக்கப்பட்ட ஓரத்து மக்களுக்கான தத்துவக் கருத்துக்களைத் தேக்கிக்கொண்ட இப்பொதுவுடமை இயக்கத்தின் தலைமை, மையத்தில் வாழ்ந்து கொண்டிருந்த உயர் சாதிக்காரர்களின் கைக்குப் போனது, ஒருவகையில் அத்தத்துவம் இங்கே விரைவாகப் பரவவும் நிலை பெறவும் துணை போய் உள்ளது என்றாலும், அதே நேரத்தில் உயர்சாதிக்காரர்களின் ஆதிக்க அரசியலுக்கு ஏற்ப அது பலவாறு திரிந்து பாதிப்புக்கும் உள்ளாகியுள்ளது என்பதும் உண்மை என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

எப்படியானாலும் எப்போதுமே பாதிக்கப்பட்டவர்கள் பக்கமே நிற்கிற உளவியல் கூறுடைய கலை இலக்கியவாதிகளை இப்பேரியக்கம் ஈர்த்தது என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. எனவே இவ்வியக்கத்தைச் சேர்ந்த படைப்பாளிகள் மட்டுமல்ல பெரியாரியம், காந்தியம், ஆகிய கருத்தாக்கங்களை மையமாகக் கொண்டு இயங்கிய பிற இலக்கியவாதிகளும் கூடப் பொதுவுடமை கருத்துக்களுக்கு இதயத்தைக் கொடுத்தனர். எனவே விடுதலைக்குப் பிறகு தோன்றிய எல்லா வகையான இலக்கியங்களிலும் இப்பொதுவுடமைக் கருத்தாக்கங்களைக் காணலாம். மேலும் விடுதலை இந்தியா,சோவியத் ரஷ்யாவோடு கொண்டிருந்த நட்பு காரணமாகவும் இந்தியாவின் முதல் தலைமை அமைச்சரான நேரு தன்னை ஒரு சோசியலிஷ்டாக வெளிப்படுத்திக் கொண்டதாலும் மாஸ்கோ பதிப்பகம் மிகக் குறைந்த விலையில் ரஷ்யாவில் விளைந்த பொதுவுடமை இலக்கியங்களை, தத்துவங்களை, கோட்பாடுகளைத் தமிழில் மொழிபெயர்த்துப் பரப்பியதாலும் தமிழ் இலக்கியம் இதுவரை காணாத பல புதிது புதிதான பகுதிகள் வெளிச்சத்துக்கு வந்தன.

பெருவாரியான உழைக்கும் மக்களின் சிக்கல்களும் சிதைவுகளும் துக்கங்களும் போராட்டங்களும் தமிழ் இலக்கியத்தின் எழுது பொருளாயின. ரகுநாதனின் பஞ்சம் பசியும், பஞ்சாலைத் தொழிலாளர்களின் வாழ்வைப் படம்பிடித்தது. ராஜம் கிருஷ்ணனின் உப்பங்கழி, உப்புத் தொழிலாளர்களின் வாழ்க்கையையும் சின்னப்ப பாரதியின் சங்கம், மலைவாழ் மக்களின் வாழ்க்கைப்பாடுகளையும் இலக்கியங்களாகப் படைத்தன. இன்னும் ஜெயகாந்தன், பிரபஞ்சன், கி.ரா, பொன்னீலன், இராசேந்திரசோழன், மேலாண்மை பொன்னுசாமி, பா.செயப்பிரகாசம் என்று இவ்வகை சார்ந்த எழுத்தாளர்கள் நிரம்பி உள்ளனர். கவிதைப் படைப்பில் ஜீவா, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கம்பதாசன், தமிழ் ஒளி, கே.சி.எஸ்.அருணாச்சலம் ஆகியோர் சுரண்டப்பட்ட பாட்டாளி மக்களின் துயரத்தைப் பாடினர். தீவிர இடதுசாரி இயக்கமான நக்சல்பாரி இயக்கம் வந்த 70–களுக்குப் பிறகு இன்குலாப், கார்க்கி, இளவேனில் என்று பல கவிஞர்கள் தமிழ்க் கவிதைக்குப் பங்களிப்புச் செய்துள்ளனர்.

★★★

இவ்வாறு அரசியல் மற்றும் சமூக இயக்கங்களின் பின்புலத்திலேயே இலக்கியங்கள் பலவும் உருவாகிக் கொண்டிருந்த சூழலில், பெரியாரின் உயர்சாதிக்கு எதிரான இயக்கத்தினால்,பெரிதும் ஒவ்வாமைக்கு உள்ளான உயர்சாதி அறிவு ஜீவிகள் சிலர், இலக்கியத்தின் அழகியலை முன்னிறுத்தித்

தூய இலக்கியம் என்ற முழக்கத்தை உயர்த்திப் பிடித்தனர். இலக்கியத்தில் பேருணர்ச்சி, உன்னதம், தரிசனம், அழகியல் மேன்மை ஆகிய புனிதச் சொற்களால் இலக்கியத்தை அனைத்திற்கும் மேலான ஒன்றாகக் கொண்டாடினர். அது ஒரு தனி உயிர்; சார்பற்றது என்றெல்லாம் பேசினர். 1959 தொடங்கி ஏறத்தாழ 10 ஆண்டுகள் வெளிவந்த சி.சு.செல்லப்பாவின் எழுத்து, க.நா.சு.வின் இலக்கிய வட்டம் முதலிய சிற்றிதழ்கள் இப்போக்கிற்கு ஊக்கம் கொடுத்து வளர்த்தன.

இயக்கம் சார்ந்த எழுத்தாளர்கள் மரபுக் கவிதையைக் கைப்பற்றிக் கொண்ட போது, இவர்கள் புதுக்கவிதையைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டனர்.மேலைநாட்டில் இருந்து பரவிய நவீனத்துவத்தைத் தங்களுக்குப் பக்க பலமாக அமைத்துக் கொண்டனர். ஆதிக்க சக்திகளுக்கு எதிராகப் பாதிக்கப்பட்ட மக்கள் ஒன்று திரண்டு வரும் சூழலில், தங்களை நிலைநிறுத்திக் கொள்ளும் ஒரு வழிமுறையாக இந்த உயர் ஜாதி அறிவு ஜீவிகள் தரம், உன்னதம், தூய இலக்கியம் என்கிற முழக்கங்களைப் பயன்படுத்தி உள்ளனர் என்பதுதான் வரலாறாக இருக்கிறது.

தி.மு.க. ஆட்சிக்கு (1967) வந்த பிறகும் 70களிலும் இந்தப் போக்குத் தொடர்வதைப் பார்க்கிறோம். 1970தொடங்கி 1978 வரை வெளிவந்த கசடதபற என்ற இதழில் எழுதிய இளைஞர்களின் போக்கும் இப்படித்தான் அமைந்தது. அதன் முதல் இதழில் "அரசியல், சமூகம், மரபு இவை சம்பந்தப்பட்ட ஒழுக்கங்களுக்கு வாரம் தவறாமல் தோப்புக்கரணம் போடுபவர்கள் யாரும் இவர்களில் இல்லை" என்றும் "எதையும் எழுதுங்கள், ஆனால் இலக்கியமாக எழுதுங்கள்" என்றும் அறிவித்திருந்தது. இவ்விதழ் மூலம் பசுவய்யா, சி.மணி, ஞானக்கூத்தன், கல்யாண்ஜி, பாலகுமாரன் முதலியோர் உருவாயினர்.

70களில் தோன்றிய மற்றொரு முக்கியமான இலக்கியப் போக்கினை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். இப்போக்கினைக் கோவையில் இருந்து கவிதைக்காக வெளிவந்த வானம்பாடி என்ற இதழ் தொடங்கி வைத்தது வர்ணப் போராட்டத்துடன் வர்க்கப் போராட்டத்தை இணைத்தாக வேண்டிய வரலாற்று நிர்பந்தத்தின் விளைவே வானம்பாடி இயக்கம் ஆகும் என்கிறார் வானம்பாடி இயக்கத்தின் ஒருவராக இருந்த சு.அரங்கராசு. இந்த வானம்பாடிக் கவிஞர் மரபில் இருந்துதான் தமிழ்ப் புதுக்கவிதைக்குத் பொதுவெளியில் ஓர் அங்கீகாரம் கிட்டியது.இவர்களின் கற்பனாவாத மொழிநடையும் பார்வையும் புதிய புதிய உவமை, உருவகங்களும் உலகளாவிய அணுகுமுறையும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பான குரலும் பெரும் வீச்சினை ஏற்படுத்தின.

நா.காமராசின் கறுப்பு மலர்கள்,மீராவின் கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள், சிற்பியின் சர்ப்பயாகம், மேத்தாவின் கண்ணீர்ப் பூக்கள், கங்கைகொண்டானின் கூட்டுப் புழுக்கள், அப்துல் ரகுமானின் பால்வீதி, இன்குலாப்பின் வெள்ளை இருட்டு முதலிய கவிதை நூல்கள் பல இளைஞர்களைக் கவிஞர்களாக்கியது. கவிதை ஜனநாயகப்படுத்தப்பட்டது. மேலும் இதில் எழுதிய பலரும் தமிழ் முதுகலை முடித்த கல்லூரிப் பேராசிரியர்கள் என்பதனால் கல்வி நிலையங்களுக்குள்ளும் புதுக்கவிதை என்கிற இந்த வடிவம் நுழைந்து பாடப் பகுதியில் இடம் பெறவும் தொடங்கியது.

இந்தக் காலகட்டத்தில் கவிதை இலக்கியத்தில் வழக்கம் போல் அரசியல் கவிதைகளும் சமூக நிகழ்வுகள் மேலான விமர்சனங்களும் மேலோங்கி இருந்த சூழலில், புனைகதை இலக்கியத்தில் பல அரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.ஜெயகாந்தனின் வருகையும் தி.ஜானகிராமனின் படைப்புகளும், கி.ராவின் எழுத்துக்களும் சுந்தர ராமசாமியின் நடையும் இலக்கியத்தை ஓர் உன்னத தளத்திற்கு எடுத்துச் செல்ல முயன்றுள்ளன.

தஞ்சாவூர் பிராமணர் குடும்பங்களில் ஏற்பட்ட மாற்றங்களையும், மாற்றங்களை எதிர்கொள்ளப் பெரிதும் சிரமத்துக்கு உட்பட்ட அச்சமூகத்தின் சிக்கல்களையும், வேதனைகளையும் அவர்களுக்கு உரிய நுட்பங்களோடு தி.ஜா படைத்துக் காட்டினார். பதிவு செய்து ஆவணப்படுத்தும் ஒரு முறையில் கரிசல் காடுகளைத் தளமாக வைத்துக்கொண்டு கி.ரா பல உன்னதமான எழுத்துக்களைத் தமிழுக்கு வழங்கினார். மேலும் நீல பத்மநாபன், அசோகமித்திரன், பூமணி, கந்தர்வன் என்று அடுக்கிக் கொண்டே போகும் அளவிற்குச் சமூகத்தின் பல்வேறு தளங்களை வடித்துக் காட்டும் எழுத்துக்கள் இக்காலகட்டத்தில் தோன்றின.

அம்பை, சூடாமணி, கிருத்திகா, காவேரி முதலிய அற்புதமான நவீனப்பெண் எழுத்தாளர்களும் பெரும்பங்களிப்பு வழங்கியுள்ளனர்.கூடவே மரபான நாடகப் போக்கை உதறிவிட்டு வங்காள எழுத்தாளர் பாதல் சர்க்கார் வழியில் வீதி நாடகங்கள் உருவாயின. இது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்று. பல புதிய நாடகத்தை அறிமுகப்படுத்தினர்; நவீன நாடகக் குழுக்கள் தோன்றின. நா.முத்துசாமி, ராமானுஜம், மு.ராமசாமி, பரீட்சா ஞானி முதலியார் புதிய நாடகப் போக்கினை ஓர் இயக்கமாகவே நடத்தினர்.

★★★

இடதுசாரி இயக்கங்களுக்கு நம்பிக்கையோடு வந்த பல இளைஞர்கள், 60களில் திமுக இயக்கத்திற்குப் பெரும் நம்பிக்கையோடு வந்த இளைஞர்களைப் போலவே பெரிதும் ஏமாற்றத்திற்கு உள்ளாகினர். மேலும் தீவிரவாத இயக்கங்கள் உட்படப் பலவும் சிதறிப்போயின. இத்தகைய சூழலில் நம்பிக்கை கொள்ள பிடிமானம் அற்ற சூழல் நிலவியது; உலக அளவிலும் இரண்டாவது அகிலமான கம்யூனிஸ்ட் அகிலமும் சிதறியது.

ஏகாதிபத்தியத்தின் உலகத் தகவல் தொடர்பு மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் உலகம் தழுவிய ஆக்கிரமிப்பு, வணிகமும் சந்தையுமே எல்லாவற்றையும் நிர்ணயிக்கும் ஆற்றல் இவை எல்லாம் சேர்ந்து சிந்திப்பவர்களை நிலை குலையச் செய்தன. இத்தகைய சூழலில் எதிலும் தீவிரமான ஈடுபாடோ நம்பிக்கையோ கொள்வது என்பது தற்கொலைக்குச் சமமானது என்கிற சூழல் உருவாகியது.

இத்தகைய காலகட்டமான 80களில் தான் அமைப்பியல், பின்அமைப்பியல், பின் நவீனத்துவம் முதலிய சிந்தனைகள் தமிழ்ச் சூழலில் பரவத் தொடங்கின. இதற்குத் தகுந்தவாறு தமிழவனின் அமைப்பியல் குறித்த திறனாய்வுக் கோட்பாட்டு நூலும், லத்தின் அமெரிக்க இலக்கியங்களின் மொழிபெயர்ப்புகளும் தமிழ்ச் சூழலில் பரவத் தொடங்கின. எனவே கட்டமைக்கப்பட்ட பழைய ஆதிக்க மதிப்பீடுகளைப் பற்றிக் கவலைப்படாமல் நேர்கோட்டில்லா எழுத்துமுறையில் இலக்கியங்கள் உருவாகத் தொடங்கின. மையமற்ற எழுத்துக்கள் பரவத் தொடங்கின.

பிரேம் – ரமேஷ், சாரு நிவேதிதா, பிரம்மராஜன், நாகார்ஜுனன், தமிழவன், எம்.ஜி.சுரேஷ், கோணங்கி, ஜெயமோகன் முதலியோர் சோதனை முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு உள்ளடக்கத்தில் மட்டுமல்லாமல் எடுத்துரைப்பு முறையிலும் பல புதிய புதிய உத்திகளை அறிமுகப்படுத்தினர். எல்லாமே நாம் பேசும் மொழியின் விளையாட்டுதான்; மனிதர்கள் மொழியினால் கட்டமைக்கப்பட்டவர்கள் என்கிற மொழி மைய வாதம் முன்னுக்கு வந்தது.

இதுவரை தமிழ் இலக்கியத்தில் பெரிதும் கோலோச்சிய யதார்த்தவாத எடுத்துரைப்பு முறையியல் பின்னுக்குத் தள்ளப்பட்டு மாயை எதார்த்த வாதம் என்கிற புதிய எழுத்து முறை செல்வாக்குப் பெற்றது. மேலும் எண்பதுகளில் வெடித்துக் கிளம்பிய தமிழீழப் போராட்டம் தமிழ்நாட்டு இலக்கியப் படைப்பிலும் எதிரொலித்தது. பாரதிதாசனார் பாடிய அதே தமிழ்த் தேசியம் சார்ந்த கருத்துக்கள் கவிதைகளாகவும் புனை கதைகளாகவும் வெளிப்பட்டன. ஈழப் போராட்டத்தினால் உலகம் முழுவதிலும் அகதிகளாக வாழ நேர்ந்த ஈழத் தமிழர்கள் எழுதிய புலம்பெயர் இலக்கியங்கள் தமிழ்நாட்டின் இலக்கியவாசிப்பில் முதலிடம் பெற்றன என்று சொன்னால் மிகையாகாது. இந்த நிலைமை இன்று வரை தொடர்கிறது என்பதையும் குறித்துக் கொள்ள வேண்டும்.

★★★

90களில் அம்பேத்கரின் ஒட்டு மொத்த எழுத்துகளும் மொழிபெயர்க்கப்பட்டுத் தமிழில் 30க்கும் மேற்பட்ட தொகுதிகளாக வெளிவந்தன.அம்பேத்கர் நூற்றாண்டைக்கொண்டாடும் விதமாக வந்த இந்த எழுத்துக்களின் வருகை ஒடுக்கப்பட்ட தலித்து மக்களின் நடுவில் எழுச்சியை உண்டாக்கியது. எனவே தலித் இலக்கியம் என்கிற ஒரு புதிய போக்கு வேகம் எடுத்தது.இதுவரை பேசப்படாத ஓரத்து மக்களின் வாழ்க்கைப்பாடுகள் சிறுகதைகளாக, நாடகங்களாக, நாவல்களாக, சுய வரலாற்றுப் புனைவுகளாகப் பொதுவெளியில் விரித்துக் காட்டப்பட்டன.

சிவகாமி, பாமா, இமையம், அபிமானி, விழி.பா.இதய வேந்தன், அழகிய பெரியவன், ராஜ்கௌதமன் மூலமாகத் தமிழ் இலக்கியத்தின் பெரும் பரப்பாகத் தலித்துப்புனைவு இலக்கியம் உருவாகியுள்ளது. கவிதை ஆக்கத்தில் என்.டி.ராஜ்குமார், ராஜ முருக பாண்டியன், தலித் சுப்பையா அன்பாதவன், மதிவண்ணன், ரவிக்குமார் முதலியோர் பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர். கே.ஏ.கே.குணசேகரன் படைத்தளித்த பலி ஆடுகள் போன்ற பல தலித் நாடகங்கள் பல மேடைகளில் அரங்கேறின.

சாதி அடிப்படையில் ஒடுக்கப்பட்ட தலித் மக்கள் போலவே பாலின அடிப்படையில் ஒடுக்கப்பட்ட பெண்களும் இலக்கியத்தைக் கையில் எடுத்துள்ளனர். இதுவரை யாராலும் கவனிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டுக் கிடந்த பெண்களின் உரிமைகளும் உணர்வுகளும் வேட்கைகளும் இலக்கியமாய் வடிவம் பெற்றுள்ளன. மாலதி மைதிரி, லீனா மணிமேகலை, சுகிர்த ராணி ஆகியோரால் புரட்சிகரப் பெண்ணியம் சார்ந்த கருத்தாக்கங்களும் கவிதையாய்ப் படைக்கப்பட்டுள்ளன.

நூற்றுக்கும் மேற்பட்ட பெண் கவிஞர்களும் புனைகதை எழுத்தாளர்களும் (உமாமகேஸ்வரி, அ.வெண்ணிலா முதலியோர்) உருவாகி இருக்கிறார்கள் என்பது எளிய ஒரு செய்தி அல்ல; மிகப் பெரிய அளவில் ஆண் பெண் உறவில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் விளைவு என்பதை இப்பெண் எழுத்தாளர்களின் படைப்புகள் புலப்படுத்திக் கொண்டு நிற்கின்றன. இவர்களைத் தொடர்ந்து இரண்டாயிரத்திற்கு பிறகு ஒடுக்கப்பட்ட மூன்றாம் பாலினத்தைச் சேர்ந்த திருநங்கைகளும் (பிரியா பாபு, பாலபாரதி முதலியோர்,இன்றைக்கு நாவல், சிறுகதை, கவிதை என்று படைத்து மிகப்பெரிய விழிப்புணர்வை இலக்கிய மூலமாக ஏற்பத்திக் கொண்டிருக்கின்றனர்.

இரண்டாயிரத்திற்கு பிறகு உலக அளவிலான பெரும் நிதி நிறுவனங்களும் தொழில் நிறுவனங்களும் இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளின் கனிம வளங்களையும் காடுகளையும் நீர் நிலைகளையும் ஈவு இரக்கமில்லாமல் சுரண்டிக் கொழுக்கும் கொடுமையைக் கண்முன்னே காண நேர்ந்த சூழலில் நம் மண்ணையும் கடல் வளத்தையும் காடுகளையும் நீர் நிலைகளையும் காப்போம் என்கிற விழிப்புணர்வைச் சமூகத்தின் மனப்பரப்பில் உருவாக்கும் நோக்கில் இடம் சார்ந்த பல்வேறு புனைவெழுத்துக்கள் வேகத்தோடு உருவாகி வருகின்றன. ஆழிசூழ் உலகு (ஜே.டி.குருசு), சோளகர் தொட்டி (பாலமுருகன்), காவற்கோட்டம் (சு.வெங்கடேசன்) முதலிய பல புனைவெழுத்துக்கள் தோன்றிய வண்ணம் உள்ளன.

இன்னும் இத்தகைய ஒரு நூறாண்டு இலக்கியங்களைக் குறித்து எழுதப்பட்டுள்ள திறனாய்வு மற்றும் ஆராய்ச்சி எழுத்துக்களைக் குறித்தும்,உலக மொழிகள் பலவற்றிலும் இருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் குறித்தும் தனித்தனியாகப் பெரிய அளவில் எழுதுவதற்கு இடம் இருக்கிறது என்பதை மட்டும் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்

மொத்தத்தில் ஒரு நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தின் தன்மையைச் சாராம்சப்படுத்தி ஒற்றைவரியில் சொல்வதென்றால் "சமூகத்தில் ஆண்டாண்டுகாலமாகத் தேசியம், சாதி, இனம்,மொழி, பால், வர்க்கம் ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறு அடக்குமுறைக்கு உள்ளாகிக்கிடந்த பெருவாரி மக்களின் எழுச்சிகளைப் படம் பிடிக்கும் பல்வகைப்பட்ட எழுத்துக் கோலங்கள்" என்று சொல்லிவிடலாம். நன்றி.

(பி. பு:2000 ஆண்டுகளில் எழுதப்பட்டிருக்கும் தமிழ் இலக்கியங்களைவிடப் பன்மடங்கு அதிகமாகக் கடந்த ஒரு நூற்றாண்டில் பல்வேறு இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இவற்றை ஒரு கட்டுரையாகச் சுருக்கித் தருவது என்பது மலையைக் கிள்ளி எலியைப் பிடிக்கிற பெரும் வேலைப்பாடு கொண்டது. எனவே இக்கட்டுரையாக்கத்தில் பல விடுபடல்கள் நேர்வது தவிர்க்க முடியாதது என்பதை வாசகர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.)

நூற்றாண்டு கண்ட தமிழ்ச் சிறுகதை இலக்கியம்

ச.தமிழ்ச்செல்வன்

உலகின் எந்த மொழிக்கும் ஈடான சிறுகதைகளைக்கொண்ட மொழியாக நம் தமிழ் மொழி திகழ்கிறது. 1920களில் முதன்முதலாகத் தமிழில் சிறுகதைகள் எழுதப்பட்டன. நூறாண்டுகள் கடந்து அதன் பயணம் வெற்றிகரமாகத் தொடர்கிறது.



"பார்க்கப்போனால் நான்மரந்தான். ஆனால் என்மனஸிலுள்ளதை யெல்லாம் சொல்லுகிறதானால் இன்னைக்கெல்லாம் சொன்னாலும் தீராது. இந்த ஆயுஸுக்குள் கண்ணாலே எத்தனை பார்த்திருக்கிறேன். காதாலே எத்தனை கேட்டிருக்கிறேன். உங்கள் பாட்டிகளுக்குப் பாட்டிகள் தவுந்து விளையாடுவதை இந்தக் கண்ணாலே பார்த்திருக்கிறேன். சிரிக்கிறீர்கள். ஆனால் நான் சொல்லுகிறதிலே எள்ளளவேனும் பொய்யில்லை" எனத்துவங்கும் வ.வே.சு.அய்யரின் "குளத்தங்கரை அரசமரம்" கதைதான் தமிழ்ச் சிறுகதையின் வரலாற்றைத் துவக்கி வைத்த முதல் சிறுகதை எனப்படுகிறது.

அய்யருக்கு முன்னால் அச்சில் கதை சொன்னவர்களாக பரமார்த்தகுரு கதை சொன்ன வீரமாமுனிவரும் குசிகர் குட்டிக்கதைகள் சொன்ன அ.மாதவய்யாவும் சிறிய கதைகள் சொன்ன பாரதியும் இருக்கிறார்கள்தான். என்றாலும், சிறுகதை என அறியப்படும் வடிவத்தில் கதையைச் சொன்னவர் வ.வே.சு. அய்யர்.



சொல்கதைகள், பழங்கதைகள், தொன்மக்கதைகள், பாட்டி சொன்னகதைகள், விடுகதைகள், நெடுங்கதைகள், குட்டிக்கதைகள், பஞ்சதந்திரக் கதைகள், விக்கிரமாதித்தன் கதைகள், தெனாலிராமன் கதைகள், மரியாதைராமன் கதைகள், ஆயிரத்தோரு இரவுக் கதைகள் என விதவிதமான வடிவங்களில் மனித சமூகம் காலம் காலமாகக் கதை சொல்லிவந்திருக்கிறது. சங்க இலக்கியத்திலேயே செய்யுள் வடிவில் சிறுகதைகள் வந்துவிட்டனதான்.

புதுமைப்பித்தன் சொன்னது போல "சிறுகதை என்பது தற்காலத்தில் எழுந்த மேனாட்டுச் சரக்கு. சிறுகதை என்றால் சிறியகதை, கொஞ்சப் பக்கங்களில் முடிந்துவிடுவது என்பதல்ல. ஒருசிறு சம்பவம், ஒருமனோநிலை என ஒரு பொருள் பற்றி எழுதுவது. சிறுகதை என்பது வாழ்க்கையின் சாளரங்கள்."

அமெரிக்கச் சிறுகதைகளின் முன்னோடியான எட்கர் ஆலன்போ சிறுகதைக்கான இலக்கணமாக சிலவற்றைச் சொல்லிச் சென்றார். அதில் ஒன்று சிறுகதை என்பது ஒரே அமர்வில் வாசித்து முடிப்பதாக இருக்க வேண்டும். உக்காந்தா படிச்சு முடிச்சிட்டுத்தான் எழுந்திருக்கணும் என்பது. முதல் வரியிலேயே கதை ஆரம்பமாகிவிடணும். ஒருபொருள் பற்றியதாகவோ ஒரு மனோநிலை பற்றியதாகவோ ஒருமை கொண்டதாக அமைய வேண்டும்.

இந்தவகையில் பார்க்கும்போது, வ.வே.சு அய்யரின் சிறுகதைகளே முன்னத்தி ஏராகி நிற்கின்றன. மங்கையர்க்கரசியின் காதல், காங்கேயன், கமல விஜயம், ழேன் ழக்கே, குளத்தங்கரை அரசமரம் ஆகிய ஐந்து சிறுகதைகளைத் தொகுத்து மங்கையர்க்கரசியின் காதல் என்ற சிறுகதைத் தொகுப்பை கம்ப நிலையம் சார்பில் 1912இல் அவரே வெளியிட்டார். இதுவே தமிழில் வெளிவந்த முதலாவது சிறுகதைத் தொகுதியாகும்.

தமிழ்ச்சிறுகதையின் தொடக்கம் பற்றி எழுத்தாளர் நாஞ்சில் நாடன் இப்படிக் குறிப்பிடுகிறார்:–

வ.வே.சு.அய்யரின் "குளத்தங்கரை அரசமரம்" சிறுகதையில் இருந்தே தமிழ்ச்சிறுகதை வரலாறு தொடங்குகிறது என்றொரு பிடிவாதம் உண்டு. இங்கு சி.சு.செல்லப்பா, தனது தமிழ்ச்சிறுகதை பிறக்கிறது பற்றிய நூலில், மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 'ஆறில் ஒரு பங்கு' கதையே தமிழின் முதல் சிறுகதை என்று நிறுவுகிறார். பிறகு எங்கோ வாசித்தேன்,1888 இல் சிங்கப்பூரில் இருந்து மக்தூம் சாகிபு என்பவர் எழுதிய 'வினோத சம்பாஷணை' என்ற சிறுகதைதான் தமிழில் எழுதப்பட்ட முதல் சிறுகதை என்று.

சில ஆண்டுகளுக்கு முன்பு, 'பனையண்ணன்' 'வாத்தியார்' போன்ற நாவல்கள் எழுதிய பெரியவர் ஆர்.எஸ்.ஜேக்கப்பின் கட்டுரை ஒன்றில், தமிழின் முதல் சிறுகதை, 'சரிகைத் தலைப்பாகை' என்ற தலைப்பில் அருள் திரு.சாமுவேல் பவுல் அய்யர் என்பவரால் 1877ஆம் ஆண்டு ஜூலை மாதம் 'நற்போதகம்' எனும் மாத இதழில் வெளியானது என்று குறிப்பிட்டிருந்தார். ஆதாரங்கள் திரட்டி, அறுதியான முடிவு சொல்ல வேண்டியது ஆராய்ச்சியாளர்களின் பணி"

குளத்தங்கரை அரச மரமும் பாரதியின் ஆறிலொருபங்கு கதையும் அ.மாதவய்யாவின் ஏணியேற்ற நிலையம், சாஸ்தா ப்ரீதி போன்றவையும் ஆரம்பகாலச் சிறுகதைகள் என்றாலும் தமிழ்ச் சிறுகதைக்கு உருவமும் உள்ளடக்கமும் கொடுத்து மூச்சுக்காற்றை வாய்வைத்து ஊதி உயிர் கொடுத்தவர் புதுமைப்பித்தன்தான் என்பதை எத்தரப்புச் சிந்தனைப் பள்ளிகளைச் சேர்ந்தவர்களும் மறுக்கவில்லை. புதுமைப்பித்தன் தீவிரமாகச் சிறுகதையில் இயங்கிய 1930–40 காலகட்டத்தில் தமிழ் இலக்கியச் சூழலில் எது இலக்கியம்? எது கதை? எது கலை? எது பிரசாரம்? என்கிற அனல்பறக்கும் விவாதங்களில் உற்சாகமாகப் பங்கேற்றவர் புதுமைப்பித்தன்.

இலக்கியத்தின் நோக்கம் சமூகத்தைச் சீர்திருத்துவது அல்லது உய்விப்பது அல்ல என்கிற அணியில் நின்றவர் அவர். 'இரண்டாம் கட்ட மணிக்கொடி' இலக்கியவாதிகளின் பொதுவான சார்பு இதுவாகத்தான் அன்று இருந்தது. "அவனவனுடைய ஆத்மதிருப்திக்காக எழுதிக் கொள்வதைவிட விவேகமான காரியம் வேறு எதுவும் கிடையாது" என்று ஒருகடிதத்தில் புதுமைப்பித்தன் குறிப்பிட்டுள்ளதாக ஆய்வாளர் ராஜ்கவுதமன் எழுதுகிறார். மற்றவகை எழுத்துக்களைப் போல இலக்கியத்தை ஒரு தர்க்கத்துக்குள் அடக்கமுடியாது என்கிற பார்வையும் அவருக்குண்டு.



“கலை, தர்மசாஸ்திரம் கற்பிக்க வரவில்லை. பத்துத்தலை ராவணனும், ஆறு தலை சுப்பிரமணியனும் உடற்கூறு நூலுக்குப் புறம்பான அபத்தமாக இருக்கலாம்: ஆனால் ஒரு கொள்கையை, இலட்சியத்தை உணர்த்தக்கூடியது. அதுதான் கலையின் லட்சியம்” என்றார்அவர்.

எந்த இஸத்திற்குள்ளும் தன்மனதைப் பதியனிடாமல் ‘சுத்தமான’ இலக்கிய வாதியாகத்தான் அவர் இருக்க விரும்பினார்.

“கொள்கை என்பது உயரத்தூரத்தில் தூக்கிப் பிடித்த தீப்பந்தம் போல் எட்ட இருப்பதாலேயே வெளிச்சம் விழுகிறது. அது எட்ட இருப்பது அவசியம்” என்று தெளிவான ஒரு பார்வை கொண்டிருந்தார். ஆனாலும் தன் சமகாலத்து நிகழ்வுப் போக்குகளுக்குத் தன் படைப்புகளில் முகம் கொடுக்க அவர் ஒரு போதும் தயங்கியதில்லை.

அவர் இயங்கிய 1930–40 காலம் என்பது உலக அளவில் முதலாளித்துவம் பெரும் நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருந்த காலகட்டம். உலகப் பொருளாதாரப் பெருமந்தம் எனப்பட்ட The Great Depression காலகட்டம் அது. ஏகாதிபத்திய நாடுகள் தங்கள் சுமையை மூன்றாம் உலகநாடுகளின் மீது இறக்கி வைக்க, அது எளிய மக்களை மேலும் வறியவராக்கி மூச்சுத் திணறவைத்துக் கொண்டிருந்த காலம். நகரங்கள் எனும் பெரும்சந்தைகள் எழுந்து கொண்டிருந்த காலம். முதலாளித்துவத்துக்கு மாற்றாக சோவியத் நாடு ‘திட்டமிட்ட பொருளாதாரம், இயற்கை வளங்கள் பொதுவுடைமையில்’ என்கிற நடப்பை முன்வைத்து முன்னேறிக் கொண்டிருந்த காலமாகவும் இருந்தது.

பட்டணத்திலே மாவிலைகூட காசு கொடுத்துத்தான் வாங்கவேண்டும். “என்ன, மாவிலைக்குமா விலை? என்று பிரமித்துப் போகாதீர்கள்! மாவிலைக்கு விலையில்லை என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள். ஆனால், மரத்தில் ஏறிப்பறித்து, வீடுதேடிக் கொணர்ந்து கொடுப்பதற்குக் கூலிகொடுக்க வேண்டுமா இல்லையா? நாங்கள் படித்த பொருளாதார சாஸ்திரப்படி இந்த ‘உழைப்பின் மதிப்பை’ அந்த இலையின் மீது ஏற்றி வைத்துப் பார்க்க வேண்டும். இதுதான் விலை என்பது” என்று புதுமைப்பித்தன் தன்னுடைய விநாயக சதுர்த்தி என்கிற சிறுகதையில் எழுதுகிறார். கூலி, விலை, லாபம் போன்றவற்றின் அடிப்படைகளை விளக்கும் மார்க்ஸியப் பார்வையை உள்வாங்கியவராகத் தான் அவர் இருந்திருக்கிறார்.

குறைந்த எண்ணிக்கையில் தொழிலாளிகளை வைத்து அதிக நேரம் வேலைவாங்கி அந்த உபரி உழைப்பில் உருவாகும் சொத்தைத் தனக்கான லாபமாக முதலாளி எடுத்துச்செல்லும் முதலாளித்துவப் பொருளாதார அடிப்படைகளைப் பற்றிக்கூட வெளிப்படையாகத் தன் கதைகளில் எழுதினார். ‘தியாகமூர்த்தி’ சிறுகதைக்கு உள்ளேயே அதைவைத்து எழுதுகிறார்:

தமிழ்ச்சிறுகதையின் முதல் அலை 1925 இல் பாரதி, வ.வே.சு அய்யர், அ.மாதவய்யா ஆகிய மும்மூர்த்திகளின் மறைவுடன் முடிவுக்கு வந்தது. 1940களில் சிறுகதைக்கு வளம் சேர்த்த மும்மூர்த்திகள் என புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபாலன், மௌனி ஆகியோரைக் குறிப்பிடுவார்கள். இது இரண்டாம் அலை.

தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் குறிப்பிடத்தக்க இன்னொரு அம்சம் தமிழ்நாட்டின் மூன்று முதலமைச்சர்கள் சிறுகதை எழுத்தாளர்களாகப் பங்காற்றியவர்கள். ராஜாஜி, அண்ணா, கலைஞர் ஆகிய மூன்று முதலமைச்சர்களும் சிறுகதை எழுதியவர்கள். இந்தப் பெருமை உலகில் வேறு எந்த மொழிக்கும் கிடையாது.

1930களில் வெளிவந்து கொண்டிருந்த ‘மணிக்கொடி’ என்கிற இலக்கிய இதழ் தமிழ்சிறுகதைக்கு மகத்தான பங்களிப்பைச் செய்தது. மணிக்கொடியின் வரலாற்றைச் சுருக்கமாக புதுமைப்பித்தனின் வாய்மொழியிலேயே கேட்போம்:

மணிக்கொடிப் பத்திரிகையானது வெளிவரும் முன்பு எத்தனையோ இலக்கியப் பத்திரிகைகள் இருக்கத்தான் செய்தன. ஆனால், புதிய பரிசீலனைகளுக்கு இடங் கொடுக்கும், உற்சாகமூட்டும், வரவேற்கும் பத்திரிகைகள் அதற்கு முன்போ பின்போ கிடையாது. அந்தப் பத்திரிகையை ஆரம்பித்த

லக்ஷியவாதியான கே.ஸ்ரீனிவாசன் அவருடைய அந்தக் 'குற்றத்திற்காக'(?) பாஷைப் பிரஷ்டம் செய்யப்பட்டவர்போல, வேற்று மாகாணத்திலே வேற்றுபாஷையிலே பத்திரிகைத் தொழில் நடத்தும் பாக்கியம் கிடைக்கப்பெற்று வாழ்ந்து வருகிறார்.

காலத்துக்கேற்றபடி உடுக்கடிக்கும் கோட்டான்களும், ஆவேசத்தோடு சீறுவது போல 'பம்மாத்து' செய்துகொண்டு இருக்கும் கிழட்டுப் புலிகளும், பாஷையையும் பாஷையின் வளர்ச்சியையும் பாழ்படுத்திக்கொண்டு இருக்கும்படி அனுமதித்து வரும் தமிழரின் பாஷா அபிமானத்தைக் கோவில் கட்டித்தான் கும்பிட வேண்டும். அன்று மறுமலர்ச்சி என்ற ஒரு வார்த்தை புதிய வேகமும் பொருளும் கொண்டது. அதைச் சிலர் வரவேற்றார்கள்; பலர் கேலிசெய்தார்கள்; பெரும்பான்மையோர் அதைப் பற்றி அறியாதிருந்தார்கள். மணிக்கொடி பொருளாதார நிர்ப்பந்தம் சிசுஹத்தி செய்யப்பட்டு என்ற நபரால் அசிரத்தை என்ற முனிசிப்பல் குப்பைத் தொட்டியில் எறியப்பட்டது. மூச்சுப் பேச்சற்றுக் கிடந்த அந்தக் குழந்தையை எடுத்துவந்து ஆசை என்ற ஒரே அமுதூட்டி வளர்ப்பதற்காக நானும் பி.எஸ்.ராமையா என்ற நண்பரும், எங்களைப் போலவே உற்சாகத்தை மட்டும் மூலதனமாகக் கொண்ட இன்னும் சில சகா எழுத்தாளர்களும் சேர்ந்து நடத்தி வந்தோம். "அது இரண்டு மூன்று வருஷங்களில் கன்னிப்பருவம் எய்திக் கண்ணை மயக்கும் லாவண்யத்தைப் பெறும் சமயத்தில் அதைக் கைப்பிடித்து இழுத்துக்கொண்டு ஓடும் நண்பரைப் பெற்றோம்". அவர் அவளை ஒருவருக்கு விற்றார். விற்றவுடனே அவளுக்கு ஜீவன் முக்தி இந்தக் கலிகாலத்தில் கிடைத்தது. இதுதான் மணிக்கொடியின் கதை. இதுதான் தமிழிலே புதிய பரிசீலனைகள் செய்ய வேண்டும் என்று கோட்டை கட்டியவர்களின் ஆசையின் கதை. இந்தக் கதையின் ஒரு அம்சம் எனது கதைகள்." என்று மணிக்கொடியின் வரலாற்றையும் பங்களிப்பையும் சுருக்கமாகச் சொன்னார் புதுமைப்பித்தன். மணிக்கொடி இலக்கிய இயக்கத்தின் பகுதியாகத் தன்னை உணர்கிறார் புதுமைப்பித்தன்.

மணிக்கொடி' இதழைக் காங்கிரஸ்காரர்களான ஸ்டாலின் சீனிவாசன், டி.எஸ்.சொக்கலிங்கம், வ.ரா.எனப்பட்ட வ.ராமசாமி ஆகிய மூவரும் சேர்ந்து 1933 செப்டம்பரில் தொடங்கி, 1935 சனவரி வரை நடத்தினர். இந்த முதல் கட்டத்தில் சிறுகதைக்கு மணிக்கொடி பங்களிப்பு எதையும் செய்துவிடவில்லை. இரண்டாம் கட்டத்தில் பி.எஸ்.ராமையா ஆசிரியராகவும் கி.ராமச்சந்திரன் துணை ஆசிரியராகவும் இருந்து 1935 மார்ச் முதல் 1938 ஜனவரி வரை நடத்தினர். இக்காலம்தான் சிறுகதையின் பொற்காலம் எனப் போற்றும் அளவுக்குத் தரமான சிறுகதைகள் மணிக்கொடியில் வந்த காலம்.

புதுமைப்பித்தன் ஆகியோரின் படைப்புகள் மணிக்கொடியில் வெளிவந்தன. 'அவ்வ்வ்வ்வ்வ்வளவும் கதைகள்' என்று ஆறு 'வ்' போட்டு அன்றைய மணிக்கொடிக்கு விளம்பரபோஸ்டர்கள் அடிப்பார்களாம். பாவேந்தர் பாரதிதாசனும் மணிக்கொடியில் எழுதியிருக்கிறார். ஆனால் கவிதையோடு நிறுத்திக்கொண்டார். மணிக்கொடியில் சிறுகதையை வளர்த்தவர்கள் என ந.பிச்சமூர்த்தி, மௌனி, கு.பரா.ந.சிதம்பரசுப்பிரமணியன், கரிச்சான் குஞ்சு, எம்.வி.வெங்கட்ராம் போன்ற பலரைக் குறிப்பிடலாம். தமிழ்ச்சிறுகதையின் திருமூலர் மௌனி என்பது புதுமைப்பித்தனின் கருத்து.

1940க்கும் 60க்கும் இடைப்பட்ட காலத்தில் அசோகமித்திரன், ஜெயகாந்தன், சுந்தரராமசாமி, இந்திரா பார்த்தசாரதி, தி.ஜானகிராமன் உள்ளிட்ட பெரும் ஆளுமைகள் சிறுகதைக்கு வளம் சேர்த்தனர். இவர்களில் ஜெயகாந்தன் பல்லாயிரக்கணக்கான வாசகர்களால் கொண்டாடப்பட்டார். ஆனந்த விகடனில் அவர் எழுதிய "அக்கினிப்பிரவேசம்" போன்ற கதைகள் அவருக்குப் புகழ் தேடித்தந்தன.

இக்கால கட்டத்தில் திராவிட இயக்கப் படைப்பாளிகளான கலைஞர், இராம.அரங்கண்ணல். எஸ்.எஸ்.தென்னரசு, ஏ.வி.பி.ஆசைத்தம்பி போன்றோரும் சிறுகதைகள் எழுதினர்.

1965 முதல் 1972 வரை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இலக்கியமாத இதழான "தாமரை" யில் ஆசிரியர்பொறுப்பில் எழுத்தாளர் தி.க.சிவசங்கரன் இருந்தார். மணிக்கொடி இதழில் பி.எஸ்.ராமையா ஆசிரியராக இருந்தகாலம் 30 களில் எப்படிச் சிறுகதைகளுக்கு வளம் ஊட்டிய காலமோ, அதேபோல 70களில் தி.க.சி.யின் 'தாமரைக்காலம்' தமிழின் நுட்பமான பலசிறுகதை எழுத்தாளர்களுக்கு மேடையாக அமைந்தது. படைப்புச் சுதந்திரத்தோடு எழுதும் களமாக அன்றைய தாமரை திகழ்ந்தது.

பிரபஞ்சன், பா.செயப்பிரகாசம், பூமணி, வண்ணதாசன், ஆ.மாதவன் எனப் பின்னர் புகழ்பெற்ற இப்படைப்பாளிகள் தாமரையில் எழுதி அறிமுகமானார்கள்.' 70களின் சிறுகதை எழுச்சிக்கு வித்திட்ட அந்தப் படைவரிசை இன்றும் பங்களித்து வருகிறது. பிரபஞ்சன், பா.செயப்பிரகாசம் போன்றோர் காலமாகிவிட்டனர்.

70களில் எழுதத்துவங்கிய அம்பை பெண் நிலையில் வாழ்வைப்பேசிய முதல் படைப்பாளி என்கிற பெருமை பெற்றவர். இன்றும் எழுதிக் கொண்டுள்ளார்.

இடதுசாரிகளான ரகுநாதனும் வ.விஜயபாஸ்கரனும் முறையே "சாந்தி" "சரஸ்வதி" ஆகிய இலக்கிய இதழ்களை நடத்தி இடது பக்கம் இலக்கியத்தைத் திருப்பினர் என்று சொல்ல வேண்டும். ரகுநாதனின் சாந்தி இதழ் மூலமாகவே எழுத்தாளர் சுந்தரராமசாமி அறிமுகம் ஆனார். ஜெயகாந்தனின் பரபரப்பான பல கதைகள் 'சரஸ்வதி'யில் வெளியாகின.

எழுபதுகள் உண்மையில் சிற்றிதழ்களின் காலம் என்றே ஆனது. எழுத்து இதழின் மரபில் "கசடதபற" "ழ" "கொல்லிப்பாவை"போன்ற இதழ்களும் இடது இலக்கிய மரபில் தோழர் ப.ஜீவானந்தம் துவக்கிய "தாமரை"யும் "வானம்பாடிகள் " "மகா நதி" போன்றவையும் பின்னர் "செம்மலரும்" வந்து சேர்ந்தன.

எழுபதுகளின் முக்கியமான இன்னும் இரு இலக்கிய இதழ்கள் என நா.பார்த்தசாரதியின் "தீபம்" கி.கஸ்தூரிரங்கனின் "கணையாழி" இரண்டையும் குறிப்பிட வேண்டும். மேற்குறிப்பிட்ட இந்த இதழ்கள் யாவும் சிறுகதைக்கு வளம் சேர்த்த இதழ்கள்.

30களில் சிறுகதைப்போட்டி நடத்தி சிறுகதை வடிவத்தைப் பரவலாக்கிய பெருமை ஆனந்த விகடனுக்கு உண்டு. 90களிலும் அதற்குப் பிறகும் தமிழில் சிறுகதகள் எழுதி வளம் சேர்த்து வருபவர்கள் என எஸ்.ராமகிருஷ்ணன், ஜெயமோகன், கோணங்கி, சாரு நிவேதிதா, போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

தலித்குரலை இலக்கியத்தில் அழுத்தமாகப் பதிவு செய்ய முயன்ற கோடாங்கி, தலித், மணற்கேணி போன்றவையும் இடது ஜனநாயக இதழாக வந்த 'புது விசை'யும் நக்சல்பாரி இயக்கச் சார்புடன் வெளியான இதழ்களான 'மன ஓசை' (பா.செயப்பிரகாசம்) புதிய மனிதன் (இன்குலாப்) புதிய கலாச்சாரம், இலக்கிய வெளிவட்டம் (வத்திராயிருப்பு நடராஜன்) படிகள் போன்றவையும் சிறுகதைக்குக் காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ளன.

கவிஞர் சமயவேலின் "தமிழ் வெளி", தமுஎகச அறம் கிளையின் "சிறுகதை" பாலை நிலவனின் "தனிமை வெளி" ஹரிகிருஷ்ணனின் "மணல் வீடு" போன்ற இதழ்களிலும் எனச் சிறுகதை பயணம் தொடர்கிறது.

ஒரு நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை
பாரதியினூடே பாரதி வழியில்...

சிற்பி பாலசுப்பிரமணியம்

ஐரோப்பியக் காலனித்துவத்தின் தோற்றத்தினால் உலக மனித சமூகத்தின் அடிப்படை அலகுகளாக நின்று இயக்கும் குடும்பம், மதம், கல்வி, அரசு, நீதி, கலை, இலக்கியம் ஆகிய அனைத்திலும் கடந்த நூறு ஆண்டுகளில் மனித வரலாறு காணாத முறையில் கணக்கில் அடங்காத பல்வேறு மாற்றங்கள் நடந்தேறி உள்ளன.இவற்றுள் ஒரு சமூகத்தின் ஆன்மாவாகச் செயல்படும் மொழியினாலான இலக்கிய உற்பத்திச் செயல்பாட்டில், தமிழ்ச் சமூகத்தில் நிகழ்ந்துள்ள இன்றியமையாத புதிய போக்குகளைச் சுருக்கமாக இந்தக் கட்டுரையில் காணலாம்.



இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைக்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டு பசுமை மிகுந்த நாற்றுப்பண்ணையாக விளங்கியதென்பதை மறந்துவிட முடியாது. பேராசிரியர் அ.சீனிவாச ராகவன் 1970இல் எழுதிய 'ஒரு நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை' என்ற நூல் பத்தொன்பதாம் நூற்றாண்டை மையமாகக் கொண்டது. அந்நூலில் இருவகைக் கவிதைப் போக்குகளை அடையாளப்படுத்துகிறார் – பழமையில் ஊன்றிய புதிய பார்வையினர், அயல்மொழித் தாக்கத்தால் விளைந்த புதுமைப் பார்வையினர் என இருவகையினரைக் குறிக்கின்றார்.

இராமலிங்க வள்ளலார், கோபாலகிருஷ்ண பாரதியார் இருவரும் முதல் வகையினர். மரபு வழிச்சிந்தனையில் இருந்தபடியே படைப்பில் எளிய மொழி, பசிநீக்கும் புரட்சி, சமய சமரசம் என்ற நிலையில் வள்ளலாரும், சாதியத்தை எதிர்க்கும் புரட்சியை கோபால கிருஷ்ண பாரதியும் நிகழ்த்திக் காட்டுகின்றனர்.



அதேசமயம் ஆங்கிலம் கறுப்பு தினம் என்ற புதுவகைப் படைப்பில் முன்சீப் வேதநாயகம்பிள்ளை, பெண் விடுதலை, மொழிப்பற்று, காதலில் சுதந்தரம் முதலிய கருத்தியல்களின் பிரதிநிதியாக விளங்குகிறார். அதுபோன்றே சுந்தரம்பிள்ளை இக்கருத்தியல்களோடு நாட்டுப்பற்றுடன் புதிய சிந்தனையோட்டங்களையும் மனோன்மணீயத்தின் மூலம் படைத்துத்தந்திருக்கிறார்.

இந்த நான்கு படைப்பாளிகளின் புதிய தேரோட்டமே இருபதாம் நூற்றாண்டின் கவிதைப் போக்குகளுக்கு முன்னோட்டமாக அமைகின்றது என்று குறிப்பிடலாம்.

★★★

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மற்றொரு தாக்கத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். உ.வே.சாமிநாதையர், சி.வை.தாமோதரம்பிள்ளை ஆகியோரின் சங்க இலக்கியப் பதிப்பு முயற்சிகளும், வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியார், ஜி.சுப்பிரமணிய அய்யர் முதலிய அறிஞர்களின் புதுப்பார்வைகளும் இருபதாம் நூற்றாண்டின் படைப்பாக்கங்களுக்கும் மொழி விடுதலை, நாட்டு விடுதலை எண்ணங்களுக்கும் உணர்வூட்டிகளாக விளங்கின என்பதையும் நினைவில் கொள்ளலாம்.

புதிய அரசியல் விழிப்புணர்வு, கல்வி விரிவாக்கம், சமய வாழ்வில் மாற்றம், சாதிய எழுச்சி, பெண்கல்வி, பொருளாதாரச் சூழல் ஆகிய கூறுகளும் இருபதாம் நூற்றாண்டின் இலக்கியம் புதுமைப்படுவதற்கு வழிவகுத்தன என அறிஞர் க.பஞ்சாங்கம் மேலும் சிலகாரணிகளை முன்வைக்கின்றார்.

இந்த மாபெரும் பின்புலத்திலிருந்து தமிழ்க் கவிதையின் இரண்டு ஒளி ஞாயிறுகள் தகத்தகாயமாக வெளிப்பட்டன. ஒருவர் சுப்பிரமணிய பாரதியார்; மற்றொருவர் பாவேந்தர் பாரதிதாசன்.

‘தமிழகம் தமிழுக்குத்தகும் உயர்வளிக்கும்
தலைவனை எண்ணித்தவம் கிடக்கையில்
இலகு பாரதிப்புலவன்தோன்றினான்’

என்பார் பாரதிதாசன். ‘யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்’ என்று முழங்கும் மொழிப்பற்றும், ‘நெஞ்சு பொறுக்குதில்லையே’ என்று மனித சமூகம் பற்றிய தீவிர ஆவேசமும், ‘சுதந்தர தேவி நின்னைத் தொழுதிடல் மறக்கிலேனே’ என்று விடுதலைத் தாகமும், ‘காக்கைகுருவி எங்கள்ஜாதி’ என்று இயற்கை நேசமும் திரண்ட கவிதைக் களஞ்சியமாக நமக்குக் கிடைத்தார் பாரதி (1882–1921).

விடுதலை வேள்விக்குக் குறியீடான ‘பாஞ்சாலி சபத’மும், ஒரு தத்துவத் தேடலின் கவிதைக் கோலமான ‘குயில்பாட்டு’ம் மனித உறவுகளின் நேச இழைகளை நெசவுசெய்த ‘கண்ணன்பாட்டும்’ பாரதியின் நிரந்தரநினைவுச் சின்னங்களாக நிலைக்கின்றன.

ஆன்மிக அலைகள் அதிரஒலிக்கும்போதும், ‘எதனூடுநின்றோங்கும் அறிவு ஒன்றே தெய்வம்’எனப்பேசும் பகுத்தறிவின் குரல் பாரதியிடம் எழுகிறது. தமிழர் வாழ்வின் அவலம், ‘விதியே விதியே தமிழ்ச் சாதியை என்செய நினைத்தாய்?’ என்ற வினாவுக்குள் தீராக் கவலையாய்த் திரள்கிறது. இத்தனைக்கும் அப்பால்,

“பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா
பேசும் பொற் சித்திரமே”

என்ற சின்னத்தளிரின் பொலிவில் – அழகியலில் நம்மைத் தேன்துளி தூவிச் சிலிர்க்கவைக்கிறது பாரதி கவிதை. பாரதி நம்முள் அழியா அழகாய் அமர்ந்து கொள்கிறார்.

புதுமையின் சிங்க ஏறாகியபாரதிதாசன் (1891–1964) தொடக்க நாட்களில் கவிதையின்பால் ஈர்க்கப்பட்டாலும் ‘சுப்பிரமணியர் துதியமுது’ போன்ற படைப்புகளில் ஈடுபட்டிருந்தார். புதுவைக்கு

வந்த பாரதியாரின் உறவு அவரைப் புதிய திசைகளில் பயணிக்க வைக்கிறது.

“பாடலில் பழமுறைபழநடை என்பதோர்
காடுமுழுதும் கண்டபின் கடைசியாய்ச்
சுப்பிரமணியபாரதி தோன்றியென்
பாட்டுக்குப் புதுமுறை புதுநடை கட்டினார்”

என்று பாவேந்தரே தெரிவித்திருக்கிறார். சுயமரியாதைக் கவிஞராகச் சுடர்வீசி எழுமுன் சுதந்தரகீதங்கள் பாடியராகப் பாரதிதாசன் விளங்கியதுண்டு.

‘கன்னலடா எங்கள் காந்தியடிகள் சொல்’ என்று கதர் ராட்டினப்பாடல்கள் இசைத்த கவிஞர் 1926, 27 வாக்கில் சுயமரியாதை இயக்கச் சூறாவளியின் வசப்படுகிறார். பகுத்தறிவுப் போர் முரசாக மாறுகிறார். கடவுள் மறுப்புக் கவிதைகள் எழுகின்றன. ‘சாணிக்குப் பொட்டிட்டுச் சாமி’ என்பார் செய்கைக்கு நாணம்கொள்ளும் படி நவிலும் பாடல்கள் பிறக்கின்றன. “தொண்டு செய்து பழுத்தபழம்” என்று பெரியாரை உளமுருகப்பாடும் உன்னதவரிகள் அவரிடம் உருவாகின்றன.

பாவேந்தரின் தமிழ்மொழி குறித்த பாடல்கள் தமிழ்நாட்டில் பேரெழுச்சியை உருவாக்கிய வரலாற்றை ஒருபோதும் மறக்கமுடியாது.

“தமிழுக்கும் அமுதென்றுபேர் – அந்தத்
தமிழ் இன்பத் தமிழெங்கள் உயிருக்குநேர்”

என்று தமிழைத் தமிழரின் உயிராக்கினார்.

“தனிமைச் சுவையுள்ள சொல்லை – எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாம் கண்டதில்லை”

என்று தமிழைப் பெருமிதமாக்கினார்.

நாடு, மொழி, பெண்விடுதலை, தொழிலாளர் உரிமை எனப் புதிய பாடுபொருள்களைக் களமாக்கிக்கொண்டவர் பாரதிதாசன். அத்துடன் உயிர்ப்புள்ள பகுத்தறிவுச் சிந்தனைகளையும் அழுத்தமாக உரைத்தவர் பாரதிதாசன்.

‘இசையமுது’ பாடல்களில் முதன்முறையாக வண்டி ஓட்டுபவன், பூக்காரி, விறகுவெட்டி, நெசவுத்தொழிலாளி, மாடு மேய்ப்பவன் என எளிய மக்கள் இலக்கியத் தலைவர், தலைவிகளாக வெளிப்பட்டனர்.

‘மண்ணுக்கும் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை?’ எனப் பெண்ணுலகுக்காக வாதாடியவர் பாரதிதாசன். அவருடைய கவிதை நாயகிகள் அனைவரையும் அறிவின் ஒளிபடைத்த ஆற்றல் நங்கையராகப் படைத்தவர் பாரதிதாசன்.

‘ஒருபொருள் தனி எனும்
மனிதரைச் சிரிப்போம்.’

என்று பொதுவுடைமைப் பண்ணிசைத்த கவிஞராய்ப் பாவேந்தர் திகழ்ந்தார்.

அவருடைய ‘புரட்சிக்கவி’ நிகரில்லாத படைப்பு. ‘குடும்பவிளக்கு’ தமிழ்ப்பண்பாட்டுக் காவியம். அக்காவியத்தில் அவர் வரைந்த, ‘முதியோர்காதல்’ இலக்கியப் படைப்பின்சிகரம். ‘அழகின்சிரிப்பு’ இயற்கையின் சொல்லோவியம்.

பாரதிதாசன் தமிழ்மரபுகளின் வற்றாச்சுரங்கம்.

★★★

பாரதி மரபின் ஒருகிளை புரட்சிக்கவிஞர் என்றால் அதன் மற்றொரு கிளை என நாமக்கல் கவிஞர், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை ஆகியோரைக்குறிப்பிடலாம்.

தேசிகவிநாயகம்பிள்ளை (1876–1954) பாரதிக்கு முன்பிறந்து அவருக்குப் பின்னும் வாழ்ந்தவர். இவருடைய முக்கியமான நூல்கள் மலரும் மாலையும், ஆசியஜோதி, உமர்கய்யாம் பாடல்கள் என்பன. மென்மையும், அமைதியும் இவர் கவிதை இயல்பு.

சிறுவர் இலக்கியத்துக்காக என்றும் நினைவு கூரப்படுபவர் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை.

"அப்பா எழுந்திரையா
அரசே எழுந்திரையா
கொக்கொக்கோ என்று
கோழி அதோகூவுதுபார்" என்றும்,

"தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு – அங்கே
துள்ளிக்குதிக்குது கன்றுக்குட்டி
முத்தம் கொடுக்குது வெள்ளைப்பசு – மடி
முட்டிக் குடிக்குது கன்றுக்குட்டி" என்றும்

குழந்தைகள் குதூகலிக்கப் பாடியவர் கவிமணி.

உமர்கய்யாமின் பாடல்களை உயிரொழுக மொழிபெயர்த்துத் தந்தவர் கவிமணி.

"எழுதிச் செல்லும் விதியின் கை
எழுதி எழுதி மேற் சொல்லும்"

என்று பச்சைத் தமிழில் அந்தப் பாடல்களைத் தந்தவர்அவர்.

"கல்லின் கதைகள் எல்லாம் – இரு
காது குளிரக் கேட்பேன்
புல்லின் பேச்சும் அறிவேன் – அதைப்
புராணமாகவடிப்பேன்"

என்று பண்பார்ந்த கவியுளத்தைப் பார்வைக்கு வைக்கும் கவிமணி தமிழின் இனிமைகளைத் தொகுத்த களஞ்சியம்.

நாமக்கல் கவிஞர் (1888 – 1972) பாரதியின் தேசியமே வடிவெடுத்தவர்.

"திலகர் விதைத்த விதை பாரதியாக முளைத்தது; காந்தி தூவிய விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது" என்பார் ராஜாஜி.

நாமக்கல் கவிஞர் காந்தியக் கவிஞர் என்றும் அறியப்படுபவர். இவருடைய கவிதைகளில் காந்தியடிகளைக் குறித்தெழுதிய கவிதைகள் தனிச்சிறப்பு வாய்ந்தவை.

"கவிபாடிப் பெருமை செய்யக்
கம்பனில்லை
கற்பனைக் கிங்கில்லையந்தக்
காளிதாசன்"

என்று தொடங்கும் காந்தி புகழ்ப்பதிகம் மிகவும் அருமையானது. தேசபக்தர்கள் தெருவெல்லாம் சுதந்தரப் போராட்டத்தில் முழங்கிய பாடல்:

“கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமொன்று வருகுது
சத்தியத்தில் சித்தம் கொண்ட
சுத்தர்யாரும் சேர்குவீர்”

நாமக்கல் கவிஞரின் மற்றொரு புகழ் பெற்ற பாடல் தமிழனின் பெருமிதத்தை வளர்க்கக்கூடியது.

“தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனது மொழியாகும்
அன்பே அவனது வழியாகும்.”

★★★

பாரதி மரபில் சுத்தானந்த பாரதியார், ச.து.சு.யோகியார், பெரியசாமித் தூரன், திருலோகசீதாராம், அ.சீனிவாசராகவன், தமிழழகன், சோமு, ரகுநாதன், தமிழ்ஒளி, கம்பதாசன் ஒருபெரும் மரபுப் பட்டாளம் தொடர்ந்தது.

திராவிட இயக்கக் கவிஞர்கள், பொதுவுடைமைக் கவிஞர்கள், பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்கள் கவிதை மணிக்கொடியை ஏந்தி நடந்தனர்.

கண்ணதாசன் ஒரு தனித்தடம் வகுத்து – திரைப்பாடல்களின் பொங்குமாங் கடலானார். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் கிராமிய ஒயிலும் சந்தச்சிந்தும் கலந்து சிந்தை கவர்ந்தார்.

1934 முதல் புதுக்கவிதை என்னும் சோதனை முயற்சி பாரதி தடத்தில் தொடர்ந்து – பின்னர் ஒரு பிரளயப் பெருக்காக வளர்ந்து வருகிறது.

இவற்றின் விரிவை என் ‘இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை’ (2006 உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்), ‘புதுக்கவிதை – வேரும்விழுதும்’ (2021 மணிவாசகர் பதிப்பகம்) நூல்களில் காணலாம்.

கவிதை நதி எல்லை காணாமல் ஓடிப்பெருகிக் கொண்டே இருக்கிறது. நூற்றாண்டுகளைத் தாவிக் கடந்தபடி...

இறையியலும் மெய்யியலும்

வே.மு.பொதியவெற்பன்

"இருக்குகை விளக்குநூல் தத்துவம் என்ப
இயக்கநூல் சக்திநூல் எனப்பெயர் பெறுமே
உளநூல் தத்துவ நூலொடு ஒக்கும்"

– மனோன்மணியம் சுந்தரனார்
[நூற்றொகை விளக்கம்]



“ஒரு சமூக விஞ்ஞானம்: தத்துவம்

தத் = அது + துவம் = நீ = தத்துவம்

=உண்மை, உத்தம இயல்பு = இயற்கை சமூகம்

மனிதன் அளாவிய துறைகள்:

1.பொருளாதாரம் (அடிப்படை / அன்றாடம்),

2.சமூகம் (சமூக நிருவாகம் / சமூக உறவுகள்),

3.பண்பாடு (உலகுக்குரியது / அப்பாலைக்குரியது),

= பண்பாட்டுத் துறையில் உள்ளவை:

கலைகள், அன்பு, பாசம், ஒழுக்கம், அறம், நீதி, நியாயம், அழகியல், ஆன்மிகம், சமயம், தர்க்கம், கருத்தியல்கள் இவை அனைத்தையும் உட்கொண்டு பொதுமையாக இருப்பது தத்துவம்”



– முப்பால்மணி ('தமிழகத் தத்துவம் உலகாயதம்')

வழக்குச் சொல் – 'பட்டாங்கில் உள்ளபடி' ஒளவை

எங்கிருந்து தொடங்குவது என்பது முகாமையல்லவா? ஆமிதனை நாம் இந்திய மெய்யியல் வரலாற்றின் காரணிகளில் இருந்துதானே தொடங்கியாக வேண்டும்.

என் தமிழ்மெய்யியல் ஆய்வு முன்னோடி அவர்களே இதற்கும் அடியெடுத்துக் கொடுக்கட்டுமே:

1. பழைமைக் கோட்பாடு (Orthodoxy)
2. மறுப்புக் கோட்பாடு (Hetrodoxy)

"இந்திய மெய்யியல் வரலாறு இரண்டு கூறுகளைக் கொண்டது. ஒன்று பொருள்முதலியல் என்னும் மறுப்புக்கோட்பாடு (Hetrodoxy); மற்றது கருத்துமுதலியல் எனும் பழைமைக்கோட்பாடு (Orthodoxy). இவ்விரண்டிற்கும் நடந்த போராட்ட வரலாறே இந்திய மெய்யியல் வரலாறு. அந்தப் போராட்டத்தின் பின்விளைவுகளே இந்தியாவில் சமயங்களின் தோற்றங்களாகும். மெய்யியற் கோட்பாடுகள் பெற்ற நிறுவன வடிவமே சமயங்கள். அதனால் சமயங்கள் வேறு: மெய்யியல் வேறு என்பது புலப்படும்.

இதனை, "மெய்யியல் (Philosophy) எனப்படுவது வேறு. சமயம் (Religion) எனப்படுவது வேறு. முன்னது பகுத்தறிவையும் சிந்தனைகளையும் தடையின்றிப் பயன்படுத்தி உயிர் மற்றும் இயலுலகின் [(உள் பொருளின்) (existance)] இயல்பை ஆராய்ந்து முடிவுகாணுவது. பின்னது வாழ்க்கையின் குறிக்கோளை அடையும் நோக்குடன் ஒரு முழுமுதற் கடவுளைப் பற்றுக்கோடாகக் கொண்டு அதன் நம்பிக்கையின் அடிப்படையில் அக்குறிக்கோள்களை அடைவதாகக் கூறும் வழிகளைநல்குவது. எனவே மெய்யியல் ஆய்வின்முடிவு வேறு; சமயத்தின்முறை முடிவுவேறு." என கு.சா.ஆனந்தனின் விளக்கம் தெளிவுபடுத்தும்.

க.நெடுஞ்செழியன் ('தொல்காப்பியர் – திருவள்ளுவர் காலமும் கருத்தும்')

இறையியல் (Theology) வேறு, மெய்யியல் (தத்துவம் – Philosophy) வேறே. எனினும் இவை துல்லியமாக விதந்தோதி இனங்காட்டப்படாமல் இரண்டுங்கலந்த மயக்கமாகவே தத்துவம் எனும் பெயரில் இங்கே தலைமயங்கியே காணக்கிடப்பனவாயின.

தத்துவம் தெரிவியல் × சமயம் புரிவியல்

"இந்தியத் திருநாட்டில் தத்துவம் என்பது மதவியல் கலந்து காணப்படுகிறது என்பர் மேலைப்புலத்து மேதை மாக்சுமில்லர். தத்துவம் ஆராய்ச்சியையும் (Theory) சமயம் நடைமுறையையும் வலியுறுத்துவன." சோ.ந.கந்தசாமி ('இந்தியத் தத்துவக் களஞ்சியம்':2)

"ஞானத்தின் மேல் உள்ள பற்றே தத்துவ ஞானம் எனப்படும். அது உள்பொருள் தன்மை பற்றிய அறிவுமுதல் ஆராய்ச்சி (Reasoning enquiry). இந்தியாவில் பிரிக்க இயலாதபடி இணைந்த சமயத்தின் ஒரு பகுதியாய்த் தத்துவஞானம் விளங்குகிறது". டி.எம்.பி.மகாதேவன் ('இந்துசமயத் தத்துவம்')

இருவர் பார்வைகளுமே 'அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன ஓம்பலும் விலக்கியன விலக்கலுமாம்' என்னும் பரிமேலழகர் உரைமொழி ஆதிக்கம் போல சமயத்தின் ஒரு பகுதியாகத் தத்துவத்தை அடக்க முயல்கின்றன. அல்லாமலும் தத்துவம் தெரிவியல் (Theory), சமயம் புரிவியல் (Practice) என்பது ஏற்புடைத்தன்று. மதமெனில் சித்தாந்தம், சமயமெனில் அதற்கான நிறுவனம் எனலே ஏற்கற்பாலதாம்.

• **சமயக்கணக்கர் தம் ஆதிக்கத்தின் கீழ்க்கொணரும்**

திட்டமிட்ட திருகுதாளத் 'திருவிளையாடல்கள்'

~~~~~~

"சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும்; வேதாந்தம், சித்தாந்தம் முதலிய மதங்களிலும் லக்ஷியம் வைக்க வேண்டாம்." இராமலிங்கம் (22.10.1873 அன்று சித்திவளாகத்தில் சன்மார்க்கக் கொடி ஏற்றி ஆற்றிய உரையில்)
~~~~~~

"தியாலஜி என்ற இறையியலையும் பிலாசபி என்ற தத்துவத்தையும் ஒன்றாய்ப் போட்டுக் குழப்பும்நிலை தமிழகத்தில் இருந்து வருகின்றது. மலைக்கும் மடுவுக்கும்; இருளுக்கும் பகலுக்கும் ; மாயைக்கும் யதார்த்தத்துக்கும் உள்ள முரண்களுக்குச் சற்றும் குறையாதது இறையியலுக்கும் தத்துவத்துக்கும் உள்ள வேறுபாடு."

"நம்பிக்கையையும் விசுவாசத்தையும் அடிப்படையாகக் கொண்டு அடிமைகளைக் கட்டமைப்பதே இறையியலின் பண்பு. ஆனால் தத்துவம் சந்தேகத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சியின் மூலமாக இந்த உலகை விளங்கிக் கொண்டு தன்வயப்படுத்துவது."

பொ.வேல்சாமி ('வைதிகமும் திருமந்திரமும்'/'கவிதா சரண்')

"சுருக்கமாகச் சொன்னால் தியாலஜி தேடலற்ற அடிமைகளை உருவாக்குவது. பிலாசபி விடுதலை உணர்வுபெற்ற மனிதர்களை உருவாக்குவது. தமிழ்ச்சமூகத்தில் இதனை இனங்கண்டு வெளிப்படுத்தியவர்கள் இருவர். ஒருவர் ஈ.வெ.ரா பெரியார், இன்னொருவர் அறிஞர் வையாபுரிப்பிள்ளை. பெரியார் மதத்திலிருந்து தமிழை விடுவிக்காமல் தமிழன் விடுதலை உணர்வு பெறமாட்டான் என்றார். வையாபுரிப்பிள்ளை நமது 'ஞான' நூல்கள் தேங்கிப்போன குப்பைகள் என்றார்."

வையாபுரியார் கூற்றாக வேல்சாமி சுட்டுவது அது பயின்றுவரும் உரிய பனுவற் சூழமைவு புலப்படுமாறு எடுத்தாளப் பெறவில்லை தானே?

வடமொழி, இலக்கியப் பரப்பின் மீதும் 'இந்து' எனும் கருத்தாக்கத்தின் மீதும் அவர் பெருங்காதல் கொண்டிருந்தார் என்னும் தொ.பரமசிவன், 'மனுஸ்மிருதி பாரதநாடு முழுவதிலும் உள்ள இந்து சமயத்தினர் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதே' என்பதனையே திருக்குறள் விளக்கத்துக்கான முன் நிபந்தனையாக வைக்கிறார் எனத்தொடர்வார். ('தமிழாராய்ச்சியின் வளர்ச்சி') இத்தொடர்பில் நோக்கையில் வையாபுரியாரின் மெய்காண்முறைக்கு முரண்பட்டதாகவே காணக்கிடக்கின்றது மேற்கண்ட வேல்சாமி எடுத்துரைப்பு!

'மந்தைகள்' உருவாக்கப்பட்டனவே தவிர; விடுதலை பெற்ற தன்னிலைகள் உருவாகாமல் தடுக்குமுகமாகத் தத்துவச்சிந்தனைகூட என்பதுங்கூட இங்கு தியாலஜியாக மாற்றப்பட்டதெனத் தொடரும் வேல்சாமி அதன் விளைவாகத் தத்துவத்தின் அடிப்படையான 'ஐயம்' கொள்வதும் ஆராய்ந்து முடிவு செய்வதும் புறந்தள்ளப்பட்டு (மூட) நம்பிக்கை கொள்வதும் அடிமை மனப்பான்மையில் சுகங்காணலும் தத்துவத்தின் பெயரால் நிலைநாட்டப்படலாயின என்கின்றார். ('பொற்காலங்களும் இருண்ட காலங்களும்).

இந்தியச்சூழலை முன்வைத்தும்; ஈழச்சூழலையும் அகப்படுத்தியதாகவும்; சோவியத் இந்தியவியலார் பார்வை ஆகவும் இத்தொடர்பில் முன்னிறுத்தப்பட்ட வெவ்வேறு தரப்புகளையும் ஒத்துறழ்ந்து காண்போம்:

"இங்கிருந்த வருணாசிரமம் அறிவியல் வளர்ச்சியை முடக்கியகதை நாமறிவோம். காலனிய நடவடிக்கைகள் இத்துடன் இணைந்தன. இதன் விளைவாக மேலை மரபில் ஏற்பட்ட தத்துவ வளர்ச்சிக்கு இணையாக இங்கே தத்துவம் வளரவில்லை. மதவியலில் இருந்தும் மேலைத்தத்துவம் விடுபட்டதுபோல் இந்தியத் தத்துவம் இன்றுவரை விடுபடவில்லை." அ•மார்க்ஸ் ('பொதிகை'2000 பொதியவெற்பன் பொன்விழா மலர்)

"ஐரோப்பாவில் சமயவியலும் தத்துவயியலும் தனித்தனியே இயங்கி வந்தன. இனக்குழுப் பண்பு மேவியிருந்த எமது மரபில் எல்லாவற்றினூடும் எல்லாமும் இழையோடி அதிக பேதம் இருந்ததில்லை." ந•இரவீந்திரன் ('மதமும் மார்க்சியமும்': தமிழ்ப்பண்பாட்டுப் பார்வை)

"இந்தியாவின் தத்துவச்சிந்தனை மதக்கருத்துகளுடன் நெருக்கமாக இணைந்திருந்த

போதிலும் இடைக்காலத்தில் (கிபி 6 to 12 ஆம் நூற்றாண்டு) அது சார்பற்ற அரசியல் துறையாகப் பிரியலாயிற்று." கொ.அ.அன்தோனவா: கி•ம• போன்காரத் லேவின் ('இந்திய வரலாறு').

௨. அந்தங்களின் அடையாள அரசியல்
மதவாத × எதிர்மரபு இருபக்கத் தவறுகள்

"இந்திய மரபில் கலைச்சொல் குழப்பங்கள் நிறைய உண்டு. அதனைத் தெளிவுபடுத்தாமல் தத்துவம் அதாவது மெய்யியல் சார்ந்த உரையாடல் தெளிவை உருவாக்காது. சான்றாக, சித்தாந்தம், வேதாந்தம், தத்துவம், கருத்தியல், கருத்தாக்கம், கோட்பாடு, மெய்யியல், மெய்யறிவு அனைத்தும் ஒற்றைப்பொருளில் பாவிக்கப்படுகிறது. சித்தாந்தம் என்பது சைவ மெய்யியல். வேதாந்தம் என்பது வைதீக மெய்யியல். பலரும் தத்துவம் என்பதற்கு சித்தாந்தம் என்பதையே பயன்படுத்துவதைக் காணலாம்.

தத்துவம் என்பது வடமொழியில் 'பற்றிப் பிடித்தல்' என்ற பொருளைக் கொண்டது என்றால், தமிழில் மெய் சார்ந்ததே மெய்யியல். இச்சொல்லே பொருண்மைத்தன்மை வாய்ந்தது. மெய் என்பது உடல், உண்மை இரண்டையும் குறிப்பது. தமிழ்மொழியில் அடிப்படை அறிதலில் உள்ள வியத்தகு பொருண்மையை வெளிப்படுத்துவதாக உள்ளது. பக்தி இயக்கமே தமிழ் மெய்யியல் மரபை சமயச் சிந்தனையாக, இறையியலாக குழப்பியுள்ளது என்பதே எனது கருத்து. தத்துவம் என்பதைவிட மெய்யியல் என்பதே தமிழில் பொருத்தமான சொல். அந்த மெய் என்பது அப்பாலை உண்மையைக் காண்பது அல்ல." ஜமாலன்

"சித்த அந்தம் › சித்தாந்தம்› கொண்டமுடிபு என்பார் பாவாணர். (கோட்பாட்டின் முடிபான அத்து. முடிவோ மாறக்கூடியது. முடிந்த முடிபோ தீர்மானகரமாகத் தீர்த்துக்கட்டியே கட்டமைக்கப்பட்டது. மற்றமையைத் தீர்த்துக்கட்டிக் கரைத்தே 'தீர்க்க ஸ்வாஹா' என விழுங்கித் தீர்ப்பதே அந்தங்களின் அடையாள அரசியலாகும்)

வேத அந்தம்› வேதாந்தம் › மறையீறு என்பார் திருமூலர்.

வேதாந்தம் எனும் கவைமொழி (Ambiguity) Š பெயரீடு இருவேறு பொருட் பயன்பாடு உடையதே. 1. வேதத்தின் அந்தமான உபநிடதம் எனும் கமுக்க அறிவு, 2. வேதத் தலைமை அதிகாரத்தை வலியுறுத்தும் 'சங்கரமாயை'.

பௌத்த நடுவழிப்பாதைகளாம் மெய்காண் முறை பலவும், எல்லைகள் சந்திக்கும் மத்திம தளத்தில் எதிர்வுகளைப் புணர்வித்த வண்ணமே நம்மில் புதுவெளிச்சம் பாய்ச்சியே எரிகொளுவும் மதுகை பெற்றனவே! மற்றமையை மறுதலிப்பனவாகவும்; ஏனைப்பிற இறையியல்களைக் கபளீகரம் செய்வனவாகவும்: பல்வேறு பிரிவுகளிடையே முரண்பாடில்லை என அவ்வவற்றின் சிறப்பியல்புகளைப் புறமொதுக்கிச் சாராம்சப்படுத்தி அடையாள அழிப்பை மேற்கொள்வன ஆகவும் – வேதாந்தமும் சித்தாந்தமும் 'சமன்மயவியாக்யம்' எனப்படும் கூட்டிணைவுக் கோட்பாட்டையே தத்தம் பண்பாட்டரசியலில் முதன்மைப்படுத்தக் கூடியனவாகவே காணக்கிடக்கின்றன.

பகவத்கீதை: அடிப்படைக்குறைபாடும்;
அதன் குறைபாட்டிலிருந்தே கிளைக்கும் பயன்பாடும்

"இந்தியத் தத்துவத்துறையில் முரண்பாடுகளே வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தன எனக் கூறலாம்.மேலும் அத்தகைய முரண்பாடுகளே இல்லை என்று மறுக்கப்படும் இன்றைய சூழ்நிலையில் இதனை நாம் வலியுறுத்த வேண்டியுள்ளது." தேவிபிரசாத் சட்டோபாத்யாய

"முரண்பட்ட தத்துவங்களை முரணற்றவை போலச் சாமார்த்தியமாகக் காட்டுவதே கீதையின் வினோதமான அடிப்படைக் குறைபாடாகும். ஆனால் கீதையின் பயன்பாடே இந்தக் குறைபாட்டிலிருந்து தான் தோன்றுகின்றது." – டி.டி.கோசாம்பி

"(இந்துக்கள்) எல்லாருடைய இதயங்களும் 'இந்துமதம்' என்ற பட்டியில் அடைக்கப்பட்டுள்ளன. அப்படி அடைத்தவர் ஆதிசங்காராச்சாரி, ராமானுஜாச்சாரி, மத்துவாச்சாரி எனும் மூன்று பேர்கள் தாம்.

அதற்குப்பின் நாயன்மார்கள், ஆழ்வார்கள் எனப்பலரும் தோன்றிக் குடியானவன் தன் மந்தைகளைக் காப்பது போல் மக்களைச் சுயாதீனத்திற்குப் போகவிடாமல் வெகு எச்சரிக்கையாகக் காத்துவந்தனர். தற்போதும் காத்து வருகின்றனர்."

"வேத தர்ம சாஸ்திரங்கள் என்பதைத் தமிழ்மக்கள் இனிமேலாவது புரிந்துகொள்ள வேண்டியது மிகமிக அவசியமாகிறது. ஏனெனில் இவைகள்தாம், நமது சமத்துவ சகோதரத்துவ சுதந்தரத்தின் மகா கொடிய விலங்குகள். இதிலிருந்து விடுபடாத வரையில் நாம் மீட்சி அடைய மாட்டோம்"

"ஆதி காலடிச் சங்கராச்சாரி காலத்திலிருந்து உபநிசத்துக்களின் உண்மையை ஒளித்துவைத்து மாற்றாகப் 'பகவத்கீதை' என ஒரு நூலியற்றி இந்துமதத்தின் தலையில் கவிழ்த்த நாள் அந்த நாள்தான் தமிழ்நாட்டின், தலைகுனிவுக்குத் தாழ்வான நிலைக்குக் கடைக்கோல் கோலிய முதல்நாள்"
வெள்ளியங்காட்டான்

('புதுவெளிச்சம்' தன்னைத் தானறிய)

★ வேதாந்தக் கட்டுமானமும் அதன் அரசியலும்

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

•வேதாந்த பிரஸ்தானதிரயங்கள்:

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

[அறுதிப் பிரமாண அடிப்படை நூல்கள்:]

1.உபநிடதங்கள், 2.பிரம்ம சூத்திரம்,

3.பகவத்கீதை, 4.வேதாந்த அரசியல்

~~~~~`~~~~~~~~~~

"உபநிடதத்தின் பிரம்ம வேதாந்தம் தன்னைத் தானே நோக்கியது. அங்கு அது தனது புனித அதிகாரத்தையும் சுதர்மத்தையும் அறிவித்துக்கொண்டது. பகவத்கீதையின் வேதாந்தம் அரசியல்அதிகாரம் பேசிய சத்திரியரை நோக்கியது. பிராமண சத்திரிய கூட்டணியை அது அரங்கேற்றியது. சத்திரியருக்கு அவரது சுதர்மத்தை எடுத்துக் கூறியது. பக்தி வேதாந்தம் வெகுசனங்களை நோக்கியது. வெகுஜனங்களிடையில் சுதர்மக் கொள்கையை அது பரப்புவது."

"இந்த மூன்றும் ஒன்றை மறுத்து மற்றது தோன்றவில்லை. ஒன்று மற்றொன்றோடு: கூடி வளர்ந்துள்ளது. மூன்றினுள்ளும் நிலைபேறு பெற்ற கூறாக விளங்குவது சாதி – வருண ஏற்பாடே. வரலாற்றின் வெவ்வேறு காலங்களில் வைதிகம் மேற்குறித்த மூன்றினுள் ஏதாவதொன்றிற்கு அதிக அழுத்தம் தந்துவந்துள்ளது. நமது காலத்தின் இந்துத்துவம் வேதாந்தத்தின் மூன்று வடிவங்களையுமே ஒருசேரப் பயன்படுத்திவருகிறது. இது சனநாயகசக்திகளுக்கு மாபெரும் சவாலை ஏற்படுத்தியுள்ளது"
ந.முத்துமோகன்.

('இந்தியத் தத்துவங்களும் தமிழின் தடங்களும்')

~~~~~~

மதமரபு எதிர்மரபு இருதரப்போடும் ஒருசேரப் பொருதிடும் அறத்துயரான அறைகூவல்: வெவ்வேறு மரபூடும் ஒவ்வாமைப் பீடிப்புகள்:

~~~~~~

1. திராவிட இயக்க ஒவ்வாமை நோயிலிருத்தலாம் நவீனத்துவமரபு, 2. சங்கத்தமிழ்மரபையும் நவீனத்துவமரபையும் அறியொணா 'வட்டத்தொட்டி' ரசனைமரபு, 3. வாய்மொழிமரபைப் புறக்கணிக்கும் பண்டிதமரபு,' 4. இலக்கியமரபைப் புறக்கணிக்கும் நாட்டார்மரபு, 5. சித்தர்மரபை மறுதலிக்கும் ஆகமச்சைவ, வடகலை வைணவமரபு, 6. பக்தியிலக்கிய, கலைக்கொடைகளை அறியொணா வறட்டு நாத்திகமரபு, 7. மானுடவாழ்வில் மதவெளியின் வகிபாகத்தை மறுதலிக்கும் பகுத்தறிவின் பயங்கரவாதமரபு, 8. மரபு யாவற்றையுமே 'மதக்கறை'யின் பேரால் மறுதலிக்கும் நிராகரிப்பரசியலின்
~~~~~~

எதிர்மரபு. இத்தகைய வெவ்வேறு மரபுகளின் ஒவ்வாமைப் பீடிப்புகளுமே பக்கவாதத்தின் பாற்பட்டனவே.

இங்கேதான் எம்மனோர்க்கு ஓர் அறத்துயரான (தர்மசங்கடமான) அறைகூவலை எதிர்கொண்டாக நேர்கின்றது. இந்தியமரபு யாவற்றையுமே இந்துமரபாகத் திரிக்கும் ஜெயமோக வகையறாவின் இந்துத்துவ அரசியலோடும்; இந்தியமரபு யாவற்றையுமே இந்துமதக்கறையின் பேரால் முற்றாக மறுதலிக்கும் அ.மார்க்ஸ் வழியினரின் நிராகரிப்பின் எதிர்மரபு அரசியலோடும் அவ்வவற்றிற்கான முரண்பாடுகளின் இடத்தில் அவ்வவற்றை முன்னிறுத்தி, அவ்வவற்றை எதிர்த்துப் போராடியே தீரவேண்டியுள்ளது.

இத்தொடர்பில்தான் எம்மனோர் மதமரபின் இறையியல் சமன்வயமாக்கம்; எதிர்மரபின் பகுத்தறிவுப் பயங்கரவாதம் என இருதரப்பினரோடும் ஒருசேரப் பொருதிட வேண்டிய அறைகூவலை எதிர்கொண்டாக வேண்டியுள்ளது.

"ஞானார்த்தக் கலாச்சாரத்தின் மீது ஒட்டுண்ணி வியாபாரம் செய்கிற சூழ்ச்சிக்காரர்கள், அவர்களைத் தாக்கும் போது ஞானார்த்தக் கலாச்சாரத்தையும் சேர்த்துத் தாக்கும் அரசியல் மனோபாவக்காரர்கள் என்ற இரண்டு அணிகளையும் கலைஞன் அம்பலப்படுத்த வேண்டிய நிலை இன்று." பிரமிள்

"வேதாந்தத்திலிருந்து சிறிது விலகிப்போன அரவிந்தரையும் ரமணரையும் மீண்டும் முழு வேதாந்திகளாக்குவதற்கு முட்டிமுட்டி முயலுவார்களே தவிர விலகிப்போனார்கள் என அங்கீகரிக்கமாட்டார்கள். இதே போலத்தான் சித்தாந்திகளும்"

"விலகிப்போன சித்தரையும், ராமலிங்கரையும் மீண்டும் சித்தாந்தத்தில் மீளக்கொணர்ந்து கரைத்துவிடவே பாடாய்ப் படுவார்கள்." ந•முத்துமோகன். ('இந்தியத் தத்துவங்களின் அரசியல்')

இவ்வாறு வழிவிலகியோரையும் மீளவும் வேதாந்தத்திலோ, சித்தாந்தத்திலோ கரைத்துவிடப் படாத பாடெல்லாம் படுவது மதமரபென்றால் மறுபக்கத்தில்; இவற்றை அறவே மறுதலிக்கும் எதிர்மரபினர் சிலரும் வழிவிலகியோரையும் மதமரபிற்குத் தாமே தாரைவார்த்துத் தரலாயினர்:

மரபை அறியாமல் மரபை மீறமுடியாது

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

"நமது மரபு பற்றிய அறியாமையை நமது அறிவுஜீவிகள் வளர்த்துக் கொண்டுள்ளனர். இதில் அவர்களுக்கு வெட்கம் இல்லை, தன் மரபு பற்றி ஞானம் இல்லாத மேற்கத்திய சிந்தனையாளர்கள் யாருமில்லை."

"நமது மரபு முழுக்க முழுக்க, 'இந்துமதச்' சார்பானது, என்பது ராதாகிருஷ்ணன் போன்றோர் செய்த புரட்டு. அதை மதவாதிகள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அதைப் பெருவாரியோர் நம்பும்படிச் செய்வதில் அவர்கள் வெற்றியும் பெற்றுள்ளனர். அவர்களை எதிர்ப்பவர்களும் கூட அதை நம்புகின்றனர். உண்மையில் நமது மரபு சிக்கலானது. பல்வேறுபட்ட உள்ளோட்டங்களும் முரண்களும் உள்ளது. பல்வேறு கருத்துநிலைகள் பின்னி முயங்கி உருவானது. அதை ஒற்றைப்படையாக ஆக்குவது அதை மறுப்பதற்குச் சமம்தான்." நித்ய சைதன்ய யதி மேலதிகப் புரிதல்களுக்கு என் 'கருமை செம்மை வெண்மையைக் கடந்து••'நூலிற் காண்க.

3.மெய்ப்பொருள் காண்பதே அறிவு!

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

நம் அய்யன் சொல்லுமாப்போலே எப்பொருள் யார் யார்
வாய்க் கேட்பினும் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதே அறிவாமன்றோ?
மெய்யியலாளர் ழாக் தெரிதா சொல்லுமாப்போலே
சொல்லின் பொருள் எந்தக் கோட்டிலும் நிலைகொளாதே!
•இறைமறுப்பை மட்டுமா குறிக்கும்
நாத்திகம் என்னுஞ் சொல்?

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

"நாத்திகம் என்ற சொல்லுக்குக் கடவுள்இல்லை என்று பொருளில்லை. வடமொழி ஆதாரங்களில் பார்த்தபடி சொல்கிறேன். நாத்திகன் என்றால் புராண, இதிகாசங்களை, வேதங்களை, சாஸ்திரங்களை, தத்துவங்களைப் பகுத்தறிவினாலே விவகாரம் விவாதம் பண்ணுகிறவன் என்று அர்த்தம். இந்த விவாதம் ஆரிய புராண இதிகாசங்களைப் பெரிதும் பாதிப்பதால் யார் ஒருவர் தங்களுடைய ஆதாரங்களில் கைவைக்கிறார்களோ அவர்களை நாஸ்திகன் எனச் சொல்லிவிட்டார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது. கடவுள் நம்பிக்கைக்கும் இதற்கும் சம்பந்தமில்லே. ஆரிய கடவுள்களையும், ஆரிய சாஸ்திரங்களையும், மூடநம்பிக்கைகளையும் பகுத்தறிவுடன் எதிர்த்துக் கேட்டால் நீ நாஸ்திகன் அவ்வளவுதான். அந்தவகையில் என்னை நாஸ்திகன் என்று தைரியமாகச் சொல்லிக்கொள்கிறேன்." ஈ•வெ•ராமசாமி. ('குடிஅரசு')

இதிலவர் விவகாரங்களை விவாதம் பண்ணுகிறவன் என்கின்றாரே அவனையே,
'வேதவிரோத தர்க்க வியவஹாரிண' என்கின்றது வேதாந்தத்தரப்பு. அவனை நோக்கியே,
'சோதிக்க வேண்டா சுடர் விடடுளான் எங்கள் சோதி' என்கின்றது சைவசித்தாந்தத் தரப்பும்.
பெரியார் வாசிப்பின் அரசியலைத் துல்லியமாகக் காட்டுகின்றது பெரியாரின் இப்பார்வை.

"சிந்தித்தால், தர்க்கித்தால், சந்தேகித்தால் பாவம் என்று அழுத்திவைக்கப்பட்டிருந்தார்கள். எனவேதான் அறிவு வளரவில்லை. சமுதாயம் மேலோங்கவில்லை." ஈ.வெ.ராமசாமி ('விடுதலை'–12.1.1961)

•ஆத்திகத்தை மட்டுமா குறிக்கும்
ஆன்மிகம் எனுஞ்சொல்?

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

பூசுர அதிகாரமான ஆன்மிகம் 'மதம்பிடித்த'மதம்பீடித்த போலி ஆன்மிகமே! எந்தப்புள்ளியில் மதம் முடிவடைகின்றதோ, அந்தப்புள்ளியில் ஆரம்பிப்பதே மெய்மையான விழிப்புணர்வின் ஆன்மிகமாகும்.

சித்தமொழியில் அதுவே பேதம் யாவுமே கடந்த வெட்டவெளியாகும். வள்ளலார் வாக்கில் அதுவே,'தத்துவம் யாவுங் கடந்த தனிப்பொருள் வெளி எனும் அம்பலத்தே, பசித்திருந்து தனித்திருந்தே விழித்திருப்பதே'.

இந்தியமண்ணின் தலைமை அதிகாரமான வேதஅதிகாரம் வரை கேள்விக்குள்ளாக்கும் கிளர்ச்சியாளனையே ஆன்மிகத்தின் ஆதாரசுருதி என அடையாளப்படுத்துவார் ஓஷோ.

எல்லா மதங்களும் சவக்குன்றுகள்தாம். தாம் போதிப்பதெல்லாம் மதம்பற்றி அன்று சமயத்தன்மை பற்றியே என ஜே.கிருஷ்ணமூர்த்தியைப் போலவே தாமும் இத்தகு ஆன்மிகத்தையே சமயத்தன்மை (Religiousness) என்றே சுட்டுவார்:

"A religious mind has no nationality.lt <http://nationality.lt/> is not provincial;it does not belong to any Paticular organised group,it is not the result of ten thousand or two thousand years of prapaganda. It has no dogma,no belief.It is a mind that moves from fact

to fact. "- J •Krishnamoorthy ('The religious mind')

"Religion is the sigh of opperessed creature,the heart of the world just as it is spirit of the spiritless situation. It is the opium of the people" - Karl Marx ('Philosophy of the right')

இதுதான் ஆன்மிக மெய்ஞானமும், சமூகவிஞ்ஞானமும் சங்கமிக்கும் சங்கு முகமாகும்.

பல்வேறு சூழமைவில் பிரேமிள் ஆன்மிகம் பற்றிப் பேசியவற்றை இங்கே தொகுத்தளிக்கின்றேன். இறையியலைப் பூசனை (பூசாரி) மரபை வேரறுத்தே, ஞானமரபைப் பேணிப் புரக்கும் போதத்துக்கு என்னுள் வித்திட்டுப் பகுத்தறிவின் பயங்கரவாதத்தினின்றும் என்னைத் தடுத்தாட் கொண்டவர் அவரே. அவர் தரப்புகள்:

"பிரபஞ்ச விசாரணையின் பல்வேறு சொரூபங்களும் ஆன்மிகத்தின் நிழல்கள்தாம்." "நான் ஆன்மிகம் என்று சொல்லுவதற்கும் பழைமைவாதிகள் தங்கள் அதிகாரங்களைக் காபந்து பண்ண
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

உச்சரிக்கும் ஆன்மிகத்திற்கும் சம்பந்தமில்லை. அக,புற உலகின் அனுபவங்களையும் கொள்கைகளையும் முடிவுகளையும் இடைவிடாமல் கேள்விக்கண் கண்டபடி இருக்கும் விழிப்புநிலைதான் நான் குறிப்பிடும் ஆன்மிகத்தின் ஊற்றுக்கண்."

"தன்னை உள்ளபடி சந்திப்பதே ஆன்மிகம். உண்மையில் ஆன்மிகம் மரபுகளுக்கே அப்பாற்பட்டது. வீரியம் குறைந்தவன் மரபுகளுக்கே வசப்படுகிறான். மரபுகளை மறுப்பவர்ளுக்குத் தான் ஆன்மிக தர்சனம் ஏற்படும்" பிரேமிள்.

ரமேஷ் பிரேதன் தரப்புகளும் இத்தொடர்பில் ஒப்புநோக்கத் தக்கனதாம்!:

"ஆன்மிகம் என்பது அறிவின் பெருவிழிப்பு. மதம் கடந்தது. கடவுள் கடந்தது. உச்சபட்ச ஆன்மிகவாதி நாத்திகனாகத் தான் இருப்பான். மார்க்ஸை விடப் பெரிய ஆன்மிகவாதி யார்? மார்க்சியம் என்ற பொருள்முதல்வாதம் முன்வைக்காத ஆன்மிகத்தை எந்த மதம் முன்வைக்கிறது? எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்கவேண்டும் என்பதை விடப் பெரிய ஆன்மிகம் எது?"

"இந்திய ஆன்மிகம் என்பது போலியான ஆன்மிகமே. இந்த வர்ணாசிரமச் சாதியச் சமூகத்தில் பொதுமனம் என்பதோ பொதுமனிதர் என்பவரோ இல்லாதபோது இங்கு ஆன்மிகம் எப்படி உருத்திரளும்?"

"வர்ணாசிரமம் வேண்டாம் என்று சொல்வதுதானே சிறந்த ஆன்மிகம்? வருணாசிரமத்துக்குள் செயல்படுகிற தன்னிலையால் எந்தச் சூழ்நிலையிலும் ஆன்மிகத்தால் விளைகிற உச்சச்சிலிர்ப்பை (Juissance) [இதனை வடமொழியில் 'பூமா' என்ப. நாம் 'பேரின்பத் திளைப்பு' எனலாம்பொதி] அடையவே முடியாது" – ரமேஷ் பிரேதன் (விகடன் 'தடம்' – செப்.2019

4.பொதுவியல்பும் சிறப்பியல்பும்

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

ஒரு பக்கம் தத்துவம் சார்பற்ற அறிவியல் துறையாகப் பிரியலாயிற்றென்ற போதிலும், மறுபக்கம் அவற்றுக்குச் சமயமுலாம் பூசுகிற கைங்கர்யம் இங்கே காலகாலமும் தொடர்கதைதான். அவ்வாறு திட்டமிட்டே குழப்பும் 'லீலை'களாற் குழப்பிவிட்டே பிழையான புரிதல் நேருமாறு தாறுமாறாய்த் திசைதிருப்பலாயினர் மதவாதிகள். எனவே எந்தவொரு மெய்யியல், இறையியல் குறித்து அணுகத் தலைப்பட்டபோதிலும் ஒப்பிட்டும் உறழ்ந்தும் நோக்கிட வேண்டியுள்ளது. இத்தொடர்பில் தான் பொதுவியல்பு, சிறப்பியல்பு குறித்தும்; மொத்தநிலைப்படுத்தல் குறித்தும் விதந்தோதியே இனங் கண்டாக வேண்டியதாகின்றது.

இத்தகு கருத்தாக்கங்களை மெய்யியலுக்கு ஊடாக மட்டும் அல்லாது இறையியலுக்கு ஊடாகவும் நாம் கண்டடையைக் கூடியனவாகவே இவை காணக்கிடக்கின்றன. எனவே வையாபுரியார் ஞானமரபு முழுமையும் குப்பை என்றாற் போலாது பிரமிள் ஞானமரபைப் பேணி பூசனை (பூசாரி) மரபைப் புறக்கணிக்க வலியுறுத்தியதன் உட்கிடை இதுவே எனலாம்.

அ. சைவ சித்தாந்த நூலார்

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

"ஒவ்வொரு பொருளுக்கும் இருவகை இயல்புகள் உள்ளன. அவை பொதுவியல்பு சிறப்பியல்பு ஆகும். ஒரு பொருள் பிறபொருளோடு சம்பந்தப்பட்டு இருப்பதைப் பொருளின் தூலநிலை அல்லது தடத்த இலக்கணம் என்பர். ஒரு பொருள் பிறபொருளோடு சம்பந்தப்படாமல் தனித்துஇருப்பது சிறப்பியல்புஆகும். இவ்வாறு இருப்பதைச் சூக்கும நிலை அல்லது சொரூப இலக்கணம் என்பர்." கு.வைத்தியநாதன் ('சைவசித்தாந்தத் தடைகளும் விடைகளும் குறியீட்டுச்சொல்லகராதியும்') – இது சைவசித்தாந்த நோக்கிலான வரையறை.

ஆ. திருமந்திரநூலார்

"வேதமோ டாகமம் இறைவன் நூல்
ஓதும் பொதுவும் சிறப்புமென் றுள்ளன
நாதன் உரைஅவை நாடில் இரண்டந்தம்
பேதம் அஃதென்பார் பெரியோர்க் கபேதமே" – திருமூலர்
"வேத ஆகமங்களும், வேதாந்த சித்தாந்தங்களும்
இறைவனது மெய்ம்மொழிகளைக் கொண்டனவே.
வேதம் எல்லாச் சமயத்தவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய
பொதுக்கருத்துக்களைக் கொண்டது(?!). ஆனால் ஆகமம்
அந்தந்த சமயத்தவர்கள் சிறப்பாக மேற்கொள்ள
வேண்டிய விதிகளை எடுத்துமொழிவது."
"வேதம், ஆகமம் முறையே பொது, சிறப்பு எனப்பட்டன" – பாலூர் கண்ணப்பர் ('தமிழ் மந்திரம்')

இ. சிறப்பியம் என்னும் புலக்காட்சி

(வைசேஷிக தர்சனம்)

"பொதுநிலைக்கு எந்த அளவு சிறப்பு உண்டோ, அதைவிடக் குறையாத இன்னும் கூடுதலான சிறப்பு தனிநிலைக்கு உண்டு. இதை அறிந்திருந்தமையாலேயே அம்மெய்யியல் பள்ளி சிறப்பியம் என்னும் பெயர் கொண்டது."

பொருள்கள் தனித்தனி உருப்படிகளாக உள்ளதை விளங்கிக் கொள்வதற்கு,சிறப்புத்தன்மை என்னும் பொருள்திணை இன்றியமையாதது. பொது என்பதும் சிறப்பு என்பதும் ஒன்றையொன்று சார்ந்துள்ள சார்பு நிலைகள் எனச் சிறப்பியம் சொல்லும் விளக்கம் இயங்கியல் செறிவுடையது" – குணா ('வள்ளுவத்தின் வீழ்ச்சி'). – இது சிறப்பியம் எனப்பட்ட புலக்காட்சி நோக்கிலான பார்வை (வைசேஷிகம் என்னும் தர்சனநோக்கு)

ஈ. அகத்தியத் தருக்க நூற்பா

"தனி நிலையைச் சிறப்பு என்றழைத்திடும்' அகத்தியத் தருக்க நூற்பா', தனிநிலையான பொருள்களில் இருந்தவண்ணம் அவ்வப் பொருள்களில் விளங்கும் வேற்றுமையைப் புலப்படுத்திப் பலவாக நிற்கும் சிறப்புத்தன்மை என்னும் பொருளில்,

'மண்ணிய பொருளின் கண்ணவாய்
அவற்றின் வேற்றுமை தெரிப்பன
பலவாஞ் சிறப்பே எனச் சொல்கின்றது" – குணா

– இது'அகத்தியத் தருக்க நூற்பா' நோக்காகக் குணா எடுத்துரைப்பது.

உ. முரண்பாடுகள் குறித்த மாவோவிய நோக்கில்

ஒன்றன் சிறப்புத்தன்மை எதனால் நிர்ணயிக்கப்படுகின்றது என்னும் வினாவிற்கு மார்க்சிய நோக்கிலான விடையைக் காண்போம்:

"அகமுரண்பாட்டியல்பு ஒவ்வொரு பொருளிலும் உண்டு. எனவேதான் பொருள்களின் இயக்கமும் வளர்ச்சியும் ஏற்படுகின்றன. ஒரு பொருளில் உள்ள முரண்பாட்டியல்பு அதன் அடிப்படை வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணமாக இருக்கும் அதே வேளையில் இதரபொருட்களுடன் கொண்டுள்ள உறவுகளும் பாதிப்புகளும் இரண்டாம்நிலைக் காரணங்களாகின்றன".

"ஒவ்வொரு இயக்க வடிவமும் தனக்குள் தனியான முரண்பாட்டைக் கொண்டுள்ளது.இந்தச் சிறப்பான முரண்பாடு ஒரு பொருளை இன்னொன்றிலிருந்து வேறுபடுத்தும் தனித்தன்மையை உருவாக்குகின்றது."

"இயற்கையிலேயே பல இயக்க வடிவங்கள் ஒன்றைஒன்று சார்ந்திருப்பதுடன் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டதாகவும் இருக்கின்றன. ஒவ்வொரு வடிவத்திலும் சிறப்புத் தன்மை அதற்கு உரிய முரண்பாட்டாலேயே நிர்ணயிக்கப்படுகின்றது." மா சே துங் ('நான்கு தத்துவக் கட்டுரைகள்')

எதிர்மறைகளின் ஒற்றுமையாலும் போராட்டத்தாலும் ஆன முரணியக்கமாகவே எதிர்கொள்வதான முறைப்பாட்டையே இவை எடுத்துரைக்கின்றன.

ஊ. ஒப்பியல்நூலார் செல்வாக்குக் கோட்பாட்டில்

பொது மூலந்தேடுதல்,வேற்றுமை உணர்தல் என்பன ஒப்பியல் நூலார் செல்வாக்குக் கோட்பாட்டின் (influence Theory) பாற்பட்டனவே:

"ஒப்பிலக்கிய ஆய்வுசெய்யும் மாணவன் ஒப்புமைகளைக் கண்டறிந்து சொல்வதில் மட்டும் நிறைவடைதல் கூடாது. ஒப்புமைகட்கு ஊடாக மிக மெல்லியதாகக் காணப்படும் வேறுபாடுகளையும் காணவேண்டும் " ம.திருமலை ('ஒப்பிலக்கியக் கொள்கைகளும் பயில்முறையும்') ★

5. மொத்த நிலைப்படுத்தலும் ஒற்றை நிலைப்படுத்தலும்.

"மொத்த நிலைப்படுத்தல் என்பது வேறு. ஒற்றை நிலைப்படுத்தல் என்பது வேறு. மொத்த நிலைப்படுத்தல் வேறுபட்ட கூறுகளை ஒன்றிணைக்கிறது; அதே போது, அந்தக்கூறுகள்,தம் தனித்தன்மைகளை இழந்துபோவதில்லை; தனித்தன்மைகளோடு, அவற்றிற்குள்ளிருக்கும் – நடுவே இழையோடும் – பொதுத்தன்மைகளை முன்னிறுத்தி இணையும் ஒரு கூட்டமைப்பு, அது. இதற்கு மாறானது, ஒற்றை நிலைப்படுத்தல். இது, கூறுகளின் அல்லது பகுதிகளின் பிரத்தியேகத் தன்மைகளை அழித்துவிட்டு, அவற்றை ஒற்றைப் பரிமாணமாக ஆக்குவது. 'எல்லா நதிகளும் கடலை நோக்கியே பாய்கின்றன; எல்லா வழிகளும் என்னை நோக்கியே வருகின்றன' என்று கண்ணனும், அதுபோல இயேசுவும் சொன்னார்கள் என்றால், அது இதற்காகத்தான்." – தி.சு.நடராசன் ('தமிழின் அடையாளம்')

காட்டாக, அகப் புறச் சமயங்கள் என்பன அதனதன்
சிறப்பியல்புகளான் விதந்தோதப்பட்ட போதினும்
'அவை தம்முள் உடங்கியைந்து புணர்ந்த' எனவைங்கே
பேசி நிற்பர் சைவசித்தாந்த நூலார்.
மி(கை)க எளிமையான ஓர் எடுத்துக்காட்டு : 'கை'

கையில் விரல்கள் ஐந்தாம். கை அவற்றை கையகப்படுத்தியதே. எனினும் அந்த ஐந்துமே

சுட்டுவிரல், கட்டைவிரல், நடுவிரல், மோதிரவிரல், சுண்டுவிரல் என விதந்தோதற் பட்டாங்கே என்றுணர்க!

தமிழ் நல்ல புகழ் மிக்க புலவர்க்கு வேல்



உரையும் பாட்டும்...

முனைவர் ம.இராசேந்திரன்
மேனாள் துணைவேந்தர்

கலை, இலக்கியங்கள், காலங்களை இணைக்கின்றன. உரை என்பது ஒரு பனுவலைச் சமகாலப்படுத்துகிறது. "உரையும் பாட்டும் உடையோர் சிலரே" என்பது சோழன் நலங்கிள்ளியைப் பாடிய சங்க காலப் புலவர் உறையூர் முத்துக் கண்ணன் சாத்தனார் பாடல் வரி.

உலகில் பலர் வாழ்ந்து மறைந்தாலும்
உரையிலும் பாட்டிலும் வாழ்வோர்
பாராட்டப்படுவோர் சிலரே
என்று இந்தப் பாடல் வரிக்கு உரை சொல்கிறார்கள்.

இதில் இப்போதும் நலங்கிள்ளியும் உறையூர் முத்துக் கண்ணனும் உரை சொல்லியவர்களும் கூட வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கால வரிசையிலும் கருத்து நிலைகளிலும் முதல்நூல், வழிநூல், சார்பு நூல் என்று தமிழில் வகைப்படுத்துவர். கடந்த காலத்தை நிகழ் காலத்தோடு இணைப்பதும் வரும் காலத்திற்கு வழி காட்டுவதும் மொழியின் பணிகளாக இருக்கின்றன.

தேவைப்படும் கடந்த கால மரபினை, விழுமியங்களைக் கலை இலக்கியங்களின் வழியாக மொழி, காலம் காலமாக மக்களிடம் கொண்டு சேர்க்கிறது. அதற்குக் கடந்தகால கலை இலக்கியங்கள் நிகழ்கால மொழிநடையில் சமகாலப் பார்வையில் கலக்க வேண்டியுள்ளன. அதற்காகக் காலம்தோறும் கலை இலக்கியங்கள் தம்மைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டியுள்ளன. ஆகவே,

அவ்வக்கால மொழிநடையில் அறிஞர்கள் உரை எழுதி அவற்றைச் சமகாலப்படுத்துகிறார்கள். பொருள் கொள்ளும் தொடர்பும் தொடர்ச்சியும் அந்த உரைகளில் இருக்கும். ஒரு காலம் உரைதேவைப்படாமல் இருந்திருக்கலாம்.

"மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம் மகனார் கீரங்கொற்றனார்க்கு உரைத்தார்; அவர் தேனூர் கிழார்க்கு உரைத்தார்; அவர் படியங் கொற்றனார்க்கு உரைத்தார்; அவர் மணலூர் ஆசிரியர் புளியங்காய்ப் பெருஞ் சேந்தனார்க்கு உரைத்தார்; அவர் செல்லூர் ஆசிரியர் ஆண்டைப் பெருங் குமாரனார்க்கு உரைத்தார்; அவர் திருக்குன்றத்து ஆசிரியர்க்கு உரைத்தார்; அவர் மாதவனார் இள நாகனார்க்கு உரைத்தார்; அவர் முசிறி ஆசிரியர் நீலகண்டனார்க்கு உரைத்தார்."

என்பதைப்போல ஆசிரியர் மாணவர்க்குக் கற்றுத்தர உரை விளக்கம் பனுவலைச் சமகாலப்படுத்தியிருக்கும். ஒன்பது தலைமுறையாக வாய்மொழியாக வளர்ந்த உரை தான் இறையனார் அகப்பொருள் உரை. கம்பராமாயணத்திற்குக் காலம் காலமாக உரை விளக்கம் வாய்மொழியாகவே வந்திருக்கிறது.

"கம்பரையும் அவருடைய மாணாக்கரையும் அடுத்துப் பல பெயர்கள் இராமாயணத்திற்குச் சம்பிரதாயமாகவும் சாதுரியமாகவும் உரை கேட்டார்கள். அப்புறம் அப்பல பெயரையும் அடுத்துப் பற்பலர் பாடங்கேட்டார்கள். இந்தப் படி, அதன் பின்பும் காலக்கிரமத்தில் அனேகர் கர்ண பரம்பரையாக இராமாயணத்திற்கு உரைகேட்டு வந்தார்கள். கொஞ்ச காலத்திற்கு முன்பு அவ்வாறு கர்ண பரம்பரையாகப் பாடங்கேட்டுக் கிரமமாய்ப் போதிக்கத் தக்க வல்லமை பெற்றிருப்பவர்கள் ஆர் ஆர் என்னில், தென் தேசத்தில் வசித்திருந்த பெத்த பெருமாள் பிள்ளை என்பவரும், சீகாழி அருணாசலக் கவிராயரும், மயிலை சீனிவாசப் பிள்ளையும், சேதுபதியின் வக்கீலாகிய சோமசுந்தரப் பிள்ளையும், தஞ்சாவூர் ஸம்ஸ்தான வித்துவான் இராமசாமிக் கவிராயரும், தொல்காப்பிய வரதப்ப முதலியாரும், காலேஜ் திருவேங்கடாசல முதலியாரும், திருத்தணிகைச் சரவணப் பெருமாள் கவிராயரும், புதுவைக்குறள் வேங்கடாசல உபாத்தியாரும், காஞ்சீபுரம்

> **சங்க காலத் தமிழ் வழக்கு நின்றுபோய் வெகுகாலமாகி விட்டது. அதன் சிறப்பியல்புகளான இனிமை தெளிவு சுருக்கம் நேர்மை முதலிய பண்புகள் யாவும் பெரும்பான்மை இலக்கியங்களின்றும் நீங்கிப் பல நூற்றாண்டுகள் கழிந்துவிட்டன. இடைக்காலத் தமிழில் வடமொழிச் சொற்களும் வடமொழிக் காவிய மரபுகளும் தமிழிற் குடிபுகுந்தன.**

அருணாசல தேசிகரின் பிதாவாகிய சண்முகக் கவிராயரும், திருநீர்மலைக் காளிங்கராய பிள்ளையும் மற்றும் சிற்சிலருமே"(விநோதரச மஞ்சரி (1966) பக். 245.) என்று, இப்படியாக உரையின் வரலாறு தொடர்ந்திருக்கிறது.

மூல நூலுக்குப் பொருள் கூறும் பழைய உரைகளோடு உடன்பட்டும் முரண்பட்டும் அடுத்தடுத்து வரும் உரைகள் அமையும். அது பின் வரும் உரைகளுக்குச் சிறப்பினைச் சேர்க்கும். தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் உரைக்குப் பின் வந்த உரைகளும் திருக்குறளுக்கு ஒன்பது உரைகளுக்குப் பிறகு வந்த பரிமேலழகர் உரையும் திருவாய் மொழிக்கு 6000 படி, 9000 படி, 24000 படி உரைகளுக்குப் பிறகு 36000 படி எனும் ஈடும் சிவஞான போதத்திற்குப் பல உரைகளுக்குப் பின் வந்த சிவஞான பாடியமும் சிறப்படைந்தன. தனது நூலுக்குத் தானே உரை எழுதும் வழக்கம் வடமொழியில் உண்டு.

"வடநூலார் தாமே பதிகமும் உரையும் செய்வார்" (காரக படலம்3)

என்று பிரயோக விவேகம் கூறுகிறது. தமிழில் இவ்வழக்கத்தைத் தொடங்கி வைத்தவர் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் ஐயனாரிதனார். தண்டியலங்கார ஆசிரியர், தனது அணியிலக்கணத்திற்குப் பாடல்களைத் தாமே இயற்றிச் சான்று காட்டியுள்ளார். நாற்க விராசநம்பி 'அகப்பொருள் விளக்கத்திற்கு அவரே உரையும் எழுதியுள்ளார். தமிழறிஞர்

ரா. இராகவ ஐயங்கார், வெண்பாவில் எழுதிய பாரி காதைக்கு அவரே உரையும் தந்துள்ளார். பாவேந்தர் பாரதிதாசன், அவர் இயற்றிய புதிய ஆத்திசூடிக்கு அவரே உரையும் விளக்கமும் தந்துள்ளார். செகவீரபாண்டியனார் 'குமரேச வெண்பா' வுக்கு அவரே உரையும் தந்துள்ளார்.

மற்றவர் உரைக்கு மறுப்புரை தந்து தமது கருத்தை வலியுறுத்தும் உரைகளும் உண்டு. கூடவே ஒரு நூலை எதிர்த்து அதன் கருத்தை எதிர்த்து அந்த நூல் ஆசிரியரைக் கண்டித்தும் நூல்களும் உரைகளும் வந்திருக்கின்றன.

'இலக்கண விளக்கம்' நூலுக்கு(திருவாரூர் வைத்தியநாத தேசிகர் எழுதியது) மறுப்புரையாக சிவஞான முனிவர் "இலக்கண விளக்கச் சூறாவளி" எழுதியிருக்கிறார். வைத்தியநாத தேசிகர் விளக்கை அணைக்க, சிவஞானமுனிவர் சூறாவளியை உருவாக்கியிருக்கிறார். இதை சி.வை.தாமோதரம் பிள்ளை, "அநியாய கண்டனம்"என்று கண்டித்துள்ளார்.

பிறகு உரைக்கு உரை எழுத வேண்டிய தேவையும் ஏற்பட்டிருக்கிறது. பரிமேலழகர் உரைக்கு நுண்பொருள் மாலையும் சரவணப் பெருமாள் ஐயர், முருகேச முதலியார் (1885), இராமாநுசக் கவிராயர், கோ.வடிவேல் செட்டியார்(1919), அரசஞ் சண்முகனார், வ.மு.கோபால கிருஷ்ணமச்சாரியார் ஆகியோரின் விளக்க உரைகளும் வந்திருக்கின்றன.

சிலர் தமது உரைகளைச் செய்யுள் வடிவத்திலும் தந்துள்ளனர். "ஒரு செய்யுள் நூலுக்கு வசனத்தில் உரை இயற்றுவதோடு செய்யுள் உருவத்திலேயே உரை இயற்றுவதும் உண்டு. இது வட மொழியில் பெருவழக்கு. தமிழ் நூல்களிலும் சிவஞான போதத்துக்குரிய உதாரண வெண்பாக்களும், சித்தியார் முதலியனவும் உரைநிலையிலேயே உள்ளன. தேவாரப் பதிகங்களில் பாசுரம் முதலிய சிலவற்றிக்குப் பெரிய புராணத்தில் சேக்கிழார் உரை விரித்துச் சொல்கின்றார். இவற்றைப் போலவே திருக்குறளுக்கும் செய்யுள் உருவத்தில் உரையுண்டு, தனியே குறளுரை என்னும் பெயர் பெறாவிட்டாலும், அவை உரைகளின் தன்மையை உடையனவே"★ என்று உ.வே.சா. குறிப்பிடுகிறார். (திருவள்ளுவரும் – திருக்குறளும், ப. 8)

"தமிழ் இலக்கிய வரலாற்றில் இறையனார் அகப்பொருள் களவியல் உரையே முதல் உரையாக இருக்கிறது. வாய்மொழியாக வழங்கி வந்து பின்னர் எழுத்து வடிவம் பெற்றிருக்கிறது."

பாவேந்தர் பாரதிதாசன், குறுந்தொகைப் பாடல்கள் சிலவற்றை அகவற்பாக்களில் கவிதையாக்கியுள்ளார். கவிஞர் கண்ணதாசன் முத்தொள்ளாயிரப் பாடல்கள் சிலவற்றிற்குக் கவிதையில் விளக்கம் தந்துள்ளார். நற்றிணை குறுந்தொகை அகநானூறு ஆகியவற்றிற்கு மு.ரா. பெருமாள் முதலியார் செய்யுள் நடையில் உரை எழுதியுள்ளார்.

ஆசிரியர், மாணவர்களுக்கு வினா விடை முறையில் உரைத்தவை வழிவழியாக வந்து அதன்பின் எழுத்து உரையாகியிருக்கிறது. சொல்லுக்குப் பொருள் தருவதோடு உரை என்பது சொற்பொருள் விரித்தல், தமிழ் மரபு பேணுதல், இலக்கணக்குறிப்பு தருதல், பழைய பாடல்களை மேற்கோள் காட்டுதல், வினாவிடை முறையில் பொருளை விளக்குதல், கவிதை/செய்யுள் நடையில் உரை தருதல் எந்தக் கருத்தையும் தெள்ளத் தெளிய கூறுதல் என்று பிற்கால உரையாசிரியர்கள் உரைதர வழிகாட்டியிருக்கிறது இறையனார் அகப்பொருள் களவியல் உரை.

உரையாசிரியர்கள் பணியை, தமிழ் மீட்சி இயக்கம் என்று கூறுகிறார் எஸ். வையாபுரிப் பிள்ளை. "சங்க காலத் தமிழ் வழக்கு நின்றுபோய் வெகுகாலமாகி விட்டது." அதன் சிறப்பியல்புகளான இனிமை தெளிவு சுருக்கம் நேர்மை முதலிய பண்புகள் யாவும் பெரும்பான்மை இலக்கியங்களின்றும் நீங்கிப் பல நூற்றாண்டுகள் கழிந்துவிட்டன. இடைக்காலத் தமிழில் வடமொழிச் சொற்களும் வடமொழிக் காவிய மரபுகளும் தமிழிற் குடிபுகுந்தன. பலவேறு நல்லியல்புகளும் தமிழில் வந்து அமைந்தன. ஆனால் அவற்றோடு சில தீய தன்மைகளும் புகுந்துவிட்டன. சுருக்கம் நேர்மை என்ற இயல்புகள் இரண்டும் ஒழிந்து

போயின; அலங்காரங்களும் ஆடம்பரங்களும் தலையோங்கிவிட்டன.

வடசொற்கள் பெரும்பான்மை விரவித் தமிழ்ச் சொற்கள் சிறுகி வரத்தொடங்கின. இதனால் தமிழுக்கு இயற்கையாய் அமைந்திருந்த ஆற்றல் சிறுகலாயிற்று. நூற்பொருள் பெரும்பாலும் வடமொழிக்கு உரியனவாய் முடிந்தன. இதனால் தமிழ்க் கவிஞர்களின் புதுவது இயற்றும் ஆற்றல் தடைபட்டுப்போயிற்று. அக்காலத்துக் கல்வியாளர் சிலர், இந்நிலைமைக்கு வருந்தினர். தமிழின் பண்டை நிலையை உன்னியுன்னி அந்நிலையைத் திரும்ப எய்துதல் கூடுமா என்று கருதலாயினர்.

சங்கத் தமிழின் மீதும், அதன் நன்முறையைக் கைப்பற்றிய பெருநூல்களின் மீதும் பொதுமக்கள் பற்றுக்கொண்டு கற்கும் படி செய்ய வேண்டுமென்று எண்ணினர். அவற்றின் நல்லியல்புகள் தமிழில் மீண்டும் தழைக்க வேண்டுமென்று கருதினர். இந்நோக்கங்களைக் கொண்டு கல்வியில் தலைசிறந்தோர் சிலர் உழைத்து வந்தனர். சங்கத் தமிழுக்கு மீட்சியியக்கம் நிகழ்வதாயிற்று. இம் மீட்சியியக்கத்திற்கு ஓர் அறிகுறியாகச் சங்க இலக்கியங்களுக்கும் அவற்றோடொத்த பெருமையுடைய குறள் போன்ற பெருநூல்களுக்கும் செவ்விய உரைகள் எழுதப்பட்டன.'' (தமிழ்ச் சுடர்மணிகள் (1968) பக். 197, 198.)

தமிழ் இலக்கிய வரலாற்றில் இறையனார் அகப்பொருள் களவியல் உரையே முதல் உரையாக இருக்கிறது. வாய்மொழியாக வழங்கி வந்து பின்னர் எழுத்து வடிவம் பெற்றிருக்கிறது. அவ்வுரையை ஏதோ ஒரு வகையில் உரையாசிரியர்கள் பலரும் பின்பற்றி வருகின்றனர். களவியல் உரையின், தமிழ்மரபுபேணுதல், கருத்துத்தெளிவு, இலக்கணக்குறிப்பு ஆகியவற்றை இளம்பூரணர் பின்பற்றியுள்ளார். திருக்கோவையாருக்கு உரை எழுதிய பேராசிரியர் களவியல் உரையின் செய்யுள் போன்ற உரைநடை, வினாவிடை முறை, சொற்பொருள் விளக்கம், நயங்கூறல், அகப்பொருள் கருத்தை விளக்குதல் ஆகியவற்றைப் பின்பற்றியுள்ளார். தஞ்சைவாணன் கோவைக்கு உரை எழுதிய சொக்கப்ப நாவலர் களவியல் உரையின் உரைநடையைக் கையாண்டு நயம் கூறும் முறையைப் பின்பற்றியுள்ளார்.

இவ்வாறு தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்கள், சங்க இலக்கியம், திருக்குறள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், சமயத் தத்துவ நூல்கள் ஆகியவற்றுக்குக் காலம் தோறும் உரைகளும் விளக்கங்களும் தமிழுக்குக் கிடைத்து வருகின்றன.

அவ்வகையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள், தொல்காப்பியப் பூங்கா, சங்கத்தமிழ், குறளோவியம், திருக்குறள் உரை, சிலப்பதிகார நாடகக் காப்பியம், பூம்புகார் என்று கடந்தகால இலக்கண இலக்கியங்களைச் சமகாலப்படுத்திப் பொதுமக்களிடம் கொண்டு சேர்த்திருக்கிறார்.

தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் ஆகியவற்றிற்குத் தற்கால மொழிநடையில் உரையும் விளக்கமும் தந்திருக்கிறார். சிலப்பதிகாரத்தை நாடகமாகவும் திரைப்படமாகவும் படைத்துத் தந்திருக்கிறார். கவிதைகளும் கதைகளும் தந்திருக்கிறார். தமிழில் சிலர் மூல நூலைத் தந்திருக்கிறார்கள்; சிலர் அவற்றுக்கு உரை எழுதி இருக்கிறார்கள்; சிலர் தமது நூலுக்குத் தாமே உரை எழுதி இருக்கிறார்கள்.

தனி மனிதர்கள் சிலரைப் புலவர்கள் பாராட்டிப் பாடி இருக்கிறார்கள். அதனால் அவர்கள் உரையும் பாட்டும் உடையவர்களாக இருக்கிறார்கள். புலவர்கள் பாடலுக்குச் சிலர் உரை எழுதி இருக்கிறார்கள்.

ஆனால், முத்தமிழ் அறிஞர் கலைஞர் முன்னோர் நூல்களுக்கு உரை எழுதி இருப்பதோடு தாமே படைப்புகளையும் தந்திருக்கிறார். இவற்றால் தமிழும் உரையும் பாட்டும் உடையதாக ஆகியிருக்கிறது. ஆகவே, முத்தமிழ் அறிஞர் கலைஞர், தமிழை உரையும் பாட்டும் உடையதாகச் செய்திருப்பவர்களின் வரிசையில் கடந்த காலத்தைச் சமகாலப் படுத்தியவர்களின் வரிசையில் உரையும் பாட்டும் உடையவராகத் திகழ்கிறார்.



மதம் மறுத்து, மனிதம் போற்றிய தமிழ்!

சா.பீட்டர்அல்போன்ஸ்

21ஆம் நூற்றாண்டின் விஞ்ஞான தொழில்நுட்ப பாய்ச்சல் மக்களிடம் மண்டிக்கிடக்கும் மதவெறியினை மாய்த்து மனித நேயம் வளர்க்கும் என்று அனுமானம் செய்த சமூக விஞ்ஞானிகள், அவமானப்படும் அளவிற்கு மதவெறியும் சாதிவெறியும் தலைவிரித்து ஆடும் இவ்வேளையில், உலகின் உயர்தனி செம்மொழியாகிய தமிழ் எப்படி இன மத பேதம் கடந்து எல்லோரையும் அரவணைத்துக் கொண்டது என்பது தமிழ்ச்சமூகம் கொண்டாடவேண்டிய ஒரு பெருமைக்குரிய செய்தி!

மானுடம் தழுவி நிற்கும் தமிழை, ஒரு சமயச் சிமிழுக்குள் அடைத்து வைத்து சிலர் "அரசியல் அடகு வியாபாரம்" செய்ய முனைகின்றபோது தமிழ் எப்படி "மதம் கடந்த ஆன்மீகத்தின்" ஞானக்குரலாய் தன்னை உருவகித்துக் கொண்டது என்பதையும் உலகிற்கு நாம் எடுத்துச் சொல்லிட வேண்டும்.

"தமிழ்" நீசர்களின் மொழி என்று விஷம் கக்கியவர்கள் உண்டு. ஆனால் அது தெய்வத்தின் மனதை உருக்கவல்ல "நேசமொழி" என்பதினை தமிழின் ஆன்மாவை உணர்ந்தவர்கள் மட்டுமே புரிவார்கள்.

"வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்கிலர் காண்கிலோம்
திருவாசகம் இங்கு ஒருநாள் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்து உக்கண்கள
தொடுமணற்கேணியில் சுரந்து நீர் பாயும்" – என்கிறார் நான்மணிக்கடிகையின் ஆசிரியர் சிவப்பிரகாசம்.

அவர் காலத்திலேயே தமிழகத்தின் ஆலயங்களில் தமிழ் பின்னுக்குத் தள்ளப்பட்டு, வடமொழி வழிபாடு நடப்பதை அவரால் பொறுக்க முடியவில்லை.

"வடமொழியில் ஓதினால் மனிதன் மரம் போல் நிற்கிறான். தமிழ்த் திருவாசகத்தை ஓதினால் அவன் இதயம் பக்திப் பரவசத்தால் கசிந்து அழுகிறது" என்கிறார்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்றார் திருமூலர். அந்த இறைவன் "ஒற்றைச் சமய முகவரிக்குள்" தன்னை அடைத்துக் கொண்டவனில்லை. அவன் காலம் கடந்தவன். ஞாலம் முழுவதும் பரம்பொருளாய் நிறைந்த மெய்ப்பொருள். அவன் எல்லோருக்கும் எல்லாமாய் அருள் பாலித்தவன். யார் யாருக்கு தன்னை அவன் எப்படி வெளிப்படுத்தினானோ அப்படியே அவர்களை தன்னை தமிழ் செய்யுமாறு படைத்த பெருவழி நாயகன் அவன். அப்படி தமிழ் செய்ய அழைக்கப்பட்டவர்கள் சைவர்களாக, வைணவர்களாக, இஸ்லாமியர்களாக, கிறிஸ்தவர்களாக, சமணர்களாக, பவுத்தர்களாக அடையாளப் படுத்தப்பட்டு இருந்தாலும் தமிழன்னை அவர்கள் அனைவரையும் "தன் மக்களாய்"இணைத்தாள் என்பதுதான் அவளின் தனிச்சிறப்பு.

இப்படி இணைவதுதானே உண்மையான "தமிழ்ச் சங்கமம்." ஒரு நதி ஓடிக்கலப்பது சங்கமம் அல்லவே! பலநதிகள் கூடிக்கலப்பதுதான் உண்மையான சங்கமம். தங்களைத் தன்மக்களாக அள்ளி அணைத்துக் கொண்ட அன்னைத் தமிழுக்கு அவர்கள் எப்படியெல்லாம் தொண்டாற்றினர் என்பதறியும் போது நம் கண்கள் நம்மையறியாமல் நன்றியால் பனிக்கின்றன.

1819 ஆம் நூற்றாண்டுகளில் தமிழன்னையைச் சூழ்ந்திருந்த பகை இருளை வெட்டி வீழ்த்தி, தமிழ் என்பது திராவிடம் எனும் மொழிக்குடும்பத்தின் தாய் என்பதை உலகிற்கு உரக்கச்சொல்லி, திராவிடம் என்ற இனத்தின் தொன்மையையும், அதன் தனித்துவத்தையும், இடைவிடாத தனது ஆராய்ச்சிகளின் மூலம் அறிவியல் அடிப்படையில் மெய்ப்பித்தவர் அயர்லாந்து நாட்டில் பிறந்த கிறித்தவப் பாதிரியார் கால்டுவெல்.

> **மார்க்கம் வேறாக இருந்தாலும் மனிதம் ஒன்றுதான் என்று உலகிற்கு சொன்ன ஒரே மொழி தமிழ்.**
>
> **ஒன்றே குலம், ஒருவனே இறைவன் என்றார் திருமூலர்.**
>
> **அருட்பெருஞ்சோதி, தனிப்பெருங் கருணை என்றார் வள்ளலார்.**
>
> **தமிழன்னைக்கு மதம் இல்லை. மனிதநேயம்தான் அவள் மதம்.**

1891 அக்டோபர் 19 நாளிட்ட லண்டன் டைம்ஸ் பத்திரிக்கை திராவிடக் குழுமங்களின் ஒப்பிலக்கணம் என்ற அவரது ஆராய்ச்சி நூல் மேற்கத்திய மொழி அறிஞர்களுக்கு ஒரு தேவரகசிய கண் திறப்பாக அமைந்து காலத்தால் அழிக்க முடியாத ஆவணமாகவும் திகழும் என்று எழுதியிருந்தது. கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திலேயே முன்தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி என்றும், ஞானக் கருவூலங்கள் கொட்டிக் கிடக்கும் ஆதிமொழி அதுவென்றும் எழுத்துருவில் அகிலமெங்கும் அறிவித்தவர்கள் பைந்தமிழ் பயின்ற கிறித்தவப் பாதிரியார்களே!

திருவாசகத்தில் தன்னைக் கரைத்த ஜீ.யு.போப் அதனை மொழி பெயர்த்து உலகறியச் செய்வதே தன் பிறப்பின் நோக்கமென வாழ்ந்தது மட்டுமல்லாமல் புறநானூறு, நன்னூல், நாலடியார் குறித்து மிகச்சிறந்த ஆய்வுக் கட்டுரைகளைப் பதிப்பித்ததோடு, திருக்குறளையும் மொழிபெயர்த்தார். கொன்சால் வன்சு என்ற கருமானைத் தேடிக் கண்டுபிடித்து, அவர் மூலம் முதல் அச்சுத் தமிழ் எழுத்துக்களை உருவாக்கிய என்றீக்கே என்றீக்சு அடிகளார், வீரமாமுனிவர் அருளிச்செய்த தேம்பாவணியினை அச்சிட்டு வெளியிட்டதோடு மட்டுமல்லாமல் பலதமிழ் நூல்களை பதிப்பித்து வெளியிட்டார்.

பகவத்கீதை, நன்னூல், சீவகசிந்தாமணி ஆகிய இலக்கியங்களை மொழிபெயர்த்தவர் ஐயர், திருக்குறளின் பன்னிரண்டு அதிகாரங்களுக்கு உரை எழுதிய எல்லீசன்,

திருமுருகாற்றுப் படைக்கு விளக்க ஆய்வு உரை எழுதிய சாந்தகிரென், தமிழ்க் குழந்தைகளுக்கு பாடநூற்களை தயாரித்து எளியிட்ட ஜான் முர்டாக், இசை, வேதங்கள், தத்துவங்கள் ஆகியவற்றில் பல ஆய்வுகளை மேற்கொண்டு உலகின் பல பல்கலைக்கழகங்களுக்கு கட்டுரைகளை அனுப்பிவைத்த பேராசிரியர் ஆலன் டேனியல், முருகப் பெருமானைப்பற்றி ஆய்வுசெய்த கமில்சுவலபில், இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னரே மேலைநாட்டு மருத்துவத்தை தமிழில் பயிற்றுவித்து, தமிழருக்கான மருத்துவ ஊழியர் என்றுதன்னை அடையாளப்படுத்திக் கொண்ட யாழ்ப்பாணத்து சாமுவேல் பிஸ்க்ரீன் என்று தமிழுக்காகவே வாழ்ந்த அயலக கிறித்தவர்களின் பட்டியலைஅடுக்கிக்கொண்டே போகலாம்.

ஏடுகளைத் தேடித் தொகுத்த தமிழ்த்தாத்தா உ.வே.சா அவர்களுக்கு 200 ஆண்டுகளுக்கு முன்னரே "சுவடிகளைத் தேடும் சாமியார்" என்றழைக்கப்பட்ட வீரமாமுனிவர் தமிழகம் முழுவதும் தேடியலைந்து பல தமிழ்ச் சுவடிகளைப் பத்திரப்படுத்தினார். நாணய சாலையின் பொறுப்பாளராக இருந்த எல்லீசன் அரசு தயாரித்த நாணயங்களில் திருவள்ளுவரின் உருவத்தைப் பொறித்து வெளியிட்டார் என்றால் அவரது தமிழ்உணர்வு எவ்வளவு பெரிது!

உலகத்தமிழ் மாநாடு எனும் கருத்தாக்கத்தை முதன்முதலில் அறிமுகம் செய்து நடத்திக் காண்பித்தவர் சேவியர் தனிநாயகம் அடிகளார். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று அதனை நிறுவனம் செய்து தன் காலத்தில் முதல் நான்கு உலகத் தமிழ் மாநாடுகளை நடத்திய பெருமை அவருக்குண்டு.

"இஸ்லாம் எங்கள்வழி, இன்பத் தமிழ் எங்கள் மொழி" என்று வாழ்வுப் பிரகடனம் செய்து வாழும் இஸ்லாமியத் தமிழர்கள் பிறப்பால் இருப்பால் வாழ்க்கையால் தமிழர்கள். இஸ்லாமை சுவாசமாகவும் தமிழை உணவாகவும் கொண்டவர்கள். தங்களது அன்னைத் தமிழை அவர்கள் அழகுபடுத்தி கொண்டாடிக் குதுகலிப்பதை ஒரு தனிக்காவியமே செய்யலாம்.

இறைவன் படைத்த முதல் மனிதன் ஆதமும், அவன் மனைவி ஹவ்வாவும் உறவாடி மகிழ்ந்த மொழியே தமிழ்தான் என்பது அவர்கள் நம்பும் ஒரு செய்தி.

1572ல் "ஆயிரம் மசாலா" எனும் அற்புதக் காவியம் படைத்த வண்ணப் பரிமளப் புலவர் துவங்கி புதுக் கவிதைகளுக்கு புதிய பரிணாமம் தந்து சாகித்திய அகாதமியின் உயரிய இலக்கிய விருதினைப் பெற்ற சாகாவரம் பெற்ற அற்புதக் கவிஞர் கவிக்கோ அப்துல் ரகுமான் உட்பட நூற்றுக்கணக்கான இஸ்லாமிய தமிழ் அறிஞர்கள் அன்னைத் தமிழுக்கு பல புதிதான, புரட்சிகரமான ஆபரணங்கள் அணிவித்து அவர்களும் மகிழ்ந்து அன்னைத் தமிழையும் பெருமைப்படுத்தியுள்ளனர்.

படைப்போர், மசாலா, நாமா, கிஸ்ஸா, முனாஜாத்து, திருமண வாழ்த்து, நொண்டி நாடகம், மகுடி நாடகம் என்ற புதுவகை இலக்கிய யுக்திகளை தமிழுக்கு அறிமுகப்படுத்திய பெருமை இஸ்லாமியத் தமிழர்களுக்கு உண்டு.

தமிழ் இலக்கிய மரபில் முதன்முதலாக விதவைகளின் மறுமணத்தை கொள்கையாகப் பிரகடனம் செய்த இலக்கியம் 1737 ஆம் ஆண்டு குஞ்சுமூசு புலவர் எழுதிய "சங்கபடைப் போர்" எனும் தமிழ் போர்க் காப்பியம்.

"தாலி இழந்தவளைத்தான் அலியார் இங்கு அழைத்துக்

கோலியொரு மாப்பிள்ளைக்குக் கொள்கையுடன் தாலிகட்டி"

என்று முழங்கிய கவிஞனை தமிழர்கள் கொண்டாடமல் இருக்க முடியுமா?

சிலப்பதிகாரமும், சீவக சிந்தாமணியும் அச்சு ஏறுவதற்கு முன்னரே அச்சேறிய சீறாப்புராணம் தந்த உமறுப்புலவர், நான்கு காப்பியங்களை ஒன்றாகப் படைத்த புலவர் சையது அப்துல்காதர் லெப்பை, கனகாபிஷேக மாலை என்ற முதல் இஸ்லாமியக் காப்பியத்தை தந்த புலவர் செய்கு நயினார் கான், தமிழின் முதல் நாடகமான அலிபாஷா நாடகத்தை எழுதிய வண்ணக் களஞ்சியப் புலவர், முதல் உரைநடை நூலான "விக்கிரமாதித்தன்" கதையினை எழுதிய இப்ராகிம் ராவுத்தர், சுயமுன்னேற்ற வாழ்வியல் நூல்களை தமிழுக்கு அறிமுகப்படுத்திய அப்துற் றஹீம், தமிழின் முதல் நாவலான "பிரதாப முதலியார் சரித்திரம்" எனும் நூலை கிறித்தவரான மாயூரம் வேதநாயகம் பிள்ளை எழுத, இரண்டாவது நாவலான "அசன்பே சரித்திரத்தை" எழுதிய சித்திலெப்பை மரைக்காயர்,

திரைப்படப் பாடல்களில் புரட்சியூட்டிய கவி. கா.மு.சரீபு, புதுக் கவிதை மரபில் சரித்திரம் படைத்த கவிக்கோ, மு.மேத்தா, இன்குலாப், சாகித்திய அகாதமி விருது பெற்ற தோப்பில் முகமது மீரான், பெண் எழுத்தாளர் நாகூர் சித்தி ஜுனைதா பேகம், தமிழ் கலைச் சொல்லாக்க முன்னோடி மணவை முஸ்தாபா என்று அன்றும் இன்றும் தமிழன்னைக்கு பெருமை சேர்க்கும் இஸ்லாமியத் தமிழர்களை எப்படி மறக்க முடியும்? அட்டாவதனம் செய்து வரலாறு படைத்த செய்குத்தம்பி பாவலர் தமிழன்னையின் அன்புப் புதல்வர்களில் ஒருவரல்லவா? அவர்போல் இன்னும் ஒருவர் பிறக்க வில்லையே!

1949ஆம் ஆண்டு அரசியல் நிர்ணய சபையில் "இந்தியாவின் ஆட்சிமொழியாகத் தகுதி பெற்ற ஒரே மொழி என் தாய்மொழி மட்டுமே" என்று முழங்கிய கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களை தமிழ் கூறும் நல்லுலகம் என்றென்றும் நன்றியுடன் நினைவில் கொள்ளும்?

சமண மதம் மிகப் பழமையான மதம். காலத்தால் புத்த மதத்திற்கும் முந்தியது. பவுத்தம் போலவே சமணமும் கடவுள் நம்பிக்கை கொண்டதல்ல. அவர்களுக்கு கடவுள் மேல் நம்பிக்கை இல்லையென்றாலும் தமிழ் மீது அளவற்ற ஈர்ப்பும், நம்பிக்கையும் இருந்தது. தமிழன்னைக்கு சமணர்கள் அணிவித்த அணிகலன்களும், ஆபரணங்களும் காலத்தை வென்று சாகாவரம் பெற்ற இலக்கியப் புதையல்கள். சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி. உதயன குமாரகாவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி, பெருங்கதை, நேமிநாதம், நன்னூல், அகப்பொருள் விளக்கம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, வெண்பாப்பாட்டியல், அவிநயம், நாலடியார், சிறுபஞ்சமூலம், ஏலாதி, நான்மணிக்கடிகை, திணைமாலை, அறநெறிச்சாரம், அருங்கலச்செப்பு, திவாகரம், பிங்கலந்தை, உரிச்சொல் நிகண்டு, சூடாமணி நிகண்டு என்ற அற்புதப் படைப்புகளெல்லாம் சமணம் தமிழுக்குத் தந்த கொடை.

தமிழின் தலைசிறந்த தத்துவ நூல் என்று நீலகேசியை ஆய்வாளர்கள் கொண்டாடுகிறார்கள்.

தமிழ் இலக்கியத்துக்கு காப்பிய வடிவத்தைக் கொண்டு வந்தது பவுத்தமும் சமணமும்தான். ஐம்பெருங் காப்பியங்களும் ஐங்குறுங் காப்பியங்களுமே அதற்கு சாட்சி.

பவுத்த இலக்கியங்களில் மிகவும் முக்கியமானது சீத்தலைச் சாத்தனார் எழுதிய மணிமேகலை. மணிமேகலை போல குண்டலகேசியும் பவுத்த காவியமே. வளையாபதியும் பவுத்தம் சார்ந்ததே.

வீரசோழியமும் பவுத்த நூல்தான். தமிழில் அறநூல்கள் தோன்றுவதற்கும் பவுத்த சமண சமயங்களே காரணமாக இருந்துள்ளன. பதினெண்கீழ்கணக்கு நூல்களே அதற்குச் சான்று.

எல்லா மதங்களுக்குமான இலக்கியங்கள் இயற்றப்பட்டதும், கொண்டாடப்பட்டதும் தமிழில் மட்டுமே. பெற்ற மக்களனைவரும் தாயை தனது தாய் என்று நேசிப்பதும், தாய் தான் பெற்ற குழந்தைகள் ஒவ்வொருவரையும் தனது குழந்தை என்று யாசிப்பதும் எப்படி இயல்போ, அதைப் போலவே அண்டி வந்த அத்தனை சமயங்களையும் தன் மக்களாக ஏற்றுக் கொண்ட அன்னைத் தமிழை, சூழ்ந்து வந்த சமூகங்களும் அவளை தங்கள் தாய் என்று கொண்டாடின.

மார்க்கம் வேறாக இருந்தாலும் மனிதம் ஒன்றுதான் என்று உலகிற்கு சொன்ன ஒரே மொழி தமிழ்.

"ஒன்றே குலம், ஒருவனே இறைவன்" என்றார் திருமூலர்."

"அருட்பெருஞ்சோதி, தனிப்பெருங் கருணை" என்றார் வள்ளலார்.

தமிழன்னைக்கு மதம் இல்லை. மனிதநேயம்தான் அவள் மதம்.

இதைத்தான் உளமுருகப் பாடினார் செய்குத் தம்பி பாவலர்.

"சங்கப்பலகை தவழ்ந்தாயே,
சகலகலையும் நிறைந்தாயே,
அங்கம் பெண்ணாயமைந்து வர
அரியமாட்சி விளைத்தாயே!
எல்லாம் வல்ல நின்பெருமை
இயம்பற்கரிய வாயிடினும்,
வல்லவர் நாவிலெந்நாளும்
வாழ்வாய்! வாழ்வாய்! தமிழ்த்தாயே!" என்று.



சமயம் வளர்த்த தமிழ்

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

“அர்ச்சனை பாட்டேயாகும்.
ஆதலான் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக”

என்று நற்றமிழ் வளர்த்த சுந்தரப் பெருமானின் சுந்தரத் தமிழில் சொக்கிப் போன இறைவன் அவருக்கு ஆணையிடுகின்றார்.

“சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்”

என்றார் திருநாவுக்கரசுப் பெருமான்.

“நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர்” என்று ஞானசம்பந்தப் பெருமான் தம்மை அழைத்துக் கொள்வார்.

ஞானசம்பந்தப் பெருமான் தமிழின் சிறப்புகள் பற்றி தந்த அடைவுகள்:

அருந்தமிழ், ஆரா அருந்தமிழ், இசைமலி தமிழ், இன்புறுந் தமிழ், இன்றமிழ், உருவாகும் ஒண்டமிழ், உரையார் தமிழ், ஏரினார் தமிழ், ஒளிர் பூந்தமிழ், கலைமலி தமிழ், கலை வளர்தமிழ், குலமார் தமிழ், குற்றமில் செந்தமிழ், குன்றாத் தமிழ், சங்கமலி செந்தமிழ், சொல்லார் தமிழ், ஞாலம் மிக்க தண்டமிழ், ஞானத்தமிழ், தகைமலி தண்டமிழ், சந்தநிறை தண்டமிழ், சந்தமார் தமிழ், சந்தமார்ந்தழகாய தண்டமிழ், சந்தமாலைத்

தமிழ், சந்தமின்றதமிழ், சந்துலாந்தமிழ், சீர்மிகுந்த தமிழ். சீரின் மலிசெந்தமிழ், செந்தண்டமிழ், செறிவண்டமிழ், தவமல்கு தமிழ், தன்னார்வம் செய் தமிழ், திருநெறிய தமிழ், துளங்கில் தமிழ், தேனார் தமிழ், நல்லவாய இன்றமிழ், நலங்கொள் தமிழ், நற்றமிழ், நகரில்லன தமிழ், படமலி தமிழ், பண்ணிய தமிழ், பண்ணாறுத் தமிழ், பந்தமார் தமிழ், பரவர் தமிழ், புகழ்நின்ற தமிழ், பரவிய தமிழ், பாரினார் தமிழ், பேரியல் தமிழ், இன் தமிழ், மருவிய தமிழ், மறையினங்கு தமிழ், மறைவளரும் தமிழ், முடிவில் இன் தமிழ், முத்தமிழ், வளமார் தமிழ், விலையுடை அருந்தமிழ் என்று எவ்வளவு சிறப்புகளைத் தமிழ் பெற்றுள்ளது.

திருமறைக்காடு என்று அழைக்கப்படும் வேதாரணியத்தில் திறக்க இயலாமல் இருந்த கதவுகளை நாவுக்கரசர் நற்றமிழால் பாடித் திறந்து வைத்தார்.

சேரமான் பெருமாள் என்ற மன்னர் சுந்தரரின் தோழர். அவர் ஒரு சிவனடியார். சேரமான் பெருமாள் பூசை செய்யும் பொழுது அதை இறைவன் ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக சிலம்பின் ஒலி கேட்கும். அப்படிச் சிலம்பின் ஒலி கேட்டால் இறைவன் பூசையை ஏற்றுக் கொண்டதாகப் பொருள் கொள்வார். ஒருநாள் அந்தச் சிலம்பொலி சற்றுத் தாமதமாகக் கேட்டது. சேரமான் பெருமாள் இறைவனிடம் "என் பூசையை ஏற்றுக்கொள்ள ஏன் தாமதம்" என்று கேட்டதற்கு,

"வன்தொண்டன் ஒன்றும் உணர்வால் நம்மைப் போற்றி உரைசேர் பதிகம் பாடுதலால் நின்று கேட்டுவர தாழ்த்தோம்" என்றும், சுந்தரப் பெருமானின் சுந்தரத் தமிழ் கேட்டு சொக்கிப் போனேன். அங்கேயே என்னை மறந்தேன்" என்று அந்தத் தாமதத்திற்கு இறைவன் காரணம் கூறியதாகக் கூறுவார்கள்.

திருநாவுக்கரசர் பெருமானுக்கு நஞ்சைக் கொடுத்தார்கள். யானையால் இடறச் செய்தார்கள். நீற்றறையில் திருநாவுக்கரசை அடைத்தார்கள். எல்லாவற்றையும் வென்று,

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே



ஈசன் எந்தை இணையடி நிழலே”
என்று பாடினார்.

வீணையின் இனிய கீதத்தை எல்லோரும் கேட்டு மகிழ முடியும். செவிகளின் கேட்கும் திறனில் குறைபாடு இல்லையெனில் வீணையில் இனிய இசையைக் கேட்டு மகிழ முடியும். மாலைக் காலத்தில் வீணில் தெரியும் முழு நிலவைப் பார்த்து மகிழ முடியும். விண் நிலவைப் பார்த்து மகிழ கண்களில் குறைபாடு இருக்கக் கூடாது. தென்றல் காற்று பேதம் பார்க்காது எப்படி அனைவரையும் தழுவிச் செல்கின்றதோ, அதைப் போலத்தான் பரம்பொருள் அனைவருக்கும் பொதுவானது என்று திருநாவுக்கரசுப் பெருமான் பாடுகின்றார்.

செழுந்தமிழ் வழக்கு அயல்வழக்கின் துறை வெல்ல இருக்கிறது என்று சேக்கிழார் பெருமான் ஞானசம்பந்தப் பெருமானின் வெற்றியைப் பாடுவார், பண்ணோடு கலந்த பைந்தமிழை இசையோடு கலந்த இன்பத் தமிழால் சமயத்தை நால்வரும் வளர்த்தனர்.

“நான் பாடுவதெல்லாம் என் பாட்டல்ல. இறைவனின் அருள்வாக்கு” என்பதை எனதுரை தனதுரையாக” என்று பாடியவர் நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தப் பெருமான். ஒவ்வொரு பதிகத்தின் நிறைவிலும் திருக்கடைக் காப்புப்பாடி, இந்தப் பத்துப் பாடல்களைப் பாடினால் இந்தப் பலன்கள் எல்லாம் கிடைக்கும் என்று குறிப்பிடுவார்.

“துன்பம் நீங்கும். துயரம் நீங்கும். அல்லல் விலகும், ஆணை நமதே” என்று அறுதியிட்டுச் சொன்னார். நம் அருளாளர்களின் தீந்தமிழ்ப் பாடல்கள் மந்திரங்களாக மனித குலத்தின் துன்பத்தை நீக்கி இருக்கின்றன.

எலும்பு சாம்பலைப் பெண்ணாக்கி உயிரோடு எழச் செய்தது ஞானசம்பந்தரின் ஞானத் தமிழ்.

அப்பூதி அடிகளின் மூத்த மகன் திருநாவுக்கரசை உயிர்ப்பித்துத் தந்தது திருநாவுக்கரசுப் பெருமானின் திருத்தொண்டுத் தமிழ்,

முதலை உண்ட பிள்ளையை மீண்டும் உயிர்ப்பித்துத் தந்தது சுந்தரரின் சுந்தரத் தமிழ்.

உலகத்தின் தலைவனை கூலியாளாக மண் சுமக்க வைத்தது மணிவாசகரின் மணித்தமிழ்.

ஒரு மொழியால் உலகத்தின் அறிவைப் பெறலாம். ஞானத்தைப் பெறலாம். வீடு பேற்றை அடைய முடியுமா?

முடியும் என்று நிரூபித்தது தான் மணிவாசகரின் மணித்தமிழ். மனிதகுலம் வீடு பேற்றை அடைய முடியும் என்ற நிலைக்கு அழைத்துச் சென்றதுதான் சமயத் தமிழ்.

சமயச் சான்றோர்கள், நால்வர் பெருமக்கள் தெய்வத் தமிழால் திருமுறைகளைப் பாடி சமயத்தையும், தமிழையும் ஒருசேர வளர்த்தனர்.

உலகத்தில் சமயத்தைக் காத்த பெருமை ஒரு மொழிக்கு இருக்குமேயானால் அது தண்ணார் தமிழுக்குத் தான் உண்டு.

நால்வர் பெருமக்கள் வளர்த்த நற்றமிழை, தெய்வத் தமிழை, சமயத் தமிழை நாளும் நாளும் போற்றுவோம்.

எலும்புச் சாம்பலைப் பெண்ணாக்கி உயிரோடு எழச் செய்தது ஞானசம்பந்தரின் ஞானத் தமிழ்.

அப்பூதி அடிகளின் மூத்த மகன் திருநாவுக்கரசை உயிர்ப்பித்துத் தந்தது திருநாவுக்கரசுப் பெருமானின் திருத்தொண்டுத் தமிழ்.

முதலை உண்ட பிள்ளையை மீண்டும் உயிர்ப்பித்து தந்தது சுந்தரரின் சுந்தரத் தமிழ்.

உலகத்தின் தலைவனை கூலியாளாக மண் சுமக்க வைத்தது மணிவாசகரின் மணித்தமிழ்.

என்றைக்கும் படித்து முடிக்க முடியாத புத்தகம்

பாரதி கிருஷ்ணகுமார்



திருக்குறள் மத, இன, மொழி, பிரதேச அடையாளங்களைக் கடந்த படைப்பு. அதனாலேதான், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து..." என்று திமிர்ந்த ஞானச் செருக்கோடு பாடினார் மகாகவி பாரதியார். அதனாலேயே திருக்குறள் உலகப் பொதுமறை என்று போற்றப்படுகிறது.

உலகப் பொதுமறை என்பதன் பொருள், இவ்வுலகிலே இருக்கிற அனைவருக்கும் பொதுவான, ஏற்றுக்கொள்ளவும் பின்பற்றவுமான அறங்களை, நீதிகளை, நெறிமுறைகளை மறை போல உரைப்பதால் திருக்குறளை உலகப் பொதுமறை என்று கொண்டாடுகிறோம். இது எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் கருத்தும் சிந்தனையுமாகும்.

ஆனால், வேறொரு விதத்திலும் திருக்குறளை உலகப் பொதுமறை என்று நாம் உணர இயலும். அஃதாவது, திருக்குறள் ஏதேனும் ஒரு மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட பின்னர், மொழி பெயர்க்கப்பட்ட பிரதியை அம்மொழி அறிந்த ஒருவரிடம் வாசிக்கத் தருவதாகக் கொள்வோம்.

அவ்வாறு தரும்போது, இம்மொழி பெயர்ப்பு இந்தியாவிலே இருக்கிற தமிழ்நாட்டில் பிறந்த, தமிழ் மொழியில் எழுதப்பட்ட திருக்குறள் என்னும் நூலின் மொழி பெயர்ப்பு எனும் அறிமுகம் இல்லாமல் வாசிக்க தந்தால், வாசிக்கிறவர் அந்தப் படைப்பு தன் தாய் மொழியில் தனது வாசிப்புக்காக எழுதப்பட்ட புத்தகம் என்றுதான் திருக்குறளை உணர்வார்.

உலகின் எந்த மொழியில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டாலும், அப்பிரதியை வாசிக்கிறவர் மூலநூலையே அறிந்துகொள்ள முடியாத அளவுக்கு உலகத் தன்மை பெற்றது திருக்குறள். அதனாலும் அது உலகப் பொதுமறை என்று கொண்டாடப்படுகிறது.

தமிழ், தமிழர், தமிழ்நாடு போன்ற சொற்களோ, பிரதேச, இன, மொழி அடையாளங்களோ இன்றி எழுதப்பட்ட பெருமைக்குரியது திருக்குறள்.

தமிழில் "திரு" என்னும் அடைமொழி, நான் அறிந்த வரையில், சமயம் சார்ந்த இறை வழிபாட்டுக்குரிய நூல்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. திருப்பாவை, திருவெம்பாவை, திருமந்திரம், திருமுருகாற்றுப்படை, திருப்புகழ் என்று அந்தப் பட்டியல் நீள்கிறது.

ஆனால், சமயச் சார்பற்ற, சமயம் கடந்த பெருமைக்குரிய திருக்குறள் மட்டுமே தமிழில் "திரு" எனும் அடைமொழியோடு சேர்த்து அழைக்கப்படும் ஒரே நூல். திரு என்றால் உயர்ந்தது, குறள் என்றால் அளவில் குறுகியது என்று பொருள்.

"மழித்தலும் நீட்டலும் வேண்டா..." என்ற குறளின் வழியேயும் "கொல்லான் புலாலை மறுத்தானை..." என்று துவங்கும் குறளின் வழியேயும் இந்திய மற்றும் தமிழ்ச் சமூகத்தில் இருக்கும் அனைத்து சமயங்களின் கோட்பாடுகளுக்கு எதிராகவும் உறுதியான நிலைப்பாட்டை எடுக்கிறார் வள்ளுவர்.

அனைத்திற்கும் மேலாக "தெய்வத்தான் ஆகாதெனினும்..." என்று துவங்கும் குறளின் வழியே, தெய்வம் சாதிக்க முடியாததை, செய்திட முடியாததை தன் உழைப்பினால் மனிதன் சாதிக்க முடியும் என்று எழுதினார் திருவள்ளுவர்.

இக்குறள் எல்லாம் இறைவன் செயல், அனைத்தையும் அவனே ஆக்கி, காத்து அழிக்கிறான், அவன் கொடுப்பதை யாரும் தடுக்க முடியாது, தடுப்பதை யாரும் கொடுக்க முடியாது என்று காலங்காலமாக நிலவி வரும் அனைத்து நம்பிக்கைகளையும் மூட நம்பிக்கையாக்கிவிடுகிறது.

உழைப்பின் உயர்வை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உரைத்த பெருமை திருக்குறளுக்கே உண்டு. கடவுளால் இயலாததை

> **ஒவ்வொரு முறை வாசிக்கிற போதும், அவ்வை சொன்னதுபோல் ஒவ்வொரு குறளுக்குள்ளும் ஏழு கடல்கள் ஆர்ப்பரித்துக்கொண்டே இருக்கிறது. எழுதப்பட்ட நாளில் இருந்து இன்று வரையிலும், எமது மொழியிலும் பிற மொழிகளிலும் தொடர்ந்து வாசிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது திருக்குறள்.**

உழைப்பு ஈட்டித் தரும் என்று பாடிய திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தும் பாடியிருக்கிறார் என்பதும் மனங்கொள்ளத் தக்கது.

உழைப்பின் சிறப்பை அறிந்து உணர்ந்ததாலேதான் வள்ளுவர் வேளாண்மையை சிறப்பித்துப் பாடுகிறார். வேளாண்மை இழி தொழிலாகவும், வேளாண் மக்கள் இழி சனங்களாகவும் கருதப்பட்ட காலத்தில், வேளாண்மையை உயர்த்திப் பேசிய ஒரே நூல் திருக்குறள்.

ஏதேனும் ஒரு தொழில் செய்துதான் இங்கு எல்லோரும் வாழ்கிறோம் என்றபோதும் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்..." என்று உழவின் சிறப்பை உயர்த்திப் பேசினார் வள்ளுவர். எத்தொழில் செய்வோர்க்கும், தமது உழைப்பால் உணவினை விளைவித்துக் கொடுத்து உதவுவதால் அவ்வுழவரே இந்த உலகத்தைத் தாங்கும் அச்சாணி என்று உணர்த்தினார் வள்ளுவர்.

அற நூல்களிலேயே காதலையும் காமத்தையும் வியந்து போற்றிப் பாடிய பெருமைக்குரியது திருக்குறள் மட்டுமே. அதனாலேதான், இல்லறத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த வள்ளுவர், வியக்கத்தக்க விதத்தில் துறவின் பெருமையையும் காட்டிச் சென்றார். ஊழ்வினையைப் பாடிய வள்ளுவரால் தான் ஆள்வினைவுடைமையையும் பாட முடிந்தது.

கல்வி கற்பது ஒரு அறமுடைய ஒழுக்கச் செயல் என்றபோதிலும், திருவள்ளுவர் கல்வியின்

சிறப்பை அறத்துப்பாலில் பாடினாரில்லை. அதை பொருட்பாலின் துவக்கத்தில் வைத்தார். நேரிய வழியில் பொருளீட்டுவதற்கும், அதைப் பேணிப் பாதுகாப்பதற்கும் கல்வியே அடிப்படைத் தேவை என்பதை உணர்ந்து அதனைப் பொருட்பாலில் கொண்டு சேர்த்தார். அதிகார வரிசையில் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்கிற வரிசையை உருவாக்கி கல்வியின் சிறப்பை அனைவரும் உணரச் செய்தார்.

தமது படைப்பில், தாம் கூறியவை அனைத்தையும், அனைவரும் எல்லாக் காலத்திலும் ஏற்றுக்கொண்டுவிட வேண்டும் என்கிற வறட்டுப் பிடிவாதமும் வள்ளுவருக்கு இல்லை. வள்ளுவர் என்பவர் யார்? அவர் எத்தகையவர்? எங்கு இருந்தார்? என்பதற்கான ஆதாரங்களோ, சான்றுகளோ நம்மிடம் இல்லை. எனவே, இச்சூழலில் படைப்பு மட்டுமே முதன்மை பெறுகிறது. தனது படைப்பை அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிற இறுக்கமும் வள்ளுவருக்கு இல்லை.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்..." எனும் குறளை எழுதியதன் வழியே அவரது கருத்துக்களையே விசாரணை செய்யவும், மாறுபடவுமான வாய்ப்பினை நமக்கு வள்ளுவர் தருகிறார். இது திருக்குறளின் ஆகச்சிறந்த ஜனநாயகப் பண்பைக் காட்டுகிறது. அதனாலேதான், திருக்குறளுக்கு மாறுபட்ட கருத்துக்கள் கொண்ட பல உரைகள் எழுதப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
யிடுக்கண் களைவதாம் நட்பு

பலர் கூடிய இடத்தில் ஒருவனுக்கு உடுத்திய ஆடை சடக்கென நெகிழ்ந்துவிட்டால் அப்பொழுது அவன் கை விரைவில் அவ்வாடையைப் பற்றி உடுத்தி அவனது மானத்தைக் காத்தல் போல, தம்மில் ஒருவனுக்குத் தீங்கு நேரும்போது உடனே உதவி செய்து அத்தீங்கை ஒழிப்பதே நட்புக்கு இலக்கணமாகும் என்றே இக்குறளுக்கு



உரை எழுதப்பட்டிருக்கிறது. துன்பத்தில் இருந்து காப்பாற்றும் பொருட்டு மனதினும் விரைவாக கை முற்படுதலால் துன்பம் நீங்கும் என்று பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த உரை அனைவருக்கும் ஏற்புடையதே ஆகும்.

ஆனால், மறுவாசிப்பில் இக்குறள் வேறு ஒரு பொருள் கொள்ளுதற்கான சாத்தியப்பாட்டை தன்னுள் சுமந்து நிற்கிறது. உடுக்கை இழந்தவன் என்னும் சொல் திட்டவட்டமான இறந்தகாலச் சொல் (past tense). எனில், துன்பத்தில் இருப்பவன் தனது ஆடையை முற்றிலும் இழந்து நிற்கிறான் என்பதே சரியான பொருள்.

இந்த இடத்தில், அவையின் கண் அல்லது பலர் கூடிய இடத்தில் ஒருவனது ஆடை நெகிழ்கிற போது அவிழ்கிற போது என்னும் பொருள் தரக்கூடிய நிகழ்காலத் தொடர் (present continuous) சொற்களை வள்ளுவர் பயன்படுத்தவில்லை. எனவே, அவிழ்ந்துகொண்டிருக்கும் ஆடையை விரைந்து பற்றும் கரங்களை நட்புக்கு இலக்கணமாக வள்ளுவர் சொல்லவில்லை. மாறாக, முற்றிலுமாக ஆடையை இழந்த ஒருவனது கைகள், மானத்தை மறைக்கும் பணியைத்தான் செய்யும். எனில் தனக்கு இயல்பாக விதிக்கப்பட்ட பணிகளை விட்டுவிட்டு மானங்காக்கும் பணிக்கு முன் வருகிறது கைகள்.

அதுபோல நண்பனுக்குத் தீங்கு வருகிறபோது தனக்கு விதிக்கப்பட்ட பணிகளை விட்டுவிட்டு நண்பனுக்கு உதவும் பணியை மட்டுமே மேற்கொள்ள வேண்டும் என்பதே வள்ளுவன் காட்டும் வழி. எனவே, உடுக்கை இழந்தவன் கை என்பது, விரைவை மட்டும் குறிக்கிற சொல் அல்ல. மாறாக பண்பையும் விரைவையும் ஒருசேர குறிக்கும் சொல்.

இங்ஙனம் வாசிக்கும்போதெல்லாம், ஒவ்வொரு வாசிப்பிலும் புதிய மாறுபட்ட சிந்தனைகளைத் தரும் ஆற்றலோடு கூடிய படைப்பாகத் திருக்குறள் திகழ்கிறது. அதனாலேதான் "கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி குறுகத் தரித்த குறள்" என்று சிறப்பித்தாள் அவ்வை. வெறுமனே குறளைக் கற்கிற ஒருவரால் குறளின் ஆழத்தை அறிய முடியாது.

கல்வியின் துணை கொண்டு திருக்குறளை அறிவது ஒரு வழிமுறை என்றால், அறிவின் துணை கொண்டு திருக்குறளை அணுகுவது மற்றும் ஓர் அணுகுமுறை. பொருட்பாலில் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்னும் அதிகார வரிசையில் குறளை யாசித்தபோதே கல்வி வேறு அறிவு வேறு என்று நமக்கு உணர்த்திய பெருமை திருக்குறளுக்கு உண்டு.

எந்த மொழியில் மொழி பெயர்க்கப்பட்டாலும் அந்த மொழியில் எழுதப்பட்ட இலக்கியம் என்று உணரத்தக்கதும், எந்த மொழியில் இருந்து மொழி மாற்றம் செய்யப்பட்டது என்று கண்டறியப்பட முடியாத சிறப்பும் திருக்குறளுக்கு உண்டு என்று முன்பே குறிப்பிட்டிருந்தோம்.

அந்த சிறப்பு திருக்குறளுக்கு உண்டு என்றபோதிலும் திருக்குறளின் சிறப்பு திருவள்ளுவர் அல்ல; தமிழ் மொழியே என்று சிறப்பாக உணர முடிகிறது. தமிழைத் தவிர வேறு எந்த மொழியிலும் இத்தனை பொலிவோடும் பொருளோடும் திருக்குறளை எழுத முடியாது என்றே நான் கருதுகிறேன்.

இன்மையி னின்னாத தியாதெனி னின்மையின் இன்மையே யின்னா தது

என்பதான இதுபோன்ற ஒரு குறளை (பல நூறு குறள்களை மேற்கோள் காட்ட இயலும்.) தமிழைத் தவிர வேறு எந்த மொழியிலும் உயிரோடும் ஓசையோடும் பொருளோடும் எழுதிவிட இயலாது.

ஒவ்வொரு முறை வாசிக்கிற போதும், அவ்வை சொன்னதுபோல் ஒவ்வொரு குறளுக்குள்ளும் ஏழு கடல்கள் ஆர்ப்பரித்துக்கொண்டே இருக்கிறது. எழுதப்பட்ட நாளில் இருந்து இன்று வரையிலும், எமது மொழியிலும் பிற மொழிகளிலும் தொடர்ந்து வாசிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது திருக்குறள். வரும் நூறு நூறு ஆண்டுகளிலும் அது வாசிக்கப்படும். புதிது புதிதாய் உரைகளும் பொருளும் தந்துகொண்டே இருக்கும்.

என் பள்ளிப் பருவத்தில் நான் வாசித்த திருக்குறள் அல்ல – நான் இப்போது வாசிக்கும் திருக்குறள்தான் அப்படியே மாறாமல் இருந்துகொண்டு, வாசிக்கிறவனுக்குள் நிகழும் மாற்றங்களை உணர்த்திக்கொண்டே இருக்கிறது பிரதி.

தமிழிலக்கியங்களில் தமிழர் வாழ்வியல்



ப.சரவணன்

உதவி இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை.

மொழிகளுள் சிறந்தது தமிழ். சொல்வளம் மிக்கது, பிறமொழித் துணையின்றி இயங்கவல்லது, இலக்கண, இலக்கியச் செழுமைமிக்கது என்பதால் தமிழை உயர்தனிச் செம்மொழி என்கின்றனர். சிறந்தமொழியாகத் திகழ்கின்ற தமிழ், வெறும் மொழிமட்டுமன்று. அது ஓரினத்தின் அடையாளம். ஒருநிலத்து வரலாற்றைச் செப்பும் சான்றாவணம். அவ்வகையில் தமிழரின் வாழ்வே தமிழின் வாழ்வாகவும், தமிழின் வாழ்வே தமிழரின் வாழ்வாகவும் சிறந்து விளங்குகிறது.

தமிழர்களின் வாழ்வு, மனித இனத்துக்கே வழிகாட்டத்தக்க வாழ்வு. அதுவாழும் முறையை விளக்கி உரைப்பது, வாழும் கலையை வளர்க்கவல்லது, வாழ்வியலுக்கு ஒரு வரையறையாக விளங்குவது. அகம், புறம் என்னும் இருநிலைகளைக் கொண்டது. அந்நிலைகளே அகப்புற இலக்கியங்களாகவே வெளிப்பட்டன. இதனைத் தமிழிலக்கிய வரலாற்றால் அறியலாம்.

இலக்கினை இயம்புவது இலக்கியம். தமிழிலக்கியங்களின் இலக்கு என்பது வாழ்வியல் சார்ந்த அறக்கொள்கைகளை வரையறுப்பதும் வற்புறுத்துவதும் ஆகும். அறம் சார்ந்த கொள்கைகளைப் பன்னெடுங்காலமாகப் பின்பற்றி வாழ்கின்ற தமிழர்கள், அறப்பண்பாளர்களாகத் திகழ்கின்றனர். இங்கு பண்பே பண்பாடாக மிளிர்கிறது. எனவே தமிழர் பண்பாடு அறம் சார்ந்தது; அத்தகைய அறம்-மொழி, இன,எல்லைகளைக் கடந்து மானுடம் முழுமைக்கும் பயன்படவல்லது; இது தமிழர் கண்ட வாழ்வியல். இதனைப் பருந்துப் பார்வையில் ஒரு சில சான்றுகளோடு விளக்க முயல்கிறது இக்கட்டுரை.

தமிழில் கிடைத்துள்ள நூல்களில் பழமையானது தொல்காப்பியம். இது இலக்கண நூலாயினும் இலக்கிய நூலாகவே போற்றப்படுகிறது. தமிழர்களின் வாழ்வு திணை அடிப்படையிலானது எனச் சுட்டும் தொல்காப்பியம் நிலம், ஒழுக்கம் ஆகிய இரு பொருண்மைகளில் வாழ்வியல் கூறுகளை வகுத்துரைக்கிறது. அதுகருதியே "தமிழுக்கும், தமிழினத்திற்கும், தமிழ்நாட்டிற்கும், தமிழ் நாகரிகத்திற்கும் முதல்நூல் தொல்காப்பியம்" என்கின்றனர் இலக்கிய வரலாற்றாசிரியர்கள்,

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்' (தொல்.சி–பா)என்று தமிழ் வழங்கும் நிலத்திற்கு எல்லைகூறும் தொல்காப்பியம், "உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே, அஃறிணை என்மனார் அவரலபிறவே" (தொல்.சொல்.1) என்று அறிவு வளர்ச்சியின் மேம்பட்டதாகிய பகுத்தறிவுக்குக் கட்டியங்கூறுகிறது.

ஆணும் பெண்ணும் திருமணம் புரிந்து, கணவனும் மனைவியுமாக வாழும் இல்லற வாழ்வில் தாம் இணைந்து எதிர்கொண்ட இன்பதுன்ப விளைவுகளால் பெற்ற அனுபவங்கள் பற்பல. அவற்றுள் சிறந்தவற்றையே தம் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பது இல்வாழ்வின் பயன் என்று வாழ்ந்தவர்கள் தமிழர்கள். அதனால் வாழ்வியலின் ஓர் அங்கமாக விளங்கும் குடும்ப அமைப்பில், செய்யவேண்டிய செயல்களைப் பற்றிக் "காமம் சான்றகடைக் கோட்காலை..." (தொல்.பொருள்.க.50) எனத் தொடங்கும் நூற்பாவினால் உணர்த்துகிறார் தொல்காப்பியர்.

பழந்தமிழர் வாழ்வைப் பறைசாற்றும் இலக்கியங்களே சங்க இலக்கியங்கள் எனப்படும் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும். இப்பதினெட்டு நூல்களும் வலியுறுத்தும் கருத்துகள் யாவும் எல்லாக்காலத்திற்கும் பொருந்துவனவாக உள்ளன.

செல்வத்தை மட்டுமே ஒரு பொருளாகக் கொண்டு அவற்றைத் தேடி ஓடியும், ஓடியாடிய பின் ஓய்ந்து களைத்தும், வாழ்வைத் தொலைத்து மரணித்துப் போகும், இன்றைய மாந்தர்க்கெல்லாம் எது செல்வம்? என்பதைத் தெளிவாக உரைக்கிறது சங்கப்பாடல் ஒன்று.

> **அன்பு, அருள், வாய்மை, தூய்மை முதலானவை அகத்திறத்தன. உணவு, உடை, உறைவிடம் முதலானவை புறத்திறத்தன. இவ்விரு வகையாலும் தமிழர் வாழ்வியல் தலைசிறந்து விளங்குகிறது.**

"நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும் செல்வம் அன்று" என்று மறுத்தும், "சேர்ந்தோர் புன்கண் அஞ்சும் பண்பின் மென்கண்செல்வம்" (நற்றி,210) என்று ஆதரித்தும் செல்வத்திற்குத் தனித்ததொரு விளக்கத்தை அளிக்கிறது அப்பாடல்.

அதுமட்டுமன்றி தமக்கு நண்பரானவர் விஷத்தையே கொடுத்தாலும் அதை அமுதமாகக் கருதி உண்பவரே, விரும்பத்தக்க நாகரிகத்திற்குச் சொந்தக்காரர் என்று நாகரிகத்திற்கு தனி இலக்கணம் கூறுகிறது மற்றொரு சங்கப்பாடல். "நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்" (நற்றி.355) என வரும் பாடலே அது.

தமிழர்கள் திருமண வாழ்வையே தலைசிறந்த வாழ்வாகக் கொண்டனர். தமிழர்கள் புரிந்துகொண்ட திருமணம் என்பது தமிழர்க்கே உரித்தானது என்கிறார் பி.டி.சீனிவாச ஐயங்கார். அகநானூற்றுப் பாடல்கள் 86, 136 ஆகிய இரண்டும் குறிப்பிடும் திருமணத்தில் தீ வளர்த்தல் இல்லை, தீ வலம் வருதல் இல்லை, தட்சணை பெற புரோகிதர் புகுதல் இல்லை என்பது அவர்தம் கருத்து,

உளுந்த வடையுடன் உணவு பரிமாறியும் பந்தக்கால் நட்டுப் பந்தல்போட்டும், புதுமணல் பரப்பி, மனைவிளக்கு ஏற்றியும், மாலைகள் தோரணங்களாகி ஒரு பௌர்ணமி நாளில் விடியற்காலையில், நீர்க்குடம் தாங்கிய பெண்கள் முன்னே செல்ல, புதுப்பானை ஏந்திய பெண்கள் பின்னே வர, மணப்பெண்ணின் ஊர்வலத்தை நடத்தி திருமணச் சடங்கை முதுமகளிர் செய்தனர்.

"ஈரமலர்களையும் நெல்லையும் தூவி, கற்புநெறி வழுவாமல் வாழ்க என்றும் நல்ல பிள்ளைகளை உலகுக்குத் தந்து வாழ்க

என்றும், தன்னைப் பெற்ற பெற்றோரையும், தன் கணவனைப் பெற்ற பெற்றோரையும் பேணிப் பிணைப்பு உடையவளாக வாழ்க என்றும் முதுமகளிர் வாழ்த்துகின்றனர்".

இச்செய்தி, இல்வாழ்வின் பயனை விளக்குவதோடு, சிறந்த சமுதாய அமைப்புக்கு அதுவே அடிநாதம் என்று போற்றி வாழ்ந்தனர் தமிழர் என்பதை உணர்த்துகிறது.

செல்வத்துப் பயனே ஈதல் (புறம்.189), யாதும் ஊரே யாவரும் கேளிர் (புறம்.192), உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே (புறம்.18), நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின் (புறம்.195), பெரியோரை வியத்தலும் இலமே சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே (புறம்.192), இன்னாதம்ம இவ்வுலகம் இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே (புறம்.164) எனவமைந்த பாடலடிகள் கொடை, ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வு, எவையெல்லாம் செய்யத்தக்கன, செய்யத்தகாதன, உலகத்தியல்பு ஆகியனவற்றைச் சுட்டிக்காட்டுவதோடு தமிழர்களின் வாழ்வியலை வடித்துக்காட்டும் வைரவரிகள் எனில் மிகையில்லை.

வளமான வாழ்வுக்குச் சொந்தக்காரர்கள் தமிழர்கள். இக்கருத்திற்கு சங்கப்பாடல்கள் பல சான்று பகர்கின்றன. சோறு ஆக்கிய கொழுங்கஞ்சி ஆறு போலப் பரந்து ஓடியது (பட்டின.44–45) என்று குறிப்பிடுவதால் உணவுப் பஞ்சம் இல்லை. வாசலில் காயவைத்த நெல்லினைக் கொத்தவரும் கோழிகளை விரட்ட, பொன்னாலாகிய காதணிகளைக் கழற்றி எறிந்தனர் (பட்டின.23) என்று குறிப்பிடுவதால் செல்வ வளத்திற்கும் பஞ்சம் இல்லை என்று குறிப்பிடுகிறது சங்கப் பாடல் ஒன்று.

பண்பாடும், நாகரிகமும் வாழ்வியலை வெளிப்படுத்தும் காரணிகள். தமிழர்களின் வாழ்வியல் அகம், புறம் என்னும் இரு திறத்தது என்று முன்னரே குறிப்பிட்டோம். அகவாழ்வு பண்பாட்டையும், புறவாழ்வு நாகரிகத்தையும் வெளிப்படுத்துகின்றன.

அன்பு, அருள், வாய்மை, தூய்மை முதலானவை அகத்திறத்தன. உணவு, உடை, உறைவிடம் முதலானவை புறத்திறத்தன. இவ்விரு வகையாலும் தமிழர் வாழ்வியல் தலைசிறந்து விளங்குகிறது.

தமிழ்ப் பண்பாடு என்று கூறப்படுபவை எல்லாம் தமிழர்களுக்கு மட்டும் உரிய பண்பாடு அன்று. மனிதகுலம் அனைத்திற்கும் பொதுவானது. சாதி, மத, இன, மொழி ஆகியவற்றின் பெயரால் மனிதர்களைப் பிரித்துப் பார்த்து வாழாமல், அனைத்து ஊரும் தம் ஊரே, மக்கள் அனைவரும் தம் உறவினரே என்னும் பொதுமைச் சிந்தனைகளால் பொலிவு பெற்றவன் தமிழன். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக எழுந்த திருக்குறள் உலகப்பொதுமறையாகப் போற்றப்படுவதற்கு அதுவே காரணம்.

தமிழரின் வாழ்வில் அனைத்து நிலைகளிலும் அறம் என்ற ஒன்றே அடிப்படை. இக்கருத்திற்கு வலுசேர்க்கிறது வான்மறை தந்த வள்ளுவம். இதனை "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறம்" (குறள். 34) என்றும், "அறத்தான் வருவதே இன்பம்" குறள். 39) என்றும் குறளமுதம் குறிப்பிடுவதால் அறியலாம்.

தமிழில் தோன்றிய முதல் காப்பிய நூல் சிலப்பதிகாரம். இந்நூல், முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், புரட்சிக்காப்பியம் எனப் பலவாறாகப் போற்றப்படும் சிறப்புக்குரியது. தமிழர்களின் பலவகையான வாழ்வியலைப் பகுத்துக்கூறும் இக்காப்பியம், காப்பிய முடிவில், யாவரும் பின்பற்ற வேண்டிய சிலவற்றை அறிவுரைகளாக வலியுறுத்துகிறது. கவலை, துன்பம் ஆகியவற்றை விட்டுவிடுமாறும், தெய்வம் எது என்று தெளிவதும், அத்தெய்வத்தை ஏற்றுக் கொண்டவர்களைப் பின்பற்றுவதும், பொய் சொல்லாமையும், புறங்கூறாமையும், புலால் உண்ணாமையும், உயிர்க்கொலை புரியாமையும் (சிலம்பு.வ.கா.186–202) என பட்டியலிட்டுக் கூறுவனவெல்லாம் தமிழர் கண்ட வாழ்வியலுக்கு தக்க சான்றாவனவாம்.

தமிழிலக்கிய நெடும்பரப்பில் தமிழர் கண்ட வாழ்வியல் உண்மைகள் அளவிடற்கரியன. அவற்றில் ஒருசில மட்டும் இங்கு எடுத்துரைக்கப்பட்டன. இவையாவும் மானுட இனத்திற்கே மணிமகுடமாக ஒளிர்கின்றவை என்பதில் சிறிதும் ஐயமில்லை.



தமிழ் இலக்கியமும் போட்டித் தேர்வுகளும்

டாக்டர். சங்கர சரவணன்

இணை இயக்குநர்
தமிழ்நாடு பாடநூல் கழகம்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் அனைத்துப் பணிகளுக்கும் தமிழ் மொழிப் பாடத்தில் கட்டாயத் தாள் ஒன்று உள்ளது. இத்தாள் தகுதித் தாள் ஆகும். அதாவது, இத்தாளில் குறைந்தபட்ச மதிப்பெண் பெற்றால் மட்டுமே மற்ற தாள்கள் திருத்தப்படும். குறைந்தபட்ச மதிப்பெண் 40 விழுக்காடு ஆகும். அதே போல், தொகுதி – IV மற்றும் தொகுதி – II (குரூப் – IV & II) தேர்வுகளில் இடம்பெறும் பொதுத் தமிழ் தாளில் தமிழ் இலக்கணம், இலக்கியம் போன்ற பகுதிகளிலிருந்து குறிப்பாக பள்ளிப் பாடநூல்களில் இடம்பெற்றுள்ள செய்யுள், உரைநடை, இலக்கணம் போன்றவற்றிலிருந்து வினாக்கள் கேட்கப்படுகின்றன. இந்த வினாக்கள் அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ள பாடத்திட்டத்தையொட்டி அமைந்தபோதிலும் இந்த வினாக்களுக்கு விடையளிக்க 6 முதல் 10-ம் வகுப்பு வரையிலான தமிழ் பாடங்களில் காணப்படும் தகவல்களே அடிப்படை ஆகும். பாடத்திட்டத்தில் உள்ள ஒரு சில பகுதிகள் தற்போதைய பாடநூல்களில் இல்லாதபட்சத்தில் அவற்றை பிற நூல்களிலிருந்தோ இணையதள வாயிலாகவோ படிக்க வேண்டும்.

கட்டாயத் தமிழ் தாள் குரூப் – II தேர்வர்களுக்கு மட்டும் விரித்துரைக்கும் விடை வகையில் அமைந்துள்ளது. அதற்கென தனிப்பாடத்திட்டத்தையும், ஆணையும் வகுத்துள்ளது.

இந்திய குடிமைப்பணித் தேர்வு எழுதுபவர்களுக்கும் கட்டாய மொழித் தாள் வரிசையில் தமிழ் மொழித் தாளை தேர்வு செய்து எழுத வேண்டியுள்ளது. அந்தத் தாளும் தகுதித் தாளாகும். தகுதித்

தாள் என்ற போதிலும் இந்தத் தாளை எளிதாக எடுத்துக் கொள்ள முடியாது. பள்ளி அளவிலாவது கட்டாயம் தமிழ் படித்திருந்தால் மட்டுமே இந்தத் தாளில் குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெற இயலும்.

இந்த இடத்தில் எனது மாணவிகளில் ஒருவரான சுஜிதா குறித்து நினைவு கூற விரும்புகிறேன். சுஜிதா மிகவும் அறிவார்ந்த மாணவி. நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர். IAS தேர்வில் இரண்டு முறை முதல்கட்டத் தேர்வில் வெற்றி பெற்று முதன்மைத் தேர்வு எழுதினார். ஆனால், முதன்மைத் தேர்வில் இரண்டு முறையும் தனது கட்டாய மொழித் தாளில் குறைந்தபட்ச மதிப்பெண் எடுக்கத் தவறியதால் தகுதி இழந்தார். காரணம் பள்ளியில் அவர் இந்தி மொழிப்பாடத்தைப் பயின்றிருந்தார். ஆனால், அதில் அவருக்கு UPSC, குடிமைப்பணித் தேர்வில் கேட்கப்படும் கட்டாய இந்தி மொழித் தாளில் குறைந்தபட்ச மதிப்பெண் பெருமளவிற்கு புலமை இல்லை. இதை உணர்ந்து கொண்ட அவர் பள்ளியில் தமிழ் படிக்காமல் விட்டதை தவறு என உணர்ந்து கொண்டார்.

தமிழ் பேசவும், பேசுவதை புரிந்து கொள்ளவும் முடிந்த அவருக்கு தமிழை வாசிக்கவும், எழுதவும் கற்றுக்கொள்வது கடினமாக இருக்கவில்லை. சுமார் ஒரு மாத காலம் என்னிடம் பயிற்சி எடுத்துக்கொண்டு தொடர்ந்து தொலைக்காட்சியில் செய்திகள் பார்த்தும், செய்தித்தாள்கள் வாசித்தும் UPSC முந்தைய வருட தாள்களுக்கு பயிற்சி எடுத்தும் மூன்றாவது முறை தேர்வில் வெற்றிகரமாகத் தேறினார்.

தற்போது, கர்நாடக மாநிலத்தில் அவர் IPS அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார். அவர் வெற்றி பெற்றபோது எனது இல்லத்திற்கு வந்து அவரது பெற்றோர்கள் பள்ளிப் பருவத்தில் சுஜிதாவை தமிழ் படிக்க வைக்காமல் போனதற்காக வெகுவாக வருத்தப்பட்டார்கள். வெகுவிரைவில் அவருக்குப் பயிற்சி அளித்து வெற்றி அடைய வைத்ததற்காக எனக்கு நன்றி சொன்னார்கள்.

இது குறித்து பிரபல தமிழ் வார இதழான ஜூனியர் விகடன் 'கைவிட்ட இந்தி, கைகொடுத்த தமிழ்' என்ற கட்டுரை ஒன்றையும் வெளியிட்டது.

> **இந்திய குடிமைப்பணித் தேர்வில் தமிழை விருப்பப் பாடமாகத் தேர்ந்தெடுப்பவர்கள் சிலர்தான். அவர்களிலும், தமிழைக் கவிதை நடையில் எழுதுபவர்கள் வெகு சிலரே.**

இப்போதும் சுஜிதாவும் நானும் உலகத் தாய்மொழி தினத்தன்று உரையாடிக் கொள்வோம்.

கடந்த 20 ஆண்டுகளாக இந்தியக் குடிமைப் பணித் தேர்விற்கு தமிழை விருப்பப் பாடமாக எடுக்கும் மாணவர்களோடு தொடர்ந்து பழகியும், பயிற்சி கொடுத்தும் வருகிறேன். தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ் மொழி வரலாறு, தமிழ் பண்பாட்டு வரலாறு, இலக்கிய உத்திகள், இலக்கியத் திறனாய்வு அணுகுமுறைகள், நாட்டுப்புற இலக்கியம், மொழிபெயர்ப்பு, ஒப்பியல் இலக்கணம் மற்றும் இதழியல் உள்ளிட்ட பகுதிகளைப் பாடமாகக் கொண்டது முதல் தாள்.

இரண்டாம் தாளில் குறுந்தொகை (25 பாடல்கள்), புறநானூறு (18 பாடல்கள்), திருக்குறள் (அரசியல் மற்றும் அமைச்சியல்), சிலப்பதிகாரம் (மதுரைக் காண்டம்), திருவாசகம் (நீத்தல் விண்ணப்பம்), திருப்பாவை, கண்ணன் பாட்டு, குடும்ப விளக்கு, கறுப்பு மலர்கள், ஏ தாழ்ந்த தமிழகமே!, அறமும் அரசியலும், குரு பீடம், சித்திரப்பாவை, மலையருவி, முத்துப்பட்டன் கதை போன்றவை பாடப்பகுதிகளாக உள்ளன. இவற்றிலிருந்து கேட்கப்படும் கேள்விகளுக்கு விமர்சனப் போக்கில் விடை எழுத வேண்டும். விடை சொந்த நடையில் கருத்துச் செறிவுடன் தக்க அகச் சான்றுகள் மற்றும் புறச் சான்றுகளோடு அமைதல் வேண்டும். தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவதற்கு பரந்துபட்ட வாசிப்பும், நல்ல எழுத்துப் பயிற்சியும் தேவை. எழுத்துப் பிழை இல்லாமல் எழுதுதல் வேண்டும். கையெழுத்து அழகாக இருந்தால் நல்லது. கண்டிப்பாக அழகாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால், படிப்பதற்கு ஏற்றாற்போல் இருக்க வேண்டும். சுமாரான கையெழுத்தோடு நல்ல கருத்துச்செறிவோடு விடை எழுதி நல்ல மதிப்பெண் பெற்று, வெற்றி பெற்ற நண்பர்களை



நான் அறிவேன். அனைத்து கேள்விகளுக்கும் விடை எழுதுவதற்கு நேர மேலாண்மை மிக மிக அவசியம். எனது மாணவர்கள் சிலரின் வெற்றி இரகசியங்களை பகிர விரும்புகிறேன்.

தம்பி ஆனந்தகுமார் 2003–இல் தேர்வானவர். பரந்துபட்ட வாசிப்பும், சொல்லும் கருத்துக்களை நன்கு உள்வாங்கிக் கொண்டு சொந்த நடையில் துணிச்சலாக விடை எழுதுவது இவரது தனித்தன்மை.

2010இல் வெற்றி பெற்ற தங்கை சண்முகப்ரியா ஆழமாகப் படிப்பவர், அதே சமயத்தில் நான் கூறும் கருத்துக்களை அளவறிந்து ஏற்ற இடங்களில் சரியாகப் பயன்படுத்துபவர். நேர மேலாண்மை இவரின் குறிப்பிடத்தக்க திறமைகளில் ஒன்று.

2014இல் இந்திய குடிமைப்பணித் தேர்வை முழுமையும் தமிழில் எழுதி வெற்றி பெற்ற தம்பி வி.பி.ஜெயசீலன் இலக்கிய ஆர்வமிக்கவர், கவிதைகளை விரும்பி வாசிப்பவர், கவிதைகளும் எழுதக் கூடியவர். நல்ல மேடைப் பேச்சாளர். ஒரு முறை இவர் மாதிரித் தேர்வு ஒன்றில் எழுதிய விடை கவிதை நடையில் இருக்க அதைத் திருத்திய பேராசிரியர் ஒருவர் அவ்வாறெல்லாம் எழுதக் கூடாது என்று கண்டிக்க, அதன் பின்னர் என்னை சந்தித்து தனது நடையில் தவறு யாதென வருத்தத்துடன் வினாவினார்.

இந்திய குடிமைப்பணித் தேர்வில் தமிழை விருப்பப் பாடமாகத் தேர்ந்தெடுப்பவர்கள் சிலர்தான். அவர்களிலும், தமிழை கவிதை நடையில் எழுதுபவர்கள் வெகு சிலரே. எனவே, தாராளமாக எழுதலாம் தம்பி என்று அவரை ஊக்குவித்தேன். சிறப்பாக பல பயிற்சித் தேர்வுகளை எழுதிக் காட்டினார். சுட்டிக்காட்டிய தவறுகளை அடுத்த தேர்வில் வெட்டிக் காட்டினார். அதன் விளைவு, இந்திய குடிமைப்பணித் தேர்வில் தமிழகத்திலேயே முதல் மாணவராகத் தேர்வானார்.

இன்னும் சில தம்பி, தங்கைகளோடு தமிழ் இலக்கியப் பாடத்தால் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் அதனால் இந்திய குடிமைப்பணித் தேர்வில் அவர்களடைந்த வெற்றியையும் குறித்து விரிவாக எழுத ஆசையுண்டு. ஆனால், விரிவஞ்சி இப்போதைக்கு விட்டு வைக்கிறேன்.

எதிர்காலத்தில் இதுபோல ஒரு கட்டுரை எழுதும் பொழுது தங்கை ஒற்றுப் பிழை உமா, அடாது மழை பெய்தாலும் விடாது வந்து தேர்வெழுதிய தம்பி மதுபாலன், திருக்குறளை உகப்பு வாய்ப்பில் (Choice) விட்டுவிட்டு வந்ததற்காக என்னிடம் திட்டு வாங்கிய இன்னொரு தம்பி, வகுப்பு முடிந்து நான் வாசலுக்கு வந்தாலும் என்னிடம் ஐயம் கேட்டுக்கொண்டே துரத்தி வந்து, அந்த துரத்தலின் அர்த்தத்தை தன் வெற்றி மூலம் நிரூபித்த தம்பி சரவணன், மாதிரித் தேர்வுக்குப் பின் நான் கொடுக்கும் விரிவுரைகளை கேட்டுப் பயன்பெற்ற தம்பி முருகானந்தம், ஒரு தேர்வில் செய்த பிழைகளை ஓயாமல் ஆராய்ந்து மறு தேர்வில் தன்னைத் திருத்தி வெற்றி பெற்ற தங்கை அலர்மேல் மங்கை, சிதைவிடத்து உல்கார் உரவோர் என்று நான் சொன்ன குறளால் உத்வேகம் பெற்ற தம்பி சுப்புராஜ், படித்துமுடித்த பின்பு பயிற்சித் தேர்வுகள் மூலம் கற்க வேண்டிய பாடங்கள் நிறைய இருந்தன என்று சொன்ன தம்பி உதயகுமார் போன்றோரைப்பற்றியும் நான் இந்தக் கட்டுரையில் இப்போது நினைவு கூற மறந்துவிட்ட – ஆனால் என் மூளையின் மூலையில் (அடிமனதில்) பதிந்திருக்கும் வேறு சில தம்பி தங்கைகளின் இந்திய குடிமைப்பணித் தேர்வில் தமிழ் இலக்கியப் பாடம் ஏற்படுத்திய தாக்கம் குறித்து இன்னொரு கட்டுரையில் பார்க்கலாம். இப்போதைக்கு இக்கட்டுரை முடிகிறது. ஆனால் இலக்கியம் தரும் இப்(போதை)க்கு எப்போதும் முடிவில்லை.



சங்கத் தமிழில் பெண்பாற் புலவர்கள்

சக்தி ஜோதி

தமிழ்மொழி தோன்றியதிலிருந்து காலந்தோறும் மாற்றங்களுக்கு உட்பட்டே வளர்ந்திருக்கிறது. தனி ஒரு மனிதன், தான் விரும்பியபடி மொழியை மாற்றிவிட இயலாது .ஆனால் ஒவ்வொரு காலகட்டத்திலும் அந்தந்த காலத்தின் சமூக, அரசியல் காரணிகளினால் மொழி அடைந்திருக்கும் மாற்றங்கள் மிக அதிகம். இரண்டாயிரம் ஆண்டுகளாக உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ள பல்வேறு அரசியல் மாற்றங்களுக்குப் பிறகும் உலகத்து ஆதி மொழிகளில் முதன்மையானதாக தமிழ்மொழி இருக்கிறதென்றால் அதற்குகாரணம் சங்க இலக்கியம்தான்.

இயற்கையின் மிக நுட்பமான அசைவின் வழியே மனித மன உணர்வினை வெளிப்படுத்தும் வகையிலானவை; பழந்தமிழ்ச் சொற்களின் வலிமை, அவை உருவாக்குகிற உணர்வுகள், நவீனக் கவிதைகளில் கவனிக்கப்படுகிற சொற்களின் இடைவெளியில் அமைந்துள்ள மௌனம் ஆகியனவற்றை சங்க இலக்கியங்களில் காண முடிகிறது.

மனித வாழ்வுக்கு அடிப்படையாக காதல், வீரம், அறம் ஆகியன அமைந்திருக்கவேண்டும் என்பதையும், ஆண் பெண் இருவரும் இணைந்து வாழ்வதென்பது இயற்கை அமைத்துத் தந்திருக்கும் உடலியற் காரணி. அதனால் நிகழ்கிற உளவியலை, மனம் உணர்கிற இன்பம், துன்பம் சார்ந்த பல்வேறு புரிதல்களை சங்கப்பாடல்கள் உணர்த்துகின்றன.

சங்க காலமென்பது காதலும் போரும் என்றமைந்திருக்கக் காரணம் அருகிலிருக்கும் இன்னொரு இனக்குழுவின் நிலங்களைக் கைப்பற்றவோ, தங்களுடைய நிலங்களைப் பாதுகாக்கவோ போரிடவேண்டிய அவசியம் ஒவ்வொரு இனக்குழுவின் தலைவனாக இருக்கும் ஆணுக்கு இருந்தது. எனவே சங்க வாழ்வியலை அகம், புறம் எனப் பிரித்து வகைப்படுத்தி, புறவாழ்வில் நிலத்தை ஆளுமை செய்வதும், அகவாழ்வில் பெண்ணை ஆளுமை செய்வதுமே ஆண் படைப்பின் நோக்கமாகப் புனையப்பட்ட கருத்தியல் சங்க இலக்கியப்பாடல்களில் இழையோடுவதைக் காணலாம்.

நிலமும், பெண்ணும் வளமையின் குறியீடாகவும், அந்த வளமையை மேலாதிக்கம் செய்வது ஆணின் கடமையாகவும் புனையப்பட்டதோடு மட்டுமல்லாமல் அந்தக் கற்பிதங்களை அவ்விதமாகவே பெண்கள் ஏற்றுக் கொண்டதாக அமைக்கப்பட்டதுதான் சங்க இலக்கியத்தின் நுண் அரசியல். உரிப்பொருளின் உணர்வுகள் பெண் சார்ந்து உருவாக்கப்பட்டு, பெண் என்பவள் ஆணுக்கானவள், ஆணுக்காக இருத்தல், இரங்கல் ஆண்பிரிவால் துயருறுதல் என கட்டமைக்கப்பட்டு, அவற்றைப் பெண்கூற்றுகள் வழியாக வெளிப்படுத்தச் செய்த விதம்தான், ஆண் மையக் கருத்தியலின் வெற்றி.

சங்கப்பாடல்களை ஆண் எழுதிய பாடல்கள், பெண் எழுதிய பாடல்கள் என பாகுபடுத்தி ஆழ்ந்து வாசிப்பதன் வழியாக சமகால சமூகத்தின் குறிப்பாக பெண்களின் சமூக, பண்பாட்டுப் புரிதல்களையும் உளவியல் சிக்கல்களுக்கு விளக்கங்களையும் உணர்ந்துகொள்ள இயலும்.

இன்றும்கூட பெண்கள் தங்கள் துறையாக எழுத்தைத் தேர்வு செய்வதற்கும், தொடர்ந்து இயங்குவதற்கும் எவ்விதமான இடர்பாடுகளையெல்லாம் எதிர்கொள்ளவேண்டியிருக்கிறது. சங்க காலத்தில் விறலியர் மரபு என்பது பரவலாக இருந்திருக்கிறது. கற்புடை மகளிருக்கும், பரத்தமையில் ஒழுகிய பெண்களுக்கும் இல்லாத ஒரு வகையிலான கலை வெளிப்பாட்டுச் சுதந்திரம் விறலியருக்கு இருந்திருப்பதாகத் தெரிகிறது.

அம்மரபின் முதன்மையான அடையாளமாக ஔவையை ஏற்றுக்கொண்டு, சங்கப் பெண்களின்



பாடல்களை வாசிக்கும்போது பெண்பாற் புலவர்களின் படைப்புகள் தன்னியல்பாக அமைந்திருந்திருப்பதை உணரமுடிகிறது. பிற்காலங்களில் பல்வேறு சமூக, அரசியல், பண்பாட்டுக் காரணிகளால் பெண்ணெழுத்து என்பதே மெல்லமெல்லத் தேய்ந்தொழிந்தது. மீண்டும் இருபதாம் நூற்றாண்டில்தான் பெண்களின் அடிப்படைக்கல்வியும், எழுத்தும் தலையெடுக்கத் தொடங்கியது. இன்றைய பெண் எழுத்துகள் குறித்த புரிதல்களை சங்கப்பெண் கவிகள் வழியே அடையலாம்.

சங்கப்பெண்பாற் புலவர்களின் அறுதியிட்ட எண்ணிக்கை தான் குறிப்பிட முடிகிறது. ஏனெனில் உ.வே.சா., எஸ்.வையாபுரி பிள்ளை, ஔவை துரைசாமி பிள்ளை போன்ற தமிழறிஞர்கள் பலரிடமும் அது குறித்த மாறுபட்ட கருத்துக்கள் இருந்தன. தாயம்மாள் அறவாணனின் "மகடூ முன்னிலை" நூலை அடியொற்றி, சங்கப் பெண்பாற்புலவர்கள் 45 பேர் என வரையறுத்துக் கொள்ள இயலுகிறது. இவர்களில் ஔவையார்

தான் எண்ணிகையில் அதிகமான பாடல்களைப் பாடியுள்ளார்.

சங்க இலக்கியப்பாடல்களில், குறிப்பாக அகப்பாடல்களில் பெயர் தெரியவில்லை என்றோ, பெயர் குறிப்பிடப்படாமலோ தொகுக்கப்பட்டுள்ள பாடல்கள் பெண் கவிகள் எழுதிய பாடல்களாக இருக்கவும் வாய்ப்புள்ளது. தவிர, செம்புலப் பெயல் நீரார், கல்பொரு சிறுநுரையார், அணிலாடும் முன்றிலார் என பாடல் வரிகளையே பெயராகக் குறிப்பிடப்பட்டுள்ள பாடல்களை ஆண்கள் எழுதியதாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற பாடல்களில் சில பெண்பாற் புலவர்களின் பாடல்களாக இருக்க வாய்ப்புள்ளதென கணக்கில் கொண்டு சங்கப்பாடல்களை மறுவாசிப்பு செய்தால் பெண் கவிகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்.

தாய்வழிச் சமூக எச்சங்கள் மிச்சமிருப்பதை சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களின் வழியே உணரமுடியும். பேறுகாலக் குருதியைக் கண்ணில் பார்த்து குழந்தைகளுக்கு பாலூட்டி வளர்க்க நினைக்கிற பெண், அத்தனை உயிர்களையும் காக்க நினைக்கிறவளாக, பகிர்ந்து கொடுப்பவளாக இருந்தாள். உயிர்களைப் பேணிப்பாதுகாக்க நினைக்கிற பெண் என்பவள் போரினை விரும்புகிறவள் அல்ல. என்றபோதிலும் அடிப்படையில் பெண் என்பவள் மிக வலிமையானவள். எனவே ஆண்களை வழி நடத்துகிறவளாக இருக்கிறாள். நிலத்தையும் குடும்பத்தையும் காக்கத் தேவையான உடல்வலிவும் மனவலிவும் ஏற்படும் வகையில் ஆணின் செயல்பாடுகளை ஊக்கப்படுத்துகிறவளாக அவனுடனிருக்கிறாள். அவ்விதமே அவனுக்கு வீரம் சார்ந்த செயல்பாடுகளை பயிற்றுவிக்கிறாள்.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே" (புறம் – 312) என்ற பொன்முடியாரின் பாடலில் எல்லோரும் ஓரோர் கடமையிருக்க ஒரு தாய்க்கு மட்டும் ஈன்று தருதலும், புற வாழக்கைக்கான அடிப்படைக்கல்வியைக் கற்றுத் தருதலும் தலையாய கடமையாகக் குறிப்பிடப்படுகிறது. அந்தக் குழந்தையை சான்றோனாக்குதல் தந்தையின் கடமையாக இருக்கிறது. ஒரு குழந்தையைச் சான்றோன் ஆக்குதல் அத்தனை எளிதா என்ன. அதற்கான அடிப்படையான பொருள் தேடலில் அந்தக் குடும்பத்து ஆண்

> **நிலமும், பெண்ணும் வளமையின் குறியீடாகவும், அந்த வளமையை மேலாதிக்கம் செய்வது ஆணின் கடமையாகவும் புனையப்பட்டதோடு மட்டுமல்லாமல் அந்தக் கற்பிதங்களை அவ்விதமாகவே பெண்கள் ஏற்றுக் கொண்டதாக அமைக்கப்பட்டதுதான் சங்க இலக்கியத்தின் நுண் அரசியல்.**

பெருமளவு நேரத்தைச் செலவு செய்கிறான்.

ஒரு தலைவனின் பண்பாக, சங்கப்பெண்பாற் புலவர் குறமகள் இளஎயினி குறிப்பிடுகிற ஒரு பாடலில்,

"தமர்தன் தப்பின் அதுநோன் றல்லும்,
பிறர்கை யறவு தான்நா ணுதலும்,
படைப்பழி தாரா மைந்தினன் ஆகலும்,
வேந்துடை அவையத்து ஒங்குபு நடத்தலும்,
(புறம் – 157)

பாடலில் பொருள், தம்மைச் சார்ந்தவர் பிழை செய்தால் அதனைப் பொறுத்துக்கொள்வதும், பிறர் வறுமை கண்டு தான் நாணுதலும், படை நடத்தும் காலத்தில் பிறர் பழிக்கப்படாத வலியனாதலும், வேந்தர் அவைக்களத்தில் பெருமையுடன் நடத்தலும் ஆகியன அமைந்திருக்க வேண்டுமெனக் குறிப்பிடுகிறார். இன்றைக்குவரையில் ஒரு குடும்பத்தின் தலைவனைப் போற்றுகிற செயல்பாடு நிகழ்ந்து கொண்டிருப்பதன் காரணங்களுக்குச் சாட்சியாக இதைக்கொள்ளலாம்.

எனவேதான், "வினையே ஆடவர்க்கு உயிரே, வாள்நுதல் / மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர் என" (குறுந் – 135) எனக் குறிப்பிடப்படுகிறது. என்றாலும் பொருள்தேடிச் செல்கிற தலைவனின் பிரிவைத் தாங்க இயலாத சங்கத் தலைவிகள் இருப்பதை அக இலக்கியம் முழுக்கக் குறிப்பிடப்பட்டுள்ளது. பொருள்வயின் பிரிதல் இன்றியமையாதது என்பதால் தோழி தலைவியை ஆற்றுப்படுத்துகிறாள் என்பதை ஊண் பித்தையார் என்கிற பெண்பாற் புலவர் எழுதியுள்ள "உள்ளார் கொல்லோ தோழி

உள்ளியும் வாய்ப்புணர் வின்மையின் வாரார் கொல்லோ" (குறுந் – 23) என்ற பாடலின் வரிகளில் அறிய முடியும்.

ஆனாலும் பசலை உணீஇயர் வேண்டும் / திதலை அல்குல் என் மாமை கவினே" (குறுந் – 27), "துயர் பொறுக்கல்லேன் தோழிநோய்க்கே" (குறுந் – 224), "காமம் நெரிதர நாணம் கைநில்லாதே" (குறுந் – 149)., "முட்டுவேன் கொல், தாக்குவேன் கொல் ஆசு, ஓல் என கூவுவேன் கொல்" (குறுந் – 28) என சங்க இலக்கியம் சுட்டுகிற தலைவிகள் காதலில் தோய்ந்து, பலவீனமான மனதுடன், தலைவன் வரவுக்கு ஏங்கித்தவிக்கும் காட்சிகள் பல உண்டு.

முல்லை மலர்வதையும், மழைக்காலம் தொடங்கிவிட்டதையும் நம்பாமல் தலைவன் சொல்லியபடி திரும்ப வராததால் இன்னமும் மழைப்பருவம் தொடங்கவில்லையென பருவங்களை நம்பாமல் தலைவன் சொல்லையே எல்லாவற்றிற்கும் மேலாக நம்புகிற தலைவிகளை முல்லைத்திணைப் பாடல்களில் காணமுடிகிறது.

அகப்பாடலில் பெண்ணைப்பற்றிய சித்திரங்கள் இவ்வாறிருக்க, புறப்பாடல்களில் குறிப்பிடப்படுகிற தாய், மனைவி ஆகிய பெண் படைப்புகள் பெண்ணின் மனவலிமையைச் சுட்டும்விதமாக, போருக்கு தன் தலைவனையும், மகனையும் மனமுவந்து அனுப்பி வைப்பதைக் குறிப்பிடுகின்றன. பெண்பாற் புலவர்களின் புறப்பாடலில் உள்ளுணரும் குறிப்பு ஒன்றுண்டு, தாய்நாட்டைக் காக்கும் போரில்தான் பால்மணம் மாறாத மகனிடம்கூட ஒரு தாய் வேலினைக் கொடுத்து போருக்கு அனுப்புகிறாள்.

"கெடுக சிந்தை கடிது இவள் துணிவே" (புறம்–279) எனும் ஒக்கூர் மாசாத்தியாரின் பாடலில், "ஒரு பெண்ணின் தந்தை போர்க்களத்தில் முன்னொருநாள் யானையை வென்று இறந்து விடுகிறான். அவளுடைய கணவன் பின்னொருநாள் பசுக்கூட்டத்தை வென்றபின்பு இறந்து போகிறான். இப்போது போர்முரசு கேட்கிறது. உடனே தன்னுடைய சின்னஞ்சிறு மகனை, வெள்ளாடை உடுத்தி, வேலினைக் கையில் கொடுத்து போருக்கு அனுப்புகிறாள்"


காவற்பெண்டு எழுதியுள்ள பாடலில்,

"புலி சேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே"
(புறம் – 86)

அதாவது புலி தங்கியிருந்து பின்னர் போகிய மலைக்குகை போல, அவனைச் சுமந்து பெற்ற வயிறும் இருப்பதாக, அதனால் மகன் போர்க்களத்தில்தான் இருப்பானெனக் குறிப்பிடுகிறார். "ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனனே"(புறம் – 278) என்று குறிப்பிடுகிற காக்கைப்பாடினியார் பாடலில் "முதியவள் ஒருத்தி தன்னுடைய மகன் போர்க்களத்தில் புறமுதுகிட்டான் எனக் கேட்டு, அவன் அவ்வாறு செய்திருந்தால் அவனுக்குப் பாலூட்டிய என்னுடைய முலையை அறுத்தேறிவேன்" என்று வாளுடன் ஒருதாய் போர்க்களம் செல்கிறாள். "அங்கே மார்பில் பட்டகாயத்துடன் இறந்து கிடக்கும் மகனைப் பார்த்து அவனைப் பெற்ற நாளிலும் அந்தத்தாய் மகிழ்ந்ததாகப்" பாடியுள்ளார்.

அகமும் புறமும் எனப் பகுக்கப்பட்டிருக்கும் சங்கப்பாடல்களில் பெரும்பாலும் பெண்ணின் மனம் அகம் சார்ந்த பாடல்களில்தான் அறிய இயலும். புறப்பாடல்களிலும் கூட அகம் சார்ந்த உணர்வோ அல்லது பெண் உடல் பற்றிய தன்னுணர்வோ இழையோடியிருப்பதை சங்கப் பெண்பாற் புலவர்களின் மூலமாக அறிய இயலும்.

காலத்தின் சூழலில் எல்லாமும் கணினி மயமாக்கப்பட்ட நிலையிலும் ஆதி மொழியான தமிழ் தன்னை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதற்கு காரணம் வாழ்வின் சாரம் மிகுந்த சங்கப்பாடல்களின் சிறு துளியை இன்றுவரையில் எழுதப்படுகிற எழுத்துக்கள் தனக்குள் ஏற்றுக்கொண்டிருக்கிறது. சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் மனத்தை இன்றைய பெண்கவிஞர்கள் சிலரின் பாடல்களில் மொழித் தொடர்ச்சியாகப் புரிந்து கொள்ளலாம்.



தமிழ் இலக்கிய ஆய்வுகளின் போக்கு

கல்யாணராமன்

இன்றுவரை தமிழில் நிகழ்ந்துள்ள ஆய்வுகளைப் பின்வருமாறு இருபது தலைப்புகளில் தொகுத்துக் காணலாம். [இவற்றில் அடங்காதவை என்று ஏதாவது காணப்பட்டு சுட்டிக்காட்டப்பட்டால், அவற்றையும் இணைத்துக்கொள்ளலாம்].

1. தொல்காப்பிய ஆய்வுகள்
2. பிற இலக்கண நூல் ஆய்வுகள்
3. சங்க இலக்கிய ஆய்வுகள்
4. திருக்குறள் ஆய்வுகள்
5. பிற பதினெண்கீழ்க்கணக்கு நூல் ஆய்வுகள்
6. காப்பிய ஆய்வுகள்
7. பக்தி இலக்கிய ஆய்வுகள்
8. சித்தர் பாடல்களைப் பற்றிய ஆய்வுகள்
9. சிற்றிலக்கிய ஆய்வுகள்
10. கோயில் மற்றும் தல புராண ஆய்வுகள்
11. உரையாசிரியர்களைப் பற்றிய ஆய்வுகள்
12. இருபதாம் நூற்றாண்டு மரபுக் கவிஞர்களைப் பற்றிய ஆய்வுகள்
13. பதிப்பு மற்றும் பாட பேத ஆய்வுகள்
14. புத்திலக்கிய அல்லது நவீன இலக்கிய ஆய்வுகள்
15. பயண மற்றும் கடித இலக்கிய ஆய்வுகள்
16. செப்பேடு மற்றும் கல்வெட்டு ஆய்வுகள்

17. இசைத் தமிழ் மற்றும் நாடகத் தமிழ் பற்றிய ஆய்வுகள்
18. ஓவியம், சிற்பம், நடனம் உள்ளிட்ட நுண்கலை ஆய்வுகள்
19. மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் பற்றிய ஆய்வுகள்
20. இதழியல் தமிழ், ஊடகத் தமிழ் மற்றும் திரைத் தமிழ் பற்றிய ஆய்வுகள்

மேற்காட்டப்பட்ட தலைப்புகளைப் பார்த்தாலே, 'தமிழ் ஆய்வு' என்பது எவ்வளவு நீண்ட மற்றும் நெடிய பரப்பிற்குரியது என்பதை அறிந்துகொள்ளலாம். இவை ஒவ்வொன்றைப் பற்றியும் ஒரு நூல் அளவுக்கு விரித்தெழுத முடியுமெனினும், இங்கே இக்கட்டுரையின் அளவு கருதி, மிக மிகச் சுருக்கமாக, தனிமனிதர்களின் பெயர்களைத் தவிர்த்து, பல்வகை ஆய்வுப் போக்கை மட்டுமே கவனப்படுத்தி, ஒரு பருந்துப் பார்வையிலான மிக எளிய குறிப்புகள் மட்டுமே முன்வைக்கப்படுகின்றன.

உலகின் பல்வேறு மொழிகளின் முதல் இலக்கண நூல்களோடு ஒப்பிடும்போது, மிகுந்த தனித்தன்மையுடன் தொல்காப்பியம் திகழ்வதும், தொல்காப்பியத்தின் பொருளதிகாரப் பகுப்பு தமிழுக்கே உரிய சிறப்பென்பதும், தொல்காப்பியத்திற்கு முன்பே ஒரு செழுமையான புலமை மரபு தமிழில் செயல்பட்டதற்குச் சாட்சியமாகத் தொல்காப்பியம் நிலைத்திருப்பதும், இன்றைய மொழியியல் கொள்கைகளோடும் சூழலியல் கொள்கைகளோடும் பெருமளவுக்குத் தொல்காப்பியம் ஒத்துப் போகும் திறமும் இதுகாறுமான தொல்காப்பிய ஆய்வுகள் வழிக் கண்டறியப்பட்டுள்ளன.

தொல்காப்பியத்தை வெறும் இலக்கண நூலாக மட்டும் காணாமல், 5000 ஆண்டு பழைமை கொண்ட தமிழ் பண்பாட்டின் மெய்யியல் நூலாகவும், இன்றைய உலக ஒழுகலாறுகள் பலவற்றுக்கு தடமமைத்துத் தந்த அறிவியல் பார்வையை வலியுறுத்தும் நூலாகவும் நிறுவும் முயற்சி இனி வரும் புதிய ஆய்வுகளில் வெளிப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

சங்க இலக்கியம் ஒரு சமயச்சார்பற்ற இலக்கியமாகத் திகழும் போக்கு இன்று நிறுவப்பட்டுள்ளது. அதேவேளையில் சைவம், வைணவம், சமணம், ஆசீவகம், பௌத்தம், உலகாயதம் எனப் பல சமயக் கருத்தியல்களின் தொடக்கநிலைக் குறிப்புகள் சங்க இலக்கியங்களில் ஆங்காங்கிருப்பதும் ஆராயப்பட்டுள்ளது. தொல்காப்பியம் வலியுறுத்தும் திணைக்கொள்கை, சங்க இலக்கியங்களின் உயிர்நாடிப் பண்பாகத் திகழ்வதும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

> **சித்தர் இலக்கியங்களை வெறும் கலகக் குரலாக மட்டும் அணுகும் ஆய்வுகள் வந்துவிட்டன. அவை கலகக் குரல்கள் எழுப்பியவை என்பதில் எந்தவித ஐயமும் இல்லையெனினும், அவற்றின் தனித்த புரட்சிகரக் கருத்தியல் சாதி புரையோடிய தமிழ்ச் சமூகத்தில் எவ்வாறு சாத்தியமாயிற்று என்பது பற்றிய நுணுக்கமான நவீன ஆய்வுகள் நமக்குத் தேவைப்படுகின்றன.**

சங்க இலக்கியங்களில் தாவரங்கள், பறவைகள், மன்னர்கள், போர்கள், புலவர்கள், தலைவன், தலைவி, தோழி, பாங்கன், செவிலித்தாய், நற்றாய் முதலிய பாத்திரப் புனைவுகள் பற்றியெல்லாம் நிறைய ஆராய்ந்துவிட்டார்கள். பல்வேறு தரவுகளை இனங்கண்டு பட்டியலிடும் பணிகள் கணினியின் வருகைக்குப் பிறகு மிகவும் எளிதாகிவிட்டன. எனவே, சங்க இலக்கியங்களைப் பற்றிய எதிர்கால ஆய்வுகள் என்பவை, அடிப்படையான முதல்நிலை ஆய்வுகளைக் கடந்து ஆழமான மேலாய்வுகளுக்குப் போக வேண்டிய நிலை இன்று உருவாகியுள்ளது.

இந்திய நிலப்பரப்பில் தமிழர்களின் தொன்மைக்கும் தனித்தன்மைக்கும் அதேவேளையில் உலக அளவிலான மனிதநேயப் பண்பாட்டிற்கும் சங்க இலக்கியங்களின் பங்களிப்பை அறிவியல் கண்ணோட்டத்துடன் விளக்கியுரைக்க வேண்டிய ஆய்வுத் தேவையை இனிவரும் ஆய்வுகள் நிறைவு செய்தாக வேண்டும். இதற்குக் கீழடி ஆய்வுகளும், இன்னும் பூம்புகார் முதலிய இடங்களில் கடல்

அடியில் நிகழ்த்தப்பட வேண்டிய அகழாய்வுகளும் அவசியமாகின்றன.

எனவே, நமக்குக் கிடைத்துள்ள தொன்மையான இலக்கியச் சான்றாதாரங்களை மெய்ப்பிப்பதற்கு மண்பானைக் கீறல்கள், பெருங்கற்கால மண்டையோடுகள், நடுகல்கள், குகை மற்றும் பாறை ஓவியங்கள், சுவரோவியங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், விரிவான கடலடி ஆய்வுகள், கார்பன் டேட்டிங், வெளிநாட்டார் பயணக் குறிப்புகள் முதலிய பல்துறை சார்ந்த தரவுகளையும் கணக்கிலெடுத்து ஆராய வேண்டிய புலமைத் திறம் இன்றைய சங்க இலக்கிய ஆய்வாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இது உலகளாவிய ஓர் ஆய்வுப் புலமாகவும் இனி வளரும் சூழல் ஏற்பட்டுள்ளதைத் தமிழாய்வின் நல்லூழாகவே கருத வேண்டும்.

காப்பிய ஆய்வுகளைப் பொறுத்தவரையில், பாத்திரப் புனைவுகளுக்கும் இலக்கிய நயம் பாராட்டலுக்கும் முதன்மையளிக்கும் ஆய்வுகளே தமிழில் பரவலாக நிகழ்ந்துள்ளன. இவற்றைக் கடந்த நிலையில், காலத்துக்கும் கருத்துக்குமான ஒத்திசைவுகளையும் முரண்பாடுகளையும் தேடித் தொகுக்கும் ஆய்வுகள் இனி நிகழ்த்தப்பட வேண்டும் என்பது நமது எதிர்பார்ப்பாகும். இதேதான், பக்தி இலக்கிய ஆய்வுகளிலும் நடந்திருக்கிறது. பக்தி இலக்கிய ஆய்வுகளில், பக்தியைவிடவும் குறிப்பிட்ட சமயக் கருத்தியல்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன என்பதும், அந்த சமய வட்டத்துக்குள் அடங்காத பிறரின் மீது எத்தகைய பார்வை முன்வைக்கப்படுகிறது என்பதும், அப்போது நிலவிய சமூகப் பொருளாதாரக் காரணிகளின் அழுத்தம் பக்தி இலக்கியங்களில் எவ்வாறுள்ளது என்பது பற்றிய ஆய்வுகளும் இனிமேல்தான் வரவேண்டும். 'கோயில்' என்ற சமய நிறுவனம் பற்றிய, அதன் உள்ளிருந்தவர் மற்றும் வெளித்தள்ளப்பட்டவர் பற்றிய சமூகப் பிரக்ஞையோடு, பக்தி இலக்கிய ஆய்வுகளில் அவற்றின் அறவியல் பின்னணி குறித்து மிகவும் ஆழமாக விவாதிக்கப்பட வேண்டும்.

சித்தர் இலக்கியங்களை வெறும் கலகக் குரலாக மட்டும் அணுகும் ஆய்வுகள் வந்துவிட்டன. அவை கலகக் குரல்கள் எழுப்பியவை என்பதில் எந்தவித ஐயமும் இல்லையெனினும், அவற்றின் தனித்த புரட்சிகரக் கருத்தியல் சாதி புரையோடிய தமிழ்ச் சமூகத்தில் எவ்வாறு சாத்தியமாயிற்று என்பது பற்றிய நுணுக்கமான நவீன ஆய்வுகள் நமக்கு தேவைப்படுகின்றன. 14 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழில் பெருகிய சிற்றிலக்கியங்களின் சமுதாயப் பின்னணி குறித்தும் விரிவாக ஆராய வேண்டியுள்ளது. நிலவுடைமைச் சமூகத்தின் இன்பநெறிக் கொள்கையின்பாற்பட்டவையாகச் சிற்றிலக்கியங்களைக் காணலாம். இவற்றை வகைதொகைப்படுத்தும் ஆய்வுகளே தமிழில் அதிகம் நிகழ்ந்துள்ளன. பேரரசுகள் இல்லாத நிலையில், வெளிப்படையெடுப்புகளும் பிற மொழியாதிக்கமும் குறுக்கிட்ட நிலையில், சிற்றிலக்கியங்களைப் புனைவதில் நிலவிய கலைக் கோட்பாடுகளை வரையறுக்கும் ஆய்வுகளுக்காகத் தமிழுலகம் காத்திருப்பதாகக் கூறலாம்.

நாவல், சிறுகதை, நவீன கவிதை, நவீன நாடகம் பற்றிய புத்திலக்கிய ஆய்வுகள் நிகழ்காலத் தொடர்புடையவை என்பதால் மிகவும் முக்கியமானவையாகின்றன. திராவிடம், மார்க்சியம், தமிழியம், பெண்ணியம், தலித்தியம், சூழலியம், நவீனத்துவம், பின்னவீனத்துவம் போன்ற வெவ்வேறு விதமான அணுகுமுறைகளின் உதவியுடன் புத்திலக்கிய ஆய்வுகள் இக்காலத்தில் பெருமளவிற்கு நிகழ்த்தப்பட்டு வருகின்றன. தொன்மவியல் நோக்கும், உளவியல் நோக்கும்கூட இந்த ஆய்வுகளில் மிகுதியாகப் பயன்பட்டு வருகின்றன. எனினும்கூட, உலகளாவிய இலக்கியங்களின் செல்நெறியுடன் தொடர்புபடுத்தி தற்காலத் தமிழ் இலக்கிய ஆய்வுகளின் நோக்கையும், போக்கையும், இன்னும் இலக்கும் தெளிவும் நுண்மையும் கொண்டவையாக, விரிவும், ஆழமும், கூர்மையும், கூடியவையாகச் செய்ய வேண்டிய வரலாற்றுக் கடமை நம் முன்னுள்ளது. இதை நமது இளம் தலைமுறை ஆய்வாளர்கள், மிகச் சிறப்பாகச் செய்து முடிப்பார்கள் என்ற பெரும் நம்பிக்கை எனக்குண்டு.



சிலப்பதிகாரம் காட்டும் அறவாழ்வு

நா.முருகேசபாண்டியன்

பண்டையத் தமிழர்களின் வாழ்க்கையைப் பதிவாக்கியுள்ள சங்கப்பாடல்கள்,. பூமியில் மனித இருப்பு, முழுக்க இயற்கையுடன் தொடர்புடையது என்ற கருத்தை வலியுறுத்துகின்றன.சங்ககாலத்திலே மக்கள் இனக்குழுத் தலைவனுடன் ஒத்திசைந்து எளிமையாக வாழ்ந்த நிலையில் மாற்றமேற்பட்டு, குறுநில மன்னர்கள் வலுவடைந்தனர். தீம்புனல் பாய்ந்திடும் மருதநிலத்தை ஆண்ட வேந்தர்களின் முடியாட்சி தொடங்கியது. தமிழ்மொழி அடையாளத்தை முன்னிறுத்தி நிலப்பரப்பினைக் கைப்பற்றும் முயற்சியினைப் புலவர்களின் பாடல்கள் துரிதப்படுத்தின. ஆட்சியதிகாரத்தினுக்குச் சார்பான நிலையில் புதிய விதிகள் உருவாக்கப்பட்டன; விலக்குகளும் ஏற்படுத்தப்பட்டன.

சமூக ஏற்றத்தாழ்வான நிலையினை நியாயப்படுத்தும் வகையில் முன்வைக்கப்பட்ட நெறிமுறைகள் முழுக்க அரசியலதிகாரப் பின்புலமுடையன. விதிகளும் விலக்குகளும் நடைமுறைப்படுத்தப்பட்ட சூழலில், அறம் என்ற கருத்தியல் முன்வைக்கப்பட்டது. அறம் என்பது மேன்மையானது, புனிதமானது, காலந்தோறும் மாறாதது போன்ற புனைவுகளுக்கப்பால் அறத்தைக் கண்டறிந்திட வேண்டியுள்ளது.

கடவுள் பற்றிய கட்டுக்கதைகள், புராணங்கள், அதியற்புதச் செயல்கள் போன்றவற்றுக்கு முன்னுரிமை அளிக்காத பண்டைய தமிழ்ச்சமூகம், அறம் பற்றிய கருத்தியலுக்கு முக்கியத்துவம் அளித்தது. அறமானது பல்வேறு நிலைகளில் பண்டைத் தமிழர் வாழ்க்கையில் அழுத்தமாக ஊடுருவியிருந்தது என்ற புரிதலுடன் சிலப்பதிகாரக் காப்பியத்திற்கும் அறத்திற்குமான உறவினைக் கண்டறிய வேண்டியுள்ளது. வணிகக்

குடும்பப் பின்புலமுடைய கோவலன் – கண்ணகியை முன்வைத்து இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்தின் கதையாடல், 1,800 ஆண்டுகளுக்குப் பின்னர் இன்றைய காலகட்டத்திலும் பேசுபொருளாக இருக்கிறது. சிலப்பதிகார காப்பியம் காட்டும் வாழ்க்கையின் பின்னர் பொதிந்திருக்கிற தமிழர் வாழ்வியல் அறம் இன்றைக்கும் பின்பற்ற வேண்டிய நெறியாக இருப்பது கவனத்திற்குரியது.

அறம் வெல்லும் மறம் வீழும் என்பது வெறுமனே நம்பிக்கை அடிப்படையிலானது. விதியின் விளையாட்டு, விதியின் கைப்பாவை, விதியை வெல்லமுடியுமா? தலைவிதியை மாற்றமுடியுமா? போன்ற சொல்லாடல்கள் மூலம் சமயங்கள், நிலவும் சமூகச் சூழல் குறித்து விமர்சனமற்ற பார்வையை வலியுறுத்துகின்றன. வைதிக சமயம் பிரம்மம் என்ற கருத்தியலுடன் வருணாசிரமக் கோட்பாட்டினை இன்றளவும் வலியுறுத்துகின்றது. அறமானது அதிகாரத்துடன் ஆள்கின்றவர்களின் நலனைக் காத்திட முயலுகிறது. இன்னொருபுறம், சமூகஅறம், தனிமனித அறம் என்ற நிலையில் அறத்திற்கும் மறத்திற்கும் இடையிலான முரண் தொடர்கிறது.

அறம், மனித இருப்பினுக்கு அடிப்படையானது என்ற பொதுப்புத்தி நிலவுகிற தமிழர் வரலாற்றில் உண்மையிலே அறம் இருக்கிறதா? யோசிக்க வேண்டியுள்ளது. சங்க இலக்கியப் படைப்புகள் முதலாகத் தமிழிலக்கியப் பரப்பில் பெரிதும் வலியுறுத்தப்படும் சொல் அறம். மக்கள் அன்றாட வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளைப் படைப்பாளர்கள்தான் காலந்தோறும் படைப்புகளின் வழியாக அடுத்த தலைமுறைக்குக் கடத்துகின்றனர். பூமியில் மனித இருப்பு, காலங்காலமாக எதிர்கொள்கிற சமூக ரீதியிலான பிரச்சினைகளையும், தனிமனிதச் சிக்கல்களையும் கடந்து சென்றிட அறத்தை முன்னிறுத்துவது வழக்கமாக உள்ளது. அறம் என்ற சொல்லின் பின்னர் பொதிந்திருக்கிற நுண்ணரசியல் வலுவானது. மதங்கள் வலியுறுத்துகிற ஐம்புலன்களை அடக்கி யொடுக்குதல் என்ற நடத்தையானது அறமெனப் போற்றப்பட்டபோது உடைமைச் சமூகம் வலுவடைந்த சூழலில், அடக்கியொடுக்கப்பட்ட அடிமை உடல்களை உருவாக்குதல் அடங்கியுள்ளது.

அறம் என்பது விளிம்பு நிலையினருக்கு சார்பானது என்ற கருத்தியல் ஒருவகையில் நம்பிக்கை சார்ந்தது. தீமையை எதிர்த்திடும் ஆற்றல் அறத்தின் வயப்பட்டது என்ற நம்பிக்கை காரணமாகத்தான் ஒடுக்கப்பட்டோர் வரலாறு முழுக்க அடங்கியொடுங்கி இருக்கின்றனர்.

தமிழ்ச் சமூகம் என்ற அமைப்பினை உருவாக்கியதில், தமிழ்மொழியின் பங்கு முக்கியமானது. மனிதனை சமூகமயமாக்கும் செயலைச் செய்கின்ற மொழியானது, மனிதர்கள் ஒருங்கிணைந்து வாழ்வதற்குரிய தொடர்பினைக் கட்டியமைக்கின்றது. மொழி என்னும் கருவி, மனித நினைவுகளின் வழியே கடந்த காலம் என்ற வரலாற்றைச் சாத்தியப்படுத்தியுள்ளது. அது நல்லது கெட்டது, அன்பு வெறுப்பு எனப் பல்வேறு எதிரிணைகள் மூலம் மனித இருப்பினை உருவாக்கும் உயிரோட்டமான கருவியாக விளங்குகிறது.

குழுவினராகச் சார்ந்து வாழும் இயல்புடைய மனிதர்களின் உறவுகளுக்கு அடிப்படையாகத் தகவல் தொடர்புக் கருவியான மொழி விளங்குகிறது. மொழி அரசியலுடன் நெருங்கிய தொடர்புடைய அறம், காலந்தோறும் சமூகத்தை நெறிப்படுத்திட அடிப்படையானதாகும். தமிழர் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடைய அறம், என்றும் நிலைத்திருக்கும் என்பது ஒரு வகையில் நம்பிக்கை சார்ந்தது. தமிழ்ச் சமூகம் எதை வேண்டுமானாலும் உதறி விடலாம், அடிப்படையான அறம் சார்ந்த குற்றவுணர்வைப் புறக்கணிக்கக்கூடாது என்ற புரிதலுடன் சிலப்பதிகாரத்தை அணுகிட வேண்டும். தொகுக்கப்பட்ட குற்றவுணர்வுகளின் வழியாகத்தான் ஒரு சமூகம் அடுத்த கட்டத்திற்கு நகர்கிறது என்பதற்கு அடையாளமாகத்தான் சிலம்பின் கதையாடலை விளங்கிக் கொள்ள முடியும்.

சிலப்பதிகாரத்தைப் புனை கதை என்ற நிலையில் இருந்து விலகி, கண்ணகி என்ற பெண்ணின் வாழ்க்கையில் நடைபெற்ற உண்மைச் சம்பவங்கள் என்று அணுகுவது, கவனத்திற்குரியது. சிலப்பதிகாரம் விவரித்துள்ள கதையானது முன்னர் எப்பொழுதோ தமிழக நிலவெளியில் நடைபெற்றது என்ற நம்பிக்கை, இன்றளவும் தமிழர்களிடம் நிலவுவதையும்

கணக்கில் கொள்ளவேண்டும். கண்ணகி என்ற தொன்மம், தமிழக நாட்டார் பாடல்களில் இடம் பெற்றிருந்தாலும், கண்ணகியைப் பத்தினிக் கடவுள் என்று வழிபடுவது, தமிழகத்தில் இல்லை.

சிலப்பதிகாரக் காப்பியத்தின் பதிகத்தில் இடம்பெற்றுள்ள வரிகள்மூலம், இளங்கோ காப்பியம் புனைந்ததின் நோக்கத்தை அறிய முடிகிறது. 'நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்' என்று இளங்கோ சொல்வதாகப் பதிகத்தில் இடம் பெற்றிருந்தாலும், சிலம்பு எழுதப்பட்டுப் பல்லாண்டுகள் கடந்த பின்னர் பதிகம் வேறு ஒருவரால் எழுதப்பட்டது என்ற கருத்து, தமிழறிஞர்களிடம் நிலவுகிறது.

அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று ஆவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்
சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம் ஓர்பாட்டுடைச் செய்யுள்

என ஒற்றை முலைச்சி பற்றிய சங்கப்பாடலில் இடம்பெற்றுள்ள பதிவும் கண்ணகி பற்றி மக்களிடம் வழக்கிலிருந்த நாட்டார் கதைகளும் தான் சிலம்பு எழுதுவதற்கான அடிப்படையாகும். அன்றைய சமூகத்தில் கண்ணகி என்ற பெண்ணுக்குப் பாண்டிய மன்னனின் கொடூரமான செயலினால் ஏற்பட்ட துயரத்தை முன்னிறுத்தி, அரசியல் பிழைத்தால் அறம் கூற்றாகும் என்று பதிகத்தில் சொல்லப்பட்டிருப்பது அடிப்படையான அறமாகும்.

சிலப்பதிகாரப் பிரதி, வாசிப்பில் உருவாக்கிய அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்று என்ற கருத்தியல் தனித்துவமானது. கண்ணகியின் துயரக்கதையாடலுடன் அரசியலும் அறமும் பெறுமிடம் முக்கியமானவை. அரசியலில் ஆளுவோர் அடிப்படையான அறத்தை மீறினால் நிச்சயம் பேரழிவுதான் என்று அறத்தின் வலிமையைச் சிலம்பு முன்வைத்துள்ளது. தனிமனித அறம், சமூக அறம் என்ற இருவேறு நிலைகளில் சிலம்பு முன்வைத்திடும் அறத்தைக் கண்டறிந்திட வேண்டியுள்ளது.

கண்ணகி, கோவலன் வாழ்க்கையில் இடம்பெறும் அறச் செயல்கள், பாண்டிய மன்னனின் அறமற்ற செயல்கள், இளங்கோ முன்வைக்கும் அறங்கள் என்று மூன்று வகையாக அறம் பற்றிய சொல்லாடல்கள் சிலம்புப் பிரதியில் பதிவாகியுள்ளன. கண்ணகி, திருமண வாழ்க்கையில் கோவலன் பிரிந்தநிலையில் வருந்தினாலும் இயல்பாக வாழ்கிறாள். அவள் மீண்டும் கோவலனுடன் சேர்ந்தபோது தனது முந்தைய வாழ்க்கை பற்றிச் சொல்கிறாள். கணவன் கோவலன் பிரிந்த காரணத்தினால் அவள் இழந்தவை குறித்துச் சொல்கிற வரிகள் அறத்துடன் நெருங்கிய தொடர்புடையன.

அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை

(சிலப்பதிகாரம், கொலைக்களக்காதை, வரிகள்:71–73)

கோவலனைப் பிரிந்து வாழ்ந்தபோது. அறம் செய்வோர்க்கு உதவுதல், அந்தண மரபினரைப் போற்றுதல், துறவிகளை எதிர்கொண்டு அவர்களுக்கு வேண்டுவன செய்தல், விருந்தினரைப் பாதுகாத்தல் ஆகிய நான்கு அறங்களைத் தன்னால் செய்ய இயலவில்லை என்று கண்ணகி வருந்துகிறாள். கணவனைப் பிரிந்து வாழ்கி கண்ணகியால் அறங்களைச் செய்ய இயலாத நிலைக்குப் பொருளாதாரம் மட்டும் காரணமல்ல. வேறு சமூகக் காரணம் இருந்திருக்கும் என்று தோன்றுகிறது. அறவோர், துறவியருடன் அந்தணர் என்று பார்ப்பனரையும் ஒன்றாகக் கருதும் நிலை, வைதிக சமயத்தின் ஆதிக்கத்தைக் காட்டுகிறது.

அறம் பற்றிய கண்ணகியின் புரிதல், அவளுடைய சமூக அறம் சார்ந்தது. கோவலன் கொன்ற பாண்டிய மன்னனை எதிர்கொண்டு வழக்காடி, கோவலன் குற்றமற்றவன் என்று நிறுவி, மன்னன் இறப்பதற்குக் காரணமான கண்ணகி, அறம் அல்லாத செயல்களைச் செய்தால், அந்த அறமே கூற்றாகிவிடும் என்கிறாள்.

அல்லவை செய்தார்க்கு அறம்கூற்றமாம் என்னும்

பல்லவையோர் சொல்லும் பழுதன்றே–பொல்லா
வடுவினையே செய்தவய வேந்தன்தேவி
கடுவினையேன் செய்வதூஉம் காண்

(சிலப்பதிகாரம், வழக்குரைகாதை : வெண்பாஎண் : 1)

செய்யக்கூடாத வினைகளைச் செய்தவர்களை அறம் கூற்றாக நின்று தண்டிக்கும் என்று சான்றோர் கூறிய வாக்கு வாய்மையானது. பொல்லாத பழிச்செயலைச் செய்த வெற்றி வேந்தனின் தேவியே! தீவினைக்கு ஆளான நான் இனி செய்கின்ற செயலையும் காண்பாயாக என்று கண்ணகிதான் அடுத்துச் செய்யவிருந்த செயலைப்பற்றிக் குறிப்பிடுகிறாள். குடும்பப் பெண்ணாக கணவனின் தவறுகளைப் பொறுத்துக் கொண்டு, அடங்கியொடுங்கி இருந்த கண்ணகியின் அறம் பற்றிய கருத்தியல் சமூக அறம் சார்ந்தது. ஒருவகையில் கண்ணகியின் அறச்சீற்றம்தான் காப்பியக் கதையாடலைச் சமூக விமர்சனத்திற்குள்ளாக்குகிறது.

கண்ணகி, இடது முலையைத் திருகி எறிந்து மதுரை நகரைத் தீயிலிட்டு அழித்திட முயலுகிறபோது தீத்திறத்தினரை அழித்திடுக என்று ஏவுகிறாள். பார்ப்பனர், அறவோர், பசு, பத்தினிப் பெண்கள், மூத்தோர், குழந்தைகள் ஆகியோருக்குத் தீயிலிருந்து விலக்கு அளிக்கிறாள். கண்ணகி சொல்கிற பட்டியலில் முதல் இடத்தில் பார்ப்பனர் இடம் பெற்றிருப்பது தற்செயலானது அல்ல. வைதிக சமயத்தின் அறமான பார்ப்பனரைக் கொல்லுதல் கூடாது என்ற அறத்தையே கண்ணகியின்மூலம் இளங்கோ வலியுறுத்தியுள்ளார். மனு தரும சாத்திரத்தின் குரல் சிலம்பில் ஒலிக்கிறது.

‘பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப்பெண்டிர்,
மூத்தோர், குழவி, எனும் இவரைக் கைவிட்டு,
தீத்திறத்தார் பக்கமே சேர்க’ என்று, காய்த்திய
பொன்தொடிஏவ, புகைஅழல்மண்டிற்றே
நல்தேரான்கூடல்நகர்.

(சிலப்பதிகாரம், வஞ்சின மாலை. வரிகள்: 53–57)

கோவலன், வான் பொருட் குன்றம் போன்ற செல்வத்தை மாதவியுடன் சேர்ந்த வாழ்க்கையில் தொலைத்துவிட்டு, மீண்டும் கண்ணகியைத் தேடி வருகிறான். கண்ணகியின் காற் சிலம்பை விற்று, வணிகம் செய்யலாம் என மதுரை நகருக்குச் செல்லும்போது அவளையும் உடன் அழைத்துச் செல்கிறான். வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திடாத கண்ணகி கால்நடையாக நெடிய வழியில் செல்கிறாள். குடும்ப நிறுவனத்தில் கோவலனுடைய செயல்கள் அறத்திற்குப் புறம்பானவை. ஆனால் கோவலன் அறவுணர்வு மிக்கவன் என்று சிலம்பு கட்டமைத்திட முயலுகிறது.

> **கோவலனின் முன்வினையானது முதிர்ந்து வந்து ஊட்டுதலால் அவன் வெட்டுண்டு தரையில் வீழ்ந்தான். முன்னர் செய்த தீவினையால் நிலவுலகில் ஒருகாலத்தும் வளையாத பாண்டியனின் செங்கோல், கண்ணகியின் கணவனான கோவலனைக் காரணமாகக் கொண்டு வளைந்தது என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.**

கோவலன் மதுரை நகரில் அநியாயமாகக் கொல்லப்படப் போகிறான் என்ற நிலையில் அவனைப் பற்றி விரிந்திடும் புதிய சொல்லாடல், அறத்துடன் தொடர்புடையது. மாடலமறையோன் கோவலனைச் சந்தித்தபோது, அவனைக் கருணைமறவன், செல்லாச்செல்வன், இல்லோர் செம்மல் என்று போற்றுகின்றான். மதம் கொண்டயானையிடம் சிக்கிய அந்தணனை விடுவித்து அந்தணனுக்கும் யானைக்கும் கருணை அளித்தவன் என்பதால் கோவலன் கருணைமறவன் ஆனான். குழந்தையைப் பாம்பிடம் இருந்து காத்த கீரியைக் கொன்ற பார்ப்பனரின் பாவம் போக்கிட பொருள் கொடுத்து உதவியதால் கோவலன் செல்லாச் செல்வன் எனப்பட்டான். பொய்ச்சாட்சி சொன்னவனுக்காகத் தன்னுயிர் கொடுக்க முற்பட்டதால் கோவலனுக்கு இல்லோர் செம்மல் என்ற பெயர் ஏற்பட்டது. சமூக வாழ்க்கையில் அறத்துடன் வாழ்ந்த கோவலன், அக வாழ்வில் கண்ணகிக்குச் செய்த அறமற்ற செயலுக்குக் காரணம் வெறுமனே ஊழ்வினை மட்டுமா?

சமூக அறத்தில் பாண்டிய நாட்டு மன்னன் முக்கிய இடம் பெறுகிறான். மதுரை நகரில் வீற்றிருந்து அரசாண்ட பாண்டியமன்னன் அறநெறி தவறாமல் ஆட்சி செய்தான். அவன், பாண்டிய நாட்டுக் குடிமக்களின் வாழ்க்கைமீது அக்கறையுடன் நேர்மையுடன் ஆட்சி புரிந்தான் என்பது சிலப்பதிகாரக் காப்பியத்தில் பல்வேறு இடங்களில் சுட்டப்பட்டுள்ளது. கட்டுரைக் காதையில் மதுராபுரி என்னும் குலதெய்வம், பாண்டிய மன்னனின் செங்கோலாட்சியைக் கண்ணகிக்கு எடுத்துக்கூறும் செய்தியில் பாண்டியனின் அறநெறி, பருண்மையாக வெளிப்பட்டுள்ளது. கோவலன் கொல்லப்பட்ட துயரத்தினால் கவலையுடன் இருக்கின்ற கண்ணகியை நோக்கி மதுராபுரி தெய்வம் சொல்கிற வரிகள் முக்கியமானவை.

மறைநா ஓசையல்லா துயாவதும்
மணி நாவோசை கேட்டதுமிலனே
அடிதொழு திறைஞ்சா மன்னரல்லது
குடிபழிதூற்றும் கோலனும் அல்லன்'

(சிலப்பதிகாரம், கட்டுரை காதை. வரிகள்:3034).

மதுராபுரிதெய்வம், பாண்டிய மன்னன் அந்தணர் வேதம் ஓதுகின்ற மறை ஓசை அல்லாமல் ஒருபோதும் ஆராய்ச்சி மணியின் நா அசைவினால் உண்டாகுகிற ஓசையைக் கேட்டறியாதவன், பகை மன்னர்கள் பொறாமையால் பழிதூற்றுவார்களே அன்றி தன் குடிமக்கள் பழிதூற்றும் கொடுங்கோலன் அல்லன் என்று கண்ணகியிடம் சொல்கிறது. அறநெறி தவறாத மன்னன் பாண்டியன் என்பதற்கு அடையாளமாகப் பார்ப்பனர்களின் வேதம் ஓதும் ஓசை சொல்லப்பட்டுள்ளது. வைதிக சமயத்தின் செல்வாக்கு காரணமாகப் பார்ப்பனர்கள் வேதம் ஓதுதல் அறமாக முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளது. அறத்துக்கும் வைதிக சநாதனக் கருத்தியலுக்கும் இடையிலான உறவு, காப்பியத்தில் தொடர்ந்து வெளிப்பட்டுள்ளது.

பாண்டியன் எப்பொழுதும் அறநெறியில் செயல்பட்ட செய்தியைப் பற்றி மதுராபுரி தெய்வம் சொல்கிற கதை, அறத்துடன் தொடர்புடையதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. கீரந்தை என்னும் அந்தணன் பொருள் தேட தனது மனைவியை வீட்டில் விட்டு, வெளியூர் சென்றுவிட்டான். பாண்டிய மன்னன் இரவில் நகர்வலம் செல்லும்போது கீரந்தை வீட்டில் சத்தம் கேட்கவும் மன்னன் கதவைத் தட்டிவிட்டான். அப்போது அச்சம் கொண்ட அந்தணன் மனைவி, 'குடிமக்களுக்கு அரசனுடைய செங்கோலாட்சி காவலாக அமையும் அல்லாது அதனைவிட காவல் வேறு எதுவும் இல்லை' என்றுகூறி என்னை இல்லத்தில் விட்டு சென்றீர். இப்பொழுது அந்த அரசவேலி காவலாக இல்லையோ? எனக்கூறினாள். இதனைக் கேட்டு வருத்தமடைந்த பாண்டிய மன்னன் தனது கையினை உடைவாளால் வெட்டிக்கொண்டான். இத்தகைய அறநெறியை உடையவன் பாண்டிய மன்னன் என்கிறது கதை. பாண்டிய மன்னன் தவறான புரிதலால் செய்த சிறிய தவறுக்காகத் தன்னுடைய கையை வெட்டிய கதை, பார்ப்பனரின் பாதுகாப்பை உறுதி செய்துள்ளது. வைதிக சநாதனம் எப்பொழுதும் பார்ப்பனரின் நலன்களையே அறமாக முன்வைத்துள்ளதை அறிய முடிகிறது.

நெஞ்சம் சுடுதலின்அஞ்சி நடுக்குற்று
வச்சிரத் தடக்கை அமரர் கோமான்
உச்சிப் பொன்முடி ஒளிவளை உடைத்தகை
குறைத்த செங்கோல் குறையாக் கொற்றத்து
இறைக்குடிப் பிறந்தோர்க் கழுக்கம் இன்மை

(சிலப்பதிகாரம், கட்டுரைக்காதை, வரிகள்:4953)

கோவலன் ஏன் கொலை செய்யப்பட்டான்? அறநெறி தவறாத மன்னரால், கோவலன் கொல்லப்படுவதற்குக் காரணம் என்ன? போன்ற கேள்விகளுக்கு அது ஊழ்வினையின் விளைவு என்று காப்பியக் கதையாடல் முன்வைக்கிறது.

மண்ணக மடந்தை வான்துயர் கூறக்
காவலன் செங்கோல் வளைஇய
வீழ்ந்தனன் கோவலன் பண்டை ஊழ்வினை
உருத்தென்

(சிலப்பதிகாரம், ஆய்ச்சியர்குரவை, வரிகள்:215–218)

நண்ணும் இருவினையும் நண்ணுமின்கள் நல்லறமே
கண்ணகி தன்கேள்வன் காரணத்தால் –
மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை
விளைவாகி வந்த வினை

(சிலப்பதிகாரம், ஆய்ச்சியர் குரவை, வெண்பா)

கோவலனின் முன்வினையானது முதிர்ந்து வந்து ஊட்டுதலால் அவன் வெட்டுண்டு தரையில் வீழ்ந்தான். முன்னர் செய்த தீவினையால் நிலவுலகில் ஒருகாலத்தும் வளையாத பாண்டியனின் செங்கோல், கண்ணகியின் கணவனான கோவலனைக் காரணமாகக் கொண்டு வளைந்தது என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. ஊழ்வினை தான் மன்னன் அறம் தவறியதற்குக் காரணம் என்ற கதையாடல் அறத்துக்கும் ஊழ்வினைக்கும் இடையிலான தொடர்பைச் சுட்டுகிறது.

பாண்டிய மன்னன் ஏன் இறக்க வேண்டும்? பொன்செய் கொல்லன் சொல் கேட்டதனால் ஏற்பட்ட தவறு என்று அறிந்த பின்னர் பொற்கொல்லனைப் பிடித்து தண்டிக்காமல் பாண்டிய மன்னன் ஏன் இறந்தான்? போன்ற கேள்விகள் தோன்றுகின்றன. பாண்டிய மன்னர்கள் அறநெறியில் ஆட்சிசெய்து புகழுடன் இருந்துள்ள மரபு சிதலமடைந்ததுதான் பாண்டிய மன்னனின் இறப்புக்குக் காரணம். பாண்டிய நாட்டை ஆள்கிற மன்னன் அரசியல் நெறி பிறழாமல் இருக்கும்போதுதான் இயற்கை செழிப்படையும்; உயிரினங்கள் அமைதியாக வாழும்; அமைதி கொழிக்கும்; அமைதி தவழும் மண்ணில் தான் மக்கள் அல்லல் இன்றி வாழ்வர் என்று அறம் பற்றிய கருத்தியலைச் சிலப்பதிகாரம் மன்னர்க்குரியதாகக் காட்டுகிறது.

அறம் என்பது மானுடத்தின் நலனை நோக்கமாகக் கொண்டது. இது சரியான செயல், இதனால் அனைவரும் பயனடைவர். எனவே சரியானவற்றைச் செய்ய நான் கடமைப்பட்டவன் என்ற அறிவோடு செயற்படும் நிலை மனச்சான்று நிலையாகும். அறவுணர்வு வளர்ச்சியின் இறுதி நிலையை மன்னர்களுக்குரியதாகச் சிலப்பதிகாரம் முன்வைக்கிறது. பாண்டிய மன்னன் அறம் பிழையாமல் நாட்டு மக்களைக் காத்து வருகிறான் என்பதை அடைக்கலக் காதையில் கோவலன் கூற்றின் மூலம் அறிய முடிகிறது

நிலந்தரு திருவின்நிழல் வாய்நேமி
கடம்பூண்டு உருட்டும் கௌரியர் பெருஞ்சீர்க்
கோலின் செம்மையும் குடையின் தன்மையும்
வேலின் கொற்றமும் விளங்கிய கொள்கைப்
பதியெடு அறியாப்பண்பு மேம்பட்ட
மதுரை மூதூர் மாநகர் கண்டாங்கு
(சிலப்பதிகாரம், அடைக்கலக் காதை. வரிகள்:16)

> **அந்த பாண்டிய மன்னனின் அரசியல் வாரிசு வெற்றிவேற்செழியன், ஆயிரம் பொற்கொல்லர்களைக் கூட்டமாகக் கொலைசெய்த அரச பயங்கரவாதத்தைப் பத்தினிக் கோட்டவிழா முடிந்து, பலநாட்கள் கழிந்த பின்னர் துணுக்குப்போல இளங்கோ சொல்வதில் நுண்ணரசியல் பொதிந்திருக்கிறது.**

பாண்டிய நாட்டுக்குப் பல்வேறு செல்வங்களைத் தருவதும் மக்களுக்கு நிழலாக விளங்குவதும் ஆகிய அருளாட்சி முறையைக் கடமையாகக் கொண்டு அறநெறியில் இருந்து வழுவாது ஆள்பவர் பாண்டியர். அவருடைய சிறப்புமிக்க செங்கோலாட்சியும் குடையின் தன்மையும் வேலின் வெற்றியும் உலகெங்கும் புகழுடன் விளங்கும் தன்மையுடையன. பாண்டியரின் தலைநகரமான மதுரையோ எனின் அங்குள்ள மக்கள் பிழைப்புக்காக வேறுஊர் செல்லுதலை அறியாதவாறு செல்வத்தாலும் பிறவற்றாலும் மேம்பட்ட சிறப்புடையது.

வைதிக சமயத்தின் செல்வாக்குக் கருத்தியல் ரீதியில் தமிழ்ச்சமூகத்தில் ஊடுருவியிருந்தது என அறிந்திட சிலம்பில் பார்ப்பனர் பெறுகிற தண்டனைகள் பற்றிய விவரிப்புகள் முக்கியமானவை. அவை, மனுதரும சாத்திரம் வலியுறுத்துகிற அறங்களைப் பின்பற்றியவை. மனுவிவரிக்கிற தண்டனைகளையும் நியாயங்களையும் போலவே சிலம்பின் கதையாடலும் இருக்கிறது. இளங்கோ, பதினொரு குற்றங்களைப் பட்டியலிட்டு அவற்றிற்கான தண்டனைகளையும் தொகுத்து விளக்கியதன் மூலம் சமூகப்பண்பாட்டு மரபை மீட்டெடுப்பதும், அதனை நிறுவுவதும் அரசு நிர்வாகம் உள்ளிட்ட சமூக நெறியுடன் கூடிய விழுமியங்களைக் கட்டமைப்பதும் அவருடைய நோக்கமாக இருக்கிறது.

குற்றங்களுக்குரியவர்களாகப் பார்ப்பனர் யாருமில்லை; சிலவேளைகளில் குற்றம் நடந்ததாகப் பார்ப்பனர் அஞ்சினாலும், யாருக்கும் தண்டனை இல்லை. செய்த

தவறுக்குப் பிராயச்சித்தம்தான் உண்டு. வார்த்திகன் என்னும் பார்ப்பான் பொய்யாய்க் குற்றம் சாட்டப்பட்டதினால், பெருங்கொடைகள் பெறுகிறான். பார்ப்பனர் பாதிக்கப்படும்போது அரசவர்க்கத்தினரும், வணிகவர்க்கத்தினரும் ஓடிவந்து உதவிசெய்தல் என்பது வருணாசிரம போதனைகளின் வழிகாட்டல். அரசர், வணிகர் உள்ளிட்ட பிறசாதியினருக்குக் குற்றங்களுக்கேற்ப தண்டனைகள் உண்டு. தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு இன்னும் கடுமையான தண்டனைகள். ஏன் இப்படி என்ற கேள்வி தோன்றுகிறது.

மனு வருணக் கோட்பாடு அடிப்படையில் வகுத்துள்ள விதிகள் ஒருவகையில் அறம் பற்றிய புரிதலின் இன்னொரு வெளிப்பாடு. இளங்கோவின் சிலம்பு, மனுவை முன்மொழிந்து, மனுவின் போதனைகளின் வழியாக அறத்தை முன்வைத்துள்ளது. பார்ப்பனரான வார்த்திகன் – கார்த்திகை கதையைச் சீற்றத்துடன் இருக்கிற கண்ணகியிடம் ஏன் சொல்ல வேண்டும்? கோவலன் கொல்லப்பட்டதற்காகக் கண்ணகி பழிவாங்கியதன் விளைவுதான் பாண்டியனின் மரணம். பொற்கொல்லன் செய்த குற்றத்திற்காகப் பாண்டிய மன்னன் பழி சுமக்கிறான்.

அந்தப் பாண்டிய மன்னனின் அரசியல் வாரிசு வெற்றிவேற்செழியன், ஆயிரம் பொற்கொல்லர்களைக் கூட்டமாகக் கொலைசெய்த அரச பயங்கரவாதத்தைப் பத்தினிக் கோட்டவிழா முடிந்து, பலநாட்கள் கழிந்த பின்னர் துணுக்குப்போல இளங்கோ சொல்வதில் நுண்ணரசியல் பொதிந்திருக்கிறது. யாரோ ஒரு பொற்கொல்லன் செய்த தவறுக்காக ஆயிரம் பொற்கொல்லர்களைக் கொலை செய்த செயல் என்னவகையான அறம்? சிலம்புப் பனுவல் பொற்கொல்லர்களின் கூட்டக் கொலையான அறமற்ற செயல் குறித்துக் கள்ள மௌனம் சாதிக்கிறது.

சிலப்பதிகாரக் காப்பியத்தின் இறுதியில் வரந்தரு காதையில் இளங்கோ குறிப்பிடுகின்ற இருபத்திரண்டு அறங்கள் முக்கியமானவை. கண்ணகி கதையாடல் மூலம் வெளிப்பட்டுள்ள அறங்கள் தனித்துவமானவை என்றாலும் இளங்கோ சிலம்பை வாசிக்கின்றவர்களுக்காகத் தொகுத்துத் தனியாகச் சொல்லியுள்ள அறங்கள் கவனத்திற்குரியன. தனிமனித ரீதியில் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டியனவாகக் குறிப்பிடப்பட்டுள்ள அறங்களில் பல இன்றைக்கும் பொருந்துகின்றன. சிலம்புப் பனுவல் முன்வைக்கிற அறங்கள் தனிமனிதனையும் சமூகத்தையும் நெறிப்படுத்திடும் வல்லமை மிக்கன. அவை:

பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வம் தெளிமின்
பொய்யுரை அஞ்சுமின்
புறஞ்சொல் போற்றுமின்
ஊண்உண் துறமின்
உயிர்க்கொலை நீங்குமின்
தானம் செய்மின்
தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின்
தீநட்பு இகழ்மின்
பொய்க்கரி போகன்மின்
பொருள்மொழி நீங்கன்மின்
பிறர்மனை அஞ்சுமின்
பிழைஉயிர் ஓம்புமின்
அறமனை காமின்
அல்லவை கடிமின்
கள்ளை ஒழிமின்
களவு ஒழிமின்
காமம் ஒழிமின்
பொய் ஒழிமின்
வெள்ளைக்கோட்டி ஒழிமின்
விரகினில் ஒழிமின்

எந்தவொரு சமூகமும் முரண்பாடுகள் இல்லாமல் இயங்கிட அறத்தின் ஆளுகை அடிப்படையானது. தனி மனித ரீதியில் செம்மையான வாழ்க்கை வாழ்ந்திட அறம் பின்புலமாக விளங்குகிறது. சிலப்பதிகாரப் பனுவலை வாசிக்கும்போது கண்டறிந்திடும் அறங்கள், சமூக விமர்சனமாக வெளிப்படுகின்றன. கடந்த காலத்தில் முன்னர் எப்பொழுதோ நடைபெற்ற கண்ணகி கதையாடலை முன்வைத்து இளங்கோ முன்வைத்துள்ள அறங்கள், நவீன வாழ்க்கையை விசாரணைக்குட்படுத்துகின்றன. அதுவே சிலம்பின் ஆகப் பெரிய பலம்.



முதுமொழியும் பொருண்மொழியும்

தி.பரமேசுவரி

பாண்டியன் நெடுஞ்செழியன் முதிரா வயதில் அரியணை ஏறுகின்றான். அவன் இளையவன், ஆற்றல் அற்றவன் என்றெண்ணி, பிற தமிழ் அரசர்கள் எழுவர் அவன் மீது படையெடுத்து வருகின்றனர். தமிழரே தமிழரோடு போரிட்டதாக, இப்போரைப் பற்றி வருந்தி, "தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து" என்று கூறுகின்றார் குடபுலவியனார்.

சோழன் கிள்ளிவளவன், சேரன் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேள், பொருநன் ஆகிய ஐந்து வேளிர் என ஏழு மன்னர்கள் சேர்ந்து தலையாலங்கானம் என்னுமிடத்தில் பாண்டியனோடு பொருதனர். தற்போது இவ்வூர் தலையாலங்காடு என்று வழங்கப்படுகிறது. தற்காலத்தில் உள்ள திருவாரூர் மாவட்டத்தில் குடவாசல் வட்டத்தில் சிமிழி என்னும் ஊராட்சியில் இக்கிராமம் உள்ளது.

அப்போரில் தான் வெல்லாவிட்டால் மாங்குடி மருதனார் தலைவராக உள்ள இப்புலவர் கூட்டம் என்னைப் பாடாது ஒழியட்டுமென வஞ்சினம் சொல்லிப் போர் மேற்சென்றான் பாண்டியன்.

தன்னை எதிர்த்துப் போரிட்ட அனைவரையும் அப்போர்க்களத்தில் இளையவன் வென்றான் என்பது வரலாறு. தலையாலங்கானத்துப் போரைப் புலவர் பலர் பாடியுள்ளனர். அக்காலத்தின் சிறந்த புலவர்களான நக்கீரர் நெடுநல்வாடையும் மாங்குடி மருதனார் மதுரைக் காஞ்சியையும் இப்பாண்டியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடியுள்ளனர்.

நெடுஞ்செழியனின் இளமைப் பருவத்தில் தோன்றிய அப்போரெழுச்சி, வெறியாக மாறித் தொடர்ந்து அவன் போரில் ஈடுபடுகின்றான். மிழலை நாட்டு எவ்வி, முத்தூறு வேளிர், தென்பரதவர் எனும் நெய்தல் மன்னர்கள், மழவர் ஆகியோரை ஓடஓட விரட்டினான். நெடுஞ்செழியனின் தோள் தினவு தீரவில்லை. புதிய புதிய நாடுகளைப் பிடிக்க வேண்டும் என்னும் தணியாத ஆவலுடன் சாலியூர், ஆய் குலத்தவரின் கீழிருந்த குற்றாலம், நெல்லின் ஊர்ப்பகுதி, முதுமலைப் பகுதி, முதுவெள்ளிலை எனும் நகரம் ஆகியவற்றைக் கைப்பற்றினான். இவனைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் சின்னமனூர், வேள்விக்குடி ஆகிய இடங்களில் கிடைத்த செப்பேடுகளில் உள்ளது.

புலவர்கள் அவனுடைய போராசை என்று தணியுமென்று ஏங்கினர். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் உயிர்க்கு உறுதி தரும் பொருள்கள். போர் செய்வதால் பொருளும் புகழும் கிடைக்கும். ஓர் அரசன் பொருளை மட்டும் ஈட்டினால் போதுமா? பாண்டியன் தன் இன்ப வாழ்வைக்கூடத் தக்கபடி நுகராது, போர்போர் என ஆர்ப்பரிப்பது அவனுக்கோ நாட்டுக்கோ நன்றன்று; இதனையே நக்கீரர் நெடுநல்வாடையால் புலப்படுத்த முயன்றார். மாங்குடி மருதனார் போரைக் கடந்த வாழ்வு குறித்து மதுரைக்காஞ்சியில் அறிவுறுத்தினார்.

அடுத்த போருக்கு ஆயத்தம் செய்வதிலும் படைகளுக்குரிய வசதிகளைச் செய்வதிலும் மனம் செலுத்திய மன்னன், தன் குடிமக்கள் எவ்வாறு வாழ்கிறார்களென்று சிந்திக்கவில்லை. பாண்டி நாட்டின் பல இடங்களிலும் முன்னோரால் உருவாக்கப்பட்டிருந்த குளங்களும் ஏரிகளுமே நாட்டின் வளமைக்குக் காரணம். அவற்றை அவ்வப்போது கண்காணித்துச் செப்பம் செய்ய வேண்டும். அரசன் அதன்மீது கவனம் செலுத்தாமையால் குளங்கள் மேடிட்டுப் போயின; ஏரிகள் கரையுடைந்து நின்றன. பல இடங்களில் மழை பெய்தாலும், அவற்றைத் தேக்குவதற்குரிய புதிய குளங்களோ ஏரிகளோ உருவாக்கப்படவில்லை. எனவே, நாட்டின் செல்வ வளத்திற்குக் குறைவில்லை எனினும் போதிய அளவு வேளாண்மை பெருகவில்லை.

குடிமக்கள் அமைச்சரிடம் முறையிட்டனர்; அமைச்சர்களோ அரசனை அணுக அஞ்சினர்.

> **சில பாடல்கள் எல்லாக் காலத்துக்கும் பொருந்தக் கூடியவை; காலங்கடந்து நிற்பவை. இப்பாடல் அப்படிப்பட்டது. இன்றும் நாம் நீர் மேலாண்மை குறித்துப் பேசி வருகிறோம். இக்கருத்தை, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே புலவர் ஒருவர் அரசனுக்கு வலியுறுத்தியிருக்கிறார் என்பது மனங்கொளத்தக்க செய்தி. இந்த இடத்தில் கல்லணை கட்டிய கரிகாலனையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.**

இதுவே தக்க தருணமென்று எண்ணினார் நல்லிசைப் புலவர் குடபுலவியனார். இவர், குடபுலத்தைச் சேர்ந்தவர்; இவரின் இரு பாடல்கள் மட்டுமே நமக்கு இன்று கிடைத்துள்ளன. இரண்டு பாடல்களும் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. இரண்டுமே பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றியவை என்பது குறிப்பிடத்தக்கது.

அரசவை கூடியது; அரசரோடு அமைச்சர்களும் அவை மூத்தோரும் புலவர்களும் குடிமக்கள் சிலரும் அவையில் இருந்தனர். குடபுலவியனார், "அரசர் திருச்செவி அறிய சில செய்திகள் கூற எண்ணம்" என்றார். புன்னகை பூத்த முகத்துடன், சொல்லுங்கள் என்றான் பாண்டியன். "செழியனே, நீ நீடுழி வாழ்க! அகழியும் மதிலும் உடைய இப்பழையூரைப்போல் யாரே பெற்றிருக்க முடியும்? அப்பெருமை பாண்டிய அரசர்க்கே உரியது. ஆனால் இப்பெருமை நிலைக்க வேண்டுமெனில் சில கடமைகளைத் தவறாது செய்ய வேண்டும்" என்றார். "அவற்றை சொல்லுங்கள், ஏது பிழை செய்தேன் யான்? அறியேன். அறிவுறுத்துக புலவரே" என்றான் மன்னன். புலவர் பாடினார் ஒரு பாட்டு.

"மன்னா! மேலுலகில் நீ மறுமை இன்பத்தைப் பெற விரும்பினாலும் இவ்வுலகில் பகைவர் அனைவரையும் ஒடுக்கித் தான் ஒருவனே பேரரசனாகப் புகழ் பெற விரும்பினாலும் அதற்கு செய்ய வேண்டியதைச் சொல்கிறேன்

கேள்! இம்மானுட வாழ்வு நீரின்றி அமையாது. அதில் உணவு கொடுத்தவர்களே உயிர் கொடுத்தவர்கள். இவ்வுடல் உணவினால் ஆனது. உணவென்பதோ நிலத்தொடு நீர். நிலத்திலிருந்து கிடைக்கும் உணவும் நீருமே இன்றியமையாதது. யாரொருவர் நிலத்தையும் நீரையும் சேர்த்துப் பாதுகாக்கிறார்களோ, அவரே இவ்வுலகின் உடலையும் உயிரையும் ஒன்றாய் இணைத்தவர் ஆகிறார். எனவே, போரில் பெருவிருப்பமுள்ள செழிய! நீர்நிலைகளையெல்லாம் கரையெடுத்து, ஆழப்படுத்தி, நீரைத் தேக்கி வைப்பாயாக. அதுவே உன் புகழைக் காலங்கடந்து நிலைக்கச் செய்யும்" என்றார்.

சில பாடல்கள் எல்லாக் காலத்துக்கும் பொருந்தக் கூடியவை; காலங்கடந்து நிற்பவை. இப்பாடல் அப்படிப்பட்டது. இன்றும் நாம் நீர் மேலாண்மை குறித்துப் பேசி வருகிறோம். இக்கருத்தை, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே புலவர் ஒருவர் அரசனுக்கு வலியுறுத்தியிருக்கிறார் என்பது மனங்கொளத்தக்க செய்தி. இந்த இடத்தில் கல்லணை கட்டிய கரிகாலனையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

'நீரின்றி அமையாது உலகு' என்றே மொழிந்தார் வள்ளுவர் பெருமானும். 'மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று உரைக்கிறது மணிமேகலை. எத்தனை போர்க்களங்களில் வென்றாலும் மக்களுக்கான நன்மை குறித்து நீண்ட கால நோக்கத்துடன் சிந்தித்த அரசர்களே, வரலாற்றில் வாழ்கிறார்கள். இன்றும் வரலாறு, அப்படிப்பட்ட தலைவர்களையே தன்னுள் பொதித்துப் பாதுகாக்கிறது. பாண்டியன் நெடுஞ்செழியனுக்குக் குடபுலவியனார் கூறிய அறிவுரைப் பாடல் இதோ..

"முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்துபட்ட வியல் ஞாலம்
தாளின் தந்து, தம் புகழ் நிறீஇ
ஒரு தாம் ஆகிய உரவோர் உம்பல்!
ஒன்று பத்து அடுக்கிய கோடி கடை இரீஇய
பெருமைத்தாக, நின் ஆயுள்தானே!
நீர்த் தாழ்ந்த குறுங் காஞ்சிப்
பூக் கதூம் இன வாளை,
நுண் ஆரல், பரு வரால்,
குரூஉக் கெடிற்ற, குண்டு அகழி;
வான் உட்கும் வடி நீள் மதில்;
மல்லல் மூதூர் வய வேந்தே!
செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்,
ஞாலம் காவலர் தோள் வலி முருக்கி,
ஒரு நீ ஆகல் வேண்டினும், சிறந்த
நல் இசை நிறுத்தல் வேண்டினும், மற்று அதன்
தகுதி கேள், இனி, மிகுதியாள!
நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே;
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே;
வித்தி வான் நோக்கும் புன் புலம் கண் அகன்
வைப்பிற்று ஆயினும், நண்ணி ஆளும்
இறைவன் தாட்கு உதவாதே; அதனால்
அடு போர்ச் செழிய! இகழாது வல்லே
நிலன் நெளி மருங்கில் நீர் நிலை பெருகத்
தட்டோர் அம்ம, இவன் தட்டோரே;
தள்ளாதோர் இவண் தள்ளாதோரே" (புறம்–18)

இப்பாடல் முதுமொழிக்காஞ்சித் துறை; பொருண்மொழிக்காஞ்சித் துறை என்பதும் பாடம். அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று உறுதிப் பொருள்களைப் பற்றிக் கூறுவது முதுமொழிக்காஞ்சி. உயிர்க்கு நலம் செய்யும் உறுதிப் பொருள்களை எடுத்துக் கூறுதல் பொருண்மொழிக்காஞ்சி.

சங்கப் புலவரின் சொல்திறத்தால், அறிவுடைய பாண்டியன், தன் கடமை உணர்ந்தான். புலவரின் சொல் வெல்லும் சொல்லாயிற்று. குடபுலவியனாரின் பாடல் காலத்தை விஞ்சி, இப்போதும் நீர் மேலாண்மையை நமக்கு நினைவூட்டுவதுடன், உணவின் முதன்மையையும் உணர்த்தி நிற்கிறது.



புதுச்சேரி வளர்த்த தமிழ்

முனைவர் சிவ இளங்கோ
புதுச்சேரி.

முதல், இடை, கடை என்று முச்சங்கம் கண்டு வளர்ந்தது தமிழ். "வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து" எழுத்து, சொல், பொருள், இலக்கணவழி அகத்திணை மரபுகளையும், புறத்திணை மரபுகளையும் வாழ்வியலாகக் கொண்டவர்கள் தமிழ்மக்கள். குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என ஐந்திணைகளில் பொருந்தி வாழ்ந்த இயற்கை வாழ்வினைக்கொண்டிருந்தவர்கள். அந்நிலப்பரப்பில் மருதம், நெய்தல் ஆகிய திணைகளைக் கொண்ட பகுதியாகப் புதுச்சேரி, சங்கஇலக்கிய காலத்தில் இருந்தே தமிழோடு இணைந்தும், பிணைந்தும் உள்ள வாழ்வியலைக் கொண்டது.

வரலாறு:

சங்ககாலத்தில் நல்லியக்கோடன் என்னும் மன்னன் ஆண்ட ஒய்மா நாட்டின் பகுதியாகப் புதுச்சேரி இருந்தது. இக்காலத்திற்குப் பிறகு தொண்டை மண்டலமாக அறியப்பட்ட புதுச்சேரி தொடர்ந்து பல்லவர், சோழர், பாண்டியர், விஜயநகர மன்னர்கள், பீஜப்பூர் சுல்தான் ஆகிய மன்னராட்சிகளுக்கு உட்பட்டு பின்னர் பதினாறாம் நூற்றாண்டு முதல் ஐரோப்பியர் வசம் வந்தது. ஐரோப்பியர் காலத்தில் பிரெஞ்சுக்காரர்கள் வசம் புதுச்சேரிப் பகுதிகள் சற்றேறக்குறைய 280 ஆண்டுகள் (1674–1954) இருந்து வந்தது. 1954 ஆம் ஆண்டு நவம்பர் முதல்நாள் பிரெஞ்சியர் வெளியேற, 1962 ஆம் ஆண்டு ஆகஸ்ட் பதினாறாம் நாள் இந்தியாவுடன் சட்டப்பூர்வமாக இணைந்தது.

தொல்லியல்:

புதுச்சேரி, ஊசுடு ஏரிப்பகுதியில் கற்காலக் கோடரிகள் கிடைத்ததன் மூலம், ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டகாலத்தில் இருந்து இங்கு மனித இனம் வாழ்ந்திருந்த செய்தி கிடைக்கிறது. புதுச்சேரிக்கு அருகாமையில் உள்ள அருகன் மேடு என்னும் அரிக்கமேடு பகுதியில் முதன்முதலில் பிரெஞ்சுக்காரர்கள் காலத்தில் அகழ்வாராய்ச்சி நடைபெற்றது. அதற்குப்பிறகு, பிரிட்டிஷ் இந்திய அரசின் தொல்லியல் துறை இயக்குனர் மார்ட்டிமர்வீலர், 1945 ஆம் ஆண்டில் அரிக்கமேட்டில் அகழ்வாய்வு செய்தார். அங்கிருந்த கிரேக்க – யவன வணிகர்கள் குடியிருப்பை வைத்துப் புதுச்சேரி, இந்தோ – ரோமானிய வணிகத்தளம் இருந்த பகுதியாக அறிவிக்கப்பட்டது.

அவ்விடங்களில் நடந்த அகழ்வாராய்ச்சி மூலம், யவனர் குடியிருப்பு, அம்போரா என்னும் குவளைகள், அரட்டைன், ரௌலட் ஓடுகள், வண்ணமணிகள், வளையல், அணிமணிகள், கலைப்பொருட்கள் ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டு பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட செய்திகள் தெரியவந்தன. அங்கு கண்டெடுக்கப்பட்ட சரக்குக் கிடங்கு, சாயப்பட்டறை, சூளைகள், உறைக்கிணறுகள், வடிகால் அமைப்புகள் ஆகியவை அங்கு ஒரு நகர நாகரிகம் அமைந்திருந்ததை உறுதிசெய்தன.

அரிக்கமேட்டில் கிடைத்த பானை ஓடுகள் தமிழி எழுத்துப் பொறிப்பைக் கொண்டிருந்தன. இவ்வெழுத்துக்கள் கி.மு.ஐந்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை என்று மார்ட்டிமர்வீலரின் அறிக்கையிலேயே கூறப்பட்டிருந்தது. அசோகன் பிராமிக்கு முன்பாகவே தமிழி எழுத்துக்கள் இருந்ததை, 1945 ஆம் ஆண்டில், அதாவது கீழடி அகழ்வாராய்ச்சிகளுக்கு முன்பாகவே தமிழி எழுத்துக்களின் முற்பட்ட காலத்தை அரிக்கமேடு அகழ்வாராய்ச்சி நிரூபித்தது.

"சுடுவோர், இடுவோர், தொடுகுழிப் படுப்போர்" என மணிமேகலைக் காப்பியம் தமிழர்களின் உடல் அடக்க முறைகளைக் கூறுகிறது. அதுபோன்ற குழிகளும், முதுமக்கள் தாழிகளும் புதுச்சேரிப் பகுதிகளான அரிக்கமேடு, முத்திரப்பாளையம், பாகூர், பிள்ளையார்குப்பம், மங்கலம், சுத்துக்கேணி, பெரம்பை, ஆரோவில், காரைக்கால், மாதூர் ஆகிய பகுதிகளில் கிடைத்தன. இத்தாழிகளில் இருந்த கரித்துண்டுகளைக் கார்பன் ஆய்வு செய்தபிறகு, இவை கி.மு. 785 ஆம் ஆண்டைச் சேர்ந்தவையாக அறிவிக்கப்பட்டன.

புதுச்சேரி, துறைமுக நகரமாக இருந்ததால் கிரேக்கம், ரோமம், சீனம், சிரியா, பாலஸ்தீனம், பிற தென்கிழக்காசிய நாடுகளோடு வணிகத் தொடர்பு ஏற்பட்டிருந்தது. அதனால் புதுச்சேரியில் பன்னாட்டு மொழிகள் பேசப்பட்டதுடன், வணிகம் வழி பிறநாடுகளில் தமிழ்மொழியும், தமிழர்களும் பரவ ஏதுவானது.

கி.மு. ஒன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை கடற்பயணங்கள் மேற்கொண்ட யவனர்களான பெரிப்புளூஸ், தாலமி, ஸ்டிராபோ போன்றோரின் பயணக் குறிப்புகள் காவிரிப் பூம்பட்டினம், இடைக்கழிநாடு (மரக்காணம்), புதுச்சேரியின் வணிகத் தொடர்புகளையும், இங்கு வாழ்ந்த மக்கள், மொழி குறித்த விவரங்களையும் தருகின்றன.

சோழமண்டலக் கடற்கரையில் உள்ள துறைமுகங்களில் புதுச்சேரியை சிறப்பு வாய்ந்த துறைமுகமாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். அரிக்கமேடு அகழ்வாய்வு மேலும் பல வரலாற்றுக் குறிப்புகளைத் தருகிறது. மரக்கலங்கள் உற்பத்தி, மணிகள் செய்தல், சிற்பம், ஓவியம் உருவாக்குதல், உறைகிணறுகள், குளங்கள் போன்றவற்றில் புதுச்சேரிக்கும், பூம்புகாருக்கும் பல ஒற்றுமைகள் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. பட்டினப்பாலையில் 'அடல்வாள் யவனர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளபடி புதுச்சேரியிலும் யவனர்கள் தங்கள் குடியிருப்பைப் பாதுகாத்து வந்தனர். இவையெல்லாம் சங்க இலக்கியக் காட்சிகளைக் கண்முன் நிகழ்த்தும் காட்சிப் படிமங்களாகக் காணப்படுகின்றன.

புதுச்சேரி, காரைக்கால் கோவில்களில் கல்வெட்டுகள் நிறைய கிடைத்துள்ளன. தஞ்சைப் பெரிய கோயிலுக்கு முன்பாக, மதகடிப்பட்டு சிவன்கோயில், முதலாம் இராசராசனால் கட்டப்பட்ட கோவிலாகும். "உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் எடுப்பித்தருளின திருக்கற்றளி" என கோயில் கல்வெட்டு கூறுகிறது. இக்கோயிலில் 83 தமிழ் கல்வெட்டுகள் உள்ளன. அதில் மூன்று வடமொழியில் உள்ளன.

இக்கல்வெட்டுகள் சோழர்கால எழுத்தமைதி கொண்டவை. பாகூர், சிவன்கோயில் பராந்தகச் சோழன் காலத்தைச் சேர்ந்தது. வில்லியனூர் திருக்காமீசுவரம் உடையார் கோயில், பாகூர் கோயில்களிலும் இராசராசன் எடுப்பித்த கல்வெட்டுகள் உள்ளன. திருநள்ளாறு சிவன் கோயிலில் சடையவர்மன் குலசேகர பாண்டியன் எடுப்பித்த கல்வெட்டுகள் உள்ளன. பாகூரில் பல்லவ வேந்தன் நிருபதுங்கன் ஏற்படுத்திய பாகூர் செப்புப் பட்டயங்கள் கிடைத்தன. இவை பாகூர் செப்பேடுகள் என வழங்கப்படுகின்றன. புதுச்சேரியில் ஓலைச்சுவடிகளும் ஏராளமாகக் கிடைத்துள்ளன. எதுவார் அரியேல் என்னும் பிரெஞ்சு வரலாற்று அறிஞர் ஓலைச் சுவடிகளை சேகரிக்கத் தொடங்கினார். அவற்றில் பெருமளவு தற்போது பாரிஸ் தேசிய அருங்காட்சியகத்தில் பாதுகாப்புடன் உள்ளன. புதுச்சேரியில் உள்ள பிரெஞ்சு நிறுவனத்திலும் ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

பிரெஞ்சியர் காலத்தில் தமிழ்மொழி:

பிரெஞ்சுக்காரர்கள் காலத்தில் பிரெஞ்சு மொழியோடு தமிழ்மொழிக்கும் சரிநிகர் மதிப்பு அளிக்கப்பட்டிருந்தது. புதுச்சேரியில் வீடு, நிலப்பத்திரங்கள், ஒப்பந்தங்கள் ஆகியவை முதலில் தமிழில்தான் இருந்தன பிரெஞ்சியர் ஆட்சிக்காலத்தில் அவை பிரெஞ்சிலும், தமிழ் மொழியிலுமாக எழுதப்பட்டன. புதுச்சேரி, காரைக்காலில் தெருப்பெயர்கள் தமிழிலும், பிரெஞ்சு மொழியிலுமாக அமைக்கப்பட்டிருந்தன. நீதிமன்ற அறிக்கைகள் பிரெஞ்சிலும், தமிழிலும் வெளியிடப்பட்டன.

'ழூர்னால்லொஃபீசியல்' எனப்படும் அரசிதழ்கள் பிரெஞ்சு, தமிழ் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்டன. பணத்தாள்களில் தமிழ்மொழி இடம்பெற்று இருந்தது. பிரெஞ்சு நிர்வாகத்தின் காவல்துறை இலட்சணையில் "சட்டமொன்றே சர்வாதிகாரமானது" என்று பிரெஞ்சிலும், தமிழிலும் பொறிக்கப்பட்டிருந்தது. இலக்கியம், வரலாறு, தொல்லியல் தொடர்பான ஏராளமான நூல்கள் தமிழில் இருந்து பிரெஞ்சு மொழியிலும், பிரஞ்சுமொழியின் இலக்கியம், வரலாறு நூல்கள் தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. முஸ்ஸே, துய்ப்புய்

> **நாகை திராவிட நடிகர் கழகம், நாகை ஆர்.வி.கோபால் தலைமையில் 1945ஆம் ஆண்டில் புதுச்சேரியில் சிலகாலம் தங்கி நாடகங்களை நடத்தி வந்தது. இதில், பின்னாளில் முத்தமிழறிஞராகப் போற்றப்பட்ட, திருவாரூர் மு.கருணாநிதி அவர்களும் இணைந்து நாடகங்களில் நடித்தும், நடத்திக் கொண்டும் வந்தார்.**

ஆகிய இரண்டு பிரெஞ்சு அறிஞர்களும், 'தமிழ் பிரெஞ்சு அகராதி', 'பிரெஞ்சு – தமிழ் அகராதி' ஆகியவற்றைத் தொகுத்து வெளியிட்டனர்..

ழூய்லியேன் வேன்சான் என்பவர் தமிழ் இலக்கண நூலை இயற்றி வெளியிட்டார். ஃபோன்த்தேனியே என்பவர் திருக்குறள் காமத்துப்பாலை பிரெஞ்சில் மொழிபெயர்த்து வெளியிட்டார். பெ.அதாம் என்பவர் 'கொன்றைவேந்தன்', 'ஆத்திசூடி', 'நல்வழி', 'மூதுரை', 'வள்ளுவர் வரலாறு' ஆகிய தமிழ் நூல்களைப் பிரெஞ்சில் மொழிபெயர்த்து வெளியிட்டார். ஏராளமான பிரெஞ்சு மொழிக் கல்வியாளர்கள் தமிழ்மொழியின் உயர்வினை அறிந்து, தமிழ்கற்று, தமிழுக்குத் தொண்டாற்றி உள்ளனர். அப்பட்டியல் மிக நீளமானது. அவர்களுள் மாபெரும் சாதனையாளராகக் குறிப்பிடப்படுபவர் ழுவோதுய்ப்ராய் (1885 – 1945).

இந்தியா முழுமையும் ஆரிய நாகரிகமாக அறியப்பட்ட ஐரோப்பியர் பார்வையை மாற்றி தென்னிந்தியாவின் திராவிட மொழிகள் சார்ந்த வரலாறைத் தெளிவுபடுத்திய அறிஞர் கால்டுவெல்லைப் போல பிரஞ்சு அறிஞர் ழுவோதுய்ப்ராய் தென்னிந்தியக் கட்டிடக்கலையும், சிற்பக்கலையும், கோயில் அமைப்புகளும் வெளிப்படுத்தும் திராவிட பாணி ஒத்திசைவுக் கொள்கையை ஆய்வு வழி நிறுவியவர். தென்னிந்தியர்களுக்குப் பெருமையுடன் திரும்பிப்பார்க்கும் வரலாறு இல்லை என்று கூறிய அந்நாளைய வரலாற்று ஆசிரியர்களுக்குத் திராவிடர் வரலாறு குறித்து துல்லியமான பார்வையைக் கொடுத்தவர். அரிக்கமேட்டின் தொல்லியல் தடயங்கள், நகர நாகரிகம் குறித்துப்

பிரெஞ்சிந்திய அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தி அரிக்கமேடு அகழ்வாய்வுக்கு வழிவகுத்தவர். அசோக மன்னன் காலத்திலிருந்து இரண்டாம் புலிகேசி காலம் வரையிலான (கி.மு. 261 முதல் கி.பி. 610 வரை) வரலாறைத் 'தெக்கணத்தின் முற்கால வரலாறு' என்ற தலைப்பில் அவர் எழுதிய ஆய்வு நூல் இந்திய வரலாறில் திராவிடத்தின் தொன்மையைத் தெளிவுபடுத்தியது. 'பல்லவர்களின் முற்கால வரலாறு' என்ற நூல்வழி தென்னிந்திய வரலாறில் பல்லவர்களின் இருப்பை முதன் முதலாக வெளிப்படுத்தியவர்.

இயற்றமிழ்:

புதுச்சேரியின் தமிழ் வளர்ச்சியை 1)சங்ககாலம் 2)நாட்குறிப்புக் காலம் 3)அச்சு நூல்கள் காலம் என்று வகைப்படுத்தலாம். புதுச்சேரியை உள்ளடக்கிய ஒய் மாநாட்டில் (இடைக்கழிநாடு) வாழ்ந்த நல்லூர் நத்தத்தனார், பத்துப்பாட்டு வரிசையில் 'சிறுபாணாற்றுப்படை' நூலை இயற்றிய சங்க இலக்கியப் புலவர். அதேபோலப் புதுச்சேரியும் சங்க இலக்கியமான எட்டுத்தொகை நூல்களுக்கு பங்களிப்பு செய்திருக்கிறது. புதுச்சேரியின் நெய்தல் நிலப்பகுதியான வீரைவெளியைச் சேர்ந்த வீரைவெளியன் என்னும் சங்க இலக்கியப் புலவர், "முன்றின் முஞ்சையொடு" என்று தொடங்கும் புறநானூறின் 320ஆவது பாடலை இயற்றியிருக்கிறார். அவரது மகனான வீரைவெளியன் தித்தனார், "பெருங்கடல் முகந்த" என்று தொடங்கும் அகநானூறின் 188ஆவது பாடலைப் பாடியுள்ளார். புதுச்சேரியைச் சேர்ந்த காரைக்கால் அம்மையார் சங்கம் மருவிய காலத்தில் தமிழ் பதிகங்கள் பல பாடியுள்ளார். அவை பன்னிரு திருமுறைகள் வரிசையில் வைத்து போற்றப்படுகின்றன.

பிரெஞ்சிந்திய ஆளுநர்களுக்கு துபாஷியாக (துவிபாஷி – இருமொழியாளர்) இருந்தவர்கள் பலரும் நாட்குறிப்புகளை எழுதி வைத்துள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தகுந்தவர் ஆனந்த ரங்கப்பிள்ளை அவர்கள். அவரது நாட்குறிப்புகள் ஒரு புதிய இலக்கிய வகைமையாகத் தற்காலத்தில் கருதப்படுகிறது. அவரைப்போலவே திருவேங்கடம்பிள்ளை, ரங்கப்பத் திருவேங்கடம்பிள்ளை, முத்துவிஜய திருவேங்கடம், குருவப்பப்பிள்ளை, இரண்டாம் வீராநாயகர் ஆகியோரும் நாட்குறிப்புகளை அன்றைய உரை நடைத் தமிழில் எழுதி உள்ளமை தமிழுக்குக் கிடைத்த நற்பேறாகும்.

தென்னிந்தியாவில் முதல் அச்சுக்கூடம் அமைந்த இடம் புதுச்சேரியா என்பது ஆய்வுக்குரியது. பிரெஞ்சு மெஷினரியினர், புதுச்சேரி, மாதாக்கோயில் தெருவில் 'மிஷன்பிரஸ்' என்னும் அச்சுக்கூடத்தை நிறுவினர். இங்குதான் தமிழின் முதல் புத்தகங்கள் சில அச்சேறின. வீரமாமுனிவரின் தேம்பாவணி, பரமார்த்த குருகதைகள் இங்குதான் அச்சியற்றப்பட்டன. திருக்குறள், அகராதிகள் போன்றவையும் இங்கு அச்சியற்றப்பட்டுள்ளன. 1907ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட 'சர்வ வியாபி' என்னும் தமிழ் வார இதழ் இன்றும் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகிறது. முத்துசாமிப்பிள்ளை, நைனியப்ப முதலியார், தாண்டவராய முதலியார் போன்றோர் தனிப்பட்ட முறையில் தமிழ் அச்சுக்கூடங்களை நிறுவி பல்வேறு தமிழ்நூல்களை அச்சிட்டனர். இவர்கள் பதிப்பகங்களும் நிறுவி தமிழ் நூல்களை தொடர்ந்து வெளியிட்டு வந்தனர்.

புலவர்கள் பு.அ.பெரியசாமிப்பிள்ளை, சி.பங்காருபத்தர், திருப்புளிசாமி அய்யா போன்றோர் புதுச்சேரியில் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் இலக்கணப் புலவர்கள். இவர்களிடம் தமிழ் கற்றவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். புலவர் வெங்கடாசல நாயகர் 'சுகாபிவிருத்தினி' என்ற தமிழ் வாரப் பத்திரிகையை மிகப்பெரும் எதிர்ப்புகளிடையே வெளியிட்டு வந்தார். புலவர் சவராயலு நாயகர் பல நூல்களை இயற்றியுள்ளார். பண்டித வீ.துரைசாமி, இரா.தேசிகம்பிள்ளை, ஞானதியாகு, சிவ. கண்ணப்பா போன்ற புதுச்சேரிப் புலவர்களும் தமிழுக்குப் பெரும் பங்களிப்பு செய்தவர்கள். புலவர் சுந்தரசண்முகனார், தமிழ் கலைக்களஞ் சியம் என்னும் பெரும்நூலைத் தொகுத்தவர். மகாகவி பாரதியார் புதுச்சேரியில் பத்தாண்டுகள் வாழ்ந்த காலத்தில் தான் அவரது குயில்பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற குறுங்காவியங்கள் இயற்றப்பட்டன. கவிஞர்கள் பாரதிதாசன், புதுவைசிவம், தமிழ்ஒளி, வாணிதாசன், திருமுருகன், தங்கப்பா, பிரபஞ்சன் உள்ளிட்ட பெருமளவிலான தமிழறிஞர்களின் எண்ணற்ற படைப்புகளும் தமிழ்த்தாயின் மகுடத்திற்கு ஒளியூட்டுகின்றன.

இசைத்தமிழ்:

தமிழிசையின் நீள, அகல, ஆழங்களைச் சரிவர வரையறுத்துக் காட்டிய சேரநாட்டுத் தமிழ்க் காப்பியம் சிலப்பதிகாரம். களப்பிரர் காலத்திற்குப்பின் ஊடுருவிய பல்லவர் காலத்தில் ஆரிய மரபுள்ள வேற்றுமொழிகள் தமிழ் மண்ணில் திணிக்கப்பட்டன. பக்தி இலக்கியக் காலத்தில் தமிழுக்கு உயர்வளித்த காவியங்கள் இயற்றப்பட்டதுடன், அவை தமிழிசையை மீட்டெடுத்தன. தேவாரம், திருவாசகம் போன்ற தமிழ்ப் பண்ணமைந்த இலக்கியங்கள் இன்னிசையோடு பாடப்பட்டன. அப்பர், சுந்தரர், சம்பந்தர் காலத்திற்கு முன்பே புனிதவதி என்னும் காரைக்கால் அம்மையார் "திருவாலங்காட்டுத் திருப்பதிகம்" என்ற பதிகத்தைத் தமிழ்ப் பண்ணான நட்டபாடைப் பண்ணில் பாடினார்.

பொதுவாக இசையரங்குகளில் தொடக்கப் பாடல் நட்டபாடை என்னும் தமிழ்ப்பண்ணில்தான் அமையும். இது தற்காலத்தில் நைவளம், கம்பீர நாட்டை என்று வேற்று மொழிகளில் கூறப்படுகிறது. ஆனால் இசைமுறைக்குத் தமிழ்ப் பண்ணமைந்த பதிகம் பாடியவர் காரைக்காலம்மையார். இதைப் பின்பற்றியே சம்பந்தரும் 'தோடுடையசெவியன்' என்னும் பதிகத்தைப் பாடியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரெஞ்சியர் காலத்தில் ஆனந்தரங்கப் பிள்ளை மாளிகையில் நடந்த இசை நிகழ்வொன்றில் ஆளுநர் டியூப்ளே கலந்துகொண்டு அருணாசலக் கவிராயரின் இராம நாடகத்தைக் கண்டு இரசித்தார். அதில் கீர்த்தனைகள் தெலுங்கில் பாடப்பட்டதால், "ஏன் தமிழில் பாடுவதில்லை?" என்று கேள்வியை ஆளுநர் டியூப்ளே எழுப்பி இருக்கிறார்.

பாரதியார் வாழ்ந்த காலத்தில் இசை நிகழ்ச்சிகளில் தெலுங்கு கீர்த்தனைகள் அதிகமாகப் பாடப்பட்டதால் "தமிழனுக்குத் தோள்காது இல்லை, இரும்புக்காதுதான் உள்ளது" என்று பாரதியார் கட்டுரையில் சாடி இருக்கிறார். பாவேந்தர் பாரதிதாசன் 1935 ஆம் ஆண்டு நடத்திய 'ஸ்ரீசுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்' கவிதை இதழில் தியாகராஜ கீர்த்தனைகளைத் தமிழ்ப்படுத்தி, தமிழ்ப்பண்ணோடு அமைந்த வகையில் வெளியிட்டார். "இலங்கு தமிழ் மொழியினில் பாடல் இல்லை என உரைத்தால் அறையுங்கள்" என்றும் கவிதையில் உசுப்பேற்றியவர் பாரதிதாசன். பல்லவி, அனுபல்லவி, சரணம் என்று தெலுங்கு கீர்த்தனைகள் கொண்ட பாடல்களைத் தமிழில் எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்னும் உருப்படிகளாக ஆக்கி, ஏராளமான தமிழிசைப் பாடல்களைக் கவிஞர் புதுவை சிவம் இயற்றினார். அவை தமிழிசைப் பாடல்கள், தமிழர்தன் மதிப்புப் பாடல்கள், திராவிடப்பண் ஆகிய தொகுப்பு நூல்களாக வெளிவந்தன. கவிஞர் தமிழ்ஒளி, கவிஞர் வாணிதாசன் ஆகியோரும் இசைத்தமிழ் பாடல்களைப் பெருமளவில் இயற்றியுள்ளனர். முனைவர் இரா.திருமுருகன் சிந்துப் பாடல்களுக்கான இலக்கணங்களை முதன்முதலாக வகுத்து ஆய்வு நூலை வெளியிட்டுள்ளார். 1942ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழிசை இயக்கத்திற்கு புதுச்சேரி கவிஞர்கள் பெருமளவில் பங்களிப்பு செய்துள்ளனர்.

புதுச்சேரியில் நாடக வளர்ச்சி:

பன்னிரண்டாம் நூற்றாண்டில் வீராம்பட்டினத்தைச் சேர்ந்த வீரத்தலைவன் பரசமய கோளரிமாமுனி என்ற புலவர் 'பூம்புலியூர் நாடகம்' என்னும் நூலை இயற்றியதாக புதுவை அரசிதழ் தெரிவிக்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டு தொடங்கி பிரெஞ்சு நாடகங்கள் பல தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. புதுச்சேரியில் பல்லாண்டுகாலம் வாழ்ந்த கவியோகி சுத்தானந்த பாரதியார், பல நாடகப் படைப்புகளையும், மொழிபெயர்ப்புகளையும் செய்துள்ளார். விக்டர் உய்கோவின் நாடகத்தைத் தமிழில் 'ஏழைபடும்பாடு' என்ற பெயரில் மொழி பெயர்த்தார். மேற்கத்திய நாடக ஆசிரியர்களான ஷேக்ஸ்பியர், மோலியே, ரசீன், கொர்னே ஆகியோரின் நாடகங்களையும் அவர் மொழி பெயர்த்துள்ளார். மாபெரும் இலக்கியப் படைப்பாளர்களான எமிலிஜோலா, ரோமன் ரோலண்ட், கஸ்தாவ் பிலாபேர், மாப்பசான், பால்ஜாக், லாரோஷ்ஃபூக்கோ ஆகியோரது நாடகங்கள் புதுச்சேரி மொழி அறிஞர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அல்போன்ஸ்தொதேவின் காவிய நாடகமொன்றைப் புதுவைசிவம் 'காதல்முன் கட்டுப்பாடு' என்ற தலைப்பில் குறுங்காவியமாகத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

புதுச்சேரியில் இசை நாடகங்கள் 'வாசகப்பா' என்னும் பெயரில் நிகழ்த்தப்பட்டுள்ளன. 'மனுநீதிச் சக்கரவர்த்தியின் வாசகப்பா' என்னும் நாடகம் மாணிக்கப்பிள்ளை என்பவரால் இயற்றப்பட்டு புதுச்சேரியில் நூலாகப் பதிப்பிக்கப்பட்டது. புதுச்சேரியில் சங்கரதாஸ் சுவாமிகள் சிலகாலம் தங்கி இருந்து நாடகங்களை நடத்தி வந்தார். முழுவதும் பாட்டும், பேச்சுமாக இருந்த கூத்துக் கலை வடிவத்தை உரைநடையும், பாடல்களும் சேர்ந்த நாடகக்கலையாக வடிவமைத்தவர் சங்கரதாஸ் சுவாமிகள். அவருடைய 'ஞானசௌந்தரி', 'சுலோசனாசதி' உள்ளிட்ட நாடகங்கள் புதுச்சேரியில் இயற்றப்பட்டு மேடைற்றப்பட்டன. சங்கரதாஸ் சுவாமிகள் புதுச்சேரியில் நாடகப்பயிற்சிப் பட்டறைகள் பல நடத்தி மாணவர்களைப் பயிற்றுவித்தார்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் செய்யுள் நாடகம், உரைநடை நாடகம், உரைநடையும் பாடலும் கலந்த நாடகம் எனப் பல்வேறு வகையான 48 நாடகங்களை உருவாக்கினார். திராவிட இயக்கக் கருத்துக்கள் அடங்கிய பல சீர்திருத்த நாடகங்களை கவிஞர் புதுவைசிவம் இயற்றி புதுச்சேரி, தமிழ்நாடு, இலங்கை, மலேசியா போன்ற பகுதிகளில் மேடையேற்றினார். கவிஞர் தமிழ் ஒளி 'நிலைபெற்ற சிலை' உள்ளிட்ட பல நாடகங்களையும், கவிஞர் வாணிதாசன், 'நிலாமுற்றம்', 'பிறைமதி' போன்ற நாடகங்களையும் இயற்றியுள்ளனர். புதுச்சேரியில் பல்வேறு நாடகக்குழுக்கள் தொடங்கப்பட்டு, ஏராளமான நாடகங்களை நிகழ்த்தியுள்ளனர். தமிழ்நாட்டில் புகழ்பெற்றிருந்த மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி, டி.கே.எஸ்.சகோதரர்கள் நாடகக்குழு, ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி, எம்.ஆர்.ராதா நாடகக்குழு, சக்தி நாடக சபா போன்ற நாடகக்குழுக்களும் புதுச்சேரிக்கு வந்து நாடகங்கள் நடத்தினார்கள்.

திராவிட இயக்கக் கருத்துக்கள் அமைந்த ஏராளமான நாடகங்கள் புதுச்சேரியில் சுயமரியாதை இயக்கத்தினரால் நடத்தப்பட்டுவந்தன. நாகை திராவிட நடிகர் கழகம், நாகை ஆர்.வி.கோபால் தலைமையில் 1945ஆம் ஆண்டில் புதுச்சேரியில் சிலகாலம் தங்கி நாடகங்களை நடத்தி வந்தது. இதில், பின்னாளில் முத்தமிழறிஞராகப் போற்றப்பட்ட, திருவாரூர் மு.கருணாநிதி அவர்களும் இணைந்து நாடகங்களில் நடித்தும், நடத்திக் கொண்டும் வந்தார். அவரது 'சாந்தா அல்லது பழனியப்பன்', 'தூக்குமேடை' போன்ற நாடகங்கள் புதுச்சேரியில் நடைபெற்றன. நாகை திராவிட நடிகர் கழகத்திற்குப் புதுவையில் தேவையான உதவிகளை பாரதிதாசனும், புதுவை சிவமும் செய்து வந்தனர். புதுச்சேரி டியூப்ளே வீதியில் இருந்த கெப்ளே தியேட்டரில் இந்நாடகங்கள் நடைபெற வழிவகுத்துத் தந்தனர். புதுச்சேரியில் பொதுநல நிதிக்கான நாடகங்களும் நடத்தப்பட்டு அதில் வசூலிக்கப்பட்ட தொகைகள் பாடசாலை கட்டிட நிதிக்காகவும், இலவச தமிழ் வகுப்புகள் நடத்தவும், மாணவர்களுக்குப் பரிசளிக்கவும் பயன்படுத்திக்கொள்ளப்பட்டதாக பாரதிதாசன் நடத்திய 'புதுவை முரசு' இதழ்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்மொழிக்கு புதுச்சேரியின் பங்களிப்பு விரிந்த அளவிலானது. ஒவ்வொரு தலைப்பும் ஒவ்வொரு தொகுப்பாகத் திகழும் அளவிற்கு தரவுகள் உள்ளன. தமிழ் மொழிக்கு முதன் முதலில் தந்த கொடை என்றாலும் புதுச்சேரியே முதலிடம் பெறும். தமிழ்ப்பண்கள் உருவாக்கம், சிந்துப் பாடல்களுக்கு யாப்பிலக்கணம் உருவாக்கம், முதல் நாடகம், முதல் சிறுகதை, நாட்குறிப்பு என்னும் புதிய இலக்கியவகைமை, முதலில் கிடைத்த தமிழி எழுத்துப்பானை ஓடுகள், திராவிடக் கட்டிடக்கலை குறித்த முதல் ஆய்வு, பல்லவர் ஆட்சி பற்றிய முதல் ஆய்வு என்று பல பொருண்மைகளில் தமிழ் வளர்ச்சிக்கு தொண்டாற்றி வருவது புதுச்சேரி என்பது புதுவைத் தமிழர்களுக்கு மட்டுமல்லாது அனைத்து உலகத் தமிழர்களுக்கும் நிறைவையே தரும்.

உதவிய நூல்கள்:

1) **தேசிகப் பிள்ளை. ரா.தமிழகமும் பிரெஞ் சுக்காரரும், பாரி நிலையம், சென்னை, 1971.**

2) **வேலாயுதனார். மு.த.வையம்புகழ் புதுவை, நற்றமிழ் பதிப்பகம், புதுவை, 1974.**

3) **இளங்கோ. சிவ.பிரெஞ்சிந்தியாவும் திராவிட இயக்கமும், ஞாயிறு நூற்பதிப்பகம், புதுச்சேரி, 2000.**

4) **Francis Cyril Antony, editor, Gazetteer of India, department of art and culture, Government of Pondicherry, 1982.**



ஓவியம்: பிரேம் டாவின்ஸி

சிறுகதை



பொய்த்தேவு

இந்திரா பார்த்தசாரதி

நீல வானம். இதமான வெய்யில். இளங்காற்று. புல் தரை. இயற்கையின் அருளில் தோய்ந்து மகிழ்ந்து விளையாடும் மழலைச் செல்வம். அவர்கள் விளையாடுவதைக் கண்டு உவகையில் ஆழ்ந்த பெண்கள், ஆண்கள்.

பொழுது சாயத் தொடங்கியது.

'போகலாம்' என்றான் ஒருவன்.

புறப்பட்டார்கள்.

'இடப்பக்கம் போக வேண்டாம். அங்குதான் அந்தக் குகை இருக்கிறது.'

'எந்தக் குகை?'

'சபிக்கப்பட்ட குகை.'

'புரியவில்லை'.

'ஒரு கோபக்காரத் தெய்வம் சிலரைச் சபித்து அந்த இருண்ட குகைக்குள் அடைத்து விட்டது.'

'போய்ப் பார்க்கலாமா?'

'வேண்டாம், ஆபத்து'

' நான் போகத்தான் போகிறேன்.'

'நானும்..'

'நானும்'

ஐந்தாறு பேர் சேர்ந்து கொண்டார்கள்.

நீண்ட வழி. போய்க்கொண்டே இருந்தார்கள்.

இருட்டிவிட்டது.

'யார் எக்கேடு கெட்டால் என்ன, நாம் போய்விடுவோம்.'

'தப்பு..அவர்களும் நம்மைப் போன்ற மனிதர்கள்'.

'இருட்டிவிட்டதே!'

'சரி, இன்றிரவு இங்கு கழித்துவிட்டுக் காலையில் போவோம்..'

‘கோபக்காரத் தெய்வம் இங்கு வந்தால்?’

‘அந்த தெய்வத்துக்கு அதிகார வரம்பு இங்கு இருக்காது..’

அந்த இடத்தில் இரவைக் கழித்தார்கள்.

காலை. சூரிய ஒளி, ‘புல்லை நகையுறுத்தி, பூவை வியப்பாகியது’. கதிரவன் கீழ் வானத்தில் வண்ணக் கவிதை ஒன்றை எழுதியிருந்தான்.பறவைகள், இரை தேடி, குதூகலமாகப் பறந்து சென்றன.

‘உலகம் அற்புதம்’

‘குகை மனிதர்கள் இருக்கும்போது உலகம் அற்புதமா?’

‘பூமி என் படுக்கை.ஆகாயம் என் உத்தரம்’

‘குகையில் இன்னும் மனிதர்கள் இருந்து கொண்டுதானிருக்கிறார்கள்’

‘அவர்களை விடுவித்து, உலகைக் கண் விழித்துப் பார்க்கச் செய்வோம்..’

எல்லோரும் மறுபடியும் நடக்கத் தொடங்கினார்கள்.

‘குகை அதோ!..குகை அதோ! ‘

இருட்டினால் மூடியிருந்த நீண்ட குகை.

‘உள்ளே போகலாமா?’

உடம்பில் ஒட்டும் இருட்டு.

ஒருவர் பின்னால் ஒருவராய் நேர்க்கோட்டில் சென்றார்கள்.

‘இராவணன் ஆட்சியில் சூரியன் அவன் அனுமதியுடந்தான் உள்ளே நுழைய முடியுமாம்..’

‘இங்குந்தான்..இது இராவணன் ஆட்சியோ?’

‘மெதுவாகப் போங்கள்.பழந்தின்னி வெளவால்கள் பறக்கின்றன..’

‘ இக்குகையின் குடிமக்கள் பழந்தின்னி வெளவால்கள் தாமோ?’

‘இருக்கலாம்.இருட்டின் ஆட்சியில் வேறு யார் குடிமக்களாக இருக்க முடியும், ஆந்தைகளையும், வெளவால்களையும் தவிர.. ‘

அவர்கள் பேசுவது எதிரொலித்தது.

‘இருட்டில் போய்க்கொண்டேயிருந்தால்?’

‘வெளிச்சத்தை மறந்து விடுவோம்..’

‘ இருட்டை நேசிக்கத் தொடங்கி விடுவோம்.. இருட்டே ஞானம்’

அவர்கள் மேலும் நடந்தார்கள். நடக்க நடக்க குகை மேலும் மேலும் உருவாகிக் கொண்டு இருப்பது போல் தோன்றியது.

‘திரும்பி விடலாம்.’

‘வைத்த காலைப் பின் வாங்கக் கூடாது?’

‘இருட்டில் முன் ஏது, பின் ஏது?’

‘ கதிரவன் முத்தமிடும் புல்லைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது.’

‘சூரியனைச் சிறை பிடிக்கும் புல்..’

‘இப்பொழுது மலர்கள் சூரிய ஒளியில் நீராடும்..’

‘நம்மோடு வர மறுத்தவர்கள் புனலில் குளித்துக் கொண்டிருப்பார்கள்..’

‘பண்ணிசையாய் அலை பாயும் ஆறு..’

‘பறந்து கொண்டிருக்கும் புள்ளினங்கள்’

‘ஒற்றைக் காலில் தவம் செய்யும் கொக்கு..’

‘காற்றலையில் சுருதியில் இழியும் குயிலின் சோகம்..’

அவர்கள் மேலும் நடந்தார்கள்.

‘அதோ இருட்டை முரணும் ஒளிச் சாம்பல்..அதுவா நாம் போக வேண்டிய இடம்?’

அவர்கள் ஸ்தம்பித்து நின்றார்கள்.

ஒரு மெல்லிய திரை குறுக்கும் நெடுக்குமாக இருந்தது. உத்தரத்திலிருந்து தொங்கிய ஒரு சிறு கை விளக்கு.

திரைக்கு அப்பால் பலர் உறைந்து போன நிலையில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் நிழல் திரையில் விழுந்து அவர்களைப் பெரும் பூதங்களாகக் காட்டியது.

ஒருவன் திரையைச் சற்று விலக்கி எட்டிப் பார்த்தான்.

அவர்களுடைய கால்களும் கைகளும் இரும்புச் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தன. கழுத்தில் திரும்ப முடியாத படி இருப்புப் பட்டயம். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள முடியாது. நிழல்களைத் தாம் பார்க்க முடியும். அவர்களைப் பொருத்த வரையில், நிழல்தான் யதார்த்தம்.

நிழல்களை நிஜமாக நம்ப சபிக்கப்பட்டவர்கள். நிழல்களைப் பார்ப்பதே அவர்கள் வாழ்க்கையின் இலட்சியம்.

என்ன கொடூரமான உள்ளம் அந்தக் கோபக்காரத் தெய்வத்துக்கு இருந்திருக்க வேண்டும்!

அவர்களை இந்நிலையில் கண்டவன் மற்றவர்களுக்குச் சொன்னான். எல்லாரும் எட்டிப் பார்த்தார்கள்.

‘அவர்களை விடுவிப்போம்..’

‘கறுப்புத் தெய்வம்?’

‘ போராடுவோம்.. அவர்களுடன் பேசிப் பார்ப்போம்..’

‘நீ பேசு..’

‘ யார் நீங்கள்?’

பதிலில்லை.

மறுபடியும், ‘யார் நீங்கள்?’

‘நீங்கள் யார்?’ எதிர் கேள்வி.

‘உங்களை விடுவிக்க வந்திருக்கிறோம்.’

‘அப்படியென்றால்?’

‘உங்கள் தளைகளை நீக்க..’

‘அப்படியென்றால்..’

‘கையிலும் காலிலும் போடப்பட்டிருக்கும் சங்கிலிகளையும், கழுத்துப் பட்டயத்தையும் நீக்க வந்திருக்கிறோம்.. நாங்களும் உங்களைப் போன்ற மனிதர்கள்தாம்’.

‘இவைகள் எங்கள் உடம்புடன் பிறந்தவை.எங்கள் அங்கங்கள்..’

‘இல்லை. இவைகள் உங்களுக்குப் பூட்டப்பட்டவை.’

‘நம்ப மாட்டோம்.. நீங்கள் சொல்வது பொய்.’

‘ எது நிஜம், எது பொய் என்று உங்களுக்குத் தெரியவில்லை. உங்கள் நிஜ உருவம் உங்களுக்குத் தெரியுமா?’

‘அதோ தெரிகின்ற கறுப்பு உருவம்.’

‘இல்லை. அது தோற்றம். பொய். பயம் உங்கள் கையையும் காலையும் கட்டிப்

போட்டிருக்கிறது. உத்தரத்திலிருந்து தொங்கும் விளக்கு பொய்ப் பிராசரம் செய்து நிழலை நிஜமெனக் காட்டி உங்களை நம்ப வைக்கிறது.'

'இதுவே எங்கள் சொர்க்கம்'

'இதுவே உங்கள் நரகம்.உங்களில் ஒருவனை விடுவிக்கிறோம். அவனே எங்களுடன் வந்து எது உண்மை என்று உங்களுக்கு அறிவிப்பான். சரியா?'

மௌனம்.

'சொல்லுங்கள்.இது சரியா?'

மௌனம்.

'யாரும் வரத் தயாராக இல்லையா?'

'எங்கள் கோபக்கார தெய்வம் தினந்தோறும் வந்து எங்களுக்கு உணவு கொண்டு வந்து வாயில் ஊட்டுகிறது. விலங்குகளைக் கழற்றி சுத்தம் செய்து மீண்டும் மாட்டுகிறது. இதுவே நாங்கள் பழகிய வாழ்க்கை.எதற்காக உங்களுடன் வர வேண்டும்?''

'சூரிய ஒளி என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?'

'அப்படியென்றால்?'

'குளிர்ந்த காற்று என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?'

'அப்படியென்றால்?'

'விண்ணில் சுதந்திரமாய்ப் பறந்து திரியும் புள்ளினங்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?'

'அப்படியென்றால்?'

'கண்ணுக்கு எட்டியவரை பச்சைக் கம்பளமாய் இருக்கும் புல் தரையில் புரண்டு செல்வது பற்றி உங்களுக்குத் தெரியுமா?'

'அப்படியென்றால்?'

'அப்படியென்றால் உங்களில் ஒருவன் என்னுடன் வரட்டும்.அவன் புரிந்து கொண்டு மற்றவர்களுக்குச் சொல்வான்..'

'நான் வருகிறேன்..'என்றான் ஒருவன்.

அவனுடைய தளைகள் அகற்றப்பட்டன.அவன் அவர்களுடன் திரையைத் தாண்டிச் சென்றான்.

அவனால் முதலில் நடக்க முடியவில்லை. தடுமாறினான். அவர்கள் அவனைக் கைத் தாங்கலாய் அழைத்துச் சென்றார்கள்.

குகையை விட்டு வெளியே வந்ததும் அவன் கத்தினான்.

'என்ன இது!கண்களைக் குத்துகின்றது!'

'சூரிய வெளிச்சம்.'

அவன் கண்களை மூடிக் கொண்டான்.

'முதலில் அதை அணையுங்கள்'.

'அணைக்க முடியாது.இதுதான் இயற்கை'.

'என் குகையில் தெரியும் இருட்டுதான் எனக்கு வெளிச்சம்'.

'அப்படி நீ பழகிவிட்டய்!'

' என்ன இது, என் மீது வீசுகிறது?'

'காற்று'.

'என் குகையில் வீசுவதுதான் காற்று'.

''இல்லை. அது பழந்தின்னி வெளவால்கள் பறப்பதினால் உண்டாகும் புழுக்கம்'
'என்னால் பார்க்க முடிவில்லையே!'
' கொஞ்சம் கொஞ்சமாய்க் கண்களைத் திறந்து பார்..'
'என் கை கால்கள் அசைகின்றன.பயமாக இருக்கிறது'.
'அசைவதுதான் இயற்கை.இப்பொழுது உனக்குத் தளைகள் இல்லை'.
'தளைகள்தான் இயற்கை.'
'இல்லை'
'என்னால் உங்களை இப்பொழுது பார்க்க முடிகிறது.ஆனால் வித்தியாசமாகத் தெரிகிறீர்கள்'
'இதுதான் இயற்கை'
'மேலேதெரிவது என்ன?
'ஆகாயம்'
'இவை?
'மலர்கள்'
'எத்தனைச் சிறிய உருவம்,எவ்வளவு அழகாக ஓடுகின்றன? இவை?
'அணில்கள்'
'அவை?'
'பறவைகள்'
'ஆஹா!எவ்வளவு அழகாக பறக்கின்றன! இவை?
'வண்ணத்துப்பூச்சிகள்'.
'பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக இருக்கின்றன!'
'உங்கள் உலகம் அழகாக இருக்கிறது. மனதை இன்பத்தில் ஆழ்த்துகிறது'
'இது உங்களுடைய உலகமும்தான்..'
'நான் இதுவரை இருந்தது?.'
'குகை.அது உலகமன்று'
' நான் எப்படி அங்கு போனேன்? எனக்குத் தளையிட்டது யார்?
'நீயேதான்.தவறான தெய்வத்துக்கு அடி பணிந்தாய்.'
'அவர்கள்?'
'அவர்களும்தான்.
'புரியவில்லை'
'நீங்கள் அடிபணிவதற்காகவும், பயப்படுவதற்காகவும், உரத்த கோஷங்களை மந்திரங்களாக நினைத்து கூவிக் கூவி பொய்தெய்வங்களை உருவாக்கிக் கொண்டீர்கள். பொய் தெய்வங்கள் பொல்லாத தெய்வங்கள்.'
அவன் சிறிது நேரம் சிந்தித்தான்.
அவன் ஆகாயத்தைப் பார்த்தான். காற்றை சுவாசித்தான்.
முகத்தில் மலர்ச்சி.
'வாருங்கள். அவர்களையும் அழைத்துக் கொண்டு வருவோம்' என்றான்.

ஓவியம்: வேலு



சிறுகதை

பெயரில் என்ன இருக்கிறது?

தமிழ்மகன்

பூங்காவின் பல இடங்களிலும் கடந்த காலம் குவியல் குவியலாகத் திரண்டிருந்தது. ஆங்காங்கே அசை போட்டு நடந்துகொண்டும் இருந்தது. ஓய்வு பெற்றவர்களின் முதிர்மொழி காற்றெங்கும் வியாபித்திருந்தது. அனுபவங்களின் நிழல்பாதையாக இருந்தது பூங்காவின் நடை வழி. சூவாக்கிங்' செல்பவர்களின் வரவு அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. மூத்த வயதினர் தங்களுக்குள் முடிந்துபோன கதைகளைப் பரிமாறியபடி இருந்தனர். பெரியவர்கள் பெரும்பாலும் நடப்பதைவிட அமர்ந்து பேசுவதில் ஆர்வம் காட்டினர். பேசிக்கொண்டே கையைத் தட்டுவதும், கையை மேலும் கீழும் அசைப்பதும் உடலுக்கான பயிற்சியாக மேற்கொண்டனர்.

பார்க் நடுவே இருக்கிற அரை வட்ட சிமெண்ட் பென்ச்சில் நிரம்பி வழிந்து நடக்கிற கச்சேரி அது.

''மொத மொதல்ல நான் இந்த ஏரியா வந்தபோது ஒரு கிரவுண்ட் வெறும் அறுபதாயிரம் ரூபா... இப்போ?...''

கொஞ்சம் இடைவெளி விட்டு யாராவது அதற்கு பதில் தருகிறார்களா என்று பார்த்துக் கொண்டிருப்பார் ஒரு பெரியவர். யாராவது ஒருவர் எதிர்பாராத கணிசமான தொகை சொல்ல வேண்டும் என்பது அவருடைய எதிர்பார்ப்பு.

''ஆறு கோடி சார். நேத்துதான் நம்ம சுப்பிரமணியன்து அக்ரிமெண்ட் ஆச்சு...''

ஏறத்தாழ எல்லா நாளிலும் இதை அவர்கள் பேசுவார்கள் என்று தெரிந்தது. ஏனென்றால் நான் நடக்க ஆரம்பித்த 'கடந்த' ஒரு வாரமும் இதைக் கேட்கிறேன்.

தோட்டக்காரர் பாதையின் சருகுகளைப் பெருக்கிக் கொண்டு வந்தார். ஈர்க்குச்சிகளை வைத்து விசிறி போல செய்த துடைப்பம்... சரக் சரக் என்ற சத்தம் குறிப்பிட்ட சப்த ஒழுங்குடன் சீராக ஒலித்தது. சருகுகளும் கொன்றை விதை பட்டைகளும் சிமெண்ட் தரையில் கீறியபடி நகர்ந்தன. எழுபது வயது மதிக்கத்தக்கவர். உடற்பயிற்சி செய்யும் சபலங்கள் ஏதுமின்றி அவர் தன் அன்றாடத் தோட்ட வேலைகளில் ஒரு நொடியும் வீணாக்காமல் மூழ்கிக் கிடப்பதைக் கவனித்தேன்.

இரண்டு மூன்று இடங்களில் நடைபயிற்சி பெரியவர்கள் குழுமியிருந்தனர். அதில் ஒரு கூட்டம் 'ஆபீஸர்ஸ்' கூட்டம் என்பது புரிந்தது. அவர்களுக்குத் தொல்லை தராமல் பெருக்க

வேண்டும் என்ற தயக்கமும் தோட்டக்காரரின் பார்வையில் வெளிப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் எப்போதும் ஒருவர் நடுநாயகமாக இருந்தார். அவரது பேச்சில் ரெமி மாட்டீன், ரெட் லேபிள் போன்ற நேற்று சாப்பிட்ட உயர் வகை பானங்கள் குறித்த விவரங்கள் அவ்வப்போது வெளிப்படும். அவர் ஒரு உயர் அதிகாரி என்பதோடு அவர் மகனும் இப்போது உயரதிகாரியாக இருப்பதனால் நடை பயிற்சி குழுவினர் மத்தியில் அவருக்கு நல்ல மரியாதை இருந்தது.

பெருக்கிக் கொண்டு அருகே வந்த கிழவரை தன் பார்வையாலேயே 'போதும் அப்புறம் பெருக்கு' என்று தெரியப்படுத்தினார்.

தோட்டக்காரருக்கு பெருக்கிய வரைக்கும் வாரி எடுத்து விடலாமா அல்லது பிறகு வாரிக் கொள்ளலாமா என்று சற்றே தயக்கம் ஏற்பட்டு, யாருக்கும் தொல்லை கொடுக்காத வேறு இடத்துக்கு சென்று வேறு வேலையில் மூழ்கினார்.

செடிகளை ஒரே சீராகக் கத்தரிக்கும் வேலை. செடிகளைக் கத்தரிப்பது அவருக்குப் பிடிக்காதுதான். அது ஒரு 'தோட்டக்கலை' வேலை என்று அதை செய்ய வேண்டியிருந்தது.

மதிப்பு மிக்க டி-ஷர்ட்டும் வாக்கிங் ஷூவும் போட்டிருந்த அந்த அதிகாரி தன் பார்வையின் வலிமையை உணர்ந்தவராக அடுத்த மாதம் ஸ்விஸ் போவதைப் பற்றி பேச ஆரம்பித்தார்.

என்னப்பா தீபாவளிக்கு ஊருக்குப் போலயா?' என கரிசனமாக விசாரித்து, தோட்டக்காரரிடம் ஒரு நூறு ரூபாய் கொடுத்துவிட்டுப் போனார். உடன் இருந்த நண்பர்களுக்குத் தெரியாமல் கொடுப்பது போல பாவித்து அதை அவர் கொடுத்தார்.

அரசாங்கம் இந்தப் பகுதியை ஏன் ரெட் ஏரியாவாக வறட்சி பகுதியாக மாற்றி அறிவித்தது என்பது கலெக்டருக்குப் புரியவில்லை. உண்மையில் அதில் அதிக நீராதாரம் உடைய நிலத்தடி நீர் அதிகமுடைய பகுதியாக இருந்தது.

பொன்னியின் செல்வனில் கல்கி வர்ணித்த வந்தியத்தேவன் பிறந்த ஊர். பொன்னை ஆற்றை ஒட்டிய வல்லம் பகுதி. 1990 ரெக்கார்டுகளில் நீரற்ற வறண்ட பூமி ஆக விவசாயம் செய்ய முடியாத பகுதியாக அதை அறிவித்திருந்தார்கள். சுமார் 200 அடி வரை போர் போட்டு தண்ணீர் எடுத்ததாகவும் சுண்ணாம்பு கற்களும் வந்துவிட்டதால் இனி நீருக்கான வாய்ப்பு இல்லை என்று எழுதியிருந்தார்கள்.



அரசாங்க ஆவணங்கள் சொல்லியபடி பார்த்தால் இப்போது அந்த இடம் நீருக்கு வழியற்ற செயற்கை பாலைவனமாக மாறியிருக்க வேண்டும். விவசாயிகள் பயிர் செய்யும் வழியின்றி வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி ஆகவில்லை என்பது நேர் மாறாக வளமான பகுதியாக மாறியிருந்தது.

1990-களில் வறட்சி ஏற்பட்டு, 2020இல் அது எப்படி செழிப்பான பூமியாக மாறியது கலெக்டர் செழியனுக்கு அது அதிர்ச்சியாக இருந்தது.

ஏதோ தவறு நடந்திருக்கிறது. அரசு ரெக்கார்டுகளில் இப்படியான ஏதாவது ஒரு குழப்பம் ஏற்பட்டு தொடர்ந்து கொண்டிருக்கும். அரசு அதிகாரிக்குப் பெரும்பாலும் நேரில் பார்ப்பதைவிடவும் ரெக்கார்டுகள் சொல்வதில்தான் நம்பிக்கை ஏற்பட வேண்டும். அரசாங்க ஆணையின்படி இந்தப் பகுதியை

தொழிற்சாலைக்கான நகரமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இருந்தது.

ஏதோ நடந்திருக்கிறது. ரெக்கார்டுகளில் ஏற்பட்ட தவறை சரி செய்ய வேண்டிய பொறுப்பு செழியனுக்கு. ஒன்று, ஆவணங்கள் சொல்கிறபடி அது நீர்வளமற்ற பகுதி என்பதை நிரூபித்து, தொழிற்சாலைகள் தொடங்குவதற்கான பரிந்துரைகளை, விண்ணப்பங்களை அனுப்புவது. இன்னொன்று அதை விவசாய பூமி என்பதை நிரூபிப்பது.

என்னசெய்வது? அது விவசாயம் செய்வதற்கான பூமியாகத்தான் இருந்தது. ரெக்கார்டுகள் அதைத் தொழிற்சாலை பூமியாக புன்செய் கூறின. அனைத்தையும் புஞ்சை நிலம் என்று சான்று அளிக்க வேண்டும். சொல்லப்போனால் அது ஒரு சொட்டு பச்சை மையின் வேலைதான். செய்ய செழியனுக்கு மனது கேட்கவில்லை.

1990க்கு பிறகு இங்கு என்ன நடந்தது என்பதை கிராம அலுவலர், ஆர்.டி.ஓ., டி.ஆர்.ஓ அதிகாரிகளை அழைத்து விசாரிக்க ஆரம்பித்தார் ஆட்சியர். அனைவரும் அது முப்போகம் விளையும் நன்செய் நிலங்கள்தான் என்றனர்.

இந்த நேரத்தில் விவசாயிகள் சிலர் கம்பெனிகள் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மனு கொடுக்க வந்தனர். வெள்ளை வேட்டியும் சட்டையும் பச்சை மேல் துண்டும் முகத்தில் கலவரமும் இருந்தது. கலெக்டர் அவர்களை உள்ளே வரச்சொல்லி, உட்காருமாறு சொன்னார்.

''30 வருஷத்துக்கு முன்னாடி இந்த ஊர்ல ரொம்ப வறட்சியா இருந்ததா?''

''ஆமாங்கய்யா மழைக்காலம் தவிர மீதி நேரத்துல பயிர் செய்ய முடியாது. நிலத்தடி நீர் ரொம்ப உள்ள போயிடுச்சு.''

அரசு அறிவித்த 'ரெட் ரெக்கார்ட் ஏரியா' என்பது சரியாகத்தான் இருந்தது.

''அப்புறம் எப்படி தண்ணீர் இப்ப மேலேயே வந்திருக்கு?''

பெரியவர் ஒரு பதில் சொல்ல ஆரம்பித்தார்.

''ஆமாங்கய்யா அப்போ ஊர்ல கிணறுதான் இருந்தது. எல்லாம் 50 அடி 60 அடி கிணறு. மூணு போகம் விளையும். அப்புறம் தண்ணி ரொம்ப உள்ள போயிடுச்சு. 10 ஹெச்.பி. 20 ஹெச்.பி. மோட்டார் எல்லாம் போட்டு போர் போட்டு தண்ணி எடுத்தாங்க. தண்ணி இன்னும் உள்ள போயிடுச்சுங்க. அதுக்கப்புறம் பாறை வந்துருச்சு. இனிமே தண்ணி கிடையாதுன்னு சொல்லிட்டாங்க.''

இதுவரை கலெக்டருக்கும் தெரிந்தது. ''அப்புறம் என்ன ஆச்சு?''

அனைவரும் மறந்துதான் போய்விட்டார்கள் நாகப்பனை.

பெரியவர் மீண்டும் ஞாபகம் வந்தது போல... ''ஆமாங்க ஊர்ல நாகப்பன்னு ஒருத்தன் இருந்தான். அவன்தான் அந்த சும்மா இருந்த 60 அடி கிணறுன்னு சொன்னேனே மழை நீர் வர்ர மாதிரி வழி செஞ்சான். மழைக்காலத்துல நிலத்துமேல வர்ர அவ்வளவு தண்ணியும் அந்தக் கிணத்துக்குள்ள போற மாதிரி காவா வெட்டிவிட்டாரு. எல்லா தண்ணியும் அங்கங்க இருக்கிற கிணத்துக்குள்ளதான் போகும். ஊர்ல மெல்ல மெல்ல நிலத்தடி நீர் ஊற ஆரம்பிச்சுது. ரோட்டிலையும் காட்டுலயும் போயிட்டு இருந்த தண்ணி எல்லாம் கிணத்துக்குள்ள போகும். நீர் மட்டம் உயர்ந்துச்சு. உண்மையிலேயே நாங்க விவசாயம் பண்ண ஆரம்பிச்சது அதுக்கு அப்புறம்தான். ஊரை ஒட்டி பொன்னை நதி ஓடுது. மழை நாள்ல தண்ணி ஓடும். அதில தண்ணி தேக்கி வெச்சா வருஷம் முச்சூடும் பூமியில தண்ணியிருக்கும்னு சொல்லுவான். சுமாரா எழுதுவான் சார். அப்ப கலெக்டர



பாத்து ஆத்து குறுக்க செக் டேம் ஒண்ணு கட்டிக்குடுக்கணும்னு மனு கொடுத்தான். எங்க அதிர்ஷ்டம் கலெக்டரும் நடவடிக்கை எடுத்தாரு. செக்டேம் கட்டினாங்க. இப்ப இவ்ளோ தண்ணி இருக்கறதுக்கு அவன்தான் சார் காரணம்.''

''அந்த நாகப்பன் இப்ப இல்லையா?''

''அது வந்துங்க... அவன் இப்ப இல்லைங்க.''

''இறந்து போயிட்டாரா?''

''தெரியலங்க... அதெல்லாம் ரொம்ப வருஷத்து கதை. நாகப்பன் சம்சாரம் செத்துப்போச்சு. ஒரே ஒரு பையன்தான். பையன் வேலை கிடைச்சு, ஊர்ல இருந்த நிலத்த வித்துட்டு ஹைதராபாத் பக்கம் போயிட்டான். அப்பனையும் கூப்பிட்டுப் பார்த்தான். நாகப்பன் அங்க போய் ரெண்டு நாள் இருந்து பாத்துட்டு மறுபடி ஊருக்கே வந்துட்டான். அங்க அவனுக்குத் தோது படல. திரும்பி வந்துட்டான். ஒண்டிக்கட்டையா இருந்தான். நாகப்பன பாத்துக்க ஆள் இல்ல. என்ன பண்ணுவான்? பங்காளிங்க சில பேரு இருந்தாங்க. ஒத்தாசையா இருந்தாங்க. அப்புறம் அவங்களும் கொஞ்சம் கொஞ்சமா ஒதுங்கிட்டாங்க. இவன் பாட்டுக்கு எங்கயோ போவான், வருவான். அப்படித்தான் ஒரு தடவ போனான்... அப்புறம் வரவே இல்ல. புள்ள வீட்டுக்கே போயிட்டான்னு ஜனங்க வசதிக்கு நினைச்சுக்கிச்சுங்க. ஒரு வருஷம் கழிச்சு தான் அவன் புள்ளகிட்ட இல்லன்னுட்டு தெரிஞ்சுதுங்கய்யா... அக்கம் பக்கம் சொந்த பந்தங்ககிட்ட விசாரிச்சுப் பாத்தாங்க. போனவன் போனபடி வந்துடுவான்னு விட்டுட்டாங்க.''

நாகப்பன் என்றொருவன் உலகில் இருக்கிறானா என்பதே கேள்விக்குறியாக இருந்தது. கலெக்டர் யோசனையில் ஆழ்ந்தார். ஒரு விவசாயிக்கு இருந்த எளிய அக்கறை ஒரு ஊரையே காப்பாற்றியிருப்பதை எத்தனை பேர் உணர்ந்தார்கள் என நினைத்துப் பார்த்தார். மண்ணை, பயிரை, உயிரைக் காப்பாற்றியிருக்கிறார் அந்த மனிதர்.

செழியன் மனுவை வாங்கிக்கொண்டு விரைவில் உங்கள் கோரிக்கை நிறைவேறும் எனச் சொல்லி அனுப்பி வைத்தார்.

ராணிப் பேட்டையில் அரசு ஒதுக்கியிருந்த ஆட்சியர் இல்லத்தில் இரவு உணவு சாப்பிடும் நேரத்தில் செழியனின் தந்தை கைபேசியில் அழைத்தார்.

சென்னையில் அன்றன்று நடந்த முக்கிய சம்பவங்கள் என அவர் நினைப்பவற்றை பையனிடம் பகிர்ந்துகொள்வார். ''இங்க மழைப்பா... அங்க?'' என்பதாக இருக்கும்.

செழியன் விவசாயிகள் கொடுத்த மனு குறித்து சொன்னான். நாகப்பன் என ஒருவன் ஊரையே காப்பாற்றிவிட்டுக் காணாமல் போனதைச் சொன்னான். கலெக்டரின் அப்பாவுக்குத் தான் தினமும் பூங்காவில் சந்திக்கும் தோட்டக்காரன்தான் நினைவுக்கு வந்தான்.

''அவனோட ஊர் பேரு என்ன சொன்ன?'' என்றார்.

''வல்லம்.''

''அவனோட பேரு?''

''நாகப்பன்.''

''இங்க ஒருத்தன் இருக்கான். கேட்டுப் பாக்குறேன்.''

காலையில் பூங்காவுக்குச் சென்றதும் தோட்டக்காரனைத் தேடினார். பூங்காவின் எதிர் முனையில் பைப்பைப் பிடித்து செடிகளுக்கு நீர் பாய்ச்சிக்கொண்டிருந்தான்.

தோட்டக்காரனைத் தேடி வந்து பேசுவது அவருக்குக் கொஞ்சம் மரியாதைக் குறைவுக்கான நிமித்தமாக இருந்ததால் தன் வழக்கமான சைகையாலேயே அவரை அழைத்தார்.

''என் பையன் ராணிப்பேட்டை கலெக்டர்.''

தோட்டக்காரருக்கு ராணிப்பேட்டை தனி மாவட்டமாக மாறிய கதை தெரியாது. அதுவுமில்லாமல் அதை எதற்குத் தன்னிடம் சொல்கிறார் என யோசித்தார்.

''நேத்து என் பையன் பேசினான். அங்க வல்லம்னு ஒரு ஊரு இருக்காம். தெரியுமா உனுக்கு?''

''கேள்விப்பட்டிருக்கேன்யா.''

''அங்க நாகப்பன் தெரியுமா?''

''அப்படி யாரையும் தெரியாதுங்கய்யா.''

''உன் பேர் என்ன சொன்னே?'' என்றார் ஓய்வு பெற்ற அதிகாரி. தான் எப்போதுமே அவரிடம் சொல்லாத தன் பேரை சொல்வதற்கு முன் ஒரு கணம் யோசித்தார் தோட்டக்காரர்.

''என் பேர் மலையப்பங்க'' என்றார் நாகப்பன்.

அதற்குள் அதிகாரியின் பயிற்சி நண்பர்கள் வந்துவிட, அவர்களிடம் பகிர்ந்துகொள்ள அவருக்கு நிறைய பெருமைமிகு சம்பவங்கள் இருந்தன. தோட்டக்காரர் பைப்பைத் திறந்து மீண்டும் செடிகளுக்கு நீர்ப் பாய்ச்ச ஆரம்பித்தார்.

ஓவியம்: ரவி



சிறுகதை

பெரியகாரியம்

கவியோவியத்தமிழன்

அய்யலூர் சந்தையில் ஆடு வாங்கி வீடு வந்து சேர்வதற்குள் அதற்கு பெயர் சூட்டாவிட்டால் எம் இல்லாளுக்கு தலையே வெடித்து விடும். ஆறு மாதத்திற்கு ஒருமுறையாவது தொத்தலோ தூங்கலோ வாங்கி வந்து கத்த விடாட்டி அவளுக்கு அவ்வளவு சீக்கிரமாய் பொழுது போகாது. எதை வாங்கினாலும் அதற்கு ஒரு பெயரை வைத்து கூப்பிட்டே அந்த ஆட்டை பழக்கி விடுவாள். அப்படித்தான் இந்த காளியப்பன் (இல்லாள் சூட்டிய பெயர்தான்) அடைமழை காலத்திய வியாழக்கிழமையொன்றில் வீடு வந்து சேர்ந்தான்.

வாங்கி வரும்போது மிகவும் தொத்தலாக மூக்கெல்லாம் சளி ஒழுக கரட்டுப் புரட்டு என்றுதான் இழுத்துக்கொண்டு வந்தது. நான் பார்த்தவுடன் கேட்ட கேள்வி 'நீ இந்த ஆட்ட பணத்துக்குத்தான் வாங்குனியா இல்லை ஓசியா கொடுத்தாங்கலா' என்பதுதான். என்னைப் போலவே ஊரில் வேறு பலரும் இந்தக் கேள்வியைத்தான் என் இல்லாளிடம் கேட்டு வைத்தனர். அந்த அளவுக்கு உடளவில் படு மோசமாக இருந்தான் காளியப்பன்.

ஆடு வாங்குற பொம்பள ஒச்சம் ஏதும் இல்லாம சுழியெல்லாம் பாத்து வாங்கனும். கொண்டுவந்து தள்றதயெல்லாம் மறுபேச்சு இல்லாம வாங்கியாந்தா இப்படித்தான் இருக்கும் என்று அவ்வப்போது என் அம்மாவும் இடித்துரைக்கவே செய்தார்.

காளியப்பன் நடக்கவே ரொம்ப சிரமப்படுபவனாகத் தெரிந்தான். மூக்கெல்லாம் சளி அப்பி குண்டியில் எப்போதும் கழிச்சல் கண்டபடி இருந்தான். மொட்ட வெயிலில் நீட்டி நிமிர்ந்து முழியெல்லாம் நட்டுக்கிட்டாற் போலே படுத்துக்கிடப்பான். புதியதாய் பார்ப்பவர்களுக்கு அது செத்துக்கிடப்பது போலவே தோன்றும்.

ஆரம்பத்தில் எனக்கு இந்த காளியப்பனை பிடிக்கவேயில்லை. என் வாழ்நாளில் இவ்வளவு நோஞ்சானாய் ஒரு ஆட்டுக் குட்டியை நான் பார்த்ததேயில்லை. இவ்வளவுக்கும் என் வீட்டில் என் அம்மா விதவிதமாய் ஆடு வளர்த்தவள்தான். கிடை பழுகி ஊர் பழுகினாற் போல பெரிய ஆட்டு மந்தையையே நிர்வகித்த குடும்பம் எங்களுடையது. அதெல்லாம் தனிக்கதை.

நாளடைவில் காளியப்பன் கொஞ்சம் கொஞ்சமாக தெளிவாகி வந்தான். எலும்பு துறுத்திக்கொண்டிருந்த இடமெல்லாம் சதை தட்டுப்பட தொடங்கியது. கழிசல், சளி போன இடம் தெரியாமல் உடல் மெருகேறிக் கொண்டிருப்பதைப் பார்க்க முடிந்தது.



நெற்றிக்கு கீழும் மூக்குக்கு மேலேயும் கொஞ்சம் புடைப்பாக இருப்பதாலேயே முகத்திற்கு ஒருவித கம்பீரத் தன்மையை தரித்துக்கொண்டது போலத் தெரிந்தது. பிறரால் கொஞ்சப்படாத, விரும்பப்படாத ஆடாகவே வளர்ந்தாலும் எல்லோராலும் கவனிக்கப்படும் விதமாகவே அதன் நடவடிக்கைகள் இருந்தது.

மற்ற ஆடுகளெல்லாம் குதியாட்டம் போடுகையில் இது மட்டும் தாமுண்டு தமது வேலையுண்டு என்று இருக்கும். புளியமரத்தடியிலும் தாவாரத்தின் கீழும் அசைபோட்டபடியே எதையோ ஆழ்ந்து யோசிப்பவன் போலப் படுத்திருக்கும். அதன் விழிகளில் கொஞ்சம் கூட சலனம் இருக்காது. ஆழ்கடல் அமைதியை ஒத்திருக்கும். ஆட்களை ஏறிட்டு பார்க்கும்போது அதன் பார்வை மிகுந்த தெனாவெட்டாய் இருக்கும். அப்போதெல்லாம் 'சாகப் பொழைக்க கிடந்ததுக்கு வந்த திமிரப் பாருடா' என்று இல்லாள் பொய்க்கோபம் கொள்வாள்.

காளியப்பன் என்று பெயர் சூட்டுவதற்கு ஊர் காளியம்மன் கோயிலுக்கு நேந்து விட்டதும் ஒரு காரணம். எந்த ஆடும் எங்களிடம் வெறுமனே வளர்வதில்லை. வாங்கிய கையோடு அதை காளியம்மனுக்கோ, கருப்பசாமிக்கோ, அய்யனாருக்கோ வெட்டி பூஜை போட்டுவிடுவதாய் வேண்டிக்கொண்டுதான் அதற்கு புல்லையே காட்டுவோம்.

வீட்டின் முன்பாகவே கொஞ்சமாய் இருந்த நிலத்தில் மேய்த்து மேய்த்து அலுத்துப்போன இல்லாள், எங்காவது வெளியில் கொண்டு போய் மேய்த்துவந்தால் தேவலாம் என்பாள் அடிக்கடி. நானும் அதை ஆமோதித்து வைத்தேன்.

அன்று ஆடுகளை வரட்டாற்றங்கரைப் பக்கம் ஓட்டிக்கொண்டு போனாள். காளியப்பன் குதியாட்டம் போட்டுக்கொண்டு ஓடினான். சிறகிருந்தால் பறந்துவிடுவது போல பரவச நிலையில் இருந்தன அனைத்து ஆடுகளும். காளியப்பன் தலையை ஆட்டியபடி பரந்த வெளிகள் கண்டு குதூகலமடைந்தான். ஒரே இடத்தில் இத்தனை நாட்களும் மேய்ந்த காளியப்பன் தடைகளற்ற புல்வெளி பரப்புகள் பார்த்து சதிராட்டம் போட்டது.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புதிய இடங்களுக்கு ஆடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டினாள் இல்லாள். கட்டிப்போட்டு மேய்ப்பதை விட நாலு பக்கம் அலையவிட்டு மேய்த்தால் ஆடுகள் சீக்கிரம் பெருக்கும் என்ற உண்மையை கொஞ்சம் கொஞ்சமாய் கண்ணெதிரே காணத் தொடங்கினேன்.

காளியப்பன் முன்பு பார்த்தது போல இல்லை. நிறைய மாறி விட்டிருந்தான். எனது வீட்டின் ஒவ்வொரு

அங்குலத்தையும் நன்கு அறிந்து வைத்திருந்தான். எனது மகள் மகனிடமும் நல்ல அன்யோன்யம். பிள்ளைகளும் காளியப்பனை ஆடாய் பார்க்கவில்லை. வீட்டில் உள்ள ஒரு ஆள் என்பது போலத்தான் நடத்தினார்கள். மற்ற ஆடுகளை விட காளியப்பனே எனக்கும் பிடித்தவனாக மாறிப்போனான்.

கடைவீதியிலிருந்து நான் வீடு போகும் போதெல்லாம் தமது வரவேற்பை மெல்லிய சத்தமெழுப்பி அறிவிப்பான். நான் கட்டிலில் போய் உட்கார்ந்தால் என்னருகில் வர படாதபாடு படுவான். தலையை ஆட்டுவான், தரையை கால்களால் நிமிண்டுவான்.

அது சரியான காற்றடி காலம். புளியமரங்களை எல்லாம் வேரோடு புடுங்கிப் போடும் அளவுக்கு காற்று அசுரத்தனமாக வீசத்தொடங்கியது. அக்கம் பக்கத்து காடுகளெல்லாம் மணல் பூசிக்கிடந்தன. கிழக்கே வேளார் வீட்டு பனங்காட்டில் எந்நேரமும் பனமட்டைகள் சரசரத்துக்கொண்டிருந்தன. காற்று அடிக்கும் அடியைப் பார்த்தால் மக்க மனுச உடம்புல எந்தத் துணியும் நிக்காது போல என்று வீதியில் வருவோர் போவோர் பேசிக்கொண்டனர். அதே போல அடித்த காற்றில் பக்கத்து வீட்டுச் சிறுமி பவுனுவின் பாவாடை அவள் தலை வரை மேலெழும்பி பறக்கத்தொடங்க தெருவே சிரிப்புக்கோலம் பூண்டது.

என் இல்லாள் வெவ்வேறு பக்கம் ஆடுகளை ஓட்டிப்போய் மேய்த்து வந்தாள். காளியப்பன் உடம்பில் நல்ல வனப்பும் மினு மினுப்பும் கூடிக்கொண்டே வந்தன. அதன் அருகில் போய் தடவிக்கொடுத்து குரல்வளையோடு முகத்தை அணைத்துக்கொள்ளும் அளவுக்கு எனக்கும் அதற்குமான நெருக்கம் கெட்டிபடத் தொடங்கியது.

எனது வண்டிச்சத்தம் கேட்டாலே ஆவலோடு சாலையைப் பார்ப்பதை வழக்கமாய் கொண்டிருந்தான் காளியப்பன். பெரிதாகவெல்லாம் அலட்டிக்கொள்ள மாட்டான். தெனாவெட்டாய் ஒரு ராஜபார்வையை என்மேல் வீசி தலையை சிலுப்பிக்கொள்வான். என்னைப் போலவே எனது சின்னமகளும் காளியப்பன் மேல் உயிரையே வைத்திருந்தாள். பள்ளிக்கூடம் போகும் நேரம் போக மற்ற நேரமெல்லாம் காளியப்பனின் அருகாமைதான் அவளுக்கு சொர்க்கம். 'ஒரு சாதாரண ஆட்டின் மேல் இவுங்க ஏன் இவ்வளவு பாசம் வைக்கிறாங்க, என்னைக்கா இருந்தாலும் வெட்டித்திங்கிற ஆடுதானே' என்று ஊர் சனம் பேசுகின்ற அளவுக்கு காளியப்பன் மேலான பாசம் பக்கத்தூர் வரை பிரசித்தி பெற்றதாய் மாறியது.

ஒருமுறை தீபாவளிக்கு எல்லோருக்கும் ட்ரெஸ் எடுக்கையில் காளியப்பனுக்கும் ட்ரெஸ் வேண்டும் என்று சின்னமகள் அடம் பிடிக்கத்தொடங்கினாள். வேறு வழியில்லாமல் துணி எடுத்து தைக்க கொடுத்து தீபாவளி அன்று காளியப்பனுக்கு குளித்துவிட்டு போட்டுவிட்டோம். பக்கத்து வீடு எதுத்த வீட்டுக்காரர்களெல்லாம் இதென்னடா விந்தை என்று மூக்கின்மேல் விரலை வைத்துப் பார்த்தனர். சிலர் 'ரொம்பத்தான் ஓவர்' என்பது போல கடுப்படித்தனர். நாங்கள் எதையும் காதுக்கே வைத்துக்கொள்ளவில்லை. காளியப்பனை அழகுபடுத்திப் பார்ப்பதும், அதற்கு பூ பொட்டு வைத்து அலங்கரிப்பதுமாக சின்னமகளோடு சேர்ந்துகொண்டு என் இல்லாளும் நாளெல்லாம் வேடிக்கை நிகழ்த்திக்கொண்டிருந்தாள்...

மற்ற ஆடுகளையெல்லாம் விட்டுவிட்டு காளியப்பனை மட்டும் அவிழ்த்து வந்து இரவுநேரங்களில் சின்னமகள் தன்னோடு படுத்துக்கிடக்கும்படி பழக்கிவிட்டிருந்தாள். காளியப்பனும் இரவெல்லாம் அசைபோட்டபடி அவள் தலைமாட்டிலோ கால்மாட்டிலோ படுப்பதை வழக்கமாய் கொண்டிருந்தது.

நான் பிற்பாடு பெயிண்டிங் வேலைகளில் பிஸியாகி ஊர் ஊராக அலைந்துகொண்டிருந்த ஒரு பொழுதில் சின்னவளிடமிருந்து போன். பெயிண்ட் வாளியோடு சாரத்தில் சாய்ந்தபடியே செவிமடுத்தேன்.

'காளியப்பனுக்கு முடியலப்பா... யூரினும் போகல, அசைபோடவும் மாட்டேங்குது...' என்றாள் கவலை தோய்ந்த குரலில்.

'கடையில் ஓம வாட்டர் இருந்தால் வாங்கி ஊத்துங்கம்மா சரியாப்போயிடும்...

'அம்மா ஊத்துச்சுப்பா ஆனா இன்னும் அப்படியேதான் இருக்குது.'

'கொஞ்சநேரம் கழித்து பாருங்க, சரியாப்போயிடும்' என்று சொல்லி தொடர்பை துண்டித்தேன்.

மனதுக்குள் கவலை குடிகொண்டது. இத்தனை காலமும் காளியப்பனுக்கு நோய் நொடியென்று எதுவும் வந்ததில்லை. வேண்டாத இலைதலைகளை ஏதும் தின்றிருக்குமோ, அல்லது யாரும் அடித்திருப்பார்களா என்று பலவாறாக சிந்தனைகள் உள்ளுக்குள் ஓடியது.

இரவு வீட்டிலிருந்து போன் எதுவும் வரவில்லை. நானும் போட்டுக் கேட்க தோதற்றவனாய் இருந்தேன். இரவிலும் பெயிண்டிங் வேலை. புது வீடு. இரண்டு தினங்களில் கிரகப்பிரவேசம். அதனால் மேஸ்திரி எங்களை எங்கேயும் விடாமல் வேலையை பிதுக்கி எடுத்தார்.

காலையில் வேலை தொடுவதற்கு முன்பாகவே இல்லாளிடமிருந்து போன். காளியப்பன் ஓயாது கழிகிறான் என்றும் அதனால் ரொம்பவும் கிறங்கியிருப்பதாகவும் உள்ளுக்குள் உடைந்திருப்பவளாய் பேசினாள். பலமுறை இப்படி ஆடுகளுக்கு முடியாமல் போவதும் பிறகு சரியாவதும் வழக்கமான ஒன்றுதான். எல்லாம் சரியாப்போகும் என்று என்னை நானே சமாதானப்படுத்திக்கொண்டு யு-டியூப்பில் இரவே பார்த்து வைத்திருந்த இரண்டொரு மருத்துவமுறைகளை சொல்லி தொடர்பை துண்டித்தேன்.

எனக்கு வேலையே ஓடவில்லை. மனமெல்லாம் சோர்வு அப்பிக்கொண்டது. சின்ன மகளை நினைத்தால்தான் கவலையாக இருந்தது. அவள் உணர்வுகள் என்னவாக இருக்கும் என்று ஒரு நிமிடம் நினைத்துப் பார்த்தேன். மனம் நிலைகொள்ளவில்லை. கூட வேலை பார்த்தவர்கள் பல்வேறு ஆலோசனைகளை சொன்னார்கள். பூசாரியை கூப்பிட்டு மந்திரித்து பார்க்கச் சொன்னார்கள். பின் அவரவருக்கு தெரிந்த சில எளிய மருத்துவ முறைகளைச் சொன்னார்கள். இதெல்லாம் நான் சொல்லாமலே செய்பவள்தான் என் இல்லாள். இந்நேரம் காளியப்பன் நலம்பெற அவள் சக்திக்கு என்ன முடியுமோ அவ்வளவையும் செய்து பார்த்திருப்பாள்.

நான் வேலையில் மனம் ஒட்டாமல் மேஸ்திரியிடம் சொல்லிவிட்டு வீட்டிற்கு கிளம்பினேன். வேலைபார்த்த காசில் மேஸ்திரி கொஞ்சமாய் செலவுக்கு பணம்கொடுத்தார். குட்டி பயணம். நகரப் பேருந்து ஆடி அசைந்து ஊர் அடைவதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது.

வீட்டிலிருந்து மீண்டும் போன். என்னவோ ஏதோவென்று பதைபதைப்புடனே செவிமடுத்தேன். இல்லாள்தான் பேசினாள். தான் டாக்டரை கூட்டிவந்து பார்த்ததையும் அவர் மருந்து ஏதும் கொடுக்காமல் ஊசி மட்டும் போட்டுவிட்டு சென்றதையும் சொன்னாள். தற்போது வீட்டின் பின்புறம் புங்கை மரத்தடியில் படுத்திருப்பதாகவும் பிற ஆடுகளும் மேய்ச்சலுக்கு போகாமல் காளியப்பன் உடனேயே படுத்திருப்பதாகவும் சொன்னாள். எனக்கு என்னவோ போலிருந்தது. ஊருக்கு வந்திட்டேன். இன்னும் கொஞ்ச நேரத்திலெல்லாம் வீட்டுக்கு வந்திடுவேன் என்று சொல்லி தொடர்பை துண்டித்தேன்.

கொஞ்சமாய் மது அருந்தினால் தேவலாம் போலிருந்தது. சந்தைப்பக்கம் பிளாக்கில் கிடைத்ததில் ஒரு கோட்டர் வாங்கி அதில் கட்டிங் மட்டும் போட்டுக்கொண்டேன். சைடிஸாய் மிளகாய்த்தூள் போட்ட மாங்காய் துண்டுகளை நீட்டினர். கிரேப் மாங்காய்

துண்டுகள். வயிறு கபகபவென்று எரிந்தது. புகைக்க வேண்டும்போல் தோன்றியது. சந்தை கேட்டின் பின்புறம் நூற்றுக்கணக்கான ஆடுகள் மேய்ந்துகொண்டிருந்தன.



எனக்குள் காளியப்பன் நினைவுகள் மீண்டும் மீண்டும் அலைமோதின. பக்கத்தூரில் உள்ள ஆட்டு வைத்தியர் ஒருவரை போய் கையோடு அழைத்து வந்து காளியப்பனை சரிசெய்ய வேண்டுமென மனதிற்குள் உறுதி பூண்டிருந்தேன். கைராசியான வைத்தியர். போட்ட கட்டிங் போதையாய் உடலெங்கும் பரவத் தொடங்கிய நேரத்தில் மீண்டும் வீட்டிலிருந்து போன்.

'காளியப்பன் செத்துப்போச்சுங்க...'

வார்த்தைகள் அழுகையில் சிக்குண்டதாய் வெளிப்பட்டன. பின்னணியில் சின்ன மகள் அழுவதும் கேட்டது. வெள்ளை வெள்ளையாய் கழிந்ததாகவும் அதில் அரிசியும் இருந்ததாகவும், அரிசியைத் தின்ற ஆட்டுக்கு கண்ட மருந்துகளைத் தந்ததால் இறந்திருக்கும் என்று பக்கத்து வீட்டு பாப்பா சொன்னதாகச் சொல்லி அழுது அரற்றினாள்.

சாவதற்கு முன்பாக தட்டுத்தடுமாறி எழுந்து சின்ன மகள் முகத்தையே முகர்ந்து பார்த்ததாகவும் பிறகு தமது சக ஆடுகள் ஒவ்வொன்றிடமும் போய் நின்றதாகவும் சொல்லி மீண்டும் தொடரமுடியாதவளாய் அழுதாள். நான் செய்வதறியாது ஆழ்ந்த மௌனத்தில் உறைந்துகொண்டிருந்தேன்...

'ஆடு உறிக்கிறவர் வந்திருக்காருங்க. கறிய கூறுபோட்டு வித்திட்டா முதலுக்கு மோசமிருக்காது...' என்றவளை இடைமறித்து கத்தினேன்...

'நீ செத்தா நான் உன் கறிய கூறுபோடுவேனாடி...'

என் கத்தலால் சந்தைத் திடலே அதிர்ந்தது. சுற்றும் முற்றும் இருந்தவர்கள் விநோதமாய் பார்த்தனர்.

'ஒழுங்கு மரியாதையா அந்த ஆள போகச் சொல்லிடு...' என் நா தழுதழுக்கத் தொடங்கியது.

மனம் விம்ம விம்ம சந்தைத் திடலுக்கு வெளியே இருந்த பூக்கடையில் ஒரு பெரிய மாலை கட்டச் சொன்னேன். பூக்கடைக்காரர் 'என்ன தம்பி பெரிய காரியமா?' என்றார். ''ஆமாண்ணே'' என்று சொல்வதற்கும் கன்னங்களில் கண்ணீர் தாரைதாரையாய் இறங்குவதற்கும் சரியாய் இருந்தது.



ஓவியம்: ரமணன்

சிறுகதை

ரசவாதி

அசோகன் நாகமுத்து,

அதிகாலையில் மேகம் கீழிறங்கி வந்ததுபோல் தரையில் பனிமூட்டம். தென்கோசலம் இன்னும் விழித்திருக்கவில்லை. மூடுபனித்திரையில் ஓர் இளைஞர் நடந்துகொண்டிருந்தார். மழித்த தலை. காவி உடை. பெரும் கம்பீரத்துடன் கூடிய நடை அவரது உயர்ந்த ஞான நிலையை அறிவிப்பதாக இருந்தது. பனி விலகத்தொடங்கிய சற்று நேரத்தில் அந்த பௌத்த விகாரத்தின் வாயிலுக்கு அவர் வந்திருந்தார். உள்ளிருந்து ஒலித்த சரணகோஷத்தில் கண்களை மூடி லயித்தார். சற்று நேரம் கழித்து ஓர் இளம் துறவி எதிர்ப்பட்டார். இவரைக் கண்டதும் சற்று நின்று உற்றுக் கவனித்தார். அடையாளம் தெரியவில்லை. தெரிந்திருக்க வாய்ப்பும் இல்லை.

''நான் ஆரியதேவா. பெரியவர் நாகார்ஜுனரைச் சந்திக்க வந்துள்ளேன். அவரிடம் கூறுங்கள்''

பெயரைக் கேட்டதும் அத்துறவி மறுபேச்சுப் பேசாமல் ஆரியதேவரைப் பெரும் பணிவுடன் வணங்கினார். அவரது கண்கள் பெருமளவில் ஆச்சரியத்தால் விரிந்திருந்தன. விஹாரத்துக்குள் ஓடினார். ஆரியதேவர் புகழ் பெற்ற இளம் பௌத்த துறவி. அவர் ஞானத்தின் வீச்சு இந்த பாரததேசம் முழுக்கப் பரவி இருந்தது. அவர் மிகவும் பழுத்த, பௌத்தத்தில் புதியபாதையைக் கண்ட ஞானியான நாகார்ஜுனரைக் காணவந்துள்ளார். இளம் துறவி பெரும் பரபரப்படைந்திருந்தார்.

உள்ளே பத்மாசனத்தில் அமர்ந்திருந்தார் நாகார்ஜுனர். அவரது கண்கள் அரைக்கண் திறந்திருந்தன. எதிரே புத்தர் சிலை. அதிலிருந்து பெருகிய கருணை அந்த அறையை நிறைத்திருப்பதுபோல் ஒரு பிரமை.

இளம் துறவி அவர் முன்பாக மண்டியிட்டு தகவலை அறிவிக்கப்போனார். அதற்குள் கண்களைத் திறந்த நாகார்ஜுனர் புன்னகை புரிந்தார். எதுவும் சொல்லவேண்டாம் என்று சைகை செய்தார்.

எதிரே இருந்த கிண்ணத்தை எடுத்தவர் இளம் துறவியிடம் கொடுத்தார்.

''இதில் நீரை நிரப்பி வந்திருப்பவரிடம் கொடு''

இளம் துறவிக்கு எதுவும் புரியவில்லை. குருவின் சொல்லுக்குக் கீழ்ப்படிவதன்றி அவருக்கு எதுவும் பழக்கமில்லை. தண்ணீரை நிரப்பி எடுத்துச் சென்று ஆரிய தேவரிடம் நீட்டினார்.

அவர் பெரிய கண்கள் ஒரு நொடி இடுங்கின. எதுவும் யோசிக்காமல் சின்ன ஊசியை இடுப்பில் இருந்து எடுத்தார். அதை தண்ணீர் கிண்ணத்தில் போட்டார். அடியில் சென்று படிந்தது ஊசி.

''இதைக் கொண்டுபோய் அவரிடமே கொடும்''.

இளம்துறவி ஏதும் புரியாமல் இயந்திரம் போல் மீண்டும் நாகார்ஜுனரிடம் வந்து கிண்ணத்தை நீட்டினார்.

அதைப் பார்த்ததும் ''ஆஹா...'' என்றார் பாரத தேசத்தின் அந்த புகழ்பெற்ற பெரும் துறவி.

உடனே எழுந்து வாயிலுக்கு வந்தவர் ஆரியதேவரை அன்புடன் அணைத்து அழைத்துக்கொண்டு உள்ளே சென்றார்.

பார்த்துக்கொண்டிருந்த இளம்துறவி திருதிருவென விழித்தார். சத்தியமாக அவருக்கு எதுவும் புரிந்திருக்கவில்லை. அன்று மாலை தோட்டத்தில் நாகார்ஜுனரும் ஆரியதேவரும் உலவிக்கொண்டிருந்தபோது அவர் சென்று வணங்கினார்.

''இன்று காலை நடந்தது எதுவும் எனக்குப் புரியவில்லை. விளக்கவேண்டும்''

நாகார்ஜுனர் ஒரு குழந்தையைப் பார்ப்பதுபோல் அவரைப் பார்த்தார்.

''இளம் பிக்குவே, ஆரியதேவர் பௌத்த சாஸ்திரங்களில் மிகவும் பாண்டித்தியம் பெற்றவர். அவர் எம்மிடம் பௌத்தஞானம் பற்றி மேலும் கற்கவும் விவாதிக்கவும் வந்துள்ளார். அவருக்கு தண்ணீர் நிரம்பிய கிண்ணத்தை அனுப்பியதன்மூலம் என் பாத்திரம் நிரம்பியுள்ளது. அதாவது நான் எல்லா நூல்களையும், சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்துள்ளேன். புதியதாக கற்க எதுவுமில்லை என்ற செய்தியை அனுப்பினேன். ஆர்யதேவர் ஞானவான் அல்லவா? அதில் ஊசியைப் போட்டதன்மூலம் நீங்கள் கற்ற அனைத்தையும் ஊடுருவிப்பார்க்க வல்லவன் நான் என்ற செய்தியை எனக்குப் பதிலாகத் தந்துள்ளார்.''

அற்புதம் என்று வியந்தார் இளம் துறவி. ஆரியதேவரும் நாகார்ஜுனரும் காற்றைப்போல அவரைக் கடந்துசென்றனர்.

மதிய நேரம் ஆகியிருந்தது. மூக்கால் நீர் அருந்திக்கொண்டிருந்த நாகார்ஜுனரை உற்றுப்பார்த்த ஆரிய தேவர், ''இதுபோல் பல யோகமுறைகளைக் கடைப்பிடித்து 150 வயதுவரை வாழ்ந்துவிட்டீர்கள். யான் தங்களைச் சந்தித்து அளாவளாவும் வாய்ப்பும் உங்கள் ஆயுள் நீட்டிப்பால்தான் கிட்டியது. நீங்கள் இன்னும் பல நூற்றாண்டுகள் இம்மண்ணில் வாழ்ந்து உலகுக்கு வழிகாட்டவேண்டும்''

நாகார்ஜுனரின் கண்கள் பளிச்சிட்டு ஈரமாயின. பின்னர் ஒரு கையால் எதிரே இருந்த மணலை எடுத்து இறுக்கமாகப் பிடித்து வெண்கலப் பாத்திரம் ஒன்றில் போட்டார். அது உடனே பொன்னாக மாறி ஒளிர்ந்தது. பாரததேசத்தின் மிகப்பெரிய ரசவாதியின் கண்ணில் ஒரு கணம் பெருமிதம் குடிகொண்டு மறைந்தது.

''ஆரியரே, என் வாழ்நாளில் இலக்கற்று திரிந்த காலமும் ஒன்று உண்டு. அது என் இளமைக்காலம். ஆனால் அப்போது அசாத்தியமான திறமைகளைக் கொண்டிருந்தேன்.

எந்த ஒரு பொருளையும் முகர்ந்துபார்த்தே அதில் அடங்கி உள்ள பொருட்களைச் சொல்லிவிடுவேன். ஆற்றுத் தண்ணீரில் ஒரு துளி கிடைத்தாலும் அதில் கரைந்துள்ள உலோகங்களை என்னால் சொல்லிவிடமுடியும். மருத்துவ சாஸ்திரம், ஜோதிட சாஸ்திரம், வான சாஸ்திரம் என நான் கல்லாத துறைகளே இல்லை. ஆனாலும் இளமையின் முறுக்கில் நானும் என்னுடைய மூன்று நண்பர்களும் ஒரு தவறு செய்தோம்''

ஆரியதேவர் அமைதியாக இருந்தார்.

''ஒருநாள் விளையாட்டாக சுற்றிக்கொண்டிருந்தபோது காட்டில் ஒரு யோகியைக் கண்டோம். விரல் அசைவில் புயலையும் மழையையும் வரவழைத்தான் அவன். அவனிடம் நாங்கள் கண்ணுக்குத் தெரியாமல் மறையும் வித்தையை சொல்லித்தருமாறு கேட்டோம். அவன் எங்களுக்கு அதைத் தரவிரும்பவில்லை. மாறாக ஒரு மூலிகைப் பொடியைத் தந்து அதைக் கண்களில் பூசிக்கொள்ளுமாறு சொன்னான். நான்தான் பெரிய மோப்பக்காரனாயிற்றே... அதை ஒருமுறை முகர்ந்துவிட்டு அதில் இருந்த அத்தனை மூலிகைகள் பெயரையும் கடகடவென உச்சரித்தேன். யோகி அசந்துவிட்டான். காற்றில் மறையும் வித்தையைக் கற்பித்தான். நாங்கள் அனைவரும் உற்சாகமானோம். நேராகச் சென்று நுழைந்த இடம் எது தெரியுமா? அரசனின் அந்தப்புரம். கண்ணுக்குத் தெரியாத கந்தர்வர்களாக எங்கள் ஆசையை அங்கிருந்த அழகிய பெண்களிடம் தீர்த்துக்கொண்டோம். இதில் அடிக்கடி நாங்கள் ஈடுபட்டோம். ராஜகுடும்பங்களில் விளையாடவேண்டும் என்பது எங்கள் இளமைக் கனவு. ஆனால் என்னதான் நாங்கள் கண்ணுக்குத் தெரியாமல் இருந்தாலும் எங்களைப் பற்றிய வதந்தி அரண்மனையில் பரவ ஆரம்பித்தது. சுமார் 25 அரண்மனைப் பெண்டிர் கருவுற்றனர். அரசன் காதுக்கு செய்தி போயிற்று'' நிறுத்திய நாகார்ஜுனர் அழகாக புன்னகைத்தார்.

''ஆரியரே... கதை சுவாரசியமாக உள்ளதா?''.

''ஆம்.'' என்றார் இளம் பிக்கு தயக்கத்துடன்.

''அதன் பிறகு நடந்ததுதான் உமக்கு இன்னும் சுவாரசியமாக இருக்கப் போகிறது. அரசன் சும்மா இருப்பானா? என்ன இருந்தாலும் அப்பெண்டிர் அவனுடைய சொத்துக்கள் அல்லவா? மாற்றானின் விதைகளை அங்கு அவன் அனுமதிப்பானா? அத்துமீறும் எங்களைப் பிடிக்க வலைவிரித்தான். நுண்ணிய தானியங்களை அந்தப் புரவாசலில் பரப்பினான். நாங்கள் உள்ளே நுழைந்தபோது எங்கள் கால்கள் அதில் பதிந்தன. நான்கு ஜோடிக் கால்கள். ஆட்கள் உள்ளே வந்திருக்கிறார்கள் என்று அரசனின் ஆட்கள் கண்டுகொண்டனர். கதவு இழுத்து மூடப்பட்டது. அந்தப்புரம் முழுக்க வெட்டவெளியில் வாட்களை வீசுமாறு வீரர்களுக்கு உத்தரவிட்டான். என் நண்பர்கள் மூவரும் அதில் சிக்கி ரத்த வெள்ளத்தில் செத்து விழுந்தனர். நான் மட்டும் பிழைத்தேன்.''

''எபபடி?'' ஆர்வம் குமிழியிட்டது.

''பிழைத்திருந்தது நான் செய்த தவறு என்று இப்போது தோன்றுகிறது. சமயோசிதமாக அரசனின் அருகே போய் நின்றுகொண்டேன். மூச்சை அடக்கிக்கொண்டேன். அரசனின் அருகில் யாரும் வாள் வீசவில்லை. பிழைத்தேன். ஆனால் அந்தப்புரம் முழுக்க வாள்கள் சுழன்ற அந்த உயிராபத்தான நிமிடங்களில் நான் புதியதாகப் பிறந்தேன். இதில் பிழைத்தால் இனி எந்த சிற்றின்பங்களிலும் ஈடுபடுவதில்லை என்று உறுதி எடுத்துக்கொண்டேன். தப்பிப் பிழைத்ததும் வடக்கே சென்றேன். பௌத்த விகாரம் ஒன்று என்னை அரவணைத்தது. ததாகதரின் கருணை என்னை ஆட்கொண்டது. இந்த பிறவியை நான் கடந்துவிட்டேன். இனி மறுபிறவி எனக்கில்லை. ஆயினும் மைத்ரேய புத்தர் மீண்டும்

இப்புவியில் தோன்றுகையில் அவரது ராஜ்யத்தில் நான் வாழும் ஒரே வாய்ப்புக்காக ஏங்குகிறேன்''

நாகார்ஜுனர் கண்களை மூடி எல்லையற்ற வெளியில் கரைந்தார். ஆரியதேவரும் கண்களை மூடிக்கொண்டார். சித்தார்த்தருக்குப் பின்னர் அடுத்த புத்தராக மைத்ரேயர் தோன்றுவார் என்பது பௌத்த நம்பிக்கை.

.....



''அம்மா, இன்னும் எத்தனை நாளைக்கு?'' பட்டத்து இளவரசன் யோகிதாசன் கேட்டான். கசப்பு முற்றிய குரல்.

அவனது அம்மா, தென் கோசலத்தின் ராணிகளில் ஒருத்தி. சாதவாகன மன்னனின் மனைவி. அறுபதைத் தாண்டிய மகனின் நரைத்தகோலத்தை பரிதாபமாகப் பார்த்தாள். இருபத்தி ஐந்து ஆண்டுகளாக மன்னனாக வேண்டும் என்று காத்திருக்கிறான். ஆனால் அவளது கணவன் தன் 115 வயதில் மிகுந்த ஆரோக்கியத்துடன் உலா வருகிறான். அவனுக்கு இப்போது சாவு இல்லை என்பது அவனுக்கும் அவளுக்கும் மட்டும் தெரிந்த ரகசியம்.

அவள் தலையை மட்டும் ஆட்டினாள். கண்கள் எங்கோ இருந்தன. காதில் குழைகள் ஆடின.

''தாயே.... கேட்கக்கூடாத ஒன்றுதான். நான் எப்போது இந்த நாட்டின் அரியாசனத்தில் அமர்வேன்? தந்தையோ நாளுக்கு நாள் இளமையாகிக்கொண்டே போவது போல் தோன்றுகிறது. என்னைப்பார்த்தாயா? நரைத்து கிழவனாகிக் கொண்டே போகிறேன். தந்தைக்கு சாவே இல்லையா? எப்போது சாவார்? எனக்கு வரும் ஆத்திரத்தில் அவரைக் குத்திக் கொன்றுவிடப்போகிறேன்''

குமுறினான்.

''அதில் பிரயோசனமில்லை மகனே. நீ அவரைக் குத்தினாலும் நாகார்ஜுனர் அவரை பிழைக்க வைத்துவிடுவார்''

நாகார்ஜுனர் பெயரைக் கேட்டதும் இளவரசன் அச்சமுற்றான்.

''மகனே அஞ்சாதே. நாகார்ஜுனர் மிகப்பெரிய ஞானி. யாருக்கும் எக்காலத்திலும் தீங்கிழைக்கமாட்டார். ஏன் உன் கரங்கள் நடுங்குகின்றன?''

''நான் அவர் எதிரில் செல்லும்போதெல்லாம் நான் நினைப்பதையெல்லாம் அவர் தன் சக்தி கொண்டு அறிந்துவிடுகிறாரோ என்று அஞ்சுவேன் அம்மா. அந்த மனிதரும் நான் பேசுவதற்கு முன்பே எனக்கு பதில் சொல்லிவிடுவார்''



'' நான் ஒரு காரியம் சொல்கிறேன் செய்வாயா?''

''நாகார்ஜுனரைச் சந்தித்து உன் மனக்குறையைச் சொல். எப்போது உன் தந்தை இறப்பார் என்று கேள்''

இளவரசன் இதைக் கேட்டதும் நடுங்கினான்.

''மகனே.... இதுவரை யாரிடமும் சொல்லாத ரகசியத்தை உன்னிடம் சொல்கிறேன் கேள். உன் தந்தையின் வாழ்நாள் நாகார்ஜுனரின் வாழ்நாளுடன் பிணைந்திருக்கிறது. சுமார் 75 ஆண்டுகளாக தென்கோசலத்தின் சக்கரவர்த்தியான உன் தந்தை நாகார்ஜுனருக்கு பணிவிடை செய்து வாழ்கிறார். இதற்கு அவர் கொடுத்த வரம்தான் நாகார்ஜுனர் வாழும் வரை உன் தந்தையும் வாழ்வார் என்பது''

''அப்படியானால் என் தந்தை எப்போது இறப்பார் என்று கேட்டால் நீங்கள் எப்போது சாவீர்கள் என்று நாகார்ஜுனரைக் கேட்பதாகத்தானே அர்த்தம்''

ராணி தலை அசைத்தாள்.

''மகனே நீ அரச கட்டிலில் ஏற வேண்டுமானால் இதைத் தவிர வேறு வழி இல்லை. தந்தைக்குப் பின் தனயனுக்கு அரசபதவி வரவேண்டும். இது இயற்கை. இந்த இயற்கைக்கு மாறாமல் நடந்து உனக்கு மனக்கிலேசம் ஏற்படுவதை அந்த மகான் விரும்பமாட்டார்.''

மறுநாள் காலையில் தன் விஹாரத்தின் வெளியே தோட்டத்தில் உலவிக்கொண்டிருந்த நாகார்ஜுனரை சந்தித்து வணங்கினான் இளவரசன். அவரை நிமிர்ந்து பார்க்க சக்தி இல்லை அவனுக்கு. எப்போதும்போல் தன் மனதை ஊடுருவி படித்துவிடுவார் என்று எதிர்பார்த்தான். வழக்கத்துக்கு மாறாக நாகார்ஜுனர் எதுவும் சொல்லவில்லை. அவரது கருணை மிகுந்த விழிகள் அவனைக் கண்டன. பேசுமாறு கைகள் சைகை செய்தன.

''பெருமைக்குரியவரே.... எனக்கோ அறுபது வயதுக்கும் மேலாகிக் கொண்டிருக்கிறது. எப்போது நான் அரியணையில் ஏற முடியும்? அதற்குத் தடையாக நீங்கள் தானே இருக்கிறீர்கள்?'' தடுமாறி சொற்களை உதிர்த்துவிட்டான்.

நாகார்ஜுனரின் முகம் மேலும் கனிந்தது. இளவரசனின் தலையில் கைவைத்து ஆசிர்வதித்தார்.

''குழந்தாய் உன் விருப்பப்படியே ஆகட்டும்''

தோட்டத்தில் பத்மாசனமிட்டு அமர்ந்த நாகார்ஜுனர் ததாகதரை ஒரு கணம் மனக்கண்ணில் நிறுத்தினார்.

காய்ந்த புல்லின் நீண்ட இதழொன்றை எடுத்தார். அதைத் தன் கழுத்தை நோக்கிக் கொண்டு சென்றார். மறுநொடி அவரது தலை மரத்தில் இருந்து பழுத்த இலையொன்று ஓசையின்றி விடைபெறுவது போல் தரையில் விழுந்தது.

வானம் வேகமாக கறுத்து இருண்டது. விண்ணிலிருந்து மழை, வாளியைக் கவிழ்த்ததுபோல் சீற்றத்துடன் விழுந்து கைகூப்பி சிலையாகி நின்ற இளவரசனை நனைத்தது.

இன்மையிலிருந்து இன்மையை நோக்கி விரைந்துகொண்டிருந்தது அந்த தருணம்.

(பௌத்த கதைகளையொட்டி எழுதப்பட்ட சிறுகதை)



சிறுகதை

உயிர்த்துடிப்பு

பாரதி வசந்தன்

தாயுமானவன் வீட்டுத் தோட்டத்தில் அந்தப் பூவரச மரம் நிறை மாத கர்ப்பிணியைப் போல நின்று கொண்டிருந்தது. பக்கத்தில் வேப்பமரம் கிளை பரப்பி காற்றில் அசைந்திருக்க அருகிலேயே கல்யாண முருங்கை 'நெடுநெடு' என்று வளர்ந்திருந்தது.

தாயுமானவனுக்கு மரங்கள் என்றால் ரொம்பவும் இஷ்டம். அதிலும் கல்யாண முருங்கை மரத்தின் மீது அவனுக்கு காதலே இருந்தது. சாதாரண நாட்களில் மற்ற மரங்களைப் போல் வெறும் முள் மரமாக இருக்கும் கல்யாண முருங்கை வசந்த காலம் வந்தால் மரங்களின் அற்புதமாய் மாறும் அதிசயம் தாயுமானவனுக்கு வியப்பாக இருக்கும்.

அந்தச் சமயங்களில் கல்யாண முருங்கை மரத்தின் உச்சியில் கொழுந்து விட்டு எரியும் நெருப்பைப் போல எந்நேரமும் பூத்துச் சிரிக்கும் சிவப்பு நிறப் பூக்களையும், அவற்றின் மேல் எங்கிருந்தோ வந்து உட்கார்ந்து ஓயாமல் கூவிக் கொண்டிருக்கும் மைனாக்களையும்,காக்கைகளையும், குயில்களையும் பார்த்து ரசிக்க இரண்டு கண்கள் போதாதென்று சொல்லுவான் தாயுமானவன்.

அவனுக்கு கல்யாண முருங்கை மரம் மட்டும் இல்லை எந்த மரமாக இருந்தாலும் சரி அவை தோட்டம் முழுக்க நிறைந்திருக்க வேண்டும். அதற்காகவே அவன், தன் அப்பாவிடம் சொல்லி அவர் அப்போது நட்டு வைத்திருந்த கல்யாண முருங்கையும் மற்ற மரங்களும் பெரிய தோட்டமாகி அவருடைய மறைவிற்குப் பிறகும் இன்றைக்கும் இருக்கிறது. தோட்டத்தின் நடுநடுவே அங்கொன்றும் இங்கொன்றுமாக தென்னை மரங்கள். அவை இடைவெளி விட்டு நடப்பட்ட உயரமான ஒற்றைக் கோடுகளைப் போன்று, உச்சியில் அழகிய கீற்றுகளுடன், காற்றில் படபடக்கும் கைவிரல்களை நினைவுபடுத்துகிறது மாதிரி அமைதியாக நின்று கொண்டிருந்தன.

இவை இப்படி என்றால் அந்நாளில் உயரமான கோரிமேட்டில் போய் நின்றபடி தூரத்திலிருந்து கிழக்குத் திசையின் கீழே கவனித்தால் 'பச்சைப் பசேல்' என்று ஒரே சமமாக பந்தல் அமைத்திருப்பதைப் போல தென்னை மரங்கள் அடர்த்தியாகக் காட்சியளிக்கும். அவற்றின் இடைவெளிக்குள் உற்றுப் பார்க்கிற போது மிக தூரத்தில் நீலச் சாயத்தை தொட்டிக்குள் நிரப்பி வைத்திருப்பது போன்று விசாலமான கடல் இருப்பதும் நன்றாகத் தெரியும். அப்படி ஒரு வனப்புடன் இருந்தது புதுச்சேரி.

அந்தப் பழைய நினைப்பு என்றைக்கும் மாறாத தாயுமானவன் வீட்டுக்குள் இருந்த சமயம். தோட்டத்தில் எதையோ வெட்டுகிற சத்தம் கேட்டதும் வெளியே வந்து எட்டிப் பார்த்தவனுக்கு பயங்கர அதிர்ச்சி. அங்கே அவனுடைய தம்பி சுந்தர் பூவரச மரத்தின் மீது ஏறி நின்று கொண்டு கிளையை வெட்டுவது தெரிந்தது. கீழே சுந்தருடைய நண்பன் ரவி அவனுக்கு ஒத்தாசையாக அருகில இருந்து உதவி செய்து கொண்டிருந்தான்.

தாயுமானவனுக்கு அவர்கள் செய்யும் காரியத்தைக் கண்டதும் சட்டென்று கோபம் வந்தது. இருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நிதானமாகவே பேசினான்.

'இப்ப எதுக்கு மரத்தை எல்லாம் வெட்றீங்க'

தாயுமானவன் கேட்டதற்கு யாரும் பதில் சொல்லவில்லை.

கொஞ்ச நேரம் மரம் வெட்டுவதை நிறுத்திய சுந்தர் எதுவும் சொல்லாமல் மறுபடியும் வெட்ட ஆரம்பித்தான்.

'நான் கேட்கிறேன் இல்ல'

தாயுமானவனிடமிருந்து கோபத்துடன் வார்த்தைகள் வெளிப்பட்டதும் சுந்தரின் நண்பன் ரவி முந்திக் கொண்டு பேசினான்.

'மரமெல்லாம் வளர்ந்து வேலிக்கு இடைஞ்சலா இருக்குது தாயுமானவன். அதான் வெட்டிடலாம்னு இருக்கோம்'

'மரம்தானே வளர்ந்து இப்ப வேலியா இருக்கு. அது எப்படி வேலிக்கு இடைஞ்சலா இருக்கும்'

தாயுமானவனின் இந்தக் கேள்வி சுந்தரையும், ரவியையும் எரிச்சல்படுத்தியிருக்கக் கூடும். சுந்தர் வேக வேகமாக ஒரு கிளையை வெட்ட அது முறிந்து தாயுமானவன் நின்று கொண்டிருந்த இடத்திற்கும் பக்கத்திலேயே வந்து விழுந்தது. அவனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. அவன் சொல்லி அவர்கள் கேட்கிற மாதிரியும் தெரியவில்லை. இருந்தாலும் சொன்னாள்.

'சரி சரி கொஞ்சமா கிளைகளை கழிச்சிட்டு இறங்கிடுங்க. நிழலுக்கு இருக்கிற மரங்களையெல்லாம் சுத்தமா வெட்டிடாதீங்க'

எச்சரிப்பது போல தாயுமானவன் பேசிக்கொண்டிருக்கும் போதே பூவரச மரத்தின் எல்லா கிளைகளும் 'மள மள' என்று வெட்டப்பட்டு ஒன்றின்மேல் ஒன்றாக வந்து விழுந்தன. செத்த நாழிகைக்கு முன்னாடி எல்லாம் சிரித்துக் கொண்டிருந்த பூவரச மரம் இப்போது தரையில் விழுந்து புரண்டு அழுவதைப்போல இருந்தது தாயுமானவனுக்கு. 'என்ன இது இப்படிச் செய்கிறார்களே' என்று எதுவும் பேசத் தோன்றாமல் அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ரவி தயங்கித் தயங்கிப் பேசினான்.

'மரமெல்லாம் பெருசா வளர்ந்துட்டா பிற்பாடு வெட்றதுக்கு கஷ்டமா இருக்கும்னு அம்மாதான் எல்லாத்தையும் அடியோடு வெட்டச் சொல்லிட்டாங்க'

அவன் அப்படி சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த தாயுமானவனின் அம்மாவும் அதை ஆமோதிப்பது போலவே பேசினாள்.

'ஆமாம் தம்பி எதுக்கு இதெல்லாம் ஒரு பிரயோஜனமும் இல்லாம இடத்தை அடைச்சி கிட்டு இருக்கணும். வெட்டிப் போட்டா விறகுக்காவது ஆகும் இல்ல'

தன் அம்மாவின் இந்தப் பேச்சைக் கேட்டதும் தாயுமானவன் ஒரு கணம் அதிர்ந்துபோய்

நின்றான். 'அது பாட்டுக்கு சிவனேன்னு நின்னுகிட்டு நமக்கு நிழலையும், காற்றையும், விறகையும் தர்ற மரங்களையெல்லாம் ஒரு பிரயோஜனமும் இல்லைன்னு சொல்லி வெட்டிப் போடச் சொன்னா உண்மையிலேயே ஒருத்தருக்கும் பயன்படாம அடுத்தவங்களுக்கு இடைஞ்சலாகவே சில மனுஷங்க தன் ஆயுளுக்கும் வாழ்ந்துகிட்டு இருக்காங்களே அவங்கள நாம என்ன பண்றது' . தாயுமானவன் தன் அம்மாவிடம் இதைக் கேட்கலாம் என்று நினைத்தபோதே பக்கத்தில் நின்றிருந்த வேப்பமரத்தையும் வெட்டிக் கீழே போட ஆரம்பித்தான் சுந்தர்.

தோட்டம் பூராவும் கிளைகளும், இலைகளுமாக இடத்தை அடைத்துக் கொண்டிருந்தன. ரவியும், அம்மாவுமாகச் சேர்ந்துகொண்டு கிளைகளை எடுத்து அப்புறப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

தாயுமானவன் நிமிர்ந்து பார்த்தான். எதிரே கல்யாண முருங்கை மரம் நின்று கொண்டிருந்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில் அதுவும் காணாமல் போய்விடும் என்று நினைத்தவன் அதையாவது வெட்டாமல் தடுத்து நிறுத்தி விடலாம் என்கிற நப்பாசையில் கெஞ்சுவது போல சுந்தரிடம் பேசினான்.

'ஏன் சுந்தர் கல்யாண முருங்கை மரத்தில் அந்தப் பக்கமா நீட்டிகிட்டு இருக்கிற கிளைய மட்டும் கழிச்சா போதாதா மரத்தையே அடியோட வெட்டணுமா'

வயதிலும், வாழ்க்கை அனுபவத்திலும் பெரியவனான தாயுமானவனின் வேண்டுகோளை அவன் தம்பி சுந்தர் கேட்டதாகத் தெரியவில்லை. அவன் பாட்டுக்கு கோடாரியால் அடிமரத்தை வெட்டுவதிலேயே குறியாக இருந்தான். ஓர் அரக்கனை வெட்டி வீழ்த்துகிற தேவன் என்கிற நினைப்பு அவனுக்கு. 'சில விஷயங்களை சொன்னால் கேட்பார்கள் என்று நினைப்பவர்களிடத்தில்தான் சொல்ல முடிகிறது. தன் பேச்சுக்கு எந்த மதிப்பும் இல்லை என்பது தெளிவான பிறகு நாம் என்ன பேசி என்ன வந்து விடப்போகிறது' என்று பேசாமல் நின்றிருந்த தாயுமானவன் கல்யாண முருங்கை மரத்தை வாஞ்சையுடன் பார்த்த போது திடுக்கிட்டுப் போனான்.

ஒவ்வொரு நாளும் பறவைகள் வந்து இளைப்பாறுகிற அந்த மரத்தின் நடுவே பிரிந்த சிறு கிளையில் காக்கையின் கூடு ஒன்று கட்டி முடிக்கப்பட்ட நிலையில் இருந்தது. அது என்ன ஆகுமோ என்று தாயுமானவன் மனதுக்குள் பதறிய போதே சுந்தர் கோடாரியால் வெட்டியதில் அதிர்ச்சி தாங்காமல் அந்தப் பச்சை மரம் ஆடிய போது எங்கிருந்தோ வந்த காக்கை ஒன்று மரத்தை சுற்றிச் சுற்றி வந்து அங்கும் இங்கும் பறந்தபடி பெருங்கூச்சலுடன் அலறியது.

அந்தக் காக்கைதான் மரத்தில் கூடு கட்டியிருக்க வேண்டும். தான் கூடு கட்டியிருந்த மரம் வெட்டப்பட்டு தன் வீடும் காலியாகப் போகிறது என்பதையும் உணர்ந்திருக்க வேண்டும். அதன் கதறல் தாயுமானவன் மனதை உலுக்கியபோதே நிறைய காக்கைகள் கூட்டம் கூட்டமாக வந்து தன் உறவுக்காக பெருங்குரல் கொடுத்து இரைச்சலுடன் கத்த ஆரம்பித்துவிட்டன.

அப்போதுதான் சுந்தருக்கும், ரவிக்கும் காக்கை ஒன்று கூடு கட்டியிருந்த விஷயம் தெரியவந்தது போல ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்துக் கொண்டார்கள். தாயுமானவனின் அம்மாவுக்கு மனசு என்னவோ போல் ஆகியிருக்க வேண்டும்.

'அடடா காக்கா கூடு கட்டியிருக்கிறத கவனிக்காம போயிட்டீங்களேப்பா. பாவம் அது' அவள் பரிதாபப்பட்ட போது வேர்க்க விறுவிறுக்க மரங்களை வெட்டிக் கொண்டிருந்த சுந்தர் தன் மீது வழிந்திருந்த வியர்வையைத் துடைத்தபடி முதல் முதலாகப் பேசினான்.

'காக்கா வெறும் கூடு மட்டும் தானே கட்டியிருக்கு. இன்னும் குஞ்சு பொரிக்கல இல்ல.

குஞ்சுகளை தவிக்க விட்டாதானே பாவம் வந்து சேரும். மரத்தை வெட்டியாச்சு இனிமே என்ன செய்ய முடியும்'

இதெல்லாம் ஒரு சாதாரண விஷயம் என்பது போல சுந்தர் பேசியபடி வெட்டிய மரத்தை கைவைத்துத் தள்ள கூட ரவியும் சேர்ந்து கொண்டு தள்ள கனமின்றி தக்கையாக நின்றிருந்த அந்தக் கல்யாண முருங்கை மரம் மெல்ல சாய்ந்து கொண்டிருந்தது.

அந்தக் கணத்தில் பெரும் சத்தத்தோடு தாயுமானவன் வீட்டுக் கூரைமேல் மரம் முறிந்து விழவும், அதன் பளு தாங்காமல் மின்சார கம்பத்திலிருந்து கனெக்ஷன் கொடுத்திருந்த மெயின் ஒயர் அறுந்து விழவும் சரியாக இருந்தது. இந்த விபரீதம் நடக்கும் என்று கொஞ்சம்கூட எதிர்பார்க்காமல் இருந்த தாயுமானவன் என்ன செய்யலாம் என்று யோசிப்பதற்குள் அறுந்து விழுந்த மின்சார ஒயரிலிருந்து தெறித்த நெருப்புப் பொறிகள் மேலே பறந்து அவன் வீட்டுக் கூரையின் மேல் விழுந்து 'குப்' என்று பற்றிக்கொண்டது.

வீடு எரியத் தொடங்கியது. தாயுமானவனுக்கு பதற்றத்திலும், பயத்திலும் ஒன்றும் புரியவில்லை. அந்த நிலையிலும் அவன் ஓடிப்போய் தோட்டத்திலிருந்து தண்ணீரை எடுத்து வந்து கூரை மேல் வீசினான். சுந்தரும், ரவியும் ஏற்கனவே வெட்டிப் போட்டிருந்த மரங்கள் வழியை அடைத்துக் கொண்டிருக்க சிரமப்பட்டு அவற்றைத் தாண்டி தண்ணீரை எடுத்து வந்து நெருப்பு பற்றி எரிந்து கொண்டிருந்த திசையை நோக்கி ஊற்றிக் கொண்டிருந்தார்கள்.

'ஐயையோ வீடு பத்திகிட்டு எரியுதே. ஓடியாங்கோ ஓடியாங்கோ' தாயுமானவனுடைய அம்மா பெருங்கூச்சல் போட்டு கூவியதும் அக்கம் பக்கத்திலிருந்து நிறைய பேர் ஓடி வந்தார்கள். ஆளாளுக்கு தண்ணீரை வாரி இறைத்தும், வீட்டின்மேல் ஏறி கூரையைப் பிரித்து எறிந்தும் எப்படியோ போராடி ஒரு வழியாக நெருப்பை அணைத்து விட்டிருந்தார்கள்.

நடந்து முடிந்து போன அந்த பயங்கரத்தை தாயுமானவன் நினைத்த போது அவனை அறியாமல் அவன் உடல் லேசாக நடுங்கியது. பிரமை பிடித்தவனைப் போல வீட்டையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மோட்டுவளை சுத்தமாக எரிந்து போனதாலும், அதை ஜனங்கள் பிரித்துப் போட்டதாலும் வீட்டின் ஒரு பகுதி பொத்தலாகி இருந்தது. 'அங்க இங்க கடனை வாங்கி இப்பதானே வீட்ட புதுசா கட்டினேன். யாரு கண்ணு பட்டுச்சோ அதுக்குள்ள என் வீடு இப்படி பத்திகிட்டு எரிஞ்சிடுச்சே'

தன்னுடைய அம்மா ஒப்பாரி வைத்து அழுது புலம்புவதைப் பார்க்கப் பார்க்க தாயுமானவனுக்கு வேதனையாக இருந்தது. அந்தத் துயரமான சூழல் அவனை வதைத்த போதும் அவன் தன் அம்மாவை ஊடுருவிப் பார்த்தபடி பேசத் தொடங்கினான்.

'அம்மா மனுஷர்களுக்கு வீடுகள் எப்படியோ அப்படித்தான் பறவைகளுக்குக் கூடுகள். நம்ம வீடு எரிஞ்சு போச்சேன்னு நாம கஷ்டப்படுற மாதிரிதானே பாவம் அந்தக் காக்கையும் தன் கூடு கலைஞ்சு போச்சேன்னு கலங்கி இருக்கும். அந்தத் துயரம் என்னன்னு இப்பவாவது உங்களுக்குப் புரிஞ்சுதா'

அழுது கொண்டிருந்த தாயுமானவனுடைய அம்மா மூக்கை சிந்தி துடைத்தபடியே அவன் சொன்னதின் அர்த்தத்தை உணர்ந்து கொண்டவளைப்போல சுந்தரையும், ரவியையும் மாறிமாறிப் பார்த்தாள். அவர்கள் இருவரும் கையும் களவுமாக பிடிபட்ட கள்வர்களைப் போல என்ன சொல்வது என்று புரியாமல் தலைகுனிந்தபடி நின்றிருந்தார்கள்.

தாயுமானவன் சுந்தரின் அருகே நெருங்கிப் போனான். எப்படி தன் அண்ணனுடைய

முகத்தை நிமிர்ந்து பார்ப்பது என்று சுந்தர் சங்கடப்பட்டது அவனுடைய முகத்தில் நன்றாகத் தெரிந்தது.

'சுந்தர் நீ செய்த காரியத்தால எத்தனை பெரிய விபரீதம் ஏற்பட்டிருக்குது பார்த்தியா. மரங்கள வெட்டாத அதுலயும் அந்தக் காக்கை கூடு கட்டியிருக்கிற கல்யாண முருங்கை மரத்தையாவது வெட்டாம விட்டுடுன்னு கெஞ்சினேனே அது ஏன் உனக்குக் கேட்காம போச்சு. கேவலம் ஐந்தறிவு உள்ள பறவைதானேன்னு அலட்சியம்.

நீ ஆறறிவு கொண்ட மனிதன்னு திமிரு. காக்கையோ, குருவியோ இல்ல எந்தப் பறவையோ மனுஷனுக்குத் தீங்கு செய்யணும்னு நெனைக்குதா. ஆனா மனுஷன் அப்படி இல்ல. அவன், தன் சுயநலத்துக்காக நியாயம், அநியாயம்னு பார்க்காம எத வேணும்னாலும் செய்வான். செய்துட்டு அதுக்கு வியாக்கியானம் வேற பேசுவான் உன்னை மாதிரி'

தாயுமானவன் நெற்றிப் பொட்டில் அறைந்தது மாதிரி சுந்தரிடம் சொல்லிவிட்டு எதிரே பார்வையை செலுத்தினான். அங்கே குற்றவாளிக்கு உடந்தையாக இருந்த இன்னொரு குற்றவாளியைப் போல ரவி நின்றிருந்தான்.

'ரவி எப்பவுமே இயற்கையை நேசிக்கிற மனுஷங்களாலதான் இந்த உலகத்தையும் நேசிக்க முடியும். எந்த ஒருத்தனும் தன்னைச் சுற்றியுள்ள அனைத்துமே தாறுமாறா போகணும், ஆனா தான் மட்டும் நல்ல விதமா இருக்கணும்னு நெனைக்கிறது ரொம்ப தப்பு. மரம் வெட்டினா எனக்கென்ன மற்ற உயிர்கள் கஷ்டப்பட்டா நமக்கென்னன்னு வாழறதுக்குப் பேரு வாழ்க்கையில்ல. எல்லா உயிர்களையும் தம் உயிர் போல பாவிக்கணும். அதுதான் உண்மையிலேயே உயர்வான வாழ்க்கை'

எந்தவித வெறுப்பையும் காட்டாமல் அமைதியாகப் பேசிக்கொண்டு போன தாயுமானவன் நீண்ட பெருமூச்சு விட்டவனாகத் தன் வீட்டுக் கூரைமேல் விழுந்து கிடந்த கல்யாண முருங்கை மரத்தைப் பார்த்தான்.

அதன் கிளையில் இருந்த காக்கைக்கூடு உடைந்துபோய் சிதறிக் கிடந்தது. தோட்டம் முழுக்க பிஞ்சுக் குழந்தைகளின் கை, கால்களை தனித்தனியே வெட்டிப் போட்டதுபோல மரங்களும், அவற்றின் கிளைகளும் அங்கங்கே குவிந்து கிடந்தன.

அந்தச் சூழலைக்காண சகிக்காமல் கனத்த இதயத்தோடு எதிர்திசையில் பார்த்தான் தாயுமானவன். அங்கே தன் கூட்டைப் பறிகொடுத்த அந்தக் காக்கை சொந்த நாட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட ஓர் அகதியைப்போல வீட்டுத் தோட்டத்தை சுற்றிச்சுற்றி வந்து கத்துவதும், பின் வேலியில் உட்கார்ந்து தன் சிறகுகளை 'படபட' என்று அடித்துக்கொண்டு பரிதவிப்பதுமாக இருந்தது.



ஓவியம்: பாரதிராஜா



கவிப்பேரரசு வைரமுத்து

சிறுமியும் தேவதையும்

திடீரென்று...
மேகங்கள் கூடிப்
புதைத்தன வானை

ஒரே திசையில் வீசலாயிற்று
உலகக் காற்று

பூனையுருட்டிய கண்ணாடிக்குடமாய்
உருண்டது பூமி

மருண்டது மானுடம்

அப்போதுதான்
அதுவும் நிகழ்ந்தது

வான்வெளியில் ஒரு
வைரக்கோடு
கோடு வளர்ந்து
வெளிச்சமானது

வெளிச்சம் விரிந்து
சிறகு முளைத்த தேவதையானது

சிறகு நடுங்க
தேவதை சொன்னது:

''48 மணி நேரத்தில்
உலகப்பந்து கிழியப் போகிறது

ஏறுவோர் ஏறுக என்சிறகில்
இன்னொரு கிரகம் எடுத்தேகுவேன்

இரண்டே இரண்டு
நிபந்தனைகள்:
எழுவர் மட்டுமே ஏறலாம்
உமக்குப் பிடித்த ஒரு பொருள் மட்டும்
உடன் கொண்டு வரலாம்''

புஜவலியுள்ள இளைஞன் ஒருவன்
சிறகு நொறுங்க ஏறினான்

அவன் கையில்
இறந்த காதலியின்
உடைந்த வளையல்

முதல் முத்தத்து ஞாபகத்துண்டு

❖❖❖

'இன்னொரு கிரகம் கொண்டான்
என்றென்றும் வாழ்க'
கொட்டிமுழங்கும் கோஷத்தோடு
சிறகேறினார் அரசியல்வாதி

தங்கக் கடிகாரம் கழற்றியெறிந்து
களிம்பேறிய கடிகாரம் கட்டிக்கொண்டார்

உள்ளே துடித்தது -
சுவிஸ் வங்கியின்
ரகசியக் கணக்கு

❖❖❖

இறந்துவிடவில்லையென்ற சோகத்தை
இருமி இருமியே
மெய்ப்பித்துக் கொண்டிருக்கும்
நோயாளி ஒருவர்
ஜனத்திரள் பிதுக்கியதில்
சிறகொதுங்கினார்

அவர் கையில்
மருந்துப் புட்டி

அதன் அடிவாரத்தில்
அவரின்
அரை அவுன்ஸ் ஆயுள்

❖❖❖

அனுதாப அலையில்
ஒரு கவிஞனும் சிறகு தொற்றினான்

ஜோல்னாப் பையில் -
அச்சுப் பிழையோடு வெளிவந்த
முதல் கவிதை

❖❖❖

தன் மெல்லிய ஸ்பரிசங்களால்
கூட்டம் குழப்பி வழிசெய்து
குதித்தாள் ஒரு சீமாட்டி

கலைந்த ஆடை சரிசெய்ய மறந்து
கலைந்த கூந்தல் சரிசெய்தாள்

கைப்பையில்
அமெரிக்க வங்கிக் கடன் அட்டை

❖❖❖

கசங்காத காக்கிச் சட்டையில்
கசங்கிப்போன ஒரு போலீஸ்காரி
லத்தியால் கூட்டம் கிழித்துப்
பொத்தென்று சிறகில் குதித்தாள்

லத்தியை வீசியெறிந்தாள் - ஒரு
புல்லாங்குழல் வாங்கிக் கொண்டாள்

❖❖❖





‘ஒருவர்
இன்னும் ஒரே ஒருவர்’
என்றது தேவதை

கூட்டத்தில்
சிற்றாடை சிக்கிய
சிறுமியொருத்தி
பூவில் ரத்தஓட்டம்
புகுந்தது போன்றவள்

செல்ல நாய்க்குட்டியோடு
சிறகில் விழுந்தாள்

‘‘நாய்க்குட்டியென்பது
பொருள் அல்ல; உயிர்
இறக்கிவிடு’’ என்றது தேவதை.

‘‘நாய் இருக்கட்டும்
நானிறங்கிக் கொள்கிறேன்’’
என்றனள் சிறுமி

சிறகு சிலிர்த்தது தேவதைக்கு

சிலிர்த்த வேகத்தில்
சிதறிவிழுந்தனர் சிறகேறிகள்

வான் பறந்தது தேவதை
சிறுமியோடும் செல்ல நாயோடும்

❖❖❖

மாபெருந் தமிழ்க் கவி
ஈரோடு தமிழன்பன்





அதுவரை கொஞ்சம் பொறுத்திருக்க வேண்டும்

ஒரு பூவிடம் பேசுவதற்கு
அதனிடம் நேரம் கேட்க வேண்டியதில்லை
காற்று பேசும்போது மட்டும்
கொஞ்சம் பொறுத்திருக்க வேண்டும்.

காலை வேளை,தான்
கொண்டுவந்திருக்கும் குறிப்புகளைப் பூவின்
இதழ் இதழாகப் பார்த்துச் சொல்லிக் கொண்டிருக்கும்
கொஞ்சம் பொறுத்திருக்க வேண்டும்.

வேரின் செய்திகளை இப்போது பூ
முகநூலில் பதிவு செய்யும் நேரம் இது
முடிந்த பிறகு
பூவின் அருகே நீங்களே போகலாம், அதுவரை
கொஞ்சம் பொறுத்திருக்க வேண்டும்.

உங்களுக்கு உரிய நேரம் ஒதுக்கப்பட்டிருக்கலாம்
ஆனால் இது
தூங்கி எழுந்துவரும் குழந்தைகள் முகத்தைப்
பார்க்கும் நேரமாகப் பூவுக்கு இருந்தால்
என்ன செய்ய முடியும்? நீங்கள்தான்
கொஞ்சம் பொறுத்திருக்க வேண்டும்.

காலை இளம் பரிதி
பளிச்சென்று ஏதோ புதிய செய்தி பூவுக்குக்
கொண்டு வந்திருக்கலாம்
தினமும் செய்தித் தாள் பார்க்காமல் காலையில்
பல்துலக்கமுடிகிறதா?

ஓவியம்: அப்சரா வெங்கட்

முகம் கழுவ முடிகிறதா உங்களுக்கு?
அப்படித்தான் பூவுக்கும்,
கொஞ்சம் பொறுத்திருக்க வேண்டும்.

அதிகாலையிலேயே
வந்துபோகும்படி காதல்வண்டுக்கு ஒருவேளை
பூ தூது போக்கியிருக்கலாம்,
காத்துக்கொண்டிருக்கும் அதற்கேன் இடையூறு
செய்ய வேண்டும்? இங்கிதமாகக்
கொஞ்சம் பொறுத்திருக்க வேண்டும்.

தாவரங்களின் தாய்மொழி பச்சை,
அது தெரிந்தால்தான் எந்த மரத்தோடும் செடியோடும்
புல்லோடும் பூண்டோடும் நீங்கள் பேசமுடியும்;
நீங்கள் அதில் முனைவர் பட்டம் பெற்றிருந்தாலும்
செடி கொடிகள் ஆகியவற்றின் அறிமுகம் கிடைக்கும்வரை
கொஞ்சம் பொறுத்திருக்கவேண்டும்!

❖❖❖



கவிஞர் மு.மேத்தா

தமிழரசு வாழ்க

தமிழமுதம் பருகுதற்குத்
தமிழரசு வேண்டும்!
தமிழ்கேட்டு உருகுதற்குத்
தமிழரசு வேண்டும்!
தமிழ்மொழியில் உலகை
நாம் தரிசிக்க வேண்டும்!
தரணி இது தமிழ்பாட்டில்
தலை அசைக்க வேண்டும்!

பேசுதற்கும் எழுதுதற்கும்
பிறப்பெடுத்த மொழி உண்டு!
பிள்ளைவிளை யாட்டுகளில்
பெரிதுவக்கும் மொழி உண்டு!
வாசிக்க யோசிக்க வளர்ந்த
மொழி தமிழ் என்று!
வையகமே வணங்கட்டும்
வாழிய நம் தமிழரசு!

❖❖❖



ஓவியம்: ரவி பேலட்



கல்யாண்ஜி

ஏற்கனவே நாம் பார்த்திருக்கிறோம்

அவ்வளவு பெரிய அரசமரம்
அதுவாகவே வளர்ந்தது.
ஆறேழு கிளிகள்
அதுவாகவே பறந்தன.
ஆகாயத்தில் மேகங்கள்
அதுவாகவே நகர்ந்தன.
அதுவாகவே எனும் சொல் ஒரு
பறக்கும் மாயக் கம்பளம்.

❖❖❖

பூனை தன் குட்டிகளை
ஏழு இடங்களில் மாற்றி வைக்கிறது.
மும்தாஜ் மூன்று கல்லறைகளில்
மாற்றி வைக்கப்பட்டாள்..
பார்த்தேன்,
தாஜ்மகாலில் ஒரு மூத்த பூனை மும்தாஜை
கழுத்துப் பக்கம் கவ்விக்கொண்டு செல்வதை.

❖❖❖

இஞ்சிக்கும் மஞ்சளுக்கும் ஒரே தோற்றம்..
முண்டு, முடிச்சு ஒன்று போல.
நான் மஞ்சள்.
நான் இஞ்சி.
நான் கிழங்கு..
என்னை மண்ணில் இருந்து அகழ்ந்து எடுங்கள்.

❖❖❖

எனக்குள் ஒரு தாகம் கொண்ட மீன் நீந்தியது..
உச்சியில் இருந்து என் மேல்
ஒரு வெளிச்சம் பரவியது.
என் எழுபத்தாறு வயது நிசிச் சன்னல் வழியாக
எங்கோ மலர்ந்த பன்னீர்ப் பூக்கள் வாசம்.
ஒரு கையை மேலே உயர்த்தி
ஒரு கை நிலம் தாழ்த்தி
சுழலும் தனிமையில் 'ஸமா' ஆடத் துவங்கினேன்.
என் மாத்திரை சீசா உடைந்து தரையில் சிதறுவதை
ஒன்றும் செய்ய முடியாது.

❖❖❖



ஓவியம்: சே.பாரதிராஜா

அது தினசரி கண்ணில் படும் கிளை.
அது தினசரி அமர்ந்திருக்கும் பறவை.
அதை தினசரி பார்ப்பதற்காக
நெருங்கிப் போகிறேன்.
அது தினசரி பதறிச் சிறகடித்து விடுகிறது.
தினசரி பார்ப்பதற்குக் கிளையிடம் இருக்கிறது
ஒரு அசையாமை.

❖❖❖

வான் பறவைகள் ஒன்றிடம் கூடச் சொன்னதில்லை
''ஏற்கனவே நாம் பார்த்திருக்கிறோம்''.
இதுவரையில் அவையும் சொன்னதில்லை
என்னைப் பார்த்திருப்பதாக.
கிளை அமர் பறவை ஒன்றுமட்டும் தாழ்குரலிட்டது
'பார்த்திருக்கிறேன். நீ அவ்வப்போது
வானத்தில் பறக்கிறவன்'.

❖❖❖

முன்பக்கம் புத்தனின் ஓவியம் இருப்பதைப்
பார்க்கவில்லை.
பின்பக்கம் இருந்த ஆசைகளின் பட்டியலை
அவசரமாகக் கிழித்துவிட்டேன்.
பதற்றம் நிரம்பிய குற்ற உணர்வுடன்

புத்தனின் கிழிந்த முகத்தை
நிதானமாக ஒட்டினேன்.
பின்னால் மீண்டும் தன்னைப்
பிசிறே இல்லாமல் தயாரித்துக்கொண்டுவிட்டது
ஆசைகளின் பட்டியல்.

❖❖❖

ஏன் தேர்ந்தெடுத்த சில பேரிடம் மட்டும்
உங்கள் முகத்தை மூடிக் கொள்கிறீர்கள்?
உங்களுக்குப் புரிவதே இல்லை
உங்கள் மேல் எழுதப்பட்டிருக்கும்
சில தேர்ந்தெடுத்த வரிகளை அவர்கள்
வாசிக்க முடியாமல் போகிறது என்று.

❖❖❖

தான் ஒரு முறை குச்சி ஐஸை
சப்பிக் கொள்கிறார்.
மடியில் இருக்கும் பேரனுக்கு
ருசிக்கக் கொடுக்கிறார்.
பேரன் அதைத் தாத்தாவின்
உதட்டுக்கு நகர்த்துகிறான்.
சிரிக்கிற தாத்தா வாய் அகலத் திறக்கிறது.
இப்போது பேரன் மடியில்
தாத்தா அமர்ந்திருக்கிறார்.

❖❖❖

கவிதை

தமிழச்சி தங்கபாண்டியன்

தைமகளைக் கொண்டாடும் தமிழர் திருவிழா

இயற்கை சூரியன்
கிழக்கில் மட்டும் உதயமாகும்
இனமானம் காக்கும்
உதய சூரியனோ
எட்டுத் திக்கும்
கொட்டு முரசம் கொட்டி உதித்து
தமிழகத்தை தலைநிமிரச் செய்யும்!
ஆம்! தமிழ்ப்பகையின் தலையைக் கொய்யும்!

கலைஞரின் தைமகள்
வாஞ்சைக்குரியவள்
வளையல்கள் குலுங்க
வண்ணங்கள் சுமந்து
எண்ணங்கள் கவர
வனப்போடு வருபவள்
ஈடில்லா இன்பங்களைத் தருபவள்

தளபதியின் தைமகள்
பூரிப்புக்குரியவள்
புதுமைகள் கொஞ்ச வந்து
புத்துணர்வை வாரி வழங்குபவள்
பொங்கல் பரிசுத் தொகுப்பாய்
பிரகாசிப்பவள்
தமிழர் இல்லங்களில்
தாய்வீட்டு சீதனமாய்ப் பிரவேசிப்பவள்
ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் காண வேண்டும் என்ற
அண்ணாவின் கனவு
ஆட்சியாக நடந்து கொண்டிருக்கிறது

ஓவியம்: கோபிஓவியன்





எளியவர் வாழ்வு
ஏற்றம் பெற வேண்டும்
மாற்றம் காண வேண்டும் என்ற
கலைஞரின் கனவு நடந்தேறும்
காட்சி கண்முன்னே
நிகழ்ந்து கொண்டிருக்கிறது

தமிழரின் தகைமையைத்
தகர்த்தெறிய
தடைகள் கோடி
தடம்பார்த்துக் கொண்டிருக்கின்றன
ஆரவாரித்து வரும் வெங்கொடுமைகளை
சூறையாடித் தீர்த்து
வெடி வைத்துத்
தகர்க்கும் வேலையைத்தான்
தளபதியின் செங்கோல்
செய்துகொண்டிருக்கிறது.

தமிழ்நிலத்தின் திருவிழாக்கள்
கலப்படமில்லாதது
முடைநாற்றம் வீசும்
மூடநம்பிக்கைகளை முற்றிலும் ஒழித்தது
பொருள் பொதிந்த விழாக்களாய்
பூரிப்போடு கொண்டாடப்படுவது

அந்த வரிசையில்
அர்த்தம் மிகுந்த வெள்ளந்தி விழாதான்
பொங்கல் திருநாள்
உழைத்தவனையும்
உழவுக்கு உதவிய இயற்கையையும்
வாயில்லா ஜீவன்களையும்
போற்றிப் புகழ்வதே பொங்கல் விழா

எதனையும் பெருமைப்படுத்தும்
தங்கத் தளபதி
இதனையும் பெருமைப்படுத்த
ஆத்மார்த்த அக்கறை கொள்கிறார்

தானைத் தலைவர் கலைஞரின்
அடியொட்டி
உன்னதத் திட்டங்களால்
சீரிய ஆட்சி நடத்தும்
சேனைத் தளபதியாரின்
சீர்மிகு சிறப்பை செந்தமிழும்
தன்னகத்தே காவியமாக்கும்
காலங்கடந்து நிற்கும் ஓவியமாக்கும்

வந்தோரை வாழ வைக்கும்
செந்தமிழ்நாட்டில்
சர்க்கரைப் பொங்கல் பொங்கி வழியட்டும்
சாபங்களைச் சாய்த்து
வரமாய் வந்த தளபதியின் கொற்றம்
நீடித்து நிலைக்கட்டும்!
நல்லாட்சி நலமோடு
நாடுபோற்ற நடக்கட்டும் !!
தைமகளின் எழில்வதனம்
செங்காந்தளாய் சிவந்து சிறக்கட்டும் !!!

❖❖❖



ரவி சுப்பிரமணியன்

வாசலுக்கு வந்தவர்

சாலையின்
சமிக்ஞை விளக்குக்கு காத்திருக்கும் ஜீஜி
மகிழுந்தின் கண்ணாடியை இறக்கி
தொப்பியைக் கழற்றி
பேருந்து நிறுத்தத்தில் பள்ளிக்குக் காத்திருக்கும்
நாலுவயதுச் சிறுமியிடம்
வழுக்கை தலை தெரிய புன்னகைத்து
குட்மார்னிங் மேடம் என்கிறார் பணிவாய்

நடைபயிற்சி செல்லும் பலரில்
அந்த மருத்துவரை மட்டும் தேடிவந்து
அவர் கையை நக்கித் தருகிறதொரு பசு

வயதில் கனிந்த
ஏழை மூதாட்டியைத் தேடிச்சென்று
பக்திக் காவியத்தை
தினம் படித்துக் காட்டுகிறார்
ஒரு பேராசிரியர்

ஒருநாளும் வெளியூர் செல்லாமல்
மொட்டை மாடியில்
தானியத்தைப் புறாக்களுக்கு இறைக்கிறார்
தலைமைச் செயலக ஊழியர்

அதிகாரம் தன் செருப்புகளை
வாசலில் கழற்றி விட்டுவிட்டு
அர்ச்சனைத் தட்டைக் கையேந்துகையில்
இடுப்பில் துண்டைக்கட்டி
வணங்கியபடி எதிர்கொண்டழைக்க
ஆண்டவனே வருவதில்
அதிசயமென்ன.

❖❖❖

கலைஞன்

கோவில்களும் திறக்காமல்
உலகியக்கம் ஸ்தம்பித்து
சப்தமொடுங்கிய நேரத்தில்
சந்நிதித் தெருவின் வீட்டிலிருந்து
நாதஸ்வரக் கலைஞன்
நாத ஆலாபனையில் உருக்குகிறான்

பச்சைக்கிளிகளும் புறாக்களும்
ராகவழி திரிந்தலைந்து
கோபுரங்களுக்கு பறக்கின்றன

தீர்த்தக் குளத்தின் சொற்ப நீரில்
மீன்கள் சிலிர்த்து
வான்நோக்கி இதழ் குவிக்கின்றன

கோசாலை பசுக்கள் மேயாது வெறிக்க
நாகமண்டபத்து உயிரினங்கள் சுருண்டு
கிடக்க
கடவுளும் மெல்ல நடந்து
திட்டி வாசலை நெருங்கிவிட்டார்


வளிமண்டலத்தையே
நாதத்தால் நிரப்பிக் கொண்டிருந்த
கலைஞன்
வாசிப்பை நிறுத்த வேண்டியிருந்தது
இலவசமாய் பெறுவதற்கான வரிசையில்
நின்று
வயிற்றையும் நிரப்ப வேண்டி.

❖❖❖



ஓவியம்: தொல்காப்பியன்


தமிழ்நதி
ஓவியம்: ஆதிரை



அதுவாக மட்டும்....

ஒரு சாலையெனப்படுவது
எல்லோருக்குமே சாலை மட்டுமன்று
கைவிரல் நுனி நழுவ கண்ணீர் சிதற
காதலைப் பிரிந்த இடமெனில்
அது இனிமையைச் சுருட்டி விழுங்கி
தியங்கிக் கிடக்கும் கரும்பாம்பு.

தூக்குப் போட்டு இறந்தவனின் மகனது
வழியில் எதிர்ப்படும் மரங்களிலிருந்தெல்லாம்
ஊசலாடுகின்றன பித்தவெடிப்பும் அழுக்குமாய்
விறைத்த பாதங்களிரண்டு.

சிதிலமடைந்த வீட்டின் சுவர்களுள்
உறைந்துள்ளன
விடைபெற்றுப்போன இளங்குரல்கள்
கேட்கப்படாது நிராதரவான வார்த்தைகள்
தனிமையில் விடப்பட்டு
எலும்புக்கூடென சுருங்கி நிணம் வற்றி
மரித்த முதியோரின் இறுதிமூச்சு
துருப்பிடித்த வெளிக்கதவில்
தொங்கும் கனத்த பூட்டினுள்
சிறைப்பட்டுள்ளன நசிவின் கதைகள்.
பொங்கிச் சரிகையில்
வெடித்துச் சிதறும் பட்டாசுக்கு
பதுங்குகுழியுள் வீழ்ந்து
உடல்களை
குருதியும் சதையும் எலும்புகளுமாய்
சிதறடித்த
குண்டுகளின் கந்தக நாற்றம்.
பறவைகளின் சிறகு நிழல் படர்த்துவதோ
தலைகுத்திச் சரியும் விமானங்களை.
சீறுவாணங்களின் ஓசையில் கேட்கிறோம்
மூக்கில் மரணமேந்தி மூசிவரும்
எறிகணைகளின் இரக்கமின்மையை.

இறந்தகாலத்தின் துர்நினைவுகளற்று
ஒன்றை அதுவாக மட்டும்
காண முடிகிறவர்கள்
பாக்கியவதிகள், பாக்கியவான்கள்.

❖❖❖

கபிலன் வைரமுத்து

தூசுத்தோட்டம்



வீடு பெரும்பாலும் சுத்தமாக இருக்கிறது
வீட்டுக்கு வெளியில் ஆங்காங்கே குப்பைகள்
எல்லார் கண்களிலும் தூசு விழுகிறது

அது நம் தவறல்ல
தூசின் தவறென்றால் அதில் அர்த்தமில்லை

பெரும்பாலான மனிதர்கள்
கண்ணைக் கசக்குகிறார்கள்


சில நேரங்களில் தூசு வெளிவருகிறது
சில நேரங்களில் கண் சிவந்துகொண்டே போகிறது
வலி அதிகரிக்கிறது

அதைச் சுமந்துகொண்டே
காட்சிகள் பார்க்கலாம் என்ற முடிவுக்கு வரச்சொல்லி
வழிப்போக்கர்கள் சொல்லிவிட்டுப் போகிறார்கள்

வீட்டுக்குள்ளேயே இருந்திருப்பதைப் பற்றியும்
கண்கள் திறக்காமல் இருந்திருப்பதைப் பற்றியும்
ஒவ்வொருவரும் ஒரு முறையேனும் யோசித்து விடுகிறோம்

ஏதோ ஒரு திருப்புமுனையில் தெரிந்துவிடுகிறது
நாமும் தூசும் வேறல்ல என்று

❖❖❖



ஓவியம்: தெய்வா


ஓவியம்: தெய்வா
Deiva

உயிர்த்தெழுதல்

உடம்பில் உறைந்திருக்கும்
அணு ஒவ்வொன்றும்
என்றோ எப்பொழுதோ
ஒரு நட்சத்திரத்தில்
ஊறிக் கிடந்திருக்கிறது

உயிரில் உலவும் ஸ்வரங்கள் ஒவ்வொன்றும்
என்றோ எப்பொழுதோ ஓர்
அடர்ந்த வனத்தில் ஒலித்திருக்கிறது

கண்கள் சிந்துகின்ற கண்ணீர்த்துளி
என்றோ எப்பொழுதோ
ஒரு மேகத்தினால் சிந்தப்பட்டிருக்கிறது

இன்று பேசுகின்ற காதல் மொழி
என்றோ எப்பொழுதோ
ஓர் அந்தப்புரத்தில் பேசப்பட்டிருக்கிறது

நெஞ்சம் உணருகிற தத்துவக் கீற்று
என்றோ எப்பொழுதோ
ஒரு துறவறத்தில் உணரப்பட்டிருக்கிறது.

எழுதப்படும் ஒவ்வொரு கவிதையும்
என்றோ எப்பொழுதோ
ஒரு மயிலறகுத் தூரிகையால்
ஓவியமாய் எழுந்திருக்கிறது

குழந்தையின் இதழில் நிறையும் புன்னகை
என்றோ எப்பொழுதோ
ஒரு பூவில் வழிந்திருக்கிறது

ஏதோ ஒரு வாழ்க்கையோடு
புதைந்துபோன நிகழ்வுதான்
ஏதோ ஒரு வாழ்க்கையில்
இயங்கிக் கொண்டிருக்கிறது

❖❖❖

ஜன்னல் மின்மினி

மழைத்துளிக்கு
உயிர்த்துடிப்பிருக்கிறது

ஜன்னல் விளிம்புகளில்
அதற்குக் கண்கள் முளைக்கின்றன

அந்தக் கண்கள் சிரிப்பதற்கு..
அறைக்குள் தேவை
ஒரு தனிமை அல்லது ஒரு குழந்தை

துளியோடு பேச
முயற்சிப்பவர்களுக்குத் தெரியாது
துளி தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பது
கேட்பதற்குத்தான் முயற்சி தேவை


அது பிரபஞ்ச இரகசியங்களைப்
பேசுகிறதோ என்னவோ
காற்று வந்து அடிக்கடி
தலையில் தட்டிப் போகும்

அது அறிவிப்பின்றி மௌனமாகும்

புன்னகை குறையாமல்
கண்கள் இளைக்கும்

துளியும் அறியாமல்
உயிர்த்துடிப்பு அடங்கியும்
அறைக்குள் இன்னும் அதன்
இரகசியங்கள் எதிரொலிக்கும்

❖❖❖



ஓவியம்: கலைமணி

ராஜா சந்திரசேகர்

அரைநொடியில்...

என்ன செய்யப்போகிறீர்கள்

பயம் துரத்துகிறது
என்ன செய்யப்போகிறீர்கள்

தைரியத்தோடு சேர்ந்து
விரட்டப் போகிறேன்

தைரியம் துரத்துகிறது
என்ன செய்யப் போகிறீர்கள்

அதோடு சேர்ந்து
ஓடப் போகிறேன்.

❖❖❖

ரொட்டி

குழந்தை
ரொட்டி வரைந்தபின்
எல்லோரும்
பங்கு பிரித்துச் சாப்பிட்டார்கள்
தயங்கி தயங்கி
கடைசியில் இருந்தவன் சொன்னான்
கொஞ்சம் பெரிய ரொட்டியாக
வரைந்திருக்கலாம்

❖❖❖

அரைநொடியில்

ஆசுவாசமாக அழுதபின்
அரைநொடியில்
துடைத்துக்கொண்டேன்
யாரோ கதவைத் தட்டுகிறார்கள்.

❖❖❖

காத்திருப்பு

காத்திருப்பை
வலியுடன் சொல்லலாம்
நம்பிக்கையுடன் சொல்லலாம்
காத்திருப்புடனும் சொல்லலாம்

❖❖❖

மூதாட்டி

ஆளரவமற்ற இடத்தில்
ஆலயத்தின் மூலையில்
இமைமூடி
தவம்போல் அமர்ந்திருக்கும்
மூதாட்டியின் கண்களிலிருந்து
வழிகிறது நீர்
அவள் மேல்
அசைகிறது ஒளிக்கீற்று
பெருவயதுக்காரி
கண் திறக்கும்போது
பிரபஞ்சம் சிறிதேனும்
பேரன்பைத் தரக்கூடும்

❖❖❖

எறும்பு

தனிமையின் மேல்
ஊரும் எறும்பு
மௌனத்தின் மேல்
ஊரும் எறும்பு
என் மேல்
ஊரும் எறும்பு
மொத்தம்
மூன்று எறும்புகள் என்பீர்கள்
இல்லை
ஒன்றுதான்

❖❖❖



காதல் பய்த்தவோ கண்!

கவிஞர் பழநிப்பாண்டியன்

நீ
உருட்டும் கண்களில்
விழுந்த
தாயக்கட்டை நான்.

நீ
கிழித்த கண்மை கோட்டை
தாண்ட முடியாது நிற்கிறேன்.

எல்லோரும்
கண் தானம் செய்யலாம்
ஆனால்
உன் கண்கள் மட்டுமே
காதல் தானம் செய்யும்...


கண்மாய் மீனெடுத்து
கண்மை இட்டுப் பார்த்தால்
கண்ணே அது உன் கண்கள்.

'நின் யாப்பெரும் கண்ணிமை'
கற்று கவி எழுவது வாழ்தலின் மேல்!

ஆறலைக் கள்வர்களிடம்
பறிகொடுத்த ஒரு பாலைவனத்தின்
பெருமழை உன் கண்.

உன் 'கண்ணு படவேண்டும்'
அதற்கு என்ன முன் பரிகாரம்?

தமிழ் எங்கள் இளமைக்குப் பால்



கதையில் மறைந்திருக்கும் சரித்திரம்

எஸ்.ராமகிருஷ்ணன்

தமிழின் முதற்சிறுகதையாக அறியப்படும் குளத்தங்கரை அரசமரம் வ.வே.சு.ஐயரால் எழுதப்பட்டது. ஸ¨.பாக்யலக்ஷ்மி அம்மாள் என்னும் புனைபெயருடன் 'விவேகபோதினி' செப்டம்பர், அக்டோபர் மாத இதழ்களில் இரு பகுதிகளாக இக்கதை வெளிவந்திருக்கிறது.

THE PEEPUL TREE NEAR THE TANK (A SHORT STORY) என்ற ஆங்கிலத் துணைத் தலைப்புடன் கதை வெளியிடப்பட்டிருக்கிறது. மங்கையர்க்கரசியின் காதல் முதலிய சிறுகதைகள் என்ற தலைப்பில், ஐந்து சிறுகதைகள் கொண்ட தொகுப்பாகப் புதுச்சேரி கம்ப நிலையப் பிரசுரம் இதனை வெளியிட்டது. குளத்தங்கரை அரசமரம் கதை இந்தத் தொகுப்பில் ஐந்தாவது கதையாக உள்ளது

இது தான் தமிழின் முதற்சிறுகதையா என்பது குறித்து இன்றும் வாதபிரதிவாதங்கள் தொடர்கின்றன.

முதற்கதையா, இரண்டாம் கதையா என்ற நிலைப்பாடுகளைத் தாண்டி வ.வே.சு.ஐயரின் கதையினை ஆழ்ந்து வாசிக்கும் போது அந்தக் காலத்தின் முக்கிய நிகழ்வுகள், பெண்களின் நிலையைத் துல்லியமாக அறிந்து கொள்ள முடிகிறது.

இந்தக் கதை ரவீந்திரநாத் தாகூர் வங்க மொழியில் எழுதிய 'கடேர் கதா' என்ற சிறுகதையின் தழுவல் என்கிறார்கள்.

தமிழின் ஆரம்பக் காலச் சிறுகதையாசிரியர்கள் வங்காளம் மற்றும் ஆங்கிலச் சிறுகதைகளின் பாதிப்பில் தான் சிறுகதைகள் எழுத

ஆரம்பித்திருக்கிறார்கள். தாகூருக்கு ஆங்கில இலக்கியத்தில் தீவிர ஈடுபாடு இருந்தது. அவர் கல்வி பயில லண்டன் சென்றவர். அங்கிருந்த நாட்களில் ஆங்கில இலக்கியம் நாடகம், இசை என்று ஆழ்ந்து அறிந்திருக்கிறார். அதன் பாதிப்பை அவரது படைப்புகளில் காணமுடிகிறது.

தாகூரின் இந்தக் கதையை வ.வே.சு. ஐயர் எந்த இதழில் அல்லது புத்தகத்தில் படித்தார் என்று தெரியவில்லை. ஆனால் குளத்தங்கரை அரசமரம் எழுதுகிறபோது அவர் புதுச்சேரியில் வசித்திருக்கிறார். பாக்யலக்ஷ்மி என்பது அவரது மனைவியின் பெயர். ஏன் மனைவியின் பெயரில் இந்தக் கதையை வெளியிட்டார் என்று தெரியவில்லை.

வ.வே.சு ஐயர் சின்னாளப்பட்டியில் பிறந்தவர். திருச்சிராப்பள்ளியில் ஆரம்பக் கல்வி கற்றவர். 1899இல் வரலாறு பொருளாதாரம் லத்தீன் ஆகிய பாடங்களைப் பயின்று பி.ஏ. பட்டம் பெற்றிருக்கிறார். பின்பு 1902இல் பிளீடர் எனும் வக்கீல் தேர்வில் தேர்ச்சி பெற்றுத் திருச்சி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கறிஞராகத் தொழில் நடத்தியிருக்கிறார். 1906ஆம் ஆண்டு ரங்கூனுக்கு வழக்கறிஞராகப் பணியாற்ற சென்றிருக்கிறார். பின்பு 1907இல் பாரீஸ்டர் படிக்க லண்டன் சென்றவர். அங்கே இந்தியா ஹவுசில் செயல்பட்டு வந்த இந்திய தேசிய இயக்கத்தில் தீவிர ஈடுபாடு கொண்டு புரட்சி வீரராக மாறியிருக்கிறார். இவரைக் கைது செய்யப் பிரிட்டிஷ் அரசு தேடுவதை அறிந்து பாரீஸ் ரோம் எனத் தப்பி இந்தியா வந்திருக்கிறார்.

இங்கேயும் பிரிட்டிஷ் கெடுபிடி தொடரவே அவர்களிடமிருந்து தப்பிக்கப் புதுச்சேரியில் தஞ்சம் புகுந்து அங்கேயே பத்தாண்டுகள் வாழ்ந்திருக்கிறார். அப்போது அரவிந்தர், மகாகவி பாரதி ஆகியோருடன் இணைந்து செயல்பட்டிருக்கிறார்.


குளத்தங்கரை அரசமரம் கதையின் நாயகி ருக்மணி. அவளை அரசமரம் நினைவு கொள்வதில் தான் கதை துவங்குகிறது. தாகூரின் கதையில் படித்துறை நினைவு கொள்வது போலவே தனது கதையைத் துவக்குகிறார் வ.வே.சு.ஐயர் நீதிக்கதை போலவே எழுதப்பட்டிருக்கிறது.

ருக்மணிக்கு பனிரெண்டு வயதில் திருமணமாகிறது. மாப்பிள்ளை உள்ளூர் மணியத்தின் மகன் நாகராஜன். படித்தவன். அவர்கள் இலட்சிய தம்பதி போல வாழுகிறார்கள். ஆனால் திடீரென ஒரு நாள் அவர்களின் வாழ்க்கையில் புயல் வீச ஆரம்பிக்கிறது. அதற்குக் காரணம் அர்பத்நாட் வங்கி திவாலானது.

எங்கோ ஒரு வங்கி திவாலானது ஒரு பெண்ணின் வாழ்க்கையை எப்படிப் பாதிக்கிறது என்பதைக் கதை சுட்டிக்காட்டுகிறது. இன்று வாசிக்கும் போது தனது சமகாலத்தின் முக்கிய நிகழ்வை எப்படிக் கதையின் திருப்பத்திற்கு வ.வே.சு.ஐயர் பொருத்தமாகப் பயன்படுத்தியிருக்கிறார் என்று உணர முடிகிறது.

புதுமைப்பித்தன் 'தியாக மூர்த்தி' சிறுகதையில் உலகப் பொருளாதார மந்தம் பற்றி இப்படிப் பேசுகிறார்

"பொருளாதார மந்தம் என்று நீட்டி முழக்கிச் சாய்மான நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு அடித்து விளாசுகிறார்களே, அதுவும் வந்தது. அதைப்பற்றிய தத்துவங்கள், காரணங்கள் எல்லாம் உமக்கும் எனக்கும் பத்திப் பத்தியாக நுணுக்கமாக எழுதத்தெரியும்: பேசவும் தெரியும். ராமனுஜலு நாயுடுவுக்குத் தெரிந்தது போல் நமக்கு ஸ்பஷ்டமாகத் தெரியாது. அவருடைய சிக்கனக்கத்தி விழுந்தது. பத்துப்பேர் வெளியே



போக வேண்டியிருந்தது. அதில் ராமசாமிப்பத்தரும் ஒருவர்.”

இதற்கு முன்னோடி போல வ.வே.சு ஐயர் கதையில் அர்பத்நாட் வங்கி திவாலான விஷயம் குறிப்பிடப்படுகிறது.

“மூணு வருஷ காலம் சென்றது. அந்த மூணு வருஷத்துக்குள் எத்தனை மாறுபாடுகள்! காமேசுவரையருக்குக் கையிளைச்சி போய்விட்டது. ரொக்க ஐவேஜியெல்லாம் ஏதோ அருபத்து நாட்டுக் கம்பெனியாம். அதில் வட்டிக்குப் போட்டிருந்தார். நம்மூர்ப் பணம் நாலுகோடி ரூபாயையும் முழுங்கிவிட்டு அது ஏப்பம் விட்டுவிடவே, காமேசுவரையர் ஒரு நாளில் ஸர்வ ஏழையாய்ப் போய்விட்டார். ருக்மணியின் தாயார் மீனாட்சியம்மாள் உடம்பிலிருந்த நகைகள் தான் அவருக்கு மிச்சம். பூர்வீக சொத்தான வீட்டையும் நிலங்களையும் வித்துத்தான் அவர் கொடுக்க வேண்டிய கடன்களைத் தீர்க்க வேண்டியாதாக இருந்தது.”

ருக்மணியின் தந்தை நொடித்துப் போன காரணத்தால் தான் அவளை மாமியாரும் மாமனாரும் வெறுக்கிறார்கள். நாகராஜனுக்கு இன்னொரு திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய்கிறார்கள்.

ருக்மணிக்கு அர்பத்நாட் வங்கி பற்றியோ அது ஏன் திவாலாகிப் போனது என்பதைப் பற்றியோ எதுவும் தெரியாது. எங்கோ நடைபெறும் ஒரு பொருளாதார வீழ்ச்சி ஒரு இளம்பெண்ணின் மகிழ்ச்சியான வாழ்க்கையை நிர்மூலமாக்குகிறது. இந்தப் பட்டாம் பூச்சி விளைவு (Butterfly effect) ஆழ்ந்து அறிந்து கொள்ள வேண்டியதாகும்.

மதராஸில் செயல்பட்டு வந்த பிரிட்டனுக்குச் சொந்தமான நிதி நிறுவனம் அர்பத்நாட் அண்ட் கோ. இது ஒரு வங்கி அல்ல. நிதி நிறுவனம். வாடிக்கையாளர்களிடமிருந்து வைப்புத் தொகையைப் பெற்று பல்வேறு தொழில்களில் முதலீடு செய்து, வைப்புத் தொகைக்கு ஐந்து விழுக்காடு வட்டி வழங்கியது இந்நிறுவனம்.

இது அந்த நாளில் மிக அதிகமான வட்டித் தொகையாகும். இதனால் பணக்காரர்கள் மட்டுமின்றி நடுத்தர வர்க்க மக்களும் இதில் தங்கள் பணத்தை முதலீடு செய்திருந்தார்கள். ஆரம்பக் காலத்தில் முறையாகவே இந்த நிறுவனம் செயல்பட்டு வந்தது. ஆகவே சுதேசி போராட்டத்திற்காகத் திரட்டப்பட்ட நிதியைக் கூட இதில் வைப்புதொகையாக வைத்திருந்தார்கள்.

1906ஆம் ஆண்டில் மதராஸ் மாகாணம் மிக மோசமான நிதி நெருக்கடியால் பாதிக்கப்பட்டது. இத்தோடு அர்பத்நாட் வங்கியின் நிர்வாகிகள் இலண்டன் பங்குச் சந்தையில் சூதாடியைப் போலச் செயல்பட்டதால் தங்கள் பணத்தின் பெரும் தொகையை இழந்தார்கள். இதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் அர்பத்நாட் வங்கியின் துணைநிறுவனமான மெக்ஃபடைன் நிறுவனத் தலைவர் பேட்ரிக் மெக்ஃபடைன். இவர் தோல்வியைத் தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டார்.

1906ஆம் ஆண்டு அக்டோபர் 22ஆம் நாள் அர்பட்நாட் அண்ட் கம்பெனி திவாலாகிவிட்டதாகச் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது


வங்கி திவாலான செய்தி மெட்ராஸ் மாகாணம் முழுவதும் தீயாகப் பரவியது. பெருந்திரளாக மக்கள் வங்கியின் முன்னால் குவிந்து கூக்குரலிட்டார்கள். கூட்டத்தைக் கலைக்கப் பிரிட்டிஷ் அரசு காவலர்களை ஏவியது. இதனால் ஆத்திரமான மக்கள் வங்கி மீது கல்வீசி தாக்கினார்கள். பெரிய கலவரம் ஏற்பட்டது. குதிரையில் வந்த காவல்படையினர் பொதுமக்களை அடித்து விரட்டினார்கள். பின்பு நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. அர்பத்நாட் மூன்று ஆண்டுகள் சிறைதண்டனை விதிக்கபட்டார். பலருக்கும் பணம் திரும்பி வரவில்லை. இந்த வங்கி திவாலான சம்பவம் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது.

மகாகவி பாரதி அர்பத்நாட் வங்கி திவாலானதுப் பற்றி எழுதியிருக்கிறார். அந்த நாட்களில் அர்பத்நாட் வங்கியின் வீழ்ச்சி குறித்தும் ஒரு கும்மிப்பாட்டு எழுதப்பட்டிருக்கிறது.

மதராஸ் மகாணத்தை உலுக்கிய அர்பத்நாட் வங்கியின் வீழ்ச்சியைப் பற்றி வேறு சிறுகதைகள் எதுவும் எழுதப்பட்டிருக்கிறதா எனத் தெரியவில்லை. இன்று வாசிக்கையில் குளத்தங்கரை அரசமரம் சிறுகதை ஒரு சரித்திர ஆவணம் போலவே தோன்றுகிறது.

கொலை புரிவது எப்படி?

ஜெயமோகன்



ஓவியம்: பாரதி

“ஒன்றிலும் உளம் செல்லவில்லை, எதிலும் சலிப்பே எஞ்சுகிறது. வேலை ஒரு சுமையாக அழுந்துகிறது. நகர வாழ்க்கை திரும்பத்திரும்ப ஒரே அச்சில் சுழல்கிறது. வாழ்க்கையின் பெரும் பகுதி பயணம் செய்வதிலேயே கழிகிறது. உறவுகளில் எப்போதும் உரசலும் எரிச்சலும் உள்ளது. என் வாழ்க்கைக்கு என்ன இலக்கு, என்ன அர்த்தம் என்னும் வினா அலைக்கழிகிறது. இளமையில் பெரிய கனவுகளுடன் இருந்தேன், அக்கனவுகள் இன்று அர்த்தமற்றவை ஆகிவிட்டன. அவற்றை இப்போது நினைத்துப் பார்க்கவே அஞ்சுகிறேன். நள்ளிரவில் தூக்கம் விழித்துக் கொண்டால் இந்த எண்ணங்கள் எழுந்து அதன் பின் தூக்கம் இல்லாமலாகி விடுகிறது. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தக் காலகட்டம் சபிக்கப்பட்ட ஒன்று. இங்கே எல்லாமே பொருளிழந்து விட்டிருக்கின்றன”

ஒவ்வொரு நாளும் என் மின்னஞ்சல் பெட்டியைத் திறந்தால் ஏறத்தாழ இதே கேள்வியுடன் அல்லது முறையிடலுடன் இருக்கும். பெரும்பாலும் எழுதியிருப்பவர் நாற்பது வயதுக்குட்பட்ட இளைஞராக இருப்பார். நான் திரும்பத் திரும்ப இந்த வினாக்களுக்கு பதில் எழுதிக் கொண்டிருக்கிறேன். வெவ்வேறு கோணங்களில். வெவ்வேறு வாழ்க்கைத் தருணங்களுடன் இணைந்து.

உண்மையில் இந்தப்பிரச்சினை இன்று ஓங்கியுள்ள ஒன்றா? அல்லது வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் காலந்தோறும் அனைவருமே சந்தித்துக் கொண்டிருந்த ஒன்றா? இதுமானுட வாழ்க்கையின் இயல்பான ஒருசோர்வு நிலை என்றால் அதற்கான பதிலை

இயற்கையில், சமூக அமைப்பில் தேட வேண்டும். இந்தக் காலகட்டத்திற்குரிய பிரச்சினை என்றால் இந்தக் காலகட்டத்தின் புதிய காரணங்களை கண்டடைய வேண்டும். இது அனைவருக்குமான பிரச்சினையா அல்லது ஒரு சிலருக்கு மட்டும் உரியதா என நோக்க வேண்டும். சிலருக்கு மட்டும் உரியது எனில் அவர்களின் உளநிலையில் காரணத்தை தேட வேண்டும்.

வாழ்வில் சலிப்பும், சோர்வும், விலக்கமும் என்றும் உள்ளவை. அதிலிருந்து வாழ்வின் பொருள் தேடி கிளம்புபவர்களும் என்றும் இருந்தனர். ஆனால் அவர்கள் மிகமிக அரிதான சிலர். இன்று அந்த உளநிலை பற்பல மடங்காகப் பெருகியுள்ளது. ஆகவே அதற்கு இன்றைய வாழ்க்கையிலேயே காரணம் தேட வேண்டும். இந்த உளநிலை, கல்வி கற்று, வாழ்க்கையில் பெரிய பொருளியல் போராட்டமும் இல்லாத சிலரிடம் மட்டுமே உள்ளது. அவர்கள் சிந்திப்பவர்களாகவும், கொஞ்சமேனும் வாசிப்பவர்களாகவும் உள்ளனர். ஆகவே அவர்களின் உளநிலையில்தான் காரணம் தேடியாக வேண்டும்.

எனக்கு அறுபது வயது. நான் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிறந்து வளர்ந்தவர்களை நிறையவே கண்ட எழுத்தாளன். மாமனிதர்கள் முதல் எளியோர்வரை, இன்று இருபத்தொன்றாம் நூற்றாண்டில் பிறந்து வளர்ந்த தலைமுறையுடன் உரையாடிக் கொண்டிருக்கிறேன். ஆகவே ஓர் இணைப்பு ஊடகமாக இதை ஆராய்கிறேன். இருபதாம் நூற்றாண்டில் என்ன நிகழ்ந்தது என்று என் அனுபவம் வழியாகச் சொல்ல முயல்கிறேன்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிறந்தவர்களை இரண்டு வகையினராக பிரிக்கலாம். மிகப் பெரும்பாலானவர்கள் அன்றிருந்த சமூக அமைப்புக்குள் முழுமையாக இணைந்து, தங்களுக்கென தனித்தன்மையே இல்லாமல் வாழ்ந்தவர்கள். கல்வி, தொழில், திருமணம், குடும்ப உறவுகள், மத நம்பிக்கை, குடிமைப் பொறுப்புகள் எல்லாமே பிறப்பால் வகுக்கப்பட்டு விட்டன. அவற்றை மீறினால் சமூகத்தை விட்டு வெளியேற வேண்டியிருந்தது. அவற்றை அப்படியே ஏற்றுக்கொண்டு விட்டால் எதைப் பற்றியும் முடிவெடுக்க வேண்டியதில்லை. எல்லாம் ஊழ்வினை என ஒழுகிச் சென்று வாழ்க்கையை முடிக்கலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிறந்த இரண்டாம் வகையினர் தங்களுக்கென தனித்தேடலும், தனியான சிந்தனையும் கொண்டவர்கள். அவர்களே ஆன்மிகத் தேடலுடன் துறவியானார்கள். அரசியல் கிளர்ச்சியாளர்கள் ஆனார்கள். சமூக சீர்திருத்தவாதிகளானார்கள். ஆனால் மூன்று நிலையிலும் அவர்கள் பொதுச்சமூகத்துக்கு அன்னியர்கள். துறவிகள் பொதுச்சமூகத்தை உதறிவிலகினர். அரசியல், சமூகச் செயல்பாட்டாளர்கள் பொதுச் சமூகத்துடன் மோதினர்.

முதல் வகையான வாழ்க்கையே பழைய நிலவுடைமைச் சமூகத்தின் அறத்தால் வலியுறுத்தப்பட்டது. 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலாதார்' என வள்ளுவரும் 'ஒப்புரவு ஒழுகல்' என ஔவையாரும் சொன்னது அதையே. அதை மீறும் எண்ணமே இல்லாமல் வாழ்ந்தவர்களுக்கு தனிப்பட்ட மன அலைச்சல்கள் இருக்கவில்லை.

ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நவீன வாழ்க்கை வந்து இந்தியாவை தட்டி எழுப்ப தொடங்கி விட்டிருந்தது. நவீன அரசு நிர்வாகம், நவீனக் கல்வி, நவீன போக்குவரத்து, நவீன செய்தித்தொடர்பு ஆகிய நான்கு உருவாகி வந்தன. அந்த நவீன வாழ்க்கைக்கு சற்றேனும் இடம் கொடுத்தவர்கள் அதன்பின் முந்தைய சமூக அமைப்பில் முழுமையாக இணைய முடியவில்லை. அவர்கள் அதை எதிர்த்து போராடி தங்கள் தனித்தன்மையை நிலைநாட்ட முயன்றனர். அந்த பழைய சமூக அமைப்பை நவீன சமூகமாக ஆக்கும் பொருட்டு போராடினர்.

முதல் வகையினருக்கு தேக்க நிலையின் அமைதி இருந்தது. இரண்டாம் வகையினருக்கு முன்னேறுவதன் கிளர்ச்சியும், தனிப்பட்ட சாதனையின் நிறைவும் இருந்தது. இருசாராரையும் நான் சந்தித்திருக்கிறேன். 'அந்தக் காலத்தில் எல்லாரும் நிம்மதியா இருந்தோம்' என்றவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தேங்கி நின்ற பொதுமனிதர்கள். 'அப்பல்லாம் கொடுமையான வாழ்க்கை. நாங்க போராடினோம்' என்பவர்கள் முரண்பட்டு சாதித்த தனிமனிதர்கள்.

இருபதாம் நூற்றாண்டை உருவாக்கியவர்கள் இரண்டாம் வகையான தனிமனிதர்கள் தான். அவர்கள் தான் ஜனநாயகத்தை கொண்டு

வந்தவர்கள். ஜனநாயகம் தனிமனிதனின் சுதந்திரத்தின் அடிப்படையில் அமைந்தது. ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கை, தங்கள் இலட்சியம் ஆகியவற்றை தாங்களே தேர்வு செய்து கொள்ளும் உரிமையை அது அளித்தது. சென்ற நூறாண்டுகளில் இங்கே நடந்த ஒட்டு மொத்த சமூக மாற்றம் என்ன என்று கேட்டால் ஒவ்வொருவருக்கும் கிடைத்த இந்த சுதந்திரம் என்று சொல்லலாம்.

இன்று மனிதர்களை கட்டுப்படுத்தி வைத்திருந்த கட்டுப்பாடுகள் அகன்றுள்ளன. மனிதர்கள் சென்ற நூற்றாண்டில் சிறிய சிறிய வட்டங்களுக்குள் வாழ்ந்தனர். இளமையில் நான் பார்த்த முதியவர்கள் எல்லாம் அதிகம் போனால் ஐந்து கிலோ மீட்டர் வட்டத்திற்குள் வாழ்ந்து மறைந்தவர்கள். சாதி, குடும்பம் என்ற சூழலை விட்டு வெளிச் செல்லாதவர்கள். 1940களில் இரண்டாம் உலகப் போர் நடந்த போது, அன்று வந்த செய்திகளில் இருந்துதான் உலகம் என்ற ஒன்று உள்ளது, ஏராளமான நாடுகள் உள்ளன, இந்தியா என்ற நாடு உள்ளது என்ற புரிதலே நம் முன்னோடிகளுக்கு வந்தது 1970களில் சிவந்தமண் படத்தில் ஐரோப்பா காட்டப்பட்ட போது அடித்துப் புரண்டு அதை பார்த்து வாய் பிளந்தவர்களில் நானும் ஒருவன். இன்று நான் பலமுறை ஐரோப்பா சென்று விட்டேன். உலகம் சுற்றிக் கொண்டிருக்கிறேன். இன்று இளைஞர்கள் உலக நாடுகளெங்கும் செல்கிறார்கள். இணையம் வழியாக உலகமே ஒன்றாக, ஒரே இடமாக ஆகியிருக்கிறது.

ஆனால் எந்த உரிமையும் பெரும் பொறுப்பும் கூட. நேற்றைய மனிதர்களுக்கு படித்து முடித்து, ஒருவேலை தேடிக்கொண்டு, வீட்டில் பார்த்த பெண்ணை மணந்து, பிள்ளைகளை பெற்று படிக்க வைத்து, அவர்களுக்கு திருமணம் செய்து வைத்து பேரப்பிள்ளைகளை பார்த்துவிட்டால் வாழ்க்கை முடிவுற்றது. நிம்மதியாகச் சாகவேண்டியது தான். அன்று அதுவே பெரிய போராட்டம். வேலையில்லா திண்டாட்டம் உச்சத்திலிருந்த நாட்கள்.

இன்று, படிப்பும் வேலையும் கொஞ்சம் திறமையுள்ளவர்களுக்கு இயல்பாக அமைந்து விடுகிறது, அதன் பிறகுதான் எல்லா கேள்விகளும். திருமணம், குடும்பம் ஆகியவற்றை தாங்களே முடிவுசெய்ய வேண்டும்.



தன்வாழ்க்கையின் இலட்சியம் என்ன, தன்னுடைய தனிப்பட்ட சாதனை எந்த களத்தில் எல்லாவற்றையும் கண்டடைய வேண்டும். அது பெரும் பொறுப்பு. சுதந்திரமே சுமையாக ஆகிறது. அதை எதிர்கொள்ள முடியாமையின் விளைவான சலிப்பையே இளைஞர்களிடம் காண்கிறேன்.

இதில் ஒவ்வொருவருக்கும் ஒரு வகையான சிக்கல்கள். அனைவருக்குமான சில பொதுவான பரிந்துரைகளை நான் சொல்ல முடியும். அதற்கான தகுதி, ஒன்று நானே இந்த மாபெரும் சலிப்பை கடந்து வந்தேன் என்பது. நான் என் இளமையில் துறவியாகி வீட்டைவிட்டு ஓடினேன். அரசியல் இயக்கங்களில் இருந்தேன். கடும் உளச்சோர்வில் அலைந்தேன். என் களத்தை, என் இலக்கை கண்டு கொண்டேன். இரண்டாம் தகுதி, இன்று ஒவ்வொரு நாளும் இச்சிக்கலில் இருக்கும் இளைஞர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறேன்.

சில விதிகளைச் சொல்லலாம் என தோன்றுகிறது.

அ. செயல்புரியுங்கள். எதையாவது செய்வது மட்டுமே சலிப்பிலிருந்தும் சோர்விலிருந்தும் வெல்லும் வழி. ஒவ்வொரு நாளும் காலையில் அன்றைய செயல் திட்டத்துடன் எழுபவர்களே மகிழ்வாக வாழ்பவர்கள். சோர்வின்போது செயல் பற்றிய திட்டங்களும் கனவுகளும் நிறைய இருக்கும். ஆனால் அவை சோர்வின் ஒரு பகுதியே. அவை சோர்வை பெருக்குபவையே. சோர்வை எண்ணங்களால் வெல்லவே முடியாது. நேரடியான செயலால் மட்டுமே வெல்ல முடியும்.

ஆ. செயல் என்பது தொழில் அல்ல. தொழிலும் முக்கியமே. ஆனால் உங்களுக்குரிய தனி நிறைவை அளிக்கும் செயல் எதுவோ அதுவே உங்கள் முதன்மை செயல். அந்த செயலையே தொழிலாகச் செய்ய முடிந்தால் மிக நன்று. அது இயலாதென்றால் தொழிலை செய்து அதில் ஈட்டும் செல்வத்தை உங்களுக்கான தனிச்செயலைச் செய்யும் நேரத்தையும் பொருளையும் அடைவதற்கு பயன்படுத்துங்கள்.

இ. பொதுவான தளத்தை உதறுங்கள். முல்லா நசிருத்தீன் கதைபோல தொலைத்த பொருளை தொலைத்த இடத்தில் தேடாமல் வெளிச்சம் உள்ள இடத்தில் தேடுபவர்களே நம்மில் பெரும்பாலானவர்கள். தமிழகத்தில் அனைவருக்கும் தெரிந்த உலகம் சினிமா, அரசியல், மற்றும் சமூக வலைத்தளங்கள். அந்த பொதுத் தளத்தில் உங்களுக்கான தனித் தகளத்தை கண்டடைய முடியாது. அங்கே புழங்கினால் பல்லாயிரங்களில் ஒருவராகவே ஆக முடியும். தங்களுக்கான வாழ்க்கையை கண்டடைந்து அங்கே சாதித்தவர்கள் தங்களுக்கான தனிக் களத்தை கண்டு கொண்டவர்கள்.

உ. அறுதியான வெற்றிக்கு மட்டுமே மதிப்பு என எண்ணாதிருங்கள். அறுதி வெற்றி நம்கையில் மட்டும் இல்லை. அதற்கு உலகச் சூழல் கூட சாதகமாக இருந்தாக வேண்டும். பல நூறு காரணிகளுடன் கட்டுண்டிருக்கிறது வெற்றி. நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் நமக்கு மகிழ்வூட்டுவதாக இருந்தால், நாம் கொஞ்சம் முன்னகர்வதாக இருந்தால்

> **செயலே விடுதலை. செயலே மகிழ்ச்சி. சிறப்புறச் செய்யப்படும் செயலே வாழ்க்கையின் அர்த்தம். அந்த அர்த்தம் நாம் அளித்துக் கொள்வதுதான். மானுட நாகரீகம் என்னும் மாபெரும் நாடகத்தில் நம் பங்கை நடிப்பது தான் நமக்கிருக்கும் ஒரே வழி.**

அதுவே வெற்றிதான். திரும்பிப் பார்க்கையில் வாழ்க்கை மகிழ்ச்சியாகவும் பொருள் உடையதாகவும் இருந்திருக்கிறது என்று தோன்றுவதே உண்மையான வெற்றி.

ஊ. ஒரு பெரும் பெருக்கின் துளி என உணருங்கள். நாம் இதை செய்வதனால் என்ன பயன் என்னும் எண்ணம் எழாதவர்கள் இல்லை. மானுட நாகரீகம், மானுட அறிவு என்பது ஒரு பெரும் பெருக்கு. அதில் நாம் நமது துளியை சேர்க்கிறோம். அப்படி சேர்க்கப்பட்ட பல கோடி துளிகளால் ஆனதுதான் மனித நாகரீகமும் அறி வியக்கமும். நாம் அதில் இருப்பதுதான் முக்கியம். அதில் நானும் டால்ஸ்டாயும் இரண்டு துளிகள் அவ்வளவுதான். அந்த தன்னுணர்வு அளிக்கும் நிறைவு முக்கியமானது.

எ. எதிர்மறைச் செயல்கள் அறிவுச் செயல்பாடுகள் அல்ல. பலர் பொது வெளியில் எதையாவது கண்டிப்பது, எதிர்ப்பது, கேலி செய்வது ஆகியவை ஒருவகை அரசியல் செயல்பாடுகள் என்றோ அறிவுச் செயல்பாடுகள் என்றோ நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அல்ல, அவை வெறும் வம்புகள்தான். உங்களை வேறு எவரோ பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்றுதான் பொருள். அவர்கள் லாபம் அடைவார்கள், உங்களுக்கு எஞ்சுவது கசப்பு மட்டுமே. எதிர்மறைச் செயல்கள் எரிச்சலையும் கசப்பையும் உருவாக்கும். அந்தக் கசப்பால் நாம் மேலும் எதிர்மறைச் செயல்களைச் செய்வோம். அது ஒரு நச்சுச் சூழல். அது ஒரு போதையும் கூட. சிக்கினால் வெளிவரவே முடியாது. எதையாவது கண்டிக்கவோ எதிர்க்கவோ

உரிமை கொண்டவர்கள் ஆக்கப்பூர்வமாக எதையாவது செய்து அடையாளத்தை அடைந்தவர்கள் மட்டுமே. மற்றவர்களின் கண்டனங்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் எவரும் மதிப்பளிப்பதில்லை.

ஏ. நீடித்த செயல்பாடே முக்கியமானது. எந்த செயலிலும் முழுமையான ஈடுபாட்டுடன், ஒருமையுடன் ஈடுபடுவது முக்கியம். அதை குறிப்பிட்ட காலத்திற்கு நீடித்துச் செய்ய வேண்டியது அதைவிட முக்கியம். ஒரு செயலை நம்பி தொடங்கினால், அதனால் பொருளியல் இழப்பு உருவாகவில்லை என்றால், அதை குறைந்தது ஐந்தாண்டுகள் செய்வேன் என உறுதி கொள்ளுங்கள். எது எப்படியானாலும் செய்து கொண்டிருப்பேன் என முயலுங்கள். பெரும்பாலான செயல்கள் செய்ய ஆரம்பித்ததுமே ஒவ்வாமையை அளிக்கும். ஆர்வம் குறைந்து கொண்டே வரும். தடைகளும் உருவாகும். ஆனால் சிறிதுகாலம் விடாப் பிடியாகச் செய்யும் செயல் அதன் வழியாக நாம் அடையும் பயிற்சியினாலேயே நமக்கு பிடித்தமானதாக ஆகும். நம்மால் எளிதில் செய்யக் கூடுவதாகவும் ஆகும்.

ஐ. நம்மைப் பற்றி மிகையாக மதிப்பிட வேண்டாம். பெரும்பாலும் செயல்படாதிருப்பவர்கள் தங்களைப் பற்றி மிக அதிகமாக கற்பனை செய்து வைத்திருப்பார்கள். உலகையே உலுக்கப் போகிறவர்களாக எண்ணிக் கொள்வார்கள். அதற்குரிய வாய்ப்பும் இடமும் அமையவில்லை என்று சாக்கு சொல்வார்கள். கவனியுங்கள் இது இயல்பான மனநிலை அல்ல. நம் சோர்வுதான் நம்மை இப்படி கற்பனை செய்ய வைக்கிறது. எதையும் செய்யாமலிருப்பதற்கான ஒரு சாக்கு போக்கு அது. நாம் யார், நமது எல்லைகள் என்ன, நமது திறமைகள் என்ன என்பதெல்லாம் நாமே செய்து பார்த்து கண்டடைய வேண்டியவை.

இந்த ஒன்பது விதிகளும் நான் எனக்கே போட்டுக் கொண்டவை. 2007ல் ஜெயமோகன். இன் (www.jeyamohan.in) என்னும் இணைய தளத்தை தொடங்கினேன். அதில் ஒவ்வொரு நாளும் எழுதி வெளியிடுவேன் என உறுதி கொண்டேன். ஐந்தாண்டுகள் பிடிவாதமாக தொடர்ந்தேன். இன்று அது தமிழில் ஒரு முதன்மையான இலக்கிய இதழ். 15 ஆண்டுகளில் ஒருநாள்கூட வெளிவரத் தவறியதில்லை. நான் உலகின் எந்த மூலையில் இருந்தாலும், நோயுற்று மருத்துவமனையில் இருந்தாலும் அது வெளிவரும்.

2014இல் மகாபாரதத்தை அடிப்படையாகக் கொண்டு வெண்முரசு என்னும் நாவல் தொடரை எழுதத் தொடங்கினேன். ஒவ்வொரு நாளும் ஒரு அத்தியாயம் என் இணையதளத்தில் வெளிவரும், குறைந்தது பத்தாயிரம் பக்கங்கள் எழுதுவேன் என அறிவித்தேன். 2020ல் எழுதி முடித்தேன். இருபத்தைந்தாயிரம் பக்கங்களில் இருபத்தாறு நாவல்கள். உலகின் மிகப்பெரிய இலக்கியப் படைப்பு அதுதான். 2022இல் என் அறுபதாவது வயதில் தமிழ் விக்கி (Tamilwiki.com) என்னும் இணையக் கலைக் களஞ்சியத்தை நண்பர்களுடன் இணைந்து தொடங்கினேன். பத்தாண்டுகளில் ஐம்பதாயிரம் பதிவுகள் என்பது இலக்கு.

செயலே விடுதலை. செயலே மகிழ்ச்சி. சிறப்புறச் செய்யப்படும் செயலே வாழ்க்கையின் அர்த்தம். அந்த அர்த்தம் நாம் அளித்துக் கொள்வதுதான். மானுட நாகரீகம் என்னும் மாபெரும் நாடகத்தில் நம் பங்கை நடிப்பது தான் நமக்கிருக்கும் ஒரே வழி. அதற்கான நெறிகளையே சொன்னேன்.

அதற்கு தடையாக ஆவது எது? நாம்தான். நமக்கு இரண்டு ஆளுமைகள் (personalities) உண்டு. ஒன்று தேங்கிநிற்க, பொறுப்பேற்காமல் இருக்க, வெற்றுக் கற்பனைகளில் திளைக்க நம்மை செலுத்துகிறது. அதுவே சலிப்பை, சோர்வை கொண்டு வருகிறது. அந்த நம்மை நாமே கொல்லாமல் நமக்கு விடுதலை இல்லை. அந்த நம்மை நாம் படிப்படியாக கொல்ல முடியாது. வாளால் ஒரே வெட்டு. வீழ்த்தி விட்டு சென்று கொண்டே இருக்க வேண்டியதுதான்.

ஆகவே கொலை புரிக.



நுண்ணியல் வாழ்வும் பேரியல் இலக்குகளும்.

ஜோ டி குரூஸ்

“இந்த பூமி ஒவ்வொரு மனிதனின் தேவைக்கும் போதுமானது, அதுவே தனிமனித பேராசைக்கானது அல்ல” என மகாத்மா காந்தி சொன்னார். உளபூர்வமாகச் சிந்தித்த ஒரு படைப்பாளுமையின் கூற்று அது. அவரே “இந்தியா கிராமங்களில் வாழ்கிறது” என்று சொன்னது. பேரியல் பொருளாதாரக் கனவுகளோடும், நுண்ணியல் வாழ்வின் மீதான அக்கறையோடும் முன்வைக்கப்பட்ட பெரும் பொருளாதாரப் பிரகடனம்.

பேரியல் பொருளாதார இலக்குகள், வளர்ச்சி, முன்னேற்றம் என நாம் முன்வைக்கும் திட்டங்கள் எல்லாம் நுண்ணியல் வாழ்வுக்கான ஒட்டுமொத்த தீர்வே. காரணம், தனிமனித வாழ்வே குடும்பமாகி, குடும்பங்களே ஒரு ஊராகி, பல ஊர்களின் கூட்டமைப்பே நாடு என்றாகிறது. தனிமனித வாழ்வும் நாட்டின் வளர்ச்சியும் ஒன்றையொன்று சார்ந்தது. நுண்ணியல் வாழ்வைப் புறக்கணித்த பேரியல் பொருளாதாரமும், சுற்றுச்சூழலுக்கு இயைந்த பேரியல் பொருளாதாரக் கனவுகளுக்குப் பங்களிப்புச் செய்யாத நுண்ணியல் வாழ்வும் தொடர்ந்ததாகச் சரித்திரத்தில் குறிப்புகள் இல்லை.

பொற்காலம் எனப் போற்றப்பட்டதெல்லாம் நாம் வழக்கமாய்ப் புள்ளிவிவரங்களோடு சொல்லும் நாட்டின் மொத்த உற்பத்தி [Gross Domestic Product] மட்டுமே சார்ந்தது அல்ல. மாறாக, அது நாட்டு மக்களின் மொத்த மகிழ்வான வாழ்வு [Gross Domestic Happiness] சார்ந்தது. பங்களிப்புச் செய்யும் தனிமனித வாழ்வுச் சுதந்திரத்தையோ, மகிழ்வையோ பேணாத வெறும் உற்பத்தி சார்ந்த புள்ளிவிபரங்களையே

முன்வைக்கும் நாடு எப்படி பொற்கால நிலையை நோக்கிப் பயணிக்கும்?

அறிவியல் வளர்ச்சியில் தொழில்நுட்பங்கள் உச்சத்தைத் தொட்டிருக்கும் இந்தக் காலத்திலும் "கடந்து போன காலத்தைப் போல வாழ்வு மகிழ்வானதாக இல்லை'' என்ற பொதுக்கூற்று நமக்கு உணர்த்துவது வளமான வாழ்வு என்பது பணப்புழக்கத்தையோ, அதித நுகர்வையோ அல்லது உற்பத்தியை மட்டுமோ சார்ந்தது அல்ல, மாறாக அது இருத்தலின் மகிழ்வு சார்ந்தது என்பதுதான். தனிமனித, சமூக சுதந்திரத்தை, வாழ்வைச் சீரழிக்கும் எந்தப் பொருளாதார முன்னெடுப்பும் பேரியல் வளமையைக் காணமுடியாது.

சமீபத்திய புள்ளிவிபரம் ஒன்று இந்தியாவில் பணக்காரர்களின் எண்ணிக்கை கூடியிருக்கும் வேளையில், வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கையும் கூடியிருப்பதாகத் தெரிவிக்கிறது. ஒன்றிய அரசின் ஜிஎஸ்டி, பண மதிப்பிழப்பு போன்ற நடவடிக்கைகளால் நடுத்தர வர்க்கமாய் இருந்து பெரும் பொருளாதாரப் பங்களிப்பு செய்தவர்கள், தங்கள் தொழிலை இழந்து அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களிடம் வேலை செய்தவர்கள், வேலையை இழந்து வறுமைக் கோட்டுக்குக் கீழ் வந்திருக்கிறார்கள். இந்த நிலையில், பெரும் பணக்காரத் தொழிலதிபர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களும், தொடர்ந்து வறுமைக் கோட்டுக்குக் கீழே தள்ளப்படும் மக்களால் நுகரப்படாமல், தேக்கத்துக்கு வந்து கோடீஸ்வரத் தொழிலதிபர்களின் நிலையும் பாதிப்படையுமே என்பது பற்றிய அக்கறை, ஒன்றிய அரசுக்கு இருப்பதுபோல் தெரியவில்லை.

இந்த நிலையில்தான் தமிழகத்தில் 2020 மே மாதம் நடந்த ஆட்சி மாற்றத்தைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஆட்சி மாறியதிலிருந்து, பல நம்பிக்கை தரும் காரியங்கள் நடந்தபடியே இருக்கின்றன. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான், எனப் பதவிப் பிரமாணம் செய்த முதல்வர், தனது கவனத்தை அறிவுலகின் பக்கம் திரும்பி எனக்குப் போலிப் பெருமைகள் வேண்டாம், புத்தகங்களைப் பரிசளியுங்கள் என்றதோடு பேரியல் பொருளாதாரக் கனவுகளோடு இயங்கும் படைப்பாளுமைகளையும் அரவணைத்துக்கொண்டார். பழங்குடிகள், மாற்றுத் திறனாளிகள், பெண்கள் என அரசின் நுண்ணியல் செயல்பாட்டு அக்கறை தொடர்கிறது. முனைப்பான செயல்பாட்டால் பெருந்தொற்றை கட்டுக்குள் கொண்டு வந்ததிலிருந்து, பேரிடர் காலத்தில் களத்தில் நின்றது, தகுதியானவர்களைத் தேவையான அரசுத்துறைகளின் ஆலோசனைக் குழுவில் பங்கேற்க செய்தது வரை அரசு அதிகாரம் மக்களோடு பயணிப்பது நம்பிக்கை அளிக்கிறது.

> **ஒரு நாட்டின் ஜனத்தொகை அல்ல, மாறாக அந்த நாட்டின் கடலோடிகளின் எண்ணிக்கையும் தொழில் ஆர்வமுமே நாட்டைச் செழுமையானதாக்கும் என்று உலகை மாற்றிய புத்தகங்களுள் ஒன்றான 'வரலாற்றின் மீது கடலாதிக்கத்தின் செல்வாக்கு' என்ற புத்தகத்தை எழுதிய ஆல்பிரெட் டி மாஹன் கூறினார்.**

படைப்பாளுமைகளே நாடு குறித்த தங்களின் கனவுகளைப் பல தளங்களில் முன்வைப்பவர்கள். அந்தக் கனவுகளை நனவாக்க, அறிவியலும், அரச நிர்வாகமும் கைகோர்த்துச் செயல்பட வேண்டும். ஒரு பிரச்சினைக்கான தீர்விலிருந்து மற்றொரு பிரச்சினைக்கான தீர்வு என்பதிலேயே தங்கள் திறமையையும், நேரத்தையும் செலவிடும் அதிகார நிர்வாகத்தால், தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையைத் தாண்டிச் சிந்திப்பது கடினம் என்பதை தற்போதைய அரசின் தலைமை, உணர்ந்து செயல்படுவதுதான் மாற்றத்தின் தொடக்கம்.

வளமான தமிழகம் என்பது, ஒருகை ஓசையான அரசின் நிர்வாகம் மட்டுமல்ல.

மாறாக, அது அனைத்து தரப்பு மக்களையும் இணைத்துக்கொண்ட செயல்பாடு. விவசாயம், கைவினைப் பொருள் உற்பத்தி, ஆலை உற்பத்தி, மீன் பிடித்தல், மென்பொருள், கட்டுமானம், வியாபாரம், கப்பலோட்டம், சரக்குப் போக்குவரத்து என அனைத்துத் துறைகளிலும் பணியாற்றும் நாட்டு மக்கள், தத்தமது தொழில்களைத் தொடர்ந்து சரிவர நடத்துவதற்கான ஊக்கமும், ஆதரவும் அரசிடமிருந்து வரவேண்டும். அந்த வகையில் அரசின் கவனம், அமைச்சரவைப் பெயர் மாற்றம், உலக மீனவர் தினப் பங்களிப்பு, கலை இலக்கிய விழா என நெய்தல் நிலத்தை நோக்கியும் திரும்பியிருப்பது, வரவேற்கத்தக்கது. நெய்தலும் தன் நீண்ட நெடிய அமைதிக்குப்பின் கலை இலக்கியத்தில் வாழ்வைப் பதிவு செய்து, சமவெளிச் சமூகங்களோடு உரையாடி, உறவாட விரும்புகிறது.

பழவேற்காட்டில் தொடங்கி, தென்மேற்கில் வளைந்து கிடக்கும் கடற்கரையும், கடலோடிகளும் தமிழ்நாட்டின் வரப்பிரசாதம். நாம், இன்றும் நம் நினைவில் வைத்துப் போற்றும் சோழர்களின் பொற்காலம் என்பது கடலாதிக்கத்தின் மேன்மையை ஆட்சியாளர்கள் உணர்ந்திருந்ததாலேயே. "ஒரு நாட்டின் ஜனத்தொகை அல்ல, மாறாக அந்த நாட்டின் கடலோடிகளின் எண்ணிக்கையும் தொழில் ஆர்வமுமே நாட்டைச் செழுமையானதாக்கும்'' என்று உலகை மாற்றிய புத்தகங்களுள் ஒன்றான 'வரலாற்றின் மீது கடலாதிக்கத்தின் செல்வாக்கு' என்ற புத்தகத்தை எழுதிய ஆல்பிரெட் டி மாஹன் கூறினார். காலனியாதிக்கவாதிகளுக்காகச் சொல்லப்பட்டதாக இருந்தாலும்கூட, ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில், கடலாதிக்கத்தின் முக்கியத்துவத்தைக் கட்டியம் கூறி நின்றது இப்புத்தகம். கடலாளுமையின் காரண கர்த்தாக்களான கடலோடிகள், இன்னும் தமிழகக் கடற்கரையில் இருக்கிறார்கள். அவர்கள் மூலம் கைதவறிப் போன வரலாற்றுப் பொருளாதார வளமையை உறுதியாய் மீட்டெடுக்க முடியும்.

இந்தியாவில் 2019இல் அறிவிக்கப்பட்ட புதிய இந்தியாவின் பார்வை, நீலப் பொருளாதாரத்தை வளர்ச்சியின் பத்து பரிமாணங்களில் ஒன்றாகக் காட்டுகிறது. மற்ற நாடுகளைப் போலல்லாமல் இந்தியத் தீபகற்பத்திற்கான 8118 கி.மீ நீளக் கடலோரம், தனித்துவமானது. அது வருடத்தில் 365 நாட்களிலும் தொழில் செய்ய ஏதுவான, கடலும், நிலமும் பூத்துக் குலுங்குகிற பூமத்திய ரேகையின் அருகமைந்த வெப்பமண்டலப் பிரதேசம். இந்திய கண்டத்திட்டுப் பகுதியில் குறிப்பாக தமிழகத்தில் ருசியான மீன்கள் பிடிக்கப்பட்டாலும், போதிய கரைக் கட்டமைப்பு வசதி இல்லாத காரணத்தால், மலிவான விலையிலேயே நமது மீனுணவு ஏற்றுமதியாகிறது. 14 கடலோர மாவட்டங்களில் கரைக்கடல், அண்மைக்கடல், ஆழ்கடலில் மீன்பிடித்தல் நடந்த போதிலும் உணவான மீன்வளம் பெரும் பொருளாதாரச் சக்தியாக மாறவில்லை. மீன்பிடித்தலுக்கானக் கரைக் கட்டமைப்பை, அரசு சீர் செய்வதன் மூலம் மீன்வளப் பொருளாதாரம் ஊக்கம் பெறும்.

வரலாற்று காலம்தொட்டே கடலோர மக்களில் ஒரு பகுதியினர், கடலில் கலம் செலுத்தி கடல்வழி வாணிபத்தின் மாபெரும் சக்தியாய் இருந்திருந்த போதிலும், அவர்கள் தங்களது அடுத்தகட்ட வளர்ச்சியான சரக்குக் கப்பலோட்டத் தொழில்முனைவோராக மாறவில்லை. சாலைகளில் நாளும் பெருகும் நெரிசல், சரக்குப் போக்குவரத்தில் பல பிரச்சினைகளுக்கு காரணமாகி விடுவது நாம் அறியாததல்ல. சரக்குப் போக்குவரத்தில் ஏற்படும் தடையும், தாமதமும் பெரும் பொருளாதார இழப்பிற்கு காரணமாகி இருக்கிறது.

இயற்கையின் கொடையான கடல்வழிப் பாதையைப் பயன்படுத்துவதே அதற்கான மாற்றுவழி. தமிழகத்தின் கரைக்கடல் பாதைகள் பயன்பாட்டுக்கு வந்து சென்னை போன்ற பெருந்துறைமுகங்களுக்கு, சிறு துறைமுகங்களிலிருந்து சிறிய கப்பல்கள் நடை செய்யலாம். கடலோரச் சமூகங்களின் பங்களிப்பில் கரைக்கடல் கப்பலோட்டம் நடந்தால், சாலைகளில் நெருக்கடி குறைந்து, விபத்துகள் தவிர்க்கப்படும், எரிபொருள் சிக்கனமாகும், காற்றின் மாசு குறையும். தொடரும் இதுபோன்ற சிக்கல்களுக்கான அக்கறையான தீர்வொன்று, அரசு மற்றும் கடலோடிகளுக்கான வருமானத்துக்கும், பெரும் பொருளாதார முன்னேற்றத்துக்கும், நேர்முக மறைமுக வேலைவாய்ப்புகளுக்கும் காரணமாய் அமையும். தீபகற்பத்தில், தலைநிமிர்ந்த பேரியல் பொருளாதார சக்தியாக தமிழகம் மாறும்.

மொழிபெயர்ப்பு இலக்கியங்களும் தமிழும்

சா.தேவதாஸ்



இருமொழிகள் பேசப்படும் சூழலிலேயே மொழிபெயர்ப்பு அவசியமாகி விடுகிறது. 24 மொழிகள் புழங்கிடும் இந்தியச் சூழலில் அதன் தேவையைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. இது அன்றாட வாழ்க்கைத் தேவை சார்ந்தது. பண்பாட்டு ரீதியிலான பரிவர்த்தனைக்கு அது முக்கிய அச்சாக இருக்கும்போது, எழுத்தின் அளவுக்கு மொழிபெயர்ப்பாளனின் பங்கு பணியும் அத்தியாவசியமாகிவிடுகிறது. பல்வேறு மொழிகள் பேசுவோரிடையே பல்வேறு பண்பாடுகள் சார்ந்தோரிடையே அது புரிதலையும் இணக்கத்தையும் சாத்தியப்படுத்தும்.

சிறந்த எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளருமான க.நா.சுப்ரமண்யம், ஆந்த்ரே ழீடு என்னும் பிரெஞ்சு எழுத்தாளரின் "குறுகிய வழி" நாவலை தமிழில் தரும்போது அதற்கான தனித்துவமான காரணத்தைக் குறிப்பிடுகிறார். "பிரெஞ்சு நாவல் உலகத்திலே உருவத்துக்கும் நடைக்கும் சிறப்பான முக்கியத்துவம் உண்டு. உருவத்திலும் நடையிலும் "குறுகிய வழி" எனும் இந்நாவல் மிகவும் சிறப்பானது. ஒரு எளிய காதல் கதையை பலகோணங்களில் நின்று நிறுத்தி அழகாக நடத்தி நமக்குத் தந்திருக்கிறார். ஆசிரியர் ஸ்டெந்தால், பால்ஸாக், ஃப்ளோபேர் முதலிய மேதைகளின் நாவல்களுக்கு ஈடானதொரு நாவலாக அமைந்துவிட்டது இது. தமிழ் மொழிபெயர்ப்பு வெளிவருவதென்பது தமிழர்கள் செய்த பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும்."

'நாவல் என்றால் என்னென்ன இலக்கணங்கள் அவசியம் என்று பண்டிதர்கள் சொல்லுகிறார்களோ அத்தனை இலக்கணங்களையும்

மீறியது' அது என்பதையும் குறிப்பிடுகிறார். ஆக நாவல் என்னும் இலக்கிய வகைமையின் வளர்ச்சியின் போக்கில், தமிழ் நாவலும் இயங்க வேண்டும் என்றும் அக்கறையோடு க.நா.சு. இதனை மேற்கொண்டுள்ளார் என்று சொல்ல வேண்டும்.

'மொழியாக்கம் பரிவிரக்கத்தின் மொழி' என்றொரு வாசகம் இருக்கிறது.

180 ஆண்டுகளுக்கு முன் கிறித்துவ மதத்தைப் பரப்பும் பொருட்டு தமிழகத்தின் சாயர்புரத்தில் 8 ஆண்டுகள் பணியாற்றிவிட்டு, பிற்காலத்தில் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக் கழகத்தில் தமிழ், தெலுங்குப் பேராசிரியராக விளங்கிய ஜி.யு.போப், திருக்குறள், திருவாசகம், நாலடியார், புறநானூறு, மணிமேகலை ஆகிய பனுவல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். தமிழ்மாணவன் என்று பெருமைப்பட்டுள்ளார். திருவள்ளுவர் பற்றிக் குறிப்பிடும்போது 'உலகளாவிய மானுடனின் கவிஞன்' என்கிறார். திருக்குறளில் கிறித்துவச் சிந்தனைகளின் தாக்கம் இருப்பது பற்றிப் பேசுகிறார்.

"அவர் சிறந்த சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்டவர் (Eclectic). அண்டை அயலில் கிறித்துவத் தாக்கங்கள் இருந்து கொண்டிருந்தன. பல பத்திகள் கிறித்தவ உணர்வை அப்படியே பெற்றுள்ளன. அவர்தன் உத்வேகத்தைப் பெற்றுள்ள ஆதாரங்களுள் ஒன்றாக கிறித்தவப் புனித நூல்கள் இருந்திருக்க வேண்டும்..."

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், சாந்தோம் பகுதியில் இயங்கிய புனித தாமஸின் செயல்பாடுகளை மனதில் கொண்டு, அடிக்கடி கிறித்தவ மதத்தினருடன் கலந்துறவாடிய தாக்கம் திருக்குறளில் உள்ளது என்ற ரீதியில் போப் இதனை எடுத்துரைக்கிறார். மேலும், குறள் பொதுமறை என்பதற்கு ஏற்ப, கிறித்தவர்கள் உரிமை கொண்டாடக் கூடிய பனுவலாக உள்ளது. அதையும் உணர்த்தும் விதத்திலே திருவள்ளுவர் Eclectic என்றும் சொல்லிவிடுகிறார்.

இருபத்தோராம் நூற்றாண்டில் திருக்குறளுக்கு ஓர் ஆங்கில மொழியாக்கம் கொண்டுவரும் கோபாலகிருஷ்ண காந்தி, போப்பின் மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டு தனது மொழிபெயர்ப்பை அமைத்துக் கொள்கிறார். 200 ஆண்டுகளுக்கு முந்தைய போப்பின் ஆங்கிலம் சற்று கரடுமுரடாக இருப்பதால், இன்றைய ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருப்பதாக விளக்குகிறார்.

சிலப்பதிகாரத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்களில் இருவரைப் பற்றி விவாதிக்க வேண்டும். ஆர்.எஸ்.பிள்ளையின் ஆங்கில மொழிபெயர்ப்பு தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. ஆர்.பார்த்தசாரதி என்னும் இந்திய ஆங்கிலக் கவிஞரின் மொழியாக்கம் (The Story of Anklet) பென்குவின் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இவற்றில், ஆர்.எஸ்.பிள்ளை, தொன்மையான தமிழ்ப் பனுவலை தொன்மையானதொரு ஆங்கிலச் செய்யுள் நடையில் மொழியாக்கம் செய்துள்ளார். ஆர்.பார்த்தசாரதி வசன கவிதைவடிவில் இன்றைய ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். கவிஞராக இருப்பதால் காவியத்தின் செறிவையும் தீவிரத்தையும் தக்கவைத்துக் கொண்டுள்ளார். தமிழின் அக புற மரபுகளின் பின்புலத்தை பிற பண்பாட்டினர் புரிந்து கொள்ளும் வகையில் நீண்ட முன்னுரை தந்துள்ளார். இதனால், ஆர்.பார்த்தசாரதியினுடைய மொழியாக்கம் வாசகனைச் சென்று சேர்கிறது. ஆர்.எஸ்.பிள்ளையினுடையது பிரச்சினைகளின்றி சரியாகச் செய்யப்பட்டிருந்தாலும், வாசகனைச் சென்று சேர்வதில் சிரமம் தருவதாக உள்ளது.

ஆக, மொழியாக்கம் ஒவ்வொரு தலைமுறைக்கும் தனியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் ஒன்றுக்குமேற்பட்ட மொழியாக்கங்கள் ஒரு பிரதிக்கு ஏன் அவசியமாகின்றன என்பதும் தொன்மையான நூலை இன்றைய காலகட்டத்தில் மொழிபெயர்க்க எது சரியான அணுகுமுறை என்பதும் மொழிபெயர்ப்பு ஏன் என்பதும் தொடர்ந்து விவாதிக்கப்பட வேண்டியவை ஆகின்றன.

ஆதாரங்கள்:

குறுகியவழி / ஆந்த்ரே ழீட் / தமிழில் : க.நா.சு. / சமுதாயம் பப்ளிகேஷன்ஸ், 1986.

A compendium of Tirukkural Translations in English / Vol I / CICT, Chennai, 2010

Cilappathikaram / Tr R.S. Pillai / Tanjavur Tamil University.

The Story of Anklet / Tr R. Parthasarathy / Penguin.

கனவாய்க் கரைந்த "கருப்புக்கன்னி"


பழ அதியமான்



"கு.அழகிரிசாமி நிறைய கவிதைகள் எழுதினார். சொந்தமா எழுதினாருங்கறது ரொம்ப பேருக்கு இப்போ தெரியாது. அவரு 'குவளை' என்கிற பெயரில் கவிதைகள் எழுதினார். 'கிராம ஊழியன்' பத்திரிகையில் கூட ரெண்டு மூணு பிரசுரம் ஆச்சு. அப்புறம் 'பிரசண்ட விகடன்'. இதில் எல்லாம் வந்திருக்கும். அவருடைய கவிதைகளைத் தொகுத்து ஒரு புத்தகமாக வந்திருக்க வேண்டியது. அது என்னமோ துர்பாக்கியம் புத்தகம் வரல. வாய்ப்பு இல்லாமயே போச்சு"

1978இல் வானொலி நேர்முகம் ஒன்றில் எழுத்தாளர் வல்லிக்கண்ணன்.

புதுமைப்பித்தன் பரம்பரையில் பூத்த இரு மலர்கள் கு.அழகிரிசாமியும், ரகுநாதன் அவர்களும். இருவருள் ஒருவரான எழுத்தாளர் அழகிரிசாமிக்கு (1923–1970) இவ்வாண்டு நூற்றாண்டு பிறக்கிறது. புதுமைப்பித்தனைத்தொடர்ந்து சிறுகதையில் சாதனை படைத்தவர் அவர். எளிய நடை, சித்தரிப்பின் லாவகம், உள்ளோடும் துயர இழை, அமத்தலான நகைச்சுவை, கமழும் மண்ணின் மணம், உள்ளடக்கத்திற்கு ஏற்ற சொல்லாட்சி எனப் பல அழகுகள் கூடி வந்த கலை அவரது எழுத்துக்கலை. தமிழில் சிறுகதைக்காகச் சாகித்திய அகாதமி விருதைப் பெற்ற முதல் எழுத்தாளர் கு.அழகிரிசாமிதான் (1970). அதைக் காண வாய்ப்பைப் பெறாத துர்அதிருஷ்டசாலியும் அவர்தான். கதையைத் தவிர கவிதை, மொழிபெயர்ப்பு, கட்டுரை, நாடகம், நாவல், பதிப்பு எனப் பல துறைகளிலும் அவர் தன் ஆற்றலைக் குறைந்த ஆயுளுக்குள் பதிவு செய்திருக்கிறார்.



கவிதையையும் மொழிபெயர்ப்பையும் கைப் பிடித்துக் கொண்டு தான் கு.அழகிரிசாமி இலக்கிய உலகத்திற்குள் நுழைந்தார். ஆனால் மொழிபெயர்ப்பைத் தொடர்ந்த அளவிற்குக் கவிதையைக் கவனிக்கவில்லை. தவிர அதைக் கைவிட்டுவிடவில்லை. கவிதைகளையும் அவ்வப்போது எழுதினார். ஆனால் அவரது சிறுகதையின் பேரொளியில் கவிதையின் ஒளி மின்மினியாகிவிட்டது. அவ்வளவுதான். அந்தப் பரவலாக அறியப்படாத கு.அழகிரிசாமியின் கவிதை முகத்தின் ஒரு சாயலை இச்சிறுகுறிப்பில் நாம் பார்க்கலாம்.

வல்லிக்கண்ணன் சொல்வதுபோல கு.அழகிரிசாமி கவிதை எழுதுவார் என்றே பலரும் அறியமாட்டார்கள். கு.அழகிரிசாமி கால நவீன எழுத்தாளர்களான புதுமைப்பித்தன், ரகுநாதன், கு.ப.ரா., ந.பிச்சமூர்த்தி, க.நா.சு., பின்னால் வந்த ஜெயகாந்தன், சுந்தர ராமசாமி எனப் பலரும் ஒவ்வொரு வகைமையில் ஆகச் சிறந்தவர்களாக இருப்பினும் கவிதையையும் அவர்கள் எழுதினர். அவ்வகையில் ஒருவராகவே கு.அழகிரிசாமியும் திகழ்கிறார். எனினும் அவர்களது கவிதை முகம் பிரகாசித்த அளவிற்கு இவரது வெளிப்படாமல் போய்விட்டது. எனினும் காலம் கடந்துவிடவில்லை.

கவிஞன் பிறப்பு: கு.அழகிரிசாமியின் முதல் கவிதை கலைமகளில் (1943) வெளிவந்தது. பிறந்த இடைசெவல் கிராமத்தில் எல்லோரும் அவரது ஆங்கிலப் புலமையையும் ஓவிய ஆற்றலையும் கண்டு மயங்கி நின்றபோது அவரது கவிதை ஆற்றலைக் கண்டு கொண்டவர் அவர் நண்பர் க.வ.கந்தசாமி செட்டியார் என்பவர். ஆண்டன் செக்காவையெல்லாம் அறிமுகப்படுத்துகிற அளவுக்கு அமைந்த கிராமத்து நண்பர்களுள் அவரும் ஒருவர்.

பெரும்பாலும் தன் நூல்களை எவருக்கும் சமர்ப்பிக்கும் வழக்கமில்லாத கு. அழகிரிசாமி தன் தாய்க்கும் இந்த நண்பருக்கும் தாம் நூலைக் காணிக்கையாக்கியிருந்தார். தன் முதல் கட்டுரை நூலான "இலக்கியச்சுவை"யை (1955) அமரர் க.வ.கந்தசாமி செட்டியாருக்கு அழகிரிசாமி அர்ப்பணித்திருந்தார். பாரதியைப் போல கவிதையில் கு.அழகிரிசாமி மிளிர்வார், உயர்வார் என்று அந்நண்பர் நினைத்து ஊக்கமளித்தாராம். அழகிரிசாமிக்குள்ளிருந்த கவிஞனைக் கண்டு கொண்ட இன்னொருவர் டி.கே.சி. ஆவார். 1944 இல் திருச்சியில் நிகழ்ந்த வானொலியின் முதல் கவியரங்கில் கு.அழகிரிசாமியைத் தன்னுடன் பாட வைத்துள்ளார் டி.கே.சிதம்பரநாத முதலியார். அப்போது டி.கே.சி.க்கு வயது 62, அழகிரிசாமிக்கு 21. இக்கவியரங்கில் 'எழில்' என்கிற தலைப்பில் அவர் பாடிய கவிதையிலிருந்து ஒரு கண்ணி.

காதலுக்குத் துணையாகும், காணக் காணக்
கவிஞருக்கு நவம் நவமாய்க் கருத்தைப் பெய்யும்
நீதி தரும் மரணமதும் அஞ்சச் சற்று
நிலை கலக்கும் தன் மயக்கில் தாய்வார்க்கெல்லாம்

சாதல் எனும் பயம் போக்கும் யார்க்கும்.....
தரணியெங்கும் அரங்காக அடித்துள்ளம்
ஏதுனது பெருங்கருணை எழிலே! எங்கும்
இருகரத்தால் தழுவுவதற்கோர் உருவம் காள்வாய்!

கவிதை வளர்ப்பு: தான் பார்த்த அரசு வேலையை ராஜினாமா செய்து விட்டு சென்னையில் பிரசண்ட விகடனில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார் கு.அழகிரிசாமி. அதுவே அவரது முதல் பத்திரிகைப் பணி. தொடர்ந்து 'ஆனந்த போதினி'யிலும் வேலை செய்தார். இப்பத்திரிகைகளில் மிகுதியும் உரைநடையைக் கையாள வேண்டிய நிலையில் கவிதைக்காதலி ஓர் ஓரமாக நின்றுவிட்டாள் போலும். அழகிரிசாமியின் கவியாற்றலை மடைமாற்றி உரைநடைப் பக்கம் முழுவதும் திருப்பி விட்டது 'பிரசண்ட விகடன்' ஆசிரியர் நாரண துரைக்கண்ணன் அவர்கள் எனலாம். இருப்பினும் அழகிரிசாமி தன் கவிதைக் குழந்தையை ரகசியமாக வளர்த்துக் கொண்டே வந்தார்.

புனைபெயர்: ஜி.செல்லையா, ஜி.ஸி, கு.அ., அ.ராதா, அ.சீதா, இடைசைப்புலவன் என்னும் செல்ல, சுருக்க, மகள், மனைவி, புனைபெயர்களில் உரைநடைகளை எழுதிவந்த கு.அழகிரிசாமி கவிதை எழுத இரண்டு புனைபெயர்களையே பயன்படுத்தினார். குவளை, தார்க்கோல் என்பன அவ்விரு புனைபெயர்கள். "குவளை" என்கிற பெயரையே தொடக்கத்திலிருந்து பெரும்பான்மையாகப் பயன்படுத்தினார்.

சில கவிதைகள்: வை.கோவிந்தன் நடத்திவந்த 'சக்தி'யில் வெளிவந்த சாரல் என்னும் ஒரு கவிதையின் சிறு துளி பின்வருவது. குயில் பாட்டின் தொனியை மனத்துக்குக் கொண்டு தருகிறது இந்த நற்கவிதை.

"ஊரெல்லாம் சோர்ந்து உறங்கிடினும், சந்திரனார்
பாரெல்லாம் காணப் பவனி வரும் காட்சியதை
சாரல் துளி மறைக்கும் சகியாக் கொடுமையினை
நேரம் பலவாக நெஞ்சுருகப் பார்த்திருப்பேன்."

பின்னர் காந்தி மறைந்த 1948ஆம் ஆண்டில் அவர் பிறந்த நாளன்று சென்னை வானொலி ஏற்பாடு செய்த முக்கியமான கவியரங்கில் அழகிரிசாமி கவிதை பாடினார்.

"போர் தொடுத்து பகைவர் தம்மைக் கொன்று சாடி
புவி கலக்கும் படை பலத்தைக் கொண்டானில்லை;
நீரகத்தும் நெருப்பகத்தும் நடந்தானில்லை;
நிட்டையில்லை; நினைத்ததெலாம் பலிக்கச் செய்ய
மார்பகத்தில் கவசமில்லை ; ஆயின் இந்த
மனித குலம் தலை வணங்கும் வெற்றி பெற்றான்.
ஏர் நடத்தும் வேளாளன் போலே வாழ்ந்தான்;
இறவாத புகழடைந்தான், காந்தி யண்ணல்."

கவியரங்கத் தலைமையை கவிஞர் ஒருவரே வகிக்கும் வழக்கம் தொடங்காத அக்காலத்தில் அப்போதைய அமைச்சர் பக்தவத்சலம் தலைமையில் அக்கவியரங்கம் நடைபெற்றது. பின்னரும் ஒருமுறை வானொலியில் (1959) நிகழ்ந்த பொங்கல் கவியரங்கம் அமைச்சர் பக்தவத்சலம் தலைமையில் நடைபெற்றது. அதிலும் தங்கம்மாள் பாரதி, கண்ணதாசன் போன்றோரோடு 'புதிய கதிர்' என்ற தலைப்பில் கு. அழகிரிசாமி கவிதை பாடினார்.

இரட்டையர் கவிதை: தொடர்ந்து வானொலியில் பாடி வந்ததைக் குறிப்பிடுவதால் 'நிலையக் கவிஞர்' போலும்! என நினைத்துவிட வேண்டாம். 1949 இல் கோயமுத்தூரில் தொழிலதிபரும் அறிவியல் அறிஞருமான ஜி.டி.நாயுடு மாளிகையில் கவிஞர் ச.து.சு.யோகியார் தலைமையில் நடந்த பாரதி விழாவிலும் கவிதை பாடினார் கு.அழகிரிசாமி.

இக்கவியரங்கில் ரகுநாதனுடன் இணைந்து கவிதை புதிய வடிவம் எடுத்தது. புதுமைப்பித்தன் பரம்பரைக் கொடியில் பூத்ததாகத் தொடக்கத்தில் குறிப்பிட்டிருந்த இன்னொரு வன்மலரான ரகுநாதனுடன் இரட்டையராகப் பாடிய கவிதை அது. "பரஸ்பரம் இருவரும் ஒருவர் அடி எடுத்துக் கொடுக்க மற்றொருவர் முடித்துக் கொண்டு வருவார். முதல் பாட்டின் முதல் இரண்டு அடிகளை ரகுநாதன் பாடுவார், பின்னிரண்டு அடிகளையும் அடுத்த பாட்டின் முதல் இரண்டு அடிகளையும் கு. அழகிரிசாமி பாடுவார். அதைத் தொடர்ந்துவரும் நான்கு வரிகளை ரகுநாதன் பாடுவார்." இந்த முறையில் ஒவ்வொன்றும் நான்கடிகள் கொண்ட 19 கண்ணிகளை இருவரும் அக்கவியரங்கில் இணைந்து பாடினர். "இரட்டையர்" பாடிய கவிதையின் பத்து வரிகளை நாம் இங்குச் சுவைக்கலாம்.

".....சொல்லுக்கு அழகேற்றும்
அழகிரியான் அணி செய்யக் கேட்டிடுவீர்

பழகு தமிழ் எம்மிரட்டைப்பா.
ராவிலே கண் விழித்து ரயிலில் வரும்போது
பாவிலேயே கண் வைத்துப் பாடினோம் நாவிலே
வந்து சரஸ்வதியார் வாழாக் கலியுகத்தில்
சொந்தக் கவியாய் துணிந்து.
காட்பாடி ஜங்ஷனிலே காப்பியின்றி டீ குடித்து
ராப்பாடியாய் நாங்கள் ராத்திரியில் பாப்பாட
எதுகையோடு போராடி எதிர்க்கட்சி தானாடி
இதுவுரைத்தோம் கேட்பீர் இனி.”

தந்திருக்கும் பாடலில் முதல் நான்கடிகள் ரகுநாதனும் பின்னான்கு அடிகள் அழகிரிசாமியும் பாடியவை. தொடரும் இரண்டடிகள் ரகுநாதன் பாடியவையாகும். ‘திருச்சிற்றம்பலக் கவிராயர்’ என்ற புனைபெயரில் புகழ்பெற்ற கவிஞராக மலர்ந்தவர் ரகுநாதன். ஆனால் கு.அழகிரிசாமியின் கவிதையாற்றலோ மிகப்பலர் அறியாவிடினும் குடத்திலிட்ட விளக்காக ஒளிர்ந்து கொண்டுதானிருந்தது.

இப்படி கு.அழகிரிசாமியும் ரகுநாதனும் இணைந்து பல இடங்களில் பாடியிருக்கக்கூடும்.

புதுக்கவிதை: கு.அழகிரிசாமியின் கவிதைகள் மரபுக்கவிதைகள்தாம். எனினும் பழகு தமிழில் அமைந்தவை; புதுமையானவை. 1960களின் இறுதியில் ‘எழுத்து’ பத்திரிகையின் வழி புதுக்கவிதை பிறந்தபோது அதை மறுத்தவராக கு.அழகிரிசாமி இருந்தார். மரபைப் பேணும் மனத்தவரான கு.அழகிரிசாமி இலக்கணமும் இலக்கிய உணர்வும் இல்லாத கவிதையுமல்லாதவை எனக் கூறி புதுக்கவிதை என்ற பெயரிலானவற்றை மறுத்தார்.சி.சு.செல்லப்பா இதற்காக கு.அழகிரிசாமியைக் கண்டித்தும் எழுதினார். மதமதப்பாய் வளர்ந்த புதுக்கவிதைக்கன்னியைக் காணாமலேயே கண்மூடிவிட்டது அவருக்கு.இருந்திருந்தால் கருத்தை அவர் மாற்றிக்கொண்டிருக்கக்கூடும்.

சாகித்தியங்கள்:

1940கள் காலத்தின் பெரும்பான்மை எழுத்தாளர்கள் போல கு.அழகிரிசாமியும் இசையறிவு மிக்கவர். அவருடைய ஊர்க்காரரும் எழுத்தாளருமான கி.ராஜநாராயணனும் இசையார்வம் மிக்கவர். இசைக்கலைஞர்கள் காருகுறிச்சி அருணாச்சலம், விளாத்திகுளம் சுவாமிகள் ஆகியோர் இவர்களின் இசை ஆதர்சங்கள். இசைச் சூழலும் இசையறிவும் கலந்திருந்த நிலையில் கு.அழகிரிசாமி சாகித்தியங்கள் எழுதும் ஆற்றலையும் உடன் வளர்த்துக் கொண்டே வந்திருக்கிறார். இதற்கான ஆதாரங்கள் அவரது நாட்குறிப்பிலும் கிடைக்கின்றன.

ஆனால் எழுதிய சாகித்தியங்களைத் தொகுத்து வைக்கவோ பத்திரப்படுத்தவோ இல்லை எனத் தெரிகிறது. கு.அழகிரிசாமி திடீரெனத் தன் 47 ஆவது வயதில் 1970 இல் அகால மரணம் அடைந்து விட அவர் மனைவி இசைக் கலைஞர் சீதாலட்சுமி அம்மையார் கு. அழகிரிசாமி எழுதிய சாகித்தியங்களைத் தேடினார். அவரது பால்யகால நண்பர் கி.ராஜநாராயணனிடமும் அவர் கேட்டிருக்கக் கூடும். அதைக் குறித்து கி.ரா. எழுதிய பதில் கடிதத்திலிருந்து (04.04.1971) சில வரிகள்:

“வீடெல்லாம் தேடிப் பார்த்ததில் அழகிரிசாமியின் சாகித்தியங்கள் ஐந்து கிடைத்தன.

யார் எனக்குத் தூது சொல்லுவார் (சண்முகப்பிரியா), போய் வருவேன் என் சுவாமி (நடபைரவி), தூது சொல்ல யாரும் இல்லையே (சஹானா), ராசாதி ராசர் மெச்சும் (ஆனந்த பைரவி), வருவதற்கென்ன கோபமோ (ஹிந்தோளம்).

இன்னும் தேடிப் பார்த்தால் மற்றவைகளும் கிடைக்கக் கூடும்”

என்று அந்தக் கடிதம் தொடர்ந்து நம்பிக்கையூட்டிச் செல்கிறது. மேலக்கல்லூர் ஆழ்வாரப்பப் பிள்ளையின் பதங்களில் புதுமைப்பித்தன் போலவே அழகிரிசாமிக்கும் ஆர்வமுண்டு. எனினும் முழுவடிவம் கிடைக்கவில்லை. அதனால் மேற்கண்ட அழகிரிசாமி எழுதிய சாகித்தியங்கள் பதங்களா என்று அறிய இயலவில்லை.

சொந்த சாகித்தியங்கள் தவிர எழுதப்பட்ட பாடல்களை ‘ஸ்வரப்படுத்தி’யுமுள்ளார் கு.அழகிரிசாமி. குற்றாலக்குறவஞ்சியின்’ வாகன கண்டு உருகுதையோ’ என்ற குற்றாலக் குறவஞ்சிப் பாடலை அவர் ஸ்வரப்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

மொழிபெயர்ப்பு: ‘கு.அழகிரிசாமி நிறைய கவிதைகள் எழுதினார். சொந்தமா

எழுதினாருங்கறது ரொம்ப பேருக்கு இப்போ தெரியாது' என்ற வல்லிக்கண்ணனின் குறிப்பின் இரண்டாவது வரியை, பலரது கவிதைகளை அவர் மொழி பெயர்த்தார் என்பதாகப் புரிந்துகொள்ளலாம். உரைநடையில் பல நூல்களை மொழிபெயர்த்து வெளியிட்ட கு.அழகிரிசாமி நூல் அளவு கவிதைகளை மொழிபெயர்க்கவில்லையாயினும் தேவைக்காகச் சில கவிதை மொழிபெயர்ப்புகளையும் செய்துள்ளார்.

ஆப்ரஹாம் கூலி (1618–1667) என்ற இங்கிலாந்துக் கவிஞரின் 'விருப்பம்' (The Wish) பாடலைத் தமிழாக்கியுள்ளார் கு.அழகிரிசாமி. நகர வாழ்க்கையின் பரபரப்பையும் இரைச்சலையும் நெருக்கடியையும் சூதுவாதுகளையும் நயவஞ்சகங்களையும் சகிக்கமுடியாமல் அதைவிட்டுத் தப்பி ஓடிப்போய் வசிப்பதற்காகப் பாரதியாரைப்போல காணி நிலம் கேட்டவர் அவர்.

பேயினைப்போலப் பறக்கும் இவ்வையத்தின் /
பெற்றியை நன்கு உணர்ந்துவிட்டேன். /
நோயினைப் போலும் இவ்வாழ்வினில் காலத்தை/
நோவதை இன்று வெறுத்துவிட்டேன்.

என்றந்தப் பாடல் நீளும்.

இதைப்போலவே, உலக வாழ்க்கையையே சிறைவாசம் போலக் கருதி அதிலிருந்து மீள ஆசைப்படும் ஒரு ஜீவனின் தவிப்பை மைக்கேல் லெர்மாந்த்கோவ் (1814–1841) என்ற கவிஞர் பாடியுள்ளார். அந்தக் கவிதையின் சில வரிகளை கு.அழகிரிசாமியின் மொழிபெயர்ப்பில் படியுங்கள்.

சிறையின் கதவைத் திறந்துவிடுங்கள்!/
பகலொளிதனையான் பார்த்திட விடுங்கள்!/
கருநிறக் கண்ணாள் கன்னிகை ஒருத்தியும்/
கரும்பிடர் கொண்ட கதியினில் சிறந்த/
குதிரை ஒன்றினையும் கொடுங்கள்! யான் போய்ப்/
பசும்புல் படர்ந்து பரந்தவெளியினில்/
பாய்ந்திடும் புரவிமேல் பயணம் செய்தே/
ஓர் முறை இன்னும் உற்று நின்(று)அந்த/
வேற்றுநிலத்தை வியன்மிகு வாழ்க்கையை/
சுதந்திரம் தன்னை யான் காணவே விடுங்கள்!

என்பதாக அக்கவிதை' விடுங்கள் விடுங்கள்' என்று ஓடிப்போகத் தவிக்கும்.

'கனவாய்க்கரைந்த கருப்புக்கன்னி' என்ற தலைப்பிட்டுவிட்டு, அதைத் தவிர மற்றெல்லாம் இருக்கிறது; கட்டுரையும் முடிவை நெருங்கிவிட்டதே என்று வாசகர்கள் நினைக்கக்கூடும். அதைச் சொல்லிக் கட்டுரையை முடித்துவிடுகிறேன்.

1952இல் 'அழகிரிசாமி கதைகள்' என்று அவரது பெயரிலேயே வெளிவந்தது. அதில் அடுத்து வெளிவரவுள்ள நூல்கள் பட்டியல் இருந்தது. அது வருமாறு:

"ஏமாந்தவள் (நாவல்), புதிய வாழ்க்கை (நாவல்), கண்ணனும் கானமும் (கட்டுரைகள்), கருப்புக்கன்னி (கவிதைகள்), குட்டிக் கதைகள் (தொகுப்பு). என அந்தப் பட்டியல் இன்னுமிரண்டு நூல்களுடன் அமைந்துள்ளது. இந்தக் கனவுப் பட்டியல் வெளியானபோது அவருக்கு வயது 29. அப்போதே ஆறு நூல்கள் அவருடையவை வெளிவந்துவிட்டிருந்தன.

ஆற்றலை நிரூபித்தவராகவும் வலிமையுள்ளவராகவும் இருந்தும் கனவில் வந்த 'கருப்புக் கன்னி' (கவிதைகள்) நனவாகவே இல்லை. அதற்குள் தமிழின் மேதைகள் பலரைப்போல, பாரதி, புதுமைப்பித்தன் வரிசையில் கு.அழகிரிசாமியும் 47 என்ற இளவயதில் அகால மரணத்தைத் தழுவினார். கருப்புக்கன்னியும் கனவாய்க் கரைந்தாள்.

வசன இலக்கியத்தின் சொத்தாகத் திகழ்ந்த கு.அழகிரிசாமி கவிதை இலக்கியத்திலும் சாதனைகளை மறைவாகச் செய்திருக்கிறார். அதன் ஓரிரு துளிகளையே இங்குத் தேடிச் சுட்டியிருக்கிறேன். வாசகருக்கு, கண்ணில் காணா நேயருக்கு, நேரில் விளங்கும் அன்பருக்கு, இசையறிந்த இசைஞர்க்கு, அயல் மொழியறியா கவிதை சுவைஞருக்கு எனப் பலதரப்பினரையும் கருத்தில் கொண்ட விதத்தில் அமைந்திருந்தது அழகிரிசாமியின் கவிதைக்கலை.

அவரது நூற்றாண்டிலாவது கு.அழகிரிசாமியின் ஆற்றலின் பன்முகங்களும் வெளிப்பட்டு மலரட்டும்.



தற்காலத் தமிழ்க் குழந்தை இலக்கியமும் புனைவுக் கதையாடலும்

உதயசங்கர்

**“குழந்தைகள் பேசத்தொடங்குமுன் பாடுகிறார்கள்.
குழந்தைகள் எழுதத்தொடங்குமுன்
ஓவியம் வரைகிறார்கள். குழந்தைகள் நடக்கத்
தொடங்குமுன் ஆடுகிறார்கள்.
மனித உணர்வுகளின் அடிப்படையே கலை தான்.”**

- பிலிசியா ரஸாத்

குழந்தைமையின் அற்புதம்

பிறந்ததிலிருந்தே குழந்தைகளின் வளர்ச்சி அவர்களுடைய படைப்பூக்கத்தின் உந்துதாலேயே நிகழ்கிறது. இந்தப் படைப்பூக்கமே ஒவ்வொரு கணமும் அவர்களை கற்றுக்கொள்ளும் வலிமையைத் தருகிறது.

குழந்தைகளின் கலையுணர்வு கட்டுப்பாடுகளற்றது. எந்த நோக்கங்களுமற்றது. அதற்கு யாரையும் திருத்தவேண்டும். தன்னை முன்னிறுத்தவேண்டும் என்ற இலட்சியங்களில்லாதது. எந்தத் தர்க்க விதிகளுக்குள்ளும் பொருந்தாது. காலத்தை மறுதலிப்பது. அந்தந்தக் கணத்தை நித்தியமாக்குவது. ஏனெனில் குழந்தைகளின் இறுதி இலட்சியம் மகிழ்ச்சி மட்டுமே. தன்னுடைய ஒவ்வொரு செயல்பாட்டிலும் மகிழ்ச்சியைத் தவிர வேறெதையும் எதிர்பார்ப்பதில்லை. அந்த மகிழ்ச்சிக்காக மட்டுமே எழுந்து விழுகிறது. கீழே சிந்திச் சிதறுகிறது. உருண்டு புரள்கிறது. கிறுக்கித் தள்ளுகிறது. மகிழ்ச்சியின் வழியாகவே தன்னை உணர்கிறது.

இந்த உலகத்தின் மிகச்சிறந்த புனைவியலாளர்கள் குழந்தைகள் தான். மொழியைக் கற்றுக்கொள்ளத் தொடங்கும்போதே அவர்கள் கவிதை எழுதத்தொடங்கி விடுகிறார்கள். தான் அறிந்த வார்த்தைகளை வைத்துக்கொண்டு விளையாடுகிறார்கள். அந்த விளையாட்டின் வழியாக இந்த உலகத்தை வேறொன்றாகப் பார்க்கிறார்கள். அப்படி விசித்திரமாகப் பார்ப்பதைச் சொல்கிறார்கள். அதுதான் அவர்களுடைய கலை.

திருத்தி வடிவமைக்கப்பட்டு இலக்கண விதிகளுக்கு உட்பட்டு, சிலபல இலட்சிய நோக்கங்களுக்காக உருவாக்கப்படுகிற பெரியவர்களின் கலைப்படைப்புகளுக்கும் அவர்களுடைய கலைப்படைப்புகளுக்கும் பாரதூரமான வித்தியாசம் இருக்கும். ஏனெனில் எந்த நோக்கமுமற்று தன்னை வெளிப்படுத்தலே குழந்தைகளுடைய கலை என்பதால் அந்தக் கலைப்படைப்புகள் சர்வ சுதந்திரமானதாக இருக்கின்றன.

அப்படிப்பட்ட குழந்தைகளின் படைப்புகள் இந்த உலகைக் குறித்த அவர்களுடைய மனதில் ஏற்பட்ட பதிவுகள், என்பதால் மிகமுக்கியமானவை. அவற்றுக்கு எந்தச் சார்பும் கிடையாது. எனவே குழந்தைகள் படைக்கும்போது தன்னை மட்டுமல்ல இந்த உலகத்தைப் படைக்கிறார்கள்.

எல்லாக் குழந்தைகளும் படைப்பாளிகள் தான். அவர்களுடைய படைப்பூக்கத்துக்குக் கிடைக்கிற பாராட்டும் உற்சாகமும் அவர்களுடைய ஆளுமை உருவாக்கத்தில் மிகப்பெரிய பங்கு வகிக்கும் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

பெரும்பாலான பெரியவர்கள் ஒரு குழந்தையின் இயல்பான படைப்பூக்கத்தில் தலையீடு செய்கிறார்கள். தாங்கள் அறிந்த வகையில் தங்களுடைய நோக்கத்துக்காக, ஆசைக்காக, இலட்சியத்துக்காக, திருத்துகிறார்கள். பள்ளிக்கூடத்திலோ, விழாக்களிலோ கிடைக்கிற ஒரு எவர்சில்வர் தட்டுக்காக குழந்தைகளின் சுயமான படைப்பூக்கத்தைச் சிதைக்கிறார்கள். எனவே தான் போட்டிகளில் கலந்து கொள்ளும் குழந்தைகள் தங்களுடைய படைப்பூக்கத்தில் விளைந்த கதைகளைச் சொல்லாமல் யாரோ சொல்லிக்கொடுத்த நீதிநெறிக்கதைகளைச் சொல்கிறார்கள்.

யாருக்குத் தேவை நீதிநெறிகள் என்று யோசித்துப் பார்த்தால் பெரியவர்களுத்தான் தேவைப்படுகிறது. அனைத்து நீதிநெறிகளையும் தெரிந்து கொண்டே தான் பெரியவர்கள் இந்த உலகை சீரழித்து வைத்திருக்கிறார்கள் என்பதை வருத்தத்துடன் சொல்லவேண்டியதிருக்கிறது.

இயற்கை ஒவ்வொரு உயிரையும் படைப்பூக்கம் மிக்கவர்களாகவே படைக்கிறது.

குழந்தைகளின் படைப்பூக்கம் ஒரு மலையைப் போன்றது. ஒரு சிகரத்தைப்போன்றது. ஒரு காட்டாற்றைப் போன்றது. விரிந்த கடலைப் போன்றது. பெரியவர்கள் அதை உணர்ந்து கொண்டாலே போதும்.

குழந்தை இலக்கியமும் சமூகமும்

இன்னமும் தமிழில் குழந்தைகள் இலக்கியம் அவ்வளவாக கவனிக்கப்படவோ, வளர்ச்சியடையவோ இல்லை என்று சொல்லலாம். ஒருவேளை குழந்தைகளைப் பற்றிய சமூகத்தின் பார்வையே கூட அதற்குக் காரணமாக இருக்கலாம். குழந்தைகளை திறந்த குப்பைத்தொட்டிகளைப் போல அவர்களுடைய சக்திக்கு மீறிய விஷயங்களை அள்ளியள்ளி கொட்டிச் சேர்ப்பது நடக்கிறது.

இதனால் குழந்தைகளை அறிவாளிகளாக்கி விடலாம். அவர்கள் அறிவாளிகளாகி விட்டால் சமூகத்தில் வெற்றியாளர்களாகி விடுவார்கள் என்று பெற்றோர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அரசாங்கக் கல்விமுறையின் உண்மையான நோக்கம் பெற்றோர்களுக்குப் புரியவில்லை. எல்லாக் குப்பைகளையும் செரிக்க முடியாமல் திணறும் குழந்தைகள் முட்டாள் பெட்டிகளின் முன்னால் தங்களை இழந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்னொருபுறம் காட்டுமிருகங்களைப் பழக்குவதைப் போல பெற்றோர்களும் ஆசிரியர்களும் சமூகச்சூழலும், இணைந்து சமூகத்தின் அத்தனை பிறழ்வுகளையும் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்து வசப்படுத்துகிறார்கள். இவற்றுக்கு பழக மறுக்கும் குழந்தைகளைச் "சொன்னபடிச் சவுக்கு" கொண்டு அடித்து வன்முறையை ஆழ்மனதில் விதைக்கிறார்கள். வளர்ந்து வரும் இந்தக்குழந்தைகள் தாங்கள் எதிர்கொண்ட அவமானங்கள், ஏச்சுகள், அடி, உதைகள், ஏமாற்றங்கள், எல்லாவற்றையும் வளர்ந்தபிறகு சமூக சாராம்சத்தின் மீது திருப்புகிறார்கள்.

குழந்தைகளின் மெல்லுணர்வுகளை மதிக்கவோ, நல்லுணர்வுகளை வளர்க்கவோ,இந்த சமூகம் கிஞ்சித்தும் முயற்சிக்கவில்லை. ஏராளமான பெற்றோர்கள் குழந்தைகளை தங்களுடைய எதிர்கால வைப்பு நிதியாகவே நினைத்து வளர்க்கிறார்கள்.

இதுவரை வெளிவந்துள்ள குழந்தைகள் இலக்கியம் என்று சொல்லப்படுகிற படைப்புகளில் பெரும்பாலும் அறவுரைகள், அறிவுரைகள் நிறைந்துள்ளன. பெரியவர்கள் சமூகத்தில் ஒரு நாளும் கடைப்பிடித்திராத ஒழுக்க அறநெறிகளை குழந்தைகளிடம் போதித்து அவர்களை மனப்பாடம், பரீட்சை, மார்க்குகள் என்று மிரட்டி படைப்புகளில் சொல்லப்பட்ட நெறிகளுக்கு எதிராக அவர்களை மாற்றி விடுவதோடு வாசிப்பையும் அந்நியமாக்கி விடுகிறார்கள். பெரும்பாலான குழந்தைகள் தங்கள் பாட்டி தாத்தாக்களிடம் கேட்ட மரபார்ந்த வாய்மொழிக்கதைகளின் அற்புத உலகத்திலேயே வாழ்கிறார்கள்.

தமிழ் குழந்தை எழுத்தாளர்களும் புதிய கதையாடல்களை குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்த வேண்டிய அவசியத்தை அலட்சியப்படுத்தியே வருகிறார்கள். அறிவுத்துறை சார்ந்த குழந்தை இலக்கியம் வளர்ந்துள்ள அளவுக்கு புனைகதைகளில் வளர்ச்சியில்லை. புனைகதைகள் என்று சொல்லிக்கொண்டு வருபவை பெரும்பாலும் மலினமாக கூறியது கூறலாக புராண இதிகாசக்கதைகளின் சாதாரணப் பிரதியாகவே இருக்கின்றன. குழந்தைகளின் மனதுக்குகந்த, அவர்களை குதூகலப்படுத்தும் புனைகதைகள் மிகக்குறைவு.

எல்லாக் குழந்தைகளுமே சிறந்த புனைவியலாளர்கள், சிறந்த கதைசொல்லிகள், சிறந்த உரையாடல்காரர்கள், சிறந்த கேள்வியாளர்கள், சிறந்த விளையாட்டுக்காரர்கள், ஆனால் பெரியவர்கள் தங்களுடைய அறியாமையினால் இவற்றை அலட்சியப்படுத்தி அவர்களின் மேதைமையை முளையிலேயே அழித்து விடுகிறார்கள். தாங்கள் வாழ்க்கையைப் புரிந்து கொண்ட விதத்திலேயே குழந்தைகளை வளர்க்க நினைக்கிறார்கள். ஆனால் மாறிக்கொண்டேயிருக்கும் வாழ்க்கை குழந்தைகளுக்கு வேறுமாதிரியான படிமங்களைத் தருகிறது. இதனால் குழந்தைகள் சுதந்திரமானவர்களாக வளரும்போது ஏற்படக்கூடிய முரண்பாடுகளைப் பெரியவர்களும், சமூகமும், அதிகாரம் என்ற போர்வைக்குள் மறைத்து விடுகிறார்கள். பெரும்பாலான குழந்தைகள் ஆளுமை சிதைந்தவர்களாகவே வளர்கிறார்கள்.

குழந்தைகளின் உலகத்தையும் கூட வேகமாக மாறிவரும் அவர்களின் வளர்ச்சிக்கேற்ப பல அடுக்குகளாகப் பிரிக்கவேண்டியுள்ளது. மொழிப் பயிற்சியின் ஆரம்ப காலத்தில் அதாவது இரண்டு முதல் ஏழெட்டு வயது வரையுள்ள குழந்தைகளுக்கு எளிய சந்தப் பாடல்கள், எளிய உண்மைகளைச் சொல்லும் சிறிய கதைகள் என்றும், எட்டு முதல் பதினான்கு வயதுவரை சந்தமும் கவிதையும் கலந்த கருத்தான பாடல் மாதிரியான கவிதைகள், அற்புதங்களும் ஆச்சரியங்களும், விநோதங்களும் நிறைந்த புனைவுலகு நல்லுணர்வுகளை நெய்து பின்னிய வாசிப்புக்குச் சுகமான சாகசக் கதைகள் என்றும் பதினான்கு வயதுக்கு மேல் யதார்த்தமான வாழ்க்கையைச் சித்தரிக்கும் வாழ்க்கை மதிப்பீடுகள் பற்றிய பார்வையைப் பதியவைக்கும், புதிய கேள்விகளை எழுப்பும் படைப்புகள் என்றும் எளிய வரையறைகளைச் சொல்லலாம். இவை மேலும் ஆழ்ந்த சிந்தனைக்கும் விவாதங்களுக்கும் உட்படுத்தப்படவேண்டியவை.

தற்காலச் சிறார் இலக்கியம் - ஒரு பார்வை

தமிழில் சிறார் இலக்கியத்தின் வரலாறு மிகச்சமீபமாகத் தான் தொடங்குகிறது. கடந்த நூற்றாண்டின் முதல் பாதியில் தான் சிறார்களுக்கான இலக்கியம் பற்றிய ஞானத்துடன் சிறார் இலக்கியத்தை கவிமணி தேசியவிநாயகம் தொடங்கி வைத்தார். அதற்கு முன்பு பாரதி எழுதிய சில பாடல்கள் எல்லாம் அவருடைய குழந்தைகளுக்குச் சொன்ன அறிவுரைகள் தான். கவிமணி தொடங்கி அழ.வள்ளியப்பா வரையிலான காலத்தை சிறார் இலக்கியத்தின் முதல் காலகட்டம் என்று கொள்ளலாம். ஒரு புதிய இலக்கிய வகைமை உருவாகி வளர்கையில் ஏற்படும் அபரிதமிதமான வளர்ச்சியும், இந்தியாவின் சமூகப் பொருளாதார, அரசியல் சூழல்களின் அன்றாட மாற்றங்களும், கல்விப்புலத்தில் நடந்த மாற்றங்களும், சிறார் இலக்கியத்தை மிக வேகமாக வளர்த்தன.

அதுமட்டுமல்லாமல் அத்தனை ஆண்டுகளாய் சமூகத்தில் நிலவியிருந்த நிலப்புரபுத்துவ மதிப்பீடுகள் மாறிக் கொண்டிருந்த காலம். அதுவரை ராஜாக்களின் மீதிருந்த விசுவாசம்,

பக்தி, நம்பிக்கை, அர்ப்பணிப்பு, தியாகம், ஆகியவையே முதன்மையான கருப்பொருளாக இருந்த நிலைமை, அதாவது பஞ்சதந்திரக்கதைகள், பீர்பால் கதைகள், தெனாலி ராமன் கதைகள், இதிகாசக் கதைகள், புராணங்கள், முல்லாக்கதைகள், பைபிள் கதைகள், என்று சிறார்களுக்கு ஒழுக்கத்தையும் நன்னெறிகளையும் போதிப்பதற்காகவே வாய்மொழியில் சொல்லப்பட்ட மற்றும் எழுதப்பட்ட கதைகளே சிறார் இலக்கியம் என்று சொல்லப்பட்டது. இன்றும் அந்த நம்பிக்கை இருக்கிறது.

தாங்கள் ஒருபோதும் முழுமையாகக் கண்டிராத ஒரு தேசத்தைப் பற்றியும் தேசியத்தைப் பற்றியும் அவை உருவாக்கப்போகிற நவீன மாற்றங்களைக் குறித்துமான கனவும் நனவுமான படைப்புகளே தமிழ்ச்சிறார் இலக்கியத்தின் துவக்கமாகவும் இருந்தது. தாயின் மணிக்கொடி பாரீர் என்ற பாடல் அதற்கு முன்பு ஒரு போதும் தோன்றியிருக்க வாய்ப்பில்லை. சமூகமாற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அந்தக் காலகட்டத்தில் ஏராளமான சிறார் எழுத்தாளர்கள் உருவானார்கள்.

கவிமணி, அழ.வள்ளியப்பா, பெ.தூரன், ரேவதி, வாண்டுமாமா, தம்பி சீனிவாசன், கோ.மா.கோதண்டம், பூவண்ணன், நமச்சிவாயம் முதலியார், மயிலை சிவமுத்து, மணி, திருநாவுக்கரசு, மு.வ.கூத்தபிரான், தெய்வசிகாமணி, மாயூரன் ம.இல.தங்கப்பா, கமலவேலன், ஆ.செல்லக்கணபதி, ஜோதிர்லதா கிரிஜா, கே.ஜெயலட்சுமி, பொன்னம்மாள், விமலாரமணி, எஸ்.லீலா, சாந்தலட்சுமி, என்று அந்த காலகட்டத்தில் முன்னூறுக்கும் மேற்பட்ட சிறார் எழுத்தாளர்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

குழந்தை எழுத்தாளர் சங்கம் என்ற ஒரு அமைப்பு அழ.வள்ளியப்பாவைத் தலைவராகக் கொண்டு, 1950 ஆம் ஆண்டு தொடங்கியது. அந்த சங்கத்தின் வெள்ளிவிழா கொண்டாட்டத்தில் 1975ஆம் ஆண்டு இருநூறு நூல்கள் வெளிவந்தன.

அழ.வள்ளியப்பாவின் மறைவுக்குப் பிறகு குழந்தை எழுத்தாளர் சங்கம் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து போய் விட்டது.

1840இல் வெளியான பாலதீபிகை என்ற சிறார் இதழே சிறார் இதழியல் வரலாற்றில் முதல் இதழாகும். 1947 முதல் 1955 ஆம் ஆண்டு வரை கிட்டத்தட்ட ஐம்பது சிறார் இதழ்கள் வெளிவந்தன. கண்ணன், அணில், கரும்பு, அம்புலிமாமா, அல்வா, மாம்பழம், கோகுலம், பூந்தளிர், போன்ற இதழ்கள் வெளிவந்தன. ஒரு சில இதழ்கள் 50,000 பிரதிகள் வரை விற்பனையாகின.

எண்பதுகளுக்குப் பிறகான ஆங்கிலக்கல்வி மோகம், மெட்ரிக் பள்ளிகளின் எழுச்சி, செயல்படாத பள்ளி நூலகங்கள், பெற்றோர்கள் மற்றும் சமூகத்தின் பார்வையில் ஏற்பட்ட மாற்றம் சிறார் இலக்கியத்தை மிகக்கடுமையாகப் பாதித்தன. அதனால் சிறார் எழுத்தாளர்களின் எண்ணிக்கையும் அதன் தரமும் வீழ்ச்சியைச் சந்தித்தன. மிகப்பெரும் தேக்கநிலையில் சிறார் இலக்கியம் இருந்தது.

உலகமயமாக்கல் ஒரே நேரத்தில் அதிநவீன பண்பாட்டுக்கூறுகளை அறிமுகப்படுத்தும் போதே வேர்களைத் தேடும் அடையாள அரசியலையும் அதிகப்படுத்தியது. அதன் விளைவாக ஒரு புதிய தலைமுறை இளம் பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கான கதைகளைத் தேடத் தொடங்கினார்கள்.

2000 ஆம் ஆண்டிலிருந்து உலகளாவிய சிறார் இலக்கிய நூல்களின் மொழிபெயர்ப்பு, மலையாள நூல்களின் மொழிபெயர்ப்பு, ஆகியவை தமிழ்ச்சிறார் இலக்கியத்தில் முக்கியமான மாற்றங்களை உருவாக்கின. ஆயிஷாநடராசனின் ஆயிஷா என்ற நூல் பெரிய அதிர்வை ஏற்படுத்தியது.

பேரா.ச.மாடசாமியின் எனக்குரிய இடம் எங்கே நூலும் கல்விப்புலத்தில் புதிய சிந்தனைகளைத் தூண்டியது. கிஜுபாய் பகேகேவின் பகல்கனவு, டோட்டாசானின் ஜன்னலில் ஒரு சின்னஞ்சிறுமி, ஆலிசின் அற்புத உலகில், குட்டி இளவரசன், போன்ற நூல்களை வாசித்த புதிய தலைமுறையிலிருந்து புதிய எழுத்தாளர் படையொன்று புறப்பட்டிருக்கிறது.

நவீன தமிழ்ச்சிறார் இலக்கியம் இரா.நடராசனின் ஆயிஷாவிலிருந்து தொடங்குகிறது எனலாம். அதற்கு முன்னால் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில முயற்சிகள் இருந்தாலும் அதிகக் கவனம் பெறவில்லை. சமகாலச் சமூகத்தில் சிறார்கள் எதிர்கொள்ளும் கற்பித்தல் முறைமை அடக்குமுறை, கல்விக்கூட அடக்குமுறை, அதிகாரத்தின் அடக்குமுறை,

பாலியல் சீண்டல், பாலியல் வன்முறை, சாதிய வேறுபாடுகள், சூழலியல் சார்ந்த பிரச்சினைகள், பாலினப்பாகுபாடுகள் சார்ந்த பிரச்சினைகள் என்று ஏராளமான கருப்பொருள்களை முன்வைத்து புனைவுகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

யெஸ்.பாலபாரதியின் மரப்பாச்சி சொன்ன ரகசியம் பாலியல் சீண்டல் குறித்த விழிப்புணர்வைச் சிறார்களிடம் ஏற்படுத்துகிற புனைவு. விஷ்ணுபுரம் சரவணன் எழுதிய நீலப்பூ, கயிறு, போன்ற நாவல்களில் சாதியம் குறித்த விவாதத்தைச் சிறார்களிடம் ஏற்படுத்துகின்றன. விழியனின் மலைப்பூ அரசுப்பள்ளிகளின் நிலைமையையும் நமது கல்விமுறையின் போதாமையையும் எடுத்துரைக்கிற புனைவு. உதயசங்கரின் ஆதனின் பொம்மை சிந்துசமவெளி, கீழடி காலவாழ்க்கையை சிறார்களுக்குக் கடத்துகிற முயற்சி எனலாம். கோ.மா.கோ.இளங்கோவின் சஞ்சீவி மாமா ஒரு சிறுவனுக்கும், துப்புரவுத் தொழிலாளிக்கும் இடையிலுள்ள உறவைப் பற்றிப் பேசும்போதே சமூகத்தின் பாகுபாடான நிலைமைகளைக் கேள்வி கேட்கிறது.

சூழலியலாளர். ஆதிவள்ளியப்பன், இளையோருக்கு மார்க்ஸ், வீரம் விளைந்தது என்ற நூல்களையும், சூழலியலை சிறார்களுக்கு அறிமுகப்படுத்துகிற அறிவியல் நூல்களையும் எழுதியுள்ளார். சூழலியலாளர் நக்கீரன் பசுமைப்பள்ளி என்ற புனைவின் மூலம் தமிழ்நிலத்தின் ஐந்திணைகளை அறிமுகப்படுத்துகிறார். கோவை சதாசிவம் யானை, கழுதை, போன்ற காணுயிர்களின் முக்கியத்துவம் குறித்தும் எழுதியிருக்கிறார். இந்தக் காலகட்டத்தில் பெண்களும் சிறார் இலக்கியத்தில் தடம் பதித்திருக்கிறார்கள். சாலை செல்வம் மொழிபெயர்த்த யாரேனும் இந்த மௌனத்தைத் தகர்த்திருந்தால் – கமலா பாசின் நூல் நிறைய விவாதங்களுக்கும் உரையாடல்களுக்கும் வழிவகுத்தது. எழுத்தாளர். ஷாஜகான் மொழிபெயர்த்த, கனவினைப் பின்தொடர்ந்து த.வெ.பத்மா வின் நூல் சிறார்கள் வாசிப்பதற்கான வால்கா முதல் கங்கைவரை என்று சொல்லலாம். கதைசொல்லி சரிதாஜோவின் மந்திரக்கிலுகிலுப்பை சூழலியல் சார்ந்த புனைவாகவும், சர்மிளாவின் எவஞ்சொன்னது ராஜான்னு என்ற சிறார் கதை நூலும், முக்கியமான வரவுகள்.

சுந்தர் சருக்கையின் சிறார்களுக்கான தத்துவம் என்ற நூல் ராமாநுஜம், த.ராஜன் ஆகியோரின் மொழிபெயர்ப்பில் வெளியானதும், காஞ்சனா அய்லய்யாவின் பானை செய்வோம், பயிர் செய்வோம் என்ற நூலும் மிக முக்கியமான நிகழ்வுகள்.

அத்துடன் கொரோனா காலம் ஏராளமான கதைசொல்லிகள் உருவான காலமும் கூட. வனிதாமணி, சரிதாஜோ, சர்மிளா, கவிதா அத்தை, ரம்யா, வித்யா, நாறும்பூநாதன், மகாராஜன், போன்றவர்கள் குழந்தைகளுக்குக் கதைகள் சொன்னார்கள். கதைகளைக் கேட்ட சிறார்கள் கதைகளை எழுதத் தொடங்கிய அதிசயமும் நடந்தது. ஐந்து வயது மகஸ்ரீ, கதைகள் எழுதினார். ஆறுவயது ரமணா நாவல் எழுதினார், பத்துவயது மீனா கதைகள் எழுதினார். பத்து வயது ஸ்ரீராம் டைரிக்குறிப்பு எழுதினார். பனிரெண்டு வயது ரமணியின் கதை மகாராஷ்டிர அரசின் தமிழ்ப்பாடப்புத்தகத்தில் வெளியானது. பதினைந்து வயது தீப்ஷிகா பாடல்களை எழுதினார். இப்படி கிட்டத்தட்ட ஐம்பது குழந்தைகள் கதைகள் எழுதவும், புத்தகங்கள் வெளியிடவும் தொடங்கியிருக்கிறார்கள்.

தற்போதைய தமிழகஅரசும், கல்வித்துறையும், ஆசிரியர்களும் சிறார் இலக்கியத்தில் சீரிய கவனம் செலுத்தி புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். பள்ளி நூலகங்களைச் செயல்படுத்துதல், நூலக வகுப்பு, நூல் வாசிப்பு, சிறார் நூல்கள் வெளியீடு, பள்ளிகளில் திரைப்படங்கள் திரையிடல், வாசிப்பை மேம்படுத்த இல்லம் தேடிக்கல்வி, என்று எதிர்காலத்தில் அறிவார்ந்த சமூகத்தை உருவாக்கிடும் அற்புதமான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் சிறார் இலக்கியம் பாய்ச்சல் வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளியாகியிருக்கின்றன.

ஆனால் இன்னும் போகவேண்டிய தூரம் அதிகம்.



நவீன இலக்கியத்தின் முகங்கள்

பாரதிபாலன்

எழுத்தாளர், பேராசிரியர் – இயக்குநர்
தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்,
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

இலக்கியத்தைப் பொறுத்தவரை நவீனம் (modernity) என்பது பார்வை, கண்ணோட்டம், அணுகுமுறை இவற்றில் ஏற்பட்ட மாற்றம், மறுமலர்ச்சி எனக் கொள்ளலாம். சிந்தனையிலும், அதனை வெளிப்படுத்தும் முறையிலும் ஏற்பட்டுள்ள மாற்றத்தையே நவீனம் என்கிறோம். இந்தப் பின்புலத்தில் நவீனத் தமிழ் இலக்கியத்தின் தொடக்கப் புள்ளியாக நாம் பாரதியைக் காணலாம். மரபார்ந்த நிலையில் இருந்து மாறுபட்டு நவீன சிந்தனைகளை விதைத்தவர்கள் பலர். 'சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொற்புதிது, என அனைத்து இலக்கிய வடிவங்களிலும் புதுமையையும் எளிமையையும் கைக்கொண்டவர் பாரதி. இலக்கியத்தின் மூலம் மக்களிடம் நேரடியாகப் பேசியவரும் பாரதி தான். எனவே நவீன இலக்கியத்தின் முன்னோடியாகப் பாரதியைக் காணலாம்.

தமிழ்ச் சிறுகதையின் தொடக்கப் புள்ளியாக பாரதியார், வ.வே.சு.ஐயர், அ.மாதவய்யா, பி.எஸ்.ராமையாவையும் தமிழ்ப் புதின இலக்கியத்தின் முன்னோடிகளாக மாயூரம் வேதநாயகம் பிள்ளை, ராஜம் ஐயர், மாதவையா போன்றவர்களையும் நினைவுகூர்கிறோம். இவர்களைத் தொடர்ந்து தமிழ்ப் புனைகதை இலக்கியத்தினை வளர்த்தெடுத்தவர்கள் பலர்; குறிப்பாக உருவ, உள்ளடக்க, உத்திகளில் புத்தாக்கத்தைப் புகுத்தி பலரும் சொல்ல மறந்த, சொல்லத் தயங்கியவற்றை இலக்கியத்தின் வழி பேசிய சில ஆளுமைகளைப் பற்றிச் சிந்திக்கலாம்.

கு.ப.ராஜகோபாலன் கதை மொழியும், அவர் கடத்தும் உணர்வுகளும் அவருடைய படைப்பிற்கு அழுத்தத்தைக் கொடுக்கிறது எனலாம். மன உணர்வுகளை, அதன் இயல்பிலே எழுதிக் கடத்தும் ஆற்றல்

கைவரப்பெற்றவர். இவரின் 'விடியுமா? ஆற்றாமை, கனகாம்பரம் திரை, நூருன்னிசா, சிறிதுவெளிச்சம், புனர்ஜென்மம்' ஆகிய கதைகள் காலம் கடந்தும் நிலைப்பவை; சொல்லப்பட்டதும் சொல்லாமல் விடப்பட்டதும் நம் மனதை என்னவோ செய்யும்; வாழ்வின் ஒரு கீற்று தான். ஆனாலும் அதன் ஒளி அபாரமானது!

'மௌனி' சிறுகதைகள் மட்டுமே எழுதியுள்ளார். 'அழியாச் சுடர்', 'பிரபஞ்ச கானம்', 'சாவில் பிறந்த சிருஷ்டி' முதலான அவரின் படைப்புகளைச் சுட்டலாம். "தமிழ் மரபுக்கும் போக்கிற்கும் புதிதாகவும் சிறப்பாகவும் வழிவகுத்தவர் என்று ஒருவரைச் சொல்லவேண்டும் என்றால் 'மௌனி'யைச் சொல்லலாம். அவரைத் தமிழ்ச் சிறுகதையின் மூலவர் என்று சொல்லவேண்டும்" என்கிறார் புதுமைப்பித்தன். இது உண்மைதான் என்பதனை அவர் படைப்புகள் உணர்த்தும். 'தன்னுடைய மன உத்வேகத்தைச் சொல்வதற்கு எனக்கு தமிழ்மொழி போதுமானதாக இல்லை' என்று மௌனி சொல்வதில் இருந்து அவரின் சிந்தனை ஓட்டத்தின் வேகத்தை நாம் உள்வாங்கிக் கொள்ளலாம்!

தமிழ் இலக்கிய உலகின் புதுமைப்பித்தன் தனித்த அடையாளம். இவருடைய தனித்தன்மை என்பது கூரிய சமூக விமர்சனம், நையாண்டி, புத்தாக்க அல்லது முற்போக்கு எண்ணம், இலக்கிய நயம் கொண்டவை இவருடைய சிறுகதைகள். தன் பெயருக்கு ஏற்ப புதிய பாதையை அமைத்துக் கொண்டவர்; சோதனை முயற்சியும், நடை ஆளுமையும்தான், இவர் தமிழ்ச்சிறுகதையின் முன்னோடியாகக் கருத இடம் தருகிறது. துன்பக்கேணி, நாசக்காரக்கும்பல், மனித இயந்திரம், பொன்னகரம், கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும், செல்லம்மாள் என்று நீளும் இவருடைய படைப்புகள், உலக இலக்கிய வரிசையில் வைத்துப் போற்றத்தக்கவை!

இதே போன்று மற்றொரு ஆளுமை பி.எஸ்.ராமையா. ஒருவிதமான வசீகர எழுத்துக்குச் சொந்தக்காரர். 'மணிக்கொடி' இதழில் 1935–1938 வரை ஆசிரியராக இருந்தவர். இருபதுக்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு கதை, வசனமும் எழுதியுள்ளார்.

கரிசல் இலக்கியத்தின் முன்னோடி என்று புகழப்படும் கு.அழகிரிசாமியின் கதைகள் எளிய மக்களைப் பற்றி, அழுத்தமாகச் சொல்லப்பட்டவை. யதார்த்தவாத எழுத்தினை கூர் மழுங்காமல் வளர்த்தெடுத்ததில் முக்கியமானவர். மரபிலக்கியத்திலும் ஈடுபாடு கொண்டவர். தமிழில் கடித இலக்கியத்திற்கு வளம் சேர்த்தவர். 'அன்பளிப்பு', 'ராஜா வந்திருக்கிறார்', 'காற்று சுயரூபம்', 'திரிவேணி', 'இருவர் கண்ட ஒரே கனவு' என்ற இவருடைய படைப்புகள் அன்றாட வாழ்க்கையின் வெளிப்பாடுகள்தாம். மிக யதார்த்தமாக, எளிய மொழியில் கதை சொல்வதால் இவருடைய கதைகளுக்கு தனி 'மவுசு' வந்து சேர்ந்துவிடுகிறது.

நாம் கவனிக்காத, கவனிக்கத் தவறிய எளிய மக்களையும், அவர்களின் உலகங்களையும், குரலற்றவர்களின் குரலாக ஒங்கி ஒலித்தவர் ஜெயகாந்தன். அடித்தள மக்களின் அவலத்தையும் மேட்டுக்குடி மக்களின் போதாமையையும், இயலாமையையும் இயல்பாக தன் படைப்புகளில் கொண்டுவந்தவர். இலக்கியப் படைப்பின் வழியாக நீண்ட நெடிய உரையாடலைத் தொடங்கியவர்; 'ஒரு வீடு, ஒரு மனிதன், ஒரு உலகம்' உள்ளிட்ட புதினங்களும் ஆனந்த விகடனில் இவர் எழுதிய முத்திரைக் கதைகளும் பல விவாதங்களை முன்னெடுத்தன. 'அக்னிப் பிரவேசம்', 'யுகசந்தி', 'நான் இருக்கிறேன்', 'குருபீடம்', 'நான் என்ன செய்யட்டும் சொல்லுங்க...' முதலான சிறுகதைகள் கதை என்ற எல்லைகளையும் தாண்டி, சமூகத்தில் நேரடியாகத் தாக்கம் பெற்றன.

'உயிர்க் கூட்டத்தை' இயற்கை, ஜீவராசிகள் உட்பட கொழுந்துவிட்டெரியும் ஒரே ஜீவாலையாகக் கண்டது ந.பிச்சமூர்த்தியின் தரிசனம். எல்லா உயிர்களும் என்னுடைய 'நானின் தெறிப்புகளே' என்று உணரும் இந்தியத் தத்துவ மரபின் இலக்கிய சாட்சியே ந.பிச்சமூர்த்தி என்ற சுந்தரராமசாமியின் குரலில் இருந்து ந.பிச்சமூர்த்தியை உள்வாங்கிக் கொள்ள முடியும். ந.பிச்சமூர்த்தியின் மொழியும் அதன் வழியாக வெளிப்படும் வாழ்வும் – தத்துவமும் தான் அவரின் அடையாளம். நவீன கவிதையின் அடித்தளமாகவும் இருந்தவர். ஞானப்பால், விஜயதசமி, பதினெட்டாம் பெருக்கு, விதை நெல், மாயமான் போன்ற படைப்புகளின் வழியே அவரை தரிசிக்க முடியும். மொழிச் செழுமையும் தத்துவச் செறிவும் கொண்ட கதைகளைப் படைத்தவர்.

சி.சு.செல்லப்பா "இலக்கியம்தான் இவருக்கு வாழ்வு; இலக்கியத்திற்கும் சி.சு.செல்லப்பாதான் வாழ்வு" என்று சொல்லும் அளவுக்கு இலக்கியமே என்று தவமாக இருந்தவர். இலக்கிய

விமர்சனத்திற்காகவே தனி இதழ் தொடங்கியவர். அது 'எழுத்து' இதழ். 1970 வரை 119 இதழ்கள் வெளியிட்டார். 'வாடிவாசல்', 'ஜீவனாம்சம்', 'சுதந்திரதாகம்', 'சரசாவின் பொம்மை' ஆகிய படைப்புகளில் சி.சு.செல்லப்பாவின் தனித்த தடங்களைக் கண்டடையலாம். காந்தியக் கருத்தாக்கங்களைத் தன் கதைகளின் வழியே கடத்தியவர்; காந்தியைப் போல எளிமையான அதே வேளை வலிமையான மொழிவளம் கொண்டது சி.சு.செல்லப்பாவின் கதைகள்.

க.நா.சுப்பிரமணியம் உலக இலக்கியத்திற்கு இணையாக தமிழ் இலக்கியம் வளரவேண்டும் என பல முன்னெடுப்புகளைச் செய்தவர். விமர்சனக் கலையை புதிய திசையில் வளர்த்தெடுத்தவர். 'பொய்த்தேவு', 'அவதூதர்', 'அசுரகணம்', 'சர்மாவின் உயில்' முதலான தனித்துவமான படைப்புகளைத் தந்தவர்.

'நகுலன்': டி.கே.துரைசாமி என்பது இவரது இயற்பெயர். முறையாக இலக்கியம் பயின்று பட்டம் பெற்றவர். தமிழ்ச் சிறுகதைகளில் பல புதிய பரிசோதனைகளைச் செய்து பார்த்தவர். 'ஒரு ராத்தல் இறைச்சி', 'அயோத்தி' ஆகியன இவருடைய கவனம் பெற்ற படைப்புகள். கவிஞர், நாவலாசிரியர், மொழிபெயர்ப்பாளர் எனப் பன்முக நிலையில் பங்களிப்பு செய்தவர். 'நினைவுப்பட்டை நீலக்கல்' என்னும் நாவலும் 'நாய்கள்', 'மஞ்சள் நிறப் பூனை' என்ற கவிதைத் தொகுப்பும் நவீனத்தின் அடையாளமாகச் சுட்டப்படுகின்றன.

சுந்தரராமசாமி 'பசுவய்யா' என்ற பெயரில் கவிதைகளும் எழுதியுள்ளார். இவருடைய ஜே.ஜே. சில குறிப்புகள், ஒரு புளிய மரத்தின் கதை ஆகிய புகழ்பெற்ற புதினங்களையும் 'கோ யில்காளையும் உழவுமாடும்', 'பல்லக்கு தூக்கிகள்', 'ரத்னாபாயின்ஆங்கிலம்', 'விகாசம்', 'பிரசாதம்', 'பள்ளம்', 'காகங்கள்', 'சீதை மார்க் சீயக்காய்த்தூள்' ஆகிய சிறந்த சிறுகதைகளையும் தந்தவர். இவரை முன்மாதிரியாகக் கொண்டு பலரும் எழுத வந்துள்ளனர். பலர் இன்றும் பின் தொடர்கின்றனர்.

எம்.வி. வெங்கட்ராம் மாறுபட்ட சிந்தனைப் போக்கு கொண்டவர். இவருடைய 'நித்தியகன்னி', 'காதுகள்' ஆகியன புகழ்பெற்ற நாவல்கள். பைத்தியக்கார பிள்ளை, தத்துப்பிள்ளை முதலான தனித்துவமான சிறுகதைகளை எழுதியவர் 'காதுகள்' பிறழ்வு உளவியலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல். 'வேள்வித் தீ', 'உயிரின் யாத்திரை' ஆகிய புகழ்பெற்ற படைப்புகள் வழி தன் இடத்தை நிறுவிக் கொண்டவர்.

அசோகமித்திரன்: நுணுக்கமான பார்வை, சாதாரணமான கதை மாந்தர்கள், சம்பவங்கள் என்று நகரும் அசோகமித்திரன் கதைகள் திடீரென்று அசாதாரணமாகிவிடுகின்ற தருணங்கள்தான் கதைக்கு தனி இயல்பை வழங்குகிறது. எளிமையான சொல்லாடல்கள் தான்; ஆனால் மனதில் ஆழமாக ஊடுருவி அப்படியே நின்று விடுகிறது! 'அப்பாவின் சினேகிதர்', 'புலிக்கலைஞன்', 'பிரயாணம்', 'காலமும் ஐந்து குழந்தைகளும்' ஆகிய சிறுகதைகளையும் 'பதினெட்டாவது அட்சக்கோடு', 'தண்ணீர்', 'கரைந்த நிழல்கள்' ஆகிய நாவல்களும் தான் இவரின் அடையாளமாகச் சுட்டப்படுகின்றன.

'அணுயுகம்' சிறுகதை மூலம் தனிக் கவனம் பெற்றவர் ஜி. நாகராஜன். விளிம்புநிலை மனிதர்கள், பாலியல் தொழிலாளர்கள், புறக்கணிப்புக்கு ஆளானவர்கள், சமூகத்தில் இழிவான தொழில் செய்பவர்களாகக் கருதப்பட்டவர்கள்தான் ஜி.நாகராஜனின் கதை மாந்தர்கள், தமிழ்ப் படைப்புலகம் காணாத ஓர் உலகத்தைக் கட்டமைத்தவர் ஜி.நாகராஜன். இவருடைய சிறந்த கதைகளாக 'கல்லூரி முதல்வர் மிஸ் நிர்மலா', 'ஆண்மை', 'இழிந்த ஜாதி', 'தீராக்குறை', 'டெர்லின் ஷர்ட்டும் எட்டு முழ வேஷ்டி அணிந்த மனிதரும்' மற்றும் 'குறத்திமுடுக்கு' என்ற குறுநாவலையும் சொல்லலாம்.

கோபிகிருஷ்ணன் கதைகள் சமூகத்தின் போலி மதிப்பீடுகளை, மிடுக்குகளை கேள்விக்கு உள்ளாக்குவதுடன் அதிகார அடக்குமுறைகளுக்கு மட்டுப்பட்டுப் போன மனதின் கொதிப்புகளை, உணர்வுகளை நுட்பமாகக் காட்டுகிறது கோபிகிருஷ்ணன் கதைகள். இயல்பான மனிதர்களின் மன அடுக்குகளில் உறைந்து கிடக்கும் இயல்பற்ற தன்மைகளை, நடத்தைகளை, வார்த்தைகளை உளவியல் ரீதியாக அவதானித்துச் சொல்கிறது. எந்த ஒரு நிலையிலும் குரூரத்தைத் தாங்கிக் கொள்ளாத மனநிலையில் எழுதப்பட்டதுதான் கோபிகிருஷ்ணனின் கதைகள், 'காணிநிலம் வேண்டும்', 'நிலம்' ஆகிய கதைகள் முக்கியமானவை.

'சார்வாகன்' கவிதைகளும், சிறுகதைகளும் எழுதியவர். தொழில் முறையிலான தொழுநோய் மருத்துவர். இவருடைய 41 சிறுகதைகள்

‘சார்வாகன் கதைகள்’ என்ற பெயரில் புத்தகமாக வெளிவந்துள்ளன. நவீன இலக்கியத்தின் தனிமுகமாக அறியப்பட்டவர். இவருடைய ‘கனவுக் கதை’ பரவலாகப் பேசப்பட்டது.

பெண்களின் அறிவை, வாழ்வியல் அனுபவங்களை, தெளிவை, ஆற்றலை, புறக்கணிக்கப்படுவதை மிக நுட்பமாகப் படம் பிடித்துக் காட்டியவர் அம்பை. ‘சிறகுகள் முறியும்’, ‘அம்மா ஒரு கொலை செய்தாள்’, ‘வீட்டின் மூலையில் ஒரு சமையலறை’, ‘காட்டில் ஒரு மான்’, ‘சிவப்பு கழுத்துடன் ஒரு பச்சை பறவை’ ஆகிய படைப்புகளின் வழி பெண்களின் இருப்பை, அவர்களுக்கு எதிரான குடும்ப அமைப்பின் அழுத்தத்தை மாறுபட்ட கோணத்தில் நுட்பமாகப் பதிவு செய்தவர்.

இந்திரா பார்த்தசாரதி சிறுகதை, புதினம், நாடக வடிவங்களில் சில நுட்பமான கலை வேலைப்பாடுகளைச் செய்து காட்டியவர்! குருதிப்புனல், சுதந்திர பூமி ஆகிய இவரது நாவல்கள் அரசியல் சார்ந்தவை, ஔரங்கசீப், நந்தன்கதை, இராமானுஜர் ஆகியவை தனிக் கவனம் பெற்றவை. இவருடைய ‘ஒரு கப் காப்பி’, ‘தொலைவு’, ‘இளமாறன் கொடுத்த பேட்டி’, ‘நாசகார கும்பல்’ ஆகிய சிறுகதைகள் சிறப்பாகப் பேசப்பட்டவை.

ஜெயமோகன் ‘நதி’ சிறுகதை 1987இல் வெளிவந்தது. அகிலன் நாவல் போட்டியில் இவருடைய ‘ரப்பர்’ புதினம் பரிசு பெற்றது. ‘விஷ்ணுபுரம்’, ‘வெண்முரசு’ புதினங்களும் ‘திசைகளின் நடுவே’, ‘பத்ம வியூகம்’, ‘நதி’, ‘மாடன் மோட்சம்’, ‘யானை டாக்டர்’, ‘ஊமைச் செந்நாய்’, ‘அறம்’ ஆகிய சிறுகதைகள் தனிக் கவனம் பெற்றுப் பேசப்பட்டன.

‘கோணங்கி’ யின் மொழிநடை தனித்தன்மை கொண்டது. இவரின் ‘மதினிமார்களின் கதை’, ‘கொல்லரின் ஆறு பெண் மக்கள்’, ‘கருப்பு ரயில்’ ஆகிய சிறுகதைகள் சொல்லப்பட்ட விதத்திலும் அதன் மொழி நடையாலும் கவனம் பெற்றன.

ஆதவன் கதைகள் எளிய மத்தியதர வர்க்கத்து மனிதர்களைப் பற்றிப் பேசுகிறது. குறிப்பாக நகரில் வாழும் மக்களின் மனநிலை அவர்களின் நெருக்கடியைப் பற்றிப் பேசுகிறது. ஆதவனின் கோணமும் தனித்துவம் கொண்டவை.

நவீன இலக்கியத்திற்கு வளம் சேர்த்தவர்கள் என்று ஒரு நெடும் பட்டியலே உண்டு. கிருஷ்ணன் நம்பி மிகக் குறைவாக எழுதினாலும் நிறைவாக எழுதக் கூடியவர் என்று பெயர் பெற்றவர். கதை சொல்வதிலும் பார்வையிலும் தனக்கென்று ஒரு முறையைக் கைக் கொண்டவர். இவருடைய ‘மருமகள் வாக்கு’, ‘சட்டை’, ‘நீலக்கடல்’... சிறுகதைகள் அழுத்தமான படைப்பாகப் பார்க்கப்படுகிறது.

ஆ.மாதவன் திராவிட எழுத்துகளால் ஈர்க்கப்பட்டு எழுத்தாளர் ஆனவர். இவருடைய ‘கடைத் தெருக் கதைகள்’ சிறுகதைத் தொகுப்பு இலக்கிய உலகில் தனிக் கவனம் பெற்றது. ‘கிருஷ்ண பருந்து’ நாவல் விரிவாகப் பேசப்பட்டது.

தஞ்சை ப்ரகாஷ் பொதுவெளியில் பேசத் தயங்கும் பாலியல் உணர்வுகளை, அதுசார்ந்த உளவியலை தன் படைப்புகள் வாயிலாகப் பேசியவர். இதை அவர் சொல்லும் முறையும் மொழியும் தனிக் கவனம் பெற்றவை. இவருடைய ‘கரமுண்டார் வீடு’, ‘மீன் இறகுகள்’ நாவல்களும் ‘எரிந்த தென்னை மரம்’, ‘மேபல்’ உள்ளிட்ட சிறுகதைகளும் முக்கியமானவை.

இதுபோல் ந.முத்துசாமி, நீல.பத்மநாபன், மா.அரங்கநாதன், சா.கந்தசாமி, தமிழவன், வண்ணதாசன், கந்தர்வன், பா.செயப்பிரகாசம், ராஜேந்திர சோழன், நாஞ்சில்நாடன், எஸ்.ராமகிருஷ்ணன் முதலானோரை நவீன இலக்கியத்தின் முகமாகச் சுட்டலாம்.

நவீன இலக்கியத்திற்கு பங்களிப்பு செய்தவர் பலர்; பல்வேறு காலக்கட்டங்களில் பலரும் காத்திரமான பங்களிப்புகளை வழங்கியுள்ளனர். அறிஞர் அண்ணா, கலைஞர் கதைகளை பிரச்சாரக் கதைகள் என்று ஒதுக்கிவிட முடியாது; வடிவத்திலும், உத்தியிலும் எடுத்துரைப்பிலும் பல புதுமைகளைச் செய்துள்ளனர். தி. ஜானகிராமன், லா.ச.ரா., சுஜாதா போன்ற ஆளுமைகளின் இலக்கியப் பங்களிப்புகளையும் நாம் இங்கே உள்வாங்கிக்கொண்டு இணைத்துப் பார்க்க வேண்டும்;

இலக்கியவாதிகளின் நேர்காணல்கள்



பவுத்த அய்யனார்

நேர்காணல் என்பது இலக்கியவாதி ஒருவரின் பல்வேறு பரிமாணங்களை வெளிக்கொணரும் தன்மை கொண்டது. படைப்பின் மூலம் சொல்ல முடியாத பல விசயங்களை ஒரு படைப்பாளி நேர்காணல் மூலம் சொல்ல முடியும். இதனால் இலக்கியவாதியின் இலக்கியப் படைப்புகளை ஒரு வாசகன் எளிதில் உள்வாங்கிக் கொள்ள உதவும். வெளிப்படைத் தன்மையுடன் ஒரு எழுத்தாளர் நேர்காணலில் பேசும்போது அவரது படைப்பின் பூடகத் தன்மை கொஞ்சம் விலகும். அப்போது ஒரு வாசகனுக்கு ஒரு படைப்பை மேலும் மேலும் படிக்கத் தூண்டுதலாக நேர்காணல் இருக்கும்.

"சொந்த வாழ்க்கையை, அன்றாட, அனுபவங்களை, படித்த, கேட்ட, பார்த்த நிகழ்வுகளை, சமூகம் குறித்த உரத்த சிந்தனைகளை, சமகால இலக்கியப் போக்குகளைப் புனைவின் நிழல்படாமல் பேசி அறிந்து கொள்ளும் ஒரு சவாலே நேர்காணல்கள்" என்று நவீன தமிழின் மிக முக்கிய இலக்கியவாதி எஸ். ராமகிருஷ்ணன் கூறுவது நேர்காணல் பற்றிய துல்லிய மதிப்பீடு ஆகும்.

உலக அளவில் புகழ்பெற்ற இலக்கியவாதிகளின் நேர்காணல்களை 1953 லிருந்து. 'பாரிஸ் ரிவ்யூ' (Paris Review) என்ற மும்மாத இதழ் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. 1953 இல் பாரிஸ் நகரத்தில் தொடங்கப்பட்டு வெளிவந்து கொண்டிருந்த இதழ் 1973 முதல் நியூயார்க் நகரத்தில் இருந்து தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகிறது. கலை, இலக்கியம், கலாச்சாரம் என இந்த இதழ் வெளிவந்தாலும், இதன் நேர்காணல்கள் புகழ் பெற்றவை. எஸ்.ரா.பவுண்ட், எர்னஸ்ட் ஹெமிங்வே,

டி.எஸ்.எலியட், ஜார்ஜ் லூயி ஃபோர்ஹேஸ், வில்லியம். ஃபாக்னர், விளாடிமிர் நபக்கோவ் மற்றும் நூற்றுக்கணக்கான இலக்கியவாதிகளின் நேர்காணல்கள் கொண்ட 'Writers at work' என்ற பகுதி மிகவும் புகழ் பெற்றது.

தமிழில் இலக்கிய ரீதியான விரிவான நேர்காணல்கள் சுபமங்களா இதழ் மூலம் வெளிவந்தது. 1991 முதல் 1995வரை. அப்போது ஆசிரியப் பொறுப்பில் இருந்தவர் கோமல் சுவாமிநாதன். எழுத்தாளர் வண்ணநிலவன், கவிஞர் இளையபாரதி முதலிய இலக்கியவாதிகள் அப்போது சுபமங்களா இதழில் பணிபுரிந்ததும் இதற்கு முக்கியக் காரணம்.

தமிழ் எழுத்தாளர்களின் புகைப்படங்கள் அரிதாகவே அச்சில் கிடைத்த காலத்தில், சுபமங்களா இலக்கியவாதிகளின் புகைப்படங்களையும் நேர்காணலுடன் நேர்த்தியாக வெளியிட்டது. சுபமங்களாவின் நேர்காணல் தொகுப்பு நூல் 1997இல் 'கலைஞர் முதல் கலாப்ரியா வரை' என்ற பெயரில் நர்மதா பதிப்பகம் வெளியிட்டது. இந்த நூலின் தொகுப்பாசிரியர் கவிஞர் இளையபாரதி.

"நேர்காணல்கள் என்ற இலக்கிய வகையில் தமிழுக்கு இதுதான் முதல் முத்தாரம். 'கலைஞர் முதல் கலாப்ரியா வரை' என்னும் இந்த நூல் நவீன தமிழ் இலக்கியத்தின் வரலாறு" என்று இளையபாரதி தனது முன்னுரையில் குறிப்பிடுகிறார். அநேகமாக தமிழின் முதல் நேர்காணல் தொகுப்பு இதுவாக இருக்கலாம். இதன் மொத்தப் பட்டியலைப் பார்க்கும் போது, தமிழின் மிகச் சிறந்த இலக்கியவாதிகளின் நேர்காணல்கள் அடங்கிய அரிய தொகுப்பு நூல் இது என்றால் மிகையாகாது. கலைஞர் மு.கருணாநிதி முதல் சுந்தர ராமசாமி, அசோகமித்திரன், கி.ராஜநாராயணன், வண்ணதாசன், கலாப்ரியா உட்பட 37 கலை இலக்கியவாதிகளின் நேர்காணல்கள் அடங்கியது இந்தத் தொகுப்பு.

சுபமங்களா நின்ற பிறகு புதியபார்வை இதழ் நேர்காணல்களைத் தொடர்ந்து வெளியிட்டது. அப்போது பாவைச்சந்திரன் ஆசிரியராக இருந்தார். எனக்கு நேர்காணல் எடுக்கும் ஆர்வம் ஏற்பட்டதற்கு முக்கியக் காரணம் சுபமங்களா நேர்காணல்களைத் தொடர்ந்து படித்ததே. சுபமங்களா மூத்த இலக்கியவாதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நேர்காணல்களை வெளியிட்டது. புதியபார்வை மூத்த எழுத்தாளர்களுடன் இளைய தலைமுறை எழுத்தாளர்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தது.

1996 இல் எழுத்தாளர் ஜெயமோகன் முதல் கவிஞர் சல்மா வரையிலான இலக்கியவாதிகளின் முதல் விரிவான நேர்காணலை எடுத்துள்ளேன். மூத்த இலக்கியவாதிகள் கவிஞர் அபி, நீல.பத்மநாபன், நகுலன், வண்ணதாசன், பொ.வேல்சாமி, மௌனகுரு போன்றோரின் நேர்காணல் உட்பட 50க்கும் மேற்பட்ட இலக்கியவாதிகளின் நேர்காணலை எடுத்துள்ளேன். நேர்காணலுக்கு என்றே





‘நேர்காணல்’ என்ற இதழையும் நடத்தி 6 இதழ்கள் வரை கொண்டு வந்தேன். இதில் ந.முத்துசாமி, திரைப்பட நடிகர் நாசர், மொழிபெயர்ப்பாளர் வெ.ஸ்ரீராம், கலை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, ஈழக் கவிஞர் தீபச்செல்வன் வண்ணநிலவன் முதலிய முக்கிய ஆளுமைகள் பற்றி வாசகர்கள் முழுமையாகத் தெரிந்து கொள்ளும் வகையில் நேர்காணல் அமைந்திருக்கும். ஒரு இதழ் முழுக்க ஒருவர் பற்றி மட்டுமே இருக்கும். இது தமிழில் மட்டுமல்லாது இந்தியா அளவிலும் ஒரு புது முயற்சி ஆகும்.

நான் எடுத்த நேர்காணல்களின் தொகுப்புகள் மூன்று நூல்களாக வெளிவந்துள்ளது. “சொல்லிலிருந்து மௌனத்திற்கு”, “அலையும் நினைவுகள்”, “காலத்தை வரைந்த தூரிகைகள்” என்ற தலைப்புகளில் வெளி வந்துள்ளது.

நேர்காணல் எடுக்கும்போது விதவிதமான அனுபவங்களைப் பெற்றுள்ளேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசுவார்கள். கவிஞர் அபி அவரது நேர்காணலை எடுக்கும்போது அவரது கவிதை பற்றி மட்டுமே பேசுவார். பிற சொந்த வாழ்க்கை பற்றி ஏதும் சொல்ல மாட்டார். அது தேவையற்றது என்பார். இப்போது பிரபல எழுத்தாளராக அறியப்படும் ஜெயமோகன் நேர்காணல் மூலம் எப்போதும் பல விவாதங்களை உருவாக்கும் கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார். மூத்த எழுத்தாளர் நகுலன், அவரை நேர்காணல் எடுக்கும் முன்பு பீஜாய்ஸ் எனும் பிராந்தி மதுவகையை வாங்கி வரச் சொன்னார். நகுலன் நேர்காணல் மிகவும் கவனம் பெற்ற நேர்காணல் ஆகும். பல இதழ்கள் மறு பிரசுரம் செய்தன.

1996 முதல் நான் நேர்காணலை அதிகமும் ஒலிப்பதிவு செய்தே எடுத்துள்ளேன். அதிலிருந்து எடுத்து எழுதித் தொகுப்பது என் வழக்கம். சிலர் கேள்வியை அனுப்பச் சொல்வார்கள். அவர்களின் பதில் வந்தவுடன் அதிலிருந்து கிளைக் கேள்விகளை எழுதி அனுப்புவேன். ஆனால் நேரடியாகச் சந்தித்துப் பேசுவதே மிக இயல்பான நேர்காணலாக அமையும் என்பது என் அனுபவம்.

சுபமங்களா, புதியபார்வை இதழ்கள் இலக்கியவாதிகளின் நேர்காணல் மூலம் மிகவும் கவனம் பெற்றவை என்றால் மிகையாகாது. காலச்சுவடு இதழ் இரண்டாம் வருகைக்குப் பிறகு மிக முக்கியமானவர்களின் மிக விரிவான நேர்காணலை வெளியிட்டது. எஸ்.ராமகிருஷ்ணன், நித்ய சைதன்ய யதி, எஸ்.என்.நாகராஜன், ரவிக்குமார், சுரேஷ்குமார இந்திரஜித் போன்றவர்களின் நேர்காணல்கள் மிகவும் குறிப்பிடத் தக்கவை. வெகுஜன இதழான குமுதம் இலக்கியத்திற்காகத் தொடங்கிய இதழ் தீராநதி. தீராநதி இதழ் நேர்காணல்கள் தமிழ் இலக்கியப் பரப்பில் மிகவும் குறிப்பிடத் தக்கவை. முனைவர் இரா.மணிகண்டன் தீராநதி ஆசிரியராக இருந்த போது தொடர்ந்து வெவ்வேறு துறை சார்ந்தவர்களின் முக்கியமான நேர்காணலைத் தொடர்ந்து வெளியிட்டார். இணையம் வந்த பிறகு நேர்காணல் என்ற இலக்கியவகை மேலும் முக்கியத்துவம் பெற்று வருகிறது. இதில் பக்க வரையறை இல்லாததால் இணைய நேர்காணலுக்கு சுதந்திரம் அதிகம். ஜெயமோகன், பெருமாள்முருகன், யுவன் சந்திரசேகர் மூவரின் மிக விரிவான நேர்காணலை சரவண கார்த்திகேயன் தனது இணையப் பக்கத்தில் வெளியிட்டு, ‘மும்மூர்த்திகள்’ என்ற பெயரில் நூலாகவும் வந்துள்ளது.

உலகம் முழுக்க வாழும் தமிழர்களால் நடத்தப்படும் அச்சு இதழ், இணைய இதழ்களில் நேர்காணல் என்ற இலக்கிய வகைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பதாகை இலக்கிய இணைய இதழ் எழுத்தாளர்களின் தனி சிறப்பிதழை வெளியிட்டு வருகிறது. இதில் சுனில் கிருஷ்ணன் எடுத்து வரும் நேர்காணல்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவை.

கனடாவில் இருந்து வெளிவரும் அச்சு இதழ் ‘காலம்’ நேர்காணலைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது.

இன்றைய காலக் கட்டத்தில் எஸ்.ராமகிருஷ்ணன், சுரேஷ்குமார இந்திரஜித் மற்றும் பல படைப்பாளிகள் தங்களது நேர்காணல்களின் தொகுப்பைக் கொண்டு வந்துள்ளார்கள்.

ஒரு காலத்தில் நேர்காணல் என்ற இலக்கிய வகை அறிதாகவே வெளிவந்தது. ஆனால், இப்போது நேர்காணல் என்ற இலக்கிய வகை தமிழ் இலக்கியப் பரப்பில் மிகுந்த முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.



நவீன இலக்கிய ஆளுமைகள்

பா.இரவிக்குமார்

இருபது நூற்றாண்டு காலத் தொடர்ச்சியாக, மரபின் வேர்கள் அறுபட்டுவிடாமல், தமிழில் நவீன இலக்கியம் செழித்தது. மரபிற்கும் நவீனத்திற்கும் பாலமாக இருந்தவன் பாரதி என்பதைக் குறிப்பிடத் தேவையில்லை. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், இறுதியிலும் எண்ணற்ற இலக்கிய ஆளுமைகள் தமிழுக்குத் தங்கள் பங்களிப்புகளை நல்கியுள்ளனர். சில பக்கங்களுக்குள் ஒரு நூற்றாண்டின் இலக்கிய வரலாறைச் சுருக்குவதென்பது கடினம். எனினும், இளைய தலைமுறைக்கு நவீனத் தமிழ் இலக்கிய ஆளுமைகள் அடையாளப்படுத்தும் சிறுமுயற்சியே இக்கட்டுரை.

தமிழ் நவீன இலக்கியத்தைக் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் என நான்கு வகைகளாகப் பகுக்கலாம். இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், அச்சு இயந்திரங்களின் வளர்ச்சி, ஊடகங்களின் (குறிப்பாகப் பத்திரிகை) வளர்ச்சி, சமூக மாற்றங்கள், நகர்மயமாதல் போன்ற காரணங்களால் நவீன இலக்கியம் வளர்ச்சி பெற்றது. 1950களுக்குப் பிறகு ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இக்கட்டுரை, நவீன இலக்கிய ஆளுமைகளின் பங்களிப்புகளையும், சில போக்குகளையும் மட்டுமே அடையாளப்படுத்த முற்படுகிறது.

கவிதை ஆளுமைகள்

பாரதி, பாரதிதாசனுக்குப் பிறகு தமிழில் புதுக்கவிதைகள் வளர்ச்சியடைந்ததை அறிவோம். ஐம்பதுகளில் திராவிட இயக்கத்தைச்

சார்ந்த பல கவிஞர்கள் மரபுக் கவிதைகளை எழுதிக் கொண்டிருந்த சூழலில், எழுத்து இதழை நடத்திய சி.சு.செல்லப்பா புதுக் கவிதைகளுக்கு ஓர் அங்கீகாரத்தைத் தேடித் தர முயன்று கொண்டிருந்தார்.

சி.சு. செல்லப்பா போலவே மயன் என்கிற க.நா.சு., சி.மணி, பசுவய்யா (சுந்தரராமசாமி), பிரமிள், நகுலன் போன்றோர் மிகச் சிறந்த கவிதை ஆளுமைகள். அகவயக் கவிதைகளை எழுதுவதே பெரும்பாலும் இவர்களுடைய இலக்கியப் போக்குகளாக இருந்தன.

வானம்பாடி இயக்கத்தில் செயல்பட்ட புவியரசு, கோவை ஞானி, சிற்பி, தமிழன்பன், தமிழ்நாடன், மு.மேத்தா போன்ற கவிஞர்கள் கவிதைகளை அரசியல்மயப்படுத்தினர் எனக் கருதலாம். மரபுக் கவிதைகளை எழுதிக் கொண்டிருந்த அப்துல்ரகுமான், வைரமுத்து, நா.காமராசன், மு.மேத்தா, தமிழன்பன் போன்றவர்கள் எண்பதுகளில் புதுக்கவிதைகளை வெகுசனங்களுக்குக் கொண்டு சேர்த்தனர். முற்போக்குக் கவிதைகளை எழுதிய இன்குலாப், தணிகைச் செல்வன் போன்றவர்களும் குறிப்பிடத்தக்க ஆளுமைகள்.

கசடதபற இதழில் எழுதிய கவிஞர்கள் பலர். ஆத்மாநாம் இவர்களுள் தனித்துத் தெரியும் ஆளுமை. இருண்மைக் கவிதைகளை எழுதிய அபி தனித்துக் குறிப்பிடப்பட வேண்டியவர். எண்பதுகளின் இறுதியிலும் தொன்னூறுகளிலும் அறிவுமதி, பழநிபாரதி, நா.முத்துக்குமார், கபிலன், யுகபாரதி, பச்சியப்பன் போன்றவர்கள் கவியரங்குகளிலும், தொகுப்புகள் வாயிலாகவும் புகழ்பெற, சிற்றிதழ்களில் எழுதிய பிரம்மராஜன், பிரேம்ரமேஷ், மாலதிமைத்ரி, குட்டிரேவதி, ப.கல்பனா, சல்மா, கனிமொழி, சுகிர்தராணி போன்றோர் பெண்ணியம் சார்ந்த கவிதைகளை எழுதினர்.

'சனங்களின் கதை' என்னும் தொகுப்பைக் கொண்டு வந்த த.பழமலய் புதுக்கவிதையில் ஒரு பெரும்பாய்ச்சலை ஏற்படுத்தினார் என்பதைக் குறிப்பிடவேண்டும். இன்று ஆயிரக்கணக்கான தொகுப்புகள் வெளிவருகின்றன. மார்க்சியம், பெண்ணியம், தலித்தியம் சார்ந்து பல்வேறு கவிஞர்கள் கவிதைகளைப் படைக்கின்றனர். எனினும் கவிதையில் சுயம்புலிங்கம், என்.டி.ராஜ்குமார், சமயவேல், தேவதேவன், தேவதச்சன், கலாப்பிரியா, கல்யாண்ஜி போன்ற கவிஞர்களைச் சிறந்த ஆளுமைகளாகக் கொள்ளவேண்டும்.

வெகுசனத் தளத்தில் வைரமுத்து, அப்துல்ரகுமான், அறிவுமதி போன்ற கவிஞர்களின் இலக்கியத் தாக்கங்கள் தனித்த ஆய்விற்குரியன.



புனைகதை இலக்கிய ஆளுமைகள்

கவிதைகளைப் போலவே சிறுகதைகளிலும் நாவல்களிலும் சாதனை புரிந்த எழுத்தாளர்கள் ஏராளம்.

பாரதி கவிதையில் சாதித்தார் என்றால், சிறுகதையில் அந்தச் சாதனையைச் செய்தவர் புதுமைப்பித்தன். வாழ்க்கையின் சிக்கலான போக்குகளை, அனுபவங்களை, உணர்வுகளை அற்புதமான மொழிநடையில் சாதித்த இலக்கிய ஆளுமைகள் என்று புதுமைப்பித்தன், கு.ப.ராசகோபாலன், கு.அழகிரிசாமி ஆகியோரைக் குறிப்பிடலாம். தன் வலிமையான எழுத்தால், தமிழ் இலக்கிய உலகைத் திரும்பிப் பார்க்க வைத்த இலக்கிய ஆளுமை என்று ஜெயகாந்தனைக் குறிப்பிட வேண்டும். சிறுகதைகளில் கி.ரா., பூமணி, பா.செயப்பிரகாசம் போன்ற ஆளுமைகள் மண்சார்ந்த எழுத்துக்களைப் படைத்ததன்மூலம் பெரும் இலக்கிய ஆளுமைகளாக அறியப்பட்டனர்.

ஒவ்வொரு எழுத்தாளருக்கும் இலக்கியம் குறித்த தனித்த பார்வையும், வாழ்க்கை குறித்த நோக்கும் இருந்தன. யதார்த்தவியலுக்கும் அழகியலுக்கும் முக்கியத்துவம் கொடுத்து எழுதிய எழுத்தாளர்களுள் அசோகமித்திரன், நீல.பத்மநாபன், ஆ.மாதவன், லா.ச.ராமாமிர்தம், சுந்தரராமசாமி போன்றோரைக் குறிப்பிடலாம்.

ஆதவன், பிரபஞ்சன், கோபிகிருஷ்ணன், சார்வாகன், ச.தமிழ்ச்செல்வன், கோணங்கி, தோப்பில் முகம்மது மீரான், சோ.தர்மன் போன்றவர்கள் பெரும் சாதனைகளைத் தங்கள் புனைகதைகளில் செய்துள்ளனர்.

வெகுசனத் தளத்தில் சுஜாதா, இந்திரா பார்த்தசாரதி, பாலகுமாரன், சுப்பிரமணிய ராஜூ, மாலன் போன்றோரின் எழுத்துகள் தமிழ் இலக்கியச் சூழலில் மிகுதியாக வாசிக்கப்பட்டன.

வரலாற்று நாவல்களை எழுதிப் புகழ்பெற்ற இலக்கிய ஆளுமைகளாக விளங்கியவர்கள் கல்கி, சாண்டில்யன், கோவி. மணிசேகரன் போன்றவர்கள்.

புனைகதைகளில் பெருஞ்சாதனை புரிந்த பெண் எழுத்தாளர்களுள் அம்பை, ராஜம் கிருஷ்ணன், லட்சுமி, சிவசங்கரி, இந்துமதி, வாஸந்தி, ஆர்.சூடாமணி போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்களுள் அம்பை, ஆர்.சூடாமணி ஆகியோரின் எழுத்துகள் தனித்தவை.

இன்று உலக இலக்கியங்களை அறிமுகப்படுத்தும் எஸ்.ராமகிருஷ்ணனும் பரபரப்பாக எழுதிக் குவித்துக் கொண்டுவரும் ஜெயமோகனும் சாருநிவேதிதாவும் வாசகர் உலகில் தீவிரத் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு வரும் இலக்கிய ஆளுமைகள் எனலாம்.

இவர்கள் யாவரும் தமிழ் உரைநடைக்குத் தங்கள் எழுத்துக்களின் வாயிலாகப் பெரும் பங்களிப்பை நல்கியவர்கள்.

தலித்தியம் முகிழ்த்தபோது பாமா, ராஜ் கௌதமன், அழகியபெரியவன், இமையம், போன்றோரின் எழுத்துகள் கொண்டாடப்பட்டன.

யதார்த்த எழுத்துக்களை மறுதலித்துவிட்டு எழுதிய எழுத்தாளர்களுள் தமிழவன், எம்.ஜி.சுரேஷ், பிரேம், ரமேஷ் பிரேதன், நாகார்ஜுனன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழ் நவீன நாடகங்களுக்குப் பங்களிப்புச் செய்த இலக்கிய ஆளுமைகளாக சே.ராமானுஜம், இந்திரா பார்த்தசாரதி, பரிக்ஷா ஞாநி, மு.ராமசாமி, அ.ராமசாமி, கே.ஏ.குணசேகரன், ராஜு, வேலு. சரவணன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

இக்கட்டுரை, நவீன இலக்கிய ஆளுமைகளின் பெயர்ப் பட்டியலைத் தரும் நோக்குடன் எழுதப்படவில்லை. நவீன இலக்கிய ஆளுமைகளின் நூல்கள் எண்ணிலடங்கா. அவற்றை அறிமுகப்படுத்த பெரும் நூலே எழுதவேண்டும்.

நவீன இலக்கிய உலகம் பரந்து விரிந்தது. ஒவ்வொரு கவிஞரும், எழுத்தாளரும் பல்வேறு நோக்குடன், பல்வேறு உணர்வுகளுடன் எழுதிக் கொண்டு வருகின்றனர்.

அவரவர்களின் தளத்தில் அனைவரும் சிறந்த இலக்கிய ஆளுமைகளே.

வாசகன் இவர்களுடைய படைப்புகளைத் தேடி ஆழமாக வாசிப்பது அவன் வாழ்க்கைக்குப் பெருமை சேர்க்கும்.

நவீன இலக்கியத்தில் சிற்றிதழ்களின் பங்கு

சுதீர்செந்தில்



இலக்கியம் என்பது ஒரு சமூகத்தின் ஒரு காலக்கட்டத்தின் கண்ணாடி. ஒரு சமூகத்தின் பண்பாட்டு விழுமியங்களைத் தெரிந்துகொள்ள அந்தச் சமூகம் இலக்கியத்தையே பெரிதும் சார்ந்திருக்கின்றது. தமிழ் ஏன் செம்மொழியாகின்றது என்பதற்கும் ஹிந்தி ஏன் எவருக்கும் தாய் மொழியாக இல்லை என்பதற்கும் விடை என்பது இலக்கியத்திலேயே இருக்கின்றது. தமிழ் மொழியில் குவிந்துகிடக்கும் எண்ணற்ற இலக்கியங்களே தமிழர் பண்பாட்டையும் தமிழர் பெருமையையும் பறைசாற்றுகின்றன.

இலக்கியங்கள் உருவாகிச் செழிப்பதற்குத் தற்காலத்தில் பருவ இதழ்கள் முக்கிய காரணமாக இருக்கின்றன. ஆனால், சங்க காலத்தில் இத்தகைய ஏற்பாடுகள் ஏதேனும் இருந்தனவா எனத் தெரியவில்லை. படைப்பாளிகள் தங்கள் படைப்புகளை எழுதி முடித்தவுடன் மக்கள் மத்தியில் அரங்கேற்றம் செய்தனர் என்பதை மட்டும் அறிந்துகொள்ள முடிகிறது.

பொதுவாக, இலக்கியங்களை இருவகையாகப் பிரித்து அறிந்துகொள்ள முடியும். ஒன்று மக்களுக்கான இலக்கியம் அல்லது மக்கள் இலக்கியம், மற்றொன்று மன்னர்களுக்கான அல்லது ஆள்வோருக்கான இலக்கியம். மக்களுக்கான இலக்கியம் பின்னாள்களில் பெரும்பான்மை மக்களுக்கான இலக்கியம் என்றும் அறிவுத் தேடல் மற்றும் மாற்றத்திற்காக சிந்திப்பவர்களுக்கான இலக்கியம் என்றும் இரண்டு வகையாக பிரிந்துவிட்டது. பெரும்பான்மை மக்கள் என்பவர்கள் ஆள்பவர்கள் பரப்பும் சிந்தனைகளை நம்பி ஏற்றுக்கொண்டவர்களாக

இருக்கிறார்கள். அத்தகைய இலக்கியப் போக்குகளைக் கடைப்பிடித்து நடத்தப்படும் பத்திரிகைகள் வெகுமக்கள் இதழ்கள் என அறியப்படுகின்றன. ஆனால் ஆள்பவர்களைப் பற்றிக் கவலைப்படாமலும் அல்லது எதிராகவும் மக்களின் நலன் சார்ந்தும் மொழி சார்ந்தும் பெரியளவில் விற்பனையைப் பற்றியெல்லாம் கருத்தில் கொள்ளாமல் இயங்கும் பத்திரிகைகள் சிற்றிதழ்கள் என்றழைக்கப்படுகின்றன.

ரஷியா, சீனா, கியூபா, இந்தியா என உலகின் எந்தவொரு நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கும் உறுதுணையாக இருந்தவை சிற்றிதழ்களே. இதிலிருந்து சிற்றிதழ்கள் இலக்கியத்திற்கான வேலைகளை மட்டும் செய்யவில்லை; அது அரசியல் மாற்றத்திற்கான வேலைகளையும் செய்தன என்று புரிந்துகொள்ள முடியும்.

இலக்கியத்தில் நவீனத்துவம் என்பதை வரையறுப்பதில் பல போக்குகள் காணப்படுகின்றன. வெறும் வடிவ மாற்றங்களை மட்டும் நவீனம் என்று சொல்ல முடியாது. அதைவிடவும் படைப்பின் உள்ளடக்கம் முக்கியமானது. உள்ளடக்கம் அல்லது கருத்தை மறுதலிப்பது அல்லது நம்பிக்கைகளுக்கு எதிரான உண்மைகளை அந்த நம்பிக்கைகளுக்கு எதிராக முன் நிறுத்துவது போன்றவையை நவீன சிந்தனைப் போக்குகள் எனச் சொல்ல முடியும்.

அவ்வகையில் தமிழகத்தில் அயோத்திதாசரால் துவக்கப்பட்ட 'ஒரு பைசா தமிழன்' இதழில் தொடங்கிய இயக்கம், படிப்படியாகப் பற்பல படிநிலைகளில் எண்ணற்ற இதழ்களால் அரசியலோடு தமிழக இலக்கியம் வளர்ந்தது.

சுதந்திரப் போராட்டக் காலத்தில் இலக்கியம் என்பது விடுதலைக்கான ஆயுதமாக பயன்படுத்தப்பட்டது. அதற்கும் முன் பக்தி இலக்கியங்கள் வாயிலாக மொழி சிறந்து விளங்கியது என்பதை நாம் இந்த இடத்தில் நினைவில் கொள்ளலாம். சுதந்திரப் போராட்டக் காலத்தில் சிற்றிதழ்கள் மக்களிடையே நாட்டின் விடுதலைக்கான வேட்கையைத் தூண்டின.

திரு.வி.க. 'தேசபக்தன்', 'நவசக்தி' ஆகிய இதழ்களை நடத்தினார். 'சுதேசமித்திரன்' 'இந்தியா', 'விஜயா' உள்ளிட்ட இதழ்களின் மூலமாக பாரதியார் தன் எழுத்தாற்றலால் மக்களிடையே எழுச்சியை ஊட்டினார். சுப்பிரமணிய சிவா, 'இந்திய தேசாந்திரி', 'பிரபஞ்ச மித்திரன்', 'ஞானபானு' ஆகிய இதழ்களை நடத்தினார். வ.வே.சு ஐயர் 'பாக்கியலட்சுமி' என்ற பெயரில் நடத்திய பத்திரிகை சிறுகதை வடிவத்தில் தனித்துவம் வாய்ந்ததாக திகழ்ந்தது. அரவிந்தர் நடத்திவந்த 'வந்தே மாதரம்' இதழும் முக்கியமான பணியைச் செய்தது. மதுவிலக்குக்கென ஒரு பத்திரிகையை நடத்தியவர் இராஜாஜி. திருச்செங்கோட்டில் உள்ள காந்தி ஆசிரமத்திலிருந்து 'விமோசனம்' என்ற பத்திரிகையை நடத்தினார். கல்கி கிருஷ்ணமூர்த்தியின் தியாகபூமி, அலை ஓசை போன்ற நாட்டு பக்தியைத் தூண்டும் படைப்புகள் ஆனந்த விகடன், கல்கி ஆகிய இதழ்களில் வந்தன. 'கிராமணி குலம்', 'தமிழ் முரசு', 'பித்தன்' 'தேசபந்து' போன்ற இதழ்களும் குறிப்பிடத் தகுந்தவை.

இந்தக் காலக்கட்டத்தில் இலக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த பல இதழ்கள் தோன்றின. செய்யுள் வடிவத்திலிருந்து வசனத்திற்கு மாறிய காலகட்டம். பிறப்பால் இத்தாலியரான வீரமாமுனிவரின் 'பரமார்த்த குருவும் சீடர்களும்' நூல்தான் தமிழில் முதல் வசன நூல் என்று சொல்லப்படுகின்றது. 'விவேக சிந்தாமணி', 'பஞ்சாமிர்தம்', 'பால பாரதி', 'மணிக்கொடி' ஆகிய இதழ்கள் இலக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தன. மணிக்கொடியில் எழுதிய பல எழுத்தாளர்கள் பிரபலமானார்கள். அவர்களுள் தலையாய எழுத்தாளர் புதுமைப்பித்தன் ஆவார். சிறுகதைகளில் பலவிதமான ஆய்வுப் போக்குகள் மணிக்கொடி இதழில் நடந்தேறின.

இடதுசாரி இயக்கங்களால் நடத்தப்பட்ட இதழ்களிலும் சிறுகதை வடிவமும் நாவல் வடிவமும் நவீனத்துவம் அடைந்தன. தாமரை, சரஸ்வதி ஆகிய இதழ்களில் பல எழுத்தாளர்கள் உருவானார்கள். ஜெயகாந்தன் சிறுகதைகளில் அசாத்தியமான சொல்முறைகளைப் பயன்படுத்தி சிறுகதைகளையும் நாவல்களையும் எழுதினார். அது 'பிரதாப முதலியார் சரித்திரம்' போன்ற புதினங்களின் சொல்முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட எழுத்தாக அமைந்தன. கி.ராஜநாராயணன் கரிசல் காட்டில் இருந்து உதயமான அற்புதமான எழுத்தாளர்.

அடுத்தடுத்த காலக்கட்டங்களில் தோன்றி இப்போது வரையிலும் 'கொல்லிப்பாவை', 'அஃக்', 'இனி', 'மீட்சி', 'கனவு', 'புது எழுத்து', 'பன்முகம்', 'அணங்கு', 'பனிக்குடம்', 'மணல்

வீடு', 'மணற்கேணி', 'தலித் முரசு', 'புதிய கோடாங்கி', போன்ற இதழ்களும் 'கணையாழி', 'சுபமங்களா', காலச்சுவடு, 'உயிர்மை', 'உயிர் எழுத்து', 'காக்கைச் சிறகினிலே' போன்ற இதழ்களும் 'கல்குதிரை', 'பறை', 'தை' போன்ற இதழ்களும் நவீன இலக்கியத்திற்கு பெரும் பங்காற்றியுள்ளன, பங்காற்றி வருகின்றன.

தமிழ் இலக்கியப் புலம் மேற்கத்திய இலக்கியத் தாக்கத்தின் காரணமாக நவீனத்துவம் அடைந்திருந்தாலும் பல ஆயிரம் ஆண்டுகள் பழைமைவாய்ந்த, மொழிச்செறிவும் இலக்கியச் செறிவும் மிக்க தமிழ்மொழி எளிதாக அதைத் தன்னுள் சுவீகரித்துக் கொண்டது.

மேற்கத்திய தத்துவப் போக்குகளை சிறுபத்திரிகைகளே தமிழிக்கு அறிமுகம் செய்தன. அந்நியமாதல், இருத்தலியம் போன்றவற்றை சிறுபத்திரிகைகள் அறிமுகம் செய்தன. ஃபூக்கோ, தெரிதா, பிராய்டு, லெக்கான் போன்றவர்களின் போக்குகள் சிறுபத்திரிகைகளிலேயே விவாதிக்கப்பட்டன. லத்தின் அமெரிக்க, ஆப்பிரிக்க இலக்கியங்கள் மட்டுமல்ல; உலகின் பல்வேறு மொழிகளில் வந்த சிறந்த படைப்புகளை மொழியாக்கம் செய்ததும், தொடர்ந்து செய்து வருவதும் சிற்றிதழ்களே.

கோணங்கியின் 'பாழி', சுந்தர ராமசாமியின் 'ஜே ஜே சில குறிப்புகள்', எம்.ஜி.சுரேஷின் 'சிலந்தி', யூமா வாசுகியின் 'ரத்த உறவு', கண்மணி குணசேகரனின் 'அஞ் சலை', பிரான்சிஸ் கிருபாவின் 'கன்னி', சாரு நிவேதிதாவின் 'ஜீரோ டிகிரி', ஜெயமோகனின் 'ஏழாம் உலகம்', சு.தமிழ்ச்செல்வியின் 'கீதாரி', சல்மாவின் 'இரண்டாம் ஜாமங்களின் கதை', லஷ்மி சரவணக்குமாரின் 'உப்பு நாய்கள்' போன்ற முக்கியமான நூல்கள் தமிழில் நவீனத் தன்மையுடன் எழுதப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் சிறுபத்திரிகை மரபில் தோன்றியவர்கள்.

செய்யுள் வடிவத்திலிருந்த கவிதையை பாரதியார், ந.பிச்சமூர்த்தி, நா.காமராசன் போன்றவர்கள் புதுக்கவிதை நடைக்கு மாற்றினார்கள். 'வானம்பாடி' இதழ் கவிதையில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. தணிகைச்செல்வன், அப்துல் ரகுமான், மீரா, மேத்தா, வைரமுத்து போன்று பல பிரபலமான கவிஞர்கள் உருவானார்கள். 'எழுத்து' பத்திரிகை கவிதையில் புதிய போக்குகளை, கவிஞர்களை உருவாக்கியது எனலாம். சி.மணி, சுந்தர ராமசாமி, கல்யாண்ஜி, கலாப்ரியா, விக்கிரமாதித்தன், ஆத்மநாம், தேவதச்சன் போன்ற கவிஞர்களை குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

90களுக்குப் பின் வந்த இதழ்களிலும் நவீன கவிதைக்குப் பங்களிப்புச் செய்த கவிஞர்கள் உருவானார்கள். மனுஷ்யபுத்திரன், யவனிகா ஸ்ரீராம், கரிகாலன், சுதீர் செந்தில், தேவேந்திர பூபதி, செல்மா பிரியதர்சன், இசை, கனிமொழி, தமிழச்சி தங்கபாண்டியன், சல்மா, லீனா மணிமேகலை, குட்டி ரேவதி, சுகிர்தராணி, ஜீனத், லிபி ஆரண்யா, கண்டராதித்தன், ஸ்ரீசங்கர், ஆத்மார்த்தி என இந்தப் பட்டியல் நீள்கிறது.

திராவிட இயக்க இதழ்களும் மிக முக்கியமான பணியை இலக்கியத்தில் செய்துள்ளன என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். ஏனெனில் தமிழகத்தில் இன்று நிலவும் சமூக நீதி விழிப்புணர்வுக்கு நவீன மொழியின் மூலம் வித்திட்டதில் திராவிட இயக்க இதழ்களுக்குப் பெரும் பங்கிருக்கிறது.

கன்னி, அலை ஓசை, கதிர், கலைமன்றம், காதல், குத்தூசி, குயில், குறிஞ்சி, திராவிடன், தனியரசு, நாத்திகம், புதுவை முரசு, பொன்னி, காஞ்சி, திராவிடன், ஞாயிறு, தென்னகம், மன்றம், பகுத்தறிவு, விருந்து, போராட்டம், புரட்சி, தளபதி, களஞ்சியம், சிந்தனைத்துளிகள், எதிரொலி, நெல்லைத்தோழன் எனத் தமிழகமெங்கும் பத்திரிகைகள் நடத்தப்பட்டன. பேரறிஞர் அண்ணா, கலைஞர் மு.கருணாநிதி, நாவலர் நெடுஞ்செழியன், தென்னரசு போன்ற தலைவர்கள் திராவிட இயக்கக் கருத்துகளை நவீன மொழியில் இலக்கியப் பத்திரிகைகள் மூலம் பரப்பினர். பக்தி இலக்கியமும் சுதந்திர போராட்டக் கால இலக்கியமும் மட்டும் அல்ல; திராவிட இயக்கமும் சிற்றிதழ்கள் மூலம் நவீன தமிழுக்கு அளப்பரிய பணிகளைச் செய்துள்ளது.

ஆயிரமாயிரமாண்டுப் பாரம்பரியச் செழிப்புடன், தமிழுக்கே உரிய செறிவுடன் சேர்த்து, உலகின் போக்குகளையும் உள்வாங்கி எண்ணற்ற சோதனை முயற்சிகளை மேற்கொண்டு தமிழ் இலக்கியத்தை நவீனப்படுத்தியதில், நவீனப்படுத்தி வருவதில் சிற்றிதழ்களுக்கே பெரிதும் பங்கிருக்கிறது என்றால் மிகையில்லை.



ஓவியம்: மருது

சிறுகதை

நத்தைக்கூடெனும் கேலக்ஸி

கோணங்கி

வெளியில் தெரியாத அந்த நீர்வீழ்ச்சியின் அனாதியான சப்தம் கேட்டு மலை இடுக்கில் உயரும் நத்தையின் உணர்கொம்புகள் மெதுவாகத் தொட்டு மூங்கில் புதர் எரிகிறது. எழுந்த தீயில் அசையும் விரல்கள் சாண் குழல் கொண்டு மாடுகளின் பெருமூச்சை வாசிக்கின்றன. பரட்டைத் தலையும் செம்பட்டைக் கண்களும் வெளிப்பட்டு கருத்த உதடுகளில் நுரை பொங்கி மறையும் பால் வெளியை இசைக்கும். உடங்கம்பில் சாய்ந்தவாறு மோனத்தில் மறைகிறான் மாட்டுக்காரச் சிறுவன். மலை விறகு உடைக்கும் காட்டுச் சிறுமிகளின் ஆயுத ஒலிகள் மலைகளில் தெறிக்கின்றன. அருவாள்களை வீசி எழுகின்றது வயல். மஞ்சள் வெளிறிய நெல் வெய்யிலில் கரையும். நெல்லின் பால் பருவத் தம்பலப் பூச்சிகள் ஆயிரம் நிறங்களைப் பகிர்கின்றன பூமியோடு. காட்டிலந்தை முள்ளுகளின் உச்சியில் தம்பலப்பூச்சிகள் பதிந்து சிறகுகள் படபடக்கின்றன. முள்ளில் சிக்கிய காற்று பரபரவென்று கிழியும் ஓசை. தம்பலப் பூச்சிகள் பறந்து தலைகீழாய் நகர்கிறாள் ஒசே. அவற்றின் ஆயிரம் நூல்கள் பாதைகளாய் நீளும். தலைகீழாய் பறந்துவந்த பெண் பறவையின் நீண்ட அலகு நகரின் மீது மோதி பற்றி எரிகிறது பறவை. வாயில்லாப் பூச்சிகளின் மௌனங்களை வீடற்றவன் திசைகளிடையே வாசிக்கக் கூடும். நெஞ்சுக்குள் பதிந்த இரட்டைக் குழல் ரத்த நாளங்களிடையே பயணமாகின்றது. இருவேறு காலங்களில் வாசிக்கப்படும் குழலாக இருக்கும். அமெச்சூர் நாட்டியங்களின் பெரும் சலிப்பில் வாசித்துக் கொண்டிருந்த இரட்டைக்குழலை தோளில் சுமந்தவாறு இனம் புரியாத பயத்தில் குடித்துவிட்டு தள்ளாடி ஒரு அகதி போகின்றான்.

வேறொரு நகரில் தொலைந்து, இன்னொரு நகரில் தேடப்பட்டு, தலைநகரின் தெருவில் சுடப்பட்டு மலைநகரில் அந்நியனாக இருக்கும் அவன். இரவுப் பகுதிகள் எல்லாம் மூடிய பின்னும் குடிப்பதற்காக அவன் நாக்கு பரபரத்தது. இருளில் பாடியபடி நடந்து போகின்றான். நட்சத்திர நகரில் அவர்களும் இவர்களும் இவனும் நானும் நீயும் அவனும் பெயர்களை மாற்றி மாற்றி நடந்து போகின்றார்கள்.

மலைகள் நகர்கின்றன நட்சத்திர நகரை நோக்கி. காணாமல் போன அவன் பெயர் மாற்றிக் கொண்டு அந்நிய நகரில் திரியக் கூடும். நிறக் கண்ணாடிகளால் மாறும் கூம்பு வீட்டின் ஜன்னல் திறந்து வெண்ணிறமாக சீனி விரல்கள் கீழேபோகும் அவனை சைகை செய்து அழைக்கின்றன.

கண்ணாடியில்தாளமிட்டவாறு பழைய வால்ட்ஸ் நடன இசைத் தட்டுகளை சுழல விட்டு கதவுத் துவாரங்கள் மரச்சட்டங்களின் இடுக்குகளில் கசியும் மொசார்ட்டின் சிம்ஃபனி இசைக்கோலங்களில் இலைகள் படர்ந்து மலைப்பூச்சி மனிதர்கள் ஊர்ந்து வருகிறார்கள். கல்கோடுகளில் வாழ்ந்த ஊசிகள் தரையில் க்ளிங்... கென்று தெறிக்கின்றது. கிராம போன் ஊசிகளில் பதுங்கி வரும் மலைப்பூச்சி மனிதர்கள் மொசார்ட்டிடம் தொடங்கி எங்கே போகின்றார்கள் என்று தெரியவில்லை.

மொசார்ட்டின் கையெழுத்தில் அவரின் பெயரே நத்தைக்கூடு நகரும் வடிவம். முடக்குவாத விஷம் வாய்ந்த உலோகக் கலவையால் நீலம் பாரித்த அவன் இறந்தபடி தனக்காக எழுதிக்கொண்டிருந்த அஞ்சலி இசைக் குறிப்புகளை தன் சீடன் சுஷ்மேர் நிகழ்த்த மௌனமாகப் பணித்தான். அது இசைக்கப்பட மொசார்ட் இறந்தபோது இளங்காற்று அலையெடுத்து மெலிதாக எங்கும் வீசியது அவனின் மூகை அசைத்து அக்காற்றினூடே மொசார்ட்டின் அம்மண உடல் ஒரு லினன் துணிக்குள் வைத்து அந்நகரின் கல்லறைக்குள் இறக்கப்பட்டது.

மொசார்ட்டின் சாம்பல் நிற நீரின் பாதைகள் தொடங்கி விட்டன; அவற்றின் அனாதியான சொற்றொடர்களை நீர்வீழ்ச்சி உச்சரித்தபடி இருக்கிறது. உயரத்திலிருந்து தொங்கும் சாம்பல் நீரின் மீது பக்கபக்கமாய் வெண்ணிற யுவதியின் வரைபடங்கள்: பாடலில் முடிவு பெறாத வாக்கியங்கள்; எல்லா விரல் கொண்டும் பதிந்த பூச்சியின் கால்கள் கீறிய விநோதமான கீறல்கள்; கைத்துப்பாக்கியால் சுடப்பட்ட பொம்மைகள்; உடைந்த விமானங்கள்; ஸ்பிரிங் சிப்பாய்கள் பனிரெண்டு பேர்; பியானோவிற்கு அடுத்த ஸ்னூக்கர் ஆட்ட மேஜை பல வர்ணப் பந்துகள்; விளையாட்டு ஆடுபுலி பாம்புக் கட்டங்கள்; வால் தூக்கிய ப்ரவுன் ரப்பர் தேள்கள் எல்லாம் அவளுடையதுதானா? அவனுக்குத் தெரியவில்லை.

மொசார்ட்டின் பெயர் சொல்லி அழைத்த மரப்பல்லியின் தடித்த கண்பட்டை விளிம்புக்குக் கீழ் பைத்திய ரேகைகள்; அதன் கண்களில் விழுந்த கருவளையத்தின் ஆழத்தில் சிவந்து போன மந்திரப் புல்லாங்குழல் எரிந்து கொண்டிருக்கிறது இசையில்.

அதில் காற்றின் மெதுவான தடங்கள்; பல்லியின் கால் ஜவ்வுக்குள் அழுத்தப்பட்ட காற்று இறுகிக்கொண்டு இருக்கிறது. காற்றில் பதிந்தது வாரங்களை பல்லியின் மர விரல்கள் மூடித் திறக்கின்றன. அசையாத பல்லி ஒளிந்துகொண்டு திவலைகளில் தலைகீழாகத் தெரியும் வியன்னா நகரத்தின் பழுப்படைந்த வரைபடத்தைக் குறுக்காகக் கடந்து கொண்டிருந்தது.

இற்று ஒடிந்து கொண்டிருக்கும் வரை படத்தில் பதிந்த பல்லியின் நிழல்கள் வியன்னாவின் மையத்திலிருக்கும் ஆயுதச் சாலையில் சிறை வைக்கப்பட்ட வெண்ணிற யுவதியைத் தேடுகின்றன. வியன்னா நகரின் எல்லா வீடுகளின் ஜன்னல் கம்பிகளில் மொசார்ட்டின் வெண்ணிறமான கையுறைகள் காய்கின்றன.

மொசார்ட் சிறுவயதிலேயே இறகினால் தோல் ஊசிகளால் நாண்களை மீட்டி இந்த யாழை இசைப்பதில் கை தேர்ந்திருந்தான். அவன் உயிர் செவ்விய தொனிகள் கொண்டதொரு இசைக்கோர்வை எப்போதும் ஈரம் தோய்ந்திருக்க வேண்டும். விதை நெற்றுள் தனித்துவரும் இசை அவனின் நதிகொள்ளும் பிரவாகம்.

''பறவைகள் பாடுவதற்கு நிலத்தில் அமர்வதில்லை'' என்று சொன்னான் நாடோடி

நாவிதன். ஒப்பேறா ஒரு அபத்தம் இவன் ஒழுங்குகள் பாடலில் வெளிக்கொண்டிருக்க அரசியல் விவாதத்தில் உறழ் உற்ற இசையை இருவர் பாடுகிறார்கள்.

சமாதியைச் சுற்றி மக்கள் நடனமிட கத்தி வீச்சுகள் இன்னிசை கொள்கின்றன. இசையை விடமிகையாக வெளிப்படும் சொற்களில் மனிதர்கள் ஏன் இறக்கிறார்கள். எல்லா நாட்களையும் அரங்குகளின் முணுமுணுக்கப்படும் மென்மையான ஜாவளி காதற் பாடல்களையும் யார் மௌனம் கொள்ளச் செய்வார்.

இரும்புப் பந்துகள் மெதுவாகவோ துரிதமாகவோ கொள்ளும் அசைவுகளை மெய்யுணர்வு இசைப் பிரதிகளாக சிருஷ்டி மனம் கொண்டு இருந்தான் மொஸார்ட். தன்னந்தனியே அவன் உணர்ந்த இசைக் குறிப்புகளை விளையாடும்போது உணர்ந்த இசைக்குறிப்புகளை இந்த பில்லியட் மேஜை மீது வைத்து எழுதிக் கொண்டான் மொஸார்ட்.

எப்போதும் மொஸார்ட் ஒளியையும் சாயைகளையும் வழங்கிச் சென்றான். அவனது ஒளி எவரையும் குருடாக்குவதில்லை. அவனது இருள் இன்னமும் தீர்க்கமான வரைகளை கொண்டுள்ளது. மிகத்துயரார்ந்த சூழலிலும் அவளின் உவகை கூறுதல் இருந்தன. அவனது புன்னகை தூய ஆன்மாவினுடையது அலகு தழுவியது. அவன் ஒரு இளைஞனைப் போல் இளமையானவன். கிழவியைப் போல் ஞானமுடையவன். அவன் பழமையானவனோ நவீனமானவனோ அல்ல.

அவனது விரல் நாண்களில் சூனியக்கரம் இழைய கடக்கும் போது அவனது உதடுகள் பாடலின் ஊடே ஆன்மாவை முத்தமிடுவதாகத் தோன்றின. மொஸார்ட்டின் மிக சரி நுட்ப மெல்லிய இன்னிசைக் கோலங்கள் முடிவிற்கு வந்து கொண்டிருப்பதாக நீ நினைக்கும்போதோ மென்மேலும் அப்பால் செல்வதாகிறது.

இறக்கும் வரியவனின் மந்திரப் புல்லாங்குழல். ஒருபோதும் போலிமையற்ற மிக சரி நேரிய சுவாசம் மொசார்ட்டின் இசை. மொஸார்ட் சூரியனாக இருந்தான். மொசார்ட் பிறந்த வீட்டைச் சுற்றிலும் பனிரெண்டு ஸ்பிரிங் காவலர்கள் நடந்தபடி இருக்கிறார்கள். அவன் பொம்மைகள் புதைக்கப்பட்ட இடங்களை செடிகளும் கற்பனைத் தாவரங்களும் மூடியுள்ளன.

துருபிடித்த ஆயுதங்களில் படர்ந்த பாசிகளில் கூடுவைத்திருந்த நீலப்புழுக்கள் கூட்டை உடைத்து, கால்களை இழுத்து, பின்னிக் கிடந்த முட்டைகளிலிருந்து வெளியேறி, செட்டைகளை அடித்து, துடிதுடிப்பில் பறந்து வருகின்றன நீலத்தும்பிகளாய். அந்நகரில் இருக்கும் மறைவிடங்களில் இசை ஊற்றிலிருந்து திவலைகளை உருட்டி சிந்தாமல் சிதறாமல் நட்சத்திர நகருக்குத் தூக்கிச் செல்கின்ற நீரின் இசையை உருட்டி, நீர்ஸ் படிகத்தில், மொசார்ட்டின் உருவத்தை நூற்றாண்டின் கனவுகளுக்குள் தூக்கி எறிகின்றன பறக்கும் தும்பிகள்.

ஆதார ஊற்றின் அடியில் அசைந்து கொண்டிருக்கும் தைல வண்ண நீர் ஓவியத்திலிருந்து சாம்பல் பூனை வெளிக்கிளம்பி, பாசியடைந்திருந்த சிங்க முகவாயில்களில் நுழைந்து அசையாத காவலர்களைக் கடந்து கோட்டைக்குள் பிரவேசித்தது. சாம்பல் பூனையின் உள்பாதங்களில் இருந்து சப்தமற்ற காலடிகள் பதிகின்றன.

அதன் நிசப்தத்தை உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கும் மதில் சுவர்களில் பூனையின் தடங்கள் இருப்பதாகத் தெரிகிறது; பட்டும் படாமல் நடந்துபோன வெற்றிடத்தில் நிலவும் தடங்கள் தாமே நகர்கின்றன. பதிந்து வசிப்பிடங்களின் சூட்சுமங்களை அறிந்த கால்கள் இருந்த கால் எடுத்து நடந்த காலில் மொசார்ட்டின் நிழல் படரும். மோப்பத்தில் தோன்றும் மந்திரப் பாதைகளில் ஊர்ந்து செல்லும் கபில நிறக்கண்கள் கங்கெனப் பழுத்து எரிகின்றன.

அடிமாலியில் பாசி படர்ந்து தொங்கி கொண்டிருந்த இறக்கும் வறியவனின் மந்திரப் புல்லாங்குழலில் பிறந்த சுருள் நத்தை மலைகளுக்குள் சீறுகின்றது. வேட்டைக்கான வில்லும், அம்பும் மலை மீது அதிரும். வேட்டைக்குரல் யாரை அழைக்கின்றது? உயரத்தில் எரியும் கற்களுடன் பறக்கும் நத்தையின் வெண்கூடு. அதில் சுருண்ட பிரபஞ்ச கானம் மறைந்தவளின் குரலா?

பிரபஞ்சத்தின் குரல் அழைக்கின்றது. அழைப்பின் திசை நோக்கி அம்புகள் பறக்கின்றன. பிரபஞ்ச ஓசையில் நெடுகிப் பாய்ந்த அம்புகள் மறையும். ராட்சஸப் பறவையின் இறகு ஒன்று சுழன்று சுழன்று கீழ்நோக்கி வருகிறது. ஆள் உயர இறகின் ஸ்பரிசம் கண்டு அந்த இறகின் கண்களில் எழுதப்பட்டிருந்தது எரிந்துபோன பெண் பறவையின் காவியம். அவளின்றி எழுதிச் செல்லும் இறகு, மொசார்ட்டின் கையுறை அணிந்த விரல்கள் எழுதிச் செல்கின்றன.

வெகுதொலைவில் அசையும் விரல் அவளுக்கான இசைக்குறிப்புகளை பதியும்போது; ஓர் அபூர்வ இறகின் சரித்திரத்தை அதே இறகு கொண்டு மொசார்ட் எழுதிக் கொண்டிருக்கும்போது, அதுவரையில் இல்லாமலிருந்த இறகு முளைத்த காவியம் இறகுக்குள் செதுக்கப்பட்ட வடிவங்கள் எல்லாம் விரல்களைச் சுடுகின்றன. ஊமையான நரம்புகள் எதை உணரக் கூடும். இறகின் சாம்பல் கட்டங்களில் மொசார்ட்டின் சாம்பல் கோடுகள் அவன் கண்களைக் கீறிச் செல்கின்றன.

அவன் இருப்பிடத்தில் ரேகைகள் பட்டு சிதைந்து கொண்டிருந்தது எல்லாம். இறகுக்குள் ஊர்ந்து மறைகிறான். எழுதிச் சென்ற மொசார்ட்டின் விரல்கள் மறைகின்றன. அந்த அபூர்வ இறகிலான படகில் ஏறிச் செல்கிறான். அவன் நிஜமான பெயர் கூவி அழைத்த பறவையின் இசை. மௌனமாய் மிதந்து மிதந்து வெற்றிடத்தில் செல்லும் படகு. யாருமின்றிக் கேட்பாரின்றி அவள் காவியம் நத்தைக் கூட்டுக்குள் ஒடுங்கியது.

அப்பெரிய இறகு தந்த பெண் பறவையின் ஒற்றைக் கண் நத்தைக்குள் தனியே மிதக்கிறது. உள்ளே அவள் இல்லை. தாறுமாறாய் கோடுகள் வந்தன. இறகுப் படகிலிருந்து நத்தைக் கூட்டின் குகை வாயிலை அடைந்தான். வாய்பிளந்த குகைக்குள் அதிசய இறகு சென்று கொண்டிருக்கிறது.

இறகில் அவள் மூதாதைகளின் நிழல்கள் அசைகின்றன. இறகுத் துடுப்புகள் கொண்டு கடந்து போகிறார்கள். உருவமின்றி நிழலாக இருந்தார்கள். எல்லா நிழல் கொண்ட தண்ணீர் அசைய அசைய யார் யாருடைய நிழல்களோ தோன்றுகின்றன. அவனுக்குத் தெரியாதவர்களுக்குத் தெரிந்த முகங்கள் இருந்தன.

இனந் தெரியாத மயக்கம். தலைகீழாகச் கருண்ட வானில் கிரகங்களின் நகர்வு. உயரத்தில் மலைகளில் ஓர் மழைக்காலத்தில் பாலங்களைக் கடந்து போன ரயிலில் அவனுடன் யார் யாரோ இருக்கிறார்கள். அவர்களிடையே பார்த்த அந்தப் பெண்ணுருவம் திரும்பவும் தோன்றி ஆழத்தில் மறைந்தபடி இருக்கிறது.

உள்புறம் எட்டிப்பார்த்தால் கற்குகையின் கதகதப்பு. வேட்டையாடப்பட்ட மிருகங்களின் தோலால் ஆன சுவர்களில் அம்மிருகங்களின் வடிவங்கள். குகையின் உள்சுவர்கள் மிக மெல்லிய நீரால் ஆனவை. மீன்தொட்டிக்குள் இருக்கும் மென்மையான கனவு நிலை. ஒளிஊடுருவும் ஸ்படிக நீரோடைகள் வயல் மீனின் கண் நீந்தி வந்து அவனைக் கவ்விச்சென்று கருள் நத்தையில் தோன்றும் நட்சத்திர நகரின் மையத்திலிருந்த நீர்த்தோட்டத்தில் அவனை மறைத்தது.

நட்சத்திர நகரிலிருந்த மொசார்ட்டின் இசை எண்கள் முளைத்து கற்பனைத் தாவரங்கள்

பரவிக் கிடந்தன. யாருமில்லாத நட்சத்திர நகரில் எல்லோருக்காகவும் சுற்றிக் கொண்டிருந்த மொசார்ட்டின் கறுப்பு இசைத்தட்டுகளில் கோடுகள் மறைந்து தோன்றி வருகின்றன. நட்சத்திரங்களின் அபூர்வ நிறங்கள் மாறிமாறிச் சுற்றும். செதுக்கப்பட்ட மொசார்ட் உருவம். மெல்லிய இசைக் கோடுகளில் எல்லாப் பெண் உருக்களும் ஈயநிற வெளியில் நீந்துகிறார்கள் நிர்வாணமாய்; மரங்களின் சாயலில் அண்ணாந்த மோனத்தில் அசைகிறார்கள். நட்சத்திர நகரில் எல்லோருடைய வடிவும் இருக்க வேண்டும்.

அந்நகரின் மடிப்பு வீதியில் பாய்ந்து சென்ற சிங்கத்தின் மீது நிர்வாணமான ஓசே வீற்றிருந்தாள். நகரின் எல்லா நீர்க் கண்ணாடியிலும் ஓசேயின் ரூபம் வெட்டப்பட்டு தோன்றி மறையும். அவள் காணாமல் போன அதிர்வு நகரமெங்கும் வருகிறது. வெற்றிடத்தில் அவள் சாயை தெரிகிறது. நெருங்கி, நெருங்க மறைகிறது. அவள் தோற்றங்கள் மறைந்த காற்றுச் சுருள் குபுகுபுவென வெளிக்கிளம்பும். வெண்கூட்டுக்குள் அசையும் பிம்பங்கள். யாரென்று தெரியவில்லை. சாயைகள் பதிந்த கூடு. யார் யாருடைய குரல்களோ எவை எவற்றின் மௌனங்களோ நிலவும் அங்கு. காணாமல் போனவற்றையெல்லாம் கொண்டு செல்லும் புகை நிற கேலக்ஸி விண்ணில் தடம் நீள்கிறது. அது சுற்றும் பாதை மெல்லிய கோடாக பதிகிறது.

கூடுகளை விட்டு வெளியேறியவர்கள் விட்டுச்சென்ற பிரக்ஞை படரும். எல்லோரது பிரக்ஞை வெளியே நத்தைக் கூடு. அவற்றுக்குள் எழுதிக் கொண்டிருக்கிறான் நத்தையின் உணர் கொம்புகளால். ஒட்டிக்கொள்கிற உணர் கொம்பில் ஸ்பரிசிக்கப்படாத உணர்வுகள் சுரக்கின்றன. நத்தையின் உடலில் சுரக்கும் தைலத்தால் எழுத நேர்ந்தது. துடிக்கும் உணர்கொம்பில் நிஜ உருவாக வரும் கோடு. கற்பனைக்கோடு உயிர்பெற்று விடும். தொற்றி விரியும் கோடுகளில் அழியாத நிறங்கள் வரும். நேரடி மரங்களின் மெல்லிய இலைக் கூட்டம் துல்லியமாக அசைந்து பரவும் கடல் சத்தம்; வெளிர் சிவந்த கற்பனை இலைகள் படரும். தோல்வரை படங்கள் கீறி வரைந்து வெளிப்படுகின்றன. அவற்றை உலவவிட்டு நகர்ந்துவரும் கேலக்ஸி. கற்பனை மிருகங்கள் கதாதீத சரித்திரத்தின் பழுத்த காகிதங்கள் உருமாறுகின்றன. நகரங்களின் கோடுகள், தெருவில் சர்வே படங்கள் வந்து விடுகின்றன.

சரியான தூரத்தில் எதிர்ப்பட்ட ஒருவன் எதிர்பாராத சந்தில் நுழைகிறான். தப்ப முடியாத பாதைகளில் ஸ்பிரிங் காவலர்கள் எந்திரத் துப்பாக்கிகளால் அவனை விரட்டுகிறார்கள். விடுதி ஜன்னல் திறந்து அமெச்சூர் நடிகையின் ரோஸ் பவுடர் முகம் தோன்றி தப்பிப்பதற்கான சூதுக்கட்டங்களை சைகை செய்து விளக்குகிறாள். உயரத்தில் பறந்த நட்சத்திர வரிசையைக் காட்டி தெரு அமைப்பைச் சுட்டுகிறாள். சுடப்பட்டு கண்ணாடிகள் உடையும் சடாரென்ற சப்தத்துடன் அவள் வீறிடல். விடுதி விளக்குகள் அணைகின்றன.

ஏற்கனவே பெயர் மாற்றிச் சுடப்பட்ட அவன் உடல் பதன பீடத்தில் வைக்கப்பட்டுள்ளது. எந்தப்பக்கம் விலகினாலும் விசையின் கவனம். கைகளைத் தூக்கி அகப்படுகிறான். அவன் பாஸ்போட்டில் இருந்த சீல் வைத்த புகைப்படத்தைக் கிழித்து மென்று தின்றவாறு தாடைகள் அசைகின்றன. துப்பாக்கிக் கத்தியால் அவன் தாடைகளைப் பிரிக்க முடியாமல் சுத்தி நறநறவென்று கோபிக்கிறது. பெயர் இல்லாத பூச்சியாக சிறைச் சுவர்களில் நகர்ந்து நகர்ந்து ஜன்னல் கம்பியைத் திருகித் திருகி ஒன்றை ஒடித்துக் கொண்டு தொப்புள் குழியில் குத்திக்கொண்டு கம்பியின் மறுமுனையை சுவரில் ஒட்டி அழுத்துகிறான். சாவதற்கு முன் தன் ரத்தப் பெருக்கில் நீந்திக் கொண்டிருக்கிறான்.

அகதியின் ரத்தத்தில் கழுவப்பட்ட சிறைச்சாலையில் ஸ்பிரிங் காவலர்கள் கறுப்பு பூட்ஸ்களை நகர்த்தும் ரீஒலி சாவதற்கு முன் சிறிது மயக்கத்தில் இருந்த பிரக்ஞையால்

அவன் யாரென்று தெரிந்துகொள்ள முயற்சிக்கிறான். மிஞ்சிய உயிர் அடையாளம் பார்க்கும் உஷார் கொண்டதென தன்னையே சந்தேகிக்கிறான். தன்னைத்தானே காட்டிக்கொடுக்கும் தன் கண்களையும் நம்ப முடியாமல் தற்கொலை விளையாட்டில் தன்னைத் தோற்கடிக்க விரும்புகிறான். தரையில் பரவிக்கிடக்கும் ஸ்பிரிங் சிப்பாய்கள் பனிரெண்டு பேர்; மூன்று கம்யூனிஸ்ட் கமிஸார்கள்; இரு வேட்டை நாய்கள்; பெண் உருவிலான நீலப்புலி; அவனை மாய்த்து விடுகிற விதியின் விளையாட்டுப் பலகை இவ்வாறு அவன் தற்கொலை செய்து கொண்ட சதுரங்கக் கட்டங்களில் அவன் இரண்டாவது உடல்.

நகரத்தின் பீடத்திலிருக்கும் அவன் பதன உடலை எடுத்துவிட்டு இரண்டாவது உடலைவைக்கும் ஆள்மாறாட்ட விளையாட்டுகள் அறிந்த காவல்துறை வேறொரு விதியில் பிறழ்வு கொள்கிறது. கறுப்புத் துணி மூடப்பட்ட இருதலைகளை அடையாளம் கண்ட காவலன் ஒருவன் தன் நிழல் தன்னுடனே சேர்ந்து வருவதில் பைத்தியம் பிடித்து ஓடிக்கொண்டிருக்கிறான். புதிரில் சிக்கிக் கொண்ட காவலன் சுடப்படுகிறான். தொடர்ந்து விசில். தன் இரு பதன உடலுக்கு அடியில் பதுங்கியிருந்த அவன் தப்பித்து கொள்கிறான். அவன் யாரென்று அவனுக்கே தெரியவில்லை. தெரியாதவனாக இருந்து தன்னை யாரென்று தெரிந்து கொள்ள ஒவ்வொரு விநாடியிலும் மாறிக் கொண்டிருந்த கேலக்ஸியின் பிரக்ஞை வெளியில் எதை எதையோ பதித்து வருகிறான்.

நூற்றாண்டின் சுழல் வட்டப் பாதையில் சிக்கி வேறு வேறு மனிதனாகப் பயணமாகிறான். ஒவ்வொரு திருப்பத்திலும் கைத்துப்பாக்கி மாறிக் கொண்டிருந்தது. அவனை நேரில் காண்பதற்கு காத்திருக்கிறார்கள். பைத்தியமாவதற்கு முன்பிருந்த கண்களின் வெறுமையுடன் அடைக்கலம் புக இடமின்றி பூட்டப்பட்ட அறைகளில் கதவு எண்கள் திருத்தப்படுகின்றன. காட்டிக் கொடுப்பவர்கள் துடைக்கப்பட்ட கண்ணாடிக் கோப்பைகளுடன் நெருங்குகின்றார்கள். மொசார்ட்டின் மந்திரப் புல்லாங்குழல் சுருதியேற, வறண்ட மலையில் ஏறி, ஒரு லய மலரைப்பறித்து இறங்கும் விருந்தறையில் விஷக்கோப்பைகள் மதுக்கோப்பைகளுடன் இடம் மாறுகின்றன.

உலோக விஷத்தின் தகடுகள் எரிந்தபடி எழுத்தில் படுகிறது. கண்ணாடிக் கோப்பையில் ஒருதுளி ரத்தம் ஒட்டி லய மலராய்த் தோன்றி மறைகிறது. காட்டிக் கொடுப்பவர்கள் உதவியுடன் தப்பி ஓடுகிறான். நகரத்தின் வேகத்திற்குள் பைத்தியமாகிக் கொண்டிருந்த பாதைகள் வசீகரமாய் சுற்றிச் சுற்றி சுற்றுகின்றன அவனை. எல்லாத் தெருக்களிலும் ஓடித்தொலைந்து போகிறான். அந்நகரின் கல்வெட்டிலிருந்த வார்த்தைகளின் படி வந்து சேர்கிறான் நட்சத்திர நகருக்கு.

நத்தைக் கூடுகளின் வெற்றிடம் தேடி வசிக்கக் கூடியவன், வெற்றிடத்தின் பிரக்ஞை எழுதிக் கொண்டிருப்பதால் எழுதிக் கொண்டிருக்கிறான். கேலக்ஸியில் சுருண்டிருந்த நத்தை எங்கே போனதென்று தெரியவில்லை. நத்தையின் உருமாற்றத்தை அடைந்து விட்டிருந்தான். எழுதப்பட்ட முன்வரிகள் ஓடிந்து விழுந்தன.

நத்தையான அவன் உணர்கொம்பில் பச்சை உயிரிகள் மர்மமாகத் தொட்டு ஸ்பரிசம் படாத இடங்களில் நகரும். தனக்குள் துளிர்விடும் நீர் இலைகள் ஏந்தி அதிர்கிறது. ஏகாந்தத்தில் பரவும் நீர் மரத்தின் மந்திர இசை சதா சலனமடைகிறது. அந்த நீர் மரத்தின் அனாதித் துக்கத்தில் கலந்துவிடும் நத்தை. கனவுக்குள் நகர்கிறது வெண்ணிற கேலக்ஸி.

எல்லா உயிரின் தோற்றத்திலும் இலை நரம்புகள் பிறக்கின்றன. இலை வீடுகளில் துயிலும் நத்தைகள் ஊரின் இசையாரும் கேட்டறியாத பாதையில். அடிமாலி மலைகளுக்குள் உருண்டு சரிகிற விசில் செஞ்சாம்பல் ஓடுகளில் புகுந்த காற்று சுருண்டு மணல் புகைகிறது. தும்பியாய் மெலிந்திருந்த அவள் குரல் மொசார்ட்டின் ஒபெராவில் சுருண்டு சுருண்டு

பெரும் சப்தம் கொண்டு கூவுகிறது. கருஞ் சிவப்பு நத்தைக் கூடுகள் பறக்கும் வெளி.

பிறைகளின் சுழற்சியில் கரகரவென்று முதுமையடையும் ஓசை. பாசி மூடிய நத்தைக் குரல் விசில் கற்றையாக மாறுகிறது; அது ஓசே... அவள் உருவம் கரைந்து மிகச்சிறிய தம்பலப் பூச்சியாக மாறி வெகு தொலைவு பறந்து மறைகிறாள். எங்கும் இரவின் குரலில் நத்தையின் விசில். ஆயிரம் கூடுகளில் காற்று மர்மமான நிறங்கள் வைத்து நகரும். காற்றுக் குமிழ்கள் உடைந்து ஆயிரம் தம்பலப் பூச்சிகள் தொடுவதற்காக வேண்டி குழந்தைகளிடம் பறந்து போகின்றன.

சிறுமிகளின் ஒளிவீசும் காலடிகள் எங்கே நகர்கின்றன. காடுகளின் ஏகோபித்த விசில் கற்றை சுழன்று ஒவ்வொரு இலை மூச்சிலும் கரைகிறது. மலைகளுக்கு மேல் விசில் பறக்கும். சூறாவளி சுழன்றடிக்கும். காணாமல் போன மலை மாடுகளின் தகரமணி எரிந்தவாறு பறக்கிறது. எரியும் ஜ்வாலைக்குள் செந்நிற நத்தைகள் ஊர்ந்து செல்கின்றன. பசும்பாறையில் ஒட்டி மல்லாந்தவாறு நட்சத்திரங்கள் திரள்வதைப் பார்க்கிறான்.

பெண் பறவை கீழாய் பூமியில் மோத மீண்டும் விசிறி எழுந்து சுழன்று கணையுமிழ் சரமெனப் பறக்கிறது. நிறம் மாறிக் கொண்டுவரும் நட்சத்திரம் ஒன்றை நோக்கி இலைகள் சுருள்படும். இலைச்சுருளில் தொங்கும் ஆயிரம் நத்தையோடுகளில் காற்றின் விதவிதமான பாதைகள். சப்தபேதங்களின் எண் வரிசை ஏறி இறங்கும். இலையின் சாகரத்தில் கருஞ்சிவப்பாய் உருத்திரளும் நத்தைகள் சீறிப்பாய்கின்றன.

அதில் துயிலும் கதை ராசிகளின் இடைவிடாத முனகல். செந்நிறமான சூரியோதயத்தில் ஒட்டி நகரும் நத்தைக் கூடுகள் சிற்ப கோடி ரகசியங்களின் பாதையை கடந்து கொண்டுவரக் கூடும். எல்லைகளுக்கு அப்பால் மூங்கில் அசையும். இலைமறைவில் மாடுகளின் பெருமூச்சு. கானகமெங்கும் இருட்டி மறைகிறான் சிறுவன். இசையின் பால்வெளியில் அவன் திரியக்கூடும். எல்லாம் மறைந்த வெற்றிடத்தில் அவன் சாண் குழலின் நுரைகொதிக்கும். ஏகாந்தத்தில் வளரும் மூங்கில் புதரில் மாட்டுக்காரன் மறைகிறான்.

ஒவ்வொரு பச்சை உயிர் மீது மர்மமாகத் தொட்டு அசையும் காற்றில் சிறுவன் விரல்களின் ஸ்பரிசம். தகரமணி எரிந்தபடி பறக்கும் ஓசையை அவன் ஒரே மூச்செடுத்து வாசிக்கக் கூடும். அவன் குழலில் தோன்றும் ராட்சஸப் பறவையின் கால் பதிவுகள். காற்றின் கொக்கிகளில் இறங்கும் நத்தைகள்... உணர் கொம்பு வரிகளின் அழியாச் சுடர் கொண்டு கானகமெங்கும் தேடுகின்றன; மிருகத்தின் விரல்கள் பதிந்த மர்மமான கான உருவை.

வெளிர் நீல மரங்கள் பின்னிரவில் கரைந்து இசை இலைகளும் நீலத்தில் வெளிர் அடைகின்றன. மொசார்ட்டின் வெண்நிறமான இசைக்கோப்பையில் அவன் விநோதமான விதியின் பலத்தைக் கற்பனை இலைகளாக்குகிறாள் ஓசே.

இசைக்கீற்று செங்குத்தாகத் தோன்றி எண் வரிசை துயர்வீசி இலை வடிவத்தில் ஒலித்தது. இசையில் மந்திரத்தை உள்வாங்கிய மலைகள் நீலமாய் எழுந்து உயிரில் பற்றி எரிகின்றன. மந்திரப் புல்லாங்குழல் சாய்ந்து சரிந்து எங்கிருக்கிறாய் ஓசே... நீ இருப்பது தெரியவில்லை.

ஓசே... ஓசே... நீலத்தில் பறக்கும் நத்தைகள் கொம்புகளில் அழியாச்சுடர் ஏந்திஅழுக்கு ஒளியாகி மலைகளில் உருண்டு சரிந்து செல்லும். பின் நத்தையின் குரலில் மலைகளே அழைத்தன. ஓசே... ஓசே... ஓசே... ஓசே... நத்தைகளின் கூடுகளை விட்டு வெளியேறிப் போன கருவில் யுவதி நீர் வீழ்ச்சியில் சரிந்து கொண்டே இருக்கிறாள். நீர்ஒளியில் காட்டு யுவதி அலைகிறாள். அவளைக் கண்டபோது இறந்து விட்டிருந்தாள்.

எதை எதையோ நீர் கொட்டிக்கொண்டே மறைகிறது. அவள் சென்ற கண் வெளியில் உருளும் நீர்பிம்பம். திவலைக்குள் தொங்குகிறது தலைகீழாய். திவலைகள் இறங்கும் கண்பரப்பில் கழுவப்பட்ட பச்சைத் தோட்டம்.

கற்பனை இசை விநோதங்கள் குவிந்த காற்றின் சுருள்வாள் கொண்டு சூன்யத்தில் வெட்டிய சிலை உருவை பொஹீமிய அரசனான இரண்டாம் லியோபோல்டுக்குப் பரிசளிக்கிறான் மொசார்ட். ஸ்படிகச் சிலையில் நத்தைகள் தத்தளிக்கின்றன. சுருள் நத்தையின் விசில் கற்றை சூறாவளியாகிறது. திடீரெனப் பறந்து வந்த கேலக்ஸியின் கூடுகளில் மூடித்திறந்த விரல்கள் அசைந்து எண்வரிசை உருத்திரள, மந்திரப் புல்லாங்குழல் தோன்றும்.

ஒசே...ஒசே... எனும் காற்றின் சப்தம். அவள் உரு ஏந்திய மாயத்தி வலைகள் சப்தத்திலிருந்து உருண்டுவர, நீர்த்திவலைகளின் கூட்டம் ஜுவாலையாக எரிகின்றது. ஜுவாலையில் அசையும் வெண்நிற யுவதி. இல்லாதபோதும் இருந்து கொண்டிருக்கும் பிரக்ஞை வெளியில் யாருமில்லாத ஒரேஒரு நத்தைக்கூடு; அதனுள்ளே ஸ்படிக ஒளியாக உருள்கிறாள். அவள் குரல் நரம்புகள் சரிந்து சுருண்டு மந்திரப் புல்லாங்குழலாக மாறுகின்றன.

வெறும் கூடுபறக்கும் பாதையில் அவன் மெதுவாக கோடு வரைகிறான். கூட்டுக்குள் மடிக்கப்பட்ட வரை படம் விரிந்து தோட்டமாகிறது. சிறு கத்திரி கொண்டு தோட்டத்தை எண்கோணமாக வெட்டிக் கொண்டிருக்கிறான் அவன். வரைபடத்தின் பாதைகளில் ஸ்பிரிங் காவலர்கள் எந்திரத் துப்பாக்கியுடன். தோட்டத்தின்மையத்தில் சிறை வைக்கப்பட்ட அவள் மீது காவலரின் கண்கள் திரும்புகின்றன.

இரு வேலையாட்கள் பெரிய பெரிய கத்திரி கொண்டு கற்பனைத் தாவர இலைகளை வெட்டும் ஒலி நகரமெங்கும் எதிரொலிக்கிறது. அவன் சிறுவனைப் போல வரைபடத்தை வெட்டி முடிக்கிறான். ஒரு செடி அசைவிலும் சுட்டுவிடும் உஷார் நிலை. ஒரு டஜன் காவலர்களைத் தாண்டி சதுக்கத்தை அடைகிறது கேலக்ஸி. அவளை அணுகியபோது மிக மெலிந்து கரைந்து போன தம்பலப்பூச்சி அளவே இருந்தாள். திடீரென ஒசேயுடன் காற்றின் மெதுவான தடங்களைக் கடந்து வெளியேறினான்.

கிறுகிறு கிறுவென தோட்டமே சுற்றிச் சுழல தோட்டத்தின் குறுக்குப் பாதையில் வெடியோசைக்குபின் தோட்டம் இருள்கிறது. மாயக் குமிழ் விடும் எல்லாத் துளைகளையும் மூடித்திறந்து பறந்து கொண்டிருந்தன தம்பலப் பூச்சிகள். ஆயிரம் நூல் கொண்டு அவன் உடலை இழுத்துச் செல்கிறார்கள் ஸ்பிரிங் காவலர்கள். விசில் கற்றைகள் மணல் புகையாகி எரிகிறது கேலக்ஸி...

சிறுகதை

வெண்புரவி

சாரு நிவேதிதா

சித்தார்த்தன் பிறந்த போதே அஸிதர் கூறி விட்டார், இளவரசர் பேரரசராகி உலகை ஆள்வார் அல்லது உலகுக்கே பேராசானாகத் திகழ்வார் என்று. அஸிதரின் பேச்சுக்கு அங்கே மறுபேச்சு கிடையாது. அஸிதர் சுத்தோதனரின் தந்தைக்கே குருவாக இருந்தவர். இப்போது சுத்தோதனருக்கும் குருவாக இருக்கிறார். கணிப்பைச் சொன்னதோடு மட்டுமல்லாமல் அரசன் தனியாக இருக்கும்போது கண் கலங்கவும் செய்தார் அஸிதர்.

சித்தார்த்தன் துறவியாவதில் தன்னைப் போலவே அஸிதருக்கும் துக்கம் உண்டோ என சந்தேகமுற்ற சுத்தோதனன் ஆசானிடம் அதைக் கேட்டான். அதற்கு அஸிதர், ''காலையில் நீ மந்திரிகள் சூழ இருந்ததால் கொஞ்சம் மூடி மறைத்துத்தான் சொல்ல முடிந்தது, இப்போது தெளிவாகச் சொல்கிறேன், சித்தார்த்தன் பேராசான் ஆவது உறுதி, நான் துக்கித்தது எதற்கென்றால், சித்தார்த்தன் கண்ட ஞானத்தை உலகம் கேட்கின்ற நேரத்தில் என்னால் கேட்க முடியாது, அப்போது நான் அரூப உலகில் இருப்பேன்'' என்றார்.

அஸிதரின் ஆரூடத்தைக் கேட்டது முதற்கொண்டு சாக்கிய மன்னன் சுத்தோதனன் தன் புதல்வனை வாழ்வின் எந்தவொரு இருண்ட பகுதியும் அவன் கண்களில் படாமலேயே வளர்த்து வந்தான். ஆனால் சித்தார்த்தனனின் நித்திரையில் தோன்றும் கனவின் காட்சிகளை சுத்தோதனனால் தடை செய்ய முடியவில்லை.

சித்தார்த்தனை அந்தக் கனவுகள் சித்ரவதை செய்து கொண்டிருந்தன. அக்கனவுகளால் அவனுக்குள் ஏற்படும் வேதனை சொல்லி மாளாதது. இது பற்றி அவனால் யாரிடமும் கேட்க முடியவில்லை. உள்ளுக்குள்ளேயே புழுங்கினான். உதாரணமாக இப்படி ஒரு கனவு:

பூமியின் அடி ஆழத்தில் மனிதர்கள் எதையோ தோண்டிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எலும்புக் கூடுகளைப் போல் இருந்தார்கள். அதில் சில உருவங்களை சிறார்கள் என்று புரிந்து கொள்ள முடிந்தது. பூமியின் சுவர்களிலிருந்து அவர்கள் எதையோ சுரண்டிச் சுரண்டி எடுத்துக் கொண்டிருந்தார்கள். கரி போல் இருண்டிருந்த அந்த இடத்தில் ஒரு சிறுவனின் கையிலிருந்த சிறிய விளக்கிலிருந்து மிக மெலிதான வெளிச்சம் கசிந்து கொண்டிருந்தது. அப்போது அந்தக் குழியின் மேலேயிருந்த தளம் அதைத் தாங்கிக் கொண்டிருந்த தூண்

ஒன்று சரிந்து விட்டது போன்ற பெரும் சப்தத்துடன் கீழே விழுந்ததில் சிறுவனும் அவன் அருகில் நின்று கொண்டிருந்த இரண்டு உருவங்களும் சரிவுகளுக்கிடையில் சிக்கிக் கொண்டார்கள். கரிய பாறைத் துண்டுகளும் மண்ணும் சேறும் கலந்த அந்தக் குவியலிலிருந்து உடல்களை வெளியேற்றுவது அத்தனை சுலபமாக இல்லை. சித்தார்த்தன் இதைத் தனது தூலக் கண்களால் பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அவனால் எதுவும் செய்ய முடியவில்லை. விதிர்விதிர்த்து உறக்கத்திலிருந்து எழுந்தபோது அரண்மனையின் மலர் மஞ்சத்தில் கிடப்பதை உணர்ந்தான்.

இதுபோல் நூற்றுக்கணக்கான கனவுகள். இன்னொரு கனவில் குட்டம் பீடித்து தசையெல்லாம் அழுகிச் சீழ் வடிந்து கொண்டிருந்த ஒரு முதியவனைப் பார்த்தான். முகத்தில் மூக்கு இருக்க வேண்டிய இடத்தில் இரண்டு துவாரங்கள் மட்டுமே தென்பட்டன. அந்த துவாரங்களில் மொய்த்துக் கொண்டிருந்த ஈக்களை விரல்கள் இல்லாமல் வெறும் குச்சி போல் துருத்திக் கொண்டிருந்த தன் கைகளால் விரட்ட முயற்சி செய்து கொண்டிருந்தான் ரோகி. அவன் விரட்ட விரட்ட மீண்டும் மீண்டும் ஈக்கள் அந்தப் பொந்துகளை வட்டமிட்டன.

சகிக்கவே முடியாத அந்தக் காட்சியை அதற்கு மேலும் காண்பதற்குத் துணிவு இல்லாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டதோடு சித்தார்த்தனின் அந்தக் கனவு முடிவுக்கு வந்தது. சித்தார்த்தனின் பிரச்சினை என்னவென்றால், இது போன்ற கனவுகள் அவனுக்குத் திரும்பத் திரும்ப வந்து கொண்டேயிருந்ததுதான்.

ஒரு கனவில் இரண்டு வயதுக் குழந்தைக்கு ஒரு தாய் அன்னமூட்டிக் கொண்டிருந்தாள். கொஞ்ச நேரத்தில் அந்தக் குழந்தைக்குப் புரையேறி மூச்சு விட முடியாமல் தவித்து கண்ணிமைக்கும் நேரத்தில் தலை தொங்கி விட்டது. அந்தத் தாய் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு விழுந்து புரண்டு அழுதாள்.

இன்னொரு கனவில் ஒரு போர்க்களக் காட்சி. யானைகளும் குதிரைகளும் மனிதர்களும் குற்றுயிராகவும் பிரேதமாகவும் ரத்தச் சகதியில் கிடந்தார்கள். தலைகீழாய்க் கவிழ்ந்து கிடந்த தேரின் உச்சியிலிருந்து ஒரு பிரேதம் கையில் வாளோடு தொங்கிக் கொண்டிருந்தது. சிரசற்ற ஒரு மனிதனின் தலைப்பகுதியில் ஒரு குதிரையின் தலை கிடந்தது. ஆயிரக்கணக்கில் விரவிக் கிடந்த உடல்களை கழுகுகளும் பருந்துகளும் தின்று கொண்டிருந்தன.

உடல் நடுங்க உறக்கத்திலிருந்து எழுந்தான் சித்தார்த்தன்.

தந்தைக்குத் தெரியாமல் ஒரு கணிகனிடம் இந்தக் கொடுங்கனாக்கள் குறித்துச் சொன்னபோது கணிகன் சித்தார்த்தனுக்குச் சில தியான முறைகளை விளக்கினான். எல்லாம் பரம ரகசியமாக நடந்தன. அரசனுக்குத் தெரிந்தால் கெடுபிடிகள் இன்னும் அதிகமாகி விடும். ஏற்கெனவே அசிதரின் கணிப்பினால்தான் சித்தார்த்தன் இப்படி அரண்மனைக் கைதியாய் சிறைப்பட்டிருக்கிறான்.

கணிகன் கற்பித்த தியானத்தின் மூலம் சித்தார்த்தனுக்கு சில விஷயங்கள் புரிந்தன. இந்த உலகின் துன்பங்களுக்கெல்லாம் காரணம் என்ன, அதிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வது எப்படி எனக் கண்டு பிடிக்க வேண்டும். அதற்கு அடிப்படையான முதல் செயல், இந்த அரண்மனை வாழ்வையும், ராஜபோகங்களையும், மனைவியையும் மகனையும் துறக்க வேண்டும்.

அதெல்லாம் கூட சாத்தியமாகலாம். காந்தகாவை எப்படித் துறப்பது என்பதுதான் சித்தார்த்தனின் கவலை. அந்த வெண்புரவியின் துணையால்தான் யசோதராவுக்கான சுயம்வரப் போட்டியின் வில்வித்தையில் தேவதத்தாவையும், அனிருத்தனை குதிரைப்



ஓவியம்: ரவி

பந்தயத்திலும், நந்தாவை வாள் சண்டையிலும் அவனால் வெல்ல முடிந்தது.

அப்போதிருந்தே காந்தகா சித்தார்த்தனின் ஒரு அங்கமாகவே இருந்து வந்தது. அதே காந்தகாதான் அரண்மனையிலிருந்து தப்பிச் செல்லவும் உதவியாக இருந்தது. காவலாளிகள் துயில் கொண்டிருந்தபோது அத்தனை ரகசியமாகத் தப்ப முடிந்தது காந்தகாவின் நடையினால்தான். அன்றைய தினம் காந்தகா காற்றைப் போல் நடந்து அவனை அந்த அரண்மனையிலிருந்து வெளியே கொண்டு வந்தது.

பணியாளன் சன்னாவையும் காந்தகாவையும் அனோமா நதியைத் தாண்டிய பிறகு பிரிகிறான் சித்தார்த்தன். ஆனால் அது அத்தனை சுலபமாக இல்லை. சன்னா தானும் உடன் வருவேன் எனச் சொல்லி எத்தனையோ போராடினான். அழுதான். அரற்றினான். ம்ஹூம். சித்தார்த்தன் மசியவில்லை. சன்னாவையும் அழைத்துக் கொண்டு ஞானம் தேடினால் அது எங்கே கிடைக்கும்? சாமியார் பூனை வளர்த்த கதைதான். சன்னா தன்னுடன் இருக்கும் வரை தன்னால் ஒரு இளவரசன் என்ற அடையாளம் இழக்காமல் இருக்க முடியுமா? மனதைக் கல்லாக்கிக் கொண்டு திரும்பிப் போ என்றான் சித்தார்த்தன். ஆனால் காந்தகாவின் மௌனம்தான் சித்தார்த்தனைக் கொன்றது. சித்தார்த்தனின் காலில் தன் முகத்தை வைத்துக் கெஞ்சியது அந்த வெண்புரவி.

அதற்கும் சித்தார்த்தன் கலங்கவில்லை எனக் கண்டதும் தலையை உயர்த்தி அவனிடம் தன் கண்களினாலே சொன்னது: தலைவனே, ஊழ்வினையால் நாம் கட்டுண்டிருக்கிறோம். நீயும் நானும் ஒரே நாளில் பிறந்ததும் உன் வாணாள் முழுவதும் நான் உன்னை நிழலாய்ப் பின்தொடர்ந்ததும் தற்செயலானதல்ல. என்னை நீ இப்போது புறக்கணித்து விட்டுச் சென்றால், நான் என் உயிரை மாய்த்துக் கொள்வேன் என்பதை மட்டும் இப்போது சத்தியம் தருகிறேன்.

என் ஆருயிர் நண்பனே காந்தகா, உன்னைப் போல் ஆயிரக்கணக்கான புரவிகள் தம்முடல் வெட்டுண்டு உயிரை இழந்து ரத்தச் சகதியில் கிடந்த கனா பற்றி உன்னிடம் எத்தனை முறை சொல்லி வருந்தியிருக்கிறேன்? அதற்கெல்லாம் தீர்வு காண வேண்டாமா? நாம் ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும் பாசமும் அன்பும் உயிர்களின் விடுதலைக்குக் குறுக்கே நிற்கலாகுமா? போய் விடு காந்தகா, சன்னாவிடம் கொடுத்திருக்கும் என் அரச அடையாளங்களான வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் தலைமுடியையும் கொண்டு சென்று தந்தையிடம் கொடு, சென்று வா.

சன்னாவுடன் ஆற்றைக் கடந்து விட்ட காந்தகா ஒருக்கணம் தன் தோழனும் தலைவனுமாயிருந்த சித்தார்த்தனைத் திரும்பிப் பார்த்தது. விடுவிடுவென்று அந்த அடர்ந்த கானகத்துக்குள் சென்று கொண்டிருந்த அவன் உருவம் அப்போது ஒரு நிழலைப் போல் தெரிந்தது.

அரண்மனைக்கு வந்த காந்தகா தலைவன் கொடுத்த பொறுப்பை முடித்த உடனேயே தான் சுமந்து கொண்டிருந்த உடலைத் துறந்து விட்டுத் தன் உலக வாழ்வை முடித்துக் கொண்டது...

சிறுகதை

விலை

யுவன் சந்திரசேகர்

நாங்கள் முதன்முதலில் குடிபோனது நாடார் காம்ப்பவுண்டில். வரிசையாக, புத்தம்புதிய, ஒன்றோடொன்று ஒட்டிய, ஆறு சிறு வீடுகள். எங்களுடையது ஆறாவது. நாடார் பெரும் பணக்காரர்.

என்னோட வசதிக்கி, சும்மாவே குடியமத்தலாம். ஒங்குளுக்குப் பொறுப்பு வரணும்ன்றதுக்காகத்தான் வாடகெ...

என்று சொல்லி, அட்வான்ஸ் வாங்கினார். ஒப்புக்கு வாடகை என்றால் சல்லிசாக இருக்கவேண்டும், இல்லையா! இல்லை. என் சம்பளம் அறுநூறு ரூபாய். பத்மினிக்கு நானூறு. வீட்டுவாடகை, முன்னூற்றைம்பது. என்ன, வசீகரமான தோட்டத்தின் மத்தியில் குடியிருக்கிற உணர்வு தட்டும். தார்ச்சாலையிலிருந்து சுமார் கால் கிலோமீட்டர் உள்ளே வரும் வண்டிப்பாதை, நாடாரின் பங்களாவில் முடியும். அதன் கழுத்தருகே கிளைபிரியும் இன்னொரு பாதை, ஏகப்பட்ட பழமரங்கள், பூச்செடிகளைத் தாண்டி வரிசைவீட்டு வாசலுக்கு வரும். 'இந்த ரம்மியமான சூழலுக்கு, ஐந்நூறுகூடக் கொடுக்கலாம்' என்று பேசிக்கொள்வோம். புதுமணத் தம்பதி. நாள்முழுக்க நந்தவனத்தில் இருப்பது கசக்கவா செய்யும்?!

இன்னொரு மகிழ்ச்சியும் இருந்தது. பிற குடித்தனக்காரர்களும் புதிதாய் மணமானவர்கள். ஒரே நேரத்தில் ஐந்து கர்ப்பிணிகள் நடமாடிய வளாகம். ஒருவருக்கொருவர் வைத்தியமும் பக்குவமும் அறிகுறிகளும் பரிவர்த்தனை செய்துகொள்வார்கள். குழந்தை பிறந்தவுடன், இடம் போதாது என்று வேறு வீடு மாறிப்போனார்கள்.

அது இல்லண்ணே, நாங்க இருக்கம்ல; எங்க திஸ்டி பட்டும்ன்றதுதான் நெசக் காரணம் என்று கண்ணீர் மல்க ஒருமுறை சொன்னாள் காந்தி.

விடுபட்ட தம்பதி அவர்கள். நாங்கள் காலிசெய்து வரும்வரையும், வந்த பிறகு சில ஆண்டுகளுக்கும், அதே வளாகத்தில்தான் வசித்தார்கள். எங்கள் வலதுபக்க வீட்டில்.

காந்திமதியின் கணவர் வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் விஞ்ஞானி. மகளைப் பார்க்க வந்த தாயார், பத்மினியோடு சாவகாசமாகப் பேசிக்கொண்டிருந்தபோது சொன்ன வாக்கியம் முப்பதைந்து ஆண்டுகள் கடந்தும் மறக்கவில்லை:

காக்யாத செடிக்கும் பூக்காத மரத்துக்கும் பண்டுவம் பாக்குதாரு எம் ம ரு ம கெ ய ன் தனக்கு ஒரு வளி பாக்க மாட்டங்காரே.

ஆவுடையப்பனைப் போன்ற மிருதுவான மனிதரைப் பார்க்கவே முடியாது.



ஓவியம்: அஞ்சலி

பத்மினியை மாதாந்தரப் பரிசோதனைக்கு அழைத்துச்செல்ல, தன்னுடைய ஸ்கூட்டரை இரவல் தருவார். 'பெட்ரோல் நான் போட்டுக்கொள்கிறேன்' என்று சொல்வதற்குக்கூட இடைவெளி தரமாட்டார். புன்னகையோடு மறுப்பார். தான் சமைத்துப் பழகும் பலவற்றை அவர்களுக்கும் கொடுப்பாள் பத்மினி.

ஒருநாள் நள்ளிரவு. காந்தி வீரிட்டு அலறும் சப்தம். பாய்ந்தோடினேன். அசைந்தசைந்து தானும் உடன்வந்தாள் நிறைகர்ப்பிணி. அழிக்கதவை அப்போதுதான் திறந்துவிட்டு, வீட்டுக்குள் திரும்பிக்கொண்டிருந்தாள் காந்தி.

ஆவுடையப்பன் மல்லாந்து கிடந்தார். வாயோரம் கடுமையாக நுரை தள்ளியிருந்தது. நீள இரும்பு இடுக்கியை வலதுகையில் இறுக்கிப் பிடித்திருந்தார். அதை அடிக்கொருதடவை தரையில் ஓங்கி அடித்தார். நெற்றியில் அவசரமாக அப்பிய திருநீறு. வியர்த்துக் கொட்டிய வெற்றுடம்பு. வேஷ்டி கலைந்திருந்தது. உடம்பு சன்னமாக நடுங்கியது. இடதுகை, நான் பார்க்கும்போதே ஒருதடவை பலமாக வெட்டியது.

கிட்டத்தட்ட அரைமணிநேரம் கழித்து சமனமானார். இறைஞ்சும் குரலில் சொன்னாள் காந்தி:

சொந்தக்காரவுக யாருட்டெயும் வாய்விட்றாதிங்கண்ணே...

சரவணன் பிறந்த நாலைந்து மாதத்தில் நாங்களும் வீடு மாறினோம். அப்புறம் ஊரே மாறினோம். சென்னையின் அழுத்தம், சொந்தக்காரர்களிலேயே அநேகரை மறக்கடித்துவிட்டது. அக்கம்பக்கத்தவரை எப்படி...

அதனால்தான், பழனி நிலையத்தில் 'அண்ணே' என்ற விளி கேட்டதும் திகைத்துப்போனேன். மகள் வயிற்றுப் பேரனின் முதல் மொட்டைக்காக எல்லாரும் திரண்டு வந்திருந்தோம். மூன்றாவது பேரக்குழந்தை. சம்பந்தியம்மாளின் தொணதொணப்பு தாளாமல் விலகி, நடைமேடையில் உலாத்தியபோது அந்தக் குரல் கேட்டது.

உடனடியாக அடையாளம் தெரிந்துவிட்டது. காந்திமதியேதான். வட்ட முகத்தின் வசீகரம், குரலின் வாஞ்சை, உள்ளொடுங்கிய அரிசிப்பற்கள் மினுங்கும் புன்னகை, பேரிளம்பெண்ணின் காதுகளில் ஆடிய ஜிமிக்கி, நரைத்தாலும் நெளிநெளியாய்க் கேசம் படிந்த தலை, நெற்றி நிரம்பிய திருநீறு... அது சரி, எந்த அம்சத்தை வைத்து நான் என்று கண்டுபிடித்தாள்!...

ஆச்சரியம் அடங்காமலே நெருங்கினேன். வயது தந்த சலுகையோ என்னவோ, கைகளை ஆதுரமாய்ப் பிடித்துக்கொண்டாள். எதிர்த்திசை ரயிலுக்காகக் காத்திருக்கிறாள். சிமெண்டு பெஞ்ச்சில், பக்கத்தில் அமரச் சொல்லித் தட்டினாள். கடைசியாய் விட்ட இடத்திலிருந்து பேசுகிறவள் மாதிரி படபடக்க ஆரம்பித்தாள்...

அடுத்த சில வருடங்களில், ஆவுடையப்பனுக்கு முற்றிவிட்டதாம். ஒவ்வொரு வைத்தியமுறைக்கு மாறும்போதும், தீவிரம் அதிகரித்து வந்திருக்கிறது. தமிழகத்திலும், அண்டை மாநிலங்களிலும் ஒரு கோவில் பாக்கியில்லை. இதற்கிடையே, உறவுகாரர் அத்தனைபேருக்கும் தெரிந்துவிட்டது. பிறகென்ன, ஜோசியர்களும், ஆரூடக்காரர்களும், குறிசொல்பவர்களும் உள்ளே நுழைந்தார்கள். செய்வினை எடுக்க, பரிகார பூசைகள் செய்ய என்று வருடங்கள் ஓடியிருக்கின்றன. ஆலம்பால் திரித்த சடைகளில் பேன் எடுத்து இணுக்கிக்கொண்டே பரிகாரம் சொன்னாள் ஒரு சாமியார். 'பழனிமலையின் ஒவ்வொரு படியிலும் நெய்தீபம் ஏற்றி, தேங்காய் உடைத்து, பூசித்தபடி மலையேற வேண்டும்'...

இடுப்பொடிஞ்சு போச்சுண்ணே. அடிவாரத்துலெ கிளம்புன ஆளுக இல்லே, உச்சிக்கிப் போய்ச் சேந்தவுக. இந்த செம்மத்துக்குண்டான உச்சபச்ச வேதனெ ஒடம்புலெயும் மனசுலெயும் ரெம்பீருச்சு. அவுக சொல்றாக, 'ஏட்டி காந்தீ, பிராணன் போயிறக்கூடாதுன்னுதானே இம்புட்டு ரோதனெ. இப்பிடி அப்பப்பச் செத்துப் பெளைக்கிறத்துக்கு ஒரேடியாப் போய்ச்

சேந்துறலாம்ல்லா. தரிசனம் முடிஞ்சோடனே இந்தாக்குலெ குதிச்சிரலாம்ன்னு பாக்கேன். நீயும் வாரியா?' எனக்கு கெதக்குன்னிருச்சு...

புன்னகை மாறாமலே இந்த வசனத்தைச் சொல்வதற்கு காந்திமதியால் மட்டும்தான் முடியும்... கணவரோடு சேர்ந்து தானும் குமுறியிருக்கிறாள். தரிசனம் முடித்து வலம் வரும்போது, போகர் சந்நிதிக்கு எதிரே படியில் அட்டணக்கால் போட்டு அமர்ந்திருந்த பெரியவர் கையாட்டி அழைத்தாராம். காவியும் தாடி மீசையும் தலைநிரம்பி அலையாய் வழியும் தூய வெண்சிகையும்...

'இவரை மட்டும் விட்டுவைப்பானேன்' என்று அருகில் போனார்கள். இருவரும் பிறந்த வேளை, காந்திமதி ருதுவான முகூர்த்தம், மணமான நாள், வசிக்கும் ஊர், பரிகாரம் செய்த தலங்கள்... மலையுச்சியை அடைந்ததும் நடந்த உரையாடல்வரை ஒன்றுவிடாமல் ஒப்பித்திருக்கிறார்.

எல்லாம் சரியாயிருமப்பா என்றாராம். எத்தனைபேர் அப்படி உத்தரவாதம் அளித்திருந்தார்கள்! இவரை மட்டும் எதற்காக நம்புவது? ஆனால், யாருமே சொல்லாத ஒன்றை அவர் சொன்னாராம்:

அடுத்த பெறவி வேணாம்ன்னுதானெப்பா எங்களெ மாதிரி ஆளுக தலையால தண்ணி குடிக்கிறம். ஒங் கூட்டாளிகளுக்கு இன்னம்புட்டுக் குடுப்பினெ. 'பெறவி என்னாடா பெறவி. ஒன் வம்முசத்தையே முடிச்சு வச்சிர்றேன், போதுமா'ண்றான் கோமணத்தாண்டி... வருத்தப்பட வேண்டிய விசயமா அது! நீ வேறெ, காலங்காலமா ஒரு பெரீய்ய பிசகு செஞ்சுக்கிட்டே இருந்திருக்குறே.

பக்கத்தில் வைத்திருந்த பைக்குள்ளிருந்து தண்ணீர் சீசாவை எடுத்து ஓரிரு மிடறுகள் விழுங்கினாள் காந்தி. 'ஒங்குளுக்குண்ணே?' என்று நீட்டினாள். எனக்குமே தேவைப்பட்டது.

மனுசங்க மாருதித்தேன். செடிகொடிகளுக்கும் வம்சம் தளைக்கிறதும் முடியுறதும்ன்னு இருக்கப்பா. வலுவந்தமா அதுகளெ செனைப்படுத்தி, பேறுகாலம் பாத்துருக்கையே. எந்த உசுருண்டாலும் சகலத்துக்கும் அவன் ஒருத்தன்தானெப்பா பொறுப்பு. ஒலகத்தெயே சொளட்டிவுடுறவன் என்னா வேலையத்தவனா? இல்லே, அது என்னா நம்ப வேலையா?

தலைகுனிந்து நின்றிருக்கிறார்கள்.

எனக்கு உத்தரவு இருக்கு. நிமுசமாச் சரிபண்ணீருவேன். ஆனாக்கே, அ து க் கு ப் பெறகுட்டு என் வார்த்தையெத் தட்டப்பிடாது; அது என்னோடெ வார்த்தெ இல்லேண்டு புரிஞ்சிக்கிறணும்...

அவர் கேட்ட விலை மிகமிகப் பெரியது. ஆவுடையப்பன் உத்தியோகத்தையும் குடும்பத்தையும் துறந்து, தீட்சை வாங்கிக்கொள்ள வேண்டும். முதலில் அதிர்ந்து, தயங்கி, பிறகு சம்மதித்திருக்கிறார்கள். பெரியவர் காலத்துக்கப்புறம் ஆசிரமப் பொறுப்பு ஆவுடையப்பன்வசம் வந்தது...

ஆறு மாசத்துக்கொரு தபா, விளுந்துகும்புட வாறவுகளோடெ நானும் வந்துட்டுப் போவண்ணே. நல்லாருக்காரு, கல்லுகணக்கா ஆயிட்டாரு. எனக்கு சந்தோசந்தேன். ஆனாலும், ஒரு தாவந்தம்ண்ணே...

ஏறிட்டுப் பார்த்தாள். நீர் பளபளத்த விழிகளை எதிர்கொள்ளும் திராணியின்றி, தலைகுனிந்தேன்.

...எல்லாஞ் சரிதாம், ஆனா, நான் என்னா பாவம் பண்ணுனேன். எனக்கேன் இ ந் த க் கதி? பழைய புன்னகை அவள் முகத்தில் மலர்ந்தது. காணச் சகிக்கவில்லை எனக்கு. நல்லவேளை, நான் போகவேண்டிய ரயில் உரத்துப் பிளிறியபடி தென்பட்டது.

சிறுகதை

பொம்மை மடி

ஆத்மார்த்தி

“எல்லா ஊர்கள்லயும் வான் உசரக் கட்டிடங்க பெருகிட்டது ஸார். வேகமாப் போறப்ப எந்த ஊர்ல இருக்கம்னே குழப்பமா வந்திருது. அம்பது வருசத்துக்கு முந்தி இருந்த எதுவுமே இப்ப இல்ல. என்னதான் காலமாத்தம் சகஜம்னாலும் இப்ப வளர்ச்சின்ற பேர்ல எல்லாமே ராட்சச வேகத்துல ஓடிட்டிருக்கம். இதெல்லாம் எங்கன போயி முடியுமோ?”

அங்கலாய்த்துக் கொண்டே டாக்ஸி வேகத்தைக் குறைத்தார். ‘சுவான் நதி’ என்று ஆங்கிலத்தில் பெயரெழுதியிருந்த அடுக்ககத்தின் இடப்புறச் சாலை வெளியிலேயே ஓரங்கட்டி நிறுத்தினார். தன் செல்பேசியை எடுத்து கம்பெனிக்கு பேசி ‘‘260 ரூபாய் சார்’’ என்றார்.

பணத்தை ‘கூகுள்பே’ செய்தான். அப்பார்ட்மென்ட் வாசலில் செக்யூரிட்டி தடுத்ததும் ‘‘சித்ரா சுப்பிரமணியன் ஜி-106’’ என்று சொல்ல இன்டர்காமில் பேசிவிட்டு ‘‘நேரா போங்க 3 ஆவது பிளாக் கிரவுண்ட் ப்ளோர்’’ என்று அனுப்பி வைத்தான்.

டாக்ஸி டிரைவர் சொன்னது சரிதான். ரகுவுக்கு தான் நடந்து கொண்டிருப்பது எந்த ஊரில் என்று லேசாகக் குழப்பியது. ஞாயிற்றுக் கிழமை என்பதால் அந்த இடத்தில் ஆரவாரம் மிகுந்து கேட்டது. பல வயதுகளில் பிள்ளைகள் ஓடி ஆடிக் கொண்டிருந்தனர். முதியவர்கள் நடை பழக மத்திய வயதுக்காரர்கள் இறகுப் பந்தாட்டத்தில் மூழ்கியிருந்தார்கள். ஏதோ ஒரு வீட்டில் இருந்து பாட்டு சத்தம் அதிர்ந்து கேட்டது.

‘‘தேன்மொழி பூங்கொடி’’

அடுத்த வரியில் அந்தச் செடி வாடிப்போகும் முன் பாட்டில் இருந்து விடுபட்டு ஜி-106 முன் நின்றான். காலிங் பெல்லை அடித்தான்

கதவை திறந்து ‘‘உள்ளே வாங்க’’ என சொல்லிவிட்டு பதிலுக்குக் காத்திருக்காமல் திரும்பி நடந்த அந்தப் பெண்மணிக்கு 65 வயது இருக்கலாம். வாழ்வின் ஏதோ ஒரு சாலையில் அதுவரைக்குமான அயர்ச்சி ஒரு கயிற்றை போல் பின்னிப்பின்னி இழுக்க ‘‘விட்டேனா பார்’’ என்று எதிராடும் மன உறுதி எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. இன்னமும் நான் ஆட்டத்தில்தான் இருக்கிறேன் என்று எப்போதும் அவனிடம் சொல்லிக்கொண்டே இருப்பார் அப்பா. ராணுவத்தில் பணிபுரிந்த மிடுக்கு அவருடைய அடையாளமாகவே மாறிற்று.

‘இந்த சித்ரா சுப்பிரமணியமும் தன் அப்பாவை போலவே மிடுக்கான நபராகதான் இருப்பார்’ என மனசுக்குள் எண்ணிக் கொண்டான் ரகு.



ஓவியம்: பிரேம் டாவின்ஸி

''உட்காருங்க இதோ வந்துடுறேன்'' என்று அந்தப் பெரிய கூடத்தில் நடுநாயகமாக இருந்த சோபாவில் ஒன்றைக் காட்டிவிட்டு சமையல் அறை நோக்கிச் சென்றார் சித்ரா. இந்தப் பெயரை எங்கெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறேன்? ரகு தலைக்குள் ஞாபக ரயில்கள் விரைந்தன. மிகப் பொதுவான சரளமாகத் தென்படக்கூடிய பெயர். இந்த முகத்தை எங்கோ பார்த்திருக்கிறேன். அப்பாவின் பணி நிமித்தம் 8 ஊர்களில் பள்ளி கல்லூரி படிப்புகளைப் பயில வேண்டி வந்தது. அதன் அனுகூலங்கள் பல இருந்தாலும் ஒன்றிரண்டு தொல்லைகளும் உண்டு. எங்கே பார்த்திருக்கிறேன் யார் இந்த சித்ரா?

நாற்பது வயது மதிக்கத்தக்க பெண்மணி, அந்த வீட்டில் சமையல் வேலை பார்ப்பவராக இருக்கக்கூடும், தாம்பாளம் போன்ற பெரிய ட்ரேயைக் கொண்டு வந்தாள்.

கண்ணாடி தம்ளர்களில் வெளிப்புறம் குளிரின் தூறலும் சாரலும் பனியாய்ப் பூத்தபடி குளிர்பானங்களை பவ்யத்தோடு அவன் முன் நீட்டினாள்.

''எடுத்துக்கங்க தம்பி'' என்ற சித்ராவின் குரலில் எந்த உணர்ச்சியும் கண்டுபிடிக்க முடியவில்லை.

நன்றி சொல்லியபடி எடுத்துக் கொண்ட ரகு அந்த அறையைச் சுற்றிலும் பார்வையை சுழற்றினான். சுத்தமாகப் பராமரிக்கப்பட்ட அறை ஒரு ஓரத்தில் பெரிய புத்தக அலமாரி. ரகுவுக்கு அதனருகே சென்று என்னென்ன புத்தகங்கள் என்று பார்க்க வேண்டும் என்கிற ஆசை எழுந்தது. சின்ன வயதில் இருந்தே அவனுக்கு மிகவும் பிடித்தமான பண்டம் புத்தகம்தான்.

''தனக்குள் சொல்லிக் கொண்டான் ரகு.'' ஆவலை அடக்கிக்க நண்பா!! நீ வந்திருக்கது வேலை விஷயமா. பொய்யா நடிச்சிட்டுப் போயிட்டே இருக்கணும். எதாச்சும் கூடக் குறையப் பேசி சொதப்பிட்டா நிச்சயம் ஆர்டர் கெட்டுரும். அதவிட முக்கியம் தீப்திக்கு தந்திருக்கிற உத்தரவாதம் 'தீப்தி ப்ளீஸ்பா எப்படியாவது எனக்காக ப்ளீஸ்பா' என்று கெஞ்சிக் கெஞ்சி அனுப்பி வைத்தாள்.

விமானத்தில் பயணிக்கும் போது 'இது என்ன பிரமாதம்' என்றுதான் வந்தான். என்னமோ இங்கே வந்தபிறகு சித்ரா சுப்ரமணியம் என்கிற அந்தப் பெண்மணியைப் பார்த்த மாத்திரத்தில் தன்னுடைய பலம் பாதியாகக் குறைந்ததுபோல் உள்ளே ஒரு பதற்றம். இந்த வாழ்க்கைதான் எத்தனை அபத்தமானது. அந்நியர்களை எளிதில் வென்றுவிட முடியும் என நம்புகிற யாருக்கும் பரிச்சயம்போல் தோற்றமளிக்கும் ஒருவரைப் பார்க்கும்போது உள்ளுக்குள் ஏன் குளிர்கிறது?

ரகு ''உற்சாகமா இருடா நண்பா!!'' என தனக்குள் சொல்லிக்கொண்டு போலியாக ஒரு சிரிப்பை அணிந்து கொண்டான். தன் பொய் எங்கேயாவது தன்னிலிருந்து வழிந்து விடுமோ என்ற படபடப்பைக் கழுத்தை நெறித்துக் கொன்றான். இயல்பான குரலில் ''விஸ்வநாதன் சார் என்னை அனுப்பினார்'' என்று ஆரம்பித்தது மேசித்ரா ''வடிவு..'' என உள்ளே பார்த்துக் குரல் தந்தார். எட்டிப் பார்த்தவளிடம் ''ட்ரெஸிங் டேபிள் மேல இருக்கிற சிகப்பு ஃபைலை எடுத்துட்டுவா'' என்றவர் ரகுவின் பக்கம் திரும்பி ''என்கிட்டயும் பேசினார். அது எங்களுடைய பூர்வீக சொத்து நான் பிறந்த குடும்பத்திற்கும் எனக்கும் இடையில் இருக்கும் ஒரே ஒரு விஷயம் அது தான். அதையும் செட்டில் பண்ணிட்டா ஒருவகையில் நிம்மதிதான்'' என்றவாறு பைலை திறந்து உள்ளே இருக்கும் நகல்களை எடுத்துப் பார்த்து அதிலிருந்து தேவையான காகிதங்களை தனியே எடுத்தார். சரிபார்த்தவாறே ''இதெல்லாம் போதுமில்ல'' என்று கேட்டார். ஒவ்வொன்றாகப் பார்த்தவன் இன்னும் தனக்கு கையொப்பம் தேவைப்படும் ஒரு நகலை சொல்ல ''அதுல இல்லையா தம்பி'' என இயல்பாக கேட்டுக்கொண்டே எடுத்துக்

கொடுத்தார். ரகு தந்த விண்ணப்படிவத்தில் அவன் குறித்து தந்த இடங்களிலெல்லாம் கையெழுத்திட்டவர் ''எல்லாம் சரியா இருக்கா பார்த்துக்கோங்க'' என்றார்.

''அந்தக் கையெழுத்து இதை எங்கே பார்த்திருக்கிறேன்'' கலைத்துப் போட்ட சீட்டுகள் எல்லாம் ஒவ்வொன்றாகத் தெரிய ஆரம்பிக்க ஒரு ஜன்னல் திறந்து மொத்த வெளிச்சத்தையும் பூட்டிய அறைக்குள் கொட்டி வேறு ஒரு காட்சியை தொடங்கி வைத்தாற்போல் ஞாபகம் வந்து விட்டது.

தன்னையறியாமல் எழுந்து நின்ற ரகு, ''மேடம் நான் உங்க ஸ்டூடண்ட். சிதம்பரம் மெமோரியல் கான்வென்டில் எனக்கு நீங்க ஐந்தாம் வகுப்பு டீச்சர்'' என்றான். அவனது தற்போதைய முகத்துக்குள் சிறுவனின் தோற்றம் தென்படுகிறதா என்று தேடிக்கொண்டே தன்னை மீறி மிக லேசான பரவசத்தை காட்டிய சித்ரா ''உட்காரு உட்காரு உன் பெயர் என்ன ரகுவா சொன்னே?'' என்று கேட்டார். இது வேறு குரல் இது வரைக்கும் இருந்த நிமித்தம் முழுவதுமாக தீர்ந்து போன குரல். பெரும் புழுக்கத்தின் நடுவே எதிர்பாராத ஒரு காற்று ஏற்படுத்தித் தருகிற பரவசம் அந்த குரலில் தொனித்தது.

''ஆமாம். ரகுகுல வாசன்'' தான். அவரிடம் படித்த வருடம் தன்னோடு படித்தவர்கள் அவருக்கும் தனக்குமான தனியான ஞாபகங்கள் என வரிசையாக சொல்லிக்கொண்டே போனான். எல்லாவற்றையும் விரிந்த கண்களும் அளவற்ற ஆனந்தமுமாக கேட்டுக் கொண்டிருந்தவர் செல்லமாக அவன் தலையை கலைத்து ''உனக்கு எத்தனை குழந்தைகள் பா?'' என்று கேட்டார்.

''ரெண்டு பசங்கம்மா'' என்றவனிடம்

''மதுரை இப்போ எப்படி இருக்கு எவ்ளோ மாறினாலும் மாறாத ஊரு'' என சிரித்தார்.

ரகுவுக்கு லேசாய்க் குழப்பமாக இருந்தது. இந்தப் பரிச்சயம் நல்லதா கெட்டதா..? சீக்கிரம் இங்கே இருந்து கிளம்பி விட்டால் என்ன என்று தோன்றியது.

சமாளித்துக் கொண்டவனாய் ''நீங்க சொல்றது சரிதான். நிறைய மாற்றங்கள் ஒவ்வொரு நாள் ஒவ்வொரு மேக்கப் போட்டுக்குற ஒரு நடிகனை போலத்தான் நம்மூரு இருக்குது'' என்று சிரித்தான்.

''அத்தனை மாற்றமும் தேவையா இருக்கு இல்ல'' எனக்கேட்ட சித்ராவிடம் ''ஆமாம்மா அது என்னவோ நிஜம்தான்'' என்று ஒப்புக் கொடுத்தான்.

டீச்சர் அவனை உரிமையோடு ஒருமையில் அழைக்க அவனும் சிறுவயது போலவே அம்மா என்று அழைத்தான். சித்ராவுக்கு இரண்டும் பெண் குழந்தைகள்தான். தன்னிடம் படிக்கும் எல்லா குழந்தைகளையுமே தான் பெற்ற பிள்ளைகளாகவே நினைத்துக் கொள்வார். என்னவோ ரகுகுலவாசன் மீது கூடுதலாய் ஒரு பிரியம் அவருக்கு இருந்தது. அவனும் அவரை அம்மா என்றுதான் அழைப்பான். வகுப்பில் முதலாவது மாணவன். அவனை எல்லோருக்கும் பிடிக்கும்.

''நல்லா படிப்பியே நீ..? நீ மெடிக்கல் இன்ஜினியரிங் ஏதாவது படிச்சிருப்ப என நினைச்சேன். நீ எப்படி லாயர்கிட்ட அதுவும் குமாஸ்தா வேலையா பார்க்குற?'' என்று கேட்டார்.

ரகுவின் உதடுகள் துடித்தன. அவன் சுமந்து வந்த அத்தனை பொய்களையும் தூள்தூளாக உடைத்து எறியப் போதுமான கேள்வி உளி. எதுவுமே சொல்லாமல் அப்படியே அமர்ந்திருந்தான் ரகு. பேசா மௌனம் பெருமொழிக்குச் சமம். சுவர்க் கடிகாரத்தின் கதவுகளைத் திறந்து ஒரு கிளி வெளியே வந்து மூன்று முறை கூவிவிட்டு மறுபடியும் கதவடைத்துக் கொண்டது.

''என்னப்பா நான் எதுவும் கேட்கக் கூடாத கேள்வியைக் கேட்டுட்டனா?'' பதறினார் டீச்சர். தாய்மையின் ஆதுரம் குரலில் வழிந்தது.

''அதெல்லாம் இல்லைம்மா. உங்ககிட்ட பொய் சொல்ல வராது எனக்கு. வரல. நான் இங்க வந்தது வேற காரணத்துக்காக'' என்று தலையைக் குனிந்து கொண்டான் ரகு.

குழப்பமாக அதே நேரத்தில் முந்தைய கணத்தில் பொங்கிய உள்ளார்ந்த அன்பைக் கட்டுப்படுத்திக் கொண்டவராகத் தோன்றினார். தன் முந்தைய குரலுக்கு திரும்ப முயற்சித்து.

''அது என்ன வேற காரணம்?'' லேசாய்க் கடுகடுத்தார் சித்ரா.

''யாருக்குமே தனக்குப் பாடமெடுத்த ஆசிரியர்கள்ல யாரொருத்தரையும் தேடிப் போய்ப்பார்க்கிறதைக் காட்டிலும் யதேச்சையாப் பார்க்கிறப்ப பெரிய சந்தோஷம். அதுவே எனக்கு சங்கடமாயிட்டுது. நான் ஒரு பொய்யை சுமந்திட்டு இங்க வந்தேன். யாரோ சித்ரான்னு ஒருத்தங்க அப்டின்றப்ப எனக்கது எளிதா இருந்திச்சி. அதுவே என் தமிழம்மான்னு வர்றப்ப பொய் சொல்ல முடியாதில்ல...? நான் உங்க லாயரோட குமாஸ்தா இல்லைங்க. நானொரு ஸ்தபதி. உங்க அண்ணன் மக தீப்திக்காகத்தான் இங்கே வந்தேன்'' என்றான்.

இதைச் சொல்லும் போது ரகுவின் குரல் லேசாய் நடுங்கிற்று. ஆனாலும் பொய்யை உரித்துப்போட்ட அடுத்த கணம் மனமெல்லாம் வியாபிக்கிற மெய்மையின் நிம்மதி இருக்கிறதே அது பெரிய செல்வம். ஆசுவாசமாய் உணர்ந்தான் ரகு.

மேல சொல்லு என்றாற்போல் அமைதியாக அவனையே பார்த்த சித்ராவிடம் ''உங்க வக்கீல் விஸ்வநாதன் சார்பா சொத்து பிரிக்கிற ஸெட்டில்மண்ட் காகிதங்கள்ல கையெழுத்து வாங்குற சாக்கில உங்களை ஒரு தடவை பார்த்திட்டுப் போறதுக்குத்தான் வந்தேன்'' என்றான்.

எதுக்கு என்ற சித்ராவின் குரலில் இப்போது எந்தவொரு சினேகிதமும் இல்லை.

ஜனார்த்தனன் என்ற பேரைச் சொன்னமட்டில் அவனை வெளியே அனுப்பியிருப்பார். ரகுகுலவாசன் என்பவனை அப்படித் துரத்த முடியவில்லை. ஏதோவொன்று அவருக்குள் நெகிழ்ந்து குழைந்திருந்தது. ஏன் அப்படி செய்யவில்லை என்று தனக்குள் ஆழத்தில் வியந்து கொண்டார். ரகுவாகச் சொல்லாமல் அந்த உண்மை அவருக்குத் தெரிய வந்திருக்காது. அதைவிட முக்கியம் வேறு ஏதோ ஒரு காலத்தில் இவன் குழந்தையாக இருக்கும்போது மழைபோல் இவன்மீது தன்மனம் ஆசீர்வாதங்களை கொட்டியிருக்கிறது.

''சொல்லித் தொலை உன் பொய்களுக்கு பின்னால் இருக்கும் அந்த காரணம் என்ன என்பதை சொல்லிவிட்டுக் கிளம்பு. இனியொரு தடவை அந்தப் பேரைச் சுமந்துகொண்டு இங்கே வராதே'' என்று சொல்ல நினைத்ததை மனத்தின் ஆழத்தில் புதைத்துக்கொண்டு அப்படியே அமர்ந்திருந்தார்.

''என்னைப் பற்றிக் கொஞ்சம் சொல்றேன்மா. நான் ஒரு ஸ்தபதி. மூணாம் வருஷம் பொறியியல் படிப்பைப் பாதியிலே நிப்பாட்டிட்டு நாடோடியா திரியத்தொடங்கினேன். எனக்கு என்ன வேணும்னு கண்டுபிடிக்கிறதுக்குள்ள காலம் கரைஞ்சிட்டது. வெவ்வேறு மாநிலம், சில வெளி நாடுகள், நகரம் கிராமம் ஏன் அடர்ந்த காட்டிலகூட அலைஞ்சிருக்கேன். மலைப் பிரதேசங்கள் மழை குளிர் வெயில். எப்பவோ ஒரு முறை அபூர்வமா பூக்கிறபூ, எப்போதாவது ஒரே ஒரு முறை கேட்கக்கூடிய இசை, ஒருதுளி அமிர்தம். உயிரை குடித்து விடக்கூடிய நஞ்சு. கவிதை பாடல் காதல் பயணம்னு கண்ணறியாத் தேடல் அந்த வாழ்க்கை. ஒரே ஒரு பையில என் மொத்த தேவைகளை அடக்கிட்டு போய்கிட்டே இருந்தேன். பதினாலு வருஷம் நானும் வனவாசம் இருந்தாற்போல் சுத்தி அலைஞ்ச பின்னாடி மனசு நிலைக்கு வந்தது.

மனம் ஒத்த பெண்ணை கல்யாணம் செய்துகிட்டு நானும் எல்லோருக்குள்ளும்

ஒருத்தனா மாறிக் கடந்த அஞ்சு வருஷமாதான் சராசரி மனுஷனா வாழ்ந்துட்டு இருக்கேன். இந்தியாவில் மூன்று இடங்களில் எங்களோட சிற்பக் கூடங்கள் இருக்கு. நானும் என் நண்பன் அனில் பரமனூர் கேரளத்தை சேர்ந்த ஓவியன் அவனும் சேர்ந்து மெழுகுச்சிலைகள் செய்கிறோம்.'' என்று முடித்தவன் எதிரே இருந்த கண்ணாடிக் குவளையில் நிரம்பிய தண்ணீரை மிச்சமின்றிக் குடித்தான்.

''நான் கூட ஏதோ பேப்பரில் படிச்சிருக்கேன்'' என்றவர் குரலில் இப்போது ஒரு புதிரின் விடைதெரிந்து கொள்கிற ஆர்வம் தெரிந்தது.

''உங்க அண்ணன் மேல உங்களுக்குக் கோபம். உங்க விருப்பத்துக்குக் காதல் திருமணம் செய்துகிட்ட உங்களையும் உங்க கணவரையும் அவர் அவமானப்படுத்திட்டார். அதுக்கப்புறம் பல வருடங்கள் கழிச்சி எத்தனையோ முறை உங்களை சந்திச்சி மன்னிப்புக் கேட்க அவர் முயற்சி செய்தும் நீங்க அதை ஒப்புக்கவே இல்லை. உடைஞ்ச கண்ணாடியை ஒட்டவைக்கத் தேவையில்லைன்னு மறுத்திட்டீங்க. அவருக்கு நோய் முத்திப்போய் கடைசியா ஒரு தடவை உங்களைப் பார்த்துடணும்கிறதைக் கண்ணுல தொக்கி நிக்கிற உயிரா வெச்சிட்டு ஊசலாடிட்டிருக்கார். நீங்க அதுக்கும் மனம் இரங்கலை. அதுதான் சிங்கப்பூர்ல இருக்குற உங்கண்ணன் மக தீப்தி உங்களை மாதிரியே மெழுகு சிலை ஒண்ணை ரெடிபண்ணித் தரச்சொல்லிக் கேட்டாங்க. பொதுவா நாங்க உயிரோட இருக்கிறவங்க சிலையை செய்றப்ப அவங்ககிட்டே அனுமதி கேட்காம ஒப்புக்கிறதில்லை. உங்ககிட்டே அந்த சம்மதம் கிடைக்காதுன்னு தெரிஞ்சப்புறமும் நான் ஒத்துக்கிட்டேன். பாவம் அந்த தீப்தி. அதைவிடப் பாவங்க உங்க அண்ணன். இங்க வந்து உங்களோட தோற்றத்தைக் கூடுதலா அப்ஸர்வ் செய்துட்டு அந்தச் சிலையை பூர்த்தி செய்யறதா திட்டம். நானும் கையெழுத்து கேட்க வர்ற குமாஸ்தாவா நடிக்கத்தான் வந்தேன். வந்து பார்த்தா என்னோட டீச்சர்.''

''எவ்ளோ அன்பாயிருந்த மனுஷி, நீங்க செதுக்கின எத்தனையோ சிற்பங்கள்ல ஒண்ணுதானே என் ஆரம்பம்..? இத்தனை கடுமை உங்ககிட்டே எங்கேருந்து வந்திச்சும்மா..? பொய் சொல்லிட்டு போயிருப்பேன். மனசு கேக்கலை. இப்பவும் தீப்தி கேட்டாப்ல உங்களோட சிலையை செய்து தரத்தான் போறேன். எங்க அப்பா ஏமாற்றத்தோட சாகக்கூடாது. அதனால அவரை ஏமாற்றுவதைத் தவிர வேறவழியில்லைன்னு அந்தப் பொண்ணு கெஞ்சுறா. என்னால உங்க அண்ணன் முன்னாடி அச்சு அசலா உங்க சிலையைத் தத்ரூபமா அமரவைக்க முடியும். படுத்த படுக்கையா இருக்கிற அவரால நிச்சயமா அதை சிற்பம்னு கண்டுபிடிக்க முடியாது. ஆனா உங்க மனசு... அதை எந்த சிற்பியாலயும் வடிக்கவே முடியாதில்ல..? பொம்மை மடியில விழுந்து கதறும்போது விழுற கண்ணீர்த் துளிகள் உங்களுக்குச் சொந்தமானதில்லீங்களா... சிலை ரெடியாகுறதுக்கு ஒருவாரம் ஆகும். நீங்க மனசு வச்சா நாளைக்குக் காலையில உங்கண்ணன் முன்னாடி நீங்களே போய்நிக்க முடியும். உங்க பிள்ளைகள்ல ஒருத்தனா இதைக் கேட்கிற உரிமை எனக்கு இருக்குன்னு நம்புறேன். தப்புன்னா என்னை மன்னிச்சிருங்க.''

எழுந்தவன் நெடுஞ்சாண்கிடையாக டீச்சரின் பாதங்களில் பணிந்து எழுந்தான்.

''வரேன்மா''. என்று அவள் பதிலுக்குக் காத்திராமல் கொண்டுவந்த ஃபைலை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு வாசலை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

''வடிவு. மதுரைக்குப் போவணும். ரெடிபண்ணு'' என்று சற்றே சப்தமாகச் சொன்னதைக் கேட்டுப் புன்னகைத்துக் கொண்டான்.

படியில் இறங்கும்போது படர்க்கையில் ''இன்றைக்கு நிச்சயம் மழைவரும் பாரேன்'' என்று யாரோ யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

சிறுகதை

வெளிச்சம்

கணேசகுமாரன்

“தமிழகத்தின் டாப் டென் மனிதர் 2023 விருதைப் பெற்றுக்கொள்ள திரு. சிங்கராஜன் அவர்களை மேடைக்கு அழைக்கிறோம். விருதினை மதிப்புக்குரிய ஆட்சியர் வழங்குவார்.’’ சிங்கராஜன் எழுந்தான். பலத்த கரகோஷங்களுக்கிடையில் மேடையேறிய சிங்கராஜன் கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தான். கையில் அலுமினிய ஸ்டிக் ஒன்றை வைத்திருந்தான். அவனின் இடதுகையைப் பிடித்தபடி ஒருவர் முன்னே செல்ல அவரைப் பின்தொடர்ந்தபடி மேடையில் வந்து நின்றான்.

‘‘இப்பொழுது சிங்கராஜனைப் பற்றிய ஒரு காணொளியைக் காண்போம்.’’ பிரம்மாண்ட மேடையில் தெரிந்த அகலமான திரையில் சிங்கராஜன் கறுப்புக்கண்ணாடி அணிந்துகொண்டு வீதியில் நடந்தான். கையில் இருந்த அலுமினிய ஸ்டிக்கின் உதவியுடன் படியேறினான். பின்னணியில் அவன் வாழ்வினை ஒரு பெண் குரல் உரத்துச் சொல்லிக்கொண்டு வர... கிராமத்துப் புழுதியில் அவன் கால்கள் பயணப்பட்டதை நான்குபுறமும் சுற்றிய கேமரா 360 டிகிரியில் பதியவைத்து ஒளிபரப்பிக்கொண்டிருந்தது.

காணொளி முடியும்போது லேசாய் புன்னகைக்க முயன்றான் சிங்கராஜன். விரிய மறுத்த அந்தப் புன்னகை அப்படியே திரையில் ஒரு புள்ளியில் உறைய அரங்கத்தில் எழுந்த கைத்தட்டல் ஒலி அமைக்கப்பட்டிருந்த மேடையைத் தாண்டி விண்ணை அதிரவைத்தது. விருதைப் பெற்றுக்கொண்டு தனது இருக்கையில் அமர்ந்த சிங்கராஜனின் விரல்கள் விருதின் மேலிருந்து கீழாக ஊர்ந்துகொண்டு இருந்தது.

கண்ணாடிக்குள்ளிருந்த கண்கள் எந்த வெளிச்சத்தையும் உணராமல் என்றோ தன் ஞாபகத்தில் படிந்த சூரியனை மீட்டெடுத்துக் கொண்டிருந்தது. காணொளியில் காட்டப்படாத யாருக்கும் அத்தனை நெருக்கமாய் தெரியாத ஒரு வாழ்வு சிங்கராஜனுக்கு உண்டு. அந்த வாழ்வில்தான் அவன் பகலையும் இரவையும் இரண்டாகப் பிரித்து வாழ்ந்து வந்தான்.

சிம்மமேடு. சுதந்திரத்துக்குப் பிறகு முன்னேற்றம் காணாத, நாட்டின் வரைபடத்தில் எவ்விதத்திலும் இடம்பெறாத சாபம் விளைந்த ஒரு கிராமம். வானத்திலிருந்து குதித்த மனிதர்கள் அங்கு வாழ்வதாய் யாரும் எவரிடமும் சொல்லவில்லை. ஆனாலும் அவர்களின் வாழ்வு அப்படித்தான் விதிக்கப்பட்டிருந்தது. மின்சாரம் என்பதையே அறியாத அந்த வெள்ளந்தி கிராமத்தில் பள்ளிக்கூடம், மருத்துவமனை என்று எந்த அத்தியாவசியமும் கிடையாது.

அவர்களின் வெளிச்சம் என்பது சூரியனோடு மட்டும் உறவாடும் வகையில் இருந்தது. சூரியன் மறைந்து இருள் அப்பியதும் கைக்குக் கிடைத்த வெளிச்சத்தை மண்ணெண்ணெய்

விளக்கினிலோ விளக்கெண்ணெய் ஊற்றிய அகல் தீபத்திலோ தேடிக்கொண்டார்கள். இரவு என்பதன் முழு அர்த்தமும் ஒருவகையில் அறிந்தவர்களாகவும் இருந்தார்கள். இன்னொரு வகையில் அறியாதவர்களாகவும் இருந்தார்கள். சீக்கிரமே சாப்பிட்டு சீக்கிரமே தூங்கிப்போனார்கள்.

இருள் முடிந்து பனியுடன் சாம்பல் நிறத்துக்கு வானம் மாறும்முன்பே தங்கள் நாளைத் தொடங்கினார்கள். இன்னும் சொல்லப்போனால் சூரியன் வருவதே சிம்மமேடு கிராமத்து மக்களுக்காகத்தான் என்று அவர்கள் நம்பினார்கள். அப்படிப்பட்ட சூரியனோடு பேசிப் பழகி வளர்ந்தவன்தான் சிங்கராஜன். சிம்மமேடு கிராமத்தின் எல்லைச்சாமியும் தங்களின் குலதெய்வமுமான சிங்கராஜனின் பெயரைத்தான் அவன் பெற்றோர்கள் வைத்திருந்தனர்.

ஏழு கிலோ மீட்டர் நடந்து சென்றால் தென்படும் மந்திமேடு கிராமத்தில் பள்ளிக்கூடம் உண்டு. முக்கியச் சாலைக்கு சமீபத்தில் இருப்பதாலோ என்னவோ அரசாங்கத்தின் கருணைப் பார்வை மந்திமேடு மக்களின் மீது பட்டிருந்தது. சிறிய அளவிலாவது படித்தவர்கள் அங்கு தென்பட்டார்கள். தன் படிப்பையும் சிங்கராஜன் அங்கே தீர்மானித்தான்.


தினமும் காலையும் மாலையும் நடக்கத் தொடங்கினான். மந்திமேடு பள்ளிக்கூடத்தின் ஆசிரியர்கள் கருணையே மிகுந்தவர்களாகத் திகழ்ந்தார்கள். அதிலும் வாசுகி டீச்சர் எப்போதும் சிங்கராஜனின் கண்களை உற்றுப்பார்த்து, ''ஒனக்கு யாரு சிங்கராஜன்னு பேர் வச்சது. கண்ணன்னு தான வச்சிருக்கணும் முட்டைக் கண்ணா...'' என்று செல்லம் கொஞ்சி திருஷ்டி கழிப்பார். சிங்கராஜன் தன் பெரிய விழிகளை உருட்டிச் சிரிப்பான். வெள்ளைச் சிரிப்பில் பெருகும் ஒளி அவனின் இருள் கிராமத்துக்கும் சேர்த்தே இருக்கும்.

வீட்டுக்குள் மிதக்கும் நிலா வெளிச்சத்தில் படித்து முன்னேற முடியாத அவனுக்கு மந்திமேடு பள்ளிக்கூடத்து வெளிச்சம் அறிவுத் திருக்கோவிலின் மந்திர இடமாயிற்று. சூரியனோடு பேசிக்கொண்டு புத்தகப்பையைத் தூக்கிக்கொண்டு நடக்கத் தொடங்கினால் பள்ளியில் பாடம் ஆரம்பித்துதான் எப்போதும் போய் நிற்பான். பக்கத்து ஊரிலிருந்து வந்து படிக்கும் ஒரே மாணவன் என்பதால் அவனுக்கு மட்டும் சிறப்புச் சலுகையாக அந்தத் தாமதம் அனுமதிக்கப்படும்.

செம்மண் புழுதி அப்பிய கால்களில் வைராக்கியம் அணிந்துகொண்டு அலைந்து படித்து வந்தான். சாயங்காலம் சூரியன் மறைந்தாலும் இருந்தாலும் அவனுக்கு ஒன்றுதான். எப்போதாவது மந்திமேடு கிராமத்திலிருந்து சைக்கிளில் செல்லும் ஒருவர் அவனை ஏற்றிக்கொண்டு செல்வார். மற்ற நாட்களில் இருளும் நிலாவும் மட்டுமே அவனுக்குத் துணை. காலையில் படித்த வாய்ப்பாடுகளைத் தன்னுடன் கூடவரும் நிலாவிடம் சொல்லிக்காட்டி சந்தோஷப்படுவான் சிங்கராஜன். நிலாவின் ஒற்றையடிப் பாதையில் சிங்கராஜனைத் தவிர வேறு யாருமில்லை.

தேர்தலின்போது மட்டும் ஓட்டு கேட்டு சிம்மமேடு கிராமத்தில் பாதம் பதிக்கும் அரசியல்வாதிகளின் கண்களுக்கு இருள் பூசிக்கொண்டு வாழும் மக்களின் பகல் தெரியாமல் போயிற்று. அவ்வப்போது மீடியாவின் கண்களுக்கு ஆச்சரியகரமான கிராமம் என்று தலைப்பிட்டு அந்த நேரத்துக்கான பரபரப்புக்கு மட்டும் உபயோகப்படும் இடமாக சிம்மமேடு இருந்தது.

ஒளி வேண்டி தரப்படும் மனுக்கள் எல்லாம் தேர்தல் முடியும் முன்னே குப்பைக் கூடைக்குள் சென்றன. தோற்றவனுக்கு அங்கே வேலையில்லை. ஜெயித்தவனுக்கு வேலை அங்கே இல்லை. ஒலிபெருக்கியில் சொல்லப்படும் தேர்தல் வாக்குறுதிகள் மாலை சூரியன் தொலையும்போதே மறைந்துபோயின. ஒருநாளிலே இவ்வளவு மாற்றம் எனும்போது தேர்தல் கால இடைவெளிகளில் சிம்மமேடு கிராமம் ஓட்டரசியலில் மறந்தே போயிற்று. விடியல் என்பது வெளிச்சம் தர மட்டுமே என்று பூரணமாக நம்பிய அந்தக் கிராமத்து மக்களின் மத்தியில்தான் சிங்கராஜன் படித்து முன்னேறினான்.



ஓவியம்: ஷ்யாம்

மந்திமேடு கிராமத்தின் ஆசிரியர்கள் ஒத்துழைப்பு, அரசாங்க ஸ்காலர்ஷிப் பெற்றுக்கொண்டு ப்ளஸ் டூ முடித்தவன் அங்கிருந்து விலகி ஹாஸ்டலில் தங்கி பாலிடெக்னிக் முடித்தான். முதன்முறையாக சோடியம் வேபர் வெளிச்சத்தை அங்கேதான் பார்த்தான். இரவு என்பது வெறும் இருளால் ஆனது அல்ல என்பதை அங்கேதான் தெரிந்துகொண்டான்.

விடுமுறைக்கு ஊருக்கு வருபவன் தன் கிராமத்தின் நிரந்தர இருளைக் கண்டு மனம் வெதும்பினான். அம்மா அப்பாவிடம் தான் கண்ட இரவின் வெளிச்சத்தைப் பற்றி ஏதும் சொல்லாமல் உள்ளுக்குள்ளேயே வைத்து மறுகுவான்.

பகலில் காடுகளில் மரங்கள் வெட்டி பக்கத்து கிராமத்தில் விற்று வயிற்றுக்குக் கஞ்சி வார்த்துக்கொள்ளும் சிங்கராஜனின் பெற்றோர்களுக்கு அவனின் கல்விப் போராட்டமெல்லாம் கண்ணுக்குத் தெரியவில்லை. ''எங்களைக் கீறுன முள்ளுக்காடு உன்னைக் கீறாம பாத்துக்கய்யா...'' என்பது மட்டுமே பெற்றவளின் பிரார்த்தனையாய் இருந்தது.

சிங்கராஜனின் மனதுக்குள் விடிந்தும் இருளில் கிடக்கும் தன் கிராமத்து மனிதர்களின் சாம்பல் சித்திரம் சதா விரிந்தபடி கிடந்தது. குளிர்காலத்தின் போது சூரியன் அவர்களை விட்டு சீக்கிரம் விடை பெற்றுக்கொள்வான். நீண்ட இரவைச் சகித்துக்கொள்ள முடியாமல் எல்லா குளிர்காலங்களையும் வாய்விட்டுச் சபித்தார்கள் சிம்மமேடு மக்கள். சாபம் இருளில் புகையாய் வெளியேறிற்று.

இனிமேற்கொண்டும் மேலே படிக்க முடியாது என்பதை உணர்ந்த சிங்கராஜன் குளிரில் கருகி வெயிலில் விரைத்த பெற்றோர்களின் பாரம் தீர்க்க முனைந்தான். படித்த படிப்புக்கான அடையாளத்தைக் கையில் வைத்துக்கொண்டு கிராமம் தாண்டி நகரங்களில் கால் பதித்து அலைந்தான். ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு இரவு அவனுக்கு அறிமுகமானது.

மந்திமேடு கிராமத்தில் புதிதாய் அமைக்கப்பட்டிருந்த கழிவு சுத்திகரிப்புத் தொழிற்சாலைக்கு வேலை கேட்டுப் போனவனுக்குக் கிடைத்தது தொழிற்சாலையின் செக்யூரிட்டி வேலை. முன்னாள் ஆளுங்கட்சி அரசியல் ஒன்று கணக்கு காட்ட உருவாக்கியிருந்ததுதான் அந்தக் கழிவு சுத்திகரிப்புத் தொழிற்சாலை.

எங்கேயோ உருவான மிச்சக் கழிவை கொட்டிவைக்கும் குடோனாகத்தான் அது இயங்கிவந்தது. அவன் படிப்புக்கான இடம் அங்கே இல்லை. ஆனால் கழிவைப் பாதுகாக்கும் பொறுப்பு அவனுக்குத் தரப்பட்டது.

அந்த இடத்தை சிங்கராஜன் பராமரித்து வந்தானே தவிர அங்கே எந்தச் சுத்திகரிப்பும் நடக்கவில்லை. கிடைத்த அதிகப்படியான சம்பளத்துக்குக்காகத் தலையாட்டி வைத்தான். காட்டு வேலைக்குப் போகவேண்டாம் என பெற்றவர்களைக் கேட்டுக்கொண்டாலும் அவர்கள் விடிந்ததும் காடு தேடி செல்லத் தொடங்கினார்கள். ஆயுதம் ஏந்தி காய்ப்புக் காய்த்த கைகள் ஒருபோதும் ஓய்வை விரும்பியதில்லை.

ஒருநாள் கழிவுத் தொழிற்சாலை உள்ளே புகை கசிந்து பெரும் விபத்து நிகழ்ந்தது. வருமான வரி கணக்கு காட்ட முன்னாள் பிரமுகரே ஏற்பாடு செய்த செயற்கை விபத்து அது. என்ன ஏதென்று உணருமுன்னரே சிங்கராஜனின் முகத்தைத் தாக்கியது பெரும் நெருப்புக்கோளம். அலறியடித்து வெளியே வந்து விழுந்தான் சிங்கராஜன்.

இமைகளைப் பொசுக்கி கண்களுக்குள் படிந்த நெருப்பு சிங்கராஜனின் பார்வையைப் பறித்தன. கண்கள் நிரந்தர இருளை அணிந்துகொண்டன. மீண்டும் தன் குடிசைக்கே திரும்பினான் சிங்கராஜன்.

அவனுக்கான இரவும் பகலும் ஒன்றே என ஆகின. கண்ணிருந்தும் நாங்கள் பாதி குருடர்கள்தான் என்று அவனுக்கு ஆறுதல் சொன்ன மக்களின் அடர் இருளின் துயரம்

சிங்கராஜனின் செவிக்குள் கனவிலும் ஒலித்துக் கொண்டிருந்தது. தட்டுத்தடுமாறி நகர்ந்தன அவனது பொழுதுகள். வேலை தேடி அலைந்த நகர நாட்கள் அவனுக்கு சில பாடத்தைப் போதித்திருந்தன.

சராசரியான வாழ்க்கை தவிர்த்து இன்னொரு உலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் தன் மனிதர்களை நினைத்தான். தலைமுறை தலைமுறையாக இரவின் உண்மை அறியாமல் வாழும் தன் மனிதர்களின் தலையெழுத்தை மாற்ற முடிவெடுத்தான். ஒருநாள் தான் பிறந்து வளர்ந்த கிராமத்தை விட்டு காணாமல் போனான்.

சென்னைக்கு வரும்போதே தீர்மானித்திருந்தான் சிங்கராஜன். தான் வாழ்ந்த நிலத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வராமல் திரும்பிச் செல்வதில்லையென்று. கையில் தென்படும் மக்களிடம் சிங்கராஜன் ஒன்றே ஒன்றுதான் கேட்டான். ''சி.எம் வீட்டுக்கு எப்படி போகணும்?''. முதலமைச்சரின் வீதி முனையில் தன் கண்களைக் கட்டிக்கொண்டு அமர்ந்தான்.

கடந்து செல்பவர்கள் வினோதமாய் பார்த்து நகர்ந்தனர். பரபரப்புச் செய்திகளுக்காக சுற்றித் திரியும் மூன்றாம் கண்ணின் பார்வையில் பட்டான் சிங்கராஜன். தன் முன் நீட்டப்பட்ட மைக்கில் நிதானமாய் பதிலுரைத்தான்.

''இது எனக்காக நான் கட்டிக்கிட்ட துணி இல்லை. என் கிராமமே இந்த மாதிரி துணியை நிரந்தரமாய் கட்டியிருக்கு. அதை அவிழ்க்கணும். பகலுக்குள்ள வாழ்ந்து முடிக்க வேண்டிய கட்டாயத்தில் ஒருவிதமான வினோத மிருக வாழ்வைத்தான் அவங்க வாழ்ந்துட்டு இருக்காங்க. எத்தனையோ மனுக்கள் தந்தாச்சி... எத்தனையோ அரசியல்வாதிங்ககிட்ட எங்க இருள் வாழ்வை எடுத்துச் சொல்லியாச்சி. எல்லாம் காதில்லாதவனிடம் சொன்ன துன்பக் கதையா போயிடுச்சி. சி.எம்மை என்னால் நேரடியா போய் பாக்க முடியாது. இப்படி ஒரு விஷயம் பண்ணினாலாவது அவர் கவனத்துக்குப் போகும்ணு நம்புறேன். எங்க வாழ்க்கைக்கு வெளிச்சம் கிடைக்கும்வரைக்கும் இங்கிருந்து நகரமாட்டேன்.''

சிங்கராஜனின் பேட்டி ஒளிபரப்பாகி இரண்டு நாள் வரைக்கும் எந்த அதிசயமும் நிகழ்ந்துவிடவில்லை. மூன்றாம் நாள் பெருமழை சென்னை முழுவதும் கொட்டித் தீர்த்தது. பெய்யெனப் பெய்த மழை சிங்கராஜனையும் நனைத்து வீதி ஓரத்துக்குத் தள்ளியது.

ஆஸ்பெஷ்டாஸ் சீட்டின் கூரையின் கீழ் ஒதுங்கினான். நிவாரணப் பணிகளை முடுக்கிவிட வீதியில் இறங்கினார் முதலமைச்சர். தனது தெருவிலிருந்து நிவாரணப் பணிகளைத் தொடங்கியவரின் கண்களில் கூரைக்குக் கீழ் ஒதுங்கி நின்ற சிங்கராஜன் நடுங்கியபடி தெரிந்தான். கண்களை மூடியிருந்த கறுப்புத் துணி வித்தியாசமாகப் பட்டது. சுற்றிலும் கேமராக்கள் கவனித்துக்கொண்டிருக்க சிங்கராஜனிடம் சென்று பேசினார் முதலமைச்சர்.

இருளில் கிடக்கும் இரண்டு தலைமுறை கோரிக்கை அவர் காதில் விழுந்தது. உடனே விசாரித்து நடவடிக்கை எடுக்கச்சொல்லி ஆணையிட்டார். சிம்மமேடு கிராமத்தில் பணி தொடங்கியது. சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து வெளிச்சத்தைத் தொலைத்த மக்களின் கண்களில் பளீரென விளக்கு எரிந்தது. தங்கள் பகலின் நீளத்தை அதிகரித்துக்கொண்டு இரவிலும் சிரித்தனர் அவர்கள்.

சிங்கராஜன் தனது கிராமத்துக்குச் சென்றபோது அவனை வரவேற்க தாரை தப்பட்டைகளுடன் சீரியல் பல்புகளும் தயாராய் இருந்தன. அந்தப் பளீர் வெளிச்சத்தை அவன் உணரவில்லை. தன் கண் கட்டை அவிழ்த்துவிட்டுச் சிரித்த சிங்கராஜனின் சிரிப்பில் தெறித்த மின்சார வெளிச்சத்தில் சிம்மமேடு கிராமமே ஒளிர்ந்தது.



ஓவியம்: வேலு

சிறுகதை

மருதாணி

கவிதா சொர்ணவல்லி

காலை ஏழு மணி ஷிப்ட் எனக்கு. ஆறரை மணிக்கு வீட்டிலிருந்து கிளம்பினால்தான் இருபது நிமிட பயணத்தில் சுமாராக ஏழு மணிக்கு அலுவலகம் செல்ல முடியும்.

நான்காவது மாடியிலிருந்து பூனையைப் போல குதித்து குதித்து வேகமாக இறங்கிக் கொண்டிருந்தேன். லிஃப்ட் இல்லாத இருபத்தைந்து வருடத்திற்கு முந்தைய அடுக்குமாடி குடியிருப்பு அது.

அதிநவீன வசதிகள் இல்லாவிட்டாலும், அதன் பழமைக்கு ஈடான சில சௌகர்யங்களும் இருக்கத்தான் செய்தது. சென்னையின் மத்தியில் நிறைய மாமரங்களுடன், அரளிப் பூக்களுடன், பச்சிலை செடிகளுடன், மல்லிக்கொடிகளுடன், மருதாணி மரங்களுடன், கொழுமையான வாழைகளும் தளிர்த்து தழைத்துக் கொண்டிருந்தது எங்களது அபார்ட்மென்ட். கீழறங்கி வாகன நிறுத்தத்திற்கு வந்தேன்.

எலுமிச்சை மரத்தடியின் என் இருசக்கர வாகனம் நின்று கொண்டிருந்தது. டிசம்பர் மாதப்பனி படிந்திருந்த வாகன இருக்கையின் மீது சில இலைகளும் விழுந்திருந்தது. ஒரு எலுமிச்சை இடை எடுத்து தலைக்குள் சொருகிக்கொண்டேன். நாள் முழுக்க வாசமாய் இருக்கும். வாகனத்தை திஸ்டார்ட் செய்து திரும்புகையில், எதிரில் ஆடலரசியைப் பார்த்தேன். செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார். பனி உள்புகாதாவாறு ஸ்கார்ப் அணிந்து சிறு குழந்தை போல் இருந்தார். சுருக்கமில்லாத நிறமான முகம். ஆனால் மூப்பின் காரணமாக உடல் குறுகியிருந்தது. .

ஓய்வு பெற்ற ஆசிரியரான ஆடலரசி முதல் பிளாக்கின் நான்காவது மாடியில் வசிக்கிறார். கணவர் செல்லையா ஓய்வு பெற்ற தலைமையாசிரியர். இரு மகன்கள் அமெரிக்காவில் வசிக்கின்றனர். தினமும் காலையில் ஐந்தரைக்கெல்லாம் எழுந்து, அத்தனை படிகள் தாண்டி கீழே வந்து செடிகளுக்கும் தண்ணீர் விடுவார். ஆண்டாள் பள்ளியெழுச்சி போல அதே காதலுடன் செய்வதாகத் தோன்றும்.

மருதாணி மரத்தருகே வந்தார். சட்டென்று எனக்கு எரிச்சலாகியது. அதே நேரத்தில் அவரும் என்னைப் பார்த்தார்.

''குட்மார்னிங்'' என்றார் முகம் நிறைந்த புன்னகையுடன்.

''குட்மார்னிங்'' என்றபடியே வாகனத்தில் அமர்ந்து கிளம்பினேன்.

''பனி நிறைய பெய்யுது. ஓவர்கோட் போட்டுக்கோ'' என்று அவர் சொன்னது என் பின்னால் தூரமாகக் கேட்டது. அதற்கு பதில் சொல்ல பெரிதாக விருப்பமில்லாததால் கேட்காத மாதிரியே கடந்துவிட்டேன். ஆடலரசி மீது இன்னமும் கொஞ்சம் கோபமும், ஆத்திரமும் மீதமிருந்து கொண்டே இருந்தது.

இந்த வருடத்தின் தொடக்கத்தில், திருநெல்வேலியில் இருந்து அப்பாவும் அம்மாவும் சென்னை வந்திருந்தபோதுதான், மறையாத தழும்பாக மாறிய அந்த சம்பவம் நிகழ்ந்தேறியது.

ஆடலரசியின் அனுசரணையில் அபார்ட்மென்ட்டில் 25 வருடத்தைய மருதாணி மரமொன்று இருக்கிறது. மருதாணிச் செடி மரமாக மாறிய அதிசியத்தை எல்லாம் திருநெல்வேலியில் நான் பார்த்ததே இல்லை என்பதுதான் உண்மை. அம்மாவுக்குமே அது அதிசயமாக இருந்திருக்கக்கூடும்.

ஒரு நாள் திடீரென ''மருதாணி வச்சுக்கனும்னு ஆசையா இருக்குமா'' என்று சிறுபெண் போல அம்மா கேட்டது ஆச்சர்யம்தான். இது போன்ற லௌகீக விஷயங்களில் விருப்பமில்லாதவள்தான் அவள். பீரோ நிறைத்திருக்கும் பட்டுபுடவைகளுக்கு நடுவே, சாதாரண பருத்தி சேலை தேர்வு செய்யும் குணம் அவளுக்கு. அப்படிப்பட்டவள் ஆசைப்பட்டு ஒன்றைக் கேட்கிறாள் என்பதே சிலிர்ப்பாக இருந்தது எனக்கு.

மறுநாள் காலையில் ஆர்வமாக மருதாணி பறித்துக் கொண்டிருந்தேன்.

''யாரைக் கேட்டு பறிக்கிற?'' என்று ஆங்காரத்துடன் என்னருகில் வந்த ஆடலரசியைப் பார்த்து சற்றே பதறிவிட்டேன்தான்.

''இல்லம்மா.... எங்க அம்மா ஊருல இருந்து வந்திருக்காங்க. அவங்க ஆசைப்பட்டு கேட்டாங்க. அதான்'' என்று, பாதியில் பிடிபட்ட திருடன் போல அவமானமாக ''அது மகாலட்சுமி. தினமும் விளக்கேத்தி சாமியாக் கும்பிட்டுட்டு இருக்கேன். அதெப்படி நீ பறிக்கலாம். ரோடுல போற வர்றவங்க எல்லாம் பறிக்கிறதுக்கா? நான் தினமும் காலைல எழுந்து தண்ணி ஊத்தி வளத்துட்டு இருக்கேன்?'' என்றார்.

சிறு இலை பறிக்க விடாத அந்த தடித்தனம் எனக்குள் ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

''அது வெறும் செடிதான. மத்தவங்களுக்கு கொடுக்காம வளத்து என்ன செய்வீங்க? உங்க கூட குழிக்குள்ள கூட்டிட்டுப் போக போறீங்களா?'' என்றேன்.

அவரும் என்னிடமிருந்து அப்படியான சொற்களை எதிர்பார்த்திருக்க மாட்டார்தான். அமைதியாக போய்விட்டார். நானும் பறித்த இலைகளை தரையில் கொட்டி விட்டு, கடையில் மருதாணி கோன் வாங்கி அம்மாவுக்கு வைத்துவிட்டேன்.

அதிலிருந்து எனக்கும் ஆடலரசிக்கும் எப்போதும் ஒத்துப்போவதில்லை. ஆனால் அதற்கு முன்பாகவே ஒருமுறை எனக்கும் அவருக்கும் லேசாக முட்டிக்கொண்டது.

அதுவொரு ஆடிப்பெருக்கு நாள். அன்று அபார்ட்மென்ட்டில் மாநகராட்சி தண்ணீர் வரும் சம்ப்பை சுற்றி வாசலடைக்கும் அளவிற்கான புள்ளிக்கோலம் வரைந்து, நடுவே பூசணிப்பூ வைத்து தடபுடலாக பூஜை செய்துகொண்டிருந்தார். அவரது கணவர் செல்லையா மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தார்.

எல்லா வீடுகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆடலரசி இப்படி சம்ப்பை சம்பு அம்மனாக மாற்றியதில் எனக்கு சிரிப்பு வந்துவிட்டது. 'ஆடு தாண்டின காவிரி இதுதானா?' என்று சம்ப் குழியைக் காண்பித்து கேட்டதும் ஆடல் கடுப்பாகிவிட்டார்.

அதிலிருந்து அப்பார்ட்மென்ட் நாத்திகவாதி ஆகிவிட்டேன் நான். பார்ப்பவரிடம் எல்லாம் 'அந்தப் பிள்ள கருப்பு சட்டக்காரி போல. கூட்டத்துக்கெல்லாம் போகும்ன்னு நினைக்கிறேன். அது பேச்சு வழக்கே சரியில்ல' என்று பரப்பிக் கொண்டிருந்தார்.

நான் கருப்புசட்டைக்காரியும் கிடையாது. சிவப்பு சட்டைக்காரியும் கிடையாது. ஆனால் அந்த நாத்திகவாதி என்பதில் வேண்டுமானால் சிறிது உண்மை இருக்கலாம். அதுவும் வாசித்தோ, களத்தில் கிடைத்த ஞானத்தினால் வந்த நாத்திகம் அல்ல. தனிப்பட்ட அனுபவத்தில் கிடைத்தது.

வீட்டிலேயே ஆறுகால பூஜை செய்து பக்திப்பழமாக மிளிர்ந்துகொண்டிருந்த அம்மா, சில வருடங்கள் படுத்த படுக்கையாக ஆகினார். உதவிக்கு வேறு யாரும் இல்லாததால், அலுவலகம் செல்லும் அப்பாவும்,பத்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த நானும் மட்டுமே அவரைக் கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது.

எத்தனையோ மருத்துவர்களைப் பார்த்தும் காரணம் கண்டுபிடிக்க முடியாத நோயாக இருந்தது. மதிய உணவையும், அந்த நேரத்து மருந்தையும் எடுத்து வைத்துவிட்டு, சாப்பிட மறக்கக்கூடாது என்று அறிவுறுத்தி அம்மாவை வீட்டினுள் வைத்து கதவை பூட்டி சாவி எடுத்துக்கொண்டு போன காலகட்டத்தில் எல்லாவற்றின் மீதும் எனக்கு விலக்கம் வந்தது.

வாழ்க்கை எனக்கு என்ன அளித்தாலும் அதை பயமில்லாது எதிர்கொள்ளவேண்டும் என்கிற வெறியும் அங்கிருந்துதான் வந்தது. என்னுடைய கல்லூரி படிப்பு முடிந்து, வேலைக்கு செல்ல ஆரம்பித்த நேரத்தில் மனஉறுதியை ஊன்றுகோலாக கொண்டே அம்மா தன் நோய்ப் படுக்கையில் இருந்து வெளிவந்தாள் என்பது, என்னுடைய நாத்திக மனதுக்கு இன்னமும் புத்தொளியைப் பாய்ச்சியது.

ஆடலரசி இப்படி என்னைப் பற்றி பரப்பிய கருப்பு சட்டை கருத்துக்களால்,தீபாவளி, தீபம், பொங்கல், அட மகளிர் தின அபார்ட்மென்ட் விழாக்களுக்கு கூட எனக்கு அழைப்பில்லாமல் போனது. நானும் இதையெல்லாம் சட்டை செய்யவில்லை.

இப்படியான உறவுச் சிடுக்குகளுக்கு நடுவில்தான் ஆடலரசி இன்று எனக்கு ஆச்சர்யமாக குட்மார்னிங் சொன்னது நடந்தேறியது. டிசம்பர் பனியில் ஆடல் மூளை உருகிவிட்டது போல என்று கிண்டலாக நினைத்துக்கொண்டேன்.

ஜனவரி ஒன்று. அப்பார்ட்மென்ட் வாட்ஸ்அப் குரூப்பில் எல்லோரும் புத்தாண்டு வாழ்த்துக்களை பரிமாறிக்கொண்டிருந்தார்கள். மதியத்திற்கு மேலாக, வாட்ஸ்அப்பில் ஆடலரசியின் குரல் பதிவு ஒன்று வந்து விழுந்தது. நான் அதை சட்டை செய்யாமல் கடந்தேன்.

ஆனால், உடனே அபார்ட்மென்ட்வாசிகள் எல்லாம் அலறியடித்து, 'அம்மா நான் வர்ரேன்ம்மா வீட்டுக்கு; ஐயாவை நான் நாங்க ஹாஸ்பிடல் கூட்டிட்டு போறோம்' என்று வரிசையாக பதிலிடவும், பதறிப்போயி குரல் பதிவை ஒலிப்பித்தால் 'ஐய்யா பாத்ரூம்ல வழுக்கி விழுந்துட்டாங்க... யாராவது உடனே வாங்க... அவரை ஹாஸ்பிடல் கூட்டிட்டு போகணும்' என்று அழுதிருந்தார். ஒரு மாதிரியாக இருந்தது. ஆனால் அதற்குள்ளாக சக பிளாட்வாசிகள் அங்கே குவிந்துவிட்டதால், நான் வெறுமனே 'கெட் வெல் சூன் ஐய்யா' என்று வாட்ஸ்அப்பில் பதில் சொல்லி முடித்துக்கொண்டேன்.

ஒரு வாரம் வரைக்கும் ஓடி ஓடி ஆடலரசிக்கு உதவி செய்து கொண்டிருந்த பிளாட்வாசிகள், பின் அவர்களது தினசரி வாழ்வின் அயர்ச்சியில் உதவிகளைக் குறைத்துகொண்டது தெரிந்தது. உதவி கேட்டு ஆடல் அனுப்பும் குரல் பதிவுக்கு யாரும் பதில் அனுப்புவது இல்லை.

சென்னையின் முகத்தில் பொங்கல் களை தொடங்கியிருந்தது..அபார்ட்மென்ட்டில் பேர்வாதி பேர் தத்தம் ஊருக்கு செல்லத் தொடங்கியிருந்தனர்.போகிக்கு முந்தின நாள் எனக்கு திடீரென ஆடலரசி மற்றும் ஐயாவின் நினைவு வந்தது. என்ன செய்து கொண்டிருக்கிறார்களோ என்று. போய்ப்பார்க்க தயக்கமாகவும், சங்கடமாகவும் இருந்தது.

ஆடலும் என்னிடம் மிகக் கடுமையாக நடந்திருக்கிறார். என்னை முடிந்தளவு காயப்படுத்திருக்கிறார். அபார்ட்மென்ட்டே என்னை ஒதுக்கி வைக்கவும் காரணமாக இருந்திருக்கிறார். நானும் அவரை 'குழிக்குள்ள போகப் போறப்ப கொண்டு போறீங்களா?' என்று கேட்டிருக்கிறேன்.

ஆனாலும் சிறு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, முதல் பிளாக்கில் நான்காவது மாடியில் இருந்த வீட்டிற்கு சென்று... சில நிமிடங்கள் கதவு முன் அமைதியாக நின்று கொண்டிருந்தேன். பிறகு என்னிலிருந்த எதோ ஒன்று என்னை இயக்கி, நான் கதவை மெதுவாக, கொஞ்சம் அழுத்தமாகத் தட்டினேன்.

மாஸ்க் அணிந்த ஆடலரசி, ஒரு கையில் வாரியலுடன் கதவு திறந்தார்.

ஐயா எப்படிருக்காங்க? என்றேன் எடுத்தவுடன்.

உள்ள வா என்றபடிக்கேஅழைத்துச்சென்றார்.

செல்லையா படுக்கையில் அமர்ந்திருந்தார். பார்த்ததும் புன்னகைத்தார்.

இப்பத்தான் வரத் தோணுதா?

இல்ல... கொஞ்சம் வேலை நெருக்கடி... எப்படி இருக்கீங்க?

இடுப்புல அடி. கால் கொஞ்சம் பிராக்ச்சர் என்றபடியே வீல் சேர் காட்டினார்.

சரி ஆகிருவீங்க. அப்ரோம் வழக்கம் போல சின்னப் பய்யன் மாதிரி தாண்டி தாண்டி படியை குதிச்சு வருவீங்க

முகம் மலர்ந்து சத்தமாக சிரித்தார். படி குதித்து வரும் பையனாக தன்னைக் கற்பனை செய்திருப்பார் போல.

ஆடல்தான் ஆளில்லாம கஷ்டப்படுறாஎன்றார்

அவரிடம் சிறிது நேரம் பேசிவிட்டு, ஹாலுக்கு சென்றேன்.

நான் ஹெல்ப் பண்ணட்டுமா? என்றபடிக்கே அங்கிருந்த ஒட்டடையை எடுத்து ஆடலுடன் சேர்ந்து அவருடைய வீடை சுத்தம் செய்யத் தொடங்கினேன். சமையலறை சுத்தம் செய்வதற்கு மட்டும் நேரம் பிடித்தது. பாத்திரமெல்லாம் இறக்கி கொடுக்க உதவினேன். கழுவிய பாத்திரங்களை மாடிக்கு எடுத்துச் சென்று காய வைத்தேன்.

விளக்கு, சூடத் தட்டு, சாம்பிராணித் தட்டு, சந்தனம், குங்குமம் வைக்கும் கிண்ணங்கள், என்று பூஜை பொருட்களை விளக்கும்போது மட்டும் தயக்கமாக கேட்டார்.

''கறுப்புச்சட்டைக்காரங்களுக்கு இதுல நம்பிக்கை இருக்காதே பரவால்லையா உனக்கு?''

'நம்பிக்கை இல்லைதான். ஆனா ஹெல்ப் பண்ணுவேன்'

பொங்கல்ல்லாம் கொண்டாடுவீங்களா? என்றார்.

'நாங்கல்லாம் விவசாயக் குடும்பதான.. எங்க பொருட்களை எல்லாம் விளைய வைக்கிறது யாரு? சூரியன்தான, அவரைக் கொண்டாடுற ஒரு நாள்தான பொங்கல். 'ஷார்ட் அண்ட் ஸ்வீட்டா சொல்றேன் பொங்கல்தான் எங்களுக்கு நியூ இயர்' என்றேன்

ஆடல் குலுங்கி சிரித்தார். அம்மா போலவே இருந்தார்.

அவர் கேட்ட பொருட்கள் எல்லாம் வாங்கி வந்து கொடுத்தேன். கரும்பு, பூ, காய்கறிகள், வெத்தலை, பழங்கள், பச்சரிசி வெல்லம் என்று எல்லாமும்.

நாளைக்கு பொங்கல்ல. நீ எப்ப ஊருக்குப் போற? என்றார் ஆடலரசி.

பொங்கல் காலைல.. 'மீன்ஸ் நாளைக்கு காலைல' என்றேன்.

சற்று அமைதிக்குப் பின், 'எங்க கூட இருக்கிறியா' என்றார்.

வயதாகிவிட்டது. உணர்ச்சிக் கொந்தளிப்பாக இருக்கிறார் என்று தோன்றியது. ஆனாலும் பொங்கலை அவர்களுடன் கொண்டாடுவது பற்றி எனக்கே சிறியதாக ஒரு எண்ணம் ஓடிக்கொண்டிருந்ததது உண்மை.

கிளிஷே டயலாக்குகள் விடாமல் உடனே சரி என்றேன். ஊருக்கு அழைத்து நிலைமையை சொன்னேன். அம்மா ஒரு பூக்குட்டி. எப்போது வெடிப்பாள் எப்போது பூப்பாள் என்று அவளுக்கேத் தெரியாது. ஆனால் எனது அழைப்பிற்கு பூத்திருந்தாள். உடனே சரி சொல்லிவிட்டாள்.

பொங்கல் காலையில் என்னை எழுப்பி, கண்களில் தன் கைகளை வைத்து மறைத்து, அழைத்து சென்று பழங்களில் விழிக்க வைத்தார் ஆடலரசி.

மேல் மாடியில் சூரியனுக்கு எல்லாம் படைத்து பொங்கல் வைத்தார். ஐயா என் தோள் பிடித்தபடிக்கே, ஐந்து படிகளை நொண்டியபடிக்கே ஏறி மாடிக்கு வந்து பொங்கல் குலவையிட்டார்.

என் அம்மா அப்பாவிற்கு வாங்கி வைத்த உடைகளை ஆடலரசிக்கும் ஐயாவுக்கும் அளித்தேன்.

எப்போ வாங்கினே? என்று வெட்கமாக சிரித்தார் ஆடல்.

நேத்து பூ பழம் வாங்க போறப்ப

இரு. உனக்கும் ஒரு கிப்ட் வச்சுருக்கேன் என்றபடியே உள்ளே சென்று புடவை எடுத்து வந்தார்.

தீபாவளிக்கு வாங்கினது. கட்டவே இல்ல. புதுசு. பட்டுப் பொடவை என்றார்.

மேஹ்ரூன் கலரில் கருப்பு நிற மருதாணிப் பூக்கள் பூத்திருந்தது புடவையில்.

விக்ரமாதித்தியன்

விக்கி பங்குக்கு விக்கியும் எழுதுகிறான்...

கங்கா அறிவாள்
பெண்ணின் பாடுகள்
காவேரிக்குத் தெரியும்
பெண்ணின் வருத்தங்கள்
யமுனாவுக்குப் புரியும்
பெண்ணின் துன்பங்கள்
பெண் உள்ளத்தை
பெண்தானே உணர முடியும்

❖❖❖

முத்து முத்தாக
சேகரித்துக்கொண்டிருக்கிறாள் முத்தழகி
மாணிக்கம் மாணிக்கமாக
சேர்த்து வைக்கிறாள் மாணிக்கவல்லி
மரகதம் மரகதமாக
மரகதம்
நீலம் நீலமாக
நீலவேணி
மாப்பிள்ளை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்
கனவு காணும் பெண்களுக்கு
ஒரு யதார்த்தமும் தெரியாது

❖❖❖

மகிஷாசுரமர்த்தினியைத்தான்
நிரம்பப் பிடிக்கும்
துர்கையை
நிரம்ப நிரம்பப் பிடிக்கும்
காளியைத்தான்
இன்னும் கூடுதலாக
துடி அகலாது
துணையிருக்கும் சக்தியர்
மனம்
நினைத்துக் கொள்ளும் அவ்வப்போது

❖❖❖

காதல் என்றால்
நோதலும் சேர்ந்ததுதான் கண்ணே
புறம் பேசி
பயனில்லை
குறையை
நிறையாக்குவதுதான் பெண்மை
தாங்கத்தான்
நிலம்
அறம் பேணத்தானே
இல்லம்
பேறு பெறத்தானே
வீடு

❖❖❖

இளவரசியாக இருந்த காலம்
இனியதா
பேரரசியாக இருக்கும் காலம்
இனியதா
அன்று
அறியாப் பருவம்
இன்று
பொறுப்பு நிறைய
அரசனை
பேண வேண்டும்
இளவரசனை
கவனித்துக் கொள்ள வேண்டும்
எல்லாவற்றுக்கும் மேலாக நான்
தாயல்லவோ

❖❖❖



ஓவியம்: வேலு

வறுமையிலும்
செம்மை காண்பாள் வடிவு
இல்லை என்றே
சொல்லத் தெரியாது ராஜேஸ்வரிக்கு
சினம் அறியாதே
வாழ்கிறாள் புவனா
கண் கலங்கியதே கிடையாது
மீனா
வழங்கத்தான் தெரியும்
வாணிக்கு

❖❖❖

பெண்ணைப் பற்றி எழுதுவது என்பது
அவ்வளவு எளிதானது இல்லை
அதற்காக
எழுதாமல் இருந்துவிட முடியுமா
எழுதிப் பார்க்கலாம் என்றுதான்
எழுதுவதே
சங்கப் புலவர்கள்
எழுதியிருக்கிறார்கள்
நவீன கவிஞர்கள்
எழுதுகிறார்கள்
விக்கி பங்குக்கு
விக்கியும் எழுதுகிறான்

❖❖❖

கலாப்ரியா


நிழற்கடிகாரம்

மருதமரங்கள் வரிசைகட்டி நிற்கும் ஆற்றுப்பாதை
பாதையை ஊடறுப்பது போலொரு ரயில்வே கேட்
அதன் பொறுப்பான காவலரின் சிறிய அறை
அதையொட்டிய நாவல் மரமொன்றிலிருந்து
ரயில் கடக்கும் போதெல்லாம் கூட்டமாய்க்
கிளிகளும் பறந்து அமைந்து பச்சைக்கொடி காட்டும்
அறையைச்சுற்றி வேலிபோல 'பகல்மருதாணி'ச் செடிகள்

அறையின் நாள் முழுவதும் வெயில் விழுமொரு
சுவரில் நேரம் அறிந்துகொள்ள ஒரு நிழற் கடிகாரம்
வரைந்து வைத்திருப்பார் காவலர்
அந்த அரைவட்டக் கடிகாரமுள்ளின் நிழல்
சரியாக ஏழுமணி முப்பது நிமிடம் காட்டுகையில்
முதல் ரயில் கிழக்கிருந்து மேற்காக வரும்
அதை அனுப்பி விட்டுச் சாலையைப் பார்த்திருப்பார்
ஆற்றுக்குப் போகும் யார் சைக்கிளிலாவது
தொற்றி ஏறிக் கொள்வார் வாயில் புகையும் சுருட்டுடன்

சைக்கிளை நிறுத்தும் முன்பே குதித்திறங்கி
சற்று ஒதுங்கிப்போய் குத்தவைத்து சுருட்டையும்
வயிற்றையும் காலி செய்ய ஐந்து நிமிடம்
முன்னடித்துறையில் நாலு முங்கு போட்டு
இருப்பிடம் திரும்ப இன்னுமொரு ஈரைந்து நிமிடம்
மறுபடி ஏதோவொரு சைக்கிளில் ஏறிவந்து
இறங்கினால் எட்டுக்கு அருகே நிற்கும் நிழல்முள்

ஒன்பது மணிக்கு நகராட்சிச் சங்கு முழங்கும்போது
நேரத்தைச் சரிபார்த்து கடிகாரத்தையும் காவலரையும்
மெச்சிக் கொள்வார்கள் கடந்து போகிறவர்கள்
பள்ளிக்கூடம் செல்லும் பையன்கள் நாங்கள்
அதுவரை மெதுவாக நடந்து கதைபேசி வந்தவர்கள்
அதில் நேரம் பார்த்தபின் ஒரேஓட்டமாக ஓடுவோம்
அது மணி காட்டாத மழைப்பொழுதில் நேரத்தில்
இப்ப என்னலெ செய்வீங்க என்பது போல
எங்களைப் பார்த்து அவர் சிரித்துக் கொள்ளுவார்


ஓவியம்: தெய்வா
12
9
3
6
Deiva

அவ்வப்போது அவரிடம் மருதாணி கேட்போம்
ஆளுக்கு ஒரு வாளி தண்ணீர் அடுத்திருந்த
இசக்கியம்மன் கோயில் பைப்பில்
எடுத்து வந்து செடிகளுக்கு ஊற்றச் சொல்லுவார்
யாத்தாடி இசக்கி அம்மன் கோயிலா என்று
பயந்து நடுங்கி பரிதாபமாகப் பார்ப்போம், சரி
சாலைக்கு நடுவாகப் போகும் தண்டவாளங்களிடையே
செம்மிக் கிடக்கும் மண்ணைச் சுரண்டுங்க என்பார்

இசக்கிக்கு காணிக்கையாய் யார் யாரோ
பஸ்ஸிலிருந்து எறிந்து போகும் காசுகளை
ஓய்வு நேரத்தில் பொறுக்கி உண்டியலில் சேர்ப்பார்
சுடலைக்கு குடைபிடிக்கும் அரசிலைகள் உதிர்ந்தால்
கூட்டிப் பெருக்கி மொத்த முற்றமும் சுத்தமாக்குவார்
பூசாரிக்குச் சுகமில்லையென்றால் யாருமறியாமல்
பொங்கலிட்டுப் படைக்கும் பொறுப்பு இவருக்குத்தான்
ஊருக்குத் தெரிந்தால் இசக்கியையே விலக்கி விடுவார்கள்
இப்போதே சுடலைக்குப் படைக்கும் சுருட்டுகளை
இவர்தான் எடுக்கிறாரென முணுமுணுப்பாருண்டு

எதற்கும் பேச மாட்டார் இந்த வாழ்க்கையே
தண்டவாளத்தில் ஏற்றிவிட்ட ரயில் இஞ்சின்போல
என்பதைப் புரிந்தவர் வேலையிலும் கண்டிப்பானவர்
ஆற்றோரச் சுடுகாட்டிற்குப் போனது பணக்காரப் பிணம்
ஐந்து நிமிடம் பொறு அந்தப் பக்கம் போய் விடுகிறோம்
என்று அடைத்த ஒரு கதவைத் திறக்கச் சொன்னதற்கு
முடியாதென்று சொன்ன விவகாரம் நீண்டது ரயில் போல

கடைசி ரயிலை அனுப்பிய கையோடு கண்ணயர்ந்தவர்
காலையில் தண்டவாளத்தில் தலைக்காயத்துடன் கிடந்தார்
அடித்தது இசக்கி என்றும் அதன் காரணம் அவர் பிரசாதம்
வடித்த தீட்டென்றும் கதைகள் உலவிற்று என்றாலும்
கதவை அடைக்கவும் திறக்கவுமாக காலம் நிற்காமல் போனது
நிழற்கடிகாரமும் கொஞ்சநாள் நேரம் காட்டி வெயிலுக்கும்
மழைக்கும் தாக்குப் பிடிக்காமல் தடம் அழிந்து போனது
அநாவசியப் பழியேற்ற இசக்கியும் அரசிலைச் சருகுகளிடையே
சுடலையும் துணையற்று நிற்கிறார்கள் புதிய மேம்பாலத்தின் கீழ்.

❖❖❖





ஓவியம்: மகேந்திரன் பாரதி

கவிஞர் வெய்யில்

பனைகளின் பிள்ளை

எங்களிடம் இருநூறு பனைமரங்கள் இருந்தன
எம் குடிலின் உத்திரமும் கூரையும் கதவும்
பனைகளாலானவை
சுவர்ப்பூச்சிலும்கூட பனஞ்சோறும் பதநீரும் கலந்திருந்தன
கள்ளோடு களித்தாடி
கருக்கோடு மூர்க்கம் பழகி வந்தோம்
கிழங்குகள் முளைத்தெழும் மார்கழியின் முடிவில்
மட்டையை நசுக்கி மண்சுவர்களுக்கு சுண்ணம்பூசுவோம்
புத்தோலையில் பொங்கும் பாலில் தை மணக்கும்
அம்மா குருத்தோலைகளை மாதா கோவிலுக்கு எடுத்துச் செல்வாள்
ஊர்மீது இறங்கிய இடியை
தலைமீது வாங்கிக் கொண்ட ஒற்றைப்பனை
எங்களின் குலசாமியாக இருந்தது
அதன் பொந்தில் கண்கள் திறக்காத
மூன்று கிளிக்குஞ்சுகள் இருந்தன
'அவர்கள்' எப்போது வந்தார்கள்...
எப்படி வந்தார்கள்?
விழித்தபோது பனங்காடு விளையாட்டுத் திடலாகியிருந்தது
நான் விடாமல் விரட்டிச்சென்றேன்
முரட்டு லாரிகள் வெகுதூரம் போய்விட்டன
மூச்சிரைத்து திரும்பும் வழியில்
மூன்று முதிய கிளிகளைப் பார்த்தேன்
அவை என் தோள்களில் இறங்கின
நிமித்தமாய் கடலில் சூறை எழுந்து தணிந்தது
நான் பனைகளின் பிள்ளையானேன்
என் ரத்தத்தை பதநீராக... கள்ளாக மாற்றுவேன்
உங்களது குடிலின் சுவர்க் கீறலுக்கு பூச என் தசைகளையும்
கூரைக்கு உத்திரமாய் என் எலும்புகளையும் தருவேன்
என் இதயம் இம்மண்ணில் பனைகளாய் முளைக்கும்
சிறுமிகள் தோண்டித் தின்னும் நுங்காய் என் கண்கள் கனியும்
உங்களின் கோடைகளுக்காக
நீர்மையோடு சாகாதிருக்கும் என் வேர்கள்
நான் பனைகளின் பிள்ளை
அம் முதிய கிளிகள் அப்படித்தான் என்னை வாழ்த்தின.

❖❖❖

எஸ்.சண்முகம்

உயிர்ப்பின் கடைசி நொடி

எத்தனை முறை சரிசெய்தாலும்
தாமதமாக நேரத்தைக் காண்பிக்கும் கைக்கடிகாரத்தை
சரிசெய்ய கொடுத்தாலும்
எல்லாம் சரியாகத்தான் உள்ளது என்று
திருப்பித் தருகிறார் கடிகார பழுதுநீக்குபவர்
வேண்டுமானால் பாட்டரியை மாற்றிப் பார்க்கலாம் என்றார்

இடதுகை மணிக்கட்டில் அணியும்போதுதான்
தாமதமாக ஓடுகிற விநோதம்நிகழ்கிறதோ
அந்த ரோமன் எண்கள் கொண்ட செவ்வக கைக்கடிகாரம்
கொஞ்சம் வேகமாய் நடந்தால் துரிதமாய் ஓடுமோ
என்ற எண்ணத்தில் சிறிது தூரம் நடந்தபின்
நான் தாமதமாகிவிட்டேன்

ஒருவேளை வட்டமுகமுள்ள கைக்கடிகாரத்தை
வாங்கியிருக்கலாமோ
எல்லா வடிவங்களிலும் சுழற்சி ஒன்றுதான்
இதுவரை இடதுகையில் கட்டியிருந்ததை மாற்றி
வலதுகையில் சிலநாட்கள் கட்டலாமென தீர்மானித்து

வலதுகையில் கட்ட ஆரம்பித்தேன்
இரண்டு நாட்களுக்கு பிறகு
சரியான நேரத்தைக் காண்பிக்கத் துவங்கிவிட்டது

பார்ப்போரெல்லாம் முதலில் என்னைப் பார்ப்பதைவிடுத்து
கைக்கடிகாரத்தை பார்த்தபின்னரே
என்னைப் பார்த்தனர்
எதிர்வீட்டுக்காரர் ஒருமுறை
என் வலதுகை மணிக்கட்டில் கைக்கடிகாரத்தைக் கண்டது முதல்
என்னுடன் பேசுவதையே நிறுத்திக் கொண்டார்.

❖❖❖



ஓவியம்: தன்மயா



திரும்பி பார்க்கும்படி யாராவது
என்னை கூப்பிட்டால்
கன்னத்தில் பதித்துள்ள உள்ளங்கைகள்
தானாக விலகிவிடும்

சோர்வில் அல்ல உள்ளங்கைகள்
அவ்வாறிருப்பது
மனம் நேர்கோட்டில் அன்றி
தொடர் வளைகோட்டில் இழப்பதினால் கூட இருக்கும்

உற்சாகத் துள்ளலில் நகரும் மாலை
அதிகநேரம் எடுத்துக் கொள்வதில்லை
மேற்கின் அடிக்கோட்டில் தொலைய
வறண்டிருக்கும் இரு இமைரோமங்களில்
இரவு ஆழ

மின்விசிறியின் சுழற்சியின் காற்றொலியினூடே
பேசாமையின் உருவாகி சமைந்திருக்கிறார்
உரக்க என்னைக் கூப்பிட வேண்டியவர்.

❖❖❖

கண்முன்னே இருக்கும் பக்கத்தை வாசிக்கும் போதே
விரல்கள் நூறு பக்கங்களைக் கடந்து
நூற்றி நாலாவது பக்கத்தை திருப்பிவிட்டது
அந்த பக்கத்தின் நடுபத்தியின்
இரு வரிகளிலேயே வாசிப்பு முழுமையாக
நின்றுவிட்டது

நினைவில் வைத்துக் கொள்ளாத
அந்த அயல்மொழி பெயரிலுள்ள
ஒரு துரித உணவகத்திலிருந்து வெளியேறிவிட்டேன்
எதையும் அருந்தவுமில்லை சாப்பிடவுமில்லை

அந்நேரம் அமர்ந்திருந்ததை மட்டும் உணர்ந்தேன்
சலிப்பின்றிஎன்ன வேண்டும் என்று கேட்டவரைத் தவிர
மற்றவர் எவருமே தென்படவில்லை எனக்கு

புத்தகத்தின் நூற்றி நாலாவது
பக்கத்தை கடந்துவிட்டிருந்தேன்
அடுத்த பக்கம் தட்டுப்படவில்லை
வீட்டின் மரமேசையில் புத்தகமொன்று கவிழ்ந்துள்ளது

வீதியை அடைந்த பின்பு திரும்பி பார்க்கிறேன்
அந்த துரித உணவு விடுதியின்
கண்ணாடிக் கதவுகளில்
மற்றவர்களின் பிம்பங்களுடன் விழுந்திருந்த
என் பிம்பத்தையும்
சுத்தம் செய்பவர் துடைத்தழித்துக் கொண்டிருந்தார்.

❖❖❖

உள்ளங்கையளவு பழுப்புநிற இலைகள்
நடைபாதையில் கிடக்கின்றன
அதன் உலர்வைக் காட்டிலும்
எண்ணிக்கைதான் கவனத்தில் பதிகிறது
இலையுதிர்த்த மரம் அருகிலிருக்கலாம்


எத்தனையோ பேர்களின்
நடையிடலிலிருந்து தப்பித்திருக்கின்றன
ஒருசில இலைகள்
அப்படியும்லேசாக நொறுங்கி உள்ளன
மறுபடியும் மரத்தின் ஞாபகம்

முழுமையை இழக்காத பழுப்பிலைகளில்
தென்படும் நாளங்கள்
தன்னுயிர்ப்பின் வண்ணத்தை இழந்தாலும்
உயிர்ப்பின் கடைசிநொடியைச் சுட்டுகின்றன

வெளியே செல்வதற்கு முன்
தலைவார உபயோகித்த
சீப்பிலுள்ள நரையிழைகளை
அகற்ற எண்ணியபோது
இன்னும் கூடுதலாக சேகரமாகட்டுமென்று
இன்று வேண்டாமென தோன்ற


உதிரிலைகள் படர்ந்திருக்கும்
இடத்தை எப்போதோ கடந்துவிட்டேன்
மரத்தை மட்டும் தவறவிட்டுவிட்டேன்.

❖❖❖



எப்படி மறப்பேன் அம்மா

சுகிர்தராணி



ஓவியம்: குழலி

எத்தனை விசாலமான மனதுனக்கு
தரையில் வெயில் உறைந்திருக்கும்
மதியப் பொழுதுகளைக் கடந்து
கள்ளிப்பழம் பறித்துத் தருவாய்
பழச் சாயமேறிய உதடுகளால்
உனக்குச் சிவந்த முத்தங்களைத் தருவேன்
பழைய துணியைக் கைப்பின்னலிட்டு
புதிதுபோல் என்னை அழகூட்டுவாய்
அன்றெல்லாம் அதீதமாய் மகிழ்ந்திருப்பேன்
நிலவு இடம்பெயரும் இராத்திரிகளில்
என் பிஞ்சுவிரல்களை விலக்கிவிட்டு
நீயே பிசைந்து சோறூட்டுவாய்
பின் நீ வெறும்நீரால்
பசியாறிக் கொள்வாயாம்
நாளெல்லாம் நாற்று நட்டு
மடிநிறைய மாம்பிஞ்சுகளோடு திரும்புவாய்
அவற்றிலும்
தாய்ப்பாலின் வாசனை வீசும்
உழைத்து உரமேறிய உன் பாதங்கள்
சிறகுகளால் போர்த்தப்பட வேண்டியவை
தொலைவில்
அத்தனை பிரியங்களையும் கையிலேந்தி
வந்துகொண்டிருக்கிறேன்
எப்படி உன்னை மறப்பேன் அம்மா
சுடுகாட்டில் வேகுதடி உன்னுடல்.

❖❖❖

அப்பாவின் காயம்

மூன்றாம் வகுப்போடு
பள்ளியை முறித்துக்கொண்ட அப்பா
தாத்தனுக்குப் பயந்து
புளிய மரத்தின்
தாழ்ந்த கிளைமீது உறங்குகையில்
தவறி விழுந்து
தொடை எலும்பையும்
முறித்துக் கொண்டாராம்
நான்காம் வகுப்பு காலாண்டுத் தேர்வில்
என் சட்டம் கழன்ற கற்பலகையில்
சுண்ணக்கட்டியால் எழுதப்பட்ட
நூறு மதிப்பெண்களுள்
இரண்டு முட்டைகளை உடைத்து
தொடையில் பத்து போட்டு
இறுகக் கட்டினேன்
அன்றுதான் குணமானது
அப்பாவின் காயம்.

❖❖❖

எனது இருப்பிடம்

அவித்த உருளைக் கிழங்கின் வாசனையோடு
மழை பெய்கிறது
மழை என்றால் அப்படி ஒரு மழை
பெரிய கோபுரத்தை அணைப்பினால் வீழ்த்தும்
ஒரு விருட்சத்தின் ஆவேசத்தைப்போல
நெடுநாள் காணக் கிடைக்காத சிநேகிதியை
மனதார தரிசிப்பதைப்போல
நிலவு மினுமினுக்கும் வெளிச்சத்தில்
நெளிந்தோடும் மீனின் சலசலப்பைப்போல
அப்படி ஒரு மழை பெய்கிறது
தேநீர்க் குவளையில் மழைநீரை ஏந்தி
மெல்ல அருந்துகிறேன்
உலர்ந்த பூவின் இதழ்கள்
ஒவ்வொன்றாய்ப் பிரிந்து பறப்பதைப்போல
என் உறுப்புகள் கழன்று வீழ்கின்றன
அப்படி ஒரு மழை பெய்கிறது
மரவட்டைகள் ஊறும் எனது தோட்டம்
எறும்புப் புற்றுகளோடு நிரம்புகிறது
மிளகுக்கொடி படர்ந்த கமுகின்
குலை தள்ளும் பரவசமாய்
எனது மேடு பள்ளங்கள் மறைகின்றன
தேங்காத ஆற்றில் மிதக்கவிடப்பட்ட
ஒரு தீபத்தைப்போல
என்னுடைய வீடு சுடர் விடுகிறது
என் சந்தேகமெல்லாம்
எப்படித் தெரிந்தது இந்த மழைக்கு
ஒதுக்குப்புறமாய் இருக்கும்
எனது இருப்பிடத்தை.

❖❖❖

பா.தேவேந்திர பூபதி

பெயரற்ற விலங்குகள்

பருவம் தவறி பூத்த மலர் நான்
என் மூதாதையர்களிடம் அடர்ந்த வனம் ஒன்றிருந்தது
கனிகளையும் கிழங்குகளையும் தின்று பசியாறினவர்கள் அவர்கள்
ஓடித்திரியும் வனவிலங்குகள் வேட்டையாடக் கற்றுக் கொடுத்தன
எனது பால்யத்தை பாடல்களில் பதுக்கி வைத்திருந்தனர்
சூரியனும் நட்சத்திரங்களும் மாறி மாறி
மொழியைக் கற்றுக் கொடுத்தன
உணவென்றால் கொடுத்துப் பகிரவும்
உறவென்றால் கொஞ்சி மகிழவும் பழகிய நாளொன்றின்
இருளெனவே வந்திறங்கிய மழைப் பொழுதில்
உனைக் கூடிப் புணர்ந்தேன்
காமம் தன் கோரப் பற்களால்
என் மீது அடையாளம் பதிக்கையில்
குரூரம் கற்றுத் தெளிந்தேன்
உறுமல் எப்போது சங்கீதமானது
வனங்களின் அடர்த்தி குறைந்த போது
மனிதனாய் சபிக்கப்பட்டேன்
காடு எங்களை விட்டகன்றது
வனங்களைத் தேடி அலையும்
எங்கள் மனங்களில்
நீங்காது படிந்து கிடக்கிறது குருதி வாடை
மலர்களின்
வாசம் இப்போதும்
எங்கள் வனங்களிடம்
நாங்களோ வழி தவறிப் போன
பெயரற்ற விலங்குகள்.

❖❖❖



ஓவியம்: பாரதி



வானத்து மனிதர்கள்

பாதசாரிகளுக்கு மறுக்கப்பட்ட
பாதையென எதுவுமில்லை
விதிகள் கட்டுப்படுத்தாத
கோடுகள் அவர்களுடையது
பாதங்கள் வழி நீளும் அவை கதைகளாய் மாறி
வெவ்வேறு நிலம் சமைப்பவை
தேசாந்திரிகள் என அறியப்படும் அவர்களால் தான்
நிலங்கள் தமக்குப் பெயர் சூட்டிக் கொள்கின்றன
சொந்த நிலமென்று இல்லாதபோதும்
அவர்களின் எச்சங்களால்
நிலைபெறுகின்றன தலங்கள்
வசிப்பிடங்களற்ற அவர்களிடம்
நீங்கள் யாரென்று வினவும் செயல்
நம்மை திடுக்கிடச் செய்கிறது
நிலத்தின்
காற்றின்
நீரின்
மொழியின்
வெளியின்
கட்டுப்பாடுகள் தீண்டாத தேகத்தோடே
கடந்து கொண்டிருக்கும்
நடைவாசிகளிடம்
கேட்கக் கூடாதது
எங்கே செல்கிறீர்கள் என்று மட்டும் தான்
சுழலும் நிலம் அவர்களால் தான்
நிலைப்பட்டிருக்கின்றது
என நாம் உணரும் தருணம்
காற்றின் ஏகாந்தத்தில்

❖❖❖

கவிதை

மாலதி மைத்ரி

அரிவாள் மூக்கு இருவாட்சி

சிவப்பு மஞ்சள் பச்சை
பசுமை பொசுங்கி வயிறு தீ எரிய
நாற்சந்தி சக்கர மிருகங்களுக்கு முன்
வளையத்தினூடே எழுகிறது
சருகு போல் வரிக்குதிரைக் குட்டி
கருப்பு வெள்ளை
வெள்ளை கருப்பு
அழியக் கர்ணமிடுகிறது
சிவப்புக்கும் மஞ்சளுக்குமிடையில்
எதிர்சாரியில் இடவலமாய் சீறும்
இரும்பு மிருகங்களின் இரைச்சல்
கண்ணாடிச் சன்னல்களை
பாத்திரத்துடன் தட்டும் இருவாட்சி குஞ்சு

வான் முட்ட ஊதியப் பிணமென நாறும் நகரம்
கானக நிழலும் அமைதியும் சிதைந்த
பறவைகள் ஒலியிழந்த நிலத்தில்
கரையும் டோலக் இசை
திரும்பி நடக்கிறது காலம்
நெடுஞ்சாலைகள் பிளந்து
பூமிச் சக்கரைக் கிழங்கென
முளைத்தெழும் மனிதர்களால்
அடர்கிறது வனம்
வரிக்குதிரைகள்
தோள் தொட்டிலில் உறங்க
அரிவாள் அலகை உரசும் இருவாட்சி
சைகை விளக்கு கம்பத்திலமர்ந்து.

❖❖❖



ஓவியம்: ராகேஷ்

கவிதை

ரமேஷ் பிரேதன்



மீன்வேட்டை

காட்டு வெள்ளத்தில் மிதந்துவரும்
அடிமரக் கட்டைமீது நிற்கும் புலி
துள்ளும் மீன்களைக் கவ்வி ஏமாறுகிறது

புலியின் பதட்டமில்லாப் பொறுமை
மீன்களுக்கில்லை - அவை
நீர்ப் போக்கின் விருப்பத்திற்கு மாறாக
எதிர்த் திசையில் சாடுகின்றன

எதுவரை போகுமோ அதுவரை
வேட்டை தொடரலாம்
நீரின் போக்கில் மீன்களின் கவனம்
புலியின் இருப்பைப் பொருட்படுத்தவில்லை
ஓடும் வழியெல்லாம் ஒரே ஆறு
ஆயிரமாயிரம் பெருகி நின்றாலும்
புலியின் சிந்தையில் தைத்துத்
துள்ளி மறைபவை எல்லாம் ஒரே மீன்

மிதந்து நகரும் கட்டையிலிருந்து
குதித்து நீந்திக் கரையேறிய புலி
ஆற்றுப் போக்கை வெறிக்கிறது
நீர்ப் பரப்பெங்கும் ஒளி மீன் தெறிப்புகள்
புலியின் முகத்தில் வெறுமை மெல்ல மறைய
வாயோரம் இளம் புன்னகை

இன்றுவரை என் உடம்பில் நீந்தும்
மீன்களில் ஒன்றையும்
உன்னால் கவ்வ முடிந்ததில்லை
கணக்கு வைத்துக்கொள்
வேட்டையும் விளையாட்டும் ஒன்றில்லை.

❖❖❖

நிழல்நெரிசல்

நான் பெண்ணாக இருப்பதில்
நீ கொள்ளும் மன நெருக்கடியை
ஒற்றைக் கூரையின்கீழ் நாம்
மழைக்கு ஒதுங்கும்போது உணர்கிறேன்
பிறந்து இதுநாள்வரை நீ
மழையில் நனைந்ததேயில்லை என்கிறாய்
மழையில் நனையாதவனால்
ஒருத்தி தாய்மையடைவதில்லை

ஒருவரையொருவர் நெருக்கித் தள்ளியபடி
வட்டமாக விரியும் புள்ளியில் நிற்கிறோம்
நம் உடம்பில் ஆண்மையும் பெண்மையும்
எடுத்துக் கொள்ளும் இடம்
ஒருபுள்ளி அளவே
ஒரு சொட்டு மழை உன்னுள் ஊறி
ஆண்மை செய்யும் நுட்பம் அறியும்

ஆணும் பெண்ணும்
எதிரிடை இருமை இல்லை
அவை இருமை இணை இருப்பு
நீயும் நானும் ஒருக்காலத்திலும்
எந்தப் புள்ளியிலும்
தொட்டுக்கொள்ளப் போவதில்லை
நம் நிழல்கள் மட்டுமே
இயக்க கதியில் சில இடங்களில்
ஒன்றையொன்று மோதிக்கொள்ளும்

மழையில் நனைந்து ஊறிய உடம்போடு
என்னை வந்துப் பார்
ஆணாக இருப்பதில் நீ கொள்ளும்
மன நெருக்கடியை
முதன் முதலாக உணர்வாய்.

❖❖❖



ஓவியம்: பாரதிராஜா


ஓவியம்: பூவிழி

குட்டி ரேவதி

தமிழ் நாட்டனே

தமிழ்நாடனே
மொழியின் பெருமை அழியாவிடத்து
பண்பாட்டின் வானம் விரியாவிடத்து
காலம் தாண்டிய காலத்தில்
கால் பதித்துள்ளோம்
நாடே நம் கூடு
கூடும் அன்று அதுவே வீடு
ஒரு வீட்டின் புன்னகை மறு வீட்டிற்கும் கேட்கும்
அடுத்தடுத்த வீட்டிற்கும் பரவும்
ஒரு வீட்டின் ஓலம்
இன்னொரு வீட்டை அணைக்க
அருகே அழைத்து வரும்

முப்புறத்தும் அலை ஓயா கடல்
கடல் தாண்டிய புகழ்
புகழ் ஓங்கிய தமிழர்
தமிழர் தொடும் செம்மைத் திறம்
திறம் என்பது நம் இனச்சொத்து
இனத்தின் விழுமியம் அறம்
அறம் என்பதே மானுடம்
மானுடத்திற்கு அகண்ட விரிந்த
கைகள்

நாடனே
இப்படித்தான் லட்சோப லட்சம் ஆண்டுகள்
இரவுகளைப் பகல்களாக்கியும்
பகல்களைக் கவிதைகளாக்கியும்
அழியாச் செல்வங்கள் செய்தோம்
காடு மலை மருதம் அலைகடல் பாலைவெளி
என புவியில் நிலவெளிகள் சமைத்தோம்
பொழுதுகளை அலங்கரித்தோம்

இன்றோ கற்பனைவெளியில்
நம் நாடு விரிகிறது வளர்கிறது
புலம்பெயர்ந்தோ பொருள் தேடியோ
எங்கெங்கும் கண்டங்களின் கரைகளில்
ஏறுகிறோம்
நம்மைத் தேடும் இனமாந்தரிடையே
நம் பயனை எழுதிச் சமைத்தோம்

இனி இப்படித்தான்
எப்பொழுதுமே இப்படித்தான்
நுண்ணறிவின் மகுடத்தை அணிந்த இனமாய்
அறிவுப்புல வேட்கை தீரா மனிதராய்
நாம் பயணித்துக்கொண்டே இருக்கிறோம்
ஆகாய வெளி, கடல் வெளி, பாலை வெளி
நம் கருப்பின் நாகரிகம் கிளை கண்டது

தமிழின் நாடனே
எத்திசையில் என்றாலும்
நீ அறிவாயா
பல முறை தூக்கிற்குத் தலைகொடுத்திருக்கிறோம்
பல முறை நம் தலைமீது ஊசலாடும் தூக்குக்கயிற்றை
அறுத்துவிட்டிருக்கிறோம்
மானம்நோக்கிய திசையில் வடக்கு நோக்கி
வானோக்கி அமர்ந்திருக்கிறோம்
நாம் ஈட்டிடும் மானம் பெரியது
யாம் ஈன்றிடும் காலம் அரியது
ஒவ்வொரு நடையாய் இப்பூமியில் நடந்தாற்போலவே
இன்னும் இன்னும் பூமியை அளப்போம்
இலக்கியங்களில் அரித்தெடுத்தாற்போலவே
மண்ணிலும் கடலிலும்
அகழ்ந்தெடுத்த நாகரிகம் முன்வைப்போம்

கணம் கணந்தோறும்
மனிதம் வரைவோம்
பூமியை நமதாக்குவோம்
காடும் நிலனும் கடலும் வயலும்

உரியது சமைத்து அரியது ஆக்குவோம்
பிறப்பு இறப்பின் இடையே
சமத்துவம் எழுப்போம்
இறப்பு பிறப்பின் இடையே
ஐம்பூதங்களுக்கு இரையாவோம்

இனமழிக்கா முடியாமையை
எழுதச் செய்வோம்
தமிழ் நாடனே மானிடனே
நமக்கு இறகுகள் முளைக்கட்டும்
சிறகடித்து இயங்குவோம்
சிந்தனைத் தாதுவை மொழியாக்கிக்
நூல்களால் கண்டங்களைத் தைப்போம்
காலத்தை வடிப்போம்

வானத்தில் இறைந்து கிடக்கும்
நட்சத்திரங்கள்
நம் இன இலட்சியங்கள்
நாகரிக வெளிச்சம் அந்த நிலவு
புதிய நிலவுகள் முளைக்கும் வரை
சூரியனைப் பல்கிப்பெருக்குவோம்
உடலை மீண்டும் மீண்டும் புதைப்போம்
புலன்களே கருவிகள்

எண்திசைக்கதவுகளும் அதிரத் திறப்போம்
காதலின் நனி யாழ்கள் செய்வோம்
உறுமும் பறைகள் வழியே
தொல்காலம் மீட்போம்
பூமிச்சுழற்சி நம் உள்ளங்கையில்
நிகழட்டும்
கட்டியணைப்போம் புவியை
கற்றது அனைத்தும் போற்றுவோம்
அவையில்
ஓயாத நடை நட நாடனே!

❖❖❖


ஓவியம்: மகிழினி



கவின் மலர்

மழையின் மறுபெயர்

அறையைத் திறக்கிறேன்
அப்பாவின் நுரையீரல் ஆழமறிந்த காற்றில்
சிகரெட் மணம்
உள்ளிழுத்துக்கொள்கிறேன்
அப்பாவின் மூச்சுக்காற்றை

பாட்டிலில் அவர் குடித்த
நீரின் மிச்சம் மேஜைமீது

கொடியில் சட்டை
நுகர்ந்து பார்க்கிறேன்
அப்பாவின் உடல்வாசம்

இருசக்கரவாகனத்தில் பயணிக்கிறேன்
அப்பா நிரப்பிய பெட்ரோல்

நகரெங்கும் தட்டிகளில்
மரண அறிவித்தல்களில்
அப்பா புன்னகைக்கிறார்

வஞ்சி கடை அப்பாவின் தேநீர் மையம்
துளிர்க்கும் கண்ணீரோடு
கடை ஊழியர்கள்
என் தேநீர் உப்பு கரிக்கிறது

சாலைகளின் மேடுபள்ளங்களை
பால்யத்தின் சிரிப்பால் நிரப்பியவள்
இப்போது துயரால் நிரப்புகிறேன்.
ஊரென்னவோ
குழிகளில் கிடப்பது
மழைநீரெனவே நம்புகிறது

தந்தையற்ற நகர்வலத்தில்
சாலைகளின் நீளம் கூடிவிடுகிறது
அன்றாடங்களுக்கென
ஊருக்குள் தினமும் நான் செல்லச் செல்ல
என் சிற்றூர் பேரூராகிறது

அப்பா நிரப்பிய பெட்ரோல் தீர்ந்துவிட்டிருக்கிறது
இப்போது
இருசக்கரவாகனத்தின் சமிக்ஞையுணர்ந்து
எரிபொருள் நிரப்புகிறேன்
இது மிச்சமிருக்கும் என் ஆயுளுக்கான சமிக்ஞை

அப்பாவின் கண்ணீரஞ்சலி சுவரொட்டிகளின்மேல்
இன்னொரு மரணம் வந்தமர்ந்துவிட்டிருக்கிறது
அப்பாவின் புன்னகைகள் கழற்றப்பட்டு
விளம்பரத் தட்டிகள் மாட்டப்பட்டிருக்கின்றன

அப்பாவின் அறைக்குள் நுழைகிறேன்
தண்ணீர் பாட்டிலில் யாரோ
புதிய நீர் நிரப்பியிருக்கிறார்கள்

மடித்துவைக்கப்பட்டிருக்கும் சட்டையில்
சலவை மணம்
மூச்சை உள்ளிழுத்துப் பார்க்கிறேன்
சிகரெட் மணம் இல்லை
அதிர்ந்து நிற்கிறேன்

அப்பாவின் சுவாசம் இப்போது
மேகத்தோடு கலந்துவிட்டிருக்கிறது


அடிவயிற்றிலிருந்து கிளம்பும்
பெரும் ஓலம்
அறையின் சுவர்களில் பட்டு எதிரொலிக்கிறது

வெளியே துளித்துளியாய் கொட்டத் துவங்கும்
இம்மழைக்கு நான்
தந்தை எனப் பெயரிடுகிறேன்

❖❖❖



தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்



விடுதலைப் போரில் தமிழ் நாவல்கள்

வல்லிக்கண்ணன்

விடுதலைப் போராட்டத்தையும், தமிழ் நாவல்களையும் இணைத்து சிந்திக்கிறபோது, அதை மூன்று நோக்கில் கவனிக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

1. இந்திய விடுதலைப் போராட்டம் வேகம் பெறுவதற்கு முன்னதாக – அப்படி ஒரு எழுச்சி தோன்றலாம், தோன்ற வேண்டும் என்ற நிலை காலக்களத்தில் முளைவிட்டபோது – அதற்கு ஒரு உந்துதல் தரும் விதத்தில், அந்த எழுச்சி இப்படி இப்படி இருக்கலாம், இருக்க வேண்டும் என்று வழி அமைத்துக் கொடுக்கிற தன்மையில் தமிழ் நாவல் ஏதாவது எழுதப்பட்டது உண்டா?

2. இந்திய விடுதலைப் போராட்ட இயக்கம் வேகம் பெற்று, நாடு நெடுகிலும் விழிப்புற்ற மக்கள் உயர்ச்சி வேகத்தோடு அதில் பங்கேற்ற காலத்தில், அந்த வீர எழுச்சியை – போராட்டத்தில் கலந்து கொண்டவர்களின் பலவகை அனுபவங்களையும், அவர்களது இலட்சியத் துடிப்புகளையும் – எழுத்தில் பதிவு செய்யும் முறையில் தமிழ் நாவல்கள் எழுதப்பட்டிருக்கின்றனவா?

3. விடுதலைப் போராட்டம் முடிந்து, நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், ஓடிய காலத்தின் ஓரத்தில் நின்று பின்னோக்கப் பார்வையா, வரலாற்று நிகழ்ச்சிகளை அசைபோட்ட சிந்தனையின் வெளிப்பாடுகளாக, படைப்பாளிகள் எழுதிய நாவல்கள் எப்படி உள்ளன?

இந்திய விடுதலைப் போராட்டம் உள்ளத்தின் உணர்வு நிலையிலும் தூரத்துக் கனவு போலும் இருந்த ஆரம்ப காலத்தில், அந்த உள்ளக் கனலை ஊதி நெருப்பெழ வைக்கும் தன்மையில் தமிழில் நாவல் எதுவும் எழுதப்பட்டதில்லை. அப்படிப்பட்ட ஒரு நாவல், இந்திய மொழிகளிலேயே, வங்க மொழியில் மட்டும்தான் படைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல; விடுதலைப் போராட்டத்தில் பின்னர் ஈடுபட்டவர்களுக்கெல்லாம் உற்சாகமும் உந்துதலும் அளித்த மந்திரம்போல் ஒரு சொல்லை அந்த நாவல் வழங்கியிருக்கிறது.

அந்தச் சிறப்பைப் பெற்ற வங்கமொழி நாவல், பங்கிம் சந்திர சாட்டர்ஜி எழுதிய 'ஆனந்த மடம்' ஆகும். அது படைத்துத் தந்த மந்திரச்சொல் 'வந்தே மாதரம்' – 'மாநிலத் தாயை வணங்குவோம்.'

வங்காளிகள் பலவகைகளில் முன்னோடிகளாகவும், நாடு முழுமைக்கும் வழிகாட்டுகிறவர்களாகவும், தீவிரமான செயல் வீரர்களாகவும் இருந்திருக்கிறார்கள் என்பதை நாம் மறப்பதற்கில்லை.

அடிமைப்பட்டுக் கிடந்த நாடு விடுதலை அடைய வேண்டும்; அதற்காகத் துறவுமனம் பெற்ற இளைஞர்கள் முன்வர வேண்டும்; சன்னியாச வாழ்வை மேற்கொண்டு நாட்டுப்பற்றுடன் தீவிரமாகப் போராடுகிறவர்களாலேயே நாடு விடுதலை பெறமுடியும்; அவர்கள் நாட்டைத் தாயாகப்போற்றி வணங்கக்கூடியவர்கள். இப்படி ஒரு கருத்தை வலியுறுத்தும் நாவல் பங்கிம் சந்திரரின் 'ஆனந்த மடம்'.

இந்திய மொழிகளிலேயே, சுதந்திர தாகத்தையும் விடுதலை வேட்கையின் உணர்வுகளையும் உந்துதல்களையும் பல்வேறு தன்மைகளில் கவிதையில் அழுத்தமாகவும், வேகமாகவும் முதன் முதலாகப் பொதிந்து தந்தவர் மகாகவி சுப்பிரமணிய பாரதிதான், நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னரே தீர்க்கத்தரிசனமாக 'ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்' என்று களிவெறி கொண்டு கவிதை பாடி வைத்தவர் அந்த மகாகவிஞர். நாடு விடுதலை அடைந்த பின்னர் ஆனந்தக்களிப்புடன் எங்கெங்கும் பாடப்பட்டவை பாரதியார் பாடல்கள். விடுதலைப் போராட்டம் நடைபெற்ற காலத்தில், போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டர்களை உற்சாகப்படுத்தவும் ஊக்குவிக்கவும் பாரதியார் பாடல்கள் பெரிதும் உதவின. தமிழ்க் கவிதைக்குக் கிட்டிய பெரும்பேறு அது. தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளது கவிதைத்துறை.

அந்தப் பெருமை தமிழ் நாவலுக்கு இல்லை. இங்கு ஒரு முக்கிய விஷயம் குறிப்பிடப்பெற வேண்டும். விடுதலைப் போராட்டம் இயக்க வேகம் பெற்று நாட்டிலே மக்கள் அற்புதங்களைச் சாதித்துக்காட்டிய காலகட்டத்தில் அவற்றை ஓரளவாவது படைப்பு இலக்கியத்தில் பதிவு செய்யவேண்டும் எனும் எண்ணம் தமிழ் படைப்பாளிகளுக்கு எழுந்ததில்லை. காரணம், அந்நாளையப் படைப்பிலக்கியவாதிகள் கைக்கொண்டிருந்த இலக்கியக் கொள்கையேயாகும்.

இலக்கியம் தனிமனிதர்களின் உள்ளத்து உணர்வுகளை – ஆசைகள், ஏக்கங்கள், கனவுகள், விரக்தி, வேதனை, ஏமாற்றம் முதலியவைகளை எல்லாம் ஆழமாகப் பிரதிபலிக்க வேண்டும். இலக்கியம் என்பது ஆன்மீகத் தேடல் – உண்மையைக் கண்டறிய உதவுவது. அது நிரந்தரமான உண்மைகளிலேயே கவனம் செலுத்த வேண்டும். குறித்த சில காலகட்டத்திய நிகழ்வுகளை, நித்திய முக்கியத்துவம் பெறாத சமூகப் பிரச்சினைகளை, வாழ்க்கையின் மேலோட்டமான சிக்கல்கள் செயல்களுக்கெல்லாம் இலக்கியத்தில் இடம் கிடையாது. இந்த விதமான இலக்கிய நோக்கையும் போக்கையும் மேற்கொண்டவர்கள் 'சுத்த இலக்கியவாதிகள்'. அவர்கள் எழுத விரும்பியது ஆழ்ந்த, கனமான, தூய இலக்கியம். நாட்டின் அரசியல் விடுதலை, அதற்காகப் போராட்டம் என்பதெல்லாம் காலவரையறைக்குட்பட்ட அரசியல் விஷயங்கள்; அரசியல் விவகாரங்களுக்கு இலக்கியத்தில் இடம் இல்லை என்பது அவர்களது கொள்கை.

அக்காலத்திய படைப்பாளிகளுக்கு நாட்டுப்பற்று இருந்ததில்லை என்று சொல்ல முடியாது. அவர்கள் தேசபக்தி மிக்கவர்கள்தான். அவர்களில் பலர் விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டு, தண்டனை பெற்று, சிறைவாசமும் அனுபவித்தார்கள். இருப்பினும் அவர்களுடைய இலக்கியக் கொள்கை, விடுதலைப் போராட்ட கால நிகழ்வுகளை நாவலிலும் சிறுகதைகளிலும் பதிவு செய்வதிலிந்து அவர்களைத் தடுத்துவிட்டது.

ஆயினும், விதிவிலக்காக விளங்கினார் 'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தி (ஆனால்,

அவரைப் படைப்பிலக்கியவாதி என்று ஆழ்ந்த இலக்கியவாதிகளும் இலக்கிய விமர்சகர்களும் ஏற்றுக்கொண்டதில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும்). அவர் சமூக விஷயங்களை – தீண்டாமை, குடியின் தீமை, விதவைகள் துயரம், தேசபக்தி, விடுதலைப் போராட்ட உணர்வுகள் முதலியவற்றை – வைத்துக் கதைகளை அதிகம் எழுதினார். பின்னர் நாவல்களும் எழுதினார்.

மகுடபதி, தியாகபூமி ஆகிய நாவல்களில் விடுதலைப் போராட்ட கால நிகழ்ச்சிகள், சீர்திருத்த விஷயங்கள் முதலியவற்றைக் கல்கி எடுத்தாண்டிருக்கிறார். நாட்டுப்பற்று, விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டவர்கள், அவர்களது தியாகம், அவர்கள் அனுபவித்த இன்னல்கள் முதலியவைகளைச் சித்தரிப்பதற்காகவே பிற்காலத்தில் கல்கி 'அலை ஓசை' நாவலை எழுதினார். அது 1940–களின் பிற்பகுதியில் – நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, மகாத்மா காந்தி சுட்டுக்கொல்லப்பட்டதற்கும் பின்னர் எழுதப்பட்ட பெரிய நாவல்.

விடுதலைப் போராட்ட காலத்தில் கா.சீ.வேங்கட ரமணி 'தேசபக்தன் கந்தன்' என்றொரு நாவல் எழுதினார். 'தமிழின் முதல் காந்திய வழி அரசியல் நாவல்' என்று அது இலக்கிய விமர்சகர்களால் பாராட்டப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் ஐ.சி.எஸ். பயிற்சி பெற்று நாடு திரும்பிய கந்தனும், அவன் சிநேகிதி ராஜேஸ்வரியும், இந்திய விடுதலைப் போராட்ட நிகழ்வுகளினாலும், காந்தியக் கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டு, ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து உழைப்பதை இந்த நாவல் விவரிக்கிறது. 1920–இல் எழுதப்பட்ட இந்நாவல் முதலில் 'கந்தன் தி பேட்ரியட்' என ஆங்கிலத்தில் எழுதப்பெற்றதாகும். பின்னரே அது தமிழ் உருவம் பெற்றது.

மகாத்மா காந்தியின் கொள்கைகள், செயல் திட்டங்கள், சமூகப்பணிகளை அடிப்படையாகக் கொண்டு 1920–களில் மற்றும் சில நாவல்கள் எழுதப்பட்டுள்ளன. ஆனால் அவை வாசகர்கள் கவனத்தைக் கவர்ந்து, நினைவில் நிற்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றதில்லை.

டி.எஸ்.சொக்கலிங்கம் 1924–இல் எழுதிய 'பாய் பரமானந்தன்' என்பது அத்தகைய நாவல்களில் ஒன்று ஆகும். அவர் 'தினமணி' நாளிதழின் ஆசிரியராவதற்கு முன்னால், சேலம் 'தமிழ்நாடு' பத்திரிகையில் பணியாற்றியபோது எழுதப்பட்ட நாவல் இது என்று தெரிய வருகிறது. அந்நியருக்கு அடிமைப்பட்டுக்கிடக்கும் நாடு தன் விடுதலைக்காகப் போராட வேண்டும் என்பதைக் கருவாகக் கொண்டு, பாஞ்சாலத்தில் நடைபெறுவதாகக் கதை பின்னப்பட்டிருக்கிறது. காதலைவிடத் தேசபக்தி உயர்ந்தது; உண்மைக் காதலர்கள் ஒன்றுபட்டுத் தேச விடுதலைக்காகப் போராட வேண்டும்; எந்தத் தேசமும் தியாகம் செய்யாமல் முன்னிலைக்கு வந்தது கிடையாது என்ற உண்மைகளைக் கதைப்போக்கில் இது உணர்த்துகிறது.

பங்கிம் சந்திரரின் 'ஆனந்த மடம்' நாவலில் வருவது போல, இதிலும் ஒரு சந்தியாசி சுவாமி சத்தியதேவ் – வஸிஷ்ட குருகுலம் என்றொரு ஆசிரமம் அமைத்து, நாட்டின் விடுதலைக்காகப் போராடக்கூடியவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறார். அந்நியத்துணி பகிஷ்கரிப்பு, சுதேசிக் கைத்தொழில்களுக்குப் புத்துயிரளித்தல், ஒத்துழையாமை, அகிம்சை போன்ற காந்தியக் கொள்கைகளும் இந்நாவலில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன.

இது போல் தேசிய உணர்வுடன் காந்தியக் கொள்கைகளை எடுத்துக்கூறும் பல நாவல்களைப்பற்றி 'விடுதலைப்போரில் தமிழ் இலக்கியம்' என்ற ஆய்வு நூலில் அதன் ஆசிரியர் புலவர் அருணகிரி விவரித்திருக்கிறார்.


1922–இல் வெளிவந்த 'சபேசன் அல்லது சுதந்திர ரட்சகன்'; 1926–இல் வந்த 'காந்திமதி' (இவ்விரு நாவல்களின் ஆசிரியர்கள் பெயர் குறிப்பிடப்பெறவில்லை).

ஏ.என்.வெங்கடாசலம், ஆர்.சீனிவாசன் எழுதிய 'ராஜாராம் அல்லது காதலரின் வெற்றி' (1926)

வெ.துரைசாமியின் 'காந்தியின் உண்மைச்சீடன் அல்லது லோகநாயகியின் வெற்றி' (1927).

யோகி சுத்தானந்த பாரதியின் 'அன்பு நிலையம்'

வை.மு.கோதைநாயகியின் 'ஸாரமதி' (1931); 'தியாகக்கொடி' ஆகியவை குறிப்பிடத்தக்கவை. வை.மு.கோதைநாயகி, விடுதலைக் கனல்மூட்டிய நாவல் எழுத்தாளராக மட்டுமின்றி நடைமுறையில்



வெள்ளையனை எதிர்த்து–ஏராளமான பெண்கள் மற்றும் சிறுவர்–சிறுமியரைத் திரட்டி விடுதலைப் போர்க்களம் புகுந்த வீராங்கனையும் ஆவார்.

எஸ்.சீதாராமையா எழுதிய 'காட்டூர் ராமு' (1934). காந்திய வழியில் புதிய சமூக அமைப்பை உருவாக்க விரும்பும் இலட்சியத்தை விவரிக்கிறது இந்த நாவல்.

சாண்டில்யன் எழுதிய 'பலாத்காரம்' (1934). அகிம்சைக் கொள்கைக்கும் பலாத்கார முறைக்குமிடையே உள்ள மாறுபாட்டை அடிப்படையாகக் கொண்டு, சத்தியாக்கிரக இயக்கத்தைப் பின்னணியாக வைத்து எழுதப்பட்டது. உப்புச் சத்தியாக்கிரகக் கால நிகழ்வுகளைக் கூறும் நாவல்.

விடுதலைப் போராட்ட கால நிகழ்ச்சிகளைக் கொண்டு நாவல்கள் எழுத வேண்டும் என்ற மனஎழுச்சி 1950 முதல் தலைதூக்கியது.

1942–ஆம் வருடத்திய எழுச்சியையும், போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் வாழ்க்கை அனுபவங்களையும் கொண்டு கு.ராஜவேலு '1942' என்ற நாவலை எழுதியுள்ளார்.

விடுதலைப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ர.சு.நல்லபெருமாள் 'கல்லுக்குள் ஈரம்' நாவலை எழுதினார். 'கல்கி' வார இதழில் தொடர்கதையாக வெளிவந்த இந்த நாவல், அப்போதும், அதன் பின்னர் புத்தகமாகப் பிரசுரம்பெற்றும், வாசகர்களின் நல்ல வரவேற்பையும் பாராட்டுதலையும் பெற்றது.

விடுதலைப் போராட்டம் மும்முரமாக நடந்த காலங்களில், முக்கிய நிகழ்வுகளைக் கண்டு, உணர்ச்சி வேகத்தோடு, தங்கள் நிலைமை பற்றிய கவலை எதுவும் இல்லாமல், போராட்டத்தில் குதித்தவர்கள் எண்ணற்றோர். சுதந்திரம் கிடைத்தபிறகு அவர்களின் வாழ்க்கை எப்படி எப்படியோ ஆயிற்று. அப்படி ஏற்பட்ட பாதிப்புகள், அவர்களில் சிலரது போக்குகள் சிந்தனைகளைச் சித்தரித்து வல்லிக்கண்ணன் எழுதிய நாவல் 'வீடும் வெளியும்'. இதுவும் 1950–களில்தான் எழுதப்பட்டது.

இந்திய விடுதலையின் வெள்ளிவிழா ஆண்டில், விடுதலைப் போராட்ட காலப்பின்னணியில் சில நாவல்கள் எழுதப்பட்டன. ந.சிதம்பரசுப்ரமணியன் எழுதிய 'மண்ணில் தெரியுது வானம்' குறிப்பிடத்தகுந்தது. அரசாங்க அதிகாரியான ஒரு தந்தை தன் மகன் நன்றாகப் படித்து, உயர்ந்த பதவி பெற்றுச் சிறக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார். ஆனால் அந்த மகனோ, விடுதலைப் போராட்ட நிகழ்வுகளால் உந்தப்பட்டு, படிப்பை விட்டுவிட்டு, போராட்டத்தில் ஈடுபடுகிறான். அவர்களின் உணர்ச்சிகள், குடும்பச்சூழல், மகனின் அனுபவங்கள் முதலியவற்றை இந்த நாவல் விவரிக்கிறது.

போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு இலட்சியவாதியின் வாழ்க்கையை, அவர்மீது காதல் கொண்ட ஒரு தாசிப்பெண்ணின் மனப்போக்கையும் உணர்வுகளையும், மற்றும் விடுதலைப் போராட்ட நிகழ்வுகளையும் விவரித்து நா.பார்த்தசாரதி 'ஆத்மாவின் ராகங்கள்' என்ற நாவலை எழுதியுள்ளார்.

எம்.எஸ்.கல்யாணசுந்தரம் 'இருபது வருடங்கள்' என்ற நாவலை எழுதினார். இதன் முதல் பகுதி விடுதலைப் போராட்ட நிகழ்வுகளைச் சித்தரிக்கிறது. ஒரு டாக்டர் தேசபக்த உணர்வோடு போராட்டத்தில் ஈடுபட்டுச்

செயல்புரிவதைக் கூறுகிறது. பின்னர் அவர் ஒரு தீவுக்குப்போய் வசிக்கிறார். அங்குள்ள பூர்வகுடிகளுடன் பழகி, புதிதாக ஒரு வைத்திய முறையைக் கற்றுக்கொள்கிறார். இளநீரை 'இன்ஜெக்ட்' செய்வதன் மூலம், மனித உடலில் தோன்றும் சில வியாதிகளைக் குணப்படுத்தி விடலாம் என்பது அந்தச் சிகிச்சை முறை. அவர் தமிழகம் திரும்பி, ஒரு மருத்துவமனை அமைத்து, அந்த முறையைக் கையாண்டு வெற்றி பெறுவதை இரண்டாவது பகுதி விவரிக்கிறது.

கி.ராஜநாராயணன் 'கோபல்லபுரத்து மக்கள்' என்ற நாவலை 1980–களில் வெளிவந்த இரண்டு பெரிய நாவல்களைக் குறிப்பிட்டுச்சொல்ல வேண்டும்.

ஒன்று, ஜோதிர்லதா கிரிஜா எழுதிய 'தாயின் மணிக்கொடி' என்ற, இரண்டு பாகங்கள் கொண்ட நாவல். இது வரலாற்றுப் பின்னணியோடும் கதைச்சுவையுடனும் எழுதப்பட்டுள்ள நல்ல நாவல். விடுதலைப் போராட்ட கால முக்கிய நிகழ்வுகள் – ஜாலியன் வாலாபாக் படுகொலை போன்றவை – விவரமாகவும் உணர்ச்சிகரமாகவும் எழுதப்பட்டிருக்கின்றன.

மற்றொன்று, சி.சு.செல்லப்பா எழுதிய 'சுதந்திர தாகம்' என்ற நாவல். மூன்று பாகங்கள். இது விடுதலைப் போராட்டம் பற்றிய மாபெரும் நாவல். சரியான ஆவணம் என்று சொல்ல வேண்டும். ஒரு 'டாக்குமெண்டரி நாவல்' இது.

விடுதலைப் போராட்ட காலத்தின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தை – அது மக்கள் இயக்கமாக வளர்ச்சிபெற்று விளங்கிய தீவிர நிலையை – நன்கு விவரிக்கிறது. 1930–களின் ஐந்து வருடத்திய நிகழ்ச்சிகள். மதுரை நகரில் மக்களின் எழுச்சியும் நாட்டுப்பற்றுடனான தீவிரப் பங்களிப்பும் பற்றியது. மாணவர்களின் உற்சாகமான பங்களிப்பு. ஒரு பேராசிரியர், கல்லூரி முதல்வர், ஓட்டல் அதிபர், லாட்ஜ் உரிமையாளர், கடை வியாபாரி, ஓட்டல் தொழிலாளி ஆகியோரின் ஆர்வம் நிறைந்த செயல்பாடுகளும் உரையாடல்களும் நாவலுக்கு உணர்ச்சியூட்டுகின்றன. மதுரைக் கோவில் கோபுரங்களின் மீது தேசியக் கொடிகள் கட்டப்பட்ட சாதனை, மக்களின் ஊர்வலம், மறியல் போராட்டம் தலைவர்களின் வழிகாட்டுதல் முதலியன உயிர்த்துடிப்புடன் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகம், திருச்சியிலிருந்து தொண்டர்கள், அணிவகுத்துச் சென்றது, வழி நெடுக உள்ள ஊர்களில் மக்களின் ஒத்துழைப்பு, மறியலின்போது தொண்டர்கள் அனுபவிக்க நேர்ந்த கொடுமைகள் எல்லாம் உயிர்ப்புடன் கூறப்பட்டுள்ளன.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள நெடிதுயர்ந்த கொடிக்கம்பத்தில் மேலே, இரவு நேரத்தில், இளைஞன் பாஷ்யம் துணிச்சலாக ஏறி, அங்கு பறந்த பிரிட்டிஷ் கொடியை இறக்கிவிட்டு, இந்திய தேசியக் கொடியை பறக்கவிட்ட வீரசாகசம், மறியலின்போது கொடியைக் கைவிடாது போலீசாரிடம் தடியப்பட்டு இறந்த திருப்பூர் குமரனின் வீரத்தியாகம் போன்ற வரலாற்று நிகழ்ச்சிகள் உரிய இடங்களில் நன்கு கூறப்பட்டுள்ளன.

விடுதலைப்போரில் பெண்கள் விழிப்புணர்வோடு பொங்கி எழுந்து வீரமாகக் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் பலவும் இடம் பெற்றுள்ளன. இந்தியா நெடுகிலும் உரிமை உணர்வோடு மக்கள் செய்த கிளர்ச்சிகளும் போராட்டங்களும், முக்கிய நிகழ்வுகளும் 'செய்திச்சுருள்' என்ற உத்தி மூலமும், கதைமாந்தரின் உரையாடல்கள் நினைவு கூறல்கள் வாயிலாகவும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. பகத்சிங்கும் நண்பர்களும் செய்த வீரச்செயல்கள், அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை குறித்து நாடு நெடுகிலும் எழுந்த கண்டனங்களும் எதிர்ப்பும், அவர்களது முடிவு நாட்டு மக்களை பாதித்த விதம் எல்லாம் இந்த நாவலில் சிறப்பாக விவரிக்கப்பட்டுள்ளன.

இதுவரை வெளிவந்துள்ள விடுலைப் போராட்டம் பற்றிய நாவல்களிலேயே சிறந்தது சி.சு.செல்லப்பாவின் 'சுதந்திர தாகம்'தான் என்பதில் சந்தேகமில்லை. இந்திய விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு இதிகாசம் என்று சொல்லத்தகுந்த இது போன்ற மகத்தான படைப்பு இதர இந்திய மொழிகளில் வந்ததில்லை என்றும் துணிந்து கூறலாம்.



திராவிட இயக்கமும், தமிழ் இலக்கிய உருவாக்கமும்

வீ.அரசு
மேனாள் தமிழ்ப் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம்

இருபதாம் நூற்றாண்டில்தான் நவீனத் தமிழ் இலக்கியம் வளமாக உருப்பெற்றது. திராவிட இயக்கம் சார்ந்த கருத்துநிலை என்பது, நவீனத் தன்மைகளை மட்டும் உள்வாங்கும் தன்மை அதற்கு இல்லை. மாறாக, தொல்மரபின் தொடர்ச்சியாகத் தமிழ் இலக்கியத்தை அணுகும் பார்வை இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கம், தமிழியல் தொடர்பாகப் பல்வேறு புதிய கண்டுபிடிப்புகள் நிகழ்ந்தன. தமிழில் இருந்த செவ்விலக்கியம், செவ்விலக்கணம் ஆகியவை புதிய வெளிச்சத்தில் வெகுசனவெளிக்கு வந்தது. தமிழுக்கென தொல்லெழுத்தியல் மரபு உருப்பெற்றிருப்பது அறியப்பட்டது.

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் (1924), தொல் பழம் திராவிட நாகரிகம் - சிந்து சமவெளி நாகரிகம் என அறிவிக்கப்பட்டது. தமிழ் மரபை முதன்மைப்படுத்திய திராவிட இயக்கத்தில் தங்களது மூவாயிரம் ஆண்டு தொடர்ச்சியை நவீன தமிழ்ச் சமூகத்தில் கொண்டாடும் மனநிலை உருவானது. இதில் முதன்மையாக, திராவிட நிலப்பரப்பு, திராவிட மொழிக் குடும்பம், தமிழ்மொழியின் தொன்மை ஆகியவை சார்ந்த மறுமலர்ச்சி மரபிலிருந்துதான், இருபதாம் நூற்றாண்டுத் திராவிடத் தமிழ் இலக்கிய மரபு உரையாடலுக்கு வந்தது.

திராவிட இயக்க இலக்கிய மரபு என்பது இராமாயணம் போன்ற பிரதிகளை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் இலக்கியம் என்பது, இனம் சார்ந்த அடையாளங்களை முன்னெடுக்க வேண்டும் என்று இம்மரபு கருதியது. இனம், மொழி, குறித்த கருத்துநிலை என்பது

திராவிட இயக்கத்தின் அடையாளமாகியது. இதனால்தான், மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை போன்றவர்கள், தமது ஆய்வுகளின் மூலம் வால்மீகி இராமாயணம் போன்ற பிரதிகள் சாதிய மரபை முன்னெடுப்பவை, வர்ணாசிரமம் பேணும் சநாதனத்தைப் பேசுபவை என்று கருதினர். இந்த மரபில்தான் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை மாணவர், வெ.ப.சுப்பிரமணிய முதலியார் "இராமாயண உள்ளுறைப் பொருளும், தென்னிந்திய சாதி வரலாறும்" (1908) எனும் கட்டுரை, The Tamilian Artiquary (தொகுதி–1 எண்2) எனும் இதழில் எழுதினார். இதில் "திணை வகுப்பு சார்ந்த தமிழ் மரபு, வால்மீகி இராமாயணத்தில் சாதி மரபாக வெளிப்பட்டது" என்று எழுதியுள்ளார். இதிலிருந்து திராவிட இயக்க இலக்கிய மரபு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

மேற்குறித்த மரபின் தொடர்ச்சி தான், 1928இல் பூரணலிங்கம்பிள்ளை எழுதிய "Ravana the Great : King of Lanka" எனும் நூல். இந்த மரபைத்தான் பெரியார் தம் வாழ்நாள் முழுக்க இராமாயண எதிர்ப்பு மரபு எனும் பரப்புரையை நடைமுறைப்படுத்தினார். இதன் தொடர்ச்சியாகவே 'கம்பரசம்' எனும் நூலை அண்ணா எழுதினார் இராமாயணம் எரிக்கப்பட்டது. இராமன் சிலை செருப்பால் அடிக்கப்பட்டது ஆகிய நிகழ்வுகள் நிகழ்ந்தன. இந்தப் பின்புலத்தில்தான் பாரதிதாசன் 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்ற நூலை முப்பதுகளில் உருவாக்கினார். இந்த மரபில் திராவிட இயக்க இலக்கிய உருவாக்கத்தைப் புரிந்து கொள்வது அவசியம்.

★★★

இருபதாம் நூற்றாண்டின் கவிதை மரபு என்பது தொல்பழம் கவிதை மரபின் தொடர்ச்சியாகவே திராவிட இயக்கம் கருதியது. இந்த மரபிற்குள்தான் நவீன மரபைக் கட்டமைக்க முயன்றது திராவிட இயக்கம். இவ்வகையில் திராவிட இயக்கக் கவிதை மரபு என்பது, பாரதிதாசன், ச.து.சு.யோகி, கம்பதாசன், தமிழ் ஒளி எனும் வளமான மரபாக உருவானது. இதில் நவீனத்துவம் மட்டுமின்றி பழம் மரபும் இணைந்து நின்றது. நவீனத்துவ கவிதை மரபு என்று பேசக்கூடிய, நவ கவிதை, வசன கவிதை, புதுக்கவிதை ஆகிய மரபுகளில் செயல்பட்டவர்கள் திராவிட இயக்கக் கருத்தியலைப் பெரும்பகுதி ஏற்றுக் கொண்டவர்கள் இல்லை. இந்த முரணுக்குள் திராவிட இயக்கக் கவிதை மரபு வளர்ந்தது. இது இருபதாம் நூற்றாண்டு வடிவமாகவும் வளம் பெற்றது. ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபதுகளுக்கும் பின் உருவான தமிழ்க் கவிதை மரபில் 'வானம்பாடிகள் ' என்று அழைத்துக் கொண்டவர்கள், தங்களைத் திராவிட மரபு சார்ந்த கவிஞர்களாகவே வெளிப்படுத்தினர். இதற்கு மாற்றான 'கசடதபற' மரபு என்பது திராவிட மரபை புறக்கணித்தது.

திராவிட இயக்க கவிதை மரபு என்பது மரபும் நவீனமும் உள்வாங்கப்பட்ட புதிய மரபாகக் கருதலாம். பாரதிதாசன் கவிதைகள் இதற்கு நல் எடுத்துக்காட்டு. இம்மரபில் பழமையில் தோய்ந்த நவீன மரபற்ற கவிதைகளும் உருவாயின. அவை இலக்கிய தகுதி பெற்றவையாகக் கருத முடியாது.

★★★

இருபதாம் நூற்றாண்டு இலக்கிய உருவாக்கம் என்பது, அடிப்படையில் அச்சுப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாகும். புனைகதை மரபு உருவாக்கத்தை அச்சுப் பண்பாட்டு உருவாக்க மரபிலிருந்துதான் புரிந்து கொள்ள வேண்டும். 1930களில் இதழியல் மரபுகள் தமிழில்



வளமடைந்தது. வாசிப்போர் எண்ணிக்கைக் கூடியது. இயக்கம் சார்ந்தவர்கள், இதழ்களை நடத்துவது என்பதை மரபாகக் கொண்டிருந்தனர்.

திராவிட இயக்கத்தைப் பொறுத்தவரை 1940–1960 என்ற காலச் சூழலில் சுமார் 250 இதழ்கள் வெளிவந்தன. வேறு எந்த இயக்கமும் இந்த அளவிற்கு இதழ்களை நடத்தியதாகக் கூற முடியாது. இந்த இதழ்களில் புனைவு எழுத்துக்களையும் வெளியிட்டனர். சிறுகதைகள், தொடர் புதினங்கள், குட்டிக்கதைகள், உருவகக் கதைகள் என்று திராவிட இயக்க இதழ்களில் வெளிவந்த இலக்கிய ஆக்கங்களாகக் கருதலாம். மரபு சார்ந்த கவிதைகள் அதிகமாக வெளிவந்த அளவிற்குப் புனைவுகள் இவ்வியக்க இதழ்களில் வெளிவந்ததாகக் கூற முடியாது.

அவை புதுமைப்பித்தன் போன்ற படைப்பாளிகளின் படைப்பு மரபின் பிறிதொரு மரபாகவே பார்க்க வேண்டும். அவற்றில் சீர்திருத்தக் கருத்து மரபுகளை முதன்மைப்படுத்திய கதைகளே மிகுதியாக எழுதப்பட்டன. பொருளாதார முரண்பாடுகள் சார்ந்த கதைகளும் வெளிவந்தன. அந்த படைப்புகள் நவீன எழுத்தாளர்களின் மொழியிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. அது இதழியல் வாசிப்பு சார்ந்த மொழியாக இருக்கும், அதே நேரத்தில் கல்கி போன்றவர்கள் உருவாக்கிய வெகுசன விருப்பு சார்ந்த மொழியாக இருக்காது. கருத்துநிலைக்கு முதன்மை தரும் மொழி. இதனால் இவற்றை நவீன படைப்புலகினர் மறுதலித்தனர். அம்மொழியை வேறுபட்ட மரபாகக் கருதத் தவறினர்.

வெகுசன ஈர்ப்பு மொழி, காத்திரமான நவீன படைப்பு மொழி என்ற பாகுபாட்டில், நவீனப் படைப்பு மொழியில், திராவிட இயக்கத்திற்கென ஒரு தனித்த மொழி மரபு இருப்பதை ஏற்றுக் கொள்ளாத சூழல் இன்றும் உள்ளது. இயக்கம், அது சார்ந்த கருத்து அதற்கான மொழி என்ற பார்வையில், திராவிட இயக்க புனைவுகள் உருவாக்கிய பட்டியல் மிக வளமானது. இப்பட்டியலில் குறிப்பிடத்தக்கப் படைப்பாளிகளாகப் பின்கண்டவர்களைக் கருத முடியும்.

அறிஞர் அண்ணா, கலைஞர் மு.கருணாநிதி, குத்தூசி குருசாமி, ஏ.வி.பி.ஆசைத்தம்பி, தி.கோ.சீனிவாசன், எஸ்.எஸ்.தென்னரசு, திருச்சி செல்வேந்திரன், திருவாரூர் தங்கராசு, ஆலடி அருணா, இராம அரங்கண்ணல், இரா.இளஞ்சேரன் ஆகிய பலரைக் குறிப்பிட முடியும். திராவிட இயக்க இதழ்களை நடத்தியவர்கள் பட்டியல் வருமாறு:

இளமுருகு பொற்செல்வி (அஞ்சுகம்), இராம. அரங்கண்ணால் (அறப்போர்) குத்தூசி. குருசாமி (அறிவுப்பாதை), கே.பஞ்சாட்சரம் (அறிவுவழி), சத்தியவாணிமுத்து (அன்னை), நாஞ்சில் மனோகரன் (இலக்கிய நெறி), சி.பி.சிற்றரசு (இன முழக்கம்) ஆற்காடு வீராசாமி (இன முரசு), ஆலடி அருணா (உதயசூரியன்), சா.கணேசன் (உதயக் கதிர்) பண்ருட்டி இராமச்சந்திரன் (உரிமை வேட்கை) மா.செங்குட்டுவன் (கவிக்கொண்டான்), சிட்டிபாபு (கழகக் குரல்), சி.என்.அண்ணாதுரை (திராவிட நாடு) எஸ்.எஸ். மாரிசாமி (காண்டீபம்) சுரதா (காவியம்), ஈ.வெ. ராமசாமி (குடியரசு) வே.ஆனைமுத்து (குறள் முரசு), புதுவை சிவம் (சுடரொளி), சி.பா. ஆதித்தனார் (தமிழன்), ஈ.வி.கே.சம்பத் (தமிழ்ச்செய்தி) திருவாரூர் கே.தங்கராசு (திராவிட நாடு), கே.ஏ.மதியழகன் (தென்னகம்), கவிஞர் கண்ணதாசன் (தென்றல்), பாரதிதாசன் (புதுவை முரசு) காஞ்சி மணிமொழியரர் (போர்வாள்), கலைஞர் மு.கருணாநிதி (முத்தாரம், முரசொலி) நாஞ்சில் கி.மனோகரன் (விந்தியம்) பட்டியல் நீளமானது, தெரிவு செய்த சில பெயர்களை மட்டும் கொடுத்துள்ளேன், இந்த இதழ்களில்தான் 'திராவிட இலக்கியம்' உருவானது. இவற்றை அரசியல் செயல்பாட்டிற்கான இதழ்களாக அறிந்து கொண்ட அளவிற்கு, இவற்றில் வெளிவந்த புனைவுகள் கவனத்தில் கொள்ளப்படவில்லை. இவற்றைத் திரட்டினால், தமிழ்ப் படைப்பு வரலாற்றில் திராவிட இயக்க இலக்கிய மரபு என்ற ஒன்றை வரையறை செய்ய முடியும்.

படைப்பு இலக்கியங்கள் பல்பரிமாணம் கொண்டவை. அவைகளை மதிப்பீடு செய்வது என்பது, ஒரு சாரரின், ஒரு வகையான பார்வை சார்ந்து இருக்க இயலாது. ஒரு படைப்பு உருவான கருத்துநிலை, அது சார்ந்த மொழி, அதை வாசிக்கும் மனிதர்கள் என்ற பின்புலங்களோடு, திராவிட இயக்க இலக்கிய வரலாறு எழுதப்பட வேண்டும். அதன்மூலம் திராவிட இயக்க இலக்கியம் குறித்து விரிவாக அறியும் வாய்ப்பு வரும். அந்தப் பணியை முன்னெடுக்கும் தேவையுண்டு.



பொதுவுடமைத் தமிழ்

சி.மகேந்திரன்
ஆசிரியர், தாமரை இலக்கிய இதழ்

இயற்கை மனிதரை சமத்துவம் கொண்டவர்களாகத்தான் பெற்றெடுத்திருந்தது. கிடைத்ததைக் கூட்டத்தோடுப் பகிர்ந்துண்ணும் பண்பையும் அவர்களுக்கு, அது வழங்கியிருந்தது. பிரபஞ்சத்தில் ஒரு மனிதக் கூட்டம் அல்ல, பல நூறுக் கூட்டங்கள் தங்களுக்கான மொழியை தேர்வு செய்து பண்பாட்டை வளர்த்து வைத்திருந்தன.. ஆனாலும் இவை அனைத்தையும் பொதுவில் வைத்து, இயற்கையின் பயன்பாட்டை அனைவரும் பகிர்ந்து கொள்ளும் உயர்நெறியுடனேயே வாழ்க்கையை தொடங்கியிருந்தன. இருந்த போதிலும், தமிழரின் பொதுமைப் பண்பு மற்ற மொழி பேசும் மக்களை விட தனித்துவம் கொண்டதாகவே காணப்பட்டது. இதற்குத் தொன்மை காரணம். அழிவற்ற தொடர்ச்சியான வாழ்க்கை காரணம்.. மற்ற மொழி பேசும் மனிதக் கூட்டம் இயற்கைச் சீற்றங்களால் அழிந்து அழிந்து மீண்டும் பிறந்தன. அழகிய தமிழ்நிலம் அழிவற்றதாக தனது பயணத்தை இன்று வரைத் தொடர்ந்து வருகிறது. இந்த வாழ்க்கையை தமிழரின் அறம் ஒன்று வழிநடத்தி வருகிறது.

தமிழரின் அறம் சுயநலமற்ற கூட்டுவாழ்விலிருந்து பெறப்பட்ட ஒன்று. இந்த அறக்கோட்பாடு ஆதிப்பொதுமையிலிருந்து பிறப்பெடுத்துள்ளது. இதனால்தான் சங்க இலக்கியத்திலும் திருக்குறளிலும், அதற்கு பின்னர் வந்த நீதி இலக்கியங்களிலும் பொதுவுடமை சார்ந்த சமூக சமத்துவத்திற்கான அறக் கோட்பாட்டை உயிரினும் மேலானதாக கருதி வருகின்றன.

இன்று நாம் உரையாடும் சமூக சமத்துவம் என்பதை தமிழரின் அறம் என்பதாக முதலில் புரிந்து கொள்ள வேண்டும். 'தானுணர்ந்த நீதிக்காக வடக்கிருந்து உயிர் நீத்தல்' என்னும் மரபு தமிழில் மட்டும் தான் உள்ளது. இதைப் போல சமத்துவத்திற்கான 'யாதும் ஊரே யாரும் கேளீர்' என்னும் கருத்துகோளும், சமகாலத்தில் உலகில் எங்காவது எழுதப்பட்டிருக்கிறதா? என்று தேடிப் பார்த்ததால், கிடைப்பதில்லை. 'உண்டாலம்மை இவ்வுலகு' என்ற சங்கபாடல் கிருத்துப் பிறப்பதற்கு முன்னரே, கடலுள் வாய்ந்த இளம் வழுதி என்னும் மன்னனால் எழுதப்பட்டது. இதன் 'பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர் என்பது தமிழின் சமுதாய உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகிறது.. 'பிறர்க்கென முயலுநர் உண்மையானே' என்பது, தனிமனிதருக்கான சமூக செயல்பாட்டு செயல்நெறிகளை, வாழ்க்கையின் வழிகாட்டும் விதிகளாக முன் வைக்கிறது. இதன் தொடர்ச்சி அறிந்து – இருபதாம் நூற்றாண்டின் அரசியல் அறிந்து, பாரதி, பொதுவுடமை என்னும் சொல்லை, பேசத் தொடங்கினான். இந்தக் கருத்து நிலையை, இவன் உருவாக்கிக் கொள்ள இவனுக்கு நவீன கால அரசியல் சிந்தனைகள் பெரிதும் உதவி செய்திருக்கின்றன.

பாரதி வித்தியாசமான கவிஞன். இளம் வயதில் அவனது வாசிப்பும் தொடர்பும் மிகவும் அதிகம். விடுதலைக்கான தீவிரங்கள் உலகில் எங்கெல்லாம் இருந்தனவோ அவை அனைத்தையும் தேடிக் கண்டறிந்தான், அதில் ரஷியப்புரட்சி அவனைப் பெரிதும் பாதித்திருந்தது. அந்தக் காலத்தில் இயங்கிய ரகசியக் குழுக்கள் அனைத்தும் ரஷியா, சோசியலிசம் என்னும் கருதுகோள்களை மையப்படுத்தி, தங்கள் செயல்பாடுகளை அமைத்திருந்தன. சமூக மாற்றத்திற்காகப் போராடிய இந்தக் குழுக்களுடன் பாரதிக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது என்பதற்கு போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன..

''முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொதுவுடமை''
''தனி ஒருவனுக்கு உணவிலை எனின்
ஜெகத்தினை அழித்திடுவோம்'' என்றான்.

பாரதியின் கவிதா வரிகளின் ஆழம் மார்க்ஸ் ஏங்கெல்ஸ் ஆகியோரால் எழுதப்பட்ட வரலாற்றுப் புகழ்மிக்க கம்யூனிஸ்டு அறிக்கையின் உள்ளக்கிடக்கையை தமிழின் கவிதை மொழியில் எழுதிய அறிக்கையாகத்தான் தெரிகிறது. பொதுவுடமைக் கொள்கையின் அறிவியல் பூர்வமான விளக்கங்களை சுமந்து எழுதப்பட்டவை, இந்த வரிகள்.

"ஜீவாவின் பொதுவுடமை இலக்கிய முன்னெடுப்புகளில் மேடை பிரச்சாரம் பாடல்கள் முக்கியமானவை. ஜீவா எழுதிய பாடல்கள் மேடைப் பாடல்களாக கோவை ராமதாஸ் அவர்களால் மேடைகளில் பாடப்பட்டது. அந்த காலத்தின் மேடைப்பாடகர்களில் வெ.நா.திருமூர்த்தி, பாவலர் வரதராஜன் ஆகிய இருவரையும் குறிப்பிட்டு சொல்ல முடியும்."

பாரதிக்குப் பின்னர் பொதுவுடமை இலக்கியத்தின் அடிப்படைகளை புரட்சிகரமாக கவிதையில் உணர்த்தியவர்களில் பாரதிதாசனை சொல்லமுடியும். அவர் 'புரட்சி கவி' என்று அழைக்கப்பட்டதற்கு பொதுவுடமைக் கொள்கையின் மீது அவர் கொண்டிருந்த அசைக்க முடியாத ஈடுபாடு தான், காரணம். இது பற்றிய அவர் அளித்துள்ள விளக்கம் பொதுவுடமையின் மீது அவர் கொண்டுள்ள அளவற்ற ஈடுபாட்டை புரிந்து கொள்ள உதவுகிறது.

'பாரதி பாட்டில் பற்றிய பொதுவுடமை தீ என்றன் பாட்டு நெய்யால் கொழுந்து விட்டு எரிந்து, தொழிலாளர்களிடத்தும் உழைப்பாளர்களிடத்தும் உணர்வில் உணர்ச்சியில் மலர்ந்து படருவதை யாரால் மறுக்க முடியும்' என்றார்

இதைப் போல இவர் எழுதிய பாடல் வரிகள் சில

''உலகம் உண்ண உண் உடுக்க உடுப்பாய்
புகல்வேன், உடமை மக்களுக்குப் பொது''
''ஓடப்பராய் இருக்கும் ஏழையப்பர்
உதையப்பராகி விட்டால், ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பராகிடுவார் உணரப்பா நீ''

இலக்கியப் பேராசான் ஜீவாதான், தமிழக பொதுவுடமைக்கு, ஒரு இலக்கிய சகாப்தத்தை உருவாக்கியவர். 1937 ஆம் ஆண்டில் அரசியலுக்காக ஜனசக்தி உருவாக்கப்பட்டது. 1959 ஆம் ஆண்டில் இலக்கியத்திற்காக தாமரை ஆரம்பமானது. இவை இரண்டிற்கும் அடிப்படை ஆதாரமாக நின்று செயல்படுத்திக் காட்டியவர் ஜீவா என்பதை யாருமே மறுக்க முடியாது. அதைப் போல தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தையும் இவர் தான் உருவாக்கினார். இதன் பின்னர் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்களின் சங்கம் செயல்படத் தொடங்கியது. அரசியல் தலைவர்களில் ஜீவா ஒரு தலை சிறந்தபடைப்பாளி.

“காலுக்குச் செருப்புமில்லை
கால்வயிற்றுக் கூழுமில்லை,
பாழுக்கு உழைத்தோமடா என் தோழனே
பசையற்று போனோமடா”

என்பது இவர் 1935ஆம் ஆண்டில் கோவை ஸ்டேன்ஸ் மில் போராட்டத்தில் எழுதிய பாடல்.

இவரால் பலர் ஊக்குவித்து வளர்க்கப்பட்டனர். அவர்களில் கவிஞர் தமிழ்ஒளி முக்கியமானவர்.

‘’கோழிக்கு முன்னெழுந்து கொத்தடிமையைப் போலுழைத்தப்

பாடுபட்ட ஏழை முகம் பார்த்துப் பதைபதைத்துக்

கண்ணீர் துடைக்க வந்த காலமே நீ வருக

வாராய் மணிவிளக்கே வந்திடுவாய் மேதினமே.’’

தமிழக கூலி உழைப்பாளிகளின் வாழ்க்கையிலிருந்து எழுதப்பட்டக் கவிதை இது. மேலைய தொழிலாளிவர்க்கத்தை மட்டும் காட்டும் சித்தரிப்பை இது மாற்றியமைத்து, மேதினம் பற்றிய புதியக் கண்ணோட்டத்தை இந்தக் கவிதை வழங்கியது.

புதுச்சேரி தொழிலாளர்கள் போராட்டத்தில் மற்றொரு புகழ் பெற்றக் கவிதையை தமிழ்ஒளி எழுதியிருந்தார்.

‘’கார் கடலும் வாயடைக்க, காற்றும் விசைகுறைய

ஊர் முழுதும் உன்னுடைய உத்வேகப் போராட்டம்’’.

ஜீவாவின் பாரம்பரியத்தில் வந்த மற்றும் ஒரு கவிஞர் தான் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம். இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் உறுப்பினர். இவர் எழுதிய பொதுவுடமைக் கொள்கை வரிகள் திரைப்படங்களின் மூலம் வெகுமக்களுக்கு தனித்துவமான வீரியத்தை வழங்கியது.

‘தனிவுடமைக் கொடுமைகள் தீர தொண்டு செய்யடா’

‘தானாய் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா’

ஆகியவை பட்டுக்கோட்டையார் எழுதிய பாடல்களில் சில வரிகள்.

பல்சுவை ஆளுமை வாய்த்த மாகவி கண்ணதாசன் எழுதிய “வல்லனான் பொருள் சேர்க்கும் தனிவுடைமை நீங்கி வர வேண்டும் திரு நாட்டில் பொதுவுடமை’’ என்பதும் பொதுவுடமையின் மீது அவர் கொண்ட உறுதிபாட்டை உறுதி செய்கிறது.

இதைப் போலவே, தாமரை இலக்கிய இதழின் ஆசிரியராகப் பணியாற்றிய கே.சி.எஸ்.அருணாசலம் இறுதி மூச்சு வரை பொதுவுடமை இயக்கத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். ‘கவிதை என் கைவாள்’, ‘பாட்டுவராத குயில்கள்’ என்னும் நூல்களை எழுதியவர்.

ஜீவாவின் பொதுவுடமை இலக்கிய முன்னெடுப்புகளில் மேடை பிரச்சாரம் பாடல்கள் முக்கியமானவை. ஜீவா எழுதிய பாடல்கள் மேடைப் பாடல்களாக கோவை ராமதாஸ் அவர்களால் மேடைகளில் பாடப்பட்டது. அந்த காலத்தின் மேடைப்பாடகர்களில் வெ.நா. திருமூர்த்தி, பாவலர் வரதராஜன் ஆகிய இருவரையும் குறிப்பிட்டு சொல்ல முடியும். இவர்கள் இருவரும் அடித்தட்டு மக்களின் வறுமை, அதற்கான தீர்வுகளை தந்ததைப் போல், வேறு யாருமே தந்திருக்க முடியாது. இருவரும் ஆரம்பக் கல்வியை மட்டும் பெற்றிருந்தார்கள். அவர்கள் நெஞ்சத்தில் தானாகவே பெருக்கெடுத்து வெளிப்படும் கவி ஊற்று, ஏதுமற்ற ஏழை மக்களது கண்ணீரின் துயர வரலாற்றை மேடைகளில் அந்த எளிய மக்களிடமே பகிர்ந்து கொண்டது.

தமிழ் இலக்கியத்தின் புகழ் மிக்க நவீன கால முன்னோடி வா.ரா. திருமூர்த்தியைப் பற்றி எழுதிய

கடிதம் ஒன்று இந்த கவிஞர்களின் ஆற்றல் பற்றி அறிந்த கொள்ள நமக்கு உதவுகிறது.

"முதன் முதலில் திருமூர்த்தி அவர்களின் பாடல்களை 02.02.1946 ஆம் ஆண்டில் திருச்சி முனிசிபல் ஹாலில் கேட்டேன். அந்தப் பாடல்கனை கேட்டவுடன் ஆனந்தமும் துக்கமும் சேர்ந்து என்னைக் கவ்விக் கொண்டது. தமிழில் இவ்வளவு எளிமையாக எழுத முடியும் என்று திருமூர்த்தி நிரூபித்திருப்பதில் எனக்குப் பேரானந்தம் உண்டாயிற்று. நமது நாட்டின் வறுமையை அவர் சித்தரிக்கும் போது, மனம் ஒடிந்து துக்கம் உண்டாயிற்று. இந்த பாடலை தமிழ்நாட்டில் எல்லோரும் எல்லா இடங்களிலும் பாடவேண்டும் என்பது என் ஆசை''. இதைப்போல அன்றைய கேரள முதலமைச்சர் பொறுப்பிலிருந்த போது, தோழர் இ.எம்.எஸ் தேவிகுளம், பீர்மேடு இடைத்தேர்தலுக்குப் பின்னர் பாவலர் வரதராசன் அவர்களையும் அவரது குழுவினர் குறித்து சொன்னவை காலத்தால் நிலைத்து நிற்கத் தக்கவை.

கவிஞர் திரு.மூர்த்தி எழுதியப் பாடல் ஒன்று.

"மண்ணுக்காய் பாரதத்தின் சண்டையென்றும்
வானவர்க்காய் அசுரர்களின் சண்டையென்றும்
பெண்ணுக்காய் ராமாயணச் சண்டையென்றும்
பெயர் போன பழங்கதையைக் கேட்டிருப்பீர்
கண்ணுக்கு முன்னாலே எங்கள் வீட்டில்
கஞ்சிக்கும் கந்தைக்கும் பெரிய சண்டை."


இதைப்போல தோழர் இன்குலாப்பின் 'மனுசங்கடா எட்டு சாணு உயரமுள்ள மனுசங்கடா' என்ற சமூக இழிவுகளை அகற்றும் புரட்சி பாடல்களாக வெளிவந்தது.

நாவல், நாடகங்கள், சிறுகதைகள், இருபதாம் நூற்றாண்டிலும் 21ஆம் நூற்றாண்டிலும் பொதுவுடமை இயக்கத்தின் பங்களிப்பு மிகவும் போற்றுதற்குரியது. ரஷிய இலக்கியங்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை உருவாக்கியுள்ளன என்பது அனைவரும் அறிந்த ஒன்று. மாக்சிம் கார்க்கியின் 'தாய்' நாவல் தமிழில் பலரால் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. புதுமைப்பித்தன், அழகிரிசாமி, கி.ராஜநாராயணன் போன்றவர்கள் எழுத்துக்கள் மூலம் பொதுவுடமை கொள்கைகளுக்கு ஆதரவாகவே செயல்பட்டு வந்தார்கள். வல்லிக்கண்ணன் தி.க.சி. தொ.மு.சி. போன்றவர்கள் 'மக்கள் இலக்கியம்' என்ற கோட்பாட்டை தமிழுக்கு தந்தவர்கள். தொ.மு.சி.என்னும் சிதம்பரம் ரகுநாதனின் பஞ்சும் பசியும் சோசலிச எதார்த்தவாத நாவலில் ஒரு முக்கியமான பங்களிப்பாகும். இது உலகில் பல மொழிகளில் மொழியாக்கம் செய்யபட்ட பெருமையைக் கொண்டது.

பொதுவுடமை எழுத்தாளர்களின் இலக்கிய விமர்சன பங்களிப்பு தனி ஆய்வாக எடுத்து ஆராய்ந்துப் பார்க்க வேண்டும். இலங்கை தமிழ் எழுத்தாளர்களான பேராசிரியர்கள் கைலாசபதி, சிவதம்பி, ஆகியோர் விமர்சன இலக்கியத்தில் ஒரு புதிய அணுகுமுறையை வகுத்தளித்தார்கள். இன்றும் விமர்சன இலக்கியத்தில் முன்னணியில் இருப்பவர்களில் பலர் பொதுவுடமை கொள்கைகளில் ஈடுபாடு கொண்டவர்களாகவே இருக்கிறார்கள்.

'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற புறநானூற்றுப் பண்பாடு கார்ல் மார்க்ஸ் சமத்துவக் கோட்பாட்டிற்கு மிகவும் அணுக்கமானது மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகிய இருவரும். மனித வரலாற்றின் வழியாக பொதுவுடமை கொள்கைக்கும் இடையிலுள்ள தொடர்பை விளக்குவதற்கு, கிரேக்க இலக்கியத்திலிருந்தும் உரோமாபுரி இலக்கியத்திலிருந்தும், இதர ஐரோப்பிய இலக்கியங்களிலிருந்தும் பல்வேறு மேற்கோள்களைக் காட்டியுள்ளனர். இவை அனைத்தும் புராதானப் பொதுவுடமை சமூகத்தில் அந்த மக்களின் வாழ்க்கைமுறை எவ்வாறு இருக்கின்றன என்பதை விவரித்து செல்கின்றன.

ஒருகால் தமிழில் தொல்காப்பியம் முதல் தமிழின் தொன்மையான இலக்கியங்களை வாசித்து ஆராய்ந்து பார்க்கும் வாய்ப்பு மார்க்சீயத்தின் இந்த மூலவர்களுக்கு கிடைத்திருக்குமானால் அவர்கள் தங்கள் கம்யூனிச இலக்கியத்தில் கூடுதலாகப் பயன்படுத்தியிருக்கும் மேற்கோள்கள் தமிழிலிருந்து தான் எடுக்கப்பட்டிருக்கும் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். இந்தப் பின்னணியில் இன்று வரை தமிழில் பொதுவுடமை இலக்கியம் பயணம் செய்து வருகிறது என்ற முடிவுக்கு நான் வருகிறேன்.



அறிஞர் அண்ணாவின் தமிழ்க்கொடை

ப.ஆறுமுகம்

தமிழ் மொழியிலும், தமிழ் இலக்கியத்திலும், தமிழ் கலையிலும் தமிழர் வாழ்விலும் மறுமலர்ச்சி காண அண்ணா ஆற்றிய அரும்பணிகள் பல. அவற்றுள் தலையானது அவர் தமிழுக்கு அளித்துள்ள கொடைகளாகும். அவருடைய தமிழ்த் தொண்டிற்குப் பாரதிதாசனின் பாடல்கள் உரமளித்தன.

இருக்கும் நிலை மாற்ற ஒரு புரட்சி மனப்பான்மை ஏற்படுத்தல் பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடனாம்;

புரட்சியில் மலர்க இன்ப வாழ்வே

எனும் கருத்துக்கனல் வீச்சீனை அண்ணாவின் பேச்சிலும், எழுத்திலும் காணலாம். தந்தை பெரியாரின் தொடர்பு அண்ணாவின் வாழ்வைத் தமிழ்த் தொண்டிற்கே அளிக்க ஊக்கமும் உறுதியும் அளித்தது. தமிழ் மொழி நடை வளர்ச்சிக்கு அவர் நல்கிய கொடை யினை, மேடைத்தமிழ், அரசியல் தமிழ், சட்டமன்றத்தமிழ், இதழியல் தமிழ், நாடகத் தமிழ், இசைத்தமிழ், இயற்றமிழ் எனும் துறைகளில் அவர் வழங்கியுள்ள மொழித்திறன்களைப் பகுத்துக் காணலாம்.

மேடைத்தமிழ்க் கொடை

தமிழகமெங்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அறிவுப் புரட்சி யினைச் செய்தவர் அண்ணா. அவருடைய மேடைத் தமிழ் புதுமையும், பொலிவும், சுவையும், பயனும் கலைத்திறனும் கற்பனையாற்றலும் மிகுந்து கேட்போரைப் பிணித்து வியப்புறுத்திற்று; கேளாரை ஏக்கமுறச் செய்தது. தமிழ்ப் பொழிவுக் கலை அவருடைய நாநலத்தால் தனித்தன்மையான

வடிவும் வனப்பும் வளமும் பெற்றது. 'மேடைத்தமிழை ஓர் அரிய கலையாக்கித் தமிழகத்தில் எண்ணற்ற சிறந்த பேச்சாளர்களை உருவாக்கியவர் அண்ணா ஒருவரே' என நாவன்மையும் எழுத்து வன்மையும் சிறக்கப் பெற்ற கண்ணதாசன் கணித்துள்ளது தகுதி சான்றதாகும்.

அண்ணாவின் பேச்சுவன்மைக்குச் சான்றாக "மொழியைக் காத்திடவும் நாட்டை மீட்டிடவும் வீரர்களே விரைந்து வாரீர்" எனும் பொழிவில் ஒரு பகுதியினைக் காணலாம்.

வடநாட்டு ஏகாதிபத்தியம் என்ற நோய் நம்முடைய மூளையைத் தொட்டிருக்கிறது! அடிவயிற்றைத் தடவிப் பார்த்தார்கள் – பொறுத்துக்கொண்டோம்! ஆனால் இப்போது மூளையைத் தடவிப் பார்க்கிறார்கள்! எந்தப் பக்கத்திலே புறநானூறு இருக்கிறது. எந்தப் பக்கத்திலே தொல்காப்பியமும் கலித்தொகையும் கலிங்கத்துப் பரணியும் இருக்கின்றன என்று தடவிப் பார்த்து அந்தப் பக்கத்திலே இந்தியைத் திணிக்க முற்பட்டிருக்கிறார்கள்! நம்முடைய தாய்மொழியைக் காப்பாற்ற – தந்தையர் நாட்டை மீட்க இரத்தத்தில் நீந்தினோம் என்றால், என்ன – குடிமுழுகியா போய்விடும்? மற்றவர்களுடைய இரத்தத்தில் அல்ல; ஆளவந்தோரின் குண்டுகளின் மூலமாகப் பீறிட்டுக் கொண்டுவரும் நம்முடைய இரத்தத்திலே மூழ்குவதற்கு நீங்கள் அனைவரும் தயாராக இருக்க வேண்டும்.

நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் ஊட்டுவதற்கு உணர்ச்சித் தொடர்களையும் பழந்தமிழ் இலக்கியங்களையும், இலக்கியக் கலைத் திறன்களையும் ஆண்டு, மேடைத் தமிழில் கவிதைச் சுவையேற்றும் தனித்தன்மை அவரிடம் இயல்பாக அமைந்தது. கொச்சைத் தமிழையும், கலப்புத் தமிழையும் மேடைத் தமிழிலிருந்து களை பறித்தவர் அவர்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஓர் நல்ல வீணை. அதில் நாதம் குறையும்போது அவ்வப்பொழுது அதன் நரம்புகளை, விசைகளைச் சரிபார்த்துக் கொள்வதை போன்றதே, 'இது அறுந்துவிடும்' என்று யாராவது, கருதுவார்களானால், அந்த நரம்பின் வலிவையும் அந்த வீணை ஆக்கப்பட்ட விதத்தையும், அது எழுப்பும் இசையையும் நுகர முடியாதவர்கள் என்று பொருள்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஓர் அரசியல் கட்சி மட்டுமல்ல; இது ஒரு விடுதலை இயக்கம்... என்னுடைய தம்பிமார்கள் அத்தனை பேரும் இருக்கிறார்கள் என்றால், உங்களுக்கும் மற்றக் கட்சிக்காரர்களுக்கும் சொல்லுகிறேன் – என்னிடத்தில் உள்ள கனிவு – தம்பி கருணாநிதி உருவத்திலே இருக்கிறது... நான் சோர்ந்த நேரத்திலே தம்பி கருணாநிதி மோகன இராகத்தை வாசித்துக் காட்டுவான்; இதை எதிரிகள் 'முகாரி' என்றால் அவர்களுக்கு இப்பொழுது அது தேவை என்று பொருள்?

சென்னை கடற்கரையில் கழகம் ஒரு குடும்பம் என்று அதனை எவரும் குலைக்கவோ, அழிக்கவோ முடியாது என விளக்கிய பொழிவில் ஒரு பகுதி இது.

அவருடைய தலைமைப் பொழிவுகளும் இலக்கியப் பொழிவுகளும் கல்லூரிப் பொழிவுகளும், சட்டமன்றப் பொழிவுகளும் தேர்தல் பொழிவுகளும் சொற்பொருள் விளக்கப் பொழிவுகளும் மாநாட்டுப் பொழிவுகளும் விழாக்காலப் பொழிவுகளும் மாநாட்டுப் பொழிவுகளும் விழாக்காலப் பொழிவுகளும் வானொலிப் பொழிவுகளும் மேடைத்தமிழ் நடை எனும் தனி ஆய்வுக்கு உரிய அளவில் விரிந்த பரப்புடையது.

அரசியல் தமிழ்

அண்ணா அரசியல் உலகில் அடியெடுத்து வைத்து வளர, வளர, அரசியல் தலைவர்கள், பேச்சாளர்கள், அரசியல் மேடை ஏறுவோர், கருத்தரங்கம் செல்வோர், அரசு பொறுப்பேற்றிடுவோர் யாவரும் எங்ஙனம் கருத்துகளை மக்கள் முன் வைத்திடல் வேண்டும், எவ்வாறு மாற்றுக் கொள்கையும் மனமும் உள்ளவர்கள் மனம்கோணா வகையில் பேச்சு அமைய வேண்டும். இதழ்களிலும் நூல்களிலும் அளிக்கும் கருத்துகள் எத்தகைய கனிவும் கண்ணியமும் பொங்குவதாக அமைய வேண்டும் என்ற தமிழ்க்கலையினை வளர்த்து வந்தார்; சொல்லிய முறையில் செயல்பட்டு வந்தார்.

ஒன்று சொல்லுவேன். நம்மைப் பிறர் இகழக் கேட்டும் பதறாது இருக்கும் போக்கைவிடச் சிறந்த பண்பு வேறு இல்லை.

நமது கொள்கைகளை மறுப்போரின் பேச்சுக் கேட்டு மனம் பதறாத போக்கு, கட்டாயம் ஏற்பட்டாக வேண்டும்.

கனியிருக்கக் காய் கொள்ளற்க என்பது தமிழ்மறை அன்றோ! அது நமது பண்பு எனக் கொள்ளல் வேண்டும் எனத் தொடக்க காலத்திலிருந்து இறுதிநாள் வரை

எடுத்துரைத்துள்ளார். 'அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்' என்றார் வள்ளுவர். எனவே, நிந்தனை தமது கழகத்துக்கு உரமாயிற்று; தூற்றல் தமது குடும்பத்துக்குள் தோழமை மலர்ந்திடச் செய்தது என்று பெருமிதம் கொள்கிறார் அண்ணா.

முரணான கொள்கையாளர்களும் எதிர் அணியில் நின்று 'எடுத்தேன் கவிழ்த்தேன்' எனப் பேசுவோரும் அருவருப்பான மொழியில் நாப்பறை கொட்டினாலும் நமது கொள்கைகளைத் தூற்றினாலும் குறிக்கோள்களை இழித்துரைத்தாலும் நம்முடைய தனி வாழ்க்கையை நரகல் நடையாக்கினாலும் அகழ்வாரைத் தாங்கும் நிலம் போன்று பொறுமை கொண்டு நமது கருத்துகளையும் எண்ணங்களையும் செயல்முறைகளையும் கனிவுடையனவாக அமைத்துக் கொள்வதுதான் அரசியல் பண்பாடு என்பார். தமது இயக்க முன்னணித் தலைவர் கண்ணதாசன், தனியரசு – தமிழரசுக்கு எதிராக ஆளுங்கட்சியினர் வசைமாரிகளை வாரி இறைத்தபோது ஆள்வோர் போக்கிலேயே திருப்பி அதே வேகத்தில் தாக்கினார்.

முட்டாள்கள் கூட்டத்தார் ஆள வந்தார்
முந்நான்கு வருடங்கள் போனபின்பும்
கெட்டோமே! ஆடைக்கும் நிழலினுக்கும்
கிள்ளுகிற பசிதீர்க்கும் உணவினுக்கும்
கொட்டாவி விட்டோமே! விடுகின்றோமே!
குறையாத வறுமைக்கே ஆளானோமே!
பட்டாயே தமிழா! இம்மடையர் ஆளும்
பாரதத்தின் ஒற்றுமை இன்னும் கேட்பாய்.

பின்னர் எதிர்க்கட்சியில் சேர்ந்துகொண்டு 'வடநாடா தென்னாடா! யாருரைத்தார்! வாழ்கின்ற மாந்தரெலாம் ஓரினத்தார்; நடவாது! நடவாது! பிரிவினைத்தீ! நம் நாட்டைப் பாழாக்க விடவே மாட்டோம்! என்று முழங்கினார். இவ்விரு நிலைகளையும் எடுத்துக்காட்டி இழிமொழியால் பேசுவது பண்பாகாது என்பதுடன் 'தமிழ் அத்தகைய தகாத செயலுக்குப் பயன்படுத்தல் கூடாது. நமது உள்ளத்தைத் திறந்து காட்ட உறுதியை வெளிப்படுத்தவே தமிழ் பயன்படுத்தப்படல் வேண்டும், என்று தமிழரசியலறம் காண்கிறார்.

'இது நாடு; காடு அல்ல; மக்களை நல்வழிப்படுத்த முடியும் என்று நாம் இயக்கம் நடந்த முற்படுகிறோம் – நாம் முதலில் நல்வழி நடக்க வேண்டும்' என்றும் 'அறிவாளிகள்' அடக்க குணமுடையோர் அழகு நடையுடையோர், கலைத்தொண்டு புரிவோர், மாற்றாரும் மகிழப் பேசுவோர், மாண்பு காத்திடுவோர்' என்று மாற்றார் புகழுமளவுக்கு நடந்து காட்டிடின் 'அரசியல் என்பது அமளிகளற்ற கருத்தரங்கம் என்ற தூய நிலை பிறக்கும். அந்தக் கருத்தரங்கம், ஒளி தர வேண்டும் – வீணான வெப்பத்தை அல்ல. வேறுபாடான எண்ணங்கள் எழலாம்; மோதிக் கொள்ளலாம். இறுதியில் குழைந்து போகலாம், வெறுப்புணர்ச்சியாக மாறிடலாகாது. கொள்கை மறவாதீர், கோபத்துக்கு ஆளாகாதீர்! கூடி வாழ்வது பொறுப்பான காரியம் – அறிவீர், குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை! எனும் வேண்டுகோள் விடுக்கிறார். 'இன்றைய பகைவர் நாளைய நண்பர்' என்றார் ஒருவர், எனக் காட்டி நாட்டு விடுதலை எனும் மிகப் பெரிய செயலுக்குத் தம்மைக் கடுமொழியால் தாக்குவோர், தமது நோக்கையும் போக்கையும் மாற்றிக் கொள்ளப் போகிறார்கள்; 'இனியது கேட்கின் கனிமொழி தம்பி! இனிது இனிது அன்பர்கள் அருங்குழாம், அதனினும் இனிது ஆர்த்தெழும் மாற்றார் திருந்தி நம்முடன் சேர்ந்திட விழைதல்' என்று கருத்தளிப்பார்.

நம்மைப் பாராட்டியவர்களே அரசியலில் வேறு முகாம் சென்றுவிட்டால் இழிமொழிகொண்டுச் செந்தேளாய்க் கொட்டுவதும் உண்டு. அவ் இழிமொழிகளைத் தாங்கிக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே 'எதையும் தாங்கும் இதயம்' பெற வேண்டும் என்று வற்புறுத்துவார்.

பாராட்டியவர்களே கண்டிக்கும்போது, அதைத் தாங்கிக் கொள்ளும் மனதிடம் இருக்கிறதே, அது எளிதில் பெற முடியாத, ஆனால் விலை மதிக்க முடியாத மிகச் சிறந்த பண்பாகும்.

கண்டனத்தைத் தாங்கிக் கொள்ளும் திடமனம் இல்லை என்றால், கடமையை நிறைவேற்ற முடியாது எனும் உரைகள் பதவிபிடி சண்டை நடத்தும் மக்களாட்சி மன்னர்கள், எந்நாளும் போற்ற வேண்டிய அரசியல் நெறியாகிறது.

மக்களாட்சியில் ஒரே கட்சிதான் ஆள வேண்டும் எனும் இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் சூழல் அண்ணாவை அரசியல் கூட்டு முயற்சியில் ஈடுபடுத்திற்று. கூட்டணி அமைத்தார் 1956இல்,

மொழி வழி அரசு அமைக்கும் பொதுநோக்கில், கூட்டணியின் நோக்கினைத் தெளிவுபடுத்திமிடத்து கூட்டணி என்பது. தத்தமது கட்சி கலைக்கப்பட்டு, கொடி அகற்றப்பட்டுக் கொள்கை தகர்க்கப்பட்டுப்

போகும் என்பதல்ல... ஒவ்வோர் கட்சியும் இந்தப் பொதுப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில், தத்தமது சக்திக்கேற்ற வகையிலும் அளவிலும் பணியாற்றி, அந்தக் கூட்டுச் சக்தியின் பலனாக, நாட்டுக்கு வந்துற்ற கேட்டினை நீக்குவர் என்பதுதான் பொருள் என்று விளக்குகிறார்.

அரசியல் களத்தில் இயங்கும் பல்வேறு அமைப்புகளும் பகையின்றிப் பூசலற்று, ஏசலை விடுத்துக் கூடுமானபோதெல்லாம் ஒன்றுபட்டுச் செயலாற்றவும் கருத்து வேறுபாடு எழும் பிரச்சினைகளில், தனித்து நின்று, ஆனால் ஒரு அமைப்பை மற்றோர் அமைப்பு தாழ்த்திக் கொள்ளாமலும் அவரவர் துறை நின்று பணியாற்றுதலே பண்புடைமை, அறிவுடைமை' ஆகும் என்று அரசியலில் வள்ளுவம் தீட்டுவர். 'அரசியல் துறையில் குடியாட்சியின் சிறப்பைக் காத்து, அரசியல் நாகரிகத்தையே ஒரு பண்பாடு என விளங்கச் செய்தவர்' என மு.வ. பாராட்டுவர்.

அரசியல் இயக்கங்கள் நல்ல குடும்பங்களாக அமைந்து, பல்கலைக் கழகங்களாகப் பொலிவுற வேண்டுமென அண்ணா விரும்பினார். எனவே, 'நாம்' என்ற கூட்டுச் சக்தியை – குடும்ப சக்தியைக் காட்டிடும் அந்தச் சொல்லுக்கு எழிலோவியமாக அமைந்துவிட்டது திராவிட முன்னேற்றக் கழகம்; 'நாம் என்ற அந்தக் கூட்டுச் சக்தியைக் காட்டிடும் சொல்லினுள் பொதிந்துள்ள அரிய பாடம் மக்களாட்சிப் பண்புக்கு அடிப்படையாவது – அகில உலகிலும் எங்கும் எந்த நேரத்திலும் 'நாம்' என்பதிலே உள்ள தூய்மையிலே தூசு படிந்துவிடக் கூடாது என்று வழிகாட்டுவர்.

ஒரு அருமையான குடும்பம் இன்று திராவிடத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிறது. எனவே, மற்ற எங்கும் காண முடியாத, பெற முடியாத, ஓர் கனிவு இங்குச் சுவையளிக்கிறது.

சட்டமன்றத் தமிழ்க்கொடை

தமிழ்நாடு சட்டமன்றம் விழித்ததே அண்ணா சட்டமன்றத்துள் நுழைந்தபிறகுதான் எனலாம். கொச்சைத் தமிழும் ஆங்கிலமும் வடமொழியும் ஆட்சி பெற்று இருந்த சட்டமன்றத்தில் நல்ல தமிழை ஒலிக்கச் செய்த பெருமைக்குரியவர் அவர்.

பழையதைப் பற்றியே பேசுகிறீர்களே என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்குச் சொல்லுகிறேன். இப்போது கார்டு கவர் எழுதுகிறவர்கள்கூட 'ஸ்ரீராமஜெயம்' என்று போட்டு எழுதுகிறார்கள். இராமனுக்கு எப்போதோ ஜெயம் ஏற்பட்டது என்றாலும் இன்னும் இராமனுக்கு ஜெயம் போடுகிறார்கள் என்று சட்டமன்றத்தில் பகுத்தறிவுக்கதிர் பரப்பும் தமிழ்நடை பயின்றுள்ளார். "சட்டமன்ற உரைகளில், மாற்றுக்கட்சியினர் பழித்துரைக்கும் கூற்றுகளைத் தமக்குள்ள மொழித்திறத்தால் செம்பொருள் அங்கதமாக்கி அனைவரையும் சிரித்திடச் செய்யும், சிந்திக்கச் செய்யும் ஆற்றல் மிக்க உவமைகளை அண்ணா பயன்படுத்தியுள்ளார்" என்று அவருடைய சட்டமன்ற உரை: ஆய்வாளர் பி.இரத்தினசபாபதி குறிப்பிடுகிறார்.

இதழியல் தமிழ்க்கொடை

அண்ணாவுக்கு முன்பு தமிழ் இதழ்கள் மணிப்பிரவாளத்தினையும் கடுந்தமிழையும், கொச்சை மொழியையும் ஆங்கிலமும் மிகுதியாகக் கலந்த தமிழையும் போற்றி வளர்த்தன. விடுதலை, குடியரசு, திராவிட நாடு இதழ்களில் அண்ணா எழுதிய இதழுரைகள் பொதுமக்கள் புரிந்துகொண்டு சுவைத்துச் சிந்திக்கத்தக்க, கருத்தாழம் மிக்க இலக்கிய மணம் கமழும் நல்ல தமிழில் அமைந்து இதழ் படிப்போர் எண்ணிக்கையினை வளர்த்தன; இதழியல் தமிழை நெறிப்படித்தின; அதனை இலக்கிய வடிவமாக்கின, இதழுரைகளை வெறும் செய்தித் தொகுப்பாக வழங்காது, புனைவிலக்கியம் போன்று விறுவிறுப்பான தொடக்கங்கள் முடிவுகளுடன் கலைத்திறன்களையும் சேர்த்து அவர் படைத்தார், குட்டிக் கதைகளும் கவிதை மேற்கோள்களும் இசைப்பாக்களும் மடலும் உரையாடலும் சிறுநாடகங்களும் இதழுரையில் இடம் பெற்று கவினூட்டின. அவற்றின் தலைப்புத் தொடர்களும் சொற்களும் கவர்ச்சியும் கருத்தூட்டமும் பெற்றுப் புதுப்பாதை அமைத்தன. 'நேற்று – இன்று – நாளை!', 'கல்கத்தா கலக்கம்', 'கடல் கடக்கும் கண்கள்', 'கேட்டது வாழ்வு, கிடைத்தது சாவு', 'கோடு உயர்ந்தது, குன்றம் தாழ்ந்தது', 'பச்சை ரத்தம் பறிமாறிடுவோம்', 'வருத்த விருத்தம்', 'வியர்வை விருந்து', 'வேதனை வெள்ளம்', 'வெட்கமா? துக்கமா? அச்சமா?', 'அறிவுக்கோயில்' எனும் தலைப்புகள் நற்சான்றுகளாகின்றன.

'கூவி அழைக்கிறது கோவை' (1950) எனும் இதழுரை இதழியல் நடைத்திறனுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும். கவிமன்னர் பாரதிதாசன் தலைமை வகிக்க இருக்கிறார். அவர் புதுமணம் வீசும் புரட்சி மலர்க்கொத்துகள் பூத்துக்குலுங்கும் கொடி! அவர் புரட்சியின் உருவம்! புத்துலக சிற்பி... அவர் காலத்தின் தூதுவர் மட்டுமல்ல,

காலத்திற்கே வழிகாட்டி நடத்திடும் ஒளிவிளக்கு. அவர் 'இருண்ட வீட்டில்' 'குடும்ப விளக்கு' ஏற்றி வைத்தவர். 'அழகின் சிரிப்பு' வீசி 'சேர தாண்டவம்' காட்டியவர். 'தமிழச்சியின் கத்தி'யால் தமிழகத்தில் உணர்வுப் புரட்சி செய்து 'பாண்டியன் பரிசை' அளித்தவர். அவர் பாட்டு, ஆணவக்காரக் கும்பலுக்கு அதிர்வேட்டு! அவர் கருத்து, புதுமை எண்ணங்களுக்குப் புது வலிவு தரும் மருந்து! அவர் பேச்சு, புரட்சி உலகின் மூச்சு!

அவரது அனல் நடைப்பாட்டால் நம் குருதி கொதிப்பேறிப் போயிருக்கிறது... நம் சிந்தையில் செந்தீ எரியத் தொடங்கிவிட்டது. இதயத்திலே ஒரு பூகம்பம் ஏற்பட்டுவிட்டது!

அண்ணா தமது இதழியல் நடைத்திறத்தால் பாரதிதாசனைப் படிப்பவர் கண்முன் ஒலி, ஒளிக்காட்சிப்படுத்தி விடுகிறார்.

'கணக்குப் பார்க்கிறோம்' (1954) எனும் இதழுரை மடல் வடிவில் இயல்கிறது. அதன் முடிவோ செல்லியின் கவிதை மொழிபெயர்ப்பில் இருக்கிறது; விடுதலைக்கனல் மூட்டுகிறது.

விழித்தெழும் சிங்கம்போல் வீறுகொண்டு எழுங்கள்! தூக்கத்தில் படிந்த பனியைச் சிதறுவது போல் பிணித்துள விலங்கினைப் பெயர்த்தெரியுங்கள்! நீங்கள் பலர்; அவர்களோ சிலர்.

மும்முனைப் போருக்குத் தமிழ்நாட்டு மக்களை அறைகூவி அழைக்கும் நடைத்திறன், 'உலகப் பேரறிஞர் அண்ணா' தமிழ் இதழியல் மொழிநடைக்குப் புதுமையும் புத்துணர்வும் ஊட்டினார்' என்று வா.செ.குழந்தைசாமியைக் கணித்திடச் செய்துள்ளது.

'இதழாசிரியன் புதின ஆசிரியனாக மாறும்போது உள்ளது புனைதல் செழிக்கிறது; இல்லது புனைதல் களையப்படுகிறது, படிப்பவர் விருப்புக்கும் வேட்கைக்கும் முதலிடம் தந்து கருத்துகளைப் புதுப்புதுத் திறன்களுடன் நடுநிலை வழுவாது மதிப்பீடு செய்யும் தகைமை சிறக்கிறது; தீர்த்தற்கரிய சிக்கல்களை எல்லாம் எளிதில் தீர்க்கும் நடைத்திறன் மக்களை ஈர்க்கிறது. அவனுடைய மொழிநடையோ அறிவியல் நோக்கில் அமைகிறது எனும் எலிகண்டின் உரைக்கு அண்ணாவின் இதழியல் மொழிநடை சான்றாகிறது.

நாடகத் தமிழ்க்கொடை

கருத்துப் பரப்பும் கலைக்கருவிகளில் நாடகத்தினை அண்ணா தலைசிறந்ததாகக் கொண்டார். அவர் எழுதிய நாடகங்களில் அவரே நடித்துத் தன்னிகரற்ற நடிகராகவும் பொலிவுற்றார். அவருடைய நாடகத் தமிழ் உரைநடை நாடகக் கலைக்கே புத்துயிர் அளித்தது. 'சந்திரோதயம்', 'சந்திரமோகன்', 'ஓரிரவு, வேலைக்காரி', 'காதல்ஜோதி' ஆகிய நாடகங்கள் மு.கருணாநிதி, அரங்கண்ணல் போன்ற நாடகக் கலைஞர்களைத் தந்துள்ளன. திரை, நாடகத் துறையினை அறிவுப் பணியாற்றி, அறியாமை இருள் போக்கும் கலைத்துறையாக மாற்றியவர் அண்ணா.

சட்டம் ஓர் இருட்டறை; அதிலே வக்கீலின் வாதம் ஓர் விளக்கு. ஏழையால் அந்தப் பிரகாசமான விளக்கைப் பெற முடியாது.

கடவுள் அருளுக்கு வழிகாட்டப்படும் இடம் என்று பாமரர் நம்பும் அந்த இடம் காமவேள் நடன சாலையாக இருக்கக் கண்டோம். இளித்தவாயர்களுக்குப் பகலிலே உபதேசம்; இன்பவல்லிகளுக்கு இரவிலே சரசமாம்; குருடனுக்குக் கோல் தேவையாக இருப்பது போல், ஊரை ஏமாற்றிக் குடி கெடுப்பவனுக்கு வேஷம் தேவைப்படுகிறது. வேடமணியாத வேதாந்தி – மோசடி செய்யாத மாது – ஜோடி இல்லாத மாடப்புறா – சேடியில்லாத ராசகுமாரி இருக்க முடியாதாம்! அரிசுரதாஸ் இத்தகைய ஓர் வேடதாரி! இந்த ஆஸ்ரமத்திலே காதினிலே குண்டலம் ஆட, கனத்த சரீரம் பாட, காய்ச்சிய பால் தொண்டையில் ஓட, கண்கள் கதியற்றக் கன்னியரை நாட கடவுள் அருளுக்கு வழிகாட்டப்பட்டதாம்! சிரித்திடும் நரி சிவ சொரூபத்தில் இருந்தது. இந்தக் குருவைக் காண ஒழுக்கம் கூசிற்று; தருமம் இவன் இருக்கும் திக்கைக் காணமறுத்தது.

இது வேலைக்காரி நாடகத்தில் வரும் வழக்குரைஞர் உரையாகும். இந்நடைத் திறனைத் துய்த்த தமிழர் அண்ணாவை நாடக உலக அகத்தியர் என்று பாராட்டி மகிழலாயினர். அவருடைய நாடகத் தமிழ் நடை ஆய்வு செய்யப்பட்டால், இந்நூற்றாண்டு நாடகத் தமிழ்மொழி நடை ஆய்வுக்கு முன்னோடியாகவும், துணையாகவும் அமையும்.

இசைத்தமிழ்க் கொடை

இசைத் தமிழுக்கு அண்ணா ஆற்றியுள்ள பணிகள் பிற துறைப் பணிகளினும் குறைந்தனவல்ல. கழகக் கொள்கை பரப்புக் கருவிகளில் தமிழிசையும் ஒன்றாகும். கழக

மாநாடுகளில் முத்தமிழும் முழங்க, இசைத்தமிழுக்கு நாள்தோறும் முன்னுரிமை அளிக்கப்பட்டது. சிறந்த தமிழிசைக் கலைஞர்கள் உருவாக்கப்பட்டனர்; ஊக்குவிக்கப்பட்டனர்.

'தமிழிசை நெஞ்சை அள்ளுகிறது. தமிழில் உள்ள இனிமையை உண்ண ஆசைப்படுகிறேன். தமிழே இசையுருவாக அமைந்தது; இசையே தமிழில்தான் முதன்முதலில் தோன்றியது. தமிழிலே பாரதிதாசன் இசைப்பாடல்கள் இல்லையா? சிலப்பதிகார வரிப்பாடல்கள் இல்லையா?' என்று இசைத்தமிழ் மாநாட்டில் தமிழிசைச் சிந்தனையைத் தேக்கியுள்ளார். சிலப்பதிகார வரிப்பாடலைப் பாடியும் காட்டியுள்ளார்.

பொழிறரு நறுமலரே புதுமணம் விரிமணலே

பழுதரு திருமொழியே பணையிள வனமுலையே

முழுமதி புரைமுகமே முரிபுரு வில்லிணையே

எழுதரு மின்னிடையே யெனையிடர் செய்தவையே

எனும் பாடலை இசைத்து, இசைத்தமிழ் நுட்பங்களையும் விளக்கியுள்ளார்.

'சொர்க்கவாசல்' எனும் திரை நாடகத்தில் இடம் பெறும் பாடல்கள் எக்கருத்தில் இயற்றப்பட வேண்டும் என்று கருத்தளித்துள்ளார்.

முடியுடை வேந்தர்கள் தமிழகத்தை ஆண்டு வந்தனர். அப்போது வீரமும் அன்பும் அறமும் குடிகொண்டிருந்தன. மறக்குடித் தமிழன் மானம் பெரிது உயிர் சிறிது என்று எண்ணுபவன்... வீரத்தைப் போற்றி வாழ்ந்ததால் அறிவுக்கு ஆட்சி இருந்ததால் தமிழகம் வாழ்ந்தது. இக்கருத்தையே 'கன்னித்தமிழ்ச் சாலையோரம்' எனும் பாடல் இசைக்கிறது.

இயற்றமிழ்க்கொடை

தமிழ் இலக்கிய மொழிநடைக்கு அண்ணா நல்கிய கொடையினை இவ்வாய்வேட்டின் ஒன்பது இயல்களும் விளக்கியுள்ளன. அவர் புத்தகம் புதிய இலக்கிய வடிவங்களை உருவாக்கி, அவற்றின் தன்மைக்கேற்ற மொழி நடையினைத் தேர்ந்து வழங்கியுள்ளார். அந்தக் கலம்பகம், ஊரார் உரையாடல், கார்டூனாயணம், புதுக்கவிதை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

ஊரார் உரையாடல்

மாலைப்பொழுதில் திண்ணையிலும் குளத்தங்கரையிலும் மரத்தடியிலும் ஆண்கள் ஊர் வம்பு அளப்பதுண்டு. இதனை 'ஊரார் உரையாடல்' எனும் இலக்கியமாக்கியுள்ளார். அரசியல், சமுதாய நிலை அவற்றின் ஆய்வுப் பொருள்களாகின்றன. உரையாடும் மாந்தர் பெயர்களே உருவக மாந்தர்களாக்கப்பட்டு உணர்த்தும் கருத்துக்கு உரமளிக்கப்படுகிறது. 'முடிச்சூரார்' வெட்டூரார் உடனும் 'துடிதுடிப்பான்' 'பழிதுடைப்பானு'டனும், 'கருத்தூரார்' 'கதரூரார்' இதழூராருடனும்' 'ஆகஸ்டு', 'ஜூலை'யுடனும் உரையாடுவதாகப் படைக்கப்பட்டுள்ள மொழித்திறனைச் சுட்டலாம். நடப்பியல் நெறியும் நாட்டார் மொழியும் அண்ணாவுக்கு இவ்வடிவப் படைப்புகளில் செம்மையாக அமைந்து அவருடைய எள்ளல் மொழிக்கலைக்கு எழிலும் ஏற்றமும் தந்துள்ளன.

அந்திக் கலம்பகம்

பெண்கள் ஓய்வு நேரங்களில் ஒன்றுகூடி ஊர்வம்பு அளப்பர். இந் நெறியினைக் கூர்ந்து நோக்கிய அண்ணா, மக்கள் உளப்பண்புகளையும் அரசியல் போக்கினையும் பகுத்தறிவுச் சிந்தனைகளையும் அறிவியல் நுட்பங்களையும் பொதுமக்கள் படித்து ஓர்ந்து சுவைத்துப் பயன்பெறத் தக்கதாக 'அந்திக் கலம்பகம்' எனும் இலக்கிய வடிவம் புனைந்துள்ளார். இது பேச்சு மொழியில், இலக்கியக் கலைத்திறன்களுடன் படைக்கப்பட்டுள்ளது. மனோன்மணி, பொன்னி, ஏமலதா, வடிவு, பட்டு எனும் பெண்கள் உரையாடும் கருத்துப்போர் நடத்தும், வழக்குரையாடும் புரட்சிப்படைப்பாகிறது.

கார்டூனாயணம்

அரசியல் எள்ளல் ஓவியங்களைத் தேர்ந்து முறைப்படுத்தி அண்ணா வழங்கியுள்ள புத்தம் புதிய கட்டுரை 'கார்டூனாயணம்' என்பது. உலக அரசியலுடன் இந்நாட்டு, அரசியல் போக்கு ஒப்பிடப்படுகிறது. தமிழகத்தில் இதழாசிரியர்கள் நடுவுநிலையன்றி எழுதும் நெறியற்ற போக்கினை இதில் எள்ளி நகையாடுகிறார்.

மலக்குழி என்று போர்டு போடப்பட்டுள்ள இடத்திலே நின்றுகொண்டு, மல்லிகைமணம் வீசக் கூடாதா என்று கூறுவதும், எதிர்பார்ப்பதும் மிகப் பெரிய தவறு! மதியீனம் அல்லவா! என்று இதழ்களின் பண்பினைப் படிப்பவர் சிந்தனைக்கு விடும் நடைத்திறன் இங்கு ஒளிர்கிறது. இத்துறையில் இதுவே தமிழில் தோன்றிய முதல் படைப்பாகும்.

புதுக்கவிதை

எதுகை மோனை, எழில்தரும் உவமைகள், பழமைக்கு மெருகு ஆகியவற்றைத் தேடிப் பாப்புனையும் சொல்வலை வேட்டுவரைக் கண்டிக்கும் அண்ணா, எண்ணம் துடிக்க, இதயத்தில் எழும் பாக்களையும் பட்டப்பகலில் பாவலர்க்குத் தோன்றும் கனவுகள் வெடித்துக் கிளம்பும் கவிதைகளையும் வடிக்கும் கண்ணீர் வழங்கும் சொல்லின் செல்வங்களையும் புதுப்பாக்களாகப் புனைந்துள்ளார். 'சீர் அறியேன், அணியறியேன், சிந்தை உந்தும் செய்திதனைத் தெரிவித்தேன்' எனும் முன்னுரை வரைந்து 'கவிதை அல்ல; கவிதை ஆக்கிக்கொள்க' எனும் முடிவுரையுடன் பல பாடல்களை அவர் பாடியுள்ளார். 'புத்தியிலா உலகமிது', 'காடுடையார்', 'அவனா இவனா அறிவாளி', 'பறந்தது ஓர் புறா', தேம்புகிறேன்', 'நானே தலைவன்', 'வேட்பாளர் வருகிறார்', 'காந்தி பன்னிரெண்டு' என்பன அவருடைய கவிதைத் தமிழ்நடைக் கொடையினைத் தெரிவிப்பனவாகும்.

கட்டுரை

'தமிழில் கட்டுரை இலக்கியத்தினை அறிவியல் நெறிப்படுத்தியவர் திரு.வி.கலியாணசுந்தரன், இக்கலையினை இதழ்களின் மூலமாக அரசியல் துறையில் கவினும் கருத்தும் செழிக்கச் செம்மையான வடிவாக வளர்த்த புரட்சியாளர் அண்ணா' என்று ஈ.சா.விசுவநாதனம் மதிப்பிடுவது சாலப் பொருந்தும்.

'கட்டுரை இலக்கியத்தினைக் கவிதை, உரையாடல், மடல், வழக்குரை, நேர்முக வண்ணனை, நினைவோட்டம், சொற்பொருள் ஆய்வு, பொழிவு, சிறுநாடகம் எனும் பல வடிவங்களும் உறழ்ந்து வந்து இலக்கியச் செவ்வியும் கவர்ச்சியும் ஊட்டும் நடையில் தீட்டிய முதல்வர் அண்ணா, 'குடியாட்சிக் கோமான்', 'அரசாண்ட ஆண்டி', 'பணத்தோட்டம், ஆரியமாயை', 'மாஜி கடவுள்கள்', 'ரோமாபுரி ராணிகள்', 'மாற்றான் தோட்டத்து மல்லிகை', 'வேமன்னா', 'அமெரிக்காவில் ஒரு பாரதிதாசன்', 'கம்பரசம்', 'தேவலீலைகள்', 'இயற்கை ஓர் அழகான விதவை', 'மழை' என்பன அவருடைய கட்டுரை மொழிநடைத் திறனையும் மொழிக் கொடையினையும் எடுத்துரைப்பன.


கட்டுரைகளுக்கு தலைப்பு தருவதில் பெரும் புரட்சியே செய்துள்ளார். குறிப்புப் பொருள் உணர்த்தும் தலைப்புகள் அவருடைய ஒப்பற்ற கொடையாகும். '30030170' (551956) எனும் தலைப்புடைய கட்டுரையில் ஆள்வோர் மக்கள் முன் வைக்கும் கருத்து முரண்பாடுகளை விளக்குகிறார். வரி கட்டாது ஏய்ப்போர் 30 கோடி என ஒருவரும், 300 கோடி எனப் பிறிதொருவரும், 175 கோடிதான் என்று மூன்றாமவரும் கூறும் நாட்டின் நாயகர்களை இக்கட்டுரையில் எள்ளி நகையாடுகிறார்.

திருந்தாத வயலிலே, தீங்கனி மரம் கோரி, விதை தூவி, தேன் பெய்தாலும் பயன்கிட்டுமா? ஆடை அணி புனைந்து, ஆடிப்பாடி வரச் செய்தாலும் அலியை அணைத்துக் கொண்டால் சுகம் கிட்டுமா? ஆரியம் எனும் படுகுழி மீது புராணமெனும் பச்சிலை போட்டு மூடிக் கிடக்கிறது. பச்சையைக் கண்டு, இச்சை பட்டுச் செல்லும் பாமரர் நிச்சயமாய்ப் படுகுழி வீழ்வர் என்பது ஆரியருக்குத் தெரியும்! கொக்கெனக் காத்திருந்து குள்ளநரி போல குறியை வஞ்சகத்திலேயே நிறுத்தி, கள்ளமும் கபடமும் இல்லாதாரைக் கைதிகளாக்கி விட்டனர்; அவர்களின் கண்ணீர் வெள்ளத்தைக் கொண்டு, தமது சுயநலத் தோப்புக்கு நீர் பாய்ச்சுகின்றனர்; அவர்களின் வியர்வை, இரத்தம் ஆரியப் பண்ணைக்குப் பாய்கிறது.

இது 'தேவலீலைகள் எனும் கட்டுரையின் ஒரு பகுதி. உவமை, உருவகம், ஓசைநயம், சொற்செறிவு, கருத்துக் கதிர்வீச்சு ஆகியவை கலந்து வந்து கவிதைச் சுவையளிக்கிறது. அண்ணாவின் கட்டுரைத் தமிழ் தனி ஆய்வுக்குரிய அளவு விரிந்த பரப்புடையது; திராவிட இயக்க எழுத்தாளர் கட்டுரைக் கொடையினையும் நடைத்திறனையும் அறிந்துகொள்ள துணை நிற்பது.

தமிழ் உரைநடைக்குக் கவிதை வனப்பும் – இசையும் சேர்த்து, சொல்லாக்கங்களையும் தொடராக்கங்களையும் செய்ததுடன், புதுப்புது இலக்கிய வடிவங்களையும் ஈந்த அண்ணா, தமிழின் துறைதோறும் கொடை நல்கிய இலக்கிய மொழிக்கொடை வள்ளலாகத் திகழ்கிறார். அரசியல் உலகைப் போன்று இலக்கிய உலகும் இவரைப் பேரறிஞர் அண்ணா எனப் புகழ்ந்து பெருமை பெறுகிறது.

வாழ்க தமிழ்!



கலைஞரின் எழுத்துகளில் இலக்கியம்

இரா.குமார்

இலக்கியத்தின் எல்லா வடிவங்களையும் வார்த்தெடுத்துத் தமிழ்ச் சமுதாயத்துக்கு அளித்தவர் கலைஞர். இதழியல், சிறுகதை, புதினம், கவிதை, தன்வரலாறு, நாடகம், திரைப்படம், சொற்பொழிவு என எல்லா வடிவங்களிலும் எல்லா தளங்களிலும் விரிந்து கிடக்கிறது, யாவரினும் விஞ்சி நிற்கிறது கலைஞரின் தமிழ். அதனால்தான் அவர் முத்தமிழ் அறிஞர்.

அழகு தமிழ், அடுக்குமொழிக்குச் சொந்தக்காரர் கலைஞர். "ராஜாவைப் பார்க்க மதுரைக்குச் சென்றேன். ராஜா இல்லை. ராஜாவின் தம்பிதான் இருந்தார்" என்றுதான் நாம் சொல்வோம். இதையே கலைஞர் சொன்னால், அழகு தமிழ் நம் நெஞ்சை அள்ளும்; ஆர்ப்பரித்து நம் சிந்தையை அவர் பால் இழுத்துச் செல்லும். ஆம்; கலைஞர் எப்படிச் சொல்வார் தெரியுமா?

"மன்னரைக் காண மதுரைக்குச் சென்றேன்.

மன்னவர் இல்லை. சின்னவர் இருந்தார்"

என்று அழகு தமிழ் அடுக்குமொழியில் சொல்வார். கேட்டாரைப் பிணிக்கும் தகையவாய் இருக்கும் கலைஞரின் எழுத்தும் பேச்சும்.

மொழியின் அழகைக் காட்டி, கருத்தை நோக்கி மக்களை ஈர்த்தவர் அண்ணா. அவருடைய எழுத்து நடையும் பேச்சு நடையும் மக்களைக் கவர்ந்து இழுத்தது. அதுவே திராவிடர் இயக்க இலக்கிய அடையாளமாகவும் ஆனது. அதற்கு, கலைஞரின் எழுத்து நடையும் பேச்சு நடையும் செழுமை சேர்த்தன.

கலைஞரின் சிந்தனையும் திராவிட இயக்கத்தின் கொள்கைகளும் பாமர மக்களையும் சென்றடைந்தது என்றால், அதற்கு முக்கியமான காரணம் அவருடைய எழுத்து நடையும் பேச்சு நடையும்தான். தன் அழகு தமிழ், அடுக்குமொழியால் மக்களைத் தன்பால் ஈர்த்தார் கலைஞர்.

பகுத்தறிவைப் பரப்புவது, மூடநம்பிக்கையை ஒழிப்பது, சாதி மறுத்தல், ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ சமூகத்தை உருவாக்குவது, மத மோசடியைத் தோலுரிப்பது, கைம்பெண் மறுமணத்தை ஊக்குவிப்பது, புரோகித மறுப்பை, சாதி மறுப்புத் திருமணங்களை ஊக்குவிப்பது போன்ற சமூக மாற்றச் சிந்தனைகளை தன் படைப்புகள் மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தார் கலைஞர்.

தமிழுணர்வை வளர்ப்பது, பழந்தமிழ் இலக்கியத்தின் மீது ஆர்வத்தை ஏற்படுத்துவது, தமிழ்ப் பண்பாட்டை மீட்பது, ஆரியப் பண்பாட்டை அகற்றுவது ஆகியவையே கலைஞருடைய எழுத்துகளின் மைய இழைகளாகத் திகழ்கின்றன. மக்களை முற்போக்கு உலகு நோக்கி அழைத்துச் செல்வதை நோக்கமாகக் கொண்டிருந்தன.

தமிழை ருசித்து ருசித்துப் பருகியவர் கலைஞர். அண்ணா பிறந்தநாளையொட்டி, 1975ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள், சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற கவியரங்கத்துக்குத் தலைமை வகித்தார் கலைஞர். அப்போது, தமிழைப் போற்றி அவர் எழுதிய கவிதை...

“தமிழே! தேனே! தங்கக்கனியே!
அமிழ்தே! அன்பே! அழகுக்கலையே!
எழிலே! அறிவே! எண்ணச்சுடரே!
மொழியே! புகழே! பொன்னின் மணியே!
திருவே! உருவே! திங்கட்குளிரே!
தருவே! நிழலே! நிழல்தரும் சுகமே!
தாயே”

என்று உருகி உருகி தமிழைப் போற்றுகிறார் கலைஞர்.

பழந்தமிழ் இலக்கியங்கள் மீது மக்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தவும் தமிழ்ப் பண்பாட்டை மீட்கவும் கலைஞர் உருவாக்கிய படைப்புகளுள் முக்கியமானவை, ‘குறளோவியம், சங்கத் தமிழ், தொல்காப்பிய பூங்கா’ ஆகியவை.

பழைய இலக்கியங்கள் மீது தானும் சமுதாயமும் ஆர்வம் காட்டக் கலைஞரின் எழுத்துகளே காரணம் என்று எழுத்தாளர் ஜெயகாந்தன் ஒருமுறை கூறினார். “உங்களை போன்றவர்கள் இடையறாது வலியுறுத்தியதால்தான் நாங்கள் திருக்குறள் படிக்கிறோம். பழந்தமிழ்ப் பண்பாடுகளில் தீவிரமாக ஈடுபாடும் ஆராய்ச்சியும் கொண்டவர்களாக இருக்கிறோம். நீங்கள் எழுதிய திரைப்பட வசனங்கள் பலவும் எனக்கு மனப்பாடம்” என்று கலைஞரிடம் ஜெயகாந்தன் நேரில் கூறினார்.

திருக்குறளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்காகக் குறளோவியம் எழுதினார் கலைஞர். குறளோவியம் பற்றிக் குறிப்பிடுகையில், “நிகழ்ச்சிகளைக் காட்சியாக்கி நிழல் தரும் குளிர் தருக்கள் அடர்ந்த நீரோடைத் தமிழிலும், நெஞ்சில் கனலேற்றும் முழவோசைத் தமிழிலும், நீள் விழியில் நதி தோன்றத் தூண்டும் உருக்கமிகு உணர்ச்சித் தமிழிலும் குறட்பாக்களை உங்கள் முன்னால் உலவவிட்டிருக்கிறேன்’’ என்று கூறியுள்ளார் கலைஞர்.

‘புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து’

என்ற குறளுக்குத்தான் முதலில் சொல்லோவியம் தீட்டினார் கலைஞர். ‘தன்னைக் காத்த தலைவன், தனக்காகக் கண்ணீர் சிந்தும் அளவுக்கு ஏற்படுகிற களச்சாவினை வீரர்கள், யாசித்தாவது பெறவேண்டும்’ என்பதே இந்தக் குறளின் பொருள். இதற்குக் கலைஞர் சொன்ன விளக்கம் நம் நெஞ்சைத் தொடுகிறது. ‘‘களம்பட்டுத் தியாகியாக நான் மாண்டுக் கிடக்க... என் உடல்மீது என் தலைவர் அண்ணா, கண்ணீர் சிந்தும் பேறு பெறவேண்டும் என்ற அவா மிகுதியால் எழுதப்பட்ட முதல் குறளோவியம் இது. ஆனால் நான் நினைத்தற்கு மாறாக நடந்துவிட்டதே! என் அன்புத் தலைவர் எனக்கு முன் மறைந்துவிட்டாரே!’’ என்று தன் வருத்தத்தைப் பதிவு செய்கிறார் கலைஞர்.

சில திருக்குறள்களுக்கு கவிதை வடிவில் விளக்கம் அளித்துள்ளார் கலைஞர்.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்

என்ற குறளுக்கு, அழகு தமிழ்க் கவிதையில் கலைஞர் கொடுத்துள்ள விளக்கம் இதோ...

"இன்னா செய்யாமை இஃதுமோர் ஆமை ஆனால் நல்லாமை! இதனைக் கல்லாமை பெரிய தீமை

கன்னமொன்றில் அடித்திட்டால்

இன்னுமொன்றைக் காட்டென்றார் ஏசு"

இப்படி வள்ளுவன் கருத்தை ஏசு பிரான் சொல்லியிருப்பதையும் தன் விளக்கத்தில் பதிவு செய்கிறார் கலைஞர்.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்

எழுமையும் ஏமாப் புடைத்து" என்ற குறளை

"நடக்கத்தான் கால் என்போம் – உதைக்க அல்ல;

மடக்கத்தான் கத்தியென்றால் தேவையில்லை – பழம் அறுக்கத்தான் கத்தி வேண்டும் உயிர் பறிக்க அல்ல

வழக்கத்து வாய் வீரம் போலி வீரம் ஆமைபோல ஐம்பொறியும் அடக்க வேண்டும்;

அதற்காக

ஊமை போல் குருடு போல் செவிடு போல்

ஊர் நடுவில் திரிதல் நன்றா?

என்று தனக்கே உரிய பாணியில் கவிதையாக வடித்துப் படிப்போர்க்கு ஆர்வத்தை ஏற்படுத்துகிறார் கலைஞர்.

சங்க இலக்கியங்கள் மீது இளைய தலைமுறைக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில், சில சங்க இலக்கியப் பாடல்களை, எளிமைப்படுத்தி அவருடைய அழகு தமிழில் கவிதைகளாக வடித்துள்ளார் கலைஞர். அவற்றுள் முக்கியமான ஒன்று, புறநானூற்றில் வீரத்தாய் பற்றி, காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் என்னும் பெண்பால் புலவரின் பாடலை எளிமைப்படுத்தி, கலைஞர் எழுதிய கவிதை.

குடிசைதான் ஓர் புறத்தில்

வரிசையாய் அமைந்திருக்கும்

கூரிய வேல், வாள்

வெம்பகை முடிப்பதற்கும்

வையத்தைப் பிடிப்பதற்கும்

வடித்து வைத்த படைக்கலம்போல்

மின்னும் மிளிரும்....

இப்படித் தொடங்கிச் செல்லும் இக்கவிதையில், ஓடி வந்த சிறுவன் ஒருவன், உன் மகன் போர்க்களத்தில் இறந்தான் என்று சொல்கிறான். அதைக் கேட்டு, ஒருகனம் ஒடிந்து நிமிர்ந்தாள் அக்கிழவி என்று சொல்கிறார் கலைஞர். மகன் இறந்தான் என்ற தகவல் கேட்டதும் சோகத்தில் ஒடிகிறாள் கிழவி, நாட்டுக்காக மகன் உயிர்த் தியாகம் செய்தான் என நினைத்ததும் அடுத்த கனம் அவள் கம்பீரமாக நிமிர்கிறாள். இதை, சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் என்ற உத்தியில், "ஒருகனம் ஒடிந்து நிமிர்ந்தாள்" என்று மூன்றே சொற்களில் சொல்கிறார் கலைஞர்.

'உன் மகன், முதுகில் ஈட்டி பாய்ந்து இறந்துகிடக்கிறான்' என்று அவன் சொன்னவுடன் உடனே... போர்க்களத்துக்குப் புறப்படுகிறாள் அந்த வீரத் தாய். அங்கு, ஈட்டிக்கு மார்பு காட்டி மகன் இறந்துகிடப்பதைக் கண்டு இதயம் குளிர்கிறாள். இதை,

'எதைக் கண்டாலும் இனிக் கவலை இல்லை...

என் மகன் வீரனாய் இறந்தான் என்றாள்!

அறுத்தெறிய இருந்தேன்...

அவன் குடித்த மார்பை அடடா!

கருத்தெரியப் பொய் சொன்ன கயவன் எங்கே?

வாள் இங்கே... அவன் நாக்கெங்கே?'

என்று எழுதி, தமிழர்தம் வீரத்தை, புறநானூற்றுப் பாடலின் சிறப்பை இளைய தலைமுறைக்கு அறிமுகப்படுத்துகிறார் கலைஞர்.

கலைஞர் தன் கவிதைகளில் வார்த்தைகளை வைத்து விளையாடுவார். கலைஞர் தலைமையில் கவியரங்கம். தலைப்பு "கணக்கு". கலைஞர் வாசித்த தலைமைக் கவிதையின் ஒரு பகுதி இதோ...

கணக்குகள் பலவிதம்

கணக்குக் கேட்பவர்கள் பலவிதம்

பாட்டாளி வியர்வையிலே

முதலாளி பார்ப்பதுதான் பணக் கணக்கு

கூட்டாளி தன் அன்புக்குக்

கூலியொன்று கேட்பதுதான் பதவிக் கணக்கு

மந்தையிலே ஆட்டுக் கணக்கு மாட்டுக் கணக்கு

மொந்தையிலே மட்டும் போடாதே கணக்கு

இருபதும் பதினெட்டும் கூட்டிச் சொல்லல் மனக்கணக்கு

இருபது பதினெட்டைக் கூட்டிச் செல்லல் காதல் கணக்கு
இரண்டுக்கு மேல் எப்போதும் வேண்டாம்
குடும்பக் கட்டுப்பாடுக் கணக்கு இதில்
குசேலனுடன் போட்டியிடல் கொடுமையின் கணக்கு
மான் போட்டக் கணக்குத் தப்பென்று
வீழ்த்திட்டது வேங்கை
ஏன் போட்டாய் தப்புக் கணக்கென்று
வேங்கையினை வீழ்த்திட்டான் வேடன்
இதுதான் உலகு.

கலைஞரின் இன்னொரு கவிதையில் காதலனும் காதலியும் பேசிக்கொள்கின்றனர். அதில் டெல்டா பகுதியில் உள்ள ஆறுகளின் பெயர்களை மிக லாவகமாக இடம் பெறச் செய்துள்ளார் கலைஞர். அந்தக் கவிதையின் ஒரு பகுதி இதோ...

"குடமுருட்டி காவிரிப் பெண் விளையாடும் காட்சி கண்டு காதல்

கொள்ளிடம் இதுதான் என்று வீரசோழனும் வந்தான் ஓடம் போக்கி....

.....
.....
.....அவள்,

'மண்ணியார் வருகின்றார் மறைந்திடுக அத்தான்' என்றாள்.

வரட்டுமே, அவர் என்ன நம் காதலுக்குக் கல்லணையா

"அவர் நம் காதலை தடுக்க வெண்ணார், உறவை வெட்டார்" என்றான்

இந்த சில வரிகளிலேயே ஏழு ஆறுகளின் பெயர்களைக் குறிப்பிடுகிறார் கலைஞர்.

கலைஞரின் கவிதைகள், உணர்ச்சிச் செறிவும் கருத்தாழமும் நிறைந்தவை. பின் வரும் கவிதையைப் படியுங்கள்...

'பிறையொன்று பொறுத்திருந்து நிலவாகும்

பொறைகொண்டார் பொறுத்திருந்து நிலமாள்வார்

இரையொன்று வருமட்டும் காத்திருக்கும் கொக்கு

அதனைப் பொறையென்று சொல்லாதீர்
தரைமீது அப்பறவை கற்ற சூழ்ச்சி
கண் அடக்கம் இமைக்கதவில்
'நாவடக்கம் வாய்ச்சிறையில்
மூச்சடக்கம் காற்றினிலே
மெய் அடக்கம் கல்லறையில் – நல்ல
மன அடக்கம் அறிவொளியில்.
காற்றின் பெருக்கல் புயலாகும்
நாற்றின் பெருக்கல் பயிராகும் – இனிய
சாற்றின் பெருக்கல் சுவையாகும்
ஆற்றின் பெருக்கல் புனலாகும்.

இப்படித் தன் கவிதைகளால் நம் நெஞ்சைக் கொள்ளை கொள்வதோடு, நம் சிந்தைக்கு விருந்தும் தெளிவும் அளிக்கிறார் கலைஞர்.

அண்ணா மறைந்தபோது கவிதாஞ்சலி செலுத்தினார் கலைஞர். அதை அவர் பேனாவில் மையிட்டு எழுதவில்லை; தன் கண்ணீரை விட்டு எழுதியுள்ளார்.

உன் கண்ணொளியின் கதகதப்பில் வளர்ந்தோமே?

எம் கண்ணெல்லாம் குளமாக ஏன் மாற்றி விட்டாய்

நிழல் நீதான் என்றிருந்தோமே – நீ, கடல்

நிலத்துக்குள் நிழல் தேடப் போய்விட்டாயே நியாயந்தானா

கண் மூடிக்கொண்டு நீ சிந்திக்கும் பேரழகைப் பார்த்திருக்கிறேன் – இன்று

மண் மூடிக்கொண்டுன்னை பார்க்கவொட்டாமல் தடுப்பதென்ன கொடுமை

கவிதாஞ்சலியின் ஒவ்வொரு வரியும் இன்று வாசித்தாலும் நம் கண்களைக் குளமாக்கும். அந்த அளவுக்கு உணர்ச்சியின் வெளிப்பாடாக அமைந்துள்ளன.

கலைஞர் எதை எழுதினாலும் எதைப் பேசினாலும் அதில் இலக்கியம் இருக்கும். அரசியல் பேசினால் அதிலும் இலக்கியம் இருக்கும். இலக்கியம் பேசினாலும் அதில் அரசியல் இருக்கும். இதுதான் கலைஞரின் சாதுரியம். இதுதான் கலைஞரின் தமிழாற்றல். இதுதான் கலைஞரின் நாவண்மை.

இயக்கங்கள் வளர்த்த தமிழ்



மு.அப்பணசாமி
ஆலோசகர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

நூறு பூக்கள் மலரட்டும்; நூறு சிந்தனைகள் மோதட்டும். ஒரு சமுதாயத்தின் ஏற்றத்தில் கருத்துப் பரிமாற்றங்களின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்ட மாவோவின் இந்த பொன்மொழியை எடுத்தாள்வதுண்டு. கடந்த 200 ஆண்டுகளில் தமிழ்ச் சமுதாயம் அடைந்துள்ள ஏற்றத்துக்கு பலவேறு கருத்துசார் இயக்கங்கள் தீவிரமாக இயங்கியமை முக்கிய காரணம் ஆகும்.

தமிழ் மறுமலர்ச்சி இயக்கம்

14ஆம் நூற்றாண்டில் தமிழ் மறுமலர்ச்சி இயக்கம் தொடங்கியதாக எஸ்.வையாபுரிப் பிள்ளை கோடிட்டுக் காட்டுவார். ஆயினும் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் ஒரு மறுமலர்ச்சி இயக்கம் ஏற்றம் பெறத் தொடங்கியது. காலனிய ஆட்சி அதிகாரிகளுக்குத் தமிழ்க் கற்றுத்தரும் முகமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகச் சென்னையில் கோட்டை கல்விச் சங்கம் அமைக்கப்பட்டது. இக்கல்விச் சங்கத்தை உருவாக்கிய எல்லீசு அவர்கள் [Francis Whyte Ellis (1777–1819)] தொடங்கி வைத்த தமிழ் ஆர்வமும், தென்னிந்திய மொழிகள் ஒரு குடும்பம் என்ற கருத்தாக்கவும்; கால்டுவெல் [Robert Caldwell (1814 -1891)] அவர்களின் திராவிட மொழிகள் ஒப்பிலக்கண நூலும் இதே காலகட்டத்தில் தமிழ் மொழியின் தொன்மையை வெளிப்படுத்தி மறுமலர்ச்சி இயக்கத்திற்குப் புத்துயிர் ஊட்டியது.

தமிழின் பழம்பெருமை உணர்வு மேலெழுந்தவுடன் ஆறுமுக நாவலர் (1822–1879), கொன்றை மாநகரம் சண்முகச்சுந்தரம் முதலியார், சி.வை.

தாமோதரம் பிள்ளை (1832–1901), யாழ்பாணத்து சுவாமிநாத பண்டிதர், தமிழ்த்தாத்தா உ.வே.சா (1855–1942) முதல் எஸ்.வையாபுரிப் பிள்ளை (1891–1956) வரை எண்ணற்ற நவீன நூல் பதிப்பாசிரியர்கள் தமிழ் இலக்கண – இலக்கிய நூல்கள் அச்சு வாகனமேற்றி, மீட்டுருவாக்கம் செய்து, அவற்றைப் படித்த வர்க்கங்கள் பயிலவும் புத்தார்வம் பிறக்கவும் உழைத்தனர்.

மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார் (1815–1876) போன்ற மேதைகள் வழிநின்று உருவான தமிழ்ப் புலமையாளர்களும் உ.வே.சா. முதலானவர்கள் கடினமாகத் தேடிக் கண்டுபிடித்து மீட்டுருவாக்கம் செய்து பதிப்பித்த பண்டைய தமிழ் நூல்கள், அதாவது சங்க இலக்கியங்கள், இரட்டைக் காப்பியங்கள் தேங்கிக்கிடந்த தமிழ் இலக்கிய இலக்கணத் தேட்டத்தில் மறுமலர்ச்சி விழிப்புணர்வை ஏற்படுத்தின. அன்றைய இளைஞர்கள் தமிழின் பண்டைய இலக்கணங்களையும் இலக்கியங்களையும் அவற்றின் உரைகளையும் கற்றனர். நவீன தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தின் அடித்தளமாக இச்செயல்பாடுகள் அமைந்தன எனலாம்.

தமிழ் மறுமலர்ச்சி இயக்கம் இக்காலத்தில் தலித் இயக்கம் என்று அழைக்கப்படும் ஒடுக்கப்பட்டோர் இயக்கம், பார்ப்பனரல்லாதார் இயக்கம், தேசிய இயக்கம், பொதுவுடைமை இயக்கம் ஆகிய நான்கு பெரு நீரோட்டங்களைக் கொண்டது. இந்த நீரோட்டங்கள் கலந்தும் பிரிந்தும் ஓடின. ஒடுக்கப்பட்டோர் – பார்ப்பனரல்லாதார் மக்கள் தொகுதியின் முதல் முன்முயற்சி தனித் தமிழ் இயக்கமும் தமிழிசை இயக்கமும்.

தனித் தமிழ் இயக்கமும் தமிழிசை இயக்கமும்

காலம் காலமாக பிறப்பின் அடிப்படையில் சமூகத்தின் கீழ் மட்டத்தில் அழுத்தப்பட்ட தமிழ் சமுதாயத்தினர் ஆங்கிலக் கல்வியின் பயனாகக் கல்வி கற்று சமுதாயத்தில் முன்னேற விரும்பினர். தமிழ் மீட்டுருவாக்கமும் மடங்களும் உருவாக்கிய தமிழ் உணர்வும் இணைந்து கொண்டு புதிய சக்தியாக ஏற்றம் பெற்று தனித் தமிழ் இயக்கமாகவும் தமிழ் இசை இயக்கமாகவும் வடிவம் பெற்றது.

பரிதிமாற்கலைஞர் (1870–1903), மறைமலை அடிகள் (1876–1950) என தொடங்கி தேவநேயப் பாவாணர் (1902–1981), இலக்குவனார் (1910–1973), பெருஞ்சித்திரனார் (1933–1995) வரை தனித் தமிழ் இயக்கம் பல்வேறு சிந்தனையோட்டங்களினூடாக தொடர்கிறது.

தலித் இயக்கம்

ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை இயக்கமே இக்காலத்தில் தலித் இயக்கம் என அழைக்கப்படுகிறது. இந்த இயக்கம் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தோன்றியது. தாத்தா ரெட்டமலை சீனிவாசன் (1859–1945), பண்டிதர் அயோத்திதாசர் (1845–1914), எம்.சி.ராஜா (1883–1943), ஜி.அப்பாத்துரை (1890–1961) முதலான முன்னோடிகள் தமிழில் இதழியல் எழுத்துகளைத் தொடங்கி வைத்தனர். பறையன், உதயசூரியன், திராவிடப் பாண்டியன், தமிழன் முதலான பல இதழ்களை நடத்தினர்.

பண்டிதர் அயோத்திதாசரும், பேராசிரியர் லட்சுமி நரசும் (1860–1934), சிந்தனை சிற்பி சிங்காரவேலரும் (1860–1946) பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் ஊடாக நவீன தமிழ்ச் சிந்தனை மரபில் சுயமரியாதை, பகுத்தறிவு கருத்தாக்கங்களைத் தோற்றுவித்தனர்.

பெரியாருக்கு முன்னோடியான அயோத்திதாசர் தமிழன் எனும் இதழ் நடத்தினார். தொல் தமிழரின் அவைதிக மரபை முன்னெடுத்த அயோத்திதாசனார் ஒடுக்கப்பட்ட தலித் மக்களுக்கான குரலை எழுப்பினார்.

அயோத்திதாசர் தொடங்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுக்கும் படைப்பாளிகள் மரபு நம்மிடம் இன்று வரை தொடர்கிறது.

அழிந்துபோன தொன்மை இலக்கியங்கள் மீட்டுருவாக்கம், வடமொழி கலந்த தமிழ் மொழி ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு தன்னெழில் பெறுதல், மக்கள் மொழியில் படைப்புகள், ஒடுக்கப்பட்ட அனைத்து பிரிவினர்களின் குரல்களில் இன்று படைப்புகளாக முகிழ்த்துள்ளதில் கடந்த இரு நூற்றாண்டுகளில் எழுச்சி பெற்ற மறுமலர்ச்சி, முற்போக்கு இலக்கியங்களுக்குப் பெரும் பங்களிப்பு உள்ளது.

திராவிட இயக்கம்

இதே காலகட்டத்தில் காலனிய ஆட்சியின் உயர் பதவிகள், பொறுப்புகளை பகிர்வதில் ஏற்பட்ட பாகுபாட்டின் காரணமாகப் புதிய சமூக ஏற்றத்தாழ்வுகள் உருவானது. காலனிய ஆட்சி மூலமாக ஆங்கிலக் கல்வியும் தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தின் காரணமாகத் தமிழ் மொழி உணர்வும்

கொண்ட இவர்கள் திராவிட இயக்கத்துக்கு அடித்தளம் இட்டனர். தங்கள் கருத்துகளை மக்களிடம் பரப்பவும் ஆட்சியாளர்கள் கவனத்தை ஈர்க்கவும் இதழ்கள் நடத்தினர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் "Justice" எனும் ஆங்கில ஏடும், "திராவிடன்" எனும் தமிழ் ஏடும் "ஆந்திரப் பிரகாசிகா" எனும் தெலுங்கு ஏடும் தொடங்கப் பெற்றன. திராவிடன் இதழுக்கு 1937 வாக்கில் தந்தை பெரியார் ஆசிரியராகப் பெறுப்பேற்றார்.

தமிழில் வெளிவந்த முதல் மூன்று நாளிதழ்களில், "திராவிடன்" நாளிதழும் ஒன்றாகும். "படித்திருந்த பிராமணரல்லாதார் சிலர், தாங்கள் ஏன் தாழ்த்தப்பட்டுக்கிடக்கின்றோம் என்று யோசனை செய்து பார்த்ததில், இப் பிராமணப் பத்திரிகைகளும், கட்டுப்பாடான பிராமண சூழ்ச்சிகளுமே இதற்குக் காரணம் என்று கண்டுபிடித்து, தாங்களும் மற்றவர்களைப் போல முன்னேறுவதற்குத் தங்களுக்கும் பிரச்சாரத்திற்கு ஒரு பத்திரிகை வேண்டும் என்று கருதி "திராவிடன்" பத்திரிகையை ஏற்படுத்தினார்கள்" என்ற தந்தை பெரியார் கூற்று மிகவும் பொருத்தமானது ஆகும்.

தொடர்ந்து பெரியார் தாமே இதழ்கள் தொடங்கினார். குடிஅரசு, புரட்சி, பகுத்தறிவு, விடுதலை, உண்மை ஆகிய தமிழ் இதழ்களையும் Revolt, The Modern Rationalist என்னும் ஆங்கில இதழ்களையும் தொடங்கினார். தந்தை பெரியார், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், ப.ஜீவானந்தம் உள்ளிட்ட முன்னோடிகள் இந்த இதழ்களில் தீவிரமாக இயங்கினர். கார்ல் மார்க்ஸ், பிரடரிக் ஏங்கல்ஸ் எழுதிய கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை, பொதுவுடைமைக் கோட்பாடுகள், லெனின் எழுதிய கட்டுரைகள் தொகுப்பூலான மதமும் லெனினும் முதலான புரட்சி இலக்கியங்கள், பகத் சிங் எழுதிய நான்நாத்திகம் ஏன், இந்தியாவிலேயே முதல் முறையாக குடியரசு பத்திரிகையில் மொழிபெயர்க்கப்பட்டது. லோகாதயவாதம் (பொருள் முதல் வாதம்) குறித்து பெரியார் சிறு பிரசுரம் எழுதினார். அறிவியல் சிந்தனைகள் அறிமுகம் ஆயின. பண்டைய அறிவியக்க சிந்தனையாளர்கள் பிளாட்டோ, சாக்ரடீஸ், ஐரோப்பிய மறுமலர்ச்சி சிந்தனையாளர்களான ரூஸோ, வால்ட்டேர் சிந்தனையோட்டங்கள் படைப்புகளாக வெளியாயின.

அரசியல் சமத்துவம், சமூக நீதி கோரிக்கைகளுக்காக கட்டுரைகளும் மனுக்களுமாக வெளியான திராவிட இயக்க எழுத்துகள் இயக்கம் பரவப் பரவ அனைத்து வகை படைப்புகளிலும் ஈடுபட்டு பிரவாகமாகப் பெருக்கெடுத்துப் பாய்ந்தது.

கவிதை, நாவல், சிறுகதை, நாடகம், மொழியாக்கம், திரைத்துறை என்று அனைத்து வடிவங்களையும் கையில் எடுத்து நூற்றாண்டு காலமாக தமிழ் சமுதாயத்தின் ஆழ் மனத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது திராவிட இயக்க இலக்கியங்கள்.

இந்த மறுமலர்ச்சி இயக்கத்தின் செல்வாக்கில் பாரதிதாசன் எனும் பெருங்கவிஞர் உருவானார். மகாகவி பாரதி பட்டறையில் உருவாகி திராவிட இயக்க இலக்கியத்தின் லச்சினையாக பாரதிதாசன் உள்ளார்.

திராவிட இயக்க எழுச்சி காலத்தில் சுமார் 700 இதழ்கள் வெளிவந்துள்ளன. நாளிதழ்கள் பருவ இதழ்களாக வெளிவந்த இவற்றில் ஆயிரத்துக்கும் அதிகமான படைப்பாளிகள் உருவாயினர். தந்தை பெரியார், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், அறிஞர் அண்ணா, உவமைக் கவிஞர் சுரதா, குத்தூசி குருசாமி, கலைஞர் மு.கருணாநிதி, வாணிதாசன் போன்ற நூற்றுக்கும் அதிகமான முன்னோடி படைப்பாளிகளைப் பட்டியல் இடலாம்.

இந்த திராவிட இயக்கத்தின் அடித்தளத்தின் மீதே இன்றைய தமிழ்ச் சமுதாயத்தின் அரசியல் சமூக பொருளாதாரக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

பொதுவுடமை இயக்கம்

மார்க்ஸ் – ஏங்கல்ஸ் எழுதிய கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பா முழுவதும் பெரும் செல்வாக்கை உருவாக்கியது. அரசியல் சமூக பொருளாதார சமத்துவத்துக்காகவும் மனிதனை மனிதன் எந்த வகையிலும் அடிமைப்படுத்தாத, சுரண்டப்படாத ஒரு பொன்னுலகைப் படைக்கவும் இவர்கள் உருவாக்கிய கருத்துகள் உலக மக்களிடையே நம்பிக்கை ஏற்படுத்தின.

குறிப்பாக, மார்க்சியக் கொள்கைகள் ரஷ்ய மண்ணில் வேரூன்றி சோவியத் புரட்சியாக வெடித்து மாமனிதன் லெனின் தலைமையில் ஆட்சி அமைந்தது. அங்கு லெனின்

அமல்படுத்திய புரட்சிகரக் கொள்கைகள் உலகம் முழுவதும் அடிமைப்பட்டும் சுரண்டலுக்கும் சமூக இழிவுகளுக்கும் உள்ளாகியும் உழன்ற பாமர மக்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக ஒளிர்ந்தன.

மார்க்சிய கொள்கைகள்தான் உழைப்பாளி மனிதருக்கு கவுரவத்தை தேடித்தந்தது, 8 மணி நேர வேலை, வாரத்தில் ஒருநாள் ஓய்வு, போனஸ் போன்ற பணியிட உரிமைகள் மட்டுமின்றி ஆட்சியாளர்களிடம் இருந்து சமூக உரிமைகளையும் பெற்றுத் தந்து. குறிப்பாக நிலமற்ற கூலித்தொழிலாளர்களின் பாதுகாவலனாக ஆலைத்தொழிலாளிகளின் கேடயமாகவும் திகழ்கிறது.

இதன் தாக்கம் தமிழகத்திலும் எதிரொலித்தது. 'ஆஹா என்று எழுந்தது காண் யுகப்புரட்சி' என்று மகாகவி பாரதி அறைகூவி அழைத்தார். சோவியத் புரட்சி தந்தை பெரியாரின் கருத்துகளையும் பாதித்தது. தந்தை பெரியார், சிந்தனைச்சிற்பி சிங்காரவேலர், பொதுவுடமை ஆசான் ப.ஜீவானந்தம் ஆகியோர் பொதுவுடமைக் கருத்துகளைப் பரப்ப குடியரசு போன்ற இதழ்களைப் பயன்படுத்தினர். முன்னரே குறிப்பிட்டது போல கம்யூனிச பகுத்தறிவுக் கருத்துகளை துணிந்து எழுதினர்.

குறிப்பாக ரஷ்ய இலக்கியங்கள் புதிய இளைஞர்கள் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. சோவியத் இலக்கியங்கள் தமிழாக்கம் செய்யப்பட்டன. அதுமட்டுமல்ல, பாரதி வாயிலாக புதுயுகக் கவிஞர்கள் கீட்ஸ், வால்ட்ஸ் விட்மன் ஆகியோரின் எளிய கவிதை முறை பரவலாயிற்று. இது பின்னர் வானம்பாடி கவிதை இலக்கியமாக முகிழ்த்தது. பொதுவுடமை இலக்கியவாதிகள் மட்டுமல்லாது திராவிட இயக்கப் படைப்பாளிகளிடமும் பொதுவுடமைக் கருத்துகளும் இலக்கியங்களும் செல்வாக்கு செலுத்தின என்பது மிகையல்ல.

பாரதி, பாரதிதாசன், தமிழ்ஒளி, புதுமைப்பித்தன், கு.அழகிரிசாமி, கே.சி.எஸ். அருணாசலம், பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம், தொ.மு.சி.ரகுநாதன், கு.சின்னப்பபாரதி. கே.முத்தையா, பா.ஜெயப்பிரகாசம், பூமணி, ச.தமிழ்ச்செல்வன், கந்தர்வன் என்று பெரும் பட்டாளமே கடந்த ஒரு நூறாண்டுகாலத்தில் பொதுவுடமைப் படைப்பாளிகளாக வீறு கொண்டு எழுந்தது.

பாட்டாளி, சமரன், சரஸ்வதி, சாந்தி, ஜனசக்தி, தாமரை, தீக்கதிர், மனஓசை உள்ளிட்ட பல இதழ்கள் பொதுவுடமை இயக்கத்துக்கு பங்களிப்பு செய்துள்ளன; செய்கின்றன.

தேசிய இயக்கம்

அன்னிய ஆட்சியின் கீழ் மேலைநாடுகளில் உயர்கல்வி கற்ற மேட்டிமை வகுப்பினர் அங்கு பரவிய சீர்திருத்தக் கொள்கைகளின் பாலும் ஜனநாயகக் கருத்துகளின் பாலும் ஈர்க்கப்பட்டு இங்கும் சீர்திருத்தங்களை மேற்கொள்ள முயன்றனர். அன்னிய ஆட்சிக்கு எதிராக சுதேசி கொள்கையை இந்திய தேசியம் எனும் கட்டமைப்புக்குள் உருவாக்கினர். படிப்படியான தேச ஒற்றுமை, மதச்சார்பின்மை, சிறுபான்மை ஜனநாயகம், அகிம்சை போன்ற காந்திய நேருவிய கொள்கைகளைச் சார்ந்து இயங்கினர்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் மாபெரும் தேசியகவியாக உருவானார். சுப்பிரமணிய சிவா, பரலி சு.நெல்லையப்பர். திரு.வி.கலியாணசுந்தரம், கல்கி, நா.பார்த்தசாரதி என தேசிய பாரம்பரியம் உருவானது. தேசிய பேரியக்கத்தில் உருவானாலும் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரும் ம.பொ. சிவஞானம் அவர்களும் தமிழ், திராவிடம் சார்ந்த சிந்தனைகளில் ஈடுபட்டனர்.

+++

இனி தமிழ் மறுமலர்ச்சியில் பெரும் தாக்கம் செலுத்திய சில நூல்களையும் ஆளுமைகளையும் காண்போம்.

சங்க இலக்கியம்

தமிழ் வேரை மத வட்டங்களுக்குக் கொண்டு நிறுத்தியது சங்க இலக்கியம்தான். கடந்த நூற்றாண்டு முழுவதும் திராவிட, பொதுவுடைமை இயக்க ஆளுமைகள் சங்க இலக்கியத்தை வெகுசன தளத்தில் தமிழ் வேராக நிறுத்தினர். இன்றைக்குத் தமிழ் மரபின் மற்றொரு மைல்கல்லாக நிற்பது திருக்குறள்.

திருக்குறள்

திருக்குறளை வாசித்து புது விளக்கம் செய்யாத நவீன தமிழ்ச் சிந்தனையாளர்களே, தலைவர்களே இல்லை எனலாம். அயோத்திதாசரும் பெரியாரும் உரை வரைந்து புது விளக்கம் செய்துள்ளனர்.

+++

தமிழகத்தின் மாபெரும் தேசிய இயக்கத் தலைவரான வ.உ.சி. திருக்குறள் மீது மாறாப்பற்று கொண்டு ஆய்வில் ஈடுபட்டார். மணக்குடவர் உரையை முதல் முதலாகப் பதிப்பித்தார். தொல்காப்பியப் பதிப்புகளை ஆய்வு செய்து வெளியிட்டார். திருக்குறள், தொல்காப்பியப் பதிப்புகளில் இது முக்கியப் பணி ஆகும்.

திருக்குறள் அற இலக்கியத்தை சனாதன மத இலக்கியமாகக் கருதி சனாதன வாதிகள் கொண்டு சென்றனர். அவர்களிடம் இருந்து திருக்குறளை விடுவித்ததில் திராவிட இயக்கங்களுக்கு முக்கியப் பங்கு உண்டு. பரிமேலழகர் உரைக்கு மாற்றாக வ.உ.சிதம்பரனார் மணக்குடவர் உரையைப் பதிப்பித்தது தவிர திராவிட, முற்போக்கு இயக்கத்தவர்களும் உரை எழுதினர். பெரியார் தமிழ் அறிஞர்களைக் கொண்டு திருக்குறள் மாநாடு நடத்தினார். திருக்குறளார் என்று அழைக்கப்படும் திருக்குறள் வீ.முனுசாமி தன் வாழ்நாள் முழுவதும் பரப்புரை நிகழ்த்தினார். கலைஞர் மு.கருணாநிதி குறளமுதம், திருக்குறள் உரை நூல்களை எழுதினார்.

+++

அய்யா வைகுண்டார் (1809-1851)

தமிழகத்தின் தென்கோடியில் தோன்றிய முடிசூடும் பெருமாள் என இயற்பெயர்கொண்ட முத்துக்குட்டி சாமி (1809–1851) மிகக் குறுகிய காலமே வாழ்ந்தவர். அச்சுஅசலான ஒடுக்கப்பட்ட மக்கள் இயக்கத்தை தொடங்கி வைத்தவர். சமூக விடுதலைக்கான வழியாக அன்பு வழி என்கிற சமய வழியை உருவாக்கியவர். சாதி ஆதிக்கக் கொடுங்கோன்மைகளை வெளிப்படையாக எதிர்த்துக் கலகம் செய்தவர். ஒடுக்கப்பட்ட சாதிகளின் ஒற்றுமைக்கான முயற்சிகளைத் தொடங்கியவர். இவர் நேரடியாக நாராயண குருவின் முன்னோடியாக விளங்கினார்.

வள்ளலார் (1823-1874)

மெய்ப்பொருள் காணும் ஆன்மிக நெறியில் சாதி பாகுபாடுகளும் சமூக ஏற்றத்தாழ்வுகளும் நிகழ்வதற்கு மாறான சன்மார்க்க நெறியை இயக்கமாக்கியவர் வள்ளலார் என அழைக்கப்படும் ராமலிங்க அடிகள் ஆவார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆன்மிகப் புரட்சியாளர் இவர். தனது கருத்துகளை எளிய கவிதைகள் வடிவில் மக்களிடம் பரப்பினார். இவரது சன்மார்க்க நெறி இயக்கம் இன்று பல வடிவங்களில் இயங்குகிறது.

பெரியார் (1879-1973)

நவீன தமிழ்ச் சமுதாயத்தில் பெரும் சிந்தனை ஆளுமை தந்தை பெரியார். சுயமரியாதை பகுத்தறிவு இயக்கத்தையும் சாதி ஒழிப்பு இயக்கத்தையும் இக்கால சமுதாயத்தில் ஆழமாக ஊன்றியவர். பார்ப்பனரல்லாதார் மக்களின் விடுதலையை ஒட்டுமொத்த மனித குல விடுதலையாகச் சிந்தித்தவர். இந்தச் சிந்தனையை இயக்கம் ஆக்கியவர். இவர் தொடர்ச்சியாக இதழ்களை நடத்தினார்; எழுதினார். அரசியல் இயக்கத்தை நடத்தினார். இவரது சிந்தனைப் போக்கு நவீன தமிழ் சமுதாயத்தை உருப்படுத்தியது என்றால் மிகையல்ல.

ப. ஜீவானந்தம் (1907-1963)

பொதுவுடமை இயக்கத் தலைவர் ப.ஜீவானந்தம் அவர்கள் சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை அனைத்திலும் தோய்ந்து பொதுவுடமைக் கருத்துகளை மக்களிடம் பேசியவர். தமிழின் பெருங்கவிஞரான பாரதிதாசன் முதல் பல நவீன படைப்பாளிகளின் ஆக்கங்களில் பொதுவுடைமைக் கருத்துகள் இடம்பெற காரணம் ஆனவர்.

அண்ணா (1909-1969)

அறிஞர் அண்ணா நவீன தமிழ்ச் சமுதாயத்தை வடிவமைத்த மற்றொரு தலைவர்; சிந்தனையாளர். இவர் நாடகம், சிறுகதை என நவீன இலக்கிய வடிவங்களிலும் தலைசிறந்த படைப்புகளை வழங்கியுள்ளார். இவர் உருவாக்கிய மேடைத் தமிழ், தமிழ் உணர்வை உருவாக்குவதில் பெரும் பங்காற்றியது.

ம.பொ.சி. (1906-1995)

ம.பொ.சிவஞானம் அவர்கள் காங்கிரஸ் பேரியக்கத்துள் தேசிய உணர்வுடன் செயல்பட்டார். தமிழ், தமிழ்நாடு, அதன் எல்லைகள் இவற்றுக்காகத் தன் வாழ்நாளை முழுவதும் பாடுபட்டார். மக்கள் மனதில் மறைந்த சிலப்பதிகாரத்தை தனது பரப்புரைகள் மூலம் மக்கள் மத்தியில் கொண்டு சென்றார். திருக்குறளையும் மக்கள் மத்தியில் கொண்டு சேர்த்தார். வ.உ.சி.யின் தியாகம், கட்டபொம்மனின் வீரம், மகாகவி பாரதியின் தேசியம் ஆகியவைகளைப் பற்றி மக்களுக்கு விரிவாக எடுத்துக் காட்டியவர் ம.பொ.சி.



தமிழும் தலித் இலக்கியமும்

ஸ்டாலின் ராஜாங்கம்

தமிழிலக்கியத்தை புயலாகத் தாக்கி தென்றலென வருடிக் கொண்டிருக்கும் வகைமை தான் தலித் இலக்கியம். இந்திய சமூகம் சாதிய சமூகம். அது பல தளங்களிலும் தாக்கம் செலுத்தி வந்திருப்பதை போல கலை இலக்கிய தளங்களிலும் தாக்கம் செலுத்தி வந்திருக்கிறது. இந்நிலையில் அவர்ணர்கள் என்று சொல்லப்படுகிற எளிய மனிதர்களின் கலை இலக்கிய தளத்திலான எழுச்சியே தலித் இலக்கியம்.தலித் என்னும் பகுப்பில் தொடக்கத்தில் பல்வேறு தரப்பினரை உள்ளடக்கி பேசினாலும், நாளடைவிலான நடைமுறையில் பட்டியல் பிரிவில் அடங்கிய எஸ்சி/எஸ்டி வகுப்பினரை குறிப்பிடும் சொல்லாக மாறிப் போனது.
சாதி அமைப்பு தோன்றிய காலத்திலிருந்தே அதற்கு எதிரான எதிர்ப்பு [கலை இலக்கிய தளத்திலும்] தோன்றிவிட்டிருக்கிறது. ஆனால் சாதி அமைப்பு அதிகாரத்தோடு தொடர்புடையது என்பதனால் அதன் இருப்புக்கு சான்றுகள் கிடைப்பதைப் போல அதிகாரமற்றவர்களாக ஆக்கப்பட்ட எளிய மக்களின் சாதி எதிர்ப்புக்கு முறைப்படியான சான்றுகள் கிடைக்கவில்லை. எழுத்திலக்கியத்தில் இல்லாதிருப்பினும் வாய்மொழியாக அம்மக்களின் வாழ்வியல் அடையாளங்கள் ஓரளவு பராமரிக்கப்பட்டு வந்தன.எழுத்திலக்கியத்தில் இடம்பெற்ற அம்மக்களைப் பற்றிய பதிவுகள் 1] பொத்தாம் பொதுவாகவும் 2] எதிர்மறையாக/ இழிவாகவும் சித்தரிக்கப்பட்டு வந்திருப்பதைப் பார்க்கலாம்.
வள்ளுவர், அவ்வை ஆகியோரின் பிறப்பு கதைகளில் இம்மக்களின் தொடர்பு ஒருபுடை எச்சமாக தொக்கியிருப்பதை பார்க்கிறோம்.

சாதி பாராட்டுவது தவறானது என்னும் பொருளில் அமைந்த சித்தர் பாடல்களின் தொடர்ச்சியில் 19, 20ஆம் நூற்றாண்டுகளின் அச்சு பண்பாடு காரணமாக பிறந்த குஜிலி இலக்கியம் சாதி கண்டன பாடல்கள் சாதியை சாடின. பிறகு கிறித்தவ இலக்கியத்தில் இம்மக்கள் பதிவாயினர். நவீன அரசியல் விழிப்புணர்ச்சியை ஒட்டி ஆதிதிராவிடர் முன்னோடிகள்,திராவிட இயக்கத்தினர், காந்தியவாதிகள், இடதுசாரிகள் ஆகியோர் தத்தம் நோக்குகளில் சாதியை கண்டித்தும், இம்மக்களின் மேம்பாட்டை கருதியும் பிரச்சார நோக்கில் படைப்புகளை உருவாக்கினர். ஆனால் 1990களில் நவீன இலக்கிய பண்போடு தனி வகைமையாக தலித் இலக்கியம் உருவானது. மராட்டியத்திலும் கன்னடத்திலும் உருவாகியிருந்த தலித் இலக்கியம், ஈழத்திலும் தமிழகத்திலும் இடதுசாரி இலக்கியத்தில் உழைக்கும் வர்க்கமாக இடம்பெற்று வந்த போக்கு ஆகியவற்றின் தொடர்ச்சியில் 1990களில் ஏற்பட்ட பாபாசாகேப் அம்பேத்கர் நூற்றாண்டு எழுச்சியை ஒட்டி தலித் இலக்கியம் என்னும் வகைமை தமிழில் அழுத்தம் பெற்றது.

தலித் இலக்கியத்தின் அடிப்படை:

தலித் இலக்கியம் பற்றி பல்வேறு வரைவிலக்கணங்கள் சொல்லப்பட்டாலும், தலித்தாகிய ஒருவர் தன்னைப்பற்றி தானே எழுதுதல் அல்லது சொல்லுதல் என்பது இதன் அடிப்படை அம்சமாக வலியுறுத்தப்பட்டது. அம்மக்களைப் பற்றி அம்மக்களே எழுதுவது என்பதை பிறரை புறக்கணிப்பது என்று குறுக்கி புரிந்துக் கொள்ள வேண்டியதில்லை. அவரவர் வாழ்வை அவரவர் அனுபவத்தை அவரவர் மொழியில் – அவரவர் வலியிலிருந்து சொல்லுவது என்பதாக புரிந்து கொள்ள வேண்டும். தலித் இலக்கியம் என்னும் தனி வகைமை மொத்த இலக்கியத்தையும் செழுமைப்படுத்தியது என்பதோடு அதுவரை தமிழ் எழுத்திலக்கியத்திற்குள் கொணரப்படாத பெருவாரியான உழைக்கும் மக்களின் வாழ்வியல் கூறுகளை கொணர்ந்து சேர்த்தது. அவ்வாறு சேர்த்தது மூலம் சமூக பண்பாட்டு ரீதியான புதிய கேள்விகளையும் எழுப்பி விடை தேட தூண்டியது. இதன்மூலம் தமிழிலக்கிய பரப்பு இன்னும் விரிந்தது.

தமிழில் தலித் இலக்கியம் எழுத முற்படுகையில் ஒரேவேளையில் சமூகவியல் பண்பும் அழகியல் பண்பும் கோரப்பட்டது. அதாவது அரசியல் ரீதியாக தேவைப்படும் பிரச்சார பண்பும் நவீன இலக்கியம் வலியுறுத்தி வந்த இலக்கிய மதிப்பீடுகளும் ஒருங்கிணைந்தன. இதன் மூலம் தமிழில் அதுவரை இணையாதவை என்று கருதப்பட்டு வந்த பிரச்சார இலக்கிய மரபும் நவீன இலக்கியத்தின் அழகியல் பண்பும் சேர்ந்தியங்க முடியும் என்பது வெளிப்பட்டது.

தன் வரலாறு:

தலித் இலக்கிய வகைமையில் நாவல், சிறுகதை, கவிதை, நாடகம் போன்றவை படைக்கப்பட்டன. குறிப்பாக தமிழுக்கு "தன் வரலாறு" என்னும் இலக்கிய வகைமை கிடைத்ததை சொல்ல வேண்டும்.தமிழில் சுயசரிதைகள் இருக்கின்றன. அவை ஊரறிந்த சாதனையாளர்கள் எழுதுவதாகவே இருந்தன. மேலும் அதில் எழுதுபவர் நேரடியாக தன்னை முன்வைத்து எழுதுவார். ஆனால் "தலித் தன் வரலாறுகள்" சமூகத்தின் எளிய மனிதர் ஒருவரின் வாழ்வியல் அம்சங்களை பேசுவதாக இருந்தன. அது ஒரு தனி மனிதரின் வரலாறாக இல்லாமல் சமூகவியல் ஆவணமாக திகழ்ந்தன.தன்னை நேர் பாத்திரமாக இல்லாமல் படர்க்கை பாத்திரமாக வைத்து இலக்கிய அம்சத்தோடு எழுதப்பட்ட சரிதைகளாக அவை இருந்தன. மேலும் இந்த வகைமை உலக அளவில் ஒடுக்கப்பட்டோர் இலக்கியத்தின் வலிமையான வெளிப்பாடாக அமைந்திருந்தன. கறுப்பின வரலாற்றிலும், மராட்டிய கன்னட தலித் இலக்கியத்திலும் "தன் வரலாறு" சிறப்பான இடத்தைப் பிடித்திருந்தன. தமிழில் பாமா, ராஜ் கௌதமன், கே.ஏ.குணசேகரன் எழுதிய தன் வரலாற்று நாவல்கள் குறிப்பிடத்தக்கவை. ப.சிவகாமி, கே.டேனியல் ஆகியோரின் எழுத்துகள் இடதுசாரி எதார்த்தவாத மரபிலிருந்து தலித் வாழ்க்கையை எழுதி வந்தன.

கோட்பாடுகளும் மொழிபெயர்ப்புகளும்:

தலித் இலக்கிய வகைமை உருவான காலத்திலும், சற்று முன்பும் தமிழில் அறிமுகமாகி வந்த மேற்கத்திய வாசிப்புக் கோட்பாடுகளும் தலித் இலக்கியத்தைப் புரிந்து கொள்வதிலும் வளர்த்தெடுப்பதிலும்

பயன்பட்டன. குறிப்பாக இடதுசாரி அரசியலுக்கு அப்பாலான சிந்தனைகளை வாசிப்பதும், அதனை தமிழில் பொருத்துவதுமான முயற்சிகள் 1980களின் இறுதியிலிருந்து நடந்து வந்தன. அவற்றுள் பின்– நவீனத்துவம், விளிம்பு நிலைவாதம் போன்ற யோசனைகள் தலித் அடையாளத்திற்கான நியாயத்தைத் தந்தன. இதற்கான மொழிபெயர்ப்புகள் தத்துவம் சார்ந்தும், படைப்புகள் சார்ந்தும் தமிழில் அறிமுகப்படுத்தப்பட்டன. இதில் ரவிக்குமார், ராஜ் கௌதமன், அழகரசன் ஆகியோரின் பங்களிப்புகள் குறிப்பிடத்தக்கன.

தலித் விமர்சனவியல்:

தலித் இலக்கிய வருகையின் ஊடாக தமிழில் அழுத்தம் பெற்ற வகைகளில் ஒன்று தலித் விமர்சனவியல். தலித் இலக்கிய படைப்புகளுக்கு இணையான பங்களிப்பாக இதனைக் கூறலாம். "தலித் பார்வையில் ஒன்றை நோக்குவது" என்பது இந்த விமர்சனவியலின் அடிப்படை. அதுவரையிலான தமிழிலக்கிய மரபையும், சமகால சமூக அரசியல் பண்பாட்டு வெளிகளையும் புரிந்து கொள்வதற்கான பார்வையை இந்த விமர்சனங்கள் தந்தன. ராஜ், கௌதமன், ரவிக்குமார், அ.மார்க்ஸ் ஆகியோரின் விமர்சனங்களை குறிப்பிட்டு கூற முடியும். கட்டுடைத்தலும், கலக பார்வையும் இலக்கியத்தை அணுகிப் பார்ப்பதற்கான புதிய எடுகோள்களாயின.

படைப்பு, மொழிபெயர்ப்பு விமர்சனம் ஆகியவை வெளிவருவதற்கான பத்திரிகைகளும் இந்த காலக்கட்டத்தில் குறிப்பிட்டு சொல்ல வேண்டியன. நிறப்பிரிகை, மனுசங்கடா, கோடாங்கி (பிறகு புதிய கோடங்கி) தலித் முரசு, தலித் போன்ற இதழ்களில் தலித் இலக்கியத்தின் அவசியம், அவற்றை எவ்வாறு புரிந்து கொள்வது என்பதான விவாதங்கள் இடம்பெற்றன.

தலித் இலக்கியம் அழுத்தம் பெற்றதன் தொடர்பில் தமிழில் உருவான இரண்டு விழிப்புணர்வை இங்கு குறிப்பிட வேண்டும். ஒன்று தலித் இலக்கியத்திற்காக நடத்தப்பட்ட விவாதங்கள் பெண்கள், திருநங்கையர் போன்ற விளிம்பு நிலையினருக்கான தனித்துவமான அடையாளங்கள் உருவாவதற்கான வழியை எளிமையாக்கி தந்தன. அதாவது தலித் அடையாளம் ஏற்பு பெற்றதின் பின்னணியில் இந்த அடையாளங்களை புரிந்து கொள்வதில் முன்கூட்டிய அறிமுகம் தந்தன. இரண்டாவதாக மொழியை எவ்வாறு கையாளுவது என்ற புரிதல் உண்டானதை சொல்ல வேண்டும். மொழியில் ஏற்றப்பட்டிருந்த சாதிய, ஆணாதிக்க அர்த்தங்களை அகற்றி வாசிப்பதில் தலித் வாசிப்பு அழுத்தத்தை உண்டு செய்தது.

தலித் கலைகள்:

தலித் இலக்கிய போக்கிற்கு இணையாக தலித் கலைகள் – நுண்கலைகள் குறித்த அக்கறையும் உண்டானது. ஓவியர் சந்ருவின் ஓவியங்கள், கே.ஏ.குணசேகரனின் பாடல்கள், நாடகங்கள், தலித் சுப்பையா பாடல்கள் போன்றவை குறிப்பிடத்தக்கவை. தலித் கலை விழா என்னும் வடிவம் விளிம்பில் கிடந்த கருவிகளை மேடையேற்றியது. மதுரை தலித் ஆதார மையம் ஆண்டுக்கு ஒன்று என்று பத்தாண்டுகளுக்கு மேலாக தலித் கலை விழாக்களை நடத்தியது. கலைகளையும் கருவிகளாக்குவோம் என்ற முழக்கத்தின் கீழ் பறை இசை முக்கியத்துவம் பெற்றது. இவ்வாறு 1990கள் என்னும் பத்தாண்டுகளில் பல்வேறு வெளிப்பாடுகள் நடந்தன.

2000 த்திற்கு பிறகு:

தலித் இலக்கியத் தொடர்ச்சியில் அழகிய பெரியவன், என்.டி.ராஜ்குமார், ம.மதிவண்ணன், சுகிர்தராணி ஆகியோரின் படைப்புகள் தமிழில் கவனம் பெற்றன. ஆனால் 2000த்திற்குப் பிறகு புனைவுகள் குறைந்து புனைவல்லாத எழுத்துக்கள் அதிகரித்தன. குறிப்பாக தலித்துகளின் வரலாற்றை ஆவணங்கள் மற்றும் வழக்காறுகள் வழியாகத் தேடி எழுதும் முயற்சிகள் தலைத்தூக்க ஆரம்பித்தன. இதற்கு 1999ஆம் ஆண்டு ஞான. அலாய்சியஸ் முயற்சியில் வெளியான "அயோத்திதாசர் சிந்தனைகள்" நூல் தொகுப்புகள் தூண்டுகோலாய் அமைந்தன. அம்பேத்கருக்கும் பெரியாருக்கும் முன்னோடியாக சமூக நீதி கருத்துக்களை பேசியவர் என்கிற விதத்தில் அவரின் எழுத்துக்கள் மிகுந்த கவனத்தை பெற்றன. 1990களிலிருந்தே தலித்துகள் எழுத வந்திருக்கிறார்கள் என்கிற கருத்தை மாற்றியமைத்து அவரின் எழுத்து. 19ஆம் நூற்றாண்டின் முடிவிலிருந்து நவீன அரசியல் தளத்தில் அரசியலமைப்புகளை




கட்டியும் இதழ்களை தொடங்கியும் இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டும் தலித்துகள் செயலாற்றி வந்ததை அறிந்து கொள்ள அவர் எழுத்துக்கள் உதவின. அவர் 1910இல் எழுதியிருந்த "இந்திர தேச சரித்திரம்" என்கிற நூலே நவீன சூழலில் எழுதப்பட்ட முதல் சபால்டன் நூலாக கருதப்பட்டது.

அயோத்திதாசர் நூல் தொகுப்புகளுக்கு பிறகு இரா.பாவேந்தன் தொகுத்த ஆதிதிராவிடன் இதழ் தொகுப்பு, ஜெ.பாலசுப்பிரமணியம் எழுதிய "சூரியோதயம் முதல் உதயசூரியன் வரை – 1869 முதல் 1943 வரையிலான தலித் இதழ்கள்" என்கிற இரண்டு நூல்கள் தலித் வரலாற்றியலில் முக்கிய பங்காற்றின. தொடர்ந்து ஸ்டாலின் ராஜாங்கம், கோ.ரகுபதி, ம.மதிவண்ணன், கௌதம சன்னா ஆகியோரின் ஆய்வுகள் தலித் வரலாற்றியலை கட்டமைத்தன. இவை புனைவுகள் அல்ல என்றாலும், புனைவிற்கு மாற்றாக வரலாற்றை பதிலீடாக வைத்த முயற்சிகள் எனலாம். நவீன வாசிப்பு கோட்பாடுகள், கல்விப்புல வழக்காற்று யோசனை சார்ந்து அயோத்திதாசர் குறித்து டி.தருமராஜன் எழுதியவை புனைவின் சுவாரஸ்யத்தை கொண்டு அமைந்தன. வெளியான சில புனைவுகளும் தலித் வரலாற்றியலின் சாயல்களோடு வெளியாயின. அழகிய பெரியவன் எழுதிய "வல்லிசை" நாவலை இவ்வகையில் கூறலாம். ஜெயமோகனின் வெள்ளை யானை, விநாயக முருகனின் வலம் ஆகிய நாவல்களில் அயோத்திதாசர் ஒரு பாத்திரமாக இடம்பெற்றார்.

வெகுஜன ஊடகங்கள்:

பண்பாட்டு அர்த்தத்தில் சமூக நனவிலியில் கலக்கும் எந்த அடையாளமும் சமூகத்தில் வெளிப்படையாக மட்டுமல்லாமல் ஏதோவொரு விதத்தில் மறைமுகமாகவும் வெளிப்படும். இன்றைக்கு தமிழில் தலித் பாத்திங்களை – தலித் கதையாடல்களை வெகுஜன திரைப்படமாக ஆக்கும் போக்கு ஏற்பட்டுள்ளது. அவை வணிக வெற்றிக்கானதாகவும் ஆகியிருக்கிறது. பா.ரஞ்சித், மாரிசெல்வராஜ், கோபி நயினார் ஆகியோர் இயக்கிய படங்களை இவ்வகையில் கூறலாம். பா.ரஞ்சித் தலித் இலக்கிய வாசிப்பு தன்னுடைய கதையாடல் யோசனைக்கு அடித்தளமாக இருக்கிறது என்பதை கூறி வந்ததோடு தலித் இலக்கியத்திற்கென்று நீலம் என்கிற பெயரில் இதழையும் பதிப்பகத்தையும் நடத்தி வருகிறார். மாரிசெல்வராஜ் "தாமிரபரணியில் கொல்லப்படாதவர்கள்" என்கிற சிறுகதை தொகுப்பையும், "மறக்கவே நினைக்கிறேன்" என்கிற தன் அனுபவ நூலையும் எழுதியுள்ளார். "நத்தைகளைக் கொன்ற பீரங்கிகள்" என்கிற நூலை கோபி நயினார் எழுதி இருக்கிறார். இந்த வகையில் இன்றைய தலித் திரைப்பட ஆக்கத்தில் தலித் இலக்கியத்தின் தாக்கத்தை பார்க்க முடிகிறது.



இதேவேளையில் தலித் இலக்கியம் என்கிற வட்டத்திற்குள் உள்ளார்ந்த விவாதங்களும் நடந்து வந்திருக்கின்றன என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். தலித் இலக்கியம் என்கிற தனி வகைமை தலித்துகளுக்கான தனித்துவமான அனுபவம், தலித்துகளுக்கான இடம் என்கிற பொருளில் தோன்றினாலும் நாளடைவில் தனித்துவம் என்பதை தனித்து ஒதுங்கிக் கொள்ளுதல் என்பதாக புரிந்துக் கொண்டு ஒதுக்கி விடக்கூடிய அபாயம் இருப்பதாக படைப்பாளிகள் உணர்ந்தனர். ஒட்டுமொத்த தமிழ் படைப்புகளை குறித்து பேசும் போது 'தலித் படைப்பாளிகளாக' கருதப்பட்டோரை சேர்க்காமல் தலித் இலக்கியம் என்கிற தனி வகைமை வரும்போது மட்டும் அவர்களை குறிப்பிட்டுச் செல்லும் போக்கு இருப்பதாகக் கருதினர்.

"தலித் வாழ்பனுபவமும் தமிழ் வாழ்பனுபவத்தின் பகுதியே" என்கிற முறையில் தலித் இலக்கியத்தை தமிழ் இலக்கியத்தின் அங்கமாக கருதக்கூடிய போக்கு வர வேண்டி இருக்கிறது. எனவே இதில் சிக்கல் இருப்பதால் தலித் எழுத்தாளர் என்கிற அடையாளத்தை மறுக்கக் கூடிய போக்கும் இங்கு உருவாகி இருக்கிறது. எழுத்தாளர் இமையம் இத்தகைய விவாதத்தை மேற்கொண்டார். எழுத்தில் சாதியில்லை என்ற நிலைபாட்டை பூமணி, சே.தர்மன் ஆகியோரும் முன்னெடுத்திருக்கின்றனர். ஒருதளத்தில் ஒரு காலக்கட்டத்தில் தலித் இலக்கியம் என்னும் தனி வகைமைக்கான போராட்டமும், வேறொரு காலக்கட்டத்தில் அதை மறுக்கும் குரல்களும் எழுந்திருக்கின்றன. இவற்றை ஆரோக்கியமான போக்காகவும் பார்க்கலாம்.

எல்லோருடைய விருப்பமும் சாதியை கைவிட வேண்டும் என்பது தான்.

இந்த இரண்டு இடத்திலும் எதிர்தரப்பு எவ்வாறு அணுகுகிறது என்பதை வைத்தே 'தலித்' படைப்பாளிகளின் முடிவு அமைகிறது. தலித் இலக்கியம் என்பதிலிருக்கும் தலித் நீங்கி இலக்கியம் என்ற நிலை வர வேண்டும். ஆனால் அதற்கு இலக்கிய தளமோ, தலித்துகளோ மட்டும் பொறுப்பாக முடியாது. சமூகத்திற்கு பெரிய பொறுப்பு இருக்கிறது. இது சமூக மாற்றத்தோடு தொடர்புடையது. அத்தகைய மாற்றம் நிகழும் வரை இந்த வகைமை நீடிக்கலாம். அதேவேளையில் இங்கு வட்டாரம், இயக்கங்கள் என்கிற பிற அடையாளங்களில் இலக்கிய வகைமைகள் இருக்கவே செய்கின்றன. தலித் இலக்கியம் மீதான 'அடையாள அரசியல்' என்ற குற்றச்சாட்டுகள் மேற்கண்டவற்றின் மீதெல்லாம் இல்லை.

தலித் இலக்கியத்தை சாதி இலக்கியமாக பார்க்காமல் ஒரு இலக்கிய வகையாக பார்க்கிற பார்வை இங்கு வேண்டும். கடந்த ஐம்பதாண்டில் தமிழிலக்கிய வரலாற்றில் எழுந்த பெருந்திருப்பங்களுள் ஒன்று தலித் இலக்கியம். அது எழுதுகிற பெரும் கூட்டத்தையும், புதிய வாழ்வனுபவத்தையும் தமிழிலக்கியத்திற்குள் கொணர்ந்து சேர்த்தது. பல காலம் எழுப்பப்படாத கேள்விகளையும், பரிசீலனைகளையும் அது ஏற்படுத்தியிருக்கிறது. அதன் வெளிச்சத்தில் இன்றும் பலர் சிந்திப்பதும் எழுதுவதும் அதன் சாதனையாக கூறலாம்.

நவீன தமிழ் இலக்கியத்தில் தேசிய, திராவிட, இடதுசாரி மரபுகள்

ஜமாலன்







தேசியம், திராவிடம், இடதுசாரி என்பவை ஒரு கருத்தியல் சார்ந்த அரசியல் சொல்லாடல்கள் (political discourses). **சொல்லாடல் என்பது ஒரு சமூகத்தின் சிந்தனை, நடைமுறை, வாழ்க்கைமுறை, பண்பாடு, அரசியல் உள்ளிட்டவற்றைக் கட்டுப்படுத்தும் கருத்தியலால் வழி நடத்தப்படும் ஆதிக்க மொழியமைப்பு. ஒரு சொல்லாடல் சமூகத்தின் அறிவுக் குவியமாக** (episteme) **மாறும்போது, அச்சமூகத்தின் சிந்தனைப்போக்கை, வாழ்க்கைமுறையை, பண்பாட்டை, இலக்கியத்தை வழிநடத்துவதாக அமைகிறது. ஒரு குறிப்பிட்ட சொல்லாடல் அதிகாரம் பெற்றதாக அமையும்போது, அது அக்கால இலக்கியத்தினை வடிவமைக்கிற "இலக்கிய பீடமாக"** (literary canon) **அமைகிறது. இவ்வாறாக அமையும் இலக்கிய பீடங்களே பிற்காலத்தில் இலக்கிய மரபுகளாக** (tradition) **மாறுகின்றன. தமிழ் நவீன இலக்கியத்தில் உருவான மூன்று முக்கிய மரபு குறித்த ஒரு குறிப்புரையே இக்கட்டுரை.**

தமிழில் நவீன இலக்கியம் ஆங்கிலேயக் குடியேற்றக் (காலனியக்) காலகட்டத்தில் முகிழ்ந்த, இந்திய ஒன்றியத்தின் நவீனத்துவம் கொண்டுவந்த, "இந்திய தேசியம்" என்ற கருத்தியலுடன் உறவு கொண்டிருந்தது. அதன் ஒரு குறியீட்டு வடிவமாக பாரதியின் மரபு துவங்கியது. தேசிய விடுதலையுடன் உறவு கொண்டிருந்தாலும் அதன் உள்ளார்ந்த விருப்பு தேசபக்தியும், தெய்வபக்தியும். அதன் தொடர்ச்சியாக தமிழில் உருவான கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், உரைநடை இலக்கியங்கள் அமைந்திருந்தன. இந்திய

ஒன்றியம் காலனியத்திலிருந்து அரசியல் விடுதலைப் பெற்றவுடன் தந்தை பெரியார் அவர்களால் பரவலாக்கப்பட்ட திராவிடக் கருத்தியல் தமிழ் இலக்கியத்தின் குவிமையமாக மாறியது. அதன் ஒரு குறியீட்டு வடிவமாக வெளிப்பட்டவர் பாரதிதாசன். இவர் பாரதி மரபிலிருந்து ஊக்கம் பெற்றாலும், அக்கால அரசியல் சொல்லாடலாக மாறியிருந்த திராவிடம் என்ற கருத்தியலை ஏற்று அதன்வழி தமிழ் இலக்கியப் பரப்பை அகலப்படுத்தினார். பாரதி எப்படி இந்திய ஒன்றியத்தின் தேசியம் என்ற பார்வையை முன்வைத்தாரோ, அதற்கு இணையாகவும், எதிராகவும் பாரதிதாசன் திராவிட மரபை மாநில அளவிலான தமிழ் தேசியத்தின் குரலாக முன்வைத்தார். எந்த ஒரு இலக்கியப் போக்கும் ஒரு மரபிலிருந்து உருவாகி அதன் எதிர்மரபாக மாறி பின் மாற்று மரபாக நிலைப்பதே அதன் இயங்கியல்.

தேசியம் என்ற சொல் குறிக்கும் நிலம், மொழி, இனம், பண்பாடு, வாழ்வியல் சார்ந்த பொருளில், காலனிய எதிர்ப்பிற்கான வடிவமாக உருவாகிய, ஒன்றியத்தின் "இந்திய தேசியம்" என்ற கருத்தாக்கம் பொருந்துவதில்லை. என்றாலும், இந்திய ஒன்றியத்தின் காலனிய எதிர்ப்பிற்கான ஒருமித்த கருத்தியலாக "இந்திய தேசியம்" பெரும் பங்காற்றியது என்பது வரலாற்றில் தவிர்க்கமுடியாத ஒன்று. சரியான தேசியப் பார்வை என்பது திராவிடக் கருத்தியல் வழிநின்ற, தமிழ் தேசம் என்ற நில உருவாக்கத்தின் வழி நிகழ்ந்த ஒன்றே. அதனை பாரதிதாசனின் "தமிழியக்கம்" என்ற நீண்ட கவிதை ஒரு பிரதியாக முன்மொழிந்தது. அதிலிருந்து திராவிடக் கருத்தியலைக் கொண்ட தமிழ் இலக்கியப் போக்குகள் உருவாகின. அது ஒரு ஆதிக்கம் மிக்க போக்காக தமிழில் உருவாகி வளர்ந்தது.

ஒன்றிய காலனிய விடுதலைக்குப்பின் தேசியம் ஒரு ஆதிக்கச் சொல்லாடலாக மாறியபோது, மக்கள்சார்ந்த உணர்வை பிரதிபலிக்கும் திராவிடம் மாற்றுச் சொல்லாடலாக வெளிப்பட்டது. மொழிப்போருக்குப் பின் திராவிடக் கருத்தியல் ஆதிக்க கருத்தியலாக மாறியது. அச்சூழலில், இடதுசாரி இலக்கிய மரபு மாற்றுச் சொல்லாடலாக வெளிப்பட்டது. தொ.மு.சி.ரகுநாதன், விந்தன், ஜீவா, கே.சி.எஸ்.அருணாச்சலம் எனத் துவங்கிய அம்மரபு எழுபதுகளில் நா.காமராசன், சிற்பி, தமிழன்பன், மீரா, இன்குலாப் என வளர்ச்சிக் கண்டது. குறிப்பாக, அம்மரபு இன்குலாபின் கவிதைகளில் ஒரு தனித்துவமான நிலையை அடைந்தது என்று சொல்வது மிகைக்கூற்றாகாது. இன்குலாபை ஒரு குறியியக்கமாகக் கொண்டால் ஒன்றிய தேசிய மரபை பாரதி மரபு என்றும் தமிழ்தேசிய திராவிட மரபை பாரதிதாசன் மரபு என்றும் சர்வதேசிய இடதுசாரி மரபை இன்குலாப் மரபு என்றும் குறித்துக் கொள்ளலாம். கேள்வி தமிழ் நவீனத்துவ இயக்கத்துடன் உறவு கொண்ட இம்மூன்று மரபுகளுக்கும் பண்டைய தமிழ் மரபின் தொடர்ச்சி உண்டா? என்பதே. இது விரிவான ஆய்விற்கு உரியது என்பதால், சில புள்ளிகளை சுருக்கமாக இங்கு சுட்டிக்காட்டலாம்.

தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலங்களை அன்பின் ஐந்திணையாக அமைந்த அக, புற மரபின் பாட்டும் தொகையுமான சங்ககாலம், சமண, பௌத்த அறநெறி போற்றிய கீழ்கணக்கு காலம், மக்கள் வாழ்வியலைப் பேசிய ஐம்பெரும் காப்பியங்கள் தோன்றியக் காப்பியக் காலம், சைவ, வைணவ எழுச்சிப் பெற்ற பக்தி இயக்க காலம், நாயக்கர் காலத்தில் உள்ளூர் நிலபிரபுக்கள், ஜமீன்களைப் பாடிய சிற்றிலக்கியக்காலம், ஆங்கிலேய காலனிய ஆட்சியில் உருவான நவீன இலக்கிய காலம் என்று பிரித்தறியலாம். இப்பிரிவினைக்கு பின் உள்ள சமூக அடுக்குகள், கருத்தியல்கள், பண்பாட்டு மாற்றங்கள், வாழ்வியல் கூறுகள் ஆகியவற்றினைக் கட்டுப்படுத்தும் சொல்லாடல்கள் திரட்டப்பட்ட ஒரு கருத்தாக்கமே மரபுகள் எனப்படுகிறது. அம்மரபுகளின் தொடர்ச்சியாக நவீன தமிழ் இலக்கியத்தில் மேற்கண்ட மூன்று மரபுகள் குவிமையமாக அமைந்துள்ளது.

இந்திய ஒன்றியத்தின் தேசிய மரபாக அறியப்படுவது, காலனிய எழுச்சியில் தங்களை அதிகாரத்துடன் தகவமைத்துக் கொண்ட உயர்சாதியினரின் குறிப்பாக வடமொழி சார்ந்த ஆரிய மரபின் தொடர்ச்சியாக அறியமுடியும். அதனால்தான் பாரதியாருக்கு இலட்சியப் பெண் பிம்பமாக பாஞ்சாலி சபதம் நினைவிற்கு வந்து, அதனை தமிழில் ஒரு சிறந்த காலனிய எதிர்ப்பு இலக்கிய வடிவமாக முன்வைக்கிறார். தொடர்ந்து அவர் இந்திய ஒன்றியத்தை வடமொழி தாந்ரீகம்

முன்வைக்கும் தாய் பிம்பமாகக் காணும் ஒரு அகக்காட்சியில் (தரிசனத்தில்) ஊட்டம்பெற்றவராக இருக்கிறார். பாரதி தனது உலகப்பார்வையாக, மெய்யியலாக அத்வைதம் என்பதை ஏற்று அதன்வழி தேசபக்தியும் தெய்வபக்தியும் ஒன்றென தனது கவிதைகளில் வெளிப்படுத்துகிறார். இதிலிருந்து பாரதிக்கான தமிழ் வேர்களைத் தடம் கண்டால் அது தமிழின் பக்தி இலக்கிய மரபின் ஒரு தொடர்ச்சி எனலாம்.

தமிழில் உருவான பக்தி இயக்கம் இந்திய ஒன்றியத்தின் வடபகுதியிலும், தென்பகுதியிலும் நிகழ்ந்த வைதீக மீட்புணர்வுடன் தொடர்புகொண்டது. அதாவது, அவ்வைதீக மரபுகளான பௌத்த, சமண சமயங்களின் அரசியல் அதிகாரத்தை வீழ்த்த உருவான புதிய மாநில (பிராந்திய) தேசியத்தின் விழிப்பாக நிகழ்ந்த பக்திசார்ந்த ஒன்று. அதில் தெய்வபக்தி மக்களை ஒருங்கிணைக்கும் ஒரு உணர்வுப்புலமாக கையாளப்பட்டது. காலனியக் காலத்தில் இந்திய தேசியம் என்ற கருத்தியலுக்கு ஏற்ப அது தேசபக்தியாக மடைமாற்றம் அடைந்தது. அதனால், பக்திஇயக்க மரபு தமிழில் நிகழ்ந்த வேதமதம் சார்ந்த வைதீக உணர்வை பரவலாக்கிய ஒன்று. பாரதிக்கு அத்வைதம், தாந்ரீகம் போன்ற ஆரிய மரபுசார்ந்த சிந்தனைகளின் தாக்கமே அவரது தேசபக்திக்கான அடித்தளமாக அமைந்தது. இன்றும்கூட தேசபக்தி தெய்வபக்தியுடன் உறவு கொண்டதாகவே பார்க்கப்படுகிறது.

ஆனால், பாரதியின் கவிதாமண்டலத்தை சேர்ந்தவராக தன்னை அறிமுகப்படுத்திக்கொண்ட பாரதிதாசன், தமிழ் சங்க மரபின் அகம், புறம் மற்றும் காப்பியங்கள் சார்ந்த சிந்தனைகள் வழியாக, அன்று தமிழ் என்ற கருத்தியலாக விழிப்புக் கொண்ட ஆரிய எதிர்ப்பு திராவிட மரபை உயர்த்திப் பிடிப்பவராக இருந்தார். அவரது சிந்தனைப்படிமம் தமிழ் என்ற விழிப்பால் இலட்சிய பெண்பிம்பமாக கண்ணகி, மணிமேகலையை முன்வைப்பதாக அமைந்தது. பாரதிக்கு பாஞ்சாலி நினைவில் தட்டுப்பட்டது அவரது நனவிலியில் இருந்த ஆரிய வடமொழி மரபின் தாக்கமே. அதேபோல் பாரதிதாசனுக்கு நினைவில் தட்டுப்பட்டது அவரது நனவிலியில் இருந்த தமிழ் மரபின் தாக்கமே. பாரதிதாசனுக்கு தேசபக்தி என்பது தமிழ் தேசியத்தின் பக்தியாக, இனம் சார்ந்த விருப்பாக வெளிப்பட்டது. அதனால்தான் அவரால் 'தமிழியக்கம்' என்ற தமிழ் தேசியக்குரலின் அடிப்படை கருத்தாக்கத்தை உருவாக்க முடிந்தது. அவரிடமிருந்து தாக்கம்பெற்ற கவிஞர்கள் பலரும் தமிழ்பற்றை வெளிப்படுத்தக் கூடியவர்களாக திராவிடச் சிந்தனையை உயர்த்திப் பிடிப்பவர்களாக அமைந்தனர்.

பாரதிதாசன் மரபிலிருந்து பிரிந்த திராவிடம் சாராத மற்றொரு மரபு இடதுசாரி மரபு. அது பாரதியின் கவித்துவத்தில் அமைந்த சர்வதேசிய பொது மனிதநேய சிந்தனையையும், பெண்விடுதலையையும், பாரதிதாசனின் தமிழ் தேசிய சிந்தனையையும், அடித்தட்டு மக்கள் குறித்தும், தமிழ் இயற்கையை பாடும் கவிமரபையும் இணைக்கும் ஒன்றாக உருவாகியது. அம்மரபின் ஒரு குறியீடாக, உச்சம் பெற்ற ஒரு கவிஞராக இன்குலாப் அவர்களை வாசிக்கமுடிகிறது. அவரும் இலட்சியபெண் பிம்பமாக மணிமேகலையை முன்வைத்து ஒரு நாடகத்தை இயற்றினார். அத்துடன் அவ்வையை மதச்சார்பிலிருந்து விடுவித்து சங்ககால பெண்விடுதலைக் குரலாக முன்வைத்தார். தமிழின் முதல் புலம்பெயர் நிகழ்வாக பறம்புமலை வீழ்ச்சியையும், பாரி மகளினிரின் புலம்பெயர் துயரங்களையும் நாடகமாக்கினார். அவர் சமூக விடுதலை, பெண் விடுதலை, தலித் விடுதலை, இன விடுதலை என ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களின் விடுதலையை முன்வைப்பதாக தனது கவிதைகளை வெளிப்படுத்தினார். ஒரு சர்வதேசியப் பார்வையாக அது வெளிப்பட்டது.

தமிழின் இடதுசாரி மரபில் தமிழின் புறம் சார்ந்த சிந்தனையான போராட்ட உணர்வும், அகம் சார்ந்த சிந்தனையான மக்கள் மீதான காதலும் வெளிப்பாடு கொள்வதாக அமைந்துள்ளது. இன்றைய இலக்கியங்களின் மரபுத் தொடர்ச்சியை தமிழின் சங்ககால மரபிலிருந்து வருவிக்க முடியும். அதற்கு அடிப்படையாக அமைவது தமிழின் தனிச்சிறப்பான அகம், புறம் என்கிற அறிதல் முறையும், திணை இலக்கியக் கோட்பாடும் என்றால் மிகையாகாது.



இஸ்லாமிய யதார்த்தவாதம்

எச்.முஜீப் ரஹ்மான்

யதார்த்தவாதம், கலைகளில், இயற்கையின் அல்லது சமகால வாழ்க்கையின் துல்லியமான, விரிவான, அழகுபடுத்தப்பட்ட சித்தரிப்பு ஆகும். யதார்த்தவாதம் கற்பனையான இலட்சியமயமாக்கலை நிராகரிக்கிறது, வெளிப்புறத் தோற்றங்களை நெருக்கமாகக் கவனிப்பதற்கு ஆதரவாக இருக்கிறது. எனவே, யதார்த்தவாதம் அதன் பரந்த அர்த்தத்தில் பல்வேறு நாகரிகங்களில் பல கலை நீரோட்டங்களை உள்ளடக்கியது. உதாரணமாக, காட்சி கலைகளில், குத்துச்சண்டை வீரர்கள் மற்றும் நலிந்த வயதான பெண்களை துல்லியமாக சித்தரிக்கும் பண்டைய ஹெலனிஸ்டிக் கிரேக்க சிற்பங்களில் யதார்த்தத்தை காணலாம்.

17ஆம் நூற்றாண்டு ஓவியர்களான காரவாஜியோ, டச்சு வகை ஓவியர்கள், ஸ்பானிஷ் ஓவியர்களான ஜோஸ் டி ரிபெரா, டியாகோ வெலாஸ்குவேஸ் மற்றும் பிரான்சிஸ்கோ டி ஜுர்பரான் போன்றவர்களின் படைப்புகள் பிரான்சில் உள்ள லே நெயின் சகோதரர்கள் அணுகுமுறையில் யதார்த்தமானவர்கள் ஆவார்கள். 18 ஆம் நூற்றாண்டின் ஆங்கில நாவலாசிரியர்களான டேனியல் டெஃபோ, ஹென்றி ஃபீல்டிங் மற்றும் டோபியாஸ் ஸ்மோலெட் ஆகியோரின் படைப்புகள் யதார்த்தமானவை என்றும் அழைக்கப்படலாம். இந்த முன்னுரையை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாமிய எதார்த்த வாதம் என்கின்ற கோட்பாடு விளக்குவது சற்று எளிமையாக இருக்கும். இஸ்லாமிய எதார்த்த வாதம் என்பது இஸ்லாமிய வாழ்க்கை நெறிமுறைகளுக்கு உட்பட்ட கருத்துக்களைப் பிரதிபலிக்கின்ற கலை இலக்கிய வடிவமாகக் கருதலாம்.

வாழ்க்கையினுடைய பல்வேறு போக்குகளை சமூகத்தின் உடைய இருப்புகளை கலாச்சார விழுமியங்களை மத மதிப்புகளை எல்லாவற்றையும் அடிப்படையாகக் கொண்டு பல்வேறு விதமான நாடுகளில் வாழுகின்ற முஸ்லிம்களுடைய வாழ்க்கையை பிரதிபலிக்கின்ற ஒன்றாக இந்த இஸ்லாமிய எதார்த்தவாதம் இருக்கிறது, எதார்த்தவாதம் தோன்றி பல நூற்றாண்டுகள் ஆனாலும் இஸ்லாமிய எதார்த்தவாதம் என்பது பல்வேறு நாடுகளில் 20ஆம் நூற்றாண்டுகளின் துவக்கத்திலேயே வேர் விட ஆரம்பித்தது.

அரபு நாடுகளாக இருந்தாலும் சரி மத்திய கிழக்கு நாடுகளாக இருந்தாலும் சரி ஆப்பிரிக்க நாடுகளாக இருந்தாலும் சரி இஸ்லாமிய எதார்த்தவாதத்தினுடைய கூறுகள் பல்வேறு கலாச்சாரங்களில் இருப்பதை நாம் காண முடியும். அந்த வகையில் இஸ்லாமிய யதார்த்தவாதம் என்ற போக்கு மெல்ல மெல்ல கலை இலக்கியத்தில் தாக்கங்களை செலுத்தி வருகிறது என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. மேலும் கலை இலக்கியத்தின் உடைய அடிப்படை நாதமான மானுட சமூகத்தினுடைய விழுமியங்களை போற்றும் மானுட நேயத்தை போற்றும் ஒருங்கிணைந்த மானுடத்தை வலியுறுத்தும் மனிதாய ஆன்மீகத்தை சொல்லும் ஒன்றை தான் இந்த இலக்கிய கோட்பாடு சொல்லி செல்லுகிறது.

அந்த வகையில் இஸ்லாமிய கலை இலக்கிய அம்சங்களில் எதார்த்தவாதத்தினுடைய தாக்கம் பெருமளவில் இருந்து வருகிறது. பல்வேறு நாடுகளில் எதார்த்த சம்பவங்களை, வரலாற்று நிகழ்வுகளை, சமூக எதார்த்தங்களை, அரசியல் எதார்த்தங்களை, பொருளாதார எதார்த்தங்களை, இனவியல் எதார்த்தங்களை, கலாச்சார எதார்த்தங்களை எல்லாம் சொல்கின்ற ஒன்றாக இஸ்லாமிய யதார்த்தம் இன்று பரிணமித்து வருகிறது.

ரியலிசம் என்பது 20 ஆம் நூற்றாண்டின் கலையில் ஒரு தனித்துவமான நீரோட்டமாக இருந்தது. பொதுவாகக் கலைஞர்களின் அன்றாட வாழ்க்கையின் நேர்மையான, தேடல் மற்றும் இலட்சியமற்றப் பார்வைகளை முன்வைப்பதற்கான விருப்பத்திலிருந்து அல்லது கலையை சமூக மற்றும் அரசியல் விமர்சனங்களுக்கு ஒரு வாகனமாகப் பயன்படுத்துவதற்கான அவர்களின் முயற்சியிலிருந்து உருவானது. அமெரிக்க ஓவியர்களின் குழுவின் கடினமான நகர்ப்புற வாழ்க்கையின் கரடுமுரடான, திட்டவட்டமான, கிட்டத்தட்ட பத்திரிகை காட்சிகள் எட்டு முந்தைய வகைக்குள் அடங்கும்.

ஜெர்மன் கலை இயக்கம் மறுபுறம், (புதிய குறிக்கோள்), ஜெர்மனியில் முதலாம் உலகப் போருக்குப் பிந்தைய காலகட்டத்தின் இழிந்த தன்மை மற்றும் ஏமாற்றத்தை வெளிப்படுத்த ஒரு யதார்த்த பாணியில் பணியாற்றினார். மனச்சோர்வு கால இயக்கம் என்று அழைக்கப்படுகிறது அந்த காலகட்டத்தில் அமெரிக்க சமூகத்தின் அநீதிகள் மற்றும் தீமைகளை சித்தரிப்பதில் சமூக யதார்த்தவாதம் இதேபோன்ற கடுமையான மற்றும் நேரடி யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டது. 1930களின் முற்பகுதியில் இருந்து 1991இல் அந்த நாடு கலைக்கப்படும் வரை சோவியத் யூனியனில் அதிகாரப்பூர்வமாக ஸ்பான்சர் செய்யப்பட்ட மார்க்சிய அழகியலாக இருந்த சோசலிஸ்ட் ரியலிசம், உண்மையில் யதார்த்தவாதத்துடன் சிறிதும் தொடர்பு கொள்ளவில்லை, இருப்பினும் அது வாழ்க்கையின் உண்மையுள்ள மற்றும் புறநிலை கண்ணாடியாக இருந்தது.

சித்தாந்தம் மற்றும் அரசின் பிரச்சாரத் தேவைகளுக்கு சேவை செய்ய அதன் "உண்மை" தேவைப்பட்டது. சோசலிஸ்ட் ரியலிசம் பொதுவாக இயற்கையான இலட்சியமயமாக்கலின் நுட்பங்களைப் பயன்படுத்தி, துணிச்சலற்ற தொழிலாளர்கள் மற்றும் பொறியாளர்களின் உருவப்படங்களை உருவாக்கியது, அவர்கள் வீரம் நிறைந்த நேர்மறைவாதம் மற்றும் அவர்களின் வாழ்நாள் நம்பகத்தன்மையின்மை ஆகிய இரண்டிலும் ஒரே மாதிரியாக இருந்தனர்.

உண்மையை பிரதிநிதித்துவப்படுத்துவது தான் இஸ்லாமிய கலை இலக்கியத்தின் உடைய நோக்கமாகும்.அப்படி பிரதிநிதித்துவப்படுத்தவும் எழுத்தாளனுக்கு தெரியும் (அல்லது அறியக்கூடியது). இலக்கிய விமர்சகர் இயன் வாட் தி ரைஸ் ஆஃப் தி நாவலில் குறிப்பிடுவது போல், நவீன யதார்த்தவாதம் "உண்மையை தனிமனிதனால் புலன்கள் மூலம் கண்டறிய முடியும் என்ற நிலையிலிருந்து தொடங்குகிறது" மேலும் அது "இப்னு அரபி, இப்னு தைமியா, இமாம் ஹசாலி ஆகியோர்களின் முயற்சியால் தோற்றம் கொண்டது மற்றும் முதல் முழுமையைப்

பெற்றது. பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலக்கியத்தில் உருவாக்கம் கொண்டது."

மனித நகைச்சுவை அறிமுகத்தில் (1842) பால்சாக் "கவிதை உருவாக்கம் மற்றும் விஞ்ஞான உருவாக்கம் ஆகியவை நெருங்கிய தொடர்புடைய செயல்பாடுகள் என்று கூறுகிறார், இது விஞ்ஞான முறைகளை எடுத்துக் கொள்ளும் யதார்த்தவாதிகளின் போக்கை வெளிப்படுத்துகிறது. யதார்த்தவாதத்தின் கலைஞர்கள் தற்கால அறிவியலின் சாதனைகள், விஞ்ஞான முறையின் கண்டிப்பு மற்றும் துல்லியம் ஆகியவற்றை யதார்த்தத்தைப் புரிந்து கொள்வதற்காகப் பயன்படுத்தினர். அறிவியலில் உள்ள நேர்காட்சிவாத மனப்பான்மை, மெய்ம்மை, உண்மையின் வழிபாடு, பரிசோதனை மற்றும் நிரூபணம், அறிவியலில் நம்பிக்கை மற்றும் அது கொண்டு வரும் முன்னேற்றம், அத்துடன் சமூக மற்றும் தார்மீக நிகழ்வுகளை ஆய்வு செய்வதற்கு ஒரு விஞ்ஞான வடிவத்தை கொடுக்க முயல்கிறது."

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், ரொமாண்டிசம் என்பது முந்தைய பகுத்தறிவு யுகத்தின் பிரபுத்துவ சமூக மற்றும் அரசியல் நெறிமுறைகளுக்கு எதிரானக் கிளர்ச்சி மற்றும் 18ஆம் நூற்றாண்டின் ஆதிக்க தத்துவத்தில் காணப்படும் இயற்கையின் அறிவியல் பகுத்தறிவுக்கு எதிரான எதிர்வினையாக செயல்பட்டது. இது காட்சிக் கலைகள், இசை மற்றும் இலக்கியங்களில் மிகவும் வலுவாகப் பொதிந்துள்ளது. ஆனால் வரலாற்றியல், கல்வி மற்றும் இயற்கை அறிவியல் ஆகியவற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

19ஆம் நூற்றாண்டின் யதார்த்தவாதம் ரொமாண்டிசத்திற்கு ஒரு எதிர்வினையாக இருந்தது. இந்த காரணத்திற்காக இது பொதுவாக பாரம்பரிய அல்லது "முதலாளித்துவ யதார்த்தவாதம்" என்று இழிவாக குறிப்பிடப்படுகிறது. இருப்பினும், விக்டோரியன் இலக்கியத்தின் அனைத்து எழுத்தாளர்களும் யதார்த்தவாதத்தின் படைப்புகளை உருவாக்கவில்லை. விக்டோரியன் யதார்த்தவாதத்தின் இறுக்கங்கள், மரபுகள் மற்றும் பிற வரம்புகள் நவீனத்துவத்தின் கிளர்ச்சியைத் தூண்டியது. 1900ஆம் ஆண்டு தொடங்கி, நவீனத்துவ இலக்கியத்தின் உந்து நோக்கம் 19ஆம் நூற்றாண்டின் முதலாளித்துவ சமூக ஒழுங்கு மற்றும் உலகக் கண்ணோட்டத்தின் மீதான விமர்சனமாகும், இது பகுத்தறிவு, யதார்த்த எதிர்ப்பு மற்றும் முதலாளித்துவ எதிர்ப்புத் திட்டத்துடன் எதிர்க்கப்பட்டது.

இஸ்லாமிய யதார்த்தவாதம் பின்னர் திரைப்படத் தொழிலில் ஆதிக்கம் செலுத்தியது. குறிப்பாக ஈரானிய சினிமாக்கள் இஸ்லாமிய யதார்த்தத்தின் அடிப்படையில் செயலாற்ற தொடங்கி உலக அளவில் கவனம் பெற தொடங்கியது. அது போல மற்ற பல நாடுகளிலும் திரைப்படங்கள் கலை இயக்கங்கள் நாவல்கள் சிறுகதைகள் போன்ற பல்வேறு கலை இலக்கிய வடிவங்கள் இஸ்லாமிய எதார்த்தத்தை அடியொட்டி எழுந்தது என்பதை நாம் காண முடியும். இந்தியாவை பொறுத்தவரையில் வங்காள மொழியிலும் மலையாளத்திலும் மிகப்பெரிய பாய்ச்சலாக இஸ்லாமிய யதார்த்தவாதம் செயல் பட்டதைப் பார்க்க முடிகிறது. தமிழில் கூட எதார்த்தக் கூறுகளை உள்ளடக்கிய இஸ்லாமிய எதார்த்தமாக நாவல்களும் கதைகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

முக்கியமான இஸ்லாமிய யதார்த்தவாத எழுத்தாளர்களாக அமீர் உசேன் (பாகிஸ்தான்), அப்பாஸ் எல் அக்காட் (எகிப்தியன்), அப்துல் ரஹ்மான் முனிஃப் (சவுதி), அப்துல்லா கான் (இந்தியர்), அப்துல் சித்ரன் (போஸ்னியாக்) அப்துர் ரஹ்மான் (வங்காளதேசம்), அபித் ஆசாத் (வங்காளதேசம்), அபுல் அலா மௌதூதி (மௌலானா மௌதூதி) (பாகிஸ்தானி) அபுல் ஹசன் (வங்காளதேசம்), அபுல் ஹசன் மிஹ்யார் அல் தைலமி (பாரசீக மொழி), அபு ஹெனா முஸ்தபா கமல் (வங்காளதேசம்), அபுல் ஹுசைன் (வங்காளதேசம்) அபுல் கலாம் ஆசாத் (இந்தியர்), அபு நுவாஸ் (அரபு பாரசீகம்), அபு தம்மாம் (சிரிய அரபு), அபு ஜாபர் ஒபைதுல்லா (வங்காளதேசம்), ஆகா ஷாஹித் அலி (காஷ்மீரி அமெரிக்கன்) ஆகியோர்களை சொல்லலாம்.

திராவிட இயக்க எழுத்தாளர்களும், தமிழிலக்கிய எழுச்சியும்

பி.என்.எஸ்.பாண்டியன்



ஏறு வானை இடிக்கும் மலைமேல்
ஏறு விடாமல்! ஏறு மேன்மேல்!
ஏறி நின்று பாரடா எங்கும்.
எங்கும் பாரடா இப்புவி மக்களை
பாரடா உனது மானிடப் பரப்பை
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்
என்குலம் என்றுணைத் தன்னிடம் ஒட்டிய
மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சி கொள்.
அறிவை விரிவு செய்! அகண்ட மாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை.
அணைந்து கொள் உன்னைச் சங்கமமாக்கு.
மானிட சமுத்திரம் நானென்று கூவு.

- புரட்சிக்கவி பாரதிதாசன்

தமிழ்நாட்டில் புதிய எழுச்சியை, புத்தொளி தரும் சிந்தனையை விளைவித்ததில் பெரும்பங்காற்றியது திராவிட இயக்க எழுத்தாளர்களின் படைப்புகள்.

இராமாயணமும், மகாபாரதமும் இதிகாசங்கள். அவையே நம் காவியங்கள் என தமிழ் மக்களின் ரசனையை சொல் அம்பு மூலம் கொன்றொழித்த காலம் அது.

தமிழ்நாடு மூடநம்பிக்கைகளில் மூழ்கிக் கொண்டிருந்தபோது, திராவிட நாடு ஏடு மூலம் மயக்கத்தை தெளியவைத்தார் பேரறிஞர் அண்ணா. தனது கம்பரசம் நூல் மூலமாக இதிகாசத்தை கசக்கி எறிந்தார்.

இதோ.. பேரறிஞர் அண்ணா இவ்வாறு தான் மக்களை மழுங்கடித்த இதிகாசங்களுக்கு எதிராக தனது ஆயுதத்தை ஏந்தினார்.

இதோ அண்ணா இப்படி எழுதுகிறார்...

"கம்பனின் கலைத்திறமை கவிதை அழகு இவை பற்றி அல்ல நாம் குறை கூறுவது; கவி எடுத்தாண்ட கதை; அக்கதையின் விளைவு; அதனால் நமது இன கலாச்சாரத்துக்கு வந்துற்ற கேடு இவைபற்றியே நாம் கண்டிக்கிறோம்." "ஓஹோ! கவிதை அழகும் உனக்குத் தெரியுமோ! கசடர் அறிவரோ கலையின் மேன்மையை," "அறிவோம் ஐயனே! அகமகிழ்வு கொள்ளும் அளவு மட்டுமல்ல. செப்பனிடும் அளவுக்கும் அறிவோம்." "செருக்குடன் பேசுகிறாய்; செந்தமிழை ஏசுகிறாய்; கம்பநாட்டாழ்வாரின் கவிதையைச் செப்பனிடுவையோ? என்னே உன் சிறுமதி!" "புலவரின் பாடலை மற்றோர் புலவன் செப்பனிடும் முறையிலே அல்ல. புலவரின் பாடலை ஒரு சாமான்யனின் கண்கொண்டு பார்த்து பகுத்தறிவாளனின் நோக்குடன் ஆராய்ந்து பார்த்திருக்கிறோம்." "பார்த்து கண்டது என்னவோ?" "பல/ அதிலும் நீர் காணாதவை." "நாம் காணாதவைகளை நீர் கண்டீரோ? என்னய்யா கண்டீர்?" "கம்பனின் கவிதை பல காமரசக் குழம்பாக இருப்பதை." "என்ன? என்ன? அடபாதகா, கம்பனின் கவிதை காமரசக் குழம்பா? காமரசமா? ஐயையோ!" "சபித்திட வேண்டாம் கலாரசிகனே! காமரசந்தான் கம்பனின் கவிதை! பல உள – கூறட்டுமா?" "கூறுவையோ ?" "கேளும் கம்பரச விளக்கத்தை."

இதிகாசங்களும், புராணக் கட்டுக்கதைகளும், இட்டுக்கதைகளும் இலக்கியங்களாக பார்க்கப்பட்ட பார்வையை பழுதுபார்த்து, பிணி நீக்கியது திராவிட எழுத்துப் பாரம்பரியம். திராவிட இயக்கச் சிறுகதைகள் ஒரு குடும்பத்தைப் பற்றியோ, குழுவைப் பற்றியோ, குற்றம்சாட்டியோ, அழுகையை கண்களில் இருந்து பீறிடச் செய்து சட்டையை நனைக்க வைத்ததோ, சக மனிதனை நையாண்டி செய்து குளிர்காய்ந்ததோ அல்ல. மாறாக சமூகத்தின் அழுக்குகளை நீக்கியது. பதர்களை நீக்கி நெல்மணிகளை தந்த காற்றின் பணியைப் போல, காத்திரமாக குமுகாய பணியைச் செய்தது திராவிட இலக்கியம்.

உயர்சாதி ஆதிக்கத்தில் இருந்து தமிழ் சமுதாயம் தன்னை மீட்டெடுத்துக் கொள்ள திராவிட இயக்கம் துணைபுரிந்ததைப்போன்று, திராவிட இலக்கியமும் முன்நின்றுள்ளது. இதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகள் உள்ளன.

கண்மூடி பழக்கமெல்லாம் மண்மூடிப் போக, திராவிட நாடு இதழினை பேரறிஞர் அண்ணா தொடங்கினார். தமிழரின் வாழ்வியல், அரசியல், கலை, இலக்கியம் என அத்தனை கலைகளையும் உள்ளடக்கிய முற்போக்கு கருத்துக்கள் கொண்ட திராவிட நாடு, பட்டித்தொட்டியெங்கும் புதுமைக் கருத்துக்களை கொண்டுபோய் சேர்த்தது. அரசியல் விமர்சனங்கள் மட்டுமல்ல, கேலிச்சித்திரங்கள் மாத்திரமல்ல, ஓரங்க நாடகங்களும், சிறுகதைகளும், தொடர்கதைகளும் திராவிட நாடு இதழில் வெளியானது.

தமிழ்நாட்டில் தமிழ் இலக்கியம் புத்துயிர் பெறுவதற்கு அண்ணாவின் தம்பிகள் தொடங்கிய பத்திரிகைள், சஞ்சிகைகள், இதழ்கள் தமிழர்தம் உரிமைகாக்கும் கேடயங்களாக விளங்கின.

முத்தமிழறிஞர் கலைஞரின், 'முரசொலி', 'முத்தாரம்', 'மறவன் மடல்', நாவலர் நெடுஞ்செழியனின் 'மன்றம்', 'காஞ்சி', இனமான பேராசியர் க.அன்பழகனின் 'புதுவாழ்வு', கவியரசு கண்ணதாசனின், 'தென்றல்', 'முல்லை', ஆற்றல் மறவர் சி.பி.சிற்றரசுவின் 'தீப்பொறி', 'தீச்சுடர்', 'இனமுழக்கம்', என்.வி.நடராசனின், 'திராவிடன்', ஏ.வி.பி. ஆசைத்தம்பியின் 'தனி அரசு', காஞ்சி மணிமொழியாரும், மா.இளஞ்செழியனும் நடத்திய 'போர்வாள்', முருகு.சுப்பிரமணியன், அரு.பெரியண்ணன் நடத்திய 'பொன்னி', ப.கண்ணனின் 'பகுத்தறிவு', பு.செல்வராசனின் 'கதிரவன்', சாமி சிதம்பரனாரின் 'அறிவுக்கொடி', ஏ.கே.வேலனின் 'எரிமலை', 'ஞாயிறு', இராம. அரங்கண்ணலின் 'அறப்போர்', தில்லை வில்லாளனின் 'தென்னகம்', நாஞ்சில் மனோகரனின் 'இலட்சியவாதி', க.ராசாராமின் 'திருவிளக்கு', டி.கே.சீனிவாசனின் 'தாய்நாடு', டி.எம்.பார்த்தசாரதியின் 'தமிழ் உலகம்',


திராவிடநாடு

"இன்பத்திராவிடமே என் இலட்சியம்"

பூ.கணேசனின் 'நிலவு', ஏ.பி.சனார்த்தனத்தின் 'தோழன்', வை.திருநாவுக்கரசின் 'பூந்தோட்டம்', என்.ஜீவரத்தினத்தின் 'டார்பிடோ', திருச்சி முத்துவின் 'திராவிட மணி', ஏ.எஸ்.வேணுவின் 'களஞ்சியம்', பி.வி.ராமசாமியின் 'உடுமலைப் பீரங்கி', என்.எஸ்.இளங்கோவின் 'எதிரொலி', எஸ்.எஸ்.தென்னரசுவின் 'தென்னரசு', ப.புகழேந்தியின் 'கதிர்', டி.துரைக்கண்ணுவின் 'தனிநாடு', பத்மன் செல்லப்பனின் 'தீ', இரா.சு.தங்கப்பழம், சிவசாமி நடத்திய 'கிளர்ச்சி', மா.செங்குட்டுவனின் 'எழுச்சி', கு.ப.ம.தர்மனின் 'தேன்கூடு' என தமிழன்னையின் மணிமகுடமாக திகழ்ந்தன திராவிட இயக்க இதழ்கள்.

இந்த இதழ்களில் மட்டுமல்ல ஏனைய வெகுசன இதழ்களிலும் திராவிட இயக்க எழுத்தாளர்களின் படைப்புகள் வெளிவந்துள்ளன. குறிப்பாக சிறுகதைகள் அதிகளவில் வெளிவந்துள்ளன. திராவிட இயக்க எழுத்தாளர்களின் சிறுகதைகளுக்கும், ஏனைய எழுத்தாளர்களின் சிறுகதைகளுக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. பேரறிஞர் அண்ணா தனது சிறுகதைகள் குறித்து இப்படி எழுதுகிறார்.

"வெறும் அவனும், அவளும் அல்ல; அதரமும் மோதிரமும் அல்ல; 'இச்' ஒலியும், இடைநெளிவும் அல்ல; சமூகப் படப்பிடிப்பு; அவை வெறும் பொழுதுபோக்குகள் அல்ல; உண்மைகளின் வெளிச்சங்கள்; அவலங்களின் வெளிப்பாடுகள்".

1934ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா, கொக்கரக்கோ என்ற தனது முதல் சிறுகதையை ஆனந்த விகடனில் எழுதினார். அதனைத் தொடர்ந்து தொண்ணூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதினார். மேலை நாட்டு இலக்கியத்தை மொழிபெயர்ப்பு செய்து தமிழில் வெளியிட்ட பெருமையும் திராவிட இயக்க எழுத்தாளர்களையேச் சாரும்.

பேரறிஞர் அண்ணா, எமில் சோலாவை தமிழுக்கு அறிமுகப்படுத்தினால், முத்தமிழறிஞர் கலைஞர், வல்வில் ஓரியையும், ஆய் எயினனையும் சங்கத்தமிழ் வாயிலாக தமிழுலகத்திற்கு காட்டினார்.

பேரறிஞர் அண்ணா மாத்திரமல்ல, திராவிட இயக்க எழுத்தாளர்களின் சிறுகதைகள், புதினங்கள் ஒவ்வொன்றும் நல்முத்துகள்.

பாவேந்தர் பாரதிதாசன், அண்ணல் தங்கோ, இரா. செழியன், நாவலர் இரா. நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன், ஏ.வி.பி ஆசைத்தம்பி, சுப்பு, கா.வேழவேந்தன், கைவல்யசாமி, சலகண்டபுரம் ப.கண்ணன், சாமி சிதம்பரனார், மா.செங்குட்டுவன், இராம. அரங்கண்ணல், என்.வி.நடராஜன், தில்லை வில்லாளன், மறைமுதல்வன், முரசொலிமாறன், இளஞ்சேரல் உள்ளிட்ட திராவிட இயக்க சிறுகதை எழுத்தாளர்கள் அன்றைய காலகட்டத்தில் நவீன இலக்கியத்திற்கு தோற்றுவாயாக அமைந்தார்கள்.

பக்தி இலக்கியம், சங்க இலக்கியம், மரபு இலக்கியம் என தமிழ்நாட்டில் இலக்கிய நிலைமைகள் இருந்தபோது, திராவிட இயக்க எழுத்தாளர்கள் சமூகக் கொடுமைகளை சாடிய போது, இலக்கிய மரபுகளும் தூள்தூளாயின. மூட பழக்கவழக்கங்கள் ஒழிய திராவிட இலக்கியம் பெருந்தொண்டாற்றியது.

அன்று தொடங்கிய அந்த பணி திராவிட இலக்கியம் என்ற புதிய பாணியை உருவாக்கியது.

நவீன இலக்கிய எழுத்தாளர்களின் புறப்பாடு திராவிட இலக்கியத்தில் இருந்தே தொடங்கியது. இதற்கு சாகித்ய அகாடமி விருதுபெற்ற எழுத்தாளர் ஆ.மாதவன் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

பிற்காலத்தில் நவீன இலக்கிய உலகத்தின் முக்கிய எழுத்தாளராக கவனம்பெற்ற ஆ.மாதவனின் தொடக்கம் திராவிட இலக்கியம்தான். இதுகுறித்து அவரே இப்படி எழுதுகிறார்.

''திராவிட இயக்க சஞ்சிகைகள் ஆண்டுதோறும் ஆர்ட் பேப்பரால் கே.மாதவனின் மூவர்ண அட்டைப்பட அலங்காரத்துடன் வெளியிடும் பொங்கல் மலர்களில் எல்லாம் எனது கதைகள் சிறப்பிடம் பெற்று வெளிவந்தன. அன்றைய நாளில் முரசொலி பொங்கல் மலரில் இடம் பெறுவர். அண்ணா, கலைஞர், கண்ணதாசன், நெடுஞ்செழியன் போன்ற பெருந்தலைவர்களது முத்திரை எழுத்தாளர் வரிசையில், மாதவன் பெயர் தவறாமல் இருந்தது. ஜயபேரிகை என்றதோர் கட்சிப்பத்திரிகை, 1958ஆம் ஆண்டு நடத்திய சிறுகதைப் போட்டியில் எனது சிறுகதை முதல் பரிசுபெற்று ரூ.100 அனுப்பி வைத்தது..."

ஆ.மாதவனின் இந்த வாக்குமூலம் நவீன இலக்கிய உலகில் சிறுகதை இலக்கியத்தை வளர்த்தெடுத்த பெருமை திராவிட இலக்கியத்திற்கு உண்டு என்பதை நிருபிக்கிறது.

ஒன்றிய அரசின் சாகித்ய அகாடமி விருதுபெற்ற எழுத்தாளரும், திராவிட இயக்கச் சிந்தனையாளருமான எழுத்தாளர் பிரபஞ்சன், தன்னை திராவிட இயக்க எழுத்துக்கள் ஈர்த்தன. பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் இலக்கிய பாணி என்னுள் தாக்கத்தை ஏற்படுத்தியது என்று கூறியிருக்கிறார்.

இதன் நீட்சியாக, நவீன தமிழ் இலக்கியத்தில், திராவிட இயக்க எழுத்தாளர்களின் பங்கு தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

"தென்னாடுடைய சிவனுக்கு
மாதவிலக்குள்ள பெண்கள் மட்டும்
ஆவதே இல்லை"

காலங்காலமாக மதத்தின் பெயரால் பெண்



எப்படி ஒதுக்கி வைக்கப்படுகிறாள் என்பதை தோலுரித்துக் காட்டும் கவிதை வரிகள் திராவிட இயக்க எழுத்தாளர் கவிஞர் கனிமொழி கருணாநிதிக்குச் சொந்தமானது.

திராவிட இலக்கிய எழுத்தாளர்கள் வரிசையில் கவிஞர் இளைய பாரதி, தனக்கே உரிய பாணியில் தன் பேனா முனையை ஆதிக்கத்திற்கு எதிராக உயர்த்தி வரும் கவிஞர். பெண்ணினத்திற்கும், பெண் விடுதலைக்கும் குரல் கொடுத்தும் மண்ணின் மனத்தோடும் எழுதிவருகிறார் கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன், சிறுபான்மை சமுதாயத்தில் இருந்து வந்து, பெரும்பான்மை மக்களுக்கும் பேசக்கூடிய எழுத்துக்களை படைத்து வரும் கவிஞர் சல்மா, நவீன இலக்கியத்தில் களமாடி வரும் திராவிட இலக்கிய எழுத்தாளர்.

எழுத்தாளர் இமையம், 'கோவேறு கழுதைகள்' என்ற நாவலின் மூலம் தமிழ் எழுத்துலகில் பரவலாக அறியப்பட்ட திராவிட இயக்க எழுத்தாளர். இவர் கருப்பு சிவப்பு வேட்டிக்கட்டிய இலக்கியவாதி எனவும் அறியப்படுபவர். இவர் 'கோவேறு கழுதைகள்' , 'ஆறுமுகம்', 'எங் கதெ', 'செடல்', 'செல்லாத பணம்' ஆகிய நாவல்களை எழுதியுள்ளார்.

பக்தி இலக்கியம், சங்க இலக்கியம், மரபு இலக்கியம் என தமிழ்நாட்டில் இலக்கிய நிலைமைகள் இருந்தபோது, திராவிட இயக்க எழுத்தாளர்கள் சமூகக் கொடுமைகளை சாடிய போது, இலக்கிய மரபுகளும் தூள்தூளா-யின. மூட பழக்கவழக்கங்கள் ஒழிய திராவிட இலக்கியம் பெருந்தொண்டாற்றியது.

இவர் எழுதிய சிறுகதைகள் தொகுக்கப்பட்டு 'மண் பாரம்', 'கொலைச்சேவல்', 'சாவு சோறு', 'வீடியோ மாரியம்மன்', 'நன்மாறன் கோட்டைக் கதை' ஆகிய தொகுப்புகளாக வெளியாகியிருக்கின்றன.

இவரது முதல் நாவலான கோவேறு கழுதைகள் 1994இல் வெளியானபோது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இமையம் இந்திய அரசு வழங்கிய இளநிலை ஆய்வு நல்கை, புதுமைப்பித்தன் படைப்பிலக்கிய விருது, ஆனந்த விகடன் விருது, பெரியார் விருது, தமிழக அரசு வழங்கும் தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது உள்ளிட்ட கௌரவங்களைப் பெற்றிருக்கிறார்.

"இமையத்தின் கதைகளின் சிறப்பு இதுதான். இந்தக் கதைகளின் சிறப்பை இலக்கியத் தோரணைகள், இலக்கிய உத்திகள், நிர்ணயிக்கவில்லை. அறிவுபூர்மாகத் தேர்ந்தெடுத்த சமூக தத்துவங்கள் நிர்ணயிக்கவில்லை. அதை யதார்த்தமான வாழ்க்கை நிர்ணியிக்கிறது. கதையின் சிறப்பு நிஜத்தின் சிறப்பு" என இமையத்தின் படைப்புகள் குறித்து குறிப்பிடுகிறார் இந்தியாவின் முக்கியமான மொழியியலாளர்களில் ஒருவரான டாக்டர் இ. அண்ணாமலை.

எழுத்தாளர் எஸ்.எஸ்.சிவசங்கர். தற்போது தமிழ்நாட்டு அரசின் போக்குவரத்துத்துறை அமைச்சராக பொறுப்பு வகிக்கும் இவர், அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் அருகே உள்ள தேவனூரைச் சேர்ந்த திராவிட இயக்க படைப்பாளி.

நக்சல் இயக்கம் மற்றும் தனித் தமிழ்நாடு கோரி ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்ட அமைப்புகளை பின்னணியாகக் கொண்ட இவரது தோழர் சோழன் என்ற புதினம், இவரது எழுத்தாற்றலுக்கு ஓர் எடுத்துக்காட்டு. இதுதவிர மக்களுடன் என் அனுபவங்கள் (2015), சோழன் ராஜா ப்ராப்தி (2019) ஆகிய நூல்களையும் சிவசங்கர் எழுதியுள்ளார்.

எழுத்தாளர் மனுஷ்யபுத்திரன், கவிஞர், பத்திரிகையாளர், கட்டுரையாளர், அரசியல் விமர்சகர் என பல்வேறு பதங்களில் அறியப்பட்டு வரும் திராவிட இயக்க எழுத்தாளர். உயிர்மை பத்திரிகையின் ஆசிரியர். திராவிட இலக்கிய எழுத்தாளராக இயங்கி வருகிறார். கவிதையை இளையோர் மத்தியில் இயக்கமாக ஆக்கி வருகிறார்.

இவருடைய கவிதைகள் பலரால் பாராட்டப்பட்டாலும், இவரது கட்டுரைகளில் வெளிப்படும் தெறிப்புகள் இவருடைய எழுத்தின் தரத்தை உணர்த்தும். இவர் எழுதிய காத்திருந்த வேளையில், எப்போதும் வாழும் கோடை, என்ன மாதிரியான காலத்தில் வாழ்கிறோம், எதிர் குரல் (4 பாகங்கள்), கை விட்ட கொலைக் கடவுள், குற்றமும் அரசியலும், டினோசர்கள் வெளியேறி கொண்டிருக்கின்றன, தோன்ற மறுத்த தெய்வம் போன்றவை மிக முக்கியமான கட்டுரைத் தொகுப்புகள் ஆகும்.

நவீன தமிழ் இலக்கியத்தில் தொடர்ச்சியாக இயங்கிவரும், திராவிட இலக்கிய எழுத்தாளர்களின் இந்த பட்டியலில் பலர் விடுபட்டுப் போயிருக்கலாம். ஆனால், மக்கள் சார்ந்த, மண்சார்ந்த தங்கள் படைப்புகளின் வழியே சமூகத்தை உயர்த்த முற்படுவோரும், ஆதிக்கத்தினால் பாதிக்கப்பட்டோரின் பக்கம் இருந்து தங்கள் பார்வையை செலுத்தி இலக்கியம் படைப்பவர்கள் யாவருமே திராவிட இயக்கத்தின் பாதிப்பு பெற்றவர்கள்தாம் என்பதை அறிக!.

சிறுகதை

அம்மா

இமையம்

திண்ணையில் உட்கார்ந்திருந்த கருப்புசாமி, பெரிய சிக்கலில் மாட்டிக் கொண்டதுபோல முகம் வாடிப்போய்த் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு தரையையே பார்த்தவாறு உட்கார்ந்திருந்தான். அவனுக்கு மூன்றடி தூரம் தள்ளி அருகாலுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருந்த செல்லம்மாள் கருப்புசாமியையே பார்த்தவாறு இருந்தாள். அவன் வாயைத் திறப்பது மாதிரியோ இவளைப் பார்ப்பது மாதிரியோ தெரியவில்லை. கடைசியில் செல்லம்மாள்தான் பேசினாள்.

'பெரிய பயலெ செத்தெக் கொண்டாந்து காட்டிட்டுப் போயன்; புள்ளேக் கண்ணுலியே நிக்குறாப்லெ இருக்கு. ஒம் பொண்டாட்டி புள்ளிவுளெ அயிச்சிக்கிட்டு வந்து இங்க ரெண்டு நாள் இருக்கச் சொல்லேன்.

புள்ளிவுளுக்குக் கூப்புடுற மாரியாப் பேரு வச்சியிருக்கிற, சுரேசு, மகேசுன்னுகிட்டு.'

'அனுப்புறன்.'

'என்னாத்தெ அனுப்புன? புள்ளிவோ இங்க வந்து வல்லிசா ஒரு வருசம் ஆவப்போவுது. இந்த வருசப் பொங்கத் தீவாளிக்குக்கூட வல்லெ.'

'லீவ் இருந்தாத்தான அனுப்புறதுக்கு?'

'ஒனக்குத்தான் வருசம் முன்னூத்தி அறுவது நாளும் மூச்சு வுட முடியாத அளவுக்கு வேலே. புள்ளிவுளுக்குமா லீவு இல்லெ?' என்று கேட்ட செல்லம்மாளுக்கு லேசாகக் கண்கள் கலங்கின. திடீரென்று அவளுடைய முகம் சிவந்தது. 'நீ இந்த ஊட்டுலெதான் பொறந்தங்கிறத மறந்துப்புடாத. ஒம் புள்ளிவுளுக்கு இந்த ஊருத் தண்ணீய குடிச்சா சளி புடிச்சிக்கும். இந்த ஊட்டுலெ படுத்தாக் கொசி கடிச்சி ஒம் புள்ளிவோ செத்துப்போயிடும், இல்லியா? எனக்கு என்னா ஆனாலும் ஒனக்கு சம்மதம். அப்படித்தான? நானும் ரெண்டு புள்ளெயப் பெத்து வளத்தவதாண்டா.'

கருப்புசாமி, செல்லம்மாளை முறைத்துப் பார்த்தான். லேசாகப் பல்லைக் கடித்தான். பிறகு தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டான். அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்தாள் செல்லம்மாள். அப்போது வாசலில் கூட்டமாக நான்கைந்து பன்றிகள் வந்து தரையை முகர்ந்து பார்க்க ஆரம்பித்தன. 'சு,சூ' என்று சொல்லிச் சத்தம் போட்டுப்



ஓவியம்: தமிழ்

பன்றிகளை விரட்டினாள். பன்றிகள் செல்லம்மாள் போட்ட சத்தத்திற்கு அசைந்து கொடுக்காததால், 'இந்தச் சாண்டெ குடிச்சவன் ஊருலெ இதுவோ தொல்லெதான் பெரும் தொல்லெ. கொள்ளெ நோவு வந்து ஒண்ணும் சாவ மாட்டேங்குது பாரன்' என்று சொல்லித் திட்டிக்கொண்டே எழுந்து வந்து பன்றிகளை விரட்டிவிட்டாள். கொஞ்சம் நேரம் வாசலில் நின்று தெருவில் ஆள் நடமாட்டம் இருக்கிறதா என்று பார்த்தாள். 'என்னா வெயிலு அடிக்குது' என்று சொல்லிக்கொண்டே வந்து, முன்பு உட்கார்ந்திருந்த இடத்திலேயே உட்கார்ந்து கொண்டாள்.

'நம்ப எதிர் ஊட்டுக்காரனோட புள்ளெ செத்தப்ப எயவு வச்சப்பவும் நீ வந்து தலெயக் காட்டுலன்னு மனக் கொறப் பட்டுக்கிட்டான். எதிரு ஊட்டுலெ நடக்குற நல்லது கெட்டதுக்கே போவலன்னா, அப்பறம் எப்படி ஒருத்தர் மூஞ்சியிலெ ஒருத்தர் மூச்சி க்கிறது? காசி பணம் 'வா'ன்னா வரும், 'போ'ன்னா போவும். மக்க மனுச அப்பிடியா? இந்தூர்ல நம்பளுக்குன்னு நாலு பேரு வாணாமா?' என்று சொன்னவள், கடுப்புடன் 'ஒம் மாமியா ஊட்டுச் சனங்களே போதுமின்னு இருக்கியா? ஆனவங்களோ, ஆவாதவங்களோ சொன்ன மொறமக்கிப் போயித் தலெய காட்டுறதுதானெ மருவாத. கோடிகோடியா பணமிருந்தாலும் கூட வராது தம்பி' என்று அவள் சொன்னதைக் காதில் வாங்காதவன் மாதிரி கைக்குட்டையால் புறங்கழுத்தைத் துடைக்க ஆரம்பித்தான்.

வலது காலின் பெருவிரல் நகத்திலிருந்து அழுக்கை எடுத்தவாறே விசும்பலான குரலில், 'ஒங்கப்பனாலயும் சரி, ஒங்கப்பன் ஊட்டுச் சனங்களாலயும் சரி, எந்தக் காலத்திலியும் வா வாத்த ஆதரவுகூட எனக்கு இருந்தது இல்லெ. இப்பப் பெத்த புள்ளெயாலயும் இல்லன்னு ஆயிப்போச்சி. நடக்க முடியாத காலத்திலியும் நானே ஒயச்சி நானே திங்குறன்' என்று சொன்ன செல்லம்மாளுக்குக் கண்கள் கலங்கின. முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். இரண்டு மூன்று முறை மூக்கை உறிஞ்சினாள். 'பேசாம அங்க வந்து இரு' என்றான் கருப்புசாமி. 'என்னாத்தெ வந்து இருக்கிறது? எந்த ஒறவுலெ இருக்கிறது? விடிஞ்சதும் பல்லெ விளக்கிக்கிட்டுப் போனா வெளக்கு வச்ச பெறவுதான் நீ வருவ. நேரா நேரத்துக்கு ஒம் பொண்டாட்டி சோத்தக் கொண்டாந்து எங்கிட்டெ நாயிக்கி வைக்கிறாப்ல வச்சிட்டுப் போயி மொடங்கிக்குவா. எங்கிட்டெ பேசுனா அவளோட அந்துசி கொறஞ்சிடும் பாரு. நாள் முயிக்க தனியாக் காட்டுல குந்திக் கெடக்குறாப்ல கெடக்கணும். இங்க இருந்தாலும், நாலு எடத்துக்குப் போனமா, நாலு பேரப் பாத்தமா, நாலு வாத்தெ வடிச்சமான்னு பொயிது போவும்.'

'நான் அவளெக் கேக்குறன்.'

'என்னாத்தெக் கேட்டெ? உள்பாவாடெ ஒண்ணு வாங்கியான்னு ஒங்கிட்டெ சொல்லி வருசம் ஒண்ணாச்சு. உடுத்துன துணிக்கி மாத்துத் துணி இல்லாமக் கெடக்குறன். பள்ளிக்கூடத்திலெ பொட்டே புள்ளிவுளுக்குக் கொடுத்த பாவாடெயில ஒண்ணு வாங்கித்தான் கட்டிக்கிட்டு கெடக்குறன்.'

'நேரமாச்சு. நான் கௌம்பட்டுமா?'

'நீ ஏயாவது படிக்கிறப்ப மரத்திலுருந்து கீய வியிந்து பீச்சக் கையி ஒடஞ்சிப்போச்சி. ஒன்னெத் தூக்கிக்கிட்டு நான் ஊர்ஊரா அலஞ்ச அலச்ச இருக்கே, அது அந்த ஆண்டவனுக்குக்கூட பொறுக்காதுடா. கை கூடிவரணுமேன்னு ராத் தூக்கமில்லாம, பவ தூக்கமில்லாம ஆறு மாசம் கெடந்தன் தம்பி' என்று சொல்லும்போதே செல்லம்மாளுக்கு அழுகை வந்துவிட்டது. அவள் அழ ஆரம்பித்ததும் கருப்புசாமிக்கு அந்த இடத்தில் உட்கார முடியாமல் போய்விட்டது. சங்கடமாக உணர்ந்தவன், கிளம்பிவிடலாம் என்று நினைத்தான். ஏதோ சொல்ல வாயெடுத்தவன், ஒன்றும் சொல்லாமல் தலையைக் கவிழ்த்துக்கொண்டு

உள்ளங்கைகளில் இருந்த ரேகைகளைப் பார்த்தான். அழுகையினூடே, 'இந்த வருசத் திருநாவுக்குக் கூட நீ வல்ல. இன்னிக்குகூட ஒம் பொண்டாட்டி ஊட்டுச் சொந்தக்காரங்க சாவுங்கிறதாலெ வந்த' என்று சொன்னாள்.

'எங்க முடியுது?'

'இப்ப எப்பிடி முடியும்? நான் சாவுற அன்னிக்காச்சும் வர முடியுமான்னு பாரு.' கருப்புசாமி வெடுக்கென்று தலையைத் துக்கிக் கோபமாகச் செல்லம்மாளைப் பார்த்தான். அவள் அவனைப் பார்க்காமல் சளியைச் சிந்தித் தரையில் தேய்த்தாள். அப்போது தெருவில் போய்க்கொண்டிருந்த மூக்கன், கருப்புசாமியைப் பார்த்ததும் விசாரிக்க ஆரம்பித்தான்.

'எப்ப கருப்புசாமி வந்த? சாவுக்கு வந்தியா? ஒம் பொண்டாட்டி புள்ளெயெல்லாம் எப்பிடி இருக்கு? வயசான காலத்திலெ ஒங்கம்மாவத் தனியா வுட்டுவச்சிருக்கியே. அது இன்னம் எம்மாம் காலத்துக்குத்தான் பாடுபட்டு சாப்புடும்?' என்று மூக்கன் தொணதொணவென்று பேச ஆரம்பித்ததும், செல்லம்மாள் இடைமறித்து, 'அவன் பாக்காம வேற யாரு பாக்கப் போறா? வெயிலுல நிக்குறியே மாமா? வெயில் தார வாயன், பேசிக்கிட்டிருக்கலாம். தம்பி இன்னிக்கி ஊர்லதான் இருக்கப்போறான்' என்று சொல்லி மூக்கனைத் தொடர்ந்து பேசவிடாமல் அனுப்பிவைத்தாள். 'உள்ளார வந்து குந்துடா தம்பி. தெருவுலெ போறவங்கவர்றவங்களுக்கெல்லாம் வதிலு சொல்லி மாளாது. ஒருத்தங்க கண்ணு மாரி இருக்காது. அப்பறம் காச்ச தலவலின்னு வந்துடும். அந்தக் காலத்திலிருந்தே ஒனக்கு நோவு தாங்காத ஒடம்பு' என்று சொல்லி அவள் எவ்வளவோ கட்டாயப்படுத்தியும், கருப்புசாமி உட்கார்ந்த இடத்தை விட்டு நகரவில்லை.

'நான் போறன்' என்று சொன்னான் கருப்புசாமி.

'புளி ரெண்டு உருண்ட தர்றன், எடுத்துக்கிட்டு போ' என்று சொன்ன செல்லம்மாள், எழுந்து வீட்டுக்குள் போய் அடுக்குப்பானைகளை இறக்கி உருண்டைஉருண்டையாக



உருட்டி வைத்திருந்த புளியை எடுத்து வந்து ஒரு பைக்குள் போட்டு அவனிடம் கொடுத்தாள். உட்காரப்போனவள், 'மொச்சப் பயிறு ஒரு படி ஆவும். இங்க யாரு இருக்கா திங்க. எடுத்துக்கிட்டுப் போயி புள்ளிவோகிட்டெ கொடுக்குறியா?' என்று கேட்டுவிட்டு, அவன் என்ன சொல்கிறான் என்பதைக்கூடக் கேட்காமல் மீண்டும் வீட்டுக்குள் போய் அடுக்குப் பானைகளை இறக்கி, மொச்சைப் பயிரைக் கொண்டு வந்து அவனிடம் கொடுத்தாள். முன்பு போலவே உட்கார்ந்து அவனிடம் பேச ஆரம்பித்தாள். சட்டென்று நினைவுக்கு வந்தது மாதிரி, 'நம்ப ஊரு ஏரியிலெ மீனு புடிக்கப் போனப்ப ரெண்டு கொயம்புக்கு ஆவுறாப்லெ மீனு ஆப்புட்டுது. ஒருத்திக்குப் போயி மீனு கொயம்பு வைக்கிறதான்னு காயப்போட்டுட்டன். கருவாடுன்னா புளிச்சிப்போன சோத்துலெ உப்பு போடாமக்கூட திங்கறவனாச்சே நீ! ஒனக்குன்னு வத்த போட்டு வச்சியிருக்கன், எடுத்தாரட்டுமா?' என்றாள்.

'சரி.'

சின்னப் பிள்ளை மாதிரி வேகமாக எழுந்து வீட்டுக்குள் போய், அடுக்குப் பானைகளை இறக்கி சவ்வுத்தாள் காகிதத்தில் முட்டணமாகக் கட்டிவைத்திருந்த கருவாட்டை எடுத்து வந்து கருப்புசாமி வைத்திருந்த பைக்குள் செருகிவைத்தாள்.

'விசயமிருந்தா ஆள் வுடு, வர்றன்' என்று சொல்லிவிட்டு எழுந்த கருப்புசாமியிடம், 'அக்காவ ஒரு எட்டு போயி பாத்துட்டு வாடா தம்பி' என்று சொன்ன செல்லம்மாளுக்கு லேசாகக் கண்கள் கலங்கின.

'பாக்குறன்.'

'படிச்சன் படிச்சன்'னு சொல்லிக்கிட்டு ஊர்க்காடு திரியிற பொறுக்கிப் பயலுக்கு எம் பொண்ணெக் கொடுக்க மாட்டன்னு சொன்ன ஒங்க மாமனாரு ஊட்டுச் சனங்க இப்ப ஒனக்கு ரொம்ப வேண்டப்பட்டவங்களாயிட்டாங்க! 'யாரப் பாத்துப் பொறுக்கிப் பயன்னு சொன்ன? என்னிக்கிருந்தாலும் எந் தம்பி கவுருமண்டு வேலெக்கிப் போவத்தான் போறான். ராசா மாரி கால ஆட்டிக்கிட்டு சாப்புடத்தான் போறான். அதெப் பாத்துட்டு இந்த ஊருப் பயலுவோ மூக்குமேல வெரல வக்கிறத நான் பாக்கத்தான் போறன்'னு சொல்லி ஊடேறிப் போயி சண்டெபோட்ட ஒத்தெ அக்காக்காரியப் பாக்க ஒனக்கு மனமில்லெ. கோயிக் குஞ்சியத் தூக்கிப் பறாந்துக்கு எற கொடுக்கிறாப்ல புருசன சாவக்கொடுத்துட்டு நாலு புள்ளிவுளெ வச்சிக்கிட்டு அவ படுற தவுசியப் பாத்து ஊரு சனங்களே வாயுருவிப் போவுது. எங்கிட்டெ என்னா இருக்கு கொடுக்கிறதுக்கு?' என்று சொன்னவளுக்கு அதற்கு மேல் பேச முடியவில்லை. அழ ஆரம்பித்துவிட்டாள். இடையில் 'காலக் கள, அந்திக் களன்னு வெட்டி அவதான் ஒன்னெப் படிக்கவச்சது' என்று சொன்னாள்.

'போயிப் பாக்குறன்.'

'செடிய வச்சித் தண்ணி ஊத்துனவங்களெ மறந்துப்புட்டு, பூத்ததப் பறிக்க வந்தவங்களெ நல்லவங்கன்னு நெனக்கிறது, செய்யுறதுதான ஒலக நடெமொற.'

'போறன், போறன்.'

'என்னாத்தெ போனெ? மூணு வருசமாத்தான் போற? கண்ணாலம் கட்டிப்போனாலும் புருசங்காரன் கண்ண மறச்சி, வருவாந்தோறும் ஒனக்கு அவ கையிலெ உள்ளத, 'இந்தாடா தம்பீன்னு' ஒனக்குக் கொடுக்கலெ? இன்னிக்கு அவ பீத்த மொறமாப் போயிட்டா, இல்லெ? நம்ப ஊட்டுக்கு அவ ஒரு பொண்ணு. அவ கண்ணுத் தண்ணீ வுட்டா ஒன்னெ அப்பிடியே கேட்டுடும்' என்று சொன்னவளுக்கு அழுகை வந்துவிட்டது. அழுகையினூடே, 'ஒனக்கு ஒங்க மாமனாரு ஊட்டுச் சனங்களெ பாக்குறதுக்கேதான் நேரம் பத்தாது' என்று சொன்னாள்.

‘செத்தே பேசாம இருக்கியா? இந்தச் சனியனுக்குத்தான் இங்க வர்றதில்லெ’ என்று சொல்லிக் கருப்புசாமி, செல்லம்மாளை முறைத்தான். அதே அளவுக்கு அவளும் திரும்பி முறைத்தாள். ‘நீ வேலெக்கிப் போறதுக்கு மின்னாடி, இன்ட்ரிக்கிப் போவணுமின்னு சொன்னப்ப, இந்த ஊருல நம்பள நம்பி நூறு ரூவா கொடுக்க ஆளு இருந்துச்சா? கடங்கேட்டு நான் யாரு யாரு காலுல எல்லாம் வியிந்தன்னு ஒனக்குத் தெரியுமில்லெ? நெய்யா பைசா பேரலை. வேற வய்யி இல்லாத, ‘புள்ளெயோட வேலெயவிட செத்துப் போனவன் கட்டுன தாலி பெருசா’ன்னு சொல்லித் தாலிய அடவு வச்சித்தான் அன்னிக்கி ஒன்னெ அனுப்புனன். ஒங்கப்பன் ஊட்டுப் பொருளுன்னு அது ஒண்ணுதான் எங்கிட்டெ இருந்துச்சி.’

‘இதயே எத்தினி தடவ சொல்லுவ? இந்தச் சனியனுக்குத்தான் ஊருக்கு வர்றதே இல்ல.’

‘எல்லாம் நடந்த கதெதானே! பொய்யாச் சொல்லுறன்? பெத்தவ ஒண்ணு நெனச்சா புள்ளெ ஒண்ணு நெனக்கிதுன்னு சும்மா சொல்லல தம்பி. எனக்கு எயிவது வயசாச்சி. இன்னம் களவெட்டித்தான் சோறு திங்கிறன்.’

‘என்னா மசுருல நடந்த கதெ’ என்று சொல்லி கருப்புசாமி கத்த ஆரம்பிக்கும்போது ராஜி வந்தான். ‘நீ வந்தன்னு சொன்னாங்க, அதான் பாத்துட்டுப் போவலாமின்னுதான் வந்தன்’ என்று சொன்னவனை முகத்திலடிப்பது மாதிரி ‘நீ போயி ரோட்டுல நில்லு ராஜி. நான் வர்றன், அங்க பேசிக்கலாம்’ என்று சொல்லி ராஜியைப் போகச் சொன்னான். ராஜி மறுபேச்சுப் பேசாமல் திரும்பிப்போனான்.

‘அவனும்தான் புள்ளென்னு இருக்கான். ஒத்தயா மூணு அக்கா, தங்கச்சிவுள ஒரு கொற இல்லாம சீர் செனத்தின்னு செஞ்சிக் கட்டிக்கொடுத்தான். மூணு பேரும் வந்தா இன்னிக்கும் நல்லதகெட்டதப் பாக்குறான். பெத்த தாயி தவப்பனக் குந்தவச்சி சோறு போடுறான்’ என்று ராஜியைப் பற்றிச் செல்லம்மாள் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, விர்ரென்று பையை எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டான் கருப்புசாமி. ‘காரு வர நேரம் இருக்கும்போதே யாண்டா தம்பி பறக்குறவன்?’ என்று கேட்டுவிட்டு, ‘இரு வர்றன்’ என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் போனாள். பழைய பெட்டியில் எதையோ தேடி எடுத்துக்கொண்டு வந்து, நூறு ரூபாய் நோட்டு இரண்டை அவனிடம் கொடுத்தாள். கருப்புசாமி பணத்தை வாங்கிக்கொள்ளாமல் வீறாப்பாக அவளிடமே திருப்பித்தர முயன்றான். கட்டாயப்படுத்தி அவனுடைய கையில் பணத்தைத் திணித்துவிட்டு, சாதாரணமாக, ‘ஒரு கோண மூஞ்சிக் குட்டிய வித்தன். ‘இந்தா தர்றன், அந்தா தர்றன்’ன்னு சொல்லி ஒரு மாசம் இயிக்கப்போட்டு நேத்துதான் பணத்தெக் கொண்டாந்து கொடுத்தானுவோ. பணத்தெ வச்சிக்கிட்டு நான் என்னாப் பண்ணப் போறன்? இதெ வச்சி ஒம் மவளுக்கு என் நெனவா ஒரு காலு கொலுசி எடுத்துப்போடு’ என்று சொல்லிவிட்டு அவனிடமிருந்து கைப்பையைக் கட்டாயப்படுத்தி வாங்கிக்கொண்டு வீட்டைச் சாத்திவிட்டு ‘வாடா தம்பி, காரு ஓடிப்போயிடும்’ என்று சொல்லிவிட்டு முன்னே நடக்க ஆரம் பித்தாள்.

ஏதோ சொல்ல வாயெடுத்த செல்லம்மாளிடம், ‘பேசாம வாம்மா’ என்று கருப்புசாமி சொன்னதைக் காதில் வாங்காதவள் மாதிரி சொன்னாள்: ‘பொண்டாட்டின்னு ஒங்கப்பங்காரன்கிட்டே தாலி கட்டிக்க வந்த நாளுல இருந்து ஒங்கக் கூட்டத்திலெ இந்த வாத்தயத்தான் நான் கண்டன். என்னோட ஆவி போனாத்தான் ஒனக்கு நல்லதுகெட்டது தெரியும் தம்பி. எனக்கு நீ முந்தியா, ஒனக்கு நான் முந்தியா? ஒன்னெ நம்பியாடா நான் பொறந்தன், போடா.’



ஓவியம்: ரமணன்

சிறுகதை

வரைகின்றவன் கை

அழகிய பெரியவன்

விளம்பரத்தை எழுதவேண்டிய இடம் வந்ததும் வாகனத்தை நிறுத்தச்சொல்லி இறங்கிய பல்லவன், வண்டியை சாலையை ஒட்டி இருந்த பூந்திக்கொட்டை மரத்தடி நிழலில் நிறுத்தும்படி ஓட்டுநரிடம் சொன்னான். அங்கு ஊர் மாடுகள் இரண்டு அசைபோட்டபடி படுத்திருந்தன. பல்லவன் அந்த இடத்தை நாலா திசையிலும் பார்த்தான்.

நெடுஞ்சாலையிலிருந்து கிளை பிரிந்துச் செல்லும் கிராமத்துச் சாலை அது. சாலையின் இரு புறமும் புளியமரங்களும், உண்ணிப் புதர்களும், ஓணான் கொடிகளுமாக பார்ப்பதற்கே அழகாக இருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாக வீடுகளும் நெல்வயல்களும் தெரிந்தன. தொலைவில் ஒரு மலை, இரண்டு பெரும்பாறைகளுடன் நீலவானப் பின்னணியில் எழுந்து நின்றது. பல்லவன் அந்த நிலத்தோற்றத்தையே சிறிது நேரம் மெய்மறந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்த வழியாகச் சென்ற ஆட்கள் சிலர் அவர்களை ஒருமுறை நன்றாகக் கவனித்துப் பார்த்துவிட்டு கடந்து சென்றனர். சில நிமிடங்களுக்குப் பிறகு, தன்னுடன் இருக்கும் ஆட்களை அழைத்து, சாலை ஓரத்திலிருக்கின்ற ஒரு பழைய கட்டடத்தின் சுவரைக் காட்டி, வேலைக்கு ஏவினான் பல்லவன்.

''காலையிலிருந்து நாலு சுவரு கூட முடிக்கல. பொழுது ஏறிட்டே போவுது. சீக்கிரம் ஆகட்டும். சாரம் போடுங்க. எழுதிட்டு வேற எடத்துக்குப் போகணும்.''

வாகனத்தை ஓட்டிக்கொண்டு வந்தவன் சரியென்று தலையை ஆட்டினான். அவனும், உடனிருந்தவர்களும் துரிதகதியில் வேலையில் இறங்கினார்கள். ஒருவன் அவர்கள் வந்த வாகனத்தின் மேலே ஏறி ஏணியையும், மூங்கில் கழிகளையும் கீழே இருக்கிறவர்களிடம் எடுத்துக் கொடுத்தான். அவையெல்லாமே வண்ணங்கள் பட்டு வேறு வேறு பொருட்களைப் போலத் தோற்றமளித்தன. கயிறுகளையும், நெய்வண்ணக் கலன்களையும் கொடுத்தபிறகு அவன் கீழே இறங்கிக் கொண்டான்.

விளம்பரம் எழுதவேண்டிய சுவருக்குக் கீழே நின்று, எழுதுவதற்கு தோது செய்து கொள்ளும் வகையில் இரண்டுபேர் அங்கு வளர்ந்திருக்கும் எருக்கஞ்செடிகளையும் ஆனைப்புற்களையும் வெட்டியும் செதுக்கியும் நீக்கினர். மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்த பல்லவன், அந்த வேலை முடிந்ததும் சுவரில் அளவு பிடித்து எழுதுகின்ற பகுதியைக் குறியிட்டான். உடனே மற்றவர்கள் சித்திரம் வரையும் இடத்தை மட்டும்

ஒதுக்கிவிட்டு, நீல வண்ணத்தூளில் தோய்த்த நூலைப் பயன்படுத்தி தரையிலிருந்து எட்டும் உயரம் வரைக்கும் எழுத்துகளின் அளவுக்கேற்ப கோடு போட்டார்கள்.

அளவுகள் எல்லாவற்றையும் போட்டு முடித்ததும் மூங்கில் கழிகளை சுவரில் சாய்த்து சாரம் கட்டினார்கள். பல்லவன் சாரத்தின்மீது ஏறி சரசரவென விளம்பரத்துக்குரிய சித்திரத்தை வரையத் தொடங்கினான். அவன் அருகில் நின்ற மற்றவர்கள் விளம்பர வாசகங்களை எழுதத் தொடங்கினர். அது ஒரு சிமெண்ட் விளம்பரம்.

தமிழ்நாடு முழுவதும் சாலையோரச் சுவர்களில் அந்த விளம்பரத்தை எழுதுகின்ற வேலை ஒப்பந்தத்தை பல்லவன் பெற்றிருந்தான். தன்னுடைய சொந்த ஊரான திருச்சியிலேயே சின்னச்சின்ன ஓவிய வேலைகளைச் செய்துவந்த பல்லவனின் மனதுக்குள், பெரிய விளம்பர நிறுவனம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்கிற கனவு கனன்று கொண்டிருந்தது. அதை அவன் வெளிப்படுத்தும்போது, 'பல்லவன் சிற்பக்கூடம் போல, பல்லவன் ஓவியக்கூடமா?' என்று சிலர் நகைத்துக் கொண்டார்கள்.

தான் விரும்பிய நிறுவனத்தை அமைப்பதற்கு ஓரளவு பணத்தை ஈட்டிக்கொள்ள இந்தச் சுவர் விளம்பர வேலை கைகொடுக்கும் என்று பல்லவன் நம்பினான். எழுது வேலை ஒப்பந்தத்தை சிமெண்ட் நிறுவனத்திடமிருந்து பெற்ற உடனே, நான்குபேரை வேலைக்கு அமர்த்திக் கொண்டு, மலிவு விலையில் வாங்கிய ஒரு வாகனத்தில், வீட்டையும், மனைவி பிள்ளைகளையும் மறந்து ஊர்ஊராகக் கிளம்பிவிட்டான்.

அந்தச் சுவரில் விளம்பரத்தை எழுதி முடித்த பின்னர் கீழே இறங்கிவந்த பல்லவன், சாலையில் சிறிதுதூரம் தள்ளிநின்று விளம்பரத்தைக் கூர்ந்து பார்த்தான். எழுத்தமைவில் கோணல்களோ, வாசகங்களில் பிழைகளோ இருக்கிறதா என ஆராய்ந்தான். அப்போது அவனுக்கு அருகில் நின்றிருந்த ஒருவர் சொன்னார்.

''எல்லாம் சரியா இருக்கு தம்பி!''

அந்த மனிதர் அங்கு நின்று அவர்களின் வேலையை கவனித்திருப்பார் போலிருந்தது. பல்லவன் அவரைத் திரும்பிப் பார்த்தான். அந்த மனிதர் நடுவயதைக் கடந்தவராக நரைமுடியுடன் தெரிந்தார். கண்ணியமாக உடுத்தியிருந்தார். அவரைப் பார்த்தவுடனேயே தன்னையும் அறியாமல் பல்லவனுக்கு மரியாதை உருவானது. அவர் புன்னகை செய்தார்.

''நான் இங்கதான் பக்கத்து ஊருல, பள்ளிக்கூட தலைமையாசிரியரா இருக்கிறேன். எங்க பள்ளிக்கூட சுவத்துல தேசத் தலைவர்களோட படங்களை வரையணும். உங்களப் பாத்ததும் கேக்கணும்னு தோணுச்சி. உங்களால முடியுமா? நீங்க கேக்குற தொகையக் கொடுத்திட்றேன்!''

ஒரே ஒரு நொடியை மட்டும் சிந்திக்க எடுத்துக்கொண்ட பல்லவன் உடனே சரியென்று தலையாட்டினான்.

''கட்டாயம் வரைஞ்சி கொடுக்குறோம். ஆனா, பணம் எதுவும் வேணாம்!''

அந்த மனிதரிடத்தில் இல்லையென்று சொல்வதற்கு அவனால் முடியவில்லை. வீட்டுக்குச் சென்று ஒரு மாதத்துக்கு மேலாகியிருந்தது. ஊரிலிருந்து வெகு தொலைவுக்கு வந்து விட்டிருந்தனர். மன அழுத்தம் கூடிய அவர்களின் நிலையை பள்ளி மாணவர்கள் நிச்சயம் போக்கிவிடுவார்கள் என்று எண்ணிக் கொண்டான் பல்லவன்.

தன்னுடன் இருக்கின்றவர்களிடத்தில் விவரத்தைச் சொன்னபோது, அவர்கள் எதற்கு இது என்பதைப்போல அவனைப்பார்த்தனர். அவன் பொருட்களையெல்லாம் வாகனத்தில் ஏற்றிக் கொண்டு, முன்னால் சாலையில், டி.வி.எஸ் 50ல் போய்க்கொண்டிருக்கும் தலைமையாசிரியரைப் பின்தொடரும்படி ஓட்டுநரிடத்தில் உறுதியாகச் சொன்னான்.

அழகும் பசுமையும் நிறைந்த அந்தக் கிராமச் சாலையில் சென்றுகொண்டிருக்கும்போது, பல்லவனுக்கு தன்னுடைய பள்ளிக்கூட நாட்களெல்லாம் நினைவுக்கு வரத் தொடங்கின. செழித்த வயல்பாங்கான கிராமம்தான் அவனுடையதும். வெய்யிலும் மழையும் விழும்படிக்கு அகன்ற தாழ்வாரத்துடன் கூடிய, எதிரும் புதிருமாக இரண்டு அறைகளைக் கொண்ட பள்ளி அவன் படித்தது. பள்ளியின் வாசலிலும், தோட்டத்திலும் நிறைய மரங்களும் பூச்செடிகளும் இருந்தன.

ஒருநாள் பள்ளிக்கு வந்திருந்த சித்திரக்காரர் ஒருவர் நீளமான ஏணியைப் போட்டு, வகுப்பறைகளின் உயரமான சுவர்களில் ஓவியங்களைத் தீட்டிச் சென்றார். அந்தப் பள்ளியில் தலைவர்களும், புலவர்களும், அரசர்களுமாக நிறைந்து விட்டனர். அங்கு அவர்களும் தன்னுடன் சேர்ந்து படிப்பதாக நினைத்துக் கொண்டான் பல்லவன்.

அந்தச் சித்திரக்காரர் கரித்துண்டுகளையும், இலைத்தழைகளின் சாற்றையும், பூக்களின் வண்ணங்களையும் கொண்டு அற்புதத்தை நிகழ்த்தினார். அவர் விரல் நீட்டும் இடத்தில் சித்திரங்கள் உருவாயின. தானும் ஒரு சித்திரக்காரனாக ஆகவேண்டும் என்று பல்லவன் முடிவுசெய்து கொண்டது அப்போதுதான்.

மேல்நிலைப்பள்ளி வகுப்புகளில் படித்துக் கொண்டிருக்கையில் பல்லவன் கனவுகளில் வண்ணங்களே குழைந்தன. வெவ்வேறு வண்ணங்கள், வெவ்வேறு வண்ணங்களின் மீது படிந்து புதிய வண்ணங்கள் உருவாகின. பள்ளிக்குச் செல்வதை மறந்து, பக்கத்து ஊர்களில் எங்கெல்லாம் ஓவியர்கள் எழுதுகிறார்களோ அவற்றையெல்லாம் பார்ப்பதற்கு மிதிவண்டியில் அலைந்தான். பேருந்திலேறி திருச்சிக்கும், வேறு நகரங்களுக்கும் சென்று ஓவியர்கள் வரைவதை நாட்கணக்கில் நின்று பார்த்து வந்தான்.

நீர் வண்ண ஓவியம் போலத் தோற்றமளித்த ஒரு பள்ளியின் முன்னால் நின்றார் தலைமையாசிரியர். அவரையும், வண்ணச் சாக்கைகள் படிந்த சித்திர வாகனத்தையும் பார்த்த குழந்தைகள் ஆரவாரக் கூச்சலுடன் ஓடிவந்து சூழ்ந்துக் கொண்டனர்.

''நம்ம பள்ளிச் சுவத்துல தலைவர்களோட படங்களை வரயப்போறாங்க''

தலைமை ஆசிரியர் சொன்னதும் மாணவர்களின் உற்சாகக்கூச்சல் மேலும் அதிகமானது. குழந்தைகள் அவர்களை வியப்புடன் பார்த்தார்கள். சிலர் அருகில் வந்து பல்லவனையும் மற்றவர்களையும் தொட்டுப்பார்த்துச் சிரித்தார்கள். சிலர் கேள்விகளைக் கேட்டார்கள்.

அந்தப் பள்ளியின் சுற்றுச்சுவரை ஒட்டி நிறைய மரங்கள் இருந்தன. அவற்றில் நிறைய பறவைகளும் இருந்தன. உள்ளே தெரிந்த சிறு மைதானத்தின் ஓரங்களில் பூச்செடிகள் பூத்திருந்தன. பல்லவனுக்கு சிறுவயதில் தான் படித்த பள்ளி நினைவுக்கு வந்தது. மனமெல்லாம் மகிழ்ச்சியால் நிரம்பி, இலேசாகிப் பறந்து, அடிநாள் நினைவுகளில் உறைந்தான். அவனுடைய இலயிப்பைக் கலைக்கும் விதமாக அருகில் வந்த தலைமை ஆசிரியர், பல்லவனை அழைத்தார்.

''இந்த வெளிப்புறச் சுவர்ல எத்தனை முடியுமோ அத்தனையும் வரையுங்க தம்பி''

இயல்பு நினைவுக்குத் திரும்பிய பல்லவன் சரியென்று தலையாட்டிவிட்டு அந்தச் சுற்றுச் சுவரைப் பார்த்தான். அங்கு எப்படியும் ஆறு படங்களுக்குமேல் வரையலாம் என்று தோன்றியது. தலைமை ஆசிரியருடைய ஆலோசனையைக் கேட்டு எந்தெந்தத் தலைவர்களை வரையலாம் என்று முடிவெடுத்த பிறகு உடனிருப்போர்க்கு உத்தரவுகளைச் சொன்னான். வண்ணச்சித்திரம் வரைவதென்றால் வண்ணங்கள் உலர வேண்டும். அதற்கு பல மணிநேரங்கள் பிடிக்கும். அதனால் கோட்டுச் சித்திரங்களாக வரைந்து விடலாம் என்று அவர்கள் முடிவெடுத்தார்கள்.

திருவள்ளுவரை வரையும் பொருட்டு பள்ளி வாயிலுக்கு அருகில் இருக்கும் இடத்தை தனக்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்டான் பல்லவன். மற்றவர்கள் அவரவர் விரும்பிய இடங்களைத் தேர்ந்தெடுத்து வெள்ளை பூசத் தொடங்கியிருந்தனர். அப்போது, ஓவியங்கள் வரையப்படுவதை கவனிப்பதற்கு ஆர்வமுடன் வெளியே வந்த ஒரு சிறுவன் பல்லவனின் அருகில் நின்றான்.

''வகுப்புக்கு போகலையாடா தம்பி?''

''நீ வரையறத கொஞ்சநேரம் பாத்துட்டுப் போறேண்ணா. சார் ஒன்னும் திட்டமாட்டாரு!''

சிறுவனின் பதிலைக் கேட்டுச் சிரித்த பல்லவன் சுவரைத் துடைத்து, வெள்ளைப்பூசி, சிறிதுநேரம் காயவிட்டு, திருவள்ளுவரை வரையத் தொடங்கினான்.

''நீ கோடு போட்டதும் படத்துக்கு உயிர் வந்துடுச்சிணா!''

சிறுவன்தான் பேசுகிறானா என்று வியந்து பார்த்த பல்லவன் மேலும் வரைவதில் ஆழ்ந்தான். அந்த நேரத்தில் அவனுடைய கைபேசி ஒலித்தது. வரைவதை நிறுத்திய பல்லவன் சற்று தொலைவாகச் சென்று பேசினான். ஊரிலிருக்கும் அவனுடைய மனைவியின் குரல் கவலையுடன் ஒலித்தது.

''ரெண்டு மூனு நாளா பெரியவளுக்கு ஒடம்பு சரியில்ல. நானும் நல்லாயிரும்னுதான் உங்கக்கிட்ட சொல்லாம இருந்தேன். காய்ச்சல் இப்பவும் கொறையில. எனக்கு என்னா பண்றதுன்னே தெரியில. ஒடனே கெளம்பி வாங்க''

பல்லவனின் மனம் சடாரென்று கனத்து விட்டது. அவன் தன் மனைவியிடம் பதற்றத்துடன் பேசினான். உடனே வருவதாகச் சொன்னான். கைபேசியை அணைத்து விட்டு சித்திரத்தின் முன்னால் வந்து நின்றான். அவன் உடல் இலேசாய் நடுங்கியது. வேடிக்கைப் பார்ப்பதற்காக அங்கு நின்றிருந்த சிறுவனையும், பாதி முகத்துடன் இருந்தத் திருவள்ளுவரையும் மாறிமாறி பார்த்துக் கொண்டான். தன்னை ஒருவாறு திரட்டி தூரிகையை எடுத்து மீண்டும் வரையத் தலைபட்டான். ஆனால் பல்லவனின் விரல்களில் பழைய உறுதியில்லை. கோடுகள் பிசகி வள்ளுவரின் முகம் கோணியது.

''போங்கண்ணா! திருவள்ளுவர் முகமே மாறிடுச்சி. வரையறவங்க கை நடுங்கலாமாண்ணா? இனி எப்பத்துக்குமே இது இப்பிடியேதான் இருக்கப் போகுது''

வேடிக்கைப் பார்க்க நின்றிருந்த சிறுவன் வள்ளுவரைப் பார்த்துச் சொன்னதும் பல்லவனின் மனம் அதிர்ந்தது. முகத்தில் எதுவோ அறைந்ததைப் போல உணர்ந்தான். சிறுவன் சொல்வது எவ்வளவு உண்மை? சித்திரங்களை உயிர்ப்பிப்பவனுடைய கைகள் நடுங்கினால் அவன் உயிர்ப்பிக்கும் சித்திரங்கள் என்னவாகும்?

''வரையறவங்க கை நடுங்கலாமாண்ணா?''

பல்லவன் அந்தச் சிறுவனை பார்ப்பதற்காகத் திரும்பினான். சிறுவனோ பள்ளிக்குள் சென்று கொண்டிருந்தான். போகின்ற சிறுவனையே பார்த்தபடியிருந்த பல்லவனின் கனத்த மனம் மெல்ல இலகுவாகத் தொடங்கியது. தெளிவு பிறந்தார் போலிருந்தது. எத்தனைத் தடுமாற்றங்கள் வந்தாலும் சிலர் நடுங்கிடவே கூடாது. பிழைகள் நிரந்தரமானால் ஒழுங்கமைவு சிதைந்து விடும்தானே?

பல்லவனின் விரல்கள் இப்போது தூரிகையை உறுதியாகப் பிடித்திருந்தன.

சிறுகதை

கையெழுத்து

இரா.நாறும்பூநாதன்

ம்ஹூம்.. சரியாக வரவில்லை.
இந்தமுறை கடைசியாக வரும் 'ன்' வரவில்லை.
சங்கரநாராயணன் சாருக்கு கை விரல்கள் லேசாக நடுங்கின.
'இன்னொருக்க போடுங்க சார்.. கடைசில 'ன்' வரணும்'
என்றான் முருகேசு.

தான் உட்கார்ந்திருந்த நாற்காலியில் இன்னும் சற்று வசதியாய் உட்காரணும் போலிருந்தது அவருக்கு. புரிந்து கொண்ட முருகேசு,

'நீங்க நல்லா ஒக்காந்துக்கோங்க.. அவசரமில்லாம நிதானமாய் போட்டாபோதும்..'

என்றவன், தனது இருக்கை அருகே இருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்து வந்து சாரிடம் நீட்டினான்.

'கொஞ்சம் தண்ணீ குடிச்சுக்கிறீங்களா'

அவருக்கு அப்போது தாகம் இல்லை என்றாலும், ஒரு சிறு இடைவெளி தேவையாக இருந்தது.

மனதுக்குள் எண்ணங்கள் ஓடின. 'கடைசியாய் எப்போது கையெழுத்துபோட்டோம்?'

தண்ணீர் பாட்டிலை எடுத்து அண்ணாந்து குடித்தார். கொஞ்சம் சட்டையில் சிந்தியது. தோளில் போட்டிருந்த அங்கவஸ்திரத்தால் துடைத்துக்கொண்டார்.

இப்போ என்ன வேலைக்கா போகிறார்.. அடிக்கடி கையெழுத்துப்போட.

ஆசிரியர் பணியில் இருந்து ரிட்டயர்டு ஆகி பதினைந்து வருடங்களுக்கும் மேலாகி விட்டது. இந்த மாதிரி வங்கிக்கு வந்து பென்ஷன் பணத்தை எடுக்க.. சமயங்களில் கார்பொரேஷன் ஆபீஸ் போனால் மனு எழுதிக்கொடுக்க..

ஹிந்து பேப்பர் படித்து விட்டு லெட்டர்ஸ் டு தி எடிட்டர் க்கு எழுதிப்போட..

என்று தான் அவரது வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்தது.. கொஞ்ச காலம் அதுவும் குறைந்துபோய் விட்டது. குறைந்து என்ன.. நின்றேபோய் விட்டது என்றுதான் சொல்லணும்.



ஓவியம்: அரஸ்

ஒருமுறை சாலையில் நடந்து சென்றவரை, இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தவன் தட்டி விட்டுச்சென்றான்.

'பெருசு.. நீயெல்லாம் இந்த வயசுல வீட்டில கெடக்க வேண்டியதுதானே..'

என்று திட்டி விட்டு வேறு சென்றான். வலது கால் முட்டியில் நல்ல சிராய்ப்பு.

பால் ஊற்றும் பரமசிவம் தான் அவரை தூக்கி விட்டான்.

'நீ ஒழுங்கா ஓட்டிட்டுப்போலே மூதி.. பேசுறான் நல்லாப்பேச்சு..' என்று அவனை ஏசி விட்டு, இவரை கைத்தாங்கலாய் வீட்டுக்கு அழைத்துச்சென்றான். சிவந்த முட்டியில் இருந்து ரத்தம் கசிந்து வேட்டியை நனைத்தது.

மகன் சபாபதி பதறிப்போனான்.

'ஏன்பா.. இன்னைக்கு வெளியே போனீங்க.. ஊருல ஆயிரம் அநியாயம் நடக்கும். நீங்க மனு எழுதிப்போட்டா எல்லாம் சரியாயிருமா.. பேசாம வீட்ல இருங்க..' என்று சொன்னபோது, இரு சக்கர வாகனத்தில் திட்டி விட்டுப்போனவனுக்கும் இதற்கும் பெரிய வித்தியாசம் இல்லை என்று அவருக்குத்தோணியது.

அதற்குப்பிறகு வீட்டை விட்டு வெளியே போவதே இல்லை.

ஹிந்து பேப்பர் படிப்பதோடு சரி.. லெட்டர் எழுதிப்போடுவது இல்லை. ஒருமுறை சபாபதியிடம் கார்டு வாங்கி விட்டு வரச்சொன்னபோது 'கார்டு ஸ்டாக் இல்லையாம் பா..' என்றான்.

என்ன சொல்றான்? போஸ்ட் ஆபீஸ்ல போஸ்ட் கார்டு ஸ்டாக் இல்லாமல் போகுமா? தனது எழுபத்தைந்து வயது சர்வீஸில் இப்படி கேள்விப்பட்டதே இல்லையே.. யாருமே போஸ்ட் கார்டு வாங்குவதில்லையா?

இதை யாரிடம் கம்பளைண்ட் பண்ண? கை துறுதுறுத்தது.

'யாருப்பா இப்பல்லாம் லெட்டர் போடுறா? ஈமெயில் வந்தாச்சு.. மொபைல்ல அனுப்பீருதாங்க.. போஸ்ட் கார்டு, இன்லேண்ட் லெட்டர்லாம், தந்தி மாதிரி சீக்கிரமே அழிஞ்சு போயிடும் பா..' என்று அவன் சொன்னபோது, அவர் உடல் அதிர்ந்து போனது.

கையால் எழுதுவது அவ்வளவு கேவலமா ? போஸ்ட் கார்டு அழிஞ்சே போகுமா.. அவர் நண்பர்கள் எழுதிய கடிதங்கள் தான் எத்தனை எத்தனை ..அவரது டிரங்க் பெட்டியில் பாதி இடத்தை போஸ்ட் கார்டுகளும், இன்லேண்ட் லெட்டர்களும் தானே அடைத்துக் கொண்டிருக்கின்றன.

'சார்.. இப்போ வேற ஸ்லிப்பில் கையெழுத்துப் போடுறீங்களா'

முருகேசு கேட்டபோது தான் நனவுலகிற்கு வந்தார் சங்கரநாராயணன் சார்.

மனம் கொஞ்சம் லேசானதுபோல இருந்தது.

அவரது கருப்பு பவுண்டைன் பேனாவின் மூடியைத்திறந்து பணம் எடுக்கும் ஸ்லிப்பில் கையெழுத்தைப்போட துவங்கினார்.

எல்லாம் சரியாகத்தான் வந்தது. ஆனால், நாராயணன் என்ற இரண்டாம் பகுதியில் 'ன்' போட்டு ஒரு நீண்ட இழுப்பின் முடிவில் 'ன்' உடன் முடியும். அந்த இழுப்பு மிஸ்ஸிங்..

சார் முருகேசுவின் முகத்தையே பார்த்தார் இப்போது, 'சரியா வந்துட்டுதுல்ல இப்போ' என்பது போல.

முருகேசு, இப்போது வங்கி மேனேஜரின் முகத்தைப்பார்த்தான். அவர் திருப்தியடையவில்லை என்பது தெரிந்தது.

'சார்.. எனக்கு ஏழாம் வகுப்பு கிளாஸ் டீச்சர்..நான் வேணும்னா தெரிந்தவர் என்பதற்கு ஒரு கையெழுத்துப்போட்டு தரேன் சார்..' என்றான் முருகேசு.

மேனேஜர் சிரித்தார். 'நீங்க போனவாட்டியே சொன்னீங்க முருகேசு.. எத்தனை தடவை இப்படி வாங்குவது.. நான் சொன்ன மாதிரி செய்ங்க.. அதுதான் நல்லது..' என்று அவர் இவனைப்பார்த்து சொன்னபோது, சங்கரநாராயணன் சார் 'எனி பிராப்ளம் சார்' என்றார்.

முருகேசு மீண்டும் ஆங்கில வாத்தியார் சங்கரநாராயணனை உற்றுப்பார்த்தான்.

★ ★ ★

சங்கரநாராயணன் சார் இங்கிலீஷ் க்ராமர் எடுத்தால் தெளிவாய் புரியும்படி எடுப்பார். ஆக்ட்டிவ் வாய்ஸ், பேசிவ் வாய்ஸ் நடத்தும்போது கரும்பலகை முழுவதும் அவரது அழகான கையெழுத்தாகத்தான் இருக்கும். கூட்டெழுத்தில் ஆங்கில எழுத்துக்கள் தெளிவாய் தெரியும்.

கோபம் வந்து விட்டது என்றால், கையில் உள்ள சாக்பீஸ் துண்டை சட்டென ஒடித்து மேலே எறிந்து விடுவார். பிரம்பு அவருக்கு தேவைப்படாது. 'படிக்காட்டி ஒரு நாயும் உன்னை மதிக்காது. எழுதப்படிக்க தெரியாத பயலுக மார்க்கெட்டில் மூட்டை தூக்கித்தான் பொழைக்கணும் பார்த்துக்க' என்று திட்டுவார்.

'ஒனக்குப்புரியணும்னு தான தமிழ்ல சொல்லி விளக்குறேன்.. அப்பவும் வகுப்பை கவனிக்காம, எங்கியாச்சும் பராக்குப் பார்த்துட்டு இருந்தேன்னா ஈரமண்ணால விளங்கும்' சார் மாணங்கண்ணியாக திட்டுவார்.

அவர் வகுப்பு முடிந்து அடுத்த வகுப்பு ஜான்சன் சார் வந்தவுடன், கரும்பலகையை அழிக்கப் போகுமுன் கேட்பார்.

'போன பீரியட் சங்கரநாராயணன் சாரா'.

சாரின் அழகான கையெழுத்து பள்ளி முழுவதும் பிரபலம். இங்கிலீஷ் காம்போசிஷன் நோட்டு திருத்தும்போது சொல்வார்.

'டேய் பசங்களா.. பரீட்சை பேப்பர் திருத்தும்போது, அழகான கையெழுத்துல இருக்குற பேப்பரை பார்த்தாலே, மனசு நல்லா இருக்கும்டா.. தப்பாய் நீ எழுதி இருந்தால் கூட, சமயங்களில் அது தெரியாது.. கண்களை மயக்கும். மார்க்குகளை அள்ளிப்போடுவோம்.. கோழி கிண்டுன மாதிரி எழுதுனா, சரியாய் எழுதியிருந்தாலும் மார்க் போட மனசு வராது..ரெட்டைக்கோடு நோட்டையே அதுக்குதாண்டா கண்டுபிடிச்சுருக்கான்.. ஒழுங்கா எழுதுங்க..' என்று போதனை செய்வார். எவன் கேட்டுருக்கான்..

முருகேசு கையெழுத்து மேலே சொன்ன கோழி கிண்டுன கேஸ் தான். மணிக்கட்டு மொழியில் பலமுறை ஸ்கேலால் அடி வங்கியிருக்கிறான்.

ஒரு மழைக்காலத்தில், கீழே குனிந்தபடி வங்கியில் வேலை பார்த்துக்கொண்டிருந்த முருகேசு, 'சார்.. எக்ஸ்கியூஸ் மீ..' என்ற குரல் கேட்டு நிமிர்ந்தான். ஒரு நிமிடம் வெலவெலத்துப்போய் விட்டான். எதிரே ஆங்கில வாத்தியார் சங்கரநாராயணன் சார் நின்று கொண்டிருந்தார். தலை நன்றாக நரைத்திருந்தாலும், சார் முகத்தை மறக்க முடியுமா?

'சார்.. நல்லா இருக்கீங்களா..' என்று எழுந்தான்.

மழையில் வந்திருப்பார் போல. குடையை மடக்கி சுவர் ஓரத்தில் சாத்தி வைத்தார். தண்ணீர் சொட்டிக்கொண்டிருந்தது. அவருக்கு இவனை எல்லாம் ஞாபகமாய் இருக்கப்போகிறது..?

'கொஞ்சம் நேரம் ஆயிட்டது.. பென்ஷன் பணம் இப்போ எடுக்கலாமா..டைம் முடிஞ்சு போயிட்டுது.. லேட்டா வந்ததுக்கு மன்னிக்கணும் சார்..' என்று தனது மூக்கு கண்ணாடியை சரி செய்துகொண்டே பேசிக்கொண்டிருந்தார்.

'சார்.. சார்.. என்ன சார்.. நீங்க.. மன்னிப்பெல்லாம் கேட்டுட்டு.. ஸ்லிப்பில எழுதிக்கொடுங்க.. பணம் வாங்கிக்கலாம்..' என்றபடி பணம் எடுக்கும் ஸ்லிப்பை நீட்டினான் முருகேசு.

'தேங்க் யூ சார்..' என்று புன்னகைத்தபடி எழுதத் தொடங்கினார் சார். சாரின் அந்த கையெழுத்தை ரசிக்கத்தொடங்கினான்.

டூ த்வசன்ட் ஒன்லி என்று கூட்டெழுத்தில் எழுதி விட்டு, சங்கர ..என்று துவங்கி, கூட்டுப்புழு போல சுருண்டு சுருண்டு இழுத்துச்சென்று பிறகு என்னில் முடியும் கையெழுத்தை நீண்ட நாட்கள் கழித்து பார்த்தான்.

அவனது இங்கிலீஷ் காம்போசிஷன் நோட்டில் பத்திற்கு நாலரைக்கு மேல் அவனுக்கு போட்டதில்லை. மார்க் போட்டு இறுதியில் இந்த கையெழுத்து இருக்கும்.

'நான் உங்க மாணவன் சார்..' என்றவுடன், சார் கண்கள் விரிந்தன.

'அப்படியா.. பெயர் என்னப்பா.. எந்த வருஷம் படிச்சே..' என்று உற்சாகமாய் விசாரித்தார்.

'1975 பேட்ச்ல படிச்சேன் சார்.. எனக்கு கிளாஸ் டீச்சர் நீங்க.. ஏழுல இருந்து பத்து வரைக்கும் நம்ம ஸ்கூல்ல தான் படிச்சேன்..' என்றான் முருகேசு. உள்ளே வரச்சொல்லி நாற்காலி போட்டு உட்கார வைத்தான். அவன் நின்றுகொண்டே பேசினான்.

'நீ உட்காருப்பா.. நல்லாப்படிக்குற ஸ்டுடென்ட் தானே.. எப்படி மறந்தேன்னு தெரியலையே..' என்றார் சார். 'அப்படி சொல்ல முடியாது சார்.. சுமாரான ஸ்டுடென்ட் தான்.. பத்தாவது ரேங்க் எடுப்பேன்..' என்று நெளிந்தான் இவன். இன்னமும் அவரது வகுப்பில் இருப்பது போன்ற உணர்வு.

பக்கத்தில் இருந்த அதிகாரிகளிடம் சங்கரநாராயணன் சாரை அறிமுகப்படுத்தினான். காபி வாங்கிக்கொடுத்தான். அன்று முதல், வங்கிக்கு வந்தால், நேராக இவன் இருக்கும் இருக்கை அருகே வந்து நின்று விடுவார் சார். ஒரு நிமிடம் காக்க வைக்க மாட்டான் இவன். இன்னைக்கு ஓரளவு இங்லிஷ் ட்ராப்ட் போடுகிறான் என்றால் அது, சார் போட்ட பிச்சை அல்லவா.

★ ★ ★ ★ ★ ★ ★ ★

'சார்.. உங்களுக்கு கையெழுத்து சரியா வர மாட்டேங்குது.. சில ஸ்ட்ரோக்குகள் மாறுதுன்னு மேனேஜர் சொல்றார்.. அதனால...' என்று முருகேசு சொல்லத்துவங்கும்போதே, 'மூணாவதாகக் கொடுத்த ஸ்லிப்பில் சரியா போட்டேனப்பா..' சார் பரிதவித்த குரலில் சொன்னார்.

'சரியாகத்தான் சார் இருக்கு... ஆனால், கொஞ்சம் வித்தியாசப்படுது.. நான் இருக்குறதுனால பிரச்னை இல்லை.. நான் ஒருவேளை லீவுல இருந்தேன்னு வையுங்க.. ஒங்களுக்கு சிரமம் தானே..' என்று முருகேசு சொன்னான்.

'இப்ப அதுக்கு நான் என்ன செய்யணும்பா..' அவர் குரல் படபடத்தது.

அவன் அவரிடம் ஒரு பாரத்தை நீட்டி, 'இந்த கட்டம் இருக்குற இடத்தில உங்களோட இடதுகை பெருவிரல் ரேகையை மையில் தொட்டு வையுங்க..' என்றான்.

'கைரேகையா.. நானா.. என்னப்பா சொல்ற.. நான் அந்தக்காலத்து பி.ஏ.பி.டீப்பா அசிஸ்டன்ட் எட்மாஸ்டரா ரிட்டயர்டு ஆனவன்..' சங்கரநாராயணன் சாரின் குரல் தழுதழுத்தது.

'எனக்குத் தெரியாதா சார் உங்களைப்பற்றி.. எங்களுக்கு இங்கிலீஷ் கத்துக்கொடுத்ததே நீங்க தானே.. கையெழுத்து சரியா வரலேன்னா, பேங்குக்குன்னு சில நடைமுறைகள் இருக்கு சார்.. மேனேஜர் போன தடவையே இதைச்சொன்னார்.. நான் தான் கேக்கலை.. நீங்க ரொம்ப வருத்தப்படுவீங்கன்னு விட்டுட்டேன்.. இப்போ மறுபடியும் சொல்லும்போது உங்க கிட்டே சொல்லாம இருக்க முடியாது..' என்றான் முருகேசு.

தனது கழுத்தில் கிடந்த அங்கவஸ்திரத்தை சரிசெய்து கொண்ட சார், 'நான் வேணும்னா ஒன்னு செய்யுறேன்.. வீட்ல போயி என்னோட சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தபடி, நிதானமா பணம் எடுக்குற ஸ்லிப்பில் கையெழுத்தை போட்டுப் பார்க்கிறேன்.. கண்டிப்பா வரும். நாலைந்து ஸ்லிப்பில் வேண்டுமானாலும் பழசைப் பார்த்து தப்பில்லாம எழுதிப்பார்க்கிறேன்.. எனக்கு இப்போ அவசரமாய் பணம் தேவைப்படல.. நாளைக்கு வேணும்னா வரட்டுமா'

சார் குரல் கரகரத்தது. குரல் கெஞ்சுவது போல இருந்தது.

சற்றுத்தொலைவில் அமர்ந்திருந்த அவரது மகன் அருகில் வந்தான்.

'என்னப்பா.. என்ன பிரச்னை' என்று கேட்டபோது, முருகேசு கையெழுத்து விவகாரத்தை மெதுவாய் சொன்னான்.

'இதுக்கெல்லாம் ரொம்ப யோசிக்காதீங்கப்பா.. வயசாயிட்டுது.. கை நடுக்கம் இருக்கு.. எல்லாருக்கும் வர்றது தானே.. உங்க நல்லதுக்குத்தானே சொல்றாங்க.. சார் சொல்ற மாதிரி ரேகையே வச்சிருங்க..' என்றான் அவரது மகன்.

'டேய்.. நான் படிச்சவன்டா.. என்னைப்போய்...'

சங்கரநாராயணன் சார் சுற்றிலும் ஒருமுறை பார்த்துக்கொண்டார். யாரேனும் தான் கைரேகை வைப்பதைப் பார்த்து படிக்காத அறிவிலின்னு ஏளனமாய்ப் பார்ப்பது போல உணர்ந்தாரோ என்னவோ..

'உங்களைப்போல பலர் ரேகை வச்சிருக்காங்க சார்.. எல்லோரும் ரொம்ப படிச்சவங்கதான்' என்றபடி முருகேசு, சாரின் இடதுகைப் பெருவிரலை எடுத்து இங்க் பேடில் உருட்டினான். மையுடன் இருந்த விரலை எடுத்து பணம் எடுக்கும் ஸ்லிப்பில் அழுத்தமாய்ப்பதிவு செய்யும் போது, ஸ்லிப்பில் விழுந்தது

அவரது கண்ணீர்த்துளி.

சிறுகதை

பொய்யோட்டம்

எம்.எம்.தீன்.

அன்னம் மணியடித்தவுடன், பைக்கட்டைத் தூக்கிக் கொண்டு பள்ளிக்கூடத்தை விட்டு முதலில் ஓடிவரும் பிள்ளையாக அவள்தான் இருப்பாள். அவள் வேகத்திற்கு ஈடு கொடுக்க யாரும் இல்லை.

சின்னப் பள்ளிக்கூடம் விட்டு வரும் தம்பியைப் பார்க்க, முற்றம் பெருக்க, சோறு பொங்க என்று அவளுக்கு வேலை வீட்டில் தயாராக இருக்கும். அதுதான் கூடு நோக்கி செல்லும் பறவையென ஓடி வருவாள்.

பள்ளி வளாகம் கடந்து சாலைக்கு வந்து, முக்குரோடு தாண்டி காந்திசிலை கடந்து ஓடிக்கொண்டு இருப்பாள். வீட்டைத் தொடும் வரை ஒரே ஓட்டம்தான். கொஞ்சம் கூட மூச்சு வாங்காது.

அன்னத்தின் அப்பாவுக்கு அவள் மீது அவ்வளவு பிரியம். 'எம்புள்ள கலெக்டருக்கு படிப்பாளாக்கும்,' என்று எல்லோரிடமும் சொல்லுவார். அம்மாவுக்கு எரிச்சல் வரும். 'எல்லாத்திட்டயும் போயி ஏன் சொல்றீங்க,' என்று திட்டும். 'அவ நல்லா மாரி படிச்சி ஒரு அரசாங்க வேலைக்குப் போவணும். சத்துணவு ஆயாவாவது ஆனாச் சரிதான்,' என்பாள்.

அஞ்சாப்பு சார்வாள் அவள் வகுப்பில் யாரெல்லாம் என்ன படிக்கப் போகிறீர்கள் என்று கேட்டபோது, அன்னம் எழுந்து, 'அப்பா சொல்றமாரி கலெக்டருக்கு படிப்பேன், இல்லாட்டி அம்மா சொல்ற மாரி சத்துணவு ஆயாவாக போவேன்,' என்றாள். உடனே எல்லோரும் ஏன் சிரிக்கிறார்கள் என்று விளங்காமல் திணறினாள். பின்னாடி பிள்ளைகள் விவரித்த போது வெட்கமாய் போய்விட்டது.

அன்னம் தெருவுக்குள் திரும்பிய போது அஞ்சலை தன் தம்பியை இடுப்பில் வைத்துக் கொண்டு சோறு ஊட்டிக் கொண்டிருந்தாள். அஞ்சலி அவளோடு ஐந்தாம் வகுப்பு படிக்கும் போதே படிப்பை நிறுத்தி விட்டாள். அவள் அம்மா நாலாவதாக பிள்ளை பெற ஊருக்கு போனபோது அவள் படிப்பை நிறுத்தி விட்டார்கள். அஞ்சலிக்கு மனக்கணக்கு நல்லா வரும். அன்னம் பெருக்கிக்கிட்டு இருக்கும்போதே விடையை சொல்லி விடுவாள்.

அஞ்சலி தம்பி பொக்கை வாயால் எச்சில் ஒழுக சிரித்தான். அவளுக்கு அவனைத் தூக்கி கொள்ளவேண்டும் போல இருந்தது. மெதுவாக அருகில் போனதும் முகத்தைத் திருப்பிக் கொண்டு அஞ்சலி தோளில் எச்சிலை இழுவினான்.



மீண்டும் ஓட்டத்தைத் துவக்கினாள். முன்பெல்லாம் அவளது அப்பா அவள் வருவதை எதிர்பார்த்து திண்ணையில் உட்கார்ந்து இருப்பார். அவளுக்கென ஏதாவது மிட்டாயோ, முருக்கோ வாங்கி வைத்திருப்பார். இப்போது மூச்சிழைப்பால் வேலைக்கு போக முடியவில்லை. பைகளை வாங்கிப் பக்கத்தில் வைத்துக்கொண்டு பிள்ளைகளின் முதுகைத் தடவியபடி கொஞ்சுவார். அவளுக்கு அப்பாவுக்கு உடம்பு பழையபடி நல்லா ஆயிராதா என்று இருக்கும். எல்லா சாமிகளிடமும் வேண்டிக் கொள்வாள். அப்பா உடம்பு இனித் தேராதுன்னு அந்த வயதில் அவளுக்கு எப்படி தெரியும். வேறு வழியின்றி அம்மாதான் தினக்கூலி அல்லது நூறு நாள் வேலை என்று வேலைக்குப் போகிறாள்.

நாய் எதிர்த்தாற் போல் ஓடிவர கல்லை எடுத்து தூரத்தியப்படி ஓடி வந்தான் கழுவாணி மகன். 'ஏம்ல நாயைத் தொரத்துற', என்றாள். அவன் காதில் வாங்காமல் நாயைத் துரத்தியபடி ஓடிக் கொண்டிருந்தான். அவளுக்கு பாவமாக இருந்தது.

அன்னத்தின் அப்பாவுக்கு இளைப்பு நோய் அதிகமாகி நெஞ்சிக்கூடு தெரிய ஆரம்பித்தது. எதுவும் சாப்பிடாமல் இளைத்துக் கிடந்தார். அரசு ஆசுபத்திரிக்கு தூக்கிப் போனார்கள். இனிமேல் என்று மருத்துவர் வீட்டுக்கு கொண்டு போக சொல்லி விட்டார். இப்போது அப்பா வீட்டுத் திண்ணையில் படுத்துக் கிடப்பார். அவளை குழி விழுந்த கண்ணால் ஆசையோடு பார்ப்பார். அவளுக்கு அப்பா எப்போது எழுந்து வந்து முருக்கு வாங்கித் தரப் போகிறார் என்று இருக்கும்.

வீட்டை நெருங்கிய அன்னம் அப்பா படுத்திருக்கும் திண்ணையை ஏறிட்டுப் பார்த்தாள். அப்பா இல்லாமல் வெறுமையாய் கிடந்தது. வேகமாக வீட்டுக்குள் ஓடினாள்.

அம்மா தம்பியோடு நடுக்கூடத்து முக்கில் தலைவிரி கோலமாக அமர்த்திருந்தாள். இரண்டு மூன்று பெண்கள் சுற்றிலும் அமர்ந்திருந்தார்கள். தம்பியை அம்மா சிக்குன்னு பிடித்திருக்க எதிரே அப்பாவின் சடலம் துணியால் மூடப்பட்டிருந்தது. மூக்கிலும் காதிலும் பஞ்சு வைக்கப்பட்டு இருந்தது.

வீட்டுக்குள் அவள் வந்தது தெரியவும் அம்மா 'வீல்' என கத்தினாள். அவளுக்கும் அழுகை பொத்துக்கொண்டு வந்தது. அம்மா அழுது ஓய்ந்திருப்பாள் போல தெரிகிறது. அம்மா மூக்கைச் சிந்திவிட்டு அன்னத்தை தன்னுடன் சேர்த்து அணைத்து கொண்டாள். அம்மாவைப் பார்த்தவுடன் அழுகை வர தேம்பினாள். அம்மா, அவள் கண்களில் வழிந்தக் கண்ணீரை தன் சேலை முந்தாணையால் துடைத்தாள். அப்பா வேட்டியின் கொச்சை வாடை இல்லாமல் அம்மாவின் சேலையில் தீய்ந்த வாசனை வந்தது.

அம்மாவுக்கு அதிகம் உறவினர் கிடையாது என்று அம்மாவே சொல்லி இருக்கிறாள். வெளியே யாரோ ஒருவர் நின்றபடி பணம் கேட்டார். அம்மா அவளையும் தம்பியையும் தள்ளி இருக்கச் சொல்லிவிட்டு தன் கம்மல் இரண்டையும் கழட்டிக் கொடுத்தாள். அவன் வாங்கிக் கொண்டு போனான்.

அம்மா மீண்டும் சடலத்தின் அருகில் அமர்ந்தவாறே சாமியானா பந்தல் போடுவதைப் பார்த்து விட்டு அவர்களிடம் போய் எதோ சொன்னாள். 'சரிம்மா, ஆயிரத்து ஐநூறு தாரேன், போடுங்க,' என்றது.

பச்சை தென்னங் கீற்றுக்களைக் கொண்டு வந்து வீட்டின் முன் போட்டார்கள். மேலும் வெட்டியான் சின்ன மண்சட்டிகளில் நூலை அழகாக நூல்கண்டு போலச் சுற்றிக் கொண்டிருந்தான். இன்னொரு ஆள் தென்னந்தட்டிகளை முடைந்து கொண்டிருந்தார். அது வரை அவளுடன் இருந்த தம்பியை சிலர் அழைத்துக் கொண்டு போனார்கள். அவன்தான் நீர்மாலை எடுக்கணுமாம். அவனைக் குளுப்பாட்டினார்கள். அதற்குள் அழகான பச்சை கீற்று தட்டிகள் ரெடியாகிக் கொண்டிருந்தன.

தெற்குத்தெரு கணேசனும், உமாவும் பள்ளிக்கூடத்துக்கு சீருடையில் கிளம்பிப் போய்க் கொண்டிருந்தார்கள். அவளுக்கு அப்போதுதான் பள்ளிக்கூடத்திற்கு கண்டிப்பாக வரவேண்டுமென கணக்கு வாத்தியார் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. அவளுக்கு அம்மாவிடம் போய் கேட்கலாம் என்றால் அம்மாவைச் சுற்றிப் பெண்கள் இருந்ததால் கேட்காமல் திரும்பினாள். அந்த வழியாக வந்த ஒன்பதாம் வகுப்பு காமாட்சி அவளைப் பார்த்து, 'அப்பா இறந்துட்டாங்களா'. என்று கேட்க அவள், 'ஆமா அக்கா', என்றாள். ''அப்போ உனக்கு ரொம்ப ஜாலிதான். ஒரு வாரம் ஸ்கூலுக்கு வரமாட்டே.'' சிரித்தபடியே சொன்னாள். அதெப்படி ஒரு வாரம் பள்ளிக்கூடம் போகாம இருக்கமுடியும் என்று அவளுக்கு சந்தேகமா இருந்தது.

தம்பி கைகளில் கொள்ளிச் சட்டியைத் தூக்கிக் கொண்டிருந்தான். அன்னம் தனியாளாய் திண்ணை மீதிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள். புதியதாய் சில உறவினர்கள் அவளிடம் பாப்பாத்தி மொவளா என்று கேட்டப்படி போனார்கள். வெற்றிலை போட்ட ஆச்சி எங்க 'ஊருக்கு வாரியா பேத்தி,' என்று அன்பாய் கேட்டது. 'என்கூர்ல பெரிய பள்ளிக்கூடம் இருக்கு, நல்லா படிக்க வைக்கேன்,' என்று சொன்னது.

அப்பாவின் உடலைத் தூக்கிக் கொண்டு வந்து பாடையில் கிடத்தினார்கள். வெட்டியான் சங்கை எடுத்து ஊதவும் அம்மா மற்றும் உறவு பெண்களின் அழுகையும் ஓலமும் அவள் வயிற்றைப் பிசைந்தது. தம்பி சோகமாய் முன்னால் நடக்க அவள் ஓவென்று கத்தினாள்.

அப்பாவின் பாடையை தூக்கிக் கொண்டு வேகமாகப் போனார்கள். அப்பா ஆசுபத்திரிக்குத் தூக்கிப் போனது போல இருந்தது. அவர் திரும்பி வந்தாலும் வருவார் என்று நம்பினாள். துட்டி கேட்க வந்தவர்கள் சொல்லாமல் போய்கிட்டே இருந்தார்கள். யாரோ ஒருவர் அவளின் கையைப் பிடித்து, 'சாப்பிட வா' என்று அழைத்தார். அவள் தம்பி வந்த பொறவு சாப்பிடுறேன் என்றாள். அம்மா சாப்பிடாமல் கிடக்கும்போது நமக்கு வயிறு பசிக்குமாக்குமென தனக்குள் சொல்லிக்கொண்டு தெருவையே பார்த்தபடி இருந்தாள்.

அஞ்சலி தம்பியைத் தூக்கிக் கொண்டு வந்தாள். இரண்டு விரல்களை சூப்பிக் கொண்டு அவளை நிலைத்த பார்வையில் பார்த்தான். இடுப்பு வலிக்கிறதோ என்னவோ உடம்பை சரித்தபடி நின்றாள். அவளைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

'சாரி அன்னம். உங்க அப்பா இறந்து போயிட்டது ரொம்ப கஷ்டமா இருக்குல்ல, ஓங் கல்யாணம் காட்சி வரை இருக்கக் கூடாதான்னு, இனிப் பாப்பாத்தி ஒத்தப்பறம் கூட்டாளி ஆயிட்டா, எப்படித்தான் ரெண்டு புள்ளைகள வச்சிக்கிட்டு சமாளிக்கப் போராளோன்னு எங்க அம்மா சொன்னாங்க, எனக்கு உன்னை நெனைச்சா பாவமா இருக்கு அன்னம்', அஞ்சலி பெரிய மனுஷி போல சொன்னாள். அவளும் அமைதியாக கேட்டுக் கொண்டாள்.

படிப்பைப் பாதியிலே நிப்பாட்டி விட்டு போனவளுக்கு இம்புட்டு அறிவா, அவளுக்கு அஞ்சலியின் பேச்சைக் கேட்கும் போது தோணும்.

மாடு பத்திக்கொண்டு போன கீழ வீட்டு காலங்கரை 'சே எப்படிப்பட்ட மனுஷன், போட்ட கோட்டை தாண்ட மாட்டார், அவரு இல்லாம இனிமே இந்த புள்ளயோ கதி எப்படி இருக்கப்போவுதோ. அவன் தான் காப்பாத்தணும்,' இருகைகளையும் மேலே தூக்கி ஏறிட்டு வானத்தை நின்று பார்த்து விட்டு கடந்து போனார். அப்பா எல்லோருக்கும் நல்லவராக இருந்தார் என்பது அன்னத்திற்கு மகிழ்ச்சியாக இருந்தது.

பின்மதியம் சுடுகாட்டுக்கு போய் திரும்பி வந்த. தம்பி பளிங்கு மொட்டையுடன் வந்தான். வழுவழுவென்று இருந்த மொட்டையில் தடவிய சந்தனம் காய்ந்திருந்தது. அவன் முகம் பளிச்சென்று இருந்தது. அவனது குண்டு கன்னங்களில் குழந்தை முகம் பூத்திருந்தது.

தம்பி கொஞ்சம் சோர்வாகக் கிறங்கிப் போய் நின்றிருந்தான். சுடுகாட்டில் அவனறியாத காரியங்களைச் செய்யச் சொல்லி இருப்பார்கள். அப்பாவுக்கு கொள்ளிக்குடம் உடைத்து, பின் கொள்ளியும் வைத்திருப்பான். அவனிடம் அது குறித்துக் கேட்கலாம்தான். ஆனால் விவரம் தெரியாத தம்பியிடம் கேட்டு அவனை மேலும் தொந்தரவு செய்யக் கூடாது தான்.. அவனை நாளைப் பள்ளிக்கூடம் போகச் சொல்ல வேண்டும். அவன் எப்போதும் போல படிக்கப் போகணும். அவளுக்குள் என்னவெல்லாமோ யோசனைகள் ஓடின.

அன்றிரவில் அம்மா இடையிடையே எழுவதும் அழுவதுமாக இருந்தாள். அம்மாவின் அழுகை அவளை அகால இரவில் எழுப்பிவிட, எழுந்து ஜன்னல் வழியாகப் பார்த்தாள். எதோ மின்னல் வெட்டியது போல இருந்தது. அப்பா தூரத்தில் நின்று கொண்டிருப்பாரோ என்று தோன்றியது. அத்தோடு பயமும் தொற்றிக் கொள்ள உடல் வெடவெடத்தது. தூக்கம் வராமல், கொட்டக் கொட்ட விழித்தபடி இரவு எப்போ விடியும் என்று எண்ணிக்கொண்டே படுத்திருந்தாள். அது போன்ற நீண்ட இரவை அதற்குமுன் அன்னம் பார்த்ததில்லை.

புதிதான பறவைகளின் ஒலி காதில் விழப் படுக்கையை சுருட்டினாள். அவளுக்குள் புதிய இதயம் துடிப்பதை உணர்ந்தாள். அவளை எதோ ஒன்று விரட்டியது. காபி போட்டு வைத்தாள். அதன் மணம் அவளுக்கு பிடித்திருந்தது.

எப்போதாவது அம்மாவுக்கு உடம்புக்கு முடியலன்னா அம்மா வேலை பார்க்கும் வீட்டிற்கு சென்று வேலை செய்து கொடுத்திருக்கிறாள். அம்மா தூங்கியும் தூங்காமலும் படுத்துக் கிடப்பதைப் பார்த்தாள். 'அம்மா, முத்து அய்யா வீட்டுக்கு வேலைக்கு போயிட்டு வாறேன்,' என்றாள். லேசாக கண்ணைத் திறந்து பார்த்த அம்மா எதுவும் சொல்லவில்லை. நாலைந்து நாள் கழித்து தம்பிக்கு பள்ளிக்கூட பீஸ் கட்ட வீட்டுக்காரரிடம் முன்பணம் பெற்றுக் கொடுத்தாள். அவளுக்குள் இருந்த கவலை மறைந்து மலர்ச்சியை உணர்ந்தாள்.

'பத்து நாள் கழிந்து அம்மா நீ படிக்கப் போவலையா,' என்றாள். அம்மாவிடம், 'போவலை' ஒற்றைச்சொல்லில் பதில் சொன்னாள். அம்மா அழுதபோது, ''கவலைப்படாதே அம்மா, இதுவரைக்கும் நீ காப்பாத்தின மாரி நானும் உங்களைக் காப்பாத்தணும், தம்பியை நல்லா படிக்க வைக்கணும்'', என்ற அன்னத்தின் வார்த்தைகளுக்கு மேலாக அம்மா மேக்கொண்டு எதுவும் கேட்கவில்லை. அம்மா எப்போதும் படுப்பதும், தூணில் சாய்ந்து கிடப்பதுமாக இருந்தாள்.

பத்து நாளில் தம்பியின் மண்டை பச்சையாக மாறி இருந்தது. எல்லா பிள்ளைகளும் தலையைத் தடவிப் பார்க்கிறார்களாம். அவன் தலை தரை தேய்க்கும் பிரஷ் போல சொர சொரப்பாக இருந்தது. கீச்சம் காட்டாதே அக்கா என்று சொல்லிக்கொண்டு ஓடினான்.

திடீரென அவளது வகுப்பு ஆசிரியர் வீட்டிற்கு முன் வந்து நின்றபடி,' அன்னம் அம்மா இருக்காங்களா', என்று கேட்டார். அவள் முற்றத்திற்கு வந்து, 'வாங்க சார்', என்றாள்.

'ஏம்மா பள்ளிக்கு வரல. அப்பா இறந்து போனாங்கனு கேள்விப்பட்டேன், ஸ்கூலுக்கு வா, இத்தனை நாள் வராததை பத்திக் கவலைபடாத. எப்போதும் போல ஸ்கூலுக்கு வாம்மா', என்றார். ஆசிரியரின் குரலில் இரக்கமும், துக்கமும் இருந்தது.

'சார், அம்மாவுக்கு வேலைக்கு போக முடியல. நான்தான் அம்மா போய் வேலைப் பார்த்த வீடுகள்ள வேலை செய்றேன். என்னால எப்படிங்க சார் வர முடியும். எனக்கு படிக்கணும்னு ஆசை இருக்கு, ஆனா அம்மாவுக்கு உடம்பு சரியில்ல. என்னா செய்றது சார், அதான் வரல,'

'இல்ல அன்னம், இந்த வருஷம் எட்டாம் வகுப்பு பரீட்சை எழுதிட்டனா மேற்கொண்டு நீயா படிச்சிக் கிடலாம், அம்மாவைக் கூப்பிடு நா சொல்றேன்', என்றார் சார்.

'சார், நான் வேலைக்கு போனாத்தான் வீட்டுல சாப்பிட முடியும். அதுபோக ஏன் தம்பியை ஒழுங்கா படிக்க வைக்க முடியும். அம்மா உசிரோட இருக்கணும்னா நா வேலைக்கு போவணும் சார், நானாத்தான் முடிவு எடுத்தேங்க, வேறு வழி தெரியல சார்,' என்றாள். இப்படி அழகாக பேசுற பிள்ளையை படிக்க வைக்க முடியலையே என்று கலங்கினார்.

'சார், எனக்கும், அந்தா நிக்கிறா பாருங்க அஞ்சலை. அவள் என்ன மாதிரி அஞ்சாப்பிலேயே படிப்ப நிறுத்திட்டா. நாங்க ரெண்டு பேரும் எட்டாங் கிளாஸ் பரீட்சை தனியா எழுதலாம்னு பேசி வச்சிருக்கோம். எங்கள மாரி பாதியில படிப்பை விட்ட புள்ளைங்களுக்கு தொடர்ந்து படிக்க ஏதாவது உதவி இருக்குன்னா சொல்லுங்க சார்.. நாங்க தனியா படிச்சி பரீட்சை எழுத ரெடியா இருக்கோம் சார்,' என்றாள்.

அதற்கு மேல் எதுவும் சொல்ல வழியற்று, கண்டிப்பா உதவி செய்யறேன் என்று சொல்லிவிட்டு கிளம்பினார் ஆசிரியர்.

அழுத கண்ணீரைத் துடைத்தப்படி அம்மா சொன்னாள். 'உங்கப்பா கலெக்டரு ஆக்குவேன்னு சொன்னார். வாழ்க்கையில, நானும் ஒவ்வொரு நாளும் ஓடியாடித்தான் பார்த்தேன். எல்லாம் ஓட்டமும் சாட்டமும் பொய்யோட்டமா ஆயிப் போச்சே. உன் வாழ்க்கையும் அப்பிடி ஆயிருமோன்னு பயமாயிருக்கு அன்னம்மா,'

'ஆமா, நீயும்தாம் சொல்வே, கலெக்டர் ஆகாட்டாலும் சத்துணவு ஆயாவாக்குவேன்னு', என்றவள் சிரிப்பை அடக்கிக்கொண்டு மேலும் சொன்னாள். 'அம்மா, நா சொல்றத கேட்டுக்கோ நானும் கண்டிப்பா படிப்பேன். அப்பாவும் நீயும் ஆசைப்பட்டது போல் இல்லாம, இருவருக்கும் நடுவுல ஏதாவது ஒரு வேலைக்கு போவணும்னு ஆசை இருக்கு. அதைக் கட்டாயம் நிறைவேத்திக் காட்டுவேன்,' என்றாள்.

ஒக்கலில் தம்பியை வைத்துக்கொண்டு நின்ற அஞ்சலி வீட்டுக்கும் ஆசிரியர் போய் ஏதோ சொல்லிவிட்டு சென்றதை அன்னம் பார்த்தாள். ஆசிரியர் போனவுடன் அஞ்சலி நேராக அவளை நோக்கி ஓடி வந்தாள்.

அன்னம் வாத்தியார் சார் எங்கூட்டுக்கு வந்து, அன்னத்தை பிரைவேட்டா பரீட்சை எழுத வைக்கப் போறேன். உங்க மகளும் அவளோட சேர்ந்து படிச்சா ரெண்டு பேரும் பாசாகி விடுவாங்க என்று சொல்ல எங்கம்மா சரியென்று சொல்லிடுச்சு, அஞ்சலி இடுப்பில் தம்பியை வைத்துக்கொண்டு மூச்சிரைக்க ஓடி வந்து சொன்னாள்.

அன்னம் அம்மாவை ஏறிட்டுப் பார்த்தாள். 'நீ அவளோட சேர்ந்து படிடி, நான் ஒரு நாள் விட்டு ஒருநா உன் வேலையை பாத்துக் கிடுதேன்', என்றது அன்னத்தின் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கியது.

'நீ படிக்கும் போது ஓந்தம்பியை நா வச்சிக்கிடுதேன். ரெண்டு பேரும் சேந்து படிக்கலாம்', என்றாள் அன்னம். அஞ்சலியின் தம்பி அவளைப் பார்த்துச் சிரித்தான்.

அன்னம் கையை நீட்டி அஞ்சலியின் தம்பியை அழைக்க, அவள் இடுப்பில் இருந்து அன்னத்தின் கைகளுக்குத் தாவி, பொக்கை வாயில் முளைத்த இரு பால்பற்கள் தெரியச் சிரித்தான்.

சிறுகதை

பால்அம்மா

போப்பு

இறங்கி ஊர்ப் பக்கம் திரும்புவதற்கு முன் கிளம்பிய பேருந்து புழுதியையும், புகையையும் ஊதித் தள்ளி விட்டு வேகம் பிடித்தது.

சுசீலா ஊர் நிலத்தில் கால் வைத்ததும் மூக்கில் பால் வாசம் படர்ந்தது. கல்யாணமாகி 24 வருடங்கள் ஆன பிறகும் அதைவிடக் குறைவான வருடங்களே இருந்த பிறந்த வீட்டின் வாசம் எப்படி இன்னமும் மாறாமல் இருக்கிறது என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள். நிறுத்தத்தின் அடையாளமான ஆலமரம் வயோதிகம் தட்டித் தளர்ந்து நிற்கிறது. ஆல மரத்து விழுதுகளின் சல்லிகள் காய்ந்து வறண்டு கிழவியின் தலைமுடி போலச் சிலுப்பி நிற்கின்றன.

திமிர்ந்த தன் பருவத்தில் தோழிகளுடன் போட்டி போட்டு நீர் இறைத்த நல்ல தண்ணீர்க் கிணறு சுற்றுச் சுவர் சரிந்து அனாதையாகக் கிடக்கிறது. பொதுக் கிணத்துக் கல்லை யாராவது பெயர்த்துக் கொண்டுபோய் வீட்டுக்கு அடிவாரம் போட்டிருப்பார்கள்.


சுசீலாவின் கண்ணுக்குத் தோன்றிய காட்சிகள் எல்லாம் அம்மாவின் இன்றைய நிலையை ஒப்புவமை செய்வது போல இருந்தது அவளுக்கு.

அதிகாரிகளுக்கு கார் ஓட்டும் டிரைவர் என்ற பெயரில் பளீரென்ற பவுடர் பூச்சோடும், பொங்கல் பண்டிகைக்கு சுவற்றுக்கு அடிக்கும் வெள்ளையைப் போன்ற வெளீர் நிற உடையுடனும் தன்னைச் சித்திரப்படுத்திக் கொள்கிற அப்பா அவ்வப்போது விசேசங்களுக்கு வந்து போகும் விருந்தாளிகளைப் போலத்தான் வீட்டிற்கு வந்து போவார்.

ஆனால் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை அம்மாவின் வயிறு மேடுடையும் நியமம் மட்டும் தப்பாது.

ஆறு பிள்ளைகளையும் கனத்த வயிற்றோடும், பொறுப்புகள் சுமந்த மனத்தோடும் தனியொருத்தியாய் வளர்த்து ஆளாக்கினாள். பெண்ணுக்குப் பெண்ணே துணையாய் நிற்பாள் என்பது போல பசுமாடுகள் மட்டுமே அம்மாவுக்குத் துணையாகவும், கைக்குப் பொருளுக்குப் பலமாகவும் நின்றன.

ஊர்த் தெரு மக்களுக்கு சில்லரையாக ஆளாக்கு, ஒழக்கு என்று ஊற்றும் பால் அன்றாடச் செலவுக்கு ஆகும். சொசைட்டிக்கு ஊற்றும் பால் மாட்டுக் கொட்டகை விரிவாக்கத்திற்கும், கம்மல், தோடு என சிறுபொருட்கள் வாங்கவும் ஆகும். இதற்கும் இடையில் இண்டு



ஓவியம்: அரஸ்

இடுக்கில் சேமித்து போஸ்ட் ஆபீசில் கட்டிய பணத்தில் தான் தனக்கும் தங்கைக்கும் அப்பாவை நம்பாமல் நகை சேர்த்தாள்.

பெண்கள் மில்லுக்கும், அச்சாபீஸ், தீப்பெட்டி ஆபீஸ்களுக்கும் போகத் தொடங்கிய ஊருக்குப் பிறகு பால்த் தேவைகள் அதிகரித்து விட்டன. ஊரின் பால்த் தேவையையும், குடும்பத்தின் பணத்தேவையையும் பசுமாடுகள் வழியாகவே நிறைவேற்றிக் கொண்டிருந்தாள் அம்மா.

வேலைக்குப் போகிற, மாரில் பால் வற்றிய தாய்மார்களின் பிள்ளைகள் அனைவரும் அம்மாவின் கையால் ஊற்றின பாலில் ஆளானவர்களே.

வளர்ந்து வெளியூர் படிக்கப் போகும் போதும், வேலையேற்கப் போகும் முன்னரும் அந்தப் பெற்றோர் பிள்ளைகளை அழைத்து வந்து ஆசீர்வாதம் வாங்கச் சொல்வார்கள். காலில் விழப் போகிறப் பிள்ளைகளை அவசரமாகத் தோளைப் பிடித்துத் தூக்கி நிறுத்தி நீ நிமுந்து நிக்கத்தானப்பா பால் கொடுத்தேன். நல்லாக் கெட்டிப் பாலா குடிச்சி வளந்துருக்க நீ. மரியாதைக்குக் கூட ஓர்த்தர் கால்யும் விளுவக்கூடாது என்று மாரில் பூவை ஒற்றி எடுப்பது போல உள்ளங்கைகளை ஒற்றி எடுப்பாள். பின் அவசரமாக உள்ளே போய் விபூதி கிண்ணத்தை எடுத்து வந்து கீற்றுப் போல இழுத்து விடுவாள். வளர்ந்த பிள்ளைகளின் தோளைப் பிடித்துத் தூக்கும் வலுவை கைகளைக் கொண்ட அம்மாவின் கைகள் திருநீறு பூசும்போது மட்டும் நடுங்கும். அந்த நடுக்கம் நெகிழ்வின் பால் ஏற்படுவதாகும்.

இப்படித் தான் ஒருமுறை அல்லாவைத் தொழும் சைக்கிள் கடை ரபீக் மகளுக்கும் அம்மா விபூதி பூச வந்த போது ஆபிதா சட்டென்று பின்னுக்கு விலக முயன்றாள். அவளது அம்மா ஆசீர்வாதத்தோட பெரியவங்க தர்றதை ஏத்துக்கிட்டா தப்பில்ல என்று கிசுகிசுப்போடு ஆபிதா காதில் சொன்னாள்.

ஊருக்கே பால் ஊற்றி வளர்த்த அம்மா இன்று இறுதிப் பாலுக்காக ஒருவாரமாகப் படுத்த படுக்கையாக இருக்கிறாள். சுசீலாவின் கணவர் எவ்வளவோ வற்புறுத்தி அழைத்தும் ஊரை விட்டு வந்து தன்னுடன் மறுத்து விட்டாள் அம்மா.

இங்க பார்றீ மகளே (மகளே என்று அம்மா விளித்தால் உரிமையுடன் கூடிய கோபத்தில் இருக்கிறாள் என்று அர்த்தம்) ''இந்தப் பாலம்மா ஒக்காந்து திங்கமாட்டா. படுத்து சாக மாட்டா. இன்னொரு வாட்டி என்ன ஒங்க வீட்டுலர்ந்து இருக்கனுன்னு அழைச்சா அம்புட்டுத்தேன் கட்டிக் கொடுத்த மாப்புளேன்னு கூடப் பாக்க மாட்டேன்'' மிகவும் அழுத்தம் திருத்தமாகச் சொல்லி விட்டாள்.

சுசீலா நிதானித்துக் கொண்டு நடக்கத் தொடங்கினாள்.

தன்னை அழைத்துப்போக தம்பிக்குப் போனடிக்கலாமா என்று நினைத்தபடியே துணிப் பையினுள் கையைவிடாமலே போனை அழுத்தினாள். எதுக்கு அவனப் போட்டு அலைக்கழிக்கணும் அவன் ஏதாச்சும் வேலையாய் இருக்கலாம்.

நான்கு தம்பிமார்களைத் தூக்கிக் கொண்டு அலைவது சிறுவயதில் அவளுக்கான வேலையாக இருந்தது. பத்து வயதுவரை எவனையாவது தூக்கித் தூக்கியே இடுப்பும் கையும் விட்டுப் போகும். ஒருத்தன் தத்தத்தக்கா பித்தக்கா என்று நடக்கத் தொடங்குகையில் நிம்மதிப் பெருமூச்சு விடுவது பொறுக்காது அம்மாவுக்கு இன்னொருத்தனைப் பெத்துப் போடுவாள். பிறந்த பிள்ளையைப் பார்க்க வரும் உறவுக்காரர்கள் ஆண் சிங்கக் குட்டியா பெத்துப் போட்டுட்டா ஆத்தாகாரி. ஒருத்தன் இல்லேன்னாலும் இன்னொருத்தன் உன்னைத் தாங்குவான் பள்ளி. கொடுத்து வைச்சவடி நீ என்று சுசியின் கன்னத்தைக் கிள்ளுவார்கள். இனி இவனைத் தூக்கிச் சுமக்க வேண்டுமே என்று உள்ளுக்குள் பொறுமும் ஆத்திரத்தோடு கன்னம் தொடுகிற கையைத் தட்டி விடுவாள்.

ஆனால் கடைசித் தம்பி மகேந்திரனை மட்டும் ஆசையாசையாய் தூக்கி நச்சென்று இடுப்பில் நீர்க்குடத்தைச் சொறுகுவது போலச் சொறுகுவாள். நெழு நெழுவென்று அல்வாப் பொட்டலம் போன்ற அவனது பிருட்டம் இடுப்பில் நிலைக்கையில் மெலிதான கூச்சம் எழுந்தடங்கும். அவனது வெள்ளப் பணியாரம் போன்ற கன்னத்தைக் கிள்ளுவதிலும் அலாதிப் ப்ரியம் இருந்தது.

இப்பொழுது அந்த கன்னத்தில் காட்டுச் செடிகள் போல முடி வளர்ந்து சவரம் காணாமல் இருக்கிறது. மகியின் முகத்தைக் காணும் போதெல்லாம் காலம் அங்கேயே உறைந்திருக்கலாமே. வளர்ந்து ஆளாகி யார் என்னத்தக் கண்டோம் என்றிருந்தது சுசீலாவிற்கு.

எதன் மீதென்று தெரியாத ஆத்திரத்தில் நடை தங்தங்கென்று போய்க் கொண்டிருந்தது.

தெருமுனையிலேயே ''என்ன தாயி இன்னக்கித் தான் நேரம் கெடைச்சதா. மூத்தவ நீயே இப்படி இருந்தா என்னத்தச் சொல்ல'' என்று உரிமையோடு சலித்துக் கொண்டார்கள்.

ஓட்டமும் நடையுமாக ஓடிவந்த செல்வி 'வாங்க மைனீ.... நீங்க வர்றீங்கன்னு சொன்ன நிமுசத்துலர்ந்து அத்த தெளிச்சியோட இருக்காங்க' என்றபடி கைப்பையை வாங்கினாள். அவளது சொற்கள் சுசீலாவின் மனதை இலகுவாக்கியது. என்றாலும் மகியின் மனைவி ஏன் இன்னமும் இப்படி சதைப்பிடிப்பே இல்லாமல் வெடவெடவென்று சின்னப் பிள்ளை போலவே இருக்கிறாள். சதை ஒட்டாத உடலில் எப்படி குழந்தை மட்டும் தங்கும் என்று துயரம் கப்பிய நேரத்திலும் தோன்றியது.

வீட்டை நெருங்க நெருங்க கால்கள் தளர்வது போல இருந்தது. அம்மாவைப் படுத்த கோலத்தில் பார்க்கும் துணிவு எனக்கு இல்லையே என்று மனதிற்குள் ஊமை அழுகையாய் அழுதாள்.

இரண்டு வீட்டுக்கு முன்னர் பார்வதி அத்தை வாசல்படியில் சுந்தரம் மாமா பேப்பர் படித்துக் கொண்டிருந்தவர் பேப்பரை மடித்து வைத்து விட்டு ''சீலாம்மா சித்த ஒக்காரு. ஒரு கௌாஸ் காபித் தண்ணி குடி'' சுந்தரம் மாமா சுசீலாவை சீலா என்று தான் அழைப்பார். அவளுக்குப் பெயர் வைத்ததும் அவர்தான். அவருக்குப் பிடித்தமான மலையாள நடிகை சீலாவின் நினைவாகவே சீலா என்ற பெயரை வைத்தார்.

அஞ்சாறு நாளாவே அக்கா ஒடம்பு வேகமாக சுருங்கத் தொடங்கிருச்சி. மழைல நனைஞ்ச கோழியாட்டம் குன்னிக்கிட்டுப் போச்சி. படுக்கைய விட்டு எந்திரிக்கல. பேச்சு இல்ல. ஆனா ஒண்ணுக்கு ரெண்டுக்கு மட்டும் ஜாடை காட்டி யார் தோள்லயாவது கையப் போட்டுப் போய் வந்திட்டு இருந்துச்சி. அப்பறம் அதுவும் நின்னு போச்சு. அதுக்கப்பறந்தான் ஒனக்குப் போனடிச்சி வரச்சொன்னோம்.

நாலு நாள் எதுவும் குடிக்கல. வம்பா ஊத்தி விட்டா வாய் நிறைய வாங்கிட்டு கஞ்சியோ சூசோ எதுவா இருந்தாலும் சின்னப்புள்ளயாட்டம் பொளிச்சின்னு துப்பிட்டு இருந்திச்சி. நீ வந்துட்டு இருக்கன்னு சொன்னதும் மொகந்தெளிஞ்சிருச்சி. தானா வாயத் தொறந்து கேப்பக் கூழு சூடாக் காய்ச்சித் தரச் சொல்லி ஒரு போனி குடிச்சிருச்சி. வத்திப் போன கொடல்ல ஒரு போனி ஊத்தினா எதாச்சும் ஆயிருமோன்னு எனக்கே பயம். இன்னக்கிக் காலைல தானா எந்துருச்சி புறக்கடைப் பக்கம் போய்வந்துட்டு முதுகுக்கு அண்டக் கொடுத்துட்டு ஒக்காந்து ருக்கு. ஒரு வாரமா தனக்கு என்ன ஆச்சின்னே நிதானமில்லே. நீயும் ஒண்ணம் முகத்துல வாட்டம் காட்டிக்காம சகஜமா பேசு புரியுதா.

அந்த நேரத்துக் காபியும் சுந்தரம் மாமாவின் வார்த்தைகளும் சுசிக்கு மிகவும் அவசியமான ஒன்றாக இருந்தது. வீட்டுக்குள் சீரான நடைபோட்டுப் புகுந்தவள் வதங்கின கத்திரிக்காய் போலிருந்த அம்மாவைப் பார்த்ததும் எழுந்த அழுகையை அடக்கிக் கொண்டாள்.

அக்கம் பக்கம் முகவாட்டத்துடன் அமர்ந்திருந்தவர்களைப் பார்த்து இங்க எதுக்கு மொகத்தத் தொங்கப் போட்டுட்டு இருக்கீங்க என்றபடி அம்மாவின் அருகில் அமர்ந்து தொடையில் கை வைத்து நான் எதனாச்சும் சமைச்சுத் தர்றேன் சாப்புட்றியாம்மா என்று கேட்டாள்.

அம்மாவின் முகம் சிம்னியைத் துடைத்து ஏற்றியது போலப் பளீரிட்டது. வாயைத் திறந்து சொன்னாள். ஆனால் குரல் எதுவும் வரவில்லை. சுசீ இன்னமும் நெருங்கி வந்து கேட்டாள்.

முக அசைவு கண்களின் ஓட்டம் ஆகியவற்றை வைத்து புரிந்து கொண்டு சமையலறையில் போய்த் தூக்குவாளி எடுத்து வந்து மகியிடம் கொடுத்து கீழத்தெரு மாடசாமி வீட்டில் போயி பால் வாங்கிட்டு வாப்பா என்றனுப்பினாள்.

கீழத் தெரு மாடசாமி தான் வீட்டுப் பசு கன்றுகளைத் தனது எறுமைகளுடன் மேய்ப்பவர். அவர்தான் மூன்று நான்கு மாடுகளில் பால் கறந்து கொடுப்பவர். அம்மாவின் தொழுவத்தையே நிருவாகம் செய்பவர். என்னதான் தீனி போட்டு வளர்ப்புப் புல் போட்டாலும் ஏரி கரைகளில் வெயிலில் மேய்கிற மாட்டுப்பாலின் ருசியே தனி தான். ருசியான பால் தான் சத்தான பால் என்பது அம்மாவின் கொள்கை. பால் வணிகம் பெருந்தொழிலாக மாறிய பின்னரும் அம்மா மாறவில்லை. பிள்ளக குடிக்கிற பால்ல வெயில் வாசம்தான் இருக்கணும் கவுச்சி வாசனை கூடாது என்ற கருத்து கொண்டிருந்தார்.

அதே நேரம் தனக்குக் காபி போட்டுக் குடிக்க மாடசாமியின் எறுமைப்பாலே உகந்தது. அதனால் பால் கறக்க வரும் மாடசாமி எறுமைப்பாலை அம்மாவுக்கு ஊற்றி விட்டு தன் பிள்ளைகளுக்கு அம்மாவின் பசும்பாலை வாங்கிக் கொண்டு போவார். சுமார் முப்பதாண்டுப் பழக்கம் இது. சாதி முரண்கள் கூர்மை அடைந்த போதும் கூட இந்த வழமை தொடர்ந்து கொண்டுதான் இருந்தது.

மகி பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் எல்லாம் மாறிப்போனது. அவன் பாக்கெட் போடும் பெருநிறுவனங்களுக்குப் பால் ஊற்றுகிறான்

வெறுப்பான முகத்தோடு பால்த் தூக்குவாளியை அக்காவிடம் கொடுத்தான். சுசீலா மூடியைத் திறந்து வாசம் பிடித்து நிறைவடைந்தாள். அந்த நிறைவை அம்மாவிடமும் மிக்க குறியாய் காட்டினாள்.

அடுப்பைப் பற்ற வைத்து வெல்லம் போட்டு வடித்து காபித் தம்ளர்களை நன்றாகத் தூக்கி நுரைக்க நுரைக்க ஆற்றுவதை அம்மா கண்கள் மினுக்கப் பார்த்து விட்டு அவளது வழக்கமான மிடுக்கோடு அமர்ந்தாள்.

சுசீலா காபித் தம்ளரை நீட்ட ஆவலோடு வாங்கிய அம்மா அதன் வாசத்தை தியானபாவத்துடன் முகர்ந்து பார்த்தாள். நன்றி பாவனையுடன் சுசீலாவை ஏறிட்டாள்.

மிடறு மிடறாக அவள் ஆவலுடன் குடிப்பதை சுசீ தவிர மற்றனைவரும் குற்றவுணர்வுடன் பார்த்தனர்.

பாதி காப்பிக்கும் மேலாகக் குடித்த பின்னர் இங்க வாடி மகளே என்று சுசியை அழைத்து குடியென்று பாவனை காட்டினாள். சுசீ பெற்றுத் தயக்கத்தோடு முதல் மிடறு குடித்தாள். குடிக்கும்படி அம்மா தலையை உயர்த்தி வெட்டினாள். அக்கா முழுதும் குடித்த நொடியில் அம்மா சட்டென்று கட்டிலில் உடலைச் சாய்த்தாள்.

சுந்தரம் மாமா அவசரமாக கூட்டத்தை விலக்கி அம்மாவை நாடியையும் மூச்சையும் மாறி மாறி சோதித்தார். அந்த சில நிமிடங்களிலேயே அம்மாவின் முகம் வெளிச்சமுற்றது.

''ச்ச்சம் முடிஞ்சிச்சி'' என்று சுந்தரம் மாமா விட்ட அம்மாவின் கை பொத்தென்று விழுந்தது.

''வைராக்கியக்காரி'' என்றபடி முகத்தை மூடிக் கொண்டு கூடத்தை விட்டு வெளியேறினார்.



ஓவியம்: ஜீவா

சிறுகதை

காணாமல் போனவன்!

யுவகிருஷ்ணா

காணாமல் போனவர் குறித்த அறிவிப்பினை டிவியில் பார்த்துக் கொண்டிருந்தான் காணாமல் போனவன்.

'இடது மார்பில் ஒரு ரூபாய் அளவுக்கு மச்சம் இருக்கும்' என்று அடையாளம் சொல்லிக் கொண்டிருந்தார் அறிவிப்பாளர். சட்டைப்பைக்குள் கைவிட்டு ஒரு ரூபாய் நாணயம் எடுத்தான். இருபட்டன்களை கழற்றி மச்சத்தைப் பார்த்தான். அதன்மேல் ஒரு ரூபாய் நாணயத்தை வைத்தான். ம்ஹூம். மச்சம் இன்னும் பெரியது. பழைய ஒரு ரூபாய் நாணயத்தின் அளவுக்கு இருந்தது.

எதிரில் உட்கார்ந்திருந்தவன் தன் நடவடிக்கையை சற்றே வினோதமாகப் பார்த்ததைப் போல இவனுக்குத் தோன்றியது.

அவன் தலைக்கு மேலாக கொஞ்சம் தள்ளி டிவி இருந்தது. டிவியை திரும்பிப் பார்த்திருந்தால் ஒரு வேளை இவன்தான் அவன் என்று தெரிந்துக் கொண்டிருப்பான்.

டீக்கடை டேபிள் மீது இருந்த தினத்தந்தியைப் புரட்டினான். ஏழாம் பக்கத்தில் இவனுடைய படத்தோடு 'காணவில்லை' விளம்பரம் வந்திருந்தது.

அம்மா படுத்த படுக்கையாகக் கிடக்கிறார்.

மனைவி பச்சைத் தண்ணீர் கூட அருந்தவில்லை.

செல்ல நாய்கள் இரண்டும் குலைத்துக் கொண்டே இருக்கின்றன.

இது போன்ற அரிய தகவல்களை விளம்பரத்தில் கொடுத்திருந்தார்கள். உடனடியாக வீட்டுக்கு வந்து இந்தப் பிரச்சினைகளை தீர்க்குமாறு உறவினர்கள் - நண்பர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள்.

காணாமல் போனவன், எந்த சலனமும் இல்லாமல் பேப்பரை மடித்து வைத்தான். கடையை விட்டு வெளியே வந்ததும், உடல் எந்த திசை நோக்கி நின்றதோ அந்த திசை நோக்கி நடந்தான்.

டிவியில் காட்டுகிறார்கள். பேப்பரில் விளம்பரம் கொடுத்திருக்கிறார்கள். ஊரெல்லாம் சுவரொட்டி ஒட்டியிருக்கிறார்கள்.

ஆனால் -

இந்த மாநகரில் நான்கு நாட்களாக இவனை எதிரில் கடந்துச் சென்ற லட்சம் பேரில் ஒருவன் கூட அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்பது ஆச்சரியமாகதான் இருந்தது.

காசுதான் தண்டம். இனிமேல் யாராவது காணாமல் போனால் விளம்பரம் கொடுத்து காசை வீணாக்கக் கூடாது என நினைத்தான். பிறகுதான் என்ன நினைத்தானோ அதற்காக வேதனையும், வெட்கமும் அடைந்தான்.

இவன்தான் காணாமல் போய் விட்டானே?

இனி எதற்கு வருங்காலத்தில் காணாமல் போகப் போகிறவர்களை பற்றி கவலைப்பட வேண்டும்? போக்குவரத்து சிக்னலில் சிகப்பு விளக்கு எரிந்துக் கொண்டிருந்தது. மனிதன் சுதந்திரமாக நடப்பதை கூட சிக்னல் போட்டு கட்டுப்படுத்துகிறார்கள். சிக்னலில் எந்த பக்கத்துக்கோ பச்சை சுதந்திரம் கிடைத்தது.

விரைந்து நகராவிட்டால் உலகம் அழிந்து விடுமோ என்கிற அவசரத்தில் பைக்குகளும், கார்களும் சீறிப்பாய்ந்தன. அடுத்த பக்கத்தில் எதிர் வாடைக்கு வருவதற்கு சிக்னலுக்காக காத்திருந்தவர்கள் கோட்டை தாண்டி கொஞ்சம் கொஞ்சமாக நத்தை மாதிரி ஊர்ந்துக் கொண்டிருந்தார்கள்.

நடப்பதற்கு அனுமதிக்கப்பட்ட வெளியில் பச்சை சமிக்ஞையை எதிர்ப்பார்த்து இவனுக்கு பின்னால் கூட்டம் சேர ஆரம்பித்தது. அம்மாவின் கைப்பிடித்து வந்த ஆறு வயது சிறுவன் ஒருவன் சட்டென்று கையை உதறிவிட்டு சுயேச்சையாக இயங்க விரும்பினான். 'கூட்டத்துலே காணாமப் போயிடுவே' என்று அம்மா எச்சரித்து, மீண்டும் வலுப்பிடியாக அவனுடைய கையைப் பிடித்தாள்.

'அவன் காணாமதான் போவட்டுமே' என்று அந்த பெண்மணியை பார்த்து இவன் சொன்னான். அவள் கண்டுக் கொண்டதாகவே தெரியவில்லை. சிக்னல் விழ, எல்லோரும் இவனை கடந்துப் போனார்கள். மந்தைகளின் மத்தியில் செம்மறியாய் நடப்பதை இவன் வெறுத்தான். அதற்காகதான் காணாமலும் போனான்.

எனவே வந்த வழியே திரும்பி நடக்க ஆரம்பித்தான். நெற்றியில் வழிந்த வியர்வை கண்ணில் பட்டு எரிய ஆரம்பித்தது. இடது கையைத் தூக்கி, தோளில் முகம் புதைத்து வியர்வையைத் துடைத்தான். காணாமல் போக வேண்டும் என்று அவனுக்கு வேண்டுதல் எதுவும் இல்லை. திடீரென்று தோன்றியது. காணாமல் போய்விட்டான்.

'கண்ணுக்கு தெரியாம எங்கேயாவது போய் தொலை' என்று எத்தனையோ முறை எத்தனையோ பேர் திட்டியிருக்கிறார்கள். அப்போதெல்லாம் தொலைந்து போகத் தோன்றவேயில்லை. காணாமல் போன அன்று என்ன நடந்தது என்று பட்டியல் இட்டான்.

வழக்கம் போல காலை ஆறுமணிக்கு எழுந்தான். காலைக் கடன்களை முடித்தான். அவசரமாக பேப்பர் படித்தான். குளித்தான். காலை உணவு உண்டான். மனைவிக்கு முத்தம் கொடுத்தான். அம்மாவுக்கு டாட்டா சொன்னான். நாய்களை தடவி கொடுத்தான். பைக்கை எடுத்தான். தெரு முனையில் நின்று சிகரெட் பிடித்தான். சிக்னலில் நின்றான். ஊர்ந்து ஊர்ந்து சிக்னலுக்கு வந்து மீண்டும் நின்றான். அலுவலகத்துக்கு அரைமணி நேரம் தாமதமாக வந்தான். மேனேஜரின் குரைப்பை சகித்துக் கொண்டான். கடுமையாக வேலை பார்த்தான். மதிய உணவு உண்டான். ஒரு சிகரெட் பிடித்தான். மீண்டும் வேலை பார்த்தான். ஆறு மணிக்கு கணினியை அணைத்தான். எல்லோருக்கும் 'பை' சொன்னான். ஒரு சிகரெட் பிடித்தான்.

இதெல்லாம் தினமும் சொல்லி வைத்ததைப் போல ஒரு முறை போலவே எல்லா முறையும் நடக்கிறதே என்று சிந்தித்தான். செல்போனைத் தூக்கி குப்பைத் தொட்டியில் வீசினான். காணாமல் போய்விட்டான். அவ்வளவுதான்.

ஏன் காணாமல் போனான்? ஏன் காணாமல் போகக்கூடாது என்று அவனுக்கு பட்டது. போனான். இலக்கில்லாமல் நடந்து கொண்டிருந்தபோது முன்பு டீ குடித்த அதே டீக் கடை திரும்பவும் வந்தது. டிவி அணைக்கப்பட்டிருந்தது. காலையில் வாசித்த தினத் தந்தி விளம்பரத்தை மீண்டும் வாசிக்க விரும்பினான். பேப்பரைக் காணோம்.

'மாஸ்டர், ஸ்ட்ராங்கா சர்க்கரை தூக்கலா ஒரு டீ' சொல்லிவிட்டு சிகரெட்டை பற்ற வைத்தான். புகையை வெளியில் விட்டான். தான் ஏன் சிகரெட் பிடிக்கிறோம் என்று அவனுக்கு காரணமே தெரியவில்லை. கையிலிருந்த சிகரெட்டை காலில் போட்டு நசுக்கினான்.

'தம்பி, டீ இன்னும் வரலை..' என்று மாஸ்டருக்கு மீண்டும் குரல் கொடுத்தான். டீ மாஸ்டர், இவனைக் கண்டுக் கொண்டதாகவே தெரியவில்லை. கோபம் வந்தது. காணாமல் போய் விட்ட தனக்கு இந்த சுயகவுரவமெல்லாம் தேவையா என்று மனதை திடப்படுத்திக் கொண்டான். கடையை விட்டு வெளியேறி மீண்டும் நடந்தான். வழியில் சுவர்களைப் பார்த்துக் கொண்டே நடந்தான்.

விபத்தில் மரணமடைந்தவனுக்கு வீரவணக்கம் போஸ்டர் ஒட்டி இருந்தார்கள். விபத்துக்கும் வீரத்துக்கும் என்ன தொடர்பு? 'கிரிக்கெட் வீரன்' என்கிற சொல்லில் கூட காணாமல் போனவனுக்கு ஒப்புதல் கிடையாது. கிரிக்கெட் ஆடுவது எப்படி வீரம் ஆகும்? 'அழகி கைது' என்று தலைப்பிடப்பட்டு செய்தித் தாள்களில் பிரசுரிக்கப்படும் படங்களில் இருக்கும் பெண்கள் அழகிகளாக இருப்பதே இல்லை. காணாமல் போனால் இப்படியெல்லாம் வித்தியாசமாக சிந்திக்க வருகிறதே என்று தன்னைத் தானே மெச்சிக் கொண்டான்.

ஒரு நாய் குலைத்துக் கொண்டிருந்தது.

சுடிதார் அணிந்த பேரிளம் பெண் செல்போனில் யாருடனோ கடலை போட்டுக் கொண்டிருந்தாள். ஒரு கள்ளக்காதலன் திடீரென்று மனம் திருந்தி, 'சாப்பிட்டியா?' என்று தான் தாலி கட்டிய தர்மபத்தினிக்கு குறுஞ்செய்தி அனுப்பிக் கொண்டிருந்தான். எழுத்தாளன் ஒருவன், பத்திரிகையில் பிரசுரம் ஆகியிருந்த தன் கதைக்கு தானே வாசகர் கடிதம் எழுதிக் கொண்டிருந்தான். கல்லூரி மாணவி ஒருத்தி ஃபேஸ்புக்கில் யாருக்கோ ஹாட்டின் வடிவ லைக் போட்டுக் கொண்டிருந்தாள்.

அவளை சைட் அடிக்கும் பையன், இவளை கட்டிக்கொண்டால் நெட்டுக்கு பில்லு கட்டவே நட்டு கழண்டு விடும் போலிருக்கு என்று கவலைபட்டுக் கொண்டிருக்கிறான். அக்னி வெயிலில் உருகிப்போன டிரைவர் சட்டையை கழட்டி விட்டு கையில்லாத பனியனோடு பஸ் ஓட்டுகிறார்.

கோயம்பேடு மார்க்கெட்டில் பூ வாங்கிவிட்டு திரும்பும் பூக்காரம்மா ஒரு பஸ்ஸில் ஏறினாள். அதே பஸ்ஸில்தான் காணாமல் போனவனும் ஏறினான். ஏதோ ஒரு நிறுத்தத்தில் இறங்கினான். இலக்கில்லாமல் நடந்தான். காணாமல் போனவன், அவனுடைய வீட்டுக்கே அறியாமல் சென்றான். மனைவி, இண்டர்நெட்டில் சமையல் குறிப்புதேடிக் கொண்டிருந்தாள். அம்மா, டிவி சீரியல் பார்த்துக் கொண்டிருக்கிறாள். நாய்கள் இரண்டும் நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு தெருவை வெறித்துக் கொண்டிருந்தன.

இவன் வந்ததை யாரும் பொருட்படுத்தவே இல்லை. குரல் கொடுத்து மெலிதாக அழைத்தான். சற்றே குரலை உயர்த்தியும் அழைத்துப் பார்த்தான். எவரிடமும் எந்த சலனமுமில்லை. எல்லோருக்கும் காது செவிடாகி விட்டதா அல்லது குருடாகி விட்டார்களா? ஓடிப்போய் மனைவியை உலுக்கினான். வெறும் காற்றை பிடித்து உலுக்குவது மாதிரி இருந்தது. இவனது உலுக்கல் அவளிடம் எந்த அசைவையுமே ஏற்படுத்தவில்லை. அம்மா பார்த்துக் கொண்டிருந்த டிவியை மறைத்து நின்றான். இப்படி ஒருவன் நிற்பதே அவளது கண்களுக்கு தெரியவில்லை. இவனை ஊடுருவிக் கொண்டு அவளால் சீரியல் பார்க்க முடிந்தது. நாய்களிடம் போனான். இவன் வந்திருப்பதையே அவை உணரவில்லை.

காணாமல் போனவன், தான் காணாமல் போனதற்காக முதல் தடவையாக பதட்டம் அடைந்தான். வேகமாக சாலையை நோக்கி ஓடினான். ஒலி எழுப்பிக் கொண்டு படுவேகமாக குடிநீர் லாரி வந்தது. தவிர்த்துக் கொள்ள சமயமில்லை. முடிந்தது கதை என்று நினைத்தான். அதுவோ இவனை ஊடுருவிக் கொண்டு நகர்ந்தது. குழம்பினான். கதறினான். தேம்பித் தேம்பி அழுதான்.

காணாமல் போனவனின் இருப்பை எவருமே உணர முடியவில்லை. இவனுக்கு 'எக்சிஸ்டென்ஷியலிஸம்' என்கிற சொல்லே அர்த்தமற்றதாகி விட்டது.

தாரை தப்பட்டையோடு எதிர்ப்பட்டது சாவு ஊர்வலம். உற்றுப் பார்த்தான். வித்தியாசமாக உணர்ந்தான். ஊர்வலத்தில் வந்த அத்தனை பேருமே இவனாக இருந்தார்கள். அந்த ஊர்வலத்தோடு சேர்ந்து நடந்தான்.

செத்தவன் எவன் என்று தெரியாமலேயே செத்தவனுக்காக வாயில் வயிற்றில் அடித்துக் கொண்டு அழுதான். சுடுகாட்டில் பிணத்தை இறக்கி வைத்தார்கள். வெட்டியானாகவும் அவனே இருந்தான்.

பிணமேடையில் கிடத்தப்பட்ட பிணத்தின் மீது வறட்டிகளையும், கட்டையையும் லாகவமாக வெட்டியான் அடுக்கினான்.

எழவு, கொள்ளி போடுபவனும் இவன்தான்.

'முகம் பார்க்குறவங்கள்லாம் பார்த்துடுங்க. உடன்பால் எடுக்குறாங்க' வெட்டியானின் குரல் கேட்டதும் காணாமல் போனவனுக்கு முகம் பார்க்க ஆசை வந்தது.

பிணமும் இவனே.

சிதை எரிந்தது.

காணாமல் போனவன் நிஜமாகவே காணாமல் போய் விட்டான்.

சிறுகதை

கத்தரிப்பூ நிற கைக்குட்டை

கீரனூர் ஜாகிர்ராஜா

அனீசா இந்த உச்சிவெயிலில் எங்கள் வீட்டுக்கு வந்துபோகிறாள். இதற்கான காரணத்தை அறிந்துகொள்ள நான் அதிகம் பிரயாசைப்பட்டேன் என்றுதான் நினைக்கிறேன். அதுவும், நான் லொஹர் தொழுகை முடித்து வந்து வீட்டினுள் நுழைந்ததும் விடைபெறுவதில் அவள் காட்டிய துரிதம் என்னைத் துணுக்குறச் செய்தது. என் முகத்தைக்கூட ஏறிடாமல் தாவணியால் முக்காடு போர்த்திக்கொண்டு ''போயிட்டு வாரேன் பெத்தம்மா'' என்று அம்மாவிடம் சொல்லியும் சொல்லாமலும் மின்னலென மறைந்துவிட்டாள். ''ஒரு குத்து சோறு உண்டுட்டு போல அனீசாயி கறிஆணம் காச்சிருக்கேன்யி'' அம்மாவின் அழைப்பை அவள் செவி கொடுத்துக் கேட்கவேயில்லை. எப்போதுமவள் அம்மாவின் குரலை மறுதலிக்கிறவள் அல்ல. உரிமையாக சோத்து வீட்டுக்குள் நுழைந்து ஏனபானங்களைத் திறந்து பார்த்து, அன்றைக்கு என்ன உணவு ஆக்கப்பட்டுள்ளதோ அதைப் பீங்கானில் எடுத்துவைத்து ருசிபார்த்து, உப்பு புளி உறைப்பு குறித்த தன் அபிப்ராயத்தை அறிவித்துவிட்டுப் போகிறவள். இன்றைக்கு ஏன் இந்த அவசரம்? எனக்குப் புரியவில்லை. இத்தனைக்கும் நான் என்ன அயல் ஆளா - பழகாதவனா.

அனீசா என் இளைய சித்தியின் மகள். அனீசாவும், என் மூத்த சித்தியின் மகள் ஆரிபாவும் நானும் எங்கள் உறவின் நெருக்கத்தால் ஒன்றாக உண்டு, விளையாடி உறங்கிக் கழித்தவர்கள். எங்கள் மூவரின் தகப்பன்மார்களுக்கும் வெளிமாநிலங்களில் வணிகம். இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தான் அவர்களின் வருகையும் என்பதால் அப்போது ஏகசுதந்திரம் எங்களுக்கு.

இந்தக் காயிதேமில்லத் தெருவையே எங்கள் மூவர் கூட்டணி ஒரு காலத்தில் கலக்கியிருக்கிறது. தொட்டு விளையாட்டு, பில்தடி, பாப்பாங்கரம், ஐஸ் நம்பர் என்று, தெருப்பிள்ளைகள் எவரையும் கூட்டு சேர்த்துக் கொள்ளாமல் நாங்கள் மூவர் மட்டுமே எங்களுக்குள் விளையாடிக் கொள்வோம். வலிய வந்து எங்கள் கூட்டணியில் சேர விரும்புகிறவர்களை அவர்கள் தகுதியானவர்கள் என்றாலுமேகூட தாட்சண்யம் பாராமல் நிராகரிப்போம். இதனால் தெருப்பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, அவர்களுடைய பெற்றோர்களுக்கும் எங்கள் மீது வருத்தம் இருந்தது. இப்படி ஊரார் கண்பட்டதாலோ என்னவோ ஒரு கட்டத்தில் எங்கள் ஆட்டப்பாட்டம் எல்லாம் அடங்கும் சூழ்நிலை ஏற்பட்டது.



ஓவியம்: வேலு

முதலில் என் பெரியசித்தி மகள் ஆரிபாவும், அவளைத் தொடர்ந்து இளைய சித்தி மகள் அனீசாவும் பருவமடைந்து வீட்டுக்குள் முடங்கியபோது எங்கள் கூட்டணி உடைந்தது. நான் சிறிது காலம் தனித்துவிடப்பட்டேன். பிறகு நான், சித்திமார் வீடுகளுக்குச் சென்றாலும் ஆரிபா, அனீசாவை முன்புபோல எளிதாக அணுகமுடியவில்லை. எவ்வளவுக்கு நெருங்கியிருந்தோமோ அவ்வளவுக்கு விலகிவிட்டிருந்தோம்.

ஆரிபாவைவிட நான் ஆறுமாதம் மட்டுமே மூத்தவன்; அனீசாவை விட ஒன்றரை வயது. வாஸ்தவத்தில் அவர்கள் இருவருக்குமே நான் அண்ணன்- அதுவும் ஒரே அண்ணன். அண்ணன் தங்கை என்றாலுமே கூட, சமூகம் அவர்களுக்கு இடையில் கண்ணுக்குப் புலப்படாத ஒரு எல்லைக்கோடு கிழித்து நிறுத்துகிறது. பெண்பிள்ளைகள் பருவ வயதை அடைந்தபிறகு அந்த எல்லைக்கோடு இன்னும் அழுத்தமாகிறது.

சிறுபிள்ளைகளாக கவுன் போட்டுக்கொண்டு விகல்பமில்லாமல் என்னுடன் திரிந்த ஆரிபாவும் அனீசாவும் சட்டென்று தாவணிக்கு மாறியபோது அவர்கள் இருவரும் என் கண்களுக்கு வித்தியாசமாகத் தெரிந்தனர். ஒடுங்கி இருந்த அவர்களுடைய உடல்வாகில் மெருகு கூடிவிட்டிருந்தது. அதைக்காண எனக்கு இனம்புரியாத உணர்வும் சங்கடமும் தோன்றியது. இந்த என் அவஸ்தையுடன் பெரியசித்தியிடம் சொன்னேன். ''சித்தி. ஆரிபா முன்புபோல என்னிடம் பேசுவதில்லை. எனக்கு வருத்தமா இருக்கு'' பெரிய சித்தி அதற்கு பதில் சொன்னாள். ''அவள் பெரிய மனுஷி ஆகிவிட்டாள் ரகமத்துல்லா கொஞ்சம் நாட்களுக்கு அப்படித்தான் இருக்கணும்.'' சிறியசித்தியிடம் புகார் வைத்தேன். ''அனீசா என்னிடம் பேசமாட்டேன்கிறாள்'' சிறியசித்தி என்னிடம் சொன்னாள் ''அனீசா கொமரு ஆயிட்டாள். சில்லாவில் இருக்கிறாள்''

பெரிய மனுஷி, கொமரு, சில்லா - எதுவும் புரியவில்லை எனக்கு அப்போது. அக்கா தங்கைகளை மூவருக்குள் அபூர்வமாக சண்டை வந்து, ஒருவருக்கொருவர் சொற்பம் நாட்கள் பேச்சுவார்த்தை இல்லாமலிருப்பது உண்டு. அந்த சீசன் ஆரம்பமாகிவிட்டதோ என சந்தேகித்து அம்மாவிடம் கேட்டேன். அம்மா அதற்கு சொன்னாள் ''நீ கொஞ்சம் நாளுக்கு உன் சித்திமார் வீட்டுக்குப் போகாத.''

''ஏம்மா?''

''போகாதேன்னா போகாத.. கேள்வி எல்லாம் கேட்கப்படாது.''

எரிச்சலாக இருந்தது எனக்கு. இந்தப் பொம்பளைங்களுக்கு என்னதான் ஆச்சு. சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ள தெருவில் எந்தச் சிநேகிதமும் இல்லை. எங்கள் மூவர் கூட்டணி மீதிருந்த கோபத்தில் நானாக வலியப்போய் பேசினாலும் எவனும் பேசுவதில்லை. முகத்தைத் திருப்பிக்கொண்டு போனார்கள். ''போங்கடா..'' என்று நானும் குளத்தங்கரை இட்டேரியின் மீதமர்ந்து தொலைதூரத்தில் நின்றிருந்த பனைகளுக்கும் பறவைகளுக்கும் என் சோகத்தைக் கடத்த முயற்சித்தேன்.

★★★

அனீசா வேகமாக வீட்டைவிட்டு வெளியேறியபோது, நடைக்குப் பக்கம் ஏதோவொன்றை அவள் தவறவிட்டுச் செல்வதை அனிச்சையாக கவனித்திருந்தேன். அவளுடைய கையிலிருந்தோ தாவணி மறைப்பிலிருந்தோ அது கீழேவிழுந்தது. அம்மாவின் கவனம் அதன்மேல் செல்லக்கூடாது என்பதில் ஏனோ எச்சரிக்கையாக இருந்தேன். நல்லவேளையாக அம்மாவின் பார்வை அங்கே பதியவில்லை. ஆனாலும் ஏதாவது பேசி அவளை திசைதிருப்ப முயற்சித்தேன்.

''அம்மா, அனீசா ஏன் சாப்பிடாமல் போகிறாள்?''

''நீ பள்ளிவாசலுக்குப் போய் லொஹர் தொழுதிட்டே. அவ தொழவேண்டாமா? அதான் போறாள்.''

அம்மா வெளிப்படையாகத்தான் பேசுகிறாள் என்று என் மனதுக்குப்பட்டது. ஆனாலும் அனீசாவின் அந்த வேகவேகமான வெளிநடப்பு என்னைத் தொந்தரவு செய்தது.

''உன்னிடம் அனீசா ஏதாச்சும் சொன்னாளா அம்மா?''

''இல்லையே. ஏதும் சொல்லலையே. எதுக்கு கேக்குற?''

அம்மா பதிலுக்குக் கேட்டதும் நான் ''ஒண்ணும் இல்லம்மா'' என்று சமாளித்தேன். என்னை வினோதமாய் பார்த்துவிட்டு அம்மா உள்ளே சென்றாள். எனக்குப் பிரச்சனை இருந்தது. எனவேதான் நான் தத்தளிக்கிறேன் என்று அவள் இந்நேரம் யூகித்திருப்பாள். எனக்கு கால்நூற்றாண்டு முன்பு பிறந்தவள்.

நான் நடைக்கதவை நோக்கி வேகமாகச் சென்றேன். என் உள்ளுணர்வு சரியாகத்தான் இருந்தது. அனீசா அந்த கத்தரிப்பூ நிற கைக்குட்டையை விட்டுச் சென்றிருந்தாள். திகைத்துப் போனேன். இந்த கைக்குட்டை அவளுக்கு எப்படிக் கிடைத்தது? ''சே இந்தப் பெண்களை நம்பவேகூடாது'' சத்தமிட்டுக் கத்தினேன். ''என்னடா ஆச்சு ரகமத்துல்லா?'' பெண்களை நம்பக்கூடாது என்கிற வசனத்தை அம்மா கேட்டிருக்கக்கூடாது என்று வேண்டிக் கொண்டேன்.

''ஒண்ணும் இல்லம்மா. இந்த அனீசா எதுக்கு இவ்வளவு வேகமா போகணும்?''

கையிலிருந்த கைக்குட்டையை மறைத்துக்கொண்டு மழுப்பினேன். ''ஒனக்கு என்ன சைத்தாம் புடிச்சிக்கிச்சா. இப்பத்தான்டா அவ தொழுகைக்கிப் போறானு சொன்னேம். இது செரிப்பட்டு வராது. இஷா முடிஞ்சு வீட்டுக்கு வரையில அஜ்ரத்துட்ட ஓதிப் பாத்துட்டு வா'' அம்மா விசனப்பட்டாள்.

என்னுடைய அறைக்குள் நுழைந்தேன். அடைத்துக் கிடந்த ஜன்னலைத் திறந்துவிட்டேன். ஒளி பாய்ந்தது. கைக்குட்டையை விரித்துப் பார்த்தேன். கத்தரிப்பூ நிற கைக்குட்டையில் மூஸா டெய்லர் தன் கைத்திறனைக் காட்டியிருந்தார். ஏற்கனவே கண்டதுதான். மீண்டும் காணப் பரவசமாக இருந்தது. அடர்த்தியான மஞ்சள் நிறத்தில் 'ஆரிபா' என்று தமிழிலேயே பூப்பின்னல் பக்கத்தில் வெண்ணிறத்தில் பிறையும் நட்சத்திரமும். அழகான வேலைப்பாடு, மூஸா நபி தன் கைத்தடியைக் கொண்டு கடலைப் பிளந்து பாதை கண்டதுபோல, மூஸா டெய்லர் துணியை ஊடுருவித் தனது தொழில் திறமையைக் காட்டியிருந்தார்.

அனீசாவிடம் கைக்குட்டை சிக்கிக்கொண்டது. அவள் ஏதும் கூடுதலாகத் தன் கைங்கர்யத்தைக் காட்டி இருக்கக்கூடுமோ என்கிற நோக்கில் திருப்பித்திருப்பி ஆராய்ந்தேன். அப்படியெல்லாம் எதையும் கண்டுபிடிக்க இயலவில்லை. கைக்குட்டையை முகர்ந்து பார்த்தேன். புதிய வஸ்திரங்களுக்கேயான வாசனைதான் அடித்தது. எனக்குள்ள கேள்வி எல்லாம் ஆரிபாவிடம் நான் கொடுத்திருந்த கைக்குட்டை அனீசாவின் கைக்கு எப்படி வந்தது. ஆரிபாவிடமிருந்து அனீசா திருடிக்கொண்டாளா? டெஸ்டமெனோவின் அறைக்கு இயாகோவால் அனுப்பப்பட்ட காசியோவா இந்த அனீசா? இல்லை இயாகோ, காசியோ இருவருமே அனீசாவாகத்தான் இருக்க வேண்டும்.

எட்டாம் வகுப்பு படிக்கையில் பள்ளி ஆண்டுவிழாவில், உடன்பயின்ற எஸ்.பாலன் ஷேக்ஸ்பியரின் 'ஒத்தல்லோ' நாடகம் போட்டான். இரத்தத்திலகம் படத்தில் இடம்பெற்றிருந்த ஓரங்கநாடகத்தை அப்படியே காப்பியடித்துப் போடப்பட்ட நாடகம் அது. என்ன ஒரு விசேஷம் என்றால், எஸ்.பாலனின் ஆங்கில உச்சரிப்பு அபாரமாக

இருக்கும். அவனுடைய தாத்தாவின் பயிற்சி. நாடகம் தொடங்குவதற்கு முன்பு, நாடகத்தின் கதையை எஸ்.பாலன் தமிழில் சொன்னான். மனதில் அப்போதே அந்தக் கதை பதிந்துவிட்டிருந்தது.

காதல் மனைவி டெஸ்டமோனோவுக்கு கணவன் ஒத்தல்லோ கைக்குட்டை ஒன்றைப் பரிசாக அளித்திருப்பான். ஒருநாள் அந்த கைக்குட்டை தன் நண்பன் காசியோவின் கையிலிருப்பதைக் கண்ட ஒத்தெல்லோ, அது இயாகோ என்பவனின் சதி என்பதை அறியாமல், மனைவியைச் சந்தேகப்பட்டு கொலை செய்துவிடுவான். அதற்காக நான் ஆரிபாவைக் கொலை செய்யமுடியுமா என்ன? இரத்தத்திலகம் சிவாஜி மாதிரியோ அல்லது சிவாஜியைக் காப்பியடித்து எஸ்.பாலன் பேசிய மாதிரியோ, பக்கம்பக்கமாக ஆங்கில வசனம் பேசி ஆரிபாவைக் கொலை செய்வதற்குள், ஆரிபா என்னைக் கொலை செய்து பிரியாணி ஆக்கிவிடுவாள்.

கைக்குட்டையை வாங்கப் போயிருக்கையில் மூஸா டெய்லர் கிண்டலாகக் கேட்டார், ''ஆரிபா யாரு?'' அத்தை மகளா என்கிற பொருளில். ''குப்பிம்மா மகளா?'' என்று அவரே திரும்பவும் கேள்விகேட்டார். அப்போது, கண்களில் வெளிப்பட்ட குறும்பு கண்ணாடியைத் தாண்டி வெளியில் குதித்தது. நான் சித்திமகள் என்கிற பொருளில் ''காலாம்மாமகள்'' என்றேன். அதைக்கேட்டதும் துணி வெட்டிக்கொண்டிருந்த பெரிய கத்தரிக்கோலைத் தூக்கி மேஜைமேல்போட்டு கைதட்டிச் சிரிக்க ஆரம்பித்தார்.

மனிதர்கள் பெண்களைப் பற்றி பேசும்போது கோமாளிகளாகத் தெரிகிறார்கள். இடது காதில் செருகியிருந்த சிகப்பும் நீலமும் இணைந்திருந்த கலர்பென்சிலை எடுத்து, வெட்டிக் கொண்டிருந்த வெள்ளைத்துணியில் ஏதோ சங்கேதக்குறி எழுதி தைப்பவனின் டேபிளை நோக்கி விட்டெறிந்தார். பிறகு என் காதில் கிசுகிசுத்தார். ''சித்தி மகளா இருந்தாலும் நிக்கா செஞ்சுக்கலாம்''

மறுபடியும் ஒருவித கேணத்தனமான சிரிப்பு. சகித்துக் கொண்டேன். வேறென்ன செய்ய? ஆனால் அவர் சொன்ன வசனம் என்னைச் சிந்திக்க வைத்தது. ஏற்கனவே யாரோ சொல்ல கேள்விப்பட்டிருந்தேன். நடைமுறையில் அதுவரை கண்டதில்லை. அப்படியெல்லாம் நினைத்து ஆரிபாவுக்கு நான் கைக்குட்டையைக் கொடுக்கவுமில்லை. ஆனால் அவள் கைகளில் அதை நான் வலியத் திணித்தபோது ''என்ன இது புதுப்பழக்கம்?'' என்று பதற்றமானாள்.

''முந்தாநாள் கைக்குட்டையைக் காணோம் என்று தேடினாய் தானே?''

''ஆமாம். அதை நான் யாரிடமும் தெரிவிக்கவில்லையே. நானாக முனங்கிக் கொண்டு தேடிக்கொண்டிருந்தேன்.''

''அப்போது நான் உங்கள் வீட்டில்தான் இருந்தேன். உன் தேடலும் முனகலும் எனக்குத் தெரிந்தது'' ''வேண்டாம். இது தப்பு. அம்மாவுக்குத் தெரிந்தால் திட்டும்.'' அவள் கைக்குட்டையைப் பெற்றுக்கொள்ள மறுத்து போக்கு காட்டினாள். நான் அதற்குமேல் வலியுறுத்தவில்லை. ஆனால் என் முகம் சோர்ந்து, கண்களில் நீர் திரண்டது.

அதைக் கவனித்த ஆரிபா ''இன்னம் நீ மாறலியா? சரிசரி அழுவாத அழுகுமூஞ்சி'' என்றாள். நான் உடனே சிரித்து வைத்தேன். மூவர் கூட்டணி விளையாட்டுகளில் தோல்வியைத் தழுவும்போது இப்படித்தான் என் முகம் சுருங்கிப் போய் கண்கள் கலங்கிவிடும். ஆரிபாதான் அப்போது என்னைத் தேற்றுவாள். ''சரி சரி அழுவாத அழுகுமூஞ்சி''

அதன்பிறகு நான் கண்களைத் துடைத்துக்கொண்டு சிரித்தால். ''அழுத புள்ள சிரிக்குதாம். கழுதப்பால குடிச்சதாம்'' என்று கேலி செய்வாள். அது ஒரு காலம். அன்றைக்கு இருந்த இயல்பான வெள்ளந்தியான மனநிலையை எங்கேயோ தவறவிட்டிருந்தோம். நாங்கள் இயல்பாக இருக்க முயற்சித்தாலும் யாரோ எங்கைளைக் கண்காணிப்பது போன்ற அச்ச உணர்வு உடனே கவ்விக் கொள்கிறது.

என் தோல்வியின் தருணங்களை ஆறுதல் கூறி தேற்றியதாலேயே எனக்கு ஆரிபாவின் மீது அதிக வாஞ்சை ஏற்பட்டது. அனீசா குரங்கு அப்படி அல்ல. நான் தோற்றுப்போனால் ஏளனம் செய்வாள். கைதட்டிச் சிரிப்பாள். என் தோல்வியைக் கட்டி இழுத்துக்கொண்டு போய் எங்கள் மூன்று வீடுகளுக்கும் விளம்பரம் செய்வாள். ''பொம்பளப் புள்ளைட்ட போய் தோத்துட்டியே'' என்று அம்மாவோ, சித்திமார்களோ கேலி செய்யும்போது அவமானத்தால் நான் குன்றிப்போவேன்.

ஆரிபா இதுபோன்ற நேரங்களில் மிகவும் பெருந்தன்மையாக நடந்துகொள்வாள். என் தோல்வியின் மேல் ஒருபோதும் வெளிச்சம் பாய்ச்சியதில்லை அவள். அவள் வென்றிருந்தபோதும் 'ரகமத்து தான்மா ஜெயிச்சான்' என்பாள். இதற்காக அனீசா எத்தனையோ தடவை அவளுடன் சண்டையிட்டிருக்கிறாள். ''ஆம்பளப் பையனுக்கு எதுக்குடி சப்போர்ட் பண்ற அவன கட்டிக்கப் போறியா'' என்று அனீசா ஆரிபாவைக் கேட்டு, இருவருக்கும் குடுமிபிடிச் சண்டையெல்லாம் நடந்திருக்கிறது.

கைக்குட்டையை நான் தந்தபோது ஆரிபா தொடக்கத்தில் அதை வாங்க மறுத்தாலும், தொடர்ச்சியான என் வற்புறுத்தல்களால் பிறகு பெற்றுக் கொண்டாள். எனக்கு அது ஆறுதலாக இருந்தது. ஆனாலும் அந்த நேரத்தில் அவள் வீசிய சில வசனங்கள் என்னுள் இன்னும் கேள்விகளை எழுப்பியபடியே இருக்கின்றன. என் முதுகுக்குப் பின்னால் என் அன்பை உதாசீனப் படுத்துகிறாளோ என்கிற சந்தேகமும் எனக்கு இருக்கவே செய்கிறது. அவள் தன்னுடைய உடமை, அது சிறு துரும்பானாலும் இழக்கச் சம்மதிக்க மாட்டாள். வெகுகாலமாக இதை நான் அவளிடம் அவதானித்து வந்திருக்கிறேன். என்றால் அவள் பெயர் பதித்த கைக்குட்டையை எப்படித் தவறவிட்டிருப்பாள்?

இதையே யோசித்துக் கொண்டிருந்து தலை சூடாகிவிட்டது. அம்மா எப்போதோ காபி கொண்டுவந்து வைத்திருக்கிறாள். நான் அதை கவனிக்கவே இல்லை. ஆறிப்போயிருந்த காபியைக் குடிக்க விருப்பமில்லை. அறையைவிட்டு வெளியில் வந்து, ஜன நடமாட்டத்தையாவது கவனிக்கலாமே என்று நடைப்பக்கமாக நின்று தெருவைப் பார்த்தேன். வழக்கமாக எங்கள் வீட்டுக்கு சவாரி ஏற்றிப்போகும் அப்துல்லா அண்ணனின் மக்கா மதீனா ஆட்டோ 'இறைவனிடம் கையேந்துங்கள்' என்கிற நாகூர் அனீபா பாடலுடன் வாசலில் வந்துநின்றது. அப்துல்லா அண்ணன் ஒரு பெரிய லக்கேஜைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தார். அவருக்குப் பின்னால் அத்தா, அதுதான் எங்க முத்துவாப்பா கம்பீரமாக வந்து கொண்டிருந்தார்.

அந்தநேரத்தில் அத்தாவின் வருகையை நான் எதிர்பார்க்கவே இல்லை. எவ்வித முன்னறிவிப்பும் இல்லாத வருகை. நான் நடைப்பக்கமே நின்றிருந்ததால் ''வாங்க அத்தா'' என்று முகமன் தெரிவித்தேன். பதிலுக்கு அவர் தலையை ஆட்டிவிட்டு ''என்னப்பா உன்னோட கத்தரிப்பூ நிற கைக்குட்டை விஷயம் கள்ளிக்கோட்டை வரை வந்துவிட்டது'' என்று அருகிலிருந்த மரநாற்காலியில் அமர்ந்து ஆசுவாசப்படுத்திக் கொள்ளத் தொடங்கினார். நான் அதற்கு பதில் சொல்ல இயலாமல் அதிர்ந்துபோய் நின்றிருந்தேன்.

சிறுகதை

தனிப்பாறை

க.முத்துக்கிருஷ்ணன்

அந்த மலை உச்சிக்கு இன்று எப்படியும் அழைத்துப் போகிறேன் என்று ஸார் கூறியிருந்தார். அடுத்தத் தெருவிலிருக்கும் ஆறுமுகம் என்ற நண்பனையும் உடன் அழைத்துச் செல்லலாம் என்று ரத்தினம் சொன்னபோது முதலில் ஸார் முறைத்தார். பின்பு ரத்தினத்தின் கெஞ்சல் குழையும் முகத்தைப் பார்த்தவுடன் சம்மதம் என்பது போல் தனது பிடரியில் மட்டும் நிரம்பி வழியும் நீண்ட முடி அசைய தன் முகத்தை அசைத்தார்.

சென்ற முறை அந்த மலை உச்சிக்கு ஏற முயற்சித்த போது ஸார் மிகவும் களைப்பாகி ஒரு கால்வாசி தூரத்திலேயே ஒரு சிறிய பாறை மீது உட்கார்ந்துத் தன் ஒரு காலைத் தூக்கித் தனது மற்றொரு காலின் மூட்டுப் பகுதியில் பாதம் படும்படி உட்கார்ந்து விட்டார். அப்போது அவருடைய உடலுக்கும் கால்கள் இரண்டிற்கும் இடையே ஒரு முக்கோணம் தென்பட்டது. ஸார் உட்கார்ந்து விட்டதை ரத்தினம் கவனிக்காமல் மலை உச்சியை நோக்கி நகர்ந்து நகர்ந்து நடந்து கொண்டிருந்தான்.

ரத்தினம் உச்சிக்குச் செல்ல ஆறுமுகம் உதவி செய்யலாம் என்று ரத்தினம் எதிர்பார்த்தாலும் ஆறுமுகம் அவ்வாறெல்லாம் செய்யாமல் ரத்தினம் மேலே மலைஉச்சிக்கு ஏற முயற்சிப்பதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டும், சில அடிகள் முன்னெடுத்து ரத்தினம் வைத்தவுடன் ஒரு விதமான எரிச்சல் கலந்த பொறாமை முகபாவத்துடன் ஆறுமுகம் ரத்தினத்தைப் பின் தொடர்ந்து கொண்டிருப்பது ஓர் அசம்பாவிதத்தை எதிர்கொள்ளும் மனநிலையை உணர்த்தியது.

பாறைகளின் மீது கால் வைக்கும்போது பாறையில் கால்கள் தடுமாறின, வழுக்கிக் கொண்டு கீழே விழ வைப்பதற்கு எப்போதும் தயாரான நிலையில் பாறைகள் இருப்பது போல் நிலைமை நிலவியது. ஏதாவது ஓர் அடி எடுத்து வைக்கும்போது ரத்தினம் கால் இடறி விழ மாட்டானா அந்நேரம் தாம் ஒதுங்கிக் கொண்டு ரத்தினம் கீழே சரிந்து விழ வழிவகை செய்துவிட வேண்டும் என்றும் அப்போது அவனுக்குக் கொஞ்சமேனும் அடி படாதா என்ற ஆதங்கத்துடன் ரத்தினம் கீழே விழ சந்தர்ப்பம் ஏற்படும் போது தான் விலகிக் கொள்ள வேண்டும், தன் மீது விழுந்து அவன் சருக்கலில் இருந்துத் தப்பித்துக் கொள்ளக் கூடாது என்ற நினைப்பும் அத்துடன் தன் மீது விழுந்துத் தானும் இடறி விழுந்து விடவும் கூடாது, தனக்கு அடி எதுவும் பட்டுவிடக் கூடாது என்பதிலும் மிகவும் கவனத்துடன் ஆறுமுகம் செயல்பட்டது ஆறுமுகத்தின் முக ரேகைகளிலிருந்து நன்கு வெளிப்பட்டது.

''ரத்தினம் ஜாக்கிரதை வுழுந்திடப் போற'' என்று எச்சரிக்கை மிகுந்த குரலில் ஆறுமுகம் சொன்னாலும், ''சீக்கிரம் விழுந்து தொலைய மாட்டேங்கிறானே'' என்ற ஆறுமுகத்தின் மனது ஆவேச அலறல் குரலில் சொல்லிக் கொண்டது. அது ஆறுமுகத்திற்கு மட்டுமே கேட்கக் கூடிய குரல்.

முகத்தை முழுவதும் திருப்பாமல் ஒரு கால்வாசி திரும்பிப் பார்த்தபோது ரத்தினத்தின் முகம் அவனுடைய தோள்பட்டையைப் பார்த்தபடி மட்டுமே இருந்தது. கண்களை மட்டும் பின்னோக்கித் திருப்பியபோது ஸார் இன்னும் அந்தப் பாறை மீது கால் மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார். எழுந்து தொடர்ந்து நடப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருப்பதுபோல் அவர் முகம் செய்தி சொல்லிக் கொண்டிருந்தது. அவர் உடல் எழுந்து தொடர்ந்து நடக்க இயலாமல் திணறும் நிலையில் தவித்துக் கொண்டிருப்பது அவர் உடல்மொழியால் நன்கு புலப்பட்டது.

''ஸார் வாங்க, வாங்க ஸார்'' என்று உற்சாகமாகக் கையசைத்துக் கூப்பிட்டான் ரத்தினம். ஸார், வர்ரேன், வர்ரேன்'' என்று சொல்லாமல் சைகை மூலம் கையசைத்து ரத்தினத்திற்குப் பதில் தெரிவித்தார். ஆயினும் அவரால் உடனே எழுந்து நடக்க முடியவில்லை. அது அவர் முகபாவனையிலிருந்துத் தெரிந்தது.

ரத்தினம் தொடர்ந்து கொண்டே 'ஆறுமோ, எதுக்கு என் பின்னாடியே வர்ரே. வா. சேந்து நடக்கலாம்' என்றபோது. 'நீ நட நான் உன்னைப் பின் தொடர்ந்து வர்ரேன்' அதுதான் தனக்குப் பாதுகாப்பு என்று நினைத்தவாறே ஆறுமுகம் சொன்னான்.

மலை உச்சி நெருங்க நெருங்க ஸாரை விட்டு விட்டு உச்சிக்குச் சென்று விடக்கூடாது என்ற மன நிலையில், 'ஸார் வரட்டும், நாம வெய்ட் பண்ணலாம்' என்ற ரத்தினத்தைப் பார்த்து 'சரி' என்றதற்கு அடையாளமாக தலையசைத்தான் ஆறுமுகம். இருவரும் நடப்பதை நிறுத்திக் கொண்டு நின்று கொண்டிருந்தனர். உயரம் சமவெளியைவிட அதிகம் என்பதால் காற்று விரைவாக வீசிக் கொண்டிருந்தது. அருகாமையில் முளைத்துக் கிடந்த செடிகள் பலமாக அங்குமிங்கும் அசைந்தாடி சிங்காரிக்கப்பட்ட ஒரு நடனமாது கைகால்களசைத்து நடனமாடிக் கொண்டிருப்பதுபோலத் தென்பட்டது.

'நம்மோ நடப்போம். ஸார் வருவாரு' என்று சொல்லிக் கொண்டே ஆறுமுகம் நடக்க ஆரம்பித்தான். ரத்தினம் நகராமல் நின்று கொண்டிருந்தான். ரத்தினத்தின் கையைப் பிடித்து இழுத்து நடக்க வைத்தான் ஆறுமுகம். அப்போதும் ஆறுமுகம் ரத்தினத்தின் பின்னால்தான் நடந்து கொண்டிருந்தான்.

ஸார் பேண்ட் பாக்கட்டிலிருந்து கைக்குட்டையை எடுத்து முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டு பின்னர் தன் வழுக்கைத் தலையையும் குளித்து வீட்டுத் தலை துவட்டுவதுபோல கைக்குட்டையை முழுவதுமாக விரித்துத் தலையில் துடைத்துக் கொண்டார். அவர் பிடரியிலிருந்த முடியிலிருந்த வேர்வைத் துளிகள் அவருடைய வெள்ளை



முடியில் பனித் துளிகள் போல் தென்பட்டன. கையில் வைத்திருந்த பாட்டிலிலிருத்து இரண்டு மடக்கு தண்ணீர் குடித்தார். இன்னும் தண்ணீர் குடிக்க வேண்டும்போல் அவருக்கு இருந்திருக்க வேண்டும். தண்ணீர் காலியாகி விடக் கூடாதே என்பதற்காக ஒரு சிறிய மடக்கு தண்ணீரைக் குடித்து விட்டுப் பாட்டிலைப் பார்த்தார்.

''ரத்தினம் நில்லு, கீழே விழுந்திறப் போறே, பாத்து, மெதுவா'' என்று ஆறுமுகம் வாயிலிருந்து வார்த்தைகள் வந்தாலும் அவை உண்மையான வார்த்தைகளாக இல்லை.

பாறைகளின் இடுக்கு வழியாக வீசிய காற்று இதமாக இருந்தாலும் அது சில சமயங்களில் பலமாக வீசும்போது பாறைகளில் சில நகர்ந்து கீழே உருண்டோடி விழலாமோ என்ற ஐயத்தை ஏற்படுத்தியது. அப்போதும் இன்னும் சற்று பலமாகக் காற்று வீசி ஒரு சில பாறைகள் உருண்டு அவற்றில் ஒன்று ரத்தினத்தின் மீது மோதாதா என்ற அங்கலாய்ப்பு ஆறுமுகத்தின் உள்ளமெங்கும் வியாபித்திருந்தது.

ஸார் இப்போது மெதுவாக எழுந்து நின்று கொண்டிருந்தார். நடக்க ஆரம்பிக்கவில்லை. நடந்து வர அவர் தொடர்ந்து முயற்சி செய்தாலும் நடந்தால் வேறு ஏதாவது உடல் உபாதைகள் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் அவர் முகத்தில் மேலோங்கி நின்றது.

''ஸார் வந்து ஹெல்ப் பண்ணட்டுமா'' என்று ரத்தினம் இரைந்து பேசியபோது ஸார் 'வேண்டாம்' என்று கூறுவது போல் கையை அசைத்தார். ரத்தினம் ஸார் வரட்டும் என்று மேலே முன்னேறாமல் அப்படியே நின்ற இடத்திலேயே நின்றான். அவன் நின்று விட்டதால் ஆறுமுகம் அவன் நின்ற இடத்திற்கு நெருங்குவதற்குச் சில நிமிடங்களே ஆயின. ஆறுமுகம் மிக அருகில் நெருக்கமாக வந்தவுடன், ''ஆறுமோ, ஸாரைப் போயி நம்ம ரெண்டு பேரும் வொதவி பண்ணி கூட்டியாருவோமா'' என்று ரத்தினம் கேட்டபோது, ''அதெல்லாம் வேண்டாம், அவுரா வருவாரு, நீ பேசாம நட, ஏன் நிறுத்திட்டே, நாம அந்த உச்சிக்குப் போயி கொஞ்ச நேரத்திலோ அல்லது சில மணி நேரங்களில் அவர் வந்துவிடக் கூடும், எனவே சீக்கிரம் நட நாம் அங்கே போய் உட்கார்ந்திருக்கலாம்'' என்று கறாராகச் சொன்னான் ஆறுமுகம். ஸாரும் ''மேலே போங்க போங்க'' என்பதுபோல் கையைக் காட்டினார். ஸாருக்கும் அவர்களுக்கும் உள்ள இடைவெளி ஒரு நூற்றி நாற்பது மீட்டர் இருக்கலாம்.

கால்வாசிக்கும் சற்றுக் கூடுதலாகக் காலியாகியிருந்தது. தண்ணீர் குடித்தவுடன் அவருடைய நடையில் முன்பை விட சற்று வேகம் அதிகரித்திருந்தது.

''ஸார் வந்துட்டாரு, நாம நிப்போம் கொஞ்ச நேரம், அதுக்குள்ள அவரு வந்துருவாரு'' என்றான் ரத்தினம். ''அவரு வந்திருவாரு நாம நடப்போம். அவரு நம்ம நிக்கிறத விரும்ப மாட்டாரு. திடீரென்று ஏன் நின்னிங்கன்னு கூட கோவிச்சுப்பாரு. நட நட'' என்றான் ஆறுமுகம்.

அப்போது ஒரு கீரிப்பிள்ளை அவர்கள் நடந்து செல்லும் பாதையில் குறுக்காகக் கடந்து சென்றது. ''ரத்தினம் கீரி இருந்துதுன்னா, அங்க பாம்பு இருக்குன்னு அருத்தம். அதனாலே ஜாக்கிரதை'' என்று சொல்லும்போதே அங்கே ஏதாவது பாம்பு தென்படாதா அது ரத்தினத்தின் அருகே வராதா என்றும் மனத்திற்குள் நினைத்துக் கொண்டான். ''பாம்பு நம்ம அதை எதுவும் செய்யாத வரைக்கும், அதாவது அதுக்கு நம்ம எதுவும் தொந்தரவு குடுக்காத வரைக்கும் அது நம்மள ஒண்ணும் செய்யாது. ஆனா அதுகிட்டே வாலாட்டினோம், நம்ம தொலைஞ்சோம்'' என்ற ரத்தினம் பெரிய சிரிப்பாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பு ஆறுமுகத்திற்கு ஏனோ எரிச்சலை ஏற்படுத்தியது.

ஸார் இப்போதும் நடந்து கொண்டிருந்தார். ஆனால் இடைவெளி தூரம் அதே நிலையில்

தான் இருந்தது. அவர் வேகமாக நடக்க முயற்சி செய்து முனைப்புடன் நடக்க முயல்வது அவர் நடந்து முன்னேறும் பாங்கிலிருந்துத் தெரிந்தது. இருந்தாலும் அவரால் வேகமாக நடக்க முடியவில்லை.

பாறைகளின் வழுவழுப்புத் தன்மையும், வழுக்கும் நிலையை உருவாக்கிவிடக் கூடாது என்றும் பாறைகளின் துண்டுகள் சரிந்து விடக் கூடாது என்பதற்காகவும் பாதங்களை அழுத்தி மிக மெதுவாக நடக்க ஆரம்பித்தனர் இருவரும். சில பாறைகள் கால் வைத்தவுடன் சரியும் போது இவர்கள் மிகவும் கவனத்துடன் விழுந்து விடாமல் சரியும் பாறையிலிருந்து காலை எடுத்து அடுத்து இருக்கும் பாறை சரியாமல் இருக்கிறதா என்று கால்களை வைத்து அழுத்திச் சோதித்த பின்னரே அடுத்த அடியை எடுத்து வைத்தனர். ''ஆறுமோ, கவனோ, கவனோ, விழுந்திரக் கூடாது'' என்று சொல்லிக் கொண்டே ஆறுமுகத்தின் கையைப் பிடித்தான் ரத்தினம். ''நீ ஒன்னும் என் கையைப் பிடிக்க வேண்டாம், நானே நடப்பேன்'' என்று ஒரு மிகவும் தன்னம்பிக்கைக் கொண்டவனின் குரல் போலவும் ஒரு சலிப்பு நிறைந்த குரலுடனும் ரத்தினத்தின் கையைத் தட்டி விட்டபடி சொன்னான் ஆறுமுகம். கையைத் தட்டி விட்டதால் ரத்தினத்தின் முகம் சற்று விசனப்பட்டது. தன் கையை விடுவித்துக் கொண்டான் ரத்தினம்.

ஸார் இப்போது முன்பைக் காட்டிலும் இவர்களை நெருங்கி இருந்தார். இருந்தாலும் மிக நெருக்கமாக வரவில்லை. இடைவெளி குறைந்திருந்தது. அப்போது, ''ஸார் வந்திட்டார், நில்லு'' என்றான் ரத்தினம். திடீரென நிற்கும் சாக்கில் ரத்தினத்தின் கால்கள் இடறும்படி தன் கால்களை தெரியாமல் பட்டது போல் ரத்தினத்தின் கால்களுக்கிடையே பட வைத்தான் ஆறுமுகம். ரத்தினம் அந்த விநாடியில் சற்று நிலை தடுமாறி, தட்டுத் தடுமாறி கீழே விழாமல் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள மிகவும் சிரமம் மேற்கொள்ள வேண்டியதிருந்தது. அந்தச் சரிவான பகுதியில் நிலையாக நிற்க மிகவும் சிரமப்பட்டு நன்கு காலூன்றி நின்று கொண்டு திரும்பிப் பார்த்தான். அருகில் தான் ஆறுமுகம் நின்று கொண்டிருந்தான். ரத்தினத்தின் நிலை தடுமாறலுக்கு ஏதேனும் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் சிறிதும் இல்லாமல் மௌனமாய் ஓர் இறுக்கமான முகத்துடன் நின்று கொண்டிருந்தான் ஆறுமுகம். ஆச்சரியமாக இருந்தாலும் சிறு அச்சம் ரத்தினத்தின் நெஞ்சில் பரவியது. இருப்பினும் தனக்கு ஏதும் ஆகிவிடாது என்ற தைரியமும் தன்னம்பிக்கையும் அவன் முகத்தில் நிறைந்திருந்தது.

ஸார் இப்போது சிறிது நெருங்கி வந்திருந்தார். ஸாருக்கும் ரத்தினத்திற்கும் நடுவே இல்லாமல் ஸாருக்கும் ஆறுமுகத்திற்கும் உள்ள தூரத்திற்கும் ரத்தினத்திற்கும் ஆறுமுகத்திற்கும் உள்ள தூரத்திற்கும் சிறிது வித்தியாசம் இருந்தது. சிறிது நேரத்தில் ஸார் ஆறுமுகத்தை நெருங்கி விடுவார் என்பதை ரத்தினத்தால் உணர முடிந்தது. அவர்கள் இருவரும் ரத்தினத்தை நெருங்க சிறிது நேரம் பிடிக்கலாம். தலையைத் திருப்பி ஸாரை உற்றுப் பார்த்தான் ரத்தினம். ஸார் ஆசுவாசப்படுத்திக் கொள்ள மூச்சை வெகு நீளமாக இழுத்து இழுத்து விட்டுக் கொண்டு நடந்து வருவது அவரது நெஞ்சுப் பகுதியைக் கூர்ந்து பார்க்கும்போது நன்கு தெரிந்தது. தலையில் முடி சிறிதுகூட இல்லாமல் பிடரியைச் சுற்றி நீளமாக வளர்ந்திருந்த வெண்ணிற நரை முடி காற்றில் காய்ந்து போன பஞ்சுபோலாகி அசைவது புகை வளைந்து வளைந்து செல்வது போலிருந்தது.

ஆறுமுகம் ரத்தினத்தையே வைத்த கண் வாங்காமல் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்ததை அப்போது ரத்தினம் கவனித்தான். ஏன் இவன் தன்னை உற்றுப் பார்க்கிறான், பார்வை சாதாரணமாக இல்லாமல் மிகவும் வித்தியாசமாக இருப்பதை உணர்ந்தான் ரத்தினம். ரத்தினம் தொடர்ந்து நடக்க ஆரம்பித்தான். ''நில், ஸார் வரட்டும்'' என்று ஓர் அதட்டல் குரலில் சொன்னான் ஆறுமுகம். ''என்ன மெரட்றே'' என்றான் ரத்தினம். அப்போது தான்

ரத்தினமும் ஆறுமுகத்திடம் ஒரு வித்தியாசமான தொனியுடன் பேச முற்பட்டிருந்தான். அந்தப் பேச்சு ஆறுமுகத்தைச் சிறிது பாதித்ததைப் போலிருந்தது, ''அதெல்லாம் ஒண்ணுமில்லே, காத்து ரொம்ப அடிக்குதா அதான் தொண்டை வறண்டு போயிடுச்சு'' என்றான் தயக்கத்துடன். ''தண்ணி குடிக்க வேண்டியது தானே'' என்ற ரத்தினத்திற்கு உடனடியாக, ''தண்ணி பாட்டில் ஸார் கையிலே தான இருக்கு, அவரு வரட்டும் வாங்கிக் குடிக்கிறேன்'' என்று ஆறுமுகம் சொன்னபோது, ''நீ ஸார் கிட்டே போயி வாங்கிக் குடிச்சிட்டு அப்படியே ஸாரையும் கைகொடுத்து உதவி செய்து கூட்டி வாயேன்'' என்று ரத்தினம் தொடர்ந்து சொன்னபோது, ''அதெல்லாம் வேண்டாம், அவரு வந்ததுக்குப் பின் வாங்கிக் குடிக்கலாம்'' என்றான் ஆறுமுகம்.

அப்போது மாலை நேரம் ஆகாவிட்டாலும் சில மேகங்கள் சூழ்ந்து வெயிலைத் தரையில் பட விடாமல் தடுத்திருந்தது. அதைவிட மேகங்களின் நிழல் பெரிய பெரிய ராட்சகர்களைப்போல அந்தப் பாறைகளின் மீது விழுந்து கொண்டிருந்தது. பாறைகளின் ஒருவிதமான பழுப்பு நிறம் அப்போது சிறிது கருமை கலந்த பழுப்பு நிறத்தில் ஒருவிதமான வித்தியாசமான வண்ணத் தில் துலங்கியது ஒரு வித பய உணர்ச்சியை அனைவருக்கும் ஏற்படுத்தியது.

ஆறுமுகம் ஒரு சிறிய பாறை மீது கால் வைத்தபோது அது நகர்ந்து உருண்டது. உருண்டு உருண்டு கீழே ஓடியது. அப்போது ஆறுமுகம் ஒற்றைக் காலில் நின்று கொண்டிருந்தான். தரையில் பதிந்திருந்த ஒரு காலைத் தவிர இன்னொரு காலை காண இயலாதபடி மறைந்திருந்தது. உருண்டு சென்ற பாறை ஸார் நிற்குமிடம் நோக்கி உருண்டு மெதுவாக சென்று கொண்டிருந்தது. ''ஸார் பாறை வருது ஜாக்கிரதை ஒதுங்கிக் கொள்ளுங்க, ஸார் ஸார்'' என்று உரக்க ரத்தினம் சொன்னது ஸாரின் காதுகளில் விழுந்திருக்குமா என்று ரத்தினத்திற்குச் சந்தேகமாக இருந்தது. ஸார் எப்படியும் தப்பித்து விடுவார் என்ற நம்பிக்கை ரத்தினத்திற்கு உறுதியாக இருந்தது.

உச்சிப் பாறைக்கு வந்த ரத்தினம் சுற்றும் முற்றும் பார்த்தான். மேகங்கள் நகர்ந்து சென்று விட்டதால் இப்போது அவற்றின் கரிய நிழல்கள் பாறைகளின் மீது விழவில்லை. பாறைகள் பொன்னிறம் வெண்ணிறமாக மின்னின.

ரத்தினம் உச்சியில் நின்று பார்க்கும்போது பாறைகள் தனித் தனிப் பாறைகளாகத் தெரிந்தன.



ஓவியம்: தமிழ்



கவிதை

மனுஷ்யபுத்திரன்

நிசப்தமான பிரபஞ்சம்


சுதந்திர தின விழாவில்
குழந்தைகளுக்கு பரிசுகள் தருகிறார்
சிறப்பு விருந்தினர்

கேமிராவைப் பார்த்து
நிறைய குழந்தைகள்
நேர்த்தியாக போஸ் கொடுத்து
பரிசுகள் வாங்கிக்கொள்கிறார்கள்
சில குழந்தைகள்
சங்கோஜத்துடன் எங்கோ பார்க்கிறார்கள்
அவர்களை ''கேமரா பார்... கேமரா பார்'' என
கூவிக்கூவி தலையைத் திரும்பச் செய்கிறார்கள்

ஒரு சிறுவன் மட்டும்
எவ்வளவு சொல்லியும் கேட்காமல்
கேமிராவை பார்க்க மறுத்து
எங்கோ பார்த்துக்கொண்டிருக்கிறான்
யாரோ அதட்டுகிறார்கள்
'கேமிரா பாருடா தம்பி'
அவன் பார்க்கவில்லை

டீச்சர் தட்டுத்தடுமாறி
மேடைமேல் ஓடி வருகிறாள்
சிறுவனின் முதுகுக்குப் பின்னிருந்து
சைகையால் பதட்டத்துடன் சொல்கிறாள்
'அவனுக்கு வாய் பேச முடியாது
காது கேட்காது'
அந்த சைகை மொழி
சிறுவனுக்குக் கேட்டுவிடக்கூடாது என
அவ்வளவு பதட்டமடைகிறாள்
வேறு யாரும் பார்த்துவிடக்கூடாது என
அவ்வளவு சங்கடமடைகிறாள்


ஓவியம்: ரவிபேலட்



சிறுவன் இப்போது
கேமிராவுக்கு அப்பால் இருக்கும்
ஒரு நிசப்தமான பிரபஞ்சத்தை
உலர்ந்த கண்களால் பார்க்கிறான்

சிறுவனை தோளோடு அணைத்துத்கொண்டு
மேடையிலிருந்து படியிறங்கிப் போகையில்
டீச்சரின் கண்களில் கண்ட நீர்மை
அந்த வெய்யிலில் வைரமாய் பளபளத்தது.

❖❖❖



ஆதவன் தீட்சண்யா

நான் இன்னும் உள்ளேயே இருக்கிறேன்

நீயென்னவோ
உயிர் உருகத்தான் பாடுகிறாய்
ஏனோ
எனக்கு மட்டும் கேட்பதேயில்லை?

பிணத்துக்குப் பாடாத பாடல்
உனக்கெப்படி கேட்கும்?

❖❖❖

நான் எழுதிக்கொண்டே இருந்தேன்
நீங்கள் படித்துக்கொண்டேயிருந்தீர்கள்
எதிரிலும் சுற்றிலும்
என்ன நடப்பென்று ஏறெடுத்துப்பார்க்க
ஏதுதான் நேரம் நமக்கு!

❖❖❖

நதியை
மீன்களின் கண்ணீர் என்றான் கவிஞன்
பேரிரக்கம் கொண்ட கவிஞனின் மனைவியோ
சோகத்தை எழுதிக்கொண்டேயிருக்காமல்
கண்ணீரிலிருந்து விடுதலை தருவதே சரியென
அரியத் தொடங்குகிறாள் மீன்களை
அருளாளனான மகனோ அடுப்பை மூட்டுகிறான்
வாணலியேற்ற.

❖❖❖

வனாந்திரத்தின் நடுவே கைவிடப்பட்ட
இந்தக் குகையே

பிரபஞ்சத்தின் முதற்சிறை
மாமிசக் கொழுப்பிலும் தாவர
எண்ணெய்யிலும்
ஒளிர்ந்திருந்த வெளிச்சம் அணைந்து
யுகங்களின் இருட்டு படிந்திருக்கிறது
வெளிப்புறமும் பலகைக்கல்
சார்த்தி மூடப்பட்டிருக்கும்
அதன் உள்வெளியில்
காற்றலை உறைந்த கணத்திலிருந்து
பாழிபோல் தேங்கி நாறுகிறது
பாறையின் வியர்வை

❖❖❖

குகையின் தோற்றத்தை தொன்மையை
சாகசத்திற்காக நுழைந்து
மீளாது மாய்ந்தோரின் வரலாற்றை
உள்ளிருக்கும் மர்மங்களை
விதந்தோதும் புனைவுகளை
குகைக்கு வெளியே கூடி
இரவும் பகலும் வாதித்துக்கிடந்தவர்கள்
மூடுண்ட குகையிலிருந்து கசியும்
முடைநாற்றத்தில் சித்தம் கலங்கி
கற்களும் கம்பும் ஏந்தி
தாக்கிக்கொண்டனர் தம்மையே

நான் இன்னும்
உள்ளேயே இருக்கிறேன்.

❖❖❖

காலருகில் சோறிருந்தால்
பாதத்தில் வாய் முளைக்கும்
வீணே தலையெதற்கு
வெட்டியெறி என்றார்கள்
ஆஹா,
எவ்வளவு தைரியமாய் துள்ளுது பாருங்கள்
என் முண்டம்.

❖❖❖



ஓவியம்: பாரதி

கவிஞர் சல்மா

வீடு

நீண்ட காலம்
வசிக்க நேர்ந்த
வீட்டில் இருந்து
வெளியேற தேவை
கதவில்லை
ஒரு உடையாத இதயம்

ஷெல்பிலிருந்து
கீழிறங்கிய புத்தகங்கள்
கழட்டப்பட்ட மின்விசிறிகள்
அமர்த்திவைக்கப்பட்ட
குளிர்சாதன பெட்டி
இவற்றிற்கு மத்தியில்
உறக்கம் நழுவிய
ஓர் இரவு

புத்தகங்கள்
என்னை உற்று நோக்கியபடி
அமர்ந்திருக்கின்றன
அடுத்து எனும் கேள்வியோடு

எங்களது பரஸ்பர பார்வைக்கும்
உற்று நோக்கலுக்கும் இடையில்
ஓடித்திரிகின்றன சிலந்திகள்

திரைச்சீலையற்ற
சன்னலுக்கு வெளியே
நகர்ந்து கொண்டேயிருக்கிறது
நகரம்

வந்த இடத்திற்கே திரும்ப
வாகனத்தில் ஏற காத்திருக்கின்றன
பொருட்கள்

அரவங்கள் வந்தடையாத
மாலை மடங்கி
இருள் விரியும் போது
தனது சிறகுகளை இறுக்கி
கூடடைகிற
கிராமத்தை நோக்கி
பயணிக்க

என் பரந்த எல்லைகளை
வரைந்ததும்
தொலைதூரத்தில் வசிக்கும்
பிள்ளைகளின் வாசனை
கவிந்திருப்பதும்
இந்த வீட்டின் சுவர்களில் தான்

இரவெங்கும்
வீட்டின் வெறுமைக்குள்
நடமாடித்திரிகிறேன்
விட்டுச்செல்லவும்
எடுத்துச்செல்லவும் இயலாத
அந்நினைவுகளோடு

உணர்வுகளால்
நெய்யப்பட்டதோர்
கூடு
சிறு சருகின்
அசைவில்
கலைந்து விடுகிறது

''என் வீடெனும்''
கூரையின் கீழிருந்து
விலகிச்செல்வது
என்னிலிருந்து நானே
விலகிச்செல்வது போல
திகிலூட்டுகிறது.


❖❖❖



ஓவியம்: தன்மையா

அமிர்தம் சூர்யா

ஆறு வித்யாசத்தில் அலையுறும் வாழ்வு



அவித்த பிளாஸ்டிக் முட்டை மீது
ஆச்சி மசாலாவை தடவிக்கொண்டிருக்கிறாள் -
நூற்றாண்டுகாலத்தை சுருக்கி தம்
மேனியில் போர்த்திக்கொண்ட அப்பத்தா

கடவுளுக்கு தெரியாமல் அவரின்
ஆணுறையில் துளையிட்டு விட்டு
தூங்கி கொண்டிருக்கிறான் -
கடவுள்களின் யுத்தம் விரும்பும்
இருப்பின் சாத்தான்

நெருக்கடியான சாலைக்குள்
இயந்திரமூட்டைபூச்சியாய் உருமாறிய
ஆட்டோவின் சக்கரத்தில் நசுங்கி
உப்புகிறது -கருணைநாயின் குடல்

துண்டு துண்டாக்கப்பட்ட எம் வாழ்வை
கலைடாஸ்கோப்பில் இட்டு
சுழற்றி சுழற்றி விதவிதமாய் வரைகிறது -
மானமிகு அரசியல் விரல்கள்.

சமஸ்கிருதத்துக்கும் ஆங்கிலத்துக்கும்
நடுவில்
கடைசி மூச்சுக்கு திணறி
காற்றாய் கதறுகிறார் -
என் சாமி பாடிகாட் முனி ஈஸ்வரர்

கறுப்புக்கும் வெள்ளைக்குமாய்
ஊசலாடும் பெண்டுலத்தின் மேல்
குந்தியிருக்கிறது - அந்த
காதல் பச்சோந்தி.

இத்தனைக்கும் நடுவில் தான்
எனக்கும் எனக்குமான
ஆறு வித்யாசங்களைத்
தேடிக்கொண்டிருக்கிறான் -
என் மகன்.

❖❖❖

ஓவியம்: அப்சரா வெங்கட்

போல – என்று இருப்பதால் இது கவிதை அல்ல

அருங்காட்சியகத்தில் கண்ணாடி பேழைக்குள்ளிருக்கும்
எலும்புகளை வேடிக்கை பார்க்கும் சபிக்கப்பட்ட நாயை போல்....

புரூப் ரீடரின் எல்லா கனவிலும் ஓடும்
ஒற்று எழுத்துக்களை போல்....

பெருக்க வைக்க விரை நசுக்கி திணிக்கப்பட்ட சாம்பலின்
எரிச்சலை மொழிபெயர்க்கும் பன்றியின் ஓலம் போல்....

என் பிரதியை எனக்கு எதிராக அர்த்தப்படுத்துகையில்
வரிகளை சிலுவையாக்கி அறையப்படுவதை போல்....

கொட்டாங்கச்சி மார்பகத்துக்கும் வக்கில்லாமல்
தரையை புணரும் பிரம்மசாரிகளை போல்....

போகன்வில்லா மலர்களுக்கு தினந்தோறும்
வாசனை திரவியம் அடிக்கும் ஊழியன் போல்....

நான் முடிக்க முடியாமல் கடைசி வரிக்கு திணறும் போது
... ''அடப்பாவிகளா இருக்கும் துயரை
இருப்பது போல் சொல்லமுடியாம
இலக்கியத்தை இப்பட்டி நாசமாக்கீட்டீங்களே''....
என்றபடி கடக்கிறான் சாமத்து கோடாங்கி.

❖❖❖





ஓவியம்: தமிழ்



கவிதா பாரதி

சாத்தான்களுக்காக ஒரு சாத்தனால் எழுதப்பட்டது.

கடவுளும் சாத்தானும்
கால்பந்து விளையாடுகிறார்கள்

தன் தோற்றத்தை
தானே வடிவமைத்துக் கொள்ளும்
வாய்ப்புள்ள கடவுள்
வசீகரமாய் இருக்கிறார்

ஒரு குளிர்ப்பிரதேசத்தை
நாடாகக் கொண்டிருக்கிறார்

சாத்தான் பொலிவற்றவர்
மணற்காட்டில் பிறந்தவர்

மைதானம் முழுக்கவும்
கடவுளுக்கு ஆதரவான ஆரவாரம்

பார்வையாளர்கள் அனைவரும்
கடவுள் வெல்வதையே விரும்புகின்றனர்
கடவுளின் வெற்றிக்காகப் பிரார்த்திக்கின்றனர்

நடுவரும்கூட
கடவுளின் விதிமீறல்களைக்
கண்டுகொள்ளாமல் விடுகிறார்

பொய்யான குற்றம்சாட்டி
சாத்தானுக்கு
மஞ்சளட்டை காட்டுகிறார்

பந்துவரும் திசைநோக்கி
யாருமறியாமல்
கோல் கம்பத்தை நகர்த்திக்கொள்ளும் சூது
கடவுளுக்கு கைவரப்பெற்றிருக்கிறது

சாத்தானின் முயற்சிகளை
சூழ்ச்சியால் திசைமாற்றவும்
கடவுளால் முடிகிறது

கடும் சமரத்தால்
கடவுளை முறியடித்து
வெல்லும் நேரத்தில்
சிவப்பு அட்டை காட்டி
வெளியேற்றப்படுகிறார் சாத்தான்

எப்போதும்போல்
கயமையால் வெல்கிறார் கடவுள்

அதிகாரத்தால் வஞ்சிப்பவர்களுக்கு
கடவுள் நண்பராகிறார்

கடவுளால் வஞ்சிக்கப்படும் மனிதனே
சாத்தனாகிறான்

இந்தக் கவிதை
சாத்தான்களுக்காக
ஒரு சாத்தனால் எழுதப்பட்டது.

❖❖❖

பழநிபாரதி

பாரதியின் முற்றத்திலிருந்து...



உன் கவிதைகளில் ஏன்
அடிக்கடி புறாக்கள் பறக்கின்றன
என்று கேட்கிறான் நண்பன்

கவிதைகளில் மட்டுமல்ல நண்பா
என் கனவுகளிலும்
புறாக்களே வருகின்றன

நேற்றைய கனவில்
நீதிமான்கள்
நியாயவான்கள் வாழ்கிற
நீண்ட நெடிய கட்டிடத்திலிருந்து
பல்லாயிரம் புறாக்கள்
ஒவ்வொன்றாக
விழுந்து
விழுந்து
தம்மை மாய்த்துக்கொண்டன



ஓவியம்: மருது

உடைந்த இறகுகள்
மாசடைந்த காற்றில்
திசையெங்கும் சிதற
தெருமூழ்க ஓடியது
புறாக்களின் இரத்தம்

உயர்சாதிவாகனங்கள்
வழுக்காமல் விரைய
குற்றவாளிகளாக்கப்பட்ட
கைதிகளைக் கூட்டிவந்து
வீதிகளைக் கழுவிக்கொண்டிருந்தது
அதிகாரம்

அந்தப் பின்னந்தியில்
புறாக்களுக்குத்
தானியம் ஊட்டுபவர்கள்
புறாக்களோடு
படமெடுத்துக்கொண்டவர்கள்
புறாக்களை
அன்பாகவும் அமைதியாகவும்
கவனித்துக்கொண்டிருந்தவர்கள்
எல்லோரும்
கையறுநிலையில்
கலக்கமுற்றிருந்தார்கள்

இருள்மூடிய கிளையில்
இடமிழந்த புறாவொன்றின்
தீவழியும் கண்களை
இரத்தம் வழியும் விரலால்
துடைத்துக்கொண்டிருந்தது
இன்னொரு புறா.

❖❖❖



பாரதியின் முற்றத்திலிருந்து
பறந்த குருவி
கல்யாண்ஜியின் வழிநடையில்
இறகுதிர்த்து
என் வீட்டுத் தாழ்வாரத்தில்
சோர்ந்து நிற்கிறது

எதுவுமறியாத அஞ்சலிதேவி
தொலைக்காட்சியில்
பாடிக்கொண்டிருக்கிறாள்...

சிட்டுக்குருவி சிட்டுக்குருவி
சேதி தெரியுமா - என்னை
விட்டுப்பிரிஞ்சு போன கணவன்
வீடு திரும்பல.

❖❖❖

காற்றில்
ஒரு பாடல் ஒலிக்கிறது
காற்றே பாடலாக

அழியாத நினைவுகள்
முணுமுணுக்கின்றன

இலைகளில் சிறு பதற்றம்

கசிந்துருகும் கனிகளின்
பலவீனமான அசைவுகள்

கூடுதிரும்பாத பறவையைத்
தேடுகிறதா மரம்

திசையறியும் பறவைக்கு
மரம் தெரியாதா என்ன

ஒவ்வொன்றுக்கும் இடையில்
எப்போதும் நடந்துகொண்டிருக்கிறது
தெரியாத ஒன்று.

❖❖❖

மரம்
தன் வெட்டுண்ட காயத்தை
வானத்திடம் காட்டியது
அங்கிருந்து
இறங்கி வந்த இறகொன்று
ஆற்றுப்படுத்திக்கொண்டிருக்க

மரம் சா மருந்தும் கொள்ளாத் தமிழ்
வெட்டுண்ட காலத்தின்
கையறு சாட்சியாக
நின்றுகொண்டிருக்கிறேன்
நான்.

❖❖❖

மானா பாஸ்கரன்

பறவை என்பது வினைச்சொல்!

பகலின் மொழியறியாப் பறவையொன்று
கொத்திச் சென்ற ஒரு சொல்லைத் தேடி
விழித்திருக்கிறது என் இரவு.
அந்தச் சொல்லை வைத்துக்கொண்டு
என்ன செய்யுமென்ற என் யோசனைக்கு
தேநீர் கொண்டுவந்துதரும் விரல்களில்
மருதாணி இடுகிறது என் கவலை.

❖❖❖

ஒரு கவிதைக்கான
இன்னிசை அளபடையைக் கற்பித்தது
என் முற்றத்தில் கிடந்த
ஒற்றைச் சிறகு.

❖❖❖

அலங்காரியென நான் பெயரிட்டப்
பறவையைத்தான் - நீங்கள்
பெயர் தெரியாப் பறவை என்கிறீர்கள்.
கடினமானது
ஒரு மனிதனுக்குப் பெயர் வைப்பதைவிட
ஒரு பறவைக்குப் பெயர் வைப்பது.

❖❖❖

என் ஞாபகங்களில்
எப்போதும் வாழ்ந்துகொண்டிருக்கிறது
ஒரு பறவை
பறவையின் ஞாபகங்களில்
வாழ்ந்துகொண்டிருக்கும்
ஒரு பழத்தைப் போல.

❖❖❖

தான் பறந்துசெல்லும் பாதையெங்கும்
நண்பனின் புன்னகையை
உதிர்த்துவிட்டுப் போவது
பறவைக்கும் தெரியாது
நண்பனுக்கும் தெரியாது.

❖❖❖

வண்ணச் சோறூட்டிவிடுகிறான்
ஓவியன்
தனது தூரிகைக்குள்
ஒளிந்திருக்கும் பறவைக்கு.

❖❖❖

வயலின் தேசிய கீதத்தை
எழுதி சென்றுவிடுகிறது
உதிர்ந்த நெல்மணியை
கொத்திச் செல்லும் பறவை.

❖❖❖

நான் அடிக்கடி வாசிக்கும் புத்தகத்தை
நண்பனொருவன்
இரவலாக வாங்கிச் சென்றப் பிறகு
என்னருகில் அமர்ந்திருந்தது
அப்புத்தகத்தின் 38-ம் பக்கத்திலிருந்த
ஒரு பறவை.

❖❖❖

ஒரு பூஞ்சாடியை
கைக்குட்டையால் மூடித் திறக்கிற
மேஜிக் நிபுணன்
பறவைகளைப் பறக்கவிடுகிறான்
பார்வையாளர்கள்
கைகளெல்லாம் பறவைகள்!

❖❖❖

உயிரோடு இருக்கும்வரைக்கும்
பறந்துகொண்டிருப்போம்
பறந்துகொண்டிருக்கும் வரைக்கும்
உயிரோடு இருப்போமென்பது
பறவைகள்
மனிதர்களுக்குசொல்லும் சிறகோபதேசம்.

❖❖❖



ஓவியம்: தொல்காப்பியன்


ஓவியம்: தமிழ்

மு.முருகேஷ்

குழந்தைகளும் மூன்று கவிதைகளும்...

ஒன்று:

மதிய வேளையில்
விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்
குழந்தைகள்.

வேகமாய் வீசிக்கொண்டிருந்த
காற்றும்
சட்டென நின்று கவனிக்கிறது.

மரத்தினடியில் கொட்டிக் கிடக்கும்
வெயிலைக் கைகள் நிறைய
அள்ளிப்போய் கொட்டுகிறார்கள்
வெட்டவெளியில்.

குதித்தாடுகையில்
மேலெழும் தூசிப் படலத்திற்கு
கிளையிலிருந்தபடியே
தலையாட்டுகிறது
அந்த ஒற்றை அணில்.

ஒருவர் முதுகை
இன்னொருவர் தொட்டபடி
பின்தொடர்ந்து அனைவரும் ஓட,
பயண விளையாட்டிற்கான
வாகனமாகிறது தொடர்வண்டி.

முன்னோடும்
குழந்தை தடுக்கிவிழ,
பின்வரும் குழந்தைகளும்
ஒருவர் மேல் ஒருவரென
சரிந்து விழுகின்றனர்.

கால்முட்டியில், கையில்,
தோள்ப்பட்டையில்,
நெற்றியில், மூக்கிலென
மண்தீற்றலுடன்
சிறுசிறு சிராய்ப்புகள்.

யாரும் அழவில்லை;
'ஓ..'வெனப் பெருஞ்சத்ததுடன்
மீண்டும் குதித்துக்கொண்டே
சிரிக்கிறார்கள் குழந்தைகள்.

வலியில்லா காயங்களும்
வன்மமில்லா சிரிப்பும்
எப்போதும் வாய்த்திருக்கின்றன...
குழந்தைகளுக்கு மட்டும்.

❖❖❖



இரண்டு:

இரு கைகளாலும்
வயிற்றைப் பிடித்தபடி
‘பசிக்கிது...’ என்றான்
முகுந்தன்.

பாண்டி விளையாட்டை
அப்படியே பாதியில் நிறுத்திவிட்டு,
சமைக்கத் தயாராகினர்
குழந்தைகள்.

கைநிறைய அள்ளிச் சலித்த
மண்ணைக்கொட்டி
‘சோறு தயார்... என்றான் சுந்தர்.

கருவேலங்காய்களைப்
பொடிப்பொடியாக ஒடித்து
‘கூட்டு இந்தா...’ என்றாள் குணசீலி.

கொட்டாங்குச்சியில்
பிடித்துவந்த குழாய்நீரை
‘சாம்பார்...’ என்றான் வேல்கண்ணன்.

பழைய காகிதங்களை
வட்ட வட்டமாகக் கிழித்து
‘அப்பளம் பொறிச்சாச்சு...’ என்றாள் அகிலா.

எல்லோரும் சாப்பிட அமர்கையில்,
‘எனக்கு பசிக்கலே...’ என்று
நீலா சொல்ல,

’ஆமாமா... எனக்கும் பசிக்கலே.
அப்புறமா சாப்பிடலாம்...’
முகுந்தன் சொன்னதுமே,
மீண்டும் விளையாடத் தொடங்குகிறார்கள்
குழந்தைகள்.

சமைத்த உணவுகள் அனைத்தும்
பசியோடு காத்திருக்கின்றன...
குழந்தைகளின் வரவுக்காக.

❖❖❖

மூன்று:

வெள்ளைக் காகிதமொன்றில்
வரைந்த வட்டமே
நிலாவாகிறது அன்பழகிக்கு.

வரைந்த யானையைச் சுற்றிலும்,
சில கோடுகளைப் போட்டுவிட்டு,
‘யானைக்கூண்டு இதுதான்’ என்கிறான்
அமுதரசன்.

சில மரங்களையும்
ஒன்றிரண்டு பறவைகளையும்
வரைந்து முடித்ததும்,
‘பெரீய்ய காடு...’ என
இரு கைகளையும் அகல விரித்துக்
காட்டுகிறாள் கண்மணி.

அழும் குரங்கினருகே
சில உருண்டைகளைக் கிறுக்கிவிட்டு,
‘லட்டு சாப்பிடு...’ என்கிறான்
செல்வகுமார்.

குழந்தைகள் கிறுக்க, கிறுக்க
உயிர்ப்பெற்றெழும் ஓவியங்களால்
இன்னும் அழகாகிறது...
இந்தப் பூமியும்
இந்த வாழ்வும்.

❖❖❖



கவிதை

யாழன் ஆதி

மீனிசை

மௌனத்தின் கரையில் ஒதுங்கிய படகொன்றில்
கிடந்தது நான் பிடிக்க எத்தனித்த மீனிசை
முட்களற்ற அதனுடல் அசைய அசைய
கடல் பாடியது
அலைகளின் சிதறல்கள் இசைத்துணுக்குளாய் மிதக்கும்
ஈரப்பதம் மிகுந்திருந்த காற்றில் என் மௌனங்களை
வெட்டி எறிந்தேன்
மாலை நேரத்துச் சூரியன் அவற்றைத் தின்ன
ஒளி இசையாகிவிட்டது
செவ்வண்ணத்தில் நீலக்கடலில் பாரித்த
இசை கடல்முழுவதையும் மீனாக்கிவிட
நீந்துவதற்கு இசையில் மூழ்கின காலத்தின் சக்கரங்கள்
இழைத்துச் செய்த சுரத்தின் மீட்சியில்
படகும் நிமிர்ந்து நிற்க யாழாகிட வாசிக்கிறாள்
அன்னை
வடக்கின் திசைகளில் பாய்ந்து
சமவெளிகள் கடந்து
வெள்ளிச்சிகரத்தின் உச்சியில் கேட்கிறது
விடியலின் அப்பாடல்.

❖❖❖

எப்படியும் நோகாது எடுத்துவிடுவது
நல்லது
தைத்த இந்த அம்புகளை.

❖❖❖





ஓவியம்: ஜமால்



தொகைச்சொல்

யாருக்குமே தெரியாத சொல்லொன்றை நான்
வைத்திருக்கிறேன்
சிறுநிழல்கள் கூடி செய்தன அதை
ஒரு மரத்தின் வேரில் திரண்ட தண்ணீரின் சுவையிலிருந்து
உச்சியிலிருக்கும் பசுமஞ்சள் நிறக் கொழுந்திலையின்
நுனியில் சேகரிக்கப்பட்ட பனித்துளிகளடக்கம் அதில்
வானிரவின் மூலையில் இருக்கும்
பால்வீதி விண்மீன் பறவைகள்
தங்கள் அலகுகளில் கொத்திச் சென்றிருக்கின்றன
அச்சொல்லை
கடலின் பேராழத்திலிருந்து முளைத்த ஆல்காக்களின்
சிவப்பு நிறத்துகள்கள் தூவப்பட்டது அச்சொல்
போர்களின் ஒலிகள் கேட்காத மானுடத்தின்
வாசலில் வைக்கப்பட்ட ஒரு மூங்கில் மரத்தில்
நுழைந்து வெளியேறும் குளிரிளங்காற்றில் அச்சொல்லின்
மூலம் தைக்கப்பட்டிருக்கிறது
ரகசியமூடியிட்ட பிரபஞ்சப் பெட்டியில்
வைக்கப்பட்டிருக்கும் அச்சொல்லைப் பூட்டி வைத்
திருக்கும்
என்னைத் திறக்கும்
கைகள் காலத்தினுடையவை.


❖❖❖

பகல்நதி

உருகிய கண்ணாடியாய் ஓடிக்கொண்டிருக்கிறது நதி
கண்கள் நீந்தும் அதன் மேற்பரப்பில்
பரிசுத்த ஒளி புற்களின் மீது படிந்து புறப்படுகிறது
பொன்மணற் துகள்களின் தங்களின் முதல் எழுத்தை
எழுத ஆரம்பிக்கின்றன வெண்ணிறப் பறவையின் கால்கள்
அழகிய ஓவியத்தின் நளினம் கலந்த நதியின்
வளைவில் புன்னை மரத்தில் நிழல் நீந்த
கிளைகளில் விளையாடுகின்றன ஆரல் குஞ்சுகள்
கிளி அமர்ந்த மரத்தின் இலை உதிர்கையில்
தூரத்து மலையில் தூங்கச்செல்கிறது பகல்.

❖❖❖

தமிழுக்கு மணமென்று பேர்!



நாட்டார் பாடல்களில்* உவமை

ஆ.சிவசுப்பிரமணியன்

இலக்கிய முறையியலில் உவமை ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. படைப்பிலக்கியங்களில் குறிப்பாகக் கவிதையில் தவிர்க்க இயலாத இடத்தை உவமை பெற்றுள்ளது. உவமையை கவிதைக்குரிய ஒரு அணிகலனாகக் கருதியதன் அடிப்படையில் உவமை அணி என்றழைத்துள்ளனர். சங்க இலக்கியக் கவிஞர்களில் சிலர் பயன்படுத்திய உவமைகளின் அடிப்படையில். அவர்களது இயற்பெயர் மறக்கப்பட்டு பயன்படுத்திய உவமைகளே பெயர்களாகி நிலைத்துவிட்டன. இவர்களை உவமையால் பெயர் பெற்ற கவிஞர்கள் என்பர்.

செம்புலப்பெயல் நீரார், தேய்புரி பழங்கயிற்றினார், அணிலாடு முன்றிலார் என்போர் உவமையால் பெயர்பெற்ற கவிஞர்கள்தாம். இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க்கவிஞர்களில் ஒருவரான சுரதா அவர் பயன்படுத்திய உவமைகளின் அடிப்படையில் உவமைக் கவிஞர் என்ற அடைமொழியைப் பெற்றிருந்தார்.

உவம இயல் என்ற தலைப்பில் ஒரு தனி இயலையே தொல்காப்பியம் கொண்டுள்ளது. உயரிய பொருள்களே உவமையாகும் தகுதி பெற்றன என்ற கருத்தைக் கூறினாலும் இதற்குப் புறனடையாகக் கீழான பொருள்களும் உவமையாகும் தகுதி உடையன என்பதை "கிழக்கிடு பொருளும் உவமை ஆகும்" என்ற நூற்பாவின் வழி வெளிப்படுத்தி உள்ளார். இப்பொதுவான செய்திகளின் பின்புலத்தில் நாட்டார் பாடல்களில் உவமை குறித்து அறிந்து கொள்வோம்.

நாட்டார் பாடல்கள்:

நாட்டார் வழக்காறுகள் என்ற பரந்துபட்ட பிரிவானது பல வகைமைகளைத் (Genre) தன்னுள் கொண்டது. இவற்றுள் பரவலாக அறிமுகமான, எளிதில் புறக்கணிக்க இயலாத ஒரு வகைமை நாட்டார் பாடல்கள் ஆகும். இது தாலாட்டு, ஒப்பாரி எனப் பல உட்பிரிவுகளைக் கொண்டது. இவற்றுள் ஒன்றாகவே காதல் உணர்வை வெளிப்படுத்தும் பாடல்கள் அமைகின்றன. ஆனால் உண்மையில் காதற்

பாடல்கள் என்ற வகைமை கிடையாது. ஏனெனில் திரைப்படக் காதலர்கள் போன்று ஓர் ஆணும் பெண்ணும் காதல் உணர்வை வெளிப்படுத்தும் பாடல்களைப் பாடியவாறு காதலிப்பதில்லை.

இந்த இடத்தில் நாட்டார் பாடல்களைச் சேகரிப்பது குறித்த ஓர் உண்மையைத் தெரிந்து கொள்ளவேண்டும். வாய்மொழியாகப் பாடப்படும் நாட்டார் பாடல்களை எழுத்துவடிவில் மாற்றிப் படிக்கும் நமக்கு வெளிப்படையாகத் தெரிவது அவற்றின் உள்ளடக்கம்தான் இதன் அடிப்படையிலேயே தாலாட்டு, தொழிற்பாடல், ஒப்பாரி, என்று வகைமைப்படுத்திக் கொள்கிறோம். ஆனால் இந்தவகைமையை முடிவு செய்வதில் அப்பாடல்கள் பாடப்படும் சூழலுக்கும் (Context) இடமுண்டு. எனவே உள்ளடக்கத்தின் அடிப்படையில் காதற்பாடலாக வகைப்படுத்தப்படும் பாடல்களை சூழல் அடிப்படையில் தொழிற் பாடலாகவோ பொழுபோக்குப் பாடலாகவோ வகைப்படுத்த இடமுண்டு. இதனால் பாடல்கள் பாடப்படும் சூழலையும் அறிந்து கொள்வது அவசியம்.

இக்கட்டுரை இன்றையத் தூத்துக்குடி மாவட்டத்தின் கரிசல் நிலப்பகுதியில் வழங்கிய தொழிற் பாடல்களில் இடம் பெற்றுள்ள காதற் பாடல்களை அடிப்படையாகக் கொண்டது. இவற்றைச் சேகரித்தவர் ஆசிரியரும் தோழருமான எஸ்.எஸ் போத்தையா (சூரன்குடி) சேகரித்தது.

காதலர் பிரிவு:

காதல் வாழ்வின் போது ஏற்படும் சிறு பிணக்குகளோ அயலவரின் இடையீடுகளோ காதலர்களிடையே பிரிவை ஏற்படுத்தி விடும். இத்தகைய பிரிவுக்கு ஆளான காதலி ஒருத்தியின் கூற்றாக வெளிப்பட்ட பாடல் ஒன்று வருமாறு:

ஊருணி*த் தண்ணி போல/ஒத்திருந்தோம் ஒரு வருஷம் (*தெளிந்த நீரைக் கொண்டது)

கம்மாத் *தண்ணி மண்டிபோல/கலங்கிட் டோமே நாலுவிதம் (*கண்மாய் சேறு நிரம்பியது)

வண்டியிலே வரிச் சட்டம்*/வாச்சு திண்ணு நானிருந்தேன் (*வண்டியையும் நுகத்தடியையும் இணைக்கும் வலுவான மூங்கில் சட்டம்)

முக்காணிக் குச்சி *போல/முறிந்ததையா நம் உறவு. (*நுகக் கால் குச்சி)

தன் காதலி இவ்வாறு பிரிவினால் ஏற்பட்ட விளைவுகளைப் பாடியதற்கு எதிர்வினை ஆற்றுகிறான் காதலன்.

கூடினோமே கூடினோமே/கூட்டு வண்டிக்* காளைபோல (*இரண்டு மாடுகளால் இழுக்கப்படும் வண்டி)

விட்டுப் பிரிஞ்சமடி/ஒத்தை வண்டிக் காளை போல

தடம் மாறிய கணவன்:

சங்க இலக்கிய அகப்பாடல்களில் தலைவன் தலைவியைப் பிரிவதற்கான ஏதுக்களில் ஒன்றாகப் பரத்தையிற் பிரிவு அமைகிறது. கரிசல் நிலத்திலும் இப் பிரிவு தொடர்ந்துள்ளது. கணவனது கூடா ஒழுக்கத்தால் வருந்தும் பெண்ணொருத்தி தன்னையும் கணவன் நாடிச் செல்லும் பெண்ணையும் ஒப்பிட்டுப் பாடுவது போல் உருவான பாடல் வருமாறு:

மாவு உருண்டை போல/மணி உருண்டை இங்கிருக்க!

சாணி உருண்டைக்காக/சாம வழி போகலாமோ?

பாசிப்பயறு போல/பச்சைப் பிள்ளை இங்கிருக்க

ஊசப்பயறு *தேடி/ஊரு வழி போலாமோ (*ஊசிப்போன அவித்த பயறு)

கும்மட்டிக்காய்:

பெண்ணொருத்தி களங்கமின்றி ஓர் இளைஞனுடன் உரையாடி வந்தாள். அவனோ நட்புறவாக கருதாது பாலியல் சீண்டலில் ஈடுபட்டான். இதனால் வருந்திய பெண் அவனது செயல்குறித்து

எலுமிச்சம் பழமின்னு / எடுத்தேனே கைநிறைய பச்சைக் குமட்டியின்னு / பாத்தவுக சொல்லலையே

என்று பாடுகிறாள். குமட்டி என்பது நச்சுத் தன்மை கொண்ட தாவரம். இதை யாரும் பயிரிடுவதில்லை. பயன்பாடற்ற நிலங்களில் தரையில் கொடியாகப் படரும். இத்தாவரத்தின் காய் பச்சை நிறத்திலும் அது பழுத்தவுடன் எலுமிச்சம் பழம் போன்றும் காட்சியளிக்கும்.

உவமைகளின் சிறப்பு:

இவை ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் உருவான பாடல்கள்.இப் பாடல்களை உருவாக்கிப் பாடியோர் தம் சுற்றுச் சூழல்களில் இருந்தே உவமைகளைக் கண்டறிந்துள்ளார்கள். இவ்வகையில் இவை வாழும் மண்சார்ந்த உவமைகள்.



ஏறு தழுவுதல் : இன்னொரு சான்று

பெருமாள்முருகன்

ஜல்லிக்கட்டு என்னும் ஏறு தழுவுதல் பற்றித் தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களில் அரிய பதிவுகள் உள்ளன. சங்க இலக்கிய நூலாகிய கலித்தொகையின் முல்லைக்கலிப் பாடல்களில் ஏறு தழுவுதல் விரிவாகப் பதிவாகியிருப்பது அனைவரும் அறிந்ததே. அதன் பின்னர் தோன்றிய நூல்களில் அத்தனை வலுவான பதிவுகளைக் காண முடியவில்லை. ஆங்காங்கே ஒளிந்து கிடப்பவற்றைத் தேடித்தேடிக் கண்டடைய வேண்டியிருக்கிறது. இந்நிலையில் 'புறப்பொருள் வெண்பாமாலை' இலக்கண நூலில் உள்ள ஒற்றைச் சான்று முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது.

புறப்பொருள் இலக்கணத்தில் வெட்சி, கரந்தை ஆகிய முதலிரு திணைகள் மாடுகளோடு தொடர்புடையவை. 'வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம்' என்பர். போரின் தொடக்கமாகப் பகைவரின் ஆநிரைகளைக் கவர்ந்து வருதல் வெட்சித்திணை. பகைவர் கவர்ந்து செல்லும் ஆநிரைகளை மீட்கப் போராடுதல் கரந்தைத் திணை. இவற்றில் ஆநிரைகள் பேசப்பட்டாலும் மாடுகளுக்கும் மனிதர்களுக்குமான போராட்டம் ஏதுமில்லை. பிறருக்குரிய செல்வமாகிய மாட்டு மந்தைகளைக் கவர்ந்து செல்ல முயலும் போது இருபிரிவினருக்கு இடையே நிகழும் மோதலை, போரை இத்திணைகள் விவரிக்கின்றன.

துறை இலக்கணம் கூறும் கொளு, சான்றுப் பாடல்கள் ஆகியவை பொதுவாகவே ஆநிரைகளைக் குறிப்பிடுகின்றன. மணிநிரை, கன்றோடு மா, கணநிரை, அணிநிரை என்றெல்லாம் ஆநிரையின் திரட்சியைக் காட்டும் தொடர்கள் உள்ளன. வெட்சியின் 'செலவு' என்னும்

துறைக்குரிய சான்றுப் பாடல் மட்டும் 'ஏற்றினம் நின்ற நிலை' என ஆநிரையில் காளைகள் இருந்ததைச் சொல்கிறது. 'ஏறு பொருந்திய பசுநிரை நின்ற நிலை' என உரையாசிரியர் (உ.வே.சா. பதிப்பு, ப.5) அதற்கு விளக்கம் தருகிறார். மற்றபடி நிரை கவர்தல், மீட்டலில் மாடுகளுக்கும் மனிதர்களுக்குமான நேரடிப் போராட்டம் ஏதுமில்லை.

எல்லா இலக்கண நூல்களிலும் இருப்பதைப் போலவே வெண்பாமாலையிலும் புறனடை உள்ளது. நூலின் இறுதியில் 'ஒழிபு' பகுதியில் இரு நூற்பாக்கள். முதல் நூற்பா பாடாண் திணைக்கான ஒரே ஒரு துறையைக் கூறுகிறது. ஆனால் வாகைத் திணைக்கான பதினெட்டுத் துறைகளை அந்நூற்பா பட்டியலிடுகிறது. இருபிரிவினருக்கிடையே நடைபெறும் போர் வெற்றியல்லாத பிறவெற்றிகள் அப்பட்டியலில் உள்ளன. அவை பல தரப்பட்டவை. வாணிக வென்றி, உழவன் வென்றி ஆகிய இரண்டும் தொழில் சார்ந்தவை. இத்தொழில்கள் சிறப்பாக நடைபெறுவதை வெற்றி என இந்நூல் கருதியுள்ளது. மல்வென்றி என்பது இரு மல்லர்களுக்கிடையே நடைபெறும் மற்போர். இரு வீரர்கள் நேருக்கு நேர் மோதும் இதுவும் வீரத்தோடு தொடர்புடைய ஒருவகை விளையாட்டுப் போட்டிதான். இதைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியம் முதற்கொண்டு உள்ளன.

குதிரை வென்றி, தேர் வென்றி ஆகியவை படைவீரர்களுக்கு இடையே நடைபெறும் போட்டிகள் எனத் தெரிகிறது. குதிரையில் ஏறி அதைச் செலுத்தும் போட்டி குதிரை வென்றி. தேரைச் செலுத்தும் போட்டி தேர் வென்றி. இன்றைய வாகனப் பந்தயம் போன்றவை இவை. யாழ் வென்றி, சூது வென்றி, ஆடல் வென்றி, பாடல் வென்றி, பிடி வென்றி (கூத்து வென்றி) ஆகியவை மனிதர்களுக்கு இடையே நடைபெறும் கலைப் போட்டிகள். கோழி வென்றி, தகர் வென்றி, யானை வென்றி, பூழ் வென்றி, சிவல் வென்றி, கிளி வென்றி, பூவை வென்றி ஆகியவை மனிதர் தாம் வளர்த்த பறவைகள், விலங்குகளை மோத விட்டுக் காணும் விளையாட்டுப் போட்டிகள். இவற்றை மனிதர்களுக்கு இடையே நடைபெறும் போட்டிகள், வளர்ப்புப் பறவைகளுக்கு இடையே நடைபெறும் போட்டிகள், வளர்ப்பு விலங்குகளுக்கு இடையே நடைபெறும் போட்டிகள் என வகைப்படுத்தலாம்.

இவற்றிலிருந்து வேறுபட்ட ஒன்றே ஒன்று 'ஏறுகொள் வென்றி.' ஏறுகளை அடக்கி மனிதர் பெறும் வெற்றி. காளைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையே நடைபெறும் போராட்டம். காளைகளை அடக்கி வசப்படுத்தி வளர்ப்பு மிருகங்களாக்கி உழவுத்தொழிலைப் பெருக்கி மனிதன் நிலைகொண்ட வரலாற்றை இந்த 'ஏறு தழுவுதல்' உட்கொண்டிருக்கிறது. ஏறுகொள் வென்றி என்னும் துறைக்கு வெண்பாமாலை தரும் சான்றுப் பாடல் இது:

குடைவரை யேந்தியநங் கோவலனே கொண்டா
னடையவிழ் பூங்கோதை யஞ்சல் – விடையரவம்
மன்றங் கறங்க மயங்கப் பறைபடுத்
தின்று நமர்விட்ட வேறு.
இதன் சந்தி பிரித்த வடிவம் வருமாறு:
குடைவரை ஏந்தியநம் கோவலனே கொண்டான்;
அடையவிழ் பூங்கோதை அஞ்சல்! – விடையரவம்
மன்றம் கறங்க, மயங்கப் பறைபடுத்(து)
இன்று நமர்விட்ட ஏறு.

இப்பாடலுக்கான பழைய உரை:

மலையாகிய குடையை யேந்திய நம் ஆயனே கொண்டான், இலை மலரும் பூமாலையினை யுடையாய், அஞ்சாதேகொள்; மிக்க ஆரவாரம் மன்றிடத்தே ஒலிப்பக் கண்டார் மயங்கப் பறையறைந்து இன்று நம் உறவுமுறையார் விட்ட ஏற்றை (உ.வே.சா. பதிப்பு, ப.157).

இப்பாடலுக்குப் பொ.வே.சோமசுந்தரனார் உரை:

ஏறுகொள் வென்றி – ஏற்றைத் தழுவி எய்தும் வென்றியைச் சொல்லியது. ஏறு – காளை.

இலைகள் விரிந்த பூமாலையினையுடைய தலைவியே! நீ நம் தலைவன் இவ்வேற்றைத் தழுவுவானோ தழுவானோ என்னும் ஐயத்தாலே அஞ்சாதேகொள். அம்பலத்தின் கண்ணே மிக்க ஆரவாரம் முழங்கும்படியும் கண்டோர் மயங்கும்படியும் நம் உறவுமுறையார் இவ்வேறு அடர்த்தானுக்கு இவள் உரியள் எனக் கூறி விட்ட ஆனேற்றினை, குடையாக மலையை ஏந்திய நம் தலைவனாகிய ஆயனே அடர்த்துத் தழுவிக் கொண்டான் காண்.


விளக்கம்: பூங்கோதை அஞ்சல் நமர் விட்ட ஏறு நம் கோவலனே கொண்டான் என்று இயைக்க.

இஃது ஆய்மகள் ஒருத்தி மாயவன்பால் காதலுற்றிருந்தாளாக, அவள் தமர் அவள் பொருட்டு விட்ட ஏற்றை அம்மாயவனே அடர்த்துத் தழுவியது கண்ட தோழி அத்தலைவிக்குக் கூறியது என்க (ப. 345, 346).

இப்பாடலும் முல்லைக்கலிப் பாடல்களைப் போன்ற பொருளுடையதுதான். தலைவியின் உறவினர்கள் அவளுக்குத் திருமணம் செய்யக் கருதுகிறார்கள். தாம் வளர்த்த காளையைப் பொதுமன்றத்தில் ஏறு தழுவுதலுக்காக விடுகிறார்கள். காளையை அடக்கித் தழுவி வெற்றி பெறும் வீரன் எவனோ அவனுக்கே பெண்ணை மணம் செய்து கொடுத்தல் மரபு. தலைவிக்கு ஏற்கெனவே ஒருவன் மீது காதல் இருக்கிறது. தான் விரும்பும் தலைவன் காளையை அடக்குவானோ இல்லையோ என்று தலைவி சந்தேகம் கொண்டு சஞ்சலத்தோடு காத்திருக்கிறாள். அப்போது 'நீ அஞ்ச வேண்டாம்; நீ விரும்பியவனே காளையை அடக்கினான்' என்னும் செய்தியைத் தோழி வந்து தெரிவிக்கிறாள்.


புறப்பொருள் இலக்கண நூலில் இடம்பெற்றிருந்தாலும் இது அகப்பாடல் மரபைச் சேர்ந்தது. முல்லைத்திணைப் பாடல். தோழி கூற்று. 'சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்' என்னும் விதிப்படிப் பொதுமை கொண்டது. 'இலையுடன் சேர்ந்த மலர்களால் கட்டப்பட்ட மாலையை அணிந்தவளே, நீ அஞ்ச வேண்டாம். பொதுமன்றத்தில் பெருத்த ஆரவாரத்துடனும் பறை முழங்கவும் காளையை நம் உறவினர்கள் விட்டனர். அதைக் கண்டு பிடிக்கலாமா வேண்டாமா என வீரர்கள் குழம்பித் தயங்கினர். ஆனால் மலையைக் குடையாக ஏந்திய நம் தலைவனே காளையை அடக்கித் தழுவினான்' என்று தோழி கூறுகிறாள். 'குடைவரை ஏந்திய நம் கோவலன்' எனத் தலைவனைப் பாடல் குறிப்பிடுகிறது. கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்த ஆயர் கடவுளாகிய மாயோனையே தம் தலைவனாக அத்தலைவி வரித்திருந்தாள் என்றும் மாயோனே வந்து ஏறு தழுவுதலில் இறங்கினான் என்று பொ.வே.சோமசுந்தரனார் கூறுகிறார். 'குடைந்த மலை போன்ற மார்பைக் கொண்ட தலைவன்' என மானிட ஆயனையும் கொள்ளலாம். மாயோன் என்றாலும் சரி, மானிட ஆயன் எனினும் சரியே.

இப்பாடல் காட்டும் செய்திகள் சில. ஏறு தழுவுதல் நிகழும்போது பொதுமன்றத்திற்குத் தலைவி செல்லவில்லை. என்ன செய்தி வருமோ



என்று எதிர்பார்த்து வீட்டிலோ வேறிடத்திலோ காத்திருக்கிறாள். விளையாட்டைக் கண்டு களித்து ஓடி வந்த தோழி 'குடைவரை ஏந்திய கோவலனே கொண்டான்' என்று சொல்லத் தொடங்குகிறாள். கம்பராமாயணத்தில் சீதையைக் கண்ட செய்தியைக் 'கண்டனன் கற்பினுக் கணியைக் கண்களால்' என்று சொல்லும் அனுமனின் சொற்களைப் போல இப்பாடலில் தோழியின் கூற்று அமைந்துள்ளது. நீ விரும்பியவனே காளையை அடக்கினான் என்பதைத் தெரிவித்த பிறகே 'நீ அஞ்சாதே' என்று ஆறுதல் சொல்கிறாள். அதன் பின்னர் பொதுமன்றம், அங்கே எழுந்த ஆரவாரம், காளையை விடும்போது ஒலிக்கும் பறை ஆகியவற்றைக் காட்சிப்படுத்துகிறாள். நம் காளையைப் பிடிக்கப் பிற வீரர்கள் எவ்வாறு குழம்பித் தயங்கினர் என்றும் சொல்கிறாள். அப்போர்ப்பட்ட காளையைத்தான் நம் தலைவன் அடக்கினான் என்று அவன் வீரத்தின் பெருமையையும் மிகுவித்துச் சொல்கிறாள். இவ்வாறு நயம் கொண்ட பாடலாகவும் இது விளங்குகிறது. புறப்பொருள் வெண்பாமாலையின் சான்றுப் பாடல்கள் பலவும் இலக்கியத் தரம் கொண்டவையாக விளங்குவன. அவ்வரிசையில் இப்பாடலையும் சேர்க்கலாம்.

புறப்பொருள் வெண்பாமாலையின் காலம் பற்றி அறிஞர்களிடையே ஒருமித்த கருத்து இல்லை. இதை 1895இல் முதலில் பதிப்பித்த



உ.வே.சாமிநாதையர் இதன் காலத்தைப் பற்றி ஏதும் கூறவில்லை. இளம்பூரணர் உள்ளிட்ட உரையாசிரியர்கள் இந்நூலின் பாடல்களை எடுத்துக்காட்டுவதை மட்டும் சுட்டுகிறார். தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர் மு.அருணாசலம் இந்நூலை ஒன்பதாம் நூற்றாண்டு எனக் கருதி அந்நூற்றாண்டு வரலாற்றில் விரிவாக எழுதியுள்ளார். உரையாசிரியர்கள் இந்நூல் பாடல்களை எடுத்துக்காட்டுவதை அடிப்படையாகக் கொண்டே ஒன்பதாம் நூற்றாண்டு என அவர் கருதியிருக்கக் கூடும். 'இலக்கண வரலாறு' நூலாசிரியர் இரா.இளங்குமரனும் ஒன்பதாம் நூற்றாண்டு எனக் கருதியுள்ளார். எனினும் இந்நூல் உரை பற்றிப் பதினைந்தாம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றில் மு.அருணாசலம் எழுதும்போது 'இவ்வெண்பாமாலை 13ஆம் நூற்றாண்டுக்குரியதாகக் கொள்ளலாம்' (ப.100) என்று குறிப்பிடுகின்றார். இந்த முடிவுக்குத் தாம் வந்ததைக் கீழ்வருமாறு விவரிக்கிறார்:

'பின்வந்த உரையாசிரியர்கள் அனைவரும் புறப்பொருள் வெண்பாமாலைப் பாடல்களை எடுத்து ஆள்கிறார்கள். இளம்பூரணர் (11நூ) நச்சினார்க்கினியர் (14நூ) களவியல் காரிகை உரையாசிரியர் முதலியோர் குறிப்பிடத்தகும். 15ஆம் நூற்றாண்டில் தொகுத்த புறத்திரட்டு இதிலிருந்து 75 பாடல்களைத் தருகிறது. புறப்பொருள் வெண்பாமாலை பன்னிரு படலத்தின் வழி அதன் ஒருபகுதி தொல்காப்பியர் செய்தது என்ற கருத்துக்களை இளம்பூரணர் மறுக்கிறார். நச்சினார்க்கினியர் புறப்பொருள் வெண்பாமாலைப் பாடல்கள் பலவற்றைத் தொல்காப்பிய உரையுள் எடுத்துக் கூறுவதால் அவர் காலமாகிய 14ஆம் நூற்றாண்டுக்குச் சில காலம் முற்பட்டது இந்நூல் எனக் கருதலாம். வெண்பாமாலைக் கருத்துக்களைச் சில இடங்களில் இவர் மறுக்கிறார். மறுக்கும் முறையும் இக்கருத்தை வலியுறுத்துகின்றது. உரைக்குறிப்புகள் நச்சினார்க்கினியர்க்குப் பிற்பட்டவை என்று கருதத்தக்கன. பன்னிருபடலம் பிற்பட்ட நூலென்பது அறிஞர் கருத்து. அதைத் தழுவி எழுந்த இவ்வெண்பாமாலை 13ஆம் நூற்றாண்டுக்குரியதாகக் கொள்ளலாம்' (ப.99, 100).

ஒன்பதாம் நூற்றாண்டு நூலாகக் கருதி எழுதிய மு.அருணாசலம் பின்னர் 13ஆம் நூற்றாண்டு எனவும் எழுதுவது முரண். இளம்பூரணம் பதினொன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். அவர் புறப்பொருள் வெண்பாமாலைப் பாடல்களை எடுத்தாள்கிறார். அப்படியானால் பதினொன்றாம் நூற்றாண்டுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த நூலாகத்தானே இது இருக்க வேண்டும்? மு.அருணாசலத்திடம் இத்தகைய முரண்பாடு தோன்றிய காரணம் தெரியவில்லை. எப்படியாயினும் சரி. கலித்தொகை நூலுக்குப் பிறகு ஏறு தழுவுதல் வீர விளையாட்டுக்குச் சான்றுப் பாடல் இந்நூலில் உள்ளது என்பது முக்கியமானதாகும். அதுவும் கலித்தொகையில் காணப்படும் விதத்திலேயே பாடல் அமைந்துள்ளது. கலித்தொகையில் குறிப்பிடப்படும் பொதுமன்றம், இசை முழக்கம், ஆரவாரம் ஆகியவற்றையும் இப்பாடல் காட்டுகின்றது. காளையை அடக்கித் தழுவிப் பெண்ணை மணம் செய்துகொள்ளும் வீர விளையாட்டு என்னும் தன்மையும் மாறவில்லை. 'ஏறு' என்னும் சொல்லாட்சியையும் அப்படியே கையாண்டுள்ளது.

அவ்வகையில் ஏறு தழுவுதல் என்னும் ஜல்லிக்கட்டு தமிழ்நாட்டின் நீண்ட கால மரபாகத் தொடர்ந்து வரும் வீர விளையாட்டு என்பதற்குப் புறப்பொருள் வெண்பாமாலை காட்டும் இப்பாடல் முக்கியச் சான்றாகும்.



சடங்கில் கரைந்த கலைகள்

அ.கா.பெருமாள்

தமிழகத்தில் நாட்டார் கோவில்களில் நிகழும் நாட்டார் கலைகளுக்கும் சடங்குகளுக்கும் உள்ள தொடர்பு மிக முக்கியமானது நாட்டார் தெய்வங்களின் வழிபாடும் விழாக்களும். பெருநெறிக்கு உட்பட்ட சமயம் சார்ந்த விழாக்களிலிருந்தும் வழிபாடுகளில் இருந்தும் வேறுபட்டு இருக்கும் இந்த வேறுபாடு இந்த இரண்டையும் பிரித்துக் காட்டுகிறது.

பெருநெறி சமயக் கோவில்களின் சடங்குகள் பெரும்பாலும் சமஸ்கிருத வயப்பட்டு நடப்பவை சடங்குகளின் நெறிமுறை வாய்மொழியாக வருபவை சில எழுத்து மொழிகளிலும் உள்ளன இந்தச் சடங்குகள் வழிபடுபவரின் நலம் வேண்டி நிகழ்பவை இவற்றின் இம்மை, மறுமை குறித்த தத்துவார்த்தம் முக்கியப்படுத்தப்படும்.

நாட்டார் தெய்வச் சடங்குகளில் பெரும்பாலும் வட்டார மரபு சார்ந்தவை. இவை எதார்த்தத்துடன் ஒட்டி உருவாக்கப்பட்டவை. இறந்த கால நிகழ்வை மீண்டும் மீண்டும் நினைக்கத் தூண்டுபவை.

நாட்டார் தெய்வங்களை வழிபடுபவனுக்குக் கோலாகலத் தன்மை இரண்டாம் நிலையில் இருக்கும். இவை அவனது உள்ளுணர்வால் உருவாக்கப்பட்டவை. இவை தொல்பழம் வழிபாட்டிலிருந்து முளைத்தவை இவற்றிலிருந்து சடங்குகளைப் பிரிக்க முடியாது.

நாட்டார் தெய்வ வழிபாட்டுச் சடங்குகளின் புனிதத் தன்மையின் பால் மக்கள் மேற்கொள்ளும் கோலங்களின் தொகுப்பு விழாக்கள் ஆகும். இதனால் பெறும் புனிதத் தன்மையுடன் தொடர்பு கொண்டு

அதன் ஆற்றலைப் பெற முடியும் என்பது நம்பிக்கை.

சடங்குகளை நிகழ்த்துகின்றவர்களும் சடங்குகள் தொடர்பான கலைகளும் பார்வையாளன் அல்லது பக்தனுக்குப் புனிதமானவையாக உள்ளன. இதனாலேயே நாட்டார் தெய்வ சடங்குகள் தொடர்பான கலைகள் நிலைபேறு உடையனவாக வாழ்கின்றன.

நாட்டார் தெய்வ விழாக்களில் கலை நிகழ்த்துவர்க்கும் விழாவின் சடங்குகளின் நுட்பமான செயல்பாடுகளுக்கும் தொடர்பு உண்டு. சில கோவில்களில் இவர்கள் பூசகர்கள் போலவும் செயல்படுகின்றார்கள். பண்பாட்டு மானுடவியல் கோட்பாட்டின்படி சடங்குகள் குறிப்பிட்ட குழுவினரை ஒன்று பட வைத்து ஒன்றுபட்ட நடத்தைமுறை ஏற்படக் காரணமாகின்றன. சமுதாயக் கட்டமைப்பை உருவாக்க இவை உதவுகின்றன.

தெய்வத்தின் அருள் பெற்று ஆடுகின்ற சாமியாட்டக்காரனின் அருளைக் கூட்டுவதற்கும் முக்கிய தெய்வத்தைக் கோவிலில் வரவழைப்பதற்கும் கலைஞனின் பாடலும் இசைக்கருவிகளின் ஒத்திசைவும் துணை செய்கின்றன. இதற்கு வில்லுப்பாட்டு போன்ற சில கலைகளை உதாரணமாக கூறமுடியும்.

நாட்டார் தெய்வ கோயில் விழாக்களில் கலை நிகழ்த்துபவன் கலைஞன் என்னும் எல்லையைத் தாண்டி தெய்வத்தின் அருள் பெற்று அருள் வழங்குபவனாகவும் கொள்ளப்படுகிறான். அன்னக்கொடி விழா கூத்தில் சிறுத் தொண்டராக நடிப்பவர் பக்தர்களுக்குப் திருநீறு வழங்கி ஆசீர்வதிப்பது பலன் அளிக்கும் என நம்புகின்றனர்.

சடங்கில் நிகழ்த்தப்படும் கலைகளுக்கு உரிய இசைக்கருவிகள் கலைநிகழ்வின் கூறுகள், பொருட்கள் ஆகியனவும் புனிதமாகக் கருதப்படுகின்றன. தொல் சமயக் கூறுகளில் இயற்கைப் பொருட்களும் குழு சார்ந்த சின்னங்களும் புனிதமாக்கப்பட்டு பின்னர் அவை வழிபாட்டுக்கு உரியவை ஆகின்றன. நாட்டார் தெய்வ வழிபாட்டு மரபு தன் முந்தைய தொல் சமய வழிபாட்டிலிருந்து இவற்றை எடுத்திருக்கிறது.

தமிழகத்தில் 1998 – 2001 ஆம் ஆண்டுகளில் நான் கள ஆய்வு செய்து சேகரித்த செய்திகளின் அடிப்படையில் 140 நாட்டார் கலைகள் வழக்கில் இருப்பதை அறிந்தேன் 2007இல் நடந்த கள ஆய்வில் 30க்கு மேற்பட்ட நாட்டார் கலைகள் நிகழ்த்தப்படவில்லை என்று தெரிந்தது.

தமிழகத்தில் நாட்டார் கலைகளில் சடங்குக் கூறுகள் உடையவையும் பொது மேடைகளில் நடத்தும் தகுதியைப் பெற்றனவும் மற்றொன்று விரித்தலுக்கு இடம் தந்து இருப்பனவும் வாழ்கின்றன. நாட்டார் கலைகளில் 28க்கும் மேற்பட்டவை நாட்டார் தெய்வக் கோவில் சடங்குகளுடன் நேரடியாக அல்லது மறைமுகமாக தொடர்பு கொண்டு உள்ளன. இந்தக் கலைகளில் சடங்கு நிகழ்வுகள் பெரிதும் கலந்துள்ளன. இத்தகு கலைகள் சிலவற்றைப் பற்றிய செய்திகளை இங்கு பார்ப்போம்.

கணியான் ஆட்டம் என்னும் கலை திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் நாட்டார் தெய்வ கோவில்களில் நிகழ்கிறது. இது குறிப்பிட்ட சமூகத்தினர் நிகழ்த்துவது. சுடலைமாடன் வில் பாட்டு கதை கணியாட்டக் கலையை நிகழ்த்தும் ஜாதியினரைத் தெய்வப்பிறவிகள் எனப் பாராட்டுகிறது. இவர்கள் கயிலை மலையில் வேள்வியில் பிறந்ததாக இப்பாடல்கூறும் இவர்கள் செய்ய வேண்டிய சடங்குகளைச் சிவபெருமானே நெறிப்படுத்தியதாகவும் கூறுகிறது.

கணியான் ஆட்டம் இசை, பாட்டு, உரையாடல் என நிகழ்வது மகுடம் இசைப்பவர் இருவர், முக்கிய பாட்டுக்காரர் அண்ணாவி எனப்படுவார். பின்பாட்டுக்காரர் ஒருவர், ஆட்டக்காரர் இருவர், ஜால்ரா அடிப்பவர் ஒருவர் என ஏழு பேர்கள் இக்கலையில் பங்கு கொள்கின்றனர் இந்தக் கலை நிகழ்த்துபவருடன் கோவில் சடங்குகளைச் செய்யும் கணியான் ஜாதியைச் சார்ந்தவரும் அடங்குவர்.

கோவிலில் உயிர்ப்பலி கொடுக்கும் முன்பு கணியான் கலைஞர் கைவெட்டுச் சடங்கை நடத்துவார். சுடலை மாடன் கோவிலின் விழாவின் போது சுடுகாட்டுக் குழியில் திரளை வீசுதல் சடங்கையும் கணியான் ஆட்டக் கலைஞரே நடத்துகிறார் இந்தச் சடங்குகள் ரகசிய தரிசனம் தருபவையாக கருதப்படுகிறது. ஆட்டக் கலைஞர்கள் கூட சடங்கு நிகழ்த்துபவரில் ஒருவராக நம்பப்படுகிறார். காலம் காலமாக

இது போன்ற கலைகளைக் காப்பாற்றுவதே இந்த நம்பிக்கை தான்.

கணியான் ஆட்டத்தின் துணைக் கலையான அம்மன் கூத்து என்ற கலை ஆட்டமும் சடங்கும் கலந்தது. அம்மனின் அருளைக் கூட்ட ஆடப்படுவது. கை வெட்டு சடங்கு முடிந்ததும் அம்மன் கூத்து நிகழ்ச்சி நடக்கும் ஆட்டக்காரர் உடம்பில் சாம்பலைப் பூசிக்கொண்டு இடையில் வேப்பிலை கட்டிக்கொண்டு ஆடுவார். இந்த ஆட்டம் சாமியாடியின் ஆட்டத்திற்கு அருளை கூட்டுவதாக இருக்கும்.

கணியான் ஆட்டக்காரர் ஆடும் பேயாட்டம் அல்லது வேதாள ஆட்டம் மாடன் கோயில்களில் ஆடப்படுகிறது. இது வேதாள முகமூடியை அணிந்து கொண்டு ஆடுவது. இந்த ஆட்டத்தின் போது அண்ணாவி (முக்கிய பாட்டுக்காரர்) சுடலை மாடன் கதைப்பாடலிலுள்ள வரத்து பகுதியைப் பாடுவார். இது சாமியாடியின் தெய்வ அருளை வேறு நிலைக்கு மாற்றிவிடும்.

அன்னக்கொடி விழா கூத்து அல்லது சிறுத்தொண்டர் கூத்து திருச்சி, தஞ்சை மாவட்ட பகுதிகளில் நாட்டார் தெய்வக் கோவில்களில் நிகழ்கிறது. இது சிறுத்தொண்டர் முக்தி அடைந்த சித்திரை மாத பரணி நட்சத்திரத்தில் நடக்கும் இது நேர்ச்சை சடங்கு. இக்கூத்தின் பாடுபொருள் சிறுத்தொண்டர் கதை. இக்கதை பெரிய புராண சிறுத்தொண்டர் கதையிலிருந்து சற்று மாறுபட்டது.

கூத்தின் ஆரம்ப நிகழ்வான அத்தி மரக்கிளையை வெட்டுவதிலிருந்து இறுதி நிகழ்ச்சியான அன்ன கொடியை இறக்குவது வரை உள்ள நிகழ்வுகள் எல்லாமே சடங்கு சார்புடன் நடக்கிறது. பார்வையாளர்கள் பைரவர் வேடம் அணிந்த நடிகரைச் சடங்கு நடத்துபவராகவே நினைத்து வணங்குகின்றனர் இவர் சீராளனின் மாவு உருவத்தைப் பிரசாதமாக வழங்கும் போது பார்வையாளர்கள் பக்தர்களாக மாறிவிடுகின்றனர்.

கூத்தில் சீராளன் பிறக்கும் காட்சியில் சிவ வேடதாரியான நடிகரிடம் பார்வையாளர்கள் தங்கள் குழந்தைகளைக் கொடுத்து ஆசிர்வாதம் பெறுகின்றனர். இந்த விழாவில் படைக்கப்படும் சீராளக்கறி பிரசாதமாகவும் மருந்தாகவும் நம்பப்படுகிறது. கூத்தில் பார்வையாளர்கள் பக்தர்களாக மாறுவதும் இந்தச் சடங்கியல் கூறுகளில் ஒன்று.

இரண்ய நாடகம் அல்லது பிரகலாத கூத்து எனப்படும் கலை தஞ்சை மாவட்டம் ஆர்சுத்திப்பட்டு, நார்த்தேவன் குடிகாடு என்னும் ஊர்களில் நரசிம்மன் கோவில் விழாவில் நடைபெறுகிறது. உள்ளூர் மக்களே கூத்தில் நடிக்கின்றனர். இந்தக் கூத்து நேர்ச்சைக்காக நடப்பது இக்கூத்தின் ஆரம்ப நிகழ்ச்சியே சடங்குகள் தொடர்பானது.

கூத்தின் முக்கியமாகக் கருதப்படும் நரசிம்மர் முகமூடி (சிரசு) கோவிலிலேயே இருக்கும் நடிகர்கள் இதற்கு கற்பூரம் ஏற்றி வழிபட்ட பின்பு தான் ஒப்பனை செய்யத் தொடங்குவர். நரசிம்மர் வேடம் தாங்கியவர் பிரகலாத வதையின் போது முகமூடி சிரசை அணிந்து நடிப்பார். அப்போது அவர் தெய்வம் ஏறியவராகி விடுவார். அந்த நேரத்தில் அவர் அணிந்திருக்கும் முகமூடி ஒப்பனைப் பொருள் அல்ல அது தெய்வத் தன்மையை ஏற்றும் சடங்கு பொருள்.

நாடக நிகழ்ச்சி 'முடிவில் முகமூடியை ஊர்வலமாகக் கொண்டு சென்று கோவிலில் வைப்பர். அப்போது முகமூடிக்கு கற்பூரம் ஏற்றி வழிபாடு நடக்கும். இந்த நிகழ்ச்சி விடையேற்றி எனப்படும்: பிரகலாத வதையின் போது நரசிம்மராக நடிப்பவர் உண்மையாக நரசிம்மராக மாறிவிடுவார்; ஆவேசப்படுவார்; அவரைத் தடுக்கவேண்டிய கட்டாயம் கூட ஏற்படும்.

கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம், விளவன்கோடு வட்டங்களில் கிருஷ்ணன் கோயில்களில் நேர்ச்சை சடங்காக கண்ணன் ஆட்டம் என்ற கலை நடக்கிறது. இது தமிழகத்தின் கிருஷ்ண ஜெயந்தி விழாவில் நடக்கும் உறியடி போன்றது எனினும் இதற்குரிய ஆட்டம், உறியின் புனிதம், உறி இழுப்பவருக்கு மரியாதை ஆட்ட முடிவில் நடக்கும் பூசை ஆகியன இக்கலையைச் சடங்குகளுடன் தொடர்புபடுத்துகின்றன.

காத்தவராயன் கோயில் வழிபாட்டுச் சடங்கில் கல்வெட்டு விழா கூத்து என்ற நாடகம் நடக்கிறது. இது ஒரு நாட்டார் நாடகம். இது பங்குனி மாதம் முதல் வைகாசி மாதம் முடிய உள்ள நாட்களில் நடக்கிறது. பங்குனி உத்திர நட்சத்திரத்தில் நடப்பது இதன் சிறப்பு. இந்தக் கூத்தில் பக்தர்கள் அல்லது மரபு வழி நடிப்பவரே பங்கேற்கின்றனர்.

இதன் பாடுபொருள் காத்தவராயன் கதை. தமிழகத்தில் பொதுவாக வழங்கும் அம்மானை வடிவில் உள்ள காத்தவராயன் கதையின் மூலத்திலிருந்து இது மாறுபட்டது.

இந்தக்கூத்தில் 14 பேர்கள் பங்கு கொள்ளுகின்றனர். பின்னணி இசைக்கருவிகள் உடுக்கு, கொம்பு, கிடுமுடி ஆசியன கூத்தில் கழுமரம் வெட்டி வரும் நிகழ்ச்சி சடங்காகவும் நாடகமாகவும் நடக்கிறது. காத்தவராயனை மலர் மாலையால் கட்டி வீதி வழியில் அழைத்து செல்வது நாடக நிகழ்ச்சியாக இருந்தாலும் ஊர் மக்களும் நடிகர்களாக பங்கு கொள்கின்றனர். காத்தவராயனை நடிகனாக கருதாமல் அவருக்குத் தூப தீபம் காட்டி பாதத்தில் நீர் ஊற்றி வணங்குகின்றனர். அவர் மக்களுக்குத் திருநீறு வழங்குவார்.

இந்த நிகழ்ச்சி கூத்தாகவும் சடங்காகவும் நிகழும். ஊர்மக்கள் பக்தர்களாகவும் நடிகர்களாகவும் செயல்படுவர். காத்தவராயன் காமாட்சி அம்மன் கட்டளைப்படி மரத்தில் ஏறுவான். கழுவின் மேல் அமர்ந்து அம்மனைத் துதிப்பான். மரத்திலிருந்து இறங்கியதும் பக்தர்களுக்கு அருள் வாக்கு கூறுவான்.

இந்த நாடகக் காட்சிகள் எல்லாமே சடங்குத் தன்மையுடன் நிகழும். இதில் சடங்கு எது நாடகம் எது என பிரித்து அறிய முடியாது இந்த நாடகத்தின் பல காட்சிகளில் பார்வையாளர்கள் நடிகர்களாக மாறுகின்றனர். ஊரின் எல்லா பகுதிகளும் மேடையாகிறது.

களம் எழுத்தும் பாட்டும் என்னும் கலை கன்னியாகுமரி மாவட்டம். கேரள எல்லையோர கிராமங்களில் நிகழ்கிறது. இது மலையாளச் சார்புடைய கலை. காளியின் வண்ண ஓவியத்தைத் தெய்வம் இருக்கும் அறையின் எதிரே உள்ள களத்தில் வரைவது இதன் சிறப்பு. எட்டு முதல் 16 கைகள் கொண்ட காளியின் படத்தை ஒரே சமயத்தில் 5 பேர்கள் வரைகிறார்கள். படம் வரையும் போது காளியைப் பற்றிய தாருகன் வதைப் 'பாடல்களைப் பாடுவர்'.

இக்கலை நிகழ்வில் வரையப்படும் படம் தூளிச் சிற்பம் எனப்படும். இப்படத்திற்குத் தெய்வத்தின் சக்தியை வரவழைக்கும் ஆவோகனச் சடங்கை மூத்த கலைஞர் செய்கிறார். இந்தக் கலை நேர்ச்சையாகவும் நடக்கும். இக்கலைக்குரிய வண்ணப் பொடிகளை இயல்பாக கிடைக்கும் பொருள்களிலிருந்தே தயார் செய்கின்றனர். இந்தப் பொடிகளைச் சேகரிக்கும் போது சுத்தமாக இருக்க வேண்டும் என்பது நடைமுறை,

காளி ஓவியத்தின் மார்பு பகுதியில் வைக்கப்படும் பச்சரிசி புனிதமாக கருதப்படும். நிகழ்ச்சி முடிவில் இந்த அரிசியையும் வண்ணப் பொடிகளையும் கலைஞரே பிரசாதமாக வழங்குகிறார். கலை நிகழ்த்த பயன்படும் பொருள் புனிதமானது என்னும் பொதுவான கருத்து களம் எடுத்தும் பாட்டும் கலைக்கும் பொருந்தும். இந்தக் கலையுடன் தொடர்புடைய நீரொழிச்சல் பூசை உச்ச பாட்டு நந்துன்னி இசைக்கருவியை மீட்டல் ஆகியவை சடங்கு தன்மையுடன் நடக்கும்.

கன்னியாகுமரி மாவட்டம் கொல்லங்கோடு பத்திரகாளி கோவில் விழாவில் சிவன், தேவிதர்க நாடகச் சடங்கு நடக்கிறது. இந்த நாடகத்தில் நடிப்பவர் பக்தர்களே சிவபுராணப் பகுதியை நடித்து காட்டுவதுடன் பார்வதியின் பெருமையை சடங்கு வழி மிகவித்து காட்டுவதாகவும் இது அமையும்

கைச் சிலம்பாட்டம் என்னும் கலை காலில் அணியும் சிலம்பை கைகளில் பிடித்துக் கொண்டு ஆடுவது ஆகும். இது திருவண்ணாமலை, நாகப்பட்டினம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட பகுதிகளில் நடக்கிறது இது முழுவதும் சடங்கு சார்ந்த கலை அல்ல: சடங்குகளுக்கு ஆதாரமாக நடப்பது அம்மன் கோவில்களில் கட்டாயமாக இது நிகழும்.

மரத்தாலான நீண்ட கட்டைகளைக் காலில் கட்டிக்கொண்டு ஆடுவது கொக்கிலிக்கை ஆட்டம், இது வேலூர் பகுதிகளில் கங்கை அம்மன் கோவில்களில் நடக்கிறது. இது நேர்ச்சை சடங்கும் கூட. இக்கலையை நிகழ்த்தும் ஆட்டக்காரர்கள் விரதம் இருக்க வேண்டும். கங்கை அம்மன் பேரில் உள்ள நம்பிக்கையே கட்டைகளில் மேல் நிற்கும், பக்தர்களைக் காப்பாற்றுகிறது என்பது ஐதீகம்.

கங்கை அம்மனுக்கு நேர்ச்சியாக கொக்கிலிக்கை ஆடுபவர் ஐந்து அல்லது ஏழு நாட்கள் பயிற்சி பெற வேண்டும். இப்பயிற்சியின் வெற்றி ஆடுகின்றவர்களின் நம்பிக்கை, புனிதம் சடங்குகளில் பங்கு கொள்ளல் ஆகியவற்றால்

வருகிறது. ஆட்டக்காரர்கள் உடம்பில் சிறு கம்பியால் குத்தி எலுமிச்சம் பழங்களைத் தொங்கவிட்டு ஒப்பனை செய்வதைக் கூட சடங்காகவே நினைக்கின்றனர்.

செலா குத்து ஆட்டம் என்பது உடம்பின் விலாப் பகுதியில் கம்பியைக் குத்திக்கொண்டு ஒப்பனையுடன் இசைக்கருவிகளின் தாளத்திற்கு ஏற்ப ஆடுவது. புதுக்கோட்டை மாவட்டத்தில் மாரியம்மன் கோவில் விழாக்களில் சடங்கு சார்ந்த கலையாக இது நடக்கிறது.

செலாகுத்து ஆட்டம் ஆரம்பிக்கும் முன்பு மேடையில் வைக்கப்பட்டிருக்கும் கல்வடிவ மாரியம்மனின் முன்னே ஒப்பனைப் பொருட்களையும் இசைக்கருவிகளையும் வைத்து தூபதீபம் காட்டுவர். அப்போது பார்வையாளர்களும் வழிபடுவர். ஆட்டக்காரர்கள் இனிப்பு கலந்த பச்சரிசியை பிரசாதமாக வழங்குவார். வாத்தியார் முக்கிய தெய்வத்தை வணங்கி விட்டு சதங்கையை எடுப்பார். அப்போது பெண்கள் குரவை இடுவர்.

திருமாலின் அடியவர்களான தாசர்களை போற்றி பாராட்டும் ஆட்டம் தாதர் ஆட்டம் எனப்படும். இது தெலுங்கு மக்களுடன் தொடர்புடையது. இதைத் தொட்டியம்பட்டி மக்கள் மட்டுமே நடத்துகின்றனர். இந்த ஆட்டம் வழிபாடு தொடர்பான நிகழ்வுகளிலும் மாடுகளை வணங்கும் நிகழ்வுகளிலும் நடக்கிறது. தாதராட்டத்துக்குரிய பாடல்கள் தமிழிலும் தெலுங்கிலும் உள்ளன. இந்த ஆட்டம் பழமையைப் பேணி வருகிறது.

சேர்வையாட்டம் என்னும் கலை சேர்வை என்னும் இசைக்கருவியை அடித்து ஆடப்படுவது மலைவாழ் மக்களான குறும்பர்கள் இதை நிகழ்த்துகின்றனர். இது குரும்பராட்டம் எனவும் படும். இவர்கள் சிவ வழிபாட்டு மரபினர். இவர்களிடம் சிவன் தட்சணை அளித்த கதை பிரபலமாய் பேசப்படுகிறது. இவர்களின் முக்கிய தெய்வம் வீரபத்திரன்.

குரும்பர்களின் சிவன் கோவில் விழாக்களில் பேய் ஓட்டுதல் அல்லது தலை காய் உடைத்தல் என்னும் நிகழ்ச்சி நடக்கும். இதில் சேர்வை இசைக்கருவி இடம்பெறும். அப்போது சேர்வை ஆட்டம் ஆடப்படும். இந்த நேரத்தில் இது சடங்காக கருதப்படும். குரும்பர்கள் திருச்சி, சேலம், கோயம்புத்தூர், புதுக்கோட்டை பகுதிகளில் வாழ்கின்றனர். இந்த ஆட்டத்தின் போது பாடப்படும் பாடல்கள் வீரபத்திர சாமி தொடர்பாக இருக்கும்.

தமிழர்களின் தெருக்கூத்து இயல், இசை நாடகம் மூன்றும் கலந்த ஒரு கலை. வட தமிழ்நாட்டில் பரவலாக நிகழ்வது நாடகத் தன்மையுடைய இந்தக் கலை. பாடல், உரையாடல் நடிப்பு என நிகழ்வது இது மகாபாரதக் கதையைப் பாடுபொருளாகக் கொண்டது. வேறு கதைகளையும் இதில் நடிக்கின்றனர்.

நாட்டார் கோவில்களில் நேர்ச்சைக்காகவும் வாழ்க்கை வட்டச் சடங்குகளில் மறுமை நன்மைக்காகவும் நடத்தப்படுகிறது. இதுபோன்ற நிகழ்வுகள் நம்பிக்கை சடங்கு சார்பாக நடக்கிறது. இந்தக் கலை கேரளத்து கதகளி, கர்நாடகம், யட்ச கானம் போன்றது. இக்கலையை நிகழ்த்த முன்பணம் கொடுப்பதிலிருந்து இறுதி நிகழ்ச்சி வரை இது சடங்கு சார்ந்தே நடக்கிறது.

தெருக்கூத்து கலை நிகழ்வில் அர்ஜுனன் தபஸ் காட்சியில் பார்வையாளர்கள் தபஸ்மரம் ஏறும் கலைஞரை அர்ஜுனனாகவே பாவித்து வரம் வேண்டுகின்றனர். பகாசுரன் ஊர்வலம் வருதல், அரக்கு மாளிகை கட்டும் நிகழ்ச்சி, போன்றவற்றில் பார்வையாளர்கள் நடிகர்களாகி விடுகின்றனர். அப்போது இது சடங்கியல் கூறுகளுடன் நடக்கும் திரௌபதி துகில் உரியும் காட்சியில் இது நாடகம் என்பதை உணர்த்தும். இப்போது சடங்கியல் கூறுகள் வெளிப்படையாகவே காட்டப்படும்.

தேவராட்டம் என்னும் கலை கம்பளத்து நாயக்கரின் ஒரு பிரிவினருடன் தொடர்புடையது. ஜக்கம்மா கோவில்களில் சடங்கியல் கூறுகளுடன் நடக்கிறது. ஆண்கள் காலில் சலங்கை ஒலிக்க கைகளில் சிறு துணியுடன் ஆடுவது. இக்கலை தூத்துக்குடி மாவட்டம் ஜமீன் கோடங்கிபட்டியுடன் தொடர்புடையது. தேவராட்டம் கம்பளத்து நாயக்கரின் சடங்குகள் தொடர்பாக சூழலின் அடிப்படையில் நிகழ வேண்டும் என்னும் ஐதீகம் தொடர்கிறது. இதன் இசைக்கருவியான தேவ துந்துவிக்கு புனிதத் தன்மை உண்டு. இது உறுமி எனவும் படும். இந்த இசைக்கருவி தெய்வத்தன்மை உடையதாக வணங்கப்படுகிறது.

பாகவத மேளா என்னும் கலை இசை நாட்டிய நிகழ்ச்சி. இதில் செவ்வியல் தன்மை இருந்தாலும் நாட்டார் கூறுகள் கொண்ட கலையாகவும்

இதை கருதலாம். இதன் தாயகமாக மேலட்டூர் கிராமத்தைக் கூறுகின்றனர். இங்கு உள்ள வரதராஜ பெருமாள் கோவிலில் பாகவத மேளா நடக்கிறது. இதன் பாடுபொருள் பிரகலாதன் கதை என்றாலும் அரிச்சந்திரன் கதை போன்ற வேறு கதைகளையும் நடத்துகின்றனர்.

இந்த நாடகக் கலைஞர்கள் தொழில் முறை கலைஞர்கள் அல்லர். நாடகம் தொடங்கும் முன்பு ஓரிரு நாட்களுக்கு முன்பு நடிகர்கள் விரதம் இருக்க வேண்டும். நாடகம் முடிந்த பின்பு நடிகர்கள் கோவில் பூசையில் கலந்து கொள்ள வேண்டும். இந்த நாடகத்தில் பயன்படுத்தப்படும் விநாயகர் முகமூடி புனிதமாக கருதப்படுகிறது. மேடையில் திரைச்சீலை கட்டியதும் நரசிம்மர் கோவிலில் பூசை நடக்கும். பின் மேடையில் பூசை நடக்கும். நாடகத்தில் ஆரம்பத்தில் தோன்றும் கோமாளி மும்மூர்த்திகளின் ஒட்டுமொத்த உருவமாக கருதப்படுகிறார்.

பொன்னர்சங்கர் சகோதரர்களின் வரலாற்றை நினைவு கூறும் முறையில் நடத்தப்படும் பொன்னர் சங்கர் கூத்து சடங்கியல் ரீதியாகவே காட்டப்படுகிறது. இது கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சி, சேலம் போன்ற மாவட்டங்களில் கோவில்களிலும் பெரிய சாண்டி அம்மன் கோவில்களிலும் நிகழ்கிறது.

இது தொழில்முறைக் கலைஞர்களால் நடத்தப்படுவது என்றாலும் இந்த நடிகர்கள் தெய்வத்தன்மை உடையவர்களாக கருதப்படுகின்றனர். கலை நிகழ்வில் குன்றுடையார் குழந்தை மெலும் நிகழ்ச்சியில், பார்வையாளர்கள் தொட்டில், தேங்காய், பழம் போன்றவற்றை நேர்ச்சையாக கொடுக்கின்றனர்.

பெரிய காண்டியம்மன் தபசு காட்சியில் படுகளம் நிகழ்வு ஆகியன சடங்கு தன்மையுடன் நடக்கிறது. கூத்துத் தம்பத்தில் பெரியகாண்டி வேடதாரி திருநீறு வழங்குவது சடங்காகவே காட்டப்படுகிறது. விழாவின் பார்வையாளர்கள் நாடக நிகழ்வின்போது அருள் ஏறியவராய் இறந்தவர் போல் நடிப்பார்கள். பூசகர் அவர்களின் மீது நீர் தெளித்து எழுப்புவார்கள். இது நாடகமல்ல சடங்கு என்பதை நினைவுபடுத்திக் கொண்டிருப்பது இக்கலையின் சிறப்பு.

அங்காள பரமேஸ்வரி கோவிலில் மாத சிவராத்திரி விழாவில் ஊர் சுடுகாட்டில் பகலில் மயான கொள்ளை என்ற நிகழ்ச்சி நடக்கும். இது பெரும்பாலும் சடங்கியல் கூறுகள் கொண்டதாய் காட்டப்பட்டாலும் இதை அழகியல் கூறுகள் கொண்ட கலையாகவே எடுத்துக் கொள்கின்றனர். மயானக் கொள்ளை நிகழ்ச்சியில் காளி பரமேஸ்வரன் வேடந்தாங்கி நடிப்பவர்கள் சடங்கு நிகழ்த்துபவராகவும் கலை நிகழ்த்துபவராகவும் ஒரே போக்கில் கருதப்படுகின்றனர்.

தென் மாவட்டங்களில் அம்மன் கோவில்களிலும் மாடன் கோயில்களிலும் நிகழும் வில்லுப்பாட்டு என்ற கலை உரையாடல் பாட்டு, இசை என்று நிகழ்கிறது. இது 300 ஆண்டுகள் பழமையானது. வழிபடப்படும் தெய்வங்களைப் பற்றிய கதைகளைப் பாடல் வழி நிகழ்த்தி காட்டுவது இதன் தாத்பரியம்.

இக்கலை நிகழ்வில் ஆரம்பப் பூசை, சாமி ஆடுபவரின் அருளைக் கூட்ட பாடப்படும் வரத்துப்பாட்டு ஆகியன இதன் சடங்கு தன்மையை உணர்த்தும். சாமியாடியவரின் அருளைக் கூட்டுவதற்குப் பாடகரின் பாட்டு அவசியம் என்னும் நம்பிக்கை ஒரு காலத்தில் ஆழமாக இருந்தது; இப்போது குறைந்து வருகிறது.

தர்மபுரி மாவட்டம் குறும்பர் மக்கள் நடத்தும் வீரபத்திர சாமி ஆட்டம் சிவ வழிபாடு தொடர்பானது. இது பெரும்பாலும் மாரியம்மன், அல்லியம்மன், ஜக்கம்மா, அங்காளம்மா, ஒட்டாளம்மன் கோவில்களில் நடக்கிறது இதற்குரிய பின்னணி இசைக் கருவிகள் பம்பை, மேளம், தோல், பறை ஆகியன இந்த ஆட்டத்தில் 50 பேர் வரை கலந்து கொள்கின்றனர் இதில் புராணக் கதைகளைச் சடங்கு கூறுகளுடன் நிகழ்த்தி காட்டுகின்றனர்.

வாசாப்பு நாடகம் வட மாவட்டங்களில் நிகழ்கிறது. இது கத்தோலிக்கர்களின் கலை. ஈஸ்டர் திருவிழாவில் தொடங்கி பத்து நாள் நிகழும் போர்ச்சுகீசியர் செல்வாக்கும். தெருக்கூத்தின் செல்வாக்கும் உடையது. 500 ஆண்டுகள் பாரம்பரியம் உடையது. இக்கலையின் பாடுபொருள்கள் இயேசுவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு போன்றன. இந்த நாடக நிகழ்வுகள் நம்பிக்கையும் சடங்குகளும் கலந்தவை.

வாசகப்பா நம்பிக்கையின் அடிப்படையில் நிகழ்த்தப்படும் கலை ஒவ்வொரு வாசகப்பா நாடகத்திற்கும் ஒவ்வொரு நம்பிக்கை உண்டு. ஆக்னேஸ் அம்மா வாசகப்பா நடத்தினால்

பெரியம்மை நோய் வராது. சுகமான பிரசவத்திற்கு மருகரிது அம்மா வாசகப்பா நடத்த வேண்டும். அந்தோணியார் வாசகப்பா பேய்த் தொல்லைகளிலிருந்து ஊரைப் பாதுகாக்கும் இந்த நாடகம் நடத்தினால் மழை பெய்யும், நடத்தாவிட்டால் ஊருக்கு கெடுதல் இதுபோன்ற நம்பிக்கைகள் சடங்குகளுடன் இரண்டறக் கலந்துள்ளன.

வாசகப்பா நடிகர் இறந்துவிட்டால் அவரை அடக்கம் செய்யும்போது அவரது ஒப்பனை உடையைக் குழியில் போட்டு வாசகப்பா பாடி அடக்கம் செய்கின்றனர். நாடகத்தின் பாடுபொருளுக்குரிய புனிதரின் ஸ்வரூபத்தை மேடையின் வலது புறம் வைத்து வழிபடுவர். இந்த உருவத்தை வாகனத்தில் கொண்டுச் செல்வதும் உண்டு. நாடகம் முடிந்த பின்னர் கலைஞர்களும் பார்வையாளர்களும் கோவிலுக்குச் செல்ல வேண்டும் என்பது நியதி.

திருநெல்வேலி மாவட்டம் குலசேகரப்பட்டினம் முத்தாரம்மன் கோவிலில் புரட்டாசி நவராத்திரி விழாவில் புராண சமூக வேடங்களை தாங்கி ஆடும் வழக்கம் சமீப காலமாக பெருகி வருகிறது. கடற்கரையில் நிகழும் இந்த ஆட்டத்தில் எல்லா ஜாதியினரும் கலந்து கொள்கின்றனர். வேண்டுதலுக்காகவும் இந்த ஆட்டம் ஆடப்படுகிறது. இந்த வேடமும் ஆட்டமும் கோவில் சடங்குகளில் ஒன்று என்று கருதுகின்றனர். இந்த வேடம் புனைந்தவர்கள் யாசகம் பெற்று கிடைத்த பணத்தில் ஒரு பகுதியைக் கோவிலுக்கு கொடுக்கின்றனர்.

சடங்கு சார்ந்து நிகழும் கலைகளைப் போல சடங்கு சார்ந்த இசைக்கருவிகளும் உள்ளன. இவற்றைப் புனிதமுடையவையாகவும் தெய்வீகத் தன்மை உடையவையாகவும் நம்புகின்றனர். இந்த இசைக் கருவிகள் உருவானதற்குத் தொன்மங்கள் உள்ளன. மற்ற நாட்டார் இசைக்கருவிகளிலிருந்து இவை வேறுபடும் இடமும் இதுதான்.

இந்த இசைக்கருவிகள் இல்லை என்றால் சடங்குகள் முழுமை அடையா. இவற்றின் தோற்றம் பற்றி கதைகள் உண்டு. இக்கருவிகளைச் செய்யும் போது கூட விரதம் இருந்து செய்ய வேண்டும் என்ற நம்பிக்கை உண்டு.

உடுக்கு தொன்மையான இசைக்கருவி. செவ்வியல் புராணங்கள் உடுக்கு பற்றிய கதைகளைக் கூறினாலும் நாட்டார் மரபில் இந்த இசைக் கருவிகள் தனி இடத்தைப் பெற்றுள்ளன. தொன்மையான இந்த இசைக்கருவி பேய் ஓட்டுதல், குறி சொல்லுதல் போன்ற நிகழ்வுகளில் இயக்கப்படுகிறது. உடுக்கின் தாளமுறை சொல்கட்டு எனப்படும். இது மந்திரங்களின் சப்தங்களுக்கு ஒப்பானது என்கின்றனர்.

உறுமி அல்லது தேவதுந்துபி என்னும் இசைக்கருவி தேவராட்டத்திற்கு உரியது. விலங்குகள் உறுமுவது போல் ஒலி எழுப்புவதால் இது உறுமி எனப் பெயர் பெற்றது. இது இருமுக தோலிசைக் கருவி. இது பற்றி தெலுங்கு பேசும் சில்வர் ஜாதியினரிடம் வழக்கில் ஒரு கதை உண்டு. சிவன் பார்வதியின் திருமணத்தின்போது அரம்பையர்கள் ஆடுவதற்குப் பின்னணியாக இசைப்பதற்கு துந்துவி உருவாக்கப்பட்டது என்பது அந்தக் கதை.

உறுமியை நாரதரும் நந்தி தேவரும் அடிக்க முடியவில்லை. அப்போது பூக்கட்டி பண்டாரம் ஜாதியினர் இதை அடித்தார்கள். இது தொடர்பான செய்திகள் இந்த இசைக்கருவியைச் சடங்கு சார்ந்ததாகக் குறிப்பிடுகின்றன.

கணியான் ஆட்ட கலைக்குரிய மகுடம் இசைக்கருவியைப் பற்றிய கதை சுடலைமாடன் வில் பாட்டில் வருகிறது. இது சிவனின் மகுடம் தேவியின் காதணி என அடலை மாடன் வில் மாட்டு கூறும் கணியன் ஆட்டக் கலையில் மட்டுமல்ல கைவெட்டுச் சடங்கிலும் திரளை வீசுதல் சடங்கிலும் பேயாட்டம் அம்மனாட்டம் போன்றவற்றிலும் மகுடம் சடங்கும் பொருளாகவே இசைக்கப்படுகிறது.

பஞ்ச வாத்தியங்களில் ஒன்றான திமிலை என்னும் இசைக்கருவி நாட்டார் தெய்வ வழிபாட்டு மரபில்: தெய்வத்தை எழுப்புதல், வரவழைத்தல் தீய ஆவிகளை விரட்டுதல் என்னும் காரணங்களுக்காக அடிக்கப்படுகிறது. இது முழுதும் சடங்கு சார்ந்த இசைக்கருவி.

நந்துன்னி என்ற இசைக்கருவி களமெழுத்தும் பாட்டும் கலை நிகழ்வின்போது முக்கிய கலைஞர் இயக்கிப் பாடுவார். இந்தக் கருவி வயலின் போன்ற அமைப்புடையது. இதன் நரம்பு பேசின் நாறு வள்ளி என்னும் கொடியிலிருந்து தயாரிக்கப்படுவது கணிகர் என்னும் மலைவாழ் மக்களின் சடங்குகளிலும் நந்துன்னி இசைக்கப்படும்.

வில்லிசை கலைக்குரிய வில் என்னும் இசைக்கருவியைப் புனிதமாக கருதுகின்றனர். வில், கதிர் நாண் முனைக்குப்பி, மணிகள் ஆகிய பகுதிகள் கொண்டது. சில கோவில்கள் இந்த இசைக்கருவி பூசைப் பொருட்களுடன் வைக்கப்படுகின்றன. விழா காலங்களில் மட்டும் இதை பயன்படுத்துவர்.

சேர்வையாட்டத்திற்குரிய சேர்வை என்னும் இசைக்கருவி புனிதமானது. குரும்பர்களின் கோவில் சடங்குகளில் பேய் ஓட்டும் நிகழ்ச்சியில் சேர்வை இசைக்கருவி முக்கியமாக அடிக்கப்படுகிறது. இந்தக் கருவியைப் புனிதமாக கருதுகின்றனர்.

சேர்வை இசைக்கருவி கோவில்களில் இருக்கும் சேர்வையாட்ட நிகழ்ச்சிக்கோ பேய் ஓட்டும் சடங்கிற்கோ அதை வெளியில் எடுப்பர். அப்போது அதற்குக் கற்பூரம் காட்டி வழிபாடு எடுப்பார்கள், அதை மீண்டும் வைக்கும் போது கற்பூரம் பொருத்தி காட்டி வணங்க வேண்டும்.

சடங்கு சார்ந்த கலைகளில் மட்டுமல்ல கலை நிகழ்த்தும் கருவிகளும் ஒப்பனைச் சாதனங்களும் புனிதமாகவே கருதப்படும். கண்ணன் ஆட்டத்திற்குரிய உறி கட்டும் கூடு அல்லது சட்டம் கிருஷ்ணன் கோவிலிலேயே இருக்கும். ஆட்டம் ஆரம்பிக்கும் முன்பு உறி கூட்டுக்கு பூசை செய்து வணங்கிய பின்பு அதை அலங்கரிப்பர். பின்னர் கயிற்றில் தொங்க விடுவர்.

கழுவேற்ற விழா கூத்துக்குரிய கழுமரம் சடங்குப் பொருளாகவே கருதப்படுகிறது. இதன் மேல் காத்தவராயன் ஏறி நின்றதும் மேலும் அது புனிதம் பெறுகிறது. கழுமரம் புனிதமாக கருதப்படுத்துவதால் பக்தர்கள் அதை வழிபடுகின்றனர்.

காவடி ஆட்டத்திற்குரிய காவடியும் சடங்கு சார்புடையதாக புனித பொருளாகப் கருதப்படுகிறது. தொழில் முறை காவடியாட்ட கலைஞர்கள் கூட காவடியை முருகனின் அடையாளமாகக் கருதுகின்றனர். அதனால் காவடியைத் தூக்கி ஆடும்போது சட்டை போடுவதில்லை.

மயானக் கொள்ளை சடங்கு நிகழ்வில் அங்காளம்மனின் சாம்பல் உருவமும் பிற பொருள்களும் புனிதமானவையாகக் கொள்ளப்படுகின்றன. அந்தச் சாம்பலை விளை நிலத்தில் புதைத்தால் விளைச்சல் பெருகும், தீய சக்திகள் அணுகாது என்னும் நம்பிக்கை உண்டு.

களம் எடுத்தும் பாட்டும் கலை நிகழ்வில் பயன்படுத்தப்படும் வண்ணப் பொடிகளும் காளியின் மார்பு பகுதியில் வைக்கப்படும் பச்சரிசியும் புனிதப் பொருளாகக் கொள்ளப்படுகின்றன. இந்தப் பச்சரிசியில் கஞ்சி வைத்துக் கொடுத்தால் குழந்தை பெற்ற பெண்களுக்குப் பால் சுரக்கும் என்னும் களத்தில் வரையப்பட்ட ஓவியத்தின் வண்ணப் பொடிகள் பேய் பயத்தைப் போக்கும் என்றும் நம்புகின்றனர்.

நாட்டார் கலைகளில் பார்வையாளர்களின் பங்கு முக்கியமானது. இது பெரும் அழகியல் உணர்ச்சியின் வழி உருவானது அல்ல. உள்ளுணர்வு, நம்பிக்கை சார்பாக உருவானது. நிகழ்த்துனருக்கும் பார்வையாளர்களுக்கும் இடையே உள்ள உறவு கலைகளின் மரபை காத்தல் உன்னதத்திற்குச் செல்லுதல் ஆகியவற்றிற்குத் துணை புரிவதாகும்.

கலையின் சில பகுதிகளைப் பார்வையாளர்களே நடத்தி முடிக்கின்றனர். சில கலைகளில் பார்வையாளர்கள், பக்தர்கள், நடிகர்கள் எல்லோருமே ஒரே நேர்கோட்டிலே நிற்பார்கள். வீதியே சில சமயம் நாடக மேடையாகிவிடும். அப்போது அது வழிபாட்டின் கூறாகவே கொள்ளப்படும்.

பார்வையாளன் கலை நிகழ்வை முழுவதும் அறிந்தவனாக இருப்பான். கலை நிகழ்த்தப்படும் போது பார்வையாளன் கலை சார்ந்த சடங்கில் நம்பிக்கை இருப்பதால் கடந்த காலத்திற்குச் சென்று விடுவான். பார்வையாளன் தான் பார்க்கும் கலையில் அழகியலை விட உள்ளுணர்வையும் காலம் காலமாய் வந்த நம்பிக்கையையும் தேடிக் கண்டடைவதையே விரும்புகிறான். இது நாட்டார் கலைகளின் அம்சங்களில் ஒன்று.

இவை போன்ற காரணங்களால் சடங்கியல் சார்ந்த கலைகள் இன்றும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.



நந்தன்: தீச்சுவாலையிலிருந்து மீண்டெழுந்த சீர்திருத்தவாதி

கோ.ரகுபதி

பிரித்தானிய ஏகாதிபத்தியம் உருவாக்கிய நவீன அரசியல் பொருளாதார கட்டமைப்பு சமூக சீர்திருத்த இயக்கங்கள் முகிழ்க்க வித்திட்டது. ஹிந்து அசமத்துவ ஜாதிய படிநிலைக் கட்டமைப்பால் ஒடுக்கப்பட்டுச் சுரண்டப்பட்ட ஆதிதிராவிடர்களும் பிராமணரல்லாதோரும் சமூக விடுதலை பெறுவதற்காக முன்னெடுத்த இயக்கங்கள், பிரித்தானிய ஏகாதிபத்தியத்திலிருந்து இந்தியர்கள் விடுதலை பெறுவதற்காக முன்னெடுக்கப்பட்ட இயக்கங்களோடு தவிர்க்க இயலாமல் முரண்பட்டன.

ஹிந்து மதத்தின் தீண்டாமைக் கொடுமையால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படுகின்ற ஆதிதிராவிடர்கள், இசுலாம், கிறிஸ்துவ மதங்களைத் தழுவினர். இதுகாறும் ஹிந்து மதம் மறுத்தவற்றை பிரித்தானிய ஏகாதிபத்தியம் கொடுத்ததால் அவர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை ஆதிதிராவிடர்களும் பிராமணரல்லாதோரும் எடுத்தனர்.

பெரியார் தலைமையிலான சுயமரியாதை இயக்கம் பார்ப்பனியத்தை விமர்சித்து பகுத்தறிவை முன் வைத்தது. இச்சூழல் ஹிந்து அசமத்துவ ஜாதிய சமூகத்தைச் சீர்திருத்த வேண்டிய கட்டாய நிலையை உருவாக்கியது. சமூகச் சீர்திருத்தத்தைப் பரவலாக்க உரைநடைகளும் படைப்புகளும் வெளியாயின.

இவற்றில் ஆதிதிராவிடர் அல்லாதோரின் படைப்புகள் நம் கவனத்தை ஈர்க்கின்றன. இ.ராமசாமிக் கோனாரின் விகட வேடிக்கைப் பறையன் பாட்டு, நா.கு.அ.அ.அப்துல் ரஹிமானின் அற்புத நூதன பறையன் பாட்டு, எஸ்.ஜி. கிட்டப்பா, கே.பி.சுந்தரம்பாளின் நந்தனார் அல்லது

நாளைப்போவார் சரித்திரம், க.அ.ஆறுமுகனின் ஹரிஜன சேவா கீதம், வெ.ஆ.குமரய்யா நாடாரின் தீண்டாமை ஒழிப்புச் சிந்து, கே.அப்துல் சுகூரின் தீண்டாச் சிறுவனின் தியக்கம், தீண்டாமைப் பேய், ஆர்.எஸ்.ராஜலக்ஷிமியின் ஜாதி பேதம் ஒழிக போன்ற கலையிலக்கியப் படைப்புகள் கதைகளாகவும் கவிதைகளாகவும் ஆதிதிராவிடர் அல்லாதோர் படைத்தனர்.

இவ்வகையில் ஆனந்தபோதினி இதழில் சில சிறுகதைகளும் கவிதைகளும் வெளியாயின. இவற்றில் சில சிறுகதைகள் பூர்வக்குடிகளிலிருந்து ஆன்மீகவாதிகள் உருவாக்கப்பட்ட நிலைக்கு மாறாக அவர்களைச் சீர்திருத்தவாதிகளாகப் படைத்தன. இக்கட்டுரையில் இரு சிறுகதைகள் பேசப்படுகின்றன.

கி.ரா.ஆதிகுடி, நந்தன் ஓர் பஞ்சமன் – என்ற சிறு கதையைப் படைத்தார். இக்காலத்தில் நந்தன் என்ற தலைப்பில் கலையிலக்கியப் படைப்புகள் சில வெளியாயின. இவை ஆன்மீகவயப்பட்டு சிவனைத் தரிசிக்கச் சென்று இறுதியில் ஜோதியில் கலந்ததைச் சித்தரிக்கின்றன. நந்தன் ஓர் பஞ்சமன். தலைப்பைக் கண்டதும் ஏற்கெனவே வழக்கமாகச் சித்தரிக்கின்ற புராண/வரலாற்று நாயகனாக நந்தன் என்ற ஊகத்துக்கு இடம் தந்தது. ஆனால் கதையின் ஆரம்பப் பகுதியிலேயே அது நிகழ்கால நாயகனாகப் படைத்திருப்பதை உணர முடிகிறது.

இக்கதை பூவலூர் கிராமத்தைச் சேர்ந்த பிராமணருக்கும் பறையருக்குமான முரண்களைச் சித்தரிக்கிறது. வர்ணாசிரம அதர்மத்துக்கும் சமத்துவத்துக்குமான முரண்களைப் பேசுகிறது. பறையர்கள் சமத்துவ உரிமையைக் கோருவதை ஏற்க இயலாத பிராமணர்கள் அதைத் தடுக்க முயற்சிக்கின்றனர்.

இக்கதையின் கதாநாயகன் நந்தன் பறையர் சமூகத்தைச் சேர்ந்தவன்; கல்வி கற்றவன். பறையர் தெருவில் பள்ளிக் கூடம் நிறுவி பறையர்களுக்குக் கல்வி கொடுத்து, மாட்டிறைச்சி உண்ணக்கூடாதெனக் கட்டுப்பாடு விதித்து, சுகாதாரத்தைக் கற்றுக்கொடுத்து, அவ்வூர்க் கோயிலில் சாமி தரிசனம் செய்ய வேண்டுமெனக் கோரும் நிலையை நந்தன் உருவாக்குகிறான். இதனால் பிராமணர்களுக்கு நந்தன் மீது கோபம் ஏற்படுகிறது. அவ்வூர்ப் பறையர்கள் கோயிலில் தரிசனம் செய்ய வேண்டும் என்று கூறியதால் அதைத் தடுக்கும் திட்டத்தில் அடியாட்களை பிராமணரான வேதாசலமையர் ஏற்பாடு செய்கிறார்.

பறையர் இளைஞர்கள் சுமார் முப்பது பேர்கள் குளித்து, நெற்றியில் திருநீரு பூசி, தேங்காய்ப் பழங்களுடன் சாமி கும்மிட சென்றபோது அப்பிராமணர் அதை எதிர்த்தார்; மீறினால் காவலர்களிடம் ஒப்படைப்பார் என எச்சரித்ததால் பறையர்கள் சாமியைக் கும்பிட முயற்சிக்கவில்லை. மேலும் குடிபோதையில் இருந்த பிராமணரின் அடியாட்களில் ஒருவர் பறையர்களிடம் வம்பு செய்தான்.

ஆனால் இவ்விளைஞர்கள் பொறுமை காத்தனர். மீண்டும் அவர்களுக்குள் தகராறு ஏற்படவே இரு பிரிவினர்களும் மோதினர். இதில் அந்தப் பிராமணரும் பறையர்களுக்கு எதிராகத் தன் கம்பை வீசியதால் அவரைப் பறையர்கள் நான்கு பக்கங்களிலும் சூழ்ந்தனர். இந்நேரம் புலியைப் போல் பாய்ந்து வந்த நந்தன் அவர்களுக்கு இடையே சென்று சண்டையிடுவதை நிறுத்தக் கோரினான். நந்தன் மீது மரியாதையாய் இருக்கும் பறையர் இளைஞர்கள் அதை நிறுத்தினர். இதைக் கண்ட பிராமணரின் அடியாட்களும் திகைத்தனர். நந்தன் பறையர் இளைஞர்களைச் சேரிக்கு அழைத்துச் சென்றான். இச்சம்பவத்தால் கோபமடைந்த அப்பிராமணர் திருவிழாவுக்கு வந்த காவலர்களிடம் பறையர் இளைஞர்களான நந்தன், வேலன், கந்தன் ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்யக் கூறினார். அவர்களைக் காவலர்கள் பிடித்துச் சென்றனர். இதற்காக பொய்ச் சாட்சிகள் உருவாக்கப்பட்டு நீதிமன்றத்தில் அவ்விளைஞர்களுக்கு ஆறுமாதங்கள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

சிறையிலிருந்து வெளியே வந்த நந்தன் ஒருநாள் மாலைப் பொழுதில் பூவலூர் ஆற்றுக்கரையோரம் உலாவிக்கொண்டே பறையர்களை முன்னேற்றுவது குறித்துச் சிந்தித்தான். அப்போது அக்ரஹாரத்தின் கடைசியில் செந்நிற வெளிச்சம் தோன்றி பின் கொழுந்துவிட்டெரியும் பெரிய தீச்சுடராக மாறியதைக் கண்டு அங்குச் சென்றான் நந்தன். நந்தனைச் சிறையிலடைக்கக் காரணமாயிருந்த வேதாசலமையரின் மாளிகைதான் தீப்பற்றி எரிந்தது. அவர் தன் ஆட்களைக் கொண்டு

விலையுயர்ந்த பொருட்களை வெளியேற்றினார். அவரின் மனைவி தன் ஒரே மகள் பங்கஜம் வீட்டுக்குள் அகப்பட்டாளோ எனப் பதறினாள். வீட்டு வேலைக்காரியின் தவறுதலால்தான் தீப்பற்றியது என்றும் பிராமணரின் மகள் வீட்டுக்குள் அகப்பட்டாள் என்பதையும் வேலைக்காரி வழி அறிந்து அவளைக் காப்பாற்றுமாறு வேதாசலம் அங்கிருந்தோரிடம் மன்றாடினார்; அவர்கள் மறுத்தனர். அப்போது தற்செயலாக அங்கு நின்ற நந்தனைக் கண்டு அவனிடம் தன் மகளைக் காப்பாற்றுமாறு கெஞ்சுவார். மனம் இளகிய நந்தன், "சாமி நான் தீண்டத்தகாதவனாயிற்றே" எனக் கூறியதும் ஆபத்துக்குப் பாவமில்லை எனக் கூறுவார் வேதாசலம். இதைக் கேட்டு புலிபோல் பாய்ந்து தீக்குள் சென்று அவரின் மகளைக் காப்பாற்றுவார். பின் நந்தனை அப்பிராமணர் தேடுவார். தீக்காயமடைந்த நந்தன் உயிருக்குப் போராடுவதை அறிந்து தன் சொந்த செலவில் மருத்துவரால் அவனைக் காப்பாற்றுவார். சுமார் ஆறுமாத காலங்களில் நந்தன் குணமடைவான்.

இந்நிகழ்வுக்குப் பின் பூவலூருக்கு மூன்று மைல் தொலைவில் வேதாச்ரமம் என்ற ஆசிரமம் உருவாக்கப்பட்டு அங்கு நூல் நூற்றல், தச்சுவேலை உட்பட கைத்தொழில்கள் பறையர்களுக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டது. இவற்றுக்குக் காரணம் வேதாசலமையரே! இது நந்தனின் செயலால் ஏற்பட்டது. பின் இராஜகோபாலாச்சாரியரின் சொற்பொழிவுகளைக் கேட்டார் வேதாசலம். இதன் பின் மனமாறிய வேதாசலம் பறையர்களின் முன்னேற்றத்துக்காகத் தன் சொத்துக்களை அர்ப்பணித்தார். பறையர் குழந்தைகளை இலவசமாகப் படிக்க வைத்தார். தண்ணீர் உட்பட அடிப்படைத் தேவைகளை அவர்களுக்குச் செய்துகொடுத்தார். நந்தனின் ஆலோசனையில் பேரிலேயே ஆசிரமத்தை ஆரம்பித்து அங்குத் தங்கி பறையர்களோடு உண்டார். நந்தனின்றி ஒரு வேலையும் இல்லை என்ற நிலை உருவானது.

அம்பேத்கர் தன் எழுத்துகளில் ஆதிதிராவிடர்களைப் பார்த்து பாவப்படுவதை ஏற்க மறுப்பார். மேலும் திருத்தப்பட வேண்டியது பிராமணர்களும் ஜாதி ஹிந்துக்களுமே எனக் கூறுவார். தந்தை பெரியாரும் இந்நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். ஆதிதிராவிடர்களின் அவல நிலைக்கு அவர்களின்"வறுமை, உணவுப் பண்பாடு, அசுத்தம்" போன்றவை காரணமல்ல. ஏனென்றால், உழைப்பும் உற்பத்தியும் சேறு சகதியோடு பின்னிப் பிணைந்தது. அசைவ உணவுப் பண்பாட்டின் ஒரு வகை மாட்டுக்கறி. அசைவ உணவுப் பண்பாட்டில் ஒவ்வொரு குழுக்களுக்கும் வேறுபாடு உண்டு. பிராமணர்களும் மாட்டுக்கறி உண்டதை டி.என்.ஜா தன் நூலொன்றில் ஆதாரங்களோடு நிறுவுவார். ஆதிதிராவிடர்களின் வறுமை என்பதும் அவர்களால் உருவாக்கப்பட்டதல்ல. மிகக் கடுமையாக உழைத்து உற்பத்தியில் ஈடுபடும் அவர்களுக்கு சொத்துடமையை மறுத்து, அவர்களைச் சுரண்டிய நிலவுடமையாளர்களே முக்கியக் காரணம். இதன் பொருள் என்னவென்றால், அம்பேத்கர் கூறுவதுபோல், சீர்திருத்தப்பட வேண்டியது பிராமணர்கள் என்பதாகும். இது பிற ஆதிக்க ஜாதியினருக்கும் பொருந்தக்கூடியது.

இந்நிலைக்கு மாறாக, காந்தியின் "ஹரிஜன சேவை" ஆதிதிராவிடர்களைச் சீர்திருத்தும் முயற்சியில் இறங்கியது. இப்பின்னணியில், கி.ரா.ஆதிகுடி, நந்தன் ஓர் பஞ்சமன் சிறுகதையை வாசித்தால் இது ஆதிதிராவிடர்களின் அவலத்துக்குக் காரணமாயிருந்த பிராமணர்களைச் சீர்திருத்த முற்பட்டதை அறியலாம். இக்கதையின் படைப்பாளியின் ஜாதி அடையாளத்தை அறிய இயலவில்லை. இது அவசியம் இல்லை என்ற போதிலும், அக்காலத்தில் பிராமணர்களில் சிலரிடம் தங்களைச் சீர்திருத்தும் எண்ணம் தோன்றியது கவனத்துக்குரியது. பிராமணப் பெண்ணான பாலம்மாள் தான் நடத்திய சிந்தாமணி இதழில் எழுதிய தேச சேவை என்ற சிறுகதையில் தங்களைச் சீர்திருத்தும் எண்ணம் தென்படுவதைக் காணலாம். ஆதிகுடியின் நந்தன் ஓர் பஞ்சமன் பிற சீர்திருத்தக் கதைகளிலிருந்தும் உரைநடைகளிலிருந்தும் வேறுபட்டது.

முதலில், அக்காலந்தொட்டு இன்றுவரை நந்தன் என்றால் "ஆன்மீகவயப்பட்டு ஜோதியில் கலந்தவன்" என்ற சித்திரம் உருவாக்கப்பட்டுள்ளது. அச்சுப் பண்பாடு தோன்றிய காலம் முதல் இன்றுவரை இப்போக்கு நீடிக்கிறது. இச்சித்திரத்தை மாற்றும் முயற்சியை அக்காலத்திலேயே இச்சிறுகதை முயற்சிக்கிறது. இது நந்தனைச் சீர்திருத்தவாதியாக மாற்றுகிறது. தான் பிறந்து வளர்ந்த பறையர் சமூகத்தின் அவலத்தைக் கண்டு அவர்களை முன்னேற்ற

முயற்சிக்கிறான் நந்தன். பொருளியல், பண்பாட்டு நிலைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதோடு சமத்துவ உரிமைகளுக்காகவும் குரல்கொடுக்கும் இளைஞனாக நந்தன் போராடுகிறார்.

அதேசமயம் இதை அடைவதற்கு வன்முறைப் பாதையை நந்தன் தேர்ந்தெடுக்கவில்லை. இதை வேதாசலமையர் பறையர் இளைஞர்களால் சூழப்பட்டு தாக்குதலுக்கு ஆளாகும் நிலையில் அதைத் தடுப்பதன் வழி காட்சிப்படுத்துகிறார். இதனால், நந்தன் துணிச்சலற்றவன் என்று பொருளல்ல. ஏனென்றால், வேதாசலமையர் தாக்குதலுக்கு ஆளாகும் நிலையிலும் அவர் வீடு தீப்பற்றி எரியும் தருணத்திலும் நந்தன் "புலிபோல்" பாய்கிறான். தீயில் பாய்ந்து வேதாசலமையரின் மகளைக் காப்பாற்றும் நந்தன் இறந்துவிடும் சூழலைக் கூறுகிறார். இந்நிகழ்வை வாசிக்கிறபோது ஆன்மீக நந்தன் ஜோதியில் கலந்த கதையை நினைவுபடுத்துகிறது.

ஆனாலும், ஆதிகுடி, நந்தனை ஜோதியாக்க விரும்பவில்லை; ஒருவேளை ஜோதியானால் அவன் தெய்வம் ஆக்கப்படுவான். வேதாசலமையரும் பிராமணராகவே இருப்பார்; அவரிடம் சீர்திருத்தம் ஏற்படாது. ஆனால், உயிருக்குப் போராடி மீண்டெழச் செய்து; இதற்கு வேதாசலமையரைத் துணைபுரியச் செய்து அவரிடம் சீர்திருத்தம் ஏற்பட வித்திடுகிறார் ஆதிகுடி. இதனால் இதுகாறும்வரை தான் செய்த தவறுகளைத் திருத்திக் கொள்கிறார் வேதாச்சலமையர்.

பறையர்களுக்குக் கல்வியையும் கைத்தொழில்களையும் கற்றுக் கொடுக்கிறார். தன் சொத்துக்களை அவர்களுக்கு அர்ப்பணம் செய்கிறார். அவர்களோடு ஆசிரமத்திலேயே தங்கி உண்கிறார். அதாவது, ஹிந்து ஜாதி கட்டமைப்பில் எவையெல்லாம் கூடாதெனத் தடுக்கப்பட்டனவோ அவற்றையெல்லாம் செய்கிறார். இக்கதையில் சீர்திருத்தப்படுவது பிராமணர் ஆவார். அவர் வழி பறையர்களின் முன்னேற்றத்துக்கான திட்டம் செயல்படுத்தப்படுகிறது அதுவும் நந்தனின் வழிகாட்டுதலில்!

நந்தனைப் போல வேட்டுவக் குடியைச் சேர்ந்த கண்ணப்பர் சிவபக்தியில் ஆன்மீகவாதியாக உருமாறியதைக் கூறுவர். இந்தியா என்றால் ஹிந்துக்கள் வசிக்குமிடம் என்ற நிலைமாறி தற்போது இசுலாமியர், கிறிஸ்துவர் என வெவ்வேறு மதத்தினரும் வசிப்பதாகவும் இவர்கள் ஹிந்து மதத்திலிருந்து மதம் மாறிய "தீண்டத்தகாதோர்" என்றும் இச்சமூகத்தைச் சேர்ந்த கண்ணப்பன் என்ற கதாபாத்திரம் வழி 'கண்ணப்பன் ஓர் ஹரிஜன இளைஞன்' என சிறுகதை படைக்கப்பட்டது.

தென்னாப்பிரிக்காவில் பெற்றோருடன் வசித்த கண்ணப்பன் தன் தாய்நாட்டில் திருமணம் முடித்து இங்கேயே வசிக்க ஆசைப்பட்டு இந்தியாவுக்கு வந்து இங்கிருக்கும் ஹிந்து மதத்தின் ஜாதியையும் தீண்டாமையையும் கண்டும் வருந்துகிறான் கண்ணப்பன். அதேசமயம் பிரித்தானியர் இந்தியர்கள் மீது கடைபிடிக்கும் நிறப்பாகுபாட்டைக் கண்டு, "எளியாரை வலியார் வாட்டினால், வலியாரைத் தெய்வம் வாட்டுகிறது. தம்முடம் வாழும் மக்களை மதித்து விலக்கு இந்திய நாட்டார்க் கிதுவும் வேண்டும்; இதற்கு மேலும் வேண்டும்" என சொல்லும் கண்ணப்பன் இந்தியாவைவிட்டு வெளியேறி கப்பலில் பர்மாவுக்குச் செல்கிறான். வழியில் நிறப்பாகுபாட்டுக்கு எதிராக வெள்ளையரைக் கொன்ற குற்றத்திற்காக அந்தமான் சிறையில் அடைக்கப்படுவதாகக் கதை முடிகிறது.

இச்சிறுகதை, "ஹிந்து"க்களான தீண்டத்தகாதோர் இசுலாம், கிறிஸ்துவ மதங்களுக்கு மாறுவதைத் தடுக்கும் நோக்கில் சமூச் சீர்திருத்தத்தைப் பேசுகிறது. நந்தனும், கண்ணப்பனும் ஆன்மீகவாதிகளாய் உருமாறுவதற்குப் பதிலாகச் சமூகச் சீர்திருத்தக் கதாநாயகர்களாக படைத்திருப்பது இவ்விரு கதைகளின் தனிச்சிறப்பு. சமூகச் சீர்திருத்தத்துக்குத் தேவை ஆன்மீகம் அல்ல; சீர்திருத்தவாதிகள் என்பது இக்கதைகளின் சாராம்சம்.



நடுநாட்டு வட்டாரச் சொலவடைகள்

கண்மணி குணசேகரன்

நடுநாட்டில் எங்கும் பழமொழி என்கிற சொல்லாடல் தான். பேச்சுவழக்கில் 'உவமானக் கதை'என்று சொல்வதும் உண்டு. "க்கும்... இந்த ஒவமானக் கதைக்கி ஒன்னும் கொறைச்ச இல்ல." எனப் 'பழமொழி'க்காரர்களை முன்னவிட்டு பின்னால் முக்கி உதட்டைப் பிதுக்குபவர்கள் நிறைய இருக்கிறார்கள். ஆனபோதும் பேச்சுக்குப் பேச்சு பழமொழிகளும் எடுப்புக்கதைகளுமாக கலந்துகட்டி அடிக்கிறவர்களுக்கு ஊரில் 'வெவரம் தெரிஞ்சவர்' என மரியாதை உண்டு.'கதை கத்தது' என்கிற பெருமையும்தான்.

பழமொழிகள் நம் மூதாதையரின் அவர்தம் வாழ்க்கையில் கண்டடைந்த அனுபவங்களின் பிழிவுகள். ஒரு உரையாடலின் ஒட்டுமொத்த நோக்கத்தையும் பொசுக்கென்று நாலைந்து வார்த்தைகளில் அதன் உச்சத்தை உணர்த்திவிட வல்லவை. எனது நடுநாட்டுச் சொல்லகராதியை வெகுவாகக் கவனப்படுத்தியதில் பிற்சேர்க்கையிலிருக்கிற பழமொழிகளும் மரபுத் தொடர்களும் முக்கியமானவை.

'ஆயிப்பேட்டை சந்தைக்கு போய்ப் பார்த்தால் தெரியும் அங்கு இரண்டு நாள் தங்கிப் பார்த்தால் தெரியும்' என ஒரு பழமொழி. தொலைவில் மகிழ்வு தோற்றம் காட்டும் ஒரு இடத்தை அல்லது நபரை, அருகில் சென்று பார்க்கையில் அங்கத்திய சூழல் வேறுமாதிரியாக தோன்றும். கூடவே இரண்டு நாட்கள் தங்கினால் நமக்கு முற்றிலும் எதிர்மாறான எண்ணத்தை உண்டாக்கிவிடும். ("அவ செவுப்புத்

தோல பாத்து ஏமாந்துறாதடா! ஆயிப்பேட்டை சந்தைக்குப் போயி பாத்தா தெரியும். அங்கு ரெண்டுநாள் தங்கிப் பாத்தாத் தெரியும்.')

ஊரில் இரண்டுபேர் (வாய்ச்)சண்டைப் போட்டுக்கொள்கிறார்கள். ஒருவர்க்கொருவர் சளைக்காமல் 'போனவந்த' கதையைப் பேசி கைக்கலப்பாய் மாறிவிடுகிற நிலை. யாராவது ஒருவர் ஒதுங்கிப்போனால் இப்போதைக்குச் சிக்கல் தீர்ந்துவிடும். 'இந்தாப்பா ரெண்டுபேரும் இப்பிடியே பேசிக்கிட்டு இருந்தா என்னா அர்த்தம். ஒன்னு பில்லுக்கட்டுக்காரன் ஒதுங்கணும். இல்ல வைக்கக் கட்டுக்காரன் ஒதுங்கணும்.' (ஒரு வரப்பில் எதிரும் புதிருமாக புல்கட்டுக்காரனும் வைக்கோல் கட்டுக்காரனுமாக இருவர் வருகிறபோது எவராவது ஒருவர் இறங்கினால்தான் போகமுடியும். இருவருமே இறங்காமல் நின்றுகொண்டிருந்தால் கடைசி வரைக்கும் சுமையோடு நின்றுகொண்டே இருக்கவேண்டுமென்கிற உண்மையைச் சொல்வது.)

பொதுவழக்கில் 'சிறுதுளி பெருவெள்ளம்' என்பார்கள். இதையே நடுநாட்டுப் பகுதியில் 'குளத்துக்கு மழை குந்தாணி குந்தாணியாக பெய்யாது' பழமொழியாகும். (பெரும் கொள்ளளவைக் கொண்ட குளமாக இருந்தாலும் நிரம்புவதற்கு கல்உரல் அளவிலான பெரிய பெரிய துளிகளாக மழை பெய்யாது. சிறுசிறு துளிகளாக பெய்துதான் நிரம்பும் என்பதைச் சொல்வது.)'வல்லவன் வாய்க்கால் வெட்டினால் தண்ணி வடக்காலயும் பாயும். தெற்காலயும் பாயும்' – நிலத்தில் எளிதாக தண்ணீர் பாய்கிறமாதிரி வாய்க்கால் இழுக்கிற தேர்ந்த வேலைக்காரனின் திறமையை சொல்லும் பழமொழியும் இருக்கிறது.

'கூத்தாடி கிழக்கேப் பார்த்தான். கூலிக்காரன் மேற்கே பார்த்தான்' என்பது தெருக்கூத்து ஆடுபவர்கள் எப்போது பொழுது விடியுமென கிழக்கைப் பார்த்தவண்ணமாய் இருப்பதைச் சொல்லும் பொதுவான மொழி. அதேசமயம் 'கூத்துல பெரியவர்களும் கும்பலில் சிறியவர்களும் இருக்கக்கூடாது'' என்பது நடுநாட்டில் வழங்குவது. (தெருக்கூத்துக் குழுவில் முதியவராக இருப்பவர்களையே தலைப்பு வேஷம் கட்டச் சொல்வார்கள். வயதான வேடத்தில் நாடகத்தின் கதையை தொடங்கி வைப்பதும் பிறகு நாடகத்தை முடித்து வைக்கவுமென

இயற்கையாக நிகழ்கிற ஒன்றை தமது பத்தினித் தனத்தால் நிகழ்ந்ததாக காட்டிக்கொள்ளும் மிகைச் சாதூர்யத்தை சொல்கிற பழமொழியும் உண்டு.
பத்தினின்னாலும் பத்தினி.
எங்க அம்மா அப்பிடியாப்பட்ட பத்தினி.
சித்திரை வைகாசியில காயும்னா காயும்.
ஐப்பசி கார்த்தகையில பேயும்னா பேயும்.
இதுவல்லாமல் கார்த்திகையை வைத்துச் சொல்கிற பொதுமொழி கார்த்திகைக்குப் பிறகு மழையில்லை. கர்ணனுக்குப் பிறகு கொடையில்லை.

அவரது பங்கு மிகக் குறைவானதாகவே இருக்கும் என்றாலும் விடிய விடிய கட்டியிருக்கிற வேஷத்தோடு குந்தியிருப்பது சிரமமாக இருக்கும். அதுபோலவே ஒரு கும்பலில் வயதில் சிறியவர்களைத்தான் 'கடைக்குப் போ, தண்ணி மொண்டா' என சில்லறை வேலைக்கு அடிக்கடி அனுப்புவார்கள்.)

சாமிக்கு மொட்டைப் போடுகிறேன் என்று வேண்டிக்கொண்டவள் அவள். அவளைத் தடுத்துவிட்டுப் போய் நம்ப ஆள் அவளுக்காக தான் மொட்டை போட்டுக்கொள்கிறான். இப்படி மற்றவருக்காக வலிந்து தமக்கு பொருத்தமில்லாத ஒரு வேலையைச் செய்கிற சூழலைச் சொல்வதுதான். 'குறத்தி மாதமாய் இருக்கிறாள் என்று குறவன் மருந்து சாப்புட்டானாம்'. 'குறவன் சாடை குறத்திக்குத்தான் தெரியும்' என்பது வேறு.

தண்ணீர் சிக்கனம் மற்றும் உணவில் மிகத் திட்டமாக உப்பைப் பயன்படுத்துகிற நுட்பத்தில் பெண்ணின் திறமையை காண்கிற பழமொழி 'நீருல பாரு சீர. உப்புலப் பாரு துப்ப.' இன்னும் மென்மையான நடையில் பெண்கள் வீட்டில் நடக்கவேண்டும் என்பதை சொல்வதற்கும் 'அதிர அடிய வைச்ச குதிரு குடி ஒடிடும்' எனப் பழமொழி உண்டு.

'ஏணி, தோணி, பள்ளிக்கூடத்து வாத்தியார், நாரத்தங்காய் ஊறுகாய்' ஏணி எல்லோரையும்

ஏற்றிவிட்டாலும் அதே இடத்தில்தான் நின்றுகொண்டிருக்கும். தோணியும் அப்படித்தான் எல்லோரையும் அக்கரைக்கும் இக்கரைக்கும் ஏற்றிக்கொண்டுபோய் விட்டுவிட்டு ஆற்றிலேயே நின்றிருக்கும். ஆசிரியரும் எல்லோருக்கும் சொல்லிக்கொடுத்து அடுத்த வகுப்பிற்கு அனுப்பிவிட்டு அதே வகுப்பில் குந்தியிருப்பார். நாரத்தை ஊறுகாய் எல்லாவற்றையும் செரிக்க வைத்துவிட்டு அதுமட்டும் செரிக்காமல் ஏப்பம் வரும்போதெல்லாம் மணம்காட்டும். நாரத்தையின் இதே தன்மையை சொல்வதுதான் 'நாரத்தங்காய் ஊறுகாயும் நல்லோர் செய்த உதவியும் நெஞ்சு மேலேயே இருக்கும்.'

அற்பச் செயல்களைச் செய்து அதனால் மேன்மையடைய முடியாது என விளக்குவது 'மயிரச் சுட்டு கரியாவாது. பனி பேஞ்சி கொளம் ரொம்பாது.'(முடியை நெருப்பில் காட்டினால் பொசுங்கித்தான் போகும். கரியாகாது. எவ்வளவு கடுமையாக பனிபெய்தாலும் குளத்தை நிரப்பிவிடமுடியாது.)இன்னும் கூடுதலாய் சொல்வது 'பிஞ்சி வத்திப் புளியாவாது.'

'எத்தரை போர் ஆனாலும் ஆகலாம் சித்திரைப் போர் ஆகாது.' அதாவது சித்திரை மாதத்தில் மட்டும் அக்கம்பக்கத்து வீடுகளில் சண்டை போடக் கூடாது. மற்ற மாதங்களில் விவசாய வேலைகள் நிலத்தில் இருக்கும். ராத்திரிக்கு சண்டையென்றாலும் விடிந்ததும் கொல்லைக்கு களைவெட்ட, அறுப்பு அறுக்க என ஓடிவிடுவார்கள். மனசிலிருக்கிற கோபம் வேலைத் தலையில் ஆறிவிடும். நிலம் பயிரற்று



வெறுமனேக் கிடக்கிற சித்திரை மாதத்தில் எந்த வேலையும் இருக்காது. வீட்டில் தொடர்ந்து சும்மாவே இருக்கும்போது ராத்திரிக்கு நடந்த சண்டை அதே கூரத்தோடு 'கோழி போச்சி கொக்குப் போச்சி' என்று காலையிலும் தொடர்ந்து அடிதடி வம்பு வழக்கில் கொண்டுபோகும்.

உலகின் மோசமான பத்துக் களைகளில் ஒன்றாக ஆட்டாங்கோரை என்னும் கோரைப்புல் வகையாகும். கிழங்கிலிருந்து துளிர்த்து மிக வேகமாக வளரக்கூடியது. நன்றாக கொத்தி அலசியபடி களைவெட்டிக்கொண்டு போனாலும் சிறிது நேரம் கழித்துத் திரும்பிப்பார்த்தால் வெட்டிய மெனையில் கோரையின் துளிர் மஞ்சள் ஊசியாய் தலைக்காட்டும். போலவே ஒரு குடும்பத்தில் பருவப் பெண்பிள்ளைகளின் வளர்ச்சி என்பது சரசரவென நாளொருவண்ணம் பொழுதொருமேனியாக இருக்கும். இதைத்தான் 'கோரைப் பில்லும் குமரிப்பெண்ணும் குனிஞ்சி நிமிர்றதுக்குள்ள வளர்ந்துடும்' என்பார்கள்.

காதல் என நம்பி பையன்களின் பின்னால் போய் சின்னப்படுகிற வயசுப்பெண்களின் அவலத்தைச் சொல்வதாய் ஒருவரின் உண்மை முகம் அறியாது பழகும் பரிதாபத்தைச் சுட்டுவது'பையன் சேதி தெரியாம குட்டி செடி செடியா சுத்தினாளாம்.'

சித்திரை வைகாசியில் எப்போதும் வெயில் மிகுந்த கோடைகாலம். அதுபோன்றே ஐப்பசி கார்த்திகையில் லேசாக 'மப்பு' புரண்டாலும் உடன் மழைவரும். இப்படி இயற்கையாக நிகழ்கிற ஒன்றை தமது பத்தினித் தனத்தால் நிகழ்ந்ததாக காட்டிக்கொள்ளும் மிகைச் சாதூர்யத்தை சொல்கிற பழமொழியும் உண்டு. 'பத்தினின்னாலும் பத்தினி. எங்க அம்மா அப்பிடியாப்பட்ட பத்தினி. சித்திரை வைகாசியில காயும்னா காயும். ஐப்பசி கார்த்தைகையில பேயும்னா பேயும்.' இதுவல்லாமல் கார்த்திகையை வைத்துச் சொல்கிற பொதுமொழி'கார்த்திகைக்குப் பிறகு மழையில்லை. கர்ணனுக்குப் பிறகு கொடை யில்லை.'

அந்த காலத்தில 'வைப்பு' மகளிர் வீட்டிற்குச் செல்கிற பெருந்தனக்காரர்கள் அவர்களுக்கு தேவையான கம்பு நெல் தானியங்களை களத்திலிருந்தே நேரடியாக அனுப்பிவிடுவார்கள்.

கம்பு, நெல் போன்றவை சரியான பட்டத்தில் விதைத்து அறுவடை செய்தால் மட்டுமே இவை சாத்தியம். குறிப்பாக கம்பு ஆடிப் பட்டம் விதைத்து புரட்டாசியில் அறுவடைசெய்தல்வேண்டும். பட்டம்தவறி விதைத்து கார்த்திகை மாதம் கம்பு விளைகிற மாதிரியிருந்தால் மழையால் விளைச்சலும் சரியாக இருக்காது. மீறி விளைந்தாலும் கம்பு மணிகள் மழையில் ஊறி சாணிக்கம்பாக போய்விடும். இதனால் 'வைப்பு'க்கு கம்பு படியளப்புக்கு வழியில்லாமல் அவர்கள் வறுமையில் வாட நேர்ந்துவிடும். இதைத்தான் 'கார்த்திகை மாசத்துல கம்பு வெளைஞ்சா கூத்தியா வாயில மண்ணு' என முன்னோர்கள் சொல்வார்கள்.

'தேரோட போச்சி திருநாளு தாயோட போச்சி பொறந்த வூடு' என்கிற பழமொழியும் உண்டு. திருவிழா எத்தனை நாட்கள் நடந்தாலும் அதன் முதன்மை நிகழ்வான தேர் இழுப்பது முடிந்ததும் உடன் திருவிழா முடிவுக்கு வந்துவிடும். அதுபோன்று ஒரு பெண்ணின் தாயானவள் இறந்துபோய்விட்டால் அவளின் பிறந்தவீட்டு உறவு வலுவிழந்துவிடும் என்பதாகும். இப்படி தேர் இழுக்கும் நிகழ்வை வைத்துச் சொல்கிற இங்கத்திய மற்றுமொரு பழமொழி கோணாங்குப்பம் திருநா மூணே முக்கா நாழி.

நடுநாட்டில் இப்படி பழமொழிகள் மட்டுமல்லாமல் பழமொழிகளாய் உருவகம் கொள்கிற மரபுத்தொடர்களும் நிறைய உண்டு. நன்கு காய்க்கிற மரத்தில் ஒட்டுண்ணித் தாவரம் படர்வதுபோல் நல்லவர்களுடன் வந்து சேர்ந்த கெட்ட சகவாசத்தைச் சொல்வதாய் 'நெல்ல மரத்துலு பில்லொளி பாஞ்ச மாதிரி', தனி ஒருவராக பாம்பை எளிதாக அடித்துவிடலாம், ஆனால் நான்குபேர் சேர்ந்து அடிக்கும்போது குறியாக எவரும் அடிக்காமல் பாம்பு தப்பித்துவிடுவதுபோல் பலரும் சேர்ந்து குறைபாடான வேலையை செய்கையில் சொல்வதாய் 'நாலு பேரு அடிச்ச பாம்பு மாதிரி'', கணவனை இழந்த கைம்பெண் கருவுற்றால் பிறரின் ஏளனத்துக்கு ஆளானதான ஒரு அவல நிலையைச் சொல்கையில் 'கம்னேட்டி புள்ள வாங்கன மாதிரி'', இறந்து இரத்தம் உறையத் தொடங்கியவுடன் தலையிலிருந்து மெல்ல இறங்குகிற பேனைப் போல் வசதி வாய்ப்புக் குறையத் தொடங்கியவுடன் விட்டு அகல்கிற நட்பை சொல்வதாய் 'செத்த ஆட்டில் உண்ணி நழுவுகிறமாதிரி', என ஏராளமாய் இருக்கின்றன.

ஆனாலும் பழமொழிகளும் மரபுத் தொடர்களும் மக்கள் பேசப்பேசத்தான் அதன் இழை அறாமால் அடுத்த சந்ததிக்குப் போய்ச் சேரும். கொடுவாய்ப்பாக இயந்திர உலகில் எல்லாம் சரசரவென மாறிக்கொண்டிருக்கின்றன. புழுதி தேய்ந்த வட்டார மொழியில் பேசுகிற மண்ணின் பாலகர்கள் காலவாதியாகிக் கொண்டிருக்கிறார்கள். நின்று நாலுவார்த்தைப் பேசுவதற்குக்கூட நேரமில்லாத புதிய தலைமுறைகள் வட்டார மொழியில் பேசுவதையே கௌவரக் குறைச்சலாய் கருதுகின்றன. நுனிநாக்கு ஆங்கிலத்தில் பழமொழிகளும் மரபுத்தொடர்களும் எவ்வளவு காலம் ஓடுமென்பது கேள்விக்குறி.

இதற்கிடையில் இப்போதையப் பட்டிமன்றத்தார்கள் வேறுபடுத்துகிறார்கள். அவரவரவர்க்கு தகுந்தாற்போல் பழமொழியை கைத்தட்டுகளுக்காக பிய்த்துப் பிய்த்துக் கொள்கிறார்கள். 'தனக்கும் தனக்கும் என்றால் பிடுங்கும் களைக்கொத்தும்' என பழமொழியை மாற்றுகிறார்கள். அந்த காலத்தில் குடியானவன் கோவணம்தான் கட்டியிருப்பான். களைவெட்டும்போது அண்ணாக்கயிற்றில் தொற்றிக்கொண்டிருக்கும் அது மேலும் தளர்ந்து உருவிக்கொள்வதாய்தான் கிடக்கும்.

கரம்பாய் கிடக்கிற தனது கொல்லையில் குந்தி களைவெட்டுகிற அவனுக்கு இந்த அவிழ்கோலம் கண்ணுக்குத் தெரியாது. ஆவென்று சமயத்தில் அதுவும் கூட களைவெட்டுகிற மாதிரி மண்ணில் விழுந்து இழைந்துகொண்டு போகும். உயிரும்பயிருமாயிருக்கிற அந்தச் சூழலைப் பார்த்துதான் 'அப்படிப்' பழமொழியைச் சொல்லி யிருக்கிறார்கள். நாகரீகப் படுத்துவதாய் மாற்றிச் சொல்லி பழமொழியை அனர்த்தம் செய்கிறார்கள். அது தவறு. பழமொழியை அதனதன் வாக்கிலியே அது எந்த நிலையிலிருந்தாலும் அசகுலையாமல் சொல்லி 'அந்த' அழகை அனுபவிப்பதுதான் சரி.



நாகரத்தினமும் முத்துபழநியும்

யுகபாரதி

அடைய முடியாத ஒன்றின்மீது வைக்கும் அன்புதான் பக்தியோ எனும் கேள்வி எனக்குண்டு. ஆண்டாளும் மீராவும் கண்ணனிடம் கொண்ட காதல், பக்தியாகப் பார்க்கப்படுகிறது. இறுதியில் அவர்கள் இருவருமே கண்ணனைச் சேர்ந்தனர் என்னும் குறியீடு, பக்தியையும் காதலையும் இருத்திவைக்க எழுதப்பட்ட கட்டுக்கதைகளே எனினும், அக்கதைகளின் வழியே கடத்தப்படும் உணர்வுகள் மலர்ச்சிக்குரியவை. கட்டுக்கதைகள் எனச் சொல்வதால் நான் அக்கதைகளைச் சந்தேகிப்பதாக அர்த்தமில்லை. இன்றைய சூழலில் அக்கதைகளில் வரும் சம்பவங்களையும் காட்சிகளையும் உணர்ந்து உள்வாங்கும் சாத்தியமின்மையால் அவ்விதம் சொல்கிறேன்.

அக்கதைகள் தெள்ளத் தெளிவாக நம்பிக்கைகளை விதைக்கின்றன. ஆழ்ந்த ஈடுபாடும் பிரியமும் வைத்தால் அடைய முடியாத எல்லைகளையும் எட்டிவிடலாமெனக் காட்டுகின்றன. ஆன்மிக இலட்சியவாதத்தை முன்வைக்கும் அக்கதைகள், காதலையும் காமத்தையும் கலந்திருப்பதால் எனக்குப் பிடிக்கின்றன. பெங்களூர் நாகரத்தினம் அம்மாள், தியாகராஜர் மீது கொண்ட அன்பினால் வாழ்வு மொத்தத்தையும் அவருக்கே அர்ப்பணித்திருக்கிறார். தேவதாசி மரபில் வந்த அவர், இறுதிக்காலங்களில் தியாகராஜரை ஆகப்பெரும் நாதக் கடவுளாக நிறுவ உடல், பொருள், ஆவி அத்தனையையும் அளித்திருக்கிறார். வெறும் இசைக் காதலென்று அந்த அம்மையின் உணர்வுகளை ஒதுக்கிவிட முடியாது.

இராமநாமத்தில் தியாகராஜர் கொண்டிருந்த காதலிலும் பக்தியிலும் கொஞ்சமும் குறையில்லாததே அந்த அம்மையாரின் தியாகராஜ பக்தியுமென்று சொன்னால் பிழையில்லை. இளவயதில் தந்தையாலும் பின்னர் அடைக்கலம் கொடுத்த அனைவராலும் கைவிடப்பட்ட ஒருவர், தியாகராஜரும், அவர் இசையுமே எல்லாமுமென்று வரித்துக்கொண்டதில் வியப்பில்லை. இருக்கும்போது அவர் சேவடிகளுக்குச் சேவை செய்ய முடியாமல் போனாலும், சமாதியான தியாகராஜருக்கு மண்டபமும் உற்சவமும் எழுப்பிய பெருமை அவருடையது.

ஒரு பெண் ஓர் ஆண்மீது எப்போது அளவற்ற காதலையும் பக்தியையும் வைக்கிறாள் என்பதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. கனிந்த பிரேமையும், கலப்படமற்ற பிரியங்களும் ஒன்றிணையும் மிக உயர்ந்த நிலை அது. ஆண், பெண்மீதோ பெண், ஆண்மீதோ கொள்ளும் காதலைக் காமத்தின் விளைவாகவும் எதிர்பார்ப்பாகவும் மட்டுமே பார்ப்பவர்கள் உண்டு. ஆனால், நாகரத்தினம்மா தியாகராஜர் மீது வைத்திருந்ததோ பார்வைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட ஒன்று. அவர் தன்னைத் தியாகராஜ சுவாமிகளின் தாசியென்றே அறிவித்துக் கொண்டவர்.

ஆந்திராவிலும் தமிழ்நாட்டிலும் 1,235 இசைக் கச்சேரிகள் செய்தவர். இசையே வாழ்வென்று ஆகிவிட்ட பின்னும், சமூக மாற்றத்திற்காக உழைக்கத் தயங்காதவர். குரல் மிளிரச் சமஸ்கிருதத் துதிப்பாடல்களை 1929இல் நடந்த சனாதன தர்ம மாநாட்டில் பாடியவர். பன்மொழிப் புலமையும் கலைகளில் ஈடுபாடும் மிக்க அவர், சங்கீதம் பிழைக்க வேண்டுமானால் ஆர்மோனியப் பெட்டியை ஆற்றில் தூக்கி எறிய வேண்டும்' என்றிருக்கிறார். தென்னக இசையின் ஆதாரக் கருவியாக ஆர்மோனியத்தை ஏற்காத காலத்தில் அவர், ஊரெங்கும் தம்புராவைச் தூக்கிச் சுமந்த பெருமாட்டி. தம்புராவை மீட்டியபடி அவர் காட்சிதரும் ஒரு புகைப்படம், மிகப் பிரசித்தம். 'ஒரு காலத்தில் என்னுடைய கண்ணழகைக் காண மைசூர் மகாராஜாவே வருவார். அப்படிப்பட்ட என்னைத் தியாகராஜர் எப்படியோ மாற்றிவிட்டார்' என்று மரணத்திற்குச் சிலநாள் முன்பு வரை தன்னைச் சந்திக்க வந்தவர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

தியாகராஜரே சரணமென்று அந்த அம்மையார் நினைக்கவும் நெகிழவும் இசையைத் தவிர வேறெதுவும் காரணம் இருப்பதாகத் தெரியவில்லை. தன்னையும் தன் வாழ்வையும் மீட்ட இசைக்குக் கைம்மாறாக எதையேனும் செய்ய விரும்பியே தியாகராஜரின் காலடி பதிந்த திருவையாற்றை நோக்கி நகர்ந்திருக்கிறார். அங்கே, மண்மூடிக் கிடந்த தியாகராஜரின் சமாதியைத் தேடிக் கண்டுபிடித்து, மைசூர் ஆஸ்தான வித்துவான் கிருஷ்ணப்பாவின் விருப்பத்தை நிறைவேற்ற தஞ்சை அரசரின் உதவியை நாடியிருக்கிறார்.

தியாகையருக்கு இசைக் கோவில் எழுப்பி, 1925இல் கும்பாபிஷேகம் நடத்த அவர் பட்டபாடுகள் கொஞ்சமல்ல. அக்கோவில் பணிக்காகச் சொந்த வீட்டையும் பாடிச் சம்பாதித்த பொன், பொருள் எனச் சேமித்த சகலத்தையும் செலவழித்திருக்கிறார். வருமான வரியை அதிகமாகக் கட்டிய முதல்பெண் என்றறியப்பட்டிருந்த அவர், தியாகராஜ பிரேமையால் வாடகை வீட்டுக்கும் வழியில்லாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்.

திருவையாற்றை அடுத்துள்ள பெரும்புலியூர் என்னும் குக்கிராமமே என் அப்பா பிறந்த ஊர் என்பதால், எப்போதெல்லாம் அவ்வூருக்குப் போகிறேனோ அப்போதெல்லாம் நாகரத்தினம்மா உண்டாக்கியுள்ள சந்நிதியையும், அருகே அமைந்துள்ள அவர் சமாதியையும் வணங்காமல் திரும்பமாட்டேன். தியாகராஜரின் இசை ஓர் உச்சமென்றால், தியாகராஜருடன் தன்னையே புதைத்துக்கொண்ட அந்த அம்மையின் அதீத அன்பும் பக்தியும் இன்னொரு உச்சம். கோவிலுக்கு நிலம் ஒதுக்குவதிலும், கூடி ஒரு காரியத்தை நிறைவேற்றுவதிலும் எப்பவும்போல் இரண்டு கட்சிகளாகப் பிரிந்து நின்ற பிராமணர்கள், அவரை நீதிமன்றம் வரை அலைக்கழித்து அவமானப்படுத்தியது தனிக்கதை.

தியாகராஜரைப் பிராமணக் குடுவையில் அடைத்து, எப்படியாவது தம்மையும் தம் லௌகீகத்தையும் காப்பாற்றிக்கொள்ள முனைந்த அவர்கள், நாகரத்தினம்மாவை நாக்கூசும்

சொற்களால் கேவலப்படுத்தியிருப்பதைக் கேட்டால் இதயமே சுக்கலாகிவிடும். இசையை உரிமை கொண்டாடி, அது தமக்கே உரியதென்றும் இன்னபிறர் கேட்பதும் பாடுவதும் தீட்டென்றும் வாதிட்ட ஈனத்தனங்களை முறியடிக்கப் பெரும் போராட்டத்தைத் தமிழ்ச் சமூகம் நடத்தியிருக்கிறது.

தேவதாசி குலத்தில் பிறந்த ஒருத்தி, தியாகராஜரை தெய்வப் புருஷராக்க மேற்கொண்ட முயற்சிகளை அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. தமக்குப் பாத்தியமான இடத்தில் வந்து வேற்று சாதிப் பெண், கூரை வேய்கிறாளே எனக் குமைந்து அவர் ஆற்றிவந்த காரியங்களை வீழ்த்த பல்வேறு நெருக்கடிகளை மேற்படியார்கள் கொடுத்திருக்கின்றனர். தியாகராஜர் இசையை விரும்புகிற, இசையை வழிபடுகிற எல்லோருக்குமானவர். அவரைத் தம் சமூகத்திற்கு மட்டுமே உரியவராகக் கருதுபவர்கள் இன்னமும் இருக்கிறார்கள். எல்லாத் தடுப்புகளையும் மீறியே தம்முள் எழும்பி நின்ற தியாகேச பக்தியை நாகரத்தினம்மா நிரூபித்து, 1952இல் இசையுடன் கலந்திருக்கிறார்.

நாகரத்தினம்மா முன்கை எடுக்காமல் விட்டிருந்தால் மார்கழி மாத இசைக் கச்சேரிகள், வருடாந்திர விழாவாகத் திருவையாற்றில் நிகழவும் தொடரவும் வாய்ப்பில்லை. பக்தியின் உச்சியில் நின்றுபார்க்கும்பொழுது அன்பு, காதல் என்பதெல்லாம் வெகு சின்னதாகத் தெரிகின்றன. இசைக்கு இத்தகைய அடையாளத்தை ஏற்படுத்திய அதே அம்மாதான், இலக்கியத்திலும் இன்னொரு எழுச்சிக்குக் காரணமானவர்.

இசைக்குக் கோவில் கட்டிக் கும்பாபிஷேகத்திற்கு வழிவகை செய்த அவர், ஓலைச்சுவடியில் ஒருவர் பார்வைக்கும் வராமல் இருந்த 'ராதிகா சாந்தவனம்' எனும் தெலுங்குக் காப்பியத்தைப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார். இன்று தெலுங்கு இலக்கியத்தின் செவ்வியல் நூல்களில் ஒன்றாகக் கருதப்படும் ராதிகா சாந்தவனம், கண்ணனுக்கும் இராதிகாவுக்கும் இடையே நிகழ்ந்த பிணக்கையும் பிரியங்களையும் சொல்வது. தகாத காதலையும் காமத்தையும் காப்பியமாக்கிய முத்துபழநி, தஞ்சாவூரைச் சேர்ந்த அரசவை நடனமாது என்பதைப் பலர் அறிந்திருக்கலாம். நடனமாது மட்டுமல்லர், மராட்டிய மன்னரான பிரதாப் சிம்ஹாவின் ஆஸ்தான நாயகியாகவும் அறியப்படுகிறார். கலைகளில் தேர்ச்சியும் பன்மொழிப் புலமையும் வாய்த்த முத்துபழநி, ஆண்டாளின் திருப்பாவையைத் தெலுங்கில் மொழிபெயர்த்தவர். அந்தப்புரத்தில் ஆடல் அரசியாகவும், அரண்மனையில் அரசனுக்கே ஆலோசனை சொல்பவராகவும் இருந்ததாகத் தெரிகிறது.

முத்துபழநி எழுதிய 'ராதிகா சாந்தவனம்' நூலைத் தெலுங்கிலிருந்து ஆங்கிலத்தில் சந்தியா மூல் சந்தாணி, 'The appeasement of Radhika / Radhika santhavanam' என்னும் தலைப்பில் மொழிபெயர்த்து பென்குயின் பதிப்பாக வெளியிட்டிருக்கிறார். ஆங்கிலத்தில் மட்டுமே வாசிக்கப்பட்ட அந்த நூல், தமிழிலும் வந்திருக்கிறது. தில்லிப் பல்கலைக்கழகத்தில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றும் முனைவர் தி. உமாதேவி பெயர்த்திருக்கிறார். காவ்யா வெளியீடாக வந்துள்ள அந்நூல், ஆங்கிலத்திற்கும் மூலமொழிக்கும் ஊறுசெய்யாமல் ஆக்கப்பட்டிருக்கிறது. 584 பாடல்களையும் உரைநடை வடிவில் உமாதேவி தந்திருக்கிறார்.

ஓரளவு பாடல்களின் அடிநாதத்தைத் தொட்டிருக்கிறார். ஓசை ஒழுங்குகளைத் தவிர்த்து, உரைநடையில் வாசித்தாலும் பாடல்களின் பதமும் அழகும் கெடாமல் வந்திருக்கின்றன. கவிதைப் பயிற்சியிருந்தால் இன்னுமே சிறப்பாகப் பெயர்த்திருப்பேன் என முன்னுரையில் தெரிவித்திருக்கிறார். ஒரு தமிழ்ப்பெண் எழுதிய தெலுங்குக் காப்பியத்தை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்குத் தருவித்த முயற்சிக்காகவே உமாதேவியைப் பாராட்டலாம். தெலுங்குச் சந்தங்களைத் தமிழுக்கேற்ப மாற்றியமைக்க வேறு எவரேனும் முயலலாம்.

இன்றுகூட, பெண் கவிஞர்கள் எழுதத் தயங்கும் பாலியல் இச்சைமிகுந்த சொற்களை 17ஆம் நூற்றாண்டிலேயே எழுதிய முத்துபழநி, காலங்கடந்தேனும் நம்முடைய கைகளுக்குக் கிடைத்திருக்கிறார் என்பது மகிழ்வுக்குரியது. பாலியல் இச்சையை வெளிப்படுத்தும்

எழுத்துமுறை, இடைக்காலத்தில் பக்தியாக மாற்றப்பட்டிருக்கிறது. காலவரையறைகளுக்கு அப்பால், ஒரு பெண்ணின் எழுத்தாகக் கவனத்தை ஈர்க்கும் முத்துபழநி, கண்ணன் – இலா – இராதிகா ஆகியோரின் காதலைக் காமம் பாரித்த வார்த்தைகளில் வடித்திருக்கிறார். பாலியல் பதிவுகளையும் மிகச் சாமர்த்தியமான சொல்லாடல்களின் வழியே கடத்தியிருக்கிறார். ஆச்சர்யமூட்டும் செய்தியே வரலாறாக மாறுகிறது.

சந்தேகமில்லாமல் முத்துபழநியை வரலாற்றை மாற்றியெழுதியவர் எனலாம். இராதிகா கண்ணனின் அத்தை. இலாவோ மாமன் மகள். கண்ணனுக்கு இலாவை மணம்முடித்து வைக்கும் இராதிகா, தன்னைவிட்டுப் பிரிந்த கண்ணனுக்காக ஏங்கிச் சரிவதையும், எதிர்பார்ப்பில் தேகம் மெலிவதையும் முத்துபழநி தயக்கமில்லாமல் எழுதியிருக்கிறார். கண்ணன் இராதிகாவிடமும் இலாவிடமும் கொள்ளும் காதலை 'அவளது பெருமைக்குரிய பெரிய முலைகள் / மலைகளைவிட உயர்ந்தவை / அவளது அசைந்தாடும் இடை / அசைந்து நடக்கும் யானையைவிடச் சிறந்தது / அவளது குழிந்த தொப்புள் / ஆச்சர்யமூட்டும் புங்கை மரம் போன்றது / இத்தனை அழகுடைய அவள் / கலிங்க மன்னனான என்னை இயல்பாக ஆட்கொண்டாள்' என்பதுபோல எழுதும் அவர், எங்கேயும் விரசத்தின் விளிம்பைக்கூடத் தொடவில்லை. அத்தியந்த அன்பின், பக்தியின் சாரத்தில் நின்றுகொண்டே சலிக்காமல் எழுதியிருக்கிறார்.

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த முத்துபழநியின் பின்புலத்திலிருந்தும் அப்பாடல்களைப் பார்க்கவேண்டிய அவசியத்தைச் சந்தியா மூல் சந்தாணி தெரிவிக்கிறார். தஞ்சை நாயகி புகழ்பெற்ற அரசவைக் கணிகை என்பதும், முத்துபழநியின் தந்தை தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

தஞ்சை நாயகி, ஐயாவுயையா என்பவரின் மகனான 'முத்துயாலு'வைத் தத்தெடுத்து வளர்க்கிறார். ஐயாவுயையாவைச் சகோதரனாகப் பாவித்த தஞ்சை நாயகி, பிரதாப் சிம்ஹாவின் அந்தரங்க ஆசையைத் தீர்க்கும் பொறுப்பிலிருந்தவர். நவரசத்திலும் திறமை பூண்டிருந்த அவருக்குத் தாய்மையுணர்வு உந்தித் தள்ளியதால் முத்துயாலுவைச் சிறுவயதிலிருந்து வளர்த்திருக்கிறார். பருவ வயது வந்ததும் 'ராமவது' என்னும் பெயருடைய பெண்ணை முத்துயாலுவுக்கு மணம் முடித்தும் வைக்கிறார். அவ்வகையில் அவர்கள் இருவருக்கும் பிறந்த மகளே முத்துபழநி. பிரதாப் சிம்ஹாவின் ஆசைக்கு உரியவராகவும் இருந்த தஞ்சை நாயகி, தனக்குப் பிறகு முத்துபழநியை அவ்விடத்திற்கு நியமித்ததாகவும் தெரிகிறது. அதாவது, பாட்டியாகிவிட்ட தஞ்சை நாயகி, பிரதாப் சிம்ஹாவுக்குத் தன்னுடைய பேத்தி முறையிலான பெண்ணைத் துணையாக்கிவிட்டு, நகர்ந்துகொள்கிறார்.

சிலகாலம் பிரதாப் சிம்ஹா, முத்துபழநியின் கலையிலும் காதலிலும் திளைத்திருக்கிறார். அறிவாற்றல் மிக்க முத்துபழநியின் அன்பில் கட்டுண்டு கிடந்த அவர், ஒருகட்டத்தில் தஞ்சை நாயகியின் பக்கமே திரும்பியிருக்கிறார். தனக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் குறைந்துபோவதைக் கண்ட முத்துபழநிக்கு, தஞ்சை நாயகிமீது கசப்பும் வெறுப்பும் தோன்றியிருக்கிறது.

அந்தத் துக்கத்தையும் விம்மலையும் இணைத்தே இராதிகா சாந்தவனத்தைப் படைத்ததாகச் சொல்லப்படுகிறது. இலாவாகத் தன்னையும் இராதிகாவாகத் தஞ்சை நாயகியையும் உருவகப்படுத்தியே எழுதியதாகவும் கருதப்படுகிறது. வாழ்விலிருந்து பிறப்பதே கலையும் இலக்கியமும் என்று சொல்லப்படுவதை இத்துடன் இணைத்துப் பார்க்கலாம். காப்பியத்தை வாசிக்கும்பொழுது பெண் மனத்தின் புதிர்ப் பக்கங்களைப் புரட்டுவதுபோல் இருக்கின்றன.

'முலைகள்' எனும் தலைப்பில் நூல் வெளியிட்டதற்காக இலக்கியக் காவலர்களும், கலாச்சாரக் கங்காணிகளும் கவிஞர் குட்டிரேவதியை என்னவெல்லாம் சொன்னார்களென்று இந்த இடத்தில் நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை. காமமும் காதலும் வார்த்தையிலோ உடலிலோ இல்லை, அவை மனத்திலிருக்கின்றன. வக்கிரமும் குரூரமும் நிறைந்த ஆண்கள், இதே வார்த்தைகளை

இயல்பாகத் தம் எழுத்திலும் பேச்சிலும் பயன்படுத்துவது பிரச்சினையாக ஆவதில்லை. முத்துபழநியின் எழுத்துகளை முழுவதுமாக வாசித்தால் அவர் வெள்ளிவீதியாரையும் ஆண்டாளையும் விஞ்சக்கூடியப் பதங்களை ஆக்கி அளித்திருப்பவர் என்பதை அறிந்துகொள்ளலாம்.

தமிழிலக்கியத்தில் குறிப்பாக, சங்கப்பாடல்களின் தொடர்ச்சியை முத்துபழநியின் பாடல்களில் பார்க்க முடிகிறது. கற்பூரம் நாறுமோ/ கமலப்பூ நாறுமோ என்று ஆண்டாள் எழுதிய பதத்தை வேறு வகையான வாக்கிய அமைப்பில் தெலுங்கில் செய்திருக்கிறார். உள்வாங்கிய குறியீடுகளையும் படிமங்களையும் அப்படியே பயன்படுத்தாமல், அவருக்கே உரிய விதத்தில் வழங்கியிருப்பது தனித்துவம்.

ஒருவேளை அவர் தமிழில் எழுதியிருந்தால் இன்னமுமே சிறப்பாக அமைந்திருக்குமோ என்னவோ?. தமிழ்நாட்டில் அதுவும் தஞ்சாவூரில் பிறந்த முத்துபழநி தமிழில் எதுவும் எழுதாமல் தெலுங்கில் ஏன் காப்பிய முயற்சிவரை மேற்கொண்டார் என்பது ஆராயத்தக்கது. இராதிகா சாந்தவனத்தை வாசித்துக் கொண்டே வருகையில் முத்துபழனி பயன்படுத்தியுள்ள பல பதங்கள், எனக்கு நற்றிணையையும் குறுந்தொகையையும் நினைவுப்படுத்தின. ஆகச்சிறந்த படைப்பென்பது கிளைத்துப் பெருகும் சாத்தியங்களை உடையதென்பர். அந்தவிதத்தில் 'இல்லோன் இன்பம் காமுற்றா' எனும் குறுந்தொகை பாடல், இராதிகாவின் ஏமாற்றத்தையும் ஏக்கத்தையும் சொல்வதாகத் தெரிந்தது. ஏதோ ஒரு சரியான காரணத்தால் சந்திக்க வராமல் போன காதலியைத் தப்பிதமாகக் கற்பனை செய்துகொண்ட காதலனின் மன உணர்வைக் காட்டும் மிக அழகிய பாடல் அது.

புரிந்துகொள்வதில் ஏற்படும் பிரச்சினையால் ஒரு காதல் எப்படிப் பிரிந்தது எனச் சொல்லவந்த பரணர் 'இல்லோன் இன்பம் காமுற்று ஆஅங்கு / அரிது வேட்டனையால் நெஞ்சே காதலி / நல்லள் ஆகுதல் அறிந்து ஆங்கு / அரியள் ஆகுதல் அறியாதோயே' என்று எழுதியிருக்கிறார். அப்பாடல் மிகச்சிறிதே எனினும், அவ்வரிகளை விவரித்து மணிக்கணக்கில் பேசலாம். சங்கப்பாடல்களின் மையத்தை உள்வாங்கினால் அவற்றை வைத்து ஏராளமான கதைகளையும் நாவல்களையும் உருவாக்க முடியும். சங்கப்பாடல் வரிகளை முன்வைத்து அப்படிக் கதைகளாகப் பலர் எழுதியுள்ளனர். நா.பார்த்தசாரதியின் 'புறநானூற்றுக் கதைகள்' நூல், அவற்றில் ஒன்று. பரணரின் 'இல்லோன் இன்பம் காமுற்றா'வையும் ஒருகதையாக ஆக்கிப் பார்க்கலாம்.

வசதிமிக்க வீட்டில் காதலி வசிக்கிறாள். அவளைச் சந்திப்பதென்பது அத்தனை எளிதில்லை. காதலனோ பக்கத்து ஊரைச் சேர்ந்த மிக எளிய குடும்பத்தைச் சேர்ந்தவன். வசதி எப்படியிருந்தாலும் இருவரும் காதலிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். அடிக்கடி சந்தித்து அன்பையும் முத்தங்களையும் பரிமாறிக்கொள்ளவும் தயங்குவதில்லை. ஆனால், சில நாட்களாகக் காதலியைச் சந்திப்பதில் அவனுக்குச் சிக்கல் ஏற்பட்டுவிடுகிறது. காரணத்தைத் தெரிந்துகொள்வதற்கேனும் ஒருமுறை சந்திக்க வேண்டும்போல் ஆகிவிட, அவனும் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கிறான். அவளுடைய தோழியிடமும் தன்னுடைய ஏக்கத்தை அறிவித்தும் காண வழியில்லை. சரி, நாமே இரவில் சென்று அவளை யாருக்கும் தெரியாமல் சந்தித்துவிடுவோம் என எண்ணுகிறான்.

அதுபடி, ஊரே உறங்கிய நள்ளிரவில் ஒருவருக்கும் தெரியாமல் கிளம்பி, காதலியின் ஊர் எல்லைக்கு வருகிறான். வந்தால் காவலர்கள் ஊர் முழுக்கச் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் கண்ணில் மண்ணைத் தூவுவது ஆகாத காரியமென முதல்நாள் தப்பித்துவிடுகிறான். மறுநாள் கிளம்பிப் போகையில் காவலர்களுக்குப் பதிலாக நாய்கள் ஊரை வட்டமிட்டுக்கொண்டிருக்கின்றன. அகஸ்மாத்தாக ஒரு நாய் பார்த்து, குரைக்க ஆரம்பித்தாலும் முழுக் காரியமும் கெட்டுவிடுமென்று யோசித்து அன்றும் வேதனையுடன் திரும்பிவிடுகிறான்.

மூன்றாவது நாள், மிகக் கவனமாகக் காதலியின் வீட்டை அடைந்துவிடும் அவன், அவள் படுத்திருக்கும் அறையை ஒட்டி வளர்ந்திருக்கும் மரத்தை அடைகிறான். 'எப்போது வந்தாலும் வருகையைத் தெரிவிக்க மரத்தை உலுக்கி,

சப்தம் எழுப்பு நான் வந்துவிடுகிறேன்' எனச் சொல்லியிருப்பதால் அப்படிப் பின்னிரவுவரை மரத்தை உலுக்குகிறான். ஆனால், அவளோ எட்டிக்கூடப் பார்க்கவில்லை. எப்பவும் வசதியான வீட்டுப் பெண், இப்படித்தான் நம்பவைத்துக் கழுத்தை அறுத்துவிடுவாள்' என நினைத்து அவன் கலங்கிய கண்களுடன் அங்கிருந்து விடுபட்டுக் காதலைத் துறக்கிறான்.

காலம் சில ஓடியபின் காதலியின் தோழியிடம் இதை அவன் தெரிவிக்க, அவளும் காதலியிடம் போய் நியாயம் கேட்கிறாள். 'இரவு முழுக்க மரத்தையும் இதயத்தையும் உலுக்கிக்கொண்டிருந்தவனை நீ ஏன் கவனிக்காமல் இருந்தாய்' என்றதும், 'ஒருமுறை மரம் உலுக்கப்படும் சத்தம் கேட்டதும் எழுந்துவந்து பார்த்தேன். ஆனால், ஆள் யாருமில்லை. மரத்தைப் பார்த்தால் ஒரு பறவை இன்னொரு பறவையுடன் கிளையில் அமர்ந்து கூடிக்குலவுவது தெரிந்தது. அக்குலவலில் கிளைகள் அசைய, ஓசை வருவதாகவும் பட்டது. எனவே, என் காலடி ஓசையிலோ பார்வையிலோ அப்பறவைகள் பிரிந்துவிடுமோ என்றஞ்சி, படுக்கைக்குத் திரும்பிவிட்டேன்.

'இரண்டாவது முறையும் சத்தம் கேட்டதென்னவோ உண்மைதான், ஆனால் அப்போதும் கூடி முயங்கிய பறவைகள் ஒன்றோடொன்று விளையாடுகின்றன என்று நினைத்தே எழுந்துவந்து பார்க்காமல் விட்டு விட்டேன்' என்கிறாள். நடந்தது என்னவென்று புரியாமல் நடந்துகொண்டேனே என்ற இரண்டுவரி, காதல் உணர்வில் பொங்கி வழிவது, முன்பின் நிகழ்வை ஒப்பிட்டுப் புரிந்துகொள்வதில்தான் அன்பின் பரிபூரணத்தைப் பெறமுடியும்.

இராதிகாவை நோக்கித் திரும்பிவந்த கண்ணனின் வார்த்தைகள், 'இல்லோன் இன்பம் காமுற்றா'வுக்கு இணையானவை. நான்காவது அத்தியாயத்தில் வரும் 91ஆம் பாடல், 'திரும்பிவந்த கண்ணன், இராதிகாவின் தாமரைபோன்ற பாதங்களைக் குனிந்து வணங்கினான். அது, திரளான தேனீக்களின் சலசலப்பு போலிருந்தது' என்று முத்துபழநி எழுதியிருக்கிறார். காப்பியத்தில் இடம்பெற்றுள்ள பாடல்களில் பெரும்பகுதி, ஆண்பெண் கலவி குறித்தே அமைந்துள்ளன. பெண்களின் தாப உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தே முழுக் காப்பியத்தையும் படைத்திருக்கிறார். இலாவானாலும் இராதிகாவானாலும் கண்ணனுக்காகவே கரைகிறார்கள். கண்ணனும் அவர்கள் இருவரையும் திருப்திப்படுத்தும் முகாந்திரங்கள் எவையென்பதைக் குறித்தே சிந்திக்கிறான். இரண்டு பெண்களுக்கும் இடையே சிக்கிக்கொண்ட கண்ணன், அவர்களை மீறி எங்கேயும் செல்வதாகக் குறிப்புமில்லை. அதேபோல, இரண்டு பெண்களும் அவனை மட்டுமே எண்ணியெண்ணி நைகிறார்கள்.

காப்பியத்தின் முக்கியமான அம்சம் என்னவெனில், காமத்தைப் பிரதானப்படுத்தினாலும் அது, உள்ளத்தின் உணர்வுகளையும் பதிவுகளாக அமைந்திருப்பதுதான். இராதிகாவின் கூற்றாக 'கண்ணன், அழகான பெண்களின் இதயத்தைக் கடைபவன்' என்று முத்துபழநி எழுதியிருப்பதை இரசிக்கலாம். காப்பியத்தில் இடம்பெற்றுள்ள மூன்று காட்சிகள், முதன்மையானதாக எனக்குத் தோன்றின. அம்மூன்று காட்சிகளையும் ஆண்களால் எழுதமட்டுமல்ல, யோசிக்கக்கூட முடியாது.

பெண்ணே பெண்ணின் உணர்வுகளை எழுதும்போதுதான் உள்ளார்ந்த வெளிப்பாடுகளைப் பெறமுடியும். வார்த்தைக்கும் வாதத்திற்கும் ஆண் பெண்போலவும் பெண் ஆண்போலவும் சிந்திக்கத் தடையில்லை எனலாமே தவிர, உண்மையில் அது சாத்தியமில்லை என்பதையே முத்துபழநி நிறுவியிருக்கிறார். முதல்காட்சி, பூப்பெய்தியவுடன் இராதிகாவின் உடலுடன் தன்னுடலைப் பொருத்திப்பார்த்து இலாதேவி பொருமுவது. தன்னைவிட அழகாகவும் பூரிப்பாகவும் இருக்கும் ஒரு பெண்ணை, இன்னொரு பெண் பார்த்து அங்கலாய்க்கும் உணர்வுகளை முத்துபழநியே முதன்முதலில் பட்டவர்த்தனப்படுத்தியிருக்கிறார். உடல் சார்ந்து ஒரு பெண்ணுக்கு ஏற்படும் மனக்குறைவும் பொறாமையும் சிக்கலுக்குரியவை.

பெண்ணை வெறும் உடலாக ஓர் ஆண் பார்ப்பதற்கும் இதற்கும் வித்யாசமுண்டு. பெண்ணை இச்சைக்குரிய பொருளாக ஆண்

பார்ப்பது ஏற்புடையதில்லையென அறிவுச்சமூகம் பேசுகிற அதேநேரத்தில், ஒரு பெண்ணே தன்னுடல் குறித்து ஏற்படுத்திக்கொள்ளும் பார்வைகளை, சமூக மதிப்பீடுகளை மீறியும் முன்வைக்க முத்துபழநியால் முடிந்திருக்கிறது. 'இராதா, தன் அபரிமிதமான மார்பகங்களை / அசுரர்களை அழித்த கிருஷ்ணனுக்கு வழங்கும்போது / சிறுமி இலா புலம்புவாள் /என்னிடமில்லையேயென்று / இராதா, தன் சிவந்த இதழ்களை அவனுக்குப் பரிசாக வழங்கும்போது / சிறுமி இலா புலம்புவாள் / தன்னுடைய இதழ்களில் இத்தனை தீஞ்சுவை இல்லையே என்று' என நீளும் அப்பாடலில் உணர்வுகள் உக்கிரத்துடன் வெளிப்பட்டுள்ளன. இரண்டாவது காட்சி, இலாவை முதலிரவு அறைக்குள் அலங்கரித்து அனுப்பிய இராதிகா, தன்னுடைய காதலனை இன்னொருத்திக்குத் தாரைவார்த்துவிட்டு திரும்பும் சூழலைச் சொல்வது. ஆற்றாமையுடனும் அடங்கவொண்ணா கோபத்துடனும் அவள் திரும்புவதைக் காதலின் உச்சமென்பதா, பெண் மனத்தின் சிடுக்கென்பதா தெரியவில்லை.

இலாவும் கண்ணனும் என்னென்ன மாதிரியான கூடலில் ஈடுபடுவார்களோ எனக் கற்பனை செய்யுமிடத்திலும் இராதிகாவின் மெல்லிய பொறாமையின் குரலைக் கேட்கலாம். தன்னைவிட, வயது குறைந்த இலா, சந்தோசத்தில் திளைக்கும்போது தான்மட்டும் வெறுமையிலும் தனிமையிலும் தவிக்கிறேனே என எண்ணுகிறாள். தன்னைவிடச் சிறப்பான காதலையோ காமத்தையோ இலாவால் தரமுடியாதெனவும் யோசிக்கிறாள். இலாவைச் சயன அறைக்குத் தயாரித்து அனுப்புவதற்கு முன்பாக, கண்ணனிடம் இலாவின் உடல் குறித்தும், இலாவிடம் கண்ணனின் இச்சை குறித்தும் சொல்லும் அறிவுரைகள், பொறுப்புமிக்கவை.

அந்தப் பொறுப்புமிக்க வார்த்தைகளை ஆலோசனையாகவும் அறிவுரையாகவும் வழங்கிய இராதிகாவே, பிற்பகுதியில் இப்படியெல்லாம் யோசிக்கிறாள் என்பதுதான் காப்பியத்தின் நுட்பம். இலா பூப்பெய்திய நொடியிலேயே அவள் உடல்முழுவதையும் ஒருமுறை ஏறிட்டுப் பார்த்த இராதிகா, 'அனுபவமுள்ள எனக்கு நீயா போட்டியாகப் போகிறவள்' என நகைத்துக் கன்னத்தைக் கிள்ளிய காட்சியை இத்துடன் இணைத்துப் பார்க்கலாம்.

மிகச் சிக்கலான உளவியலைக்கூட போகிறப்போக்கில் எழுதிவிடும் முத்துபழநி, 'ஒருத்தியால் விலையுயர்ந்த ஆபரணங்களை விட்டுக்கொடுக்க முடியும் / உறவுகளையும் மதிப்புமிக்க பொருள்களையும் விட்டுக் கொடுக்க முடியும் / ஆனால், வாழ்வை விட்டுக்கொடுக்க முடியுமா' எனக் கேட்டிருக்கிறார். இந்தக் கேள்வி அவர் வாழ்விலிருந்தும் சூழலிலிருந்தும் பிறந்தவை. மீளவும் தஞ்சை நாயகியே கதியென்று போய்விட்ட, பிரதாப் சின்ஹாவை மனத்தில் இருத்தியே அவர் இவ்வார்த்தைகளை எழுதியிருப்பாரோ எனச் சிந்திக்க இடமுண்டு.

'கண்டேன் காதலை' என்னும் திரைப்படத்தில் தன் வாழ்வை மீட்டுக் கொடுத்தவளைக் காணாமல் கதாநாயகன் தேடுவதாக வந்த சூழலுக்குக் 'கண்ணிமையில் ஓர் ஆசை ஊஞ்சலிடும் வேளையில் / உண்மைகளை உள்மனது காண்பதில்லை / புன்னகையில் நான் தூங்க ஆசைப்பட்ட வேளையில் / முள் மடியில் தூங்கும் நிலை நியாயம் இல்லை / மேகம் நீங்கிப் போகும் என / நீலவானம் நினைப்பதில்லை / காலம்போடும் வேலிகளை / கால்கள் தாண்டி நடப்பதில்லை / வாழ்ந்துபோகும் வாழ்க்கை யிலே / நமது கையில் ஏதும் இல்லை' என்று எழுதியிருக்கிறேன். 'நான் மொழி அறிந்தேன்' என்னும் பல்லவி தாங்கிய அப்பாடல், வித்யாசாகரின் இசையில் வெளிவந்தது. அத்திரைப்படம், இந்தியில் வெளிவந்த 'ஜப் வி மெட்' டின் தமிழாக்கம்.

காதலின் பிரிவையும் வலியையும் சொல்லி வெளிவந்த அத்தனைப் படைப்புகளுக்கும் மேலான ஒன்றையே முத்துபழநி தந்திருக்கிறார். கண்ணனை நினைத்துக் கண்ணீர் விட்ட நிலையில், அக்கண்ணீர்த் துளிகள் இராதிகாவின் இரண்டு மார்புகளுக்கு இடையே வழிந்தோடியதாகக் கற்பனை செய்கிறார்.

அது, 'மேரு மலையிலிருந்து வீழும் நீர்வீழ்ச்சி போலிருந்தது' என்னும் இடத்தைக் கவனிக்க வேண்டும். இன்னொரு இடத்தில் இராதிகாவின் சேலை விலகலைப் பார்த்த சூரியன், மாலை

நேரத்தை நோக்கி ஓடிப்போய் ஒளிந்துகொள்கிறது என்கிறார். தாபம் மிகுந்த பெண்ணின் உடலியல் மாற்றங்கள், சோகத்திலும் சந்தோசத்திலும் ஒரே மாதிரி இருப்பதில்லை என்பதைத் திரும்பத் திரும்ப எழுதியிருக்கிறார். அந்தந்த நேரத்து உணர்வை, உடலும் உறுப்புகளும் வெளிப்படுத்துகின்றன என்பதற்காக வரிசையாக அவர் அமைத்துள்ள பதங்கள், அலாதியானவை. அத்துடன், வாழ்வை விட்டுக்கொடுக்கமுடியுமா எனக் கேட்ட அவரே, இறுதி அத்தியாயத்தில் திரும்பி வந்த கண்ணனிடம் இராதிகா காட்டும் நெருக்கத்தையும் சிந்தித்திருக்கிறார்.

இராதிகா சாந்தவனத்தின் முழுமையிலும் முத்துபழநியே தென்பட்டாலும் அவர், தன்னை இலாவாகப் பாவித்துக்கொள்கிறாரா, இராதிகாவாகக் காட்டிக்கொள்கிறாரா எனப் புரிந்துகொள்ள இயலவில்லை. இரண்டு பெண்களையும் ஒரே தளத்திலும் தன்மையிலும் வைத்தே விவரிக்கிறார்.

என்னைக் கவர்ந்த மூன்றாவது காட்சி, கண்ணன் இராதிகாவை நோக்கித் திரும்பி வந்த பின் அவர்களுக்கு இடையே நடக்கும் உரையாடல். இராதிகா தன்னுடைய காதலையும் காமத்தையும் நியாயப்படுத்தும் இடங்கள். 'வயது மூத்த, அத்தை முறையுள்ள பெண்ணான எனக்கு, உன் மீது ஏற்பட்ட பிணக்கும் பிரியங்களும் இயல்பானதே' என வாதிடும் தருணம். தன்னுடைய வாதத்தை விளங்கவைக்க இராதிகா எடுத்துவைக்கும் அடுக்கடுக்கான கேள்விகள், முத்துபழநியின் இதிகாசப் புராண அறிவைக் காட்டுகிறது.

இராதிகா கண்ணனிடம் உலகம் எண்ணுவதுபோல என்னுடைய காதல் தகாததோ தரங்கெட்டதோ இல்லையென்கிறாள். அதற்கு அவள், 'பிரம்மன், தன் மகளையே மணந்தான்/ சந்திரன், குருவின் மனைவியை மணந்தான்/ சூரியனோ நண்பனின் தாரத்தைக் கூடினான்/ கடலின் கடவுள் தன்னுடைய பேத்தியான கங்கையைச் சேர்ந்தான் / வியாசன் மைத்துனியை உறவு கொண்டான்' எனச் சொல்லி, 'இப்படி எல்லோரும் முறைதவறியே காதலையும் காமத்தையும் பகிர்ந்திருக்கையில் என்னுடைய காதல், தகாததா, கீழானதா' என்கிறாள்.

உறவென்பது தேவைகளால் அர்த்தப்படுவதே அன்றி, முறைகளால் தீர்மானிக்கப்படுவதில்லை என்றும் சொல்லாமல் சொல்கிறாள். தேவதாசி மரபில் வந்த முத்துபழநி, தன்னைப் பற்றியும் தன்னுடைய குலத்தைப் பற்றியும் சமூகம் வைத்திருந்த மதிப்பீடுகளை உடைக்கும் எண்ணத்திலேயே அவ்வாறான பிரயோகங்களைத் துணிச்சலுடன் கையாண்டிருக்கிறார். அநீதியும் நேர்மையுமற்ற தேவதாசி முறையை ஒழிக்க டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி முன்னெடுத்த போராட்டங்கள் ஒருபுறமென்றால், அதற்கு முன்பே காலத்தால் வஞ்சிக்கப்பட்ட முத்துபழநி, அம்முறைக்கு எதிராக வேறொரு வகையில் போராடியிருக்கிறார். மேலோட்டமாகப் பார்த்தால்கூட மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் ஒரு தனிப்பெண் இதற்குமேலும் தன்னுடைய எதிர்ப்புக் குரலை எழுப்ப முடிந்திருக்காது என்றே தோன்றுகிறது.

ஒருபாடல் இருபாடல் என்றில்லை, காப்பியத்தின் மொத்த பாடல்களும் இறையன்பின் இன்பத்தையே பேசுகின்றன. அதுயென்ன இறையன்பின் இன்பம் என்பவர்கள், கலவிகொள்ளும் நிகழ்வைப் பற்றி முத்துபழனி விவரித்து எழுதியுள்ளதை வாசிக்கலாம். 'புணர்ந்தவர் பிரிதல் ஆற்றா போகம் ஈன்று அளிக்கும் சாயல்' என்று சீவக சிந்தாமணியில் வருமே அதை ஒத்ததாகவே ஒவ்வொரு பாடலும் தன்னளவில் ருசி தருபவை. காந்தருவ தத்தையை நெருங்கும் சீவகன், 'பூவின் இதழ்கள்கூட சலனப்படாமல் தேனை உறிஞ்சும் தேனீக்களைப் போன்றவன்' எனச் சீவக சிந்தாமணியில் ஓர் இடம் உண்டு.

அதேபோல கலவியின்பத்தைப் பற்றி முத்துபழநியும் 'தேனீயானது மலர்களும் அறியாமல் தேனைப் பருகுவதுபோல அவன், அவள் உடலை மகிழ்விப்பான்' என்பதாக மூன்றாவது அத்தியாயத்திலுள்ள முப்பத்து எட்டாவது பாடலில் எழுதியிருக்கிறார். தேனீயைப் பற்றி அறிமுகப் படலத்திலேயே இன்னொரு உவமையும் வருகிறது. தன்னுடைய காப்பியத்தை வாசிக்கவுள்ள இலக்கியவாதிகளுக்கும் விமர்சகர்களுக்கும் விடக்கூடிய அறைகூவலாக அவ்வுவமையைச் செய்திருக்கிறார். திரும்பிவந்த கண்ணன் இராதிகாவின் காலைத் தொடும்

இடத்தில் வரக்கூடிய தேனீ உவமையை ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். எங்கேயும் தேனையும் தேனீயையும் தாமரையையும் அவர் விடுவதாகத் தெரியவில்லை.

பொதுவாக ஒரு காப்பியத்தைத் தொடங்கும்பொழுது, இக்காப்பியத்தின் மூலம் நல்லது நடக்கப்போகிறது. மும்மாரியும் முத்தமிழும் பெருகப் போகிறது என்றுதான் தொடங்குவர். ஆனால், முத்துபழநியோ 'அடுத்தவர்களை அண்டிப் பிழைக்கப் புகழ்பாடும் கவிஞர்களே, உங்களுக்கு இது கெட்ட செய்தி' என்று ஆரம்பிக்கிறார். 'தாமரையில் தேனைக் குடிக்கும் தேனீ மற்ற மலர்களின் தேனையும் அதே இன்பத்துடன் உறிஞ் சிக்குடிப்பதுபோல' என்னுடைய படைப்பையும் ஏற்றுக்கொள்ளுங்கள்' என்றிருக்கிறார். அப்படிச் சொல்லியதுடன் நில்லாமல் 'ஏ மனமே அவர்களின் விமர்சனங்களுக்கு முக்கியத்துவம் வழங்காதே' எனவும் கட்டளையைப் பிறப்பிக்கிறார். தான் எதற்குள்ளும் கட்டுப்பட்டு நில்லாதவள் மட்டுமல்லர், என் எழுத்துகள் யாருடைய விமர்சனங்களையும் எதிர்நோக்கிக் காத்திருப்பதில்லை என்றும் தெளிவுபடுத்தியிருக்கிறார். பின்னால் இப்படைப்புக்கு நேரவுள்ள அபாயத்தை முன்னமே யூகித்து எழுதியதுபோல்தான் தெரிகிறது.

கம்பீரமுடைய பெண்ணாகவும் தன் அழகிலும் ஆற்றலிலும் ஒருவித அசாத்தியப் பற்றுடையவராகவுமே முத்துபழநியை அணுகவேண்டும். தென்னகமொழிகளின் மையத்தின் தலைவர், எஸ். இராமமூர்த்தி 'என் முலைகளைப் பிடிப்பவன் கோட்டைக்கு அதிபதியாகவும், என் முகத்தைப் பார்ப்பவன் அரசனாகவும் ஆகும் தகுதியுடையவர்கள் என முத்துபழநியே கூறியதாக அறிகிறோம்' என்று குறிப்பிட்டிருக்கிறார். அச்சொற்றொடரை அவர் எங்கிருந்து பெற்றாரெனத் தெரிவிக்கவில்லை. ஆனால், மிடுக்கும் துடுக்கும் நிறைந்த தேவதாசிப் பெண்கள், அரசவையிலும் மக்கள் மத்தியிலும் பெற்றிருந்த செல்வாக்கை அக்கூற்றுகள் மெய்ப்பிக்கின்றன.

பழந்தமிழ் இலக்கியத்தின் பரிச்சயமும் பாண்டித்தியமும் உடைய பெண்கவியாக முத்துபழநி இருந்திருக்கிறார். ஒன்றை அடுக்கிக்கொண்டேபோய் இறுதியில் அவர் வைக்கும் முத்தாய்ப்புகள் இருக்கின்றனவே அவற்றை மட்டுமே தனிக் கட்டுரையாக எழுதலாம். இராதிகா சாந்தவனத்தை வாசிக்க வாசிக்க, தொல்குடி சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணின் ஆவலும் ஆத்ம விசாரமும் எத்தகையன என விளங்கிக்கொள்ள முடிகிறது.

காமத்தை ஒரு பெண் எழுதினால், அவள் சமூக மதிப்பீட்டில் என்னவாகப் பார்க்கப்படுவாள் என்ற யோசனையே இல்லாமல் எழுதிச் சென்றுள்ள வரிகள், சில இடங்களில் பதற்றத்தையும் சில இடங்களில் பரவசத்தையும் அளிக்கின்றன. நவீன கவிதைகளில் தென்படும் பூடகமோ பூச்சுகளோ துளியுமில்லாமல் வெளிப்படையாகக் காமத்தைப் பகிர்ந்திருப்பது ஆச்சர்யமளிக்கிறது. 'கீதகோவிந்த'த்தில் இராதாவின் பாதங்களைக் குனிந்து தொடும் பகுதி ஒன்றுண்டு. அப்பகுதியை எழுதும்போது ஜெயதேவரின் கைகள் நடுங்கினவாம். லோகமே கடவுளாக வழிபடும் ஒருவர், பெண்ணின் காலைத் தொட்டு வணங்குவதாக யோசித்துவிட்டோமே எனப் பதறிய ஜெயதேவர், எழுதியவற்றை அப்படியே வைத்துவிட்டு கங்கையில் குளிக்கப்போனாராம். போனவர் முங்கியெழுந்துவந்து பார்த்தால் எழுதப்பட வேண்டிய வரிகள் கண்ணனால் எழுதப்பட்டிருந்ததாம். கண்ணனே வந்து எழுதியதாகச் சொல்லப்படும் அப்பகுதி, பெண்ணுக்குக் கண்ணன் அளித்த இடத்தையும் இதயத்தையும் காட்டுவதாக ஆன்மிகப் பெரியவர்கள் பிரசங்கம் செய்வர்.

முத்துபழநி, இந்தக் காட்சியை வேறுமாதிரியாக எழுதியிருக்கிறார். அதாவது, இலாவிடமே நெருக்கத்தைக் காட்டிய கண்ணனிடம் நிலையை அறிந்துவர இராதிகா கிளி ஒன்றைத் தூதாக அனுப்புகிறாள். தூது சென்ற கிளி, இலா – கண்ணனின் படுக்கையறைக்குள் நுழைகிறது. அங்கே அவர்கள் இருவரும் இருந்த கோலத்தைப் பார்த்துவிட்டு வந்த கிளி, 'இனிமேல் கண்ணன் உன்னை நினைப்பானா என்பது சந்தேகம்' என்கிறது.

கிளி வந்துவிட்டுப் போவதைப் பார்த்த கண்ணனுக்கு, இராதிகாவின் நோக்கமும்

ஏக்கமும் பிடிபட ஓடிவருகிறான். வந்தவன், இராதிகாவைச் சாந்தப்படுத்தக் காலைத் தொடுகிறான். அவளோ கோபத்தில் கண்ணனின் தலையை ஓங்கி உதைக்கிறாள். இராதையின் காலைத் தொடுவதாக எண்ணியதே பாவமென்று ஜெயதேவர் பயந்தது ஒருபுறமிருக்க, இராதிகா காலால் கண்ணனின் தலையில் உதைவிடுகிறாள் என்று முத்துபழநி யோசித்திருக்கிறார்.

புனிதங்களைக் கட்டுடைத்தல், புதிய பொருளையும் சிந்தனையையும் முன்வைத்தல் என்பதாக முத்துபழநியின் எழுத்துகளைக் கருதலாம். ஜெயதேவரின் கீதகோவிந்தத்தை ஒத்த காட்சிப் படிமத்தை முத்துபழநியின் பாடலிலும் காணமுடிவது தற்செயலில்லை. தெலுங்கு இலக்கியத்தின் முதல் கலகக் குரலாக இன்றுவரை பார்க்கப்படும் முத்துபழநியின் காப்பியத்தை 1887இல் சார்லஸ் பிளிப் ப்ரவுன் என்பவரே பதிப்பித்திருக்கிறார். பிரதியைச் சரிபார்த்துப் பதிப்பிக்கும் பொறுப்பிலிருந்த வெங்கட்டன்னராசு காப்பியத்தில் தென்பட்ட சிக்கலான பகுதிகளை நீக்கியே வெளியிட்டிருக்கிறார்.

முதல் பதிப்பில் நீக்கப்பட்ட பகுதிகள், முத்துபழநி தன்னைப் பற்றியும் தன்னுடைய பாட்டியைப் பற்றியும் தெரிவித்திருந்தவை. தேவதாசி மரபில் வந்தவளே தானென்று அவர் எழுதியிருந்த பகுதிகள் தேவையில்லாமல் நீக்கப்பட்டதை நாகரத்தினம்மாவே கண்டுபிடிக்கிறார். 1905இல் மறுபதிப்பாக வந்த நூலையும் தன் கைக்குக் கிடைத்த பழைய ஓலைச்சுவடியை ஒப்பிட்டு, விடுபட்ட பகுதிகளைச் சேர்த்துப் பதிப்பித்திருக்கிறார். இதற்காக 'ஒரு விபச்சாரி, இன்னொரு விபச்சாரியின் எழுத்தைப் பதிப்பித்திருக்கிறாள்' என்னும் வசையையும் வாங்க நேர்ந்திருக்கிறது.

வசையைப் பொழிந்த கந்துகூரி வீரசேலிங்கம் பந்துலு, அந்தக் காலத்தில் இலக்கிய விமர்சகராகவும் பெண்களின் உரிமைகளுக்குப் பாடுபடுவராகவும் அறியப்பட்டிருக்கிறார். காலந்தோறும் ஒருசிலர் இருப்பதும் இயங்குவதும்தான் இலக்கியத்தின் சுவாரஸ்யம்போல. விமர்சனத்துடன் நிறுத்தாலும் எப்படியாவது அந்நூலைத் தடைசெய்வதற்கு அவர் மேற்கொண்ட மூர்க்கங்களும் முயற்சிகளும் ஒன்றிரண்டல்ல. சாந்தவனத்தைவிடவும் ஆட்சேபிக்கத் தக்க வரிகளைக் கொண்டுள்ள 'வைஜெயந்திவிலாசம்' எனும் நூலைத் தடுக்காதவர்,

முத்துபழநியையும் நாகரத்தினம்மாவையும் ஒருசேர எதிர்த்து, விமர்சித்ததை நீதிமன்றமும் ஆட்சியாளர்களும் ஏற்றதுதான் வேடிக்கை. சுதந்திரத்திற்கு முற்பட்ட காலங்களில் நிகழ்ந்த இந்தக் குளறுபடிகள், சென்னையின் முதல் மாகாண முதல்வராகப் பிரகாசம் வரும்வரை தீராமல் நீடித்திருக்கின்றன. நாகரத்தினம்மாவே பல்வேறு வகைகளில் முயற்சித்து, அந்நூலை எப்படியாவது வெளிக்கொணர்ந்து பரவலாக்கும் எண்ணத்துடன் பாடுபட்டிருக்கிறார். ஓர் இசையையோ ஓர் இலக்கியத்தையோ அதன் அடிப்படை சாராம்சத்தை உள்வாங்காமல் விமர்சிப்பவர்கள் அன்றைக்கும் இருந்திருக்கின்றனர் என்பதுதான் ஒரே ஆறுதல். இராதிகா சாந்தவனத்தைத் தடைசெய்ய பிரிட்டன் சட்டவல்லுநர்கள், உலகச் சட்டங்களையெல்லாம் ஒப்புநோக்கினர் என்னும் செய்தியைப் படித்ததும் சிரிக்கத் தோன்றிற்று.

எழுத்து, சமூகத்தைச் சீரழித்துவிடும் என்பதும், மக்களையும் அவர்கள் பேணிக்காத்துவரும் ஒழுக்கத்தையும் பாழ்படுத்திவிடும் என்பதும் அதீதக் கற்பனையே அன்றி வேறில்லை. பயங்கரவாதத்தை ஒழிக்க அப்பாவி மக்கள்மீது இராணுவத்தை ஏவிவிடும் அரசுகள், பயங்கரத்திலும் பயங்கர கேடுகளைப் புரிவன. எளிய மக்கள், தம்முடைய ஏக்கங்களையும் எதிர்பார்ப்புகளையும் எழுதிக்கொண்டே இருப்பர். காகிதங்களுக்கு மட்டுமே அரசுகளால் தடை விதிக்க முடியும். கருத்துகளை ஒன்றும் செய்ய முடியாது.

அடைய முடியாத ஒன்றின்மீது வைக்கும் அன்புதான் பக்தியோ என்ற கேள்வியுடன் தொடங்கிய இப்பதிவை, அடைந்துவிட்ட ஆட்சியும் அதிகாரமும் பக்தியை முன்வைத்து நடத்தும் அன்பற்ற செயல்களுடன் இணைத்துப்பார்க்கையில் வேதனையளிக்கிறது. பக்தியென்பது மதமற்ற இரண்டு மனிதர்களுக்கு இடையே எப்போது பரவுமோ, அதை நானுமே அறியேன் பராபரமே.


ஓவியம்: மணிவண்ணன்

சிறுகதை

தகனம்

பூமணி

பிஞ்சுக் காலை, மெயின்ரோடு நிழலைப் போர்த்திக்கொண்டு சோர்ந்து கிடந்தது. பஸ்கள் வலி முனக்கத்தில் பயந்து பயந்து சென்றன. அவற்றின் உடம்பெங்கும் ஊமைக் காயங்கள். கொஞ்ச நாளாகவே இந்த வேதனைதான். கண்ட கண்ட இடத்தில் சகட்டுமேனிக்கு வாங்கிய கல்லெறிக்கும் கம்படிக்கும் கணக்கில்லை. சாதி பிரித்துத் தாக்கினார்கள். இனி எங்காவது மறித்து நொறுக்கிக் குமித்துத் தகனஞ் செய்வார்கள். வெந்து நீந்தபின் தீயாற்றுவதற்கு அதிகாரிகள் வருவார்கள். நிச்சயமில்லாத பிழைப்பு.

ரோட்டில் முன்னைப்போல ஆள் நடமாட்டம் அதிகமில்லை. நடமாடியவர்களிடையிலும் மழைநேர அவசரம். உடம்பைச் சுற்றித் தொங்கும் பால் கேன் கொத்துக்களைச் சுமக்கத் திணறும் மொபட் வண்டிகளை சிலர் பயத்தில் பத்திக்கொண்டு போனார்கள்.

அங்காங்கே டீக்கடைகளில் செய்திகளை ஆவிபறக்க குசுகுசுத்தார்கள். அவர்கள் முகத்தில் எந்த நேரம் என்ன நடக்குமோ என்ற பதட்டம். நிலைகொள்ளாத காக்காய்ப் பார்வை. சில கடைகள் பாதி திறந்து மிரண்டு முழித்தன.

நேற்று நடந்த கதையை நினைத்தால் குலை நடுங்குகிறது. ஊரே போர்க்களமாக மாறிவிட்டது. பாட்டம் பாட்டமாகப் பெய்யும் மழையைப் போல கலகக்காரர்கள் கூட்டங் கூட்டமாக வந்து தாக்கினார்கள். தெருக்களில் கல்லெறிந்தார்கள். கட்டைக் கம்பு வேல்கம்பு வீச்சரிவாள் பட்டாக்கத்தி என்று சகல ஆயுதமும் அவர்களிடம் இருந்தன.

விதவிதமாகக் குண்டு வெடித்தது. கடைகள் நொறுங்கின. சனங்கள் பீதியில் கலைந்தோடி ஒளிய தேடித் தவித்தார்கள். கிழக்குப் பஜாரில் கூலிவேலைக்குப் போய்க் கொண்டிருந்த ஒருவனிடம் சாதியைக் கேட்டுத் தலையைத் துண்டித்துவிட்டார்கள். அவனது தூக்குவாளியிலிருந்து சிதறிய பழைய சோறு ரத்தக் குழம்பில் ஊறிச் சிவந்திருந்தது. இன்னொருவன் பஸ்டாண்டுக்கருகில் சாக்கடைக்குள் மல்லாக்க கிடந்தான். அவனுக்கு நடு வயற்றில் நாலு கத்திக்குத்து.

போலீஸ்காரர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆள் கம்மியாக இருந்துகொண்டு என்ன செய்ய. கூட்டத்தில் மாட்டிக்கொண்டால் அவ்வளவுதான். கொத்துக் கறி போட்டு விடுவார்கள். திகைப்பில் வேடிக்கை பார்ப்பதை தவிர வேறு வழி தெரியவில்லை. அப்படியும் மனசு கேட்காமல் வண்டியில் விரட்டினார்கள். ஒரு கும்பலைத் துரத்தினால்

பின்னால் இன்னொரு கும்பல் வந்து கல்லெறிந்தது. கூச்சலுங் குழப்பமுமாக ராத்திரிவரை இதே கூத்துத்தான். யாருக்கு யார் எதிரியென்று தெரியவில்லை.

இருந்தாலும் அதிகாரிகளுக்கு இவ்வளவு மெத்தனம் கூடாது.

ஒருவாரமாகவே பிரச்சினை புகைந்துகொண்டிருப்பதும் என்றைக்காவது வெடித்துத்தான் தீரும் என்பதும் எல்லாருக்கும் தெரியும். பிறகென்ன முன்னெச்சரிக்கையாக வெளியிலிருந்து போலீசைக் கொண்டுவந்து இறக்கியிருக்கலாமில்லையா. அப்படிச் செய்திருந்தால் கலகக்காரர்களிடம் கல்லெறி வாங்கி அவமானப்பட்டிருக்க வேணாம். ஆஸ்பத்திரிக்குப் போயிருக்க வேணாம். அனியாயமாக ரெண்டு உயில் பலியாகியிருக்காது. எல்லாம் பட்டழுந்திய பிறகு வண்டி வண்டியாக வந்து எதுக்கு.

போலீஸ்டேஷன் கலவரக் கணக்கை முடிக்க ராத்திரி ரெண்டு மணியாகிவிட்டது. அதிகாரிகளும் போலீஸ்காரர்களும் காயங்களைத் தடவிக்கொண்டு அதுக்குப் பிறகுதான் உறங்கப்போனார்கள்.

ஓயாத கால்மிதியில் நசுங்கி அழுந்திய ஸ்டேஷனுக்குச் சற்று நேரம் ஓய்வு. துப்பாக்கிகள் வரிசையாகத் தலைசாய்த்து அயர்ந்திருந்தன. ஒரு பாராக்காரர் மேசையில் முகம் புதைத்து ஓடிந்து கிடந்தார். அவரது கனத்த உறக்கத்தை வயர்லெஸ்ஸின் தெளிவற்ற ஒப்பாரிக் கரகரப்பால் கலைக்க முடியவில்லை.

ஸ்டேஷனையொட்டி கிழக்கே அரசமரத்தடியில் காவல் விநாயகர் கோயில். கம்பி வேலிக்கு நடுவில் கலக்கமற்று உட்கார்ந்திருந்த விநாயகருக்கு முன்னால் அர்ச்சனைப் பூக்களாக அஞ்சாறு கற்கள் கிடந்தன.

கோயிலைக் கட்டி முடிக்க முந்தியிருந்த கறீம்பாய் பட்டபாடு கொஞ்சமா. தெருவில் பிச்சையெடுக்காததுதான் குறை. இப்படிக் கெஞ்சிக் கூத்தாடிப் பணம் வசூலித்து வைராக்கியமாக முடித்தார்.

ஸ்டேஷனு வாசலில் பாரா நின்ற ஆத்தியப்பன் கோயிலை வெறித்துப் பார்த்தான். ராத்திரி முழுக்க கொக்காக நின்ற அலுப்பு காலைக் குடைந்தெடுத்தது. நேற்று முழங்கையில் வாங்கிய எறி சுண்டிச் சுண்டி வலித்தது. அந்த எறி நெஞ்சில் விழுந்திருந்தால் ஒரேடியாக நீட்டி நிமிர்ந்திருக்க வேண்டியதுதான். விநாயகருக்குக் காக்கிச் சட்டை மாட்டி தொப்பிவைத்துத் துப்பாக்கியைத் தோளில் சாத்திவிட்டுக் காணாத இடத்துக்கு ஓடிக் கரிசக்காட்டு வேம்படியில் மூணு நாள் சோறு தண்ணீரில்லாமல் உறங்கணும் போலிருந்தது.

ரோட்டின் தென்சந்தில் கல்லுளித் தாளம் கேட்கத் தொடங்கியது. சாயங்காலத்துக்குள் பாறைத் துண்டுகள் உரலாகவும் அம்மியாகவும் உருவெடுக்கும். குழவிகளும் பிறக்கும். அவர்களுக்கு அன்றாடம் பிழைப்பு நடக்கணுமே. கலகக்காரர்கள் வந்தாலும் எதைக் கொண்டு போகமுடியும்.

கொஞ்ச நேரத்தில் உளியடியை மிஞ்சிய கூச்சலில் ஆணும் பெண்ணும் பெருங்கூட்டமாக ஸ்டேஷனை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். அதைப் பார்த்த ஆத்தியப்பனுக்கு உதறலெடுத்தது. சரி இன்றைக்குக் கதை முடிந்தது. வீடு திரும்பப் போவதில்லை.

துப்பாக்கியை இறுகப் பற்றி விறைப்பாக நின்று சாமளித்துப் பார்த்தான். முழங்கை ரெம்ப வலித்தது. அவசரமாக உள்ளே ஓடி உறங்கிக்கொண்டிருந்தவரை எழுப்பித் துணைக்கு வைத்துக்கொண்டான். கூட்டம் நெருங்க நெருங்க நெஞ்சு துடித்தது.

நல்ல வேளைக்கு வந்தவர்களில் யார் கையிலும் ஆயுதமில்லை. ஆத்தியப்பனுக்கு

உயிர்வந்தது. சுதாரித்துக்கொண்டு மிடுக்காகப் பார்வையை லாந்தவிட்டான். ஆனாலும் இறங்கிப் போகவில்லை.

கூட்டம் ஸ்டேஷனுக்கு முன்னால் நின்றது. ரெண்டு பேர் எல்லாரையும் உட்காரச் சொல்லிவிட்டு ஸ்டேஷனுக்கு வந்தார்கள். ஆணும் பெண்ணும் ரெண்டு பிரிவாக அப்படியே நடு ரோட்டில் உட்கார்ந்துவிட்டார்கள். அவர்கள் தீர்மானமாகப் பேசிக்கொண்டார்கள்.

''இண்ணைக்கு ஒரு வழி பண்ணாமப் போறதில்ல.''

''பஸ் நம்மளத் தாண்டிப் போச்சுன்னா நடக்கிற கதையே வேற.''

''அந்தா போற சைக்கிள்காரனப் புடிச்சு மரத்துல கெட்டிவையி.''

ஸ்டேஷனுக்கு வந்தவர்களில் ஒருத்தன் ஆத்தியப்பனிடம் கேட்டான்.

''உள்ள அதிகாரிக ஆரும் இல்லையா.''

ஆத்தியப்பன் சமாதானப்படுத்தினான்.

''வெளிய போயிருக்காக. இப்ப வந்துருவாக.''

''நாங்க ராத்திரி முழுக்க ஓறங்காமக் காவலுருக்கொம். நீங்க கவலையில்லாம வீட்ல படுத்துக் கெடக்கீகளோ.''

ஆத்தியப்பனுக்கு ஆட்களை அடையாளந் தெரிந்தது. எல்லாரும் அமராவதி நகர்க்காரர்கள். அது அமைதியான இடம். பெரும்பாலும் வெளியூர்களிலிருந்து வந்து குடியேறியவர்கள். வம்புதும்புக்குப் போகமாட்டார்கள். அவன் பக்குவமாகக் கேட்டான்.

''என்ன நடந்தது.''

''என்ன நடந்ததா நடுச் சாமத்துல நாலு பேரு வந்து தெருவுல நின்னுக்கிட்டு எல்லாரும் வெளியேறி ஓடீருங்க. கொஞ்ச நேரத்துல குண்டு வெடிக்கப்போகுதுன்னு மெரட்றான். மனுசரு குடியிருக்கிறதா கூண்டோட போறதா. தட்டிக் கேக்கிறதுக்கு நாதியில்லாமல் போச்சு.''

''கொஞ்சம் அமைதியா இருங்க. அதிகாரிக வந்துக்கிறட்டும்.''

''எப்ப வந்தாலுஞ்சரி அதுவரைக்கும் எந்திரிக்கப் போறதில்ல.''

''அவர்களும் திரும்பிப் போய் சனங்களுடன் உட்கார்ந்து கொண்டார்கள். வெயில் ஏற ஏற பேச்சுக் கசகசப்பு அதிகரித்தது. இரு புறமும் வந்து எட்டிப் பார்த்த வாகனகங்கள் ஏதாவதொரு குறுக்கு வழியில் தப்பித்து ஓடின.''

இதுக்குள் ஸ்டேஷனிலிருந்து தகவல் போகவே வண்டிகளில் போலீஸ் பட்டாளமே வந்து இறங்கியது. அதிகாரிகள் எல்லாருடைய இடுப்பிலும் ரிவால்வார். போலீஸ்காரர்கள் அவசரமாக ஸ்டேஷனுக்குள் ஓடி துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு தயாரானார்கள். ஏட்டையாவின் கையிலும் ஒண்ணு இருந்தது. ஆத்தியப்பன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

ஏட்டையா ஆத்தியப்பனைப் பார்த்தார்.

''ஒண்ணும் ஆகலயே.''

''ஒரு வழியா சமாதானப்படுத்தி வச்சிருக்கென்.''

''என்னத்துக்காம் இப்படி.''

''குண்டெறியப் போறதா ஆரோ வந்து மெரட்னாங்களாம்.''

''நல்ல வேள எறியலயே.''

கூட்டத்தில் இப்போது நிறையப் பேர் எழுந்து வந்தார்கள். கூச்சல் அதிகமாகியது. பெண்களின் குரல்தான் ஓங்கியிருந்தது. அதிகாரிகள் ஆளுக்கொரு புறமாக அமைதிப்படுத்தினார்கள்.

''தைரியமாப் போங்க. நாங்க பாத்துக்கிருவோம்.''

''இண்ணைக்கிலருந்து தெனமும் ராத்திரி ஒங்க ஏரியாவுக்கு ரெண்டுபேர ரோந்து போட்ருவொம்.''

சில போலீஸ்காரர்கள் சலித்துக்கொண்டார்கள்.

''இத்தன பேரு சேந்து நாலு பேரப் புடிக்கமுடியலயா.''

''அதான அங்க வுட்டுட்டு இங்க தெரண்டு வந்துருக்காக பாரு.''

''பட்டப் பகல்ல கொல செஞ்சவனவே புடிக்க முடியல. இனிமே குண்டெறியப் போறவனப் புடிக்கணுமாம்.''

கூட்டத்திலிருந்து ஒரு சின்ன வயசுப் பெண் நெருங்கிவந்து உரக்கச் சொன்னாள்.

''எங்கள நிம்மதியா இருக்கவுடுங்களேன்.''

ஆத்தியப்பன் ஏட்டையாவிடம் முனங்கினான்.

''மத்தவுக எல்லாரும் நிம்மதியாக இருக்கிற மாதிரி.''

ஏட்டையாவுக்கு எதுவும் காதில் இறங்கவில்லை. அவர் மனசு அந்தப் பெண்ணைச் சுற்றியே மறுகியது. அந்த எடுப்பான மூக்கும் திரண்ட முழியும் துடுக்கு நடையும் பழையபழைய நினைவுகளைக் கிளறியது.

அவளும் அவரை ரெண்டுமூணு முறை சாடைமாடையாகப் பார்த்துச் சிரிக்க முயன்றாள். ஆனால் ஒரு பயத்தில் உடனே சுருங்கி அன்னியப்பட்டுக்கொண்டாள்.

ஏட்டையாவால் ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தன்னையுமறியாத தவிப்பு. எப்படியாவது அவளிடம் ரெண்டு வார்த்தை பேசியாகணும்.

மெல்ல கூட்டத்துப்பக்கம் போனார். அவள் அவரைத் தவிர்க்கும் பாவனையில் கூட்டத்துக்குள் நழுவப்பார்த்தாள். முடியவில்லை.

ரெண்டு பேரும் தற்செயலான தோரணையில் சந்தித்துக் கொண்டார்கள். அவர் மெதுவாகக் கேட்டார்.

''ஒன்ன எங்கயோ பாத்தமாதிரி இருக்குதே.''

அவள் கண்களில் மிரட்சி.

''எங்க பாத்துருப்பீக. நம்மூரூல பாத்துருப்பீக.''

''நீ...''

''தெரியலையாக்கும். நொண்டிவீரன் மக வெள்ளத்தாயி.''

''ஒன்ன மதுரப் பக்கமில்ல குடுத்துருந்தாக. இங்க எப்படி.''

அவள் சுற்றலும் பார்த்துக்கொண்டாள்.

''அது பழைய கத.''

''என்னாச்சு.''

''மொதல்ல நல்லாத்தான் இருந்தோம். பெறகுபெறகு கசப்பு வந்துருச்சு.''

''அதெப்படி.''

''கலியாணத்துக்கு முந்தியே அதுக்கு ஒரு பொண்ணோட தொடுப்பு இருந்துருக்கு. நான் போனப் பெறகாச்சும் மறந்து தொலச்சிருக்கணும். கண்ணுக்கு முன்னால நடக்கிறது எப்படிச் சகிச்சுக்கிட்டிருக்கிறது கண்டிச்சென். என்னொட துண்டிச்சிட்டு அவளோடயே போயிருச்சு.''

''பாவிப் பய கெடுத்தானே.''

''நான் எத்தன நாளைக்கு தனியாக் கெடந்து தவிக்கிறது. நெலக்கடல வெட்டப் போன எடத்துல தோட்டக்கார மொதலாளியோட மகனப் பாத்தென். ரெண்டு பேருக்கும் பழக்கம் உண்டாயிப் போச்சு. நான் கீச்சாதின்னு தெரிஞ்சும் வச்சுக் காப்பாத்துவன்னு சொன்னாரு. சொத்துச் சொகத்தெல்லாம் ஒதறித் தள்ளீட்டு எங்கூடச் சேந்துக்கிட்டாரு. அங்கருந்தா சங்கடம்னு இங்க வந்துட்டொம்.''

''கொழந்தையிருக்குதா.''

''ஆருக்கும் பெத்துக்கிறல. இனிமேக்கின்னா எப்படியோ. ஒண்ணாச்சும் இருந்தா சந்தோசமாத்தான் இருக்கும்.''

''இங்க என்ன வேல செய்றீக.''

''அவரு கொத்தவேலைக்குப் போறாரு. நான் பத்திக் கொழாயி சுத்துறென். பெழப்பு கவலையில்லாம ஓடுது. கொஞ்ச நாளா நிம்மதியாருந்தென். இப்பத்தான் பயமாருக்கு. அந்தச் சனங்க எல்லாரும் தெரண்டு வரயில நம்மமட்டும் சும்மாருந்தா எப்படி. தப்பா நெனச்சுக்கிருவாகல்ல. அந்தா கூட்டத்துக்கு நடுவுல செவப்பா உக்காந்துருக்காரே அவருதான் என் வீட்டுக்காரரு.''

''இவ்வளவு நடந்துபோச்சா.''

''எனக்கென்ன பெத்த அய்யாவா இருக்குது சொல்லி மனச ஆத்திக்கிறதுக்கு. ரெம்ப நாளைக்குப் பெறகு ஒங்களப் பாத்தென். உள்ளுக்குள்ள பயம் ஒரு பக்கம். இருந்தாலும் பேசாம இருக்க முடியல. அம்மா நல்லாருக்காகளா. அவுகளப் பாக்கணும்போலருக்கு.''

''நாங்க நல்லாத்தான் இருக்கொம்ஞ் ஒங்கம்மா இப்ப ஊருல இல்ல தெரியுமா.''

''கேள்விப்பட்டென். அய்யா செத்து நாளாச்சு. ஒரே அண்ணனும் பரதேசம் போயிட்டான். அவருக்கும் ஒரு தொண வேணுமில்ல. எங்களுக்கு லவிச்சது அம்புட்டுத்தான்.''

அவள் கண்களைத் துடைத்துக்கொண்டு போனாள். திரும்பிப் பார்த்த கடைசிப் பார்வை என் கதையை யாரிடமும் சொல்ல வேணாம் என்று கெஞ்சுவதைப் போலிருந்தது.

ஏட்டையா கூட்டம் கலைந்து போனதுகூடத் தெரியாமல் திகைத்து நின்றார். நொண்டிவீரன் மகளா இது. காடுகரையெல்லாம் கண்ணுக்குட்டி போல ஓடித்திரிவாளே அந்த வெள்ளத்தாயா. வண்ணாத்திப்பூச்சி பூக்களைச் சிறகினால் விசிறிச் சொகமேற்றி தேனைச் சுரக்கவைத்து உறிஞ்சுவதுபோல இனிப்பான அனுபவங்கள்.

ஆத்தியப்பன் வந்து அவரைத் தட்டினான்.

''ஏட்டையா என்ன இங்கயே நின்னுட்டீக. கூட்டம் போயிருச்சேன்னு கவலையா.''

''எத நெனச்சாலும் கவலையாத்தான் இருக்கு ஆத்தி.''

''அந்தப் பொண்ணுகிட்டத் தனியாப் பேச்சுப்பழக்கம் போட்டீகளே என்ன சமாச்சாரம். ரெம்பத் தெரிஞ்ச பொண்ணா.''

''தெரிஞ்சதாவது ஒண்ணாவது. சின்னப் பொண்ணுக எல்லாம் சந்திக்கு வந்து உக்காந்துட்டுப் போறதப் பாத்தாப் பாவமாருக்கு. அது தன்னோட கஸ்டத்தச் சொல்லீட்டுப் போகுது. நம்ம கஸ்டத்த ஆருட்டச் சொல்றதுஞ் ஆமா கடைசியில என்ன முடிவாச்சாம்.''

''இண்ணைக்கு ராத்திரியிலருந்து அமராவதி நகருக்கு ரெண்டு பேரு ரோந்து போகணுமாம்.''

''குண்டு போடுறவன் ரெண்டு போலீஸ்காரனுக்குப் பயந்து ஓடீறப் போறானாக்கும். இல்ல நம்மதான் அவனப் புடிச்சிறப் போறமா. காக்கிச் சட்டக்காரனுக்கு எல்லாரும் மரியாத குடுக்கிறதா நம்பிக்கிட்டுருக்கொம். நேத்துக் கெடச்ச கல்லு மரியாத போதாதா. இண்ணைக்கு விடிஞ்ச ஒடனயே கத ஆரம்பிச்சாச்சு. இனிமே என்ன நடக்கப் போகுதோ.''

ரெண்டு பேரும் ஸ்டேஷனுக்குள் நுழைந்தார்கள்.

அன்றைக்குக் கலவரம் மட்டுப்பட்டிருந்தது. ஓரிரு இடங்களில் கல்லெறிச் சம்பவங்களுடன் சரி. ஊருக்குள் பஸ் வரத்து இல்லை. மயானக்கொலத்தில் கிடந்த பஸ்டாண்டில் பன்றிகள் மேய்ந்துகொண்டு திரிந்தன. காலையில் திறந்திருந்த டீக்கடைகள் கூட மூடியிருந்தன. ரோடு நெடுகிலும் போலீஸ் தொப்பிகள்.

ஏட்டையாவுக்கு எதிலும் கவனமில்லை. அவரது நெஞ்செல்லாம் வெள்ளத்தாயே நிறைந்திருந்தாள். பாவம் அந்தப் பெண்ணுக்கா இந்த நிலைமை.

மதியச் சாப்பாட்டுக்கு உட்காரும்போது வீட்டுக்காரியிடம் சொல்லிப் பாரத்தை இறக்கலாமா என்று நினைத்தார். சொன்னால் எல்லம்மா ரெம்ப வேதனைப்படுவாள். வெள்ளத்தாயைப் பார்க்கணுமென்பாள். உடனே கூட்டி வரச் சொல்வாள். இந்தக் கொந்தளிப்பான நேரத்தில் அது நல்லதில்லை. அந்த எண்ணத்தை அமைதியாக விழுங்கிவிட்டார்.

வெள்ளத்தாய் அவர் வீட்டுச் சோற்றைத் தின்று வளர்ந்தவள். அப்போது அவளுக்கு ஏழெட்டு வயசிருக்கும். பேருக்கேற்ற நிறம். முயல் குட்டியைப் போல லட்சணமாக இருப்பாள். குறும்புப் பேச்சும் துள்ளலும் சொல்ல முடியாது. அவளைப் பார்த்தால் வலியப் பேசணும் போலிருக்கும்.

அவளது தாயும் தகப்பனும் அவர் வீட்டில் பதிவாக வேலை செய்தார்கள். விவசாயம் முழுக்க நொண்டிவீரன் பொறுப்பு. வீட்டு வேலைகளை ராக்கம்மா கவனித்துக்கொண்டாள். வெள்ளத்தாய் அவளுக்கு ஒத்தாசையாக இருந்தாள். அவளுக்கு ஒரே அண்ணன். அவனைக் கஷ்டப்பட்டுப் படிக்க வைத்தார்கள்.

அப்போதெல்லாம் ஏட்டையா போலீஸ் வேலையில் சேரவில்லை. கல்யாணம் முடித்து ஒரு பையனும் பிறந்த பிறகுதான் காக்கிச் சட்டையை மாட்டினார். பையனை வெள்ளத்தாய் தூக்கித் திரிவாள். எல்லம்மாளுக்கு என்னெரமும் கூடவே இருக்கணும். இல்லையென்றால் தேடித் தவித்துவிடுவான்.

''அடியே வெள்ளச்சி எங்க போனடி.''

''ஏட்டையாவுக்கு நொண்டி வீரன்தான் ஏர் உழுகவும் கமலையடிக்கவும் சொல்லிக்கொடுத்தான். அவனுடன் ரெட்டைக் கலப்பை பிடித்து கமலை வடத்துக்குப் பின்னால் உட்கார்ந்து வேலைகளைக் கருக்கடையாகக் கற்றுக்கொண்டார். ஒவ்வொரு நாள் பாட்டுகூடச் சொல்லித்தருவான்.''

பெண்கள் கரிசக்காட்டில் பருத்தியெடுக்கப் போனால் ராக்கம்மா முதல் ஆளாக நிற்பாள். எல்லம்மாளும் வெள்ளத்தாயும் ஒரு நிரையில் பருத்தியெடுப்பார்கள். ரெண்டு பேரும் கிழடுகளைப் போல பேச்சுப் பழக்கம் போடுவார்கள். கொஞ்ச நேரத்தில் பார்த்தால் ஒதுங்கலாக ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருப்பார்கள்.

எல்லம்மா சொக்கிப் போய்த் தலை குனிந்திருக்க வெள்ளத்தாய் மண்டிபோட்டுப் பேன் பார்ப்பாள். முடியை வகிர்ந்து ஒவ்வொரு பேனாக எடுக்கமாட்டாள். ஒரு திரளை பருத்தியை வைத்து முடிக்கடியில் அழுந்தத் தேய்த்து எடுத்தால் சிறிசிலிருந்து பெரிசுவரை பேன்கள் ஒட்டிக்கொண்டு வந்துவிடும். இப்படி நாலஞ்சு தடவை தேய்த்தால் தலை லேசாகிவிடும். அன்றைக்குக் கடையில் திண்பண்டம் வாங்க வெள்ளத்தாய்க்கு நிறையவே பருத்தி கிடைக்கும்.

ஏட்டையா ஊரைவிட்டுக் கிளம்பி வந்த பிறகு ரெண்டு குடும்பத்துக்கும் சொந்தம் விட்டுப் போகவில்லை. நொண்டி வீரனும் ராக்கம்மாளும் வழக்கம் போல வேலை செய்தார்கள். எல்லம்மா ஊருக்குப் போகும் சமயங்களில் வெள்ளத்தாயைப் பார்த்துப் பேசாமல் வருவதில்லை.

கொஞ்ச நாளில் நொண்டிவீரன் புதுசான நோயில் படுத்து இறந்துவிட்டதாகச் சேதி வந்தது. ஏட்டையாவும் எல்லம்மாளும் போய் கண்ணீருக்கிடையில் ஆறுதல் சொல்லிவிட்டு வந்தார்கள். வெள்ளத்தாய் மலைத்துவிடக் கூடாதென்று எல்லம்மா அவளுக்கு ரெம்பத் தெம்பு சொன்னாள்.

அதுக்குப் பிறகும் ராக்கம்மாளும் மகளும் அவர் குடும்பத்துக்கு உழைத்தார்கள். வெள்ளத்தாயின் அண்ணன் பள்ளிக்கூடம் போவதை நிறுத்தவில்லை.

அடுத்த தடவை ஏட்டையா ஊருக்குப் போய் வரும்போது எல்லம்மாளுக்கு ஒரு சேதி இருந்தது.

''ராக்கம்மா செஞ்சிருக்கிற கதையக் கேட்டயா. மகள சொல்லாமக் கொள்ளாம மதுரப்பக்கம் புடிச்சுக் குடுத்துட்டாளாம்.''

எல்லம்மாளுக்கு வருத்தமென்றால் அப்படி வருத்தம். இருந்தாலும் அந்தப் பெண்ணுக்கு நல்ல பிழைப்பு கிடைத்ததே என்று ஆறுதல்.

''வெள்ளச்சி அவ்வளவு பெரிய பொம்பளையாயிட்டாளா. அந்தக் கழுத போயிருச்சுன்னா நம்ம வீடு வெறிச்னுருக்கும்.''

பிறகெல்லாம் எல்லம்மா அவ்வளவாக ஊருக்குப் போவதில்லை. ஏட்டையா மட்டும் போய் வருவார். அவர் வந்ததும் வராததுமாக ஒரு விஷயத்தை மட்டும் மறக்காமல் கேட்பாள்.

''வெள்ளச்சி எப்படியிருக்காளாம். கொழந்த உண்டுமா. அந்தக் கழுதையப் பாக்கணும் போலருக்கு.''

''ராக்கம்மா தூரத்துல காலனி வீட்டுக்குப் போயிட்டா. மெனக்கிட்டு அங்க போயி வெசாரிச்சிட்டு வாறென்.''

''பழைய வீடு என்னாச்சு.''

''கட்டமண்ணாக் கெடக்குது.''

கொஞ்சநாளில் இன்னொரு சேதி கொண்டுவந்தார்.

''ராக்கம்மா மகன் படிப்ப எடையில நிறுத்திப்புட்டு வேதத்துல சேந்து புத்தி சொகாயமில்லாமப் போயிட்டானாம்.''

''அவனுக்கு ஏன் அந்தக் கிறுக்கு வந்தது. சூசுவான்னு படிக்கிறத வுட்டுட்டு.''

''ராத்திரி ஆண்டவரு வந்தாரு. பேச்சுப்பழக்கம் போட்டாருன்னு பொலம்பீட்டுத் திரியிறானாம்.''

''அந்த மனுசி ஒண்டிக்கட்டையாயிட்டாளா. பொம்பளைக்கு இவ்வளவு கஸ்டம் வரப்புடாது.''

அஞ்சாறு மாசங்கழித்து அந்த விஷயத்தைச் சொன்ன போது அவரே கலங்கிவிட்டார்.

''காலனி வீட்லயும் ராக்கம்மா இல்ல.''

''எங்க போயிட்டா.''

''ஆம்பளத் தொணையத் தேடிக்கிட்டு அசலூருக்குப் போயிட்டாளாம்.''

எல்லம்மாளுக்கு அழுகையை அடக்க முடியவில்லை.

''எப்படி இருந்த குடும்பம் உருக்கொலஞ்சு போச்சேஞ் அவ எடுத்துக்கிட்ட முடிவுஞ் சரிதான். எத்தன நாளைக்குத்தான் ஒத்தையில கெடந்து ஒதைவா.''

ஏட்டையா சாயங்காலம் பல யோசனையில் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தார். ஆத்தியப்பன் அவசரமாகச் சொன்னான்.

''இண்ணைக்கு ராத்திரி அமராவதி நகருக்கு நம்ம ரெண்டு பேருந்தான் ரோந்து போகணுமாம். இன்ஸ்பெக்டரு உத்தரவு.''

''காவு குடுக்கிறதுக்கு நம்ம என்ன பாவஞ் செஞ்சொம் ஆத்தி.''

''என்னதான் ஆகுதுன்னு ஒரு கையி பாப்பமே.''

''அது சரி. நேத்து இன்ஸ்பெக்டருக்குக் கல்லெறி கெடச்சது. இண்ணைக்கு நமக்குக் குண்டெறி கெடைக்கப்போகுது. தெனமும் செத்துச் செத்துப் பெழைக்கிறதவிட ஒரேயடியாப் போயித் தொலஞ்சிறலாம்.''

''ராத்திரி எட்டு மணிக்கெல்லாம் துப்பாக்கி லத்திக்கம்பு சகிதம் அமராவதி நகருக்குப் போய்விட்டார்கள். சனங்களுக்கு நிம்மதி. பயமில்லாமல் உறங்கினார்கள்.

ரோந்து வரும்போது ஏட்டையா அடிக்கடி குமைந்து கொண்டார்.

''அடடா வெள்ளத்தாயி வீடு தெரியாமப் போச்சே. பாத்துத் தைரியஞ் சொல்லியிருக்கலாமே. காலையிலயே வெசாரிச்சிருக்கணும். அந்தக் கெடுபுடியில இதெல்லாம் எங்க கேக்க முடிஞ்சது. அடுத்த வீட்ல வெசாரிக்கிறதும் நல்லதில்ல. அந்தப் புள்ளைக்குச் சங்கடம் வந்துறப்புடாது. நெலம இப்படியேவா இருக்கப்போகுது. எல்லாம் சரியானப் பெறகு அவளக் கூட்டீட்டுப் போயி எல்லமாட்டக் காட்டீறணும்.''

அவர்கள் ஓய்ந்து ஒரு இடத்தில்கூட உட்காரவில்லை. ஆத்தியப்பன் சுணங்கியபோதெல்லாம் ஏட்டையா பேச்சுக்கொடுத்துச் சரிப்படுத்தினார். அவர்கள் கிளம்பும்போது சரியாக விடிந்துவிட்டது.

ஏட்டையாவுக்கென்றால் கால் உளைந்து கண் சொருகிறது. எங்காவது படுக்கணும் போல அசதி.

''ஆத்தி எனக்குக் கெறக்கமாருக்கு. மொகத்தக் கழுவித் தண்ணி குடிச்சாத்தான் வீடு போயிச் சேரமுடியும்.''

''கொஞ்சத் தூரம் சமாளிச்சுக்கங்க. தெருமொனையில அடிபம்பு இருக்குது. ஒங்களக் குளுப்பாட்டியே வுட்றென்.''

தெருக்கள் இன்னும் வெறிச்சோடியிருந்தன. பல வீடுகள் திறக்கவில்லை. ஏட்டையா கேட்டார்.

''ஏன் ஆத்தி சனங்க விடிஞ்சதுகூடத் தெரியாம இனியுமா ஒறங்குதுக.''

''நேத்துப் பாக்கியவும் சேத்து ஒறங்குறாக போலருக்கு.''

அடிபம்பை நெருங்கிவிட்டார்கள். அங்கேயும் ஆள் நடமாட்டமில்லை.

''இங்க தண்ணிக் கஸ்டம் இல்ல போலருக்கு.''

தண்ணீர் அடிப்பதற்காகப் பம்பின் கைப்பிடியைத் தொடப்போன ஆத்தியப்பன் சிமிண்டுத் தரையில் தேங்கிக் கிடந்த நீர்ப்படலம் சிவப்பாக இருப்பதைக் கவனித்தான். அவன் பார்வை வாய்க்காலைப் பின்தொடர்ந்து வாரங்காலில் இறங்கியபோது பகீரென்றது. வாரங்காலுக்குள் ஒரு பெண்ணின் சடலம் அலங்கோலமாகக் கிடந்தது. வாரங்கால் சுவரில் கவுந்தபடி தண்ணீர்க் குடம்.

அவன் அலறினான்.

''ஏட்டையா இங்க வந்து பாருங்களேன். ஒரு பொணங்கெடக்குது. நேத்து ஒங்ககிட்டப் பேசீட்டிருந்த பொண்ணுமாதிரி தெரியிது.''

அவர் உறக்கச் சடைவை உதறிக்கொண்டு ஓடி வந்து பார்த்தார். வெள்ளத்தாயேதான். கழுத்து வெட்டில் கணக்குத் தீராமல் மறுபக்கம் திருகியிருந்த அவள் தலையை வெலவெலப்பில் பார்த்துக்கொண்டிருந்தார். நிலைகுத்திய கண்கள் ''அம்மா நல்லாருக்காகளா'' என்று கேட்பது போலிருந்தது.

இடியும் குமுறலுமாக அவருக்குள் அழுகை பீறிட்டு வெடித்தது. ஊமையாக விம்மி விம்மி அழுதார். எதுக்குமே அவரை அணைத்துக்கொண்டான்.

''என்ன ஏட்டையா இது சின்னப் புள்ளமாதிரி. எல்லாருக்கும் தைரியஞ் சொல்ற நீங்களா இப்படி.''

அவனால் அவரது அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அழுது ஓயட்டுமென்று அவரை அருகிலுள்ள புளியமரத்தடியில் உட்காரவைத்துவிட்டு வெறிபிடித்தவன் போல ஸ்டேஷனை நோக்கி ஓட ஆரம்பித்தான்.



ஓவியம்: மணிவண்ணன்

சிறுகதை

பரிகாரம்

பாஸ்கர்சக்தி

ராமேஸ்வரம். கொஞ்சம் சுமாரான லாட்ஜ். அதோடு சேர்ந்த டார்மெட்ரி.. ஜன்னலைத் திறந்து வெளியில் பார்த்தேன். எதிர்சாரிக் கடையில் மஞ்சள் நிறத்தில் திக்கான மசாலா பாலை வட இந்தியக் குடும்பம் ஒன்று, பாற்கடல் அமுதமாக பாவித்து குடித்துக் கொண்டிருந்தது. அந்தக் குடும்ப அங்கத்தினர்கள் ஏழெட்டுப் பேர் இருக்கும். எல்லோரும் கோதுமை நிறத்தில், குறுணிப் பிள்ளையார் சைஸில் இருந்தனர். பல்லாயிரம் லிட்டர் மசாலா பாலை இது நாள் வரை குடித்துக் கழித்திருப்பார்களாக இருக்கும்.

டார்மெட்ரியில் படுத்துக் கிடந்த என் பங்காளிகளைப் பார்த்தேன். எல்லோரும் கருவேலமரக் கட்டைகளைப் போல நிறமும், சைஸுமாக இருந்தார்கள். என்னையும் சேர்த்து இருபத்து மூன்று பேர். மூன்று தாத்தாக்களின் உழைப்பு. தாத்தாக்கள் தங்கள் வீரிய விதைகளை தோட்டங்களிலும், வீட்டிலும் ஓயாது விதைத்து விட்டுப் போய்ச் சேர்ந்து விட்டார்கள். ஜமக்காளம் போல அகலமான நிலங்கள், இத்தனை பங்காளிகளும் பிரித்துக் கொண்டதில் எல்லாருக்கும் ரிப்பன் அல்லது கோமணத்துண்டுகள்தான் மிஞ்சின. சிலர் மில் வேலை, சிலர் கூலி வேலை. சிலர் டெய்லர் வேலை என்று உழல்கிறார்கள். ஒரு பயலுக்கும் வாழ்க்கையில் விருத்தி இல்லை. பசையில்லாத வாழ்க்கை. இந்த உண்மை எல்லாருக்கும் தெரிந்த ஒன்றுதான்.

இருந்தாலும் இந்த முறை பொங்கலுக்கு குலசாமி கோயிலில் கூடிக் குலவையிட்ட போது அங்குத்தாய்க்கு சாமி வந்து அது, ''எலேய், எம் பொறந்த வீட்டுல ஆம்பளை எவனுக்கும் பொழைப்பு விருத்தி இல்லடா'' என்று சொன்னது. ''ஆமா, வாஸ்தவந்தான். எல்லாருக்கும் தெரிஞ்ச தகவல்தான். இதை சொல்றதுக்கா சாமி வரணும்? எல்லாரையும் விருத்தி பண்ணி விடறதுக்குத்தானே கொல தெய்வம்னு உன்னை வைச்சிருக்கோம்?'' என்று குணசீலண்ணன் கேட்டார்.'' ஒரு கொறை இருக்குடா, நிவர்த்தி பண்ணுடா என்று சொல்லி சாமி எஸ்கேப் ஆகி விட்டது.

அதுக்கப்புறம் கும்பலாகப் போய் ஜோசியம் பார்த்தோம். அந்த ஜோசியர் எங்கள் இருபத்து மூவரிடமும் , ஒரு பரிகாரம் செய்ய வேண்டும். அதாவது எல்லோரும் ராமேஸ்வரம் போய் ஒரு கன்றை அந்தணர்க்கு தானமாகக் கொடுக்க வேண்டும். கொடுத்தால் தோஷம் கழியும், விருத்தி உண்டாகும் என்று சொல்லி விட்டார். சாமியும் சொல்லியாச்சு. ஜோசியரும் சொல்லியாச்சு. அப்புறம் என்ன?

ஒரு கன்றுக்குட்டியை சந்தையில் பிடித்து, டெம்போவில் ஏற்றிக்கொண்டு ராமேஸ்வரம் வந்து விட்டோம். இருபத்து மூவர் உற்சவம். அனைவரிடமும் காசு வசூல் பண்ணி, செலவுகளைப் பங்கிட்டுக் கொண்டு கிளம்பி வந்திருக்கிறோம். இப்படி வருவதில் ஒரு சந்தோஷமும், கொஞ்சம் எரிச்சலும் உண்டு. டீக்கடையில் இருபத்து மூன்று பேருக்கு வடையும், டீயும் ஆர்டர் பண்ணிக் குடிக்கும் ஒரு சின்ன வேலைக்கு, ஏதோ பாலம் கட்டுவது போல பரபரப்புடன் அலப்பறை நடக்கும். டீக்கடைக்காரர்கள் இந்தப் பயலுக எப்படா கிளம்புவாங்கெ? என்கிற மாதிரி முறைப்பார்கள்.

ஒரு வழியாக வந்து விட்டோம். கன்னுக் குட்டி கீழே வண்டியில் இருக்கிறது. காவலுக்கு ஒரு பங்காளி இருக்கிறான். காலையில் கன்னுக்குட்டியை தானம் கொடுத்து பரிகாரம் செய்து விட்டால் போதும். எல்லார் வாழ்க்கையிலும் ராமேஸ்வரம் அக்னி தீர்த்தக் கடல் மாதிரி இன்பம் பெருகி விடுமாம்.

எதிர்சாரியில் இருந்த வடக்கத்திக்குடும்பம் போய் விட்டது வேறு ஒரு ஆள் வந்து பாலை வாங்கி ஊதிக் குடித்துக் கொண்டிருந்தார். எங்கோ பார்த்த தெரிந்த முகமாக இருந்தது. ஏதோ ஒரு உணர்வு மனதில் உறுத்த உற்றுப் பார்த்தேன். இப்போது அவர் வாகாக திரும்பி அவரது முகம் நன்கு தெரிய எனக்கு அவரை யாரென்று அடையாளம் தெரிந்து விட்டது.

கேசவன் மாமா. இருபத்தி ஏழு வருடங்களுக்கு முன்னர் காணாமல் போய் விட்ட கேசவன் மாமா. அவர்தானா?, அவர் போலதான் தெரிகிறது.

வேகமாக இறங்கி லாட்ஜை விட்டு வெளியே வந்து கடையை நோக்கிச் செல்ல அந்த நபர் தெருமுனையில் திரும்புவது தெரிந்தது. வேகமாக ஓடித் தெருமுனையை அடைய வலது பக்கம் போய்க் கொண்டிருந்த அவர் நான் ஓடி வருவதை உணர்ந்து சட்டென்று ஒரு சந்தினுள் நுழைந்தார். சந்தை நோக்கி ஓடி உள்ளே நுழைந்தேன். மிகக் குறுகலான சந்து. வேகமாக ஓடி சந்து முனையை அடைந்தேன். அது ஒரு கடை வீதி. நிறைய ஜனங்கள் காய், கீரை, பழம், விளக்குமாறு, பூஜைப் பொருட்கள் எல்லாம் விற்றுக் கொண்டிருக்க சுற்று முற்றும் பார்த்தேன். அவரைக் காணோம்.

★★

லாட்ஜ் வாசலில் குணசீலண்ணன் நின்றிருந்தார், ''எங்கடா போய்ட்டு வர்றே?''

''கேசவன் மாமாவைப் பார்த்தேன் அண்ணே?''

குணசீலன் அண்ணன் முகம் வியப்பில் மாறியது. ''அவரா? நெசமாவா?''

''அவருதாண்ணே,''

''வேற யாராவாவது இருக்கும். அவரு உயிரோட இருக்க சான்ஸ் இல்ல''

''இல்லண்ணே, அவரு முகம் எனக்கு நல்லா ஞாவகம் இருக்கு''

எனது குரலில் இருந்த உறுதியை உணர்ந்து குணசீலண்ணன் வியப்புடன் பார்த்தார்

''அந்த நாள் எனக்கு நல்லா ஞாவகம் இருக்குண்ணே, தலையில அடிச்சுக்கிட்டு அழுது கிட்டே ஓடினாரு மெயின் ரோடு வரைக்கும் நாங்க கொஞ்ச பேரு பின்னாலயே ஓடுனோம். அப்ப வந்த பஸ் ஒண்ணுல சட்டுன்னு தொத்தி ஏறிக்கிட்டாரு. வண்டி போகையில அவரை நல்லாப் பாத்தேன். கேவிக் கேவி அழுதுக்கிட்டே போனாரு. எப்படி அண்ணே அந்த மூஞ்சி மறக்கும்?''.

இருவரும் லாட்ஜ் வாசலில் இருந்த ஒரு நீளக் கல்லில் அமர்ந்தோம்.

''அன்னைக்கி சித்ரா பவுர்ணமிடா. ஊருல திருவிழா நல்லா ஞாபகம் இருக்கு'' என்றார் அண்ணன்.

ஆமாம். அன்று காலையில்தான் அழகர் எழுந்தருளி இருந்தார்.. ஊர் முழுவதும் விழாக் கொண்டாட்டத்தில் திளைத்திருந்தது. மைக் செட்டுகள் அலறிக் கொண்டிருந்தன. நான் அப்போது பள்ளியில் ப்ளஸ் டூ படித்துக் கொண்டிருந்தேன். ராத்திரி பூராவும் ஆடி ஓடி விளையாடி, மலையடிவாரத்தில் ஆரம்பிக்கும் ஊர்வலத்தில் குதிரையுடன் வரப்பு, ஓடை என்று நடையாய் நடந்து வந்து கால் எல்லாம் வலித்துக் கிடந்தது.

ஊருக்குள் ஒரே ரேடியோச் சத்தம். எனவே சைக்கிள் எடுத்துக் கொண்டு மெயின் ரோட்டுக்கு அந்தப் பக்கம் இருக்கும் குளத்தங்கரைத் தோப்பில போய் மாங்காய் தின்னுட்டுப் படுக்கலாம் என்று நாலைந்து பேர் கிளம்பினோம். ஒரு சைக்கிள் எங்களைக் கடந்தது. அதனை ஆண்டவர் அண்ணன் ஓட்ட, பின் சீட்டில் கேசவ மாமா உட்கார்ந்திருந்தார். அப்போது அவருக்கு நாற்பது வயது இருக்கும். ஆண்டவர் அண்ணனுக்கு முப்பத்தி ஐந்து இருக்கலாம்.

இருவரும் பேசிச் சிரித்தபடியே எங்களைக் கடந்து போனார்கள்.

நாங்கள் தோப்பில் மாங்காய் தின்று ஓய்வாக சாய்ந்து இருக்கையில் பெரும் அலறல் சத்தங்கள் கேட்டு ஓடினோம். கேசவன் மாமாவின் தோட்டத்தில் இருந்துதான் சத்தம். ஓடிப்போய் எட்டிப்பார்த்தோம். கீழே இருந்த மோட்டாரை கயிறு கட்டி மேலே தூக்கும் முயற்சியில், பாதியில் கயிறு அறுந்து போக கீழே பெட்டில் நின்றிருந்த ஆண்டவர் அண்ணன் மீது மோட்டார் விழுந்து அவர் தோளை உடைக்க , பாதிக் கிணறில் அமைந்திருந்த பெட் பகுதியில் இருந்து அவர் ஆழ் கிணற்றுக்குள் விழுந்து செத்துக் கிடந்தார். முழங்கால் அளவிருந்த தண்ணீர் ரத்தமாக மாறி இருந்தது.....

எங்களுக்கு அடிவயிறு சுண்டி இழுத்து, காலெல்லாம் வெலவெலத்தது. கரும்பு வெட்டுப் பெண்கள் ஓடி வந்து அய்யோ அம்மா என்று பெருங்குரலில் கத்திக் கொண்டிருந்தனர். கேசவன் மாமா பூவரச மரத்தடியில் தலையிலடித்தபடி பேய் அறைந்த மாதிரி இருந்தார். அழவில்லை. அவர் முகம் வேறு யாரோ போல் இருந்தது.

திடீரென்று எழுந்து ஓடினார். நாங்கள் அவர் பின்னே ஓட, அவர் எதிரே தலைவிரி கோலமாக ஆண்டவர் அண்ணனின் பொண்டாட்டி தனம் மதினி கதறியபடி ஓடி வந்தது.

கேசவ மாமாவைப் பார்த்ததும், ஏதோ சொல்ல முயற்சித்து, வார்த்தை வராமால் ''ஏய்ய்ய்ய்'' என்று ஓலமாக இழுத்து அப்படியே நின்றது.

கேசவ மாமா ஒரு வினாடி நின்று தனம் மதினியைப் பார்த்தவர் மேலும் வேகம் எடுத்து ஓடினார். ஓடியபடியே அழ ஆரம்பித்தார், தலையில் அடித்துக் கொண்டு அழுகையாய் அழுதபடி. அப்படி ஒரு அழுகையை, கேவலை நான் அதன் பின் கேட்டதில்லை. அடிவயிற்றில் பயம் கிளப்பும் கேவல் ஒலி... அய்யோ, போச்சே, போச்சே என்று அரற்றியபடி... நாங்கள் விடாமல் பின்னால் ஓட, மெயின் ரோடு வந்தது. தெக்கே இருந்து ஒரு பஸ் வந்து கொண்டிருந்தது. இவர் வேகமாக கை நீட்ட பஸ் வேகம் குறைய தாவி ஏறினார் கேசவ மாமா. அப்போது நானும் சரியாக பஸ் அருகே வந்து விட்டிருந்தேன். கேசவமாமா என்னைப் பார்க்கவில்லை. கண்களில் நீர் வழிய, அழுதபடியே பஸ்ஸில் இருந்து எங்கள் ஊரைப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தப் பார்வையின் அர்த்தம் அந்த வயதில் புரியவில்லை. பஸ் போய் விட்டது.

அன்று போனவர்தான். அதன் பின் தேடினார்கள். போலிஸில் புகார் கொடுத்தார்கள்.. விளம்பரம் செய்தார்கள். என்ன ஆனார் என்றே தெரியவில்லை. அவரைப் பற்றி பல விதமான கதைகள் மட்டும் அவ்வப்போது ஊரில் கிளம்பும்.- அங்க பாத்தேன்,இங்க பாத்தேன் என்பார்கள். செத்துப் போய் விட்டார் என்று கூடப் பேசிக் கொண்டார்கள். காலப் போக்கில் அவரை மெல்ல ஊர் மறந்து விட்டது.

★★★

காலை. அக்னிதீர்த்தம் அருகே இருபத்து மூன்று பேரும் வேட்டி மட்டும் கட்டி உக்கார்ந்து அய்யர் சொன்ன மந்திரங்களை வாய்க்குள் முடிந்த வரை முணுமுணுத்து பூஜையை முடித்தோம், கன்னுக் குட்டி அய்யருக்கு தரப்பட்டது. அதோடு காணிக்கையாக ஐயாயிரம். வாங்கி மடியில் கட்டிய அய்யர் ஓரமாக நின்றிருந்த ஒரு ஆளிடம் சைகை காட்ட அவன் கன்றுக்குட்டியை இழுத்துக் கொண்டு போனான். அருகில் அமர்ந்திருந்த தாமோதரன் என் காதில் முணுமுணுத்தான். ''நாலு வருசத்துல இது பெருசாயிரும். ரெண்டு லச்சத்துக்கு வித்துருவாரு சாமி,'' என்று வயிற்றெரிச்சலுடன் சொல்ல, இந்தப் பக்கம் இருந்த ராமையா ''ஆமா, இந்த அய்யருக்கு கன்னுக்குட்டி குடுக்கறதுக்கு பதிலா நாம பத்து மாடு வாங்கி மேய்ச்சாலே விருத்தி ஆயிரலாம்'' என்று சொல்ல குணசீலண்ணன் எங்களை ''ப்ச்! சும்மாருங்கடா! என்று அதட்டி அடக்கினார்.

பிறகு கோயிலின் தீர்த்தக் கிணறுகளில் நீராடி விட்டு, சாமி கும்பிட்டு விட்டு கிளம்பத் தயாரானோம். கடைசி நிமிடத்தில் என் மனதில் ஏதோ தோன்றியது. என் சித்தப்பா மகன் ராமையாவிடம். ''ராமையா, இவங்க போகட்டும், நீயும் நானும் மட்டும் இருந்துட்டு நைட்டு போகலாம்'' என்றேன். ராமையா சரி என்று தலையாட்டினான்.

குணசீலண்ணன் முறைத்தார், '' ஒங்க ரெண்டு பேருக்கு மட்டும் என்ன தனி வழியாடா?''

''இல்லைண்ணே, தங்கி சினிமா கினிமா பாத்துட்டு, நாளைக்கி மதுரைக்குப் போயிட்டு அங்கருந்து வர்றோம்''

''சரி, என்னமோ செய்ங்க''.

அவர்கள் கிளம்பிப் போன பின்பு ராமையா கேட்டான். ''எதுக்குண்ணே இருக்கச் சொன்ன?''

''இங்க ஒரு ஆளைத் தேடணும்டா?

''யாரு?''

''கேசவ மாமா''

''நெசமாவா!!!... இங்கியா இருக்காரு?''

''நேத்துப் பாத்தேன். பின்னாலயே போனேன். ஓடிட்டாரு''

''உன்னைய அவருக்கு அடையாளம் தெரியாதே. சின்னப் புள்ளையில பாத்திருப்பாரு. இப்ப நீ வேற மாதிரி இருக்கியேண்ணே?''

''என்னையை ஏதாச்சும் திருடன், ரவுடின்னு நினைச்சு இருக்கலாம். பின்னாலயே விரட்டிப் போனேன். பயம் வருமில்ல''

''கரெக்ட்டுதான்... அவருதானா? சரியாப் பாத்தியா? செத்துட்டாருன்னு எல்லாம் சொன்னாங்களே?''

''அவராத்தாண்டா இருக்கணும்...''

...அன்று முழுவதும் தேடினோம். தெருத்தெருவாக நடந்து பார்த்தோம். சாயங்காலம் கடல் பக்கம், கோவில் வாசல் எங்கும் அவர் தட்டுப்படவில்லை.

ராத்திரி ஆயிற்று. எனக்கு ஏதோ ஒரு உள்ளுணர்வு சொல்ல அந்த மசாலா பால் கடை அருகே ராமையாவுடன் காத்திருக்கத் தொடங்கினேன். மனிதன் பழக்கத்தின் அடிமை. மாமா இங்கே வரக் கூடும்.

என் எண்ணம் பொய்க்கவில்லை. அவர் வந்தார். கேசவ மாமாவேதான். முடி முழுக்க நரைத்திருந்தது. மீசையை வழித்திருந்தார். நாங்கள் பார்த்திருந்த அந்த முறுக்கான உடலும், வசீகர முகமும் இல்லை. கைவிடப்பட்ட ஒரு முதியவர் போலத்தான் இருந்தார். பார்வையில் ஒரு கனம் இருந்தது. அவர் பாலை குடித்துக் கொண்டிருக்க அருகே போய் அமைதியாக இருந்தேன். அவர் என்னை உணரவேயில்லை. எங்கோ பார்த்தபடி பாலை உறிஞ்சிக் குடித்தபடி இருந்தார்.

குடித்து விட்டு மெதுவாக கிளம்ப இந்தப் பக்கம் நானும், அந்தப் பக்கம் ராமையாவும் அவருடன் மெதுவாக நடந்தோம். நான் ''மாமா'' என்று அழைத்தேன்.

சட்டென்று நின்றார்.

''கேசவ மாமா''

என்னைத் திரும்பிப் பார்த்தார். உதடு துடித்தது. சட்டென்று ஓட எத்தனித்தார். நாலு எட்டுத்தான் ஓடினார் ராமையா அவரை தோளோடு சேர்த்து அணைத்துப் பிடித்துக் கொண்டான்.

''மாமோவ், மாமோவ், நாங்கதான் மாமா''

அவர் திமிற முடியாமல் அப்படியே நின்றார்.

''எங்களைத் தெரியலையா மாமா, நான் அழகர்சாமி மகன், இவரு திருமல்சாமி மகன்''

அவர் எங்களிருவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

மெதுவாக அவர் முகம் கனிந்தது. லேசாக கண்கலங்கியது.

''உங்களுக்கு என்னடா வேணும்?''

நான் பேசினேன். ''ஒண்ணும் வேணாம் மாமா, உங்களை இத்தனை வருசம் கழிச்சுப் பாக்குறோம். ஏன் ஓடுறீங்க?''

அவர் பேசாமலிருந்தார்

ராமையா சொன்னான், ''ஏன் மாமா ஊருப் பக்கம் வராம இப்படி சாமியாரு மாதிரி அலையிறீங்க? எதுக்கு இத்தனை வருசம் வரலை?''

அவனையே பார்த்தார்

''நீங்க செத்துட்டீங்கன்னு சொல்றாங்க ஊர்ல''

அவர் நிதானமாக சொன்னார்

''அது நெசம்தான... நாந்தான் அன்னைக்கே செத்துட்டனே?''

நான் ''சாப்பிட்டீங்களா மாமா?'' என்றேன்.

''ம்... பால் குடிச்சேன்ல... அதான் ராத்திரி சாப்பாடு'' என்றார்.

''அப்ப மத்த நேரம்''

''கிடைக்கிறதுதான்... இந்த ஊர்ல அதுக்கெல்லாம் குறையில்ல. பொட்டணம் வாங்கி குடுப்பாங்க. காசும் குடுப்பாங்க... ஜனங்க புண்ணியத்தை நம்புறாங்க இல்லையா?''

நான் அவர் கைகளைப் பற்றினேன், ''மாமா, நீங்க மறந்துட்டீங்களோ என்னமோ, அன்னைக்கி நீங்க அழுதுக்கிட்டே ஓடி பஸ்ஸுல ஏறினப்ப நாந்தான் உங்க பின்னாலயே ஓடி வந்தேன். நீங்க பஸ் படிக்கட்டில இருந்து ஊரைப் பாத்துக்கிட்டே அழுதபடி போனது என் மனசுல இன்னமும் அப்படியே நிக்குது''

முதல் முதலாக அவர் பார்வை வேறு மாதிரி ஆனது. பழைய இறுக்கம் தளர்ந்து நெகிழ்வாக மாறியது.

''அப்படியா? என் கண்ணுல எதுமே தெரியலை. ஆண்டவன் தான். அவன் மட்டும் தான் தெரிஞ்சான்''

கொஞ்ச நேர அமைதிக்குப் பின் நான் கேட்டேன். ''எங்கியாச்சும் உக்காந்து பேசலாமா மாமா?'' ''ம். கடலுக்குப் போயிரலாம்''

★★★

கடல் அலைகள் சீற்றத்துடன் இருந்தன. பவுர்ணமிக்கு முந்தைய நாள். நல்ல வெளிச்சம். மூவரும் ஓரத்தில் இருக்கும் கட்டிடத்தின் படிக்கட்டுகளில் அமர்ந்திருந்தோம். கொஞ்சம் அமைதிக்குப் பின் நேரடியாக அவரிடம் கேட்டேன்.

''ஏன் மாமா, ஆண்டவர் அண்ணன் செத்துட்டாரு. சரி. அதுக்கு ஏன் நீங்க ஊரை விட்டு ஓடி வந்துட்டீங்க?''

அவர் நிதானமாக பதில் சொல்லத் தொடங்கினார். அவர் தலைமுடி காற்றில் அலைபாய்ந்தபடி, நிலவொளியில் இன்னும் வெண்மையாக இருந்தது.

''தலைவிதி இருக்கில்ல. அதை எழுதும் போது சமயத்துல சாமிக்கி கை வலிக்கும். எந்திரிச்சுப் போயிட்டு வந்து செத்த நேரம் கழிச்சு ஒக்காந்து விரலை எல்லாம் சொடக்கு விட்டுக்கிட்டு மேற்கொண்டு எழுத ஆரம்பிப்பாரு. அன்னைக்கி என் தலையெழுத்தை எழுதையில் சொடக்கு விட்டாரா, சுருக்குன்னு வலிச்சிருச்சு போல. அந்த வலியை எனக்கு எழுதுன எழுத்துல காட்டிட்டாரு... அன்னைக்கி...

காலையில தோட்டத்துக்கு போனேன். ஊருல திருவிழான்னாலும் தோட்டத்துக்குப் போகாம இருக்க முடியாதுல்ல... பாத்தா மோட்டாரு காயில் வெந்து கெடக்கு. கன்டென்ஸரு எல்லாமே போச்சு... கரும்பு போட்டிருக்கோம். பாதித் தோட்டம் தண்ணி பாயலை... கரெக்டாப் பாயாட்டி கரும்பு வறட்சி குடுத்து வெல்லம் தேறாதுல்ல?, அதனால வேற மோட்டாரை உடனே ரெடி பண்ணிட்டேன்...

பெட்டுல இருக்க பழைய மோட்டாரை மேல தூக்கிட்டு, புது மோட்டாரை பெட்டுல எறக்கி மாட்டி விட்டுட்டா வேலை முடிஞ்சிரும். திருவிழா நாளு ஒரு பய கூட வேலைக்கி வர மாட்டேங்கிறான். சரி ஆண்டவரும் நானுமா சேந்து செஞ்சிரலாம்னு நினைச்சேன். இது மாதிரி எத்தனையோ வேலைகளை ஒண்ணாச் செஞ்ச ஆளுகதான நாங்க?.''

நானும் ராமையாவும் துளியும் கவனம் சிதறாமல் கேட்டுக் கொண்டிருந்தோம்.

''ஆண்டவரு வீட்டுக்குப் போனனா? தனம் திண்ணையில இருந்துச்சு. வாண்ணேன்னு சொல்லி பொங்கச் சோறு குடுத்துச்சு. சாப்பிட்டுக்கிட்டே மாப்ளைக்கு ஒரு சோலி இருக்குன்னு சொன்னேன். ''கொஞ்சம் உடம்பு வலின்னு சொன்னாருண்ணே, வேற யாரையாவது கூப்புட வேண்டியதுதான? அப்படின்னு சொல்லுச்சு. அதுக்குள்ள ஆண்டவரு வெளியில வந்தான். விசயத்தை சொன்னதும் 'இப்பவே போலாம்னு கௌம்பிட்டான். தனம் சொல்லுச்சு ''மேலுக்கு சரியில்லாதப்ப கெணத்துல இறங்காட்டி என்ன?''அப்படின்னுச்சு. 'அதெல்லாம் பாத்துக்கிரலாம்னு ரெண்டு பேரும் கௌம்பிட்டோம்.

சைக்கிள்ல போனோம். எதுத்தாப்ல வந்த ராமரை மட்டும் ஒத்தாசைக்கு கூட்டிக்கிட்டு போய் பழைய மோட்டாரை கழட்டுனோம். பெட்டுல ஆண்டர் நின்னுக்கிட்டு மோட்டாரை கழட்டி கயித்துல கட்டி மேல அனுப்புனான். கமலைச் சக்கரத்துல வைச்சு நானும் ராமரும் இழுத்தோம்... நல்ல கனமான இரும்பு மோட்டாரு. கயிறு பலம் கம்மி போல பாதிக் கிணறு வரைக்கும் மோட்டார் வந்துருச்சு. கீழே இருந்துக்கிட்டே ஆண்டவரு ''ம் இழு இழு''ன்னு சத்தம் குடுத்துக்கிட்டே இருக்கான். நாங்களும் இழுக்கிறோம். அப்பத்தான்... அவரது தொண்டை கமறியது.

''... அப்பத்தான் கயறு அறுந்துச்சு. கனமான மோட்டாரு, பெட்ல நிக்கிற ஆண்டவர் மேல நேராப் போச்சு. பதறி ஒதுங்கினவன் தோள்ல விழுந்துச்சு... அப்படியே தோள்பட்டை பொளந்து ரத்தம் கொட்ட கிணத்துக்குள்ள போய் விழுகிறான். மோட்டாரும் பின்னாலயே போயி அவன் மேல விழுகுது... தண்ணி பூராம் ரத்தக்காடு ஆயிப் போச்சு'' சொல்லி முடித்தவர் குரல் கர கர என்று ஆகி லேசாக விசும்பினார், செருமினார்.

''கொலைதானய்யா இது. திருவிழா அன்னைக்கி, தேடிப் போயி, அவன் பொண்டாட்டி

சொல்லச் சொல்லக் கேக்காம கூட்டிட்டு வந்து...'' உடைந்து விசும்பினார், ... ''ரெண்டு துண்டா பிஞ்சு போய்ட்டான்யா அவன்!!!''

அமைதியான இருளில் கொஞ்ச நேரம் அவர் விசும்பல் மட்டும் கேட்டது.

''அதோட எல்லாம் முடிஞ்சு போச்சு. அவன் செத்துப் போயிட்டான். கூடவே நானும் பொணமாயிட்டேன்யா. நம்ம ஊர்ல எப்படி நான் நிப்பேன்?. எப்படி எல்லார்கிட்டயும் பேசுவேன்?. அவன் பொண்டாட்டியையும், புள்ளையையும் கண் கொண்டு பாக்க முடியுமா என்னால? சோறு உள்ள போகுமா? கொலை பாதகன் இல்லையா நானு?''

அவர் குரல் மிகவும் ஓங்கி ஓங்கி உச்சாடனம் போல பதறிப் பதறி விண்ணைத் தொட்டது.

''நானும் அதே கெணத்துல அங்கியே குதிக்கலாம்னு நினைச்சேன். முடியலை. பயம்... உசுரு பயம். வலி பயம்... வேற என்ன செய்ய? ஓடு... உன் வாழ்க்கை முடிஞ்சு போச்சு ஓடு அப்படின்னு மனசுல பட்டுச்சு. ஓடினேன்... பஸ்ல தொத்திக்கிட்டேன்... தொத்தி ஏறி நின்னேன் பாரு... அந்த நிமிஷம்... அந்த நிமிஷம் இருக்கே... என்னால அதை இன்னும் மறக்க முடியலை... தாங்க முடியலை. இத்தனை வருசம் பொறந்து வளர்ந்த எடத்தை விட்டு இப்படி ஒரேயடியா, ஒரே ஒரு நிமிஷத்துல போறோமேன்னு.. மனசு பதறுச்சு... என் சாவுதான் என்னை ஊரை விட்டுக் கொண்டு போகும்னு நினைச்சேன். ஆனா ஆண்டவன் சாவு அதை செஞ்சுருச்சு...''

அழுதார். எங்களது கண்களும் கலங்கின.

ஒரு அமைதி நிலவ ஆரம்பித்த போது நான் பேசினேன்.

''மாமா, இது நடந்து இருபத்தி ஏழு வருசமாச்சு. இத்தனை வருசமா அத்தையைப் பத்தியோ,உங்க புள்ளைகளைப் பத்தியோ நீங்க நினைக்கலையா?''

''அதெல்லாம் நினைப்பேன். ப்ச்! என்ன செய்ய முடியும்? கைமீறிப் போனதை எல்லாம் நினைச்சு என்ன பண்ண? பிரயோசனம் என்ன? ம்?''

ராமையா சொன்னான் ''உங்க மக சாந்திக்கு கல்யாணம் ஆயிருச்சு.. ஒரு புள்ளை இருக்கு.''

''அப்படியா!'' மாமா குரலில் பெரிய உணர்ச்சி எதும் இல்லை. ''சரவணன்?''

''அவன் சென்னையில வேலை பாக்கிறான். வேற சாதிப் பிள்ளையைக் கட்டிக்கிட்டான். லவ் மேரேஜ். ஊருக்கு அதிகம் வர்றதுல்லை''

''ம்... சரிதான். மீனாச்சி எப்படி இருக்கா?'' பெருமூச்சு விட்டார்.

நான் சொன்னேன். ''அத்தை நல்லாத்தான் இருக்காங்க மாமா.''

''இருக்கட்டும்''

''மாமா, உங்க குடும்பம் மட்டுமில்ல... ஆண்டவர் அண்ணன் வீட்டிலயும் எல்லாம் நல்லாத்தான் இருக்காங்க. புள்ளைக தலை எடுத்துட்டாங்க...''

அவர் அமைதியாக இருந்தார்.

''எதுக்கு நீங்க இன்னும் இப்படி ஒளிஞ்சு அலையணும். ஊருக்கு வாங்க. யாரும் எதும் சொல்லப் போறது கெடையாது. வந்து ஊரோட இருங்க...''

ராமையா சொன்னான்,'' அண்ணன் சொல்றது கரெக்ட் மாமா. எதுக்கு இப்படி அனாதையா கெடக்கணும்... வாங்க... அத்தைக்கும் சந்தோசமா இருக்கும். இப்ப வரைக்கிம் நீங்க இருக்கீங்களா செத்தீங்களான்னு தெரியாம நொந்துக்கிட்டு கெடக்குது பாவம்''

அமைதியாக இருந்தார் மாமா. நள்ளிரவாகி இருந்தது. கடலில் லேசான அலை சத்தம், சில நாய்க்குரைப்புகள் தவிர பேரமைதி.

''நான் வரலையய்யா''

நாங்கள் திகைத்தோம்.

''வரலையா? ஏன் மாமா? அதான் பிரச்சினை எதும் இல்லைன்னு சொல்றோமே. அங்க வீடு இருக்கு. அத்தை இருக்காங்க... மிச்சமிருக்க காலத்துல ஊருல நிம்மதியா இருக்கலாமே?''

''ம்ஹூம் வேணாம். இருபத்தி ஏழு வருசமா இல்லாத சவுரியமும், நிம்மதியும் இனி அந்த ஊர்ல கெடைச்சா என்னா, கெடைக்காட்டி என்னா?''

''இது என்ன மாமா பைத்தியக்காரத்தனம்... பிச்சைக்காரன் மாதிரி இப்படி அலையறதுக்கு ஊர்ல இருக்கறது மேலு இல்லையா?''

''இந்த பாருய்யா, நான் வரலைன்னா விட்டுருங்க... வம்பு செய்யக் கூடாது... என்ன?''

எங்கள் இருவருக்கும் புரியவே இல்லை. இவர் ஏன் இதை மறுக்க வேண்டும்.

''மாமா, வம்பெல்லாம் பண்ணலை நல்லா யோசிச்சுப் பாருங்கன்னு சொல்றோம்.''

அவர் இருட்டில் எங்கள் இருவரையும் பார்த்தார். இத்தனை நேரத்தில் முதல் முதலாக பாக்கெட்டிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தார்... நெருப்பின் வெளிச்சத்தில் அவர் முகம் மின்னியது.

''சொல்லுங்க மாமா''

புகையை ஆழமாக இழுத்தார்.

''வர முடியாதுடா... வர முடியாது''

''ஏன் மாமா?''

''ஆண்டவர் இருக்கானே, அவனை தனியா விட்டுட்டு எப்படி வர்றது''

நாங்கள் இருவரும் சட்டென்று அதிர்ந்தோம்... என்ன சொல்கிறார் இவர்?

''மாமா, என்ன மாமா சொல்றீங்க?''

''என் கூட ஆண்டவர் இருக்கானே, அவனை விட்டுட்டு வர முடியாதுல்ல?''

நான் வாட்சைப் பார்த்தேன். நள்ளிரவு மணி 12:30 ஆகி இருந்தது. அலைகளின் சத்தமும், மாமாவின் பேச்சும் பீதியைக் கிளப்ப, நடுங்கும் குரலில் கேட்டேன்.

''ஆண்டவர் அண்ணன் தான் செத்துட்டாரே மாமா?''

''திரும்ப வந்துட்டாண்டா''

''என்னது?''

இருவருக்கும் நாக்கு வறண்டு போனது

''ஆமா. ஊருல இருந்து கிளம்பி இமயமலைப்பக்கம் போய்ட்டேன். அங்க சிம்லா, அப்புறம் நைனிடால் எல்லாம் சுத்தினேன். கால் நடையாப் பிச்சை எடுத்தேன். காசியில ரொம்ப வருஷம் இருந்தேன். அதுக்கப்புறம் ஏதோ ஒரு ஊருல சாமியாருங்க கூட்டத்தில இருந்தேன். அப்பறம் ஆந்திராவுக்கு வந்துட்டேன். ஒரு நாளு ஒரு மண்டபத்துல நல்ல காய்ச்சலாக் கெடந்தேன். அரை மயக்கம். அப்ப யாரோ பக்கத்துல வந்து உக்காந்து என்னான்னு கேட்ட மாதிரி இருந்துச்சு. நான் எல்லாத்தையும் சொல்லி அழுதுக்கிட்டே கிடந்தனா? கண்ணு முழிச்சு சரியானதும் எதிர்ல ஆண்டவர் உக்காந்திருக்கான். ''ஒண்ணும் கவலைப்படாத. நான் வந்துட்டேன், இனிமேல் ஒண்ணாவே இருப்போம்'' அப்படிங்கறான்.

எனக்கு உடல் எல்லாம் வியர்த்தது.

''அதுக்கப்புறம் என் கூடவேதான் இருக்கான்''

எனக்கு என்ன எழவுடா இது என்று கைகால் எல்லாம் உதறியது.

கொஞ்சம் சுதாரித்துக் கொண்டு பிறகு பேசினேன்.

''மாமா, அது உங்க மனசுல ஏற்பட்ட ஒரு நினைப்பு. உண்மை கிடையாது. சரியா?... நீங்க நான் சொல்றதைக் கேளுங்க''

அவர் உறுதியாக மறுத்தார்.

''ம்ஹூம், நினைப்பெல்லாம் இல்லை. அவன் என் கூடத்தான் இருக்கான். ராத்திரியில ரெண்டு பேரும் இங்கதான் தூங்குவோம். இப்ப அவன் வந்துருவான். நீங்க கிளம்புங்க... ம்''

ராமையா என் காதில் கிசுகிசுத்தான், ''அண்ணே, இந்தாளு முழு மென்டல் ஆயிட்டான் போல, பயமா இருக்கு. வா போயிரலாம்''

''இல்லடா, இவரு தெளிவாத்தானே பேசறாரு''

''அண்ணே, பயமா இருக்குண்ணே. இது அனாவசியமான தொரட்டு நமக்கு. வா போய்ரலாம்''

நான் தொண்டையை செருமினேன்.

''மாமா, அவரு நெசமாவே இப்ப வருவாரா?''

''ஆமா, வருவான். நான் எதுக்கு பொய் சொல்லப் போறேன்?''

சொல்லியபடியே இன்னொரு சிகரெட்டை பற்ற வைத்தார்.

''மாமா...''

''அந்தா வர்றான் பாரு ஆண்டவன்''

மாமா எரியும் சிகரெட்டுடன் கை நீட்ட, அங்கே ஒரு சந்தில் இருந்து ஒரு நபரின் உருவம் வந்து கொண்டிருந்தது.

எனக்கு இதயம் படபட என்று அடிக்கத் துவங்கியது. வேர்க்க ஆரம்பித்தது.

ராமையா என் கையை இறுகப் பற்றிக் கொண்டான்

மாமா சொன்னார், ''இவன் திரும்பி வந்த பிறகுதான் எனக்கு மனசு சமாதானம் ஆச்சு மாப்ளை. விதியை எழுதுன சாமி இன்னொரு சொடக்குப் போட்டுட்டு இப்படி எழுதிருச்சு போல...''

அந்த உருவம் எங்களை நோக்கி நேராக, நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருந்தது. நிலவின் வெளிச்சத்தில் பார்த்தேன். சட்டை, இடுப்பில் வேட்டியுடன் நிதானமான ஒரு நடை முகம் தெரியவில்லை.

''அவன் கூட நீங்க ஒண்ணும் பேச வேணாம். போயிருங்க. ஊர்லயும் யாருகிட்டயும் சொல்ல வேணாம்'' என்றார் மாமா.

ராமையா நடுங்கும் குரலில் ''என்னா அண்ணே நடக்குது?''

''தெரியலைடா... பயமா இருக்கு''

''ஆமாண்ணே''


உருவம் இன்னும் கிட்டே வந்தது.

உற்சாகமான குரலில் மாமா அழைத்தார்.

''மாப்ளை! ஆண்டவரு!!''

அந்த உருவம் அதே உற்சாகத்துடன் பதிலளித்தது.

''என்னா மாமா? லேட்டாயிருச்சா?''



ஓவியம்: ரவி

சிறுகதை

பூக்குழி

தேனி சீருடையான்

வேலை வேக வேகமாய் நடந்தது. பெரும் சேவல் ஒன்றைப் பலிகொடுத்து, மஞ்சத் தண்ணி தெளித்து, பத்தடி நீளம், நாலடி அகலம், மூன்றடி ஆழப் பள்ளம் தோண்டப்பட்டது. நான்கு புறமும் வீடு கட்டுவது போல உள்வாங்கில் செங்கல் அடுக்கி மண் சாந்தால் பூசினார்கள். அடிக்குழியிலும் செங்கல் பாவி சமப்படுத்தினர். தீக்கங்கு அங்குட்டும் இங்குட்டும் நழுவாமல் இருக்க வேண்டுமல்லவா? தோண்டியவர்களும் கட்டியவர்களும் விரதமிருந்து பய பக்தியோடு பணி செய்தனர்.

குழி வெட்டி முடிந்ததும் பூசாரி வந்து பார்த்தார். குழிக் கட்டுமானத்தைக் கையாலும் காலாலும் தொட்டும் மிதித்தும் அதன் உறுதித் தன்மையை உறுதிப்படுத்தினார். ''அம்சமா இருக்கு'' என்று புன்னகை மொழியால் பாராட்டினார். கொத்தனாருக்கு மிக்க மகிழ்ச்சி. ''ஆத்தா நல்லது செய்வா'' என்று மனசுக்குள் நினைத்துக் கொண்டார்.

சாமி கும்பிட வந்த சகோதரிகளான அருணாவும் சாந்தியும் குழியை எட்டிப் பார்த்தனர். ''எதுக்குக்கா?'' என்றாள் சாந்தி.

''இது பூக்குழி'' என்று அருணா பதில் சொன்னாள்.

''அப்படின்னா?''

''தீக்கங்குல எறங்கி நடப்பாகள்ல? போன வருசங்கூடப் பாக்கலையா?''

சாந்திக்குப் புரிந்தது. ஒவ்வொரு திருவிழாவின் போதும் முக்கிய நிகழ்வு பூக்குழி இறங்குதல். ''எப்ப நடக்கும்?''

பூசாரி தனது அங்கவஸ்திரத்தை சரிசெய்து கொண்டு ''ராத்திரி எட்டு மணிக்கி'' என்று சொல்லியபடி கருவறை நோக்கி நடந்தார்.

அம்மன் கோயில் பிரகாரத்தில் ஒலிபெருக்கி விளம்பரம் செய்து கொண்டிருந்தது. ''நேர்த்திக்கடன் போட்ட பக்தர்களும் நேர்த்திக்கடன் போடாத பொதுமக்களும் வந்திருந்து பூக்குழி இறங்கும் வைபவத்தை நடத்தித் தருமாறும் அம்மன் அருள்பெற்றுச் செல்லுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.''

கோயில் தர்மகர்த்தா வந்து பார்த்துவிட்டு ''தொடரட்டும்'' என்று கண்களால் ''ஆணை''யிட்டார்.

தீக்கங்கு உருவாக்கும் பணி துவங்கியது. அடியில் வேப்பங்குலைகளை நிரவி அதற்குமேல் காய்ந்து கனல்பரந்த வேப்பஞ்சிறகுத் துண்டுகளை அடுக்கினார்கள் எடசந்து இல்லாமல் விறகு நிரப்பப்பட்டது. அனைத்தும் முண்டு முண்டாய் இருந்த பெரும் கட்டைகள். ஒரு பெரிய மரத்தையே வெட்டிக் காய வைத்து விறகு ஆக்கியிருப்பார்கள் போலும் என்று அருணாவுக்குத் தோன்றியது.

வேடிக்கை பார்த்த அனைத்து மனிதர்களையும் வெளியேறும்படி கட்டளையிட்டார் தர்மகத்தா. ''இப்பப் போய்ட்டு நைட்டு எட்டுக்குள்ள வந்துருங்க.''

அதன் பிறகு குழியைச் சுற்றிப் பெரும் படுதாவால் மறைப்புக் கட்டி விறகு அடுக்கை தும்சுக் கட்டையால் அமுக்கி உள் இறுக்கினார்கள். கீழே இறங்க இறங்க இடைவளியை வேப்ப முண்டுகளால் இட்டு நிரப்பினார்கள். சம நிலைக்கு வந்த பிறகு பூசாரி மரக்கா நிறைய விளக்கெண்ணை கொண்டுவந்து விறகுப் பரப்பில் ஊற்றி விட்டார். அங்கிங்கெனாதபடி எங்கும் எண்ணை பரவி விரவியது. பெரிய தாம்பூலத் தட்டு நிறைய சூடம் அள்ளிவந்து தூவினார். கரண்டி போன்ற இரும்புக் கலசத்தில் தீபம் ஏற்றி அம்பாளுக்கும் கோபுரக் கலசத்துக்கும் காட்டிவிட்டு, குழிக்கருகில் வந்து அனைவரையும் கும்பிடச் சொன்னார். முதலில் தர்மகர்த்தாவும் அதன் பிறகு கொத்தனார்கள் உள்ளிட்ட ஊழியர்களும் பவ்வியமாய்ப் பணிந்து தீபத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டனர். பூசாரி உயர்த்திப் பிடித்து வான தேவதைக்கும் சூரியனுக்கும் காட்டிவிட்டுப் பூக்குழிமேல் கவிழ்த்தினார். சூடமும் எண்ணையும் பற்றி மளமளவென எரியத் தொடங்கியது. கட்டுக்கடங்காத அனலைக் கக்கிக் கொண்டு மேல்நோக்கி எழுந்து பரவியது. அதன் வீரியத்தைக் குறைக்கும் விதமாக வேப்பந் தழைகளால் போர்வை போல் மூடினார். ஜுவாலை மட்டுப்பட்டு விறகு நின்று எரிந்தது.

ஐந்து நிமிட இடைவெளிக்குப் பின் தர்மகர்த்தா கேட்டார். ''தீ நல்லாப் பிடிச்சுக்கிடுச்சுல்ல?''

''தீ இல்ல; பூ'' என்றார் பூசாரி.

கனகனவென எரிந்து வான் நோக்கி எழுந்தபோது ''ஆத்தாளோட ஆகுதி ஆகாயம் வர பரவுது பாத்தேளா?'' என்றார் பூசாரி.

எரிய எரிய விறகு இறங்கி இடைவெளி உண்டானது. இன்னும் அதிகப்படியான விறகுகளை இட்டு நிரப்பினார்கள். குழியின் மேல் விளிம்புக்குச் சமமாய் தீக்கங்கு இறுகி நின்றது. இன்னொரு முறை தும்சுக் கட்டையால் அமுக்கி இடைவெளிகளில் சின்னச் சின்ன சிறகாய்களைத் திணித்துச் சமப்படுத்தினார்கள். எரிந்து கனன்று கங்கு ஆனது விறகு. இரவு நிலாவைப்போல் அல்லது பகல் சூரியனைப்போல் பூக்குழி காட்சி தந்தது. அனைவருக்கும் ஏக சந்தோஷம். ''அந்த மாரியாத்தா கண்ணு மாதிரியே இருக்கு'' என்றார் தர்மகர்த்தா.

அருணாவும் சாந்தியும் முத்தரசியக்காவும் இரவு ஏழு மணிக்கெல்லாம் வந்து முன் வரிசையில் அமர்ந்தார்கள். அருணாவின் அம்மா இறந்த பிறகு பக்கத்துவீட்டு மணியாசாரி மகள் முத்தரசிதான் அவர்களுக்குக் கைத்துணை. சினிமாவுக்குப் போவதானாலும் கடைகண்ணிக்குச் சென்று வருவதென்றாலும் முத்தரசிதான் அழைத்துச் சென்று வருவாள்.

ஒலிபெருக்கியின் ஆன்மீக கானம் கோயில் வளாகத்தைத் தாண்டி ஊரெங்கும் வீதியெங்கும் வீடெங்கும் பரவியது..

நேர்த்திக் கடன் போட்ட ஆண்களும் பெண்களும் குழியின் தலைமாட்டில் வரிசையாய் நின்றனர். கொட்டடிச் சத்தம் ஊர் எல்லைவரை கேட்டது. ''டிடிவின் டிடிவின் டிடிவிண்டா'', உறுமி முழக்கம் சாந்தியின் நெஞ்சை நீவிக் கொடுப்பது போல் இருந்தது. சட்டை அணியாத கொட்டுக்காரர்களும் சட்டையணிந்து கம்பீரமாய் நின்று வாசித்த நாதஸ்வரக்காரர்களும் வேர்க்க விருவிருக்க இயங்கினர். குனிந்தும் நிமிர்ந்தும் அடித்த கொட்டுக்காரர்களின் ஆட்டமும் ஜெண்டை மேளமும் சுவாரஸ்யமாய் இருந்தன. பறையடி முழக்கம் அனைத்து சப்தங்களையும் அள்ளி விழுங்கி மேலதிக ஓங்காரமாய் உச்சிவானம் வரை எதிரொலித்தது. பல பெண்கள் அந்த ஓங்கார நாதத்துக்குள் மயங்கி அமிழ்ந்து அருள் இறங்கி ஆடினார்கள்.

சாந்தி தீக்குண்டத்தை விட்டுவிட்டு கொட்டடிப்பவர்களையே வைத்த கண் வாங்காமல் பார்த்தாள். பெண்கள் அருளிறங்கி ஆடியதைப் பார்த்த ஒரு பறைய டிக்காரர் பூக்குழியைச் சுற்றி வந்து வேகம் காட்டினார். தீக்குழிக்குள் இறங்கப் போவதுபோல் பாவனை காட்டி அவர் கால்கள் நர்த்தனம் புரிந்தன. ஒருகட்டத்தில் பல்டியடித்துப் பறையடித்தார். பறையடிக்குத் தகுந்து நாதஸ்வரமும் வேகமெடுத்துப் பாடியது. கங்கு கனன்ற குழியைச் சுற்றிலும் அவர் பாய்ந்து பாய்ந்து பல்டியடித்தபோது சாந்தி குதியாளம் போட்டாள். தீயின் அனல் வீச்சு அவரைப் பாதிக்கவில்லையா என்று சாந்திக்குத் தோன்றியது. பறையடித்த கைலாகவமும் உருண்டுபுரண்ட உடல் வேகமும் அவளை வசீகரப்படுத்தியன. தன் உணர்வு இல்லாமல் கைதட்டி ஆரவாரித்தாள். கொட்டு முழக்கமும் நாதஸ்வர ஆலாபனையும்தான் பல பெண்களுக்கு மருள் ஏறி அருள் இறங்கக் காரணமானது.

முதலில் மஞ்சவேட்டி அணிந்த நடுத்தர வயதுக்காரர் ஒருவர் இறங்கினார். அவர் எடுத்து வைத்த ஒவ்வோர் எட்டும் அகல சகலமாய் இருந்தது. கண்மூடித் திறப்பதற்குள் நீளம் கடந்து எதிர்முனைக்குப் போய் நின்றார். அவரை வாங்கிக் கொண்ட அவர் மனைவி பானக்கரம் கலந்த மஞ்சத் தண்ணியைக் குடிக்கக் கொடுத்தார். அலாதியாய் அழைத்துப் போய், அரைத்து வைத்திருந்த அம்மங்காப்பை உள்ளங்காலில் தடவி விட்டாள்.

ஒருவர் ஓடி முடித்தபின் இன்னொருவர் இறக்கி விடப்பட்டார். அவரின் ஓட்டம் முன்னவரைவிட வேகமாய் இருந்தது. அடுத்தடுத்து ஆண்களும் பெண்களும் இறங்கிப் பூக்குழி தாண்டினார்கள். அவர்கள் தார்ப்பாய்ச்சி கட்டியிருந்ததால் வேட்டியோ சேலையோ கங்குக்குள் நழுவவில்லை. நிறைவாகக் குதிரைவண்டிக்காரர் ஒருவர் தன் குதிரையையும் இழுத்துக் கொண்டு இறங்கினார். கோயில் தர்மகர்த்தா உட்பட அனைவரும் ஆச்சர்யமாய்ப் பார்த்தனர். குதிரை தீயில் இறங்குமா? மாரித்தாய் ஏற்றுக் கொள்வாளா?

குதிரை இறங்க மறுத்தது. முன்னங்கால்களை உயர்த்தியும் பின்னங்கால்களால் உதைத்தும் அடம் பிடித்தது.

''குதுரைய எறக்காதப்பா'' என்றார் தர்மகர்த்தா.

''நேத்திக்கடம் போட்டுட்டஞ் சாமி; இங்க வந்துதே(ங்) கங்காணம் கட்டிட்டுப் போனே(ங்) தொழில் படுத்துக்கிருச்சு; இந்த வாயில்லாச் சீவனப் பாத்தாச்சும் ஆத்தா எரக்கப் படமாட்டாளா?''

லகானிலிருந்து விடுபடத் தவுதாயப்பட்டது குதிரை. குழிக்குள் இரண்டெட்டு எடுத்து வைப்பதற்குள் சண்டித்தனம் செய்ய ஆரம்பித்தது. இரும்புலாடம் தீச்சூட்டை அதிகரித்திருந்தது போலும். மளிச்செனத் தவ்வி பக்கவாட்டுத் தடுப்பை உடைத்துவிட்டு வெளியேறியது. குதிரைக்காரரும் முழுமையாய்க் கடக்காமல் குதிரையைப் பிடிக்க ஓடினார்.

குதிரை பாய்ந்த வேகத்தில் கூட்டம் அல்லோலகல்லோலப்பட்டு சிதறியது. சாந்திக்குப் பயம் தொற்றிக் கொள்ள ''வீட்டுக்குப் போவம்; வாக்கா'' என்றாள்.

பூக்குழி தாண்டியவர்கள் கோயில் பிரகாரத்தில் அமர்ந்து அம்மங்காப்பையும் கத்தாழைச் சோத்தையும் தத்தமது பாதங்களில் தடவிக் கொண்டிருந்தனர்.

''இது தேவையா?'' என்றாள் அருணா., ''எதுக்கு எறங்கணும்; எதுக்குத் தும்ப்பபடணும்?''

''நேத்திக் கடம் போட்டா செஞ்சுதான ஆகணும். தீச்சட்டி மாதிரிதே இதும்.; சூடுபட்ட காலுக்கு ஆத்தாவோட அம்மங்காப்ப அரச்சுப் போட்டா ஒருநாள்ல சரியாயிரும்; வெரதம் சரியா இருக்காதவுகளுக்கு ஆறப் பலநாள் ஆகும்; குதுர வண்டிக்காரரு சரியா வெரதம் இருக்கல போல.'' முத்தரசி சொன்னதை ஏற்கவோ மறுக்கவோ முடியவில்லை.

அனைவரும் குழி இறங்கி முடித்தார்கள். யாருக்கும் பூ மிதித்த உணர்ச்சி தோன்றவில்லை. தீ பூவாகுமா என்ன? வாழ்க்கை வெக்கை தீக்குண்ட வெக்கையைவிட அதிகம் என்பதால் குண்டத்தில் இறங்கி தங்கள் துன்ப துயரங்களைப் போக்க மன்றாடினார்கள். முத்தரசி சொன்னார். ''காந்தித் தாத்தா பட்டினி கிடந்து அரசாங்கத்தப் பணிய வச்சாருல்ல? அந்த மாதிரிதேங் இதும்; ஆத்தாள எறங்கி வர வக்கிற வெரதம்.''

நான்கு நாட்கள் கழித்து ஊரெங்கும் ஒரு செய்தி பரவியது. குதிரையின் நான்கு கால்களும் பொத்துப்போய் உடலெங்கும் புண் உண்டாகி செத்துப் போனது. குதிரைக்காரன் தலையில் அடித்து அழுதான். ''தாயே! ஏன் இந்த ஏழைய இப்படிச் சோதிக்கிற?'' என்று கதறினான்.

ஆனால் அடுத்த வருசமும் பூக்குழி இறங்கக் காப்புக் கட்டினான் அவன்.

சிறுகதை

மிதிவண்டிகள் உருண்ட சாலைகள்

ஏக்நாத்

விதவிதமான பைக்குகளில் விதவிதமாகப் பறக்கிறார்கள் மாடர்ன் இளைஞர்களும் இளைஞிகளும். அவர்கள் ஓட்டுகிற, உறுமும் மிரட்டும் சத்தங்களைக் கொண்ட நவீன பைக்குகளின் ரகங்களை, மாநகரச் சாலைகளில் பார்த்தே தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. இரண்டு லட்சம் ரூபாய் கொடுத்து லேட்டஸ்ட் மாடல் பைக் ஓட்டுபவனுக்கு அதற்கடுத்த விலையில் உள்ள, அதை விட பெரிய பைக் வாங்க ஆசையிருக்கிறது. இன்னும் பெருந்தலைகளுக்கெனவே இருக்கிறது ஹார்லி டேவிட்சன்களும் டுகாட்டிகளும். ஆசைகள், கட்டுக்குள் நிற்காதவை.

ஒரே வீட்டில் அம்மா, அப்பா, அண்ணன், தம்பிகளுக்கென ஆளாளுக்கு இருக்கிறது டூவீலர்கள். அனைவரும் வேலை பார்த்தால் பைக் கட்டாயம். அது ஆடம்பரமல்ல. அத்தியாவசியம். வண்டி இல்லாமல் எதுவும் முடியாது என்கிற நிலைக்கு வந்து விட்டார்கள் மக்கள். ஆனால் அப்போது அப்படியில்லை.

சங்கரபாண்டி வீட்டில் கூட்டம் கூடியிருந்தது, பத்து, பதினோறு மணி வாக்கில். வயலில் உழுதுவிட்டு கலப்பையோடு செல்பவர்களும் மாடுகளை மேய்க்கப் பத்திக்கொண்டு செல்பவர்களும் பாண்டியின் வீட்டுக்கு வெளியே நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். பத்தாவது படிக்கும் அவர் மகன், கொம்பன் என்கிற கொம்பையாவுக்கு வாயெல்லாம் பல். அவனால் உட்கார முடியவில்லை. திடீரென எழுந்து நிற்கிறான். அங்கும் இங்கும் நடக்கிறான். எதிர்ப்படுகிற அனைவரிடமும் அவன் சிரிப்பையே உதிர்க்கிறான். காரணம் அவனது அப்பா, கொம்பையாவுக்காக வாங்கி வந்திருந்த ஹெர்குலிஸ் சைக்கிள்.

அலங்கரிக்கப்பட்ட அந்த சைக்கிளை எல்லோரும் சுற்றி சுற்றிப் பார்த்தார்கள். பிறகு ஒரு பக்கமாகப் பார்த்தவாறு, ஆடு மேய்க்கச் செல்லும் கேசரி கேட்டான், 'எங்க வாங்குனதோ...?' என்று.

'தென்காசில'

'அங்கருந்தே தள்ளிட்டே வந்துட்டியோடெ?'

'ஏம்ல, தள்ளிட்டு வரணும்? எனக்குத்தாம் ஓட்ட தெரியுமெ'

'அவ்வளவு தூரத்துல இருந்தா ஓட்டிட்டு வந்தே' என்று ஆச்சரியமாகக் கேட்டான் கேசரி. அவனுக்குப் பொறுமையாகப் பதில் சொல்லிக் கொண்டிருந்தான் சங்கரபாண்டி.

பிறகு ஆளாளுக்கு ஏதாவதொன்றைக் கேட்கத் தொடங்கினார்கள் சைக்கிள் தொடர்பாக.

'ஏம்ல, ராலிய வாங்கிருக்கலாம்லா'

'இதுக்கென்னல கொறச்சலு?'

'அதுன்னா, அழுத்ததுக்கு நல்லா இருக்கும்லா'

'இதும்தான் நல்லாருக்கும்'

'டைனமோ மாட்டலையாடெ'

'ரெண்டு நாளு கழிச்சுதாம்'

'கையோட மாட்டிருக்கலாம்லா...'

'இப்பம்லாம் சைக்கிள்ல பெட்டி மாட்டிருக்காவோள. நீ மாட்டலையோ?'

'இல்ல'

'ஹேண்டில்பார்லயே புக், டிபன் பாக்ஸ் வைக்க மாரி, ஒரு கேரியரு வந்திருக்காம்லா.. அதை கூட வைக்கலாம்'

வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்த சங்கரபாண்டியின் பொண்டாட்டி, 'வாங்க போவும்' என்றாள். அவள் கையில் பெரிய தாம்பூலம். அதில் தேங்காய், பழம், சூடம், பத்தி, வெற்றிலை, பாக்கு, திருநீறு, குங்குமம், சந்தனம் உள்ளிட்ட பூஜை சாமான்கள்.

சிறிது நேரத்துக்கு பிறகு குடும்பம் புடை சூழ, கொம்பையா சைக்கிளை முன்னே தள்ளிக்கொண்டு போனான். அப்போது அவன் முகத்தைப் பார்க்க வேண்டுமே... அவ்வளவு மகிழ்ச்சி. எதையோ சாதித்துவிட்டு நடந்து போகிற பெருமை அவன் நடையில். தெருவில் இருந்து இன்னும் ஏழெட்டு பேர் அவர்களின் பின்னால் சென்றார்கள். கல்யாணத்துக்கு புதுப் பெண்ணை அழைத்துப் போவதை போல போய்க்கொண்டிருந்தார்கள்.


சங்கரபாண்டி மீசையைத் தடவியபடி, ஏதோ ராக்கெட்டையே வாங்கி விட்டது போலத் தெனாவட்டாக நடந்துகொண்டிருந்தார். அவர்கள் போனது, கொம்பையாவின் குலதெய்வமான, கருப்பசாமி கோயிலுக்கு. பேருந்து நிறுத்தத்துக்கு இடது புறத்தில், கருப்பசாமி கையில் வீச்சரிவாளோடு சிலையாக இருந்தார்.

தெருவே, 'எங்க போறாவோ?' என்று வெளியே வந்து இவர்களை எட்டிப் பார்த்து விட்டு, 'புது சைக்கிளு வாங்கிருக்காவோ போலுக்கு' என்றபடி பேசிக் கொண்டார்கள்.

'சங்கரபாண்டின்னே வீட்ல, புது சைக்கிளு வாங்கிருக்காவோ' என்று தகவல்கள் அக்கம் பக்கத்து வீடுகளுக்கும் பறந்தது.

சைக்கிளை யாராவது தொட்டால், 'ச்சே, கைய எடுங்கெ. அழுக்காயிரும்' என்று எச்சரிக்கை செய்தபடியே வந்தான் கொம்பன். சின்னப் பயல்கள் ஓடிவந்து பெல் அடித்து விட்டு பின்னால் ஓடி விளையாட்டுக் காண்பித்துக் கொண்டிருந்தார்கள். கொம்பையாவுக்கு கோபம். சைக்கிளை ஸ்டாண்ட் போட்டுவிட்டு அவர்களை விரட்டத் தொடங்கினான். பிறகு அப்பா சங்கரபாண்டிதான் அவனை சமாதானப்படுத்தி, 'பரவாயில்ல விடுல' என்று அழைத்தார். 'சைக்கிளு அழுக்காயிட்டுன்னா நல்லாவா இருக்கும்?' என்று முனங்கிய கொம்பையா, அடுத்து யாரையும் சைக்கிளைத் தொடவிடவில்லை. குறிப்பாக சைக்கிளின் அருகில் கூட விடவில்லை. ஆனால், அவனது எச்சரிக்கையை மீறி, சைக்கிளை அழுக்காக்குவதில் குறியாக இருந்தார், கோயிலின் மூத்த சாமியும் கொம்பையாவின் பெரியப்பாவுமான பட்சி.

அதாவது கிண்ணத்தில் கரைத்து வைக்கப்பட்டிருந்த சந்தனத்தையும் குங்குமத்தையும் சைக்கிளின் முன் மக்கார்டு, கைப்பிடிகள், இருக்கை, பின் மக்கார்டு, செயின் சுற்றும் இடத் தில் இருக்கும் பெட்டி, பின் மற்றும் முன் பக்க பைதாக்களின் நடுப்பகுதி மற்றும் அவருக்குத் தோன்றிய இடத்திலெல்லாம் தடவி, அதில் குங்குமத்தை வைத்தார்.



ஓவியம்: ஜீவா

'சீட்டுல கூட சந்தனம், குங்குமத்தை இப்படி தடவுதாரே... ஏறி உக்காந்தா டவுசர்ல ஓட்டல்லா செய்யும்' என கவலையில் இருந்தான் அவன்.

பிறகு கருப்பசாமிக்குப் பூஜை செய்யப்பட்டது. சாமக்கொடையில் மாலை அணிவிக்கப்பட்டு பீடத்தின் முன் நிறுத்தப்பட்டிருக்கும் வெள்ளாடு போல, நிறுத்தப்பட்டிருந்தது சைக்கிள். கொம்பையா அதைவிட்டு எங்கும் நகரவில்லை.

பூஜை செய்யப்பட்டு, சைக்கிளுக்குத் தீபாராதனை காட்டியபின், சாமி கொம்பையாவின் நெற்றியில் திருநீறு பூசி, அருள் தந்தார், அதை ஓட்டலாம் என்று.

'ஏல, கொம்பையா, நா எதுதாப்ல வாரேன். நீ சைக்கிள ஓட்டிட்டு வா' என்று அம்மா சொல்லிவிட்டு, கோயிலின் வாசலில் இருந்து கொம்பையாவை நோக்கி அவள் வர, அவன் முதன்முதலாக புது சைக்கிளில் ஏறி அழுத்தினான். குடும்பம் கைதட்டி ஆரவாரம் செய்தது.

ஊரில் இருக்கிற மொத்தத் தெருவையும் முடுக்குகளைக் கூட விடாமல் சைக்கிளில் வலம் வந்தான் கொம்பையா. எதிரில் அவனைப் பார்த்து விட்டு, 'புதுசால?' என்று கேட்கிறவர்களுக்குத் தலையை ஆட்டி பதில் சொல்லிவிட்டு ஆசை தீர அழுத்தினான். தீருவேனா என்கிறது சைக்கிள் ஆசை.

'ஏல அரை டவுசரு. கொண்டால வண்டிய பாப்போம்' என்ற சைக்கிள் கடை தாஸ் மாமாவின் பேச்சை உதாசீனப்படுத்திவிட்டு அவன், நான்காவது முறையாக அந்தக் கடையைக் கடந்தான்.

'என்னைக்குனாலும் எங்கடைக்குத்தாம் வரணும், அப்பம் பிட்டிய நவுட்டுதனா இல்லையான்னு மட்டும் பாரு' என்கிற தாஸ் மாமாவின் வசவுகள் அவன் காதில் விழாது.

இதே தெருக்களில், அரைபெடல் போட்டு சைக்கிள் கற்றபோது அதைச் சொல்லிக்கொடுத்ததும், ஓட்டத் தெரியாமல் விழுப்புண்களோடு விழுந்து கிடந்த போது தூக்கிவிட்டவரும் இந்த தாஸ் மாமாதான் என்பது அவனுக்கும் தெரியும்.

அவர் கடையில்தான் 'கட்ட சைக்கிள்' இருந்தது. சிவப்பு நிற மக்கார்டை கொண்ட அந்த 'கட்ட சைக்கிளு' கடையில் நிற்பதே அபூர்வம். யாராவது வாடகைக்கு எடுத்துச் சென்றுகொண்டே இருப்பார்கள்.

பம்பாயில் ரயில்வேயில் வேலை பார்க்கிற லட்சுமண அண்ணன் கோடை விடுமுறைக்கு ஒரு முறை ஊருக்கு வந்திருந்தான். அவன் மகனுக்காக, மொத்த வாடகை கொடுத்து ஏழு நாட்கள், அந்தக் கட்ட வண்டியை அவன் கொண்டு போக, ஊரே தவித்துவிட்டது தவித்து.

'எப்பம் மாமா, வரும்?' என்று கேள்வி கேட்டு நச்சரித்து விட்டார்கள். நான்கு நாட்களுக்கு வண்டி கிடைக்காது என்பதால், பெரிய சைக்கிளில் அரைபெடல் போட்டு ஓட்ட சொல்லிக் கொடுக்கலானார், தாஸ் மாமா. ஊரில் பல சிறுவர்கள் அப்படி அரை பெடல் போட கற்றுக் கொண்டார்கள். அதில் ஒருவன் கொம்பையா. அந்த உரிமையில்தான் தாஸ் சொன்னார்.

அதற்கு முன், இனி ஒப்பேற்றவே முடியாது என்று தூரப் போடும் நிலையில் இருந்த, தேய்ந்து ஓட்டை விழுந்த வட்டு (சைக்கிள் டயர்) ஒன்று தாஸ் மாமா கடையில் இருந்து அவனுக்குக் கிடைத்தது. சிறு கம்புக்குச்சியால் அதை அடித்துக்கொண்டே ஓடுவான். அதுவே சைக்கிள் ஓட்டுவதற்கு ஒப்பானதுதான். தெருக்கார பயல்களுடன் அதை ஓட்டிக்கொண்டே ஓடுவது சுகமானது. இப்படிக் கூட்டமாக அவர்கள் செல்வதைப் பார்ப்பவர்கள், 'வட்டுக் கிறுக்குப் புடிச்சுலா அலையுதானுவோ' என்று ஏசிக்கொண்டு போவார்கள்.

தாஸ் மாமா சொல்லிய சில மணி நேரங்களிலேயே சைக்கிளை உருட்டிக் கொண்டு அவர் கடைக்கு வந்தான் கொம்பையா. அழுது வீங்கியிருந்தது அவன் கண்கள். கூடவே

அவனது அப்பா, சங்கரபாண்டியும் வந்திருந்தார்.

'என்னடெ, அப்பல கூப்டென், வேகமா போனெ?' என்று கொம்பையாவைப் பார்த்துக் கேட்டார் தாஸ் மாமா.

அவன், கண்ணால் அப்பாவைக் காண்பித்துவிட்டு தலைகுனிந்து நின்றான்.

'இன்னைக்குத்தாம் வாங்கிட்டு வந்தேன் பாத்துக்கெ. அதுக்குள்ள முள்ளுக்காட்டுல விட்டு பஞ்சாரக்கிட்டாம் தாஸு. முன் பைதால ரெண்டு முள்ளு, பின்னால ஒரு முள்ளு பாத்துக்கெ. நாந்தான் புடுங்குனென்... இவனுக்குலாம் சைக்கிளு வாங்கிக்கொடுத்தம் பாரு என்னெய சொல்லணும்' என்று ஏசிக்கொண்டே, 'எதுக்குல முள்ளுக்காட்டுக்குள்ள போனெ?' என்று கொம்பையாவின் பொடதியில் மீண்டும் ஒரு போடு போட்டார். அவன் தலையைத் தடவிக் கொண்டு வலிப்பது போல நடித்தான்.

'அவென போட்டு ஏம் அடிக்கெ? வண்டி வாங்குனா அப்டிதாம்டெ. கண்ணு விழுதுல்லா, சும்மா விட்ருமா ஊராங்கண்ணு...' என்று சொல்லிவிட்டு சைக்கிளுக்கு பஞ்சர் பார்க்க ஆரம்பித்தார். 'வாங்குன அன்னைக்கே பஞ்சராடே' என்று தாஸ் கடையிலும் சைக்கிளை வேடிக்கை பார்க்கக் கூட்டம்.

'ஒம் மவன் பிள்ளையாவா இருக்காம்? வடக்குத்தெரு பூரா சும்மா நடந்தாலே காலுல நாலு முள்ளு நச்சுன்னு ஏறும். அதுல போயி சைக்கிளை ஓட்டுவானா இவென்? எங்க சொன்னத கேக்காம்?' என்று ஆவலாதிகள்.

அவர்களை அங்ஙனயே போட்டு மிதிக்க வேண்டும் என்று தோன்றும் கொம்பையாவுக்கு. ஆனால், பெரியவர்களாச்சே!

விடுமுறை நாட்களில் அது சங்கரபாண்டியின் சரக்கு வாகனம் ஆகி விடும். டிபன் பாக்சோ, பள்ளிக்கூட பையோ இருக்கிற பின்பக்க கேரியரில், சங்கர பாண்டியின் புண்ணியத்தில் வைக்கோல் கட்டோ, புல்லு கட்டோ, மாட்டுத் தீவன சாக்கு பையோ, இடம் பிடிக்கும். பயிர் வைக்கும் காலமெனில் தானிய விதைகள், உர சாக்கு என பொதி சுமக்கும் சைக்கிள். அப்போதெல்லாம் கொம்பையாவுக்கு ரத்தக் கொதிப்பு வந்து அடங்கும். அழகான பின் கேரியர் அழுக்கானால் யாருக்குத்தான் அப்படியிருக்காது. இருந்தாலும் அப்பாவிடம் அதை சொல்லிவிட முடியாது.

ஆத்திர அவசரத்துக்கு பக்கத்தூர் விசேஷங்கள், துக்க நிகழ்ச்சிகளுக்கு அம்மாவைப் பின் பக்கம் உட்கார வைத்துக்கொண்டு அப்பா அழுத்துவார் சைக்கிளை. அப்பாவைத் தவிர எலெக்ட்ரீஷியன் வேலை பார்க்கிற மாமாவும் அவ்வப்போது சைக்கிளை பர்மிஷனோடு தூக்கிச் செல்வதுண்டு. இப்படி, குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்கிற இந்த சைக்கிளை, ஒரு சித்திரை முதல் நாளில், ஆழ்வார்க்குறிச்சி தேரோட்டத்தில் தொலைத்துவிட்டு வந்தான் கொம்பையா!

நடு வீட்டுக்குள் முழங்காலைக் கட்டியபடி அழுது கொண்டிருந்தவனைத் திட்டிக் கொண்டிருந்தாள் அம்மா. 'பேதில போவாம், ஒம் எமத்துல வந்து நிக்க முடியாது. இப்டியா பண்ணுவ கோட்டிக்காரப் பயல?' என்று வேகமாகத் திட்டி, வேகமாகவே அடித்தாலும் அம்மாவின் அந்த அடியில் ஒரு மயிலிறகின் வருடல் இருக்கத்தான் செய்யும்.

அவனது பயமெல்லாம் கைகளை ஆயுதமாக வைத்திருக்கிற அப்பாதான். எப்படி அடிக்கப் போகிறார் என்பதில் இருந்தது அவனது பயம். மாட்டு வண்டியில் தென்காசிக்கு நெல் கொண்டு போயிருக்கிற அவர், மாலையில் வீடு திரும்புவார். அவர் வந்த பின் நடக்க இருக்கிற களேபரங்களை நினைத்தாலே கொலை நடுங்கியது அவனுக்கு.

'எப்டில தொலச்செ, கொடுவா மூதி'

‘பள்ளிக்கூடத்து வாசல்ல, நெறய பேரு சைக்கிளை விட்டுருந்தாவோ. நானும் விட்டுட்டு தேர் பாக்க போயிட்டெம். வந்து பாத்தா காங்கல...’

‘ஒங்கூட யார்ல வந்தா?’

‘சின்னம்பி...’

‘அவனக் கூட்டியா... கேப்போம்’

‘அந்தப் பய எங்கூடதாம் வந்தாம்ழா, பெறவு எங்க போனாம்னு தெரில...’

-அம்மாவிடம் அவன் இப்படி விளக்கிக்கொண்டிருந்த போதே, வீட்டுக்கு வெளியில் சைக்கிள் மணி சத்தம் கேட்டது. கொம்பையா, பயந்து நடுங்கினான். வெளியே வந்து நின்றது, அவனது மாமா!

ஒரு சைக்கிளில் அமர்ந்தபடி காலை ஊன்றி நிற்கிற மாமா, மறு கையில், கொம்பையாவின் சைக்கிளைப் பிடித்தபடி நின்றார்.

‘இது எங்க நின்னுச்சு’ என்று ஆச்சரியப்பட்டு அம்மா கேட்டாள்.

‘ஒம் மவன் எங்க நிப்பாட்டிட்டு போனாம்? ஆத்து பாலத்துல அனாதையா நின்னுது சைக்கிளு. கொம்பையா சைக்கிளாச்சேன்னு சுத்தி சுத்தி பார்க்கேன், அக்கம் பக்கத்துல ஒரு நாதிய காணோம். பெறவு தள்ளிட்டு வாரேன்...’ என்றார் மாமா.

‘சரியா போச்சு போ. தேர் பாக்க போனவன் தொலைச்சுட்டு வந்து அழுதுட்டு இருக்காம் நடுவீட்டுல. நல்லவேளை நீ எடுத்துட்டு வந்தே...’

கண்ணீரைத் துடைத்துவிட்டு வந்த கொம்பையாவை மாமாவும் ஏசினார் பேச்சுக்கு. பிறகு அந்தக் கொளுத்தும் வெயிலிலும் தொடங்கினான் சைக்கிள் மிதிக்க.

தனக்கு ஓட்டுவதற்கு தராத சைக்கிளை, பக்கத்துவீட்டு சின்னம்பிதான் ஓட்டிவந்து ஆற்றுக்குள் விட்டான் என்பது சாட்சிகள் சிலரோடு நிரூபிக்கப்பட்டது. சின்ன கண்டிப்புக்குப் பிறகு, சின்னம்பியை விட்டார்கள். அவனது அம்மா, அவனைப் புளியம்விளாரால் எல்லோர் முன்பும் சாத்தினாள். ‘எனக்குன்னு வந்து பொறந்திருக்கியெ’ என்று ஏசிவிட்டு அடித்த அடியை எல்லோரும் தடுத்தார்கள்.

-இந்தச் சம்பவத்துக்குப் பிறகுதான் சைக்கிளுக்குப் பூட்டு வாங்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதுவரை பூட்டு இல்லாமல்தான் புழங்கிக் கொண்டிருந்தது.

பிறகு சின்னம்பியின் அப்பா அவனுக்கு ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுத்தார். அதில்தான் அவன், கேசட்டுகளில் இருந்து உருவிய டேப்களை சைக்கிளின் இரண்டு கைப்பிடிகளிலும் தொங்க விட்டிருந்தான். சைக்கிள் செல்லும்போது அது காற்றில் பறப்பது அழகாக இருக்கும். டயர்களில் ஊத்தாம் பட்டி(பலூன்)யை கட்டி, சைக்கிள் மிதிபடும்போது அது எழுப்பும் ஒலியை ரசித்தான். ஊர் இதை அதிசயமாக வேடிக்கை பார்த்தது.

ஊருக்குப் புதிதாக வந்திருந்த உமா மகேஸ்வரி அக்காவின் ரோஸ் நிற சைக்கிள் வித்தியாசமாக இருந்தது. கேரளாவில் இருந்து அக்ரஹாரத்துக்கு வந்திருந்த அந்த அக்காள், குற்றாலம் கல்லூரியில் ஏதோ ஒரு டிகிரியை படித்துக்கொண்டிருந்தாள். காதுக்கு அருகில் தலைமுடியை சுருட்டி விட்டிருக்கிற அந்த கோதுமை நிற அக்காவை, மாலை வேளைகளில் ஆற்றுப் பாலம், வாய்க்கால் பாலம், வயக்காட்டுக்குள் இருக்கிற அம்மன் கோயில் என எப்போதும் சைக்கிளுடனேயே பார்க்க முடியும்.

அவளின், ‘பொம்பள சைக்கிள்’, பார் இல்லாமல் மொழுக்கட்டையாக இருந்தது. பாவாடை, தாவணி அணிந்துகொண்டு ஏறுவதற்கு வசதியாக அப்படி வடிவமைக்கப் பட்டிருந்தது அந்த சிவப்பு நிற சைக்கிள்.

முன்பக்கம், சில சினிமா படங்களில் காண்பிக்கப்பட்டிருப்பது போன்ற அழகான கூடை பெட்டி. அதில், எப்போதும் ஏதாவது ஒரு துணி பை கிடக்கும்.

உமா, தூரத்தில் எங்கோ வருகிறாள் என்றாலும் அந்த சைக்கிள் அவளைக் காட்டிக் கொடுத்துவிடும். அவளையும் அந்த சைக்கிளையும் வேடிக்கை பார்க்க எப்போதும் ஓர் கூட்டம் காத்துக்கிடக்கும்.

'பொம்பள பிள்ளைலுவோலாம் சைக்கிளு ஓட்ட படிச்சுட்டுவோ பாரென்' என்று வயலுக்குப் போகும் பெரிசுகள் பேசிக்கொண்டு போவதை உமா ரசிப்பாள்.

மந்திர மாமாவின் மகன் பாலு, சைக்கிளில் ஒரு பெரும் புரட்சியைப் பண்ணினான் ஊரில். அதாவது, பெரிய மனுஷி ஆகியிருந்த ஆண்டாள் அத்தையின் மகளுக்குத் தண்ணீர் ஊற்றும் நாளில் மைக்செட் கட்டியிருந்தார்கள். பாடல் ஒன்று பாடிக் கொண்டிருந்த போது, கரன்ட் போய்விட்டது. 'நல்ல பாட்டை கேக்கும்போதும்தான் சனியன் மாதிரி கரன்ட் போவும்' என்று இளம் பெண்கள் வருத்தப்பட்டார்கள் தண்ணீர் ஊற்றும் வீட்டில். இளம் பெண்கள் மனசு நொந்தால் அதைத் தாங்க முடியுமா? யோசித்தான் பாலு. பிறகு என்ன நினைத்தானோ, ரேடியோவின் போர்டில் இருந்து ஒயர்களை இழுத்து சைக்கிள் டைனமோவில் கனெக்ஷன் கொடுத்தான்.

ஸ்டாண்ட் போட்டிருந்த சைக்கிளில் ஏறி மிதித்தான். பாடல் ஒலிக்க ஆரம்பித்தது. இளம் பெண்கள் சொக்கிப்போனார்கள். பிறகு பாடல் கேட்டு தெருவே கூடிவிட்டது, 'எப்படில பாடுது?' என்று. அந்த நேரத்தில் பாலு ஹீரோவாக உயர்ந்திருந்தான். அந்தப் பாடல், 'நீ முன்னாலே போனா, நான் பின்னாலே வாரேன்... கட்டப்புள்ள குட்டப்புள்ள...'.

'சைக்கிளெ மிதிச்சு ரேடியாவ பாட வச்சுட்டாம்லா' என்று முக்குக்கு முக்கு நின்று பேசிக் கொண்டார்கள் அடுத்தடுத்த சில நாட்களில். இதன் பொருட்டு பாலு 'அறிவுள்ள பயல்லா' என்ற பட்டத்தைப் பெற்றிருந்தான்.

ஒரு நாள் பாலுவின் சைக்கிளில் இருந்த டைனமோவுக்கும் சின்னம்பி சைக்கிளில் இருந்த டைனமோவுக்கும் பிள்ளையார் கோயில் திடலில் போட்டி. யார் டைனமோ அதிக வெளிச்சம் கொடுக்கிறது என்று.

கோயிலில் எதிரில் இருக்கிற, தெரு விளக்கு இல்லாத அரசமரத்தை நோக்கி, ஸ்டாண்ட் போட்ட சைக்கிளை முதலில் மிதித்தான் பாலு. பிறகு சின்னம்பி. இரண்டு பேரில் சின்னம்பி சைக்கிள் டைனமோதான் அதிக வெளிச்சம் தந்ததாகப் பாராட்டப்பட்டது. பிறகு சின்னம்பி, 'என் சைக்கிள்ல ஜப்பான் டைன மோல்லா வச்சிருக்கேன்' என்று எல்லோரிடமும் சொல்லி பீற்றிக் கொண்டலைந்தான்.

சைக்கிளும் சைக்கிள் தொடர்பான விஷயங்களும் முக்கியமானவையாக இருந்தது அப்போது. வீட்டில் ஆடுமாடு போல ஓர் உயிருள்ள பொருளாக இருந்தது சைக்கிளும். இப்போதும் சைக்கிள்கள் இருக்கிறது, அதிகமான விலைகளில், கியர்கள் பொருத்தப்பட்ட, தேவையான அளவுகளில், அதிகாலை வேளை உடற்பயிற்சிக்காகவென. ஆனால், பழைய சைக்கிள்களில் இருந்த ஏதோ ஒன்றை இப்போதுள்ள சைக்கிள்களில் காணமுடியவில்லை.

காலத்தின் ஓட்டத்தில் கடிகார முட்கள் வேகவேகமாக ஓடுகின்றன. கார் வாங்கினால் இன்று நடத்தப்படும் அனைத்து பூஜை, புனஸ்கரங்களும் சைக்கிள் வாங்கியதற்காக அன்று நடத்தப்பட்டது. நாளை இதுவும் மாறலாம். மாற்றங்களால் ஆனதுதான் வாழ்க்கை.



ஓவியம்: மருது

சிறுகதை

களத்துவூட்டம்மாவும் அயிரை மீன் குழம்பும்

புலியூர் முருகேசன்

''வாம்மா சரசு. வாடா எம்பேராண்டி''. கரூரிலிருந்து திண்டுக்கல் செல்லும் எம்.ஆர்.டி. பஸ்சின் பின்படிக்கட்டிலிருந்து செம்பாறையில் இறங்கியவர்களைப் பார்த்ததும் சீத்தமரத்தடியில் குந்தவைத்திருந்த களத்து வூட்டம்மா ஓடிப்போய் வரவேற்றாள். சரசு கொண்டுவந்திருந்த சென்ட்ரல் சில்க் ஹவுஸின் மஞ்சள்ப் பையை சுருக்கம் விழுந்த கையால் வாங்கியபடி, பேரன் மூர்த்திக்கு முத்தம் கொடுத்து நெட்டி முறித்தாள். அம்மாவைக் கண்டதும் சரசுவின் முகத்திலும் அப்படியொரு சிரிப்பு.

செம்பாறையிலிருந்து களத்துவூட்டம்மாவின் ஊரான பழனிசெட்டியூருக்கு நாலு மைல். நடந்துதான் போக வேண்டும். இருமருங்கும் கிளுவமுட்கள் மண்டிக்கிடக்கும் வறண்ட சரளைக்கல் நிரம்பிய பாதை. மகள்களை நினைக்கும்போது அதைப்பற்றியெல்லாம் களத்துவூட்டம்மா கவலைப்படுவதில்லை. 'வயசான காலத்துல ஏம்மா இப்பிடி நாலு மவளுகளுக்காகவும் மைலு கணக்கா காலு நோவ நடக்கிற?' சரசுவும்கூடக் கேட்டிருக்கிறாள்.

களத்துவூட்டம்மாவுக்கு சரசுவுடன் சேர்த்து மொத்தம் நாலு மகள்கள். ஒரு மகன். கணவன் தர்மலிங்கம் தெய்வமாகி வருசம் பதினைந்து ஓடிவிட்டது. அதன் பின்பு மருமகள் கைச்சோறுதான். அதுவும் அரைகுறையாக. களத்துவூட்டம்மா அதைப்பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. தர்மலிங்கம் விட்டுச் சென்ற தோட்டத்தில் ஒரு குடிசை உண்டு. அந்தக் குடிசைக்குப் பேர்தான் களத்துவீடு. தர்மலிங்கம் காலத்திற்குப் பிறகு அப்பெயரே அவளின் பெயராகிவிட்டது. நிஜப்பெயரே மறந்துபோய்விட்டது. செம்பாறைக்கும் பழனிசெட்டியூருக்கும் நடுவாந்திரமாக இருக்கிறது தோட்டம். மகனோ மருமகளோ அங்கே வரமாட்டார்கள். மகன் வயிற்றுப் பேரப்பிள்ளைகளைக் கொஞ்சிய நேரம் போக, மீதி நேரமெல்லாம் தோட்டத்துக் குடிசையில்தான்.

மகள்கள் வெளியூரிலிருந்து கடுதாசி போட்டுவிட்டு வரும்போதெல்லாம் அவர்களுக்காக செம்பாறைக்குப் போய் காத்திருந்து கூட்டிச் செல்வதும், ஊருக்குப் போகும்போது பழனிசெட்டியூரிலிருந்து செம்பாறை வரை சென்று பஸ் ஏற்றிவிடுவதும்தான் களத்துவூட்டம்மாவுக்குப் பிடித்த வேலை. ஊருக்குள் சில பேர் களத்துவூட்டம்மாவை 'கிறுக்குக் கெழவி' என குசுகுசுப்பாய்ச் சொல்லிக் கொள்வார்கள்.

செம்பாறை பேருந்து நிறுத்தத்திலிருந்து ஊருக்குப் போகும்வழியில் நூறடி தூரம் நடந்ததுமே சிறு பாலமும், அதன் கீழே ஒரு ஓடையும் ஓடும்.

மழைக்காலத்தில் மட்டும் அக்கம் பக்கத்தில் உள்ள குளங்கள் நிரம்பி வழிந்து அந்த ஓடையில் நீர்ப்பெருக்கெடுத்துப் பாயும். பெரியக்கா ஓடை என்பது அதன் பெயர். குளத்திலிருந்து ஓடைக்குள் விழுந்த அயிரை மீன்கள், கூட்டம் கூட்டமாய் எகிறிப் பாயும். செம்பாறை விடலைப் பையன்கள் ஓடை நீர்ப்பாய்ச்சலுக்கு குறுக்கே தடுப்பிட்டு, அதன் மேற்பகுதியில் முட்டி கட்டிவைப்பார்கள். தடுப்பில் மோதிய நீர் மேலே சிதறும்போது, அதைப் பின்தொடர்ந்து மேலெழும் அயிரைகள் மிகச்சரியாக முட்டிக்குள் படபடவெனப் பாய்ந்து விழும். விடலைகள் அவற்றைக் காசுக்கு விற்பார்கள். ஒருபடி அயிரை அம்பது காசு.

புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் பெரியக்கா ஓடையில் நீர்ப்பெருக்கெடுத்து ஓடும். அயிரை மீன் கூடை கூடையாகக் கிடைக்கும். அப்போது களத்துவூட்டம்மாவுக்கு மகள்களின் ஞாபகம் வந்துவிடும். அந்த நேரத்தில் பழனிசெட்டியூரிலிருந்து உப்பிடமங்கலம் சந்தைக்குச் செல்லும் மகனிடம் 'யப்பா! ஒங்க மாமன் சந்தைக்கி வருவாகல்ல. அவுககிட்டச் சொல்லி சரசுவையும், எம் பேரனையும் ஊருக்கு தாட்டிவுடச் சொல்லு' எனச் சொல்லி அனுப்புவாள் களத்துவூட்டம்மா. உப்பிடமங்கலம் சந்தைக்கு சரசுவின் கணவர் புகையிலை வியாபாரத்திற்காக வருவார். இதேபோல, மற்ற மகள்களுக்கும் தகவல் செ ால்லியனுப்பி ஊருக்கு வர வைப்பாள்.

ஓடையை நெருங்கியதும் ஐந்தாறு பேர் முட்டி கட்டியிருப்பது தெரிந்தது. களத்து வூட்டம்மாவைக் கண்ட விடலைகளில் ஒருவன் ''ஆச்சீ!.. எம்முட்டி ரொம்பி வழியுது. வந்து வாங்கிக்கிட்டுப் போ ஆச்சி'' என்றான். சொன்னதுபோலவே அவனிடம் அயிரை மீன் முட்டி நிறைய இருந்தது. முந்தானையில் முடிச்சிட்டு வைத்திருந்த இரண்டு ஐம்பது காசு நாணயங்களை அவனிடம் கொடுத்ததும், அவன் தோராயமாக நான்கு படி வரும் அளவிலான அயிரை மீன்களை ஒரு சவ்வுக் காகிதப் பையில் போட்டுக் கொடுத்தான். மூர்த்திக்கு அயிரை மீன்களைப் பார்த்ததும் ஒரே கொண்டாட்டமாகிப் போய்விட்டது.

மீன் பையைச் சுருட்டி மஞ்சள் பையினுள் சரசு திணித்ததும், அவர்களின் நடை தொடர்ந்தது. மீன் கூட்டம் துள்ளுவதால் பை நெளிவதை வேடிக்கை பார்த்தபடியே நடந்தான் மூர்த்தி. அது மழைக்காலம் என்பதால் வேலிக்கிளுவையில் கோவைப்பழக் கொடிகள் பழுக்கத் தொடங்கியிருந்தன. அவைகளை மூர்த்தி ஏக்கத்துடன் பார்ப்பதைக் கடைக்கண்ணால் கண்ட களத்துவூட்டம்மா ''பேராண்டி! நாளைக்கி வாறப்ப ஆச்சி அதுகளப் பறிச்சுத் தாரேன்'' எனச் சொல்லவும் அவன் சிரித்தபடி தலையசைத்தான்.

களத்துவூட்டம்மா வழக்கமாகச் சொல்லும் கதையை அன்றுதான் முதன்முதலாகச் சொல்வதுபோல் ஆரம்பித்தாள். நிறைய முறை கேட்டிருந்தாலும், அம்மாவின் ஆதங்கத் திற்காக இடைமறிக்காமல் கதை கேட்கத் தயாரானாள் சரசு.

''நா பொறக்கறதுக்கு செத்த நேரத்திக்கி முந்திப் பொறந்தவதான் மீனாச்சியக்கா. ஒங்க ஆச்சி தொப்புளுக் கொடில நாங்க ரெண்டு பெரும் ஒன்னாப் பொறக்கனும்னு இருந்த விதி பாதியில அவ கொடிய மட்டும் அத்துவுட்டுருச்சு. சின்னப் புள்ளயா இருக்கறப்ப, மீனாச்சியக்கா மட்டும் ஆம்பள கணக்காத்தான் திரிஞ்சா. ஒங்க தாத்தனும் ஒன்னுஞ் சொல்லாம வுட்டுட்டாக. வூட்ட வுட்டு வெளிய போனா பொழுதெறெங்கற வரைக்கும் மீனு புடிக்கறது, கல்லுக்குருவிய அடிக்கறது, பயித்தங்கா புடுங்கி அவிச்சித் திங்கறதுன்னு அவ பாட்டுக்குத் திரியுவா. அதுலயும் ஓடையில அயிர மீனுக வர்றப்ப, நெதம் ரெண்டு படியாவது அள்ளிக்கிட்டு வந்துருவா. மஞ்சட்டியில மணக்க மணக்க கொழம்பு வப்பா பாரு! அப்பிடியிருக்கும். சும்மா தேனு மாறி'' எனச் சொல்லி நிறுத்திய களத்துவூட்டம்மா முந்தானையால் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

அதற்குள் தோட்டம் வந்துவிட்டது. சரசுவையும், மூர்த்தியையும் தோட்டத்திற்குள் கூட்டிச் சென்று குடிசையின் திண்ணையில் உட்காரச் சொல்லிவிட்டு, தோட்டத்துப்பக்கம் நடந்து ஒரு பார்வை பார்த்து வந்தாள். குடிசைக்குள் போய் வெளியே வந்தவளின் கையில் ஒரு அகலமான மண்சட்டி இருந்தது. சரசுவின் மஞ்சள் பைக்குள் திணித்து வைத்திருந்த அயிரை மீனை வெளியே எடுத்து சரிபாதியாக மண்சட்டியில் கொட்டிவிட்டு மீதியை மறுபடியும் பைக்குள் போட்டாள். சட்டியில் போட்ட மீன்கள் சலசலவெனத் துள்ளத் தொடங்கின. அதன் மேலே ஒரு தட்டைப் போட்டு மூடிவைத்து, பக்கத்துத் தோட்டத்தை நோக்கி நடந்தாள். அது தர்மலிங்கத்தின் உடன்பங்காளி தோட்டம். களத்துவூட்டம்மாவை அனுசரணையாக நடத்துவார்கள்.

அங்கிருந்து திரும்பும்போது களத்துவூட்டம்மாவின் கையில் ஒரு சொம்பிருந்தது. அதில் இருந்த பாலை அயிரை மீன் சட்டியில் ஊற்றி, ஒருகை கல் உப்பு அள்ளித் தூவி மீண்டும் தட்டைப் போட்டு மூடினாள். ஆச்சி என்ன செய்கிறது என்பதை மண்சட்டியின் பக்கத்திலேயே குத்துக்காலிட்டு அமர்ந்து வேடிக்கை பார்த்தான் மூர்த்தி. ''இக்கினியூண்டா இருக்கற அயிர மீன இப்பிடித்தேன் சுத்தம் செய்யனும். பாலெ ஊத்தி கல்லுப்பு போட்டம்னா செத்த நேரத்துல, அதுக கொடலு குந்தானியெல்லாம் வெளீல வந்துரும். அப்பறமா மஞ்சத்தூளுப் போட்டு நல்லா அலசனம்னு வையி மின்னலு மாறி மின்னும்'' எனச் சொல்லியபடியே குழம்புக்கான வேலையைத் தொடங்கினாள். சரசு குடிசையினுள்ளே போய் கொஞ்சம் புளியெடுத்து வைத்து ஒரு கப்பில் கரைத்தாள். பின் அம்மாவுக்குத் தோதாக சின்ன வெங்காயத்தை உரித்துக் கொடுத்து, தக்காளி, பூண்டு, வர மிளகாய், மல்லி போன்ற செலவுசாமான்களை கூட்டி வைத்தாள். களத்துவூட்டம்மா இப்போது அவற்றை அம்மியில் அரைக்கும் பாங்கை வேடிக்கை பார்ப்பதில் ஆர்வமானான் மூர்த்தி. எல்லாவற்றையும் மசிய அரைத்து உருண்டை திரட்டி, இன்னொரு மண்சட்டியை அடுப்பில் வைத்து எண்ணை ஊற்றி வெங்காயத்தைத் தாளித்து, அரைத்து வைத்த செலவுசாமான் உருண்டையைப் போட்டு நீரூற்றி கொதிக்கச் செய்தாள். சில சுள்ளிகளை ஒடித்து அடுப்பினுள் வைத்து நெருப்பை அதிகப்படுத்தினாள். குழம்பு நன்கு கொதி வந்ததும், அயிரை மீன்களை இன்னொருமுறை அலசி அள்ளி உள்ளே போட்டுக் கிளறினாள். வாசனை தோட்டம் முழுக்க கமகமத்தது. கடைசிக் கொதிக்குப்பின் குழம்புச் சட்டியைக் கீழிறக்கி ஆற வைத்தாள். குழம்பு வாசனையை முகர்ந்ததுமே மூர்த்திக்கு மீன் தின்ன ஆசை வந்தது. ஆனால், ஆச்சி ஏன் சட்டியின் மீது வேடுகட்டி எடுத்துச் சென்று பக்கத்துத் தோட்டத்து வீட்டில் கொடுத்து வந்தது? என அவனுக்குப் புரியவில்லை.

அதன் பிறகு வீட்டுக்குப் போகும்வரை களத்துவூட்டம்மா ஏதும் பேசவில்லை. பாதியில் நிற்கும் கதையையும் தொடரவில்லை. ஊரின் முதல் தெருவில் இருக்கும் வீடுதான் தர்மலிங்கத்துடையது. வீட்டுக்குள் நுழைந்ததும் களத்துவூட்டம்மாவின் மருமகள் அவர்களை வழிமறிப்பதுபோல் மூன்றுபேருக்கும் நெருக்கமாக வந்து நின்றாள். சிரித்த முகத்தோடு ''நல்லாயிருக்கீகளா மயினி?'' என சரசு கேட்டதையும் அவள் கண்டுகொள்ளவில்லை. மூக்கை ஒரு உறிஞ்சு உறிஞ்சிப் பார்த்து, ஒப்புக்கு அவர்களை வரச்சொல்லிவிட்டு வீட்டுக்குள் போய் நுழைந்துகொண்டாள். மூர்த்தியை மாமன் பிள்ளைகள் விளையாடுவதற்கு இழுத்துக்கொண்டு போனார்கள். மீதம் கொண்டுவந்திருந்த அயிரை மீன்களை களத்துவூட்டம்மாவே முன்பு செய்ததுபோல சுத்தம் செய்யத் தொடங்கினாள். அம்மாவுக்கு உதவியாய் சரசுவும் கைவேலைகள் பார்த்தாள். எல்லாம் முடிந்து குழம்பு கொதித்து அடங்கும்போது, வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்த மருமகள் சட்டியை கரித்துணி பிடித்து இறக்கி அப்படியே உள்ளே கொண்டுபோய் வைத்துக் கொண்டாள். சந்தையிலிருந்து வந்த சரசுவின் அண்ணன்காரன் ''வா சரசு'' எனச்

சொன்னதோடு சரி. அதன் பின்னர் பேச்சே இல்லை. அம்மாவும் மகளும் மகனும் மருமகளும், பேரப்பிள்ளைகளும் மீன் குழம்பை ஊற்றிச் சோறு தின்றுவிட்டு ஒன்றும் பேசாமல் படுத்துவிட்டார்கள். அதன் பின் களத்துவூட்டம்மா சரசுவையும், பேரன் மூர்த்தியையும் சோறு தின்ன அழைத்தாள்.

மதினி சாகிறவரைக்கும் திருந்தாது என நினைத்துக்கொண்டாள் சரசு. மீதமிருந்த குழம்புச் சட்டியில் ஐந்து துண்டு அயிரை மட்டுமே கிடந்தது. அதுவும் பொடியாக உடைந்து. 'ரெண்டுபடி மீனுல இன்னம் நாலு துண்டு பிள்ளைக்கிப் போடனும்னுகூட மயினி நெனைக்கலையே! என்னா செம்மமோ?'' என விசனத்துடன் பிள்ளையைச் சாப்பிட வைத்துத் தூங்கச் செய்தாள். களத்துவூட்டம்மா எதுவும் பேசாமல் முகம் சொடுங்கி உட்கார்ந்தே கிடந்தது.



பொழுது விடிந்தது. 'பொளுது பெறப்படுறப்பவே சந்தைக்குப் போயிட்டானாட்டம். மருமவக்காரி எங்க தொலஞ்சாலோ தெரீல!'' என களத்துவூட்டுக்காரம்மா சரசுவையும், பேரனையும் கிளப்பி செம்பாறையை நோக்கி நடந்தாள். தோட்டம் வரும்வரைக்கும் பேச்சரவமே இல்லை. தோட்டத்துக் குடிசையில் மகளையும் பேரன் மூர்த்தியையும் இருக்கச் சொல்லிவிட்டு, பக்கத்துத் தோட்டத்துக்குச் சென்றாள். வரும்போது கையில் மண்சட்டியும், ஒரு தூக்குவாளியும் இருந்தது. அது நேற்று வேடுகட்டிக் கொடுத்த அயிரைமீன்குழம்புச் சட்டி. ''நீயும் எம் பேராண்டியும் திம்பீகன்னுதே நேத்து ஒங்க சித்தப்பன் வூட்டுல இதக் குடுத்து வச்சேன். நேத்தே தின்னிருந்தீகன்னா ஒம் மதினி ஆடாத ஆட்டம் ஆடியிருப்பா. எப்பிடி மூக்க உறிஞ்சி வாசம் புடிச்சா பாத்தியா! தூக்குவாளில இருக்கிற சோத்த ஒரு குண்டான்ல கொட்டி வையி, ஆறட்டும். ஒங்க சின்னாத்தா ஆக்கிக் குடுத்தா. நா போயி ரெண்டு எல அறுத்தாரேன்'' எனச் சொல்லிவிட்டு இலை அறுக்கப் போனாள் களத்துவூட்டம்மா.

வாழையிலையில் சோற்றைக் கொட்டி, மணக்கும் அயிரை மீனை அகப்பையில் அள்ளிப்போட்டு, மகளும் பேரனும் தின்பதை வயிராறப் பார்த்து மகிழ்ந்தாள் களத்துவூட்டம்மா. ''மிச்சத்த தூக்குவாளீல எடுத்துக்கிட்டுப் போ. மருமகப் புள்ளயும், பெரிய பேரனும் திங்கட்டும். தூக்குவாளிய அப்பறமாக் குடுத்துக்கலாம்'' எனச் சொல்லி அவர்களைக் கிளப்பி பயணத்தைத் தொடர்ந்தாள்.

அம்மா வழக்கம்போல ஒருதுண்டு அயிரை மீன்கூடத் தின்னவில்லை என்பது சரசுவின் நினைவுக்கு வந்தது. அதைப் பற்றிய கேள்விக்கும் பதிலேதும் சொல்லாமல் கதையை விட்ட இடத்திலிருந்து ஆரம்பித்தாள் களத்துவூட்டம்மா.

''அப்பிடிக் காத்தாட்டம் திரிஞ்சிக்கிட்டிருந்த எங்கக்கா மீனாச்சி, எனக்கும் ஒங்ககொப்பனுக்கும் கண்ணாலம் முடிஞ்சி நாங்க மறுவிருந்துக்குப் போனப்பவே செத்துப் போச்சு. பதனஞ்சு பதனாறு வயசு இருக்குமா! ஊரே கேளு, நாடே கேளுன்னு தடபுடலா விருந்துவச்சு, என்னக் கட்டிக்கிட்டாக ஒங்கொப்பன். நல்லாப் பிரியமாத்தேன் இருந்தாக.

அஞ்சாறு நாள்ல மறுவிருந்து. அன்னிக்கி என்ன நடந்துச்சுன்னா!...'' சொல்லிக்கொண்டே வந்தவள் சட்டெனக் கதையை நிறுத்திவிட்டு குனிந்து காலைத் தூக்கிப் பார்த்தாள். செருப்பில்லாத வெறும் பாதத்தில் நெருஞ்சி முள் ஒன்று குத்தித் தொங்கிக்கொண்டிருந்தது. அதைப் பிடுங்கி வேலியோரமாகப் போட்டு விட்டு தரையிலேயே பாதத்தை ஒரு தேய் தேய்த்துக்கொண்டாள்.

மூர்த்திக்கு ஆச்சி சொல்லும் கதையின் தலையும் புரியாது வாலும் புரியாது என்பதால் அவன் கண்ணும் கருத்துமாக கிளுவ வேலியை நோட்டம் விட்டுக்கொண்டே வந்தான். கூட்டமாய்ப் பழுத்திருந்த கோவைப்பழக் கொடியின் பக்கத்தில் ஒரு நுணா மரம் இருந்தது. அதைத்தான் அடையாளத்திற்குப் பார்த்து வைத்திருந்தான். இன்னொரு அடையாளமும் வைத்திருந்தான். அது பாம்புச் சட்டையின் ஒரு துண்டு. அதை யாரிடமும் சொல்லக் கூடாதென்பது மூர்த்திக்குத் தெரியும்.

களத்துவூட்டம்மா தொடர்ந்தாள். ''மறுவிருந்தன்னிக்குன்னு பாத்து இந்த மாறி அயிர மீனு ஒரு குட்டான் கெடச்சுதுன்னு மீனாச்சியக்கா கொண்டாந்து குடுத்ததுமில்லாம, நல்ல மணமா கொழும்பும் வச்சுப்புட்டா. மொதல்ல ஒங்கொப்பன ஒக்கார வச்சு சோத்தப் போட்டுக் கொழம்ப ஊத்துனம். புருசனுக்கு எதுக்க சோறு திங்கக் கூடாதுன்னு நா ஓரமா ஒதுங்கி ஒக்காந்திருந்தேன். என்னதான் கொழம்பு ருசியா இருந்தாலும் அப்பிடியா திம்பாக! ஒங்கொப்பன் ஒருதுண்டு அயிர மீனயும் பாக்கி வைக்காம சட்டியைக் கவுத்துத் தின்னுட்டாக. தின்னுபுட்டு மீனாச்சியக்காவப் பாத்து 'அயிர மீனு அம்புட்டுதானா! இல்ல நீ திங்கறதுக்கு ஏதும் ஒளிச்சு வச்சிருக்கியா? ஒருவயசுக்கப்பறம் பொட்டச்சிக நாக்க தொங்கப் போட்டு அலையக் கூடாது. கட்டுப்பாடா இருந்துக்கனும்'னு சொன்னதும், மீனாச்சியக்கா மொகம் மொளகாப் பழமாட்டம் சுண்டிப் போச்சு. அன்னிக்கி எங்கிட்ட சொல்லாமக் கொள்ளாம வூட்ட வுட்டுப் போனவதான். கோவத்துல எங்கனயோ போயி நாண்டுக்கிட்டா! அன்னையோட சரி. இன்னிக்கி வரைக்கும் ஒருதுண்டு மீன நா கையால தொட்டதில்ல'' எனச் சொல்லிக்கொண்டே வந்தவள் சடாரென அதே இடத்தில் உட்கார்ந்து தலையிலடித்து அழ ஆரம்பித்துவிட்டாள். எப்படி ஆறுதல் சொல்வதெனத் தெரியாமல் தடுமாறினாள் சரசு.

இன்னும் கொஞ்சதூரம் நடந்தால் செம்பாறை வந்துவிடும். கரூருக்குப் போக எம்.ஆர்.டி.வரும் நேரம்தான். அம்மாவை ஒருவாறு சமாதானப்படுத்தி எழுப்பி நடக்கச் செய்தாள் சரசு. ஆச்சி அழுததைப் பார்த்த மூர்த்தி, சோகத்தில் கோவைப்பழக் கொடி இருந்த இடத்தையே மறந்துவிட்டான். களத்துவூட்டம்மா 'மீனாச்சி... மீனாச்சி' என முனகலாகப் புலம்பியபடியே நடந்தாள்.

செம்பாறையைத் தொடுவதற்கும் பஸ் வருவதற்கும் சரியாக இருந்தது. மகளையும் பேரனையும் பஸ்சில் ஏற்றிவிட்டு பழனிசெட்டியூர்ப் பாதையில் நடக்க ஆரம்பித்தாள் களத்துவூட்டம்மா. ஜன்னலோர இருக்கையில் இருந்த சரசு, கால்நடுங்க நடந்துசெல்லும் அம்மாவைப் பார்த்துக் கையசைத்தாள். மூர்த்தியும் கையசைத்தான். அம்மாவின் பெயர்தான் மீனாட்சி என்பதை மறுபடியும் நினைவுக்குக் கொண்டு வந்து பெருமூச்சு விட்டாள் சரசு. அயிரை மீன்கள் இருந்த தூக்குவாளி இன்னும் கனத்தது.



ஓவியம்: மருது

சிறுகதை

சுலாப் இன்டர்நேஷனல்

பாக்கியம் சங்கர்

சின்னாருக்கு அடிவயிறு கனத்திருந்ததை உணர்ந்தாலும் தூக்கத்திலிருந்து விடுபட முடியாமல் எழுந்திருக்க மனமின்றி புரண்டு படுத்தான். ஆனாலும் அடிவயிற்றின் அலப்பறை தூக்கத்தை கலைத்துப் போட்டது. இனியும் தாமதித்தால் டவுசரிலேயே பேர்வாதி முடிந்து விடும் அபாயத்தை உணர்ந்தவனாய் ஓட்டம் பிடித்தான். விவரம் தெரிந்ததிலிருந்து சின்னாருக்கு எப்போதெல்லாம் அடிவயிறு கனத்து விடுகிறதோ அப்போதெல்லாம் இப்படித்தான் ஓட்டமும், நடையுமாக வீட்டிற்கும் சுலாப் இன்டர்நேஷனலுக்கும் டவுசரை பிடித்தபடி ஓடுகிறான்.

இப்போதும் அப்படித்தான் ஓடுகிறான் வீட்டிலிருந்து நூறடியில்தான், பொதுக்கழிப்பிடம் இருக்கிறது தன் ஜோட்டுக்காரன்களின் வீட்டில் எல்லோரும் தனக்கென்று கக்கூஸ் கட்டி விட்டதால் இவனோடு போன வாரம்வரை டவுசரை பிடித்துக்கொண்டு ஓடி வந்த ஆறுமுகமும் இல்லாமல் தன்னந்தனியாக விடப்பட்டதில் சின்னாருக்கு ஏக வருத்தம்தான். இதனிமித்தம் அம்மாவோடு நிறைய சண்டைகளை போட்டுப்பார்த்தான் சில வேளை உண்ணா நோன்பும் இருந்தான். ''சின்னாரு கொஞ்சம் பொறுத்துக்கடா. இன்னும் மூணு சீட்டுதான்.. உனக்கு புட்ச டிசைன்ல கக்கூசு கட்டிடலாண்டா என்று சின்னாருக்கு ஒரு கவளத்தை ஊட்டினாள். இனியும் உண்ணா நோன்பு இருக்க முடியாதென்கிற காரணத்தால் வேண்டா வெறுப்பாக முகத்தை வைத்துக் கொண்டு, அம்மாவின் கைப்பிடி சோற்றை வாயில் போட்டுக்கொண்டான்.

அம்மாவும் அக்காவும் மம்மதுமாமா வீட்டில் கடன்களை முடிக்க அனுமதி உண்டு. சின்னாருக்கும் மாமா வீட்டில் உரிமை இருக்கிறதென்றாலும் சின்னாரு போக மாட்டான். யார் வீட்டிலும் கடன்களை முடிப்பதில்லையென்ற தீர்மானத்தில் இருந்தான். கக்கூஸ் போனால் அது தனது சொந்த வீட்டு கக்கூசில்தான் இருக்க வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தான். அதுவரை சுலாப் இன்டர்நேஷனலே போதுமென்றிருந்தான்.

உடல் சிலிர்த்து மயிர்கள் கூச்செரிந்து சுலாப்யை சின்னாரு நெருங்கியபோது பென்சிலையா மாவாவை வாயில் போட்டபடி சின்னாருவிடம் 'உள்ள வெயிட்டிங்கு பத்து பேரு நூவு பதகொண்டு' என்று சிரித்தார். சின்னாருக்கு வந்த கோபத்தில் ஒரு எத்து விடலாமென்றால், கால் வழியாக ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் அவமானமாகிவிடும் என்பதால் பென்சிலையாவை முறைத்தபடி.

கழிவறைக்குள்ளே நுழைந்தான். குமார் அண்ணாச்சி கையில் சொக்கலால் பீடியை வைத்துக்கொண்டு பத்த வைக்காமல் ஏதோ போருக்கு போவதை போல மூடியிருந்த கதவையே பார்த்துக்கொண்டிருந்தார். சின்னாரை பார்த்ததும் 'ஏல சின்னாரு ஓங்கம்மா அரிசி பாக்கி ஒருபத்தஞ்சு ரூபா கொடுக்கனும் வீட்டுக்கு போனதும்... ஞாபகப்படுத்துவியா.? என்று கேட்க சின்னாருக்கு கோபம் கோபமாக வந்தது அவன் அடிவயிற்றை பிடித்துக்கொண்டு என்ன சொல்வதெனத் தெரியாமல் அண்ணாச்சியை மலங்க மலங்க பார்த்துக்கொண்டிருந்தான். விடாமல் அண்ணாச்சி ''ஏல நா சொல்லுறது விளங்குதா'' என்று சின்னாருவை முறைத்தார்.

பக்கத்திலிருக்கும் ஒருவன் டமார் என்று டவுசர் கிழிந்து பட்டாசு கிளம்ப சின்னாரு அண்ணாச்சியை பார்த்து சிரித்துவிட்டான். இப்போது அண்ணாச்சிக்கான கதவு திறக்கப்படுகிறது. உள்ளிருந்து ஒருவன் அவ்வளவு புத்துணர்ச்சியாக இந்த உலகத்துக்குள் வருகிறான். அண்ணாச்சி உள்ளே போனதும் அண்ணாச்சியின் இடத்தை சின்னாரு கைப்பற்றி விட்டான். அண்ணாச்சியின் அலப்பறை கதவின் இடுக்கில் வெளியேறி பென்சிலையா வரை போய்விட்டதுபோல, ''ஏய் கொடுக்குகளா. நீலு பொய்யண்டிராட கப்பு தாங்கல'' என்று குரல் கொடுத்தார்.

சின்னாருக்கு உடம்பு சிலிர்த்து கண்களிலிருந்து கண்ணீர் கசிய ஆரம்பித்தது. அவனது சிந்தனையில் இந்த உலகமே ஒரு பெரிய கழிப்பறையாக மாறி விட்டதாகவும், எப்போது வேண்டுமானாலும் சுதந்திரமாக மிகவும் சுதந்திரமாக கதவு தட்டல்கள் ஏதுமின்றி நிம்மதியாக இந்த சரீரத்தின் ஆதார கடன்களை முடிப்பதாக ஒரு கனவு சின்னாருக்கு வந்து போனது. அண்ணாச்சி ஜலக்கிரிடைக்கு வந்திருப்பது அவர் போடும் சத்தத்தில் உறுதியானது. நிச்சயம் சின்னாருவிற்கான கதவு திறக்கப்படும். கதவு திறந்தது. இப்போது அண்ணாச்சி சின்னாருவின் கண்களுக்கு கடவுளாக காட்சியளித்தார்.

அண்ணாச்சி புத்துணர்வு பெற்றவராய் சின்னாருவை பார்த்து ''ஏல அந்த பாக்கி. மறந்துடாதல'' என்று டவுசர் தெரிய போகிறவரை பார்த்த சின்னாருவிற்கு இப்போது கோபம் வரவில்லை.

கதவை திறந்த கடவுள் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம் என்பதாக சிரித்துக் கொண்டே உள்நுழைந்து தாழிட்டு கொண்டான். உட்காரும் இடத்தை தவிர நைந்து போன பெயிண்ட் டப்பா வைக்கும் அளவிற்கான ஒரு சிறிய இடம். ஒரு தடவை பென்சிலையாவிடம் இதுபற்றி கேட்டபோது ''உள்ள போயி குடும்பமா நடத்த போற. ஆய் போறதுக்கு அவ்ளோ எடம் போதுண்டா'' என்று சின்னாருவின் வாயடைத்து விட்டார். உட்கார்ந்தவன் கற்றிலும் பார்வையை ஓடவிட்டான் மனிதர்களின் பாலியல் வறுமைக்கோட்டு சித்திரங்கள் அவனை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தன. பார்க்காதது போல பார்த்து தலை கவிழ்ந்தான்.

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. உட்கார்ந்து சரியாக மூச்சுகூட விடவில்லை. அதற்குள் கதவை தட்டினால் சின்னாரு என்னதான் செய்வான் தலையில் சம்மட்டியால் ஓங்கி அடிப்பது போல சின்னாருவிற்கு கேட்டது. ஆனாலும் இன்னொருவனுக்கு கதவை திறந்து கடவுளாகும் சமயம் வந்துவிட்டதென அமைதி கொண்டான்.

வெளியே வந்த சின்னாரு பென்சிலையாவை பார்த்தான். அவர் ரெண்டு லோட்டாவில் தேநீரை ஊற்றிக்கொண்டிருந்தார், ''ஏய் கொடுக்கு. டீ தீஸ்கோரா' என்று ஒரு மடக்கு குடித்துக்கொண்டார். சின்னாரு தேநீரை எடுத்துக்கொண்டு ஒரு மடக்கு குடித்தான். உன் தோஸ்த்து ஆறுமுகம்.. எக்கட்ரா ஆளையே காணம் என்றார் பென்சிலையா. சின்னாரு சோகமாக அவன் இனிமே வரமாட்டான் பென்சிலு'' என்று தேநீரை குடித்தான்.

''ஏண்டா ஒல்லுக்கு கில்லுக்கு எதாவது நோவாடா முகத்தை பரிதாபமாக வைத்துக் கொண்டார். அதெல்லாம் ஒன்னும் இல்ல பென்சிலு. அவுங்க வூட்டுக்கு சொந்தமா ஒரு கக்கூசு கட்டிட்டாங்கோ அதான் என்றான். ஓ. அதி சங்கதியா. அவுங்கோ அம்மா வெவரகொடுக்குடா சின்னரு ஆமா நீங்கோ எப்போ கக்கூசு கட்டப் போறீங்கோ?'' இப்படி பென்சிலையா கேட்டதும் சின்னாருவிற்கு என்ன பதில் சொல்வதெனத் தெரியாமல் தேநீர் லோட்டாவை அப்படியே வைத்துவிட்டு கிளம்பினான். பென்சிலையாவிற்கு ஒன்றும் புரியவில்லை. 'ஏய் சின்னரு சின்னரு ஆகுரா.'' என்று கத்திப்பார்த்தார். சின்னாரு திரும்பாமல் விர்ரென்று நடந்து சென்று விட்டான்.

பென்சிலையா கேட்டது திரும்ப திரும்ப சின்னாருவிற்கு ஒலித்தது. இனி சுலாப் என்ற பட்டப்பெயர் தனக்கு மட்டும் தான் என்று நினைத்த போதே சின்னாருவிற்கு கொலை வெறி வந்தது. குழாயடியில் இவன் ஜோட்டு பயல்கள் நின்று கொண்டிருந்ததை பார்த்து விட்டான். ஆறுமுகம் நின்றிருந்தான். இப்போதெல்லாம் ஆறுமுகத்தின் முகத்தில் ஏதோ ஒரு கவுரவம் ஒட்டிக்கொண்டிருப்பது சின்னாருவிற்கு பிடிக்கவில்லை கண்டு கொள்ளாதவாறு அவர்களை கடந்தான் இன்னா சுலாப்பு காத்தாலயே பொங்கல் வச்சுட்டு வர போலக்குது'' என்று கலாய்த்தான் மாறன். எல்லோரும் சிரித்தார்கள். ஆறுமுகமும் சிரித்தான்.

இந்த மாதிரி பொங்கல் புளியோதரை என்று எப்போதும் அவர்கள் கிண்டலடித்துக் கொள்வது வழக்கமென்றாலும், இப்போது இவர்கள் இப்படி சொல்லி சிரிக்கும்போது தன்னை முற்றிலும் நிர்வாணப்படுத்தி நடுரோட்டில் நிற்க வைப்பதுபோல உணர்ந்தான் சின்னாரு அதுவும் ஆறுமுகம் சிரித்தது இவனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. நேராக சென்று ஆறுமுகத்தின் ஜாவாவில் ஒரு குத்து விட்டான். இதை சற்றும் எதிர்பாராத மாறனும் நேருவும் நிலைகுலைந்து நின்றார்கள். குத்து வாங்கி விழுந்த ஆறுமுகம் வீறு கொண்டு எழுந்து சின்னாருவை ஒரு எத்து விட்டான். மாறனும் நேருவும் இருவரையும் மடக்க முயற்சித்தார்கள். பேட்டையில் சில பெருசுகள் வந்து மடக்கி அனுப்பும் அளவுக்கு சண்டை நிற்கவில்லை. ஆறுமுகத்தை மாறனும் நேருவும் கூட்டிக்கொண்டு சென்றார்கள். சின்னாரு ஆறுமுகத்தை முறைத்தபடியே திரும்ப நடந்தான்.

வீட்டிற்குள் நுழைந்ததும் சின்னாரு கலைந்த கேசத்தை சரி செய்து கொண்டான். அம்மா சங்கரா மீனை ஆய்ந்து கொண்டிருந்தாள். ''ஏய் சின்னாரு அக்கா கக்கூசு போனுமா தண்ணி வாளிய எத்துகினு போயி மாமா வுட்ல வையிட'' என்று சொன்ன அம்மா சின்னாருவிற்கு மீனின் சினை பிடிக்குமென்று தனியாக ஒரு சட்டியில் போட்டு வைத்தாள். அதெல்லாம் எத்து வைக்க கை இல்ல. போ இல்ல எத்துகிறு என்னாண்டலாம் என்றவன் ஆய்வதை நிறுத்திவிட்டு கோபம் வந்தவளாய் 'பெரிய எடுத்துகினு போயி மாட்டாரு புள்ள வெளிய எடுத்துக்கினு போனா கூச்சமா இருக்காது. ஒழுங்கு மரியாதயா எடுத்துகினு வையிட இல்ல மத்தியானம் சோத்துக்கு வூட்டு பக்கம் வந்துராத. முதல் அலசலில் இருந்த மீனை ரெண்டாவது அலசலுக்கு மாற்றினாள். ''ஏன் கூடத்தான் டவுசர புட்சிகினு காலங்காத்தால முகத்தில் ஆறுமுகம் கொடுத்த நகக்கீறலுக்கு தேங்காய் எண்ணெய்யை தொட்டு வைத்துக் கொண்டான். ''அடி செருப்பால இம்புடுகானும் இருந்துகினு கூச்சம். வந்துடுச்சோ எங்கயிருந்து கத்துகினு கிடைத்த சட்டியை தூக்கி அடித்தாள் அம்மா. அக்காவின் முகத்தில் சிலிர்த்த ரேகைகள் படரத் தொடங்கியது. வாளியை தூக்கிக்கொண்டு வீட்டிற்கு போவதென முடிவெடுத்தாள். அம்மா சும்மா கத்திகினு இருக்காத. நானே துக்கிக்கினு போறன் என்று தண்ணீர் வாளியை தூக்கினாள். சின்னாருவிற்கு என்னமோ மனசு கேட்கவில்லை. விறுட்டென வந்தவன் தண்ணீர் வாளியை புடுங்கியபடி வாங்கினான். அக்காவை பார்த்து ''தண்ணீர் வச்சுட்டு வந்து சொல்றன், அப்புறமா போ என்று தண்ணீர் வாளியை தூக்கிக்கொண்டு போனான். அம்மா சின்னதாக சிரித்தபடி சின்னாருக்கு பிடிக்குமென்று



மீனின் தலையை மீன் சினை வைத்த சட்டியில் வைத்தாள்.

அன்று வெள்ளிக்கிழமை என்பதால் ஒலியும் ஒளியும் பார்ப்பதற்காக அக்கா பிரத்யேகமாக தயாராகிக்கொண்டிருந்தாள். மம்மது மாமா வீட்டில் நாலணா கொடுத்து பார்க்க அனுமதியுண்டு. ஆனால் சின்னாருவிற்கு கட்டணம் கிடையாது. சின்னாரு மாமாவின் செல்லப்பிள்ளை. எட்டு மணியானதும் ஒரு ஜமாவாக எல்லோரும் உட்கார்ந்திருந்தார்கள். மாமா நடு நாயகமாக உட்கார்ந்திருந்தார். ''உன் விழியும் என் வாளும் சந்தித்தால்' என்று தலைவர் பாட ஆரம்பித்தார். அதற்கு அந்த கதாநாயகி 'சந்தித்தால்'' என்று கொஞ்சலாக உருகினார் அக்காவும் 'சந்தித்தால்' என்று பாவனை கொண்டதை சின்னாரு பார்த்தான். தண்ணீர் வாளிக்காக அக்காவை மிகவும் புண்படுத்தியதாய் சின்னாரு நினைத்துக்கொண்டான். இதோ எந்தன் தெய்வம் முன்னாலே' நடிகர் திலகம் பாட ஆரம்பித்ததும் மாமா உற்சாகம் கொண்டார். அந்த பாடல் முடியும் வரை அவர் ஒரு எம் சௌந்தரராஜனாகவே மாறி, நடிகர் திலகமாகவே நடித்துக்கொண்டிருந்தார்.

விடிந்தது, சின்னாரு ஆழ்ந்த உறக்கத் தில் இருந்தான். பேட்டையே பரபரப்பானது. மம்மது மாமா இறந்துவிட்டார் என்ற செய்தியை சின்னாருவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மாமா கிடத்தப்பட்டிருந்தார். சில பெரியவர்கள் பக்கத்தில் அமர்ந்தபடி திருக்குரான் ஓதிக்கொண்டிருந்தார்கள். அமைதியாக படுத்திருக்கும் மாமாவை பார்த்தவன் வீட்டிற்கு வந்தான். மாமா இறந்து போனதை விட வேறோரு சிந்தனை அவனை வெகுவாக ஆட்கொண்டுவிட்டது. இனி அம்மாவும் அக்காவும் எங்கே கக்கூஸ் போவார்கள் என்று தீவிரமாக சிந்திக்க தொடங்கினான். அவன் நினைத்தது போலவே சில நாட்களில் பீவி மாமியும் தனது சொந்த ஊருக்கு போவதாகச்சொல்லி அம்மாவிடம் விடைபெற்றார். அம்மாவும் மாமியும் கட்டிப்பிடித்து அழுதார்கள்.

சின்னாரு பள்ளிப்பையை ஆணியில் மாட்டிவிட்டு அடுக்களையில் இருக்கும் சோற்றுப்பானையில் இருந்த சோற்றை போட்டு மீன் குழம்பை ஊற்றி கொண்டான். ஒரு கவளத்தை வாயில் போட்டவன் அம்மாவின் ஞாபகம் வர ''அம்மா எங்க போயிருக்குது'' என்று அக்காவிடம் கேட்டான். ''பக்கத்துலதான் போயிருக்குது. இப்ப

வந்துரும்'' அக்கா எழுதுவதில் மூழ்கினாள். அம்மா வந்தாள் கூடவே இரண்டு நபர்கள் சில பொருட்களை சுமந்து கொண்டு வந்தார்கள்.

ஒரு மீன்பாடி வண்டியில் செங்கல்களும் சிமெண்ட்களும் வந்து இறங்கியது. சின்னாருவிற்கு ஒன்றுமே புரியவில்லை. அம்மாவிடம் கேட்டபோது ''நம்ப வூட்ல கக்கூஸ் கட்டப்போறோண்டா என்று சின்னாருவிடம் சொல்லிவிட்டு மேஸ்திரியிடம் ஏதோ பேசலானார். சின்னாருவிற்கு தலை கால் புரியவில்லை. ''அம்மா நெஜமாவா சொல்ற'' என்று கேட்டான். உன் மேல சத்தியமா என்று அம்மா சின்னாருவின் தலையில் கை வைத்தாள்.

அவனுக்கு சந்தோஷம் தாங்கவில்லை நேராக பென்சிலையாவிடம் ஓடினான். பென்சிலையா உள்ளேயிருந்து வருபவரிடம் காசு வாங்கி கல்லாவில் போட் டுக்கொண்டிருந்தார். ''ஏமிரா கொடுக்கு வவுரு கலக்கிருச்சா - உள்ள போட ப்ரியாத்தான் இருக்குது. - என்றார். சின்னாரு அவர் பக்கத்தில் உட்கார்ந்து ''பென்சிலே எங்க வூட்ல கக்கூஸ் கட்றாங்கோ... அதான் உன்னாண்ட சொல்ட்டு போலாம்னு வந்தேன் சந்தோஷத் தில் அவன் முகம் பூரித்தது. ம். ஆறுமுகம் மாதிரி இனிமே நீயும் இக்கட வரமாட்டல்ல சி ன்னரு. அதே பூரிப்போடு ஆமாமா இனிமே வரமாட்டேன். ஆனா உன்ன பார்க்க வருவன் வரட்டா பென்சிலு. பென்சிலையா சிரித்துக்கொண்டார்.

வீட்டிற்கு நடந்தவன் வழியில் மாறனை பார்த்தான். டேய் மாறா... இனிமே நானும் சொந்த வூட்டு கக்கூஸ்காரன்தான். யாராவது சுலாபு கிலாப்புன்னு கூப்பிட்டிங்கோ மவனே பேஜாரா ஆய்டுவிங்கோ'' என்று கித்தாப்புடன் மாறனை கடந்து சென்றான். வீட்டிற்குள் நுழைந்தான். வெள்ளை நிறத்தில் கக்கூஸ் பேஷனும் கால்வைக்கும் பீங்கானும் பதிப்பதற்கு மேஸ்திரி வெளியே எடுத்துவைத்தார். சின்னாரு அந்த பீங்கானை மிகுந்த வாஞ்சையோடு தடவிப்பார்த்தான். சின்னாருவிற்கு கண்ணீர் வந்தது அவனுக்கே தெரியவில்லை. படுக்கும் முன் அம்மா சொன்னாள் 'இனிமே என் புள்ளிங்க. எங்கயும் வவுத்த புடிச்சிகிட்டு நிக்க வேணாம். சின்னாரு காத்தால நீதான் பஸ்ட்டு போனும் சரியா என்றபோது சின்னாருவின் அப்பா பெருமையாக பீடியை இழுத்துக்கொண்டார். எப்படி புரண்டு பார்த்தும் தூக்கம் வரவில்லை சின்னாருவிற்கு. கண்களை விழித்துப் பார்த்தான். தான் அசந்து தூங்கி விட்டது அப்போதுதான் உணர்ந்தான். அம்மா கக்கூசின் வாயிலில் மஞ்சள் குங்குமம் வைத்து கற்பூரம் காட்டி சின்னாருவை பார்த்து ''ஏய் சின்னாரு தண்ணி எடுத்து வச்சுட்டேன் போ'' என்று நகர்ந்தாள் அம்மா.

சின்னாரு தனது சொந்த வீட்டு கக்கூசில் நுழைந்தான். கதவை தாழிட்டான் விசாலமாக இருந்தது. சிமெண்டாலான ஜன்னல் வைத்து காற்றோட்டமாக கட்டப்பட்டிருந்தது. அம்மா ஏற்றிவைத்த ஊதுபத்தியின் புகை கதவிடுக்கில் சன்னமாக நுழைந்து வாசனை மிகுந்த கழிப்பறையாக மாற்றிக்கொண்டிருந்தது. வாழ்வில் முதல்முறையாக தனது சொந்த கக்கூசில் சின்னாரு உட்கார்ந்தான். எந்த கதவு தட்டல்களும் இல்லை. சுவற்று சித்திரங்களின் வன்மம் எதுவும் இல்லை. புகையோ நாராசங்களோ இல்லாத அவனுக்கான கழிப்பறையில் நெடுநேரம் உட்கார்ந்தும் எதுவும் நடக்காததுதான் சின்னாருவிற்கு ஒன்றுமே புரியவில்லை.



ஓவியம்: ஷ்யாம்

சிறுகதை

கடல் நண்டு

கரன் கார்க்கி

கடற்கரை நகரில் இப்படியானதொரு மதுக்கூடத்தை யாரும் கற்பனைகூட செய்திருக்கவில்லை, மதுக்கூடத்துக்கு இவ்வளவு பெரிய முதலீடா... இதைவிடப் பைத்தியக்காரத்தனம் வேறெதுவுமில்லையென இந்த நகரம் ஒன்றும் பேரிசோ, டோக்கியோவோ இல்லையென்று அவனைச் சார்ந்தவர்கள் எல்லோருமே முணுமுணுத்தார்கள். மதுக்கூடத்துக்கு இவ்வளவு செலவழிப்பதற்குப் பதில் ஒரு பெரிய வணிக வளாகம் கட்டலாம். அதில் ஒரு பகுதி மதுக்கூடம் என்றாலும் மிக லாபமானதுதான்? இன்னும் பல நியாயமான வியாபார முணுமுணுப்புகள் அவனது குடும்பத்துக்குள்ளிருந்து.

அவன் தனது நாற்பத்தெட்டு வயதிற்குள்ளாக ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பலவிதமான வியாபாரங்களைச் செய்து லாபத்தை வெளிநாட்டு வங்கிகளில் சேமிப்பாக வைத்திருந்தான். எல்லா வியாபாரங்களும் ஏதோ ஒரு விதத்தில் அவனுக்கு கேலி கூத்தாகவும், சலிப்பாகவும் இருந்தது. அவன் தொடங்கிய எந்த தொழிலிலும் நட்டமென்பதையே அவன் அறியவில்லை... இப்போது லாபமுள்ள வியாபாரம் என்பதை விட ஆர்வமூட்டக்கூடிய ஒரு மகிழ்ச்சியான தொழிலொன்று அவனுக்கு தேவையாயிருந்தது. அப்படியான ஆர்வமூட்டக் கூடிய மகிழ்ச்சியான ஒன்றை அவன் கண்டுபிடித்திருந்தான்.

அவனது வெளிநாட்டு நண்பர்கள் சென்னையில் ஒரு நல்ல மதுக்கூடம் இல்லையென்ற புகார்கள் அவனை இப்படி யோசிக்க வைத்திருந்தது. உலகின் மிகச்சிறந்த மதுக்கூடம் ஒன்றை அவன் நகரில் கட்டமைக்க ஆசைபட்டான் அதனால் சர்வதேச தரத்துடன் நவீன வடிவமைப்புள்ள மதுக்கூடம் ஒன்று அவன் மனதில் இருந்தது அப்படியான ஒரு கூடத்தை வடிவமைக்க தகுதியானவர்கள் யாரென அவன் உலகமெங்கும் தேடிக் கொண்டிருந்தான்.

புகழ்பெற்ற ஏழு நாட்டு வடிவமைப்பாளர்களில் கீழ்திசை ஞானியான தென் கொரிய வடிவமைப்பாளனொருவன் அழகிய படைப்பொன்றை நகரில் இல்லாதளவான புதுமையுடன் உருவாக்கிவிட்டான். நகரில் இப்போது அந்த மதுவகம் பலருக்குமான காட்சியகம் போல மாறிவிட்டது. பிரஞ்சு வல்லுனர்களே வியந்து கட்டுரைகள் எழுதினார்கள் என்பது நவீன

மது கூடத்துக்கான பெரிய விளம்பரமாக மாறியது. இந்திய செய்தித்தாள்கள் ஓயாமல் எழுதி தீர்த்தன.

மதுவகம் நகரின் மையத்தில் இருந்ததுடன் இரண்டு வல்லரசு நாடுகளின் தூதரகத்துக்கு மையத்திலிருந்ததாலோ என்னவோ எம்பஸி பார் என்று சொல்ல பழகிவிட்டார்கள். தூதரக அதிகாரிகளும், விருந்தினர்களும் அங்கு புழங்க ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு அது மிக வசதியான ஏற்பாடு போலாகிவிட்டது.

அந்த இடத்தில் பாஸிஸ்ட் ஹிட்லர் நேரடி பார்வையில் உருவாக்கிய புகழ் பெற்ற ஜெர்மன் நிறுவனம் தன் மகிழுந்து தயாரிப்புகளுக்கான காட்சியகத்தை வைக்க பத்தாண்டு கால ஒப்பந்தமாக பெருந்தொகையொன்றை அவனுக்குத் தர முன் வந்தது. அதை நிராகரித்து விட்டு ஏன்? அவன் இந்த மதுவகத் தொழிலைத் தேர்ந்தெடுத்தான் என்று ஐரோப்பாவில் குடியுரிமை பெற்று வாழும் அவனது சகோதரிகள் அவனை பைத்தியக்காரனென்று திட்டித் தீர்த்தார்கள். வசதிமிக்க குடியர்களுக்குதான் நட்சத்திர ஓட்டல்களும், இன்னபிறவும் இருக்கிறதே என்று ஓயாமல் புலம்பித் தீர்த்தார்கள்.

நூற்றி நாற்பது வருடங்களுக்குக் குறையாமல் அவனது குடும்பத்தின் ஆண்கள் மட்டுமே புழங்கிய நிலம் இப்போது புகழ் பெற்ற மதுக்கூடமாக வளர்ந்து நிற்கிறது. அவன் குடும்ப ஆண்கள் நகரிலிருந்து நானூறு மைல் தொலைவில் தெற்கில் தங்கள் சாம்ராஜ்யத்தை பரம்பரை பரம்பரையாக கட்டமைத்து கொழுத்திருந்தனர். அவர் தங்கள் கொழுப்பேறிய தினவுமிக்க உடலின் சொகுசுக்காக உல்லாசமாய் இளைப்பாறுவதற்காக கடந்த நூற்று ஐம்பது ஆண்டுகளாக இந்த கடற்கரை நகரில் அதற்காகவே கட்டப்பட்ட கட்டிடத்தில் அவர்கள் ஆடிய ஆட்டங்களின் வரலாறை கொண்ட அந்த கட்டிடம் பாழடைந்து புதர் மண்டி இன்னமும் அந்த நிலத்தின் தென் மேற்கு மூலையில் முடங்கி கிடக்கிறது.

புதர் மண்டிய கட்டிடத்தை சீர்படுத்தி கட்டிடத்துக்கு வெறுமனே வண்ணமடித்து அலங்கார பொருள் போல வைத்திருந்தார்கள். என்றாலும் நரி ஊளையிடுவது போன்ற பயங்கர குரல்கள் அங்கு கேட்பதாக வதந்திகள் உலாவுவதால் அதனருகே யாரும் போவதில்லை. அவனது முன்னோர்கள் அந்த கைவிடபட்ட கடந்தகால மாளிகையில் முறைகேடான உல்லாசங்களை அனுபவித்ததற்கான நூற்று பன்னிரெண்டு ஆதாரங்கள் அந்த நிலத்தில் புதைந்துக் கிடக்கிறது. உலகம் காணவில்லையெனத் தேடிய இரண்டு பெண்கள், ஒரு ஆண் உடல் நிலத்தின் உடைமையாளர்களுக்கு சம்பந்தமற்ற மூன்று சிசுக்களும் அந்த நிலத்தின் அடர்ந்த புதர்களில் வீசப்பட்டிருக்கிறது.

இரண்டு உயிருடன், உயிரற்ற ஒன்று உட்பட அவை விலங்குகளால் பூச்சிகளால் சிதைக்கப்பட்டு அடையாளமற்று போய்விட்டது, சந்தேகத்துக்குரிய சிசுக்களின் நைந்த எலும்பு பாகங்கள் சிலர் கண்ணில் பட்டாலும் அவர்களுக்கு அது பற்றி எந்த விசாரணையும் தேவைப்படவில்லை. அந்த காட்சிகளுக்கு காலம் காலமாக பழகியவர்கள் போல கடந்து போய்விடுவார்கள். ஆனால் மண்ணில் புதைக்கப்பட்டவர்களின் எலும்புகள் இப்போதும் அடையாளமற்றுப்போன அந்தக் கிணற்றில் கிடக்கிறது. கிணறே அடையாளமற்றுப் போனப் பின் மறைக்கப்பட்ட உடல்களைப் பற்றியென்ன?

அவனது பாட்டன்கள் பயன்படுத்திய சிம்சன் தயாரிப்பான அலங்கார கோச் வண்டி இன்னமும் குலைந்துப் போகாமல் புதிய மெருகுடன் அலங்காரத்தின் அடையாளம் போல மதுக்கூடத்தின் மையத்தில் நான்கடி உயரப் பளிங்கு மேடையில் நிற்கிறது. அதன் மேல் ஒரு பட்டுத்துணி வண்டியின் குறுக்காக போடப்பட்டிருக்கிறது. அது விசித்திரமாக படபடத்து நினைவுபடுத்துவது அழகிய நலமுள்ள கவர்ச்சியானதொரு ஆடைகளற்றதொரு மனித உடலை... பாட்டனார்களின் ஆவிகள் அதில் இருப்பதாக அவன் நம்பினான். அந்த வண்டி எப்போது வேண்டுமானாலும் பாய்ந்து ஓடக்கூடும் என்பதுபோல உயிரோடு நிற்கிறது.

கொரிய நிறுவனம் தந்த ஐந்து வடிவ மாதிரிகளில். அவன் கண்ணாடி இழைகளால் வடிவமைக்கப்பட்ட ஒரு மாதிரியை தேர்ந்தெடுத்திருந்தான். எட்டு வார்ப்பிரும்பு தாங்குத் தூண்களாலான மூன்று மாடிகள் கொண்ட கூடம் கூடத்தின் மையம் அறுபதடி உயரமுடையது. எட்டு தூண்கள் கூடத்தின் மையத்தில் நேர்கோடாய் வரிசையாய் நிற்கிறது. ஆனால் தூண்கள் யார் பார்வைக்கும் படாது தூண் தன் பின்னிருக்கும் காட்சிகளை மறைப்பதன் வழியே தன் இருப்பை தெரிவிக்கும் பண்பை மின்னணுவில் முறையில் இழக்க வைத்திருந்தார்கள்.

தூணுக்கு பின்னிருக்கும் மனிதனோ மது பீப்பாயோ தூணின் முன் பகுதியில் யதார்த்தம் குலையாமல் தெரியும், மேற்கூரை திறந்த வானம்போலிருக்கிறது. தாரகைகள் சுடர்கின்றன, நிலவு தோன்றி மேகங்களில் மறைகிறது, மேகம் கருக்கிறது, இடியும், மின்னலும் தோன்றுகிறது, எப்போதேனும் ஒரு விமானம் கடந்துப் போகிறது. ஒரு எரி நட்சத்திரம் விழுகிறது, இருபத்து நான்கு மணி நேரத்துக்கான வானமும் மதுக் கூடத்தின் வானில் நிகழ்கிறது.

முழு வேலைகளும் முடிந்து அவர்கள் இயக்கிக்காட்டிய போது அவன் வியந்து மின்னணு பொறியாளர்களை கட்டியணைத்துக்கொண்டான். நடு இரவு, சூரிய உதயம், நண்பகல், அந்தி மாலையென திறந்தவெளி அரங்கு போல மாயங்களை நிகழ்த்தும் கட்டிடம். சுற்றுச்சுவர்கள், தடுப்புகள் என எல்லாமே கட்டிடம் பெரும்பாலும் வலுவூட்டப்பட்ட கண்ணாடியாலானது. சுவரை உற்றுப் பார்த்தால் டிராகன்களும், பாம்புகளும் பறவைகளும் ஆண், பெண் நிர்வாண உடல்களாலான புடைப்பு சிற்பங்கள், ஏழு நாட்களுக்கு ஏழு சுவரோவியங்கள், இன்று பார்த்தது போல நாளை இருப்பதில்லை, இந்த வாரம் இருந்தது போல அடுத்த வாரம் இருக்கவில்லை, இப்படியாக மது கூடம் பற்றிய வாடிக்கையாளரின் எண்ணம் தோற்றுக்கொண்டே இருக்கும்படியான அமைப்பு.

மதுக்கூடத்திலிருந்துப் பார்த்தால் நான்கு புறமும் தடுப்பற்ற திறந்தவெளியில் இருப்பதுப் போன்றிருக்கிறது. கூடத்துக்குள் நுழையும் எட்டு வாயில்களில் உள்ள கைபிடிகள் தான் பயத்தில் உடல் கூச்சத்தை தருகின்றன, பம்பு தனது வாயைப் பிளந்துக்கொண்டு பிளவு பட்ட நாக்கை நீட்டி இழுத்து சீறி மினுமினுப்பாக நெளிகிறது. அச்சமூட்டும் அசலான பாம்புபோல அவனேகூட முதன் முதலில் தொட அஞ்சினான், இப்போது பழகிய பின்னும் ஒவ்வொரு முறையும் அச்சத்துடன் அதை உற்றுப்பார்க்கிறான். மதுவருந்தி களைத்துப் போகிறவர்களுக்கு பன்னிரென்டு ஓய்வறைகள், அறுபத்தி நான்கு படுக்கையறைகள், ஐரோப்பிய, தென்கிழக்காசிய உணவு வகைகளென அந்த மதுக்கூடம் துவங்கிய நாற்பது நாட்களிலேயே நகரின் சின்னமாகிவிட்டது.

அந்த மதுக்கூடத்தில் வைக்கும்படியான உள்ளூர் மது ஒன்றுமேயில்லை. எல்லாமே ஆறாயிரம் மைல், பத்தாயிரம் மைல் பயணித்து வந்தது. என்றாலும் பனை, தென்னைகள் அங்கு பதப்படுத்தப்பட்ட பானமாக கிடைக்கிறது. பன்னிரண்டு சர விளக்கு களை தவிர வேறு விளக்குகள் எதுவும் அந்தக் கூடத்தில் இல்லை. அதுவும் அறுபதடி உயர கூரையில் தொங்கிக்கொண்டிருக்கிறது. பிறகெப்படி இந்த கூடமும் அதன் அறைகளும் ஒளியூட்டப்பட்டிருக்கிறது. சாளரங்களை திறக்கலாம் வெளி உலக காட்சிகளை காணலாம்.

கட்டிடத்தினுள் சொகுசை அனுபவித்தவர்கள் வெளியேறி கட்டிடத்தை பார்ப்பவர்களுக்கு சன்னல்களற்ற ஒரு அரை கோள வடிவ பளிங்கு வடிவம்தான் தெரியும். அவர்கள் அந்த கட்டிடத்தின் மீதான பிரம்மிப்பிலே மறுபடியும் வருவார்கள். அந்த கட்டிட அமைப்பை அவர்களால் புரிந்துக்கொள்ளவே முடியவில்லை. கூடுதலாக கூரை எவ்வளவு உயரத்திலிருக்கிறதென்று இதுவரை முயன்று பார்த்தும் யாராலும் சொல்ல முடியவில்லை. மது கூடத்துக்கு வருகிறவர்கள் மது கூடத்துக்கான இந்த ஒளி எங்கிருந்து வருகிறது என்று தேடுவதிலும், இந்த கூரை எத்தனையடி உயரம் என்று அளப்பதிலும் முதல் மிடறை

விழுங்குகிறார்கள். ஆனால் பதிலைதான் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

மதுக்கூடத்தினுள்ளே நுழைந்தவர்கள் கலைடாஸ்கோப்பில் நுழைந்துவிட்டவர்கள் போல குதுகலமாகிவிடுகிறார்கள். மது பறிமாறுபவர் மின்னணு கண்ணாடிக் காகிதத்தில் ஆறாயிரம் வகையான மதுவகைகளின் பட்டியல் வரும்,தேவையானதை தொட்டு உறுதிப்படுத்தினால் ஐந்து நிமிடத்திற்குள் அவருக்கான மது பறிமாறப்படும். மதுவக முகப்பில் பல வண்ண மது ஊற்று ஐம்பதடி உயரத்துக்கு இசைக்கு தகுந்தபடி வித்தை காட்டிக் கொண்டிருக்கிறது. நகரில் மட்டுமல்ல நாட்டிலேயே அவ்வளவு உயர நடன நீரூற்று வேறில்லை.. மதுவின் வாடைக்கேற்ற நிறம். நிறத்துக்கேற்ற வாடையுள்ள மது வகைகள் அங்கே கிடைக்கிறது. உலகின் விலைமிக்க அத்தனை மதுவும் அங்கே கிடைக்கிறது... பணத்தை பற்றி கவலையற்ற உல்லாச பிரியர்களை கவர்ந்திழுக்க போதுமான அத்தனை சொகுசும் அந்த மதுகூடத்தில் கூடுதலாக ஒரு தகவல் ஞாயிற்று கிழமைகளில் கூடத்தினுள் பனி பொழிகிறது...

தரமான மது. உங்கள் உரிமையென்று விளம்பரம் செய்ய ஆலோசித்தான், அதற்கு வாய்ப்பில்லை தரமான உணவகம் என்று விளம்பரம் தந்து அதில் தந்திரமாக மதுவுக்கான காட்சிகளை வைத்து விளம்பரம் செய்து பிறகு யாராவது கோர்ட் வழக்கு என்று வந்தால் நீக்கிவிடலாமென்ற ஆலோசனை வந்தது, ஆனால் நாற்பது நாட்களிலேயே விளம்பரம் தேவையில்லை என்கிறளவில் மதுவகம் நகரெங்கும் பிரபலமாகிவிட்டது. நூற்றி ஐம்பது நாடுகளின் மதுவகைகள் அங்கு கிடைக்கிறது.

போயும் போயும் ஒயின் ஷாப்பா என்று முகம் சுளித்த அவன் சகோதரிகள் இப்போது அவனுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பினார்கள். அவன் பிரபலமானவனாகியிருந்தான்.

அவன் வாடிக்கையாளர்களை கூர்ந்துப் பார்க்கிறவனாகி, எதுமாதிரியான ஆட்கள் வருகிறார்கள், எப்படி நடந்துக் கொள்கிறார்கள், எதை அதிகம் விரும்புகிறார்கள் என்று வாடிக்கையாளரை ஆய்வு செய்கிறவனாகிவிட்டான். தனியாக வருகிறவர்கள், கும்பலாக வருகிறவர்கள், சிலவேளைகளில் மதுக்கூடத்தில் நுழைந்தவுடன் எதையாவது உடைத்து விடுவோமோவென நாசுக்காக நடந்துக் கொண்டவர்கள், மது வெறியேறியப்பின் கண்ணாடி மேசையில் ஓங்கியடிக்கிறவர்கள், ஓசையுடன் இரண்டொரு ரத்த துளிகளுடன் மேசை விரிசலிட, தங்கள் கைகளில் கண்ணாடி சில்லுகள் குத்திவிட்டதாவென அச்சத்துடன் பார்ப்பார்கள். ஆனால் அப்படி எதுவும் இதுவரை நடக்கவில்லை.

அப்படியான அறிகுறிகள் தென்பட்டால் அந்த நாகரீகமற்ற குடியரை சீருடை அணிந்த உடல் வலுமிக்க ஊழியர்கள் அப்புறப்படுத்திவிடுவார்கள். அவர்கள் உடல் வலு பிரமிப்பூட்டுவதாக இருக்கிறது. அங்கு பாதுகாப்பு பணியில் இருந்தவர்களையும் அவன் ஆப்ரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளிலிருந்து இறக்குமதி செய்திருந்தான்... மதுவை நுகர்வதில் ஆண் பெண் பேதங்கள் எதுவுமே இருக்கவில்லை. நுகர்ச்சிக்கு பின்பான ஆட்டங்களிலும் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விஞ்சிக்கொண்டிருந்தார்கள். காதல் லீலைகள் அரங்கேறும் இடங்களில் அதன் தன்மைக்கேற்ப ஒளி குறைந்தும் நிறைந்தும் அவர்களை ஊக்கப்படுத்துகிறது. பிறகென்ன அறுபது நாட்களுக்குள் அந்த மதுக்கூடம் நகரில் மிக பிரபலமான ஒன்றாகிவிட்டது. அவனுக்கே தான் உருவாக்கிய மதுக்கூடத்தை நினைத்துப் பெருமையாக இருந்தது. மூன்றாவது மாத துவக்கிலேயே அவனுக்கு ஆறு விருதுகள் வழங்கப்பட்டிருந்தது. மதுக்கூடத்தில் அவற்றை அலங்காரமாக அடுக்கி வைத்திருந்தான்.

ஒரு ஓவியனைப்போல, அல்லது ஒரு நாவலாசிரியனைப் போல, அவன் அதிகாலையிலேயே எழுந்து கடற்கரையை ஒட்டிய தனது வீட்டின் சாளரம் வழியே தனது சொந்த படைப்பை போல கடலைப் பார்ப்பான். வரிவரியாக செம்மை படர்ந்து ஜாலம் காட்டும் கீழ்வானை பார்த்து அதிசயிப்பான். கரையிலிருந்து இரண்டு கிலோமீட்டர்

தொலைவில் திறந்தவெளி கடலில் மிதக்கும் மதுவகம் அமைக்க அவனுக்கு எண்ணம் தோன்றியது. அரசிடம் அனுமதி கேட்டிருந்தான், சம்பந்தபட்ட அதிகாரிகள் அவன் ஆசைக்கு வழி செய்வதாக சொல்லி லஞ்சமாக பலவிதமான உலகின் மிகச்சிறந்த மதுவகைகளை தீர்த்துக்கட்டியிருந்தார்கள். கரையிலிருந்து நீருக்கடியில் வலுவூட்டப்பட்ட கண்ணாடி இழையாலான வளையப்பாதை வழியாக மதுவக மேடைக்கு செல்ல முடியும். இருபத்தைந்தாயிரம் சதுரடியில் மிதக்கும் மதுக்கூடத்துக்கான திட்டம் அரசின் ஆணைக்காக காத்திருக்கிறான். ஆணையை எப்படியாவது பெற்று தருவதாக சில முக்கிய அதிகாரிகள் வாய்க்கும் போதெல்லாம் அவனது மது கூடத்துக்கு வந்து மதுவை இலவசமாக உறிந்துக் கொண்டிருந்தார்கள்.

அவன் தனது வெற்றிகரமான இருபத்திநாலு மணி நேர மதுகூடத் தொழில் வெற்றியால் மகிழ்ச்சியடைந்திருந்தான். அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் ரோல்ஸ்ராய்ஸை எடுத்துக் கொண்டு நகரின் அகலமான சாலையில் வடக்கும் தெற்குமாக பெருமிதமாகப் பறப்பான். முடிவில் அவனது மதுகூடத்தினெதிரே வண்டியை நிறுத்திவிட்டு தனது ரோலஸ் ராய்சில் சாய்ந்தபடியே மதுவகத்தின் முழு தோற்றத்தையும் பார்த்து ரசிப்பான். பறந்து செல்ல துடிக்கும் வலையிட்டு அடக்கி வைக்கப்பட்ட அரை கோள வடிவ பளிங்கு கட்டிடம் அவனுக்கு மகிழ்ச்சியூட்டும்.

புகழ்பெற்ற உள்ளூர் சினிமா கலை இயக்குனரால் உருவாக்கப்பட்ட ஜப்பானிய கடல் ஸ்பைடர் கிராப் நண்டு நீரூற்றுக்கு மேலே அந்தரத்தில் உயிர்ப்போடு. எதன் ஆதாரத்தில் அந்த நண்டு அசைந்துக்கொண்டிருக்கிறது. இப்போது சூரியன் முளைத்து செவ்வானம் படருகிற நேரம், சிவப்பு புள்ளிகளால் ஆன நண்டு கடல் நீரூற்றில் உரு மறைப்பு செய்யப்பட்டிருக்கும் தூணின் ஆதாரத்தில் தப்பியோட தவித்துக்கொண்டிருக்கிறது. இப்போது சூரியன் முளைத்து செவ்வானம் விரிகிற நேரம் நண்டு வேகங்கொள்கிறது.

நண்டின் அசைவை பார்த்துக்கொண்டிருந்தவன். குடியால் உடலழிந்து நாசமான பெரும் நிலத்துக்கு சொந்தக்காரர்களான தனது பாட்டன்களை நினைத்துக்கொண்டான். அவர்களை அவன் பார்த்ததில்லை. அவர்களது வரலாற்றால், அவர்களது பல நூற்றாண்டு செல்வத்தால் அவன் நிரப்பப்பட்டிருந்தான். அவர்கள் இந்த மதுக்கூடத்தைக் கண்டால் என்று கற்பனை செய்துப் பார்த்தான், அவர்களின் ஆவிகள் அவனது குடும்ப சொத்தான அந்த கோச் வண்டியில் இருப்பதான அவன் நம்பிக்கை மேலும் கூடியிருந்தது.

இரண்டொரு நாட்களுக்கு முன் மது வெறியேறிய இளைஞனொருவன் கோச்சில் ஏறி உட்கார முயன்று விழுந்து காலை உடைத்துக்கொண்டான், யாரோ தன்னை வண்டியிலிருந்து தள்ளி விட்டதாக காயம்பட்டவன் புலம்பினான். அவனை தள்ளிவிட்டது தன் மூதாதை ஆவிகள்தானென உறுதியாக இவனால் நம்பமுடிந்தது.. மதுக்கூடம் குறித்த பலவிதமான எதிர்கால கற்பனைகளுடன் சிகரெட்டைப் பற்ற வைத்தான், அவன் செலவழித்த தொகை, வருவாய் என எல்லாவிதத்திலும் லாபமான ஒன்றாகவே இருப்பதற்கான விடைகளே வருகிறதென்பதால் மனநிறைவாக உணர்ந்தான். அதே நேரம் சளிப்பாகவும் இருந்தது.

ஒரு வாடிக்கையாளன் வருகிறான் பாம்பு நெளியும் கைபிடிகளைப்பார்த்து கூச்சமடைகிறான், கண்ணாடி சுவரின் புடைப்பு சிற்பங்களைப் பார்த்தப்பின் விரும்பிய மதுவை குடித்து கன்னம் விறுவிறுக்க பணத்தை தந்துவிட்டு போகிறான். எப்பேற்பட்ட மதுவும் மனிதனின் குடலையும், மூளையையும் நாசம் செய்யவே ஆசைபடுகிறது. பிறகு அவன் கல்லீரலை போதுமானளவு அழுக வைத்து அவனை கொல்கிறது. பிறகு அவர்களது கல்லீரலையும் மனதையும் அரித்து தளர்த்தி தோற்ற மனிதனை கொல்கிறது. மனிதனுக்கு ஆசையூட்டி கவர்ந்திழுத்து வெறியேற்றி அவனுறுப்புகள் கொஞ்சம் கொஞ்சமாக சிதைந்து நாசமாவதில் என்ன இருக்கிறது? என்று தனக்கு தானே சலிப்புடன் கேட்கவும் செய்தான்.

தனது சொந்த மதுக்கூடத்தை யாரோ போல ரசிக்கும் எசமானரை ஊழியர்கள் பார்ப்பார்கள். அவர்கள் பார்ப்பதை கூட அவனால் கண்டுணர முடியாது. மது கூடத்திலிருந்து வெளி உலகைப் பார்க்கலாம் வெளியிலிருந்து அது சாத்தியமல்ல. மது கூட ஊழியர்களுக்கு போதுமான அன்பளிப்புகள் அங்கு கிடைக்கவே செய்தன. வெளிநாட்டுப் பயணிகள் கடல் நண்டென பெயருள்ள மதுக்கூடத்தை ஒரு சுற்றுலாதளமாக்கிவிட்டார்கள், பல நாடுகளை சேர்ந்த இசை கலைஞர்கள் உலகின் மிகச்சிறந்த கீதங்களை வாசித்தபடியே இருக்கிறார்கள். எல்லாம் மிக சரியாகப் போய்க்கொண்டிருக்கிறது.

என்றாலும் எதோ ஒரு குறை வாழ்வின் மீதான சளிப்பை விட மோசமான ஒன்று அவனுள்ளத்தை நெருடிக்கொண்டுதானிருக்கிறது. வழக்கம் போல அன்றும் தனது ரோல்ஸ்ராய்சில் சாய்ந்தபடி மதுகூடத்தை பார்த்து ரசித்துக்கொண்டிருந்தான், மது கூடத்துக்கு முன்பான நீரூற்றின் உச்சியில் தொங்கவிடப்பட்டுள்ள விளம்பரத்துக்காக செய்யப்பட்ட ஜப்பான் ஸ்பைடர் கிராப் நண்டு தனது பிரம்மாண்ட கால்களை அசைத்து தப்பியோட துடித்துக்கொண்டிருந்தது.

அதன் கால்கள் பன்னிரண்டு அடி நீளத்துக்கு நீண்டு அசைந்துக்கொண்டிருப்பதால் பறவைகள் கூட அதன் மேல் உட்கார அஞ்சுகின்றன என்பதை அவன் கவனித்தபோது துயரமாக உணர்ந்தான். அந்த நேரம் பார்த்து கடற்கரை பக்கமிருந்து பறந்த வந்த இரண்டு மீன் கொத்திகள் ஒரே நேரத்தில் கடல் நண்டின் கண்களை குறிவைத்து பறந்து பக்கத்துக்கு ஒன்றாய் உட்கார்ந்தன, பன்னிரெண்டு வினாடிகளுக்கு ஒரு முறை கண்கள் வலதும் இடதுமாக அசையும் தருணத்தில் பறவைகள் இரண்டும் அச்சத்துடன் பார்த்தன. இவ்வளவு பெரிய நண்டை அவை பார்த்ததே இல்லை, இந்த இடத்தில் எப்படி? அவை குழம்பி விட்டன, பொறியாளர்கள் கடல் நண்டை அவ்வளவு நேர்த்தியாக உயிருள்ளதைப்போல் வடிவமைத்திருந்தார்கள்.

ஆறு விதமான அசைவுகளை அது நிகழ்த்தும், கடல் நண்டு தனது அலகை விரித்து அவனைப் பார்த்துக் கொண்டிருந்தது. மீன் கொத்திகள் என்ன நினைத்தனவோ மீண்டும் நண்டின் பல்லில் வந்தமர்ந்துக்கொண்டு ஓசையெழுப்பின. அசையும் நண்டுடன் அவன் மிரண்ட பறவைகளையும் ரசித்துக்கொண்டிருந்தான். மீன் கொத்திகள் இரண்டும் அச்சமடைந்து பறந்தாலும் மீண்டும் மீண்டும் அந்த நண்டின் மீதே வந்து உட்கார்ந்து அசட்டையாக இருந்த சமயம் நண்டு விழித்துக்கொண்டது போல் கொடுக்கை அசைக்க, அவனே ஓவென அலறிவிட்டான். அதைவிட வேகமாக மீன் கொத்திகள் வானில் எழும்பி மேற்கு நோக்கி பறந்து விட்டன. தன் சொந்த நண்டின் மேல் அவனுக்கு கோபம், அந்தப் பறவைகளுக்காக இரக்கப்பட்டான். அன்று முழுதும் அந்த பறவைகளின் நினைவாகவே இருந்தான். நண்டையும், பறவைகளையும் நண்பர்களாக்க முடியாது என்பதை நினைக்க அவனுக்கு கவலையாக இருந்தது. என்றாலும் தன் முன்னோர்களின் ஆவிகள் நிச்சயம் தன் மது கூடத்தில் மகிழ்ச்சியடையக்கூடுமென்ற நினைப்பு அவனது திருப்தியற்ற மனதின் வெற்றிடத்தை நிரப்பக்கூடியதாக இருந்தது.

மறுநாள் அதிகாலையும் வழக்கம்போல் மதுவகம் முன்பாக தனது ரோல்ஸ்ராய்சில் சாய்ந்தபடி நின்று புகைத்தபடி மதுவகத்தைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தான். அவன் கண்கள் வானத்தில் அந்த மீன் கொத்திகளை தேடியது. அந்த மீன் கொத்திகள் திரும்ப வரப்போவதில்லையென்று அவன் தனக்கு தானே சொல்லிக் கொண்டான். அவன் எப்போதும் பறவைகளை நேசிப்பவனாய் இருந்தான். தனக்கான சொந்த பறவைகள் பூங்கா ஒன்றை குழந்தைப் பருவத்திலிருந்தே கனவு கண்டு வருகிறான்.

பறவைகளின் மீதான காதல் அவன் பரம்பரைக்கு ஒரு நோய் போல, அவனதுப் பாட்டனார் போர்ச்சுகீசியன் ஒருவன் தந்த மூன்று தென்னமெரிக்க வண்ணக்கிளிகளுக்கீடாக

தனது ஆசை நாயகிகளில் ஒருத்தியையே தந்துவிட்டாராம். அவனது பாட்டனார்கள் பறவைகளால் ஆன பெரிய தோட்டங்களை வைத்திருந்தார்கள். ஆசியாவின் பறவையினங்கள் எல்லாம் அதில் இருந்ததாம், சுதந்திரம் பெறுவதற்கு பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பான ஒரு மோசமான புயலில் அவை அழிந்துப் போனதாக ஒரு குடும்ப கதை அவன் நினைவில் தங்கியிருந்தது இப்போது நினைவுக்கு வந்தது.

விசித்திர கட்டிடத்துக்கு முன் நீருற்றும், வண்ணக்கொடிகளும், கடல் நண்டும் வழக்கத்தை மீறி இன்று அவனுக்கு மகிழ்ச்சியை தரவில்லை, ஒரு பெரிய மரம் அந்த மரத்தின் பக்கவாட்டில் நீண்ட உறுதியானக் கிளை அதன் மீது இருபது பெரிய வண்ணக்கிளிகள் உட்கார்ந்திருந்தால் என்ற யோசனை வந்தது. அதை தொடர்ந்து மது கூடத்தினுள்ளேயே அழகான வண்ணப்பறவைகள் சிறகடித்தால் எப்படியிருக்குமென யோசித்தான். சளிப்பைபோக்க அவன் புதிதாக பலதை யோசித்தான்.

அந்த நேரம் அவன் இதுவரையிலும் பார்த்திராத புதிய வாடிக்கையாளன் ஒருவன் இவ்வளவு அதிகாலையிலே பறவை போன்ற தன் நீளமான ஹார்லி டேவிசனில் மதுவகத்துக்குள் நுழைவதை அப்போது தான் கவனித்தான், வாடிக்கையாளனின் தோள்களில் இரண்டு மீன் கொத்திகள் உட்கார்ந்திருப்பதையும் அவன் கவனித்த போது அவை நேற்று தன் இயந்திர நண்டுகளால் அச்சமடைந்த பறவைகள் என்று கண்டுகொண்டான், இன்னும் சில பெரிய பறவைகளும் அவன் மேல் உட்கார்ந்திருந்தன, அந்த புதிய வாடிக்கையாளன் உள்ளூர்காரனுக்குரிய தோற்றமற்று செம்பால் உருக்கி வார்க்கப்பட்டவன் போலிருந்தாலும் ஒரு பறவையை போன்ற தோற்றத்திலிருந்தான்.

பறவைகள் அவனை ஆடை போல மூடியிருந்தது. மதுவக உரிமையாளன் இதுவரை பார்த்த மனிதர்களிலேயே உயரமாக, வீழ்த்த முடியாத மல்யுத்தக்காரனைப் போலிருந்தான். அவன் மீதிருந்த பறவைகள் பருத்த மரக்கிளையின் மேல் உட்கார்ந்திருப்பது போலிருந்தது. அந்த சின்னஞ்சிறு பறவைகள் தன் எசமானனுக்கான மதுக்கடையை கண்டுபிடித்து அவனை இங்கு அழைத்து வந்திருக்கலாம் என்று யோசித்தான்.

பறவை மனிதன் வண்டியை நிறுத்த மதுகூடத்துக்கு பக்கவாட்டுக்குப் போய்விட்டான். அவனை மதுகூடத்துக்குள் வரவேற்க ஆர்வம் கொண்ட உரிமையாளன் மதுக்கூடத்துக்குள் நுழைந்து தலைவாசலில் தயாராக நிற்க, பறவை மனிதன் நுழைவாயிலின் கதவு கைப்பிடியை தொட முயன்று அவசரமாக தனது கையை இழுத்துக்கொண்டான், கைப்பிடியில் பாம்பு வளைந்து நெளிந்தது அவனை திடுக்கிட வைத்தது.

அவன் சுற்றிலும் ஒருமுறை பார்த்தப் பின் தன் இடது முழு கால்சட்டைப்பையிலிருந்து ஒரு பறவையை உருவியெடுத்தான். அது விண்ணுக்குத்தாவி ஒரு வட்டம் போட்டு அவன் மரக்கிளைப் போன்ற கையில் வந்து உட்கார்ந்தது. அவன் அதை கைபிடியினருகே கொண்டுப்போனான், அது கோபத்தில் பாம்பை பாய்ந்துக் கொத்தியது. தனது வலது காலால் வன்மத்தோடு தாக்கி ஏமாந்து அவனைப்பார்க்க அவன் சாந்தப்படுத்தி, அது பாம்பல்ல தந்திரமாக வடிக்கப்பட்ட உலோகம் என புரிந்து அதன் நேர்த்திக்காக குனிந்து பாம்பின் தாழ்த்தியது. மதுக்கடை உரிமையாளனுக்கு உள்ளம் குளிர்ந்துவிட்டது.

கருடனை மீண்டும் அவன் கால்சட்டை பையில் நுழைத்துக் கொண்டு மதுவகம் புகுந்தவனை மதுக்கூட உரிமையாளன் பெரும் மகிழ்ச்சியோடு வரவேற்றான். பறவை மனிதன் தனக்காக தனித்த மேசையை தேர்ந்தெடுத்தான். சுற்றிலும் ஒருமுறைப் பார்த்தவன் தூரத்தில் அலங்காரமாய் நிற்கும் கோச் வண்டியை நோக்கி நடந்தவன் அதை நெருங்கியவன் பேராசையுடன் அதை காதலியை தடவுவது போல தடவி அதன் ஒவ்வொரு பாகத்தையும் உற்றுப்பார்த்தவன் எந்த முன்னறிவிப்பின்றி ஓட்டுனரிடத்தில் தாவி ஏறினான். கம்பீரமாக குதிரைகளை வழிநடத்துபவன் போல் சாட்டையை சொடுக்கினான். கோச் வண்டி

சீறிக்கொண்டுப் பாய்கிறது. மதுக்கூடத்தையே ஒரு சுற்று வந்தவன் போல அதை கட்டுபடுத்தி கம்பீரமாக கீழிறங்கி கோச் வண்டியின் பயணிகள் அறை கதவைத் திறந்தவன் அதனுள் புயல் போல தாவியேறினான்.

மதுக்கூட உரிமையாளன் எதிர்பார்த்தது எதுவுமே நடக்காமல் பறவை மனிதன் நலமுடன் கிழிறங்கி கதவை சாத்தினான். வண்டியை இரண்டு கைகளாலும் பற்றி ஆழ்ந்து முத்தமிட்டான். அது பலமாக குலுங்கியாடியது. அதை ஒரு முரட்டு குதிரையை தட்டிக்கொடுப்பது போல தட்டி அமைதிபடுத்தியவன் தனது சொந்த மாளிகையில் நடப்பதுப்போல் கம்பீரமாக தனது மேசைக்கு போயமர்ந்து ஆறு நாட்டின் சாராயத்தை ஆறுக் கோப்பைகளில் ஒரே நேரத்தில் கொண்டுவரச் சொன்னான். இதையெல்லாம் பத்தடி தொலைவில் நின்று ஆச்சரியமாக வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருப்பவனை காட்டி மது பறிமாறுபவனிடம்

''யார் இவர்''

''மதுவகத்தின் உரிமையாளர்''

பறவை மனிதன் வியப்புடன் எழுந்துப்போய் மதுவக உரிமையாளனை மேற்குப் பாணியில் கை குலுக்கி கட்டியணைத்து கன்னத்தில் முத்தமிட்டான். பார்வைக்கு தெரிந்ததைவிட அவன் உலோகத்தைப்போல் பலமாக இருந்தான்.

தன் பாட்டனார்களின் ஆவி இவனை ஒன்றும் செய்யாதது ஏன்? ஒரு வேளை என் பாட்டனாரின் ஆவி இவனை வழி நடத்துகிறதா? என்று சந்தேகித்தான். அவனது மேசைக்கு ஆறு கோப்பை மது வந்ததும் நிகழ்ந்ததைப் பார்த்தப்பிறகு அவன் சந்தேகம் தீர்ந்தது. அவன் நம்பிக்கைக்கு பறவைகள் பலமூட்டின. அந்த நேரம் தன் கால் சட்டைப்பையிலிருந்து ஒரு தங்க நிற கழுகை எடுத்து மேசையில் விட்டான். அது இடதும் வலதுமாக சிறகை விரித்துக் கொண்டு நின்றது.

''இந்தப் பறவைகள் என்னுடன் இருப்பது உங்களுக்கு தொந்தரவில்லையே'' பறவை மனிதன் மதுவக உரிமையாளனைப்பார்த்துக் கேட்டான். அவனுக்கோ தன் பாட்டனார் தன்னோடு உரையாடுவது போலிருந்தது,

''பறவைகளை எனக்கு பிடிக்கும் நேற்று இது மாதிரியே இரண்டு மீன் கொத்திகளை வெளியேப் பார்த்தேன் அது தான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.'' அதே நேரம் இரண்டுப் பறவைகளும் நாங்கள் தான் என்பதுப் போல ஒரே நேரத்தில் தங்கள் வலது காலை உயர்த்திக் காட்டின,

மதுவக உரிமையாளனின் முகத்தில் ஊதா நிறத்தில் ஆச்சரியம் வழிவதை பறவை மனிதன் பார்த்தான்.

''என் பறவைகளை தான் நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்''

''அப்படியா''

''ஆமாம் என்னிடத்தில் ஐம்பது பறவைகள் உள்ளன. அதில் இருபத்தி எட்டு பறவைகள் என்னுடன் பேசும். சிலது வெளியில் சுதந்திரமாக திரிகின்றன. வேண்டும் போது அழைத்துக் கொள்வேன்''

''ஆமாம் நாங்கள்தான் எங்கள் தலைவருக்கு பொருத்தமான மதுக்கடையை கண்டுப் பிடிக்க வந்தோம், கடல் நண்டு எங்களை கடிக்கப்பார்த்தது'' மீன் கொத்திகள் பேசின,

பறவைகள் பேசியதைக்கேட்டு அவன் மூச்சுவிட மறந்துவிட்டான். தன் முன்னே பிரம்மாண்டமான மனிதன் தன் பாட்டனார்களின் சாயலில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான்.

தன் குடிகார பாட்டனார்களும், பறவைகள் மோகிகள்தான், இவன் எனது பாட்டனார்களின் கலவையென அவன் சிந்தித்த நேரம் மேசையில் வரிசையாக வைக்கப்பட்ட ஆறுக் கோப்பைகளையும் இடைவெளியற்று எடுத்துப்பருகினான்.

''உங்களுக்கு பறவைகளைப் பிடிக்குமா?'' என்று மதுக்கூட உரிமையாளனை கேட்க

''ரொம்ப'' என்று சொன்னவனைப் பார்த்து

''வாயில் கதவை திறக்கச் சொல்லுங்கள்'' என்றான்

ஏனென்று புரியாமலே ஆட்கள் கதவை திறக்க பறவை மனிதன் எதோ முணுமுணுத்தான் ஆறு பெரிய வண்ணக்கிளிகள் சிறகடித்துக் கொண்டு மதுக்கூடத்தினுள் நுழைந்தன.

''இந்தக் கிளிகளை நீங்கள் அனுமதிக்கிற இடத்தில் மட்டும் தான் இருக்கும்'' என்றவன் வேறு ஏதோ முணுமுணுத்தான். கிளிகள் எதிரே காலியாக இருந்த மேசையில் போய் நின்றுக் கொண்டன. அடுத்து பத்து கோப்பைகள் கனிகளில் தயாரித்த மது வகைகளை கொண்டுவரச் சொன்னான். பல பத்துக்கோப்பைகளால் அவன் நிரம்ப, மதுவகத்துக்குள் புதியப் புதிய பறவைகளால் நிரம்பிக் கொண்டிருந்தது. அவன் ஒருவனே எல்லா மதுவையும் இருப்பு இல்லாமல் தீர்த்துக்கட்டிவிடுவானோ என்பது போல மது பரிமாறுபவர்கள் அஞ்சினார்கள்

மதுக்கூடம் பறவைகளின் காட்சிக் கூடம் போலாகிவிட்டது. அதிகாலையில் தொடங்கியவன், நள்ளிரவில் முடித்தான். தேய்த்த செம்பு உலோகத்தைப்போல அவனது முகம் சுடர்ந்தது. அவனருந்தியது அத்தனையும் நூறாண்டு பழமையான மது. அவனருந்திய மதுவுக்கான தொகையை வைத்திருக்குமளவு அவனிடம் பைகளில்லை என்பது தெரிந்து மது பறிமாறியவன் பண அட்டைக்கான மெஷினோடு வந்தவனிடம் ''என்னிடம் அப்படி எதுவுமில்லை'' என்று கை விரித்தான்.

விரிந்த அவன் கைகளிலிருந்து இரண்டு செந்நிற சிட்டுகள் பறந்துப்போய் சர விளக்கில் உட்கார்ந்தன. அவன் போதையேறிய கன்னங்களை தேய்த்துக் கொண்டு கையை தலைக்கு மேலே தூக்கி தனது பெரிய உடலை முறுக்கி சோம்பல் முறித்தான். அச்சத்தோடு பார்க்கும் மது பறிமாறியவனிடம் ''உன் முதலாளியிடம் போய் சொல் என்னிடம் பறவைகள் மட்டும் தானிருக்கிறது. பண அட்டைகள் இல்லை'' என்றவனை நெருங்கிய வலிமையான ஆட்களிடம்,

''அவரிடம் எதுவும் கேட்காதீர்கள் அவருக்கு வேண்டியதை தந்து... அவர் விரும்பினால் ஓய்வறைக்கு அழைத்துப் போங்கள்''

என்று மதுவக உரிமையாளன் உத்தரவிட்டுக் கொண்டிருக்கும் போதே பறவை மனிதன் மதுக்கூட வாயில் கதவை திறந்துக்கொண்டு வெளியேறிக் கொண்டிருந்தான்.

அவனது மேசையில் நீலம், சிவப்பென, இரண்டிரண்டாக நான்கு கிளிகள் கொஞ்சிக் கொண்டிருந்தன. அவன் இறங்கி பறவை மனிதனை வழியனுப்ப மதுவகத்துக்கு வெளியே ஓடினான், பறவை மனிதனின் வாகனம் மின்னல் போல சீறிச் செல்லும் ஓசை மட்டும் அவனால் கேட்க முடிந்தது. துக்கத்தோடு சாலையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு

ஆறு கோப்பை... ஆறு கோப்பை...

என்ற கரகரப்பான குரல் கேட்டு அன்னாந்துப் பார்த்தான். பொன்னிற கழுகு கடல் நண்டின் கண்களை கொத்திக் கொண்டிருந்தது.



ஓவியம்: ரமணன்

காட்டிக் கொடுத்தது மின்னல்

தராசு முள்ளை
சம அளவில் நிற்கவிடாமல்
துள்ளுகிறது மீன்.

நகரவில்லை நத்தை
வீடு அடைந்துவிட்டது.

கயிற்றில் நடக்கும் கழைக்கூத்தாடி
ஒவ்வொரு அடியையும் பார்த்துப் பார்த்து
வைக்கிறான் தரையில்

திருடன்
வந்து போன பிறகுதான்
பூ பூத்திருக்க வேண்டும்.

கையில் கிடைத்த நிலவை
தொட்டு தடவிப்பார்த்து
குளிர்கிறது என்கிறான்
பார்வையற்றவன்.

N.லிங்குசாமி

பறக்கும் போது
எல்லாமே
தலைகீழாகத் தெரியும்
வவ்வாலுக்கு.

எப்போதும்
கூவும் அந்தக் குயிலை
காட்டிக்கொடுத்தது
ஒரு மின்னல்

பக்கெட்டில் நிரம்பிய நீரில்
உப்பிட்டபோது
கடல் ஆனது.

அசையாத
அந்த மரத்தை
உயிர்ப்பித்தது காற்று.

ஒவ்வொரு புல் நுனியிலும்
நீர்க் குடம்
மேய்வதா குடிப்பதா
புரியாமல் பசு.

❖❖❖

கவிதை

பாஸ்கரன்

இன்று முதல் தாய் என்று பெயர்!

மலர்கள் வடிவில் கடிகாரமிருந்தும்
முட்களே நேரம் காட்டுது!

விடியல் நேரத்துக் கனவுகள் பலித்துவிடுமாம்;
விடியலையே கனவாய்க் கண்டேன்..
பலிக்கவே இல்லை.

தாம் இல்லாது போனால் என்ன ஆவார்களோ?
என்றெண்ணி உருகி உருகி உயிர் சுமப்போர்,
தம் தயவின்றியே தரமாக வாழ்வார்கள்
என்பதை உணரும் தருவாய்..
ஓர் உன்னத நிலை

சொந்த வீடு இல்லாதவர்களுக்கும் கூட
சொந்த ஊர் இருப்பது ஒரு
சுகமான நன்முரண்

கதவுகளால் பாதுகாப்பாக இருக்கிறேன்;
என்றாலும் ஜன்னல்களால்தான்
உயிரோடிருக்கிறேன்

ஒரு வசிப்பிடம் அமைத்திட
பெருஞ்செல்வம் தேவையாயிருக்கிறது.
அது ஒரு வாழ்விடம் ஆகிட
பேரன்பே போதுமாயிருக்கிறது.

வேண்டுமென்றே
விட்டுவிட்டுப் போன செருப்புகள்
தொலைவதேயில்லை.

கொஞ்சம் கூட வாழாதவனைப் பார்த்து(ம்)
பொறாமை கொள்ள,
நாம் கொஞ்சம் வாழ்ந்து
கெட்டிருக்க வேண்டியிருக்கிறது.
இதுதான் கடைசி என்பது தெரியாமல்
கொளுத்தப்படும் தீக்குச்சிகள்

ஓவியம்: தமிழ்

அணைவது இல்லை.
பிறர் தோளில் நாம் சாய்கையில்
தாயை உணர முடிகிறது.
நம் தோளில் பிறர் சாய்கையில்
தாய்மையை உணர முடிகிறது.

மனிதர்கள் இறந்தால் ஆற்றில் புதைத்து விடுகிறார்கள்
பிணமாக
ஆறுகள் இறந்தால் வீட்டில் புதைத்து விடுகிறார்கள்
மணலாக

காயங்கள் வெறும் சம்பவம்;
இங்கே தழும்புகளே தண்டனை!

வேரிலேயே காய்த்த போதிலும்
உச்சங்கிளைக்கும் உணவு கொடுக்கும்
ஒரு பலாமரத்து நேர்மையின் மாற்றுப் பெயர்
தாய்மை

சாண் ஏறினால்
முழம் சறுக்கும் - எனும் சொற்றொடர்
பூக்காரர்களுக்குப் பொருந்துவதில்லை பொதுவாக

இவ்விடம் பிடிக்கவில்லை என்பதை
'வீட்டுக்குப் போலாம்' - எனும் ஒற்றைச் சொல்லில்
விளங்க வைக்க குழந்தைகளுக்குத் தெரிந்திருக்கிறது

அந்தந்த நாளின்
முதல் சமரசம் அலாரத்தோடு
கடைசி சமரசம் ஆழ்மனத்தோடு

சொல்லாத சொல்லுக்கும்
ஓர்த்தம் அறிபவள் தாயாக வந்தாள்!
சொல்லிய சொல்லுக்கும்
வேறர்த்தம் புரிபவள் தாரமாகிப் போனாள்!!

உடலெங்கும் உதிரம்
உச்சபச்ச கதறல்
திறன்களைத் திரட்டி அழுகிற குழந்தையைப் பார்த்து
ரசித்துச் சிரிக்கும் அவளுக்கு
இன்று முதல் தாய் என்று பெயர்..!

❖❖❖



பிருந்தா சாரதி

சரண்

காற்றின் வேகம் உன் வேகம்
நேற்று இன்று நாளை எனும்
கால நிலைகளை எல்லாம் பெயர்த்தெறியும்
சூறாவளி உன் சொற்கள்.

கன்றின் பசியறிந்து அமுதூட்டும்
தாய்மடி உன் நேசமென்றால்
முரட்டுக்காளையின்
முட்டல்களை
அடக்கும் பிடாரி
உன் தாபம் போலும்.

உன் கண்களில் அலையடிக்கும் மறிகடல்
புயற்சீற்றங்களை என்னுள் சுழன்றடிக்கிறது.

மறைவாய் ரகசியமாய்
மருவொன்று மனதில்.

இதழ் வழியே மருந்தொன்று இடுவாய் மடந்தாய்.

நீளும் ஜென்மாந்திரம்
நிறுத்துன்
நயன தீட்சையால்.

அண்டமும் பிண்டமும் ஒன்றென உணர்ந்தேன்
உன் கடைவிழிப் பார்வையிலும்
நுனிவிரல் தீண்டலிலும்.

பஞ்சபூத சாட்சியாய்
ஆகாசத்தில் நிகழட்டும்
நம் ஆன்ம ஆலிங்கனம்.

மனம் மொழி செயல் எனும்
எனும் என் முப்பாதைகளும்
உன் திசை நோக்கியே

சரண் புகுந்தேன் தேவி
எனைக் கதியேற்றுவது இனி நின் கடன்.

❖❖❖

வழித்துணை

மோனாலிசா புன்னகை அழகுதான்
அதற்காக நீயும் அதையே சூடிக்கொள்ள முயலாதே

செம்பருத்தி மலர்வது போல்
நீ சிரிப்பதே போதும் எனக்கு.

மாடத்து விளக்கின் சுடரை மாலையில்தான்
ஏற்றுவாய் வழமையாய்

ஆனால் முப்பொழுதும் என்னுள் ஒளிவீசுவது
உனது புன்னகைதான்.

உன் உதட்டில் எரியும் அச்சுடரே
என் இருளில் எப்போதும் நான் ஏந்தும் வழித்துணை.

மர்ம அழகு மனதில் அச்சத்தையும்
சேர்த்தே விதைக்கிறது

நான் அதைக் கடந்துவந்ததே பளிச்செனும் உன்
புன்னகையின் ஒளி கண்ட பின்பே.

நீயும் பூடகப் புன்னகை புரியாதே
என் கைவசம் வேறு தீக்குச்சியும் இல்லை.

❖❖❖



ஓவியம்: பாரதிராஜா



ஓவியம்: அமுதன்.வெ

புதுவை இளவேனில்

ஒரு கப் தேனீர்

வழி முழுவதும் அடைத்தபின்
திரும்பி வர எத்தனிக்கும் பயணியைப்போல்
தகிக்கிறது வயிற்றுப்பசி

யோசிக்க முடியாத கணங்களை
சேர்த்து வைத்துக்கொண்ட
நடுநிசிக்கு முன்
இரவென வெட்டிச் செல்கிறது
வந்திறங்கிய மின்னல்

நீல வார்த்தையைச் சுமந்து சென்று
வாங்கி வருகிறாள்
ஒரு கப் தேநீருடன்
பீடிக் கத்தையையும் சேர்த்து

அஃதே
ஒரு மரணம் நிகழ்ந்துவிட்டது
புற வழிச்சாலையில்
மறுமுறை திரும்பிப் பார்க்கிறாள்
மீண்டும் எத்தனிக்கையில்
எல்லோருக்கும் பயம் இருக்கிறது பேருந்தினுள்

சாவின் துர்நாற்றம்
எல்லாத் திசைகளிலும் இழுத்துச் சென்று திரும்பிய
சதைத் துண்டுகளின் மீது
உறைந்திருந்தது
தேநீர்ச் சுவை.

❖❖❖

கவிதை

பொன்.வாசுதேவன்

நினைவு பொல்லாதது

மிக நீண்ட தொலைவு சென்றுவிட்டேன்
ஆனாலும் இங்குதான் இருக்கிறேன்

நிலத்தின் ஆழ அமைதியில் செல்லும் வழி உண்டு
நம்மில் அந்த வழக்கமில்லை

உலர்ந்த மரக்கட்டைகள் அடுக்கி
அதன்மேல் என்னைக் கிடத்தி
உலர் சாணத்துண்டுகளை அடுக்கி
வைக்கோலும் செம்மண்ணையும் நீரில் குழைத்துப் பூசி
விழிகளுக்கருகிலும் வயிறு கால் பகுதியிலும் துளையிட்டு
எரிகிறகற்பூரத்தை உள்ளிட்டு
கொழுந்துவிட்டு எரியத்தொடங்குகிறேன்

அவ்வளவுதான்
மிக நீண்ட தொலைவு சென்றுவிட்டேன்

பற்றிக்கொள்ள முடியாத என் கைகளைப்பற்றிக்கவலையுறாதே
கரைந்தசாம்பலாய்க் கடலில்
தழுவ முடியாத காற்றில் நான் இருக்கிறேன்

சென்று திரும்பி, திரும்பிச் சென்ற காலங்கள் இனி இல்லை
எதிர்காலத்தைக் குறித்த எந்தத் திட்டமும் இல்லை
நினைவுகளின்சான்றடையாளமாக
என்னைக் குறித்த பேச்சுகள் இருக்கும்

எல்லாமே மறக்க வேண்டியவைதான்
காலத்தின் கால்கள் மிதித்துக்கடக்கச் செய்துவிடும்

நீளும் அதன் நினைவுகளில் நீயிரு
முடியும்போது ஒரு புன்னகை செய்.

❖❖❖



ஓவியம்: பூவிழி



உள் உரையாடல்

வேட்டைக்குப்பின்பான வனாந்தரமாய்
நட்சத்திரங்களற்றுவெறிச்சோடியிருக்கிறது
கருநீல வானம்

இறந்துதிர்ந்த சில நட்சத்திரங்கள்
சருகுகளாகிக் கிடக்க
காலில் மிதிபட்டுமினுங்கி ஒளிர்கிறது
மிச்சமிருக்கிற நட்சத்திரத்துணுக்குகள்

வெளிச்சத்தை விழுங்கிய நீல இருளை
வேட்கையின்அபிலாஷைகளோடு
யாசிக்கிறது ஒற்றை நிலவு

நகர்ந்து கொண்டிருக்கிற காலம்
விடியலின் பூச்சை எதிர்பார்த்து
துளிர்க்கும் செடி போல
மெல்ல நிகழ்த்துகிறது
தனது உரையாடலை.

❖❖❖

புலிவேஷம்

காறைப்பூச்சுதிர்ந்த அறையொன்றில்
மஞ்சள் வர்ணம் குழைத்துப் பூசி
ஆள்காட்டி விரலால் கரும்பட்டையிடுகிறான்
புலிவேஷக்காரன்

இல்லாத வீதியை இருத்திக் காட்டி
உயர்த்தியும் இறக்கியும் நீளும்கைப்பயிற்சியில்
வெறிச்சூல்கொள்கிறது பாவனைப் புலி

பெருமிதத்தில் சிம்மாசனம் கொண்டு
இறுமாந்துதுடிக்கிறது மெல்லிய கரு மீசை

சடாரென்று தணிந்தெழுந்தவெளிப்படலில்
பயந்தோடிப் போகிறது பூனையொன்று.

❖❖❖

வீரசோழன் க.சோ.திருமாவளவன்

இலையுதிர் காலத்துப் பாடல்



இலையுதிர்காலத்து பாடலை
எழுதிக் கொண்டிருக்கிறேன்.
வசந்தங்கள் உருகி வழிந்ததை
மைத்துளிகள் நடனமாடிக் கொண்டே
நனைத்து விடுகின்றன.
நனைக்க நனைக்க பெருமழையொன்று
பேயாட்டம் ஆடுகிறது.
ஆலங்கட்டி மழை
பொத் பொத்தென்று விழுகிறது.
விளையாட்டு காட்டி மகிழும் மழைக்கு
ஒரு மழை போதுமா?

வசந்தகாலத்தை
வரைந்து கொண்டிருக்கிறேன்
பறவைகள் எச்சத்தை
இட்டு நிரப்புகின்றன
ஒவ்வொரு எச்சத்திலும்
வனமொன்று பூக்கிறது.
பறவையின் இறகில் மைல் கல்
தொலைவை அளக்க முடியுமா?

எல்லாவற்றையும்
அழித்து விடுகிறது மழை
எல்லாற்றையும்
அணைத்துக்கொள்கிறது பெரும் மரம்.

இலையுதிர்காலத்துப்
பாடலொன்று முடிவடையும் நேரத்தில்
நான் இல்லாமல் போகலாம்.

❖❖❖



ஓவியம்: அருள்

பூக்கும் அஹிம்சைப்பூ

பெரும் மைதானமெங்கும்
நிரம்பி வழிகிறது கூட்டம்.

அவர்களுக்கு சாதி இனம் பேதமில்லை
என் நாடு வெற்றி பெற வேண்டும்
கையொலி எழுப்ப
அணி வகுக்கிறார்கள்.

மைதானத்து நடுவே
நாணயத்தை சுண்டுவதற்காக
இரு நாட்டு அணித்தலைவர்கள்
போட்டி நடுவர்கள் வருகை தருகிறார்கள்.

ஒரு தலை
ஒரு பூ
மேலும் கீழுமாக
காற்றில் சுழல்கிறது.

தலை கேட்ட தலைவனுக்கு
தலையோ அல்லது பூவோ விழும்.

தலை விழாமல் பூவே
விழுந்தாலும்
தோற்றவனில்லை.

இருவரும் கை குலுக்குகிறார்கள்
இரு தேசத்து இதயங்கள்
நலம் விசாரித்துக்கொள்கின்றன.

போட்டித் தொடங்கும் முன்
இரு நாட்டு வீரர்களையும்
சின்னஞ்சிறு பிஞ்சு விரல்கள்
அழைத்து வருகிறார்கள்.

மைதானமே எழுந்து நிற்கிறது
பட்டொளி வீசி பறக்கிறது
இரு நாட்டு கொடிகள்.

தேசியப் பண் ஒலிக்கிறது
கம்பீரமாய் பாடுகிறார்கள்
அஹிம்மை பூவொன்று
மைதானமெங்கும் பூக்கிறது.

❖❖❖

சீனு ராமசாமி

ஆனால் மரமல்ல

அதன்
நெஞ்சில் மோதிய
வாகனம் நொறுங்கிப்
பெரும்பாலும் பலர் உயிர் தப்பியதில்லை,

இருபுறமும் அடர்ந்த அதன்
சாலைகளில்
தூக்கம் பெருக்கெடுக்கிறது வாகன ஓட்டிகளுக்கு,

காரணம் புளியமரங்கள்
ஆனால் அது மரங்களில்லை

இரண்டாந்தாரமாக
வாக்கப்பட்டவள்
தொங்கிய
மர்மம்
அது மட்டுமே அறியும்,

நினைவு தப்பிய மூதாட்டிக்கு சுருண்டு படுத்துக்
கிடக்கவும்
அது விரிந்து
நிற்கிறது

தவசிகள் அதை நாடுவதில்லை
தியான விழிப்புக்கு
உகந்த இடமில்லை
ஆயினும்
கலப்பையை சாற்றிவிட்டு
உறங்குபவனுக்கு
அடர் நிழல் தந்திருக்கிறது

காக்கைகள்
தன் கூட்டை
அங்கு கட்ட அனுமதிக்கிறது
ஒரு குஞ்சை கீழே தள்ளி பாசத்தை வேவும்
பார்க்கிறது.

அதன்
கரிவளி வாயு
அடித்து
பலஹீனன் மாண்ட
பழியை மரத்தில்
வாழும் உருவமில்லாத
முனியின்
மீதே விழுந்தது.

குறை பிரசவ உயினங்களின்
சடலங்கள் கட்டிய அதன் தேகத்தில் நாற்றமில்லை
நறுமணமும் இல்லை.
அதன் செழிப்பில்
குறையில்லை.

எவரும் நீருற்றவில்லை
எப்படியோ
வளர்ந்திருக்கிறது,

துர்ஆவிகளின் முடியை அதில் அறைவது
பின்பு
திரும்பிப் பார்க்காமல் போவதும்
அவளுக்கு சொல்லப்பட்டிருந்தது,

நாகவிஷ
மருத்துவ வடக்கான்
விளம்பரத்
தகரத்தை
அதன் மர்ம உறுப்பில் நள்ளிரவில் அறைகிறான்.

இதன் பின்னே இருந்து
மல்லிகை சூடியக் கிளத்தியொருத்தி
தனியாக
லாரிகளை வெளிச்சத்தில் வந்து மறைக்கிறாள்,
அணையாத
இஞ்சின் சப்தத்தில்
கிளீனர் பையன் மீது உதிர்கிறது மரத்தின்
எதிர்ப்புணர்ச்சி.



ஓவியம்: பாரதி



ஓவியம்: பாரதி

இலக்க எண்கள் அதற்கு
உண்டு ஆனால்
வீடுடென்று
ஏற்க எவராலும்
இயலாது,
அதன் வேரில் நானும்
தெய்வங்கள்
பார்த்ததில்லை.

சினிமாக்களில்
ஆந்தைகளின் நெருக்கமான காட்சி
புளியமரத்தில் பதிவு செய்யப்பட்டது.

ஒவ்வொரு
வீட்டின் வயிற்றுக்கும்
கரைக்கப்படுகிறது முதுகு
காய்ந்த
அதன் பழம்,

பேச்சறிய அதன்
எரியும் அனலின் அதிரும்
உஷ்ணம் உணர்தல் அவசியம்.

அரளிவிதை பச்சையும்
எலி பாசானத்தையும்
உன்னிக் கக்கி
சாவை முறித்து

அவனுக்கு
வாழ்வளித்திருக்கிறது புளிக்கரைசல்,

வெல்லத்தோடு
புளிச்சாறு பானாக்கரமாக
கலந்தருந்திய அவனோ
வெயிலின் உஷ்ணம் தணிந்த
பாதயாத்திரீகன்
பக்தியின் பலம் அறிந்தவன்.

வாழ்பவனுக்கு எத்தனையோ உண்டு
நிறைவேறாமல்
பாதியில் செத்தவனுக்கு புளியமரமே கதி
என்றாகிப் போயிற்று..

❖❖❖

நிலாமுற்றம்

தமிழ் எங்கள்
உயர்வுக்கு வான்



தமிழ்வெளியில் நவீனக்கலை: சரித்திரமும் சாதனைகளும்

சி.மோகன்

உலக அளவில் நவீனக் கலையின் உயரிய மரபு, அதன் பிரத்தியேக அர்த்தத்தில், 19ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் பால் செசானிடமிருந்தே தொடங்குகிறது.

தமிழில் நவீனச் சிறுகதை புதுமைப்பித்தனிலிருந்து தோற்றம் பெறுவதைப்போல, 'தோற்றத்தைப் பிரதிபலிப்பதல்ல; மாறாக, தனதான உலகைத் தோற்றப்படுத்துவது' என்ற அடிப்படை நியதியிலிருந்துதான் நவீனக் கலையின் உயரிய மரபு உருப்பெற்றது.

நவீன ஓவியத்தின் தனித்துவமான வெளியீட்டம்சங்களின் சாரங்களாக தூய வண்ணம், ஆதி எளிமை, கோடுகளின் உக்கிரம், குறியீட்டு ரீதியான சிதைப்பு, உள்ளார்ந்த தனித்துவம் ஆகியவை அமைந்தன.

19ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் இருந்து அதனை அடுத்த ஒரு நூற்றாண்டுக்குள்ளாக, பல்வேறு இயக்கங்கள், காலத்தினதும் கலையினதும் தேவைகளை நிறைவுசெய்யும் முகமாக, முழுவீச்சோடும் உக்கிரத்தோடும் எழுந்தன. ஒவ்வோர் இயக்கமும் தனதான கலைக் கோட்பாடுகளைப் பிரகடனப்படுத்தி, கலை ஆக்கங்களில் ஈடுபட்டன. இப்பிரகடனங்கள் இலக்கிய உலகிலும் தாக்கத்தை நிகழ்த்தி, அதிலும் புதிய போக்குகள் உருவாகக் காரணமாகின.

ஒன்றை மேவிய ஒன்றாக, ஒன்றை நிராகரித்த ஒன்றாக, ஒன்றைக் கடந்த ஒன்றாக இம்ப்ரஸனிசம், பின்இம்ப்ரஸனிசம், எக்ஸ்பிரஸனிசம், ஃபுவிசம், ஃப்யூச்சரிசம், சிம்பாலிசம், டாடாயிசம், க்யூபிசம், சர்ரியலிசம்,

மிஸ்டிஸிசம், அப்ஸ்ட்ராக்ட் என வடிவ ரீதியாகவும் வெளியீட்டு நுட்பங்கள் ரீதியாகவும், படைப்புப் பொருள் மற்றும் நோக்கம் ரீதியாகவும் மாறுபட்ட அணுகுமுறைகளோடு விரிந்து செழித்தது நவீனக் கலை.

உலக அரங்கில் அபரிமிதமான கலைப் பாய்ச்சல்கள் நிகழ்ந்தேறிய ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர்தான் தமிழகத்தில் நவீன ஓவியம் தோற்றம் கொள்ளத் தொடங்குகிறது. ஆங்கிலேயர்கள் தங்களுடைய கைவினைப் பொருட்களின் தேவையைப் பூர்த்திசெய்து கொள்வதற்காகவும், தொழில்நுட்பப் பணியாளர்களை உருவாக்கும் வகையிலும் இந்தியாவில் சில கலைப் பள்ளிகளை உருவாக்கினர். அப்படியான ஒன்று சென்னையில் 1850ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 1929ஆம் ஆண்டில் விஸ்கௌன் கோஸின் நிர்வாகத்திலிருந்த சென்னை அரசாங்கம், சென்னைக் கலைப் பள்ளியில் நுண்கலைகளை அறிமுகம் செய்து அப்பள்ளிக்குக் கலைமுகம் அளிக்கத் தீர்மானித்தது. வங்காளத்தைச் சேர்ந்த தேவி பிரசாத் ராய் சௌத்ரி, தன் 30ஆவது வயதில் நேரடி நியமனமாக அப்பள்ளியின் தலைமைப் பொறுப்பேற்றார். இளம் வயதிலேயே தைல வண்ண உருவப்பட ஓவியங்களிலும், உருவச் சிலைகளிலும் நிகரற்றவராகத் திகழ்ந்தவர் ராய் சௌத்ரி (சென்னை மெரினா கடற்கரை சாலையிலுள்ள காந்தி சிலையும் உழைப்பாளர் சிலையும் இவரால் படைக்கப்பட்டவை).

தேவி பிரசாத், சென்னைக் கலைப் பள்ளியின் தலைமைப் பொறுப்பேற்றிருந்த 30 ஆண்டுகளில் இப்பள்ளி வலுவான அடித்தளத்தில் உயரத் தொடங்கியது. அதுவரை தொழில்நுட்பப் பணியாளர்களையே தயாரித்துக்கொண்டிருந்த இப்பள்ளி, கலை எழுச்சி பெற்றது. புதிய சகாப்தம் உருவானது. இவ்வளவுக்கும் ராய் சௌத்ரியை நவீன கலைப் படைப்பாளி என்று கருதுவதற்கு இல்லை. செவ்வியல் தன்மையும், ரொமான்டிஸிசமும் மேவிய படைப்பாளி. அதேசமயம், கற்பனை ஆற்றலாலும் கடுமையான உழைப்பாலும், அயராத உத்வேகத்தாலும், தீவிரமான கலை நம்பிக்கையாலும் புதிய சகாப்தத்தைக் கட்டமைத்தவர். இவருடைய தலைமையில் இப்பள்ளி கலை முகம் பெற்று சர்வதேசக் கலை அரங்கின் ஓர் அங்கமாகியது.

இந்தியக் கலை அரங்கில் பேருருவச் சிலையென விகாசம் பெற்றிருந்தார் தேவி பிரசாத். இந்தியாவெங்கும் கலை ஆர்வமிக்க இளைஞர்கள் அவரிடம் மாணவனாகப் பயிலும் கனவோடு சென்னையை நாடிவந்த காலம் அது. கே.சி.எஸ்.பணிக்கர், பரிதோஷ் சென், ஈ.கோதண்டராமன், கிருஷ்ணா ராவ், எஸ்.தனபால், பிரதோஷ் தாஸ் குப்தா, சீனிவாசலு, கோபால் கோஷ், எல்.முனுசாமி, சந்தானராஜ்... என இவரின் கலை ஆளுமையில் உருவான கலைப் படைப்பாளிகள் பரந்து காணப்படுகின்றனர். எந்தவோர் இயக்கக் கோட்பாட்டையும் முன்னிறுத்தி, எவரையும் குறுக்கிவிடாமல் அவரவர் மன உலகத்துக்கேற்ப கலை ஆளுமை கொள்ள, அவர் முன்வைத்த ஆதர்சம் அவரை மகோன்னதமான ஆசிரியராகக் காட்டுகிறது.

பீகாரிலுள்ள ராஞ்சியிலிருந்து 1,200 மைல்கள் கடந்து, தேவி பிரசாத்திடம் பயிலும் கனவோடு சென்னை வந்து, பின்னர் முக்கியக் கலை ஆளுமையாக உருவாகிய சுசில் முகர்ஜி, தன் கல்லூரி நாட்கள் குறித்து நினைவுகூர்ந்து எழுதிய ஒரு கட்டுரைத் தொடரில் அன்றைய முதல்வர் ராய் சௌத்ரி பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார்:

‘பொருளாதார நெருக்கடிகளுக்கிடையே மாணவர்கள் பயின்று வந்தபோது சமூகச் சூழல் எவ்வகையிலும் எங்களுக்குத் தெம்பூட்டுவதாக இல்லாத நிலையில் எங்களுக்காக அக்கறைப்பட்ட ஒரே மனிதராகவும், எங்களுக்கு உற்சாகமும் உத்வேகமும் அளிப்பவராகவும், நாங்கள் முக்கியமானவர்கள், கலைஞர்கள் எனப் பெருமிதம்கொள்ளும்படியும் திகழ்ந்தவர் தேவி பிரசாத்.’

தேவி பிரசாத் 20ஆம் நூற்றாண்டு இந்தியக் கலையின் குழந்தை. செவ்வியல் பாங்கான கலைப் புனைவுகளின் நிறைவெல்லையாகப் படைப்புகளை உருவாக்கிய தேவி பிரசாத், அதே சமயம் நவீனக் கலைப் போக்குகளின் மலர்ச்சிக்கான ஓர் உந்துசக்தியாகவும் இருந்திருக்கிறார்.

1957ஆம் ஆண்டில் ராய் சௌத்ரி ஓய்வு பெற்றபோது, அவரிடம் மாணவராகவும், பின்னர் ஓவியத் துறை ஆசிரியராகவும் இருந்த கே.சி.எஸ்.பணிக்கர் இந்தப் பள்ளியின் தலைமைப் பொறுப்பேற்றார். இந்தியாவின் சிறந்த நவீனத்துவக் கலைப் படைப்பாளிகளில் ஒருவரும், கனவுகள் மிக்கவருமான இவரின் தலைமையில்



சென்னைப் பள்ளி நவீனத்துவக் கலை வெளியில் வலுவாகத் தடம் பதித்தது. பணிக்கர் காலத்தில் கோட்டோவியங்களில் சென்னைப் பள்ளி ஓவியர்கள் அபாரத் திறன் பெற்றனர். இக்காலகட்டத்தில் கோடு பற்றிய கருத்தாக்கத்தில் ஒரு புதிய பரிமாணத்தை உருவாக்கி, ஒரு புதிய அலை வீச்சை இந்திய அரங்கில் சென்னை ஓவியக் கல்லூரி நிகழ்த்தியது. கோடானது, கோட்டோவியத்தில் ஒரு வரையறைக் கோடாக இருந்த நிலை மாறி, கோடு ஓர் அர்த்தம் பொதிந்த மொழியானது. ஓர் இயங்கு சக்தியாக ஓவிய வெளியில் உயிர் கொண்டது. வளைவு, நெளிவு, சுழிப்பு, அறுபடுதல், நீள்தல் எனக் கோடு படைப்புவெளியில் சுதந்திரமாக இயங்கத் தொடங்கியது.

1960களில் 'மெட்ராஸ் மூவ்மெண்ட்' என்றொரு கலை இயக்கத்தின் ஆதர்ச சக்தியாக இருந்து, அதைக் கட்டமைத்து வழிநடத்தியவர் பணிக்கர். இந்தியக் கலையின் சாரமாக எது இருக்கிறதோ அதுவே நவீனக் கலையின் உயிர்ப்பாகவும் இருக்க வேண்டும் என்ற கருத்தியலை முன்வைத்து தீர்க்கமாகச் செயல்பட்டவர். இவ்வியக்கத்தின்போது, ஐரோப்பியக் கல்வித் துறைசார் பகுப்பாய்வு உத்திகள் புறமொதுக்கப்பட்டன. காலனிய செல்வாக்கும் ஆதிக்கமும் இந்தியக் கலை அரங்கிலிருந்து வெளியேறும் வகையில் படைப்பாக்கச் செயல்பாடுகள் அமைந்தன.

பேராற்றலின் எழுச்சி வடிவங்களாக உருப்பெறும் உருவ பாணியைக் கொண்டது நம் நாட்டார் மரபு. விசித்திரக் கவர்ச்சியோடும் ஒரு நிகழ்ச்சி பற்றிய குறுங்கதைத் தன்மையோடும் வெளிப்பட்டது நம் மினியேச்சர் மரபு. மகத்தான காவியத் தன்மை கொண்டது, நம் செவ்வியல் சிற்ப மரபு. ஆற்றல் மிக்க உருவம், குறுங்கதை, காவிய அம்சம் ஆகிய நம் மரபுக் கோலங்கள் நம் நவீனக் கலையில் உள்ளுறைய வேண்டுமென்ற கனவோடும் வேட்கையோடும் சிந்தனைகளோடும் பணிக்கரும், சென்னை ஓவியக் கல்லூரி படைப்பாளிகளும் செயல்பட்ட காலம்.

ஓர் ஆசிரியராகவும், கலை இயக்க ஆளுமையாளராகவும் இளம் ஓவியர்கள் மீதும் ஓவிய மாணவர்களிடத்தும் பெரும் அக்கறை கொண்டிருந்தார் பணிக்கர். ஓவியர்கள் தங்கள் திறன் சார்ந்து வாழ்க்கையை நடத்துவதற்கு வசதியாகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டார். ஓவியர்கள் தம் ஓவியங்களைக் காட்சிப்படுத்துவதற்கும் விற்பதற்கும் வசதியாக 'முற்போக்கு ஓவியர் சங்கம்', ஆங்கிலப் பேச்சறிவுப் பயிற்சி வகுப்புகள், 'கலைஞர்களின் கைவினைப் பொருட்கள் சங்கம்' போன்றவற்றை உருவாக்கினார். எல்லாவற்றுக்கும் மேலாக, கல்லூரி முதல்வர் பொறுப்பிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்பாக, படைப்பாளிகள் ஒருங்கிணைந்து வாழ்ந்து படைப்பாக்கங்களில் ஈடுபட வேண்டுமென்ற அபூர்வக் கனவின் நனவாக 'சோழ மண்டல ஓவியர் கிராமத்தை' உருவாக்கினார். ஒரு லட்சியக் கனவின் வடிவமாக வாழ்ந்த கலை மேதை கே.சி.எஸ்.பணிக்கர், தமிழக நவீனக் கலைவெளியில் ஓர் அபூர்வ சித்திரம்.

தமிழக நவீனக் கலைச்சூழலின் வளத்துக்கு வலுவான அடித்தளம் அமைத்த இன்னொரு லட்சிய உருவகம் எஸ்.தனபால். இவருடைய முக்கியத்துவம் தனிச்சிறப்பு வாய்ந்தது. அக்காலகட்டத்தில் ஓவியப் பள்ளியில் மாணவனாகச் சேர்வதற்குக் குறைந்தபட்ச கல்வித் தகுதி என்ற நெறிமுறை ஏதும் கிடையாது. ஓவியத் திறனும் ஆர்வமும் போதும். தமிழ் மட்டுமே பேசத் தெரிந்து, மிகுந்த ஆர்வத்தோடு அப்பள்ளியில் சேர்ந்த, சேரவிழைந்த மாணவர்களுக்குப் பெரும் ஆதர்சமாகத் திகழ்ந்தவர் எஸ்.தனபால். இன்று முதனிலை வகித்துச் செயல்படும் கலைப் படைப்பாளிகள் பலரும் இவருடைய மாணவர்களே.

ஓவியராகக் கலை வாழ்க்கையைத் தொடங்கிப் பின்னாளில் சிற்பியாகச் செயலாற்றினார். இவருடைய ஓவியங்கள் செழுமையான மரபு சார்ந்த மரபுக் கவிதை எனில், சிற்பங்கள் புதுக்கவிதை. பல்லவச் சிற்பிகள் முதல் சமகாலச் சிற்பிகளான ரூடின், ஹென்ரி மூர் வரையான படைப்பாளிகளின் பாதிப்பை ஆரோக்கியமாக ஏற்று, தனதான உலகை நுட்பமான வெளிப்பாடாக்கினார். நவீனத்துவ எழுச்சியும், தமிழ் அழகியல் கூறுகளும் லயப்படும் சிற்பங்கள் இவருடையவை. "மரபுக்கூறுகளை முற்போக்குக் கருத்தியலுக்குள் இசைமைப்படுத்திய முதல் சமகால இந்தியச் சிற்பியாக தனபாலையே குறிப்பிட வேண்டும்" என்கிறார் எழுத்தாளரும் கலை விமர்சகருமான முல்க் ராஜ் ஆனந்த்.

பொதுவாக, இன்றைய ஆசிரியர்களிடம் காணப்படும் உத்வேகமற்ற அசட்டையான மனோபாவம் காரணமாக, சென்னை ஓவியக் கல்லூரிப் பின்புலத்தில் அசமந்தமான சூழலே காணப்படுகிறது. தனபாலின் அர்ப்பண உணர்வும் உத்வேகமிக்க ஆசிரியத்துவமும் லட்சிய வேட்கையும் போற்றி ஸ்வீகரிக்கப்பட வேண்டிய கட்டாயத்தில் இன்றைய காலம் இருந்துகொண்டிருக்கிறது.

தனித்துவமிக்க கலை ஆளுமையோடு தமிழகத்தில் நவீனக் கலையைக் கட்டமைத்த மூன்று ஆதர்ச சக்திகள்: தேவி பிரசாத் ராய் சௌத்ரி, கே.சி.எஸ்.பணிக்கர், எஸ்.தனபால். இந்த மூன்று முன்னோடி மேதைகளிடமும் பயின்று வெளிப்பட்ட மிக முக்கியமான இரு படைப்பாளிகள். எல்.முனுசாமி, ஏ.பி.சந்தானராஜ். இருவேறு எல்லைகளில் சஞ்சாரம் செய்த இணையற்ற கலைஞர்கள் இவர்கள்.

நவீனக் கலையில் சந்தானராஜும் முனுசாமியும் தம் கோடுகளிலும் வண்ணங்களிலும் தொடர்ந்தும் அயராதும் மேற்கொண்ட பரிசோதனைகளின் மூலம் அவற்றுக்கு ஒரு மாயத் தன்மையை அளித்தனர். சந்தானராஜின் நவீனப் புனைவுகள் கவித்துவப் பேரழகை வசப்படுத்தின. எனில், முனுசாமியின் நவீனப் புனைவுகள் தன் வயமான உள்ளார்ந்த தகிப்புகளை உக்கிரத்துடன் வெளிப்படுத்தின.

அதேசமயம், சந்தானராஜின் கலைமேதைமை சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியது. உருவ ரீதியான கதையாடலை அபாரமான கோட்டுச் சித்திரங்கள் மூலம் இவர் வசியப்படுத்தியது ஓவிய வெளியில் ஒரு மகத்தான நிகழ்வு. மேலும், இவருடைய வண்ண ஓவியங்கள் செழிப்பான இயற்கைப் பின்புலம் கொண்டவை. நாட்டுப்புற வாழ்வின் மீதான ஏக்கத்தைப் பிரதிபலிப்பவை. மகத்தான புனைவுக் கோலங்களோடு மிகவும் ஒய்யாரமான வெளியீட்டுப் பாணியில் இவர் உருவாக்கிய மாய யதார்த்தம் மிகவும் வசீகரமானது.

இக்காலகட்டத்தைச் சேர்ந்த இன்னொரு மிக முக்கியமான படைப்பாளி, சிற்பி பி.வி.ஜானகிராம். பணிக்கரால் ஓவியத்திலும் தனபாலால் சிற்பத்திலும் எதிர்கொள்ளப்பட்ட மரபார்ந்த அழகியல் அணுகுமுறையை தன்னுடைய தனித்துவமான உலோகச் சிற்பங்களில் கண்டடைந்தவர் இவர். செவ்வியல் மரபும் நாட்டார் மரபும் உருவ வெளிப்பாடும் எளிமையும் கலந்த சிற்பங்கள் இவருடையவை.

இந்த வளமான மரபின் தொடர்ச்சியாக, அடுத்து வெளிப்பட்டவர்கள், விந்தைப் புனைவுலக மேதை கே.ராமானுஜம்; கோடுகளின் மகத்துவமும் வண்ணங்களின் இசையையும் கொண்ட கே.எம்.ஆதிமூலம்; வடிவமும் வெளியும் லயப்படும் கலை உலகம்கொண்ட ஆர்.பி.பாஸ்கரன்; கல்வெளியில் நாட்டார் மரபின் நவீனத்துவத்தைக் கண்டடைந்த சிற்பி சி.தட்சிணாமூர்த்தி ஆகியோர்.

இவர்களில் கே.ராமானுஜமும் கே.எம்.ஆதிமூலமும் கலை மேதைகள். நவீன ஓவியங்களுக்கு அறிமுகமற்ற கண்களைக்கூட தம் வசம் ஈர்க்கக்கூடிய கவித்துவமான விந்தைப் பிராந்தியம் ராமானுஜத்தினுடையது. மிகவும் நெருக்கமாக இழையூட்டப்பட்ட கோடுகள் மூலமாக அவர் உருவாக்கிய படைப்புகள், அவருடைய தனிப்பட்ட புராணங்கள் மிகவும் பிரத்தியேகமானவை. மிக மோசமாக அலைக்கழிக்கப்பட்ட, உளைச்சலுக்குள்ளான ஒரு கலை மனம், தனக்கென்று ஓர் உலகை உருவாக்கிக்கொண்டு அதில் குதூகலித்திருக்க விழைந்த தகிப்பிலிருந்து பிறந்தவை.

கோடுகளின் மொழியிலான ஆதிமூலத்தின் கோட்டோவியங்கள் அபாரமானவை என்றால், அவருடைய அரூப வண்ண ஓவியங்கள் வெகு

அழகானவை. இயற்கையின் பூரணத்துவத்தை, அதன் ரகஸ்ய நறுமணத்தை விதவிதமான வண்ண அடுக்குகளில் அகப்படுத்தும் முயற்சியில் ஆதிமூலத்தின் படைப்புகள் உயிர்ப்பும் அழகும் பெறுகின்றன.

இதனை அடுத்த தலைமுறைப் படைப்பாளிகளில் சிறப்பாக வெளிப்பட்டவர்கள், உருவ மொழியில் அசாத்திய வித்தகம் கொண்ட சந்ரு; புதிர்ப் பிராந்தியத்தில் சுடரும் டக்ளஸ்; கோடுகளின் மாய ஞானம் கைவரப் பெற்ற இராம.பழனியப்பன்; புராணிகப் படிமங்களும் கதையாடலும் எளிமையும் கூடிய முரளிதரன்; காட்சி ரீதியான கவித்துவமும் ஒளியின் ஜாலமும் கொண்ட விஸ்வம் ஆகியோர். இவர்களில் விஸ்வம், கும்பகோணம் ஓவியப் பள்ளியில் பயின்றவர்.

இவர்களில் சி.டக்ளஸ் சிறப்பாகக் குறிப்பிடவேண்டிய ஆளுமை. நவீன மனிதனின் அடிப்படைப் பிரச்னைகளில் உழன்று, அதனூடாகப் பெற்ற பெறுமதியான எண்ணவோட்டங்களைத் தனித்துவமான அழகியலோடு வெளிப்படுத்துபவர். சாந்தமாகவும் புதிர்த்தன்மையோடும், ரெம்பிராண்டின் தத்துவவாதி இருளுக்கும் ஒளிக்குமிடையே நிற்பதைப்போல, இவருடைய உருவம் பிறப்புக்கும் இறப்புக்குமிடையேயான வாழ்வெளியில் துயர் சுமந்தும் வலிகள் நிறைந்தும் சாந்தமாகவும் புதிர்த் தன்மையோடும் இருந்துகொண்டிருக்கிறது.

1980களின் பிற்பாதியில் கல்லூரி வளாகச் சூழலில் உத்வேகமிக்க எழுச்சி உருவானது. சந்தானராஜ் முதல்வராகப் பொறுப்பேற்ற காலம். மூத்த மாணவர்கள் கல்லூரி வளாகத்தில் தங்கள் படைப்புகளை உருவாக்குவதிலும், கலந்து உரையாடுவதிலும் பரவசம் கொண்டனர். நம் கலை மரபின் சிறப்புகள் குறித்த சொல்லாடல்கள் மூலமும் வரைகலை மூலமும் அப்போது அங்கு ஆசிரியராக இருந்த சந்ரு, தன் கலைப் பார்வையை வெளிப்படுத்தியபடி ஓர் ஆதர்சமாக உருவாகிக்கொண்டிருந்தார்.

இக்காலகட்டத்தின் குறிப்பிடத்தகுந்த படைப்பாளிகளாக உருவானவர்கள், மாயவெளியில் விகாசிக்கும், அந்தரத்தில் தொங்கும் சிற்பங்களை உருவாக்கும் மரிய அந்தோணிராஜ்; புதிய கடவுளைத் தம் படைப்புகள் வழியாகக் கண்டடைய முயலும் நடேஷ்; மனக்குகைக்கு ஒளியூட்டும் உடல் படிமங்களை உருவாக்கும் போஸ் மருது; இயற்கையின் அரூபமும் வண்ணங்களின் ரூபமும் கலந்துறவாடும் அரூப ஓவியர் அதிவீர பாண்டியன்; படைப்பின் வழியாக ரகசிய அறிதலைக் கண்டடைய தீவிர முனைப்புகொள்ளும் மைக்கேல் இருதயராஜ் ஆகியோர். இந்தத் தலைமுறைப் படைப்பாளிகளில் நடேஷை உத்வேகத்தின் எக்காளம் என்று கொண்டால், மரியாவை உத்வேகத்தின் உள்ளார்ந்த அமைதி எனக் கொள்ளலாம்.

20ஆம் நூற்றாண்டின் இறுதி மற்றும் 21ஆம் நூற்றாண்டின் தொடக்கம் தந்த நம்பிக்கைக்குரிய படைப்பாளிகளென, குல்பர்காவில் ஓவியத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற சீ.வெங்கடேசன், பரோடாவில் முதுகலைப் பட்டம் பெற்ற அபராஜிதன், சென்னையில் முதுகலைப் பட்டம் பெற்ற கே.பெனித்தா பெர்ஸியால், கே.நடராஜன் மற்றும் கிருஷ்ணப்ரியா ஆகியோரைக் குறிப்பிடலாம்.

இவர்களுக்குள் முக்கியமானவர் கே.நடராஜன். வனமும் தொன்மமும் கலந்துறவாடும் படைப்புகள் இவருடையவை. பழங்குடி மற்றும் நாட்டார் மரபிலான கதையாடல் தன்மையும், சமகாலப் பிரக்ஞையும் கலந்த பிரத்யேகப் படைப்புலகம் இவருடையது.

ஆக, 80 ஆண்டு கால சரித்திரம் படிந்த தமிழக நவீன ஓவிய வெளி ஒரு வளமான கலைப்பிரதேசம் என்பதில் சந்தேகம் இல்லை. எனினும், பார்வையாளர்களிடம் இது இன்னமும் அறியப்படாத, விளங்கிக்கொள்ள முடியாத புதிர்ப் பிரதேசமாகவே இருந்து வருகிறது. அழகியல் அனுபவத்தின் முக்கியத்துவம் உணரப்படாமல் இருப்பது நம் அவலநிலை.

அறியப்படாதவற்றை அடைவதன் மூலமே நம் காலமும் வாழ்வும் கலாசாரமும் செழுமையடையும். அறியப்படாதவற்றை அடைவதற்கான ஒரே வழி, அறியப்படாதவற்றினூடாக நாம் பயணம் கொள்வதுதான். அந்த வழிதான் நம் வாழ்வின் சாத்தியங்களை விஸ்தரிக்கும்

தமிழிலக்கியமும் நவீன நாடகமும்



அரியநாச்சி

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டாயிரு பாங்கினும்
உரியதாகும் என்மனார் புலவர்' **(தொல் : அகத் : 53)**

என்பது தொல் சூத்திரம். தொல்காப்பியம் கூத்து என்பதற்குப் பதிலாக நாடகம் என்ற சொல்லைப் பயன்படுத்துவதைக் காணலாம்.

இளம்பூரணர், 'நாடக வழக்காவது சுவைபட வந்தனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறல்' என்கிறார்.

பயணத்தை நிற்குமிடம் அறிந்து துவங்கும்போது சென்று சேருமிடத்துக் காலதூரத்தைக் கணிப்பதென்பது எளிது. அல்லது இலக்கை அடைந்த பிறகு வந்துசேர்ந்த காலதூரத்தைக் கணக்கிடவும் துவங்கிய இடம் உதவும். கலையின் துவக்கமாக மனிதன் ரசித்த மீண்டும் ரசிக்கவென ஒன்றை உருவாக்கிக் கண்டெடுத்ததைப் புதையலாகச் சுமந்து பெருமை பேசி சிலாகிக்கும் எல்லாமுமே இலக்கியமாகிறது. நாடகமும், முத்தமிழில் ஒரு தமிழாக.

ஆதியிலே மனிதனிடம் சொற்கள் இல்லை. ஆனால் நாடகம் இருந்தது. அதாவது ஒலியைத் திரும்பத் திரும்ப ஒலித்துப் பொருள்கொள்ளச் செய்த குரல் இருந்தது. குரலொலித் தொடர்புகளில் இருந்த காலத்திலேயே தனது வேட்டையையும் சண்டையையும்

தப்பி வந்தவர்கள் சொன்ன அழகில் மயங்கி அவர்களைத் தொடர்ந்து திரும்பத் திரும்ப நிகழ்த்தச் சொல்லிக் காத்திருந்தவர்கள், பார்வையாளர் ஆனபோது, அவர்கள் நிகழ்த்தியது முதல் இயங்கவியல் இலக்கியமானது, நாடகம்.

ஒரு குழுவாக ஒரு கருத்தைப் பகிரவும் மிரட்டவும் கவரவும் காவுகொடுக்கவும் செய்திகளைப் பொத்தித் தம் நிகழ்வின் வழி சாதித்த நாடகக்காரர்கள் நம் முதாதையர்கள். தனிநபர் நாடகங்களிலும், கூட்டங்கூட்டமாக ஊர்ஊராகச் சென்று நடத்தப்பட்ட கூத்துக்களும் பார்வையாளர்கள் மனதில் அப்படியே பதிவேற்றமானது, இன்றுவரை சிலரது கனவுகளில் தெறிக்கும் காட்சிகளாக மரபணு கொப்பளிப்பானது, அறிக.

இவ்வகையில் சொல் பிறப்பதற்கு முன், எழுத்துக் கல்லில் வடிவம் பெறுவதற்கு முன் பிறந்த கலை, நாடகமாக இருந்திருக்க வேண்டும். இல்லையேல் அவர்கள் எப்படி தம் கருத்துகளை அடுத்தவரோடு பகிர்ந்திருக்க முடியும். நாடக இயல்பு வாழ்க்கையின் ஓர் அங்கமாக இருந்தாலும் நடந்ததைக் கோர்வையாகப் புரிய வைக்கவும் உணரச் செய்யவும் மிக நேர்த்தியான ஊடகமாக மனிதன் தோன்றியதிலிருந்தே இருப்பதை உணரலாம்.

மொழி தாண்டிய புரிதல் உணர்வு பார்வையாளருள் பதிவாகி காலத்துக்கும் வழிநடத்தும் கூத்தும் நாடகமும் பல வடிவங்களில் உருமாறி மெருகேறி என்றைக்குமான சாகாவரம் பெற்று உள்ளூர், வெளியூர், வெளிநாடு என மேடை காண்கிறது. நாடகம் எல்லாவற்றையும் உள்ளிழுத்துத் திரளும் மீகலை. கணமாக ஆழமாக அர்த்த அனர்த்தங்களைத் தெளிவாகப் படித்தோருக்கும் பாமரருக்கும் மிகவும் பிடித்த ஒன்றாக இருக்கிறது.

இப்படியாக அந்திப் பொழுதுகளில் ஆசுவாசப்படுத்திக்கொள்ளவும் பொழுது போக்கவும் ஏற்றவொரு கலையாக மாறி விட்ட நாடகம் ஒருகட்டத்தில் பல்வேறு கலை இலக்கியங்கள் மனிதனை ஈர்க்கவும் படைக்கவும் ரசிக்கவும் ஆட்கொண்டதன் காரணமாக நடிகனுக்காக அலையத் தேவையற்று, ஏடுகளோடு மனிதர்கள் எழுத்தில் எல்லாவற்றையும் கண்டு ரசிக்கலாயினர், உட்கார்ந்து.

ஆனால் நாடகத்தை நிகழ்த்தும்வரை நெறியாளுனரும், நடிகனும், ஒளிஒலி அமைப்பாளர்களும் மேடை நிர்வாகிகளும் பார்வையாளன் களித்துக் கலையும் வரை அழுத்தத்தோடு இருப்பார்கள். மேடையின் ஒரு கால் ஆட்டங்கண்டாலோ, ஒரு நடிகனுக்குச் சுளுக்கு விழுந்தாலோ, நடிக்கும்போது மேடையுள் நாய் புகுந்துவிட்டாலோ நாடகம் தன் போக்கில் பெரிய தடுமாற்றத்தைக் கண்டுவிடும். ஆனால் மேற்சொன்னது நிகழ்ந்தபோதும் இதுவரை பெரும்பாலும் நாடகங்கள் பார்வையாளனுக்குப் படைக்கும் படைப்பில் குறையேதும் இல்லாமல் முடிந்திருக்கிறது. ஒன்று குறைந்தால் இன்னொன்று அந்தச் சுமையைத் தூக்கிச் சுமந்து நாடகம் முடிந்துவிடுகிறது. யார் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பூமி சுழல்வதுபோல. மனிதன் தொடர்ந்து நாடகத்தின்பால் விடாப்பிடியான ஈர்ப்போடே வாழ்கிறான். எங்கெங்கெல்லாம் நாடக நிகழ்வுகள் அறிவிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் போய் காத்திருக்கிறான், ஆரம்பத்திலிருந்து பார்க்கவேண்டுமென.

நாடும் நகரும் காலத்திற்கேற்ப மாற்றங்களுக்கு இடங்கொடுத்துச் தார்ச்சாலைகளும், கணினியுமாகக் குளிர்சாதனப் பொறி பொறுத்திய அறைகளுக்குள் தொலைக்காட்சி பார்க்க வைத்தாலும், நாடகம் ராந்தல் விளக்கில் காட்டியதை, இப்போது மின்னணு சாதனங்களால் நூற்றுக்கணக்கில் மின்விளக்குகளை இயக்கி காட்சிகளைக் கனவுகளாக மாற்றித்தருகிறது, இப்போது. ஒலியமைப்பும் ஒளியமைப்பும் பிரம்மிப்பூட்டும் அவதாரத்தைப் பெற்று இந்த நவீன உலகிற்கு ஈடுகொடுக்கும் நாடகத்தை நவீனப்படுத்திக்கொண்டுதான் வருகிறது.

ஒரு குறிப்பிட்ட மொழி பேசுவோருக்கிடையில் எனச் சுருங்கிய பக்கம் பக்கமாக வசனம் பேசி மேடைகண்ட நாடகம், இப்போது மொழி கடந்த புரிதலுக்கு ஏற்றவாறு நாடகக் காட்சியமைப்புகள் மேடையேறுவதால் மொழி ஒரு தடையல்ல என்றாகிவிட்டது. அப்படியே தமிழில் நாடகம் மேடைகண்டாலும் புரிதல் வகையில் வேற்று மொழிக்காரர்களுக்கு எந்தச் சிக்கலும் இருந்திருக்கவில்லை. பல்வேறு நாடகங்கள், மொழியை அடிப்படையாகக் கொண்டதும் மொழியைத் தாண்டி உடல் மொழியினால் கட்டமைக்கப்பட்டதுமாக நாடகம் ஒரு சர்வலோகப்

பொது நிலையில் நிகழ்வதாக இருக்கிறது, இப்போது.

தமிழ் நாடகப் பிரதிகளின் காலம் எங்கிருந்து தொடங்கியிருந்தாலும் இன்றுள்ள பிரதிகளைப் பின்பற்றி மேடையேறும் நாடகம் மொழிகடந்த பார்வையாளர்களை ஈர்க்கிறது.

அசைவுகளைப் புரிந்துகொண்ட மனிதனுக்குப் போதுமான சொற்கள் பழக்கத்திற்கு வந்ததும் வார்த்தைகளுள் வாழ்க்கையைக் கரைத்துக்கொண்ட போதுதான் கதைகளும் கவிதைகளும் அவன் வழித்தடம் முழுதும் நிறைந்தது. வீட்டுக்கொரு நூலகம் வரவேற்பறை அடுப்பங்கறை கழிப்பறையிலெல்லாம் புத்தகங்கள் பெருமைக்குரியதாக இடம்பிடிக்கவே நாடகமும் எழுதப்பட்டிருக்கக்கூடும். அதுவரை வாய்மொழியாக நாடகம் நிகழ்ந்தது, அப்போதிலிருந்து பிரதி காணத் தொடங்கி இருக்கலாம்.

பாணரும் பாடினியும் இசையை வளர்க்க பொருநரும் கூத்தரும் நாடகத்தைப் போற்றுவதற்கு முன்பிருந்த கலையான நாடகம், 19ஆம் நூற்றாண்டில் சங்கரதாஸ் சுவாமிகளின் காலத்தில் நின்று மேற்கத்திய நாடக அம்சங்களை உள்வாங்கி தமிழில் நவீன நாடகம் பரிமாணம் பெறுதல் தொடங்குவதாக நாம் கருதலாம்.

அதுபோல் தொண்ணூறுக்கு மேற்பட்ட நாடகங்களை எழுதிய நாடகத் தந்தை பம்மல் சம்மந்த முதலியார் தொடங்கி, பரிதிமாற் கலைஞர், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, மறைமலை அடிகளார், தியாகராஜ பாகவதர், அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி என நாடக முன்னோடிகள் பட்டியல் நீள்கிறது.

நடனமும் நாடகமும் தமிழில் இணைத்துப் பார்த்தக் காலத்தில், சங்க இலக்கியப் பாடல்கள் நாடகப் பிரதியாக இருந்திருக்கிறது. பாடலில் ஆரம்பித்துப் பாடலில் முடிவடையும் நாடகங்கள். பிறகு இடையிடையே உரைநடையில் வசனங்கள். பார்வையாளர்களின் விருப்பம் வசனத்தில் கூடும்போது பாடல்கள் குறைந்து வசனங்கள் நிறைந்த பிரதியானது நாடகம். ஆரம்பத்தில் இலக்கிய நயத்தில் பேசிய நடிகர்கள், பிறகு எழுத வந்த அண்ணா, கருணாநிதி போன்றோரின் நாடகங்கள் வழி நடிகர்கள் தனித்தமிழில் பேசி மக்களின் மனதில் இடம்பிடித்தனர். அதே நாடக

> **பேசவும் எழுதவும் தெரிந்துகொள்வதற்கு முன்பே நாடகம் இருந்தது.**
> **சொல்லும் எழுத்தும் பரிட்சயத்திற்கு வந்தபிறகு, எல்லாப் படைப்புகளிலும் நிகழ்வுத்தன்மைப் பொருந்தியிருத்தலே உயிர்ப்போடுள்ள கலையாக ஏற்கப்பட்டது.**
> **அதனால் எல்லாப் பாடல்களும், கதைகளும் நிகழ்த்துணர்வு உடையதாகப் படைக்கப்பட்டது.**
> **எல்லாவற்றிலும் நாடகத் தன்மையைக் காணலாம்.**

நடிகர்கள் பின்னாளில் சினிமாவிலும் நடித்துப் பிரபலமானார்கள். அதே சமயம் அரசியல் நாடகங்கள் தமக்கான இடத்தைப்பெறும் இடத்தில் அண்ணா, கருணாநிதி போன்றோரின் நாடகங்கள் மக்கள் மனதில் இன்றளவும் நீங்கா இடம் பெற்றவை. அவை மக்களிடம் தமிழுணர்வையும் ஆதிக்கத்திற்கு எதிராக சக்தி திரட்டவும் நடத்தப்பட்டவை. அதன் அடுத்தப்படி நிலையான சினிமா பெருந்திரை மினுமினுப்போடு அவர்களை இழுத்துக்கொண்ட பின்னரும், அவர்களது படங்கள் பெரும்பாலானவை நாடகத் தன்மையுடையனவாகவே இருந்து, மக்களைக் கவர்ந்தது.

பின், காலப்போக்கில் அந்தத் தனித்தமிழ் நடையிலான வசனங்கள் அவ்வப்போதைய பேச்சு வழக்கில் வர ஆரம்பித்து இன்றுவரை தொடர்கிறது. அழகியல் அம்சத்தோடு படைக்கப்படும் எந்தப் படைப்பும் மக்களால் மிகவும் வரவேற்கப்படுவதாக இருந்து காலத்தால் நிலைத்து நிற்கும் இலக்கியமாகிறது. 'சிலப்பதிகாரம் தோன்றிய காலத்துத் தமிழிலக்கிய வரலாற்றினைக் கவனிக்கும்போது, வீரயுகச் செயல்பாடுகள் மறைந்து புதிய மரபுகள் தோன்றத் தொடங்கியிருந்ததைக் காணலாம்' எனும் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் கூற்றுப்படி நாடகம் தன் தன்மையை மாற்றிக்கொள்ளும் ஓர் இடத்தை நாம் காணலாம். போர்களையும் அதில் கண்ட வீர சாகச நிகழ்வுகளையும் விவரிக்கும் நாடகங்கள், ஆதிகால வேட்டை விவரிப்பு நாடகங்களைப் போலவே நாயகனின் பராக்கிரமத்தைப் பறைசாற்றுவதாக இருந்த

நாடக இலக்கியம், காதலையும் நற்பண்புகளையும் கதைக்களமாகக் கொண்டு மேடையேறி நெடுங்காலம் பார்வையாளர்களைத் தம்பக்கம் ஈர்த்து வைத்திருந்தது. இப்போதுள்ள நாடகங்கள் பல கோட்பாடுகளைப் பரிட்சித்துப் பார்த்துத் தன்னைப் புதுப்பித்துக்கொண்டுள்ளது, எதையும் கதைக் களமாகக் கொண்டு மேடையேற்றி மக்கள் மனதில் பதியலாம் என்பதுவாக. 1990களில் 'கருஞ்சுழி' நாடகத்தில் வசனம் சொல்ல வேண்டியதை மேடையில் பரந்து விரிந்தத் துணி கடலை பார்வையாளர் முன் கொண்டுவந்து, நடிகர்கள் நான்குபேரைத் தத்தளிக்க வைத்து, மனித இருத்தலியல் போராட்டத்தை மிக நுணுக்கமாகக் காட்சிப்படுத்தியிருக்கிறது. அதுபோல் 'கொடியரளி' நாடகத்தில் இயற்கைக்கூறுகளைப் பற்றி நடிகர்கள் அசைவு வழியே பேசுவது போல், 'புழு' நாடகத்தில் மேடைக்குள் நகரும் புழுக்களைப் போல நடிப்பதால் நாடகம் எல்லாவற்றையும் தனக்குள்ளிருந்து பார்வையாளனுக்குக் கொடுக்கும் கட்டற்ற ஆற்றல் பொருந்தியதாக விளங்குகிறது என்பது உண்மையாகிறது.

பேசவும் எழுதவும் தெரிந்துகொள்வதற்கு முன்பே நாடகம் இருந்தது. சொல்லும் எழுத்தும் பரிட்சயத்திற்கு வந்தபிறகு, எல்லாப் படைப்புகளிலும் நிகழ்வுத்தன்மைப் பொருந்தியிருத்தலே உயிர்ப்போடுள்ள கலையாக ஏற்கப்பட்டது. அதனால் எல்லாப் பாடல்களும், கதைகளும் நிகழ்த்துணர்வு உடையதாகப் படைக்கப்பட்டது. எல்லாவற்றிலும் நாடகத் தன்மையைக் காணலாம். இலக்கியச் செழிவுமிக்கத் தமிழிலக்கியங்களில் நாடகப் பண்பு பதிக்கப்பெற்ற நாடகீய உள்ளடக்கங்கள் கொண்டவையாகவே பெரும்பாலான படைப்புகள் உள்ளன. தொல்காப்பியத்திற்கு முன்பே தமிழிலக்கியங்கள் நாடக அம்சமுடையனவாக இருப்பது காணலாம். நடனமும் நாடகமும் ஒன்றெனப் பார்க்கும் தமிழிலக்கியங்கள், நாடகத்திற்கெனப் பல வகைமைகளை வகுத்திருப்பதை எல்லாப் படைப்பிலக்கியங்களிலும் ருசிக்கக் கிடைக்கிறது.

1980களில் தமிழில் தொடங்கிய இந்திரா பார்த்தசாரதியின் நாடகங்களும், ந.முத்துசாமியின் நாடகங்களும் நவீன பரிச்சார்த்த நாடக உலகினுள் பல்வேறு முயற்சிகளுக்கு வழிவகுத்தது. அதன் தொடர்ச்சியாக காட்சிமொழிப் பிரதிகளை உருவாக்கியவர்களுள் வ.ஆறுமுகம், வேலுசரவணன், முருகபூபதி, பிரளயன், மு.ராமசாமி, ஆ.ராமசாமி, அம்பை, பிரசன்னா ராமசாமி, வெளிரங்கராஜன், பிரவீன், கருணா பிரசாத், ஞா.கோபி போன்றோரின் மேடைகளில் நிகழ்கிறது, இன்றைய நாடகங்கள்.

சங்க காலத் தமிழிலக்கியங்களும் சரி இன்றைய நாவல், சிறுகதை, கவிதைகளும் ஆகட்டும் அனைத்தும் நாடகத்தின் நிகழ்வுத் தன்மை மிளிரும் போதுதான் அப்பிரதிகள் உயிர்பெறுகிறது. அவ்வெழுத்துக்களில் வருணிக்கப்படும் காட்சிகளும் கதை மாந்தர்களின் அசைவுகளும் சொற்களால் நிகழ்த்தப்படும் நாடகங்களே.

அச்சொற்களில் பூசப்பட்ட அரிதாரத்தால் அக்கதையின் நாயகியும் நாயகனும்; அவர்கள் வாழும் வீடும் தெருவும்; கூட வாழும் ஆடும் மாடும் என வாசிக்கும் போது கண்முன் நிகழும் நாடகம்தான் அந்தப் புதினங்களும் புதுக்கவிதைகளும்.

அவற்றின் தொடர்ச்சியாக எனது நாடகங்கள். நாடகம் நடிப்பது எத்தகைய போதையோ அதற்குக் கிஞ்சித்தும் குறைவில்லாத போதை அதை எழுதுதல். யாருமற்ற அறையோ எல்லோரும் கும்பலாக அரட்டையடித்துக்கொண்டிருக்கும் இடமோ எதுவாக இருந்தாலும் அங்கே ஒரு நாடகம் உருவாக ஒரு பொறி கிடைத்துவிட்டால் அப்போதிலிருந்து பேப்பரில் எழுத்து விழுந்து காயும்வரை பிரதியாளனின் போக்கு வேறுவிதமாகி விடுவதை உணர்ந்ததால் அவ்வளவாக முக்கியத்துவம் காட்டாத இத்துறையில் தொடர்ந்து எழுதிவருவது சுகம்தான். ஆனால் எல்லாவற்றிற்குமான உந்துதல் என்னவாக இருந்தபோது அதனை உள்ளிழுத்து பிரதியை நிறைவு செய்வது தமிழிலக்கிய அனுபவம் பின்னணியில் இருந்து வழிநடத்துவதே.

எனது 'புழு' நாடகம் செல்லாயித் தவாரச் சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் என் பெருமானே என்பதன் நிழலில் வளர்ந்த பிரதி. எதுவும் ஏதுமற்றதிலிருந்து தொடங்கியிருக்க வாய்ப்பில்லை. ஒன்றிலிருந்தே மற்றொன்று என்பதற்கிணங்க, மக்களின் ஏகோபித்த வரவேற்பு உள்ள எதுவும் அடுத்தப் படைப்புக்கான வழியைத் திறந்துவிட, அடுத்தது

அடுத்தது என முன்னதைப் பின்தொடரும் எந்தப் படைப்பும் புதுமையோடு இருக்கவே மக்கள் மனதில் இலக்கியமாகிறது. சலிப்படையும் எதுவும் நிராகரிக்கப்பட்டு, புதுமைகள் நிறைந்த எதுவும் வரவேற்புக்குள்ளாவது இயல்பு.

நாடகங்கள் சமூகத்திடையே பெரும் தாக்கத்தை ஓரிரு நிகழ்வில் ஏற்படுத்திவிடும் ஆற்றல் கொண்டிருந்தபடியால், அதிகார வர்க்கம் எப்போதும் நாடகத்திற்கு எதிராக நிற்பதனாலும் ஒருவேளை நாடகம் மற்ற கலைபடைப்புகள் போல் பிரபலமாகிவிடாமல் கவனமாக இருந்திருக்கலாம்.

அரசின் குரலாக ஒருவகை நாடகங்களும் அரசுக்கும் அதன் ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக ஒருவகை நாடகங்களுமாகத் தமிழகம் தொடர்ந்து நாடகங்களை மேடையில் கண்டுவருகிறது.

சமூக அக்கறை கொண்டவர்களுக்கு அதிகாரத்திற்கு எதிராகக் கையிலெடுக்கும் ஆயுதமாக நாடகம் இருந்துவருகிறது. சுதந்திர போராட்ட காலத்தில் அதுபோன்ற நாடகத்தைத் தடைசெய்யவும் கட்டுப்படுத்தவும் தணிக்கை சான்று தேவைப்பட்டது. அது சமீபத்தில் நீக்கப்பட்டது. சமீபத்தில் எனும்போது, யார் அதிகாரத்தில் இருந்தாலும் நாடகத்தின் மீது ஒரு கண்டிப்புக் கவனம் இருந்ததை அறியமுடிகிறது.

அதே சமயம் 100 விழுக்காடு கல்வியறிவைச் சாத்தியப்படுத்த அறிவியல் இயக்கம் மேற்கொண்ட பரப்புரையில் நாடகம் மிக முக்கியமான பங்கு வகித்தது. குடும்பக் கட்டுப்பாடு, நோய்ப்பரவல் கட்டுப்பாடு, தேர்தல் விழிப்புணர்வு போன்றவற்றிற்கும் நாடகம் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இதெல்லாம் எதற்காக என்றால், நாடகம் சமூகத்திற்கான கலை. அண்ணலை வழிநடத்திய நாடகமும் உண்டு, ஆட்சியாளர்களின் தவறுகளைச் சுட்டிக்காண்பித்துத் தோலுரித்த நாடகங்களும் உண்டு. சமூகம் தன்னை நிலைநிறுத்தத் தேவைப்படும் நேரங்களில் எல்லாம் நாடகம் முதன்மைக் கருவியாகப் பயனளித்து வருகிறது.

அதனாலோ என்னவோ மற்ற இலக்கிய வடிவங்களை நாவல், பாடல், கவிதை, சிறுகதை போன்றவற்றிற்கு இருந்த அரச அனுசரனை நாடகத்திற்கு இல்லாமல் போயிருக்கலாம். அரச அங்கீகாரமும் தாராளமான பார்வையும் இல்லாததால் நாடகங்களை எழுதுவோரும் குறைந்து, அதனால் இயக்குவோர்க்குப் பிரதியில்லாமல் இயக்குனர்களும், திரைத்துறைக்குத் தாவியதையும் காணலாம்.

மேலும் நாடகம், எல்லாவற்றையும் சார்ந்ததுதான். பிரதி, நடிகர்கள், ஒப்பனைக்காரர்களும் ஒப்பனைப் பொருள்களும், ஒளியொலி அமைப்பாளர்களும் உபகரணங்களும், பெரும்பொருட் செலவும், அரங்கும் எனத் தேவைப் பட்டியல் பெரிதாக நீள்வதாலேயே எளிதாக அணுக இயலாததால் படைப்பாளர்கள் அதனைக் கையிலெடுப்பது குறைவாகக் காரணங்கள் என்று சொன்னாலும், பெருஞ்செலவில் மேடை கண்ட பல நாடகங்கள் இன்னும் பட்டியலில் இருக்கத்தான் செய்கிறது. அப்போது மனோகர் அவர்களது நாடகங்களும், தற்போது மேஜிக் லேண்டர்ன் குழுவின் 'பொன்னியின் செல்வன்' நாடகமும் சான்றாக இருக்கத்தான் செய்கிறது..

இருந்தபோதும் சமூகத்திற்கு அவ்வப்போது தேவைப்படுவதாகவும் தவிர்க்க இயலாத ஆயுதமாகவும் இருப்பதால் தொடர்ந்து உயிர்ப்போடும், தகவமைத்துக்கொண்டும், மேடையைவிட்டு அகலாமல் இருந்துவருகிறது. கூத்துப்பட்டறை மற்றும் புதுவைப் பல்கலைக்கழக நாடகத்துறையின் வழியாக செரிவுபெற்று வெளியேறிய பலர் இன்று நாடகத்தைப் பெரிய அளவில் நேசிக்கவும் நிகழ்த்தவும் கற்பிக்கவும் தொடங்கி இருப்பது நாடகம் இன்னோர் பெருஞ் சுற்றுக்குத் தயாராகி வருவதுபோல் இருக்கிறது.

உலகில் மனிதர்கள் வந்துவந்து போவது, கூத்தில் பாத்திரங்கள் வந்துவந்து போவது போன்றது என்கிறது, புறநானூறு.

நின் செய்கை! விழுவின்
கோடியர் நீர்மை போல முறை முறை
ஆடுநர் கழியும்இவ் உலகத்துக், கூடிய
நகைப் புறனாக, நின் சுற்றம்! (புற.நா 29)

– திரை –



தமிழ்த் திரைப்படங்களில் இலக்கியத் தாக்கம்

நிழல் திருநாவுக்கரசு

இலக்கியத்தின் நோக்கம் பல்வேறுபட்டதாக இருக்கிறது. பொதுவான கருத்து 'இன்பம் கொடுப்பது.' இது மட்டுமல்லாமல், மனித இனத்தின் பல்வேறு பண்பாட்டு நடவடிக்கைகளையும் அடுத்த தலைமுறைக்கு கடத்துவதையும் மேல்நாட்டினர் குறிக்கின்றனர். இலக்கியம் -மனித நாகரீகத்தின் உட்சபட்ச வெளிப்பாடாக இருந்து வருகிறது.

கலைகளின் இளைய குழந்தை [1895, டிசம்பர் 28]. அது தனக்கு முன்பே பிறந்த குழந்தைகளான ஓவியம், சிற்பம், இலக்கியம், கட்டிடம், நாடகம், இசை, முதலியக் கலைகளை உட்கிரகித்துக்கொண்டு 'ஏழாவது கலையாக' [seventh art] வளர்ந்து, இன்று 'அழியக் கலையாக' [eternal ஆர்ட்] வளர்ந்துள்ளது. தமிழ் திரைப்படம், தனக்கு தேவையான மூலாதாரமாக இதிகாசங்கள், தமிழ் இலக்கியம், நாடகம், நாட்டார் வாய்மொழிக் கதைகள் போன்றவை மட்டும் இல்லாமல், வேற்று மொழி இலக்கியங்களையும் உள்ளிழுத்துக்கொண்டு வளர்கிறது.

தென்னிந்தியாவின் முதல் தமிழ்த் திரைப்படம் 'கீசக வதம்' [1916] மௌனப் படமாகும். இது மகாபாரதத்தின் கிளைக்கதையாகும். இது போன்று 30க்கு மேற்பட்ட மௌனப்படங்கள் வந்துள்ளன. முதல் பேசும் படம், 'காளிதாஸ்' [1931], மகாகவி காளிதாசனின் வாழ்க்கை. இது நாட்டார் கதை மரபிலிருந்து உருவானது. அவரது பல வடமொழிப்பாடல்கள் தமிழில் ஒலித்தது. இதுவே பிற்காலத்தில் இரண்டு முறை எடுக்கப்பட்டது.

சங்க இலக்கியங்கள் எளிமைப்படுத்தப்பட்டு கவிஞர் கண்ணதாசனாலும், வைரமுத்தாலும் பல படங்களில்

கொடுக்கப்பட்டுள்ளது. முதல் நூற்றாண்டு இலக்கியமான 'திருக்குறள்' கிட்டத்தட்ட 30 பாடல்களுக்கு மேல் திரைப்படங்களில் இடம் பெற்றுள்ளது. திருவள்ளுவரின் வாழ்வை விளக்கும் 'திருவள்ளுவர்' [1941], படம் வந்துள்ளது. இரண்டாம் நூற்றாண்டு இலக்கியமான, 'சிலப்பதிகாரம்'கோவலன் கதை என்கிற பெயரில் மௌனப்பட காலத்தில் [1921], இரண்டு முறை வெளிவந்துள்ளது.பிற்காலத்தில், பி.யு.சின்னப்பா நடித்த 'கண்ணகி' [1942]யும், கலைஞரின் கைவண்ணத்தில் 'பூம்புகார்' [1964]இல் எஸ்.எஸ்.ஆர்.விஜயகுமாரி நடிப்பில் வெளிவந்தது. சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாகக் கருதப்படும் 'மணிமேகலை' [1940]இல் கே.பி.சுந்தராம்பாள் நடிப்பில் வந்தது.பானுமதி நடிப்பில் பிற்காலத்திலும் எடுக்கப்பட்டது. ஐம்பெரும் காப்பியங்களில் மற்ற இலக்கியங்களான, குண்டலகேசி [1947], வளையாபதி [1952], பெருங்கதை' உதயணன் வாசவத்தா [1947], முதலிய படங்கள் வெளிவந்தன.

'பக்தி இயக்க' காலமான 6ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டு வரை சைவ நாயன்மார்கள், வைஷ்ணவ ஆழ்வார்கள் காலம். சோழர் காலத்தில் வெளிவந்த 'பெரியபுராணம்' மற்றும் பிற்காலத்தில் வெளிவந்த 'திருவிளையாடல்' புராணத்திலிருந்து நிறைய படங்கள் வெளிவந்தன. அவற்றோடு சைவ திருமுறைகள் படங்களில் இடம் பெற்றன. மூத்த சிவனடியாரான காரைக்கால் அம்மையார் இரண்டுமுறை வெளியானது. பக்த நந்தனார், திருக்குறிப்பு தொண்டர், சுந்தரமூர்த்தி நாயனார், கண்ணப்ப நாயனார், திருநீலகண்டர், சிவலிங்க சாட்சி, ஞானசம்பந்தரின் வாழ்வை விளக்கும் 'பூம்பாவை', பக்தகாளத்தி, பரஞ்சோதி, திருவிளையாடல், திருவருட்செல்வர், மாணிக்கவாசகர். முதலிய படங்கள் வெளிவந்தன.

நாயன்மார்களைப்போல 12 ஆழ்வார்களின் வாழ்க்கையை விளக்கும் ஆண்டாள் திருக்கல்யாணம், ஸ்ரீ ராமானுஜர், தொண்டரடி பொடியாழ்வார், திருமழிசையாழ்வார், திருமால் பெருமை முதலிய திரைப்படங்களில் "நாலாயிர திவ்விய பிரபந்த''த்தின் பல பாசுரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ் இலக்கியங்களோடு தொடர்புடைய கம்பர் [1938], அம்பிகாபதி [1937], காளமேகம் [1940], ஔவையார் [1952], முதலியவர்களுடைய வாழ்வை விளக்கும் திரைப்படங்கள் வெளிவந்தன. விநோத ரசமஞ்சரி மற்றும் தனிப்பாடல் திரட்டு முதலிய நூல்களில் இருந்து இவற்றுக்கான பாடல்களும் கருத்துக்களும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

அடுத்ததாக அடியார்களின் வாழ்வை விளக்கும் அருணகிரிநாதர் [37], பட்டினத்தார்[35], தாயுமானவர், ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள்[39], முதலிய படங்கள் மூலம், திருப்புகழ், திருவருட்பா, பட்டினத்தார் பாடல், தாயுமானவர் பாடல், போன்ற பிற்கால இலக்கியங்கள் திரைப்படங்களில் இடம் பெற்றன. மேலே கண்ட படங்கள் மூலம் தமிழ் இலக்கியம் முழுவதும் திரைப்படமானது தமிழகத்தில் மட்டுமே.

வடமொழி இலக்கியங்களான மிருச்ச கடிகா [1936], சகுந்தலை [1940], விக்ரமாதித்யன், இது சாலிவாகனனாக வெளிவந்தது. பில்கணன்[1948], முதலியவை வெளிவந்தன.

நாவல்கள் :

நவீன இலக்கியமான நாவல் மற்றும் சிறுகதையிலிருந்து 160 திரைப்படங்கள் உருவாக்கின. இவை பாமர மக்களிடம் இலக்கிய இன்பத்தை எடுத்து சென்றன. ராஜாராணி, புராணம், என்று மிதந்து கொண்டிருந்த தமிழ் திரைப்படம், சமூகம் பக்கம் திரும்ப வழிவகுத்தது நாவல்கள்தான். முதல் சமூகப்படமான மேனகா [1935], வடுவூர் துரைசாமி ஐயங்காரின் நாவலான 'மேனகா'வை அடியொற்றி எடுக்கப்பட்டது. இவரது பிற நாவல்களான திகம்பர சாமியார், மரகதம் அல்லது கருங்குன்றத்து கொலை, பாலாமணி, வித்யாசாகர், போன்றவை வெளிவந்தன.

ஜெ.ஆர்.ரங்கராஜுவின் 'சவுக்கடி சந்திரகாந்தா', 'மோஹன சுந்தரம்' போன்றவை குறிப்பிடத்தக்கன.கல்கியின் தியாகபூமி, பொன்னியின் செல்வன், பொய்மான் கரடு [பொன்வயல்], கள்வனின் காதலி போன்றவையும் நாவல்களே. மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் 'பிரதாப முதலியார் சரித்திரம்' சபாபதி திரைப்படமானது. அறிஞர் அண்ணாவின் ரங்கோன் ராதா, வண்டிக்காரன் மகன், காதல் ஜோதி, போன்றவை நாவல்களாகும். நாடகத்துக்காக எழுதப்பட்ட, ஓர் இரவு,

வேலைக்காரி, திரைப்படமாக வெளிவந்தபோது, கல்கி 'இதோ ஒரு பொன்னாட்ஷா', 'இதோ ஒரு இங்கர்சால்' என்று கட்டுரை எழுதினார். கலைஞர் மு.கருணாநிதியின் புதையல், பூமாலை, வெள்ளிக்கிழமை, நெஞ்சுக்கு நீதி, ஒரே ரத்தம் போன்ற நாவல்கள் திரைப்படமானது. சாரப்பள்ளம் சாமுண்டி என்ற சிறுகதை திரைப்படமானது. மனோகரா, பராசக்தி, போன்ற நாடகங்களில் இருந்து உருவானவை. கொத்தமங்கலம் சுப்புவின் 'தில்லானாமோகனாம்பாள்' திரைப்படமானது. இது தமிழரின் இசை, மற்றும் நாட்டியத்தை உலகுக்கு சொன்னது. சிறந்த எழுத்தாளரான ஜெயகாந்தனின் ஒன்பது நாவல்கள் திரைப்படமானது.

இதில் 'உன்னைப் போல் ஒருவன்' மட்டும் ஜெயகாந்தன் இயக்கினார். கருணையினால் அல்ல, யாருக்காக அழுதான், சிலநேரங்களில் சிலமனிதர்கள், சினிமாவுக்கு போன சித்தாளு, ஊருக்கு நூறு பேர், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், காவல் தெய்வம் போன்ற அவரது நாவல்கள் புதிய களத்தையும் கருத்தையும் பார்வையாளர்களுக்குத் தந்தது. நாவல் ஆசிரியர் தி.ஜானகிராமனின் கதைகளை எஸ்.வி.சகஸ்ரநாமம், தனது சேவா ஸ்டேஜ் மூலம் நடத்திவந்தார். பிரசிடெண்ட் பஞ்சாச்சரம், நாலுவேலி நிலம் போன்றவை படமாகின. மோகமுள் அவரது காலத்துக்குப்பின் படமானது. கி.ரா.வின் 'கிடை' ஒருத்தியாக வெளிவந்தது. அவரது 'கோபல்ல கிராமம்' பாரதிராஜாவின் 'முதல் மரியாதையை'யில் முக்கிய இடத்தை பெற்றது. சி.சு.செல்லப்பாவின் 'வாடிவாசல்' நாவலின் ஒரு பகுதி 'மண் வாசனை'யில் வெளிப்பட்டது.

எழுத்தாளர் சுஜாதாவின் படைப்புகளான காயத்ரி, பிரியா, கரையெல்லாம் செண்பகப்பூ, முதலியவை அவருக்கு ஒரு திறப்பை ஏற்படுத்தின. பின்னர், அனிதா இளம் மனைவி [இது எப்படி இருக்கு], ஜன்னல் மலர்கள் [யாருக்கு யார் காவல்], காகித சங்கிலி [பொய் முகங்கள்], இருள்வரும் நேரம் [வானம் வசப்படும்], விக்ரம், சங்கர் படங்கள் வரை தொடர்ந்தார். பெண் எழுத்தாளர்களில் கோதை நாயகியம்மாள், லட்சுமி [காஞ்சனா], சிவசங்கரி [குட்டி], அனுராதா ரமணனின் பல நாவல்கள் படமானது. நாஞ்சில் நாடனின் 'தலைகீழ் விகிதங்கள்' சொல்ல மறந்த கதையாக வெளியானது. இந்திரா பார்த்தசாரதியின் 'குருதிப்புனல் 'கண் சிவந்தால் மண் சிவக்கும் படமாக வெளிவந்தது. இது போலவே, டி.செல்வராஜின் 'தேநீர்' நாவல் ஊமை ஜனங்களானது. வெங்கடேசனின் 'காவல் கோட்டம், 'அரவான், திரைப்படமானது. டேனியலின் 'எரியும் பனிக்காடு' தோட்டத் தொழிலாளிகளின் துயரம் தோய்ந்த வாழ்வை 'பரதேசி'யில் சொன்னது. சந்திர குமாரின் 'விசாரணை' நாவல் லாக்கப் படமாக வந்து நெஞ்சை பதறவைத்தது. பூமணியின் வெக்கை அசுரனானது. வசந்தபாலன், பாலா, சீனு ராமசாமி, வெற்றிமாறன், மாரி செல்வராஜ், ரஞ்சித் போன்றவர்கள் எழுத்தாளரின் பக்கத்துணையுடன் படைப்புகளை கொண்டு வருகின்றனர். தமிழ் செல்வனின் இரண்டு சிறுகதைகள் இணைந்து இயக்குனர் சசியால் 'பூ'படம் உருவானது. இது போலவே திலிப் குமாரின் இரண்டு சிறுகதைகளை வைத்து அருண் கார்த்தி இயக்கிய 'நசீர்' படம் இன்று உலகை சுற்றி வருகிறது.

வெளிநாட்டு இலக்கியங்கள் :

இலக்கிய வாசனை உள்ள இயக்குனர்கள், வெளிநாட்டு இலக்கியங்களையும் திரைப்பட மாகியுள்ளனர். குறிப்பாக: சேக்ஸ்பியரின் 'ஷைலக்' அதே பெயரிலேயே வெளிவந்தது.

twelth night கன்னியின் காதலியாக [1949] வெளியானது. ஒதெல்லோ நாடகம் 'அன்பு' படத்தில் தமிழிலும், ரத்த திலகம் படத்தில் ஆங்கிலத்திலும் வெளியானது. ரசிய எழுத்தாளர் டால்ஸ்டாயின், 'அன்ன கரீனா' 'பணக்காரி' படமாக வெளியானது. அலெக்ஸாண்டர் டூமாஸின் 'கவுண்ட் ஆப் மான்டி கிறிஸ்டோ' கற்கோட்டையானது. விக்டர் ஹுகோவின் 'லெஸ் மிரப்பில்' நல்லதொரு தழுவலாக 'ஏழை படும் பாடு' படமாக வெளிவந்தது. தமிழ் திரைப்பட உலகில், மூலக்கதையை தைரியமாக சொன்ன முதல் படம்: என் மனைவி [1942], டைட்டிலில், பிரெஞ்சு நாவலாசிரியர் மோலியரின் நாடகத்தை தழுவியது என்று வெளியிட்டனர்.



இசைத் தமிழ்

முனைவர் மு.இளங்கோவன்
கா.மா.அரசு பட்டமேற்படிப்பு மற்றும்
ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி

தமிழை இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்று முத்தமிழாகப் பகுத்துரைப்பது தமிழறிஞர்களின் இயல்பாகும். இயல் தமிழுக்கு அமைந்த இலக்கண நூல்களைப் போல் இசைத்தமிழுக்கும் நாடகத் தமிழுக்கும் இலக்கண நூல்கள் பண்டைக்காலத்தில் பல இருந்தன. இவற்றுள் இயல் தமிழ் இலக்கண நூல்கள் கிடைத்த அளவுக்கு இசைத்தமிழ், நாடகத் தமிழ் இலக்கண நூல்கள் நமக்குக் கிடைக்கவில்லை. எனினும் சங்கத் தமிழ்ப் பனுவல்களிலும் காப்பியங்களிலும் பக்திப் பனுவல்களிலும், சிற்றிலக்கியங்களிலும் இசைத்தமிழ் சார்ந்தும் நாடகத் தமிழ் சார்ந்தும் பல்வேறு குறிப்புகள் கிடைக்கின்றமையை ஆய்வறிஞர்கள் எடுத்துக்காட்டிப் பண்டைத்தமிழரின் இசைத்துறை, நாடகத்துறை குறித்த பேரறிவை வியக்கின்றனர். இக்கட்டுரையில் இசைத்தமிழ் வளர்ச்சி குறித்த செய்திகள் மட்டும் விளக்கப்படுகின்றன.

இசையைச் செவ்வியல் இசை எனவும் நாட்டுப்புற இசை எனவும் இரண்டாக வகைப்படுத்த இயலும். செவ்வியல் இசை, நாட்டுப்புற இசை இவையிரண்டும் பலவகைப்படுவன; இவற்றைப் பாடுவோரும் பாடும் சூழலும் வேறுபட்டு அமைகின்றன. முறைப்படுத்தப்பட்ட அரங்கிலும் அவையிலும் பாடப்படுவன செவ்வியல் இசையாகும். உழைக்கும் சூழலிலும், வாழ்க்கை வட்டச் சடங்குகளிலும் பாடப்படுவன நாட்டுப்புற இசையாகும். செவ்வியல் இசைக்கு அரசு ஆதரவும், சமூக மதிப்பும் இருந்தன. நாட்டுப்புற இசை என்பது கல்லா மக்களின் உழைப்பு ஒலிகளாகவும், உணர்வுத் துளிகளாகவும் அமைவன. இசைக்கு அரசர்களும் மக்களும் பெரிய அளவில் ஆதரவு நல்கியுள்ளனர்.

அறச்சலூர் இசைக்கல்வெட்டு, குடுமியான்மலை இசைக்கல்வெட்டு, தஞ்சைப் பெரிய கோவில் கல்வெட்டுகள் முதலியன இசைக்கலையின் பெருமையைத் தாங்கி நிற்கின்றன.

செவ்வியல் இசை என்பது சுருதி, சுரம், இராகம், தாளம் என்னும் உறுப்புகளைக் கொண்டு விளங்குவது ஆகும். மேற்கண்ட ஒவ்வொரு உறுப்பும் விரிவான ஆய்வுத் தளங்களைக் கொண்டவை. இதனை வரகுணபாண்டியர் பின்வருமாறு விளக்குவார்: "இசைத்தமிழ் என்பது இசையொலி அளவாய் வந்த நுண்ணிய அலகினைக் கொண்ட பாலைகளையும் (சுருதி), இப்பாலைகள் நிற்றற்கு நிலம் போன்று இருக்கும் கேள்விகளையும் (சுரங்களையும்), பாலை, கேள்வியின் சேர்க்கையாக அமையும் பண்களையும் (இராகங்கள்) ஒத்து எனப்படும் பாணி அல்லது தாளத்தையும் தனக்கு உறுப்புகளாகக் கொண்டது (பாணர் கைவழி, பக்கம் 4).

பண் எனப்படும் பாடல் என்பது கேள்வி(சுரம்), பாலை(சுருதி) எனும் இவை இரண்டின் வெவ்வேறு சேர்க்கைகளால் பல்லாயிரம் பாடல்களாக உருவம் பெறுகின்றன. பண்டைக் காலத்தில் பதினோராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒரு பண் இருந்தமையைப் பழந்தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன. பிற்காலத்தில் 103 பண் என்று கணக்கிடும் வகையில் பண்களின் எண்ணிக்கை குறைந்துபோனது. பண் குறித்த பேரறிவைத் தமிழர்கள் பெற்றிருந்ததைப் பரிபாடல் நூல் வழியும் அறியலாம். பண் உருவாக்கும் முறையைச் சிலப்பதிகாரம் மிகச் சிறப்பாக விளக்கியுள்ளது. அதனை உரையாசிரியர் அடியார்க்குநல்லார் மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டி விளக்கம் நல்கியுள்ளதை இசையறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

இசைப்பாடல்களை இசைக்க உதவும் கருவிகள் என்பவை மிடற்றுக்கருவி எனவும், குயிலுவக் கருவி எனவும் (குயிலுதல் ஒலித்தல்) இருவகைப்படும். பண்களை இசைக்க பெரிதும் உதவுவது மிடறு ஆகும். இதனைக் குரல், சாரீரம், தொண்டை எனவும் குறிப்பிடுவர். பலவாண்டுகளின் பயிற்சிக்குப் பிறகு மிகச் சிறந்த குரலினைப் பெற முடியும். திருமுறைகளை இசைக்கும் ஓதுவார்களும் பாடுதுறை வல்லுநர்களும் பன்னெடுங்காலப் பயிற்சிக்குப் பிறகு மிகச் சிறந்த குரல்வளத்தைப் பெறுவதை நாம் கண்ணால் கண்டு வருகின்றோம். குயிலுவக் கருவிகள் என்பவை இசையையும் பாணியையும் உருவாக்க வல்லது. மனிதனின் கை, விரல், வாய், கால் முதலியவற்றால் குயிலுவக் கருவிகள் இசைக்கப்படும். குயிலுவக் கருவிகளைத் தோல் கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி என்று நான்காக வகைப்படுத்துவர். இத் தோல், துளை, நரம்பு, கஞ்சக் கருவிகளின் வகைகளும் கணக்கற்றவையாகும். பல்லாயிரம் ஆண்டுகளாக இவற்றை இசைத்தோரின் எண்ணிக்கையும், திறமையும் கணக்கிட்டுச் சொல்ல இயலாத பெருந்தொகையினவாகும்.

மிடற்றுக் கருவியாலும் குயிலுவக் கருவியாலும் பல்லாயிரம் ஆண்டுகளாகச் செழித்திருந்த இசைத்தமிழ் அயலவர் ஆட்சியால் பாதிப்புற்றது. அயல்மொழியின் தாக்கம் தமிழிசைத் துறையில் பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தியது. தமிழர்கள் பொருளுணர்ந்து பாடிய பாடல்கள் செல்வாக்கு குறைந்து வேற்றுமொழிப் பாடல்களும் கருவிகளும் தமிழகத்தில் புகுந்து தமிழிசைக்கு நலிவை ஏற்படுத்தின. வேற்றுமொழி அரசர்களை மகிழ்விக்க அவர்களின் மொழியில் பாடல்களைப் பாடும் போக்கு தமிழகத்தில் வலுப்பெற்றது. அவ்வகையில் தொடங்கிய தெலுங்கிசைப் பாடல்களின் செல்வாக்கு இன்றும் தமிழகத்து மேடைகளில் கொடிகட்டிப் பறக்கின்றது. தமிழர் வாழ்வில் குழல், யாழ், முழவு என்பன பெரும்பான்மை இசைக்கருவிகளாக இடம்பெற்றிருந்தன. இக்கருவிகளுடன் இணைந்து பறை, உடுக்கை, துடி, முரசு, சங்கு உள்ளிட்ட பல்வேறு இசைக்கருவிகள் இசைக்கப்பட்டமையை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மத்தளம், தவில், நாகசுரம், தபேலா, வயலின், வீணை, ஆர்மோனியம், டிரம்ஸ், நாமுழவு(மோர்சிங்), கிளாரிநெட், கீபோர்டு என்று புதிய கருவிகள் இசைத்துறையில் இன்று கோலோச்சுகின்றன. இசைத்துறையுடன் தொடர்புடையவர்களாகப் பல்லாயிரம் தமிழ்க் கலைஞர்களை அடையாளம் காணமுடிகின்றது.

இசைத்தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்ட ஏந்தல்கள்

தமிழில் கிடைத்துள்ள முதல் இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். இந்நூலில் "நரம்பின்



மறை” என்ற பெயரில் இசையிலக்கண நூல் குறிப்பிடப்படுகின்றது. மேலும் தொல்காப்பியத்தில் இடம்பெறும் கருப்பொருள்களில் இடம்பெறும் யாழ் (பெரும்பண்), யாழின் பகுதி (கிளைப் பண்கள்) முதலியனவும் நான்கு நிலப் பண்கள், பண்களுக்கு உரிய பெரும்பொழுது, சிறுபொழுதுகள், எதுகை, மோனைகள், நால்வகைப் பாக்கள், பாவினம் குறித்த வரையறைகளும், இருபது வண்ணங்கள், பண்ணத்திகள், வாரம் பாடும் முறை, இசை எழுத்துகளின் மாத்திரைகள், தாள நடைகள், பரிபாடல், கலிப்பா குறித்த குறிப்புகளும் இசைத்தமிழ்ப் பகுதியை விளக்கும் சிறப்பிற்குரிய இடங்களாகும்.

தொல்காப்பியத்தில் இடம்பெறும் இசைப்பகுதிகளை ஆராய்ந்த இசைமேதை வீ.ப.கா.சுந்தரம் அவர்கள், சற்றொப்ப பதினைந்து இசைத்தலைப்புகளில் தொல்காப்பிய நூலுள் இசையுண்மைகள் உள்ளதை அடையாளம் கண்டு விளக்கியுள்ளார்கள் (தொல்காப்பியத்தில் இசைக்குறிப்புகள், பக்.3).

காலத்தால் பழைமையான தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் உள்ள இசைக் குறிப்புகளைப் புரிந்துகொள்ளவும், பிற்கால நூல்களில் உள்ள இசைக் குறிப்புகளைப் புரிந்து கொள்ளவும் நமக்குப் பெருந்துணைபுரிவது சிலப்பதிகாரம் நூலே ஆகும். இந்நூலின் பதிகவுரையில் இடம்பெறும் அடியார்க்கு நல்லாரின் உரைக்குறிப்புகள் இசைத்தமிழ் வரலாற்றை எடுத்துரைக்கும் அரிய ஆவணப் பகுதிகளாகும். ஆயின், பதிகவுரைச் செய்திகளைப் பெரும்பான்மை ஆய்வாளர்கள் எடுத்துரைப்பதில்லை. கருணாமிர்த சாகர ஆசிரியர் ஆபிரகாம் பண்டிதர், யாழ்நூல் ஆசிரியர் விபுலாநந்த அடிகளார், பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை ப.சுந்தரேசனார், முனைவர் எஸ்.இராமநாதனார், முனைவர் வீ.ப.கா.சுந்தரம், மு.அருணாசலம் பிள்ளை போன்ற இசைத்தமிழ் அறிஞர்களின் நூல்களிலும், உரைகளிலும் சிலப்பதிகாரப் பதிகச் செய்திகள் விளக்கப்பட்ட பிறகே இசைத்தமிழ் உண்மை வரலாறு வெளியுலகிற்குத் தெரியத் தொடங்கின.

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் இசைத்தமிழ்ச் செய்திகள்

கதைப்போக்கில் பழந்தமிழகத்துக் கலைக்கூறுகளைப் பொதிந்துவைத்திருக்கும் இசைத்தமிழ்க் கருவூலமாகச் சிலப்பதிகாரம் விளங்குகின்றது. சிலப்பதிகாரத்து இசை நுட்பங்களைத் தமிழுலகுக்கு அடையாளப்படுத்திய பெருமை உரையாசிரியர் அடியார்க்கு நல்லார்க்கே உரியதாகும். சிலப்பதிகாரத்துக்கு முன்னுரைபோல் அமைவது பதிகம் ஆகும். பதிகத்திற்கு மிக விரிவான உரையை அடியார்க்குநல்லார் வரைந்துள்ளார். இவ்வுரை விளக்கத்தைத் தமிழ் அறிஞர்களோ, இசை அறிஞர்களோ ஆய்வுகளுக்கு உட்படுத்தாத சூழலில் ஆபிரகாம் பண்டிதரே முதன்முதல் விளக்கிக் காட்டினார். அவரைத் தொடர்ந்து விபுலாநந்தர் யாழ்நூலிலும், வீ.ப.கா.சுந்தரம் தமிழிசைக் கலைக்களஞ்சியத்திலும் சிலப்பதிகார இசைநுட்பப் பகுதிகளை விளக்கிக் காட்டியுள்ளனர்.

சிலப்பதிகார நூல் முழுமையும் இசைத்தமிழ்ப் பகுதிகள் இடம்பெற்றுள்ளன எனினும் பதிகவுரை குறிப்பிடும் இசைத்தமிழ்ப் பகுதிகள் முதன்மையானவை ஆகும். அரங்கேற்று காதை, கானல்வரி, ஆய்ச்சியர் குரவை, வேனிற்காதை, கடலாடுகாதை, புறஞ்சேரி இறுத்த காதை முதலிய பகுதிகளிலும் இசைத்தமிழ் உண்மைகள் புதைந்துகிடக்கின்றன.

பதிகவுரையில் “தெய்வம் உணாவே” என்னும் தொல்காப்பிய நூற்பாவை எடுத்துக்கொண்டு, யாழ் என்பது பெரும் பண் எனவும் யாழின் பகுதி என்பது கிளைப்பண் எனவும் விளக்கி, ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய பண்ணாக இளங்கோவடிகள் குறிப்பிடும் பண்களை அடியார்க்கு நல்லார் நமக்கு விளக்கிக் காட்டுகின்றார்.

அவ்வகையில் முல்லை நிலத்திற்குரிய செம்பாலையாகிய முல்லை யாழினை (இன்றைய

அரிகாம்போதி இராகம்) ஆய்ச்சியர் குரவையில் (17:13) இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளதை அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டியுள்ளார்.

குறிஞ்சி நிலத்திற்குரிய குறிஞ்சி யாழினை (இன்றைய நட பைரவி) நடுகற் காதையிலும் (28: 2935), குன்றக் குரவையிலும் (24: 11 18) இளங்கோவடிகள் விளக்கியுள்ளமையை அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டுள்ளார்.

நெய்தல் நிலத்துக்குரிய நெய்தல் யாழாக அமையும் விளரிப்பாலை, செவ்வழி என்னும் இரண்டு பண்களும் கானல்வரியில் இடம்பெற்றுள்ளதை அடியார்க்குநல்லார் எடுத்துக்காட்டுகின்றார். இவற்றுள் செவ்வழி என்பது காந்தாரம் குரலாகப் பிறப்பதாகும். விளரிப்பாலை என்பது விளரி குரலாகப் பிறப்பதாகும்.

மருத நிலத்திற்குரிய பெரும்பண் கோடிப்பாலை ஆகும். இளி குரலாகப் பிறக்கும் கோடிப்பாலையின் இயல்பை வேனிற்காதையில் (8:35) இளங்கோவடிகள் விளக்கியுள்ளதை அடியார்க்குநல்லார் எடுத்துக்காட்டியுள்ளார்.

பாலைநிலத்தின் பெரும்பண்ணாக அமைவது அரும்பாலையாகும். இதனைப் புறஞ்சேரியிருத்த காதையில் (13:104115) இளங்கோவடிகள் விளக்கியுள்ளார். இவ்வாறு சிலப்பதிகார நூலுள் பழந்தமிழகத்தில் நிலவிய அடிப்படை இசைத்தமிழ்க் கூறுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

சங்கப் புலவர்கள், சிலப்பதிகார ஆசிரியர், காரைக்காலம்மையார், திருமுறை ஆசிரியர்கள், ஆழ்வார் பாடல்கள், பெரியபுராணம், சீவக சிந்தாமணி, பெருங்கதை, சித்தர் பாடல்கள், திருப்புகழ், வண்ணச்சரபம் தண்டபாணியார் வழியில் செழித்துவந்த இசைத்தமிழ் மரபு தமிழிசை மூவர்களான முத்துத் தாண்டவர், மாரிமுத்தா பிள்ளை, அருணாசலக் கவிராயர் உள்ளிட்டவர்களால் பாதுகாக்கப்பட்டது.

பழந்தமிழகத்து இசைத் தமிழ்ச் செய்திகள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை ஆய்வுலகில் கவனம்பெறாமல் இருந்தன. கடந்த முந்நூறு ஆண்டுகளாகத் தமிழகத்தில் நிலவிய தெலுங்கிசையை அடிப்படையாகக் கொண்டே தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல்களை எழுதினர். தமிழகத்திலும் மேல்நாடுகளிலும் திட்டமிட்டு மேலோட்டமான செய்திகளடங்கிய இத்தகைய நூல்களைச் "சங்கீத சாஸ்திரம்", "சங்கீத சரித்திரம்" என்பன போன்ற பெயர்களில் வெளிப்படுத்தி வந்தனர்.

வடமொழியிலும் தெலுங்கிலும் எழுதப்பட்ட இத்தகைய வடமொழிச் சார்புடைய நூல்களின் உள்ளடக்கத்தையும், நோக்கத்தையும் முதலில் கற்று உணர்ந்தவர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் ஆவார். தமிழுலகுக்கு இதனை முதன்முதல் எடுத்துக்காட்டிய பெருமைக்குரியவர் பண்டிதரே ஆவார். அவர் வழியில் தமிழிசை ஆய்வு சிறப்பாக வளர்ந்தது. அண்ணாமலை அரசரின் தலைமையில் இயங்கிய தமிழிசை இயக்கத்தினரின் சீரிய முயற்சியால் மேடைகள்தோறும் தமிழிசை இன்று சிறப்பாக முழங்குவதைக் காணலாம். தந்தை பெரியார் தமிழிசை மன்றத்தின் பணியையும் இங்கு இணைத்து எண்ணிப்பார்த்தல் நலம்.

திராவிட இயக்க எழுச்சியாலும், திராவிட இயக்க உணர்வாளர்களின் ஆட்சியாலும் தமிழிசைக்கு முதன்மை கிடைத்தது. செவ்வியல் இசையையும் இசைக்கருவிகளையும் பயிற்றுவிக்க தமிழிசைப் பள்ளிகள் தமிழகந்தோறும் உருவாக்கப்பட்டுள்ளன. அதுபோல் நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் தோற்றுவிக்கப்பட்டு, நாட்டுப்புற இசைக்கலைஞர்களையும் கலையையும் பாதுகாக்க தமிழநாடு அரசு முன்வந்துள்ளது.

தமிழ்நாடு முழுவதும் வாரியத்தில் இதுநாள்வரை 50,882 கலைஞர்கள் உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளனர். தமிழ்நாடு முழுவதும் உறுப்பினராகப் பதிவுபெற்ற 9,011 நாட்டுப்புறக் கலைஞர்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளுக்காக இதுநாள்வரை ரூ.1,98,72,917/- வழங்கப்பட்டுள்ளது. அரசு ஆதரவோடு இசைத்தமிழும் தமிழிசையும் இன்று சிறப்பாகத் தமிழகத்தில் வளர்ந்துவருகின்றன.

நவீன நாடகத்தில் தமிழிலக்கியத் தாக்கம்



முனைவர் கி.பார்த்திபராஜா

உதவிப் பேராசிரியர்
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்.

தொடக்கமாக...

'நாடகம்' என்ற சொல், தொன்மை இலக்கணமாகிய தொல்காப்பியத்திலேயே இடம்பெற்றிருக்கிறது. இச்சொற்பயன்பாடு, நாடகம் பற்றிய புரிதலும், பயிலவும் தொல்தமிழ்ச் சமூகத்திலேயே இருந்திருக்கிறது என்பதை அறிவிப்பதாகிறது. ஐரோப்பாவின் தொழிற்புரட்சிக்காலத்தையே உலக அளவில் 'நவீன காலம்' என்பது குறிக்கிறது. பிரிட்டிஷாரின் காலனியாதிக்கத்திற்கு இந்தியா அடிமைப்பட்டிருந்தபோதே, நவீனம் என்பது இங்கு அறிமுகமாகிறது. ஆனாலும் நாடகத்துறையைப் பொறுத்த அளவில் 'நவீனம்' என்று குறிப்பிடப்படுவது 1970களுக்குப் பிந்தைய காலகட்டத்தைத்தான். ஏனெனில் நாடகத்தின் உருவம் மற்றும் உள்ளடக்க அடிப்படையிலான நவீனச் சிந்தனை, நோக்கு, வெளிப்பாடு என்பவை இக்காலகட்டத்திலேயே மலர்ச்சியுற்றன.

நவீனம் - விளக்கம்

நாடகம் என்ற நிகழ்த்துகலை வடிவத்தைப் பொறுத்தவரை, நவீனம் என்பது இரு நிலைகளில் தொழிற்படுகிறது எனலாம். அவை, 1.உருவம் அல்லது வடிவம், 2.உள்ளடக்கம். உருவம் என்பது நிகழ்த்தப்படும் முறைமையாகும். நாடகம் நிகழ்த்தப்படும் அரங்க அமைப்பு, ஒளியமைப்பு, அரங்கப் பொருட்கள் உள்ளிட்ட புறநிலைச் சாதனங்களில் நவீனம், நாடகம் நிகழ்த்தப்படும் உடல்மொழி, இசைக்கோவை, மொழிப்பயன்பாடு உள்ளிட்ட அகநிலைச் சாதனங்களில் நவீனம் என இது இரண்டு வகையாக அமைகின்றது.

உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை, மரபார்ந்த உள்ளடக்கத்தை அப்படியே பயன்படுத்துவதிலிருந்து மாறுபட்டு, மரபை மறு விசாரணை செய்கிற தன்மையில் அமைபவை எனவும் சமகாலத் தன்மையோடு அமைபவை எனவும் இருவகையாக அமைகின்றது.

இவ்வகையில் நவீனம் என்பது நாடகத் துறையில் புதிய பாய்ச்சல்களை நிகழ்த்தியுள்ளது எனலாம்.

தமிழிலக்கியத் தாக்கம்

நாடகம் என்பது தனித்த கலைவடிவம். அது, முத்தமிழில் ஒன்றாகக் கருதப்படுவதாகும். இயல், இசை ஆகியவற்றோடு 'மெய்ப்பாடு' என்பதையும் கொண்டதாக விளங்கும் கலை நாடகம். 'நவீன நாடகத்தில் தமிழிலக்கியத் தாக்கம்' என்று பேசும்போது, ஏற்கனவே இலக்கியப் படைப்புகளாக வெளிப்பட்டவை நாடக அரங்குகளில் செலுத்திய தாக்கம் என்பதாகப் புரிந்து கொள்ளலாம். அந்த அடிப்படையில் பண்டைய இலக்கியங்கள், காவியங்கள், புதினங்கள், சிறுகதைகள், கவிதைகள் முதலான இலக்கியங்கள், தமிழ் நாடகத்திற்குள் வரவு வைக்கப்பட்டிருப்பதனைப் பருந்துப் பார்வையில் நோக்கலாம்.

சங்க இலக்கியங்கள்

தமிழரின் தொல்லிலக்கியங்களான சங்க இலக்கியங்களைக் குறித்து நவீன நாடகங்கள் மிகுதியும் வந்துள்ளன. ஔவை என்ற பெண்பாற்புலவர் 'ஔவையார்' ஆக ஆக்கப்பட்டதன் பின் உள்ள பாலின நுண் அரசியலை வெளிப்படுத்தும் விதமாகப் பாவலர் இன்குலாப் 'ஔவை' என்ற நாடகத்தைப் படைத்துள்ளார். தமிழ் இலக்கிய மரபில், ஔவை என்ற பெயரில் வேறு வேறு காலகட்டங்களில் புலவர்கள் வாழ்ந்துள்ளனர். சங்க கால ஔவையின் எழுத்தும், வாழ்க்கை நோக்கும் வேறு; இடைக்காலத்தில் கம்பனோடு வாதிட்ட ஔவையின் நோக்கு வேறு; பிற்காலத்தில் 'ஆத்திச்சூடி' பாடிய ஔவையின் நோக்கு வேறு. ஆனால் இவற்றையெல்லாம் ஒன்றாகக் கலந்து குலுக்கி 'ஔவைப்பாட்டி' என்னும் படிமத்தை உருவாக்கியதன் பின் இருக்கும் நுண் அரசியலை மிகவும் நுட்பமாக வெளிப்படுத்தியிருக்கிறார் இன்குலாப்.

'ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவித்ததற்காக'க் கபிலப் புலவர் பாடிய 'குறிஞ்சிப்பாட்டு' மிக முக்கியமான இலக்கியப் படைப்பாகும். அதனை அடிப்படையாக வைத்துத் தமிழரின் அகவாழ்வுச் செல்நெறிகளையும் சிறப்பையும் முன்மொழிகிறது இன்குலாபின் 'குறிஞ்சிப்பாட்டு'.

கடையேழு வள்ளல்களில் ஒருவராகிய பாரியின் வாழ்க்கைச் சித்திரங்களைச் சங்கக் கவிதைகளின் துணைகொண்டு காட்சிப்படுத்துகிறது பிரளயனின் 'பாரி படுகளம்'. பாரியின் பறம்புமலை மக்களின் புலப்பெயர்வை முன்வைத்துக் காலந்தோறும் புலம்பெயரும் மக்களின் வலியையும் வேதனையையும் இணைத்துப் பேசுகிறது கி.பார்த்திபராஜாவின் 'நெடும்பயணம்'.

இவ்வாறு சங்க இலக்கியங்கள், வாழ்வியல் முறைகள் உள்ளிட்டவற்றை கருப்பொருளாகக் கொண்டு குறிப்பிடத்தக்க நாடகப் படைப்புகள் வெளிவந்துள்ளன.

சிலப்பதிகாரம்

இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் தமிழின் முதல் காப்பியம் என்னும் பெருமைக்குரியது. இந்திரா பார்த்தசாரதி, சிலப்பதிகாரத்தைத் தழுவி 'கொங்கைத் தீ' என்னும் நாடகத்தைப் படைத்திருக்கிறார். பெண்ணிய நோக்கில் சிலப்பதிகாரத்தை நோக்கும் இப்படைப்பு மிக முக்கியமான நாடகப் படைப்பாகும்.

சிலப்பதிகாரத்தின் முதன்மைப் பாத்திரம் கண்ணகி. பரத்தையிற் பிரிந்த கணவனை ஏற்கும் அவளுடைய உள்மன முரண்பாடுகளை நவீன நாடகம் விவாதித்திருக்கிறது. கண்ணகி மட்டுமல்ல, சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் ஏனைய பெண் பாத்திரங்களின் நிலை என்ன? அவர்களின் மனவோட்டங்கள் யாவை? என்பதை பெண்ணிய நோக்கில் வெளிப்படுத்தும் நாடகம் பிரளயனின் 'வஞ்சியர் காண்டம்'.

மணிமேகலை

இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையை அடிப்படையாக முன்வைத்துப் படைக்கப்பட்ட நாடகப் படைப்பு இன்குலாபின் 'மணிமேகலை' ஆகும். தமிழ்ச் சமூகத்தில் பத்தினி – பரத்தை என்னும் இரண்டு வாழ்க்கை



முறைகளில் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்தே வாழமுடியும். இந்த இரண்டு வழிகளையும் புறக்கணித்துத் தன் மனதுக்குப் பிடித்தமான 'துறவு' என்னும் புதிய வழியைத் தேர்ந்தெடுத்த மணிமேகலை எதிர்கொள்ளும் சிக்கல்களை மிகவும் உணர்வுப்பூர்வமாகவும் புரட்சிகரமாகவும் பேசிய நாடகம் இன்குலாபின் 'மணிமேகலை'.

மணிமேகலையின் துறவைத் தத்துவார்த்தத் தளத்தில் முன்வைத்துப் படைக்கப்பட்டது 'மணிமேகலைத் துறவு' என்னும் பேராசிரியர் சே.இராமானுஜத்தின் நாடகப்படைப்பாகும்.

கீர்த்தனை இலக்கியம்

'நந்தனார் சரித்திரக் கீர்த்தனை' தமிழின் கீர்த்தனை இலக்கியங்களில் மிக முக்கியமான படைப்பு. கோபாலகிருஷ்ண பாரதியாரின் இந்தப் படைப்பு இன்றும் இசையரங்குகளில் இடம்பெறும் சிறப்புக்குரியது. இவ்விலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு நவீன வாசிப்பு வெளிச்சத்துக்கு உட்படுத்தி, எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி படைத்த நாடகம், 'நந்தன் கதை'. உழைக்கும் மக்களின் வாழ்வியல் பண்பாட்டு அம்சங்களை நுட்பமாக வெளிப்படுத்தும் இந்நாடகம், கருத்தியல் அடிப்படையிலும் சமற்கிருத மேலாதிக்கத்திற்கு முயலும் அடித்தள மக்களின் முயற்சியையும் அம்முயற்சிகள் எதிர்கொள்ளப்படும் முறைமையையும் பேசுகிறது.

பிற்காலக் காவியங்கள்

இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களை மையப்படுத்திய பல்வேறு நாடகப் படைப்புகள் தமிழ் நவீன நாடகத்தளத்தில் ஆக்கம் பெற்றிருக்கின்றன. பிற்காலக் காவியங்கள் சிலவும் நாடகங்களாக மேடையாக்கம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். கவிஞர் தமிழ் ஒளியின் 'வீராயி' என்னும் சமூகக் காவியம், பிரளயனின் நெறியாளுகையில் நவீன நாடகமாக அரங்கேற்றப்பட்டிருக்கிறது.

கவிதைகள்

தமிழின் நவீன கவிதைகளை பலவற்றை நாடக அரங்கில் கொண்டுவந்து நிகழ்த்திய பெருமைக்குரியவர் நாடக இயக்குநர் பிரசன்னா ராமசாமி. பாரதியாரின் கவிதைகள் தொடக்கம், சம காலத்தில் படைக்கும் நவீனக் கவிஞர்கள் வரையிலான படைப்பாளிகளில் கவிதைகளைக் கொண்டே அவர் தனது நாடகங்கள் பலவற்றை ஆக்கம் செய்துள்ளார். நவீன நாடகம் என்பது பல்கலைகளில் கூட்டு வடிவம் என்ற புரிந்துணர்வு அடிப்படையில் மேடையாக்கம் பெற்ற நவீன கவிதைகளின் காட்சி வடிவங்கள் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

இன்குலாபின் 'ஔவை' நாடகத்தில், ஈழத்து நவீனக் கவிஞர்களில் ஒருவராகிய 'ஔவை'யின் கவிதை இடம்பெற்றுள்ளது. கி.பார்த்திபராஜா, ஈழத்துப் பெண் கவிஞராகிய சன்மார்க்காவின் கவிதையை நாடகமாக நிகழ்த்தியிருக்கிறார். சுந்தரராமசாமியின் கவிதையை அடிப்படையாகக் கொண்டு, கூத்துப்பட்டறை நடிகர் பசுபதி நெறியாளுகையில் ஒரு படைப்பு வெளிவந்திருக்கிறது.

சிறுகதைகள்

நவீன இலக்கியப் படைப்புகளில் பெரிதும் நவீன நாடக ஆக்கங்களாக உருப்பெற்றவை சிறுகதைகள் ஆகும். புதுமைப்பித்தனின் 'செல்லம்மாள்', ஆர்.சூடாமணியின் 'நான்காம் ஆசிரமம்' ஆகிய சிறுகதைகளை கே.எஸ்.கருணாபிரசாத் நாடகங்களாக நிகழ்த்தியுள்ளார். பிரபஞ்சனின் 'மரி என்ற ஆட்டுக்குட்டி' சிறுகதை, கி.பார்த்திபராஜாவின் முயற்சியில் நவீன நாடகமாக அரங்கேறி யிருக்கிறது. ஜெயகாந்தனின் 'லவ் பண்ணுங்கோ சார்' சிறுகதையை பாஸ்கர் என்ற நவீன நாடகக் கலைஞர் நாடகமாக நிகழ்த்தியுள்ளார். பாமாவின் சிறுகதை 'சாமியாட்டம்' வினோதினி என்ற கலைஞரால் நாடகமாக ஆக்கம் செய்யப்பெற்று நிகழ்த்தப்பட்டிருக்கிறது. பாமாவின் 'மொளகாப்பொடி' என்னும் இலக்கியப்படைப்பு, ஸ்ரீஜித் சுந்தரம் என்னும் கலைஞரால் நாடகமாக நிகழ்த்தப்பட்டிருக்கிறது. சுந்தர ராமசாமியின் 'பிரசாதம்' உள்ளிட்ட சிறுகதைகள் கூத்துப்பட்டறை நாடக நடிகர்களால் மேடையாக்கம் கண்டிருக்கின்றன.

எழுத்தாளர் இமயம் எழுதிய 'பெத்தவன்' சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு நாடகத்துறைப் பேராசிரியர் இரா.இராஜூ நெறியாளுகை செய்து மேடையேற்றிய நாடகம், தமிழ் நவீன நாடக வரலாற்றில் மிகப்பெரிய சலனங்களை ஏற்படுத்தியது. தமிழகத்தின் சாதியக் கட்டுமானங்களின் கொடூர வெளிப்பாடான 'ஆணவக் கொலை' குறித்தும் அதில் தொக்கி நிற்கும் மனிதாய ஈரத்தையும் இந்நாடகம் வெளிப்படுத்தியது.

முடிவாக...

நாடகம் என்ற கலைவடிவம் உண்மையில் கலைகளின் கூட்டு வடிவம் ஆகும். தனது உள்ளடக்கத்திலும் உருவத்திலும் வெளிப்பாட்டு முறைமையில் எக்கலைகளையும் உள்வாங்கிச் செரித்துக் கொண்டு நாடகீயத் தன்மையோடு வெளிப்படுத்தும் திறன் இக்கலைக்கு உண்டு. அவ்வாறே நாடகங்கள் இலக்கியங்களை வரவு வைத்துக் கொள்கின்றன.

அரங்கில் நிகழ்த்தப்படும் நாடகங்கள், எழுத்துவடிவமாக வெளிப்படும்போது அவை 'நாடக இலக்கியங்கள்' ஆகின்றன. நடிப்பதற்கேற்ற நாடகங்கள், படிப்பதற்கேற்ற நாடகங்கள், நடிப்பதற்கும் படிப்பதற்குமேற்ற நாடகங்கள் என்ற வகைப்பாடுகள், இலக்கியமாகவும் நிகழ்வாகவும் நாடகத்தை நுகரும் முறைமையடிப்படையிலான பகுப்புகள்தான். எனவே நாடகங்கள் இலக்கியங்களாக வெளிப்படும் தன்மை ஒருபுறத்தேயிருக்க, ஏனைய இலக்கியப் படைப்புகளை நாடகங்கள் எவ்வாறு உள்வாங்கிக் கொண்டு தன்னை வளப்படுத்திக் கொள்கின்றன என்பது மிகச் சுவையான வினா.

இவ்வினாவைத் தொடர்ந்து சிந்திக்கும்போது, தமிழ் இலக்கியப் பரப்பில் சங்க இலக்கியங்கள் தொடங்கிச் சமகால நவீன இலக்கியப் படைப்புகள் வரையிலுமான பரந்துபட்ட தளங்களை நவீனத் தமிழ் நாடகங்கள் உள்வாங்கி ஆற்றுகை செய்திருக்கின்றன என்பது நமக்குக் கிடக்கும் விடையாகும்.



தமிழ் ஆவணப் படங்களின் போக்கு

அஜயன் பாலா

இன்று அனைத்து மொழிகளிலும் ஆவணப்படம் பெரும் இயக்கமாக வளர்ந்துள்ளது. குறிப்பாக அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் ஆவணப்படங்களுக்கு கலை சினிமாக்களுக்கு இணையான இடத்தில் வைத்து போற்றப்படுகின்றன.

மேலும் இன்று. ஒடிடி (OTT) எனும் ஒற்றை சட்டகம் வழியாக கலாச்சார பரிமாற்றங்கள் துரிதமாக நடைபெறுகின்றன. ஹாட் ஸ்டாரில் ரஷ்யாவில் ஏற்பட்ட செர்னோபில் (CERNOBYL) அணு உலை விபத்து குறித்த ஆவணப்படம் நம்மை நடுங்க வைக்கிறது. அது போல நெட்பிலிக்ஸில் ஹவுஸ் ஆப் சீக்ரெட்ஸ் (HOUSE OF SECRETS) அமோசானில் ஐயாம் நாட் யுவர் நீக்ரோ (IAM NOT YOUR NEGRO) போன்ற டாக்குமண்டரி எனும் ஆவணப்படங்கள் கதை படங்களைக்காட்டிலும் விறுவிறுப்பாகவும் அதே சமயம் உண்மைகளை போட்டு உடைத்தும் நமக்கு அதிர்ச்சியூட்டுகின்றன.

இப்படி உலகம் முழுக்க ஆவணப் படங்களுக்கு வரவேற்பு இருந்து வரும் நிலையில் நம் தமிழகத்தில் ஆவணப்படங்களின் போக்கு என்னவாக இருக்கிறது எனும்போது இத்துறையில் நாம் இன்னும் எவ்வளவு பின் தங்கியிருக்கிறோம் என்பது வெட்ட வெளிச்சமாகிறது.

ஒருபக்கம் வருத்தம் என்றாலும் ஒட்டு மொத்த இந்தியாவிலும் இந்த நிலைதான். ஆனந்த் பட்வர்த்தன் போன்ற ஒருசிலர் மட்டுமே இத்துறையில் ஓரளவு ஊடகங்களால் கொண்டாடப்படுகின்றவர்களாக முக்கியத்துவம் பெற்றுள்ளனர்.

இதற்கு முக்கிய காரணம் இந்தியாவில் மக்களிடையே இருக்கும் வணிக சினிமா மோகம் ஒரு முக்கிய காரணம். ஆவணப்படங்கள் என்றாலே வேப்பங்காய் போல ஒரு புறக்கணிப்பு மக்கள் மன நிலையில் இருக்கிறது.

பொதுவாக தமிழ்நாட்டில் ஆவணப்படம் என்றாலே பொதுப் புத்தியில் அது திரையரங்குகளில் வணிக சினிமாவுக்கு முன் திரையிடப்படும் அரசாங்கத்தின் செய்திப் படங்கள் என்பதாகவே ஒரு அபிப்ராயம் நம் சூழலில் இருந்து வந்தது. 2000க்குப் பின் டிஜிட்டல் கேமராக்களின் வருகை மற்றும் ஊடக வளர்ச்சிக்கு பின்பு தான் மக்களிடையே ஆவணப்படம் குறித்த விழிப்புணர்வு ஓரளவுக்கு வரத்துவங்கியது.

இச்சூழலில் ஆவணப்படங்கள் இருப்பதில் அதில் போக்கு என தனியாக எதுவும் இல்லாவிட்டாலும் தொடர்ந்து இயங்குவதே இங்கு பெரிய சாதனையாக கருதப்படுகிறது. இச்சுழலில் தமிழகத்தில் குறிப்பிட்ட சிலரே இத்துறையில் போதிய அங்கீகாரமோ அல்லது வணிக சந்தையோ இல்லாமல் தொடர்ந்து இத்துறையில் அர்ப்பணிப்புடன் இயங்கி வருகின்றனர். அவ்வகையில் தமிழ் ஆவணப்படங்களின் வரலாற்றில் சில முக்கியத்தடம் பதித்த இயக்குனர்களையும் அவர்களது படங்களையும் சுருக்கமாக இக்கட்டுரையில் பார்ப்போம்.

அ.கருப்பன் எனும் ஏ.கே.செட்டியார்

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் பிறந்த ஏ.கே.செட்டியாரின் முழுப்பெயர் கருப்பன் செட்டியார். சினிமா மீது கொண்ட ஆர்வத்தில் நியூயார்க் சென்று படித்துவிட்டு திரும்பிய போது காந்தி இந்தியாவின் மிகப்பெரிய பேசு பொருளாக இருந்தார். அவரது வாழ்க்கையை ஆவணப்படமாக எடுக்கும் எண்ணம் தோன்ற உடனே களமிறங்கினார். அவரது வாழ்க்கையை நூல்கள் மூலம் முழுமையாக உள்வாங்கிக் கொண்ட அவர் அதன்பின் காந்தி குறித்த ஊடகப் பதிவுகள் எத்தனை நாடுகளில் உள்ளதோ அத்தனையும் சேகரிக்க முடிவுசெய்து களமிறங்கினார்.

போக்குவரத்து வசதியில்லாத அக்காலத்திலேயே பத்தாயிரம் மைல்கள் மூன்று ஆண்டுகள் பயணம் செய்து பல நாடுகளில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த காந்தி பற்றிய பிலிம் சுருள்களை உரியவர்களிடம் அனுமதி பெற்று சேகரித்து அதன் மூலம் ஐம்பதாயிரம் அடி நீளத்துக்கு ஆவணப்படத்தை உருவாக்கினார். ஹாலிவுட்டில் சிறந்த படத்தொகுப்பாளர் மூலமாக அதை பன்னிரண்டாயிரம் அடியாக சுருக்கி பின் இருநூறுக்கும் மேற்பட்ட நூல்களைப் படித்து விவரணம் எழுதி ஆங்கில எழுத்துக்களாக படத்தில் சேர்த்துக்கொண்டார்.

இவ்வாவணப்படத்தை அப்போதைய பிரித்தானிய அரசுக்கு அஞ்சி திரையரங்குகள் திரையிட முன்வரவில்லை. இப்படம் பின்னர் 1948இல் சுதந்திர தினத்தன்று புதுடில்லியில் 1948ல் அந்த ஆவணப்படத்தை வெளியிட்டார்.

ஆனால் இந்த பெருமைமிக்க காரியத்துக்குபின் தமிழில் ஆவணப்படங்களே பெரிதாக எடுக்கப்படவில்லை.

குட்டி ஜப்பானின் குழந்தைகள்

பல வருடங்கள் இடைவெளிக்குப்பின் 1989ல் சிவகாசி தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணி செய்யும் குழந்தை தொழிலாளர்களை மையமாக வைத்து குட்டி ஜப்பானின் குழந்தைகள் வெளியாகி பரவலான கவனம் பெற்றது. பல விருதுகளையும் வென்றது என்றாலும் இதை இயக்கியவர் சலம் பொன்னுரக்கர் ஒரு மலையாளி.

பின் இந்த படம் உருவாக்கிய தாக்கம் ஆவணப்படம் குறித்த உணர்வை தமிழ் சூழலில் சிறு சலனத்தை உண்டாக்கிவிட்டது என்றாலும் உடனடியாக எதுவும் நடந்துவிடவில்லை.

தூர்தர்ஷன் தொலைக்காட்சிக்காக சில தனியார் நிறுவனங்கள் எடுத்த சில படங்கள் தவிர வேறெந்த முயற்சியும் இல்லை. காரணம் அன்று சினிமா எடுப்பது என்பது பெரும் முதலீடு சார்ந்த விடயம். அப்படியே எடுத்தாலும் அதற்கு வர்த்தக சூழலும் இல்லை.

இயக்குனர் சொர்ணவேல் ராஜேந்திரன்

இச்சூழலில் 1996ல் சொர்ண வேல் ஈஸ்வரன் தங்கம் என்ற பெயரில் எடுத்த ஆவணப்படம் ஒன்று பரவலான கவனத்தை உண்டாக்கியது. அவரே ஐ என் ஏ நேதாஜியின் இந்திய தேசிய ராணுவம் படத்தையும் எடுத்தார். தொடர்ந்து கட்டு மரம் போன்ற படங்களை எடுத்து வருகிறார்.



இயக்குனர் அம்ஷன் குமார்

‘அம்ஷன் குமார் எடுத்த சுப்ரமணிய பாரதியும் குறிப்பிடத்தகுந்த படமாக உருவானது. பாரதியை பற்றிய துல்லியமான ஆய்வுகளுடன் உருவான இப்படம்தான் தொடர்ந்து தமிழில் எடுக்கப்பட்ட பலவாழ்க்கை வரலாற்று படங்களுக்கு முன்னோடி. குறிப்பாக பாரதி, பெரியார், காமராஜர் ஆகியோர் குறித்த வணிக சினிமாக்கள் உருவாக்கம் பெற அம்ஷன் குமாரின் பாரதி படமே முன்னோடியாக அமைந்தது.

அம்ஷன்குமார் தொடர்ந்து அசோகமித்திரன் சி.வி.ராமன், உ.வே.சாமிநாத ஐயர், ஆகிய ஆவணப்படங்களை எடுத்துள்ளார். சதுப்பு நிலக்காடுகள் பற்றி இவர் எடுத்த சுற்றுச்சூழல் குறித்த படமும் கவனிக்கத்தகுந்தது. 2015ல் இவர் எடுத்த யாழ்ப்பாணம் தட்சிணாமூர்த்தி பற்றிய படம் மூலம் முதன்முதலாக தேசிய விருது பெற்ற ஆவணப்பட இயக்குனர் என்ற பெருமையும் இவருக்குண்டு.

ஆர்.ஆர்.சீனிவாசன்

ஒரு ஆவணப்பட இயக்குனரை தமிழக போலீஸ் வலை வீசி தேடிய சம்பவமும், தமிழ் ஆவணப்பட உலகில் நிகழ்ந்துள்ளது. 1997ல் ஆர்.ஆர்.சீனிவாசன் எடுத்த நதியின் மரணம் தமிழ் ஆவணப்பட வரலாற்றில் ஒரு முக்கிய திருப்புமுனை என்றும் கூட சொல்லலாம்.

அன்று அனைத்து நாளேடுகளிலும் ஆர்.ஆர்.சீனிவாசன் புகைப்படமும் குறிப்பிட்ட ஆவணப்படத்தின் பெயரும் பரபரப்பாக பத்திரிகைகளில் அச்சாகின. ஒரு வகையில் பார்த்தால் சாதாராண பாமர மக்கள் கூட தினத்தந்தியில் வந்த இந்த செய்தி மூலம் ஆவணப்படம் என்ற ஒன்று இருப்பதை அறிந்துகொண்டனர். சென்னையில் பொது அரங்கம் ஒன்றில் இப்படம் திரையிடப்பட்டதால் தமிழகஅரசு இதற்கு தடையானை பிறப்பித்தது. பின் இப்படத்தை இயக்கிய சீனிவாசன் மீது வழக்கு பதிவு செய்து தேடப்படும் குற்றவாளியாக அறிவித்ததும் இனி ஆவணப்படங்களும் சென்சார் செய்த பின்பே பொது இடங்களில் திரையிடப்படவேண்டும் எனும் புதிய சட்ட திருத்தம் கொண்டு வந்ததும் இப்படம் உருவாக்கிய மிகபெரிய சாதனை.

ஆர்.ஆர்.சீனிவாசன் தொடர்ந்து என் பெயர் பாலாறு போன்ற சுற்றுச்சூழல் குறித்த முக்கிய ஆவணப்படங்களும் எழுத்தாளரும் கதை சொல்லியுமான பவா செல்லத்துரை பற்றிய பவா

என்றொரு கதை சொல்லி மற்றும் புகழ் பெற்ற நாதஸ்வர வித்வான் காருக்குறிச்சி அருணாசலம் பற்றிய ஆவணப்படங்களும் இயக்கி இத்துறையில் தொடர்ந்து இயங்கி வருபவர்.

இயக்குனர் ஆர்.வி.ரமணி

இந்த வரிசையில் இத்துறைக்காக தன்வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்துள்ள இயக்குனர் ஆர்.வி.ரமணி முப்பது வருடங்களுக்கும் மேலாக தொடர்ந்து இத்துறையில் இயங்கிவரும் ரமணி இவரது படங்கள் இந்திய அளவில் பல முக்கிய திரைப்பட விழாக்களில் பங்கேற்று சிறப்பு செய்திருப்பவர். இவர் இயக்கத்தில் மறைந்து வரும் அரிய கலையான தோல்பாவைக் கூத்து (2003) கலைஞர்கள் பற்றிய 150 நிமிட ஆவணப்படம் தமிழ் ஆவணப்பட வரலாற்றில் ஒரு அரிய முயற்சி. தமிழ்நாடு முழுக்க பல்வேறுபட்ட கலைஞர்களை நேரடியாக கள ஆய்வு செய்த இப்படம் தமிழ் ஆவணப்பட உலகின் இன்னுமொரு மைல் கல் எனலாம்.

பிற்பாடு 1999ல் ஓவியர் ஆதிமூலம் பற்றி லைன்ச் ஆப் காந்தி மற்றும் 2005ல் எழுத்தாளர் சுந்தரராமசாமி பற்றிய நீ யார் போன்ற படங்கள் இவர் இயக்கத்தில் வெளியான குறிப்பிடத்தக்க படங்கள் ரமணியின் படங்கள் தனிமனிதமும் அக விசாரணையும் கவித்துவமும் கூடி வேறு திசையில் பயணித்து புதிய அனுபவங்களுக்குள் இழுத்துச் செல்பவை. இந்த பாணியின் உச்சமாக 2019ல் இவர் இயக்கிய ஓ தட்ஸ் பானு எனும் ஆவணப்படம் அந்த ஆண்டில் இந்தியாவின் சிறந்த ஆவணப்படத்துக்கான தேசிய விருதை பெற்றது குறிப்பிடத்தக்கது.

இயக்குனர் ஆர்.பி.அமுதன்

ஒரு ஆவணப்பட இயக்குனரின் உச்சபட்ச பொறுப்புகளை தமிழ் சூழலில் உணர்த்திய கலைஞன் ராமலிங்கம் புஷ்பலிங்கம் அமுதன் எனும் ஆர்.பி.அமுதன். மதுரையைச் சேர்ந்தவர். மதுரையில் கொல்லப்பட்ட கம்யூனிஸ்ட் தோழர் லீலாவதி மற்றும் தீவிரவாதிகள் போன்ற ஆவணப்படங்கள் மூலம் 1999ல் தன் பயணத்தைத் துவக்கிய அமுதன், மதுரையில் ஒரு குறிப்பிட்ட தெருவில் மலக்கழிவுகளை சுத்தம் செய்யும் மாரியம்மாள் எனும் தலித் துப்புரவு தொழிலாளியின் ஒருநாள் வாழ்க்கையைச் சொல்லும் பீ (2003) எனும் இவரது ஆவணப்படம் தமிழில் மனித உரிமைகள் சார்ந்து மிகபெரிய விழிப்புணர்வை உண்டாக்கியது. தமிழ்நாட்டில் நிலவும் சாதிய ஒடுக்குதல்களின் அவலத்தை இப்படத்தில் வெட்ட வெளிச்சமாக்கினார். தொடர்ந்து இத்துறைக்காக தன் முழு வாழ்வையும் அர்ப்பணித்துவரும் அமுதனின் இயக்கத்தில் உருவான செருப்பு தைக்கும் தொழிலை செய்துவருபவர்கள் பற்றிய செருப்பு (2006) மற்றும் அணு உலைக்கு எதிரான ரேடியேஷன் ஸ்டோரீஸ் (2008) ஆகியவையும் பரவலான கவனத்தை பெற்றவை. தொடர்ந்து 15க்கும் மேற்பட்ட ஆவணப்படங்களை இயக்கியுள்ள இவரது படங்கள் இந்தியா முழுக்க பல்வேறு நகரங்களில் திரையிடப்பட்டு வரவேற்பை பெற்றுள்ளன.

மட்டுமல்லாமல் மறுபக்கம் என்ற பெயரில் தொடந்து மதுரையிலும் சென்னையிலும் ஆண்டு தோறும் டிசம்பர் மாதம் ஒரு ஆவணப்படத்துக்கென திரைப்பட விழாவை நடத்தி வருகிறார்.

லீனா மணிமேகலை

அடிப்படையில் எழுத்தாளரும் கவிஞருமான லீனா மணிமேகலை கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக ஆவணப்பட இயக்கத்தில் ஈடுபட்டு வருபவர் சமூகத்தில் பெண் ஒடுக்குதல் குறித்த பார்வையை முன்வைக்கும் படங்களை அதிகம் இயக்கிய லீனா 2002ல் மாத்தம்மா தமிழின் முதல் இன வரைவியல் சார்ந்த ஆவணப்படம் எனலாம். தொடர்ந்து இவர் இயக்கத்தில் உருவான மூன்று அடித்தட்டு உழைக்கும் பெண்கள் பற்றிய ஆவணப்படம் தேவதைகள் தமிழில் விளிம்புநிலை பெண்களின் வாழ்வையும் அவர்கள் மனத்திடத்தையும் சமூக நெருக்கடிகளையும் தோலுரித்துக் காட்டியது. பெண்ணாடி, பலி பீடம் பறை white van stories போன்ற குறிப்பிடத் தகுந்த படங்களை இயக்கியுள்ள இவர் தற்போது முழு நீள கதைப் படங்களை இயக்கி வருகிறார். அவ்வகையில் இவர் இயக்கிய மாடத்தி உலகம் முழுக்க பல திரைப்பட விழாக்களில், பங்கேற்று விருதுகளை பெற்று வருகிறது

ரவி சுப்ரமணியன்

கவிஞர் எழுத்தாளர் பாடகர் என பன்முகங்கொண்ட கலைஞரான ரவி சுப்பிரமணியம் கும்பகோணத்தைச் சேர்ந்தவர். தொலைக்காட்சி தயாரிப்பாக நூற்றுக்கும் மேற்பட்ட ஆவணப்படங்களை இயக்கியவர்.

எழுத்தாளர் ஜெயகாந்தன் குறித்த இவரது ஆவணப்படம் அம்ஷன் குமாரின் பாரதிக்கு பிறகு அதிகம் பாரட்டைப்பெற்ற குறிப்பிடத்தக்க ஆவணப்படமாக கருதப்படுகிறது. தொடர்ந்து இத்துறையில் இயங்கி வரும் இவர் இந்திரா பார்த்தசாரதி, மா.அரங்கநாதன், திருலோக சீதாராம் போன்ற அரிய இலக்கிய ஆளுமைகள் குறித்தும் இயக்குனர் பாலச்சந்தர் குறித்தும் தொடர்ந்து ஆவணப்படங்கள் எடுத்து வருகிறார்.

சோமிதரன்

இலங்கைத் தமிழரான சோமிதரன் 2004 முதல் சென்னையில் இயங்கி வரும் ஆவணப்பட இயக்குனர். 2005ல் போபால் பேரழிவு குறித்து தன்முதல் ஆவணப் படத்தை இயக்கி அறிமுகமானார். இலங்கையில் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது பற்றிய எரியும் நினைவுகள் (2008) மிகச் சிறந்த போர் எதிர்ப்பு ஆவணமாகவும் தமிழர் பண்பாட்டு பதிவாகவும் கருதப்படுகிறது. தொடந்து இலங்கையில் நடக்கும் இனப்படுகொலை குறித்த முல்லைத்தீவு சாகா எனும் படமும் போரினால் தமிழர்கள் படும் துன்பங்களையும் அவலங்களையும் பதிவு செய்த குறிப்பிடத்தக்க ஆவணமாக கருதப்படுகிறது, தற்போது சென்னையில் முழுநீளகதை படங்களில் பணிபுரிந்து வருகிறார்.

திவ்ய பாரதி

மதுரையைச் சேர்ந்த வழக்குரைஞர் திவ்ய பாரதி 2017ல் வெளியான இவரது கக்கூஸ் ஆவணப்படம் மூலம் முழுமையான ஆவணப்பட இயக்குனராக தன்னை வரித்துக்கொண்டவர். கக்கூஸ் ஆவணப்படம் வெளியான மறுநாளே போலீசாரால் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார். மனிதக்கழிவுகளை மனிதர்களே அகற்றும் அவலத்துக்கு எதிராக எடுக்கப்பட்ட இந்த ஆவணப்படம் குறிப்பிட்ட சாதியை இழிவுபடுத்துவதாக பலத்த எதிர்ப்புகள் வர போலீசார் இவர்மீது வழக்கு பதிவு செய்து தேடத் துவங்கினர். அடுத்து இரண்டு ஆண்டுகள் கழித்து அவர் மீனவர் பிரச்சனை குறித்து எடுத்த ஒருத்தரும் வரலே என்ற படத்தின்மீதும் படம் வெளிவருவற்கு முன்பே போலீசார் தேடும் அளவுக்கு இவரது ஆவணப்பட செயல்பாடுகள் காத்திரமானவை என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது முழு நீள படம் எடுக்கும் முயற்சியில் இருந்து வருகிறார்.

மேற்சொன்ன அனைவரும் தொடர்ந்து இத்துறைக்காக தங்கள் வாழ்வை முழுமையாகவோ அல்லது கணிசமாகவோ அர்ப்பணித்து செயல்படுபவர்கள். இவர்களின் செயல்பாடுகளால் மட்டுமே தொடர்ந்து தமிழ் ஆவணப்படத்துறை இன்று தமிழில் ஓரளவு தடம் பதித்து வளர்ந்துள்ளது.

இவர்களைத்தவிர தங்களது அரிய முயற்சிகளின் மூலம் சிலர் இயக்கத்தில் உருவாகி வரும் ஆவணப்படங்கள் இத்துறைக்கு தொடர்ச்சியையும் வளர்ச்சியையும் கொடுத்துள்ளன.

அவர்களுள் பால கைலாசம் இயக்கிய வாஸ்து மரபு கோம்பை, அன்வர் இயக்கிய யாதும் ஊரே, கீதா இளங்கோவனின் மாதவிடாய், அருள் எழிலனின் பெருங்கடல் வேட்டத்து, பாரதி கிருஷ்ணகுமார் இயக்கத்தில் கீழ்வெண்மனி பற்றிய ராமய்யாவின் குடிசை, செந்தமிழன் இயக்கிய பேசாமொழி, கோவி லெனின் இயக்கத்தில் அண்ணா, ப்ரேமா ரேவதியின் உங்களில் ஒருத்தி, பாலமுருகன் இயக்கிய நொய்யல், இரா.முருகவேள் மற்றும் ஒடியன் லட்சுமணன் இயக்கிய நாளி, தவமுதல்வன் இயக்கத்தில் உருவான பச்சை ரத்தம் போன்றவை தம்ம: அவில் வெளியான பொது சூழலில் பலரது கவனத்தை ஈர்த்து தமிழ் ஆவணப்பட உலகுக்கு பெருமையும் மதிப்பும் கூட்டியிருக்கின்றனர்.

வணிக சினிமாக்களுக்கு கிடைக்கும் கவனத்தில் ஒரு துளியளவு கவனத்தை ஊடகங்களும் அரசாங்கமும் கொடுத்தால் இத்துறையில் இன்னும் கூடுதலாக பலர் இயங்கி சமூகத்துக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் பல அரிய சாதனைகளை நிகழ்த்தக்கூடும்.

பாலு மகேந்திரா நூலகம் சார்பாக இத்துறைக்கு ஒரு இணையதளம் உருவாக்கி தமிழ் ஆவணப்படங்கள் குறித்த ஆவணகாப்பகம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. தொடர்ந்து ஆவணப்படம் எடுப்பவர்களுக்கு இதன்மூலம் வழிவகை செய்யவிருக்கிறது என்பதை இக்கட்டுரை மூலம் தெரிவித்துக் கொள்வதில் உவகை கொள்கிறேன்.



சாதனைகள் புரிந்துவரும் சிறப்புமிகு செய்தித்துறை

முனைவர் சு.கிருஷ்ணசாமி

உறுப்பினர் செயலர்
தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் சென்னை 5.

நாளிதழ்கள் நிகழ்வுகளை செய்தியாக்குகின்றன. தமிழக அரசு சார்பாக வெளியிடப்படும் இதழோ பெரும் செய்திகளை அரசாணைகளுடன் இணைத்து ஆவணமாக்குகிறது. அதனால்தான் அந்த இதழ் வரலாறாக வலம் வருகிறது.

செய்தி விளம்பரத்துறையின் அவசியத்தை ஆங்கில அரசு உணரும் காலம் ஒன்று வந்தது. ஜெர்மானிய சர்வாதிகாரி ஹிட்லரின் ஆதிக்கம் மூட்டிய போர் கனலில் தரணி வாழ் மக்கள் எல்லாம் தவிதவித்தனர். அதனை அறிந்துணர்ந்தது இங்கிலாந்து அரசு. இரண்டாம் உலகப் போரின்போது தன் பக்கமுள்ள நியாயத்தையும் ஹிட்லரின் எதேச்சதிகாரத்தால் ஏற்பட்டு வரும் பேராபத்தையும் இந்திய மக்களிடையே எடுத்துரைத்து அவர்களின் பேராதரவினைத் திரட்டுவதற்கு 1942ஆம் ஆண்டு பிப்ரவரி 16ஆம் தேதி போர் பிரச்சார அதிகாரியாக ஒருவரையும், வட்டார போர் ஆலோசனைக்குழுவின் செயலாளராக திரு. ஹார்வி அவர்களையும் ஆங்கில அரசு நியமித்தது. அக்குழு தன் பணிகளை செய்து முடித்தது.

இரண்டாம் உலகப் போர் முடிந்த பிறகும் நாட்டின் நிர்மானப்பணிகளை போர்க்காலப் பணிகளைப் போல் தொடர வேண்டும் என்றும் மக்களுக்கும் அரசுக்குமிடையே தொடர்புப் பாலமாக செய்தி விளம்பரத்துறை இயங்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. சென்னை மாகாண முதலமைச்சர் ஆந்திர கேசரி திரு.பிரகாசம் அவர்கள், திரு. சி.வி.அனுமந்தராவ் என்பவரை விளம்பரத்துறைக்கு இயக்குநராக நியமித்தார்.

ஆரம்பத்தில் விளம்பரத்துறை அமைச்சராக திரு. பக்தவத்சலம் அவர்கள் இருந்தார். மூதறிஞர் திரு. ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது திரு. சி.சுப்பிரமணியம் அவர்கள் விளம்பரத்துறை அமைச்சரானார். கர்மவீரர் திரு. காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் விளம்பரத்துறை நன்கு செயல்பட்டது. விளம்பரத்துறை இயக்குநர் திரு. கே.திரவியம் அவர்கள் மிகசிறப்பாக செயல்பட்டு இத்துறைக்கு மேலும் பெருமை சேர்த்தார்.

1958ல் திரு.குழந்தைவேலு அவர்களும் 1968ல் திரு. டி.வி.வாசுதேவன் அவர்களும் விளம்பரத்துறையின் – இயக்குநர்களாகப் பணியாற்றினர். 1967–69ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது செய்தி, விளம்பரத்துறை சிறப்புடன் இயங்கியது. 1969க்குப் பின் மாண்புமிகு முத்தமிழறிஞர் முதலமைச்சரான பின்பு செய்தி, விளம்பரத்துறை புதியதோர் ஆக்கம் பெற்றது. சென்னை, தஞ்சை, மதுரையில் அரசாங்க செய்தி நிலையங்கள் செயல்பட்டு வந்தன.

தமிழரசு இதழ் வெளியீடு

முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கண் சிகிச்சைக்காக 1.7.1970 அன்று அமெரிக்கா புறப்பட்டார். அதற்கு முந்தைய நாளான 30.06.1970 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் அவருக்கு நடத்தப்பட்ட வழியனுப்பு விழாவில் தமிழரசு இதழ் முதன் முதலில் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டது. மாதம் இருமுறை தமிழிலும், மாதம் ஒருமுறை ஆங்கிலத்திலும் 'தமிழரசு" ஏடு வெளிவந்தது. 09.10.1972 அன்று தமிழரசு அச்சகம் ஆரம்பிக்கப்பட்டது.

தமிழரசு மட்டுமல்லாது திட்டம், விளையாட்டு மடல், உழைப்பவர் உலகம், திருக்கோயில் மற்றும் தமிழ் கல்வி போன்ற பல பத்திரிக்கைகள் தமிழ்நாடு அரசு சார்பில் நடத்தப்பட்டன. சீரணி, மொழிச்செல்வம்; ஆரோக்கிய மார்க்கம், மக்கள் நல்வாழ்வு, கல்வி, பாக்கியலட்சுமி, தமிழ்நாடு செய்தி போன்ற பல இதழ்களும் வெளியிடப்பட்டன. 01.01.1997 அரசு செய்தி என்ற புதியவகை சுவரொட்டி பத்திரிக்கையை தமிழ்நாடு அரசு வெளியிடப்பட்டது.

குமரி முனையில் தமிழ்நாடு அரசு சார்பாக நடத்தப்பட்ட திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவினை முன்னிட்டு 'கோட்டம் முதல் குமரி வரை' என்ற சிறப்பு மலர் வெளியிட்டதுபோல் அவ்வப்போது பல சிறப்பு மலர்கள் வெளியிட்டன. 1997–98ல் தமிழ்நாடு செய்தி தொழில் நுட்ப மையம் உருவாக்கப்பட்டது. அரசு பத்திரிகைகளின் தரமும், தொழில் நுட்ப திறனும் மேம்படுத்தப்பட்டன.

2006 முதல் 2011 வரை தமிழகத்தில் ஆட்சியில் இருந்த முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது அரசு செய்தி விளம்பரத்துறை மற்றும் பத்திரிக்கைத்துறை வளர்ச்சிக்கும் பத்திரிக்கையாளர்கள் நல மேம்பாட்டிற்கும்; ஏராளமான நன்மைகளை செய்தது. அவற்றில் ஒரு சில மட்டும் இங்கு சொல்லப்படுகிறது.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் பத்திரிக்கையாளர்களுக்கு அரசு வீடுகள் வழங்கப்பட்டன. பத்திரிக்கையாளர்களுக்கு ஓய்வூதியமும், குடும்ப ஓய்வூதியமும் உயர்த்தி வழங்கப்பட்டது. ஒரு கோடி ரூபாய் முதலீட்டில்; பத்திரிக்கையாளர் நல நிதியம்



உருவாக்கப்பட்டதோடு உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டு திட்டத்தின் பயன்களும் பத்திரிக்கையாளர்களுக்கு கிடைக்கச் செய்யப்பட்டன. சென்னை நிருபர் சங்கத்திற்கு ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் புதியக் கட்டிடம் கட்டித் தரப்பட்டது. இத்துறை மூலம் பல சுதந்திரப் போராட்டத் தியாகிகள், தலைவர்கள் மற்றும் தமிழ் அறிஞர்களுக்கு சிலைகள் அமைக்கப்பட்டும் நினைவுச்சின்னங்கள் அமைக்கப்பட்டும் இத்துறையால் பராமரிக்கப் படுகின்றன. தமிழக அரசின் முயற்சியால் மத்திய அரசு மூலம் சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு நினைவு தபால் தலைகள் வெளியிடப்பட்டன.

1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்றதற்கு பிறகு 1972 ஆம் ஆண்டு இந்தியா முழுவதும் சுதந்திர தின வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது. அப்போது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தார். அவரது தலைமை யிலான அரசு சுதந்திர தின வெள்ளிவிழாவினை மிகச்சிறப்பாகக் கொண்டாடியது.

1997ஆம் ஆண்டு இந்திய சுதந்திர தின பொன்விழா ஆண்டாகும். அப்போது தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் கோட்டையில் கொடியேற்றி இந்திய சுதந்திர தின பொன்விழாவை மிகச்சிறப்பாக கொண்டாடினார்

சுதந்திரதின வெள்ளிவிழாவினை முன்னிட்டு சுதந்திரதின வெள்ளிவிழா சிறப்பு மலர் ஒன்றையும், சுதந்திரதின பொன்விழாவினை முன்னிட்டு சுதந்திரதின பொன்விழா சிறப்பு மலர் ஒன்றையும் தமிழரசு இதழ் வெளியிட்டு சுதந்திரதின வெள்ளிவிழா, பொன் விழாக்களுக்கு மேலும் பெருமை சேர்த்தது.

இந்திய சுதந்திர தின வெள்ளிவிழா கொண்டாடப்பட்டதற்கு பிறகும் 1973ஆம் ஆண்டுக்கு முன்பு வரையிலும் சுதந்திரதின, குடியரசு தின விழாக்களில் மாநிலங்களில் தேசியக்கொடி ஏற்றும் உரிமை மாநில ஆளுநர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருந்தது.

இராஜமன்னார் குழு அறிக்கைக்கு பிறகு கூட்டாட்சி தத்துவத்தின்படி 1974 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களிடம் மாநிலங்களில் இந்திய சுதந்திர தின விழாக்கள் கொண்டாடும்போது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில முதலமைச்சர்களுக்குத்தான் சுதந்திர தினத்தன்று தேசிய கொடி ஏற்றும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கோரிக்கை வைத்தார்.

கலைஞர் அவர்களின் கோரிக்கையை ஏற்று மாநிலங்களில் இந்திய சுதந்திர தின விழாக்கள் கொண்டாடப்படுகின்ற போது தேசிய கொடியை ஏற்றும் உரிமையை மாநில முதலமைச்சர்களுக்கு வழங்கி மத்திய அரசு ஆணை பிறப்பித்தது. அதன்படி 1974ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று தமிழ்நாட்டில் நடந்த இந்திய சுதந்திர தின விழாவின் போது தமிழக முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் தேசிய கொடியை முதன்முதலாக ஏற்றினார். இது இந்திய ஜனநாயக வரலாற்றில் மிகப்பெரிய மைல்கல்லாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழக அரசு இந்தியாவின் 75வது சுதந்திர விழாவினை மிகச் சிறப்பாக கொண்டாடியது.

சுதந்திர போராட்ட வீரர்களின் தியாகங்களை எடுத்துரைக்கும் சிற்பங்கள் அமைக்கப்பட்ட சிறப்பு ஊர்திகளை குடியரசு தினத்தை முன்னிட்டு புதுடெல்லியில் நடைபெற்ற ஊர்வலத்தில் கலந்து கொள்ளச் செய்தது.

அத்தோடு சுதந்திர போராட்ட தியாகிகளின் உருவங்கள் பொறித்த மூன்று சிறப்பு ஊர்திகளை உருவாக்கி தமிழகம் முழுவதும் அனுப்பி 75வது சுதந்திர தினத்திற்கு மேலும் பெருமை சேர்த்தது தமிழக அரசின் விளம்பரத்துறை. மாவட்டங்கள்தோறும் முக்கிய நகரங்களில் சுதந்திர போராட்ட தியாகிகளின் பெருமைகளை உணர்த்தும் கண்காட்சிகளை இத்துறை நடத்தியது சிறப்பானதாகும்.

தமிழக அரசின் திட்டங்களை மக்களுக்கு எடுத்துச் செல்லும் மகத்தான பணிகளை செய்தி விளம்பரத்துறை சிறப்பாக செய்து வருவது சிறப்பானதும் போற்றத்தக்கதாகும்.

இணையகால பதிப்புலகம்

சந்தியா நடராஜன்



பதிப்புத் துறையில் ஈய எழுத்துகளைப் பொறுக்கியெடுத்துச் சொல்சொல்லாக, வரிவரியாக விரல்கள் வலியெடுக்க ஒருநூலை உருவாக்கியகாலம் மறைந்தேபோனது. டிரெடில் இயந்திரம் காயலான் கடைக்குப் போனது. பிறகு ஆப்செட்இயந்திரத்தின்அசுரவேகத்தைக்கண்டு அதிசயித்துநின்றோம். ஒருபடைப்பு நூல்வடிவம் பெற வேண்டுமானால் குறைந்தது ஆயிரம் பிரதிகள் அச்சடிக்கவேண்டும் என்ற நிலை இருந்தது. இன்று பிரிண்ட் ஆன் டிமாண்ட் (Print on Demand) இயந்திரங்கள் வந்து இறங்கிவிட்டன. தமிழ்ப் பதிப்புலகில் இது POD காலம். ஒருநூலைத் தேவைக்கேற்ப அன்றாடம் அச்சிட்டுக் கொள்ளலாம்.

இன்று தனது நூலைப் பிரசுரிக்க பதிப்பாளரைத்தேடி அலைந்து மனம்நோக வேண்டிய அவசியம் ஒரு படைப்பாளனுக்கு இல்லை. கொஞ்சம் காசிருந்தால் போதும். 12 பிரதிகள் மட்டுமே அச்சடித்துத் தன்னை ஒரு எழுத்தாளனாக அகிலத்துக்கு அறிவித்துக்கொள்ள வழிவகுத்துக் கொடுத்திருக்கிறது கடந்த பத்தாண்டுகாலம். அந்தப் பன்னிரண்டு பிரதிகளில் ஆறு பிரதிகளைப் பத்திரிகைகளுக்கு மதிப்புரை வேண்டி அனுப்பிவிட்டு, ஆறு பிரதிகளை புத்தகக்காட்சியில் விற்றுவிட்டு முதல் பதிப்பு விற்றுத் தீர்ந்துவிட்டது என்று தனது முகநூல் பதிவில் பெருமைப்பட்டுக்கொள்ளும் எழுத்தாளர்களையும் ஈர்த்துள்ளது இந்த இணையகாலம்.

அச்சடிக்கும் செலவு வீண் என்று நினைப்பவர்கள் மின்நூலாக, கிண்டில் பதிப்பாகச் செலவில்லாமல் ஆகாயத்திலேயே பதிப்பித்து

உலவவிடலாம். இருக்கவே இருக்கிறது முகநூல். 'என்நூல் இப்போது மின்நூல். நான் ஈட்டிய வருமானம் இவ்வளவு' என்று காலை எழுந்தவுடன் தனது வரவு கணக்கை உற்றார் உறவினர் உள்ளிட்ட வாசக பெருமக்களுக்குத் தெரிவித்து புகழ்க்கொடி நாட்டலாம். சின்னத்திரையில் தொடர்ந்து முகம் காட்டி வந்தால் நூல்விற்பனை கூடும் என்பது இன்றைய பதிப்புச்சூழல் குறித்த ஆய்வு முடிவு. ஒரு பிரபல நடிகர் 'இந்த நூல் அவசியம் படிக்க வேண்டிய நூல்' என்று தொலைக்காட்சித் தொடர் ஒன்றில் மின்னலடிப்பதுபோல அரைநிமிடம் பேசினால் அடுத்தவாரமே ஆயிரம் பிரதிகள் விற்கும் என்பதும் புத்தக விற்பனையாளர்கள் சொல்லும் சங்கதி. அது உண்மை என்பதைப் பதிப்பாளர்களும் உணர்ந்திருக்கிறார்கள்; ஒத்துக்கொள்கிறார்கள்.

படைப்புலகம் இல்லாமல் பதிப்புலகம் இயங்காது. தமிழ்ப் பதிப்புச்சூழல் பற்றி விவாதித்தால் தமிழ்ப்படைப்புச் சூழலைத் தவிர்க்க முடியாது. ஒரு எழுத்தாளரின் படைப்பை வியந்து அவரின் படைப்பை வெளியிடுவதற்காக மட்டுமே பதிப்பகம் ஆரம்பித்த கதைகள் தமிழ்ப்பதிப்புலகில் உண்டு. குறிப்பாக பர்மாவில் வெ.சாமிநாதசர்மா வாழ்ந்த காலத்தில் அவர் எழுதிவந்த பத்திரிகைக் கட்டுரைகளைப் படித்துவிட்டு அவரிடம் தன்னை இழந்தவர் நாட்டுகோட்டைக்காரரான அரு.சொக்கலிங்கம் செட்டியார். சாமிநாதசர்மாவின் நூல்களை வெளியிடுவதற்காகவே 'பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்' என்ற பதிப்பகத்தைப் பர்மாவில் நிறுவி, இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் அதைப் பிடுங்கிப் புதுக்கோட்டையில் நட்டு வளர்த்தவர் அவர். தனது மனைவி இறந்த பின்னர் அந்தத் துயரத்தைக் கடிதம் வாயிலாகத் தனது பதிப்பாளர் 'அரு.சொ' வுக்கு எழுதித் தீர்த்துக் கொண்டவர் வெ.சாமிநாத சர்மா.

சக்தி வை.கோவிந்தன், 'குமரிமலர்' ஏ.கே.செட்டியார் என்ற இருபெரும் பதிப்பாளர்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கைதாகி, தலைமறைவாகி, போலீசில் சரணடைந்து, பிறகு விடுதலை பெற்று, ஏதுமற்ற இளைஞனாய்ச் சென்னை வந்த சின்ன அண்ணாமலை என்ற தேவகோட்டை இளைஞனுக்குப் பனகல்பார்க் பகுதியில் பதிப்பகம் ஒன்றை அமைத்துக் கொடுத்த வரலாறும் உண்டு. தமிழ்ப் பண்ணை என்ற அவரது பதிப்பகத்தில் உருவானவர்கள், உருவாக்கிய பதிப்பகங்கள் இன்றும் சென்னை தியாகராய நகரில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பதிப்புத்துறையிலும் படைப்புத்துறையிலும் அன்பும் அரவணைப்பும் பெருந்தன்மையும் பிறர்க்கு உதவும் குணமும் குடிகொண்டிருந்தது. அந்தத்தன்மை நீடித்து நிலைக்க வேண்டும். எழுத்து மனித குலத்தின் ஆன்மாவாக அடையாளம் பெறவேண்டும்.

கடந்த கால்நூற்றாண்டு காலம் என்பது இணையத்தின் காலம். உலகம் ஒரு பெரிய கிராமமாகிவிட்ட காலம். எல்லைக் கோடுகளைக் கடந்து வணிகம் நடக்கும் காலம். மாற்றம் என்பது தினம் தினம் நிகழும் காலம். பதிப்புத்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல.

2000ஆம் ஆண்டை மிலேனியம் ஆண்டு என்று உலகமே கொண்டாடியது. அந்தக் கொண்டாட்டம் ஒரு புதுயுகத்தின் பேரோசையாகக் காதில் ஒலித்தது. பதிப்பகங்களும் தங்களைக் காலமாற்றத்திற்கு ஏற்ப வடிவமைத்துக் கொண்டன. ஆனந்த விகடன், நக்கீரன், தினத்தந்தி, குங்குமம் போன்ற இதழ்களும் நாளிதழ்களும் பதிப்புத்துறைக்குள் காலடி எடுத்து வைத்தன. 'கிழக்குப் பதிப்பகம்' என்ற நிதி ஆதார வலிமை படைத்த கம்பெனி இத்துறைக்குள் இறங்கிப் பெட்டிக்கடை வரை தமிழ்நூல்களைக் கொண்டு சேர்த்தது. மிகவிரைவிலேயே தமிழ்ப் பதிப்புத்துறையின் எல்லைகளைத் தீர்மானித்துக் கொண்டு அப்பதிப்பகம் தனது செயல்பாடுகளை மீள்வரையறை செய்துகொண்டது. ஆங்கில நூல்களை வெளியிடுவதைப் படிப்படியாகக் குறைத்துக்கொண்டு ஆங்கிலப் பிரிவுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. நோக்கம் பெரிது என்றாலும் யதார்த்தம் எதிராகஉள்ளது.

தமிழ்ப் பதிப்புச் சூழலில் தமிழிலிருந்து ஆங்கிலத்தில் நூல்களை மொழிபெயர்த்து வெளியிடுவது என்பது ஆசைக்குச் செய்கிற வேலையாகத்தான் இருக்கிறது. ஆனால் படைப்பாளிகளுக்குத் தமது படைப்புகளை ஆங்கிலத்தில் பார்க்க ஆசை எழவே செய்யும். ஆங்கிலத்தில் மட்டுமல்ல, இந்திய மொழிகளில் மொழியாக்கம் பெற்றாலும் எழுதியவனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சிதானே! ஓர் இந்திய மொழியில் பிரசுரமான சிறந்த படைப்பை வேறொரு மொழிக்கு எடுத்துச் செல்லும் பணியை சாகித்ய அகாடமி தொடர்ந்து செய்து வருகிறது. ஆனால் சாகித்ய

அகாடமி விருது பெற்ற எழுத்தாளருக்குத்தான் அந்த பாக்கியம் கிடைக்கும். தமிழ் வளர்ச்சித்துறை, செம்மொழி நிறுவனம், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் போன்ற அரசு அமைப்புகள் செவ்விலக்கியங்களை, குறிப்பாகத் திருக்குறளை எல்லா உலகமொழிகளுக்கும் கொண்டு சேர்க்கும் பணியில் தீவிரம் காட்டி வருகின்றன. ஆனால் பல்கலைக்கழக வெளியீடுகள் பெரும்பாலும் கடந்த கால நூல்களின் மீள்பதிப்புகளாகவே உள்ளன. துறை போகியவர்களின் படைப்புகள்கூடத் தனியார் பதிப்பகங்கள் மூலமே வெளிவருகின்றன. சிறந்த தமிழ் ஆய்வேடுகளை ஆய்வாளர்களே வெளியிட்டுக் கொள்ளத் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை பெரும் துணை புரிந்து வருகிறது.

20ஆம் நூற்றாண்டின் தமிழ்ப் பதிப்புலகிலிருந்து 21ஆம் நூற்றாண்டின் முதல் இருபது ஆண்டு காலத் தமிழ்ப் பதிப்புலகம் முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. பிந்தைய காலகட்டத்தை இணைய காலம் என்று சொல்வதே சரியாக இருக்கும். இணைய காலம் எழுத்துலகின் பொற்காலம் என்பதில் ஐயமில்லை. இக்கால இலக்கியத்தில் எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாகி விட்டனர் என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். எல்லாத் தரப்பினரும் புழங்கும் வெளியாக விரிந்திருக்கிறது. எல்லா வயதுப் பெண்களும் மனத்தடையின்றி இலக்கியம் பேசுகிறார்கள்; படைக்கிறார்கள். ஆற்றலுக்கு அனுமதிச்சீட்டு தேவையில்லை. ஆடுகளத்தில் அனைத்து வாயில்களும் திறந்தே இருக்கின்றன. வாரந்தோறும் ஏதோ ஓர் அமைப்பு எங்கோ ஓர் எழுத்தாளரைக் கொண்டாடி மகிழ்கிறது.

ஆனால் கொண்டாடப்படுபவரை சமகால எழுத்தாளரே திண்டாட வைக்கிறார்கள் என்பது வேதனைக்குரியது. விருதுகளுக்குக் குறைவே இல்லை. 'எழுத்தாளர்கள் கொண்டாடப்பட வேண்டும்' என்று காலம் காலமாக முழங்கிவந்த சமகால எழுத்தாளர்கள் விருது வாங்கியவன் விழா முடிந்து வீட்டுக்குப் போவதற்குள் அவனைக் கூறுகூறாகக் கிழித்து விடுகிறார்கள். இரணகளப்படுகிறது எழுத்துலகம். இந்த வெறியாட்டத்திற்கு முகநூல் முன்வந்து உதவுகிறது. இந்த வாய்ச் சண்டையை நொறுக்கித் தின்று சுவைத்து மகிழ்ந்த வாசகர்களுக்கு அதுவே போதைப் பொருளாகவும் மாறிப்போவதும் கண்கூடு. இந்த இணையகாலத்தில் எழுத்தாளர்கள் உலகெங்கும் சுற்றிவர வாய்ப்புகள் பெருகிவிட்டன. இதே போன்ற வளர்ச்சியைப் பதிப்புலகிலும் பார்க்க முடியும்.

பபாசி என்ற பதிப்பாளர்கள் சங்கம் துவக்கப்பட்டபோது தமிழ்ப்பதிப்பாளர்கள் நிலை பரிதாபகரமாக இருந்திருக்கிறது. ஆங்கிலப் பதிப்பாளர்கள் கைகள் ஓங்கியிருந்த காலம் அது. ஆரம்பகால புத்தகக் காட்சிகளில் ஒருசில தமிழ்ப் பதிப்பாளர்களே பங்கெடுத்து வந்திருக்கிறார்கள். காயிதேமில்லத் கலைக் கல்லூரி மைதானத்தில் புத்தகக்காட்சி நடந்தகாலத்தில் புழுதிபறக்கும்; புழுதி புத்தகங்களில் படியும். அரங்கிற்கு மேற்கூரை கிடையாது. தற்போது பிரம்மாண்டமான அரங்கம் உருவாகி விட்டது. 800க்கும் மேற்பட்ட விற்பனையகங்கள் அமைக்கப்படுகின்றன. இதில் நான்கில் ஒருபகுதி அளவுக்குக்கூட 2000க்கு முந்தைய புத்தகக்காட்சியில் இருந்ததில்லை. புத்தகத் தயாரிப்பிலும் கவனம் கூடியிருக்கிறது. 'எந்த மொழிக்கும் இளைப்பில்லை தமிழ்' என்று சொல்லுமளவுக்கு நவீன அச்சாக்கத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் தமிழ்ப் பதிப்பாளர்கள்.

எல்லாம் இருந்தும் ஒரு குறை நிலவுகிறது. அது பெருங்குறை. அதுதான் மொழியின் மீதான கவனம். ஒரு மொழியின் அடிப்படை இலக்கணம் கூடத் தெரியாதவன் தன்னை 'கிரியேட்டிவ் ரைட்டர்' என்று சொல்லிக் கொள்ளக் கூச்சப்படுவதேயில்லை. ஆங்கில அகராதிகளை அடுக்கடுக்காகத் தமது முன்னறையில் காட்சிப்படுத்தி வைத்திருக்கும் ஒரு தமிழ் எழுத்தாளனிடம் ஒரு தமிழ்-தமிழ் அகராதி இருக்குமா? 'பிழைதிருத்துநர்' என்ற வார்க்கமே பத்திரிகைகளிலும் சரி, பதிப்பகங்களிலும் சரி, இல்லாமல் ஒழிந்து போனது ஒரு சோகம்.

அடிப்படைத் தமிழ் இலக்கணப் பயிற்சி ஓர் எழுத்தாளனுக்கு இன்றைய காலத்தின் அவசரத்தேவை. அதேபோல மரபு இலக்கியப் பயிற்சி நவீன உரைநடையில் சொல்வளம் பெருக வழிவகுக்கும். பிழைத் திருத்துவதையும் எழுதிய பிரதியைச் செம்மைப்படுத்துவதையும் முதன்மையாகக் கொண்ட பயிற்சி வகுப்புகளைத் தமிழக அரசு கல்வி நிறுவனங்களின் துணை கொண்டு முக்கியநகரங்கள் அனைத்திலும் நடத்த வேண்டும். இலக்கிய அமைப்புகளும்

அத்தகைய பயிற்சித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். இந்த முயற்சிகளால் இணையகால இலக்கியங்களில் மொழிக் கொலைகள் நேராமல் பாதுகாத்துக் கொள்ள முடியும். இங்கே இலக்கணத்தின் அவசியம் குறித்து ஒரு முறை ஜெயகாந்தன் கூறியதை அப்படியே பதிவுசெய்ய விரும்புகிறேன்.

"இலக்கணத்தை மீறுங்கள்! இலக்கணத்தை உடையுங்கள்! ஆனால் அதற்கு நீங்கள் உபயோகிக்கும் ஆயுதம் உங்களுடைய அறியாமையாக இருக்க வேண்டாம்.

இலக்கணத்தை உடைப்பதுதான் உங்கள் நோக்கம் எனில், அதை உடைப்பதற்கு முன்னால் அதை முற்றாகப் பயிலுதல் மிகமிக அவசியம்"

– ஜெயகாந்தன்

முதுகலை தமிழ் இலக்கியம் படிக்கும் மாணவர்களுக்கு அவர்கள் அச்சு ஊடகங்களிலும் மின் ஊடகங்களிலும் பணியாற்றக் கூடிய அளவுக்குப் பாடத்திட்டங்கள் அமையவேண்டும். இணையதள இலக்கியமும் உலக இலக்கியமும் அவர்களுக்கு அறிமுகமாக வேண்டும். கல்விப்புலமும் படைப்புலகமும் கல்லூரி வளாகங்களில் கைகோர்க்க வேண்டும். அப்படி நிகழ்ந்தால் அது தமிழ்ப் பதிப்புலகத்திற்கு மிகப்பெரிய கொடையாக அமையும்.

பெருந்திரள் வாசகர்களுக்காகப் பதிப்பிக்கப்படும் நூல்களுக்குப் பிரச்சனை இல்லை. மர்ம நாவல்கள், துப்பறியும் நாவல்கள், பாக்கெட் நாவல்கள், குடும்ப நாவல்கள் போன்ற ஜனரஞ்சக படைப்புகள் பெருந்திரள் பதிப்புகளில் அடங்கும். 'நவீன இலக்கியம்' என்ற வகைமையில் அடங்கும் நூல்களின் வரவேற்பு ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் முடங்கிவிடுகிறது. ஆனால் ஒரு நவீனப் படைப்பாளியின் நூல் சாகித்ய அகாடமியின் விருது பெற்றால் அந்த நூல் பத்தாயிரம் வாசகர்களின் வரவேற்பறைக்குச் சென்று விடுகிறது. ஆண்டு ஒன்றுக்கு குறைந்தபட்சம் 5000 கவிதைத் தொகுப்புகள் தமிழில் வெளியிடப்படுகின்றன. புத்தக விற்பனையாளர்கள் கவிதைத் தொகுப்புகளை வரவேற்பதில்லை. ஒரு கவிஞர் சக கவிஞரின் கவிதைத்தொகுப்பைச் சீண்டுவதும் அரிதான செயல். ஆனால் கல்யாண்ஜி, கலாப்ரியா போன்ற கவிஞர்களுக்கு மூன்றாம் தலைமுறை வாசகர்கள் தீவிர ரசிகர்களாக இருக்கிறார்கள். விரல் விட்டு எண்ணக்கூடிய இளம் தலைமுறைக் கவிஞர்களே நிலைபேறு அடைந்திருக்கிறார்கள். தமிழில் வாசகர்களின் எண்ணிக்கையை முறியடிக்க முனைகிறார்கள் கவிஞர்கள்.

வாசகர்களே இல்லை என்ற அழுகுரல் பொய். பதிப்புலகம் வளர்முகம் கண்டுள்ளது. ஆனால் அதன் உறுதித்தன்மைக்குத் தமிழக அரசின் ஆதரவு தேவை என்பது அடிப்படை உண்மை. தமிழ்ப் பதிப்புலகம் என்பது ஒரு குறுந்தொழில் என்ற அளவிலேதான் இயங்கி வருகிறது. நாட்டம் உள்ளவர்கள் மட்டுமே இத்தொழிலை நாடி வருகிறார்கள். இதற்கு ஒருபடி மேலாக பிரபல எழுத்தாளர்கள் தங்கள் நூல்களை வெளியிட்டுக் கொள்ளப் பதிப்பாளர்களாகவும் மாறி வருகிறார்கள்.

தமிழ்ப் பதிப்புலகின் உந்து சக்தியும் எரிபொருளும் தமிழக அரசின் பொதுநூலக இயக்ககம்தான். 2010ஆம் ஆண்டுவரை இந்த இயக்கத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களுக்கான ஆணை ஒரே நாளில் எல்லாப் பதிப்பாளர்களுக்கும் வழங்கப்பட்டு வந்தது வரலாறு. 2010க்குப் பிந்தைய பத்து ஆண்டுகளைக் கடந்து வந்தது பாலைவனப் பயணமாக இருந்தது. பொது நூலக இயக்கத்தின் இயல்பும் இயக்கமும் திரிந்து போயின. பெருந்தொற்றின் பாதிப்போ சொல்லத் தேவையில்லை.

பத்தாண்டுகளுக்குப் பிறகு இனியாவது 'விடியல் ஏற்படாதா' என்று பதிப்புலகமும், 'கனவு இல்ல' கனவுகளில் எழுத்துலகமும் காத்திருக்கின்றன. மாவட்டம்தோறும் புத்தகக்காட்சிகள் மிகத்தரமாக ஏற்பாடு செய்யப்படுகின்றன. அரசு அதிகாரிகள் அரசின் ஆணையை அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்படுத்துகின்றனர். சர்வதேச கண்காட்சி 2023 ஜனவரியில் அரசு ஏற்பாட்டில் நடைபெற இருக்கிறது. புத்துயிர் பெறும் தமிழ்ப் பதிப்புலகத்தைக் காக்கும் கரங்களாக இருக்க அரசு முன்வர வேண்டும்.

மாமல்லபுரம் : பகீரதன் தவச் சிற்பத் தொகுதி

பாலுசாமி



மாமல்லபுரத்தில் ஐந்து ரதத்திற்குச் செல்லும் சாலையில் கிழக்கு நோக்கியதாகப் படைக்கப் பெற்றுள்ள திறந்தவெளிப் படைப்புச் சிற்பத் தொகுதி, எதனைக் குறித்தது என்பது குறித்து அறிஞர்களிடம் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

உலகப்புகழ் பெற்ற அர்ச்சுனன் தபசு பெரிய சிற்பத் தொகுதி போலவே இரண்டு பாறைகளைப் பயன்படுத்தி இச்சிற்பத் தொகுதியும் படைக்கப்பெற்றுள்ளது. இடதுபக்கப் பாறையின் மேற் பகுதி உடைபட்டு முன் துருத்தி நிற்கிறது. வலதுபுறப் பாறை அகலம் குறைந்து சற்று இடதுபுறம் சாய்புடையதாகக் காணப்படுகிறது.

இடதுபுறப் பாறையின் உடைவுண்ட மேற்பகுதியில் நான்கு கரங்களுடன் ஜடா மகுடத்துடன் சிவபெருமான் நிற்கிறார். வலச் செவியில் பத்ர குண்டலமும் இடச் செவியில் குண்டலமும் மார்பில் பூணூலும் அணிந்துள்ள அவர்தம் வலது பின் கரத்தில் அக்க மாலையும் இடதுபின்கரத்தில் பரசும் இருக்க, இடது முன்கரம் கடிகர்பதமாகவும் வலது முன்கரம் வரமுத்திரையாகவும் அமைந்துள்ளன. தொடையருகில் பாம்பு காணப்படுகிறது.

அவர் முன்னர் துறவியொருவர் கடுமையான தவக்கோலத்தில் இரண்டு கைகளின் விரல்களைத் தலைமேல் பிணைத்து, இடது காலினை ஊன்றி வலது காலினை மடித்து இடது கால் மீது வைத்து நிற்கிறார்.



சிவனது இடது காலருகில் பருத்த வயிற்றுடன், தலையில் ஏதோ ஒன்றைச் சுமந்தவண்ணம் குள்ள பூதமொன்று நிற்கிறது.

சிவபெருமானுக்கு மேல் கந்தர்வ உருவமொன்றுள்ளது. துண்டு பட்டு நிற்கும் பாறையின் கீழ் இரண்டு சிங்கங்களும் இரண்டு பன்றிகளும் காணப்படுகின்றன. இடத்தில் எழும் நிலையில் ஒரு சிங்கமும் படுத்துள்ள நிலையில் மற்றொரு சிங்கமும் உள்ளன. இரண்டிற்குமிடையே பன்றியொன்று திரும்பிப் பார்க்கிறது. முதலில் உள்ள சிங்கத்தின் கீழ் மற்றொரு பன்றியுள்ளது.

பிளவுபட்ட பாறையை அடுத்து ஒளிவட்டத்துடன் சூரியன் உள்ளான். கீழே கந்தர்வ இணை உள்ளது. அவர்களுக்குக் கீழே எட்டு அன்னப் பறவைகள் காணப் படுகின்றன. அவற்றையடுத்து கந்தர்வர்களும் கின்னரர்களும் தத்தம் பெண்டிருடன் உள்ளனர். அவர்களையடுத்து தனியாக வித்யாதரர் ஒருவர் உள்ளார். அவரையடுத்து சித்தரும் சாரணரும் வருகின்றனர். அடுத்தவரிசையில் குள்ள உருவமொன்றுள்ளது.

கீழுள்ள வரிசையில் வேடர்களும் வேட்டுவிச்சியும் கையில் கழி, வில் முதலியவற்றுடன் வருகின்றனர். அடுத்த வரிசையில் யானைகள் விரைகின்றன. அவற்றின் முன் ஆடு, மான்கள் ஓடுகின்றன.

வலதுபுறப் பாறையில் மேலே தனியுருவத்தை அடுத்து தேவகண வரிசையும் அதனை அடுத்து அன்னப் பறவைகளின் வரிசையும் காணப்படுகின்றன. பின்னர் விலங்குகள், பறவைகள் காணப்படுகின்றன. அனைவருக்கும் மேலாகச் சூரியன் காட்டப்பட்டுள்ளான். அடுத்து கந்தர்வ இணைகள் உள்ளனர். அவர்களுக்கு முன் வித்யாதரர் உள்ளார்.

இந்தச் சிற்பத் தொகுதி வண்ணம் தீட்டப் பட்டிருந்திருக்கலாம் என்ற எண்ணத்தை ஆங்காங்கு ஒட்டிக் கொண்டுள்ள வண்ணத் துணுக்குகள் ஏற்படுத்துகின்றன. கின்னர இணைகளுக்குக் கீழாக மூன்று மயில்களும் வேடர்களும் கந்தர்வர்கள் உள்ளனர். வலதுகோடியில் மான் இணையும் மயில் இணையும் இரண்டு வாத்துகளும் சிங்கங்களும் மானும் நாரையும் உள்ளன.

இடது புறப் பாறையிலுள்ள உருவங்கள் வலது புறம் நோக்கியும் வலது புறப்பாறையில் உள்ள உருவங்கள் இடதுபுறம் நோக்கியும் விரைந்து வருவது கொண்டு நடுவிலுள்ள பாறைப் பிளவு தொகுதியின் மையக் கருவாகக் கருதப்படுகிறது.

இந்தச் சிற்பத் தொகுதி எதனைக் குறிக்கிறது என்பது குறித்து அறிஞர்கள் கருத்துரைத்துள்ளனர்.

'அர்ச்சுனன் தபசு' என்னும் பெருஞ் சிற்பத் தொகுதியை உருவாக்கும் முன், சோதனை முயற்சியாக, முன்னோட்டமாக இது செய்யப்பட்டிருக்கலாம் என்று அறிஞர் பி.கி.லாங்கர்ஸ்ட் கருதுகிறார்.

'இச்சிற்பத் தொகுதியும் அர்ச்சுனன் தவத்தையே குறிக்கிறது' என டாக்டர் இரா.நாகசாமி கருத்துத் தெரிவித்துள்ளார்.

'இதனைப் பகீரதன் தவம் எனக் கொள்ளலே சிறப்புடைத்து' என்று நடன காசிநாதன் தெரி வித்துள்ளார்.

இது பகீரதன் தவம் என்று கூறும் மைக்கேல் லாக்வுட் 'பிளவுபட்ட பாறையில் பகீரதன் தவமிருக்க சிவன் வரம் தருவது முதல் நிகழ்ச்சியாகும், வானிலிருந்து வரும் கங்கையை தேவகணத்தினரும் மனிதர்களும் பல்வகை உயிரினங்களும் காணும் வேட்கையில் விரைந்து செல்வது இரண்டாவது நிகழ்வாகும். தவத்தையும் கங்கை இறக்கத்தையும் சிற்பிகள் அருமையாக இணைத்துப் படைத்துள்ளனர்' என்கிறார்.

அர்ச்சுனன் தபசு பெருஞ்சிற்பத் தொகுதி முழுதும் மகாபாரதம் வனபர்வதத்திலுள்ள இமயமலையின் வருணனையை அடிப்படையாகக் கொண்டதாகும். அத்துடன் அர்ச்சுனன் பாசுபதத்திற்காக சிவனை நோக்கி தவமியற்றி வருமருளப் பெற்ற நிகழ்வும் கொண்டதாகும். ஆனால் இச்சிற்பத் தொகுதி பெருஞ்சிற்பத் தொகுதியிலிருந்து பல்வேறு பண்புகளில் மாறுபட்டுள்ளது.

வலப்புறம் நோக்கித் திரும்பியுள்ள சிவன் கரத்தில் பாசுபதமில்லை, சிவனைச் சூழ்ந்து பூதகணங்களும் இல்லை. திருமாலின் பதரியாசிரமம் எனும் திருப்பதியும் முனிவர்களும் இல்லை. கங்கைக்கரை நான்கு மனிதர்கள் இல்லை. நீராடாமல் யானைகள் மிக விரைவாக ஒடுகின்றன. கோழிகள் இல்லை. இரண்டு அன்னங்களுக்குப் பதிலாகப் பல அன்னங்கள் உள்ளன. குரங்கு இணைகள் இல்லை. கிம்புருடர்கள், உடும்பு, முயல், மரங்கள் முதலியனவும் காணப்படவில்லை. பூனை மற்றும் எலிகளும் இல்லை.

பெருஞ்சிற்பத் தொகுதியில் சாரணர் மட்டும் கற்பக மலர் கொணர, இத்தொகுதியில் ஏறக்குறைய தேவகணத்தினர் அனைவரும் கற்பக மலர் கொணர்கின்றனர்.

கபில மகரிஷியின் சினத்திற்கு ஆட்பட்டு எரித்து சாம்பலாய் பாதாளத்தில் கிடக்கும் தன் மூதாதையரை மோட்சத்தில் சேர்த்திட கங்கையை வேண்டி பகீரதன் தவமியற்றிய கதை மகாபாரதத்தில் இடம் பெற்றுள்ளது. வானிலிருந்து விழும் கங்கையைத் தன் சடை முடியில் தாங்கிக் கீழே சின் விடுத்தார். கங்கையிறங்கும் காட்சி,

பிறகு பகீரதன் கங்கையை வேண்டிக் கொண்டான். கங்காதேவி சம்பு அங்கு நிற்பதைக் கண்டு ஆகாயத்திலிருந்து அவரது சிரசில் வேகமாக விழுந்தாள். ஸ்வர்க்க லோகத் திலிருந்து கங்கை கீழே விழுவதைப் பார்க்க, தேவ கந்தர்வ யக்ஷகின்னர கிம்புருஷர்களும் அப்ஸரஸ்களும் மகரிஷிகளும் வந்திருந்தார்கள். கங்கை பெருஞ்சுழல்களோடும் மீன், ஆமை முதலிய ஜலஜந்துக்களோடும் ஆகாயத்திலிருந்து விழுந்தது. ஆகாயத்திலிருந்து மேகலை – ஒட்டியானம் – போன்ற கங்கை, சிவன் முடியில் விழுந்து இருபக்கங்களிலும் பிரவகித்த போது, அரருக்கு முத்துமாலையிட்டது போல் இருந்தது. கங்கை விழுந்த போது உண்டான நுரைகளின் வரிசை அன்னப் பறவைகள் வரிசையாகக் செல்வது போல் இருந்தது என்று வருணிக்கப்பட்டுள்ளது.

இவ்வருணனைக்கேற்பவே சிற்பத் தொகுதியில் பல்வேறு தேவகணத்தினரும் இமயம் குறித்த வருணனையில் இடம்பெறும் வேடர்கள், விலங்குகள் படைக்கப் பெற்றுள்ளன.

ஆகவே, இச்சிற்பத் தொகுதி பகீரதன் தவமே என தெளியலாம்.

குறிப்புகள்

1. **A.H. Longhurst, Pallava Architecture, Part II, Pp. 44, 45**
2. **இரா.நாகசாமி, மாமல்லை, பக். 103, 104**
3. **நடன. காசிநாதன், மாமல்லபுரம், ப.87**
4. **Lockwood, Mamallapuram, pp. 131, 132.**
5. **காண்க: சா. பாலுசாமி, அர்ச்சுனன் தபசு.**
6. **புரிசை நடாதூர் கிருஷ்ணமாசாரியார் மற்றும் திருக்கள்ளம் நரஸிம்ஹ ராகவாசாரியார் (மொ. பெ. சூ.) ஸ்ரீ மஹாபாரதம், வனபர்வம், பக். 318, 319.**



ஓவியம்: அஞ்சலி

சிறுகதை

கரும்புலி

ஷைலஜா

தங்கை பீனாவின் திருமண நிச்சயதார்த்தம் முடிந்த மறுநாள்தான் அம்மாவிடமிருந்து அக்கடிதம் வந்தது.

'ராமகிருஷ்ணா, நாளைக்கு பீனாவின் நிச்சயதார்த்தம். விஷேசமானதொரு காரணத்தினால் உன்னிடம் அதை முன்பே தெரிவிக்க முடியவில்லை. இங்கே நம் வீட்டுக்குப் பக்கத்தில் புலி நடமாட்டம் இருக்கிறது. இது தெரியாமல் நீண்ட தூரம் பயணம் செய்து நள்ளிரவில் நீ பஸ்ஸிறங்கி வந்தால் என்ன பண்ணுவாய் என்றுதான் விட்டுவிட்டேன்.'

அம்மாவின் கடிதம் விசித்திரமாக இருந்தது. அம்மா எதையோ மறைக்கிறாள். யாருடைய பேச்சையோ கேட்டு வழி தவறுகிறாள். மூடி வைத்தும் மறைக்க முடியாத பொய்யின் களங்கமின்மையோடு அக்கடிதம் இருந்தது.

நிஜத்தில் உள்ளுக்குள் திருகி திருகி வலிக்கிறது. காரசாரமாக அம்மாவிற்குக் கடிதம் எழுதினால் என்ன என்று கூடத் தோன்றுகிறது. வேண்டாம். அம்மாவைக் காயப்படுத்த எழுத்துகளைப் பயன்படுத்தக் கூடாது. அவள்தானே என் முதலெழுத்து.

பீனாவின் வரன் யார்? எங்கேயிருந்து வந்திருப்பார்? திருமணத்திற்கான அவர்களின் நிபந்தனைகள் என்னவாக இருந்திருக்கும்? ஜாதகப் பொருத்தம் பார்த்திருப்பார்களா?

நினைக்க நினைக்க அவனுக்குக் கோபமும் துக்கமுமாய் வந்தது. 'அம்மா, உன் ராமகிருஷ்ணன் நீ நினைக்கும் அளவுக்கு முட்டாளில்லை'

தூக்கத்தில் அவனுடைய ஆத்மாவாக இருக்கும் அம்மா பேசினாள்.

'நீ ஒரு முட்டாள்தான். அன்பின் வெளிச்சக் கீற்ற தரும் எல்லா சிம்மினி விளக்கிலும் போய் மோதி விழுபவன் தானே நீ. உன்னுடன் இன்னொருவரும் வந்து சேர்ந்தால் ஆட்டுக் குட்டியைப் போலத் துள்ளிக் குதித்து ரசிப்பவனல்லவா நீ? அப்படிவருவது குள்ளநரியாக இருக்கும் பட்சத்தில் உன் உடலின் ஏதாவதொரு பாகத்தை இழந்து விடப் போகிறாய்.

அப்போதுதான் கடவுளே இது சூழ்ச்சிதானே என்று யோசிக்கிறாய். உன்னை ஏமாற்றுவது மிகவும் சுலபம் மகனே. அன்பின் விரிந்த சிறகு உன்மீது பட்டாலே போதும். எந்தக்காயங்களிலிருந்தும் புன்னகையோடு வெளியேறி விடுவாய். எத்தனை வயசாகிறது உனக்கு? இன்னும் வாழ்வின் முதல் அத்தியாயத்தையாவது நீ படிக்க முயற்சித்திருக்கிறாயா? வெளுத்ததெல்லாம் பால் என்றும் பளீரெனச் சிரிப்பது எரியும் நெருப்பென்றும் நம்பும்

உன்னை, பலரும் தங்களுக்காகப் பயன்படுத்திய பிறகுதான் அச்சூழ்ச்சியை உன்னால் உணரமுடிகிறது.'

தூரக்கத்தில் அம்மாவிடம் அவன் என்னென்னமோ பேச நினைத்தான்.

'அம்மா என்னுடைய பிரச்சனையே இந்தத் தனிமைதான். அதைத் துடைத்தெறிவது போல் என்னுடன் இன்னொருவன் சேரும்போது எனக்கொரு இளந்தென்றலின் இதம் கூடி வருகிறது. சில நேரங்களில் அன்பின் உன்மத்தம் கிடைக்காத தண்டனையில் முடிங்கிப் போகிறேன். நீங்கள், எப்போதும் நான் விரும்பி யாசித்த அன்பைக் கொடுக்காமல் புறந்தள்ளி விட்டீர்களே அம்மா? என் குழந்தைப் பருவத்தின் ஏதாவதொரு பக்கத்திலாவது நீங்கள் சிறுவண்ணம் தீட்டியிருக்கிறீர்களா?'

ஆனால் அவள் அவனை எதையும் சொல்ல அனுமதிக்கவில்லை. அம்மா இப்படியாகப் பேச்சை முடிக்கிறாள் என்று அவனுக்குத் தோன்றியது.

'உனக்கு யாருக்கும் பிடிக்காத ஈசலின் புத்திதான் இருக்கிறது'

அம்மாவின் கடிதம் வந்ததற்கு மறுநாள் ராமகிருஷ்ணன் வேலைக்குப் போகவில்லை. அலுவலகத்திலிருந்து வந்த ஃபோர்மேனிடம், ''உடம்புக்கு சுகமில்லை, தலை ரொம்ப வலிக்குது. காய்ச்சல் வரும் போல இருக்கு. இன்னக்கி ஒரு நாள் லீவ் சொல்லிடுங்க'' என்றான்.

ஃபோர்மேன் ஒரு நிமிடம் நின்று நம்பிக்கையே இல்லாமல் அவனைப் பார்த்தபடியே, படியிறங்கிப் போனார்.

ராமகிருஷ்ணன் அம்மாவிற்குக் கடிதமெழுத பலமுறை பேனாவை எடுத்தான். மனசு அதற்கு இடம் கொடுக்கவில்லை. வேண்டாம். எதுவும் எழுதவேண்டாம்.

அன்று பகல் முழுக்க மனசு சாம்பல் பூசினி கங்காய் தகித்தது. இரவில் அவன் மனதளவில் மேலும் நொறுங்கிப் போயிருந்தான். உலகின் மிகப்பெரிய குப்பை மேட்டிற்குள் தான் தள்ளப்படுவதாய் உணர்ந்தான்.

ஃபோர்மேனின் கண்களை நேரிடையாக எதிர்கொள்ள முடியாமல் வேலைக்குப் போனாலும் அவர் வெளியே போன நேரம் பார்த்து விடுமுறைக்கு விண்ணப்பித்து விட்டு திருடனைப் போல அங்கிருந்து வெளியேறினான்.

வேலையில் மனம் ஒப்பவில்லை. தன்செய்கைகள் ஏதோ கொடிய வஞ்சனைக்கெதிரான, பிரகாசமும் பலவீனமுமான எதிரிப்பாகவே அவனுக்குத் தோன்றியது.

வேலையிடத்திலிருந்து அறைக்கு வந்தும் எண்ண ஓட்டங்களை மூடிவைக்க முடியாத மன உளைச்சலுக்கு உட்பட்டான்.

காலச் சக்கரத்தை, திருமண நிச்சயதார்த்தத்தின் ஞாயிற்றுக்கிழமைக்குத் திருப்பி, தங்கையின் நிச்சயத்தில் தானும் பங்கெடுப்பது போல ராமகிருஷ்ணன் நினைத்துக் கொண்டான். அதில் அவன் வெற்றியும் பெற்றான்.

அவசர அவசரமாக பஸ்ஸிறங்கி வீட்டிற்கு நடந்தான். சந்தோஷத்தில் அவன் இதயம் மேலும் அதிகமாகத் துடித்துக் கொண்டிருந்தது. அப்பாடா பீனாவின் நிச்சயத்திற்கு சரியான நேரத்தில் வந்து சேர முடிந்ததே.

சட்டென்ற அந்த நிஜம் அவன் முன்னால் வந்து நின்றது. வீட்டு வேலிக்குப் பக்கத்தில் ஒரு புலி நிற்கிறது. அது கறுப்பு நிறமாக இருந்தது. வெள்ளை வெளேரென்ற அதன் பற்கள். சிரிக்கும் முக பாவம்.

ராமகிருஷ்ணனுக்கு முதலில் சிரிப்புதான் வந்தது. பிரியத்தின், ரத்த பந்தத்தின் நடுவில் ஒரு புலி வந்து நின்று பொருத்தமாய் ஜாலம் காட்டுகிறது.

இரண்டடி முன்னால் வந்தவுடன் அது முன்னெச்சரிக்கையோடு எழுந்து நின்றது. இனி ஒரு அடி முன்னால் வைத்தாலும் விழுங்கிவிடுவேன் என்பதாய் அதன் பாவம் இருந்தது. தன்னுடைய ஒவ்வொரு அசைவையும் புலி அனுமானித்து அசைவது போலத் தோன்றியது. என்ன செய்வதென்று புரியாமல் ராமகிருஷ்ணன் ஒரு கதையின் நம்ப முடியாத கதாபாத்திரம் போல உறைந்துபோய் நின்றான்.

சொந்த பந்தங்களும் நண்பர்களும் நிச்சயதார்த்தத்துக்குப் போகிறார்கள். யாரையும் புலி ஒன்றும் செய்யவில்லை. இவனை மட்டும் அசையக்கூட விடவில்லை. அதன் இலக்கு, தான் மட்டுமே என்பதைப் புலி அவனுக்கு உணரச் செய்தது.

நிச்சயதார்த்தச் சடங்குகள் தொடங்குகிறது. புலியும் அவனும் மட்டும் பிடித்து வைத்த பொம்மைகளைப் போல வழியின் இரண்டு பக்கங்களிலும் நிற்கிறார்கள்.

சட்டென அவனுடைய முதுகில் யாரோ தொட்டார்கள்.

''என்ன ராமகிருஷ்ணா, இங்கயே நின்னிட்ட? வேலை பாக்கற ஊரிலயிருந்து இப்பத்தான் வரியா?''

அவனுக்குச் சொல்ல முடியாத ஆசுவாசம் ஏற்பட்டது. அவன் பலகீனமான தன் மனக்கூட்டை அவருக்குத் திறந்து காட்டத் தீர்மானித்தான்.

''அமாம்... அது... தோ... புலி...'' கேட்டவர் சிரித்தார்.

''அதான் பிரச்சனையா? டேய் அதும் வெறும் புலிதான்டா? ''

அவர் அவனை மேலும் ஆசுவாசப்படுத்தினார். அவர் சொல்வதை அவனால் நம்ப முடியவில்லை.

''வெறும் புலியா? அது என்ன வெறும் புலி?''

''நீ அந்தப் புலியோட கண்ணைப் பாத்தியா? புலிக்கான எந்த ஆக்ரோஷமும் அதிலில்லை. அது முட்டாள்தனமான வீரியத்தை மட்டுமே வைத்திருக்கிறது. அது வெறும் கரும்புலிதான்'' கவனமாய் பார்த்தபோது அது சரிதானென அவனுக்கும் தோன்றியது.

அதன் ரோமங்களில் வெற்றுச் சிலிர்ப்பு மட்டுமே. அதன் பற்களில் சுயநலத்தின் பலவீனம் மட்டுமே. அதன் நகங்களில் ஒரு தோற்ற வீரனின் போலித்தனம் மட்டுமே.

புலியைப் புறந்தள்ளிவிட்டு ராமகிருஷ்ணன் வீட்டிற்குள் பிரவேசித்தான். அப்புலியோ வெற்றுப் பகட்டுடன் தன் கறுத்த ரோமங்களை ஒரு கீரிடம் போல முதுகின் மேல் ஏற்றி வைத்துக் கொண்டது.

ராமகிருஷ்ணன் அன்றிரவு தன் அறையில் படுத்து சாந்தமாகவும், நிம்மதியாகவும் வெகுநேரம் உறங்கினான்.



சிறுகதை

வெள்ளை வெய்யில்

ம.காமுத்துரை

“மா...”

தெருவில் ஒரு கண்ணும், வீட்டுக்குள் இன்னொரு கண்ணுமாய் வாசலில் நின்றபடி நழுவிய டவுசரை ஏத்திக் கொண்டு, கொஞ்சுகிற பாவனையில் குரல் கொடுத்தான் அசோகன்.

காலைப் பனியினைத் துளைத்துக் கொண்டு கிழக்கில் வெள்ளை வெய்யில் பொழியத் துவங்கியிருந்தது. வாசல் தெளித்த ஈரமெல்லாம் உலர்ந்து அம்மா போட்ட ஒம்பது புள்ளி பிறைநிலாக் கோலம் கரும்பலகை ஓவியமாய் மனசைக் கவர்ந்தது. கோலப்பொடியில் சீனிக்கல்லின் துகள்கள் வெய்யிலில் மின்னின.

‘‘என்னாடா? பல்லத் தீத்தி முடிச்சிட்டியா?’’

கேட்ட தேவி, இரும்பு அடுப்பில் சோறாக்கிக் கொண்டிருந்தாள். விறகு என்றால் தீ, தீபமாய் சீராய் எரியும். ‘செரட்டைச் சனியன் புஸ்வாணமாய் சீற்றத்துடன் எரிந்து பொசுக்கென அமந்து போகிறது. ஒசியாய்க் குடுத்த சிலிண்டரும் அடுப்பும் மூலையைக் காத்துக் கிடந்தன. புது சிலிண்டர் ஆயிரத்துக்கு மேல் விலை ஏறிப் போனது. தினக்கந்து முடியணும். புதுக்கந்து வாங்கித்தான் சிலிண்டர் பதியணும். அதுவரை பரக்கத் மாமி தரும் தேங்காய்ச் சிரட்டைகளும், காய்ந்த முள்ச்செடிகளும் மானத்தைக் காக்கின்றன.

வாய் கொப்பளிப்பதற்காக கையில் பிளாஸ்டிக் குவளையை வைத்திருந்தான் அசோகன். ஒருவாய்த் தண்ணீரைக் கொப்பளித்துத் துப்பியபோதுதான் எதிர்ச் சந்தின் முனையில் வளர்ந்திருந்த வாதாம் மரத்தடியில் குத்துக்காலிட்டு ஒரு கிழவியைப்போல உட்கார்ந்து இருந்தது அந்த பூனைக்குட்டி. காதுகள் இரண்டும் நிமிர்ந்து நிற்க, கண்கள் ஆந்தை மாதரி இமை திறந்திருக்க, வாலை அப்படியும் இப்படியுமாய் புரட்டிப் போட்டபடி. அசோகனை கண்ணுக்குக் கண் பார்த்தது. அம்மாவின் கைப்பிடியளவுதான் இருக்கும். சாம்பல் நிறம் கொண்டிருந்தது. முகத்தில் ஏக்கமும் உடம்பில் பசியின் வாட்டமும் தெரிந்தன.

‘‘குட்டிப் பூன, இன்னம் இங்கியே நின்னுக்கிருக்கும்மா!’’

பூனைகள் ஆளரவம் கண்டதும் வெருக்கென்ற உலுக்கலுடன் நழுவி ஓடும். இது அச்சுப் பிசகாமல் பார்த்துக் கொண்டே இருக்கிறது!

''ஒன்னு இல்லடா, நாலு குட்டி போட்ருக்கு. வேணும்னா வேலைக்குப் போம்போது தொணைக்கி கூட்டிக்கிப் போ'' தேவி அலட்சியமாய்ச் சொல்லிவிட்டு சோற்றை வடிக்க பாத்திரத்தைத் தேடினாள்.

''வடி குண்டான எங்கடி அங்காயி''

கொல்லையில் உட்கார்ந்து அவசரமாய் பாவாடையை தாவணியை சோப்புப்போட்டு அலசிக் கொண்டிருந்த அங்காளஈஸ்வரி எனும் பெயரிட்ட மூத்தமகளை கூப்பாடு போட்டு அழைத்தாள்.

''இந்தா அலசிட்டேம்மா, ஓர் நும்சம்'' குண்டானில் தண்ணீர் நிரப்பி மளமளவென அலசியவள், பிழிந்து படார் படாரென உதறினாள். நன்றாக வெய்யில் படுமிடத்தில் காயப்போட்டால் சாப்பிட்டு வருவதற்குள் தாவணி காய்ந்து விடும். பாவாடை பழசே போதும் தாவணி மட்டும் பளிச்சென இருந்தால் நல்லது. அடுப்பில் அம்மாவுக்கு குண்டானைத் தந்துவிட்டு பாவாடையை கொல்லைப் பக்கமிருந்த கொடியில் காயப் போட்டவள். தாவணியை எடுத்துக் கொண்டு வாசலுக்கு வந்தாள். வாதாம் மரத்தில் வெய்யில் காய்ந்து கொண்டிருந்தது. குடை போலிருந்த கிளைகள் மேல் தாவணியை விசிறிவிட எத்தனித்தவள் காலடியில் ஓடிய பூனைக்குட்டியைப் பார்த்து பயந்து போனாள்.

''அய்யோம்மா''

அவளது அந்த திடுக்கிடல் கண்டு ஒண்ணாம் வகுப்புப் படிக்கும் சின்னவன் சேது, கைகொட்டிச் சிரித்தான்.

''என்னாச்சு ரீ?'' - தேவி

''அக்கா பூனக்குட்டிய மிதிச்சுப்புடுச்சு'' சேதுவுக்கு சிப்பாணியை அடக்க முடியவில்லை

''அடத் தரித்திரியமே! பூனப்பாவம் பொல்லாது டீ! செத்துக்கித்துப் போப்போது'' கேட்டபடி, குண்டானில் சோத்துச் சட்டியைக் கவிழ்த்து வடிய விட்டாள்.

''அச்சச்சோ செத்துப் போச்சா?'' பதட்டத்துடன் கழுவிய முகத்தைத் துடைத்தும் துடைக்காமலும் மறுபடி வெளியில் வந்தான் அசோகன்.

''யே எரும மாடே, இதென்னா நீ வளக்குறயாக்கும். ஒழுக்கமா அங்கிட்டுப் பத்திவிடு. கால்குள்ள கைக்குள்ள வந்துக்கிருக்கு'' பூனைக்குட்டியைத் தாண்டிய பதட்டம் இன்னும் மாறவில்லை அங்காயிக்கு. வாதாம் மரக்கிளையில் படரவிட்ட தாவணியின் சுருக்கங்களை எடுத்துவிட்டு வீட்டுக்குள் நுழைந்தாள்.

பாட்டில் கம்பெனிக்கு வேலைக்கு அழைத்துப் போகும் டெம்போ காலை எட்டே கால் மணிக்கெல்லாம் கீரக்கல் மார்க்கட்டுக்கு முன்னால் வந்து நின்றுவிடும். சீக்கிரமாய்ப் போகாவிட்டால் வண்டியில் உட்கார இடம் கிடைக்காது. எட்டாம் வகுப்பை முத்தையா பள்ளியில் முடித்ததும் முழுப்பரீட்சை லீவில் நாகேஸ்வரி அத்தை, அங்காயியை பாட்டில் கம்பெனி வேலைக்கு அழைத்துப் போனார்.

பழைய இரும்புக் கடைகளிலிருந்து மூட்டைகட்டி வரும். கண்ணாடி பாட்டில்களை சோப்பு நீரில் அலசி, பிரஷ் வைத்து சுத்தம் செய்து தரம் பிரித்து அடுக்க வேண்டும். நாள்முழுக்க. தண்ணீருக்குள்ளேயே புழங்க வேண்டும், பாட்டிலின் நாத்தம் விதவிதமாய் நாறிக் குமட்டும். சாப்பிட ஒப்பாது. லீவு முடிந்து பள்ளிக்கூடம் சேரும் நாளில் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் பெருவாரியான சண்டை வந்தது. அப்பா, அம்மாவின் மண்டையை உடைக்க, அம்மா நெற்றியில் வழிந்த ரத்தவெறிச்சியுடன் அறுவாமனையை எடுத்து விரட்டியதில் ஓடிப்போன அப்பா, இன்னவரை வீடு திரும்பவே இல்லை. இப்போ திருப்பூரில் குடியிருப்பதாய் தகவல்.

சோற்று நீர் குண்டானில் வடிந்து கொண்டிருக்க, ரசத்துக்கு தக்காளி வாங்க. காசை எடுத்துக்கொண்டு கடைக்குக் கிளம்பிய தேவி, வாசலில் பிள்ளைகளது கும்மர்ச்சம் பார்த்து அதட்டல் போட்டாள்.

''அவெயவனுக்கு வேலைக்குப் போகணும்ன எண்ணங், கவல, இல்லியா? காத்தால வெளாண்டுக்கிருக்கீக! ம்?''

''ம்மா, அங்க பாருமா, பாவத்த. அதுக்கு எதுனாச்சும் துன்னக் குடும்மா'' அசோகன் கை நீட்டிய திக்கில் வெறுந்தரையில் வெய்யில் காய்வது போல கால்களை நீட்டி மல்லாக்கப் படுத்துக் கிடந்தது குட்டிப்பூனை.

''ம்? வீட்ல இருக்க குட்டிகளுக்கே திங்க எதுமில்லாமத்தான பொண்டு பொடுசுக அத்தனியும் கஞ்சிச் சட்டியத் தூக்கிட்டு வேலைக்கிக் கெளம்பறம். நெனவில்லியா?'' பதில் வார்த்தைக்கு நில்லாமல் பலசரக்குக் கடைக்கு ஓடினாள். ரசம் வைத்து விட்டு, தானும் வேலைக்குப் புறப்படவேணும்.

''பூனக்குட்டி செத்துப் பூச்சா ண்ணே!'' அசோகனின் கையைப் பிடித்துக் கொண்டு எட்டிப் பார்த்த சேது, பரிசோதிக்க, டவுசர் சேப்பிற்குள்ளிருந்து ஒரு கல்லை எடுத்து எறிந்தான். பூனைக்குட்டியும் அசோகனும் ஒரு சேர திடுக்கிட்டார்கள். சிணுங்கிய குரலில் குட்டி தட்டுத்தடுமாறி எழுந்து ஓடியது,

''யே வெண்ணெ!'' என்ற வசவுடன் சேதுவின் பிடறியினைச் சேர்ந்து அறைந்தான் அசோகன். நகராட்சியில் ஒலிக்கும் சங்கொலியாய் ஓவென ஓலமிட்டு அழுதான் சேது.

''இந்த வெங்கணத்தி எப்பவுமே ஜேப்பில கல்லப் பெறக்கி வச்சிட்டே திரியிறான்மா. கோழிய எறியறது, நாய வெரட்றது. ஒரு நாளைக்கி அந்த கெழக்குவீட்டு நாயி, ஒங்காலக் கவ்வப் போதுடீ! அப்பத் தெரியும்'' சோறு சாப்பிடும் போது அசோகன் அம்மாவிடம் ஒப்பித்தான்.

''ம், நாயி கடிக்க வந்தா நாந்தா வேமா ஓடிப் போய்ருவேன்ல! ஏம்மா?'' ஒருகாலை நீட்டி மறுகாலை குத்திட்டு உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்த தேவியின் தொடையில் தட்டிச் சொன்னான் சேது. அவன் கையிலிருந்த சோற்றுப் பருக்கையில் சில தேவியின் சேலையில் உதிர்ந்தன.

சிதறிய பருக்கைகளை எடுத்து வாயிலிட்டுக் கொண்ட தேவி, ''சாப்புடும் போது சோத்துப் பருக்க சிந்தாமச் சாப்புடணும். அன்னத்த தரையில சிந்த ஆகாது'' என்றாள்.

''அசோவன அமட்டி வையிம்மா. எதுக்கெடுத்தாலும் சுளீர்ச்சுளீர்னு அடிக்கிறியா'' அங்காயி சேது அடிவாங்கியதைப் போட்டுக் கொடுத்தாள்.

''ஆம்மா, அப்பிடீ வலிச்சுச்சும்மா'' பிடறியைத் தடவிக் கொண்டான் சேது.

''ம்? பூனக்குட்டி செத்துப் போயிருந்த ? நிய்யா குடுப்ப. பாவம்ல'' வேகமாய்ப் பேசினான் அசோகன். சேது கல்லெறிந்த ஆத்திரம் இன்னும் அடங்கவில்லை.

''அதுக்காக பொடனிலயா அடிப்பாக? படாத எடத்துல பட்டுச்சுன்னா அம்மான்னாலும் வருமா ஆத்தான்னாலும் வருமா! யாரயும் அடிக்கறப்ப மெய்யடி பொய்யடி பாத்துச் செய்யணும். அப்பிடி என்னா மானங்கெட்ட கோவம்? ந்நொப்பனுக்கு வாரிசுப் பட்டத்துக்கு வாரியாக்கும்? சரியில்ல மகனே! சொட்ட எலும்ப ஒடிச்சுப் போடுவே''

''செரிம்மா நா போய்ட்டாறே'' சாப்பாட்டுத் தூக்கும் சிறுதுண்டும் எடுத்துக்கொண்டு காய்ந்த தாவணியை உடுத்திக் கொண்டு வேலைக்குக் கிளம்பிய அங்காயி, ''ஓம் மயே பூனக்குட்டிக்கி வடிச்ச கஞ்சிய ஊத்தறேன்னு வாசல நாற வெச்சிருக்கியாம்''

''பாருமே'' வாசலில் சிந்திக்கிடந்த வடிகஞ்சியை வெறித்தபடி நகர்ந்தாள்.

''லூசாடா நிய்யி? வடிகஞ்சியக் குடிக்க அதென்னா ஆடா மாடா இல்ல கன்னுக்குட்டியா?' தேவி தலையில் அடித்துக் கொண்டாள்.

''சோறு திங்குமா?'' வெளியில் எட்டிப்பார்த்தான் அசோகன். சிரட்டையில் ஊற்றிய வடிகஞ்சி ஆடை படிந்து கெட்டியாகக் கிடந்தது. குட்டிப்பூனை வாதாம் மரத்தடியில் நான்கு கால்களையும் கிடத்தி கழுத்தை உயர்த்தி புலிக்குட்டிபோல காதுகளை பக்கவாட்டில் திருப்பி கம்பீரமாய் அமர்ந்திருந்தது.

''குட்டியெல்லாம் பாலத்தே குடிக்கும், பெருசுன்னா மீனு, கோழி, கருவாடுன்னு, சோத்தக் கூடத் திங்கிம். வெருவாய்க்களங் கெட்டதனமா எதையும் செஞ்சுக்கிருக்காத. ஒருநாளைக்கி பாவம்னு ஊத்துனா அதே சோகுக்கு பூனைக தெனமும் வந்து நிக்கிம். எந்திரி, டயமாச்சில்ல கௌம்பணும்'' சாப்பாட்டுக் கடையை ஒதுக்கி வைத்தாள்.

வேணுகோபால் எஞ்சினியர் அசோகனை வரச்சொல்லியிருந்தார். வேலையைப் பார்த்து சம்பளம் தருவார். இங்கிலீஷ் ஏறவில்லை என நாலாம்வகுப்போடு படிப்பை நிறுத்தியிருந்தான். வீட்டில் விட்டால் கெட்டு முட்டச்சாம்பல் ஆகிடுவான்.

சேதுவிடம் தூக்குச் செம்பும் பத்துரூபாயும் கொடுத்து காப்பி வாங்கிவரச் சொன்னாள். காலையில் வேலைக்குக் கிளம்பும்போது ஒருமொடக்கு காப்பித்தண்ணி சுரீரென தேவிக்கு தொண்டையில் இறங்கவேண்டும்.

காப்பி வந்ததும் தனக்கும் சின்னவனுக்குமாய் பகிர்ந்து கொண்டபோது அசோகன் ஒரு டம்ளரை நீட்டினான்.

''ஒனக்குதே காப்பி புடிக்காதே''

''குட்டிப் பூனைக்கி''

''ஆத்தாடி, நானே பார்சலுன்னா கொள்ளக் காசாகும்னு கௌாஸ் காப்பி வாங்கி குடிச்சுக்கிருக்கே. இதுல தருமம் பண்ண நமக்கு அக்குசு இல்ல மகனே'' சேதுவுக்கு ஒரு டம்ளரில் தந்துவிட்டு மடமடவென வாயில் ஊற்றிக் கொண்டாள் தேவி.

''பாவமா இருக்கும்மா செத்துப்போகும்மா''

''படச்சவனுக்குத் தெரியும் பாவம் புண்ணியமெல்லா. நானுந்தே நாலப் பெத்திருக்கே. எனக்கு ஆரு பாவம் பாக்குறா, மரம் வச்சவெ தண்ணி ஊத்துவாண்டா. வெசனப்பட காலமிருக்கு. இப்பக் கௌம்பு''

பள்ளிக்கூடம்போகும்போது கதவைச் சாத்திவிடவும் சத்துணவு வாங்கி வீணாக்காமல் உண்ணவும் சேதுவுக்கு சொல்லிவிட்டு வாங்கித்தின்ன கையில்காசும் தந்துவிட்டுக் கிளம்பினாள் தேவி.

''அட்ஜேய், இங்கோரு குட்டிப் பூனைய எதுனாச்சும் பண்ணுன.. இறுக்கிப் பொடுவேன்'' சேதுவை எச்சரித்துவிட்டு அம்மாவோடு இணைந்து கொண்டான் அசோகன்.

எண்ணெய் தேய்த்து, கண்ணாடி பார்த்து தலைசீவிக் கொண்ட சேது, தோள்பையோடு வெளியில் வந்தான். மரத்தடியில் கம்பீரம் மாறாமல் குட்டிப்பூனை சேதுவின் கண்பார்த்தது. அருகில் வந்த சேது சிரட்டையில் இருந்த வடிகஞ்சியை சாக்கடையில் கொட்டினான். டம்ளரில் இருந்த காப்பியை சிரட்டையில் ஊற்றினான்.

வெள்ளை வெய்யில் நிறம் மாறிப் பூத்தது.

சிறுகதை

நான் முதலாளி ஆகணும்!

வா.மு.கோமு

எனக்கு என் வழியில் செல்ல முடியாமல் எல்லாப்பக்கமும் முட்டுக்கட்டையை போடுகிறார்கள் பலரும். இப்படித்தான் எல்லோருக்கும் நடக்கிறதாவெனவும் தெரியவில்லை. நான் ராமலிங்கம். ''டே லிங்கா!'' என்றே மற்றவர்கள் என்னை அழைக்கிறார்கள். சமவயதுடையவனைக்கூட என்னால் 'டேய்' போட்டு கூப்பிடமுடிவதில்லை. வளர்ப்பு அப்படி என்று வைத்துக்கொள்ளுங்கள்.

பெரிய படிப்பெல்லாம் நான் படிக்கவில்லை. உள்ளூர் பள்ளியில் எட்டாவது வரை இருந்ததால் அதை மட்டும் முடித்துக்கொண்ட சமயம் அப்பா உடல்நிலை மோசமாகி போய்ச் சேர்ந்து விட்டார். பின்பாக அக்கா பரமேஸ்வரியை இருபது கிலோமீட்டர் தூரத்தில் தூரத்து சொந்தத்திற்கு கட்டிக்கொடுத்தோம். அம்மா ஆஸ்துமா நோயாளி என்பதால் வீட்டில் படுசிரமம் தான் என்று வைத்துக் கொள்ளுங்களேன். நானும் அம்மாவும் மட்டும் தான்.

இப்படியிருக்க அக்கா பரமேஸ்வரி எனக்கொரு பெண் இருப்பதாகச் சொல்ல எந்த மறுப்பும் சொல்லாமல் சுமதியை கட்டிக்கொண்டேன். கல்யாணம் என்றால் சிறப்பாக மேளதாளம் முழங்க மண்டபத்தில் வைத்து நடந்து முடிந்த கல்யாணமல்ல எங்கள் இருவருடையதுமே! குலதெய்வக் கோவிலில் வைத்து அறிந்த தெரிந்த சனத்திற்கு மட்டும் அழைப்பு வைத்து செலவீனம் என்று பெரிதாக இல்லாமல் தான் அக்கா பரமேஸ்வரியின் திருமணம் முடிந்தது. அதைப் பின்பற்றியே என்னுடைய திருமணமும் பொண்ணுப்பிள்ளை சுமதியின் குலதெய்வக் கோவில் முன்பாக முடிந்துவிட்டது.

அக்காவைக் கட்டிக் கொடுக்கையில் பத்துப்பவுன் போட்டு கட்டிக் கொடுத்தோம். மச்சான் சொந்தமாக வீட்டின் அருகேயே குடோன் கட்டி இரண்டு தறிப்போட்டு அவரே ஓட்டிக் கொண்டிருக்கிறார். அக்கா போகும்போதே குடோனும் தறிகளிரண்டுமிருக்க மிக நம்பிக்கையாய் பொண்ணு கொடுத்தோம். அம்மாவுக்கு அதில் பெரும் மகிழ்ச்சி தான். அக்கா இப்போது அந்தக் குடும்பத்தில் ஒருத்தியாக மாறிவிட்டிருந்தாள்.

கணவரை போனவுடனேயே முந்தானையில் முடிந்து கொண்டாள் போலிருக்கிறது. அவர் என்னைபோல வெள்ளந்தி தான். ஆனால் மாங்கு மாங்கென உழைப்பவர். என்னைப் போன்றே எந்த விதமான கெட்ட பழக்கங்களும் அவரிடம் இல்லை. அக்காளுக்கு ஒரே பையன். சுப்பிரமணி என்று பெயரிட்டிருக்கிறாள். எட்டு வயதாகிறது. கான்வெண்ட் பள்ளியில் படிக்கச் செல்கிறான். வேனுக்கு பணங்கட்டி, ஸ்கூலுக்கு பணங்கட்டி, துணிமணி



ஓவியம்: ஜீவா

தெச்சு.. என்று அவ்வப்போது அக்கா பரமேஸ்வரி ஊருக்கு வருகையில் அம்மாவிடம் புலம்புவாள்.

அம்மா எந்த வேலைக்கும் செல்ல முடியாத அளவு வீட்டோடே இருக்கிறது. என்னைக் கட்டிக் கொண்ட சுமதியும் அமைதியானவள் தான். வருகையில் ஏழு பவுன் நகையோடும், சாமான் செட்டுகளோடும் தான் வந்தாள். அவளுக்கு படிப்பு ஐந்தாவதோடு நின்று போனதை என்னிடம் சொல்லியிருக்கிறாள். சுமதி என்று அவள் கையெழுத்திடுகையில் கொஞ்சம் மேலே ஏறித்தான் செல்லும். அதெல்லாம் பிரச்சனையில்லைதான்.

சொந்த ஊரில் தறிக்குடோனுக்கு சென்றுவந்து கொண்டிருந்தவள் இங்கே வந்ததும் ரோட்டுவேலைக்கு எழுதிக் கொடுத்து சம்பளப்பணத்தை பேங்கில் சென்று வாங்கி வருமளவு வளர்ந்து விட்டாள். எனக்கோ பேங்கில் அக்கௌண்டே இல்லை. கூடிய சீக்கிரம் இதையெல்லாம் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டுமென நினைத்துக் கொண்டு தான் இருக்கிறேன்.

எனக்கொரு மகன் இருக்கிறான். அவன் பெயர் முத்துச்சாமி. இந்தவருடம் தான் கான்வெண்ட் பள்ளியில் சேர்த்தியிருந்தேன். நானே தினமும் குறுநகருக்கு அச்சாபீஸ் செல்வதால் வேனுக்கு பணம் கட்டவில்லை. என் டிவிஎஸ் 50-ல் இருவரும் சென்று விடுவோம். மாலையில் நாலேகால் என்றானபோது அச்சகத்திலிருந்து வண்டியை எடுத்துக் கொண்டு போய் முத்துச்சாமியை கூட்டிவந்துவிடுவேன். பின்பாக மாலையில் பணி முடிந்து நான் கிளம்பும் வரை என்னோடே அச்சகத்தில் இருப்பான்.

குறுநகர் அச்சகத்தில் நான் முதலாக கம்பாசிடராகவும், மிஷின் மேனாகவும் தான் இருந்தேன். எல்லாம் இன்று ஏறக்கட்டியானபின் ஜெராக்ஸ் மிஷின்போல இப்போது வந்து விட்டது. அச்சுத்தொழில் நச்சுத்தொழில் என்ற பழமொழி இருக்கிறது. நான் அச்சகத்தில் மிகச்சிறந்த பைண்டர். அச்சுக்கோர்க்கும் வேலையெல்லாம் முடிந்துபோய் கம்ப்யூட்டர் வந்துவிட்டது. அச்சக உரிமையாளர் அதற்கென ஒருவனை சேர்த்திக் கொண்டார் எட்டு வருடம் முன்பாக. போக மிஷின்மேன் என்று ஒருவனையும் சேர்த்திவிட்டார். எனக்கு பைண்டிங் வேலையில் உதவிசெய்ய ஒரு சிட்டாளை அப்போது சேர்த்தியிருந்தார்.

இப்போது அவனுக்கு மீசைகூட முளைத்து விட்டது. கையில் கையகல போன் வைத்திருக்கிறான். என்னால் நகர்த்திச் செல்லக்கூட முடியாத பைக் வாங்கிவிட்டான். நான் இன்னும் பழைய டிவிஎஸ் 50 ஓட்டிக் கொண்டிருக்கிறேன். இதையெல்லாம் கணக்கிட்டுத்தான் என்னால் இனி தொடர்ந்து அச்சகத்தில் பைண்டராகவே வாரக்கூலி வாங்கிக் கொண்டு காலம் தள்ள முடியாதென போனவருடம் யோசித்து சுமதியிடம் தகவல் சொன்னேன்.

'என்ன பண்ணலாம்னு இருக்கீங்க? அதெ மொதச் சொல்லுங்க!' என்றாள். குறுநகரில் ஒரு சின்னக்கடை ஒன்னு காலியாய் இருப்பதாயும், மாசம் எப்படியும் ஏழுநூறு ரூவாய் வாடகை தான் வருமெனவும், பஞ்சர் கடை போட்டு ஓனராய் அமர்ந்துவிடும் யோசனையில் இருப்பதையும் சொன்னேன். இப்பெல்லாம் ஒரு டிவிஎஸ்க்கு பஞ்சர் ஒன்னுக்கு 50 ரூவா வாங்குறாங்க என்றும் சொன்னேன்.

அவளோ, 'பஞ்சர் ஒட்டத்தெரிஞ்சா போதுமா? வண்டி வேலையும் செய்யத் தெரியனும்ல!' என்றாள். வாஸ்தவம் தான். ஆனால் சித்திரமும் கைப்பழக்கம் தானே! என் டிவிஎஸ் பண்ணாத துன்பங்களா? திடீரென ஸ்டார்ட் ஆகாது. சாலையிலேயே ஓரங்கட்டி நிறுத்தி ஸ்பேனரை எடுத்து ப்ளக்கை கழற்றி ரெண்டு தேய் சாலையிலேயே தேய்த்து பின்பாக பெட்ரோல் டியூப்பிலிருந்து துளி பெட்ரோல் நனைத்துப்போட்டால்

வண்டி ரெடி! கம்ப சூத்திரமா அது? அதற்காகவெல்லாம் பார்த்தால் கடைபோட்டு தனி ஒனராக அமர முடியாதல்லவா!

கடைசியாக சுமதி, 'எவ்ளோ செலவாகும்.. பொருளெல்லாம் வாங்கி கடையில் வைத்து பூஜைபோட்டு ஆரம்பிக்க?' என்றாள். எப்படியும் ஸ்பேனர் செட்டுக, சைக்கிள் டயர் டியூப்புக, டிவிஎஸ் டியூப்புக, ஒரு ரேக்குன்னு பத்தாயிரம் இருந்தா போதும், என்றேன். 'காசு வச்சிருக்கீங்களா?' என்றாள். அதான் உன் நகையில மூனு பவுனைக் கொண்டி பேங்க்குல வச்சு பணம் வாங்கிக்கலாம். அப்புறம் மீட்டுக்கலாம், என்றேன். 'சரிதான்.. அது எப்போ?' என்றாள்.

எந்தக் காரியத்தையும் தள்ளிப் போட்டுட்டெல்லாம் இருக்க முடியாது சுமதி. அதிலயும் இது நல்ல காரியம். கடையை வாடகைக்கி தர்றவர் எனக்காக ஏழாயிரம் தான் அட்வான்ஸ் குடுன்னு கேட்கிறார். ரெண்டு நாள்ல படப்படன்னு வேலையை ஆரம்பிச்சிடனும் சுமதி, என்றேன். அடுத்த நாளே காலையில் நான் தூங்கி விழிக்கையில் சுமதியையும் பையனையும் காணோம். அம்மாவைக் கேட்டால் தெரியலை என்றது. மணி ஆக ஆக நிலவரம் ஒன்றும் புரியவில்லை.

பக்கத்து வீட்டு சரோஜா தான் சாலைப்பணிக்கு கிளம்பிச் செல்கையில், 'ராமலிங்கண்ணா, சுமதியக்கா பையனை தூக்கீட்டு அவிங்கூருக்கு போயிடுச்சு காத்தால அஞ்சி மணிக்கே! உங்களுக்குள்ள சண்டையாயிப் போச்சுங்களாண்ணா? காத்தால வேலைக்கி கெளம்புறப்ப தான் ஊட்டுக்காரனுக்கு நீ சொல்லோணும்னு வேற என்கிட்ட சொல்லுச்சுங்ணா!.. உடனே போயி கூட்டியாந்திடாதீங்க.. ரெண்டு நாளு கழிச்சி போயி சமாதானம் பண்டிக்கூட்டியாங்க!' சொல்லிவிட்டுச் சென்றாள். நான் ரொம்ப நாள் கழித்து வெங்காயம் தக்காளி அரிந்து அன்று சமையல் செய்து முடித்துவிட்டு அச்சகத்திற்கு வண்டியை எடுத்தேன். அதற்குள் ஓனர் வேறு கூப்பிட்டுக் கொண்டேயிருந்தார் என் அலைபேசிக்கு. அவருக்கு என்னவெனச் சொல்வது? 'பத்துமணிக்காட்ட வர்றனுங்க!' என்று சொல்லி வைத்தேன்.

மூன்றாம் நாள் சுமதி அவளாகவே வீடு வந்து சேர்ந்தாள். கோபித்துக்கொண்டு சென்றால் போனவர்களுக்கே வரவும் வழி தெரியும்தானே என்று நான் போகவில்லை. வந்தவள் கழுத்தில் தாலிக் கொடிக்கு பதிலாக மஞ்சள்கயிறு தான் தென்பட்டது. காதில் இருந்ததற்கு பதிலாக வேறொன்று சிறியதாக தெரிந்தது. சரி இரவு நேரத்தில் அடித்துப் பிடுங்கிப்போய் விற்றேனும் கடை வைத்து விடுவேனென என் மாமியார் இவள் நகைகளை பத்திரப்படுத்தி விட்டு பிழைக்க பிள்ளையை அனுப்பி வைத்திருக்கிறார், என நினைத்தேன். இப்படியாக என் சைக்கிள் கடைக்கனவு வெறும் பகல் கனவாகப் போய்விட்டது.

இதோ மீண்டும் ஒருவருடம் கழித்து என் வீட்டினுள் என் மாமனார், மாமியார், சுமதியின் தாய்மாமன் எல்லோரும் அமர்ந்திருக்கிறார்கள். என்னை அமரவைத்து புத்திமதி சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். என் அம்மாவும், எதோ பிரச்சனைபோல! என்று நினைத்து அதுவும் வந்து என்னருகில் அமர்ந்து கொண்டது.

நான் வழக்கம்போல அச்சகம் என்னை விழுங்கிவிடும் என்கிற பயத்தில் இந்தமுறை மளிகைக்கடை ஒன்றை குறுநகரில் போடுவதாக சொல்லியிருந்தேன். அது ஒரு நல்ல திட்டம் என்றே எனக்கு மனதில் பட்டிருந்தது. காய்கறிகளை பெரிய மார்க்கெட்டிலிருந்து கொண்டு வருகிறோம். அன்றைய நிலவரப்படி காய்கறிகளை விற்பனை செய்கிறோம். இதுபோக மற்ற ஐட்டங்கள் அனைத்தையும் வேனில் வந்தே கடையில் கொடுத்துப் போய்விடுகிறார்கள்.

ஒரு சோப்பு விற்றால் கூட நறுக்கென பணம் கிடைக்கிறது. ஒரு ஊதுபத்தி பாக்கெட் விற்றால் கூட லாபம் இருக்கிறது. இதை விற்பனைக்கு வைத்து பார்ட்டிக்கு எடுத்து நீட்ட பெரிய உடல் உழைப்பும் இல்லை. ஸ்பேனர் போட்டு திருப்பி டைட் செய்ய வேண்டியதில்லை. இந்த முறை சுமதி மகிழ்ச்சியாய் ஒப்புக் கொள்வாள் என்று பார்த்தால்.. பஞ்சாயத்து கூட்டி விட்டாள்.

எனக்கும் மூத்தவர்களான அவர்கள் பேச்சு பெரிய படிப்பறிவை எனக்கு ஊட்டும் விதமாக இருந்தது. போக கையிருப்பை இழந்துட்டு எங்கு போய் நிற்பது? என்ற கேள்வியை அடிக்கடி எழுப்பினார்கள். என்னால் எந்த விளக்கமும் அவர்களுக்கு சொல்ல முடியவில்லை. சொல்ல ஆரம்பிக்கும் சமயமெல்லாம் சுமதி சப்தம் பெரிதாக இருந்தது. மீண்டும் நான் தோல்வியடைந்தேன். மீண்டும் அச்சாபீசுக்கு அடுக்கு டிபனில் சாப்பாடு எடுத்துக் கொண்டு அடுத்த நாள் காலையில் சுப்பிரமணியோடு கிளம்பினேன்.

அன்று பதினொரு மணியளவில் அச்சக ஆட்கள் ரிலாக்ஸாக டீ சாப்பிடும் நேரத்தில் ஓனரும் கையில் டீ டம்ளரோடு வந்தார் என்னிடம். இந்த முப்பது பில் புக்கும், இருவது இன்வாய்ஸ் புக்கும், பத்து லெட்டர்பேடும் சாயந்திரம் டெலிவரி பண்ணனும் லிங்கா! என்றே பேசுபவர் வேறு பேச்சு பேசினார்.

''உனக்கெல்லாம் என்ன தெரியும்னு மளிகைகடை போடணுங்கறே? தக்காளி, கத்திரி, வெண்டைன்னு கடையில இறக்கீட்டு உட்கார்ந்துட்டீன்னா பூராவும் வித்து காசு சம்பாதிச்சிருவியாடா லிங்கா? விக்கலீன்னு அழுகிப் போச்சுன்னா போட்ட மொதல் பூராவும் போச்சேடா! ஊர்ல ஒரு மளிகைக் கடையா இருக்குது? வீதிக்கு மூனு இருக்குது. நான் உன்னை வேண்டாம்னு சொல்லலடா லிங்கா.. இப்ப ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு மளிகை கடையில் ரெகுலரா போய் பொருள் வாங்கி பழகிட்டாங்க! உன் கடைக்கி யாரு வருவா? எதோ பீடி சிகரெட் பொயிலை போடறவன் வேணா வருவான். பீடிக் கட்டுக்கு ரெண்டு ரூவா கெடைக்கிம். பத்துக்கட்டு வித்தீன்னா இருவது ரூவா ஆச்சு. அதவச்சு வாடகை எப்பிடி குடுக்குறது?'' ஓனரும் நிறுத்துவதாயில்லை.

இந்த சுமதி முனுக்முனுக்கென இருந்து கொண்டே பஞ்சாயத்து செய்கிறாளே! ஓனர் நெம்பர் வாங்கி பேசி வத்தி வைத்திருக்கிறாளே! ஒரு வீட்டுக்காரன் வாழ்க்கையில முன்னேற ஒரு ஐடியா பேசினா.. இப்பிடி அவளோட தலையில இடி விழுந்தாப்ல பண்ணுறாளே! ஓனர் கடைசியாக ஒன்று சொன்னார். 'மறுக்கா நீ நாலு மாசங்கழிச்சி அச்சாபீசுக்கு வந்தா உன்னோட எடத்துல வேற பெண்டர் இருப்பாரு! நீ வந்தா அவரை ஊட்டுக்கு போவச் சொல்ல முடியாது!'

குழப்பமாய் அன்று மாலையில் பையனோடு வீடு வந்து சேர்ந்தேன். ஆறுமாதமாக சுமதியின் கழுத்தில் இருந்த தாலிக்கொடியை மீண்டும் காணவில்லை. மாமியார் வாங்கிக் கொண்டு போய்விட்டார் போலிருக்கிறது. ஆனால் என் முடிவில் மாற்றமேயில்லை. நாளை குறுநகரில் ஏதேனுமொரு மளிகைக் கடையில் நான் வேலையாளாக சேர்ந்து கொள்ள முடிவெடுத்திருக்கிறேன். ஒரு வருடமேனும் மளிகைக் கடை அனுபவம் எனக்கு வேண்டும். மறு வருடத்தில் நான் மளிகைக் கடை போட்டு ஓனராக கல்லாவில் அமர்ந்தே தீருவேன்! எனக்கு வாழ்த்துச் சொல்லுங்கள்!



ஓவியம்: அஞ்சலி

சிறுகதை

கொரும்பாவி

கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா

வானம் பொய்த்து பூமி வறண்டு விவசாயம் நலிந்து மக்களும் கால்நடைகளும் சகல ஜீவராசிகளும் உணவுக்கும் குடிநீருக்கும் ஆலாப்பறந்து பசி பட்டினியால் மடிந்த காலத்தையே பஞ்சம் என்கிறோம். ஈரத்துணியை வயிற்றில் கட்டிக்கொண்டால் வயிறு பசி தெரியாது என்பார்களே அதுக்காக வயிற்றில் சுற்றிக்கொள்ளும் துணியை நனைக்கக் கூட தண்ணி கிடைக்காத வறண்ட பாலை நிலமாக மாறிக்கிடந்தது தமிழகத்தின் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் ஆகிய மிச்சமுள்ள நால்வகை நிலங்களும்.

தாது வருடப் பஞ்சம், நாப்பதாமாண்டு பஞ்சம் மக்காச் சோழப்பஞ்சம், சாணாக்கிழங்கு பஞ்சம் என்று நிறைய பஞ்சங்களைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். அப்படி ஒரு பஞ்சத்தில் நாடே உயிரை விட்டுக் கொண்டிருந்த நேரம். மேலையூரில் ஊர்ப் பஞ்சாயத்து கூடி இருந்தது.

பஞ்சாயத்து முன்னாள் பிரசிடெண்ட்கள் இந்நாள் மிலிட்டரி நாட்டாமை தலையாரி கோவில் தர்மகர்த்தா பூசாரி அப்புறம் ஊர் பொது மக்கள் எல்லோரும் பொது மடத்தில் கூடி இருந்தனர்.

பெரும்பாலோர் அன்றாடம் கூலி வேலை செய்வோர்.பத்துப் பதினைந்து பேர் சம்சாரிகள். கொஞ்ச பேர் பெருத்த விவசாயிகளாக இருந்து நொடித்து உயிர் வாழ அருகில் உள்ள டவுனில் இருக்கும் தீப்பெட்டி கம்பெனிகளில் வேலை செய்வோர்.

கடந்த மூன்று வருஷங்களாக கோடை மழையும் பெய்யாது கால மழையும் பொய்த்து குளம் குட்டைகள் கிணறுகள் வறண்டு போனது. வானம் பார்த்த பூமியில் சொட்டு மழை விழவில்லை. சம்சாரிகள் மானாவாரியில் மாடு கண்ணுகளுக்கு தீவனமாக போட விதைத்து போட்டிருந்த நாத்துச் சோழப் பயிர் கூட கருகிப் போய் கிடந்தது.

விதை நெல்லைக்கூட சமைத்து சாப்பிட்டாச்சு ஆடு மாடுகள் வக்கெல் புல் கூழம் மாட்டுத் தீவனம் எதுவுமின்றி மெலிந்து உயிரை விட்டுக்கொண்டிருந்ததைப் பார்க்க சகிக்காத சம்சாரிகள் அதுகளுக்கு முன்னரே உயிரை மாய்த்துக் கொண்டனர். சோளத்தட்டை பனை ஓலைகள் எல்லாம் மாட்டுக்கு தீவனமாகியது. அனேகர் பஞ்சம் பிழைக்க போனவர்கள் வெளியூர்களில் போய் கூலி வேலை செய்தனர். ஐநூறு தலக்கட்டுள்ள ஊர் இப்ப பாதியாப் போச்சு.மாடு கண்ணுகள் பூராம் போச்சு. பூமியே கருகி கரிக் கட்டையாய் கிடந்தது.

என்னப்பா செய்ய ஊர்ல பேர்வாதிப்பேர் பஞ்சம் பிழைக்கப் போய்ட்டா மிச்சப் பேர் உசுறக் கைல புடிச்சுக்கிட்டு கொல பட்டினி கிடக்கோம் போக்கிடம் இல்லாம. மழை பெஞ்சு கொளம் ரொம்பி கலுங்கல் தப்பி மறுகால் போனதைப் பார்த்து நாப்பது வருஷமாச்சு. மழை பெய்றது நம்ம கையிலயா இருக்கு. நாட்டுல பொய் பித்தலாட்டம் அக்குருவம் பெருகிப் போச்சு. பெறகு எங்கன மழ பெய்யும். பழநி தாத்தா தன் பங்குக்கு புலம்பினார். பங்குனி சித்திர வெயில் காலத்துல வெயில் கொளுத்துது கார்த்திகை மார்கழில பனி மச்சைத் துளைக்குது ஆனா பாரு மழை காலத்துல மட்டும் மழை பெய்யுவேனாங்குது என்றார் கார வீட்டு கந்தசாமி.

அதான் பொட்டுன்னு ஒரு சொட்டு மழத்துளி மேல விழுந்தா கூட ஓடி ஒளியுதீகளே பெறகு எங்குட்டுக்கூடி மழ பெய்யும் என்றான் சட்டாம்பிள்ளை சம்முகம் இதைத்தான் அந்தக்காலத்துல கர்மத்தை தாங்கும் மனுஷனால தர்மத்தை தாங்க முடியாதுன்னு சொன்னாங்க பெருசுக என்றாள் லட்சுமிப்பாட்டி அந்தக் காலத்துல ஏரோப்பிளேன்ல போயி மேகத்தில பொடியைத் தூவி மழ பெய்ய வைப்பாங்கல்லா அது மாதிரி செய்யச் சொல்லி கலெக்டருக்கு மனு எழுதிப் போடுவமா, ஆ ஊ என்றால் போலீஸ் ஸ்டேஷனுக்கும் கலெக்டர் ஆபீசுக்கும் போயி மனுக்கொடுப்பதே சோலியாகக்கொண்ட முனுசாமி. இவனை மனுசாமி என்றும் அழைப்பார்கள்.

எவமில இவன் ஏதாவது ஆகுற விஷயத்த சொல்லுலே...

நாய் வால்ல ஓலையைக் கட்டி தீயை வச்சு விட்டா மழை பெய்யுமாமில்லா இது விடிய ஊளையிடும் அல்லது தூங்க விடாமல் ஓலமிடும் தெரு நாய்களின் மேல் கொல வெறியிலிருக்கும் சங்கரன் அது விடாது பெய்யிற அடை மழையை நிப்பாட்டுறதுக்குடா கோட்டிக்காரா என்ற பழனி தாத்தாவிடம் ஒரு முப்பது வருஷத்துக்கு முன்னால கழுதைக்கு கல்யாணம் செஞ்சு மழை பெய்ய வச்சமே ஞாபகம் இருக்கா என்றான் சம்முகம். அந்தக் கழுததான் செத்துப் போச்சே சலவைக்காரரும் இந்த நாய்ப் பொழப்ப மனுஷன் செய்வானான்னு டவுனுக்குப் போய் இப்ப நல்ல வசதிக்கு வந்துட்டானே அம்மன் கோயில் மாடசாமி கோயில் அய்யனார் கோயில்னு எல்லாச்சாமிக்கும் கொடை கொடுத்து வேண்டிக்கிட்டாச்சு. இனி மனுஷன் கையில என்ன இருக்கு கடவுளுக்குத்தான் மனுக்கொடுக்கணும் என்றார் (ம)முனுசாமி.

குழந்தைகள் கூட தங்கள் பங்குக்கு கூட்டு சேர்ந்து தெருத்தெருவாக ஊர்வலமாகப் போய் அம்மனுக்கு வேண்டிக்கொண்டு ஊர்க் கஞ்சி எடுத்து கம்மாங் கஞ்சிக்கும் கருவாட்டுத் தண்ணிக்கும் ஊளே ஊளை என்று கூக்கிரலிட்டு மொத்தமாக ஒரு பொட்டலில் வைத்து கும்பிட்டு கரைத்துக் குடித்தார்கள்.

வேற என்னவெல்லாம் செய்யலாம் என்று பெருசுகளெல்லாம் ஒன்று கூடி யோசித்ததில் கொடும்பாவி கட்டி இழுத்து எரிக்கலாமே என்று ஒரு யோசனை வந்தது சரி எத்தைத் தின்றால் பித்தம் தெளியும்ணு அலையுறோம் பேய்க்கும் பாரு நோய்க்கும் பாருன்னாப்புல அதையும்தான் பாத்துருவமே என்று ஏகமனதாக ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

கொடும்பாவி என்றால் வைக்கோலில் குச்சி குருமானை வைத்து பொதிந்து ஒரு மனித உருவம் போல செய்வார்கள்.அதற்கு பேண்ட் சட்டை எல்லாம் போட்டு விட்டு கண் காது மூக்கு வரைவார்கள். கிட்டத்தட்ட சோளக்கொல்லை காவல் பொம்மை போல.

அப்புறம் ஒரே ஒரு பரம ரகசியம் அதற்குள் ஒரு ஓலையில் ஒரு பெயர் எழுதி வைத்திருப்பார்கள். சண்டாளப் பாவிப்பய கேடு கெட்ட பய கிருத்துருவம் புடிச்சவன் குடி கெடுக்கிறவன் ஊரான் பெண்டாள்பவன் அடுத்தவன் குடும்பத்தை குலைக்கிறவன் குசும்பு

படிச்சவன் அந்த ஊரையே கெடுத்து குட்டிச்சுவராக்கிட்டு ரொம்ப நல்லவனா நடிச்சு யோக்கியன் வாரான் சொம்ப எடுத்து ஒளிச்சு வையிங்கிற அளவுக்கு நேரடியா மோத முடியாத பேர் போன அயோக்கிய ராஸ்கல் எவனோ அவன் பெயரை அந்த கொடும்பாவிக்குள் எழுதி வைத்திருப்பார்கள். அந்த பொம்மைக்குப் பெயர்தான் கொடும்பாவி.

அன்றும் கொடும்பாவி ரெடியானது.அதற்கு போட்டுக்கொள்ள பேன்ட் ஷர்ட் எல்லாம் பட்டாளத்துக்காரரே கொடுத்தார். அவர் திருச்செந்தூர் கோவிலுக்கு மொட்டை போடப்போன போது வாங்கிய தொப்பி ஒன்று கிடந்தது. அதையும் அதன் தலையில் அவரே வைத்துவிட்டார்.

அடுத்தது பேர் எழுதும் படலம். அது படிக்கு வீணாப்போன நல்ல மனுஷங்க ஊருக்கு ஒன்றிரண்டு பேராவது இருப்பாங்கல்லா அவங்களோடு வயதுக்கு வராத வெள்ளை மனம் கொண்ட ஒரு சிறுமியையும் சேர்த்து மூவர் குழு அமைப்பார்கள் அவர்கள் மூவரும் சேர்ந்து ஊரை நாறடிக்கும் சிலரில் மஹா துஷ்டன் என்று யாரை நினைக்கிறார்களோ அவனின் பெயரை ரகசியமாக அந்த சிறுமியின் கைப்படவே எழுதி கொடும்பாவிக்குள் வைத்து விடுவார்கள்.

அன்றும் ரகசிய ஆலோசனையில் எடுத்த ஏகோபித்த முடிவுப்படி ஒரு கெட்ட சாதிப் பயலின் பெயரை எழுதி தலைவரிடம் கொடுத்து உள்ளே வைக்கச்சொன்னார்கள். பின்பு கொடும்பாவியை ஒரு பாடையில் தூக்கி வைத்து பெண்கள் ஒப்பாரி வைத்தார்கள்.

தாரை தப்பட்டை மேளம் பேண்ட் வாத்தியம் வேஷம் கரகாட்டம் எல்லாம் முழங்கியது. ஆண்கள் களியல் அடித்து கோலாட்டம் கொக்காட்டம் ஆடினார்கள். பெண்கள் தாயாரம்மா தாயாரே என்று நெஞ்சிலடித்து போலியாக அழுதார்கள். இந்த தாயாரம்மா தாயாரே நிஜமான சாவு வீட்டிலும் நடக்கும். அதிக சொந்தங்கள் இல்லாத துட்டி வீட்டில் பணம் வாங்கிக்கொண்டு பெண்கள் வந்து அழுவார்கள். அதுதான் கூலிக்கு மாரடிக்கிறது என்ற புகழ் பெற்ற பழமொழியானது.

உயரமான பொம்மைகளில் ஆட்கள் நுழைந்து கொண்டு ஆடினார்கள்.அதற்கு ஆலி ஒடக்கு என்று பெயர்.மகன்களாக சில பேர் முன் வந்து நீர்மலைக்குப் போனார்கள். அப்புறம் பாடையை முச்சந்திக்கு தூக்கிக்கொண்டு போய் நிறுத்தினார்கள் பெண்கள் மண்பானையை சுமந்தபடி மூணு சுத்து சுத்தினார்கள் கொடும்பாவியின் தலமாட்டில் நின்று கொண்டு ஒருவர் ஒவ்வொரு சுற்றிலும் தண்ணிப்பானையில் அரிவாள் முனையால் ஓட்டை போட்டார். மூணாவது சுற்றில் பானையை தலைமாட்டில் போட்டு உடைத்து விட்டு பெண்கள் கூடி நின்று கட்டிச்சேர்ந்து ஒப்பாரி வைத்தார்கள். கிரிக்கெட் அணிக்காரர்கள் சிக்ஸர் அடித்ததும் கூடிக்கும்மி அடிப்பார்களே அப்படி இதற்கு கொள்ளிக் குடம் உடைப்பது என்று பெயர். அப்புறம் இறுதி யாத்திரை தொடங்கியது.

மேள தாளம் தாரை தப்பட்டைகளோடு காய்ந்து கருவாடாக கிடக்கும் குளக்கரைக்கு கொண்டு வந்து கொடும்பாவியை சிதையில் வைத்து வாய்க்கரிசி போட்டு பாலூற்றி எரியூட்டினார்கள். சற்று நேரத்தில் கொடும்பாவி சாம்பலானான். நம்ம வழக்கப்படி நாளைக்கு காலையில வந்து சாம்பலை அள்ளி குளத்துல கரைக்கணும். ஆனா கொளத்துல மசுரா கிடக்கு என்றார் பழனி தாத்தா விசனத்துடன்.

மகங்களாக நடித்தவர்கள் நிஜமாகவே மொட்டை போட்டுக் கொண்டார்கள். அனைவரும் ஆல மரத்தடியில் குத்தவச்சு மானத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்கள் நம்பிக்கையோடு. நம்பிக்கைதானே வாழ்க்கை.



வீடுகளில் சுத்தமாக துடைத்து வைக்கப்பட்ட சோத்துச்சட்டி பானைகள் போலவே வானம் ஒரு நெத்திப் பொட்டு அளவு கூட மேகமே இல்லாமல் சுத்தமாக கிடந்தது. குத்தாலத்துப் பக்கம் போனா எங்காவது காட்டுக்குள் செத்துக்கிடக்கும் குரங்கை சுத்தி சோகமாக உக்காந்திருக்கும் குரங்குக் கூட்டத்தைப் பார்க்கலாம் சில வகை சிம்பன்சி மனிதக் குரங்குகள் நெஞ்சிலடித்துக்கொள்ளும் அது போல முட்டுக்காலை கட்டிக்கொண்டு உக்காந்திருந்தார்கள்.

சில சமயங்களில் எரியூட்டு நடந்து கொண்டிருக்கும்போதே சோ என்று மழை பெய்வதும் உண்டாம்.அன்றும் ஆச்சரியமாக லேசாக குளுந்த காத்து வீசியது. தூரத்தில் எங்கோ மழை பெய்வதால் மண்ணின் மணம் காற்றோடு கலந்து வருது என்று மோப்பம் பிடித்து சொன்னான் கார்மேகம். கருத்த மேகம் கூடியது ஆலம் பழ தண்டிக்கு மொத்து மொத்தென்று அங்கொண்ணும் இங்கொண்ணுமாக விழுந்த மழைத்துளி பொல பொலவென்று கொட்டியது.

நம்பவே முடியலை எலே எவனாவது ஆல மரத்துமேல உக்காந்து ஒண்ணுக்கடி க்கானான்னு பாருங்கலே என்ற பழனி தாத்தாவிடம் இல்ல தாத்தா இது மழதான் என்று எல்லாரும் எழுந்து குதியாளம் போட்டார்கள் ஆசை தீர நனைந்தார்கள் கட்டிப்பிடித்து கண்ணீர் வடித்தார்கள். எரிந்து சாம்பலான அந்தக் கொடும்பாவி மகாராசன் நல்லாருக்கணும் என்று வாழ்த்தினார்கள்.

பட்டாளத்து கொண்டசாமிக்குப் பெருமை பிடிபடவில்லை. அப்போதைய ஊர்த்தலைவர் அவர்தான் அவர் கொஞ்சம் அப்படி இப்பிடி இருப்பார். பெண்கள் விஷயத்தில் ரொம்ப வீக். கேண்டீனில் மிலிட்டரி ரம் வாங்கி வந்து குடிகார மட்டைகளுக்கு ஊத்தி மட்டையாக்கி விட்டு ரவைக்கு அவன் வீட்டுலேயே படுத்து எழுந்து வருவார். அவர் காசு பணம் உள்ளவர் தாராளமாக செலவு செய்வார். அசந்தால் அடுத்தவன் பொஞ்சாதியில் இருந்து அவன் அசையும் அசையா சொத்துகள் அனைத்தையும் ஆட்டையைப் போட்டு விடுவார். மித்தபடிக்கு நல்ல யோக்கியமான மனுஷன்தான்.

அன்றும் கூட பட்டாளத்துக்காரர் கொடும்பாவி கட்டி எரிக்கும் எல்லா செலவையும் அவரே ஏற்றுக் கொண்டார். முதல் ஆளாக பாடையைச் சுமந்து கொன்டு போனதும் மொட்டை போட்டுக் கொண்டதும் அவர்தான். எலே சவுந்தரு குலுக்கைக்கு அடில அஞ்சு

பாட்டல் ரம் இருக்கு எடுத்துக்கிட்டு ஊர் மடத்துக்கு வந்துரு. அடே செல்லச்சாமி நீ போயி டவுண்ல ஆடு மாடு கோழி காடை கவுதாரின்னு ஹோட்டல்ல கவுச்சி என்னமெல்லாம் கிடைக்குமோ அம்புட்டையும் வாங்கியா என்று ஏவி விட்டார்.சிறுசிலிருந்து பெரிசு வரை ஆண் பெண் பேதமில்லாமல் மழையில் ஆனந்தக் கூத்தாடினார்கள். கொளத்துக்கு தண்ணி வந்து கொண்டிருந்தது.

ஊர் பொது மடத்தில் குடியும் கும்மாளமுமாக இருந்த போதுதான் குப்புசாமியின் எட்டு வயது மகள் ஊர் மடத்துக்கு வந்தாள். யப்பே அம்மெ உன்னைய மானங்கெட்ட வசவு வஞ்சு உரிச்சு உப்பத் தடவிக்கிட்டு இருக்கா நீ இங்கன கூத்தடிச்சிக்கிட்டு இருக்கியா, நீ போடா கண்ணு அப்பன் சித்த ஒடத்துல ஒடியாந்திருதேன். இருட்டுல பாத்து பய்யப்போடா. அம்மெ உன்னக் கையோட கூட்டியாரச் சொன்னா என்றவள் பட்டாளத்துக்காரரை பார்த்ததும் ஒரு கணம் தயங்கி நின்றவள் தாத்தா உங்க பேரு கொண்டசாமிதானே நான் அந்த வைக்கல் பொம்மைக்குள்ள வச்ச தாள்ல எழுதும்போது முண்டசாமின்னு எழுதிட்டேனா அப்புறம் நம்ம பாட்டிதான் திருத்தி கொண்டசாமின்னு எழுதினாங்க தெரியுமா என்றாள். பாட்டி என்று அவள் குறிப்பிட்டது மிலிட்டரியின் சம்சாரம் கல்யாணியை.

அந்தப் புள்ளையின் அப்பங்காரன் முழி முழின்னு முழிக்கான் குட்டு உடைஞ்சு போச்சேன்னு அடி பாதகத்தி பெத்தபுள்ள குடியைக் கெடுத்துட்டாளே என்று அம்புட்டுப் பேரும் பதறிப்போக, பட்டாளத்தான் ஆடிப்போனான். கெதக் என்று நெஞ்சு பட படத்தது. கொடும்பாவிக்குள் அவர் பெயர்தான் எழுதி வைத்திருக்கிறார்கள். இந்த உண்மையை ஒரு குழந்தை கொள்ளிக்குடம் உடைத்தது போல எல்லோர் முன்பும் உடைத்து விட்டாள். மிலிட்டரி கொண்டசாமி ஊர்த்தலைவர் பெரிய மனுஷன்கிற பிம்பம் எல்லாம் மண் பானைகளாக உடைந்து சிதறியது.

இதுக்கு நம்ம சம்ஸாரம் கல்யாணியும் உடந்தை என்பது புத்தியில் உரைத்ததும் உசுரோடு தன்னை தீ வைத்து கொளுத்தியது போல் துடித்துப் போனார் மிலிட்டரி. அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை அப்போ சற்று முன் குளக்கரையில் எரிந்து சாம்பலானது தான் தானா. கொடும்பாவி கட்டி கொளுத்தும் அளவுக்கு இம்புட்டு மோசனானவனா நான்.

ஒரு அரக்கிளாஸ் மிலிட்டரி ரம்முக்காக அம்புட்டுப் பயகளும் நமக்கு ஒத்து ஊதி ஜால்ரா போட்டு நம்மளை ஏமாத்தி இருக்கானுவளே என்று அர உசுரா எந்துறிச்சு தடுமாறி பய்ய பய்ய நடந்து போனார் போனவர் போனவர்தான்.

அந்தப் பொய்யான கொடும்பாவியக் கொளுத்தின அதே எடத்துலதான் நிஜமான கொடும்பாவி என்னையும் கொளுத்தணுமென்று எழுதி வைத்து விட்டு நாண்டுக்கு நிண்ணு செத்துப்போனார் மிலிட்டரி.

அவரை எரியூட்டிவிட்டுத் திரும்பும்போதும் மழைன்னா மழை அப்படி ஒரு அடை மழை. ஆனா மொத நாள் கொடும்பாவிக்கு நடந்தது போல எந்த ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் எதுவுமின்றி ஊரும் உறவும் கனத்த இதயத்தோடு திரும்பினார்கள்.



சிறுகதை

கிட்டி

லஷ்மி சரவணகுமார்

ஓவியம்: பிரேம் டாவின்ஸி

மழைக்கு விரித்திருந்த அழுக்கான கோணியின் அடியிலிருந்து மருண்டு விருட்டென விலகி ஓடிய பூனையை மணிமாறன் ஆத்திரத்தோடு எட்டி உதைத்தான். தனது இடது காலில் அப்பூனை நகத்தால் கீறியிருந்த இடத்திலிருந்து கசிந்து கொண்டிருந்த குருதியை எரிச்சலோடு எச்சில்வைத்து துடைத்துக் கொண்டவன் பூனை ஓடிய திசை நோக்கி மோசமானதொரு வசையை உதிர்த்தான். உடைமாற்றிக் கொண்டு குடிசைக்குள் ஈரம் படாத இடமாகத் தேடி துணிகளை விரித்துப்படுத்துக் கொண்டான். இந்த நீண்ட மழையின் குளிருக்கு அடைக்கலம் வேண்டி அவனைப்போலவே தப்பி வந்திருந்த அப்பூனை தூரத்திலிருந்து எழுப்பிய மியாவ் ஒலி மழைச் சத்தத்தில் அவனை எட்டாமல் போனது.

பரந்த இப்பூமிப் பந்தில் அவனுக்கென மிஞ்சியிருக்கும் ஒற்றைக்கொரு போக்கிடம் அந்த சின்னஞ் சிறிய குடிசைதான். பல வருடங்களுக்கு முன் அவன் சிறுவனாயிருக்கையில் அவனது அப்பா கட்டியிருந்த அந்தக் குடிசை காற்றிலும் மழையிலும் வெயிலிலும் நிறையவே சிதிலமடைந்திருந்தது. இந்த மழை அந்தக் குடிசைக்கென மிச்சமிருக்கும் உயிரையும் தன்னோடு கரைத்துக் கொண்டிருந்தது. கனவுகளும் லட்சியங்களும் இல்லாத சிறுவனாய் இந்தக் குடிசைக்கு முன்னால் விளையாண்டுத் திரிந்த அவனது கடந்த காலம் எல்லோராலும் கைவிடப்பட்ட அவனது இந்தக் கொடும் தனிமையில் பெரும் சுமையென நிழலாடியது.

பத்து வருடங்களுக்கும் மேலாக சிறையிலிருந்தவன் தன் தண்டனைக் காலம் முடிந்து விடுதலையாகி வந்த போது அவன் வளர்ந்த இந்த ஊரும் மனிதர்களும் அந்நியமாகிப் போயிருந்தார்கள். பலர் புதிய முகங்களாய் இருந்தனர், அறிந்த முகங்களாய் இருந்தவர்களும் அடையாளம் கண்டு விலகிப் போனார்கள். மனிதர்களை அவர்களது பிழைகளின் வழியாக மதிப்பிடத் துவங்கினால் இங்கு ஒவ்வொருவருமே தனித்திருக்க வேண்டியவர்கள்தான் என்கிற யதார்த்தம் புரியாமல் தான் அந்த ஊர்க்காரர்கள் மணியை விட்டு ஒதுங்கிச்



சென்றார்கள். சிறை வாழ்வின் தனிமை அவனது கடந்த காலத்தோடு அவனை முடிச்சிட்டு வைத்திருந்தது. தான் வாழ்ந்த ஊரும் அதன் மனிதர்களும் முற்றிலும் மாறிப் போனது அவனையே அவனுக்கு புதிதானவனாக காட்டுவது போலிருந்தது.

குடிசைக்குள் சொட்டிக் கொண்டிருந்த மழைக்கு இடம் விட்டு ஓரமாக படுத்திருந்தவனுக்கு டீகடையில் வாங்கிய ப்ரெட் ஆம்லெட்டின் ஒரு துண்டு மீதமிருந்தது நினைவிற்கு வந்தது. நள்ளிரவிற்கு மேல் வரும் பசிக்கு அதைச் சாப்பிடலாமென படுத்திருந்தவன் இருட்டில் பாத்திரங்கள் உருட்டப்படும் சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்தான். அவன் துரத்திய பூனை, அவன் மிச்சம் வைத்திருந்த ப்ரெட் ஆம்லெட்டை தின்று கொண்டிருந்தது. தூக்கம் கலைந்த ஆத்திரத்தில் அதை விரட்டினான் மணிமாறன்.

பயந்து ஓடிவிடும் என்ற அவனது கணிப்பைப் பொய்யாக்குவது போல் அது அவன் மேல பாய்ந்தது. கோபத்தின் உச்சத்தில் அப்பூனையை கழுத்துடன் பிடித்து தூர வீசினான். கீழே விழுந்த பூனை அதே வேகத்தில் எழுந்து ஒரு சிறுத்தையின் தீவிரத்தோடு அவனைப் பார்த்து சீறியது. இருளில் அதன் கண்களில் தெரிந்த ரௌத்திரம் அக்னிக் குமிழ்களாய்... வலித்ததைக் கவனித்த மணிக்கு அந்த அக்னி பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன் தனது கண்களில் தெரிந்த அதே அக்னிக் குமிழை நினைவுபடுத்த அவசரமாக வாரிச் சுருட்டி எழுந்து பூனையை நெருங்கினான்.

இருவரது கால்களிலும் வேட்டைக்கான ஆயத்தங்கள் தெரிந்த போதும் அந்த அகால வேளையில் அவனோடு மல்லுக்கட்டு விரும்பாத பூனை குடிசையின் மூங்கில் கதவு வழியாய்த் தாவிக்குதித்து தப்பிச் சென்றது... ''சனியன், மனுசப் பயதான் நம்மள டார்ச்சர் பன்றான்னா இதும் உசுர வாங்குது... ச்சை..'' என்றபடியே படுக்கையாக விரித்திருந்த துணியை மீண்டும் ஒருமுறை சரி செய்து கொண்டு படுத்தான். பூனையின் வாயில் அகப்பட்டு எஞ்சி ஆங்காங்கு சிதறியிருந்த பிரட் ஆம்லெட்டின் துண்டுகளிலிருந்து அது கெட்டுப் போனதற்கான வாடை எழும்பியது.

பெருங்களத்தூர் சதானந்தபுரத்தில் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறவர்களுக்கு ஆள் பிடித்துத்தரும் ஏஜென்ட்டான ராஜாஜியை இரண்டொரு தினங்களுக்கு முன் தற்செயலாக பார்த்த மணிமாறன் தனக்கொரு வேலை ஏற்பாடு செய்யும்படி கேட்டிருந்தான். இருபது வருடங்களுக்கு முன் வெளியூரிலிருந்து வந்த ராஜாஜிக்கு மணிமாறன் தான் ஒரு டெய்லர் கடையில் வேலை வாங்கி தந்தான்.

ஊரில் நல்ல செல்வாக்குடன் இருந்த மணிமாறன் ஒரு முக்கிய கட்சியின் அப்பகுதியின் சிறு பொறுப்பிலிருந்தான். கட்சி வேலைகளில் அவன் காட்டிய ஈடுபாடு காரணமாய் மக்களிடையே நல்ல மதிப்பிருந்தது. தன்னிடம் உதவியென்று வந்தவர்களுக்கு யோசிக்க ாமல் உதவி செய்யும் இயல்புடைய மணிமாறனுக்கு அதே இயல்புதான் அவனை சிறைக்கும் அனுப்பப் போகிறது என்பது அன்று புரியவில்லை.

சண்முகம் டெய்லர் ஷாப்பை ''ராஜாஜி மென்ஸ்ஸ் பெஷலிஸ்ட் டெய்லர்ஸ்'' என்று மாற்றும் அளவிற்கு ராஜாஜி வளர்ந்திருந்தான். நீண்ட காலத்திற்குப் பின் மணிமாறனை பார்த்தாலும் உடனடியாக அடையாளம் கண்டு கொண்டு, ''எப்டிணே இருக்க, எப்பவந்த'' என்று ஆறுதலாகப் பேசினான். மணிமாறனுக்கு மனமும் உடலும் கூசிப் போனது. யாருக்கும் தன்னை அடையாளம் தெரியாமலிருப்பது வருத்தமாக இருப்பது போய் இப்பொழுது அது மிகவும் தேவையாக இருந்தது.

''என்னண்ணே ஒரு மாதிரி பாக்குற.. என்னதான் இன்னிக்கு நான் வளர்ந்துட்டாலும் ஒனக்கு நான் அதே பழைய ராஜாஜிதான்.'' என்று சிரித்தான். ''எனக்கு ஏதாச்சும் வேல இருந்தா சொல்லு ராஜா. மார்க்கெட்ல அங்க இங்கன்னு கேட்டேன்.. ஒருத்தனும் வேல குடுக்க மாட்டேங்குறான்...'' என்று விரக்தியுடன் மணிமாறன் கேட்க 'இதுக்கு ஏண்ணே கூச்சப்படற... நான் பாத்துக்கறேன்..' என ராஜாஜி நம்பிக்கையளித்தான்.

வீடு திரும்பிய மணிக்கு, ராஜாஜியின் கண்களில் தெரிந்த கருணை நிஜமா போலியா? ஒருவேளை தன் மீதான ஏளனமாக இருந்திருக்குமா என பலவாறாக யோசனைகள். அப்படி யோசிக்கும் பொழுதெல்லாம் மனதில் கசப்பின் சுவை ஒரு பங்கு கூடிவிடுவதை தவிர்க்க முடியவில்லை. ''இந்த யோசனை எல்லாம் அப்ப இருந்திருந்தா என் வாழ்க்க இப்பிடி ஆகி இருக்காதுல்ல...' அவனுக்குள்ளிருந்த இன்னொரு அவன் தூங்க விடாமல் செய்யும் குரலை எழுப்பினான். 'அந்த பொம்பளைய காப்பாத்த போய் நான் கொலகாரனாகிட்டேன், என் வள்ளி கூட என்ன புரிஞ்சுக்காம போய்ட்டா'' என்று தன்னுடனேயே பேசினான்.

துக்கம் பசியை மீறிச் சென்றதால்தான் வாங்கி வந்திருந்த பிரிஞ்சி சாதத்தைப் பிரிக்கக் கூட மனமின்றி அப்படியே விட்டு விட்டான். குழப்பத்தால் வீழ்த்தப்பட்டிருந்தவனின் கவனத்தை வீட்டினுள்ளிருந்து வந்த பூனையின் சத்தம் திசை திருப்பியது. இம்முறை அவன் எதையோ எதிர்பார்த்தவனாக வீட்டிற்குள் சென்றான். அதே பூனை மீண்டும் அவனது உணவுப் பொட்டலத்தைப் பிரிக்கும் முயற்சியோடு தன் காலால் அதனை தட்டி உதைத்துக் கொண்டிருந்தது. ஒருவித அயர்ச்சியோடு அதனைப் பார்த்த மணி, 'உனக்கு என்ன வேணும்? என்னோட உணவு தான... இந்தா நீயே திண்ணு..' என சொல்லியபடியே பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்தான்.

அவனையும் உணவுப் பொட்டலத்தையும் பார்த்தபடியே பூனை தன் குட்டி நாக்கால் உடலை சுத்தம் செய்து கொண்டது. ''உன்னுடன் போராடி உணவைப் பெறுவதில் தானே எனக்கு ஆனந்தம்'' என்பது போல் உணவைத் தொடாமல் அமைதியாக ஒரு மூலையில் பூனை அமர்ந்து கொள்ள மணியும் எதுவும் செய்யாமல் படுத்துவிட்டான். நள்ளிரவில் ஒருமுறை உறக்கம் களைந்து எழுந்து பார்த்தான். உணவு அப்படியே இருக்க, பூனைதான் அமர்ந்திருந்த இடத்திலேயே ஒரு துறவியைப்போல் கண் மூடி உறங்கிக் கொண்டிருந்தது.

மறுநாள் அதிகாலையில் கிளம்பி ராஜாஜி கூறிய இடத்திற்கு வந்து சேர்ந்தான். இன்னும் பனி விலகாத அந்த காலை வேளையில் ராஜாஜி தலையில் குரங்கு குல்லா அணிந்து கொண்டு கையில் டார்ச்லைட்டுடன் நின்று கொண்டிருந்தான். ''வாண்ணே... ஏன் லேட்டு? கொஞ்ச நேரத்துல வண்டி வந்துரும். நீ என்ன பண்ணனும்னா, கஸ்டமர்ஸ கூட்டிட்டு போய் நம்ம ''மங்களா நகர்'' பிளாட்ட சுத்தி காமிச்சுட்டு, இன்னிக்கு முழுசும் அவங்க கூட இருக்கனும். டீ, சாப்பாடு எல்லாம் அரேஞ்ச் பண்ணிருக்கு. அவங்களுக்கு எல்லாம் குடுத்துட்டு மதியத்துக்கு மேல அங்கருந்து கெளம்பி நேரா நம்ம கிள்ளிவளவன் அரிசி கடைக்கு அவங்கள கூட்டிட்டு வந்துரணும்.

முக்கியமா பக்கத்துல சுடுகாடு இருக்குற விசயம் கஸ்டமர்ஸுக்கு தெரிஞ்சுக்காமப் பாத்துக்கனும். அண்ணாச்சி மத்த விசயத்த பாத்துப்பாரு. வாரத்துக்கு ஆறுநாள் வேலை இருக்கும். செவ்வாய்க் கிழமை மட்டும் லீவு. டெய்லி பேட்டா கணக்குப் போட்டு நான் உனக்கு மாசம் முடிஞ்சதும் குடுத்துருவேன்'' என்று ராஜாஜி விலாவரியாக அவனுக்கு வேலையை எடுத்துச் சொல்ல மணி கவனமாகக் கேட்டுக் கொண்டான். ''அண்ணே அப்பப்ப சீரியல் நடிகையெல்லாம் ஷூட்டிங்கு வருவாங்க, ஜாலியா இருக்கும்...'' என்று கண்சிமிட்டிய ராஜாஜியை அருவருப்பாக பார்த்தான் மணிமாறன். நாற்பத்தைந்து வயதை எந்தவொரு அர்த்தமுமில்லாமல் வாழ்ந்து கழித்துவிட்ட மணிக்கு இப்போது எதன் மீதும் பிடித்தமில்லாதிருந்தது.

''சென்னைக்கு மிக அருகில், விமான நிலையத்திலிருந்து பத்து நிமிட தொலைவில் உங்களுக்கான இல்லம். மங்களா நகரில் உங்களுக்கான அதிர்ஷ்டம் காத்திருக்கிறது, உடனே வந்து முன்பதிவு செய்து கொள்ளுங்கள்'' என்று புகழ் பெற்ற சீரியல் நடிகர்கள் பேருந்தின் தொலைக்காட்சியில் பேசிக் கொண்டிருந்தனர். மங்களா நகரை பார்வையிட வந்தவர்களை ஏற்றிக் கொண்டு தனது முதல் நாள் வேலையைத் தொடங்கினான் மணிமாறன்.

நாள் முழுதும் நின்றுகொண்டே அனைவருக்கும் மங்களா நகரின் அனைத்து பிளாட்டுகளையும் சுற்றிக் காண்பித்து அவர்களது எண்ணற்ற கேள்விகளுக்கு பதிலளித்து அவர்களுக்கு தண்ணீர் கொடுத்து, சிற்றுண்டி கொடுத்து கழிப்பறை அழைத்துச் செல்வது என அனைத்து வேலைகளையும் அவன் தனியாக செய்ய வேண்டியிருந்தது. வந்தவர்களில் பெரும்பாலானோர் நடுத்தர வர்க்கத்தினர்.

தனது மகளுக்கு திருமணச் சீராகவோ, மகனின் எதிர்காலத்திற்காகவோ மனை வாங்க வந்திருந்த பெற்றோர்களின் அன்பும், புதுமண தம்பதியினரின் பூரிப்பும், சிறுகுழந்தைகளின் குதூகலமும் மணிமாறனை நிலைகுலையச் செய்தன. தான் வாழ்வின் எந்த நிலையில் நின்று கொண்டிருக்கிறோம் என்று புரியாமல் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் முகம் கோணாமல் பதிலளித்தான். அவர்களை அண்ணாச்சியின் ஆஃபீஸில் இறக்கிவிட்டு விட்டு ராஜாஜியிடம் சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்தபோது உலகம் தன்னிடமிருந்த எல்லா மகிழ்ச்சியையும் பிடுங்கிக் கொண்ட ஏமாற்ற உணர்வு பெரும்பாரமாய் அழுத்தியது.

தன்னை மீறி கசிந்த கண்ணீர்த் துளிகளைப் பொருட்படுத்தாமல் தலையணையில் முகம் புதைத்து உறங்கிப் போனான். அவனது கடந்த காலம் கனவு போல் அவன் கண்முன் விரிந்தது. ஒன்றோடொன்று தொடர்பில்லாமல் பல காட்சிகள் தோன்றி மறைந்தன. அதில் வள்ளியின் முகமும் தோன்றி மறைந்தது.

திடீரென்று காலடியில் ஏதோ சுரண்டுவது போல் தோன்ற திடுக்கிட்டு எழுந்தவனை பார்த்து கத்தியது பூனை. அதன் கூரான பற்களுக்கு நடுவே குட்டிக் குட்டியாய் இப்போதுதான் அரிசி மணிப்பற்கள் வளரத் துவங்கியிருந்தன. மணிமாறன் பூனையை வெறித்துப் பார்த்தான். அது தொடர்ந்து கத்தியது. எழுந்து சட்டையை அணிந்து கொண்டவன் கதவைத் திறந்து பார்த்தபோது நேரம் நடுநிசியை கடந்திருந்தது. தெருவில் ஒன்றிரண்டு நாய்களைத் தவிர வேறு நடமாட்டம் இல்லை. மணிமாறன் பூனையை இரண்டு கைகளாலும் இறுகப்பற்றிக் கொண்டு வேகமாக நடந்தான். பூனை அவனது பிடியில் லாவகமாக அமர்ந்திருந்தது.

வீட்டிலிருந்து அவன் நடையின் தூரம் அதிகரிக்க, பூனை அவசரமாய் உடலை அசைத்து அச்சத்தில் கத்தத் துவங்கியது... 'இந்த ஊருல நிறைய வீடு இருக்கு... வேற எங்கியாச்சும் போ... இனிமே என் எடத்துக்கு வராத...' என்றபடியே அதனை ஊரின் கடைசி எல்லையில் விட்டான்... கீழே குதித்து நின்ற பூனை ஒருமுறை அவனைப் பார்த்து துயர்மிக்க குரலில் கத்தியது. திரும்பிப் பார்க்காமல் வேகமாய் வீட்டை நோக்கி நடந்தவனின் நாசியை தாக்குவது போல் தூரத்திலிருந்து பிணம் எரியும் வாடை காற்றில் கலந்து வந்துகொண்டிருந்தது.

மறுநாள் மீண்டும் அதே வேலை. புதிய கஸ்டமர்கள். மங்களா நகர் மனைகளை வாங்க வந்தவர்களுக்கு மனைப்பகுதிகளை காண்பித்து கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு சிறுமி பூனை பொம்மையை வைத்து விளையாடிக் கொண்டிருந்தாள். மணிமாறனுக்கு ஒரு நொடி தன் வீட்டிற்கு வந்த பூனையின் பிம்பம் தோன்றி மறைந்தது. அடுத்த நிமிடமே அவன் அதையும் மறந்தும் போனான். இரண்டு மூன்று நாட்கள் இயல்பாகவே கழிந்தன.

அவனும் தூங்கி எழுந்து வேலைக்கு சென்று வீடு திரும்பினான். அப்படி திரும்புகையில் தன்னையுமறியாமல் தன் மனம் எதையோ தேடுவதை உணர்ந்த மணிமாறன் அது என்னவென்று புரியாமல் தவித்தான். அன்றிரவு திடீரென உறக்கம் கலைந்து எழுந்தவன் பூனை கத்தும் சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தபோது அங்கு பூனையில்லை. அடுத்தடுத்த நாட்களும் பூனையை நினைவுப்படுத்துவது போன்ற நிகழ்வுகள் நடந்தன.

டீ கடையில் ப்ரெட் ஆம்லெட் வாங்கி வந்தவன் தன்னையுமறியாமல் ஒரு துண்டை மீதம் வைத்து விட்டு உறங்கச் சென்றான். நடு இரவில் மெதுவாக கண் விழித்து அந்த பூனை வந்திருக்கிறதா என்று பார்த்தான். அங்கு பூனை இல்லை. அதன் குரல் கேட்கவில்லை. அதன் சுவடுகள் அடியோடு மறைந்து போயிருந்தன.

சில நாட்கள் கழித்து மங்களா நகருக்கு ஆட்களை அழைத்துசென்ற பொழுது வழியில்

அவன் பூனையை விட்டு வந்த இடத்தைக் கடந்த போது அவனையுமறியாமல் அவனது கால்கள் அத்திசையில் திரும்பின. வேலையை மறந்து அவன் பூனையைத் தேடியதைப் பார்த்து அவனுடன் வந்தவர்கள் சந்தேகமாக அவனைப் பார்த்தனர். மனை பார்க்க வந்தவர்கள் மணிமாறன் தங்களுக்கு சரியாக சுற்றிக் காட்டவில்லை என்று கிள்ளி வளவனிடம் புகாரளித்தனர்.

'அண்ணே நீ ரொம்ப கேட்டன்னு தான் இந்த வேலைக்கு உன்னைய சொன்னேன். நீ என்னடான்னா இப்டி பண்ற'' என ராஜாஜி அவனிடம் கோவமாகக் கேட்க, ''ஒண்ணுல்லடா... இன்னிக்கி என்னமோ மனசு சரியில்ல'' என்று கூறிவிட்டு வீட்டிற்கு கிளம்பினான் மணிமாறன். வழி நெடுகிலும் பூனையை தேடிக் கொண்டே வந்தான். தன் வீட்டைச் சுற்றி எங்கும் தேடினான். அது தென்படாது போன ஏமாற்றத்தில் மனம் கனத்துப் போனது.

எதை தனது நிம்மதிக்கு கேடு விளைவிப்பதாக நினைத்தானோ அதே உயிருக்காக இன்று அவன் தவித்துக் கொண்டிருந்தான். அது நடந்துபோன தடங்களைத் தேடினான். அதன் குரல் கேட்டாற்போல் பலமுறை எழுந்த போதும் அது இல்லாமல் போன வெறுமை மட்டுமே மிஞ்சியிருந்தது. எவ்வளவு கடிந்து கொண்டாலும் உரிமையோடு தன்னைச் சுற்றி வந்த அந்த ஜீவனை வெறுத்து விரட்ட எப்படித் தோன்றியது என்று தன்னைத் தானே பழித்தான். ''எல்லோரும் கைவிட்டுச் சென்ற உன்னுடன் நான் மட்டும் தானே இருந்தேன். என்னை நீ ஏன் கைவிட்டாய்'' என்று அந்த பூனை கேட்பது போலிருந்தது.

''ஒரு வேளை அந்த பூனைக்கு எதாவது ஆபத்து நேர்ந்து மடிந்து போயிருந்தால்'' என்று நினைத்த போதே அவன் கண்கள் கலங்கின. நெடு நாட்களுக்குப் பிறகு கோவில் ஒன்றை கடந்த பொழுது ஒரு நொடி நின்று கைக் கூப்பி வேண்டினான். ''எங்கருந்தாலும் திரும்ப என்கிட்ட வந்துரு'' என்று வேண்டினான்.

மறுநாள் காலை வேலைக்கு செல்ல தயாராகிக் கொண்டிருந்தான். வாசலில் மண் அடுப்பில் நெருப்பு மூட்டி அதில் தண்ணீர் சுடவைத்தான். முந்தைய இரவு அழுதது அவன் மனதை லேசாக்கியிருந்தது. அவன் குளிப்பதற்காக தயாரானபோது ஒரு சத்தம் கேட்டு திரும்பினான். அங்கு பூனை நின்றிருந்தது. மிகவும் பலவீனமாக உடல் முழுதும் காயங்களுடன் வந்து நின்ற அதைப் பார்த்ததும் மணிமாறன் கலங்கிப் போனான். அதை வாரி அணைத்துக் கொள்ள நெருங்கியபோது அது அச்சத்தோடு அவனைப் பார்த்து சீறியது.

அவசரமாக குடிசைக்குள் ஓடிப்போய் முந்தைய இரவு பூனைக்கென மிச்சம் வைத்திருந்த பிரட் ஆம்லெட்டை எடுத்து வந்து அதை நோக்கி நீட்டினான். சில நொடிகள் தயக்கத்தோடு அவனைப் பார்த்தபடியே நின்ற பூனை மெல்ல நடந்து வந்து பிரட் ஆம்லெட்டைக் கவ்விக் கொண்டது. நெற்றியிலும் முதுகிலுமிருந்த காயத்தை விரல்களால் அவன் தொட்டபோது பூனை உடலை சிலிர்த்தது. ஆனால் அவனிடமிருந்து விலகவில்லை. தொலைந்த மகிழ்வெல்லாம் திரும்ப கிடைத்தது போல் உணர்ந்தவன் அன்று உற்சாகமாக வேலைக்குச் சென்றான். வீடு திரும்புவதற்கு ஒரு காரணம் கிடைத்து விட்டதாக உணர்ந்தான். அன்று மாலை ப்ரெட் ஆம்லெட்டும், கோழிக் கறிதுண்டங்களும் வாங்கி வந்தான். அதை பூனையின் முன் வைத்தான். நெடுநேரமாகியும் அது உணவைத் தொடவில்லை. சற்று யோசித்தவனாக மணிமாறன்,

ப்ரெட் ஆம்லெட்டின் ஒரு துண்டத்தை கையில் எடுத்தான். உடனே பாய்ந்து வந்து அதைப் பிடுங்கித் தின்றது பூனை. அவன் சிரித்தான். அவர்கள் இருவரின் விளையாட்டு தொடர்ந்தது. பிரட் ஆம்லெட்டை பாதியிலேயே விட்டு விட்டு தலையை உயர்த்தி அவனது கண்களைப் பார்க்க, அவன் ஒரு கையால் அப்பூனையை வாரி எடுத்தான். மருண்ட கண்களால் தன்னை உற்று நோக்கிய அந்தப் பூனையை முத்தமிட்டவன் அதற்கு கிட்டி என பெயரிட்டான்.



ஓவியம்: மருது

சிறுகதை

வேட்டைப் பூதம்

என்.ஸ்ரீராம்

ஆள்காட்டிகள் பய ஒலி எழுப்பின.வங்குநரிகள் அருகாமையில் ஊளையிட்டன. கிழக்குத்திசைக் கொண்டல் பெருங்காற்றாய் மாறி நெடும்பனைகளை அசைத்தது. அமராவதி ஆற்றின் மேற்குக்கரை மூங்கில் தூர்களிடையே சென்ற மேட்டுத் தடத்தில் நான் அப்பாவைப் பின்தொடர்ந்து நடந்துக் கொண்டிருந்தேன். அப்பாவுக்கு முன்னே கிட்டு வண்ணாரும் சடைய மூப்பரும் போய் கொண்டிருந்தனர். எனக்குப் பின்னே கந்த மாதாரியாரும் சின்னா நாவிதரும் மாகாளித் தோட்டியாரும் வந்துக் கொண்டிருந்தனர். எல்லோர் கையிலும் குத்தீட்டியும் வல்லயமும் இருந்தன.எங்கும் ஆளின் முகம் ஆளுக்குத் தெரியாத அமாவாசை இருள். நடுநிசியை நெருங்கிக் கொண்டிருக்கும் நேரம். மாகாளித் தோட்டியார் பின்னாலிருந்து தணிந்த குரலில் பேசினார்.

''அந்த சப் கலெக்டரு ஒரு பேடி... அவ வந்திருப்பான்னு இந்த அகாலத்துல நாம போறது வீணான வேலயின்னு நெனைக்கறே... அப்புறம் வேட்டப்பூதம் வருமுங்கறதுக்கும் என்ன உத்தரவாதமிருக்கு...?''

முன்னாலிருந்து சடைய மூப்பர் பதில் சொன்னார்.

''வேட்டப்பூதம் இன்னிக்கு வரத்தான் போவுது... அந்த முட்டாள் சப் கலெக்டர அடிச்சுக் கொல்லத்தான் போவுது... அதெ நாம ரெண்டு கண்ணாலப் பாக்கத்தாம் போறோம்...''

கீழே ஆற்று மடுவில் நீந்தியபடி இருந்த தண்ணீர்க் கோழிகள் ஆளின் அரவம் கண்டு பறந்து எட்ட போயின.எனக்கு தைப் பனிக் குளிர் உடலைச் சிட்டெடுக்க வைத்தது. எல்லோரும் நடந்து கொண்டேயிருந்தோம். திடீரென மேட்டுத் தடம் குறுகி ஒற்றைக்கால் மண்தடமாக மாறியது. இலுப்பைத் தோப்புக்குள்ளே போனது. கருகற்மதில் சூழ்ந்த கருப்பராயன் கோவில் அனாதரவாக கிடந்தது. அப்பா எங்கள் எல்லோரையும் நிறுத்தினார்.

''கலெக்டரு மானஸ்தெ... கண்டிப்பா வருவேநாம இங்கேயே ஒளிஞ்சுக்குவோம்...''

நிலத்திற்கு மேலே வேர் பிதுங்கிய இலுப்பை மரத்தினடியில் எல்லோரும் ஒண்டி

நின்றுக் கொண்டோம். அப்பா கோவிலையே பார்க்கும்படி கட்டளையிட்டார். ஐம்பதடித் தூரத்தில் வேட்டைத் துப்பாக்கி ஏந்தி வீச்சரிவாள் பிடித்து ஏகாந்தமாக எல்லைக் கருப்பராயன் நின்றிருந்தார். கோவிலுக்கு மேற்குப்புறத்தில் ஊர் செல்லும் தடம் அரவமின்றிக் கிடந்தது. சப் கலெக்டர் வருவதற்கான சுவடேயில்லை.

அவ்வப்போது பழந்தின்னி வவ்வால்கள் இலுப்பையின் உச்சியில் மோதும் சப்தம் எழுந்தது.நேரம் செல்ல செல்ல தனிமையும் நிசப்தமும் சூழ்ந்த கோவில்வெளி அமானுஷ்யத்தை தோற்றுவிற்கத் தொடங்கியது. எனக்கு திகில் தன்மைக் கூடிக்கொண்டு வந்தது. இருப்பினும் எல்லோரையும் போலவே பொறுமையாகவே காத்திருந்தேன்.

திடீரென ஊர்த் தடத்திலிருந்து சப் கலெக்டர் வந்து எல்லைக் கருப்பராயனுக்கு முன்னே நின்றார். குழல் துப்பாக்கியை நீட்டி கருப்பராயனை குறிப் பார்த்தார்.

''ஏய் கருப்பராயா... நான் சொன்ன சொல் தவறாதவன்... வந்துட்டேன். உனக்கு தைரியமிருந்தா என்னைக் கொல்ல இப்ப நீ வேட்டைப்பூதத்தை ஏவு பாக்கலாம்...''

எதோ விபரீதம் நடக்கப் போகிறது என்பது மட்டும் உறுதியானது.சப் கலெக்டர் தொடர்ந்து தகாத வார்த்தைகளைச் சொல்லி கருப்பராயனைத் திட்ட ஆரம்பித்தார். அடுத்தகணம் கருப்பராயன் தோள்பட்டை ஓரத்திலிருந்து ஒரு குத்தீட்டி பாய்ந்து வந்து சப் கலெக்டரின் கையைத் தாக்கியது. சப் கலெக்டர் துப்பாக்கியிலிருந்து பிடி தளர்த்தினார். கைகளை வலி மிகுதியால் உதறினார். துப்பாக்கியும் அவர் உடம்போடு தொங்கி நிலத்தைக் குறிப் பார்த்தது. சப் கலெக்டர் சுதாரிப்பதற்குள் வல்லயம் ஒன்று பாய்ந்து வந்து துப்பாக்கியை பிய்த்து அந்தரத்தில் வீசிற்று. சப் கலெக்டர் நிராயுதபாணியானார்.இருளில் எங்கிருந்தோ தோன்றிய வேட்டைப்பூதம் கருப்பராயனுக்கும் சப் கலெக்டருக்கும் இடையே குதித்திறங்கி நின்றது. நாங்கள் எல்லோரும் திடுக்கிட்டு என்ன செய்வதெனத் தெரியாமல் அப்பாவைப் பார்த்தோம். அப்பா சலனமில்லாமல் வேட்டைப்பூதத்தையே நோக்கியபடி இருந்தார்.

★★★

தொட்டிக்கட்டு வாசல் திண்ணையில் உறக்கம் வராமல் படுத்திருந்த நான் திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தேன். இந்த அகாலத்தில் இந்த சம்பவம் ஏன் நினைவுக்கு வருகிறது எனக் குழப்பம் ஏற்பட்டது. பக்கத்துப் பாயில் செல்வியும் பிரீத்தியும் அதற்கடுத்த பாயில் ராணி அத்தையும் ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தனர். எதிர் திண்ணை மரக்கட்டிலில் படுத்திருந்த நல்லசாமி மாமா குறட்டைவிட்டுக் கொண்டிருந்தார். நான் சப்தமெழுப்பாமல் இறங்கி வெளித்திண்ணையில் கயிற்றுக் கட்டிலில் படுத்துறங்கிக் கொண்டிருந்த அப்பாவிடம் போனேன். கட்டிலில் அப்பாவைக் காணவில்லை. சிறுநீர் கழித்துவிட்டு வருவார் எனக் காத்திருந்தேன். அப்பா வரவில்லை. நான் பயந்து போனேன். இந்நேரத்தில் அப்பா எங்கு போயிருப்பார் என்று யோசித்தேன்.

நேற்று அந்தியில் அம்மாவின் பதினாறாம் நாள் காரியம் முடிந்து வீடடைக்கும் சடங்குத் தொடங்கியது. அப்பா தொட்டிக்கட்டு வாசல் திண்ணைத்தூணில் சாய்ந்து உட்கார்ந்து எதைப் பற்றியோ ஆழ்ந்து யோசித்தபடியிருந்தார். முகமும் வாடியிருந்தது. யாரும் எதிர்பாராமல் நடந்த அம்மாவின் திடீர் மரணம் அப்பாவுக்கு பெரிய இழப்பு. அப்பாவை ஆறுதல் படுத்த முடியாது என்று நான் அமைதியாகவே இருந்தேன். அம்மாவின் உயிர் பிரிந்த நேரம் தனிஷ்டா பஞ்சமி நட்சத்திரமான சதயம். சாஸ்திரப்படி ஆறு மாதம் வீடடைப்பு. பங்காளிகளும் மாமன் மைத்துனர்களும்

பச்சைத்தடுக்கும் கம்பந்தட்டும் இலந்தை முள்கொத்தும் தூக்கிக் கொண்டு அம்மாவின் உயிர் பிரிந்த தொட்டிக்கட்டு வாசல் திண்ணையின் வடகோடி அறையின் நடையை அடைப்பதற்காக தயாராயினர். ராணி அத்தையும் செல்வியும் அம்மா பிரியமாக உபயோகித்த சேலைகளையும் பொருட்களையும் எடுத்து வந்தனர். வீடடைக்கும் சீருக்கான சாங்கீயத்தை சின்னா நாவிதரும் கிட்டு வண்ணாரும் முன்னின்று செய்துக் கொண்டிருந்தனர். அப்போது நல்லசாமி மாமா என்னிடம் கேட்டார்.

''ஏம்ப்பா... குமரேசு... நீ நாளைக்கே பெங்களூரு போகப் போறே... வூடு நீக்க இன்னும் ஆறுமாசம் இருக்கு... அதுவரைக்கும் மச்சான் எங்ககூட வந்து இருகட்டுமே...''

''இல்ல மாமா.. அப்பாவ நாங்க பெங்களூரே கூட்டிக்கிட்டுப் போகலாமுன்னு இருக்கோம்...''

அந்தக்கணம் அப்பாவின் முகம் சுருங்குவதைக் கண்டேன். அதன் பின்பு அப்பா புதுமண்பானை நீரில் காசு போடவோ விளக்கைத் தொட்டுக் கும்பிடவோகூட வரவில்லை. வீடடைக்கும் கதவை இழுத்துச் சாத்தும் தருணத்தில் அப்பா சட்டென எழுந்தார். சாத்தும் கதவை தடுத்து உள்ளே நுழைந்தார். யாருக்கும் எதுவும் புரியவில்லை. அட்டாழியின் அடியில் போய் நின்று எம்பி கட்டுக்கோலை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார். ராணி அத்தை சப்தமிட்டாள்.

''ஏண்ணா.. நீங்களே மகன் மருமகளோட... பெங்களூரு போகப் போறீங்க... இந்தக் கருமத்த எதுக்குத் தூக்கிட்டு... இன்னும் மொச வேட்ட ஆச உடுலியா என்ன..?''

எல்லோரும் சிரித்தனர். அப்பா யாரையும் பொருட்படுத்தவில்லை. வீடடைக்கும் நிகழ்வையும் கவனிக்கவில்லை. கட்டுக்கோலையே பார்த்தபடியிருந்தார். இரவுச் சாப்பாட்டின்போது கட்டுக்கோலுடன் என்னிடம் வந்தார்.

''குமரேசுக் கண்ணு... நா ஊரிலேயே தங்கிக்கறேண்டா.. நானே சமைச்சும் உண்ணுக்கிறேண்டா... நாளைக்கு நானு உங்ககூட வரலையிடா...''

எனக்கு கோபம் வந்தது.

''நாங்க உசிரோட இருக்கும்போது நீங்க எதுக்கு இங்க கையால ஆக்கித் தின்னுக்கிட்டு... அனாதையாட்டக் கெடக்கனும்... உங்களுக்கு ஏதாச்சும் ஒன்னுனா... பெத்த அப்பனையே பாக்காத பாவின்னு ஊரு என்னைப் பேசாதா...? பொலம்பாம எங்ககூட வர்ற வழியெப் பாருங்க...''

அப்பா சரியாகக்கூட சாப்பிடவில்லை. வெளித்திண்ணையில் போய் படுத்துக் கொண்டார். நானும் சமாதானப்படுத்த முயலவில்லை. காராட்டுப் பூனை ஒன்று கத்தியபடி மதிலேறிக் குதித்துப் போனது.நான் திரும்பவும் அப்பாவின் கட்டிலோரம் பார்த்தேன். கட்டுக்கோலையும் காணவில்லை. அப்பா இனியும் திரும்பி வருவதற்கு சாத்தியமில்லை என்று பட்டது. எனக்குப் பயம் அதிகமானது. வீட்டிக்குள் உறங்குபவர்களை எழுப்பிச் சொல்லவும் தயக்கமாக இருந்தது. வெறிச்சிட்ட வீதிகளில் இறங்கித் தேட முயன்றேன். மின்கம்ப விளக்குகள் மங்கி எரிந்தன. அப்பா ரோசக்காரர். இறங்கிய செயலில் பின்வாங்காதவர். ஏதாவது தப்பான முடிவுக்கு போகாமலிருக்க வேண்டும் என்று மனம் பதறியது.

★★★

ரௌத்ரி வருசத்தின் ஆடி மாசம். பதினெட்டாம் பெருக்கின் வைகறை. கோடைக்காற்று குளிருடன் வீசிற்று. உள்ளூர் முயல் வேட்டையாடிகள் வாசலில் காத்திருந்தனர். அப்பா அம்மாவிடம் சொல்லிவிட்டு கட்டுக்கோலை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். வெளிநடை தாண்டும்போது நான் பின்னாலேயே ஓடிப்போய் அழுதேன்.

''என்னையும் கூட்டிக்கிட்டுப் போங்கப்பா...''

அப்பா கண்டுக் கொள்ளவில்லை. அம்மா என்னை எட்டிப் பிடித்து சமாதானப்படுத்த முயன்றாள். நான் துள்ளியபடி வீறிட்டு அழுதேன்.

''நானும் போறே... நானும் போறே...''

அப்பா மனமிரங்கவில்லை. உள்ளூர் முயல் வேட்டையாடிகளோடு வீதியில் இறங்கிப் போய்விட்டார். அன்று முன்னிரவில் வீட்டுக்கு வந்த அப்பா பச்சைப் பனையோலையில் மடித்த முயல்கறிக் கூறை அம்மாவிடம் கொடுத்தார். நான் முகத்தைத் திருப்பிக் கொண்டேன். அப்பா குளித்து வருவதற்குள் அம்மா முயல்கறியை வடைச்சட்டியில் வறுத்தெடுத்து வந்தாள். அப்பா பிச்சுக்கறியாகப் பொருக்கி என் வட்டிலில் போட்டார். நான் சாப்பிடவில்லை. எழுந்து வெளித்திண்ணையில் போய் உட்கார்ந்துக் கொண்டேன். அப்பா வட்டிலைத் தூக்கிக்கொண்டு நடைப் பக்கம் வந்து நின்றுக் கேட்டார்.

''உன்னோட தகுதாயம்தான் என்னடா...?''

''இனிமேல் மொச வேட்டைக்கு உங்களோட நானும் வருவேன்...''

''தை வேட்டைக்கு உன்னைக் கூட்டிட்டுப் போறேன்... போதுமா...?''

நான் அப்பாவிடம் வட்டிலை வாங்கி பிச்சுக்கறியை சாப்பிடத் துவங்கினேன். அம்மா சிரித்தாள். தை மாதத்திற்காக என்மனம் ஏங்கியது. சதா நான் முயல் வேட்டை குறித்தே பேசிக் கொண்டு திரிந்தேன். கார்த்திகைக் கடைசியில் வளர்பிறை மேல்நோக்கு நாள் பார்த்து அப்பா என்னை கருக்கலில் எழுப்பினார். மிதிவண்டியில் ஊரைக் கடந்து வடக்கே ஊதியூர் மலைக்கு கூட்டிப் போனார். அரிவாளுடன் மலைக்கரட்டுக்குள் நுழைந்தார். கடலைப் புதர் பார்த்து விளாறுகளாக அரக்கி எடுத்தார்.நாருரித்து சீவி அளவு வைத்துத் தறித்து கட்டுக்கோலாக்கினார். மிதிவண்டியை திருப்பிச் செலுத்தி நேராக எல்லைக் கருப்பராயன் கோவில் வந்து நிறுத்தினார். என்னுடைய கட்டுக்கோலை கருப்பராயன் காலடியில் வைத்து எடுத்து வாழ்த்தி என் கையில் கொடுத்தார். எனக்கு அளவிட முடியாத சந்தோஷம். ஊருக்குள் பெரிய முயல் வேட்டையாடி ஆகிவிட்டதாக கனவு விரிந்தது.

★★★

ஊரின் எல்லா வீதிகளிலும் தேடி விட்டேன். எங்கும் அப்பா தென்படவில்லை. நேரமும் நடுச்சாமம் கடந்து விட்டது. மன உறுதியும் குலைந்தது. இனி இந்த அகாலத்தில் அப்பாவை எங்கு போய் தேடுவது என்கிற குழப்பம் மேலிட்டது. கண் கலங்கி நீர் முட்டியது. ஆள் புழங்காத வீட்டின் வெளித்திண்ணை ஒன்றின் மீதேறி உட்கார்ந்தேன். எல்லைக் கருப்பராயனிடம் மனமுருகி வேண்டினேன்.

''நீயே கதின்னு கெடந்த அப்பாவ... எப்படியாவது திருப்பிக் குடு...''

அந்தக்கணம் எனக்கு அப்பா பழைய முயல் வேட்டையாடிச் சினேகிதர்களைப்



பார்க்கப் போயிருக்கலாம் என்று தோன்றியது. அவசரமாக எழுந்து கிழக்கு வளவில் இருக்கும் கிட்டு வண்ணார் வீட்டை நோக்கி நடந்தேன்.

★★★

எங்கும் தை மாதத்தின் தலை நடுங்கும் குளிர். முதல் சேவல் கூவிற்று. உள்ளூர் முயல் வேட்டையாடிகள் வாசலில் வந்து குழுமினர். வேட்டை நாய்கள் வீதியில் நின்று ஒன்றோடு ஒன்று குரைத்துக் கொண்டிருந்தன. அப்பா வெளித்திண்ணை வாசற்படியில் நின்று உள்ளூர் முயல் வேட்டையாடிகளை நோட்டமிட்டார். நான் அப்பாவிற்கு பின்னால் வந்து நின்றுக் கொண்டேன்.

''என்னப்பா எல்லாரும் வந்தாச்சா... பொறப்படலாமா...?''

உள்ளூர் முயல் வேட்டையாடிகள் நாய்களை உசுப்பேற்ற விசிலடித்தனர். நாய்களும் குரைத்தபடி வேட்டையாடிகளோடு வர ஆரம்பித்தன. குறுக்கு வழியாக அமராவதியின் மேற்குக்கரை மேட்டுத் தடத்தில் ஏறி நடந்து எல்லைக் கருப்பராயன் கோவில் போய் சேர்ந்தோம். வேட்டைத் துப்பாக்கியும் வீச்சரிவாளும் ஏந்திய எல்லைக் கருப்பராயன் பாதத்தில் எல்லோரும் கட்டுக்கோல்களைச் சமர்ப்பித்தோம்.இலுப்பை இலைகளின் நுனியில் பனிநீர் சொட்டிட்டது. முயல் வேட்டைக்கு பண்ணாடியாக முன்னே நின்ற அப்பா கேட்டார்.

''எல்லா வருச மாதிரியே இந்த தை வேட்டையிலும் நாமதான் அதிக மொசலெடுக்கறோம்...கரைவெளிக்கார மொச வேட்டையாடிகள முந்த உடக்கூடாது...''

உள்ளூர் முயல் வேட்டையாடிகளின் குரல் ஒருசேர ஆமோதித்து ஒலித்தோய்ந்தது.. அப்பா கருப்பராயன் பாதத்தில் சூடமேற்றி வழிபாடு செய்தார்.

''ஒருபிடி மண்ணுல உருவா வளர்ந்த உத்தண்ட கருப்பராயா...

பக்கத் தொணையிருந்து பாதுகாப்புக் குடப்பா...

அப்பாங்கற சொல்லுக்கு ஆபத்துல ஓடிவந்து...

பாதுகாத்துக் குடுக்கனுமடா எங்க கருப்பராயா...''

அப்பாவின் பாடலை உள்ளூர் முயல் வேட்டையாடிகள் பின்பாடலாக பாடி வழிபட்டனர். அடுத்ததாக அப்பா விழுந்து வணங்கி முதல் கட்டுக்கோலை கையில் எடுத்தார்.

''எழுப்பாளித் தலைவனே முன்னே வாப்பா...''

கந்த மாதாரியார் முன்னே வந்து அப்பாவின் பாதம் தொட்டு வணங்கி நின்றார். அப்பா கட்டுக்கோலை கந்த மாதாரியாரின் கையில் கொடுத்து வாழ்த்தினார்.

''எழுப்பாளிகளான நீங்க... இந்த வேட்டையிலையும் அதிகமான மொசல எழுப்பனும்...''

கந்த மாதாரியார் தலையாட்டி நகர்ந்து நின்றார். அடுத்து அப்பா இரண்டாவது கட்டுக்கோலை எடுத்தார். சடைய மூப்பர் அப்பாவின் பாதம் வணங்கி பெற்றுக் கொண்டார்.

''வீச்சாளிகளான நீங்க... இந்த வேட்டையிலும் எழுப்பாளிக எழுப்பி விடற எல்லா மொசலையும் ஒன்னுவிடாம வேட்டயாடனும்...''

அதற்கடுத்து அப்பா மூன்றாவது கட்டுக்கோலை படுக்கையாளிகளின் தலைவனான மாகாளித் தோட்டியாரின் கையில் கொடுத்து வாழ்த்தினார்.

''வேட்டையாடற எல்லா மொசலையும் எதிர் வேட்டையாடிகளுக்கு கெடைக்காம நீங்களே கைப்பத்தனும்...''

அப்பா நான்காவது கட்டுக்கோலை வேட்டையாடிய முயல்களை சுமந்து வரும் சுமையாளித் தலைவனான கிட்டு வண்ணாரிடம் கொடுத்து வாழ்த்தினார். நய்யாண்டியாகப் பேசி முயல் வேட்டையாடிகளை குஷிப்படுத்தும் சின்னா நாவிதரை அப்பா தன்னோடவே வைத்துக் கொண்டார்.மற்ற முயல் வேட்டையாடிகள் கட்டுக்கோலை எடுத்துக் கொண்டு தங்கள் தலைவனோடு போய் சேர்ந்துக் கொண்டனர்.

அந்த சமயத்தில் கிழக்குத் திசையில் ஆற்றுக்கு அப்பால் நாய்களின் குரைப்பொலிகள் விடாமல் எழுந்தன. அப்பா சப்தமிட்டார்.

''அடேய்... கரைவெளி மொசல் வேட்டையாடிக வந்துட்டாங்க... இந்த தைக்கு... கல்லுத்துறை அலங்கியம் மனக்கடவு கொள்ளபட்டி ஆச்சியூருன்னு பெரிய பட்டாளமாகவே சேந்து வர்றதா கேள்விப்பட்டேன்... எல்லாரும் மளாருன்னு பொறப்படுங்க... அவுங்க ஊதியூரு வெரைக்கும் நம்மல புடிக்கக் கூடாது...''

ஊரின் வடக்குத் திசை நோக்கி உள்ளூர் முயல் வேட்டையாடிகள் புறப்பட்டனர். மானாவாரி மேய்ச்சல் காடுகளில் எழுப்பாளிகள் நாய்களோடு சேர்ந்து முயல்களை எழுப்பினர். எழும்பிய முயல்களை வீச்சாளிகள் கட்டுக்கோல் கொண்டு வேட்டையாடினர். அடிபட்டு துடிதுடித்த முயல்களை படுக்கையாளிகள் கைப்பற்றினர். எனக்கு முயல் வேட்டை புது அனுபவமாக இருந்தது. அப்பா வழிநடத்திக் கொண்டு சென்றார். நாங்கள் நொச்சிப் பாளையத்தை சமீபிக்கும்போதே கரைவெளி முயல் வேட்டையாடிகள் எங்களோடு வந்து கலந்து விட்டனர். எங்கள் வீச்ச

ாளிகள் வேட்டையாடிய முயல் ஒன்றை கரைவெளிப் படுக்கையாளி ஒருவர் எடுத்துக் கொண்டார். அப்பா இதை கண்டும் காணாதவர்போல் போய்கொண்டிருந்தார்.

''அப்பா.. அது நம்ம மொசல்...''

''அடேய்... மொசல் வேட்டையில ஆரு கடேசில மொசல எடுக்கறாங்களோ அவுங்களுக்குத்தான் மொசல் சொந்தம்...''

எனக்கு இந்தமுறை வினோதமாக இருந்தது.அப்போது வேட்டையாடப்பட்ட ஒரு முயலை கரைவெளி படுக்கையாளியும் எங்கள் படுக்கையாளியும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விடாமல் போராடியபடி வந்துக் கொண்டிருந்தனர். பின் மதியம் கடந்தபோது கூட யாரும் விட்டுக் கொடுப்பதாக இல்லை.முயல் இருவருக்குமிடையே சிக்கிக் சின்னாபின்னப் பட்டது. அந்தி அடிசாயும் வேளையில் மாகாளித் தோட்டியார் அப்பாவிடம் ஓடி வந்தார்.

''நம்ம படுக்கையாளிதான் மொசல கைப்பத்தினாருங்க... ஆனா அவுங்க அடிச்சுப் போட்டு புடிங்கிக்கிட்டாங்க...''

அப்பா கரைவெளி முயல் வேட்டையாடிகளின் பண்ணாடியான நல்லசாமியிடம் போனார்.

''என்ன இப்பிடிச் செஞ்சிருக்கீங்க இது வேட்டத் தர்மமே இல்லியே... மருகாதியா மொசல எங்க படுக்கயாளிகிட்ட திருப்பிக் குடுத்துருங்க...''

''உங்க படுக்கையாளிதான் கைப்பத்தினான்கிறதுக்கு ஏதாச்சும் சாட்சி வெச்சிருக்கீங்களா...?''

அப்பா மாகாளித் தோட்டியாரைக் கைக் காட்டினார். மாகாளித் தோட்டியார் தூரத்தில் ஊதியூர் மலை மேல் தெரியும் உத்தண்ட வேலாயுதசாமி கோவிலைக் கும்பிட்டுச் சொன்னார்.

''அந்த முருக மேல சத்தியமா... நாங்கதான் மொசலக் கைப்பத்தினோம்...''

நல்லசாமி நம்பவில்லை.

''இந்த பொய்ச் சத்தியமெல்லாம் வேண்டாங்க... மொசல எங்களுது...''

அப்பாவுக்கு ஆத்திரம் பீறிட்டது.

''அப்ப இந்த மொசல் பொதுவுல இருக்கட்டும்... இந்த வேட்டயில ஆரு அதிகமான மொசல கைப்பத்தறோமோ அவங்க எடுத்தக்கலாம்...''

நல்லசாமி அப்பாவின் சவாலை ஏற்றுக் கொண்டார். அந்தி இருள் சூழும்போது நாங்கள்தான் நூற்றிப் பத்து முயல்களை கைப்பற்றியிருந்தோம். அவர்கள் வெறும் என்பத்தெட்டுதான். நல்லசாமி அந்த முயலை எங்களிடம் திருப்பிக் கொடுத்துவிட்டுச் சொன்னார்.

''அடுத்த தை வேட்டயில இதே சவாலத் தொடறலாமுங்களா...?

அப்பாவும் சம்மதித்தார். அடுத்த தை வேட்டைக்காக எல்லோரும் காத்திருந்தோம். துன்மதி வருசம் பிறந்து கார்த்திகை மாதமும் வந்தது. கனத்த மழையும் கீகாற்றுமாக நாட்கள் நகர்ந்துக் கொண்டிருந்தன. வளர்பிறை தினமொன்றில் ஆகாயம் சிறு



வெட்டாப்பு விட்ட மதியத்தில் நல்லசாமி குதிரை வண்டியில் வீட்டுக்கு வந்திறங்கினார். அப்பாவிடம் ராணி அத்தையைப் பெண் கேட்டார். ராணி அத்தையும் நல்லசாமியும் ஒருவரை ஒருவர் விரும்புவது அதன்பின்புதான் அப்பாவுக்கு தெரிந்தது. அப்பா ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு சொன்னார்.

''வருகிற தை வேட்டயில... நீ சவால் விட்டமாதிரியே செயிச்சுக் காட்டு... நா ராணிய கட்டிக் குடுக்கறே... இல்லீனா வேற மாப்பிள பாப்பேன்...''

நல்லசாமி அப்பாவின் சவாலையும் ஏற்றுக் கொண்டு புறப்பட்டுப் போனார். தை பிறப்பதற்கு சில தினங்களே இருந்தன. இந்த முயல் வேட்டை சுற்றுவெளி எல்லா ஊர்களிளும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. நல்லசாமிக்கு ஜெயித்தே ஆகவேண்டிய வாழ்க்கைப் பிரச்சனை. வேட்டையில் புது வியூகத்தையெல்லாம் வகுத்துக் கொண்டிருந்தார். அப்பாவும் நல்லசாமியை தோற்கடிக்க எல்லா வழிகளிலும் வேட்டையாடிகளோடு கலந்தாலோசித்துக் கொண்டிருந்தார். வேட்டை நாய்களையும் அதிகப்படுத்தினார். ராணி அத்தை நடப்பதையெல்லாம் பார்த்துக் கொண்டு என்னிடம் புலம்பிக் கண்ணீர் சிந்தியபடியிருந்தாள்.

தை பிறப்பதற்கு முந்தின முன்னிரவு. ஊர்த் தலைவாசலில் உள்ளூர் முயல் வேட்டையாடிகள் எல்லோரும் கூடி வேட்டைக்கான முன்னேற்பாடுகளைச் செய்துக் கொண்டிருந்தனர். அப்போது ஜீப் ஒன்று வந்து நின்றது. தாராபுரத்திற்கு புதிதாக மாற்றலாகி வந்த சப் கலெக்டர் ஜீப்பிலிருந்து இறங்கினார்.

''முயல் வேட்டைக்கு நான் தடை போட்டிருக்கேன்... அந்த தெற்கத்தி ஊர்க்காரங்களுக்கும் சொல்லிட்டேன்... மீறி முயல் வேட்டையாடினீங்கன்னா... நான் போலீசை அனுப்புவேன்...''

அப்பா முன்னே போனார். ''முயல் வேட்டையிங்கறது வெறும் கறி திங்க இல்லயிங்க... எங்க எல்லைக் கருப்பராயனுக்கு நாங்க வருசா வருசம் தவறாம செய்யற படையலுங்க...''

''சாமி பேரச் சொன்னாலும் விடமாட்டேன்...'' சப் கலெக்டர் திரும்பி ஜீப்பில் ஏறப் போனார்.

''நாங்க தெய்வகுத்தத்துக்கு ஆளாக வேண்டி வருமுங்க... நாங்க நாளைக்கு முயல் வேட்டைக்கு பொறப்பட்டே தீருவோம்...''

''நான் ஏன் முயல் வேட்டைக்கு தடை விதிச்சேன் தெரியுமா... தெக்கத்தி ஊர்காரங்களும் நீங்களும் ஏதோ சபதம் போட்டு வேட்டைக்கு போறீங்க... நிச்சயமா மோதிக்குவீங்க... அப்புறம் சட்டப் பிரச்சனையை யார் சமாளிக்கறது...?''

அப்போது மாகாளித் தோட்டியார் கூட்டத்தை விலக்கி சப்

கலெக்டர் எதிரில் வந்தார். ''நீங்க மொசல் வேட்டைய தடுத்தீங்கன்னா... எங்க எல்லைக் கருப்பராயன்... வேட்டைப் பூதத்தை ஏவி உங்கள கொல்லாம உடாது...''

சப் கலெக்டர் சப்தமாகச் சிரித்தார்.

''நீங்க சவால் விட்டு முயல் வேட்டைக்குப் போகும்போது நானும் இதைச் சவால ஏத்துக்கறேன்...இப்பவே நான் உங்க எல்லைக் கருப்பராயனைப் போய் சந்திக்கறேன்... எங்கே என்னை வேட்டைப் பூதத்தை ஏவிக் கொல்லச் சொல்லு பாக்கலாம்...''

''தெகிரீயமிருந்தா... எங்க எல்லைக் கருப்பராயன் வேட்டைக்குப் பொறப்படுற நடுச்சாமத்துல போய் நில்லுங்க பாக்கலாம்...''

சப் கலெக்டர் நடுச்சாமத்துக்காக ஜீப்பிலேயே காத்திருந்தார். சுற்றுவெளி ஊர்களுக்கும் விசயம் பரவி எல்லோரும் அச்சத்தில் உறைந்துப் போயினர். அப்பாவுக்கு சப் கலெக்டர் வேட்டைப் பூதத்தால் கொல்லப்படுவதில் உடன்பாடில்லை. யோசித்தபடியே இருந்தார். இருந்திருந்தாற்போல் எங்களை ஆயுதங்களோடு ரகசியமாக அழைத்துக் கொண்டு எல்லைக் கருப்பராயன் கோவிலை நோக்கி நடந்தார்.

★★★

கிட்டு வண்ணார், சின்னா நாவிதர், சடைய மூப்பர், கந்த மாதாரியார், மாகாளித் தோட்டியார் என எவரையும் அப்பா பார்க்கப் போகவில்லை. என்னைப் போலவே அவர்களுக்கும் அப்பா எங்கு போயிருப்பார் என்கிற குழப்பம் நீடித்தது. எல்லோரும் விரைசலாக எங்கள் வீட்டுக்கு வந்து சேர்ந்தோம். நான் நல்லசாமி மாமாவை எழுப்பப் போனேன். மாகாளித் தோட்டியார் தடுத்தார்.

''எதுக்கும் நாம ஒரு தவக்கா... எல்லைக் கருப்பராயன் கோயிலு போயிப் பாக்கலாம்... அப்புனு...''

''தீட்டு இருக்கு... அப்பா அங்க போகமாட்டாரு...''

''இல்ல... போய் பாக்கலாம்...'' குறுக்கு வழியாக எல்லைக் கருப்பராயன் கோவிலை நோக்கி நடந்தோம்.

★★★

திடீரென கொம்புகள் ஊதின. கொட்டுமளக்கு விசையோடு முழங்கின. வேட்டைப்பூதம் ஒரு கையில் வல்லயம். மறுகையில் குத்தீட்டி பிடித்து பாதச் சதங்கை அதிர சப் கலெக்டரை நோக்கி முன்னேறி நடந்தது. குரல் கர்ண கொடூரமான தொனியில் ஒலித்தது.

''இப்ப சொல்லு... எனக்கு படையல் வைக்கற முயல் வேட்டைக்கு தடை போடுவியா...?'' ''என் உயிரே போனாலும்... உன்னைக் கண்டு பயப்பட மாட்டேன்...''

வேட்டைப்பூதம் கோவில் கருகற்மதில் எதிரொலிக்க சிரித்தது. வல்லயத்தையும் குத்தீட்டியையும் நீட்டி நடந்தது. சப் கலெக்டருக்கும் வேட்டைப் பூதத்திற்கும் இடைவெளி குறைந்து வந்தது. சப் கலெக்டர் பயந்து பின்வாங்கி ஓடுவார் என எதிர்பார்த்தோம். அந்த ஆள் வீராப்பாய் அசையாமல் அப்படியே நின்றார். கொம்புகளின் ஊதலும் கொட்டுமளக்கின் முழக்கமும் அதிகமாயின. நான் திகிலுடன் பார்த்தபடியிருந்தேன். அப்பா வலதுகையில் வல்லயத்தையும் இடதுகையில் குத்தீடியையும் சராங்கமாகப்



பிடித்து முன்னே எட்டு வைத்தார். பின் வேட்டைப் பூதத்தை நோக்கி ஓடினார். வேட்டைப்பூதம் வேறு ஆள் வருவதைக் கண்டு சுதாரித்துக் கொண்டது. சட்டென அப்பாவின் பக்கம் திரும்பியபடி கத்திற்று.

''பரிவாரப் பூதங்களே வாங்கடா...''

அடுத்த கணம் நாலு திசையிலிருந்தும் நான்கு வேட்டைப் பூதங்கள் வெளிக் கிளம்பின. எல்லாம் ஒருசேர வல்லயத்தையும் குத்தீட்டியையும் நீட்டியபடி அப்பாவின் மேல் பாய்ந்தன. அப்பாவின் குத்தீட்டியும் வல்லயமும் சிலம்புக்கம்பாய் மாறிச் சுழன்றன. நடுமத்தியில் அப்பா. சுற்றிலும் வேட்டைப்பூதங்கள். சண்டை மும்முரமானது. குத்தீட்டிகளும் வல்லயங்களும் மோதி ஒலிக்கும் ஓசை. இக்கட்டான நிலையில் நாங்கள். அப்பா உயிரோடு திரும்ப சாத்தியமேயில்லை என எனக்குப் பட்டது. அழுகை வந்தது.

நேரம் கடந்தும் சண்டை நடந்துக் கொண்டேயிருந்தது. அப்பாவிடம் தாக்குப் பிடிக்காமல் பரிவார வேட்டைப் பூதங்கள் ஒவ்வொன்றாகப் பின்வாங்கி ஓடி மறைந்தன. இறுதியாக பெரிய வேட்டைப் பூதமும் அப்பாவும் மட்டுமே தனித்து மோதினர். வல்லயங்களும் குத்தீட்டிகளும் ஆக்ரோஷமாக சுழன்றன. எவரும் தோற்பதாக இல்லை. அப்பா சப் கலெக்டரைப் பார்த்து சப்தமிட்டார்.

''இந்த வேட்டைப்பூதம் என்னை அடிச்சுதுன்னா அவ்வளவுதான்... உங்களக் கொல்லாம உடாது...நீங்க ஓடுருங்க...?''

''அப்போ உன் கதி...?''

''எனக்கு எல்லைக் கருப்பராயன் உட்ட வழி...''

சப் கலெக்டர் அரைமனதாக நகர்ந்தார். இருளுக்குள் போனபின்பு சொன்னார்.

''நீ உயிரோட ஊர் திரும்பினீனா... விடியால முயல் வேட்டையை நடத்து...''

மேலும் சிறிதுநேரம் சண்டை ஓய்ந்தபாடில்லை. அப்பா பெரிய வேட்டைப் பூதத்தின் வல்லயத்தையும் குத்தீட்டியையும் தட்டிவிட்டு நிற்கதியாக்கினார்.

''நல்லசாமி... வேசத்தைக் கழட்டிட்டு வெளிய வா... மொசல் வேட்டையில மோதுவோம்...''

முதல் சேவல் கூப்பிட்டது. எப்பொழுதும்போல முயல் வேட்டை ஆரம்பித்தது. ஊரின் மேற்குத்திசை நோக்கி நகர்ந்தது. நல்லசாமியின் கரைவெளி முயல் வேட்டையாடிகளும் எங்கள் உள்ளூர் முயல் வேட்டையாடிகளும் சரிசமமாகவே முயல்களைக் கைப்பற்றிக் கொண்டே வந்தனர். செஞ்சேரிமலை முருகன் கோவில் போனபோது அந்தி மஞ்சள் வெயில் மங்கி இருட்ட தொடங்கியது. இரு பக்கமும் கைப்பற்றிய முயல்களை எண்ணினர். கரைவெளி முயல் வேட்டையாடிகள் இரு முயல்கள் அதிகம் கைப்பற்றியிருந்தனர். அப்பாவின் முகம் சோர்ந்து போனது. எதுவும் பேசாமல் ஊர் திரும்பினார்.மாசியிலேயே ராணி அத்தையை நல்லசாமிக்கும் கல்யாணம் செய்து கொடுத்தார். அன்றிரவு அப்பா மாகாளித் தோட்டியாருக்கு ஆள் அனுப்பிக் கூட்டி வரச் சொன்னார். மாகாளித் தோட்டியார் வெளித் திண்ணையோரம் வந்து பயந்துபோய் நின்றார்.

''எதுக்கு ரெண்டு மொசல நல்லசாமிக்கு உட்டுக் குத்தே...?''

''குமரேசு அப்புனுதான்... ராணி அம்மினி அழுதுக்கிட்டு கெடக்கறதாச் சொல்லுச்சு...''

அப்பா எதுவும் பேசாமல் வீட்டுக்குள் போய்விட்டார்.

★★★

இலுப்பைத் தோப்பு இருளுக்குள் கிடந்தது. கருகற்மதில் கடந்து கோவிலுக்குள்ளே போனோம். எல்லைக் கருப்பராயன் பாதத்தினடியில் அப்பா உட்கார்ந்திருந்தார். உதடுகள் எதையோ உச்சரித்துக் கொண்டிருந்தன. நான் மட்டும் அப்பாவின் அருகில் போய் தோளைத் தொட்டேன். சலனமின்றி வெறித்த அப்பா எழுந்து நின்றார்.

''இன்னிக்கோட எங்கதெ முடியப் போகுதுன்னு நெனைச்சேன்... தீட்டுக்காரன் கோவிலுக்குள்ள வந்திருக்கேன்... வேட்டைப் பூதத்தை ஏவி என்னைக் கொன்னுருன்னு வேண்டிக்கிட்டேன்...கருப்பராயனுக்கு ஏனோ என்னைக் கொல்ல மனசில்ல போலிருக்கு...''

நான் அமைதியாக அப்பாவையே பார்த்தேன்.

''என்னோட எல்லா நினைவுகளும் இந்த ஊரச் சுத்தியே இருக்குடா... இனி நானு... டவுன்னுக்கு வந்து என்னத்த சாதிக்கப் போறேன்... என்னைய இங்கயே உட்டீனாத்தான் எனக்கு நிம்மதி...சாவும்போது சந்தோசமாவாவது சாவேன்...''

இந்த இரவு அப்பாவை மட்டுமல்ல என்னையும் எனக்குப் புரிய வைத்து விட்டது. கருப்பராயனின் பாதத்தில் இருந்த அப்பாவின் கட்டுக்கோலை எடுத்து அப்பாவின் கையில் கொடுத்தேன். அப்பாவின் கண்கள் முன்பு போலவே விரிந்து பிரகாசித்தன.



ஓவியம்: சே.பாரதிராஜா



இசை

அநாதைத்தனத்தின் உறக்க முறை

பேருந்து நிலையங்களில்
பூட்டிய கடைகளின் முன்
கோவில் வாசல்களில்

இப்படி
எங்கேனும் படுத்து
தூங்க முயல்கிறார்கள்
அநாதைகள்

எல்லோரும் இருந்தும்
யாரும் இல்லாதிருக்கும்
அநாதைகள்
பாதுகாப்பான கூரைகளின் கீழ்
உறங்க முயல்கிறார்கள்

அநாதைகளுக்கென்றே
உறங்கும் முறை ஒன்றுள்ளது

அது
ஒரு கையைத் தலைக்கும்
இன்னொன்றை
தொடை இடுக்கிலும்
செருகிக் கொள்வது

அப்படிச் செய்கையில்
கொஞ்சம் இதம் உருவாகிறது

அந்த இதம் இருக்கும் வரை
அப்படியொன்றும்
அவர்கள் முழு அநாதைகள் இல்லை.

❖❖❖



ஆம்

உன்னையல்ல
நீ வாழும் வீட்டைக் காணவே
உன் தெருவில் அலைந்தேன்

உன்னையல்ல
நீ வசிக்கும் தெருவைக் காணவே
இந்த ஊரில் திரிந்தேன்

உன்னையல்ல
நீ திகழும் ஊரைக் காணவே
இவ்வளவு தூரம் வந்தேன்

உன்னையல்ல
உன் ஊருக்குச் செல்லும் வழியைக் காணவே
காடு மலை கடந்தேன்

உன்னையல்ல
நீ வாழும் பூமியைக் காணவே
இந்த பூமிக்கு வந்தேன்..

❖❖❖



பிறந்த நாள் பெண்

அவள் புத்தாடை அணிந்திருக்கிறாள்.

புத்தாடை கொண்டு வந்து சேர்க்காத புதிதால்
வீதியை இன்புறுத்தியபடியே
மெல்ல மெல்ல நடந்து செல்கிறாள்

சிவா என்கிற ஒருவன்
மிகச் சரியாக
12:01 - க்கு
மறக்காமல்
வாழ்த்திவிட்டதாக
பேசிக்கொண்டு போகிறாள்

நீராடிய கேசத்தை
''யாவும் செழிக்கட்டும்''
என்பது போல படரவிட்டிருக்கிறாள்.

இரவு கொட்டிய மழையால்
வீதிக்கு வந்துவிட்ட சாக்கடை நீருள்
குளிர்ந்த ஆற்றில் மெல்ல இறங்குவது போல
அடி எடுத்து வைக்கிறாள்

வேறு வழியேயின்றி
கொஞ்சமாய்
இறைத்துவிட்ட சேற்று நீருக்காய்
ஓட்டுநர் அவளிடம் வருத்தம் சொல்கிறார்
''படவேயில்லை...'' என்று
சொல்லிவிட்டு நடக்கிறாள்

இன்று
இனிப்பைப் பிட்டு
அவள் எல்லோருக்கும் ஊட்டுவாள்
எல்லோரும்
இனிப்பைப் பிட்டு
அவளுக்கு ஊட்டுவார்கள்.

அவள் ஒரு மக்குப் பெண்ணாக இருக்கலாம்
ஆனாலும்
ஆசிரியரால் இன்று அவளை
வசைபாட இயலாது.

இன்று அவளது பிறந்தநாள்.
இன்றுஅவளை
யாரும் எதுவும் செய்துவிட முடியாது.

❖❖❖



ஓவியம்: சந்தோஷ்

உமா மோகன்

ஓவல் வடிவம்
மஞ்சள்
இளரோஸ் கலர்
வெளிர் பிரௌன்
ஒன்றுக்குள் ஒன்றாகப் படிந்து
பச்சையும் மஞ்சளும்
மழுமழுவென்று

இப்படியாக நினைவில் கொள்ள
ஏற்றபடியான மாத்திரைகள்
மேசையில் கிடக்கின்றன
எனவே
புதிய நிறத்தில்
உன் பரிந்துரைகள் இருக்கட்டும்
மருத்துவனே
முடிந்தால் லாவண்டர் நிறத்தில் தா
அன்றாடம் ஒரு உருண்டை
இளமையைக் கையாள்வதாக

ஆங்கில எழுத்துகளெல்லாம்
குழந்தையின் விளையாட்டுப்பொருளாய்க்
கலைந்து கிடக்கின்றன
பெயர் சொல்லி விழுங்க வயது
வசதியில்லை

இன்றைய சிறுநீர்
கடும் மஞ்சளா
சிவப்பு,வைக்கோல் நிறம்
எனப் பார்க்குமுன்னே
மறந்து
நீர்விசைக் குமிழை அழுத்தி விடுகிறேன்

நாளின் எத்தனையாவது
லிட்டர் தண்ணீரைப்
பருகுகிறேன் எனக் கணக்கு
தவறிவிடுகிறது தினமும்

லிட்டரில் நீர் அனுமதிக்கப் படுவதற்கும்
பொறாமைப்படும்
சக பிரஜைகள் இங்குண்டு

கண்ணில் பொங்கிவிடும்
பீளையும்
தன்னையறியாது சிறுநீர்
கசிய
நனைந்து விடும் உள்ளாடையும்
நிரந்தரமாகத் தங்கிவிடும்
அதன் வாடையுந்தான்
இப்போதைய கூச்சம்.

❖❖❖




உன்னைப்பற்றிப் பேசுதல்

உன்னிடம் பேசுவதல்ல
உன்னைப்பற்றிப் பேசுதலே வேண்டும்

குறுக்கே மறுக்கே எழுந்துவிடாமல்
கத்திவெட்டு போல ஒரு வினாவைப்போடாமல்
உண்மையென்றோ பொய்யென்றோ
நீ இடைமறிக்காமல்
பேசுவேன்


கண் அகலப் பார்வை
சாய்ந்து திரும்பும் தலை
கடுகடுத்து இறுகிய தாடை
சிமிட்டும்
சிரிக்கும் கண்கள்
முன்னுச்சி சிகையிலிருந்து எட்டிப்பார்க்கும் தழும்பு
எல்லா அடையாளங்களும்
கிடக்கும் துண்டுகளைக் கட்டங்களுக்குள்
மாற்றி மாற்றிப் பொருத்திப் பார்க்கும்
இந்த கொலாஜ் விளையாட்டுதான்
எத்தனை சுவாரசியம்

❖❖❖



கவிதை

கே.ஸ்டாலின்



பயணம்

எனது அலுவலகப் பேருந்திற்கு
சற்று முன்பே
எனது கிராமத்தின்
பெயர் தாங்கிய அந்த
அரசுப்பேருந்து தினமும்
என்னைக் கடக்கிறது.
ஜன்னல் வழியே
பரிச்சயமான முகங்கள் தேடி
தினமும் சலிக்கிறேன்.
அப்போதெல்லாம்
பேருந்து நிலைய வாசலில்
வாழைப்பூ சுண்டைக்காய்
புளிச்சக்கீரையென
தன் முன்னே அடுக்கி வைத்து
நிதானமாக
பொன்னாங்கன்னியை
ஆய்ந்து கொண்டிருக்கும்
தன் விரல்கள் பிடித்து
நான் போகாத என் ஊருக்கு
அழைத்துச் செல்கிறாள்
அம் மூதாட்டி.

❖❖❖



ஓவியம்: பூவிழி

அப்பாவின் விரல்கள்

நெடுஞ்சாலை ஓரமுள்ள
கரும காரியக்கூடம்
பதின்வயது சிறுவனொருவன்
ஈர ஆடையுடன் அமர்ந்திருக்க
கடந்து செல்லும் பேருந்தில்
ஜன்னலோர மனிதன்
அப்பாவின் சாயலில்
இயன்றவரை கழுத்தை திருப்பி
பேருந்து மறையும் வரை
பார்த்திருந்தவனை
எதிரிலிருக்கும் புரோகிதர்
இரண்டாவது முறை அழைக்கிறார்
திடுக்கிட்டு திரும்புமவன்
கைகளில் திணிக்கப்படுகிறது
சில குச்சிகள்

சட்டென அவனுக்கு தோன்றியது
அப்பாவின் விரல்களை
பிடித்திருப்பதாய்...
கருணை

தினமும் கடைசியாய்
சாப்பிடும்
அம்மாவின் விரல்கள்
மருதாணி வைத்துவிடும்
நாட்களில்
சிவந்து விடுகிறது
எல்லோருக்கும் முன்பாகவே.

❖❖❖

கனிமொழி.ஜி

நிலத்தின் விளிம்பில் நிற்கும் மனிதன்

குளக்கரையில் அமர்பவன்
தன் கனத்தை அமிழ்த்தி
நீரை பூக்கச் செய்கிறான்

நகரும் நதியருகே நிற்பவன்
பழுத்த இலைகளை
உதிர்த்து திரும்புகிறான்

புவியின் இரைச்சலில் தப்பி வந்தவன்
கடலின் இசைமையில் அமைதி கொள்கிறான்

சிறு சாரலுக்கு வெளியே ஓர் இதமான
சோகத்தைப் போர்த்திக்கொண்டு
ஒருவன் தயாராகிறான்

திண்மமான வாழ்வில் இருந்து தண்ணீரிடம்
தஞ்சமடைபவனை
அது இளகச்செய்கிறது

காலங்காலமாக நிலத்தின் துயரங்களை
இறுதியாக நீரிடம் முறையிடுகிறான்.

❖❖❖



ஓவியம்: நற்றமிழ்

யாதும் ஓர்நிலை

உண்மைக்கும் பொய்மைக்கும்
இடைவெளி குறையும்போது
ஆம் என்பதற்கும் இல்லை என்பதற்கும்
ஒரே தலையசைப்பாகும் போது
வெற்றியும் தோல்வியும் ஒரே மட்டத்தில்
கிடத்தப்படும் போது
இருப்புக்கும் இன்மைக்கும்
ஒரே மனநிலை வாய்க்கும்போது
கருப்பும் வெள்ளையும்
ஒரே மாதிரி ஒளிரும் போது
வாழ்வும் மரணமும்
ஒரே அழகில் மிளிர்கின்றன.

❖❖❖

வாய்ப்பு

இறுதியாய் காலம்
இரு வாய்ப்புகளைக் கையளித்தது
கொடும் வாளாயிருத்தல்
அல்லது பலியாதல்
வாளாகும் விருப்பத்தில்
மின்னும் தந்திரமும்
வன்மத் தோள்களும்
துண்டிக்கும் குரூரமும்
வாளுக்குடன்படும் திண்மப் பீடமும்
எதுவுமற்று,
என் மெல்லிய கழுத்தைப்
பொருத்திக்கவிழ்ந்தேன்..

❖❖❖

உற்றுநோக்கல்

மரத்திலிருந்து இம்முறையும்
ஓரிலை தரையிறங்குகிறது...
அவ்வளவு மெதுவாக...
பல முறை கண்களிமைத்தும்
இறங்குவதாயில்லை..
உடலின் அத்தனை புலன்களும்
வெறித்துப்பார்ப்பதில்
அவ்விலை அந்தரத்தில் நடுங்குகிறது...
பச்சையம் உலர்ந்து பழுத்து சருகாகியும்
காற்று இலகுவதாயில்லை..
அடுத்ததொன்று மெல்ல
பிடிப்பிழக்கிறது...

❖❖❖



கவிதை

ஸ்டாலின் சரவணன்

பெண்டுலம்

சிற்றஞ்சிறுகாலை

நேற்றைய அலுப்புடன்
மெல்ல விடிகிறது
எஞ்சிய காமத்தின் சாட்சியாய்
மலரில் பனித்துளிகள்.
தலைவி கூந்தலை முடிச்சிட்டு
போர்க்களத்திற்குள் நுழைகிறாள்.
துள்ளிக் குதிக்கும் பாத்திரங்களுக்காக
கைகள் எட்டாகின்றன.
இனி ஓய்வற்ற கைகள்
இரவில் எடுக்கும் சொடக்கொலியில்
திடுக்கிடும் இருள்.

கண்களைப் பொத்திக்கொண்டோடி
பூக்களில் விழிக்கும் குழந்தைகளுக்காக
காத்திருந்த மலர்களோ
இதழ்களில் ஒன்றை அப்போதே விரிக்கின்றன

தலைவன் மெல்ல சோம்பல் முறிக்கிறான்
குதிரையின் மேல் ஏறுகிறான்.

கொள்ளுக் குறைவால்
கனைப்பில் குறைவைக்கிறது குதிரை.

நள்ளிரவில்
வழக்கம்போல் மன்னர் கொள்ளின் விலையை ஏற்றியதாக
பெயர்ப்பலகை அலறுகிறது.

❖❖❖

அலகிலா விளையாட்டு

அந்தி என்பதுதான்
மடியைத் தேடும் காலம்
உறக்கத்துக்கும்
உற்சாகத்திற்கும் இடையே ஆடும் ஊஞ்சல்
உந்தித் தள்ளுவதில்
விழுவதும் ஆனந்தமே.

❖❖❖

நள்யாம விரகம்

கதவுகள் மூடப்பட்டுவிட்டன
எப்படி நாம் சந்திப்பது?!
சுவர்களும் கதவுகளும்
வேறு வேறு அல்ல!

பகலில்
தள்ளினால் திறந்துகொள்ளும்
இதே சுவர்களை
இரவெல்லாம் தட்டி
கைகள் வலிக்கின்றன அன்பே!
நம் காதலின் குரலுக்கு
சில நூறு கிராம் எடை கொண்ட
தாழ்ப்பாள்கள்
செவி சாய்க்க மறுக்கின்றன....

நிலவொளி நுழையும் இடுக்குகள் வழி
விரல்களை நுழைக்கிறேன்

உன் தாய்க்காரியோ
படுக்கையின் தலைக்கு வந்திட்ட
கரப்பான்பூச்சியைப் போல
பலங்கொண்ட மட்டும்
அவற்றை அடித்து நசுக்குகிறாள்.

❖❖❖

ஓவியம்: ஆதி



ப.கல்பனா

வசந்த காலத்திற்கு

மணற்பாங்கான கடற்கரையில்
மூழ்கிக் கழித்த வசந்த காலத்தைத்
தோண்டி எடுத்து
உன் கூந்தலை
அலங்கரிக்கப் பயன்படுத்துகிறாய்.
நீ சிரிக்கிறாய்
உன் சிரிப்பின் நுரை
வானெங்கும் சிற்றலைகளாகச் சிதறுகின்றன.
கடல் அமைதியாக
பசும்புல் சூரியனை வெதுவெதுப்பாக்குகிறது

என்னில் உன் கரங்கள்
என் வானத்தின் மீது எறியப்பட்ட உன் கல்
இன்றைய வானத்தின் அடியில் பாயும்
மலர் இதழ்களின் நிழல்கள்

நம் கரங்களில் புதிய மொட்டுகள் தோன்றும்
நம் பார்வைப் புலத்தின் மையத்தில்
ஒரு தங்க சூரியன் சுழலும்
சுடர்வீசி உயரும்

நாம் ஏரிகள்
நாம் மரங்கள்
மரங்களுக்கு அடியில் உள்ள
புல்வெளிகளில் துள்ளும்
சூரிய ஒளிக் கதிர்கள் நாம்.
துள்ளும் சூரிய ஒளி நடனமாடும்
உன் கூந்தலின் உச்சிகள் நாம்

புதிய காற்றில்
ஒரு கதவு திறக்கிறது
பசிய நிழல்களையும் நம்மையும்
எண்ணற்ற கைகள்
அழைக்கின்றன

மென்மையான பூமியின் தோலின் மீது
பதனிடப்படாமல் கிடக்கின்றன
சாலைகள்

நீரூற்றினில் உன் கைகள் ஒளிரும்
மேலும்
நம் கண் இமைகளுக்குக் கீழே,
கடல் மற்றும் பழங்கள்
அமைதியாகக் குளிக்கின்றன
சூரிய ஒளியில்

அவை கனியத் தொடங்குகின்றன
மெதுவாக.

❖❖❖

ஓவியம்: நற்றமிழ்

ஆங்கிலம் வழி தமிழில்:
புதுவை சீனு தமிழ்மணி

கருப்பையில்

- ஜி.வி.ரத்னாகர்

என் பிறப்பு கருப்பையில் தீர்மானிக்கப்பட்டது.
நான் பெயரிடப்படுவதற்கு முன்பே சாதியும் மதமும் பொறிக்கப்பட்டுவிட்டது.
எனக்குத் தெரியாமலேயே நான் வெளியேற்றப்பட்டு விட்டேன்
என்னை நீங்கள் இரண்டாகப் பிரித்துவிட்டீர்கள்
என் இரு கண்களையும் இரு கால்களையும் வெட்டிவிட்டீர்கள்!
இரு பார்வைகள் இரு வேலைகள் மற்றும் இரு ஒலிகளை
அவர்களிடம் கொடுத்துவிட்ட நிலையில்
நான்கு வேதங்களிலிருந்தும் என்னைத் தள்ளி விட்டீர்கள்
என் வாழ்க்கையைக் கொடுமையாக வன்முறையாகத்
தலையீடு செய்து என் எதிர்காலத்தை இருண்டதாக்கிவிட்டீர்கள்
ஆனால், அது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.
என் நாக்கு உன்னைப் போன்றது, உனகுருதிச்சுவைக்காக ஏங்குகிறது.
பறையின் இன்னிசையைக் கேட்பதற்கு
உனக்கு நெஞ்சுரம் இல்லை என்பது
எனக்கு நன்றாகத் தெரியும்.

Black Lilles&Telugu Dalit Poetry
Translated & Edited by K. Purushotham
Critical Quest Publication

பொங்கி எழும் மாதிகாப் பறை

-சிவசாகர்

அதிகாலைப் பாடலுக்காக உதயசூரியனை
ஒரு பறையாகத் தட்டுகிறேன்.
பொங்கி எழும் ஒரு பறையாக.
செருப்புக்களைத் தைக்கிறேன்.
கத்தி குத்தூசியின் கண்ணீரானும்
ஊழியின் அலறலாலும்
தன் செருப்புக்களை இழந்து
சிந்திய குருதியைக் கடந்து
செல்கிறது அது.
காளையின் கொம்புகளை
என் விரல்நுனிகளால் தொடுகிறேன்.
இருண்ட வரலாற்றின் கூண்டுகளை
நிலத்தில் புதைக்கிறேன்
அறுவடையைத் தின்று
தூறலில் நடனமாடுகிறேன்.
அதிகாலைப்பாடலுக்காக
உதயசூரியனைப் பறையாக அடிக்கிறேன்
பொங்கி எழும் ஒரு பாறையாக.

❖❖❖



ஓவியம்: பாவேந்தன்

நான் அதை எப்படிச் சொல்வது

-சமரேந்திர சென்குப்தா

உடைந்த ஆடியை மீண்டும் இணைத்தாலும்
உருவங்கள் சரியாகத் திரும்புவதில்லை.
உம் சிதறல்கள்
ஆறுகளாய், மரங்களாய், விண்மீன்களாய்...
ஆயினும், நான் அதை எப்படிச்சொல்வது ஆடியிடம்.

– வங்காளமொழியிலிருந்து ஆங்கிலத்தில்:
அனசுயா குகா

குறிப்பு: ஆடியை நாம் கண்ணாடி என்கிறோம்.
கண்ணுக்கு அணிவதுதான் கண்ணாடி. ஆடியே சரி!

போரிடும் கவிதை

-மொலினா

எத்தனை மகிழ்ச்சி அது
போர்க்களத்தில் கவிதை புனைவது
இங்கே கவிதைக்கலை அதன் சொற்சுவை இழக்கும்
இங்கே வாழ்க்கை கொடூரமாக, இரக்கமின்றிவாழும் இயல்புநிலையுடன் போராடும்
இங்கே குருதிப்பெருக்கு கண்ணீர், வியர்வையில் கலந்திடும்
இங்கு விலங்குமனப்பான்மை துன்புறுத்தாமை (அகிம்சை) தவத்தில்
மனிதர்களை மட்டுமே சாப்பிடுகிறது
இங்கே மலர்களும் நிலா இரவுகளும் குருதியில் நனைகின்றன
நாகரீகச் சமூகக்கவிதைக் கலைக்களஞ்சியத்தில் இவற்றுக்கு இடமில்லை
இறந்தவர் சிதையில் நம்மை நாமே எரியிட்டுக்கொள்ள விழையவில்லை
புதிய உலகம் ஒன்று காத்திருக்கிறது நமக்காக
அதன் அடித்தளம் கடந்த உலகின் கல்லறைகள் மேல்எழும்
அங்கே.
கவிதை இனியும் போர் புரியாது.

தெலுங்கிலிருந்து ஆங்கிலத்தில்
வி.ஜி.
Raging Storm *நூலிலிருந்து*

மாதிரிபயிற்சி

தமிழ் எங்கள்
அறிவுக்குத் தோள்

ஆசிரியர் குறிப்பு:

ரைஸ் ஹ்யூக்ஸ் (1966)

வேல்ஸ் நாட்டின் கார்டிஃப் நகரில் பிறந்தவர். சிறுகதைகள், நாவல்கள் மற்றும் கட்டுரைகள் எனப் பல்வேறு தளங்களில் இயங்கி வருகிறார். இடாலோ கால்வினோ, மிலரோட் பாவிச், போர்ஹேஸ் ஆகியோரின் தாக்கங்களை இவருடைய படைப்புகளில் காணமுடிகிறது. நகைச்சுவையும் பகடியும் கலந்து எழுதும் இவரது புனைவுகளில் யதார்த்தம் மிகுந்திருக்க கொலாஜ் படைப்புகளிலும் பெரும் ஆர்வம் கொண்டிருக்கிறார். கணிதத்தையும் தர்க்கத்தையும் எழுத்தில் பயன்படுத்துவன் மூலம் பாரம்பரிய எழுத்துமுறைகளைத் தீவிரமாக எதிர்க்கும் ஒளலிப்போ எனும் சர்வதேச இலக்கிய இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர். தொடர்ச்சியாக இணையதளங்களில் இயங்கி வரும் ஹ்யூக்ஸ் இதுகாறும் எண்ணூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியிருக்கிறார். ஒன்றுக்கொன்று தொடர்புடைய / தொடர்பற்ற கதைச்சக்கரம் ஒன்றினை எழுதுவதைத் தனது வாழ்நாள் லட்சியமாகக் கொண்டிருக்கிறார்.

கல்லறை சாட்சியம்

ரைஸ் ஹ்யூக்ஸ்

தமிழில்: கார்த்திகைப் பாண்டியன்

புராதானமானதொரு கல்லறைத்தோட்டத்தில் ஜான் லூப் என்கிற மனிதனை புதைத்தபோது அவனுடைய நண்பர்கள் அவனது சொந்தத் தோட்டத்திலிருந்து கொணரப்பட்ட சில மலர்களைக் கல்லறையின் மீது மரியாதை நிமித்தமாக வைத்துவிட்டு வந்தார்கள். மழைக்காலம் வந்தபோது வாடியிருந்த அம்மலர்கள் மெதுவாக சிதையத்தொடங்கின.

தோட்டத்திலிருந்த மற்ற மலர்களெல்லாம் தங்கள் நண்பர்களை இழந்த துக்கத்தில் ஆழ்ந்து கிடந்தன. அந்த ஏழு டேஃபொடில் மலர்களின் கொடுங்கொலை வெகு வெளிப்படையாக நடந்துவிட்டிருந்தது. பழிவாங்குவதற்கான எந்த முகாந்திரமும் இல்லாத நிலையிலும் தங்களின் துயரத்தை ஏதேனும் ஒரு தகுந்த சமிக்ஞையின் மூலம் வெளிப்படுத்த தப்பிப்பிழைத்த மலர்கள் விரும்பின.

அவற்றின் காத்திருப்பு அவ்வருடத்தின் முதல் தேனீ தோன்றி அருகாமையிலிருக்கும் மலரின் மீது வந்தமரும்வரை நீண்டது. மகரந்தத்தை எடுக்க மெதுமெதுவே குழலுக்குள் தேனீ நுழைந்த தருணத்தில், வீனஸ் ஃபிளைடிராப்பைப் போன்ற லாவகமான சுழற்சியால் தன்னை மூடிக்கொண்ட அந்த டேஃபொடில் மலர், அத்தேனீ இறந்து போகும்வரையில் வெகு அழுத்தமாக இறுக்கியபடி இருந்தது.

தனது வேர்களை பூமியிலிருந்து பெயர்த்தெடுத்துக்கொண்டு கல்லறைத்தோட்டம் வரை நடந்துபோவதென்பது டேஃபொடில் மலருக்கு அத்தனை எளிதான காரியமாக இருக்கவில்லை. பலநாள் உயிர்வாழும் தாவரங்களுக்குக்கூட இத்தகைய செயல்கள் பயங்கர சோர்வைத் தரக்கூடியவை



ஓவியம்: திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்

என்பதால் அவை பெரும்பாலும் இவற்றில் ஈடுபடுவதில்லை எனும்போது டேஃபொடில் மலருக்கு இந்த அனுபவம் வெகு பயங்கரமானதாக இருந்தது. இறுதியாக அது கொலை செய்யப்பட்ட மலர்கள் கிடந்த கல்லறையைக் கண்டடைந்து தனது இதழ்களை விரித்து மரித்துப்போன தேனீயை அதன்மீது கிடத்தியது.

தன்னுடைய கடமை நிறைவேறிவிட்டதெனவும் இவ்வாறு தான் செய்திருப்பது மிகச்சரியான செய்கை என்றும் மனநிம்மதியுற்ற அந்த மலர் தோட்டத்துக்கு திரும்பிச்சென்று தன்னைத்தானே மீண்டும் வேரூன்றிக் கொண்டது. மனிதர்களுக்கு மலர்களால் அஞ்சலி செலுத்தப்படுகிறது; மலர்களுக்கு தேனீக்களால். ஆனால் இந்தக்கதை இத்தோடு முடிவதில்லை.

தேனீ தன்னுடைய கூட்டுக்குத் திரும்பிவராத காரணத்தால் சஞ்சலம்கொண்ட அதன் நண்பர்கள், அதனைத் தேடத் துவங்கின. வெகுகடைசியாக அதனுடல் கல்லறைத்தோட்டத்தில் கண்டெடுக்கப் பட்டது. தேனீயின் ஈமச்சடங்கை மறுநாள் வைத்துக்கொள்வதெனவும் ஒரு கரடியைக் கொன்று தேனீயின் கல்லறையை அழகுபடுத்துவதெனவும் மற்ற தேனீக்களால் தீர்மானிக்கப்பட்டது.

சூரிய உதயத்திற்குச் சிறிது நேரம் கழித்து மொத்தமாக வெளிக்கிளம்பிய தேனீக்களின் கூட்டம் மலைச்சரிவிலொரு கரடியை விரட்டிப்போனது. பின்பு அதனுடைய உடம்பு கல்லறைத்தோட்டத்துக்கு இழுத்து வரப்பட்டு தேனீயின் மீது கிடத்தப்பட்டது. தளர்ச்சிகொள்ளச் செய்வதாயிருந்தாலும், கரடியின் பிரமாண்டமான மயிரடர்ந்த பிணம், தேனீக்களின் கடுமையான முயற்சியைப் பறைசாற்றுவதற்குத் தகுதியானதாக இருந்தது.

தங்கள் நண்பனின் மரணம் குறித்து ஒருவாரகாலம் புலம்பியபடியும் தேம்பி அழுதபடியும் இருந்த கரடிகளால் ஆற்றிலிருந்து பிடித்து வரப்பட்ட சாலமன் மீனொன்று, இறந்துபோன கரடியின் தலை மீது தொங்கவிடப் பட்டது. நடந்ததைக் கேள்விப்பட்ட மீனின் நண்பர்கள் கூட்டமாகச் சென்று தாக்கியதில் பல கரங்களைக் கொண்ட ஸ்குவிட்டின் வாழ்க்கை முடிவுக்கு வந்தது. ஆனால் எப்படி அதனை கல்லறைவரை மீன்களால் இழுத்து வரமுடிந்தது என்பது இன்னும் மர்மமாகவே இருக்கிறது.

இறந்து போன ஸ்குவிட்டுக்கு மரியாதை செய்ய ஒரு ஆல்பெட்ராஸ் பறவையைக் கொல்வதென அதன் நண்பர்கள் தீர்மானித்தபடியால், அவற்றிலொன்று கடலின் மேற்புறத்துக்கு வந்து, பறந்துகொண்டிருந்த பறவையை அடித்து வீழ்த்தி நீருக்குள் இழுத்துச்சென்று மூழ்கடித்தது. பிறகு அல்பெட்ராஸ் பறவையின் உயிரற்றவுடல் ஜான் லூப்பின் மீதான மலர்களின் மீதான கரடியின் மீதான சாலமன் மீனின் மீதான ஸ்குவிட்டின் மீது மிகுந்த மரியாதையோடு அழகு செய்யப்பட்டது.

சில நாட்களுக்குப் பிறகு அல்பெட்ராஸ் பறவையின் நண்பர்களால் ஒரு குட்டி விமானம் விபத்துக்குள்ளாக்கப்பட்டது. விமானஓட்டி சரியான நேரத்தில் தப்பிவிட்டாலும் மலையின் மீது விமானம் மோதி நொறுங்கியது. சிதறிக்கிடந்த விமானத்தைக் கல்லறைத்தோட்டத்துக்கு இழுத்துவந்த

பறவைகள் அதை மெதுவாகக் கல்லறையின் மீது நகர்த்தி வைத்தன. பின்பு அவை பறந்து போயின.

ஒரு தேவாலயத்தின் மீது விமானத்தின் நண்பர்களால் குண்டு வீசப்பட்டு அதன் இடிபாடுகள் சிதைந்துகிடந்த விமானத்தின் மீது அடுக்கப்பட்டது. பிறகு அழிக்கப்பட்ட தேவாலயத்தின் நண்பர்கள் யாவும் ஒன்றிணைந்து ஒரே நேரத்தில் கடந்துபோனதன் மூலம் தங்களது எடையின் வலுவால் ஒரு பாலத்தை இடிந்து விழச்செய்தன. முந்தையவிதிகளின்படியே அப்பாலமும் கல்லறையின் மீது கிடந்த குண்டு வீசப்பட்ட தேவாலயத்தின் மேலாக வந்து சேர்ந்தது.

ஆனால் அந்தப்பாலத்தின் நண்பர்களால், அவற்றின் கிராதிகளிடையே இசைத்து வந்த கீழைக்காற்று, தங்கள் தோழனுடைய மரணத்திற்கான எதிர்வினையாக கொலை செய்யப்பட்டது. மேலும் சிலநாட்களுக்குப் பிறகு இன்னபிற காற்றெல்லாம் ஒன்றுகூடி விண்வெளியில் ஒலிபரப்பாகிக்கொண்டிருந்த வானொலி அலைவரிசையைக் கொன்றன. மேலும், தன்னை உள்வாங்கும் செயற்கைக்கோளையே அழிக்கக் கூடியதான தீய செய்தியொன்று, அந்தக் குறிப்பிட்ட அலைவரிசையின் நண்பர்களால் விண்வெளிக்குள் பரப்பி விடப்பட்டது. மேலும் இது போலவே.

மாதங்கள், ஆண்டுகள், நூற்றாண்டுகள் கடந்துபோயின..

ஒருநாள் கல்லறைத் தோட்டத்தின் வழியே ஒரு ரோபோ போய்க்கொண்டிருந்தது. இறந்த உடல்களாலான மீப்பெரும் சிகரத்தைக் கண்டவுடன் அது தன் அறிவியல் இயல்பால் உந்தப்பட்டது. கரங்களை நீட்டி அச்சிகரத்தின் மீதேறி அமர்ந்த ரோபோவின் பளிங்குக்கண்களில் கனவுகள் மிதந்தபடி இருந்தன.

''உலகத்துக்கு உள்ளும் வெளியுமாகவும் இருக்கக்கூடிய எல்லாவற்றிலும் குறைந்தபட்சம் ஒன்றேனும் இங்கே வீழ்ந்து கிடக்கிறது..'' அது தனக்குள் சொல்லிக் கொண்டது. ''ஒன்றே ஒன்றைத் தவிர..'' சட்டெனத் தன் சமநிலை இழந்த ரோபோ விளிம்பிலிருந்து தடுமாறி கீழே விழத்தொடங்கியது. வெகு உயரத்திலிருந்து விழுந்தபோது கீழேயிருந்த பூமி அதற்கு ஒரு வேற்றுகிரகக்கனியின் அளவே இருப்பதாகத் தென்பட்டது. வேகமாக உருண்டு கொண்டிருந்த நிலையிலும் அந்தக்கனியின் ரசம் எத்தகைய சுவை கொண்டதாக இருக்குமென வெகு மங்கலான தன் நினைவுகளின் வழியே சிந்தித்தபடி இருந்தது ரோபோ. அதற்கான விடை எலெக்ட்ரான்கள் மற்றும் எண்ணெயின் சுவை என்பதாக அது புரிந்து கொண்டது. ஆனால் அவையாவும் தரையில் வீழ்ந்த பின்பாக தன் உடம்பிலிருந்து வழிந்து கொண்டிருக்கும் நீர்மத்தின் சுவை என்பதை அது அறிந்திருக்கவில்லை.

ஜான் லூப்பின் கல்லறைக்கு அருகே சின்னஞ்சிறு துகள்களாக அந்த ரோபோ சில்லிட்டுக் கொண்டிருந்தபோது, அதனுடைய நண்பர்கள் புதிதாக வன்கொலை செய்யப்பட்டதொரு மனிதனை அதன் மீது கொண்டு வந்து கிடத்தின.

ஆசிரியர் குறிப்பு:

எட்கர் கெரெட்:

இஸ்ரேலைச் சேர்ந்த எட்கர் கெரெட் ஹீப்ரூ மொழியில் எழுதும் எழுத்தாளர். இன்றைய நவீன உலகச் சிறுகதை எழுத்தாளர்களில் முக்கியமான இவர் 1967ஆம் ஆண்டு பிறந்தார். பெரும்பாலும் சிறுகதைகள் மட்டுமே எழுதிவந்தாலும் இவரது graphioc novels எனப்படும் வரையுரு நாவல்களும் புகழ்பெற்றவை. இவரது பல கதைகள் திரைப்படமாக்கப்பட்டுள்ளன. நவீன உலகின் அழுத்தங்களால் தனிமனிதர்களின் வாழ்க்கை எதிர்கொள்ளும் சிக்கல்களை இவரது சிறுகதைகள் சர்ரியலிஸ பாணியில் மிகவும் சுவாரஸ்யமாகச் சொல்கின்றன. இஸ்ரேல் நாட்டுப் பிரதமரின் சிறந்த எழுத்தாளருக்கான விருது, பிரெஞ்சு நாட்டின் செவாலியே விருது உள்ளிட்ட பல முக்கிய விருதுகளைப் பெற்றுள்ள இவரது சிறுகதைத் தொகுப்புகள் ஆங்கிலம் உட்பட பல உலக மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.


சொர்க்கத்துக்கு தப்பிச் செல்வதற்கான குழாய்கள்

எட்கர் கெரெட்

தமிழில்: ஜி.குப்புசாமி

நான் ஏழாம் வகுப்பில் இருந்தபோது ஒரு மனோதத்துவ நிபுணர் எங்கள் பள்ளிக்கு வந்து எங்களிடம் சில மதிப்பீட்டு சோதனைகள் நடத்தினார். என்னிடம் இருபது படங்களைக் காட்டி அவற்றில் ஒவ்வொன்றிலும் என்ன தவறுகள் இருக்கின்றன என்று கேட்டார். எனக்கு அவை எல்லாமே சரியாக இருப்பதாகவே தோன்றின.

அவர் மிகவும் களைப்புற்று முதல் படத்தை மீண்டும் என்னிடம் காட்டினார். அது ஒரு சிறுவனின் படம். ''இந்தப் படத்தில் உள்ள தவறு என்ன?'' என்று சலிப்பான குரலில் கேட்டார். நான் அந்தப்படத்தில் எந்தத் தவறும் இருப்பதாகத் தெரியவில்லை என்றேன். அவர் கடும் எரிச்சலோடு, ''இந்தப் படத்தில் உள்ள பையனுக்கு காதுகளே இல்லை. அதுகூட உனக்குத் தெரியவில்லையா?'' என்று கேட்டார். உண்மையைச் சொன்னால், அந்தப் பையனுக்கு காதுகள் இல்லாமல் இருப்பதை அந்தப் படத்தை மீண்டும் பார்த்தபோது கவனித்துதான் இருந்தேன். ஆனால் அந்தப்படத்தில் எதுவும் தப்பு இருப்பதாக எனக்குத் தோன்றியிருக்கவில்லை.



ஓவியம்: திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்



அச்சோதனைக்குப் பிறகு அந்த மனோதத்துவ நிபுணர் எனக்கு 'புலனுணர்வு குறைபாடு' இருப்பதாக சான்றளித்துவிட்டதால் என்னை மரத்தச்சுப் பள்ளிக்கு மாற்றிவிட்டார்கள். அங்கு சேர்ந்ததும் மரத்தூள்கள் எனக்கு ஒவ்வாமையை ஏற்படுத்துவது தெரிந்து உலோகப் பட்டறை வகுப்புக்கு மாற்றினார்கள். அங்கு நான் நன்றாகவே படித்து பயிற்சி எடுத்துக்கொண்டேன். ஆனாலும் அது எனக்குப் பிடித்தமான துறையாக இருக்கவில்லை.

உண்மையைச் சொன்னால் எதுவுமே எனக்குப் பிடித்தமான வேலையாக இருக்கவில்லை. அந்தப் படிப்பை முடித்ததும் குழாய்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தேன். அதன் முதலாளி ஒரு புகழ்பெற்ற தொழில்நுட்பக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற பொறியியலாளர். மிகவும் கெட்டிக்கார மனிதர். காதுகள் இல்லாத சிறுவனின் படத்தையோ, அல்லது அதைப்போன்ற தப்பான படத்தையோ அவரிடம் காட்டினால் உடனே தப்பை கண்டுபிடித்துச் சொல்லிவிடும் அளவுக்கு புத்திசாலி.

எனது பணிநேரம் முடிந்தபின்னும் தொழிற்சாலையிலேயே வெகுநேரம் தங்கி, யாருக்கும் தெரியாமல் விநோதமான வடிவங்களில் வளைந்து நெளியும் குழாய்களைத் தயாரிப்பது என் பொழுதுபோக்காக இருந்தது. சுருண்டு கிடக்கும் பாம்புகளைப் போல வடிவமைக்கப்பட்ட அந்தக் குழாய்களின் வாய்களின் வழியாக கோலிகுண்டுகளைப் போடுவேன். அது குழாய்க்குள் கடகடவென்று ஓடி வெளியே வந்து விழுவதைப் பார்ப்பதற்கு சுவாரஸ்யமாக இருக்கும். எனது இச்செய்கை உங்களுக்கு மடத்தனமாகத் தோன்றலாம், ஆனால் அதை ரசித்து செய்து கொண்டிருந்தேன்.

ஒருநாள் இரவு மிகவும் சிக்கலான வடிவத்தில் ஒரு குழாயைச் செய்தேன். ஏராளமான வளைவுகள், திருப்பங்களோடு நான் உருவாக்கியிருந்த அந்தக் குழாய்க்குள் ஒரு கோலிக்குண்டை போட்டேன். அது மறுமுனையில்

வெளியே வரவில்லை. நடுவில் அது எங்கோ சிக்கிக்கொண்டிருக்கும் என்றுதான் முதலில் தோன்றியது. அதன்பிறகு மேலும் இருபது கோலிக்குண்டுகளை ஒன்றன்பின் ஒன்றாக உள்ளே போட்டேன். எதுவுமே வெளியே வரவேயில்லை. அவை மாயமாக மறைந்து விடுகின்றன என்று புரிந்தது. இப்படி நான் சொல்வது எல்லாமே உங்களுக்கு அபத்தமாகத் தெரியலாம்.

கோலிக்குண்டுகள் அப்படியெல்லாம் மறைந்து போகாது என்று எல்லோருக்குமே தெரியும். ஆனால் குழாயின் ஒரு முனை வழியாக உள்ளிடும் கோலிகள் மறுமுனையில் வெளியே வருவதில்லை என்பது எனக்கு விநோதமான விஷயமாகவே தெரியவில்லை என்பதைச் சொல்லவேண்டும். இது மிகவும் இயல்பான நிகழ்வு என்றே எனக்குத் தோன்றியது. அப்போது தான் எனக்கு ஓர் எண்ணம் தோன்றியது. இதே வடிவத்தில் இதைவிடப் பெரிய அளவில் ஒரு குழாயைத் தயாரிக்க வேண்டும், அதற்குள் நான் புகுந்து மறைந்துவிடவேண்டும். இந்த எண்ணம் உதித்ததும் எனக்கு மகிழ்ச்சி பொங்கியது. சத்தமாக சிரிக்கத் தொடங்கினேன். என் வாழ்நாளிலேயே முதல்முறையாக வாய்விட்டுச் சிரித்தது அப்போதுதான் என்று நினைக்கிறேன்.

அன்றிலிருந்து அந்த ராட்சதக் குழாயைத் தயாரிக்கும் வேலையைத் தொடங்கினேன். பணிநேரம் முடிந்ததும் இரவுமுழுக்க அந்தக் குழாயை உருவாக்குவேன். காலையில் அதன் பாகங்களை ஸ்டோர் ரூமில் ஒளித்து வைத்துவிடுவேன். அந்தக் குழாயைத் தயாரித்து முடிக்க இருபது நாட்கள் பிடித்தன. கடைசி நாளன்று அதன் பாகங்களை ஒன்றோடொன்று பிணைத்து முடிக்க ஐந்து மணிநேரங்களானது. மொத்த வேலையும் முடிந்ததும் அந்த பிரமாண்டமான குழாய் தொழிற்சாலையின் பணிக்கூடத்தில் பாதி இடத்தை அடைத்துக் கொண்டிருந்தது.

முழுமையடைந்திருந்த அந்தக்குழாய் எனக்காகக் காத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தபோது பள்ளியில் என்னுடைய சமூகவியல் ஆசிரியர் ஒருமுறை சொன்னது நினைவுக்கு வந்தது. பண்டைக் காலத்தில் குறுந்தடியை உபயோகிக்க கற்றுக்கொண்ட முதல் மனிதன், அவனுடைய இனக்குழுவில் இருந்த எல்லோரையும்விட வலிமையானவனாகவோ, சாமர்த்தியசாலியாகவோ இருந்திருக்கமாட்டான்; மற்றவர்களுக்கு குறுந்தடி என்ற ஆயுதம் தேவைப்பட்டிருக்கவில்லை, அவனுக்குத் தேவைப்பட்டிருக்கிறது. தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காகவும், தனது பலவீனத்தை ஈடுகட்டிக்கொள்வதற்காகவும் ஒரு குறுந்தடி தேவைப்பட்டதால் அதை உருவாக்கிக் கொண்டான், என்றார்.

கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து போய்விட வேண்டுமென்று விரும்புகிறவன் இந்த உலகத்தில் என்னைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாது. அதனால்தான் இந்தக்குழாயைக் கண்டுபிடித்தது நானாக இருக்கிறேன். இந்தத் தொழிற்சாலையை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கும் பொறியியல் பட்டம் பெற்றுள்ள அறிவாளி எஞ்சினீயருக்குக்கூட இது தோன்றவில்லை, எனக்குத்தான் தோன்றியிருக்கிறது.

என்ன நடக்கப் போகிறது என்று எதுவுமே தெரியாவிட்டாலும் தரையில் ஊர்ந்தபடி அந்தக் குழாய்க்குள்ளே நுழைந்தேன். ஒருவேளை மறுமுனையில் கோலிக்குண்டுகள் குவியலுக்கு மத்தியில் காதுகள் அற்ற சிறுவர்கள் இருக்கலாம், யார் கண்டது! குழாய்க்குள் ஒரு குறிப்பிட்ட இடத்தைக் கடந்தபோது என்னவோ நிகழ்ந்தது. அது என்னவென்று தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் நான் இந்த இடத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறேன்.

நான் இப்போது ஒரு தேவனாக மாறியிருப்பதாகத் தெரிகிறது. பக்க வாட்டில் சிறகுகள் முளைத்திருக்கின்றன. தலைக்கு மேல் ஓர் ஒளிவட்டம் இருக்கிறது. என்னைப்போல நூற்றுக்கணக்கானோர் சுற்றிலும் இருக்கின்றனர். இந்த இடத்துக்கு நான் வந்தடைந்த சமயத்தில் அவர்கள் எல்லோரும் வட்டமாக சுற்றி உட்கார்ந்து, நான் குழாய்க்குள் முன்பு போட்டிருந்த கோலி குண்டுகளை வைத்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

சொர்க்கம் என்பது தமது வாழ்நாள் முழுக்க நல்லதையே செய்து கொண்டிருந்தவர்களுக்கான இடம் என்று இதுவரை நினைத்து வந்திருக்கிறேன். ஆனால் அப்படியில்லை என்று இப்போது தெரிகிறது. அப்படியொரு ஏற்பாட்டை செய்யுமளவுக்கு கடவுள் இரக்கமும் கருணையும் அற்றவர் அல்ல. சொர்க்கம் என்பது உண்மையில் உலகத்தில் சந்தோஷத்தைக் கொஞ்சமும் அனுபவித்திருக்காதவர்களுக்கான இடம்.

வாழ்வில் மகிழ்ச்சியற்று தற்கொலை செய்து கொள்பவர்கள் மீண்டும் தமது வாழ்க்கையை வாழ்ந்து முடிப்பதற்காக இங்கு வந்திருப்பதாக அவர்கள் என்னிடம் சொன்னார்கள். முதல்முறை வாழ்க்கை சந்தோஷமாக அமைந்திருக்காவிட்டால் அடுத்த வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்காமல் இருக்காது. எனவே உலகத்தோடு பொருந்தி வாழ்வதற்கு இயலாத மனிதர்கள் எல்லோரும் இங்கு வந்து சேர்வதாகத் தெரிகிறது. சொர்க்கத்தை வந்தடைவதற்கு ஒவ்வொருவருக்கும் அவர்களுக்கே உரித்தான தனித்தனி வழிகள் இருக்கின்றன.

கரீபியக் கடலில் உள்ள பெர்முடா முக்கோணம் என்ற மர்மப் பகுதியில் ஒரு குறிப்பிட்ட இடத்தைக் கடந்து செல்கையில் தமது விமானத்தை அந்தரத்தில் பல்டி அடித்து வித்தைகள் செய்த விமானிகள் இங்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். சமையலறை அலமாரியைத் திறந்து உள்ளே நுழைந்த குடும்பத்தலைவிகள் இங்கு வந்திருக்கிறார்கள். வான்வெளியில் இடத்தியல் உரித்திரிபுகளைக் கண்டுபிடித்த கணித அறிவியலாளர்கள் அந்த வெளித் திரிபுகளின் ஊடே நுழைந்து இங்கு வந்தடைந்திருக்கிறார்கள்.

ஆகவே உங்கள் உலகத்தில் நீங்கள் உண்மையிலேயே மகிழ்ச்சியற்று வாழ்பவர்களாக இருந்தால், உங்களுக்கு மிகவும் தீவிரமான புலனுணர்வு குறைபாடு இருப்பதாக எல்லாவிதமான மனிதர்களும் சொல்லிக்கொண்டிருந்தால், இங்கு வந்து சேர்வதற்கு உங்களுக்குரிய வழியை நீங்கள் கண்டுபிடித்துக்கொள்ளவேண்டும். அந்த வழியைக் கண்டறிந்து இங்கு வரும்போது தயவு செய்து சீட்டுக்கட்டுகளைக் கொண்டு வாருங்கள். கோலிக்குண்டுகளோடு மட்டும் விளையாடி நாங்கள் வெகுவாகக் களைப்புற்றிருக்கிறோம்.

ஞாயிற்றுக்கிழமை

அசோகன் சருவில்
தமிழில்: கே.வி.ஜெயஸ்ரீ

இது முன்பு, நூறு வருடங்களுக்கு முன்னால் ரஷ்யாவில் நிகழ்ந்தது. செப்டம்பரின் ஒரு விடியல். ஓட்ஸ் வயல்களில் இளம்காற்று சுற்றித் திரிந்தது. சூரியக்கதிர்கள் பட்டு பாப்ளார் மரங்களிலிருந்த பனிக்கட்டிகள் வெள்ளிபோல உருகி வழிந்தன.


சிறைச்சாலையின் பெரிய கதவுகளின் வழியாகக் கைதிகள் வெளிவந்து கொண்டிருந்தனர். வார்டன் உரத்த குரலில் தெளிவாக எண்ணினான். ஒண்ணு, ரெண்டு எண்ணுவதோடு அவன் ஒவ்வொருவரையும் சற்றே தள்ளிவிடவும் செய்தான். சாக்குத்துணி ஆடை அணிந்தவர்களும், தலை பாதி மொட்டை அடித்தவர்களும், காலில் சங்கிலியால் பிணைக்கப்பட்டவர்களுமான ஆண்கள் முதலில் வெளியேறினர். வேசி மாஸ்லோவாவும் தோழிகளும் பின்னால் வந்தனர்.

சந்தேகப் பார்வையோடு ஒரு இன்ஸ்பெக்டர் அவர்களைத் தொடர்ந்தார். அவர்கள் சிறைச்சாலையின் உள்ளிருந்த தேவாலயத்தின் விசாலமான வராந்தாவை நோக்கி நடந்தனர். அங்குமிங்கும் இடித்துக்கொண்டும் சலசலத்தபடியும் அவர்கள் அங்கே கூடி நின்றனர். அமைதி தவழும் சுவரோவியங்களில் கண்கள் பதித்து மாஸ்லோவா ஒதுங்கி நின்றாள். அவற்றுள் மரியாதைக்குரியவளும், சமூக சேவகியும், தன் விபச்சார விடுதியின் தலைவியுமான கிடேய்வாவின் சாயலுள்ள ஒரு பெண்ணின் ஓவியமும் இருந்தது.

பேசத் துவங்கிய ஒருவனின் முகத்தில் இன்ஸ்பெக்டர் ஓங்கி அறைந்தார். அவன் இரு கைகளிலும் விலங்கிடப்பட்டிருந்ததால் மூக்கிலிருந்து வழிந்த

ரத்தத்தைத் துடைப்பதற்கு மிகவும் சிரமப்பட்டான். பட்டு அங்கி தரித்த பாதிரியார் ஒரு அப்பத்தை முறித்துத் துண்டுகளாக்கிக் கொண்டிருந்தார். அவற்றை ஒரு பாத்திரத்தில் அடுக்கி வைத்தார். மற்றொரு பாத்திரத்தில் ஒயினையும் ஊற்றி வைத்தார். அந்நேரம் சற்றும் உணர்ச்சியற்ற தன் குரலால் தேவாலய ஊழியன் டிக்கன், ஜார் மன்னரின் நலத்தை விரும்பும் ஒரு பிரார்த்தனையைச் சொன்னான். அதைப் பின்தொடர்வதான பாவனையில் கைதிகள் இரைச்சல் எழுப்பினர்.

பாதிரியார் பின்னால் திரைச்சீலை தொங்கும் ஓர் அரங்கின் மத்திக்கு வந்தார். தன் கையிலிருக்கும் அப்பத் துண்டுகள் தேவனின் உடல் என்றும்,



ஓவியம்: **திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்**

ஒயின் அவன் ரத்தம் என்றும் சொன்னார். பிறகு பாத்திரத்திலிருந்த ஒரு பெரிய துண்டு தேவமாமிசம் எடுத்து ரத்தத்தில் தோய்த்து அதை மென்று தின்றார். சிறைவாசிகள் அதற்குள் அமைதியாகி பாதிரியாரின் உரையை கவனிக்கத் தொடங்கியிருந்தனர். தேவனின் மாமிசத்தைச் சாப்பிடவும், ரத்தத்தைக் குடிக்கவும் அவர் சிறைவாசிகளை அழைத்தார். அவர்களுடனிருந்த குழந்தைகள் ஆவலுடன் முன்னால் சென்றனர். டிக்கன் அவர்கள் ஒவ்வொருவரின் வாயிலும் சிறு துண்டுகளை வைத்தான். தேவனின் மாமிசம் தின்று திருப்தியடையாத துக்கத்தோடு குழந்தைகள் திரும்பச் சென்றனர்.

பாதிரியார் திரைச்சீலையின் பின்னால் சென்றார். கையில் இருந்த தேவ மாமிசத் துண்டுகள் முழுவதையும் தின்றுவிட்டு, ரத்தத்தை மடமடவெனக் குடித்தார். உதட்டையும் மேல்மீசையையும் நக்கித் துடைத்துக்கொண்டு வெளியே வந்தார். தொடர்ந்து வேதப் புத்தகத்தை விரித்து சீடர்களால் பிரசித்தி பெற்றவனும், தியாகிகளால் நினைவு கூரப்பட்டவனுமான இயேசுவைத் துதிக்கத் துவங்கினார். முள்முடி தரித்து, கண்களில் உலகின் துக்கமனைத்தும் சுமந்து தலை குனிந்திருக்கும் சிலுவையில் அறையப்பட்டவனைப் பார்த்தபடி இருந்த மாஸ்லோவா தடாலெனத் திடுக்கிட்டெழுந்தாள். சங்கிலிகள் ஒன்றாகக் குலுங்கின. சிறைவாசிகள் முட்டிபோட்டு, நெற்றியால் எவ்வளவு முடியுமோ அவ்வளவுதூரம் தரையைத் தொட முயன்றனர். அவளும் அதில் சேர்ந்துகொண்டாள்.

சங்கிலிகள் மீண்டும் மீண்டும் ஒரே தாளத்தில் ஒலித்தன. சிறைவாசிகள் எழுந்தனர். நீட்டிப் பிடித்திருந்த சிலுவையை முத்தமிடுவதற்காக அவர்கள் பாதிரியார் அருகே வந்தனர். சொத்துரிமை நட்டமடைந்தும் தன் நிலத்திலிருந்து வெளியேறாமல் இருந்ததற்குத் தண்டிக்கப்பட்டு பைத்தியம் பிடித்த விவசாயி நிகிடின் அதைத் தட்டிப் பறிக்க முயன்றான். இன்ஸ்பெக்டரிடம் பேசிக்கொண்டிருந்த பாதிரியார், சற்றே பீதியோடு சிலுவையை வேகமாகப் பின்னுக்கிழுத்து உள்ளே மறைந்தார்.

சடங்குகள் தீர்ந்திருந்தன. சங்கிலிகளின் தாளத்தோடு கூடிய ஒலி சிறையை நோக்கி நகர்ந்தது. வார்டன் மீண்டும் எல்லோரையும் தொட்டுத்தொட்டு எண்ணினான். கடைசியில் அவன் அதிர்ந்து போனான். எண்ணிக்கையில் ஒன்று கூடியிருந்தது. இந்தச் செய்தியைச் சொல்வதற்காக மிகுந்த பரபரப்போடு அவன் உயர் அதிகாரியிடம் சென்றான்.

தங்களுடன் இணைந்த புதியவனை மாஸ்லோவா சட்டென அறிந்து கொண்டாள். காரணம், மற்ற ஆண் சிறைவாசிகளைவிட அவனுக்குத் தோள்வரை முடி நீண்டு வளர்த்திருந்தது. நிசப்தனாகவும் வேதனை கலந்த முகபாவனையோடும் அவன் காணப்பட்டான். நெற்றியிலும் நெஞ்சிலும் காலிலும் ஆணிகள் அறையப்பட்டதால் உண்டான வடுக்கள் தெரிந்தன.

'நீங்கள்?'

மாஸ்லோவாவின் கண்கள் நிறைந்து வழிந்தன.

மாஸ்லோவா: லியோ டால்ஸ்டாயின் 'உயிர்த்தெழுதலில்' ஒரு கதாபாத்திரம்.

ஆசிரியர் குறிப்பு:

ஜீன் ரீஸ் ***(1890- 1979)*** **(**Jean Rhys)

ஒரு பிரிட்டிஷ் பெண் நாவலாசிரியர். கரிபீயாவிலுள்ள டோமினிக்கன் குடியரசில் பிறந்து வளர்ந்து தனது பதினாறாவது வயதிலிருந்து இங்கிலாந்தில் வசித்துவந்தார். ஐந்து நாவல்களும், பல சிறு கதைகளும் எழுதியுள்ள நவீனத்துவ பின் நவீனத்துவ எழுத்தாளாரான இவருக்கு பிரிட்டிஷ் அரசின் உயரிய விருது வழங்கப்பட்டது. Wide Sargasso Sea ***என்ற நாவலால் இவர் அறியப்படுகிறார்.***

பசி

ஜீன் ரீஸ்

தமிழில்: ச.வின்சென்ட்


நேற்றிரவு நான் தூங்க வேண்டுமென்பதற்காக அதிக அளவில் வெலேரியன் மாத்திரையை எடுத்துக் கொண்டேன். இன்று காலையில் மிக அமைதியாக, நன்றாக ஓய்வெடுத்துக் கொண்டது போல எழுந்தேன். ஆனால் கைகள் நடுங்கின.

அதனால் பரவாயில்லை. எனக்குப் பசியுமில்லை. அதுவும் நல்லதற்குத்தான்; சாப்பிடுவதற்கு எதுவும் இருப்பதற்கான சாத்தியம் இல்லை. நான் ஒரு ரொட்டித் துண்டு வாங்கியிருக்கலாம். ஆனால் நாங்கள் நீண்டகாலமாக ரொட்டியைத் தவிர வேறொன்றுமே இல்லாமல் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். சலிப்பாக ஆகிவிடுகிறது. மேலும், இந்தப் பாழாய்ப்போன உப்பு...

பட்டினி என்பது - அல்லது அரைப்பட்டினி என்பது - காலையில் காஃபி, மதியம் ரொட்டி என்று, எல்லாவற்றையும் போலத்தான் அதுவும் ஒன்று. அதற்கென்று இழப்பீடு உண்டு, ஆனால் அவை உடனே வராது.. வெளிப்படையாகச் சொல்லவேண்டுமென்றால் அது ஒரு மோசமான வேலை.

முதல் பன்னிரெண்டு மணிநேரத்திற்கு வெறும் வியப்புத்தான். பணம் இல்லை. சாப்பிட ஒன்றுமில்லை ஒன்றுமே இல்லை. ஆனால் அது கோமாளித்தனமானது. செய்வதற்கு ஏதாவது ஒன்று இருக்கவேண்டும். நடைமுறை சாத்தியமான ஒரு இயல்பாக இருக்கும் அறிவு உங்களை நிறைக்க நீங்கள் ஓடுகிறீர்கள். உங்கள் கையில் அகப்பாடாத 'ஏதாவது ஒன்றைத்' தேடுகிறீர்கள். இரவில் உணவைப்பற்றி நீண்ட கனவுகள் காண்கிறீர்கள்.

இரண்டாவது நாள் கடுமையான தலைவலி. வம்புக்கிழுத்துச் சண்டைபோடும் மன நிலை வருகிறது. கண்ணுக்குத் தெரியாத, எதையும் நம்பாத ஒருவரோடு நீங்கள் வாக்குவாதம் செய்கிறீர்கள்.



ஓவியம்: ரமணன்

இது என்னுடைய குற்றம் இல்லை என்று நான் உங்களுக்குச் சொல்வேன். இது திடீரென்று நிகழ்ந்தது. உடல்நலம் இல்லாமல் இருந்தேன். திட்டமிடுவதற்கு எனக்கு நேரம் இல்லை. போராடுவதற்குப் பணம் தேவையென்று உங்களால் பார்க்க முடியாதா? சுத்தமாக ஒரு நூறு ஃப்ரேங்க்குகளுடனும்கூட ஒருவர் திட்டம் போடமுடியும்.

சுத்தமாக என்று சொன்னேன். தனியாக நூறு ஃப்ரேங்குகள். தங்கும் விடுதிக்குப் பணம் கொடுக்கவேண்டும்.. உடைகளை விற்கவா? ..பாரிசில் பெண்கள் உடைக்கு எந்தப் பணமும் கிடைக்காது. ஒரு தாதி வேலைக்கு நேற்று முயற்சி செய்தேன். எனக்குப் படபடப்பு.சிறுபிள்ளைத்தனமாகத் தெரிந்தது. நீங்களும் அப்படித்தான் இருப்பீர்கள்.

ஓ கடவுளே! என்னைத் தனியாக விட்டுவிடுங்கள். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதுபற்றி எனக்குக் கவலை இல்லை; இல்லவே இல்லை.

மூன்றாம் நாள் நோய் வந்தது போன்ற உணர்வு; நான்காம் நாள் அழத்தொடங்குகின்றோம். இயற்கையாகவே. கெட்ட பழக்கம்தான்; ஒட்டிக் கொள்கிறது.

ஐந்தாம் நாள்

எல்லாவற்றிலுமிருந்து விலகியிருப்பது போன்ற ஓர் உணர்வுடன் விழித்தெழுகிறீர்கள். நீங்கள் அமைதியாக தெய்வம்போல இருக்கிறீர்கள். இந்த நிலையை அடையத்தான் மதப் பெரியவர்கள் உண்ணாநோன்பு இருக்கிறார்கள்.

எனது கைகளை என் கண்களின்மேல் வைத்துக் கொண்டு படுக்கையில் படுத்துக் கொண்டு கடந்த இரண்டாண்டு கால, வீணான என்னுடைய போராட்டங்களை வெறுக்கிறேன், முழுவதுமாக. எதைப்பற்றி நான் வீணாக அலட்டிக் கொண்டிருந்திருக்கிறேன்? எப்படியிருப்பினும், அதனால் என்ன? பெண்கள் போராடும்போது எப்போதுமே கேலிக்குரியவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

பாறை உச்சியிலிருந்து தொங்கவிடப்பட்டிருப்பதைப் போல. நீங்கள் உயிரைக் காப்பற்றத் தொங்கிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் விரல்களின்மேல் மக்கள் நடந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். பெண்கள் நடப்பது மட்டுமில்லை; ஓங்கி மிதித்துக் கொண்டும் போவார்கள். பழங்காலத்து ஆட்கள்தான் பெரும்பாலான பெண்கள்.

ஆனால் நான் தொங்கிக்கொண்டு மேலே ஏற பெரும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறேன். மூன்று முறை சம்பாதிக்கும் வழிகளைத் தேடியிருக்கிறேன். வழிகளா? அவளுக்கு வழிகள் உண்டா? அவளுக்கு வழிகள் உண்டு. நான் விளம்பரப் பொம்மையாக இருந்திருக்கிறேன். நான் இல்லை நீங்கள் நினைப்பதுபோல இல்லை.

சரிப்பட்டு வரவில்லை; எதுவுமே சரிப்படவில்லை.

சரி; நீங்கள் சபிக்கப்பட்டுவிட்டீர்கள்.

நீங்கள் கீழே அமிழ்ந்துவிட்டால் நீங்கள் எழவே முடியாது. ஒருமுறை விழுந்த பிறகு, யாராவது ஒருவர் எழுந்திருந்திருக்கிறார்களா?

சில மாதங்களுக்கு ஒருமுறை ஒரு நெருக்கடி வந்தே தீரும். ஒவ்வொரு நெருக்கடிக்குப்பிறகும் நீங்கள் தொய்ந்து போவீர்கள்.

நான் ரஷியக்காரியாக இருந்தால் விதியென்று நெடுநாட்களுக்கு முன்பே ஏற்றுக் கொண்டிருப்பேன். நான் ஒரு ஃப்ரெஞ்சுக்காரியாக இருந்திருந்தால் நெடுநாட்களுக்கு முன்பே கண்டுபிடித்து பின்கதவு வழியாகப் போயிருப்பேன். ஃப்ரெஞ்சுக்காரர்களை நான் அவமரியாதையாகப் பேசவில்லை. அவர்கள் தர்க்கரீதியாகச் சிந்திக்கக் கூடியவர்கள் எனக்கு அறிவிருந்திருந்தால், உடைகளை உடுத்திக் காட்டும் விளம்பரப் பொம்மையாகத் தொடர்ந்திருப்பேன், அதிலுள்ள மற்ற விஷயங்களைப் பொருட்படுத்தாமல். என்ன நடந்தது? நான் போராடிக்கோண்டே இருந்திருக்கிறேன், கெட்டிக்காரத்தனமாக அல்ல. ஏறத்தாழ என் விருப்பத்திற்கு மாறாக. நிறைவாறாத நோக்கங்கள் கொண்ட நாட்டை இங்கிலாந்தைச் சேர்ந்தவள் அல்லவா நான்?

என்னிடம் ஒரு கோப்பை ஒயின் இருந்திருந்தால் நான் அதற்கு 'டோஸ்ட்' சொல்லிக் குடித்திருப்பேன்; சிறந்த அர்ப்பணம்: தோற்றுப்போன நோக்கத் திற்காக, தோற்றுப்போன எல்லா நோக்கங்களுக்காக.

ஓ! கைவிட்டுவடுவதில் எவ்வளவு நிம்மதி; அதலபாதாளத்தில் வசதியாக விழுவது..

கடைசியில் பார்த்தால் அவ்வளவு பயங்கரமான இடமில்லை இது. ஒருநாள் இதற்குப் பழக்கமாகிவிடும்; சந்தேகமில்லை. வேடிக்கையான மக்கள் நிறைய இங்கே.

முயற்சி எடுக்க இனித் தேவையில்லை.

திரும்ப நினைத்துப் பார்த்தால் ஐந்தாம் நாளில் வீண்.

காலத்தைக் கழிக்கச் சிறந்த வழி போன்ற ஒரு புத்தகத்தைப்பற்றிக் கனவு காண்பதுதான், அல்லது ஓ மீண்டும் குறிப்பாக எண் ஒன்று. மணிக்கணக்காய் கனவுகாண சொற்களும் வாக்கியங்களும்.

நல்வாய்ப்பாக எங்களிடம் இரண்டு புத்தகங்களும் உள்ளன: விற்கமுடியாதபடி கிழிந்துபோய்

அவள் அதிகமாகத் தீயவளாக ஆவதற்குமுன்னர் அவளை மிகவும் நேசித்தேன்.

உங்கள் நரம்புகள் இறுக்கமாக இழுத்துக் கட்டப்பட்டதுபோல இருக்கிறது வயலின் நரம்புகள் போல. எதுவும், அழகிய சொற்கள், அல்லது தெருவில் இசைக்கருவியிலிருந்து வரும் ஓசை, மோசமாக வாசிக்கப்பட்ட பியானோ கூட என்னை அழச்செய்துவிடுகிறது. பசியோடும் சோகத்தோடும் இல்லை; இல்லவே இல்லை!

ஆனால் வாழ்க்கையின் அசாதாரண அழகுடன்...

நான் ஐந்து நாட்களுக்குமேல் உணவில்லாமல் இருந்ததில்லை; உங்களுக்கு இதற்குமேலும் என்னால் வேடிக்கை காட்டமுடியாது.

ஆசிரியர் குறிப்பு:

கி தெ மொப்பஸான்(1850 - 1893)

பிரஞ்சு இலக்கிய மேதை மொப்பஸானை, பல காலமாக மாப்பசான் எனப் பிழையான உச்சரிப்பில் தமிழில் வழங்கி வருகின்றனர். அவரை 'சிறுகதை இலக்கியத்தின் தந்தை' என்று உலகம் கொண்டாடுகிறது. ஆன்டன் செக்காவுக்கும் முன்னோடியான இவர் தன்னுடைய 43 ஆண்டு கால வாழ்வில் 300க்கும் மேற்பட்ட சிறுகதைகளை படைத்தவர்.

சிறுகுடி

கி.தெ.மொப்பஸான்

தமிழில்: சு.ஆ.வெங்கட சுப்புராய நாயகர்

ழியில் ஷிக்கோ என்பவர் பிரான்சில் உள்ள எப்ரெவீல் என்னும் ஊரில் வசித்து வந்தார். அவர் ஒரு விடுதிக்காப்பாளர்.

தன் குதிரை வண்டியை திருமதி மக்லுவாரின் பண்ணை வீட்டின் எதிரில் நிறுத்தினார். நாற்பது வயதுடைய அந்த உயரமான மனிதர் குண்டாகவும் இருந்தார்.சிவந்த முகம் கொண்ட அவரை, பொதுவாக விபரமறிந்த மனிதர் என அனைவரும் கருதிவந்தனர்.

குதிரையை வாசல் அருகில் கட்டிவிட்டு அந்த வீட்டுக்குள் நுழைந்தார். வீட்டின் உரிமையாளரான மூதாட்டியின் நிலத்தையொட்டி அவருக்கு சிறிதளவு நிலம் இருந்தது. நீண்ட நாட்களாக அந்த பெண்மணியின் நிலத்தின் மீது இவருக்கு ஒரு கண். பலமுறை அந்த நிலத்தை வாங்க இவர் செய்த முயற்சிகளுக்கு பயனில்லை. மூதாட்டி பிடிவாதமாக அதனை விற்க மறுத்ததுடன், ''இங்கேதான் நான் பிறந்தேன் இங்கேதான் நான் சாவேன்'' என்று கூறி வந்தார்.

பண்ணை வீட்டின் வாசலில் உட்கார்ந்தபடி உருளைக்கிழங்குகளை உரித்துக்கொண்டிருந்தார். சுமார் எழுபத்திரெண்டு வயதுடைய மிகவும் ஒல்லியாக இருந்த அப்பெண், வாடிப் போய் சுருக்கங்கள் விழுந்து ஏறக்குறைய வற்றிப் போய், அதிகம் கூன் விழுந்து காணப்பட்டார். ஆனால், இளம்பெண்ணைப்போல் சோர்வின்றி சுறுசுறுப்பாக செயல்பட்டார். தோழமையுடன் அவர் முதுகில் தட்டிய ஷிக்கோ, பக்கத்தில் போய் உட்கார்ந்தார்.



ஓவியம்: ஷ்யாம்

''அம்மா, நீங்கள் எப்போதுமே இப்படி உற்சாகமாக நல்ல உடல் நலத்துடன் இருப்பது எனக்கு சந்தோஷம்'' .

''நன்றி, எனக்கு எந்த குறையும் இல்லை. சரி ஷிக்கோ, நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?''

''நானா? ஒன்றும் குறையில்லை. அவ்வப்போது மூட்டு வலி வரும். மற்றபடி வேறு எதுவுமில்லை.''

'' நல்லது''

இதற்கு மேல் அவர் எதுவும் பேசவில்லை. தொடர்ந்து தம் வேலையில் மூழ்கினார். அவரது வளைந்த முடிச்சு விழுந்த விரல்கள், பெரிய இறாலின் கொடுக்குகள்போல், உறுதியாக இருந்தன. வாளியில் இருந்த உருளைக்கிழங்குகளை ஏதோ கிடுக்கிகள் போல் அந்த விரல்கள் கவ்வி வேகமாக எடுத்தன. அடுத்த கையில் இருந்த பழைய கத்தியால் அவற்றின் தோலை உரித்து முடித்தவுடன் கிழங்குகளை தண்ணீரில் போட்டார். மூன்று கோழிகள் குதித்தபடி ஒன்றன்பின் ஒன்றாக அவரது தொடையின் மீது வந்து உட்கார்ந்து சிறிதளவு தோலை கவ்விக்கொண்டு, அலகுகளால் தூக்கிக் கொண்டு போக, தங்கள் கால்கள் ஒத்துழைக்கும் அளவு வேகமாக ஓடி மறைந்தன.

எதையோ சொல்ல வாயெடுத்து, நெஞ்சிலே இருக்க, அதைச் சொல்ல முடியாமல் சங்கடத்துடனும் அதே நேரம் ஆவலுடனும் ஷிக்கோ இருப்பது தெரிந்தது. ஒருவழியாக, வேகமாக, ''மக்லுவார் அம்மா, அதாவது'' என்று வாயெடுத்தார்.

''என்ன, என்ன விஷயம்?'' ''அப்படியானால் உண்மையாகவே உங்கள் பண்ணை நிலத்தை விற்கப் போவதில்லையா?''

''நிச்சயமாக இல்லை. நான் சொல்வதை நீங்கள் குறித்து வைத்துக் கொள்ளலாம். நான் சொன்னது சொன்னது தான். எனவே அதைப்பற்றி மீண்டும் பேசாதீர்கள்.''

''ரொம்ப நல்லது, ஒரே ஒரு விஷயம் மட்டும் சொல்கிறேன். என்னிடம் ஒரு ஏற்பாடு இருக்கிறது, அது நம் இருவருக்கும் ஒத்து வரும் என்று நினைக்கிறேன்.''

''என்ன திட்டம்?''

''அப்படிக் கேளுங்கள். இதை என்னிடம் விற்று விடுங்கள். அதே நேரத்தில் நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். புரியவில்லையா? சரி, நான் சொல்வதை நன்றாக கவனியுங்கள்.''

உருளைக்கிழங்கு உரிப்பதை நிறுத்திவிட்டு, உப்பியிருந்த கண் இமைகளுடன் விடுதிகாப்பாளரை கூர்ந்து கவனித்தார்.

''புரியும்படி சொல்கிறேன். மாதம் நூற்றைம்பது பிரான்க் கொடுத்து விடுகிறேன். இப்போது புரியும் என்று நினைக்கிறேன். ஒவ்வொரு மாதமும் ஐந்து பிரான்க் நாணயங்கள் மொத்தம் 30 எடுத்து வருவேன். உங்கள் வாழ்க்கையில் இது எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்திவிடாது.

சிறு மாற்றம் கூட இருக்காது. உங்கள் வீடு இப்போது இருப்பது போலவே இருக்கும்.என்னைப் பற்றி எந்தக் கவலையும் உங்களுக்கு வேண்டாம். எனக்கு எவ்விதத்திலும் நீங்கள் கடன்படப் போவதில்லை. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் என் பணத்தை வாங்கிக் கொள்வது தான். இந்த ஏற்பாடு உங்களுக்கு சம்மதம் தானே?''

இவ்வாறு தன் திட்டத்தைக் கூறிவிட்டு அந்த மூதாட்டியை இன்முகத்துடன் அவர் பார்த்தார். இன்னும் கேட்டால், நல்லது செய்வதைப் போல் என்றும் சொல்லலாம். ஆனால், மூதாட்டியோ, இதில் ஏதோ ஒரு பொறி இருக்கிறது என்று சந்தேகப்படுவது போல் அவநம்பிக்கையுடன் பார்த்து,

''எல்லாம் சரிதான், ஆனால் உங்களுக்கு அந்தப் பண்ணை மட்டும் கிடைக்காது'' என்றார்.

''அதை விடுங்கள். இறைவன் எவ்வளவு காலம் நீங்கள் உயிரோடு இருக்க விரும்புகிறாரோ அத்தனை காலமும் நீங்கள் இங்கேயே இருக்கலாம். உங்கள் வீடாகவே இருக்கும். உங்கள் இறப்புக்குப் பிறகு எனக்கு சேர வேண்டியது என வழக்கறிஞர் முன் ஒரு உயில் மட்டும் எழுதித்தந்தால் போதும். உங்களுக்குத் தான் பிள்ளைகள் இல்லையே. அண்ணன் பிள்ளைகள் தான். மேலும் அவர்களைப்பற்றி உங்களுக்கு எந்த கவலையும் இல்லை. என்ன சொல்கிறீர்கள்? இது சம்மதம் தானே? உங்கள் வாழ்நாள் முழுவதும் எல்லாம் உங்களிடம் இருக்கும். மாதாமாதம் என்னிடமிருந்து நூற்றைம்பது பிரான்க் கிடைக்கும். உங்களைப் பொறுத்தவரை இது முழு லாபம்.''

மூதாட்டிக்கு ஆச்சரியமாக இருந்தது. சொல்லப் போனால் சங்கடமாக கூட இருந்தது. எனினும், அந்தத் திட்டத்திற்கு மனம் உடன்படத் துடிக்க, ''சம்மதம் இல்லை என்று சொல்லமாட்டேன். ஆனால் அதைப்பற்றி கொஞ்சம் யோசிக்க வேண்டும். ஒரு வாரம் கழித்து வாருங்கள். இதுபற்றி மீண்டும் பேசுவோம். அப்போது உங்களுக்கு உறுதியான முடிவைக் கூறுகிறேன்'', என்று சொல்லி அனுப்பிவைத்தார்.

ஒரு ராஜாங்கத்தை வென்ற அரசரைப் போல் அவ்வளவு சந்தோஷமாக ஷிக்கோ கிளம்பிச் சென்றார். இதே யோசனையுடன் இருந்த மக்லுவார் இரவு முழுவதும் தூங்கவில்லை. சொல்லப்போனால் முடிவு எடுக்கும் தயக்கத்திலேயே நான்கு நாட்கள் பரபரப்புடன் இருந்தார். தனக்கு அனுகூலமாக இல்லாத ஏதோ ஒன்று இந்த விஷயத்தில் இருக்கிறது என்று அவர் சந்தேகப்பட்டார். பிறகு மாதந்தோறும் தன் மேலங்கிப்பையில் விழும் நூற்றைம்பது பிரான்க் நாணயங்களின் ஒலி நினைவுக்கு வந்தது.உழைக்காமல் வானத்தில் இருந்து கொட்டுவது போல் இருக்க, அவர் மனம் பேராசையால் நிறைந்தது.

சட்ட ஆவண அதிகாரியிடம் சென்று விபரத்தை தெரிவித்தார். ஷிக்கோவின் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படி கூறிய அதிகாரி, 'மாதந்தோறும் வழங்க இருக்கும் தொகையை இருநூற்றைம்பது பிரான்க்காக கேட்டு வாங்குங்கள். ஏனென்றால் அந்த நிலம் குறைந்தபட்ச மதீப்பீடு செய்தால் கூட அறுபதாயிரம் பிரான்க் வரை போகும்' என்றார்.



''நீங்கள் இன்னும் பதினைந்து ஆண்டுகள் உயிருடன் இருந்தாலும் அவர் நாற்பத்தி ஐந்தாயிரம் பிரான்க் தான் கட்டியிருப்பார்.''

மாதம் இருநூற்று ஐம்பது பிரான்க் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்பதை நினைத்து சந்தோஷத்தில் அந்த மூதாட்டி துள்ளினார். இருந்தாலும் இன்னுமும் சந்தேகம் தீராமல் (ஏதோ சூழ்ச்சி இருக்குமோ என்ற அச்சத்தில்) வழக்கறிஞரிடமே பல கேள்விகளை கேட்டபடி நின்றிருந்தார். ஒரு வழியாக, அந்த ஒப்பந்தத்தை தயாரிக்குமாறு வழக்கறிஞரிடம் கூறிவிட்டு வீடு திரும்பிய அவரது தலை ஏதோ நான்கு குவளை ஆப்பிள் சிடர் குடித்திருந்ததைப் போல் சுற்றியது.

மீண்டும் இவரை சந்திக்க ஷிக்கோ திரும்பிவந்து பதிலுக்காக காத்திருந்தார்.எவ்வளவு பேசிப் பார்த்தும் படியாமல் அந்தத் திட்டத்துக்கு சம்மதிப்பதில்லை என்று முடிவு செய்திருப்பதாக தெரிவித்தார். தொடர்ந்து பதற்றத்தில் இருந்த போதும், நூற்றைம்பது பிரான்க்கு ஒப்புக்கொள்ளவில்லை. இறுதியில், ஷிக்கோ அவசரப்பட்டபோது, தன் எதிர்பார்ப்பை மக்லுவார் தெரிவித்தார்.

இதைத் கேட்டு ஆச்சரியமும் ஏமாற்றமும் அடைந்த அவர் அந்த தொகைக்கு ஒப்புக்கொள்ளவில்லை. அதன்பின் ஷிக்கோவை படியவைக்க, தோராயமாக தன் ஆயுள் காலம் எவ்வளவு நாள் நீடிக்க வாய்ப்பு இருக்கிறது என்பதைப் பற்றி பேசினார்.

''நிச்சயமாக இன்னும் ஐந்து அல்லது ஆறு ஆண்டு களுக்கு மேல் நான் இருக்கமாட்டேன். எழுபத்தி ஐந்தை நெருங்கிவிட்டேன். என் வயதுக்கு ஏற்ற தளர்ச்சி. அன்று இரவு கூட நான் செத்துவிடுவேன் என்று நினைத்தேன். எப்படியோ தவழ்ந்து போய் படுக்கையில் விழுந்தேன்''.

இதையெல்லாம் கேட்டு ஷிக்கோ மனம் மாறுவதாக இல்லை.

''அம்மா, இங்கே பாருங்கள். நம் ஊர் தேவாலய மணி போல் உறுதியாக இருக்கிறீர்கள். குறைந்தது நூறு வயது வரை இருப்பீர்கள்.நான் தான் முதலில் சாவேன். என் அடக்கத்தைப் பார்த்துவிட்டுத்தான் நீங்கள் போவீர்கள்.''

இப்படியே முழுநாளும் இந்த தொகையை முடிவு செய்யும் விவாதத்தில் கழிந்தது. அந்த மூதாட்டி வழிக்கு வருவது போல் தெரியாததால், ஷிக்கோ இருநூற்றைம்பது பிரான்க் தர சம்மதித்தார்.

மூன்று ஆண்டுகள் கடந்தன. அந்த மூதாட்டிக்கோ ஒரு வயது கூட அதிகமானதாக தெரியவில்லை.

ஷிக்கோ விரக்தியில் துடித்தார். ஐம்பது ஆண்டுகளாக இத்தொகையைக் கட்டி வருவதைப் போன்ற அலுப்பு ஏற்பட்டது. சரியாக மாட்டிக்கொண்டு முழிப்பதாகவும் தன் பணம் பறிக்கப்பட்டு பாழாவதாகவும் நினைத்தார். அவ்வப்போது மக்லுவாரைப் போய் பார்த்து வந்தார். ஜூலை மாதத்தில் என்றைக்கு அறுவடையைத் தொடங்கலாம் என்று வயலைப் போய் பார்க்கும் விவசாயியைப் போல் அவர் சென்றுவந்தார். தந்திரம் கலந்த பார்வையால் மக்லுவார் அவரை வரவேற்றார். ஷிக்கோவை ஏமாற்றி விட்டதை தனக்குள் கொண்டாடுகிறாரோ என்று எண்ணும்படியாக அது இருந்தது. அந்த மூதாட்டியின் உற்சாகத்தைப் பார்த்த ஷிக்கோ, உடனடியாக குதிரை வண்டியில் ஏறி தனக்குள் முணுமுணுப்பார்.

''நீ சாகவே மாட்டாயா கிழமே!''

என்ன செய்வது என்று தெரியாமல் விழித்த அவருக்கு, மூதாட்டியை பார்க்கும் போதெல்லாம் கழுத்தை நெரித்துக் கொன்று விடலாமா எனத் தோன்றியது. அவரை மூர்க்கத்தனமாக வெறுத்தார். தன்னிடமிருந்து தந்திரமாகத் திருடியவன் மீது விவசாயி ஒருவனுக்கு ஏற்படும் வெறுப்பை போன்றது அது. எப்படி இந்த மூதாட்டியை அனுப்பி வைப்பது என்று யோசிக்க ஆரம்பித்தார்..



ஒரு நாள் மீண்டும் அந்த மூதாட்டியைப் பார்க்க அவர் வந்தார். முதல் முறை இந்த பேரத்தை ஆரம்பித்தபோது செய்ததைப் போல் கைகளைத் தேய்த்துக்கொண்டே வந்தார். சிறிது நேரம் எதையையோ அரட்டையடித்துவிட்டு, பிறகு மெல்ல, ''எப்ரெவீல்லிற்கு வரும்போது என் வீட்டுக்கு வந்து இரவு உணவு சாப்பிடலாமே? நமக்குள் அவ்வளவாக பேச்சு வார்த்தை இல்லை என்று ஊரில் பேசிக்கொள்வது சங்கடமாக இருக்கிறது. அப்படி வருவதில் உங்களுக்கு பெரிதாக ஒன்றும் ஆகப் போவதில்லை. நானும் உணவுக்கெல்லாம் கணக்குப் பார்ப்பதில்லை. நீங்கள் வந்தால் சந்தோஷமடைவேன் என்றார்.

மக்லுவார் அம்மாவுக்கு எதையும் இரண்டு முறை பேசி புரியவைக்க வேண்டிய அவசியமில்லை. இரண்டு நாள் கழித்து எப்படியும் நகரத்துக்கு போக வேண்டிய வேலை இருந்தது. அது சந்தை நடக்கும் நாள் என்பதால் வண்டியில் ஏறி உட்கார்ந்து ஷிக்கோவின் வீட்டுக்குப் போய் சேர்ந்தார். வீட்டுக்குள் நுழைந்து சாப்பிடத் தயாரானார்.

ஷிக்கோவுக்கு ஏற்பட்ட அதிகப்படியான சந்தோஷத்தில் மக்லுவாரை இளவரசியைப் போல் உபசரித்தார். கோழி வறுவல், கருப்பு கேக், ஆட்டுக்கால் என விதவிதமான உணவு வகைகள். ஆனால் அவரோ மிகக்குறைவாகக் சாப்பிட்டார். வழக்கமாகவே அதிகம் சாப்பிடாதவரான

அவர் சிறிதளவு சூப்பும் ரொட்டித்துண்டு, வெண்ணெய் இவற்றோடு சாப்பாட்டை முடித்துக் கொண்டார். ஷிக்கோவுக்கு இது ஏமாற்றமாக இருந்தது.

மேலும் கொஞ்சம் சாப்பிடும்படி வற்புறுத்திப் பார்த்தார். ஆனால் அவர் மறுத்துவிட்டார். இனிஅவர் அதிகம் குடிக்கும் வழக்கமும் இல்லாதவர் என்பதால் காபியும் வேண்டாம் என்று சொல்லிவிட்டார். எனவே அவரிடம்,

''நிச்சயம் நீங்கள் ஒரு சொட்டு பிராந்தியாவது சாப்பிடுவீர்கள் இல்லையா?'' என்று கேட்டுப்பார்த்தார்.

''அதுவா பரவாயில்லை. அதற்கு மறுப்பு ஏதும் சொல்ல எனக்குத் தெரியாது.''

இதைக்கேட்ட அடுத்த நொடி, ஷிக்கோ சத்தம் போட்டு பணியாளரை அழைத்தார்.

''ரோசாலி, சூப்பர் ஃபைன் பிராந்தியை கொண்டுவா. அந்த ஸ்பெஷல் × தெரியுமில்லையா?''

பணிப்பெண் பெரிய பாட்டிலுடன் வந்தாள். அதன்மீது அழகிய தாள் சுற்றப்பட்டிருந்தது. இரண்டு கோப்பைகளில் மதுவை நிரப்பினார் ஷிக்கோ.

''இதை குடித்துப்பாருங்கள். முதல் தரமான மது என்பது உங்களுக்குத் தெரியும்''. ஒவ்வொரு மடக்காக குடிக்கும் சுகம் வெகு நேரம் நீடிக்கும்படி பொறுமையாக சுவைத்து குடித்தார். கோப்பையில் உள்ள கடைசி சொட்டு வரை குடித்து முடித்தபின், ''உண்மைதான் இது முதல் தரம்''

அவர் சொல்லி வாயை மூடுவதற்குள் மேலும் ஒரு கோப்பையை நிரப்பி அவரிடம் தந்தார்.வேண்டாம் என்று சொல்ல நினைத்தாலும் அதற்குள் கோப்பை தரப்படவே அதையும் முதல் கோப்பையை போல் பொறுமையாக குடித்து முடித்தார். மூன்றாவது முறை குடிக்கும்படி ஷிக்கோ வற்புறுத்த அவர் மறுத்தார். ஷிக்கோ விடவில்லை.

'இது பால் போல் மிகவும் மென்மையானது தெரியுமா. பத்து, பன்னிரெண்டு கோப்பையைக் கூட சாப்பிடுவேன். எவ்வித கெடுதலான பாதிப்பையும் ஏற்படுத்தாது. சர்க்கரை மாதிரி. தலைவலி எல்லாம் இருக்காது. நாக்கிலேயே கரைந்து விட்டதோ என்று நினைக்கும்படியாக இருக்கும். இருப்பதிலேயே இதைத்தான் இப்படி அதிகமாக சாப்பிடலாம்.

உண்மையிலேயே சாப்பிட விருப்பம் இருந்ததால் அதை வாங்கி மக்லுவார் குடித்தார். ஆனால் பாதி கோப்பையை மிச்சம் வைத்துவிட்டார்.

''இங்கே பாருங்கள். இது உங்களுக்கு மிகவும் பிடித்து இருப்பதால் நீங்கள் கொண்டுபோக சிறிதளவு தருகிறேன். நாம் இருவரும் எப்போதும் போல் சிறந்த நண்பர்கள் என்று காட்டத்தான்'' என்று கூறினார்.

குடித்ததால் பாதிப்பு சற்றே அதிகமாக இருப்பதை உணர்ந்தபடியே விடைபெற்றார் மக்லுவார்.

அடுத்தநாள், ஷிக்கோ அவரது பண்ணை வீட்டுக்குச் சென்று சிறியதொரு இரும்பு புட்டியை வெளியில் எடுத்து வைத்தார். இதற்கு முன் தம் வீட்டில்

சாப்பிட்ட அதே சுவையான மதுதான் என்பதை உறுதிபடுத்த சாப்பிட்டு பார்க்கும்படி வற்புறுத்தினார். ஆளுக்கு மூன்று கோப்பைகளைக் குடித்து முடித்த பின் அவர் புறப்படத் தயாரானார்.

''பார்த்தீர்களா நன்றாக சாப்பிட்ட பின்பும் இன்னும் மீதி இருக்கிறது. இயல்பாக இருங்கள்.நான் ஒன்றும் தவறாக எடுத்துக் கொள்ளமாட்டேன். எவ்வளவு சீக்கிரம் இந்த புட்டி முடிகிறதோ அந்த அளவு எனக்குத் திருப்தி''.

நான்கு நாட்களுக்கு பிறகு மீண்டும் அவர் வந்தார். வெளியில் உட்கார்ந்தபடி அவர் சூப்புக்காக ரொட்டித்துண்டுகளை வெட்டிக்கொண்டிருந்தார்.

அவர் முகத்தின் அருகில் சென்று ஷிக்கோ பேசினார். மக்லுவாரின் சுவாசத்தில் மதுவின் நெடி வர திருப்தி ஏற்பட்டது.

''ஒரு கோப்பை ஸ்பெஷல் கிடைக்குமா?'' என்று கேட்டார் ஷிக்கோ. இருவரும் ஆளுக்கு மூன்று கோப்பைகள் குடித்து முடித்தனர்.

விரைவிலேயே மக்லுவார் தனியாகவே குடிக்கும் பழக்கத்துக்கு ஆளாகி விட்டார் என்று எங்கும் பேசப்பட்டது. ஒருநாள் சமையலறையிலும், ஒரு நாள் பண்ணையிலும், அதன்பின் அருகில் உள்ள வீதிகளில் என விழுந்து கிடந்த அவரை மரக்கட்டையைப் போல் வீட்டுக்கு கொண்டு வந்து சேர்த்தனர்.

இப்போதெல்லாம் அவர் வீட்டுக்கு ஷிக்கோ போவதில்லை. மக்லுவாரைப் பற்றி யாராவது பேசும் போதெல்லாம், முகத்தை சோகமாக வைத்துக்கொண்டு, ''இந்த வயதில் இப்படி குடிப்பழக்கத்துக்கு அவர் ஆளாகி இருப்பது உண்மையிலேயே வருத்தமாக இருக்கிறது. ஆனால் என்ன செய்வது, வயதாகிவிட்டதால் வேறு வழியில்லை. இப்படியே போனால் அவர் செத்து விடுவார்'' என்று சொல்லி வைப்பார்.

சொன்னது போலவே அந்த மூதாட்டி உண்மையிலேயே இறந்து போனார். அடுத்து வந்த குளிர் காலத்தின் போது அவர் இறந்தார். கிறிஸ்துமஸ் நெருங்கும் போது சுயநினைவின்றி பனியில் விழுந்தார். அடுத்த நாள் இறந்த நிலையில் அவரைக் கண்டெடுத்தனர்.

அவரது பண்ணைக்கு ஷிக்கோ வந்தபோது, ''உண்மையிலேயே அவர் செய்தது முட்டாள்தனம். இப்படி குடிப்பழக்கத்துக்கு ஆளாகாமல் இருந்திருந்தால் இன்னும் பத்து ஆண்டுகள் வாழ்ந்திருப்பார்'' என்று அங்கலாய்த்தார்.

இலக்கிய மலர்
2023

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்:

முனைவர் **வீ.ப.ஜெயசீலன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால்
அரசு இணைச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

தொகுப்பு:

ப.திருமாவேலன்
பொ.தங்கபாண்டியன்
டி.அருள் எழிலன்
பி.என்.எஸ்.பாண்டியன்

வடிவமைப்பு:

இரா.தமிழரசு

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்:
எண்: 5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை – 600 113
தொலைபேசி : 22542221 / 22542224
மின்னஞ்சல்: ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம்: www.tndipr.gov.in

தமிழரசு

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு